பன்னாட்டு அரசியல்
ஷீமன் (∴ பிரெட்ரிக் எல்)

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—134

பன்னாட்டு அரசியல்

பாகம் II

(INTERNATIONAL POLITICS)

(PART II)

மேலை அரசு முறையும் உலக சமுதாயமும்

ஆசிரியர்

ஃபிரெட்ரிக் எல். ஷூமன்,
உட்ரோ வில்சன் பேராசிரியர், அரசுத்துறை,
வில்லியம்ஸ் கல்லூரி

தமிழாக்கம்

திருமதி [illegible] பாலவா, எம்.ஏ.,
அரசியல் விரிவுரையாளர்,
தேஷ்பந்து கல்லூரி, டில்லி

NARA PUBLIC LIBRARY

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு — அரசாங்கம்

First Edition—April, 1967
B.T.P. No. 134

© Bureau of Tamil Publications

INTERNATIONAL POLITICS

FREDERICK L. SCHUMAN

Translation

MRS. NOORJAHAN BAVA

Price Rs. 13-25

Original English Language Edition
Copyright © 1958 by the McGraw-Hill Book Company Inc.

This translation is Published by arrangement with M/s. McGraw-Hill Book Company, Inc. New York, U.S.A.

Printed by
Muthukumaran Press
14-A ,Kuppier Street,
Madras-1

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வியமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வாணியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'பன்னாட்டு அரசியல் - II' என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 134ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 169 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலுவீற்றிருக்கிறாள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

வருங்கால வாய்ப்புகள் பற்றிய நூல்

11. ஃபாசிசம் விட்டுச் சென்றவை

1. புதிய எதேச்சாதிகாரிகள் 2

2. ஜப்பான்: அடக்குமுறையிலிருந்து அமைதிக்கு 9

3. இத்தாலி: கொடுங்கோன்மையிலிருந்து குடியாட்சிக்கு மாறல் 39

4. செர்மனி: உளநோயுற்ற காலம் முதல் துண்டாடப்பட்ட காலம் வரை 63

12. கம்யூனிச இடைமறிப்பு

1. யூ.எஸ்.எஸ்.ஆர். : முடிவிலாப் பணி 117

2. சீனா: சொர்க்கத்தின் கட்டளை 165

3. கூடிவாழும் வெல்திறம் 194

4. மார்க்ஸ் நாட்டில் ஒற்றுமையின்மை 203

13. ஜனநாயகப் பாதுகாப்பு

1. பிரான்ஸ்: கைவிட்ட குறிக்கோள் 215

2. பிரிட்டன்: வெற்றியில் தோல்வி 251

3. அமெரிக்கா: வலிமைத் தடுமாற்றம் 272

4. சுதந்திர உலகில் பிளவு 305

14. ஏழைகள் பாடு

1. எத்தனை உலகம் ? 314

2. மக்கள், வறுமை, நல்வாழ்வு வாழும் வழிகள் 322

3. வறுமையின் அரசியல் 339

4. புது நடுநிலை நாடுகள் 362

15. அணுயுகம்

1. அணுகுண்டும் அதன் விளைவுகளும் 379

2. பௌதிக வல்லுநரும் அரசியல் தந்திரிகளும் 395

3. வலிமை அரசியல் மறைவு 423

தெரிவுசெய் நூற்பட்டியல் 433

பின்னிணைப்பு 1 461

பின்னிணைப்பு 2 495

கலைச்சொல் அகர வரிசை 511

அட்டவணை 542

பொருள் குறிப்பு அகராதி 544

வரைபடங்கள்

		பக்கம்
சப்பான்	...	11
சப்பான் பெருக்கம்	...	17
சப்பான் தோல்வி	...	24
இத்தாலியும் அட்டியாட்டிக் கடலும், 1919-1939	...	45
மத்திய தரைக்கடலில் நேசநாடுகள் வெற்றி, 1942-1945	...	50
செர்மன் குடியரசு	...	70
ஆஸ்திரியா, செக்கோசுலேவாக்கியாவைக் கைப்பற்றல்	...	77
போலந்தைக் கைப்பற்றல், 1939	...	81
கைப்பற்றப்பட்ட செர்மனி	...	93
ரஷ்யப் போர் முனைகள், 1919–1920	...	121
ரஷ்யாவில் போர், 1941–1945	...	139
சோவியத் ஏகாதிபத்தியம், 1944-1948	...	149
மேற்குச் சீனா	...	170
கிழக்குச் சீனா	...	171
ரஷ்யாவும் தூரக்கிழக்கும்	...	202
∴பிரான்சைக் கைப்பற்றல்	...	228
மேலைப் படையெடுப்பு, 1944-1945	...	233
யூனெடெட் கிங்டம்	...	253
வட அட்லாண்டிக்	...	283

உடன்படிக்கைகளும் இதர சர்வதேசச் சட்டங்களும்

(கையொப்பமான காலவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன; பக்கக் குறிப்புகள் சுருக்கங்கள், பகுதிகள் அல்லது முழு ஏடுகளை உணர்த்துகின்றன; மற்ற எடுத்துக்காட்டுகளுக்கு அட்டவணையைப் பார்க்கவும்.)

	பக்கம்
∴பிரெஞ்சு-அமெரிக்க, 1778, பெப். 6 ...	276
சர்வதேசச் சங்க ஒப்பந்தம், 1919, சூன் 26 ...	495
ரப்பாலோ, 1922, ஏப்ரல் 16 ...	69
கமின்டர்ன் - எதிர்ப்பு ஒப்பந்தம், 1936, நவ. 25 ...	18
நாசி - சோவியத் ஒப்பந்தம், 1939, ஆக. 23 ...	78கு
முக்கூட்டு ஒப்பந்தம், 1940, செப். 27 ...	19
முக்கூட்டு ஒப்பந்தம், 1941, டிச. 11 ...	87
ஐக்ய நாடுகள் சாசனம், 1945, சூன் 26 ...	461
அணுசக்திபற்றிய ஆங்கிலோ - அமெரிக்க ஒப்பந்தம், 1945, நவ. 15 ...	395
ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாய ஒப்பந்தங்கள், 1952, மே 26-27 ...	100
சோவியத் புல்கேரிய நட்புடன்படிக்கை, 1948, மார்ச் 18 ...	196
வட அட்லாண்டிக் ஒப்பந்தம், 1949, ஏப்ரல் 4 ...	287கு
சோவியத் - சீன நட்புடன்படிக்கை, 1950 பெப். 14 ...	196
யு.எஸ்.ஏ.—பிலிப்பைன்ஸ், 1951, ஆக. 30 ...	288
யு.எஸ்.ஏ.— ஆஸ்திரேலியா - நியூசிலாந்து, 1951, செப். 1 ...	288
சியாட்டோ, 1954, செ. 8 ...	308
பாரிஸ் ஒப்பந்தங்கள், 1954, அக். 23 ...	105
யு.எஸ்.ஏ.—பார்மோசா, 1954, டிச. 2 ...	298

பன்னாட்டு அரசியல்

(இரண்டாம் பகுதி)

வருங்கால வாய்ப்புகள் பற்றிய நூல்

"அகிலத்தின் அடர்ந்த காடுகளுக்கிடையே சென்றுகொண்டிருக்கையில் ஓர் இடத்தில் ஒரு மனிதனைக் கண்டேன். அவன் கந்தை உடை யணிந்திருந்தான். கையில் ஒரு நூல் வைத்திருந்தான். பெருஞ் சுமையைத் தாங்கிய வண்ணம் தன் இல்லத்திலிருந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். கையிலிருக்கும் நூலைப் படிக்க ஆரம்பித்தவன் கதறி அழத் தொடங்கிவிட்டான். 'சொர்க்கத்திலிருந்து பெய்யும் நெருப்பால் இந் நகரம் அழியப் போவது திண்ணம். அதிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்கு ஏதாவது வழி தேடினாலன்றி அந்தப் பயங்கர நெருப்பில் நானும், என் மனைவியாகிய நீயும், என் பச்சிளங் குழந்தைகளாகிய நீங்களும் அழிந்துபோவது உண்மை. எனினும், தப்பிப்பதற்கு வழியொன்றும் அறிந்திலேனே! என் செய்வேன்! இறைவா?' என்று உரக்க அழ ஆரம்பித்தான்."

—ஜான் பன்யான் என்பவர்எழுதிய (1678-ல்) 'பில்கிரிம்ஸ் ப்ராக்ரஸ்' என்ற நூலிலிருந்து.

'இத்தகைய நேரங்களில் தங்கள் கூற்றுகளுக்குப் பின்னால் தாமாகவே முன்வந்து பொறுப்பு ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள் வாயைத் திறக்காமல் இருத்தலே நன்று.....பழைய சித்தாந்தம், புயலில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் இன்றைய உலகிற்கு உதவாது. இன்றைய துயரங்களைச் சமாளிக்க நாம் முன்வர வேண்டும். நம்மை எதிர்நோக்கும் சிக்கல்களே புதுமையானவை. எனவே, அவற்றைத் தீர்ப்பதற்கு நாமும் புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்; புதுவிதமாக நடக்கவேண்டும். நம் சொந்த நலன்களை மறந்துவிடவேண்டும்.....சகோதரர்களே! வரலாற்றிலிருந்து நாம் ஒருக்காலும் தப்பமுடியாது. பிற்காலச் சந்ததியார் நம்மை கௌரவமாகக் கருதுவதும், கருதாததும் எதைப் பொறுத்திருக்கிறது என்றால், இப் பயங்கரச் சோதனைக்கு ஆளாகி இருக்கும் நாம் அதை எவ்விதம் சமாளிக்கப் போகிறோமோ, அதையே பொறுத்திருக்கிறது. ஒன்றுமட்டும் உறுதி; உலகின் இறுதி நம்பிக்கையை நாம் காப்பாற்றிக் கண்ணிய மடைவோம்; இன்றேல் அதைக் கைவிட்ட கயவர் என்று தூற்றப்படுவோம்.'

—ஆப்ரஹாம் லிங்கன், 1862-ல் கூறியவை.

11. ∴பாசிசம் விட்டுச் சென்றவை

1. புதிய எதேச்சாதிகாரிகள்

'மக்களாட்சியினின்றும் இயல்பாகத் தோன்றுவதே கொடுங்கோலாட்சி ஆகும்; மிகக் கடுமையான கொடுங்கோலாட்சியும் அடிமைத்தனமும் அளவற்ற சுதந்திரத்தின் தோன்றல்களாகும். ஏழை மக்களின் தலைவர்கள் பணக்காரர்களின் சொத்து சுகங்களைப் பறித்து, அவற்றில் தங்களுக்கு வேண்டியது போக மீதியை மக்களுக்குப் பிரித்துப் பங்கீடு செய்கிறார்கள். எனவே, பணக்காரர்களுக்குத் தங்கள் சொத்துகளைப் பாமர மக்களிடமிருந்து தங்களால் முடிந்த அளவு காப்பாற்றும் கட்டாயம் ஏற்படுகிறது. தங்கள் பொருளாதார நிலைமையையோ அல்லது அன்றைய நிலைமையையோ மாற்றியமைப்பதற்கு அவர்களுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. இருப்பினும், அவர்கள், மக்களுடைய சதியாளர்கள் என்றும், செல்வரின் சிறுகுழு ஆட்சியின் (oligarchy) நண்பர்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறார்கள். அதன் விளைவு என்ன வென்றால், இறுதியில் அவர்களே செல்வச் சிறுகுழு ஆட்சியாளராகவே மாறிவிடுகின்றனர்.....கொடுங்கோலன் உதிப்பதற்கு இதுவன்றி வேறு வழியே இல்லை.....பாமர மக்கள் தனக்கு அடிமையானதும், தான் நினைத்ததைச் செய்ய முற்படுகிறான் கொடுங்கோலன். அவனைத் தட்டிக் கேட்பார் எவருமிலர். தன்னை எதிர்ப்போரை ஒரு சிலரை அவன் கொன்றுவிடுகிறான்; வேறு சிலரை நாட்டைவிட்டும் துரத்திவிடுகிறான். அதேவேளை கடன்களையும் தீர்த்துவிடுகிறான்; நிலங்களையும் பங்கு போட்டு விடுகிறான்.....அதற்கப்புறம்தான் மெய்க்காப்பாளர்களின் தேவை ஏனைய கொடுங்கோலர்க்கு ஏற்படுவதுபோல் இவனுக்கும் ஏற்படுகிறது. பின்னர் மக்களுக்கு ஒரு தலைவன் தேவைப்படுவதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்க முற்படுகிறான். அதற்காகப் போர் முதலியவற்றைத் தூண்டிவிடவும் அவன் தயங்குவதில்லை. தன்னைச் சுற்றிலும் யார் யார் துணிவாகவும், புத்திசாலிகளாகவும், உயர்ந்த எண்ணம் படைத்தவர்களாகவும் தோன்றுகிறார்களோ அவர்கள் அனைவரையும் அவன் ஒழித்து

விடுகிறான்.....தன் கொடுங்கோல் செயல்கள் அதிகமாக அதிகமாக அதிகப்படியான கூட்டாளிகளையும் அதிகமான மக்கள் ஆதரவையும் அவன் எதிர்பார்த்து நிற்கிறான்..... இதைத் தவிர வேறெதுவும் கொடுங்கோலாட்சியாக இருக்க முடியுமா? சுதந்திர மக்கள் அடிமைத்தளை என்ற புகையைவிட்டுத் தப்பி, இறுதியில் அடிமைகளின் கொடுங்கோன்மை என்னும் நெருப்புக்கே இரையாகி விடுகின்றனர்.'

பிளேட்டோ எழுதிய 'குடியரசு' என்ற நூலிலிருந்து.

இவ்விருபதாம் நூற்றாண்டில், உலக அரசியல் (உலகப் பேரரசு யுகங்களைத் தவிர மற்றபடி) முன்னைய நூற்றாண்டுகளில் நிலவி வந்த உலக அரசியலையே ஒத்து இருக்கிறது. அன்றுபோல் இன்றும் முழு இறைமை படைத்த நாட்டு அரசுகள், தன் வலிமையையும், அதிகாரத்தையும் பெருக்குவான்வேண்டி, இதர அரசுகளுடன் வலிமை விளையாட்டில் இறங்கிவிடுகின்றன. அதனால் ஒரு சில குறிப்பிட்ட வல்லரசுகள் மற்ற நாடுகளனைத்தையும் விழுங்கிவிடுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும், தங்கள் இறைமையைக் காப்பான்வேண்டிச் சிறிய நாடுகள் அவற்றை எதிர்ப்பதற்காக மேற்கொள்ளும் எதிர் நடவடிக்கைகளையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால், பழைமையினின்றும் புதுமை ஒரு விதத்தில் மாறுபட்டிருக்கிறது. இன்றைய வல்லரசுகளில் சில, மக்களாட்சிகளாகவும் மற்றவை அனைத்தும் கொடுங்கோலாட்சிகளாகவும் (despotism), எதேச்சையாட்சிகளாகவும் (autocracy), செல்வச் சிறுகுழு ஆட்சிகளாகவும் (oligarchies), 'சருவாதிகாரங்கள்' (dictatorships) ஆகவும் விளங்கி வருகின்றன. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த (சருவாதிகார) ஆட்சிகள் உலகையே தன் குடைக்குள் கொண்டுவர விடாது முயற்சி செய்வதையும், மக்களாட்சிகள் அவற்றைத் தொடர்ந்து எதிர்த்து முறியடிப்பதையும் நாம் பார்க்கிறோம்.

இதனால், மக்களாட்சிகளைவிடச் சருவாதிகார ஆட்சிகளே, உலகை ஆளவேண்டும் என்ற மண்ணாசை பிடித்து அலைகின்றன என்று கூறிவிடலாகாது. பார்க்கப்போனால், பாதுகாப்பு இன்றி வல்லரசுகளின் அருகில்கூட வர இயலாத 'சிறிய' (மார்ஜினல்) நாடுகள் ஓரளவு செல்வாக்குப் பெற முயல்கின்றன. கடைசியில் அவைகளே செல்வம் படைத்த 'மனநிறைவுடைய' (satiated) அட்லான்டிக் கரையோரத்திலுள்ள மக்களாட்சிகளைவிட அதிகமான கொடுங்கோன்மைக்கும் பலாத்காரத்துக்கும் பாதை வகுத்து விடுகின்றன. இச் சண்டை சச்சரவுகளால் ஏற்படும் விளைவுகள் என்னவென்று ஆராயுமிடத்து, பலாத்காரத்தால் மக்களாட்சி கொடுங்கோன்மை ஆட்சியின்மீது அடையும் ஒவ்வோர் இராணுவ வெற்றியும்,

இறுதியில் மக்களாட்சியின் மகிமையைக் குறைத்து, கொடுங் கோன்மையின் செல்வாக்கைப் பெருக்கிவருதல் தெளிவாகத் தெரிகிறது. 1918-ல் வெற்றி முரசு கொட்டிய மக்களாட்சிகள், வெகு விரைவில் 1914-ல் இருந்ததைவிடக் குறைவான மக்களாட்சிகளுள் ஒன்றாக ஆகிவிட்டதை எண்ணி வருந்தின. அதைப்போல் 1945-ல் வெற்றிமாலை சூடிய சுதந்திர மக்கள் 1939-ல் நிலவிய சுதந்திரத்தைவிட 1950-ல் குறைவான சுதந்திரமே உண்மையில் தங்களுக்குக் கிடைத்திருப்பதை எண்ணி வருந்தினர்.

இவ் வுண்மையான நிகழ்ச்சிகளினின்றும், ஒரு கற்றறிந்த அறி வாளி மேற்கொள்ளும் முடிவு ஜாக்கிரதையாகவே இருக்கும். இன்று மக்களாட்சி ஓர் அரசாங்க முறையாகவும் வாழ்க்கை வழி யாகவும் நிலவி வருகிறது அல்லவா? எங்குப் பெரும்பாலான மக்கள் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கிறார்களோ, எங்குப் பெரும் பாலான மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதோ, எங்கு நாளும் வளர்ச்சியடைந்து வரும் நடுத்தர வகுப்பினர் மேன் மேலும் வளஞ் சிறந்த வாழ்க்கையை எதிர்பார்க்கிறார்களோ, அங்கு தான் மக்களாட்சி இந்த நீதியில் வளர்ச்சியடைந்து வரு வதைப் பார்க்கலாம். இந் நிலைமை மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியிலும், வட அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும், நியூ சிலாந்திலும், சப்பானிலும் நிலவிவருதல் கண்கூடு. எங்கு மக்கள் எழுத்தறிவில்லாமலும் வறுமையிலும் வாடிக் கிடக் கின்றனரோ, அங்கு 'மக்களாட்சிக்கு' அர்த்தமே இல்லை. ஏன் நல்ல நிலைமையில் வாழும் 'மேற்குலக மக்களுள்கூட, தேவையும் கவலையும் எங்குத் தலைவிரித்தாடுகிறதோ அங்கு அவநம்பிக்கை கொடுங்கோன்மைக்கு அடிகோலி வருவதைப் பார்க்கிறோம். மக்களாட்சி மாண்புறச் செழித்து வளரவேண்டுமெனில் மக்கள் வயிறார உண்டு, பொறுமையுடனும், மன அமைதியுடனும், நம்பிக்கை யுடனும் வாழும் சூழ்நிலை முதலில் உருவாகவேண்டும். ஆனால், பெரும் போர்களின் கோரப்பிடியாலும் பொருளாதார மந்தங் களின் (depression) விளைவாலும் கோடிக்கணக்கான மக்களுக்கு இம் 'முன்னேற்றப்' பாதையில் செல்லவே வழி இல்லாமல் போய்விடுகிறது. கற்றறிந்த செல்வம் படைத்த முன்னாள் சமுதாயங் களில்கூட கவலையும் கடுந்துயரமும் பரவிவிடின், அதை வேருடன் களைந்தெறிவதாக நம்பிக்கையூட்டும் கும்பலாட்சித் தலைவர் களுக்கும் சருவாதிகாரிகளுக்கும் ஏகப்படியான கிராக்கி ஏற்பட்டு விடுகிறது. அந் நம்பிக்கைப் பயிரை பலாத்காரம் (இராணுவ ஆட்சி) என்ற நீர் பாய்ச்சித்தான் அவர்களால் வளர்க்க முடியும். ஒருமுறை பலாத்காரத்தை மேற்கொண்டுவிட்டால் போதும். அது அடுத்தடுத்துப் போருக்கும், போருக்கு முன்னிருந்த வறுமையைவிட

அதிகமான வறுமைக்கும், பயத்துக்கும்தான் அடிகோலும். இவ் அவல நிலைமை தொடர்ந்து நிலவிவரும்பட்சத்தில் போரும் தொடர்ந்து ஏற்படத்தான் செய்யும். போர் தொடர்ந்து ஏற்படு மாயின் அதனால் மக்களாட்சியின் மகிமை மங்கி எதேச்சாதிகாரமே தலைவிரித்தாட நேரிடும்.

இன்றைய 'எதேச்சாதிகாரிகள்' கூட பண்டை முறைப் படியே மனிதனின் உடலையும் உள்ளத்தையும் அடிமை கொள்ளப் பார்க்கின்றனர். முன்காலத்தில் பெரும்பாலான மக்களினம் வறுமையிலும் அஞ்ஞானத்திலும் மூழ்கிக்கிடந்தமையால் சருவாதி காரிகளும் செல்வச் சிறுகுழுவாட்சியினரும் ஆண்டுவந்தனர். தொழிற்புரட்சியால் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட செல்வப் பெருக்கம், பொதுப்பாதுகாப்பு, கல்வி முன்னேற்றம் ஆகியவை ஒருசில மேலைச் சமுதாயங்களில்தான் ஏற்பட்டன. அங்கும் வாணிகச் சுழலாலும் (business cycle) வல்லரசுகளுக்கிடையே ஏற்படும் இராணுவப் போராட்டங்களாலும், இவற்றிற்கு ஆரம் பத்திலே ஊறு ஏற்பட்டு வருதல் கண்கூடு. 20ஆம் நூற்றாண்டின் முதல் 'சருவாதிகார நாடு', ருசியப் புரட்சியால்தான் உருவானது எனலாம். அதுவும், மனித கௌரவம், தனிச் சுதந்திரம், பிரதி நிதித்துவ அரசாங்கம் (representative govt.) ஆகியவற்றை அழித்து விட்டுக் கொள்கை பரப்பல் (propaganda), இரகசிய போலிசு, அரசியல் பயங்கரத்துவம் (terrorism) ஆகிய கருவிகளின் பக்க பலத்தால்தான் பிறந்தது எனலாம். 1917-ல் நிறுவப்பட்ட 'தற்காலிக அரசாங்கம்' (Provisional Government) மக்களாட் சியை வளர்க்க விரும்பியது; ஆனால், அது நெடிது நீடித்திருக்க வில்லை. ஒருசில நாட்களில் மக்களுக்கு வளஞ்சிறந்த வாழ் வைத் தாம் அளிப்பதாக மார்தட்டிய சதியாளர் கையில் அதிகாரம் மாறிற்று. இதுகாறும் கொடுங்கோன்மை ஒன்றையே அறிந் திருந்த மக்களும் தங்களை வறுமை, அரசியல் குழப்பம், போர், தோல்வி, சமுதாயச் சீர்கேடு ஆகியவையினின்றும் தப்பித்துக் கொள்ளப் பார்த்தனர். அதனால் தங்களுடைய துயரகற்றி வாழ்க்கையை வளம்பெறச் செய்வதாக வாக்குறுதி அளித்த தலைவர் களுக்கு, முழு ஆதரவும் தரலாயினர். இத்தாலி, சப்பான், செர்மனி, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் மக்களாட்சியின் மகிமை குன்றி, பணவீக்கம் (inflation), வியாபார மந்தம், பொருளாதார இடையூகள் முதலியவை ஏற்படவுமே, மாசுகோவின் தலைவர்களைக் குருவாகக் கொண்ட மற்றவர்களும் 'சருவாதிகார' ஆட்சியை நிறுவ லாயினர்.

ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், வட அமெரிக்காவிலும் அஞ்ஞானத்தில் மூழ்கி அல்லலுற்று வரும் ஆயிரக்கணக்கான

மக்களுக்கு என்று நல்ல காலம் பிறக்கப்போகிறதோ தெரிய வில்லை. என்று இந்த நாள் பிறக்கப்போகிறது என்று சுதந்திரவாதிகளும் துணிந்து கூறுவதற்கில்லை. எண்ணற்ற மக்கள் வேலையின்றி, நம்பிக்கையின்றி, அமைதியின்றித் தத்தளித்து வரும்போது அவர்களுக்கு நற்காலம் எளிதில் பிறந்துவிடும் என்ற நம்பிக்கையே அற்று, யாவும் சூனியமாகத் தோன்றுகிறது அல்லவா? நம்பிக்கை இழந்தவர்கள் நம்பிக்கையற்ற நடவடிக்கை களையே மேற்கொள்ளப் பார்ப்பர்; நம்பிக்கையற்ற தலைவர்களையே தேடியலைவர். ஆனால், மக்களாட்சி மாண்புறவேண்டுமெனில் மக்களிடம் அவநம்பிக்கையோ அன்றி மனக்கசப்போ ஏற்பட லாகாது. ஏனெனில், மனக்கசப்போ அல்லது மனமுறிவோ மக்களிடம் ஏற்பட்டுவிடின் அது உடனே சருவாதிகாரத்துக்கு வழி வகுத்து விடுவது திண்ணம். பாமர மக்களின் மனக் கசப்பாலன்றே ருசியாவில் (பின்னால் சீனாவிலும்) கம்யூனிசம் பிறந்தது!? இத்தாலியிலும், சப்பானிலும், செர்மனியிலும் ஃபாசிசம் (Fascism) பிறந்தது! மேற்கு ஐரோப்பாவிலும் பிரிட்டனில் சோசியலிசம் தோன்றிற்று! அமெரிக்காவில் 'நியூடீல்' என்ற புதிய பொருளா தாரக் கொள்கை தோன்றியது! உலகிலே செல்வம் படைத்த நாட்டில் கூட அரசாங்கம் போரை முன்னிட்டுச் செலவு செய்ததால்தான், மக்கள் அனைவருக்கும் ஏராளமான செல்வம் பெருகிற்று. அதனால்தான் நாட்டில் செல்வமும் செழிப்பும் ஏற்பட்டது.

ஒரே பொருளுக்குச் சமமான எல்லாப் பொருள்களும், ஒன்றுக் கொன்று சமம் ஆகும் என்று கணிதம் (mathematics) கூறு கிறது. இந் நியதி அரசியலுக்கும் பொருந்தும். கம்யூனிசமும் ஃபாசிசமும் (Fascism) ஒன்றேதான். இரண்டும் கருத்துக் கோட் பாடுகளே (ideologies) ஆகும்; இரண்டும் அரசு முறைகள்தான். எனவே, ஃபாசிசத்தை 'மாநிற' அல்லது 'கருப்பு பால்சிவிஸம்' (Bolshevism) என்றும், கம்யூனிசத்தை 'சிவப்பு ஃபாசிசம்' என்றும் கொள்ளலாம். இரண்டும் இன்றைய சருவாதிகாரத்துவத்தின் உருவங்கள் ஆகும். இரண்டிற்கும் இடையே அனேக ஒற்றுமை கள் இருக்கின்றன. எனினும் மேற்கூறப்பட்ட உவமை ஒருவிதத் தில் தவறுவது ஆகும். கம்யூனிஸ்டு சருவாதிகாரிகள் அனைவரும் மிச்சம் மீதி இல்லாமல் 'சோசியலிசத்திலே' முழு நம்பிக்கை கொண்டவர்கள். கொள்கையிலும் நடைமுறையிலும் கூட இது உண்மையாகும். விவசாயத்தைப் (agriculture) பொதுவுடைமையாக்குவதும் (collectivization) 'பிற்போக்கான' சமுதாயங்களைத் திட்டமிட்ட ஓர் அரசு தன் சுவாதீனத்தின் கீழ் (Public ownership) தொழில்மயமாக்குவதுமே 'சோசியலிசம்' எனப்படும். 'சமத்துவம்' ஓங்கவேண்டும், 'சமூக நீதி' (social justice) தழைக்கவேண்டும் என்று போராடும் மக்களை

எதிர்ப்பவர் ஃபாசிஸ்டுகள். ஃபாசிஸ்டு சருவாதிகாரிகள் அனைவரும் மிச்சம் சொச்சம் இல்லாமல், மக்களின் இந்த நியாயமான கோரிக்கையை எதிர்த்து, விவசாய, தொழில் துறைகளில் 'பொருக்கி எடுக்கப்பட்ட' (elite) ஒரு சிலரின் தனியுரிமையையமட்டும் கண்ணெனப் போற்றிக் காப்பாற்ற உறுதி கொண்டிருக்கின்றனர். இது கொள்கையிலும் நடைமுறையிலும்கூட உண்மை ஆகும். இரு வகுப்பினரும் மக்களைத் தங்களுக்குப் பணிந்து நடக்கச் செய்யும் பொருட்டுக் காவல் அரசின் (Police State) கருவிகளைக் கையாண்டு வருகின்றனர். எனினும், அவர்கள் தங்களுடைய 'சட்ட சுவாதீனத்தை' (monopoly of legality) வெவ்வேறு குறிக்கோள்களை எய்துவான்வேண்டிப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இங்கு கம்யூனிஸ்டுகளுக்கும் ஃபாசிஸ்டுகளுக்கும் உள்ள வேற்றுமைகளைச் சற்று நோக்குவோம். அதிகாரத்திலிருக்கும் கம்யூனிஸ்டுகள் போரின் கோரப் பிடியிலிருந்து உலகைக் காப்பாற்ற முற்படுகிறார்கள். அதனால் அவர்கள் பொருளாதார, சமுதாய, அரசியல் நிலைமையை உறுதிப்படுத்துவதற்காக இராணுவத்தின் (militarism) மீதோ, போரின்மீதோ நம்பிக்கை வைக்கவில்லை. அவர்களின் கருவிகளே வேறுதான். ஆனால், பதவியிலிருக்கும் ஃபாசிஸ்டுகளோ இக்கருவிகளைக்கொண்டே, அதாவது இராணுவத்துவம் போர் முதலியவற்றின் மூலமே இதே குறிக்கோளை எய்த முற்படுகின்றனர், இதற்கு எடுத்துக்காட்டாக இரண்டாம் உலகப் போரைக் கூறலாம். இப் போருக்கு வித்திட்டவர்கள் ஃபாசிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் என்பதை உலகறியும். மூன்றும் உலகப்போர் ஏற்படுமாயின் அதற்கும் வழி வகுப்பவர் ஃபாசிஸ்டுகளே என்று ஐயம் திரிபறக் கூறலாம்.

இன்றைய கம்யூனிசமும் ஒரு சருவாதிகார ஆட்சி முறையேயாகும். 'வகுப்பற்ற சமுதாயத்தை' (classless society) உருவாக்குவதே இதன் நோக்கமாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அதன் உண்மையான நோக்கமே வேறு எனத் துணிந்து கூறலாம். பிரபுக்கள், செல்வர்கள், நடுத்தர வகுப்பினர், உழைப்பாளிகள், உழவர்கள் ஆகியோரைக் கொண்ட சமூக அதிகார ஏணி (hierarchy) நெடுநாளாக நிலவிவருகிறது அல்லவா? இதை அடியோடு பிடுங்கி எறிந்துவிட்டு, அவ்விடத்தில் வேறு வகுப்புகளடங்கிய அதிகார ஏணியை நிலைநாட்ட விரும்புகிறது கம்யூனிசம். இந்தச் சமூக அதிகார ஏணியில் கட்சித் தலைவர்கள், கற்றறிந்தோர் (intelligentsia), உழைப்பாளிகள், உழவர்கள் ஆகியோர் இடம் பெறுவர். செல்வச் சிறுகுழு ஆட்சியின் அதிகாரத்துக்கு எந்தவிதமான ஊறும் ஏற்பட்டுவிடாமல் பாதுகாத்துக்கொள்வதே

இதன் குறிக்கோள். சோசியலிசத் தொழில்மயம் மூலமும், 'வகுப்பு விரோதிகள்', குலக்குகள் என்ற உழவர்கள் (kulaks), வர்த்தகர்கள், கொள்கை அரசியல் வேற்றுமை உடையவர்கள், மேலும் மிகப் பெரிய ஆக்கிரமிப்புகளுக்கு இரையாகக் கூடியவர் முதலிய ஏமாளிகளைத் (scapegoats) துன்புறுத்தியும் இக் குறிக்கோளை எய்த முற்படுகிறது கம்யூனிசம். இன்றைய ஃபாசிசமும் ஒரு சருவாதிகார ஆட்சி முறைதான். 'கூட்டுக்கழக அரசை' (Corporative State) உருவாக்குதல் இதன் நோக்கம் என்று சொல்லப் படுகிறது. ஆனால், அதன் உண்மையான நோக்கமே வேறு எனலாம். பிரபுக்கள், பணக்காரர், நடுத்தர வகுப்பினர், உழைப் பாளிகள், உழவர்கள் ஆகியோர் அடங்கிய, நெடுநாளாக நிலவிவரும் சமூக அதிகார ஏணியைப் பாதுகாப்பதும் செல்வச் சிறுகுழு ஆட்சியின் அதிகாரத்தைப் பேணிக் காப்பதுமே இதன் உண்மையான குறிக்கோள் ஆகும். மிகப் பெரிய இராணுவத்துவம் மூலமும் தாராளவாதிகள், அமைதிப்பிரியர் (Pacifists), மார்க்சீயர்கள், யூதர்கள் மற்றும் மிகப் பெரிய ஆக்கிரமிப்புகளுக்கு இரையாகக்கூடிய வகுப்பினர் ஆகிய ஏமாளிகளைத் திட்டமிட்டுத் துன்புறுத்தியும் இக் குறிக்கோளை எய்த முற்படுகிறது ஃபாசிசம். கம்யூனிச செல்வச் சிறுகுழு ஆட்சியினர் புது உயர்வு அடைந்தவர்கள்; தங்கள் வகுப்பையும் நாட்டையும் காட்டிக்கொடுக்கும் துரோகிகள் (traitors); பழைய பொறுக்கி ஈடுக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த வகுப்பினரின் (elites) உடைமையைப் பிடுங்கிக்கொண்டு பலாத்காரத்தால் அவர்களை அழிப்பவர்கள்; அவர்கள் விட்டுச்சென்ற இடத்தை இச் சூழ்ச்சிக்காரர்களும், 'பிற்போக்குச்' சமுதாயங்களின் நிர்வாகிகளும் அடங்கிய புது வகுப்பு ஒன்று பற்றிக்கொண்டு விடுகிறது; இவ் வகுப்பினர் படாத பாடுபட்டு சோசலிச அடிப்படையில் தொழில்மயமான நகர்ப்புறப் பொருளாதார அமைப்புகளை (urban economics) உருவாக்கி, அதன்மூலம் தாங்கள் முன்வர முயல்கிறார்கள். ஃபாசிச செல்வச் சிறுகுழு ஆட்சியினரோ மிகத் துணிந்தவர்கள்; நடுத்தர வகுப்பினர், கீழ்த்தர மக்களின் எதிர்ப்புகளை, பொறுக்கி எடுக்கப்பட்ட சிறப்பினரிடமிருந்து (elites) சமுதாயத்தைவிட்டு விலக்கி வைக்கப்பட்டிருக்கும் கீழ்மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, வேடிக்கை பார்ப்பவர்; அன்றியும், வியாபாரப் பெரும் புள்ளிகளுடன் (Big Business) கூட்டுச் சேர்ந்தும், பொது நிதியால் படைக்கலன்களைப் பெருக்கியும், வெற்றி, முழுப் போர் ஆகியவற்றில் ஈடுபட்டும் நாட்டைச் செழிப்பாக்கப் பாடுபடுவதுபோல் தோன்றி, 'முன்னேற்றமான' சமுதாயங்களின் இயக்குநர்களாக (directors) ஆகிவிடுகிறார்கள்.

சருவாதிகாரத்தின் இவ்விரு முக்கியமான அமைப்புகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை, நாம் அடுத்து ஆராய

விருக்கும் வல்லரசுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளில் பார்ப் போம். இப் புதுக் கொடுங்கோன்மை (tyranny) முதலில் கம்யூனிச உருவத்தில்தான் தோன்றியது. அதை எதிர்ப்பான்வேண்டிப் பின்னர் ஏற்பட்ட தீவிரப் புரட்சியே ஃபாசிசம் ஆகும். எனினும், இவை இரண்டினுள் ஃபாசிஸ்டு வல்லரசுகளின் தலைவர்கள் மேற் கொண்ட முடிவுகளாலேயே இரண்டாம் உலகப் போர் மூண்டதால், ஃபாசிசத்தை முதற்கண் ஆராய்வோம். ஃபாசிச வல்லரசுகளின் ராஜ தந்திரத்தையும் (diplomacy) நடைமுறைத் திறமையையும் முதலில் பார்ப்போம். இன்றைய உலகில் கம்யூனிஸ்டு வல்லரசுகளும் மக்களாட்சிகளும் மாறுபட்டு நிற்பதற்குக் காரணம் ஃபாசிஸ்டுகள் தான். எனவே, அவர்களைப்பற்றியும் அவர்கள் கொள்கை குறிக் கோள்கள் ஆகியவற்றைப்பற்றியும் முதலில் ஆராய்வதே முறை யாகும்.

2. சப்பான்: அடக்குமுறையிலிருந்து அமைதிக்கு

'சப்பான் போர்க் கொள்கையை மேற்கொள்ளாவிடில் கிழக்கு ஆசியாவில் நிலவிவரும் சிரமங்களை அதனால் போக்கமுடியாது.....சீனாவை நமது ஆட்சியில் கொண்டுவர வேண்டுமானால் அமெரிக்காவை முதலில் அழித்துவிட வேண்டும்.....சீனாவைக் கைப்பற்றவேண்டுமானால் முதலில் மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் கைப்பற்றவேண்டும். உலகைக் கைப்பற்றவேண்டுமானால் முதலில் சீனாவை நாம் வெல்லவேண்டும்.....சீனாவின் மூலவளங்கள் அனைத் தையும் நம் கைவசப்படுத்திவிட்டால் பின்னர் இந்தியா, ஆசியா மைனர், மத்திய ஆசியா, ஏன் ஐரோப்பாவைக் கூட வென்றுவிடலாம். எனவே, எமாத்தோ இனத்தார். (அதாவது சப்பானிய இனத்தார்) புகழ்பெற வேண்டு மானால் முதலில் மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும கைப்பற்ற வேண்டும்'.

—1927ஆம் ஆண்டு சூலை மாதம் 25ஆம் தேதி சப்பான் பேரரசருக்குத் தலைமை அமைச்சர் (Premier) பாரன் தனக்கா எழுதியனுப்பிய கடிதம்.

1945ஆம் ஆண்டு கோடைக் காலம். உலக 'வல்லரசுகள்' (Great Powers) வரிசையில் புதிதாய்ச் சேர்ந்த ஒரு வல்லரசு, தன் மக்களும், அரசாங்கமும் (Government) தவிர்க்கொணா ஒரு நெருக் கடிக்கு ஆளாகியிருப்பதை உணர்ந்தது. ஒருகால் புகழுடன் விளங்கிய அதன் கடற்படையும் (Navy) விண்ணளாவிய வியாபாரக் கப்பலும் சிதறடிக்கப்பட்டன. வீரஞ்செறிந்த மாபெரும் காலாட் படையும் (Army) தொடர்ந்து தோல்வியுற நேர்ந்தது. சப்பா னியத் தீவுகள் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பகைவர் கைவசமாயின.

மங்கோலியராலன்றி, வேறு எவராலும் :வெல்லமுடியாது வீறு கொண்டு நின்ற அந்த நாடு, இன்று தட்டுத்தடுமாறி தலை குனிந்து நிற்க நேரிட்டுவிட்டது. நகரங்கள் நாசமாயின. நாலா திசையிலும் நஞ்சைப் பொழியும் குண்டுகளும், வெடி மருந்து களும் நிரம்பிக் கிடந்தன. மக்கள் மலைபோல் மடிந்து கிடந் தனர். இக் கொடுமையினின்றும் தப்பியோர் போகப் புகலிடம் இன்றிப் புலம்பி நின்றனர்.

ஜெர்மனி (ரெய்ச்) (Reich) சரணடைந்து மூன்று மாதங் களுக்குப் பின், சப்பான்மீது போர் தொடுப்பதற்கு ரஷ்யா யால்டாவில் ரகசிய ஒப்பந்தம் செய்தது. சப்பான், ரஷ்யா வுக்கு எதிராக செர்மனிக்கு உதவி செய்துவருவதாலும், 'சோவியத் யூனியனின் நட்பு அரசுகளான (allies) அமெரிக்கா வையும் பிரிட்டனையும் அது எதிர்த்துப் போரிடுவதாலும்,' தன் அரசாங்கம் 1941ஆம் ஆண்டின் நடுநிலை ஒப்பந்தத்தைக் (Neutrality Pact) கைவிட்டுவிட்டதாகவும் மொலடோவ் சப்பா னியத் தூதர் (Ambassador) நௌடேக் சாட்டோவுக்கு 1945, ஏப்ரல் 5ஆம் நாள் தெரியப்படுத்தினர். உடனே கோயிசோ பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அட்மிரல் காண்ட்டாரோ சுசூக்கியின் தலைமையில் புதிய காபினட் அமைச்சரவை (Cabinet) அமைக்கப்பட்டது. மஞ்சூரியாவையும் வட சீனவையும் விட்டுத் தான் வெளியேறத் தயார் என்று டோக்கியோ மாசுகோவுடன் பேச்சு நடத்தியது. ஆனால், மாசுகோ இணங்கவில்லை. அமைதிப் பிரியர் களைப் பல்வேறு தலைநகரங்களுக்கு அனுப்பி மாசுகோவை எப்படி யாவது மத்தியஸ்தராக (Mediator) ஆக்கிவிட டோக்கியோ மீண்டும் முயன்றது. ஆனால், பயன் ஒன்றும் இல்லாமல் போய் விட்டது.

1945ஆம் ஆண்டு சூலை 26 அன்று ட்ரூமென், சர்ச்சில், அட்லி ஆகிய மூவரும் சியாங்கே-சேக்கின் சம்மதத்துடன் ஸ்டாலின் முன்னிலையில் போரை முடிவுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தனர். 'அழிவுக்கு ஆளாக விருக்கும்' சப்பான் 'மறநெறி விடுத்து அறநெறியில்' இறங்காவிடில் 'சப்பான் நாடும் அதன் படையும் சேர்ந்து அழிவது திண்ணம்' என்று அவர்கள் பய முறுத்தினர். 'சப்பானிய மக்களை வஞ்சித்து அவர்களை உலகை வெல்லுமாறு ஊக்குவித்தவர்களிடமிருந்து அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிரந்தரமாக நீக்கிவிடவேண்டும். இங்கு நாம் நிர்ணயிக்கப்போகும் அடிப்படைக் குறிக்கோளை எய்தும்பொருட்டு நேசநாடுகள் சப்பானில் முக்கியமான இடங்களைத் தங்கள் கைவசம் வைத்துக்கொள்ளும்.....சப்பானியர் ஒரு தனியினத்தார் என்று கொண்டு அவர்களை அடிமைப்படுத்துவதோ அல்லது அவர்களை


U.S.S.R.
Komsomolsk
Amur R.
Khabarovsk
Blagoveschensk
Heihe
Kiumusze
MANCHUKUO
Harbin
Kirin
Hsinking
Yenki
Nikolsk
Vladivostok
Rashin
Ranan
KOREA
Gensan
Heijo
Seoul
Taiden
Fusan
Mokpo
Japan Sea
KARAFUTO
HOKKAIDO
Kushiro
Otaru
Sapporo
Hakodate
Aomori
Hachinohe
Akita
Sendai
Niigata
HONSHU
Kanazawa
TOKYO
Yokohama
Nagoya
Kyoto
Osaka
Kobe
Wakayama
Hiroshima
Kure
Shimonoseki
SHIKOKU
Fukuoka
Sasebo
Nagasaki
Kumamoto
KYUSHU
Kagoshima
JAPAN
SCALE OF MILES
0 50 100 150 200
Principal Railroads

அழிப்பதோ நம் நோக்கம் அன்று; ஆனால், போர்க்குற்றவாளிகள் கடுமையான தண்டனைக்குள்ளாவர் என்பது நிச்சயம். நியாயமான போர் நட்டஈடு (reparation) வசூலிக்கப்படும். இதுதான் ஒப்பந்த அடிப்படையாகும். கெய்ரோ அறிக்கைப் பிரகாரம் கான்சு, கொக் கெய்டோ, கியூசு, சிக்கோக்கு ஆகிய பிரதேசங்கள், மற்றும் 'இனிமேல் நிர்ணயஞ் செய்யப்படும் தீவுகள்' மீதே சப்பான் இறைமை (sovereignty) கொண்டாட முடியும் என்றும், சப்பானியப் படைகள் குறைக்கப்பட வேண்டுமென்றும், சப்பானில் சிவில் சுதந்திரம் (civil liberty) பிறக்கவேண்டும் என்றும், மக்களாட்சி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அதில் வெளியிடப்பட்டது. 'சப்பானியர் விருப்பப்படி அமைதியை விரும்பும் பொறுப்பான அரசாங்கம் ஒன்று' அமைக்கப்பட்டதும், அது மேலே கூறப்பட்ட குறிக்கோள்களை எய்தியதும் நேசநாடுகளைச் சேர்ந்த படைகள் சப்பானைவிட்டு வெளியேறிவிடும் என்றும் அவ் வறிக்கை தெரிவித்தது. மேலும் 'சப்பான் எவ்வித நிபந்தனையுமின்றி நல் லெண்ணத்துடன் சரணடையாவிடில், அது உடனடியான அழிவுக்கு ஆளாக நேரிடும்' என்றும் அவ் வறிக்கை கூறியது.

டோக்கியோ இக் கோரிக்கைகளை ஏற்க முன்வரவில்லை. சோவியத் யூனியன் போரில் இறங்கிவிட்டால், மஞ்சூரியா, கொரியா, வடசீனா ஆகிய நாடுகளனைத்தும் கைவிட்டுப் போனமாதிரிதான். எனினும், இவ்வுண்மை, தனக்குச் சாதகமான ஒப்பந்தத்தை எதிர்பார்த்து நின்ற சப்பானைத் தன் நாட்டின் தீவிரப் பாது காப்புத் திட்டங்களைக் கைவிடச் செய்திருக்க முடியாது என்பது வெள்ளிடைமலை. அப்படியானால் இவ்வரிய செயலைச் செய்ய வைத்தது யார்? வேறுயாறுமில்லை; அந்த அணுகுண்டுதான்; ஆம் இப் புதிய சக்திதான் (power) இச் செயற்கரிய காரியத்தைச் செய்தது. அப்போது இச் சக்தி அமெரிக்காவிடம் மட்டும்தான் இருந்தது. அமெரிக்கத் தலைவர்களும் அதன் பயங்கரச் சக்தியைப் பிரயோகிக்கத் தயங்கவில்லை; தக்க வாய்ப்பு எப்போது வரும் என்று காத்துக்கொண்டிருந்தார்கள்; இரகசியமாகச் செலவிட்ட 2,000,000,000 டாலர் தொகையை எப்படி விளக்குவது என்று யோசனை செய்துகொண்டிருந்தார்கள்; இறுதி வெற்றியில் ரஷ்யாவின் பங்கை எப்படிக் குறைப்பது என்று ஆலோசனை செய்துவந்தார்கள். இவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் காத்துக்கொண்டிருந்தது அந்தப் புதுச்சக்தி. ஆம் அந்தப் போர்த் தெய்வத்தின் (Mars) வழிபாட்டுக்காக பௌதிக நிபுணர்களும் (Physicists) பொறியியல் வல்லுநர்களும் (Engineers) சேர்ந்து உருவாக்கிய அந்தப் பேய்தான்! அந்த அணுகுண்டுதான்!

1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ஆம் நாள் அப் புதிய எறிபடையால் (missile) 'எனோலா கே' எனப்படும் அப் பேய்ச் சக்தி

யால் ஹிரோஷிமா நகரம் நாசமாக்கப்பட்டது. இரண்டு நாட்களில் சோவியத் யூனியன் சப்பான்மீது போர் தொடுத்தது. ஆகஸ்டு 9ஆம் நாள் நாகசாக்கிமீது மற்றொரு குண்டு விழுந்தது. இடியோசை கேட்ட நாகம்போலான சப்பான் சூலை 26ஆம் தேதி ஒப்பந்தத்தை ஏற்க முன்வந்தது. ஆனால், பேரரசின் தனியுரிமைகளுக்கு (privileges) எவ்விதப் பழுதும் வரக்கூடாதென்ற நிபந்தனை ஒன்றை சப்பான் போட்டது. அதற்குப் பேரரசர் ஊறு ஒன்றும் வராமல் காக்கப்படுவார் என்றும், ஆனால், அவர் நேசநாடுகளின் படைத்தலைவர் (Supreme Commander) ஜெனரல் மக்ஆர்த்தரின் கட்டளைகட்கு (orders) அடிபணிந்தாக வேண்டும் என்றும் பதிலளித்தது வாசிங்டன். வெற்றிக் களிப்புநாள் எனக் கருதப்படும் (VJ. Day) அந்த ஆகஸ்டு 14ஆம் தேதியன்று டோக்கியோ பெட்டிப்பாம்புபோல் அடங்கி ஒடுங்கிச் சரணடைந்தது.

பேரரசர் ஹிரோஹிட்டோ தன் குடிமக்களுக்கு விடுத்த செய்தி இங்குக் குறிப்பிடத்தக்கது.

'எக் குற்றமும் இழைத்திடாத நம் மக்கள்மீது பகைவன் சொல்லொணாத் துயரையும் அளவிடற்கரிய அழிவையும் பெய்யும் அணுகுண்டைப் பிரயோகிக்க ஆரம்பித்துவிட்டான். நாம் இனியும் தொடர்ந்து போர் புரிவோமாயின், நாமும் நம் நாடும் சேர்ந்து அழிவதோடன்றி மனித நாகரிகமே அழிந்து போகும் என்பதில் ஐயமில்லை.....எனவே நீங்கள் நேர்மையை வளர்த்து வாருங்கள்.'

இளவரசர் (Prince) நாருஹிக்கோ ஹிகாஷி-குனியைத் தன் தலைமை அமைச்சராக நியமித்தார் பேரரசர் ஹிரோஹிட்டோ. முக்கெடன் நிகழ்ச்சி நடந்து சுமார் 14 ஆண்டுகட்குப் பின் 1945ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி வெளிவிவகார அமைச்சர் (Foreign Minister) மாமருஷிகமெட்சும் படைத்தலைவர் (General) யோஷிஜிரோ உமஷும் டோக்கியோ விரிகுடாவில் (Bay) நின்ற யு.எஸ்.எஸ். மிசௌரி என்ற கப்பலில் தங்கள் நாடு சரணடைந்து விட்டதாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். அதை ஏற்று சோவியத் யூனியன், பிரிட்டன், சீனா, ஃபிரான்சு, ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் அமெரிக்காவின் சார்பில் ஜெனரல் மக்ஆர்த்தர் கையெழுத்திட்டார் (signed). செப்டம்பர் 8ஆம் தேதி டோக்கியோவை அமெரிக்கப் படைகள் தன் கைவசமாக்கிக்கொண்டன. போரில் வெற்றிமாலை சூடியோரை—நேச நாடுகளை எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு ஒரு முடிவு காணும்வரை அமெரிக்க இராணுவ நிர்வாகத்தை அமைத்தார் மாக்ஆர்த்தர். அக்டோபர் 5ஆம் நாள் அன்று தலைமை அமைச்சராய் இருந்த இளவரசர் ராஜினாமாச் செய்தார். அவர்

இடத்தில் பாரன் கிஜுரு சித்தெஹ்ரா என்பவர் நியமிக்கப்பட்டார். டிசம்பர் மாத நடுவில் மான உணர்வுமிக்க கொஜுயி தன் இன்னுயிர் நீத்தார்.

புகழ்ப் பாதைகள் : 1945-ல் சப்பான் பேரரசு அழிவதற்கு ஆதாரமாக இருந்த முடிவுகளைப்பற்றி இங்கு ஆராய்வதற்கில்லை. எப்படி இப் பண்டைப் பேரரசு திடீரென்று ஒரு நவீன வல்லரசாக மாறிற்று ; எங்ஙனம் அதன் கொள்கை வகுப்பாளர் (policy makers) பேரரசைப் பாதுகாக்கவும் அதன் மக்களுக்கு வளஞ் சிறந்த வாழ்வு அளிக்கவும் முன்வந்தனர்; எங்ஙனம் அதன் பெருமையை ஓங்கல் செய்தனர்; எவ்விதம் படைவலிமையால் பிரமாண்டமான பேரரசை எழுப்பினர்; எவ்விதம் உலகைத் தன் குடைக்கீழ் கொண்டுவர எத்தனித்தனர்; அன்றியும் எவ்வாறு இறுதியில் பேரிடிக்கு ஆளாயினர் என்ற வினாக்களுக்குமட்டும் இங்கு விடையளிக்க முயல்வோம்.

1853-ல் கமோடர் (கப்பற்படைத் தலைவர்) பெரி என்பவருடைய தலைமையில் ஓர் அமெரிக்கக் கப்பற் கூட்டம் டோக்கியோ விரிகுடா போய்ச் சேர்ந்தது. இந் நாட்டு மக்களுடன் வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள சென்றது இக் கூட்டம். ஆனால், இந் நாட்டு மக்கள் அப்போது வெளிநாட்டுடன் எந்தவிதத் தொடர்பும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. எனினும், இதே நாடு 60 ஆண்டுகட்குப் பின்னர் செர்மனிக்கெதிராக அமெரிக்காவின் நேசநாடாகவும், 90 ஆண்டுகட்குப் பின்னர் பசிஃபிக் வட்டாரத்தில் அமெரிக்காவின் கடு விரோதியாகவும், 100 ஆண்டுகட்குப் பின்னர் ரஷ்யாவுக் கெதிராக அமெரிக்காவின் நட்பு நாடாகவும் மாறவிருந்தது. மேலை நாட்டுடன் தொடர்பு கொண்டதும் சப்பானின் படைநிலமானியப் பிரபுக்கள் (feudal lands), இளவரசர் சிறுவயதினராக இருந்தபடியால் அவர் பெயரில் நாட்டை ஆண்டுவந்த ஆட்சிக் குழுவை (Regent) 1867-ல் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, இளவரசர் மட்சு ஹிட்டோவிடமே முழு அதிகாரத்தையும் ஈந்தனர். மேலை நாகரிகத்தைக் கடைப்பிடிக்கலாயினர். அதன் பிரகாரம் ரயில் போக்குவரத்து நீராவிக் கப்பல்கள் (steamships), இயந்திரங்கள், தொழிற்சாலைகள், பாங்குகள் (banks) ஆகியவைகளை நிறுவுவதற்குத் தம் நாட்டில் அடிகோலினர் ; நிலப் படையையும் கப்பற்படையையும் நவீனமயமாக்கினர்.

சப்பானில் மேலைநாட்டுப் பழக்கவழக்கம் குடிகொண்டதும் இங்குள்ள செல்வாக்குக் கூட்டம் (elites) மேலைநாட்டு முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்த முற்பட்டது. இக் கூட்டத்தில் பிரபுக்கள், வியாபாரிகள், இராணுவத் தலைவர்கள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். நெடுநாள் சீனப் பேரரசின் சார்புநாடாக விளங்கி

வந்த கொரியாவை 1894-ல் சப்பான் தாக்கிற்று. சீனுவுடன் போர் மூண்டது. 1895-ல் சப்பான் வெற்றிமுரசு கொட்டியது. ஃபார்மோசா, பெஸ்காடோஸ், லியோடுங் தீபகற்பம் முதலியவற்றைத் தன்னுடன் அது வலுவந்தமாக இணைத்துக்கொண்டது (annexed). 1902-ல் சப்பான் பிரிட்டனுடன் ஒரு நேசவுடன்படிக்கை செய்தது. 1904-ல் ரஷ்யாமீது அது படையெடுத்து அதை முறியடித்தது. 1905, செப். 5ஆம் நாள் செய்யப்பட்ட போர்ட்சு மௌத் உடன்படிக்கைப் பிரகாரம், தென் சாகாலின் (காராபூட்டோ), ஆர்த்தூர் துறைமுகம், லியோடுங் தீபகற்பம், ரஷ்யா குத்தகைக்கு எடுத்திருந்த பகுதிகள் (lease holds), தென் மஞ்சூரியாவில் ரஷ்யாவைச் சேர்ந்த இருப்புப்பாதை, சுரங்கங்கள் ஆகிய வற்றைத் தன்வசமாக்கிக்கொண்டது சப்பான். பிலிப்பைன்சு மீது சப்பான் கை வைக்காமல் கொரியாவில் அது எது வேண்டு மானாலும் செய்துகொள்ளும் என்ற ஓர் ஒப்பந்தத்துக்கு இணங் கும்படி 'டெடி' ரூஸ்வெல்ட்டுக்கு (அதாவது தியோடோர் ரூஸ் வெல்ட்) (1905, சூலை) நேரிட்டது. 1910-ல் சப்பான் கொரி யாவை வலுவந்தமாகத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. 4 ஆண்டுகட்குப் பின்னர் செர்மனியிடமிருந்து அது கியோ சோவைப் பிடுங்கிக்கொண்டது. 1915-ல் 'இருபத்தொரு கோரிக் கைகள்' அடங்கிய பட்டியல் ஒன்றை அது வெளியிட்டது. அதன் பிரகாரம் சீனுவைத் தன் காப்பரசு நாடாக்க அது விரும் பியது. 1918-ல் சான்டுங், மஞ்சூரியா, உள்மங்கோலியா, வட சாகாலின், கிழக்கு சைபீரியா ஆகிய நாடுகளை அது தன்னுடன் இணைத்துக்கொண்டது.

சப்பானின் மண்ணாசையைக் கண்டு நடுங்கியது அமெரிக்கா. 1922-25-ல் செய்யப்பட்ட உடன்படிக்கைகள், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் கடல்வலிமை தன் வலிமையைவிட அதிகம் என்ற உண்மையை சப்பான் உணரும்படி செய்தன; தான் கைப்பற்றியிருந்த சீனுவையும் ரஷ்யாவையும் சேர்ந்த நிலப் பகுதிகளைக் கைவிடும்படி செய்தன; மேலும் சமத்துவப் பொருளாதார வாய்ப்புக் கொள்கையையும் பசிஃபிக் வட்டாரத்தில் அப்போது நிலவிய சூழ்நிலையையும், சப்பான் ஏற்குமாறு அவை செய்தன.

ஃபாசிசத்தின் போக்கு : சப்பானிய ஆட்சியாளர்கள், தாங்கள் மேலைநாடுகளின் வழி முறைகளை நன்கு கற்றுக்கொண்டுவிட்டதை நிரூபிக்கலாயினர். முதலாளித்துவம் (capitalism), நாட்டுணர்ச்சி (nationalism), ஏகாதிபத்தியம் (imperialism) மற்றும் இராணுவத் துவம் ஆகியவற்றை ஐயம் திரிபறக் கற்றுக்கொண்டனர். ஒரு புதிய சமுதாயம் உருவானது. அதில் ஏழை மக்களோ ஆயிரக்

கணக்கில் இருந்தனர். நிம்மதியற்ற பணக்காரர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் நாட்டுப்பற்றையும் (patriotism) நாட்டின் செழிப்பையும் எப்படியாவது வளர்க்கத் தீர்மானித்தனர். மின்சீட்டோ கட்சியைச் சேர்ந்த அனைவரும் புதுப் பணக்காரர்கள்தான். எட்டு சைபாட்சு குடும்பத்தார் மிட்சூயி, மிட்சுபிசி, அசானோ, சுமிடோமா, ஷிபுசாவா, யசுதா, ஒகுரா, சுசூக்கி ஆகியோர் கையில்தான் தொழிலும் பாங்கு முறையும் (banking) இருந்தன. முன்னுல் உயர்குடிப் பெருமக்களும் (aristocrats) படையினரும் சியுக்காய் கட்சியில் அதிகமாய் இருந்தனர். இருதரத் தாருமே வாய் அளவில்தான் மக்களாட்சியை ஆதரித்து வந்தனர். அங்கு நிலவி வந்த அரசாங்கம் ஓர் அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி (constitutional monarchy) ஆகும். தொழில் முன்னேற்றமும் மக்கள் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டே சென்றன. தம் சொந்த நாட்டிலோ அல்லது வெளியுலகிலோ பலாத்காரத்தை (violence) மேற்கொள்ளாமல் இந்நாட்டு ஆட்சியாளர்கள் வேறு முறைகளால் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்கலாம்; நாட்டின் நிலைமையை உறுதிப்படுத்தியிருக்கலாம். ஆனுல், அப்படிச் செய்தார் இல்லே. 1929-ல் உலகப் பொருளாதார அமைப்பு சீர்குலைந்துபோகவே, மற்ற நாடுகளைப்போல் சப்பானிலும் ஆயிரக்கணக்கான மக்கள் வேலேவெட்டி இல்லாமலும், வயிற்றுக்கு உணவு கிடைக்காமலும் திரிந்து அலேய நேரிட்டது. இச் சூழ்நிலேயில்தான் மேற்படி சிக்கல்களைத் 'தீர்ப்பதற்காக' ஃபாசிச முறைகளை ஆட்சியாளர்கள் அதிதீவிரமாக மேற்கொண்டார்கள்.

1930, நவ. 14-ல் தலேமையமைச்சர் அமாகுச்சு அரசியல் படுகொலேக்கு (assassination) ஆளானுர். அடுத்தாற்போல் இராணுவ பக்கபலம் பெற்றிருந்த நாட்டுப்பற்றுடைய பயங்கரவாதிகள் (terrorists) தலேமையமைச்சர் இனுக்காவையும் கொன்றுவிட்டார்கள். 1936, பெப். 26-ல் நடந்த திடீர்ப்புரட்சியில் (coup) இராணுவ பயங்கரவாதிகள் செய்ட்டோ, நிதி அமைச்சர் (Finance Minister) தக்காசி, படைத்தலேவர் வட்டானேபு ஆகியோரை வாளுக்கிரையாக்கினர். உயிர் தப்பிய தலேமையமைச்சர் ஒக்கேடா பதவியை ராஜிநாமா செய்தார். அவர் இடத்தில் கோக்கி இரோட்டோ நியமிக்கப்பட்டார். கொலேபாதகர்களால் நடத்தப்பட்ட அரசாங்கம் எப்போதும்போல் இரகசியப் போலீசு அரசாங்கமாய் மாறிற்று. அதோடல்லாமல் அவ் வரசாங்கம் 'மனித சிந்தனேயையும் கட்டுப்படுத்தலாயிற்று'. அதிநவீன தேசபக்தர்களும் (ultra-patriots) அடக்குமுறையினரும் (militarists) தம் குறிக்கோள்களே எய்த முனேந்தனர். அதற்கான மக்கள் ஆதரவைப்


SOVIET RUSSIA
TRANS-SIBERIAN RY
Nikolaevsk
Komsomolsk
Khabarovsk
SAKHALIN-FROM RUSSIA 1905
Irkutsk
Lake Baikal
Chita
Argun R.
Amur R.
TANNU TUVA
CONQUERED 1931-1932
MANCHUKUO
OUTER MONGOLIA
PROTECTORATE OF U.S.S.R. MARCH 12, 1936
CONQUERED 1933
Vladivostok
JAPAN
WAR BEGINS JULY 7, 1937
Paotow
Peiping
ANNEXED 1910
Tokyo
THE SINKIANG ROAD (TO RUSSIA)
Aug 8, 1937
Tientsin
KOREA
Yellow River
FROM RUSSIA 1905
Suchow
Sian
Dec 10, 1937
Oct 28, 1938
Nanking
Oct 27, 1937
CHINA
Hankow
Shanghai
HQRTRS OF CHIANG KAI-SHEK CAPITAL OF FREE CHINA
Chungking
Yangtze River
"CAPITAL" OF WANG CHING WEI REGIME, EST. MARCH 1940 RECOGNIZED BY JAPAN AS "GOVT" OF CHINA NOV 30 1940
INDIA
Road closed July 18 — re opened Oct 18, 1940
Oct 21, 1938
Amoy
Kunming
Swatow
Calcutta
Nanning
Pinyang
Canton
FORMOSA
FROM CHINA 1895
Mandalay
Hong Kong
Kwangchowan
Bay of Bengal
Hanoi
Sept 22, 1940
HAINAN
Feb 10 1939
Rangoon
THAILAND
FRENCH INDO-CHINA
PHILIPPINE ISLANDS
Manila
ANNEXED BY THAILAND MARCH 2 1941, AFTER FRONTIER FIGHTING & JAPANESE "MEDIATION"
Bangkok
South China Sea
Saigon
Camranh Bay
Kra Isthmus
SPRATLEY IS
July 29, 1941
March 31 1939
MALAY STATES
SARAWAK (BR)
SUMATRA
Singapore
BORNEO
Batavia — DUTCH EAST INDIES
Indian Ocean
JAVA
THE EXPANSION OF JAPAN
1895 - 1940
SCALE OF MILES
0 200 400 600 800 1000
AREAS UNDER JAPANESE CONTROL — JAN. 1, 1941
Date
DATES OF JAPANESE OCCUPATION

பெறும் பொருட்டும், வறுமையில் மூழ்கிக்கிடக்கும் சப்பானின் கடுமையான சிக்கல்களைத் 'தீர்க்கும்' பொருட்டும் அவர்கள் அகமும் புறமும் பலாத்காரத்தை மேற்கொள்ளுவதற்குத் தயங்கினரில்லை.

1931, செப்டம்பர் மாதம் டோக்கியோவின் போர் வெறியர் மஞ்சூரியாவைக் கைப்பற்றினர். சீனா கதியற்று நிற்பதையும், தங்களுடைய நடவடிக்கையைக் குறித்து மேலைவல்லரசுகள் கண்டனம் செய்ய விருப்பமில்லாமல் இருப்பதையும் அவர்கள் நன்கு கண்டு கொண்டனர். கம்யூனிச எதிர்ப்பால் மக்களின் நாட்டுப்பற்றை ஊக்குவிக்கவும், மேலைமக்களாட்சிகளை மயக்கவும் தங்களால் முடியும் என்றும் அவர்கள் நன்கு உணர்ந்துகொண்டனர். உடனே சப்பானியக் கொள்கை வகுப்பாளர், 1936, நவம்பர், 25 அன்று கமின்டர்ன் எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, செர்மன் நாசி அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டனர். அதோடல்லாமல், ரஷ்யாவுக்கு எதிராகச் சென்று மஞ்சூரியாவிலும் மங்கோலியாவிலும் எல்லைப் போரும் நடத்தினர். இறுதியில் சீனாவைக் கைப்பற்றித் தங்கள் சிக்கல் அனைத்திற்கும் வழிகாணத் துடித்தனர்; 1937, ஜூலை மாதம் அதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். அப் போரில் எண்திசையும் பிணங்கள் குன்றெனக் குவிந்தன. இரத்தம் ஆறெனப் பாய்ந்தது. அழிவு ஆனந்தக் கூத்தாடியது. இக் கொடுமையைக் கண்ணுற்ற மேலைநாட்டு அரசியல் வல்லுநர் (statesman) வாய் அளவில் வருத்தம் தெரிவித்துக்கொண்டார்களேயன்றி, அவர்கள் சப்பானின் 'கம்யூனிச எதிர்ப்புப் போரை' மனமார வாழ்த்தினர்கள் என்பதில் ஐயமில்லை.

ஐரோப்பாவில் போர் மூண்டதும், சப்பானின் போர்வெறி பிடித்த ஃபாசிஸ்ட்டு அரசியல்வாதிகட்குத் தக்க வாய்ப்புகள் பிறந்தன. ஆனால், எதற்கு முதலிடம் கொடுப்பது என்று தெரியாமல் திகைத்தனர். நாசிகள் ஃபிரான்சைக் கைப்பற்றியதுமே, அவர்கள் இந்தோசீனாவை ஒரு காப்பரசு நாடாகச் (protectorate) செய்துவிட்டார்கள். 1940, ஜூலை மாதம் இளவரசர் கொனயி மீண்டும் தலைமையமைச்சரானார். ஆனால், இம்முறை அவர் ஓர் இராணுவக் காபினட் அமைச்சவைத் தலைவராக அமர்த்தப் பட்டார். அச் சபையில் யோசூக் மட்சூக்கா வெளியுறவு மந்திரியாக நியமிக்கப்பட்டார். சுத்த சர்வாதிகாரத்துவப் பெயரில் அரசியல் கட்சிகள் வேருடன் களைந்தெறியப்பட்டன. ஆசியாவில் சப்பான் தன் குறிக்கோள்களை எய்துவதற்கும், ஐரோப்பாவில் அச்சு வல்லரசுகள் (Axis Powers) (அதாவது, இத்தாலியும் ஜெர்மனியும்) தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அமெரிக்காவும் ரஷ்யாவும் தொடர்ந்து நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்

பிடிப்பது அதிக அவசியமாய்த் தோன்றியது. மாசுகோவைப் போல் வாசிங்டனும் சீனுவுக்குச் சிறிய கடன் கொடுத்துவந்தது. மேலும், ரஷ்யாவைப்போல் அல்லாமல் அமெரிக்கா பிரிட்டனுக்கும் பேருதவியளிக்கத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தது. ஏனெனில், செப். 2ஆம் தேதி நாசிகளுடன் பூரண நட்பு உடன்படிக்கை செய்துகொள்வதற்கு கொனயி இறுதியாக ஒப்புக்கொண்டார்; 1940, செப். 27ஆம் தேதி ரிப்பன்டிராபு, சியானே, மற்றும் தூதர் சபுரு குருசு ஆகியோர் பெர்லினில் ஒரு பத்தாண்டுக் 'கூட்டுறவு' (co-operation) ஒப்பந்தம் செய்தனர்; அதன்பிரகாரம் சப்பானும் அச்சு வல்லரசுகளும், ஐரோப்பாவிலும் கிழக்கு ஆசியாவிலும் 'ஒரு புதிய அமைப்பை' உருவாக்க வேண்டுமென்று முடிவு செய்தன.) அதற்கு ஆவன செய்யும்பொருட்டு எந்த ஒப்பந்த நாடாவது 'தலைமை' (leadership) தாங்குமாயின் அதை இதர நாடுகள் 'ஒப்புக்கொள்ள' வேண்டுமென்றும், 'மதிக்க' வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், 'இந்த ஐரோப்பியப் போரிலோ, அன்றி சீன-சப்பானியச் சண்டைகளிலோ இன்று கலந்துகொள்ளாத எந்த வல்லரசாவது பின்னல் இவ் வொப்பந்த நாடுகளில் (contracting powers) ஒன்றைத் தாக்கினுல், அந் நாட்டுக்கான எல்லா அரசியல், பொருளியல், இராணுவ உதவியையும் ஒப்பந்த நாடுகள் அளிக்க வேண்டும்' என்றும் (3ஆம் ஷரத்துப் பிரகாரம்) நிர்ணயிக்கப்பட்டது. ஆனுல், இதைக் கண்டு பயப்படவில்லை அமெரிக்கா. மாருக, அது தொடர்ந்து பிரிட்டனுக்கும் சீனுவுக்கும் அளித்துவந்த உதவியை அதிகமாக்கிற்று. டோக்கியோ பயமுறுத்திப் பார்த்தது. பலனில்லாமற் போகவே, வாய்ப்புக் கிடைக்கும்வரை வாளா இருந்துவிட்டு, வாய்ப்புக் கிடைக்கும்போது செயலில் ஈடுபடுவதற்காக ஆயத்தமாக இருந்தது சப்பான்.

ஆண்டு 1941 : நிப்பன் (சப்பான்) தலைவர்கள் ஆரம்பத்தில் மிகக் கவனமாக இருந்துவந்தார்கள். ரஷ்யாவைத் தாக்கவேண்டுமென்று 1940ஆம் ஆண்டிலேயே ஹிட்லர் முடிவு செய்துவிட்டார்; அதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டார். சப்பானுக்கு இத் திட்டம் தெரியாமல் இரகசியமாக நடத்துமாறு ஆணையிட்டார். செர்மனி ஒன்றே ரஷ்யாவை விரைவில் நசுக்க முடியும் என்ற மமதை கொண்டார். அதனுல் தென்கிழக்கு ஆசியாவில் சப்பான் பிரிட்டனைத் தாக்கினுல் உத்தமம் என்று அவருக்குத் தோன்றிற்று. கொனயி இதை எப்படியோ புரிந்துகொண்டு இவ் வலையில் சிக்குண்டுபோகாமல் தப்பித்துக்கொள்ள முயன்ருர். அதற்காகவேண்டி 1941ஆம் ஆண்டு வசந்தத்தில் அவர் மட்சூக்காவைச் சுற்றுப்பயணம் (tour) செய்ய அனுப்பிவைத்தார். அவர் பெர்லினிலும் ரோமிலும் தந்திரமாகத் தப்பித்துக்கொண்டார். ஏப்ரல் 13ஆம் தேதி மாசுகோவில்

ஐந்தாண்டுகள் நீடிக்கக்கூடிய சப்பான்-சோவியத் அணுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். அதன் பிரகாரம் இந்நாடுகளில் ஒன்று வேறெந்த நாட்டுடனுவது சண்டை செய்ய நேரிடும் பட்சத்தில் மற்ற ஒப்பந்த நாடு நடுநிலைமையுடன் நிற்கவேண்டும் என்று இரு நாடுகளும் உறுதி பூண்டன. அப்போது நாசி-சோவியத் போர் புகையும் நேரம். அதில் தலையிடாமல் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளத்தான் டோக்கியோ விரும்பியது. கிரெம்லினுடன் தான் செய்த ஒப்பந்தத்திற்கேற்ப நடுநிலைமையுடன் நடந்து கொள்ளும் நோக்கத்தில்தான் மட்சூக்கா வடசகாலினில் அது காறும் நிலவிவந்த சப்பானிய நிலக்கரி, எண்ணெய்ச் சலுகைகளுக்கு (concessions) முற்றுப்புள்ளி வைத்ததாகப் பின்னல் சொல்லப்பட்டது.

செர்மனி வல்லாட்சியாளரின் (der Fuhrer) மடத்தனத்தைக் கண்ணுற்ற நிப்பன் தலைவர்கள் சிறிது எச்சரிக்கையுடன் இருந்திருப்பார்களேயானுல், பின்னல் வரவிருந்த அழிவிலிருந்து தங்கள் நாட்டைக் காப்பாற்றியிருக்கலாம். அப்படிச் செய்தார்களில்லை. செர்மனி மாசுகோவைத் தாக்கியதுமே டோக்கியோவின் காபினட் அமைச்சவையில் மாற்றம் ஏற்படத் தொடங்கிற்று. மட்சூக்கா ராஜினாமா செய்தார். அதன் பின்னரே, 'தான் இப்போது ஒரு சுதந்திர மனிதன் என்றும், தன் முழு நேரத்தையும் வாசிப்பதில் செலவிடப்போவதாகவும்' கூறிக்கொண்டார். கொனுயிக்குப் பதில் ஜெனரல் ஹிட்கி டோஜோ அக்டோபர் 18ஆம் தேதி தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் ஷிஜநோரி டோகோவை வெளியுறவு அமைச்சராக நியமித்தார். 'தன் நாட்டுக்காக வாழ்வதும் உயிர்விடுவதும்தாம் முழுப் போரின் (total war) குறிக்கோள் எனலாம்... நாம் அனைவரும் ஒரே இனத்தவரின் உறுதி பூண்டு சரித்திரப் புகழ்பெற வாழ்வோமாக' என்று லெப்டினன்ட் ஜெனரல் டீசி சுசுக்கி கேட்டுக்கொண்டார். இலையுதிர் காலத்தில் நடக்கவிருந்த முக்கியப் பேச்சுவார்த்தைகளில் (negotiations) கலந்துகொள்ளும்பொருட்டு குருசு வாசிங்டன் சென்ருர். அங்கு தூதர் நுமுராவைச் சந்தித்துப் பேசினர். அப்போது இந்தோசீன முழுதும் சப்பான் கைவசமிருந்தது. வாசிங்டனும், பிரிட்டனும், வெளிநாட்டில் தாபிக்கப்பட்ட (நாடுகடந்த) டச்சு அரசாங்கமும் (Government in Exile) எதிர்நடவடிக்கை எடுப்பதிலும் பொருளாதார முற்றுகை கொண்டுவருவதிலும் முனைந்து நின்றன.

1941-ல் சப்பான் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பல இருந்தன. எனினும், அமைதியைப் பாதுகாப்பது அவற்றுள் ஒன்ருய் இருந்திருக்க முடியாது என்று துணிந்து கூறலாம். ஏனெனில், பாசிஸ்டுகளின் கொள்கையே இதற்கு நேர் முரணுனது அல்லவா? அவர்கள் வியாபாரப் புள்ளிகளுடன் தோழமை பூண்டு பொது

நிதியைப் படைக்கலப் பெருக்கத்தில் செலவிட்டார்கள் அல்லவா? அதனால் உருவான பொருளாதார அரசியல் அமைப்புக்குப் படைக்கலங்கள், போர், வெற்றி ஆகியவைகள் உயிர்நாடிகள் ஆயின. இக் குறுகிய எல்லைக்குள்கூட சப்பான் பின்பற்றக்கூடிய வழிகள் பல இருந்தன. சீனாவைக் கைப்பற்றல்; ஹிட்லருடன் சேர்ந்து ரஷ்யாவைத் தாக்குதல்; தென்கிழக்கு ஆசியாவில் பரவியிருந்த பிரிட்டிசு, டச்சு சாம்ராச்சியங்களைத் (empires) தாக்குதல்; அன்றி, அமெரிக்காவுடன் தன் படைவலிமையைக் (showdown) காட்டல் ஆகிய பல வழிகள் அதற்கு எதிரில் இருந்தன. இவற்றுள் முதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும்பட்சத்தில் சப்பானுக்கு வெற்றி கிட்டியிருக்கும். ஆனால், சீனாவின் எதிர்த்தாக்குதலுக்கு அமெரிக்கா காட்டிவரும் ஆதரவைத் தூண்டுதலினால் அல்லாமல் பலாத்காரத்தின் மூலமாகக் கைவிடுமாறு செய்தாலொழிய, இந் நடவடிக்கையில் வெற்றி காண்பதரிது என்ற கருத்து சப்பானின் இராணுவத் திட்டம் தீட்டுவோருள் நிலவிவந்தது. அதனால் அதை மேற்கொள்ள முடியாதுபோயிற்று. இரண்டாவது வழியை அவர்கள் அவ்வளவு தீவிரமாக நினைக்கவில்லை. ஏனெனில், செர்மானியரைப்போலன்றி சப்பானிய நிபுணர்கள் ஓர் உண்மையை அறிந்து உணர்ந்திருந்தனர். கரடியைக் கொல்லும் சக்தியற்றவன் அதன் வாலைப் பிடித்தால் உயிர் தப்புவது எங்ஙனம் என்ற உண்மையைத்தான் அவர்கள் அறிந்திருந்தார்கள். சப்பானியத் தலைவர்கள் மூன்றாவது வழியில் சென்றிருக்கலாம். அவ் வழி சென்றிருப்பின் நேரடி அமெரிக்கத் தலையீடே ஏற்பட்டிருக்காது. இப் பல வழிகளுள் கடைப்பிடிப்பது யாது என்று ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்ற தலைவர்களுக்குத் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. எல்லாம் பெரிய 'பகை வல்லரசுகள்' கையில்தான் இருக்கிறது என்றும், கிழக்கில் உருவாகியிருக்கும் 'புதிய அமைப்பை' லஞ்சம் (bribe), அச்சுறுத்தல் (blackmail), பலாத்காரம் ஆகியவற்றின்மூலம் அமெரிக்கா ஏற்கும்படி செய்தால்தான் மற்றெல்லாக் குறிக்கோள்களையும் எய்த முடியும் என்றும் அவர்கள் இறுதியாக முடிவு கட்டினர். அமெரிக்காவை அவர்கள் வழிக்குக் கொண்டுவந்திருக்கும் பட்சத்தில் அவர்கள் திட்டமும் நிறைவேறியிருக்கும். அவ்வாற்றலின்றி இத் திட்டம் தீட்டுதல் பெரும் மடத்தனமாகும். ஏனெனில், தனக்கு நிகரான மற்றொரு வல்லரசை முழுப் போரில் தனக்குச் சரணடையும்படி கட்டாயப்படுத்துவதோ, அன்றி முழு வெற்றி அல்லது முழுத் தோல்வியால் ஏற்படும் இடையூறுகளை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்துவதோ பொறுப்பற்ற தன்மை ஆகும் அல்லவா ?

டோஜோ, டோகோ ஆகியோருக்கு இத்தகைய நோக்கமே இல்லை என்று துணிந்து கூறலாம். எனினும், இவர்களுக்கு

பாசிஸ்டு முக்கூட்டு ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ரூஸ்வெல்ட்டு ஆட்சி ஈடுபட்டுவருவதும், அதனால் அது பேச்சுவார்த்தை நடத்த விருப்பமில்லாமல் இருந்துவருவதும் தெரியவில்லை போலும். ஏனெனில் அது தெரியாமல் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினர். தென் இந்தோசீனாவை விட்டு வெளியேறத் தங்கள் நாடு தயார் என்று நொமுராவும் குருசும் கூறினர். அமெரிக்கா விதித்திருக்கும் வர்த்தகத் தடைகளை நீக்கினால், அது எண்ணெய் அளிப்பதாக உறுதியளித்தால், சப்பான் போடும் நிபந்தனைகளுக்கிணங்க சீனாவுடன் 'சமாதானத்துக்கு' (peace) வர இசைந்தால், தென்கிழக்கு ஆசியாவிலோ, அன்றி தெற்குப் பசிஃபிக்கிலோ எவ்விதப் படை நடமாட்டமும் இராது என்று உறுதியளித்தது சப்பான். அமெரிக்காவோ தன் தரப்பில் வேறொரு நிபந்தனையிட்டது. சப்பான் பன்முக அனுக்கிரமிப்பு ஒப்பந்தங்கள் (multilateral pacts of nonaggression) செய்ய முன்வரவேண்டும் என்றும், சீனாவில் அது நடத்திவரும் பொம்மை அரசாங்கத்தைக் கைவிடவேண்டுமென்றும், மேலும் சீனாவிலிருந்தும் இந்தோசீனாவிலிருந்தும் அது தன் தரைப்படை, கப்பற்படை, விமானப்படை, மற்றும் போலிசுப் படையை வெளியேற்றிவிடவேண்டும் என்றும் அமெரிக்காவின் சார்பில் ஹல் (நவ. 26 அன்று) நிபந்தனையிட்டார். இந் நிபந்தனைகளை ஏற்க சப்பான் முன்வந்தால் வர்த்தகச் சலுகைகள் அளிக்கத் தன் நாடு தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்தார். தான் விதிக்கும் நிபந்தனையை வாசிங்டன் ஏற்க முன்வருமென்று டோக்கியோவுக்கு நன்கு தெரியும். ஆனால், சப்பான் மீது தான் விதிக்கும் நிபந்தனைகளை—அதாவது, 10 ஆண்டுகளில் அது கைப்பற்றிய நாடுகளனைத்தையும் கைவிட்டுவிட்டு 1931-ல் நிலவிவந்த நடைமுறை நிலைமையை (status quo) மீண்டும் நிலைநாட்டவேண்டுமென்பதை டோக்கியோ ஏற்க முன்வராது என்பதும் வாசிங்டனுக்கு நன்றாகத் தெரியும். இந் நிபந்தனைகளைக் காதில் வாங்காமல் சப்பான் போரில் இறங்கத் தயங்காது என்பதும் ரூஸ்வெல்ட்டு, ஹல், ஸ்டிம்சன், மார்ஷல் ஆகியோருக்குத் தெரியும். ஆனால், சப்பானின் முதல் தாக்குதல் மலாயா, டச்சு இந்தியத் தீவுகள், பிலிப்பைன்சுமீதே விழும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

சப்பான் போட்ட கணக்கு சரியில்லை. அது போட்ட கணக்கு அதற்கே அழிவைப் பெய்யவிருந்தது. ஆனால், அந்த நேரத்தில் தன் கணக்கு சரியென்றே அதற்குத் தோன்றிற்று. புதிய போர்முறை ஒன்றைக் கண்டுபிடித்தவனுக்கு அது வெற்றியே அளிக்கும் என்று தோன்றும்போலும்! பசிஃபிக் வட்டாரத்தில் செய்வதொன்றும் தெரியாமல் அமெரிக்காவைத் திணறவைக்கக்கூடிய வழிமுறைகள் தங்களிடம் இருப்பதாகப் (சப்பானியப்) படைச்சூழ்ச்சிக்காரர்கள்

அரசியல் வல்லுநர்களே நம்பச் செய்தார்கள். (நவம்பர் 27ஆம் தேதி. உப கடற்படைத் தலைவர் (Vice-Admiral) சுய்ச்சி நாகுமோ தலைமையில் போர்க்கப்பற் கூட்டம் ஒன்றும்) சிறிய விமானங்களைச் சுமந்து செல்லும் அரை டசன் கப்பல்களும் இட்டரோஃபு தீவை விட்டுப் புறப்பட்டன. 1941 டிச. 7ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இரண்டரை மணிக்குக் குருசும் நொமுராவும் ஹல்லுக்கு இறுதிச் செய்தி ஒன்று அனுப்பினர். அதில் அமெரிக்காவின் பிரேரணைகளை ஏற்கத் தாங்கள் தயாராயில்லை என்றும், கிழக்கு ஆசியாவில் நிறுவப்பட்டிருக்கும் புது அமைப்புக்கு (New Order) எதிராக அமெரிக்கா பிரிட்டனுடன் சேர்ந்து சதிசெய்வதாகவும் அச் செய்தி கூறியது.

அப்போது ஹவாயில் காலை நேரம். பகைவன் கண்ணிற்குப் புலப்படா நாகுமோவின் படைவீரர்கள் 200 மைல் வடக்கே இருக்கும் பர்ல் துறைமுகத்தைத் தாக்குவதற்காக 105 விமானப்படைகளை ஏவினர். அவைகள் அமெரிக்கக் கப்பற்படையைச் சேர்ந்த பிரம்மாண்டமான கப்பல்களில் (அரிசோனா, ஒக்லாஹோமா, கலிஃபோர்னியா, நெவேடா, மேற்கு வெர்ஜினியா, பென்சில்வேனியா, மேரிலாந்து, டெனிசி, ஊட்டா) பாதியை இரண்டே மணி நேரத்தில் திணறடிக்கச் செய்தன. அதோடல்லாமல், ஆறு போர்க் கப்பல்கள் (destroyers, cruisers), பல சாதாரணக் கப்பல்கள், மேலும் அத் தீவிலிருந்த தரைப்படை, கப்பற்படையைச் சேர்ந்த பல விமானங்கள் அனைத்தும் செய்வதொன்றும் அறியாமல் திகைத்தன. படைத்தலைவர் மார்ஷல் வாசிங்டனில் எப்போதும்போல் காலையில் குதிரைச் சவாரி செய்துகொண்டிருந்தார். போர்க்களத்தில் அகப்பட்டுக்கொண்ட கப்பற்படைத் தலைவர் கிம்மலும் ஜெனரல் ஷார்ட்டும் வியப்பில் மூழ்கிவிட்டனர். அப் போரில் அமெரிக்கத் தரப்பில் இறந்தோர் 2,343 பேர், காயமடைந்தோர் 1,272 பேர், காணுமற்போனவர் 960 பேர் என்று சொல்லப்படுகிறது.

டோஜோ போட்ட எடை சரியானதுபோல் தோன்றிற்று. இரண்டு நாட்களுக்குப் பின்னர் மலாயாவுக்கு அப்பால், பிரிட்டனைச் சேர்ந்த வேல்சு இளவரசர் என்ற கப்பலும் நிப்பல்சு (Repulse) என்ற கப்பலும் குண்டுக்கு இரையாகிக் கவிழ்ந்தன. அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து ஆகியவைமீது போர் தொடரப்பட்டது. டிச. 11ஆம் தேதி ஹிட்லரும் முசோலினியும் அமெரிக்காமீது போர் தொடுத்தனர். ரஷ்யாவும் சப்பானும் தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கை பிரகாரம் 'சமாதானமாக' இருந்தன. சீனாவுக்கும், இப்போது ரஷ்யாவுக்கும் கிடைத்துவந்த ஆங்கிலோ-அமெரிக்க உதவி தடைப்பட்டுப்போனால், அவை இரண்டையும் அழித்துவிடுதல் எளிது என்று நினைத்தது சப்பான். அந் நிலைமை ஏற்பட்டுவிட்டால்


THE DEFEAT OF JAPAN
Line of farthest Japanese expansion
Dates of major U.S. victories and captures
Pacific Ocean
Indian Ocean
Bering Sea
Sea of Okhotsk
Sea of Japan
U. S. S. R.
MONGOLIA
MANCHURIA
CHINA
KOREA
JAPAN
KURILE IS.
ALEUTIAN IS.
DUTCH HARBOR
KISKA
ATTU
HAWAIIAN ISLANDS
OAHU
Honolulu
HAWAII
MIDWAY
Battle of Midway Naval Action June 6, 1942
JOHNSTON
PALMYRA
FANNING
CHRISTMAS
MARQUESAS IS.
UNION IS.
SAMOA IS.
HOWLAND
BAKER
CANTON
PHOENIX IS.
ELLICE IS.
MANUMEA
TARAWA
MAKIN
GILBERT IS.
Nov 24, 1943
MARSHALL IS.
KWAJALEIN
ENIWETOK
Feb 17, 1944
Feb 6, 1944
WAKE
TRUK
CAROLINE ISLANDS
MARIANAS IS.
SAIPAN
GUAM
Aug 10, 1944
July 9, 1944
MARCUS
BONIN IS.
IWO
VOLCANO IS.
March 16, 1945
Japanese Surrender August 14, 1945
HONSHU
Tokyo
SHIKOKU
KYUSHU
OKINAWA
June 22, 1945
RYUKYU IS.
FORMOSA
Shanghai
Hongkong
HAINAN
FR. INDO-CHINA
THAILAND
BURMA
PHILIPPINES
LUZON
Manila
Feb. 25, 1945
MINDANAO
SAMAR
LEYTE
Dec. 15, 1944
PALAU IS.
YAP
ULITHI
PELELIU
Sept. 1944
MOROTAI
HALMAHERA
BIAK
NEW GUINEA
Port Moresby
NEW BRITAIN
NEW IRELAND
BOUGAINVILLE
SOLOMON IS.
GUADALCANAL
Feb 9, 1943
S. CRUZ IS.
Coral Sea Naval Action May 18, 1942
AUSTRALIA
Darwin
TIMOR
INDIES
BORNEO
DUTCH EAST
JAVA
SUMATRA
MALAY STATES
Singapore
Hokkaido
KARAFUTO
SAKHALIN
Russian Armies Invade Manchuria Aug 9, 1945
Nadivostok
Hiroshima, Aug 6 Nagasaki, Aug 9 Atomic Bomb Targets, 1945
Japan Sea
Sea of Okhotsk
June 2, 1943
August 15, 1943

அமெரிக்காவும் பிரிட்டனும் அதை மாற்றியமைக்க முடியாது என்றும் டோக்கியோ எண்ணிற்று. இக் கணக்கில் மூன்றே மூன்று பிழைகள் தாம் இருந்தன. ரஷ்யாவை முறியடிக்க முடியாமற்போனது ஒன்று; சீனாவைக் கைப்பற்ற முடியாதுபோனது மற்றொன்று; தாக்குதலால் பாதிக்கப்படாததும், உற்பத்திச் சக்தி மிக்கதுமான அமெரிக்காவின் தொழில்துறை இறுதியாக இயற்றிய போர்க் கலங்களோ ஆக்கிரமிப்பாளர் (எதிரி) எதிர்க்கமுடியாமற்போனது மூன்றாவது ஆகும்.

வெற்றியிலிருந்து அழிவுக்கு : குவாம் பிலிப்பைன்சு, சயாம், பர்மா, மலேயா, சிங்கப்பூர், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், மேற்கு அலூட்டியன் ஆகியவையெல்லாம் ஒருசில மாதங்களில் ஹிரோஹிட்டோவின் போர்க்கலங்களுக்கு இரையாகின. அதன் விளைவாக 500,000,000-க்கும் மேற்பட்ட மக்களடங்கிய கடலால் சூழப்பட்ட பரந்த நிலப்பகுதியில் சப்பானின் வெற்றிக் கொடி பறக்கத் தொடங்கிற்று. மிட்வே என்ற போர்க்களத்தில் (ஜூன் 3-6, 1942) இருதரப்புத் துருப்புகளும் கைகலக்கும்வரை வெற்றிப் புயல் சப்பானுக்குச் சாதகமாகவே அடித்தது என்று கூறலாம். இப் போர்க்களத்துக்குப் பின்னர்தான் அப் புயல் திசைமாறி, அதுவும் மிக மெதுவாக அடிக்கலாயிற்று, செர்மனியை முதலில் முறியடிக்க வேண்டும் என்று ஆங்கிலோ-அமெரிக்கத் தலைவர்கள் முடிவுக்கு வந்தனர். அம் முடிவு டோக்கியோவுக்குச் சிறிது ஓய்வு அளித்தது. எனினும், உலகில் பாதியை வென்று தன் குடைக்கீழ்க் கொண்டுவந்ததால், சப்பானின் பொருளாதார நிலைமையும் இராணுவ வலிமையும் 1943-க்குப் பின்னர் சிறுகச் சிறுகச் சீர்குலைய ஆரம்பித்தன; போரில் அது அடியோடு முறியடிக்கப்படும்வரை இந் நிலை நீடித்து நின்றது.

சப்பானின் படுதோல்வி மிக அண்மையில்தான் இருந்தது. அமெரிக்காவின் படைவலிமையையும், முறியடிக்கப்பட்ட தன் நண்பர்களின் கொள்கை வெறியையும் சப்பானால் தாங்க இயலவில்லை. அவ்வமயம் சப்பானில் தேசபக்தியும் ஷின்டோ வழிபாடும் ஒன்றே என்று கருதப்பட்டுவந்தன. அன்றியும், இவ் வழிபாட்டினர் பேரரசர் கடவுள் என்றும், நிப்பன் உலகை ஆளுவது உறுதி என்றும், அதற்காகப் போரில் உயிரை இழப்பதைப்போன்ற உன்னதமான செயல் வேறொன்றும் இல்லை என்றும் நம்பிவந்தனர். இந் நம்பிக்கை வெறி ஓரளவு சப்பான் தோல்வியுறத் துணை புரிந்தது என்று துணிந்து கூறலாம். இந் நம்பிக்கையால் சப்பானியத் துருப்புகள் தாங்கள் இழக்க நேரிட்ட பல தீவுகளில்கூட சரணடைய மறுத்தார்கள். அதனால்தான் ஒருவர்கூடக் கைதுசெய்யப்படாமல்

அனைவரும் பகைவரின் படைபலத்துக்குப் பலியாயினர். அக் கொள்கை வெறியால்தான் 'காமிகேஸ்' விமானிகள்கூடத் தாமாகவே முன்வந்து தங்கள் விமானங்களை அமெரிக்கக் கப்பல்களுடன் மோதினர். அதனால்தான் எதிரிக்கு விட்டுக்கொடுக்காதிருந்த எண்ணற்ற பொதுமக்களும், வீணில் உழைத்து இறுதியில் கடுமையான வறுமைக்கு ஆளாயினர். 1943ஆம் ஆண்டு இறுதியில் டோஜோவும் 'ஏகாதிபத்திய ஆட்சி உதவிச் சங்கமும்' விமான உற்பத்தியைப் பெருக்குவதிலும், பொதுமக்களின் நுகர்வைக் (consumption) குறைப்பதிலும், மேலும் படையைத் திரட்டுவதிலும், சர்வாதிகாரத்துவத்தை முழுவதும் நிலைநாட்டுவதிலும் அல்லும் பகலும் அரும்பாடு பட்டனர்.

1942ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாள் ஜிம்மி டூலிட்டிலைச் சேர்ந்த விமானங்கள் டோக்கியோவைத் தாக்க முற்பட்டன. 1944ஆம் ஆண்டில் ஜூன் மாதத்துக்குப் பின்னர் சப்பானின் 'கூட்டுச் செழிப்பு மண்டலத்தில்' உள்ள எல்லாப் படைத்தளங்களும் கடுமையான விமானத் தாக்குதலுக்கு இரையாகின. செய்ப்பான், சீனா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து நொடிப்பொழுதில் பறந்து சென்ற பீ-29 சூப்பர் ஃபோர்ட்ரஸ் விமானங்கள் இவ் அழிவைப் பெய்தன. செய்ப்பானில்தான் தன்னைக் காப்பாற்றவியலாது நாகுமோவும் உயிர்விட்டார். அங்கிருந்துதான் அமெரிக்க விமானப் படைகள் டோக்கியோவின் 7,000,000 மக்கள்மீது குண்டுமாரி பொழிந்து அவர்களைச் சொல்லொணாத் துயரத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக்கின. எதிரியின் கப்பற்படை வலிமையைத் தாங்கமுடியாது நிப்பனின் கப்பற்படை கவிழ ஆரம்பித்ததும், சப்பான் தீவுகள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் பகைவன் கைவசமாயின. எண்ணற்ற சப்பானியக் கடற்படைத் தலைவர்கள் தங்கள் இன்னுயிரிழந்தனர். அளவிலடங்கா வர்த்தகக் கப்பல்கள் அமெரிக்க நீராவிக் கப்பல்களால் சிதறுண்டுபோயின. இராணுவ, சிவில் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட வேலைமாற்றங்கள் (transfers) நாட்டில் குவிந்துவந்த குழப்பங்களைப் பிரதிபலித்தன. 1944, ஜூலை 19 அன்று ஜெனரல் டோஜோ தன் பதவியை ராஜிநாமாச் (resignation) செய்தார். 'காபினட் அமைச்சவை தடுமாற்றம் அடைந்துவிட்டது. அது தன் நாட்டைக் காக்க எல்லையில் போர்புரியும் வீரர்களிடமும், நாட்டில் வெற்றியே குறிக்கோளாகக்கொண்டு பாடுபடும் எண்ணிறந்த மக்களிடமும் தன் இயலாமை குறித்து மன்னிப்புக் கோருகிறது' என்று கூறினர். ஜெனரல் குனியாக்கி கொய்சோ தலைமை அமைச்சரானார்.

தலைமையமைச்சர் மாறினாரேயன்றி நாட்டின் துயரம் மாறவில்லை. சப்பானின் 206 பெருநகர்களில் 44 தவிர மற்றெல்லா நகரங்களும் அமெரிக்க விமானங்களால் நாசமாக்கப்பட்டன. தவிர, வேறு 37

நகரங்களிலிருந்த கட்டடங்களில் மூன்றில் ஒரு பகுதி தரையோடு தரையாய்த் தகர்க்கப்பட்டன. அரை மில்லியன் மக்கள் செத்து மடிந்தனர். சுமார் 9,000,000 பேர் இருக்க இல்லம் இன்றித் தவித்து நின்றனர். 1945, மார்ச்சு 9ஆம் நாள் அன்று டோக்கியோவில் பெய்த குண்டுமாரியில் 279-க்கும் குறைவில்லாத குண்டுகள் 1,667 டன் எடையுள்ள நச்சு வாயுவையும் வெடிமருந்தையும் தூவித் தலைநகரைத் தீக்கிரையாக்கித் தரைமட்டமாக்கின. பிணங்கள் குன்றெனக் குவிந்தன ; இரத்தம் ஆறெனப் பாய்ந்தது. அதற்கப்புறமும் தாயகத்தைக் காக்கக்கூடிய அளவுக்கு சப்பான் கைவசம் பெரும் படை ஒன்று இருக்கத்தான் செய்தது. ஆனால், அதன் கப்பற்படையே இருந்த இடம் தெரியாமல் தகர்ந்து போயிற்று. அதன் வர்த்தகக் கப்பல்கள் சின்னபின்னப்படுத்தப் பட்டன. போர்த்தொழில்துறைகள் தள்ளாடத் தொடங்கின ; இந்நிலையில் சப்பானின் தோல்வி குன்றிடையிட்ட விளக்காயிற்று. இத்தாலியும் செர்மனியும் முறியடிக்கப்பட்டுவிட்டதுமே வெற்றி நம்பிக்கைகள் கானல் நீராயின. 1945-ல் நடைபெற்ற கொடிய கோடைச் சம்பவங்கள் நிகழாதிருந்திருக்கும்பட்சத்தில், சப்பானியத் தலைவர்களும் பொதுமக்களும் தம் உயிரை மதியாது, போரைத் தொடர்ந்து நடத்தியிருப்பர் ; பகைவனுக்குப் பெருத்த சேதமுண்டாக்கி எதிர்த்திருப்பர்.

தெய்விக மன்னர் மக் ஆர்த்தரும் நேர்மை வழிகளும்

1945ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்கா ஒரு பிரேரணை கொண்டுவந்தது. பத்து நாடுகள் அடங்கிய தூரக்கிழக்கு ஆலோசனைக் குழு (Far Eastern Advisory Commission) ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும், அது அமெரிக்க இராணுவ நிர்வாகத்துடன் ஆலோசனை நடத்தவேண்டும் என்றும், மற்றும் தன்னால் எந்த முடிபுக்கும் வரும் அதிகாரம் அக் குழுவுக்கு இருத்தலாகாது என்றும் அப் பிரேரணை கூறிற்று. ஆனால், ஆஸ்திரேலியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் இப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. டிசம்பர் மாதம் மாசுகோவில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பிரகாரம் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா ஆகிய நான்கு நாடுகளின் பிரதிநிதிகளைக்கொண்ட நேசநாடுகள் மன்றம் (Allied Council) ஒன்று, நேச நாடுகளின் தலைமைப் படைத்தலைவர்—நே. நா. த. ப. த. (Supreme Commander of the Allied Powers-SCAP)—ஜெனரல் மக் ஆர்த்தரின் தலைமையில் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அம் மன்றம் சப்பானின் விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், மேற்கூறிய நான்கு நாடுகள், ஃபிரான்சு, நெதர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, பிலிப்பைன்சு ஆகிய நாடுகள்

உட்பட 11 நாடுகளைக்கொண்ட தூரகிழக்குக் குழு ஒன்று வாசிங்டனில் நியமிக்கப்படவேண்டுமென்றும், அக் குழு சரண் நிபந்தனைகளைப் (surrender terms) பூர்த்தியாக்கக்கூடிய கொள்கைகளை வகுக்க வேண்டும் என்றும், கட்டளைகளைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டு மென்றும் (review directives), அவ்வப்போது ஆலோசனை கூற வேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது. ஆனால், ஒருவரும்தன்னைக் கலந்து ஆலோசிக்கவே இல்லை என்று மக் ஆர்த்தர் குறைபட்டுக் கொண்டார். இந் நேசநாடுகள் குழு 'என் கருத்துப்படி, ஒப்புக் கொள்ளக்கூடியது அன்று...எனினும், அதைச் செயற்படவைக்க வேண்டுமென்றே என்னால் முடிந்தவரை முயன்று வருகிறேன்' என்றார். நடைமுறையைப் பொறுத்தவரை அக்குழு நன்முகத்தான் செயற்பட்டுவந்தது எனலாம். தூரக்கிழக்குக் குழுவசம் எவ்வித அதிகாரமும் இல்லாதபடியால், அது நேசநாடுகளின் தலைமைப் படைத்தலைவரின் கொள்கைகளுக்கு அப்படியே தலைசாய்த்து வந்தது. ஆனால், நேசநாடுகள் மன்றத்திலோ அடிக்கடி ரஷ்ய, அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கிடையே அபிப்பிராய பேதம் இருந்துவந்தது; அதனால் கூக்குரல் எழுந்துகொண்டேயிருந்தது. சில வேளைகளில் மற்ற அங்கத்தினர்களுக்கிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டதால் இந் நிலைமை நீடித்தது. ஆனால், இங்கும் நே.நா.த.ப. தலைவர் இட்டதுதான் கட்டளை. அவர் மனம்போன போக்குதான் அப் போக்கு; அமெரிக்கப் போக்கு என்பதில் ஐயமில்லை.

சப்பானைப் பொறுத்தமட்டில் அமெரிக்கா சில அடிப்படைக் குறிக்கோள்களைக் கொண்டிருந்தது—சப்பானின் படைவலிமையைக் குறைத்தல், அதை சனநாயகச் சமுதாயத்தில் ஒரு சனநாயகமாக ஏற்படுத்தல், அதன் பொருளாதாரத் துறையை பிறர் கண்டு பெரு மூச்சுவிடும் அளவில் அபிவிருத்தி செய்தல், அதேசமயம் போர்த் தொழில் துறைகள் மீண்டும் தலையெடுக்காவண்ணம் பார்த்துக் கொள்ளல், வாணிபச் சுவாதீனக் கட்டுப்பாடுகளைக் (monopolistic controls) களைதல் ஆகியவைகளாகும். இக் குறிக்கோள்களை எய்து வதற்கும் அமெரிக்கா வழிவகுக்கத் தயங்கவில்லை. அரசியல், சமூக நடைமுறை நிலைமைக்கு இயன்றவரை ஊறு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளல், பேரரசர், அரசாங்க முறை, வாழையடி வாழையாய் ஆண்டுவரும் வகுப்பினர் ஆகியோரை முடிந்தமட்டிலும் பயன்படுத்தல் ஆகியவைகளே அக் குறிக்கோள்களை எய்த வகுக்கப் பட்ட வழிகளாகும். போர்க் குற்றவாளிகள் (war criminals), விசாரணை (trial) செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள். அரசியல் தலைவர்கள் மேலும் தலையெடுக்கா வண்ணம் தாக்கப்பட்டனர். பெண்குலம் விடுதலை பெற்று முன்னுக்கு வரவும், சுதந்திரத் தொழிலாளர் சங்கம் (trade union) தோன்றவும் முழு ஆதரவு

அளிக்கப்பட்டது. சைபட்சுதல் சிறுசிறு துண்டுகளாக்கப்பட்டன. விவசாயச் சீர்திருத்தம் ஓரளவு கொண்டுவரப்பட்டது. நாட்டு மதமாகக் கருதப்பட்டுவந்த ஷின்டோ கொள்கை கைவிடப்பட்டது. எனினும், இப் பரந்த மாற்றங்களினூல் சப்பானின் பொருளாதாரத் துறையிலோ, அன்றிச் சமுதாயத்துறையிலோ, அன்றி அரசியல் துறையிலோ புரட்சிகரமான எந்த மாற்றமும் ஏற்பட்டபாடில்லை. இச் சீர்திருத்தங்களை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரி களுக்கு மக்களிடமிருந்து ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்தனவே யன்றி எதிர்ப்பே இல்லை. போர் வெறியர்கள் அவமதிக்கப் பட்டார்கள்; அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். ஒரு கொள்கை யாகவும் அரசாங்கமுறையாகவும் நிலவிவந்த ஃபாசிஸம் கைவிடப் பட்டது. அதற்குப் பதிலாக ஜனநாயக முறைகள் கையாளப் பட்டன. ஆனல், நிலச்சுவான்தார்களும் பணக்காரர்களும் இச் சீர்திருத்தங்களால் பாதிக்கப்படவில்லை. சமுதாய ஏணியின் உயர்வுதாழ்விலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

ஹிரோஹிட்டோவை விட்டுவைத்திருந்தது இப்போது ஆட்சி முறையில் (administration) வேண்டிய மாற்றங்கள் கொண்டுவர ஏதுவாயிருந்தது. 1946-ல் பேரரசரின் புத்தாண்டுச் செய்தி வெளியாயிற்று. அதில் அரசனைத் தெய்வமாகப் பாவித்தல் 'தவருன கொள்கை' என்றும், 'மற்ற மக்களைவிட சப்பானியர் இனத்தில் உயர்ந்தவர், அதனல் மற்றவர்களை அவர்கள் ஆளப் பிறந் திருக்கின்றனர்' என்று கருதுவதும் பிழை என்றும் மக்களுக்குத் தெளிவாக உணர்த்தப்பட்டது. ஐ.நா. வைச் சேர்ந்தவர்களுக்கு பெப். 19 ஆம் நாள் மக் ஆர்த்தர் அயலிட உரிமை (extraterritoriality) கோரினர். அவரும் பேரரசர் ஹிரோஹிட்டோவும் புதிதாக, மிகக் கவனமுடன் நேசநாடுகளின் உத்தரவின்பேரில் வரையப்பட்ட அரசியலமைப்பை (Constitution) ஏற்றனர். இப் புதிய அரசிய லமைப்பை ஷிதேரா காபினட் 1946, மார்ச்சு 6ஆம் நாள் மக்களுக்கு வெளியிட்டது. இச் சாசனம் (charter) பேரரசரிடமிருந்த அரசாங்க அதிகார முழுவதையும் நீக்கி, அவரை ஒரு வெறும் அரசியலமைப்புக் குட்பட்ட மன்னராகவும் 'நாடு, மக்கள் ஐக்கியம் ஆகியவற்றின் (unity) சின்ன'மாகவும் ஆக்கியது. பொறுப்புள்ள பாராளுமன்ற அரசாங்கமுறை (responsible parliamentary form of government) அதில் இடம்பெற்றது. முன்னுள் பிரபுக்கள் (மேல்) சபை (House of Peers) தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர் சபையாக (elected House of Councillors) மாற்றியமைக்கப்பட்டது. மேலும், அச் சபை பாராளுமன்றத்திற்கு—டயட்டுக்கு (Diet) அடிபணிந்து செயற்பட வேண்டியிருந்தது. புதிதாக வெளியிடப்பட்ட மக்கள் உரிமை மசோதா (Bill of Rights) மிக விரிவாகவும், அமெரிக்க உரிமைச் சாசனத்தைத் தழுவியும் அமைந்திருந்தது. ஆனல், இந்த ஆவணத்தின் (document)

புதிய அம்சம் என்னவென்றால், 'இனிமேல் போரை நாட்டின் தலைமை யுரிமையாகக் (sovereign right) கருதக்கூடாதென்றும், மற்ற நாடு களுடன் தொடர்புகொள்ளுங்கால் பயமுறுத்தல் (threat) அல்லது பலாத்காரத்தில் (use of force) ஈடுபடல்போன்ற முறைகளை அறவே கையாளக்கூடாது' என்றும் குறிப்பிடப்பட்டிருந்ததுதான். மேலும், அதன் சிறப்பு என்னவென்றால், 'இனிமேல் தரைப்படை, கடற்படை, விமானப்படைகளோ அல்லது மற்றப் போர்ச்சக்திகளோ [சப்பான் கைவசமிருக்க] அனுமதிக்கப்படமாட்டாது. போர் தொடுக்கும் அரசுரிமை (right of belligerency of the State) இனிமேல் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.....நம் பாதுகாப்பைப் பொறுத்த வரை, இனிமேல் அமைதியை நாடும் உலக மக்களின் நியாய உணர் வையும் (justice) நல்லெண்ணத்தையுமே (good-will) சார்ந்திருப் போம் என்று நாம் உறுதிபூண்டுள்ளோம்' என்று தெளிவாக வரையப்பட்டிருந்ததும் அதன் சிறப்பான அம்சங்களில் ஒன்றாகும்.

நேசநாடுகள் தலைமைப் படைத்தலைவரும் (நே. நா. த. ப. த.) அரசியலும்

அரசாங்கத்தின் வெளிப்படைச் சின்னங்களுக்கும் அதிகாரத்தின் சமூக உண்மைகளுக்கும் இடையே உள்ள தொடர்பு, இதர மனிதப் பண்பாடுகளிலும் (cultures) சமுதாயங்களிலும் (communities) ஒரு கவர்ச்சிகரமான சிக்கலாகத் தோன்றும். ஆனால், சப்பானிலோ அதே பிரச்சினைபற்றி அவ்வாறு கருதுவதற்கு இடமில்லை. இங்கும் உலக அரசியல் அரங்கிலும் நிலவிவரும் சக்திகள் சமநிலை யால் (balance of forces) இச் சிக்கல் தோன்றுமற்போய்விடுகிறது. அதை அன்னியர் கைப்பற்றியிருந்தபோது (occupation) முதல் தேர்தல் (election) 1946, ஏப்ரல் 10ஆம் நாள் நடைபெற்றது. அதா வது, சப்பானியப் பிற்போக்காளரின் (reactionaries) கை இன்னும் ஓங்கி நிற்பதால், தேர்தலைச் சற்றுத் தள்ளிப்போடவேண்டும் என்று தூரக்கிழக்குக் குழு கூறிய ஆலோசனையை மக் ஆர்த்தர் மறுதலித்த பின் நடைபெற்றது. தேர்தல் முடிபுகள் இக் குழுவின் கருத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டின. டயட்டின் மொத்த இடங்கள் 466-ல் (இடைத்தேர்தல் மாற்றங்கள் உட்பட) ஷிதேராவின் 'முற்போக்காளர்' (progressives— பழுத்த பழைமைவாதிகள்—Ultra-conservatives) 110; இகிரோ ஹோட்டோயமாவின் 'தாராள வாதிகள்' (Liberals) (இவர்கள் பிற்போக்குக் கொள்கையினர்) 148; சோசியலிச மக்களாட்சிவாதிகள் (இவர்கள் தாராளவாதிகள்; சோசியலிசத்திலும் சிறிது நம்பிக்கையுடையவர்கள்) 96; கூட்டுறவு மக்களாட்சிவாதிகள் 45; கம்யூனிஸ்டுகள் 6 இடங்களைக் கைப் பற்றினர். எஞ்சிய இடங்கள் 'சுதந்திரவாதிகளுக்கும்' (Inde-pendents) சிறுபான்மைக் குழுக்களுக்கும் சென்றன. இத் தேர்தலில்

பதிவான ஓட்டுகளில் மூன்றில் ஒரு பாகம் பெண்களால் அளிக்கப் பட்டவையாகும் ; மேலும் மொத்த அங்கத்தினருள் 38 பேர் பெண் களாவர். அரசியல் கட்சிகளின் பெயர்களுக்கும் அவைகளின் கொள்கைகட்கும் இடையே குழப்பம் நிறைந்திருந்ததால், 'முன் னேற்றவாதிகளாக' முதலில் அழைக்கப்பட்டுவந்த தீவிரப் பழைமைவாதிகள் (extreme conservatives) மறு ஆண்டிலேயே 'மக்க ளாட்சிவாதிகள்' என்று தங்களுடைய பெயரை எளிதில் மாற்றிக் கொண்டுவிட்டார்கள்.

எந்த ஒரு கட்சிக்கும் (party) பெரும்பான்மை ஓட்டு கிடைக்காத தால், ஷித்தேரா தொடர்ந்து பதவியிலிருக்க எண்ணினர். ஆனால், அதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தபடியால், அவர் ஏப்ரல் 22ஆம் தேதி பதவியைவிட்டுக் கட்டாய ராஜினாமாச் செய்யவேண்டி ஆகிவிட்டது. ஹேட்டோயாமா அப் பதவியை ஏற்கவிருந்தார். ஆனால், அவ் வேளை பார்த்து மக் ஆர்த்தர், அவர் ஒரு ∴பாசிஸ்டுவாதி என்று அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக் கொண்டுவந்து அவரை டயட்டிலிருந்தே விலக்கிவிட்டார். சோசியலிச மக்களாட்சிவாதி களின் கிறித்துவ தலைவரான டெட்சு கதாயாமா, ஒரு கூட்டு அரசாங்கம் (Coalition Govt.) அமைக்க முற்போக்காளர், தாராள வாதிகள் ஆகியோரின் ஆதரவைப் பெறமுடியாதுபோகவும், வெளி விவகார அமைச்சரான ஷிகெரு யோஷிடா, தாராளவாதிகளின் தலைமை தாங்கி மே 15ஆம் தேதியன்று ஒரு பழைமைவாதிகள் அடங்கிய அமைச்சவையை (Conservative Ministry) அடைந்தார்.

புதிய அரசியலமைப்பை டயட் வாதித்து ஆகஸ்ட்டு மாதம் ஒப்புக்கொண்டது (approval). அக்டோபர் மாதம் அது உறுதி யாக்கப்பட்டு (confirmation) 1946, நவ. 3ஆம் நாள் அதிகார பூர்வமான அரசறிக்கையாக (promulgation) வெளியிடப்பட்டது. ஆனால், பணவீக்கத்தாலும் (inflation), உணவுப் பற்றுமையாலும் (food shortage) மக்கள் மனவமைதி இழந்தனர். தொழிலாளர் போராட்டம் துவங்கவும், 'வேலைநிறுத்தம் (strike), வெளிநடப்புச் செய்தல் (walkout), மற்றும் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் (military occupation) குறிக்கோள்களுக்கு இடையூருய் விளங்கும் எல்லா வேலைநிறுத்தங்கள் ஆகியவை தடைசெய்யப்பட்டுவிட்டன' என்று ஆகஸ்டு 29ஆம் நாள் அரசாங்கத்திடம் நே.நா.த.ப த. (SCAP) தெளிவாய்க் கூறினர். இவ் வேலைநிறுத்தங்கள் உண்மையில் காபினட்டைக் கவிழ்ப்பதற்காக 'இடதுசாரிகள் (leftists) செய்யும் சதித்திட்டங்கள்' என்று யோஷிடா குற்றம் சாட்டினர்.

1947-ல் இடதுசாரிகள் பக்கம் அரசியல் ஊசல் (pendulum) ஆடிக்கொண்டிருந்தது. அதனைச் சற்றும் விரும்பாத படைத்தலைவர் மக் ஆர்த்தர் சப்பானில் மக்களாட்சி மலரவேண்டுமென்று எண்ணிச்

செயலில் ஈடுபட்டார். 'சப்பானில் மக்களாட்சியை ஏற்படுத்தி அதை வெற்றிபெறச் செய்துவிட்டால், மற்ற ஆசிய நாடுகளனைத்தும் இதையே எதிர்நோக்கி நிற்கும். ஜனநாயக நாடுகள் ஆக்கிரமிப்புப் போர்களில் (wars of aggression) இறங்குவதே இல்லை என்பது சரித்திர உண்மையாகும்' என்று மக் ஆர்த்தர் அறிவித்தார். 1947, ஏப். 25ஆம் நாள் நடைபெற்ற தேர்தலில் சோசியலிச மக்களாட்சிவாதிகட்குக் கிடைத்த இடங்கள் 143, தாராளவாதிகட்கு 132, மக்களாட்சிவாதிகளுக்கு (முன்னுள் 'முற்போக்காளர்களே' இக் கட்சியில் மிகுதியும் இருந்தனர்) 122, கூட்டுறவுவாதிகட்கு 31, கம்யூனிஸ்டுகளுக்குமட்டுமே 4 இடங்கள் கிடைத்தன. சோசிய லிஸ்டு கட்சி வெற்றியடைந்தபோதிலும் பிற்போக்காளர் கட்சிகள் இரண்டுமே டயட்டில் ஆதிக்கம் செலுத்திவந்தன. கம்யூனிசம் படுதோல்வியடைந்ததைக் கண்ணுற்ற மக் ஆர்த்தர் கழிபேருவகை கொண்டார். நெடுநாள் காபினட் நெருக்கடிக்குப் (crisis) பின்னர், மே 23ஆம் நாள் டெட்சு கடாயாமா தலைமை அமைச்சரானர். அவர் அமைத்த காபினட்டில் சோசியலிஸ்டுகள், மக்களாட சி வாதிகள், கூட்டுறவுவாதிகள் ஆகியோர் இடம் பெற்றனர். யோஷிடாவின் தாராளவாதிகள்மட்டும் அமைச்சவையில் சேராமல் ஒதுங்கி நின்றனர். இடதுசாரி சோசியலிஸ்டுகளுக்குக் 'கம்யூனிசத் தொடர்பு' உண்டு என்று குற்றம் சாட்டி அவர்கள் ஒதுங்கி நின்றனர்.

இதன் பின்னர் இந் நாட்டில் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரே திசையில் நிகழ்ந்தபடியால், அவற்றை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுவோம். 1948-ல் ஜெனரல் மக் ஆர்த்தரின் புத்தாண்டுச் செய்தி வெளியாயிற்று. அதில் சப்பானுக்கு ஏற்ற 'ஓர் அமைப்பு முறை நன்கு உருவாகிவிட்டது. தக்க வழி அமைந்துவிட்டது. உங்கள் முன்னேற்றம் இனிப் பெரிதும் உங்கள் கையில்தான் இருக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 1948, பெப்ரவரியில் கடாயாமா காபினட் கலைக்கப்பட்டது. மக்களாட்சித் தலைவரான ஹிட்டோஷி அஷிடா தலைமையில் ஒரு புதிய காபினட் அமைக்கப் பட்டது. அதுவும் நெடுநாள் நீடித்திருக்க முடியவில்லை. இவ்வாட்சியில் ஊழல் (corruption) மிகுதியாகவே, இக் காபினட்டும் அக்டோபர் மாதம் கவிழ்ந்துவிட்டது. தலைமையமைச்சரே குற்றச் சாட்டுக்கு ஆளாகிச் சிறை செய்யப்பட்டார். மீண்டும் திருத்தி யமைக்கப்பட்ட (இம்முறை பழுத்த பழைமைவாதிகளைக்கொண்ட) 'மக்களாட்சித் தாராளவாதிகளின்' புதுக்கட்சித் தலைவர் யோஷிடா மீண்டும் ஒருமுறை 1948 அக்டோபர் மாதம் தலைமையமைச்சரானர். அப் பதவியில் பல்லாண்டுகள் இருந்தார். 1949, ஜன. 23-ல் நடை பெற்ற டயட் தேர்தல்களில் இவருடைய ஆதரவாளர்க்கே பெரும் பான்மை வாக்குகள் கிடைத்தன. உடனே அவர்களுக்குப் 'புதிய

முதலாளித்துவ மக்களாட்சிவாதிகளின்' (capitalists) ஆதரவு கிட்டியது. டொக்குடாவின் தலைமையில் இம்முறை தேர்தலில் பங்குகொண்ட கம்யூனிஸ்ட்டுகளுக்கு மூன்று மில்லியன் வாக்குகள் கிடைத்தன. அதாவது, முதலில் இருந்த 3 இடங்கள் 35 இடங்களாக அதிகமாயின. யோஷிடாவின் தலைமையில் தாராளவாதிகளும், மக்களாட்சிவாதிகளும் ஒன்றுபட்டு கம்யூனிசத்துக்கு எதிராகக் கடுமையான பிரசாரம் செய்தனர். இவர்களுக்குப் படைத் தலைவரின் ஆசீர்வாதமும் ஆதரவும் கிடைத்தது. 1950 வசந்தத்தில் மக்ஆர்த்தரின் ஆசீர்வாதத்தால் கம்யூனிஸ்ட்டுக் கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டது. (1937—1945-க்கும் இடையில்) அமெரிக்கா கையாண்ட சில மறைமுக வழிகளால் முதலில் கம்யூனிஸ்ட்டுகளின் பத்திரிகை நிறுத்தப்பட்டது ; அதன் தலைவர்கள் பரிசீலனை செய்யப் பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார்கள். எஞ்சியவர் 'மறைந்து கொண்டு' தம் செயலில் ஈடுபட்டனர். 1951, ஏப்ரல் மாதம் மக்ஆர்த்தர் பதவிக்கு ஜெனரல் மாத்யூ ரிட்ஜ்வே நியமிக்கப்பட்டார். அவருடைய இடத்தில் 1952, சூன் மாதம் ஜெனரல் மார்க் கிளரர்க் நியமிக்கப்பட்டார். 1952, அக். முதல்நாள் நடைபெற்ற தேர்தல்களில் யோஷிடாவின் தாராளவாதிகள் 240 இடங்களையும், 'முற்போக்காளர்' 67 இடங்களையும், சுதந்திரவாதிகள் 30 இடங்களையும், வலதுசாரி சோசியலிஸ்ட்டுகள் 57 இடங்களையும், இடதுசாரி சோசியலிஸ்ட்டுகள் 64 இடங்களையும் கைப்பற்றினர். இத் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் அறவே இல்லாதபடி அழிக்கப்பட்டுவிட்டனர்.

1945ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்நாட்டுச் சிக்கல்கள் அனைத்தும் ஒருவிதமாய் 5 ஆண்டுகளில் தீர்க்கப்பட்டன. ∴பாசிஸ்ட்டுவாதிகளும் போர்க் குற்றவாளிகளும் 'மறுமுறை கட்சித் தூய்மை'க்குள்ளாகி மதிப்பெய்தினர். அவர்களுள் ஹத்தோயாமாவும் ஒருவர் ஆவார். பொருளாதார ஏகபோக எதிர்ப்புத் திட்டம் மீண்டும் 'திருத்தப்பட்டது' (revision). நாட்டு நலன்களுக்கு ஒவ்வாத 'விபரீதக் கருத்துகளை' பத்திரிகைகள் வெளியிடா வண்ணம் பத்திரிகைச் சட்டங்கள் (press laws) கடுமையாக்கப்பட்டன. இதற்கென்று ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. படைக்குறைப்புக் கொள்கை மறுபடைச் சேர்ப்புக்கு (rearmament) வழிவகுத்தது. 75,000 பேர்கள் அடங்கிய தேசிய போலிசுப்படை ஒன்று திரட்டப் பட்டது. அதுவே நாளடைவில் புதிய படை ஒன்றின் மையமாய் அமைந்தது. புதிய படை ஒன்றைத் தயாரித்தல் புதிய சப்பானின் 'கடமை' யாகும் என்று ஜான் போஸ்ட்டர் டல்லசு உரைத்தார். 1952ஆம் ஆண்டு மே நாள் கொண்டாட்டத்தின்போதும், அதன் பின்னரும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் போலிசுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. எனினும், பிற்போக்குக் கொள்கையை விரும்பா பழைமை

வாதிகள் அமெரிக்க ஆதரவால் ஆட்சி பீடத்தைவிட்டு அண்மையில் யாரும் அசைக்க முடியாதவாறு அமர்ந்து இருந்தனர்.

1950ஆம் ஆண்டு இறுதியில் நிலவிய அரசியல் சூழ்நிலையைப் பார்க்குமிடத்து சப்பானிலும் ஆங்கிலோ-அமெரிக்க இரு கட்சி (two-party system) அரசியல் முறை ஏற்பட்டுவிட்டதுபோல் தோன்றிற்று ஆனால், அங்கு நிலவிவந்த லஞ்சம், கட்சி உட்பகை (factionalism), வன்செயல், பொறுப்பின்மை ஆகியவற்றைக் கவனிக்குமிடத்துப் பாராளுமன்ற மக்களாட்சி முறை (parliamentary democracy) சப்பானிய அரசியலில் வேர் ஊன்றிவிட்டது என்று சொல்வதற்கு இடமில்லாமல் இருந்தது. எனினும், புரட்சிகரத் தீவிரவாதிகளுள் வலதுசாரியினரும் (rightists) இடதுசாரியினரும் (leftists) தூற்றப்பட்டனர். முன்னாள் ∴பாசிஸ்டு சருவாதிகாரிகளுக்கு (Ex-Fascist totalitarians) ஆளும் பழைமைவாதியினரிடம் ஓரளவு செல்வாக்கு இருந்தபோதிலும் அவர்கள் புதிய அரசியல் கட்சியையோ அன்றி, தங்களுக்கென்றே புகழ்வாய்ந்த எவ்வித அமைப்பு முறையையோ அமைத்தாரில்லை. 1949, சனவரியில் நடந்த தேர்தல்களில் கம்யூனிஸ்டுகளுக்கு 10 சதவீத ஓட்டுகள் மொத்தம் கிடைத்தன. ஆனால், அதே கட்சிக்கு 1955 பெப்ரவரியில் நடைபெற்ற தேர்தல்களில் 2 சதவீத ஓட்டுதான் கிடைத்தது. ஆளும் கட்சியினரை ஒரே ஒரு கட்சிதான் கடுமையாக எதிர்த்து வந்தது. சோசியலிஸ்டுக் கட்சியே அது. இக் கட்சி 1955 அக்டோபரில் நடைபெற்ற தேர்தல்களில் அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்த்தும், பெரிய அளவில் மறுபடைச் சேர்ப்பை எதிர்த்தும், 'நடுநிலைமைக் கொள்கையை' ஆதரித்தும் நின்றது. பெரும் பாலான சோசியலிஸ்டுகள் அமைதிப் பிரியர் ஆவர். எனவே, மீண்டும் இராணுவத்துவம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில், முதலில் (1956) 160,000 பேரைக் கொண்டதும், 1960-ல் 180,000 பேரைக் கொண்டதுமான படை ஒன்று மீண்டும் அமைக்கப்பட விருப்பதைக் கட்சியினர் அனைவரும் ஒருமனதாக வன்மையாக எதிர்த்தார்கள். அதே பீதியில்தான் அதைவிடப் பெரும்படையை அமைக்கவேண்டுமென்று அமெரிக்கா விடுத்த வேண்டுகோள் களையும் எதிர்த்தனர். 1955 நவம்பரில் பழைமைவாதிக் கூட்டத் தினர் இருவரும்—'மக்களாட்சியினரும்' 'தாராளவாதிகளும்'—ஒன்றுசேர்ந்துகொண்டு, தாராள மக்களாட்சிக் கட்சியை அமைத்து, 1955 பிப்ரவரியில் டயட்டுக்கு நடந்த தேர்தல்களில் போட்டியிட்டு, 466 மொத்த இடங்களில், 297 இடங்களைக் கைப்பற்றினர்.

அடுத்துத் தலைமையமைச்சர் பதவியில் ஏற்பட்ட மாற்றங் களைப் பார்ப்போம். 1948 அக்டோபர் முதல் 1954 டிசம்பர்

வரை தொடர்ந்து தலைமையமைச்சராக இருந்த திறமைசாலி யோஷிடா வயது முதிர்ந்த இகிரோ ஹடோயாமோவுக்கு வழிவிட்டார். அவரும் வெகுவிரைவில் 1956 டிசம்பரில் தன்சான் இஷிபாஷி என்பவருக்கு வழிவிட நேர்ந்தது. இஷிபாஷியும் நோய்வாய்ப்படவே 1957 பிப்ரவரியில் நோபுசுகி கிஷி தலைமையமைச்சரானார். கிஷி 1957 மே மாதத்தில் பர்மோசா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குப் போனார். அதேயாண்டு சூன் மாதத்தில் ஐசன்ஹோவருடன் அவர் வாசிங்டனில் 'கோல்ஃப்' என்ற பந்தாட்டம் ஆடிவிட்டு, சப்பானிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றுவதற்கான அமெரிக்க உறுதியைப் பெற்றுக்கொண்டு தாயகம் திரும்பினார். அம் முடிவு, சப்பான் படுதோல்வியடைந்து பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின்னர் பெரும் மாற்றங்களுக்குள்ளாயிருந்த டோக்கியோவின் சிக்கலான சர்வதேச நிலைமையைப் பிரதிபலித்தது.

நிப்பனின் இக்கட்டான நிலை: படுதோல்விக்குப் பலியாகி, செய்வதொன்றும் தெரியாமல் மயங்கி நின்ற நிப்பனின் திகைப்பையும் மயக்கத்தையும் நீக்கி, அதிவிரைவில் அதன் வறுமையைப் போக்கிக் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி அடையச் செய்யுமாறு செய்த பெருமை அமெரிக்க அரசியல் வல்லமையையே சேரும். சுதந்திர சப்பானைத் தன் நட்பு நாடாக்கி, அதைச் சுதந்திர உலகிற்குக் கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பால் ஏற்படக்கூடிய அபாயத்தைத் தடுத்து நிறுத்தும் கருவியாகப் பயன்படுத்தத் தீர்மானித்தது அமெரிக்கா. நெருக்கடி நிலைமையெல்லாம் மாறி நெடுநாள் கழித்து, சோவியத் அபிப்பிராயத்தைச் சிறிதும் சட்டை செய்யாமல் சப்பானுடன் இறுதியில் அமைதி உடன்படிக்கை (ஜான் போஸ்ட்டர் டல்லசு) செய்ய அமெரிக்கா முடிவு கட்டியது. அது குறித்துத் தன் நட்பு அரசாங்கங்கட்கு 1951 மார்ச்சு மாதம் மேற்படி உடன்படிக்கையின் முதற்குறிப்பை (draft) அது அனுப்பி வைத்தது. அடுத்தாற்போல் ஓர் ஆங்கிலோ-அமெரிக்க வரைவு (draft) அனுப்பப்பட்டது. இறுதி வரைவு 49 நாட்டுப் பிரதிநிதிகளால் 1951 செப். 8ஆம் தேதியன்று சான்ஃபிரான்சிஸ்கோவில் கையெழுத்திடப்பட்டது. இவ் வுடன்படிக்கையால் சப்பான் மீண்டும் தன் முழு இறைமை உரிமையைப் பெற முடிந்தது. ஆனால், அவ் வுரிமை, சப்பான் தொடர்ந்து அமெரிக்காவின் நேச நாடாகவும் பாதுகாப்பாகவும் விளங்கவேண்டும் என்ற வரையப்படாத ஓர் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். பாதுகாப்பு ஒப்பந்தத்தையும், அமைதி உடன் படிக்கையையும் 1951 நவ. 19 அன்று பாராளுமன்றம் ஏற்றுக்கொண்ட பின்னர், டோக்கியோ உறுதிப்படுத்திற்று (ratification). 1952 மார்ச்சு 20 அன்று இதனை அமெரிக்க செனட் (Senate) உறுதிப் படுத்திற்று. அமெரிக்க அதிபர் ட்ரூமென், 1952 ஏப்ரல் 15 அன்று

மேற்படி உடன்படிக்கைகள் இரண்டையும், ஆஸ்திரேலியா நியூசிலாந்துடன் செய்துகொண்ட புதிய பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் வெளிப்படையாக உறுதிப்படுத்தினர். சோவியத் ஆட்சேபனைக்கு முன்னிலையில் இரு ஒப்பந்தங்களும் ஏப்ரல் 28 அன்று இறுதியாக நடைமுறைக்கும் கொண்டுவரப்பட்டன. அதே நாளன்று அமெரிக்க வற்புறுத்தலின்பேரில் பார்மோசாவின் தேசிய அரசாங்கத்துடன் சப்பான் ஒரு தனி அமைதி ஒப்பந்தம் செய்தது.

இவ்வாறு நிலைநாட்டப்பெற்ற அமைதியானது, வல்லரசுகள் இரண்டிற்கும் இடையே நிகழ்ந்த கெடுபிடிப்போரின் (coldwar) விளைவு என்பதை நாம் மறந்துவிடலாகாது. இச் சூழ்நிலையில் அமெரிக்காவுக்கு அடங்கி நடக்கும் நிலை சப்பானுக்கு ஏற்பட்ட போதிலும், அந்த நிலையானது மதிப்பு வாய்ந்ததும், கீழையுலகில் (Orient) குறிப்பிடத்தக்க செல்வாக்கை அதற்கு (சப்பானுக்கு) உண்டாக்கக் கூடியதுமான ஓர் நிலையாகும்.

முன்னாள் பேரரசில் எஞ்சிநின்ற குரில் தீவுகள், வட சகாலின், வட கொரியா, மஞ்சூரியா ஆகிய நாடுகளும் சீனாவின் பெருநிலப் பகுதியும் இப்போது புதிய பகைவனின் கைவசம் ஆயின. எனினும், டோக்கியோவின் ஆதரவால் இந் நாடுகளை எப்படியாவது கம்யூனிஸ்டு ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக்க முடியும் என்று வாசிங்டன் நம்பிக்கைகொண்டது. எஞ்சிய நாடுகளுள் 'நடுநிலைமையில்' நின்ற இந்தோனேசியாவையும் பர்மாவையும் தவிர மற்ற நாடுகள் அனைத்தும் அமெரிக்காவின் நேசநாடுகளாகவோ அன்றிப் பாதுகாப்பு அரசுகளாகவோ விளங்கின என்பதில் ஐயமில்லை. அவற்றுள் நிப்பன் ஒன்றுதான் மேற்கு பசிஃபிக் வட்டாரத்தில் அமெரிக்கா வகுத்த திட்டப்படி ஜனநெருக்கமான பகுதியாய் விளங்கிற்று. எனவே, சப்பானியத் தலைவர்களும் தேசபக்தர்களும் என்றுவது ஒரு நாள் தங்கள் நாடு மீண்டும் வல்லரசாக மாறி, அதற்குரிய சொந்தமான வழியில் செல்லும் என்று நம்பிக்கை கொள்வதற்கு இடம் இல்லாமலில்லை.

எனினும், இந்நம்பிக்கை சுடர்விட்டெரிவதும் அல்லது அப்படியே அவிந்துபோவதும் இந் நூற்றாண்டு நடுவில் சப்பானுக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பொறுத்திருந்தது. சப்பானை ஒருகால் ஃபாசிஸத்துக்குப் பலியாக்கிய பொருளாதார, சமூக நிலையின்மை (instability) சீர்கேடு இப் புது நிர்வாகத்தினால் நீங்கியபாடில்லை. கோடிக்கணக்கான சப்பானியர் உள்நாட்டுச் சந்தைகளையே (markets) தங்கள் பிழைப்புக்கு நம்பி இருந்தனர். ஏனெனில், வேற்றுச் சந்தைகள் அவர்கள் கண்ணுக்கு எட்டிய தொலைவில் இல்லை. அப்படி வெகு தொலைவில் இருக்கும் சந்தைகளையாவது படைவலிமையால்—வன்முறையால் முன்னாள் போர்

வெறியர்களும் சைபட்சும் கைப்பற்றியதுபோல் கைப்பற்றலாமா என்றால் அதற்கும் வழியில்லை. அதுவோ என்றும் இயலாத காரியம் ஆகும். ஏனெனில், செஞ்சீனா இன்று ஒரு வல்லரசாக விளங்கி வருவதுடன், ரஷ்யாவுடனும் நட்புப் பூண்டு இருக்கிறது. கம்யூனிசத்தினின்றும் ஆசியாவைக் காப்பாற்றும் நோக்கத்தில் புதிய போர் ஒன்று எழுமாயின், அதில் சப்பான் எவ்வளவுதான் இராணுவ வலிமை பெற்றிருந்தாலும், அதற்கு அமெரிக்கா எவ்வளவுதான் ஆதரவு அளித்தபோதிலும் இறுதியில் அதற்கு (சப்பானுக்கு) தீங்குதான் விளையும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், சப்பான் அருகில் இருப்பதால் அணுகுண்டுமாரி பொழிய நேரிடின் அதற்கு அது மிக எளிதில் இரையாகிவிடுவது திண்ணம். எதிரிக்கு எவ்வித வாணிப லாபமும் கிடைக்காவண்ணம் செய்யுமுகத்தான் பெரும் நிலப்பரப்பிலுள்ள சந்தைகளை சப்பான் அமைதியாகப் பிடித்துவிடாதவாறு அமெரிக்கா தடுத்து வந்தது.

சப்பான் அமெரிக்க உதவித் தொகையைக் (subsidies) கால வரையறையின்றிச் சார்ந்திருக்குமாறு செய்து, அதன்மூலம் சப்பானைத் தன் சார்பு நாடாக (dependency) ஆக்கிவிடுவதுதான் வாசிங்டனின் அடிப்படை நோக்கமாகும். செஞ்சீனாவுடனும், மாசுகோவுடனும் பொருளாதார, அரசியல் பேச்சுவார்த்தை நடத்தி, அதன் விளைவாக அமெரிக்காவுடன் கொண்டிருக்கும் தொடர்பை அறுத்துவிடக்கூடிய ஆற்றல் மிக்க காபினட் ஒன்று சப்பானில் தோன்றும்வரையாவது இக் கொள்கையைக் கடைப்பிடிப்பது என்று அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது. எந்த நாடும் எப்போதும் பிற நாட்டைச் சார்ந்திருக்க விரும்புவதில்லை. பகைவர்களை ஒருவரோடொருவர் மோதிக்கொள்ளுமாறு செய்வதே நடப்பு அரசியலில் (Real politik) மிகக் குறைந்த செலவில் மிகுந்த நன்மையைத் தரத் தக்க தகுந்த வழி ஆகும். எனவே, சப்பானியத் தலைவர்கள் இவ் வுண்மையை அறிந்து வீரைவாகவோ அன்றி தாமதித்தோ இவ்விதச் செயலில் ஈடுபடுவர் என்பதில் ஐயமில்லை.

1957-58-ல் இந்நாட்டில் இனிமேல் என்ன நடக்கும் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. செஞ்சீனா முதல் மேற்கத்திய நாடுகள்வரை டோக்கியோ புதுப்புது நாடுகளை அங்கீகரித்தோ, அரசியல் நட்பு உடன்படிக்கை (entente) செய்தோ வாசிங்டனை மீறி நடக்கத் துணியவில்லை. வாசிங்டன் முழுத் தடையாணையையே (embargo) விரும்பியபோதிலும், பிரிட்டனையும், மற்ற நாடுகளையும் பார்த்து, சப்பானும் 1957-ல் தனது வர்த்தகத் தடைகளை நீக்கிற்று. யு. எஸ்.எஸ்.ஆர். முதல் வடக்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை, தெற்கு சகாலினையும் குரில் தீவுகளையும் திரும்பப் பெற்றுவிடலாம் என்ற ஆர்வமும் நம்பிக்கையும் டோக்கியோ

பூண்டிருந்தது. இத்தகைய சலுகைகள் அளிக்க மாசுகோ முன்வராது போகவே 1956ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் லண்டனில் சோவியத் தூதர்களுடன் (envoys) நடந்துவந்த பேச்சுவார்த்தைகள் முறிந்து போயின. ஆகஸ்டு மாதம் வெளிநாட்டு அமைச்சர் மமோரு ஷிகமிட்சு மாசுகோவுக்கு விஜயம் செய்தார். புல்காணினும் தலைமையமைச்சர் (Premier) ஹத்தோயாமாவும் கடிதப் போக்குவரத்து (exchange of letters) செய்து கொண்டனர். செப்டம்பரில் சுனிம்சி மட்சுமோட்டோ என்பவர் விசேடத் தூதர் (Special Ambassador) என்ற முறையில் சோவியத் தலைநகருக்கு அனுப்பப்பட்டார். அவரையடுத்து ஹத்தோயாமா அனுப்பப்பட்டார். (1956 அக். 19 அன்று ரஷ்யாவும் சீனவும் 'அமைதி அறிக்கை' ஒன்றை வெளியிட்டன. இவ்வுடன்படிக்கை போர்ச்சூழலைப் போக்கி இரு நாடுகளும் தூதியல் வாணிபத் தொடர்பு வைத்துக்கொள்ள வழிவகுத்தது. அதன் பயனாக, ஐ.நா.வில் சப்பான் ஓர் அங்கத்தினராக (member) ஆவதற்கு ரஷ்யா முழு ஆதரவும் அளித்து வந்தது. ரஷ்யாவில் இருந்த சப்பானியரை அவர் நாட்டிற்குத் திரும்ப அனுப்பி வைத்தது (repatriation); மேலும், அது சப்பானிடமிருந்து போர் நஷ்டஈடு ஒன்றும் கேட்கவில்லை. இரு நாடுகளுக்கும் சலுகைகள் கிடைக்கத்தக்க 'வர்த்தக உடன்படிக்கை' (Trade Protocol) ஒன்று வரையப்பட்டது. இரு நாடுகளும் 'அமைதி உடன்படிக்கை' செய்துகொண்டபின் குரில் தீவுகளுக்குத் தெற்கேயுள்ள ஹபோமாய், ஷிக்கோடான் ஆகிய சிறிய தீவுகள் இரண்டையும் ரஷ்யா சப்பானிடம் மீண்டும் அளித்துவிடுவது என்று முடிவு செய்தது.

எனினும், 1958 வரை மேற்படி சப்பான்-ரஷ்ய உடன்படிக்கை உருவாகவில்லை. ஒருபுறம் அணுகுண்டுப் போர் ஏற்படுங்கால் அதனால் தனக்கு விளையும் தவிர்க்கொணாத் துயரையும் முழு நாசத்தை எண்ணியும், மற்றொருபுறம் ரஷ்யாவின் தொழில்மயத்தையும், சீன தொழில்மயமாக ஆகவிருப்பதைக் கருதியும், இரு வல்லரசுகட்கும் இடையே சப்பான் சக்தியற்று நிற்பதைக் கண்ட டோக்கியோ கொள்கை வகுப்பாளர், அமெரிக்கத் தூண்டுதல்களுக்குத் தலைசாய்க்காமல் தங்களுக்கென்று தனி வழி ஒன்றை உடனேயோ அன்று தாமதித்தோ வகுத்துவிடுவர்போல் தெரிகிறது. அவர்கள் பின்பற்ற நாடிய வழி 'நடுநிலைமைக் கொள்கையே' யாகும். ஏனெனில், உலக அமைதியில்லையெனில் வாணிபம் செழிக்காது; தொழில்துறை துலங்காது. அஃது இல்லையேல் எண்ணற்ற சப்பானியர் வாழ வழியின்றி, உண்ண உணவின்றி வறுமைக்கு இரையாவர் என்று நன்கு தெரியவந்தது. எனவே, வர்த்தக முன்னேற்றம், அமைதி, சப்பான் நாட்டின் சுயகௌரவம் ஆகியவற்றைப் பொறுத்தவரை, அமெரிக்க உதவியைச் சார்ந்

திருத்தலோ, அன்றி அமெரிக்க நட்புறவைப் பெறுதலோ சற்றும் பயனில்லை என்பது நன்கு தெரியவந்தது. எனவேதான் இதர சுதந்திர ஆசிய மக்களின் விருப்பத்தோடொட்டிப் போகக்கூடியதும், தன் நாட்டவருக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடியதும், இரு இராட்சச வல்லரசுகட்குமிடையே என்றென்றும் நிலைத்துநிற்கும் அமைதியை நிலைநாட்டக்கூடியதுமான வழியில் செல்லத் துணிந்தது சப்பான்.

3. இத்தாலி : கொடுங்கோன்மையிலிருந்து குடியாட்சிக்கு மாறல்

'சீர்கேடான பாதையில் சென்று சீரழியப் போகும் பேராசைபிடித்த இவ் வித்தாலிய நாடு, தன் திருட்டு விழிகளை உருட்டிய வண்ணம் இருக்கிறது. தன் வலையில் அகப்படுபவர்களைக் கொள்ளையடிக்க அது காத்துக்கொண் டிருகிறது. இவ் வித்தாலியர் இன்னும் திருப்தியடை யாமல் எல்லா வழிகளிலும் சதி செய்ய முற்படுவது மானக்கேடான செயல் ஆகும்.' — சான்சலர் ஓட்டோ வான் பிஸ்மார்க் கூறியது.

'சிக்னர் முசோலினியின் பணிவும், அடக்கமும், கடுந் துயரங்களுக் கிடையிலும் அவர் கடைப்பிடிக்கும் சாந்த மான பற்றற்ற போக்கும் என்னை அப்படியே கவர்ந்து விட்டன..... நான் மட்டும் ஓர் இத்தாலியக் குடியாளாக இருந்திருக்கும்பட்சத்தில் கீழ்த்தரமான (மிருகத்தன்மை படைத்த) லெனின் கொள்கையை (Leninism) எதிர்த்து நீர் நடத்தும் போராட்டத்தில் நானும் முழு மனத்துடன் ஆரம்பம் முதல் இறுதிவரை போராடியிருப்பேன்.....நீர் நடத்தும் போராட்டம் உலகிற்கே ஒரு மகத்தான சேவை யாகும்.... ...புரட்சிகர சக்திகளை எதிர்ப்பதற்குத் தனி வழி ஒன்று உண்டு என்பதை இத்தாலி காட்டிவிட்டது. அது மக்களைத் திரட்டி, அவர்களை தாகரிக சமுதாயத்தின் கண்ணியத்தையும், நிலைபெற்றிருக்கும் இயல்பையும் மதித்துக் காப்பாற்றச் செய்யும் ஓர் வழியாகும். ரஷ்யா பெய்யும் நஞ்சை முறிக்கத்தக்க மாற்று மருந்தை அது (இத்தாலி) அளித்துள்ளது. இனி எந்த நாடும் கடுவேகத்தில் (புற்றுநோய்போல்) பரவும் பால்சிவிஸக் கொள்கையிலிருந்து (Bolshevism) தன்னைக் காப்பாற்ற முடியாதுபோய்விடாது.' — வின்ஸ்டன் எஸ். சர்ச்சில், ரோமாபுரியில், 1927, சன. 20-ல் கூறியது.

இத்தாலிய நாடுபற்றியும் அந் நாட்டுத் தலைவர் முசோலினி யைப்பற்றியுமான இவ்விரு முரண்பாடான கருத்துகளையும் நினைவி லிருத்தி நாம் முன் செல்வோம். (1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி ஓர் மனிதர் மிலானுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்.)

அவருடன்கூட ஒரு பெண்மணியும் இருந்தாள். அப்போதுதான் நேசநாட்டுப் படைகள் (allied troops) அந் நகருக்குள் புகுந்து இருந்தன. அம் மனிதருக்கு அந் நகரத்தைப்பற்றி நன்கு தெரியும். ஆனால், இம்முறை அவர் ஓடும் வண்டியில் தரையில் படுத்துச் சென்றுகொண்டிருந்தார். அருகிலுள்ள தன் தலைவியைப்போல் அவராலும் எதையும் பார்க்க முடியவில்லை. காரணம் இருவரும் வண்டியில் இறந்துகிடந்தனர். இரண்டு நாட்களுக்கு முன்னரே அவர்கள் தமது கட்சியாளரை விட்டுத் தப்பியோட முயன்றனர். அப்போதுதான் அவர்களால் கோமோ என்னும் ஏரிக்கு அருகில் அவர்கள் பிடிபட்டு, சுட்டு வீழ்த்தப்பட்டனர். ஒரு கும்பல் செத்த உடல் இரண்டையும் இழுத்துப்போய் பியாசா லொரெட்டா என்னும் இடத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு, அதன்மேல் காறி உமிழ்ந்து, இன்னும் பலவித ஆக்கினை செய்தபின், சிமிட்டிரோ மாக்கியோர் என்னும் கல்லறையில் பிச்சைக்காரர்களைப் புதைக்கும் இடத்தில் புதைத்தது. ஒரு வருடத்துக்குப் பின்னர் இவர்கள்மீது அனுதாபங் கொண்ட சிலர் ரகசியமாக அம் மனிதரைப் புதைத் திருந்த இடத்தைத் தோண்டிப் பிணத்தை எடுத்துப் போய்விட்டனர். ஆகஸ்ட்டு மாதம் அப் பிணம் ஒரு மடத்தில் இருப்பதாய்த் தெரிய வந்தது. அதற்கப்புறம் அடுத்தாற்போல் பதினேர் ஆண்டுகளாக அது மிலானுக்கு அருகிலுள்ள சிரோ மாக்கியோரைச் சேர்ந்த காப்புசின் துறவிகளுடனேயே ஒரு கூடையில் வைக்கப்பட்டிருந்தது. அப் பெண்மணியின் பெயர் கிளாரா பெட்டாசியாகும். அம் மனிதர் வேறு யாருமில்லை. அவர்தான் பெனிடோ முசோலினி.

இப் பெயர் உலகிற்கே ஒரு தலைமுறைவரை (generation) புகழ் வாய்ந்த ஸ்திரமான இத்தாலியின் சின்னமாய் விளங்கிற்று. இச் சின்னத்தைப் பின்னால் வெட்கக்கேடாக நினைத்தவர்கள் பலர். அவர்களில் பெரும்பாலோர் (இச் சின்னத்திற்குரிய) முசோலினி, நலிவுற்றுக்கிடந்த இத்தாலியக் குடியாட்சி அரசாங்கத்தை வஞ்சனை, வன்முறை ஆகியவற்றின்மூலம் இடித்துத் தகர்த்து எறிந்துவிட்டு, அந் நாட்டுத் தலைவராக வாகை சூடியதும் களிபேருவகை கொண் டனர். அவர் வாழ்க்கை நெறியே ஒரு வரலாற்றுக் கட்டத்தின் (epoch) சுருக்கம் எனலாம்; அவர் மறைந்தும் அக் கட்டம் (அந்த யுகம்) முடியவில்லை.

சாதாரண மக்களின் (கும்பல்) தலைவர்

பெனிடோ முசோலினி 1882ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் நாள் ∴போர்லிக்கு அருகிலுள்ள பிரிடாப்பியோ கம்யூனில் (commune) டோவியா என்னும் கிராமத்தில் பிறந்தார். அவர் அன்னை ஒரு கிராமப் பள்ளி ஆசிரியை. தந்தை ஒரு விவசாயி;

கொல்லன் வேலையும் செய்து வந்தார். ஏனைய பெரும்பாலான இத்தாலிய ஏழைகளைப் போன்று அவரும் புரட்சிகர மார்க்சீயக் கொள்கையைப் (Marxism) பின்பற்றினர். டுனீசியாவை பிரான்சு கைப்பற்றியவுடன், ரோமாபுரியிலிருந்த உம்பெர்ட்டோ மன்னரின் அமைச்சர்கள் (ministers) சினந்தெழுந்து அதே ஆண்டு இத்தாலியை ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் நேச நாடாக ஆக்கினர். காலந்தாழ்த்தி அமைக்கப்பட்ட இவ் ஐக்கிய அரசு (United Kingdom) சவாய் (Savoy) அரச குடும்பத் தினரால் ஆளப்பட்டு வந்தது; மேலும், வல்லரசுகளிலேயே அது தான் ஏழ்மையாகவும், வலியற்றும் விளங்கிற்று. பிரபுக்கள் (nobles), வியாபாரிகள், மத குருக்கள் ஆகியோர்தாம் அதன் செல்வாக்குச் சிறு குழுவினராக விளங்கினர். இவர்கள் மட்டும்தாம் பண்டைய படைநிலமானியத்துவம் (feudalism) புதிய முதலாளித்துவம், மற்றும் காலவரையறையற்ற சமயத்துவம் (clericalism) ஆகிய கொள்கைகளால் பயனடைந்து வந்தார்கள். இங்கிருந்த நடுத்தர வகுப்பினர் (middle class) கொஞ்சம்தான். அவர்களும் ஏழைகளாக இருந்தனர். இங்கிருந்த விவசாயிகளும் (farmers), பாட்டாளிகளும் அறியாமையில் மூழ்கிக்கிடந்தனர்; வறுமையில் வாடினர்; பரந்த உலகைப்பற்றி அறிய ஆரம்பித்ததுமே அவர்கள் அமெரிக்காவுக்குக் குடியேறலாயினர்; அவர்களில் சிலர் சமூகப் புரட்சிக் கொள்கையைத் தழுவலாயினர். இவ்வித மக்களைக் கொண்ட நாட்டின் அரசியல் வாதிகள் (politicians), அடக்கமான இயல்புள்ள வாக்காளர்களைத் (electorate) தங்கள் சுயநலனுக்காக மக்களாட்சி முறைகளின் மூலம் பயன்படுத்திக்கொண்டுவந்தார்கள். ஒருவரை மற்றவரிடமிருந்து காப்பாற்றும் சாக்குப்போக்குக் காட்டி, பணக்காரர்களிடமிருந்து பணத்தையும், ஏழைகளிடமிருந்து வாக்குகளையும் (vote) பறித்து வந்தார்கள்.

1900-ல் அரசர் உம்பெர்ட்டோ காலமானதும் இரண்டாம் விக்டர் இமானுவேல் முடிசூட்டப்பட்டார். அவ்வமயம் இளமைவாய்ந்த பெனிடோவும் பள்ளி ஆசிரியராக ஆகிவிட்டார். இரண்டு ஆண்டுகள் கழித்து, இராணுவச் சேவையினின்றும் தப்புவதற்காக அவர் சுவிட்சர்லாந்துக்குச் சென்றார். அங்கு ஒரு கடுமையான வேலையில் அமர்ந்தார். 'நான் அதிகாரமற்றுக் கிடந்தோரின் சீற்றத்துக்கு ஆளானேன்,' என்று அவர் ஒருமுறை குறிப்பிட்டார். பிழைக்கச் சென்ற நாட்டில் பிச்சையெடுத்தார், பட்டினிகிடந்தார், நாடோடி யானார், உழைப்பாளிகளின் கிளர்ச்சிக்காரரானார் (labour agitator), சொல் திறமைவாய்ந்த சோசியலிசப் பேச்சாளரானார், இறுதியில் அவர் ஓர் பொல்லாத புரட்சிக்காரராகவே ஆகிவிட்டார். 1910-ல் தந்தை இன்னுயிர் நீத்தக்கால் இவர் போர்லியில் ராச்சிலி கைப்பி

என்ற மாதுடன் முறையற்ற உறவு கொண்டு தன் வாழ்வைப் பாவத்தில் கழித்துவந்தார். 1914-ல் அப் பெண்ணை மணஞ் செய்து கொண்டார். அவர்களின் முதற் குழந்தை இடா. கவுண்ட் கலீசோ சியானோவை இடா மணஞ்செய்ய நேரிட்டது. விதியின் விளையாட்டால் தன் மாமனாரின் கீழ் வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றி, அவர் தோல்வியில் அவரைக் காட்டிக்கொடுத்து, அக் குற்றத்துக்காக (1934, ஜன. 11-ல்) ஒரு கொல்லனின் மகனால் (முசோலினி) சுட்டு வீழ்த்தப்பட்டார் கவுண்ட் கலீசோ சியானோ.

காதல் விளையாட்டில் காலங்கழித்துவந்த இவருக்கு (முசோலினிக்கு) மக்கள் திரள் திரளாகத் தன்னைப் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்ற ஆசை இருந்ததேயன்றி அவர்களிடம் உண்மையான அன்பு இருந்தது என்று சொல்வதற்கில்லை. அவர் 'வகுப்புப் போராட்டம்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். துருக்கியை இத்தாலி தாக்கியதை எதிர்த்து அவர் கிளர்ச்சி செய்தார். அதற்காகச் சிறையிலும் தள்ளப்பட்டார். 'இவர், கடவுள் பொய் என்றும், போப் ஆண்டவர் (Pope) ஒரு போலி அறிஞர் என்றும், அரசன் (King) ஒரு போலித் தலைவன் என்றும், ஆளும் கட்சி (ruling class) ஒரு திருடர் கூட்டம் என்றும், நாட்டுக்கொடி என்பது சாணக்குன்றில் நாட்டப்படவேண்டிய கந்தைத் துணி' என்றும் முழங்கினார். 1912-ல் 'அவாந்தி' என்னும் பத்திரிகைக்கு அவர் ஆசிரியரானார்; சோசியலிசவாதிகளின் தேசியத் தலைவரானார்; அவர்களின் சொல் திறத்தைக் கண்டு மயங்கினார்; அதைத் தன் சுய முக்கியத்துவத்தை வளர்க்கக்கூடிய மருந்தாகக் கருதினார். அதையே நினைத்தும் பைத்தியம் பிடித்துவிடும்போல் தோன்றியது. ஒரு முறை அவர் 'எனக்கு இப் பைத்தியம் பிடித்துவிட்டது. ஓர் உடல் நோய் போன்று இது என்னை எரிக்கிறது, பல்லை நிரண்டுகிறது,..... சிங்கம் (தன் பாதத்தின் வலிமையால் பகைவனை வென்றுவிடுவது) போல் நானும் என் மனோவலிமையால் சரித்திரத்தில் என் புகழைப் பொறிக்க விரும்புகிறேன்.....,' என்று உரைத்தார்.

ஓர் நிலையான இயல்பு இல்லாதவர்களிடம் இவ்வித நோய்கள் நெடுநாள் குடிகொண்டிருத்தல் இயற்கையே. இவ்வுண்மை இத்தாலிய அரசியல்வாதிகட்கும் பொருந்தும். அவர்கள் தேசிய ஏகாதிபத்திய கௌரவத்திற்காக மேற்கொண்ட கரவுச் செயல்களில், தங்கள் ஆற்றுமையால் (நலிவால்) பலாத்காரத்தைவிட வஞ்சகத்தையே பெரிதும் நம்பி இருந்தார்கள். அவர்கள் எத்தியோப்பியாவைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் 1896-ல் படுதோல்வியடைந்தன. லிபியாவைக் கைப்பற்றத் தாங்கள் போட்டிருக்கும் திட்டத்துக்கு ∴பிரான்சு சம்மதிக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள்

ஃபிரெஞ்சு-ஜெர்மன் யுத்தத்தில் நடுநிலைமையாக விளங்க 1902-ல் மறைமுகமாக இசைந்தனர். அதேபோல் லிபியாமீது தான் கொண்டிருக்கும் திட்டத்துக்கு ரஷ்யா ஆதரவு அளித்தால், அதற்கு ஈடாக ஜலசந்தி (straits) மீது ரஷ்யா வகுத்திருக்கும் திட்டத்தீர்க்குத் தாங்கள் பூரண ஆதரவு அளிப்பதென்று 1909-ல் அவர்கள் ரகசியமாக சம்மதித்துக்கொண்டனர். 1911-12-ல் அவர்கள் ரோட்ஸ் தீவுடன் துருக்கியிடமிருந்து லிபியாவையும் கைப்பற்றினர். 1914-ல் வல்லரசுகள் ஒன்றுடொன்று மோத ஆரம்பித்தன. அப்போது ரோம் நடுநிலைமையுடன் நடந்துகொண்டது. அவ்வாறு நின்றதோடல்லாமல் தீய எண்ணத்தில் அது வல்லவனுக்குச் சலுகைகள் அளிக்கவும் முன்வந்தது. அதே நோக்கத்திலேதான் ரகசியமாக லண்டனும் உடன்படிக்கை செய்தது; இறுதியில் 'மீட்கப்படாதிருந்த இத்தாலிய மாநிலங்கள்' (Italia Irredenta) மீட்கும் நோக்கத்துடனும் நேச நாடுகள் வெற்றிபெற நேரிடின், அதனால் தனக்கு நஷ்டஈடாகக் கிடைக்கப்போகும் குடியேற்ற நாடுகளைக் கருத்தில் கொண்டும் 1915, மே மாதம் இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய நாடுகள்மீது போர் தொடுத்தது.

அவ்வமயம் இராணுவத் தலையீட்டை விரும்பிய முசோலினி அதை விரும்பாத தன் சோஷலிஸ்டுத் தோழர்களை விட்டு 1914-ல் பிரிந்துபோனார். அதோடல்லாமல் அவர் ஒரு கட்சித் துரோகி என்றே கட்சியினின்றும் விலக்கப்பட்டார். இவற்றைக் கண்டு சிறிதும் மனம் தளராது, அவர் ஃபிரெஞ்சு நிதி உதவியால் 'இல் பொபோலோ டி இட்டாலியா' என்ற புதிய செய்தித்தாள் ஒன்றை ஆரம்பித்தார். அதன்மூலம் போர் ஒன்றே புரட்சிகரமான வீரச்செயலாகும் என்று போதித்தார். 'வரலாற்றுச் சக்கரத்தைச் சுற்றவைப்பது இரத்தமே' என்பது அவரது கூற்று. 1917ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (போர் வெறி பிடித்த) முசோலினி படையில் சேர்ந்தார். அகழி பீரங்கி நடவடிக்கையின்போது குண்டுகள் வெடித்தன. அப்போது அவர் பின்புறத்திலிருந்து தாக்கப்பட்டார். அதிலிருந்து தப்பி மீண்டும் அவர் போரில் பங்கு கொண்டார். இம்முறை பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் அவர் போரில் ஈடுபட்டார். எண்ணற்ற தன் நாட்டு மக்கள் போருக்கு இரையாகிக்கொண்டிருக்கும் வேளையில், கரப்பரீட்டோ போரில் இத்தாலி அடைந்த படுதோல்விக்குப் பின்னர், முதுகெலும்பு முறிந்து போயிருந்த இத்தாலிய முன்னணிக்கு உயிர்ப்பிச்சையளிக்க ஆங்கிலோ-ஃபிரென்சுத் துருப்புகள் (divisions) அனுப்பப்பட வேண்டியிருந்த வேளையில், இங்கு முசோலினி தேசபக்தியின் சிறப்பைப்பற்றி மக்களுக்குப் போதித்து வரலானார்.

கொடுங்கோலன்

1918-ல் வெற்றியால் ஏற்பட்ட விளைவுகள் இத்தாலிக்குச் சாதகமாய் அமையவில்லை. ஒருபுறம் வில்சனின் எதிர்ப்புக்கும், மற்றொரு புறம் யூகோசுலேவிய எதிர்ப்புக்கும் எதிரான ஒரு சூழ் நிலையில் வடக்கில் எதிரியால் பிடிபட்டிருந்த பகுதிகளில் சில மீட்கப் பட்டன. ஆப்பிரிக்காவில் வெகு சில இடங்களே கைப்பற்றப்பட்டன. ரோட்சு தீவுக்கு அருகிலுள்ள டோடிகனீசு தீவுகளைத் தவிரக் கிட்டக் கிழக்கிலோ வேறு எதுவும் கைப்பற்றப்படவில்லை. தேசிய பக்தர்கள் அனைவரும் அமைதி குலைந்துபோய்விட்டதென்று நினைத்தனர். நாடெங்கிலும் முன்னெயிலும் அதிகப்படியான வறுமையும், சுரண்டலும், ஊழலும் தலைவிரித்தாடத் தொடங்கின. சோஷ லிஸ்ட்டுகளும் கம்யூனிஸ்ட்டுகளும் புரட்சியைப் (revolution) பற்றிப் போதிக்கலாயினர். வெளியேற்றம் (lockouts), வேலை நிறுத்தம், (strikes), மற்றும் கலகம் ஆகியவை அன்றாட நிகழ்ச்சிகளாயின. மீண்டும் தலைமையமைச்சர் பதவியில் வீற்றிருந்த கியோலித தன் மூப்புக்காலத்தில் 'கம்யூனிஸ்ட் புரட்சி' என்பது ஒரு பெரும் பொய் என்றும், நடப்பது நடக்கட்டும் என்றும் நினைத்துக்கொண்டிருந்து விட்டார். ஆனால், பீதியுற்ற தொழில் அதிபர்களும் நிலச்சுவான் தார்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பெரிதும் முயன்றனர். மனக்குறையுடைய அனேகப் போர் வீரர்கள் அரசியல் குழுக்களை அமைத்தனர். அவற்றில் ஒன்று 1919 மார்ச்சு 23-ல் மிலானில் தோன்றிற்று. அதன் தலைவர்தான் பெனிட்டோ முசோலினி. பலாத்காரம் அவரது பாதை. அவரது சீடர்கள் கறுப்பு ஆடை அணிந்து ரோமன் முறையில் வணக்கம் தெரிவித்தனர். முடியில் அணியப்படும் பித்தளைக் கவசமும், விளக்கெண்ணெயும், கத்திகளும் குண்டுகளுமே அவர்களுடைய கருவிகளாயின.

1921 நவம்பர் மாதத்திற்குப் பின்னரே இக் கூட்டம் 'கட்சி' என்ற வடிவம் எடுத்தது. எனினும், சுதந்திரமாக நடைபெற்ற ஒரு தேர்தலில்கூட அதற்குப் பெரும்பான்மை (majority) இடங்கள் கிடைக்கவில்லை. 'எங்கள் திட்டம் எளிமையானது; இத்தாலியை ஆளுவதே எங்கள் விருப்பம்' என்று முசோலினி உரைத்தார். அவரது விருப்பம் நிறைவேறிற்று. ஆனால், எப்படி அது நிறை வேறிற்று என்பது, பிழைஞல் தலையெடுத்த ∴பாசிஸ்ட்டுக் கொள்கை களால் ஊக்குவிக்கப்பட்ட சமூக இயக்கங்களைவிட அவ்வளவு புதிரானது அன்று. தங்கள் நிலைமை என்ன ஆகுமோ என்று கவலை யுற்றிருந்த பிரபுக்களும், தொழில் அதிபர்களும் 'பால்சிவிசத்தி லிருந்து' தங்களைக் காப்பாற்றுமாறு முசோலினியை வேண்டினர்; அதற்காக அவருக்கு வேண்டிய உதவித் (ஆதரவு) தொகை (subsidy) யளிக்கவும் அவர்கள் தயங்கவில்லை. முசோலினி இடைநிலை வகுப்

பினரின் 'நாட்டுணர்ச்சியைக்' (nationalism) கிளறிவிட்டார்; காபினெட் அமைச்சரவையும், மற்றும் போலிசுப் (police) படையும் மறைமுகமாகத் தனக்கு அளித்த ஆதரவின்மூலம் தனக்கு இணங்காதவர்களை அடித்து உதைத்து, நெருப்பிலிட்டுத் தீர்த்துக் கட்டிவிடும்படி கொள்ளைக் கூட்டத்தினரை ஏவினர். சோஷலிஸ்ட்டுகள், கம்யூனிஸ்ட்டுகள், தாராளவாதிகள், தொழிலாளர் சங்கத் தலைவர்கள், கூட்டுறவு சங்க அதிகாரிகள், இடதுசாரி செய்தித்தாள் ஆசிரியர்கள் ஆகியோர் இதற்குப் பலியாயினர். சுருங்கச் சொல்லின், முசோலினியின் கூட்டத்தாருக்குச் சம்பளம் வழங்கிய (paymaster) அதிகாரிகள் எவரைக் கண்டு அஞ்சினரோ, அதாவது, 'சீர்திருத்தம்' (reform) ஏற்பட வேண்டும் அன்றிப் 'புரட்சி' ஏற்பட வேண்டும் என்று யார் யார் மார் தட்டி நின்றனரோ அவர் அனைவரும் தீர்த்துக்கட்டப் பட்டனர்.



அரசன், தன்னைத் தலைமையமைச்சராக நியமிக்கவேண்டுமென்று முசோலினி விரும்பினர். ஆனால், அரசனை எப்படித் தூண்டுவது? முசோலினிக்கு ஒரு யோசனை பிறந்தது. அவர் 1922 அக்டோபர்

மாத இறுதியில் 'ரோமாபுரிமேல் படையெடுக்குமாறு' தன் சேனைகளுக்கு உத்தரவிட்டார். செய்வது இன்னதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்த காபினெட் அமைச்சரவை, பதவியிலிருந்து விலகிக்கொள்வதா அல்லது பகைவனை எதிர்ப்பதா என்று புலப்படாமல் தயங்கிக்கொண்டிருந்தது. அரசனே குடியாட்சியை வேருடன் களைந்தெறிந்துவிட்டு முடியாட்சியை ஆதரிக்கக்கூடிய சருவாதிகாரத்தை ஏற்படுத்தத் தயாரானான். இத்தாலிய இராணுவமோ (army) இராணுவத்துவத்தை விரும்பக்கூடிய எந்த இயக்கத்தையும் ஆதரிக்கத் தயாராயிருந்தது. திருச்சபையோ (Church) கிருத்துவ மதத்திற்காக மார்தட்டி நின்றோர்க்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்தது. வியாபாரப் பெரும் புள்ளிகளும் ஜமீன்தார்களும் 'கறுப்புடையணிந்து' (தொழிலாளர்) சங்கங்களைக் கருவறுத்தும், மண்ணுசை பிடித்த உழவர்களைக் கட்டுப்படுத்தியும் வந்தவர்களைக் கண்டு களிப்பெய்தினர். தாராளவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் (radicals) தலைதூக்கவொண்ணுமல் தலையில் பலத்த அடி விழுந்தது. பொருட்படுத்துவோர் எவருமிலர். இந்நிலைமையில்தான் முசோலினியின் படைகள் ரோமாபுரியை நோக்கிச் சென்றன. முசோலினி தக்க பாதுகாப்புடன் மிலானில் காத்துக்கொண்டிருந்தார். பின்னர் அவர் உறங்கும் காரில் ரூபிகன் நதியைத் தாண்டிய செய்தியறிந்ததும் மன்னர் வேறு வழியின்றி அவரை ரோமாபுரிக்கு வரும்படி ஓலையனுப்பினர். தலைநகர் வந்து சேர்ந்த முசோலினி அக்டோபர் 30ஆம் நாள் காபினெட் அமைச்சரவை ஒன்றை அமைத்தார். அவரைச் சேர்ந்த ஃபாசிஸ்ட்டுவாதிகள் கொலை, பிரசாரம், தற்புகழ்ச்சி ஆகிய கருவிகளைப் பயன்படுத்தித் தொழிலாளர் சங்கங்களைத் தகர்த்து எறிந்தனர்; உழவர்களைத் தங்களுக்கு அடி பணியவைத்தனர்; 1925-க்குள் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தனர். மேலும், அவர்கள் கம்யூனிஸ்ட்டு போலிசு (காவல்) அரசின் வழிகளை அப்படியே பின்பற்றினர்; ரயில் வண்டிகள் காலக்கிரமப்படி ஓடும்படி செய்தனர்; 'இத்தாலியை பால்சிவிஸத்தின் கோரப் பிடியிலிருந்து காப்பாற்றி', அதற்கு ஈடாக மேலை உலகில் எண்டிசையிலும் வாழ்ந்துவந்த பொருட்செல்வமும் அருட்செல்வமும் படைத்த நேர்மைச் சிந்தனையாளர்களால் வெற்றிமாலை சூட்டப்பட்டனர்.

'ஃபாசிஸ்ட்டு யுகத்தின்' வரலாற்றை மீண்டும் இங்கு வரைய வேண்டியதில்லை. எனினும், அதன் விளைவுகளில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும். புதிய கொடுங்கோலாட்சி வாயிலாக ஓரளவு வியாபாரிகளுக்கும், செல்வச் சிறுகுழுவாட்சியினர்க்கும், திருச்சபையினர்க்கும், அவ்வாட்சியை அதிகார பீடத்தில் அமர்த்திய இராணுவ அதிகாரிகளுக்கும் நல்ல லாபம் கிடைத்தது;

எதிர்ப்பை அடக்கி, 'நம்பு, அடிபணி, போரிடு', 'நம் தலைவர் சொல்வதே என்றும் சரி' என்ற கோட்பாடுகள் எழுப்பப்பட்டு, வகுப்புப் பூசல் (class conflicts), பாட்டாளி, உழவர் அமைதியின்மை ஆகியவை தொடர்பான சிக்கல்கள் அனைத்தும் 'தீர்க்கப்பட்டன'; அன்றியும், இவ்வாட்சியாளர் பொதுநிதியைப் போர்க்கலப் பெருக்கத்திலும், வெளிநாடுகளுடன் போரிடுவதிலும் செலவிட்டு, அதன்மூலம் தன் நாட்டின் ஒற்றுமையையும், செல்வத்தையும் பெருக்க நினைத்தனர். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டாலொழிய (பித்தர், நாடு கடத்தப்பட்டோர் நீங்கலாக) மற்ற உண்மையான தேசபக்தர் அனைவரின் பாராட்டுதலையும் பெற முடியாது என்று அவர்கள் எண்ணினர்.

படுதோல்வி : இருபது ஆண்டுகள் அதிகாரபீடத்தில் வீற்றிருந்த ∴பாசிஸ்ட்டு ஆட்சி தன் வெளிநாட்டுக் கொள்கையின் விளைவாக வீழ்ச்சியுற நேர்ந்தது. 1915-ல் தனக்கு முன் பதவியிலிருந்தவர் செய்ததுபோல் முசோலினியும் தக்க தருணத்தில் ஜெர்மனியை வஞ்சித்துவிட்டு நேச நாடுகள் பக்கம் சேர்ந்திருந்தால் அவர் தன்னை இறுதியில் காப்பாற்றிக்கொண்டிருக்க முடியும் என்று சர்ச்சிலும் மற்றவர்களும் வாதித்தனர். ஆனால், அவ்வாறு நடந்து கொள்ள ∴பாசிஸம் ஒப்பவில்லை. உள்நாட்டில் அமைதியைக் காக்கும்பொருட்டு மற்றெல்லா அயல்நாடுகளுடனும் போரிடத் தூண்டுவது ∴பாசிஸம்; சுய கட்டுப்பாட்டுக்கே முற்றிலும் இடமில்லாத வகையில் செயலாற்றக்கூடியது ∴பாசிஸம். அதனாலன்றோ இத் தலைவருக்கு ஆங்கிலோ-∴பிரெஞ்சுக்காரர்களின் ஆக்கமும் ஊக்கமும் கிட்டியது! ∴பாசிஸத்தின் கவர்ச்சியாலன்றோ மீண்டும் தலைதூக்கும் ஜெர்மனிக்கு எதிராக இத்தாலியுடன் உறவு கொள்ளும் நம்பிக்கையில், ஹோர், ஹாலிபாக்சு, லவால், பொன்னெட் ஆகியோர் உடல், பொருள், ஆவி அனைத்தையும் செலவிட்டனர்.

தொடக்கத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் படிப்படியாகக் கேட்டையே விளைவிக்கலாயின. 1923-ல் கார்பியு என்னும் கிரேக்கத் தீவு குண்டு வீச்சுக்கு இரையாக்கப் பட்டுக் கைப்பற்றப்பட்டது. இறுதியில் பிரிட்டன் கொண்டுவந்த ஒரு நெருக்கடியான நிலைமையினால் அத் தீவிலிருந்த இத்தாலிய மக்கள் அனைவருமே வெளியேற்றப்பட்டனர். 1926-ல் அல்பானியா இத்தாலியின் காப்பரசு நாடாக (protectorate) ஆக்கப்பட்டது. ஆஸ்திரியாவின் 'சுதந்திரத்திற்கு' ஆதரவளித்தும், ஹிட்லருக்கு எதிராக டால்பஸ், ஸ்குஷ்னிக் ஆகியோரின் ∴பாசிஸ்ட்டு மதகுரு ஆட்சிக்கு ஊக்கம் அளித்தும், முசோலினி 1934-35-ல் ஆங்கிலோ-∴பிரெஞ்சு உதவியைப் பெற்றார். ∴பாசிஸ்ட்டுகள் எத்தியோப்

பியாவைக் கைப்பற்றியதற்கும், ஸ்பெயினில் தலையிட்டதற்கும் (intervention)[2] ஆங்கிலோ-ஃபிரெஞ்சு தரப்பிலிருந்து முழு ஆதரவு கிடைத்தது. எனினும், லண்டனுக்கும் பாரிசுக்கும் எதிராகப் பெர்லினைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதால் விளையும் நலன்களை விட, 'நலிவுறும்' (decadent) குடியாட்சிகளுக்கு எதிராக ஹிட்லருடன் கைகோத்துச் செயலாற்றுவதால் ஏற்படக் கூடிய புகழ் முசோலினியிடம் அதிக ஆசையைக் கிளப்பியது. இத்தகைய செயலில் ஈடுபடுவதால் கேடுதான் விளையுமென்று மாக்கியவெல்லி எச்சரித்திருக்கிறார். எனினும், முசோலினி அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. தன்னினும் பலமிக்கதும், அதிலும் ஒரு வெறி கொண்டவரால் ஆட்சி செய்யப்பட்டு வருவதுமான வல்லரசுடன் ஒருவன் நட்புறவு கொண்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவு என்னவாயிருக்கும் என்று கூறவேண்டியதில்லை. நட்புறவு கொள்பவன் நாளடைவில் மற்றவனுடைய கீழாள் (vassal) ஆக மாற நேரிடும்; பொது வெற்றியால் அவனுக்கு எந்த நன்மையும் ஏற்படாது; மாறுகப் பொதுத் தோல்வி ஏற்படின் அதில் அவனுக்கு முற்றிலும் இழப்பு நேரிடும். இவ்வுண்மையைத் தவறு இழைக்கா முசோலினி உணர்ந்தார் இல்லை.

முசோலினியின் மகள் இடாவின் கணவன் சியானே பெருமகன் (Count). அவன் எத்தியோப்பியர்மீது குண்டுமாரி பொழிந்து வாகை சூடிக்கொண்டான். 1936 அக்டோபர் 25ஆம் நாள் பெர்லினுடன் ஓர் உடன்படிக்கை செய்தான். அதன்பிரகாரம் ஆஸ்திரியா ஓர் இடைப்படு நாடாகவும், இரு ஃபாசிஸ்ட்டு வல்லரசுகளுக்குமிடையே ஒரு பாலமாகவும் அமையவிருந்தது. '8,000,000 பேர்களைக் கொண்ட சேனையை நம்மால் திரட்ட முடியும்..... நிலையான அமைதியை நாம் மறுத்து நிற்கிறோம்..... என்றும், நாம் வலிமையுடன் விளங்கவேண்டும்..... நாம் பால்சிவிஸத்தை எதிர்த்துப் போராடுகிறோம்' என்றும் ஃபாசிஸ்ட்டுத் தலைவர் (முசோலினி) பெருங்கூச்சலிட்டார். மூன்று ஆண்டுகட்குப் பின்னர் அவரே, 'மிகப் பொல்லாதவர்களாக ஆகக்கூடிய அளவிற்கு நம் எதிரிகள் மடத்தனமாகிவிட்டார்கள்' என்று அங்கலாய்த்துக் கொண்டார். 1938ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நாசிகள் ஆஸ்திரியாவைக் கைப்பற்றியபோதும், மியூனிச்சில் செக்கோசுலேவாக்கியா துண்டாடப்பட்டபோதும், அவற்றிற்கு இசைவதைத் தவிர முசோலினிக்கு வேறு வழி இல்லாமல் போயிற்று. 1939ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7, 8ஆம் தேதி வாக்கில்

[2] ஸ்பானிசு உள்நாட்டுப் போரின் அரசியல், அரசியல் தந்திரம், படைச் சூழ்ச்சி ஆகியவைபற்றி இப் புத்தகத்தின் 4ஆவது பதிப்பில் (பக். 660-665) சுருக்கமாகவும் 'ஐரோப்பாவின் மாலைக் காலம்' என்ற நூலில் விரிவாகவும் காணலாம்.

முசோலினி அல்பானியாவைக் கைப்பற்றினார். மே மாதம் 22ஆம் நாள் சியானோவும் ரிப்பன்ட்ராப்பும் மிலானில் 10 ஆண்டு 'உறுதி உடன்படிக்கை' (Pact of Steel) ஒன்று செய்தார்கள். அதன்பிரகாரம் 'இரண்டு ஒப்பந்த நாடுகளில் ஒன்று எதிரியால் தாக்கப்படும்பட்சத்தில் உடனே மற்றது தன் தரைப்படை, கப்பற் படை, விமானப் படையுடன் சென்று தன் நேசநாட்டிற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும்' என்று ஒருவருக்கொருவர் பிரமாணம் செய்துகொண்டனர். நன்கு ஆராய்ந்து பார்த்த விடத்து அவ் வொப்பந்தம் வெறும் போலியானது என்பது தெரிய வந்தது. ஏனெனில், இன்னும் மூன்று ஆண்டுகட்குத் தன்னால் போரில் இறங்க முடியாது என்று ரோம், பெர்லினுக்குக் கூறிற்று. 1939, செப்டம்பர் மாதம் முசோலினி 'நடுநிலை'யிலேயே நின்றார். எனினும், பிரிட்டனும் அமெரிக்காவும் எவ்வளவோ அவரை வேண்டின. ஆனால், அவற்றைச் சற்றும் பொருட்படுத்தாது ஜெர்மன் படையாகிய வெர்மாகட்டுகள் எதிரியைக் கதிகலங்க வைத்துவிட்ட நம்பிக்கையில் அவர் (1940, ஜூன் 10ஆம் நாள்) ஃபிரான்சுமீதும் பிரிட்டன்மீதும் போர் தொடுத்தார். அதே நாள் கார்லோட்ஸ்வைல் என்ற இடத்தில் ரூஸ்வெல்டு பேசினார். அப்போது 'வாள் பிடித்த கை தன் அண்டை நாட்டையே தாக்கி விட்டது' என்றார்.

காலந்தாழ்த்தித் தான் அளித்த உதவிக்கு ஈடாக ஹிட்லர் சரியான வெகுமதி அளிக்காதுபோயும், அதனால் மனஞ்சோராத முசோலினி, பெர்லினுடனும் டோக்கியோவுடனும் சேர்ந்து 1940, செப். 27ஆம் நாள் முக்கூட்டு ஒப்பந்தம் செய்தார். மேலும், பிரிட்டிஷ் சோமாலிலாந்து, கென்யா, சூதான், எகிப்து, கிரீசு ஆகிய நாடுகள்மீது படையெடுத்துத் தன் புகழை நாட்ட அவர் எண்ணினார். அந்த எண்ணத்துடன் ஹிட்லருடன் சேர்ந்து கொண்டு முசோலினி, 1941, ஜூன் மாதம் ரஷ்யாமீதும், டிசம்பர் மாதம் அமெரிக்காமீதும் போர் தொடுத்தார். 1943, ஜூன் மாதம் சிசிலிமீது நேச நாடுகள் படையெடுத்தன. அவை நேப்பில்சு மீதும் ரோமாபுரியைச் சுற்றியும் குண்டுமாரி பொழிந்தன. உடனே முசோலினியை அதிகார பீடத்தில் அமர்த்தியவர்கள் அவரைப் பதவியில் வைத்திருத்தலிலும் நீக்கிவிடுதலே உத்தமம் என்ற முடிவுக்கு வந்தனர். ஜூலை மாதம் 24ஆம் தேதி ஃபாசிஸ்ட்டு உயர்குழு (Grand Council) கூடியது. அக் கூட்டத்தில் சியானோ, கிராண்டி ஆகியோரும், இதர பாசிஸ்ட்டு வீரர்களும் முசோலினிக்கு எதிராக மாறினர். முன்னர்ப் பாராளுமன்ற நடைமுறைகளை (Parliamentary procedures) ஏளனம் செய்த இதே குழுவினர், இப்போது முசோலினிமீது 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்'


ALLIED VICTORY IN THE MEDITERRANEAN
1942 - 1945
SCALE OF MILES
0 100 200 300 400
Dates of Occupation
U.S.S.R.
Odessa
CRIMEA
Black Sea
Constanta
Varna
Burgas
Istanbul
ANKARA
TURKEY
Dardanelles
Smyrna
RHODES
CYPRUS
Port Said
Suez Canal
CAIRO
Alexandria
El Alamein
EGYPT
Offensive Begun Oct 23, 1942
RUMANIA
BUCHAREST
Aug 30, 1944
Sept 16, 1944
SOFIA
BULGARIA
ATHENS
Oct 18, 1944
CRETE
Nov 13, 1942
Tobruk
Nov 20, 1942
Bengazi
LIBYA
BUDAPEST
Feb 13, 1945
HUNGARY
BELGRADE
Oct 21, 1944
JUGOSLAVIA
ALBANIA
GREECE
CORFU
Cattaro
Split
Brindisi
Taranto
Adriatic Sea
Italy Invaded Sept 2, 1943
Sicily Invaded July 10, 1943 Conquered Aug 17, 1943
Catania
MALTA
Mediterranean Sea
AUSTRIA
Trieste
ITALY
ROME
Naples
Oct 1, 1943
Castellamare
PANTELLERIA
Jan 23, 1943
Tripoli
Mareth
TUNISIA
SWITZ.
June 4, 1944
May 7, 1943
Tunis
Bizerta
Aug 26, 1944
Toulon
CORSICA
SARDINIA
Marseilles
FRANCE
Mediterranean Sea
BALEARIC IS.
Barcelona
Algiers
ALGERIA
Allied Landings Nov. 8, 1942
Oran
Bilbao
MADRID
SPAIN
Valencia

44 7202

(lack of confidence) கொண்டுவந்தார்கள்; தீர்மானம் நிறைவேறிற்று. 1943, ஜூலை 25ஆம் நாள் மன்னர் விக்டர் இமானுவேல் முசோலினியைப் பதவியிலிருந்து நீக்கினார்; அவரைக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். மார்ஷல் பீட்ரோ படோகிலோ தலைமையில் புதிய காபினட் சபை ஒன்று அமைக்கப்பட்டது. ஜூலை 28ஆம் நாள் பாசிஸ்ட்டு கட்சியை வேருடன் களைந்தெறியும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதன் பின் ஏற்பட்ட விளைவுகளைச் சற்று ஆராய்வோம். போர் தொடர்ந்து நடக்கும் என்று படோகிலோ அறிவித்தார்; இத்தாலியை முழுதும் பாதுகாக்கும்படி பெர்லினைத் தூண்டினார்; லிஸ்பனுடன் இரகசியப் பேச்சுவார்த்தை (negotiations) நடத்தி, இறுதியில் செப்டம்பர் 3ஆம் தேதி நேசநாடுகளுடன் போர் நிறுத்த ஏற்பாடு (armistice) செய்து முடித்தார். எனினும், செப்டம்பர் 10ஆம் நாள் ரோமாபுரி வெர்மாக்ட்டுகள் கைவசமாயிற்று. அரசரும் மார்ஷலும் தப்பித்துத் தெற்கு நோக்கி ஓடினர். இரண்டு நாட்கள் கழிந்து 'பாராசூட்' (parachute) துருப்புகளும் இரகசியக் கையாள்களும் (ss men) நன்கு திட்டமிட்டு ஒரு புரட்சி (coup) செய்தனர். அதன்மூலம் சிறையிலிருந்து முசோலினி மீட்கப்பட்டார். உடனே அவர் வடஇத்தாலி சென்று அங்கு 'பாசிஸ்ட்டு குடியரசை' அமைத்தார்; இத்தாலிய மன்னரையும் தலைமையமைச்சரையும் எல்லாக் 'கயவர்களையும் துரோகிகளையும்' தீர்த்துக்கட்டப் போவதாக அச்சுறுத்தினார்; சரியான நாசி எதிர்ப்பு இருந்து வந்தபடியால், நேச நாட்டினரின் இத்தாலியப் படையெடுப்பு காலந்தாழ்த்தி நடைபெற்றது. அக்டோபர் முதல் நாள்வரை, நேப்பில்சும், 1944 ஜூன் 5ஆம் நாள்வரை ரோமாபுரியும் எதிர்ப்புத் தெரிவித்துவந்தன. அரசரும் தலைமையமைச்சரும் 1943, அக்டோபர் 13ஆம் தேதி ஜெர்மனிமீது போர் தொடுத்தார்கள். அதைக் கண்டு வாஷிங்டனும் லண்டனும் அவர்களைக் 'கூட்டுப் பொருநர்' (cobelligerents) என்று வாழ்த்தின.

நாடு கடத்தப்பட்டவர்களையும் மறைந்து வாழ்ந்துவந்த பாசிஸ்ட்டு எதிரிகளையும் கொண்ட ஒரு தேசீய விடுதலைக் கமிட்டி புதிதாய் அமைக்கப்பட்டுச் செயலாற்றத் தொடங்கியது. அது (சர்ச்சில் மனமுவந்து ஆதரித்துவந்த) சவாய் அரச வமிசம் ஒழிய வேண்டுமென்று ஒரே தலைக்கு நின்றது; அக் கமிட்டி கார்லோ ஸ்போர்சா வாயிலாய் மன்னன், 'அறிவுகெட்ட [illegible] நீழினத்தைச் சேர்ந்த குற்றவாளி' என்றும், அவரது அ[illegible] 'நாலும் பிரேதம்' என்றும் இடித்துரைத்தது. [illegible] விடுதலையடைந்ததும் படோகிலோவின் காபினட் நீக்கப்பட்டு, எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு காபினட் [illegible] என்ற

CONNEMARA PUBLIC LIBRARY 31 MAR 1994

சோஷலிஸ்டு தலைமையில் அமைக்கப்பட்டது. அதில் (கிருத்துவ மக்களாட்சிக் கட்சிக்காரர்களான) ஸ்போர்சா, அல்சிடு டா காஸ்பெரி, (சோஷலிஸ்டுகளான) கியூசெப் சராகாத், பீட்ரோ நெனி, (கம்யூனிஸ்ட்டுகளான) பால்மிரோ தொக்லியாத்தி ஆகியோர் இடம் பெற்றனர். டிசம்பர் மாதம் சர்ச்சில் இக் காபினட் அமைச்சரவையி லிருந்து ஸ்போர்சாவை நீக்கச் செய்தார். தேசிய விடுதலைக் குழுவும் குலைய ஆரம்பித்தது. அது இனிமேல் ஏற்படவிருந்த புதிய கூட்டுகளின் எச்சரிக்கையாய் அமைந்தது. இதற்கிடையில் வடக்கே நாசிகளின் கைப்பாவையாக விளங்கிவந்த முசோலினி, 'துரோகிகள்' என்று தனது எதிரிகளைக் கருதி அவர்கள்மீது பழிக்குப் பழி வாங்கினர். அப்போது ஏற்பட்ட கைகலப்பில் நேச நாட்டுச் சேனைகள் போநதிப் பள்ளத்தாக்கை அடைந்ததும், அதாவது, 1945-ல் முசோலினியும் பகைவர் வாளுக்கிரையானர்.

முசோலினி இறந்து 12 ஆண்டுகட்குப் பின்னர், அவர் சருவாதிகாரியாகி 35 ஆண்டுகட்குப் பின்னர், அவர் பிறந்து 75 ஆண்டுகட்கு அப்புறம் - 1957, ஆகஸ்டு 29 ஆம் நாள் அவருடைய பிணத்தை அவருடைய கைம்பெண் மனைவி ராச்லியிடம் புதிய ஆட்சியாளர் ஒப்படைத்தார்கள். அது சான் காசினே டி பிரிடாப் பியோ கல்லறையில் குடும்ப நபர்களுக்கருகில் அடக்கம் செய்யப் பட்டது. முசோலினியோடு சேர்ந்து நம்முடைய இந் நூற்றாண்டின் புதிய சருவாதிகாரமும் (neo-Caesarism) மறைந்துவிட்டது என்று துணிந்து கூறுவதற்கில்லை. ஏனெனில், மனித இன சர்வதேசத் தொடர்புகள்பற்றிய சிக்கல்களைத் தீர்க்க முடியாது தவிக்கும் நாடுகள் எல்லாம், 'சருவாதிகாரமே அவற்றிற்குத் தீர்வுகாணக்கூடிய வழி' என்ற மயக்கம் கொண்டு, வருங்காலத்தில் சருவாதிகாரத்தில் இறங்கக்கூடும். ஒரு தலைமுறையில் ஏற்படும் மயக்கம் வருங்கால மயக்கங்களைத் தடுக்கும் ஆற்றலுடையது என்று துணிந்து கூறற்கில்லை. எனவேதான், முசோலினி விட்டுச் சென்ற இத்தாலி, பொதுத்துறை அலுவல்களைப் பொறுத்தமட்டில், நம்பிக்கையூட்டும் வேறொரு வழியில் செல்லப் புறப்பட்டது.

மக்களாட்சி

முசோலினியின் மறைவுக்குப் பின்னர் இத்தாலியில் மக்களாட்சி மலரத் தொடங்கியது. 1945, டிசம்பரில் புத்திகூர்மை வாய்ந்த அல்சிடே டா காஸ்பெரி தலைமையமைச்சரானர். அவரும் அவரது சகாக்களும் மக்களாட்சியையும் கிருத்துவ மதத்தையும் விரும்பினர். அதாவது, தாராளக் கொள்கை (liberalism), முதலாளித்துவம், திருச் சபை சமயத்துவம், படைநிலமானியத்துவம் ஆகிய கொள்கைகளுக்காக அவர்கள் ஆதரவளித்து நின்றனர். சோஷலிசத்தையும் கம்யூனிசத்

தையும் அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். இக் கொள்கையின் விளைவாக முன்போல் செல்வாக்குப் பெற்றிருந்த நிலச்சுவான்தார்கள், பணக்காரர்கள், மற்றும் சமயவாதிகள் ஆகியவர்களே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தலானார்கள். அன்றியும், சமூகச் சீர்திருத்தம் என்ற பெயரில் இடதுசாரிகளைக்கொண்ட புதிய கொடுங்கோலாட்சியைத் தேர்தல்மூலமாகவோ, அன்றிப் புரட்சி மூலமாகவோ அமைப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாயின. (இத்தாலிய மன்னர் விக்டர் இமானுவேல் அரசிருக்கையைத் துறந்துவிட்டுத் (abdicate) தன் மகன் உம்பர்ட்டோ 1946 மே மாதம் 9ஆம் நாள் அரசபீடத்தில் வீற்றிருக்க வழிசெய்தார்.) அவர் 1947, டிசம்பர் 28ஆம் நாள் அலெக்சாந்திரியாவில் தன் இன்னுயிர் நீத்தார். 1946, ஜூன் 2ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் முடியாட்சியை விரும்பி 10,718,000 பேர்களும், குடியரசை (republic) ஆதரித்து 12,719,000 பேர்களும் வாக்கு அளித்தனர். தன் நாட்டில் தனக்கு இடமில்லாதுபோகவும் உம்பர்ட்டோ ஸ்பெயின் நாட்டிற்குச் சென்றுவிட்டார். (1946, ஜூன் மாதம் 10ஆம் நாள் இத்தாலியக் குடியரசு தோன்றியது.) அரசியலமைப்பு நிர்ணய சபை (constituent assembly) ஒன்றுகூடி என்ரிகோ டி நிகோலாவை தற்காலிக ஜனாதிபதியாகத் (President) தேர்ந்தெடுத்தது. 1948, மே மாதம் கிருத்துவ ஜனநாயகக் கட்சித் தலைவர் லூகி இனாதி அடுத்த ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிருத்துவ ஜனநாயகவாதிகள் 207 பிரதிநிதிகளையும் (deputies), சோஷலிஸ்ட்டுகள் 115 அங்கத்தினர்களையும், கம்யூனிஸ்ட்டுகள் 104 உறுப்பினரையும் தேர்ந்தெடுத்தனர். 1948 ஜனவரி மாதம் முதல் தேதி புதிய அரசியலமைப்பு ஒன்று அமலாக்கப்பட்டது. அது ஒருமுகப் (unitary) பாராளுமன்ற ஆட்சி முறையை (paliamentary regime) நிறுவிற்று; ஆண், பெண், குடிகள் யாவருக்கும் முழு வாக்குரிமை (universal suffrage) வழங்கிற்று; கத்தோலிக்க மதத்தை (கம்யூனிஸ்ட்டுகள் சம்மதத்துடன்) தேச மதமாக்கிற்று (state religion). 1929-ல் முசோலினியால் அமைக்கப்பட்ட வாட்டிகன் அமைதி உடன்படிக்கை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரலாயிற்று. கெடுபிடிப் போர் அதிதீவிரமாக மாறும் காலம்வரையிலும், வலதுசாரி இடது சாரிகளின் கூட்டு அரசாங்கம் (coalition government) நிலைத்து நின்றது. வாஷிங்டன் 'இத்தாலியைக் கம்யூனிசத்தின் கோரப்பிடியிலிருந்து காப்பாற்றும்' சாக்கில் இலட்சக் கணக்கான டாலர்களை அள்ளிக் கொடுத்து டகாஸ்பெரிக்கு ஆதரவு அளித்தது. சோஷலிஸ்ட்டுகள் இரண்டு பிரிவாகப் பிரிந்து போயினர். வலதுசாரிகள் சராகாத் தலைமையில் காபினட்டுக்கு ஆதரவு அளித்துவந்தார்கள்; இடதுசாரிகள் நெனி தலைமையில்

எதிர்க்கட்சியிலிருந்த (opposition) தொழிலாளர் கட்சியின் கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆதரவளித்தனர். 1947, பெப்ரவரி 10ஆம் நாள் கையெழுத்திடப்பட்ட அமைதி உடன்பாட்டை ஒரு கட்சி உடன்பாடு என்று சொல்லிவிட முடியாது. பணவீக்கம் (inflation), வேலை இல்லாத் திண்டாட்டம் (unemployment), நிலப்பசி, பொதுமக்கள் வறுமை, மக்கட் பெருக்கம் ஆகியவை நாட்டில் தலைவிரித்தாடின. இவற்றின் உதவியால் இடதுசாரி சோஷலிஸ்ட்டுகளும் கம்யூனிஸ்ட்டுகளும் ஏராளமான பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுவந்தார்கள். எனினும், 1947, மே 31ஆம் தேதி அமைக்கப்பட்ட புதிய காபினட் அமைச்சவையிலிருந்து இவர்கள் முதல் முறையாக விலக்கப் பட்டார்கள்.

1948, ஏப்ரல் 18ஆம் நாள் தேர்தல் நடைபெறவிருந்தது. தேர்தலுக்கு வேண்டிய ஆயத்தங்கள் வெகு மும்முரமாக நடந்தன. கம்யூனிஸ்ட்டுகளும் இடதுசாரி சோஷலிஸ்ட்டுகளும் கூட்டுச்சேர்ந்து 'மக்கள் முன்னணிக் கட்சி'யை அமைத்தனர். வாட்டிகனும் அ.ஐ.நாடும் கிருத்துவ ஜனநாயகவாதிகளின் கையை ஓங்கச் செய்வதற்கான உதவிகள் அனைத்தையும் செய்தன. ஸ்டாலினிடமிருந்து டிட்டோ ஜூன் மாதம் பிரிந்துபோனதால் ட்ரீயஸ்ட்சே பகுதி இத்தாலியுடன் இணைக்கப்படமுடியாதுபோயிற்று. எனினும், அதை இப்போது லண்டனும் வாஷிங்டனும் இத்தாலியுடன் சேர்த்து விடுவதாக வாக்குறுதியளித்தன. அமெரிக்கத் தூதர் ஜேம்ஸ் சி. டன்னும் கத்தோலிக்கக் குருக்களும் 'சருவாதிகாரத்துவம்' (totalitarianism), மற்றும் 'நாத்திகம்' (atheism) ஆகியவற்றிற்கு எதிராகக் 'கிருத்துவ மதத்திற்காகவும்' 'மக்களாட்சிக்காகவும்' வெகு மும்முரமாகப் பிரச்சாரம் செய்தார்கள். இடதுசாரிகள் 31 சதவீத வாக்குப் பெற்று 182 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். கிருத்துவ ஜனநாயகவாதிகளோ 49 சதவீத வாக்குகள் பெற்றுச் சபையின் 307 (பெரும்பான்மையான) இடங்களைக் கைப்பற்றினர். எனினும், அவர்கள் வலதுசாரி சோஷலிஸ்ட்டுகளுடனும் சிறுபான்மைக் கட்சிகளுடனும் (minor parties) சேர்ந்து கூட்டு அரசாங்கத்தையே தொடர்ந்து அமைத்து நடத்திவந்தார்கள்.

பாதுகாப்பு

அமெரிக்காவின் நிதி உதவித் திட்டமாகிய மார்ஷல் திட்டம் அளித்த உதவிகளாலும், வட அட்லான்டிக் உடன்பாட்டு அமைப்பின் (NATO) உறுப்பினராக இத்தாலி ஆகிவிட்டபடியாலும், புதிய இத்தாலி, சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமைக்கப்பட்டிருந்த அமெரிக்க—மேற்கு ஐரோப்பியக் கூட்டுடன் சேர்ந்துகொண்டது. இடதுசாரி சோஷலிஸ்ட்டுகளும் கம்யூனிஸ்ட்டுகளும் 'அமெரிக்க

ஏகாதிபத்தியத்தைத்' தாக்கினர். இத்தாலிக்குள் 'ஆக்கிரமிப்பாளர்' கால்வைப்பின் அவர்கள் கால்களை முறிப்பான் வேண்டி சோவியத் படைகளை உதவிக்கு அழைக்கத் தயாராயிருப்பதாக பயமுறுத்தினர்கள். கம்யூனிசத்தைக் கடுமையாக எதிர்த்ததால் கிருத்துவ ஜனநாயகவாதிகட்கு அமெரிக்க ஆதரவு கிடைத்துவந்தது. ஆனபோதிலும், நிலச்சீர்திருத்தம் (land reform) செய்யும்படியும், வரி விதிப்பை (taxation) முன்னேயிலும் அதிகமாக சமப்படுத்துமாறும் அமெரிக்கா கொண்டுவந்த ஆலோசனையை அவர்கள் எதிர்த்து வந்தார்கள். இத்தாலியின் 9½ மில்லியன் நிலச் சொந்தக்காரர்களில் ஒரு சதவீதத்திலும் பாதியான விவசாயிகளிடம், அதாவது, 46,000 பேரிடம் மட்டும் 36 சதவீத நிலம் இருந்தது. பத்து மில்லியன் விவசாயிகளில் முக்கால்வாசிப் பேரிடம் நிலமே இல்லாமல் இருந்தது.

தொழிலாளர் பொது இணைப்புச் சங்கம் இடது சாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்துவந்தது. அவர்கள் தென் இத்தாலிய விவசாயிகளைக் கம்யூனிஸ்ட்டுகளாக்கினர். கம்யூனிசத்தைச் சேரும் கத்தோலிக்கர் அனைவரும் மதத்தைவிட்டுப் புறம்பாக்கப்படுவர் (ex-communication) என்று 1949, ஜூலை மாதம் வாட்டிகன் அச்சுறுத்தியது. ஆனால், விவசாயிகள் அதைக் கண்டு அஞ்சவில்லை. கம்யூனிஸ்ட்டுகள் திட்டமிட்டுச் செய்த வேலைநிறுத்தம், கிராமப் பண்ணைகளைக் கைப்பற்றல், படைக்கல அமைதியைக் காப்பான் வேண்டி மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றிற்குக் கணிசமான மக்கள் ஆதரவு கிடைத்தது. இத்தாலியக் கம்யூனிஸ்ட்டுகளிடம் 'டிட்டோவின் கொள்கை' (Titoism) தலைதூக்கினாலும், அதைத் தழுவ அதிகம் பேர் முன்வரவில்லை. 1950-51-ல் வலதுசாரி சோஷலிஸ்ட்டுகள் பிளவுண்டு, மீண்டும் ஒன்றுகூடி, இறுதியில் காபினட்டைவிட்டே விலகிக்கொண்டனர். கிருத்துவ ஜனநாயகவாதிகள் வரவர அதிகமாகப் பழமைவாதிகளாகவும் (conservatives), பிற்போக்குக் கொள்கையினராகவும் (reactionaries) பிளவுண்டு நின்றபோதிலும், வெளிப்படையாக முறிந்துபோகவில்லை. தீவிர வலதுசாரிகளைச் சேர்ந்த பற்பல விதமான புதிய ஃபாசிஸ்ட்டு கூட்டங்கள் நிலையற்ற வெற்றி பெற்றன. குக்லீல்மோ கியானினியின் 'பொதுமனிதன்' இயக்கம், கியரச்சினே சிபோலாவின் 'கம்யூனிச எதிர்ப்பு முன்னணி,' கியாவனி தொனலியின் 'இத்தாலிய சோஷலிச இயக்கம்' அல்லது இ. சோ. இ. (MSI) முதலியவை மேற்கூறப்பட்டவற்றுள் சில. இவற்றுள் இத்தாலிய சோஷலிச இயககம் ஒரே கட்சியாலாக்கப்பட்ட (தொழில்) 'கூட்டுக் கழக அரசு' என்ற அமைப்பை நிறுவ முயன்றது. வேலைநிறுத்தம், அதி

நவீன நாட்டுணர்ச்சி (ultranationalism), ஏகாதிபத்தியம் ஆகியவை சட்டத்துக்கு முரணானவை என்று அது கூச்சலிட்டது. அது அமெரிக்கக் கொள்கையை எதிர்த்து நின்றபோதிலும், சில பணக்காரர்களும் தொழிலாளர்களும் அதற்கு உதவிமானியம் அளித்துவந்தனர். எனினும், இத்தகைய இயக்கங்கள் அனேத்துமே நிலைத்து நிற்கவுமில்லை; பயன்தரக்கூடிய நற்காரியங்களைச் செய்யவுமில்லை.

அரசியல் கூட்டங்களின் (சக்தி) சமநிலை 1951, ஜூன் மாதம் நடைபெற்ற முனிசிபல் (municipal), பிரதேசத் (provincial) தேர்தல்களில் பிரதிபலித்தது. புதிய தேர்தல் சட்டத்தின்படி உள்ளூர் ஆட்சி மன்றங்களின் (local council) இடங்களில் மூன்றில் இரண்டு பாகம், தேர்தலில் எந்தக் கட்சி அல்லது கூட்டு பன்மைநிலை வாக்குகளைப் (plurality of votes) பெற்றதோ அதற்கு ஒதுக்கப்பட்டது. அதன்பிரகாரம் நடைபெற்ற தேர்தலில் இடதுசாரிகள் மிகவும் தோற்றுப்போயினர். எனினும், மக்கள் அளித்த வாக்குகளைக் கணக்கிடுகையில், கிருத்துவ ஜனநாயக வாதிகளின் பலம் மிகக் குறைவாகவே இருந்தது. மொத்த இடத்தில் 38 சதவீதமே இப்போது அவர்களுக்குக் கிடைத்தது. ஆனால், இத்தாலிய சோஷலிச இயக்கம் சிசிலியில் 13 சதவீதமும், கம்யூனிஸ்ட்-இடதுசாரி சோஷலிஸ்ட்டுகள் தெற்கில் 30 சதவீதமும், வடக்கில் 38 சதவீதமும் வாக்குகளைப் பெற்றனர். 1948ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா மொத்தம் 1,300,000,000 டாலர் உதவியளித்தபோதிலும், இத்தாலியப் பாட்டாளிகள் விவசாயிகளின் வறுமையைப் பெரிதும் சுரண்டிவரும் கம்யூனிசத்தை எதிர்க்க அது (அமெரிக்கத் தொகை) போதவில்லை என்று வாட்டிகன் செய்தித்தாள் (l'Osservatore Romano) கூறிற்று. 1952, மே மாதம் மத்திய, தெற்கு இத்தாலியில் நடைபெற்ற பிரதேசத் தேர்தல்களில் இத்தாலிய சோஷலிஸ்ட்டு இயக்கம் பொதுமக்கள் வாக்குகளில் 11 சதவீதமும், முடியாட்சிவாதிகள் (monarchists) 10 சதவீதமும், இடதுசாரிகள் 30 சதவீதமும், கிருத்துவ ஜனநாயகவாதிகள் 30 சதவீதமும் பெற்றனர்.

டி காஸ்பெரியின் தலைமையின்கீழ் இத்தாலி வெகு மும்முரமாக அரசியல் தந்திரத்தில் ஈடுபட்டுப்பார்த்தது. ஆனால், அது அட்லான்டிக் வல்லரசுகள்மீது சார்ந்திருந்ததாலும், அவற்றின் பிரச்சினைகளுக்கு உட்பட்டிருந்ததாலும், அரசியல் தந்திரம் பயக்கக் கூடிய நற்பயன்கள் அனேத்தையும் பெறமுடியாது போயிற்று. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மிகத் தாராளமாகப் பணவுதவி செய்த போதிலும், அதைக்கொண்டு இத்தாலியின் டாலர் பற்றாமையை (deficit) ஈடுகட்டமுடியாமற்போயிற்று. 1951, மே மாதம் நிலவிய

தொழில் உற்பத்தி, போருக்கு முன் இருந்த நிலையில் 140 சத வீதமே ஆகும். என்றாலும், ஒன்றரை மில்லியன் பாட்டாளிகள் வேலையின்றித் தவித்தனர். மக்களின் வாழ்க்கைத்தரம் மேற்கு ஐரோப்பாவிலேயே போர்த்துகல், ஸ்பெயின் ஆகிய நாடுகள் நீங்கலாக இத்தாலியில்தான் மிகவும் கீழ்நிலையில் இருந்தது எனலாம். 1951-ல் ஐசன்ஹோவர் அளித்த ஊக்கத்தினால் மறுபடைக் கலப் பெருக்கம் ஏற்பட்டது. அதனால் ஒருசில வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைத்தபோதிலும், அது நாட்டு நலனுக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை. ஏனெனில், பெருமளவு கிடைத்துவந்த அமெரிக்க ஆதரவுத் தொகை இல்லாமல், இத்தாலி பொருளாதாரத் தன்னிறைவு (self-sufficiency) அடையமுடியாத நிலையில் இருந்தது. மேலைவல்லரசுகள் எவ்வளவு தூரம் உதவ முன் வந்தனவோ அவ்வளவே 'பிற்போக்குக் கொள்கையில்' முன்னேற முடிந்தது.

அரசியலும் அரசியல் தந்திரமும்

இருபதாம் நூற்றாண்டின் முதல் பகுதியின் இறுதியில், ரோமாபுரியில் அதிகார பீடத்தில் அமர்ந்த காபினட்டுகள் அனைத்தும் தொடர்ந்து கிருத்துவ ஜனநாயகவாதிகளின் பலத்தையே அதிகரித்தன. சில வேளை அவைகள் ஆட்டங்கொள்ளும் நிலையில் இருந்தன. நாட்டின் வளர்ச்சி முன்னேறிக்கொண்டேபோனாலும். உள்நாட்டு நிலைமை நிலைத்ததாக இல்லை. எனினும், குடியரசின் பெரும்பாலான வெளிநாட்டுக் கொள்கையும் (foreign policy) குறிக்கோள்களும் நிறைவேறின. டகாஸ்பெரி தன் ஏழாவது ஆண்டுத் தலைமையமைச்சர் பதவியில் இருந்துகொண்டு, பாராளுமன்றம் 1953-ல் 'செல்பா சட்டத்தை' நிறைவேற்றும்படி செய்தார். 'தேர்தல் சீர்திருத்தத்திற்காகக்' கொண்டுவரப்பட்ட இச் சட்டம் 1951ஆம் ஆண்டில் பிரெஞ்சு சட்டத்தைத் (statute) தழுவியிருந்தது. அதன்பிரகாரம் எந்தக் கட்சி அல்லது கட்சிகளின் கூட்டு, மக்கள் அளிக்கும் வாக்கில் 50 சதவீதம் பெறுகிறதோ அந்தக் கட்சிக்குச் சட்ட சபையின் மொத்த இடத்தில் (590-ல் 380 இடம்), அதாவது, 65 சத வீதம் சேரவேண்டியிருந்தது. நிலையான அரசாங்கம் ஏற்படவேண்டும் என்பதற்காகவே இச் சட்டம் நிறைவேற்றப்பட்டது எனலாம். எனினும், அதற்கு அடுத்தாற்போல் நடந்த தேர்தலிலேயே இந்த நம்பிக்கை சிதறுண்டுபோயிற்று. 1953, ஜூன் 7-8-ல் நடைபெற்ற தேர்தலில் கிருத்துவ ஜனநாயக-தாராளவாத-வலதுசாரி சோஷலிசக் குடியரசுக் கூட்டின் அபேட்சகர்களுக்கு (candidates) வாட்டிகனும், கார்டினல் ஸ்பெல்மனும், அமெரிக்கத் தூதர் கிளார்பூத் லூசியும் எவ்வளவோ ஆக்கமும் ஊக்கமும் அளித்தும், அவர்களுக்குத் தேவைப்பட்ட சதவீத வாக்குகள் பெறமுடியாமற்

போயிற்று. தேர்தலில் கிருத்துவ ஜனநாயகவாதிகட்கு 40.09 சதவீதமும், வலதுசாரி சோஷலிஸ்ட்டுகளுக்கு 4.5 சதவீதமும், தாராளவாதிகட்கு 3·0 சதவீதமும், குடியரசுவாதிகளுக்கு 1.6 சதவீதமும் வாக்குகள் கிடைத்தன. இவர்களால் அமைக்கப்பட்ட கட்சிக் கூட்டுக்கு மொத்தம் கிடைத்த வாக்குகள் 49.19 சதவீதமே. அது 50 சதவீதத்துக்கும் சற்றுக் குறைவாகப் போகவே, சட்டப்படி அவர்களால் கூட்டு அரசாங்கம் அமைக்க முடியாமற்போயிற்று. அதே தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு 22·6 சதவீதமும், இடதுசாரி சோஷலிஸ்ட்டுகளுக்கு 12·7 சதவீதமும், முடியாட்சியாளர்க்கு 6.9 சதவீதமும், சமூக இயக்கத்துக்கு 5·8 சதவீதமும் வாக்குகள் கிடைத்தன. தொக்லியாத்தி தன் கட்சியின் வெற்றியைக் கொண்டாடினர். ஐரோப்பியப் பாதுகாப்பு சமுதாயமும் (European Defence Community-EDC) அட்லான்டிக் ஒப்பந்தமும் 'மறு ஆய்வு' (revision) செய்யப்பட்டால் தாங்களும் காபினட் அமைச்சவையில் சேர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாக நெனியின் இடதுசாரி சோஷலிஸ்ட்டுகள் கூறினர்கள்.

1953, ஜூலை மாத இறுதியில் ட காஸ்பெரி கிருத்துவ ஜனநாயகவாதிகள் மட்டும் அடங்கிய தனது எட்டாவது காபினெட்டை அமைத்தார். ஆனால், அது வெகு சீக்கிரத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஆனவே, ஆகஸ்ட்டு மாத நடுவில் கியூசெப்பி பெல்லா, 'நிபுணர்கள்' (experts) மட்டும் அடங்கிய தற்காலிகக் கிருத்துவ ஜனநாயக அமைச்சவை ஒன்றை அமைத்தார். அது உயர்ந்த விலைவாசிகளை ஈடுகட்ட அதிக ஊதியம் கோரி நடத்தப்பட்ட எண்ணற்ற வேலைநிறுத்தங்களுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்டு, முடியாட்சியாளரின் ஆதரவினால் ஒருவாறு காலம் கடத்திவந்தது. 1954-ல் ஜனவரியில் ஏற்பட்ட நெருக்கடி (crisis), பெப்ரவரியில் மாரியோ செல்பாவின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட வலதுசாரிக் கூட்டு அமைச்சவையால் (coalition ministry) தீர்க்கப்பட்டது. ஆகஸ்ட்டு 19ஆம் நாள் 73 வயதான ட காஸ்பெரி இருதய நோயினால் இன்னுயிர் நீத்தார். இதுகாறும் (அரசியற்) கொந்தளிப்பு, பரஸ்பர அச்சுறுத்தல், குழப்பமான பேச்சுவார்த்தைகள் ஆகியவற்றிற்குக் காரணமாயமைந்த சிக்கலுக்குக் கடைசியாக 1954, அக். 5ஆம் நாள் ஒரு தீர்வு காணப்பட்டது. லண்டனில் கையெழுத்திடப்பட்ட ஆங்கிலோ-அமெரிக்க-இத்தாலிய-யூகோசுலேவிய உடன்பாடுதான் அத் தீர்வைக் கண்டது. அதன்படி நகரம் உட்பட ட்ரீச்சின் 'அ' மண்டலம் இத்தாலியால் இணைத்துக்கொள்ளப்பட்டது; 'ஆ' மண்டலம் யூகோசுலேவியாவைச் சேர்ந்தது. அத்துடன் அதற்கு இழப்பு ஈடாக இரண்டு எல்லைப்புற நகரங்களும் கிடைத்தன.

இவ்வாருக ஆங்கிலோ-அமெரிக்கக் கைவசமிருந்ததும், தகராறுக்கு இடமானதுமான எல்லைப் பகுதிபற்றிய கேள்வி தீர்த்துவைக்கப் பட்டது.

ஜனதிபதி இனதியின் 7 ஆண்டுப் பணிக்காலம் (term of office) முடிவடைந்ததும், சட்டசபையும் (assembly) செனட்டும் (senate) ஒன்றுசேர்ந்து, 1955, ஏப்ரல் 28ஆம் நாள் இடதுசாரிக் கிருத்துவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கியோவனி குரோன்சியை ஜனதிபதியாகத் தேர்ந்தெடுத்தன. மார்ச்சு மாத இறுதியில் அமெரிக்காவுக்கு அரச விஜயம் (state visit) செய்துவிட்டுத் திரும்பிய தலைமையமைச்சர் செல்பா, பாராளுமன்றக் குழப்பத்துக்கு மத்தியில் ஜூன் 26ஆம் நாளன்று பதவியிலிருந்து நீங்கிக்கொண்டார். ஜூலை 6ஆம் தேதி கிருத்துவ ஜனநாயகக் கட்சித் தலைவர் அந்தோனியோ செக்னி தலைமையில் புதிய காட் அமைச்சவை ஒன்று அமைக்கப்பட்டது. இதற்கும் பழைய காபினட் அமைச்சவைகட்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. 1945-க்குப் பின் இது இத்தாலியின் 17ஆவது காபினட் அமைச்சவையாகும். 'ஜெனீவா ஒப்பந்தத்தினுல்' தன் நாட்டுக்கு ஏற்படும் நலன்களை நிலைநாட்டி, வெளிநாட்டு அமைச்சர் கெடாஸ்பெ மார்ட்டினே சுதந்திரக் கொள்கையைப் பின்பற்றலானர். அணு ஆயுத சக்தியை (atomic energy) ஆக்க வேலையில் பயன்படுத்தல் வேண்டும் என்று வார்சாவுடனும் மாஸ்கோவுடனும் அவர் உடன் படிக்கை செய்தார்; பெய்ப்பிங்குடன் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தொடங்கினர்; அக்டோபர் மாதம் டல்லசை வரவேற்றார்; நவம்பர் மாதம் தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகட்கு விஜயம் செய்தார்; ரோமில் நாசருக்கு விருந்தளித்தார். மாஸ்கோ விடுத்த அழைப்பை மறுதலித்துவிட்டு அவரும் செக்னியும் 1956, பெப்ரவரியில் பானுக்கு விஜயம் செய்தனர். அங்கு ஜெர்மன் ஐக்கியத்துக்கு (unification) முழு ஆதரவளித்தனர்; மற்றும், சர்வதேசச் சிக்கல் அனைத்திற்கும் அடினரின் கருத்துகளுக்கு முழு உடன்பாடு தெரிவித்தனர். பெப்ரவரி மாத இறுதியில் மார்ட்டினேவும் குரோன்சியும் வாஷிங்டனுக்கு அரச விஜயம் செய்தனர். ஜூலை மாதம் ரோமாபுரியில் சான்சலர் (Bhancellor) கொன்ராடு அடினரை அன்புடன் வரவேற்று இன்புடன் உபசரித்தார்.

1956ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நிகழ்ந்த வன்முறைச் செயல்கள் இத்தாலியின் பலத்தைக் குன்றச் செய்தன; விரும்பத் தகாத சில உள்நாட்டு விளைவுகளை அவை ஏற்படுத்தின. கெய்ரோவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் 'இடையே இத்தாலி நின்று ஒரு தீர்ப்பளிக்க' முடியாமற்போனதும், மார்ட்டினே, லண்டன், பாரிஸ், கெய்ரோ ஆகிய தலைநகரங்களுடன் கொண்டிருந்த தொடர்பை

அகற்றிக்கொண்டார். கிருத்துவ ஜனநாயகவாதிகள் 'அட்லான்டிக் கொள்கைக்குத்' தங்கள் ஆதரவை மீண்டும் தெரியப்படுத்தினர்கள்; பாராளுமன்றத்தில் 'வலது சாரிகளுடனே' (முடியாட்சிவாதிகளுடனே), அன்றி 'இடதுசாரிகளுடனே (இடதுசாரி சோஷலிஸ்ட்டுகளுடனே) கூட்டுச் சேர்வதை மீண்டும் எதிர்த்துவந்தார்கள். ஸ்டாலின் கொள்கை எதிர்ப்பு கம்யூனிஸ்ட்டுகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. மேலும், அது இரு சோசியலிஸ்ட்டு கட்சிகளையும் ஐக்கியப்படுத்தும் நோக்கத்துடன் நெனியை சராகாத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி தூண்டியது. இப் பேச்சுவார்த்தைகள் 1957-ல் முறிந்துபோயின. ஏனெனில், நெனி, நலிவுற்று நின்ற, ஆனல், பிரமாண்டமான கம்யூனிஸ்ட்டு கட்சியின் தலைவரான தொக்லியாத்தியுடன் சேர்ந்து தொடர்ந்து செயலில் ஈடுபடலானர்.

1957, மார்ச்சு மாத இறுதியில் ஜனதிபதி குரோன்சி ஐசன் ஹோவருக்கு ஒரு செய்தி எழுதினர். அதில் ஐசன்ஹோவரின் கொள்கையை வன்மையாகக் கண்டித்தும், வடஅட்லான்டிக் ஒப்பந்த அமைப்பில் இத்தாலிக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறிய பங்கை இடித்தூரைத்தும், மத்திய ஐரோப்பிய 'நடுநிலை மண்டலம்' ஒன்றை அமைக்கும்படி யோசனை கூறியும் எழுதியிருந்தார். அச் செய்தியை வெளிநாட்டு அமைச்சரவை அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப மறுத்துவிட்டது. அதனையொட்டி குரோன்சி, மார்ட்டினேவைப் பதவியிலிருத்து நீங்கிவிடுமாறு ஆணையிட்டார். காபினட் அதற்கு மறுப்புத் தெரிவித்தது. கடைசியில் இருவருக்குமிடையே நல்லுறவு ஏற்படுத்திவைக்கப்பட்டது. சராகாத், வெளிநாட்டுக் கொள்கைபற்றி எவரும் புரியாத ஓர் அரசியற் கணக்குப் போட்டார்; நென்னியுடன் வீணில் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் காபினட்டிலிருந்தே (தானகவே) நீங்கிக்கொண்டார். 1957, மே 6ஆம் நாள் தலைமையமைச்சர் செக்னி பதவியிலிருந்து விலகிக்கொண்டார். மே மாதம் 19ஆம் நாள் இடதுசாரி கிருத்துவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அடோன்சோலி தன் கட்சியினரைமட்டும் கொண்ட ஒரு காபினட்டை அமைத்தார். அவர் மேற்கத்திய நாடுகளுடன் உறவு பூண்டு, அதன்மூலம் இத்தாலிக்கு அட்லான்டிக் ஒப்பந்தத்தில் முன்னினும் செல்வாக்கு அளிக்கக்கூடிய பங்குபெற விரும்பினர். அவர் இப் புதிய அட்லான்டிக் கொள்கைக்கு முழு ஆதரவு அளித்தார். ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் இவருடைய அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட (நம்பிக்கையில்லாத்) தீர்மானத்தைத் தோற்கடித்து, காபினட்டுக்கு ஏற்பட்ட நெருக்கடியை அவர் தவிர்த்தார். ஆனல், மறுகணக்கு எடுத்துப் பார்க்கப்பட்டபோது, காபினட்டின் பெரும்பான்மைநிலை புதிய ∴பாசிஸ்ட்டு கட்சியின் வாக்குகளையே சார்ந்திருக்கும் உண்மை

தெரியவந்தது. எனவே, அவர் தலைமையமைச்சர் பதவியிலிருந்து நீங்கவேண்டியதாயிற்று. அமின்டோர் ஃபான்பானி என்பவரால் புதிய காபினட் ஒன்றை அமைக்க இயலாதுபோயிற்று. எனவே, சோலியைத் தான் பதவியிலிருந்து நீங்கும் முடிவை மாற்றிக் கொள்ளுமாறும், மே மாதம் அமைத்த காபினட் அமைச்சரவையைத் தொடர்ந்து நடத்துமாறும் குரோன்சி கேட்டுக்கொண்டார்.

ஃபிரெஞ்சுக் குடியரசில் காபினட் அமைச்சரவைகள், மின்னல் தோன்றி மறைவதுபோல, அமைக்கப்படுவதும் நீக்கப்படுவதும் வாழையடி வாழையாய் நடந்துவரும் காட்சியாகும். அதேபோல் இப் புதிய இத்தாலியக் குடியரசிலும் காபினட்டுகள் அடிக்கடி அமைக்கப்பட்டும் நீக்கப்பட்டும் வந்தன. இத் நிலையற்ற சூழ்நிலையில் நிலையாய் நின்று பொதுப்பணி (public service) புரிபவர் அதிகார வர்க்கத்தினர் (bureaucrats) எனப்படும் அரசாங்க அலுவலாளர்கள் (government servants)தாம். பல கட்சிகளைக் கொண்ட பாராளுமன்றப் பெரும்பான்மைக் குழுக்கள் தங்கள் மனம்போன போக்கில் ஒருவேளை இடதுபுறம் சாய்வதும், மற்றொரு வேளை வலதுபுறம் சரிவதுமாய் இருந்துவருகின்றன. அதன் விளைவாக, அரசியல் சக்திச் சமநிலையைப் பொறுத்தவரையிலோ, அன்றிப் பொது மக்களின் அன்றாட வாழ்விலோ நிலையான சூழ்நிலை ஏற்பட வழியில்லாமல்போய்விடுகிறது. நிலையற்ற இந்த நிலைமையைக் கண்டு கம்யூனிஸ்ட்டுகள் ஆத்திரமடைகிறார்கள்; ஆங்கிலோ-அமெரிக்கர்கள் ஏளனம் செய்கிறார்கள். இந் நிலையின்மை காலப்போக்கில் யாருமே எதிர்பாராத ஒரு நற்பேறுகக்கூட மாறிவிடலாம்! 'சுருங்கிய சரித்திரத்தையுடைய நாடே மகிழ்ச்சியான நாடு' என்ற ஒரு வழக்கு நிலவிவருகிறது. இது உண்மையாயின், இத்தாலிய நாட்டு மக்களும் நற்பேறுடையவர்கள்தாம் என்று துணிந்து கூறலாம். ஏனெனில், அந் நாட்டு அரசியல்வாதிகள் வெளியில் பார்க்கையில் 'கொள்கைகளுக்காக' மும்முரமாகப் போராடுவதுபோலத் தோன்றினாலும், உண்மையில் அவர்கள் தத்தம் வாக்காளர் தொகுதி உறுப்பினர்க்குச் (constituents) சிறிதும் நன்மை பயக்காத பாராளுமன்ற, அமைச்சரவைக் சூழ்ச்சிச் செயல்களில்தான் ஈடுபட்டுள்ளார்கள்.

1940-லிருந்து 50 வரையிலும், 1950-லிருந்து 60 வரையிலும் இத்தாலியின் நிலைமை இதுதான். மாறிமாறி வந்த ஜனதிபதிகளும், தலைமையமைச்சர்களும், பாராளுமன்றக் கட்சிகளும் பொது மக்கள் கவனத்தை மிகவும் ஈர்த்தன. ஆனால், அவர்களால் பொது மக்கள் வாழ்க்கை வளமாக மாறிவிடவில்லை. எனினும், வறுமையிலும் அறியாமையிலும் மூழ்கிக்கிடந்த தென்னாட்டில், அவர்கள் கொண்டு வந்த நிலச்சீர்திருத்தக் கல்வித் திட்டமும், ஏற்கெனவே செல்வம் கொழித்த வடநாட்டை மின்சார மயமாக்கவும் (electrification),

தொழில்மயமாக்கவும் அவர்கள் மேற்கொண்ட திட்டங்களும் பயனளிக்காமற் போகவில்லை. அவற்றுல் நாட்டின் பொருளாதாரமும் (economy) சமுதாயமும் (society) நன்மையடையாமற் போய்விடவில்லை. தொடர்ந்து வளஞ் சிறந்த வாழ்வைப் பெறும் நம்பிக்கையளிக்கப்பட்டால், வியாபாரிகளும், நிலச் சொந்தக்காரர்களும், ஏராளமான இடைநிலை வகுப்பினரும் மிக இக்கட்டான கட்டத்தில்கூட அழிவையும் கேட்டையும் பயக்கக்கூடிய ஃபாசிஸத்தை மீண்டும் ஒருபோதும் பின்பற்றுர் என்பதுபோல் தோன்றினர். இதற்குச் சரித்திர ஆதாரம் உண்டு. பத்தாண்டுகள் கெடுபிடிப் போர் நிகழ்ந்தும், பாட்டாளிகளும் உழவர்களும் வேலையின்றித் தவித்தபோதுங்கூட, வாக்காளர் தொகுதியில் மூன்றில் ஒரு பகுதியினரே கம்யூனிசத்தையும் இடதுசாரி சோஷலிஸ்டுகளையும் ஆதரித்தனர். அதோடல்லாமல், 'இப் புரட்சியாளர்கள்' அவர்கள் பங்கிற்கு மற்றெரு புரட்சியை ஏற்படுத்துவார்கள் என்று தோன்றவில்லை. ஏனெனில், அவர்களுடைய தலைவர்கள் இப்போது கட்சி அதிகாரிகளாகிவிட்டனர். அன்றியும், புதிய சமூக, அரசியற் புரட்சி செய்வதால் லாபத்திற்குப் பதிலாக நஷ்டமே கிடைப்பது தெளிவாகத் தோன்றிற்று. எனவே, உள்நாட்டில் அமைதி நெடுநாட்களுக்கு நிலவும்போல் தோன்றியது.

வெளியுலக அமைதியைக் காக்கும் சக்தி இத்தாலியிடம் இல்லை. 1958-ல் அதன் ஜனத்தொகை 50,000,000 ஆக இருந்தது. எனினும், மேற்கு ஐரோப்பா முழுதுமே உலக அரசியலில் நலிவுற்று நின்றமையாலும், அமெரிக்காவும் ரஷ்யாவும் வல்லரசுகளாகத் திடீரென்று மாறிவிட்டதாலும், சீனவும் இந்தியாவும் வருங்காலத்தில் அப்படி ஆகிவிடும்போல் காணப்பட்டதாலும், இத்தாலி ஒரு பெரிய வல்லரசாக விளங்க வாய்ப்பு இல்லாமற்போயிற்று. இச் சுவையற்ற அனுபவத்திற்குப்பின், ரோம், இனிமேல் பூசலுள்ள இரு கட்சிகளுக்கிடையே நின்று 'தீர்ப்பளிக்குமே' தவிர, உலக அரசியலில், அதிகார (வலிமை) விளையாட்டு அரங்கில் (வல்லரசுகட்குச்) சரிநிகராய் நின்று அதில் பெரும் பங்கு கொள்ளாது என்று துணிந்து கூறலாம். பிரமாண்டமான இரண்டு கூட்டங்களும் முழுதும் சிதைந்தாலொழிய, அல்லது அவை நன்ருக எண்ணிப்பாராமல் மூன்ரும் உலகப் பெரும் போரைத் தோற்றுவித்தாலன்றி, இதைத் தவிர அது வேறு எந்த நடவடிக்கையும் செய்வதற்கு உகந்ததாய் இல்லை. இவ்விரண்டில் முதலது ஏற்படின், மாக்கியவெல்லி கண்ட கனவு நனவாகும். இத்தாலி மீண்டும் சுதந்திரப் பாதையில் செல்லும். அஃதன்றி, இரண்டாவது நிலைமை ஏற்பட்டால், இத்தாலி, புரட்சிக்கும் உள்நாட்டுப் போருக்கும் (civil war) இலக்காகிப் பேரிழப்புக்கு ஆளாக நேரிடும். அவனியில் அமைதி குடிகொண்டிருக்கும்வரை 1914-க்கு முன் இத்தாலிய நாடு எவ்விதம் பெயர் எடுத்ததோ, அதேபோல்

தழைத்து ஓங்கி நிற்குமேயன்றித் தலைகுனியாது என்பது குன்றிடையிட்ட விளக்காகும்.

4. செர்மனி: உளநோயுற்ற காலம்முதல் துண்டாடப்பட்ட காலம்வரை

'இக் காட்டுமிராண்டித்தனத்துக்கு முன்னிலையில் சோர்வுக்கும் குழப்பமான தோல்விக்கும் ஆளாகியிருக்கும் பண்டைய பண்பாட்டுக் கூட்டத்தைப் பார்க்கையில் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது. திகைப்புற்று வேட்கத்தால் தலைகுனிந்து நிற்கும் இக் கூட்டம் ஒவ்வோர் இடமாகப் (பகைவனுக்குக்) கைவிட்டுவருகிறது. அதை நோக்குமிடத்து, உண்மையில் அது இவ்வுலகைப் புரிந்து கொள்ளவில்லைபோலவே தோன்றுகிறது. பகைவனின் மனப்போக்கு, நடத்தையளவுக்கு அதுவும் தன்னைக் கீழ்த் தரத்தில் ஆக்கிக்கொண்டுவருகிறது; அவன் பிதற்றுவது போல் அதுவும் பிதற்றுகிறது; அவனுடைய இனத்தார்க்கு ஏற்ருற்போல், அவனுடைய புத்தியற்ற, கீழ்த்தரமான, முறையற்ற விளம்பரத்துக்கு ஏற்ருற்போல் அதுவும் நடந்து வருகிறது. சுருங்கச் சொல்லின், அது தான் செய்வது என்னவென்றே யோசித்துப் பார்க்கவில்லை. ஒருவேளை அது தன்னையே மறந்துவிட்டதுபோலும்.'

—தாமஸ் மான், 1938.

'பால்சிவிசம்' எனப்படும் பிரச்சினை மீண்டும் தன் கடுமையான வடிவத்தில் தலைதூக்கிவிட்டது. நாகரிக மனித சமுதாயம், இன்று, மேலை நாகரிகத்தைக் (civilisation) கீழை ஸ்டெப்பி புல்வெளியில் பெருக்கெடுத் தோடும் (கம்யூனிசு) வெள்ளத்திலிருந்து காப்பாற்ற முடியுமோ முடியாதோ என்ற துக்கத்தில் ஆழ்ந்துள்ளது.'
—டாக்டர் பால் ஜோசப் கோபில்சு, 'ரெய்ச்' என்னும் நூலில் 'பெருந் துணிகரச் செயல்' (மே, 1943) என்ற கட்டுரையில் இவ்வாறு வரைகிறார்.

1945ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள், ரீம்ஸ் நகரில், முற்பகல் 2-41 மணிக்கு செர்மன் தலைமைப் படையின் (High Command) சார்பில் ஜெனரல் ஜோதில் ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். அது செர்மனியின் நிபந்தனையற்ற சரணுக்கு (unconditional surrender) வழிவகுத்தது.) மே 8ஆம் நாள் பெர்லினில் அதேமாதிரி வேறேர் ஆவணத்தில் (document) இராணுவ, கடற்படைகளின் சார்பில் முறையே கீட்டலும் ஃப்ரீட்பர்க்கும் வாகைசூடியோர் சார்பில் லுப்வெஃப், ஷுக்கோ, டெட்டர், ஸ்பாட்சு ஆகியோரும் கையொப்பமிட்டனர். அதுவரை சண்டைசெய்துகொண்டிருந்த செர்மனியின் இறுதிப் படையும் ஒரு வாரத்துக்குள் பிரேக்கிற்கு மேற்கே சிதற அடிக்கப்பட்டது. அத்துடன் ஆயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கவேண்டிய செர்மன்

வல்லாட்சியாளரின்—ஹிட்லரின் (Der Fuhrer) ஆட்சியும் முற்றுப் பெற்றுவிட்டது எனலாம். பெர்லினில் தலைமை அமைச்சருடைய அலுவலகத்துக்குக் (Chancellery) கீழே அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் ஹிட்லரை விட்டுவிட்டு, ஹிம்லர் தன்னுடைய வடக்கிலுள்ள முக்கியக் காரியாலயத்துக்குச் (Head-quarters) சென்றார். அங்கிருந்துகொண்டு ஒரு சுவீடிஷ் தரகர் வாயிலாய் ரஷ்யாவுடன் போரிடுவதைத் தொடர்ந்துகொண்டே, தான் மேலைவல்லரசுகட்குச் சரணடையத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். ஆனால், அக் கோரிக்கையை மேலைவல்லரசுகள் நிராகரித்துவிட்டன. அதன்பின்னர் அவர் தப்பித்துப் போக முயன்றார். இறுதியில் எதிரிகள் கைக்கு அகப்படாமல் விஷத்தைக் குடித்துத் தன் உயிரையே மாய்த்துக் கொண்டார். மார்ட்டின் போர்மேன் சென்ற இடம் தெரியாமல் மறைந்துவிட்டார். ஹிட்லருடன் தங்கியிருந்த கோபெல்சு தற் கொலை செய்துகொண்டார். கூடாரத்தைவிட்டு வெளியேற மறுத்த ஹிட்லர், அவரது வைப்பாட்டி என்று சொல்லப்படும் ஈவா பிரவுனுக்கே ஏப்ரல் 29ஆம் தேதி மணம் செய்யப்பட்டார். அத் திருமண வைபவத்திற்கு வெடிக்கும் சோவியத் குண்டுகள் சங்கீதம் பாடின. ஏப்ரல் 30ஆம் தேதி அவர் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு தற்கொலை புரிந்துகொண்டார். அவரது மனைவியும் விஷம் உண்டு தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். இரு பிரேதங் களும் முற்றத்தில் கொளுத்தப்பட்டன. அவர்கள் இருவரும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தனர்.

ஹிட்லரின் பூதவுடல் இவ்வுலகைவிட்டு மறைந்ததேயன்றி அவரது பெயர் இன்னும் மறையவில்லை. தேசியக் காட்டுமிராண்டித் தனத்திற்காகவும் மூர்க்கத்தனத்திற்காகவுமே உண்டாகும் ஆர்வம் சிதறிப்போவதால் மனித உள்ளம் எவ்வளவு தூரம் இழிவுக்கு உள்ளாகும் என்பதை எச்சரிக்கும் அறிகுறியாக அவர் விளங்கி வருகிறார். அவர் வருங்காலச் சின்னமாயும் விளங்கிவருகிறார் என்றால் மிகையாகாது. அவர், 'பரல்சிவிசமும்' 'செல்வக் குடியாட்சிகளும்' (plutodemocracies) வருங்காலத்தில் ஒன்றோடொன்று பொருதும் என்று முன்னறிவிப்புச் செய்துள்ளார். அதன்பிரகாரம் இவ்விரு கொள்கைகளும் ஒன்றோடொன்று முட்டி மோதிவிட்டன. அதனால் மூன்றாம் செர்மன் பேரரசை—ரெய்ச்சைக் (Reich)காப்பாற்றமுடியாமற் போனாலும், நான்காம் ரெய்ச்சை நிறுவுவதற்காவது அது பெரிதும் உதவியாய் இருக்கும்; அன்றியும், அது பல நாடுகளில் ஃபாசிஸம் தலைதூக்கத் துணைபுரியும்; சதி, போர்த்திட்டம் ஆகியவற்றிற்குப் புதிய வாய்ப்புகள் அளிக்கும்; மேலும், பீதியாலும் வெறுப்பாலும் உந்தப்பட்டுச் செய்யப்படும் படுகொலை, பேரழிவு ஆகியவற்றின் களியாட்ட விழாவிற்கும் அது வகைசெய்யும். செர்மானிய எழுச்சி, பொதுவாக நாடுகளின் (வாழ்க்கை) வரலாற்றை அவைகளின்

தலைமைச் சின்னங்களிலிருந்தே அறிந்துகொள்ளலாம். செர்மன் தேசத்து வரலாறும் இதற்கு விதிவிலக்கன்று. அவ் வரலாறு ஒரு மனிதச் சின்னத்தில் தொடங்கி, மூன்று அரசவமிசத்தினரால் (dynasties) தொடர்பாகத் தொடங்கப்பட்டு இறுதியில் மனிதச் சின்னத்துடனேயே முற்றுப்பெற்றிருக்கிறது. விளக்கமாகக் கூறின், ஹெர்மன் என்னும் தலைவனுடன் தொடங்கி ஹிட்லருடன் அவ் வரலாறு முற்றுப்பெற்றது. இவர்களுக்கிடையில் ஹோஹென் ஸ்டாபென்ஸ், ஹாப்ஸ்பர்க்கு, ஹோஹென்சோலன்ஸ் என்ற மூன்று வெவ்வேறு அரசவமிசத்தார் ஆண்டுவந்தனர். இத் தலைவர்களின் முதல்வனே ரோமானியர், ஆர்மினிஸ் என்றழைத்து வந்தனர். அவன் அஞ்ஞானத்தில் மூழ்கிக்கிடந்த செரூசி கூட்டத்தினரின் தலைவன் ஆவான். அவனுடைய கூட்டத்தினர் டியூட்டோபர்கர் வால்டு (கி.பி. 9ஆம் நூற்றாண்டில்) என்னும் போர்க்களத்தில் வாரசின் சேனைகளைச் சிதற அடித்தனர். அதன் பின்னர் ரோமப் பேரரசு எல்ப் நதியோரம் தனது எல்லையை அமைக்கும் திட்டத்தையே கைவிட்டுவிட்டது. ஹெர்மனுக்கு எட்டு நூற்றாண்டுகட்குப்பின் (பேரரசன்) சாலமன் ஒரு சாம்ராச்சியத்தை (empire) நிறுவினர். அதை (மேற்கூறப்பட்ட) அரசவமிசத்தினர் நிறுவிய 'முதல்' அல்லது 'பரிசுத்த ரோமப்' பேரரசு (Reich) என்று கூறலாம். அப்போதுதான் இச் செர்மன் கூட்டத்தினர் தங்கள் முன்னோர்களால் அழிக்கப்பட்ட ரோமப் பேரரசைப் போற்றுவதற்கும், அதுபோல் ஒன்று நிறுவுவதற்கும் கற்றுக் கொண்டார்கள். ஹோஹென்ஸ்டாபன், ஹாப்ஸ்பர்க் வமிசப் பேரரசர்கள் எட்டு நூற்றாண்டுகள் ஆண்டுவந்தார்கள். அவர்கள் எழுப்பிய பேரரசு இடைக்கால அகில கத்தோலிக்க கிருத்துவ உலகாகவும், ஃபிரெஞ்சுக்காரர், செர்மனியர், செக்கோசுலேவேக்கியர், போலாந்தியர், இத்தாலியர், இன்னும் அனேக இன மக்களுடைய பண்பாட்டின் பிறந்தகமாயும் விளங்கிற்று. ஒரு புதிய சமயமாக இக் காலத்தில் போற்றப்படும் செர்மனியில் (modern cult) தேசிய அரசு (nation-state) எவ்வளவு காலம் நீடித்திருந்ததோ, அதுவரை ஹோஹென்சோலன் அரசவமிசத்தினரும் அங்கே ஆட்சிபுரிந்து வந்தனர் என்றல் மிகையாகாது. விளங்கக் கூறின், அவர்களுடைய ஆட்சி பிராண்டன்பர்கில் நிறுவப்பட்ட மார்க் ஆட்சிமுதல் பிரஷ்ய அரசுமூலம் 1871—1918 வரை நீடித்திருந்த செர்மன் பேரரசு (இரண்டாம் ரெய்ச்) வரை நீடித்திருந்தது. ஆஸ்திரியாவில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து பின்னர் ஐரோப்பாவின் கொடுங் கோலனாய் விளங்கிய ஹிட்லர், நாட்டுணர்ச்சி, கிருத்துவ மதம் ஆகியவற்றின் அந்திப் பொழுதாயும் வீழ்ச்சியாயும் விளங்கினர். அவர் காலத்தில்தான் செர்மனியர் கீழ்த்தரமான பேரதிகார (imperial power) வழிபாட்டில் ஈடுபட்டனர்; அக் காலத்தில்தான்

அவர்கள் காட்டுமிராண்டித்தனத்திலும், இறையிலாக் கொள்கையிலும் (paganism) மூழ்கினர்; அக் காலத்தில்தான் அவர்கள் 'மூன்றும் பேரரசின்' வலிமையின்மூலம் உலக அரசை (world state) நிறுவுதல் வேண்டுமென்று கனவுகண்டனர்; இறுதியில் தங்கள் அரசியல், சமூகத் தொடர்புகளைப் பொறுத்தவரை உருவமற்ற, வன்மையான இருள் சூழ்ந்த நிலை ஒன்றுக்குச் சரணடைந்தனர்.

முசோலினியைப்போன்று ஹிட்லரும் ஒரு நோயுற்ற நாகரிகத்தின் முன்னறிகுறியாகவே விளங்கினரேயன்றிப் பைத்தியம் பிடித்த திறமைசாலியாக விளங்கவில்லை. அவரது வாழ்க்கை பாதுகாப்பற்ற தாழ்ந்த இனத்தாரின் (Kleinbirgertum) கவலைகளை அப்படியே பிரதிபலித்தது. அவற்றைக் கண்டு அச்சம் அடைந்தார் ஹிட்லர். தங்களை எப்படிப் பாதுகாத்துக்கொள்வது என்று பீதியுற்றுக் கிடந்த நிலச்சுவான்தார்களும், பணக்காரர்களும் இதுதான் தக்க சமயம் என்று அவரது உதவியை நாடினர். தங்கள் குறிக்கோள்களை எய்துவான் வேண்டி, அவர்கள் நாகரிக மனிதனை மிருகங்களாகவும் பேய்களாகவும் மாற்றக்கூடிய கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயங்கவில்லை. ஸ்டாலினைப்போன்று ஹிட்லரும் ஒரு சக்கிலியனின் மகன். அவரது தந்தை மரியா ஷிக்கில்குரூபர் என்னும் மாதுக்கு முறையற்ற வழியில் (illegitimate) பிறந்தவர். தனக்கு 40 வயதான பின்னரே அவர் தன் பெயரை ஹிட்லர் என்று மாற்றி வைத்துக்கொண்டார். அவருக்கு ஐந்து வயது நடக்கையில்தான் விவசாயம் செய்துவந்த அவரது ஆஸ்திரியத் தந்தை அவரது தாயை மணஞ் செய்தார். அலாய்ஸ் ஹிட்லர் சால்ஸ்பர்கிற்கு வடகிழக்கேயுள்ள பிரௌனே அம் இன் என்னுமிடத்திலிருந்த ஆஸ்திரிய சுங்கவரி (customs) அலுவலகத்தில் பணி (service) புரிந்துவந்தார். அங்குதான் அவரது மூன்றும் மனைவிக்கு, 1889ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் நாளன்று ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்குப் பெற்றோர்கள் அடால்ஃப் என்று பெயரிட்டனர். இப் பையனும் அக் காலக் கீழ்த்தர இடைநிலை வகுப்புக் (lower middle class) குடும்பத்தைச் சேர்ந்த எண்ணற்ற சிறுவர்களைப்போன்று தன் தந்தையை வெறுத்துவந்தான். தாய் பேச்சைக் கேளாது அலைந்தான். அவன் தன் 14ஆவது வயதில் தந்தையையும் 17ஆவது வயதில் தாயையும் இழந்தான். பெற்றோர்கள் தம் மகனைத் தந்தையைப்போன்று ஓர் அரசாங்க ஊழியனாக ஆக்க விரும்பினர். ஆனால், அப் பையனுக்கோ ஒரு கலைஞன் (artist) ஆக விருப்பம் இருந்தது. வியன்னாவில் அவன் கலை கற்க விரும்பினான். ஆனால், வறுமை அவனது விருப்பத்தின் குறுக்கே நிற்கவே, இறுதியில் அவன் ஓர் உழைப்பாளியானான். சோசியலிஸ்ட்டுகள், யூதர்கள் (Jews), ஸ்லாவுகள் (Slavs) ஆகியோரை அவன் வெறுக்க ஆரம்பித்தான். இருபது வயதானபின் மியூனிச்சில் தங்கிக்கொண்டு அஞ்சல் அட்டை

யில் (post-card) சித்திரம் தீட்டித் தன் வாழ்நாளைக் கடுமையான வறுமையில் கழித்துவந்தான். அப்போதிலிருந்தே தான் ஒரு தலைவனாகவேண்டும் என்ற கனவு கண்டுவந்தான். 1914-ல் போர் மூளவும், அவனுக்கு ஒரே மகிழ்ச்சி ஏற்பட்டது. அடுத்தாற்போல் அவன் படைத்துறையில் சிறு அலுவலனாக-கார்ப்போரலாக (Corporal) ஆவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அடுத்து, ஒரு பரிசாக இரும்புச் சிலுவையையும் பெற்றான். 1918-ல் நச்சு வாயுவும் (gas) கிடைத்தது. தோல்வி அவனைக் கடுந்துயரத்தில் ஆழ்த்திற்று. படையுடை அணிந்தவண்ணம் மியூனிச் திரும்பினான். அங்கு அரசியல் இயக்கக்காரர்களை ஊக்குவித்தான். மனக்குறையுடைய போர்வீரர் களுக்கு ஊக்கமளிக்கும்வண்ணம் தங்களுடைய பேச்சுத் திறமை யால் அவர்களைப் பலர் மயக்கி வந்தார்கள். 1919 ஆம் ஆண்டு, ஜூன் மாதம், மாலை நேரம் ஹிட்லர் 7ஆம் எண்ணுள்ள உறுப்பினராக (member) 'செர்மன் தொழிற் கட்சியில்' சேர்ந்தார். அது ஒரு மிகச் சிறிய கட்சியாகும். ஓராண்டு கழிந்து அவர் தன் கட்சியின் பெயரில் யூதர்கள், கம்யூனிஸ்ட்டுகள், முதலாளிகள் ஆகியோரைத் தாக்கிப் பேச முற்பட்டார். அப்போது அக் கட்சி தேசீய சோசியலிஸ்ட்டு செர்மன் தொழிற் கட்சி (National Socialist German Labour Party-NSDAP) என்று அழைக்கப்பட்டுவந்தது. அது யூதர் எதிர்ப்பு (Anti-Semitism), அகில செர்மானியத்துவம், போலி சோசியலிசம் (Pseudosocialism), இராணுவத்துவம் ஆகிய கொள்கைகட்கு அரசியல் மேடையாக (platform) விளங்கலாயிற்று. அக் கட்சி 1920, பிப்ரவரி 24ஆம் நாள் ஹோப்பிரௌகாசில் பழிக்குப்பழி வாங்கும் செயலில் இறங்கிற்று. அதில் இதர போக்கிரிகளான கோரிங், ஹெஸ், ரோஹம், ரோசன்பர்க் ஆகியோரும் சேர்ந்துகொண்டனர். 1923-ல் பிரெஞ்சுக்காரர்கள் ரூரைக் (Ruhr) கைப்பற்றினர். அத்துடன் செர்மன் நாணயமாகிய மார்க்கின் (marks) மதிப்பும் குறையலாயிற்று. அவ்வமயம் அக் கட்சியைச் சேர்ந்தவர் 70,000 பேர் இருந்தனர். செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்கள் கட்சிக்கு வேண்டிய பொருளுதவி செய்துவந்தனர்.

இப் பயங்கரவாதிகள் 1923, நவம்பர் 8ஆம் நாள் தங்கள் வல்லமையாலும் மூர்க்கத்தனத்தாலும் அரசாங்கத்தைக் கவிழ்க்க முற்பட்டனர். ஆனால், போலிசுப்படை இம் மூர்க்கர்களைச் சுட்டு வீழ்த் திற்று; கட்சியை அடக்கி ஒடுக்கிற்று. நாட்டுத் துரோகம் (treason) செய்த குற்றத்திற்காக ஹிட்லர் விசாரணை (trial) செய்யப்பட்டார். அப்போது அவர் ஆற்றிய சொற்பொழிவில், 'செர்மனியின் எதிர் காலமும் மார்க்சீய ஒழிப்பும் ஒன்று' என்றும், 'சர்வாதிகாரியாக வர இருப்பவனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது' என்றும், 'நான் மூன்றும் செர்மன் பேரரசை எழுப்ப விரும்புபவன்' என்றும் திறம்பட எடுத்துரைத்தார். (அவர் ஓர் அரைப் பைத்தியம் ஆனலும், கம்யூ

னிசத்தின் பகைவர் என்பதை மறந்துவிடலாகாது). அவரது சொல்லும் செயலும் அவரை 'நாட்டுப்பற்றுடையவர்' என்று நிரூபித்ததால், அவருக்கு ஐந்தாண்டுச் சிறைத் தண்டனையே கிடைத்தது. சிறையிலிருந்துகொண்டே அவர் 'என் போராட்டம்' (Mein Kampt) என்னும் ஓர் நூலை எழுதத் தொடங்கினர். (1924-ல் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.) அவர் 'கட்சியை' மீண்டும் வலுப்படுத்த முயற்சி செய்தார். ஆனால், அவரது முயற்சிகளனைத்தும் களர்நிலத்து விதைத்த விதைகளாயின. (1920-லிருந்து 30-க்குள் செர்மனி ஒரு வளஞ்சிறந்த நாடாக மாறவும், ஹிட்லரும் அவரது கட்சியினரும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தனர்.)

பேரழிவு வாய்ந்த கடுந்துயருக்குள்ளான செர்மனி

மேற்கு ஐரோப்பாவிலேயே சனநெருக்கமும், வளப்பமும், நாகரிகமும் வாய்ந்த ஒரு சமுதாயம் எங்ஙனம் தங்களைப் பைத்தியக்கார நாசிகள் (Nazi) ஆள இடங்கொடுத்தது என்பது ஒரு பெருங் கதையாகும். சமுதாயம் தான் இழந்த செல்வத்தையும், ஐக்கியத்தையும் (unitiy), பெருமையையும் மீட்பதற்காக வீணில் மேற்கொண்ட அரும்பெரும் பாடுகளைப்பற்றிக் கூறுவது இக் கதை. (1870ஆம் ஆண்டுமுதல் 1914ஆம் ஆண்டுவரை நீடித்திருந்த செர்மானியப் பேரரசு மனித இனத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கிவந்தது.) அதைக் கண்டு பொறுமைப்படாதார் எவருமே இல்லை. அமெரிக்காவிற்கு அடுத்தாற்போல் அது அவனியிலேயே விஞ்ஞானம் (science), கைத்தொழில் (industry) ஆகியவற்றிற்கு ஒரு சிறந்த அரணாய் விளங்கிற்று. எண்டிசையும் அதன் புகழ் ஓங்கியது. ஆனால், தீவினைப் பயனாக அதிகாரபீடத்தில் அமர்ந்திருந்தோரின் பேராசைக்கும் பேரார்வத்திற்கும் அது இலக்காகி, தொழில் நுணுக்க வர்த்தகச் சக்திகள் அவர்கள் சுயநலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் பிரயோகிக்கப்படலாயின. நாட்டுணர்ச்சி, முதலாளித்துவம், அதிகார அரசியல் ஆகியவைகளே இவர்களை இச் செயலில் ஈடுபடும்படி தூண்டிவந்தன. பொதுமக்கள் செல்வத்தையும் நலத்தையும் பெருக்குவான்வேண்டி வகுக்கப்பட்ட சமூகத் திட்டங்கள் பல பிரச்சினைகளை எழுப்பின. ஆனால், இராணுவத்துவம், அரசியல் சூழ்ச்சி, உலகைக் கட்டியாளும் கனவு ஆகியவற்றில் நம்பிக்கை பூண்டிருந்த தொழிலதிபர்களும், செல்வந்தர்களும் இப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்க முன்வந்தாரில்லை. அவர்கள்மட்டும் பிஸ்மார்க்கின் முன்னறிவிப்பை மனத்திற் கொண்டு செயலில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவ்வளவுதான் பிற்போக்கானவையாகவும் விபரீதமானவையாகவும் இருந்தபோதிலும், இறுதியில் அது பேரழிவைப் பெய்திருக்காது என்று துணிந்து கூறலாம். செர்மன் ஐக்கியத்தின் இச் சிற்பி—பிஸ்மார்க்,

மேலை அரசுமுறையில் செர்மனியின் இடத்தை நன்கு அறிந்து உணர்ந்திருந்தார். ஐரோப்பாக் கண்டத்தில் செர்மன் பேரரசு எவ்வளவுதான் வலிவுடன் திகழ்ந்தபோதிலும், அது பிரிட்டனுடனே, அன்றி ரஷ்யாவுடனே, அன்றி அமெரிக்காவுடனே போரிடுவதற்குக் கனவில்கூட நினைக்கக்கூடாது என்று எச்சரித்தார். ஐரோப்பாவில் செர்மனி பாதுகாப்புடன விளங்குவதற்கு செர்மன்-ரஷ்யக் கூட்டுறவு இன்றியமையாதது என்று அவர் அறிவுறுத்தினார்.

ஆனால், இறுதிப் பேரரசர் கெய்சரும், அவரது அமைச்சர்களும் இப் பொன்னான அறிவுரையைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. மாறுக, அவர்கள் ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் போரிட்டுப் படுதோல்வி அடைந்தார்கள். இப் படுதோல்வியினின்றும் ஒரு குடியரசு தோன்றியது. வைமாரில் (Weimar) ஒரு புதிய அரசியலமைப்பு வரையப்பட்டது. வெளிநாட்டு அலுவல்களைப் பொறுத்தவரை, வைமார் செர்மனியும் இதர நாடுகளும் எலியும் பூனையுமாய் நடந்துகொண்டன. இக் குடியரசு 15 ஆண்டுகளே (1918-33) நிலைத்திருந்தது. எனினும், அதற்குள் அதனுல் மக்களைத் தாராள மனப்போக்குடையவர்களாகவும், பிறர் கருத்திற்குச் செவி சாய்க்கும் தன்மையுடையவர்களாகவும் மாற்ற இயலவில்லை. பிரஷ்ய நிலமானியப் பிரபுக்களும் ரூர் பள்ளத்தாக்கு, ரைன்லாந்தைச் சேர்ந்த பெருந்தொழில் அதிபர்களுமே அதிகாரபீடத்தில் அமர்ந்திருந்தனர். சோசியலிஸ்ட்டு ஜனநாயக வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆரம்பத்தில் எவ்வளவோ முயன்றனர். முயற்சிகளனைத்தும் பயனில்லாதுபோயின. அவர்கள் 1918-20-ல் கம்யூனிஸ்ட்டுப் புரட்சி ஏற்படுவதை அடியோடு தடுத்தனர். எனினும், பின்னர் அதிகாரம் பழமைவாதிகள் கையிலும், முன்னர் பதவியிலிருந்தவர்களால் பயனடைந்த மதகுருக்கள் கையிலும் மாறிற்று. வைமார் செர்மானியத் தலைவர்கள் இறுதியில் பிஸ்மார்க்கின் அறிவுரையை உணரத் தொடங்கினர். அதன் விளைவாக 1922-ல் ஜினேவாவிற்கு அருகில் ராபாலோவில் மாஸ்கோவுடன் ஓர் அரசியல், பொருளாதார உடன்படிக்கை செய்தார்கள். அவ்வுடன் படிக்கை ஏற்படாவிடின், இச் சர்வதேச மாநாடு தோல்வியுற்றிருக்கும். அதில் வரல்ட்டர் ராதினேவும் ஜியார்ஜ் சிக்கெரினும் கையெழுத்திட்டனர்.[3] அவ்வுடன்பாடு இரு வல்லரசுகளுக்கும் இடையில்

[3] ஜினேவா மாநாடு ஒரு பொருளாதார, நிதி மாநாடாகும். 'மத்திய இழக்கு ஐரோப்பாவின பொருளாதாரப் புனரமைப்பிற்காக அது கூட்டப்பட்டது. அதில் யு. எஸ். எஸ். ஆர். கலந்துகொண்டது. ஆனல், யு. எஸ். ஏ. கலந்துகொள்ள மறுத்துவிட்டது. அம்மாநாட்டில், வெவ்வேறு பொருளாதார முறைகள் நிலவ உறுப்பினர் அனைவரும் ஒப்புக்கொண்டபோதிலும, செர்மனியின் போர் நட்ட சுடு பற்றியோ, அன்றி நேசநாடுகளும் சோவியத் யூனியனும் ஒன்றுக்கொன்று கொடுக்க வேண்டிய கடனைப்பற்றியோ எவ்விதமான முடிவும ஏறபடவில்லை. நேசநாடுகள் சார்பில் லியட் ஜார்ஜ், பறிமுதல் (confiscates) செய்யப்பட்ட சொத்துகள் (properties), மறுதலிக்கப்பட்ட கடன்கள் (debts) ஆகியவற்றிற்காக

நிலவிய தூதியல் தனிமையைப் போக்கிற்று. மாஸ்கோவில் எவ்வித மான ஆட்சி நிலவினாலும், செர்மன்-ரஷ்ய உடன்பாடின்றி செர்மானியப் பேரரசை மேலையுலகிற்கு எதிராக ஒருபோதும் மீட்க முடியாது என்று செர்மானியத் தலைவர்கள் திண்ணமாய் நம்பினர்.

இந்த செர்மன்-ரஷ்ய உடன்படிக்கையால் விளையவிருந்த நலன்கள் என்னவென்று எவராலும் கூறவியலாது. ஏனெனில், 1929-ல் மேலை நாடுகளனைத்திலும் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தத்தின் (depression) விளைவாக செர்மனியும் பொருளாதார அழிவுக்கு இரையாயிற்று. இப் பேரிழப்பால் 6,000,000

13,000,000,000 டாலர்கள் கோரினர். 1918-21-ல் ஏற்பட்ட 'சட்ட விரோதமான, நேசநாடுகளுடைய தலையீட்டால் ஏற்பட்ட சேதத்திற்காக சிசென்ரி 60,000,000,000 டாலர்கள் நஷ்டஈடு கோரினர். இறுதியில் அவர் நேசநாடுகள் புனரமைப்பிற்காக, கணிசமான புதுக்கடன் வழங்க முன்வந்தால் அவைகள் போடும் நிபந்தனையைத் தான் ஏற்கத் தயார் என்றும், தான் கோரும் மொத்த நஷ்ட ஈட்டைப் பெரிதும் குறைத்துவிடத் தயார் என்றும் கூறினர். இந்த இக்கட்டான நிலைக்கு (deadlock) நடுவே ராதினேவும் சிசெரினும் 1922, எப்ரல் 16ஆம் நாள் ரபாலோ உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்கள். அதன் பிரகாரம் செர்மனியும் ரஷ்யாவும் ஒன்றுக்கொன்று கொடுக்கவேண்டியிருந்த கடன்களைத் தள்ளுபடி செய்துகொண்டன; இரு நாடுகளும் தூதியல், வர்த்தகத் (consular) தொடர்புகளை ஏற்படுத்த முன்வந்தன. மேலும், ஒன்றுக்கொன்று நல்ல சலுகையளித்து வர்த்தகத்தை வளர்க்கவும், இராணுவக் கூட்டுச் செய்யவும் இசைந்து கொண்டன. இதுபற்றிய முழு விவரத்திற்கு லூயி ஃபிஷர் எழுதியிருக்கும் 'உலக நடவடிக்கைகளில் சோவியத்துகள்' என்ற நூலைப் (வால்யூம்-1, பக். 318-354), பார்க்கவும்.

பேர் வேலையின்றித் தவித்தனர்; அவர்கள் அனைவருக்கும் நொடிவு (bankruptcy) ஏற்பட்டு, வறுமையால் வாடினர். வேலையின்றி வீணில் அலைந்து திரிந்த பாட்டாளிகள் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் உறுப்பினராயினர். நம்பிக்கையிழந்து நின்ற நகர்ப்புற மக்களும் விவசாயிகளும் தேசீய சோசியலிஸ்டு செர்மன் தொழிற்கட்சியைச் சேர்ந்தனர்; அதாவது, நாசிகளுடன் சேர்ந்து கொண்டனர். இந் நாசிகளின் பைத்தியக்காரத் தலைவர் (ஹிட்லர்) தன்னைப் பின்பற்றுவோர்க்கு 'வைமார் யூதக் குடியரசை' வீழ்த்திவிட்டு, அதன்மூலம் செல்வமும், பெருமையும், அதிகாரமும் அள்ளித் தருவதாய் ஆசைகாட்டினர். மார்க்சீயம், சோசியலிசம், முதலாளித்துவம், மற்றும் 'தேசீய சோசியலிசம்' ஆகியவற்றை எதிர்க்கக்கூடிய புகழ்வாய்ந்த 'மூன்றும் செர்மானியப் பேரரசை' எழுப்பப்போவதாக அவர் ஆசை காட்டினர். இதனை நம்பிய தொழிலதிபர்களும் செர்மன் பிரபுக்களும் (Junkers) பிரவுன் வர்ணச் சட்டையணிந்திருந்த நாசிப் போர்வீரர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரலாயினர். தொழிலதிபர்கள் நாசிப் படையைக் கொண்டு கம்யூனிஸ்ட்டுகளையும் சோசியலிஸ்ட்டுகளையும் தீர்த்துக்கட்ட நினைத்தனர்; அவர்கள்மூலம் தொழிலாளர் சங்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் துணிந்தனர்; மேலும், அவர்களைக்கொண்டே உண்மையானவும் கற்பனையானவுமான அச்சுறுத்தல்களை அகற்ற முற்பட்டனர். இவ்வனைத்தையும் செய்து முடித்துவிட்டால், சொத்தும் தனியுரிமையும் (privilege) தங்களைத் தேடிவரும் என்று நம்பிக்கை பூண்டனர். 1930, செப். 14 ஆம் நாள் ரைஹ்ஸ்டாக்கிற்கு (செர்மன் சட்டசபைக்கு) நடந்த தேர்தலில் நாசிகள் 6,400,000 வாக்குகள் பெற்று வெற்றியடைந்தனர். 1932, செப். 14ஆம் நாள் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், வெகுசில வாக்கு வித்தியாசத்தால் ஹின்டன்பர்க் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஹிட்லருக்கு 13,400,000 வாக்குகள் கிடைத்தன. 1932, ஜூலை 31ஆம் நாள் நடைபெற்ற சட்டசபைத் (Reichstag) தேர்தலில், நாசிகள் 13,745,000 வாக்குகள் பெற்றனர்; அதாவது, மொத்த இடத்தில் 37 சதவீதம் அவர்களுக்குக் கிடைத்தது. எனினும், அடுத்தாற்போல் 1932, நவம்பர் 6ஆம் நாள் நடைபெற்ற தேர்தலில் அவர்கள் மிகவும் குறைவான வாக்குகளே (11,737,000) பெற முடிந்தது. வியாபார நிலைமை சற்றுச் சீரடைந்துவந்தமையே இதற்குக் காரணமாகும். குளிர்கால நடுவில், நாசிகள் கட்சி தான் நினைத்ததுபோல் பெரும்பாலான வாக்குகள் பெற்றுச் சிறப்பெய்துவதற்குப் பதிலாகச் சீர்குலைந்து சிதையத் தலைப்பட்டது.

சர்வாதிகாரத்துவத்திற்கு நாசிகள் காட்டிய வழி

செர்மானியப் பேரரசு ஃபாசிஸத்தில் இறங்கியது. இதற்குத் தேர்தல் வெற்றி காரணம் அன்று. செர்மானியக் குடியரசின் இறுதிச்

சான்சலர் (Chancellor) குர்ட் வான் ஸ்கீலிச்சரைக் கவிழ்ப்பதற்காகத் தீட்டப்பட்ட சதியே இதற்குப் பெரிதும் துணை புரிந்தது. சான்சலரின் முன்னாள் நண்பரான ∴பிரான்ஸ் வான் பாப்பன் அதிகார பீடத்தில் மீண்டும் அமர முடிவுகட்டினார். அதற்காக ஹிட்லரை உபயோகிக்கத் திட்டமிட்டார். 1932, மே மாதம் சான்சலர் ஹீன்றிச் பிரன்னிங்கைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு ஹிண்டன்பர்க் பதவிக்கு வந்தார். அவர் 'பிரபுக்கள் காபினட்' ஒன்றை நியமித்தார். அதன் தலைவர் பாப்பன். 1933ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பாப்பன் தன் சதித்திட்டத்தைப் போட்டு முடித்தார். அவர் மக்களைத் திரள் திரளாக மயங்கவைக்கும் சக்தி பெற்றிருந்த கும்பல் தலைவர் ஹிட்லர், அதிநவீன புத்தக வெளியிட்டாளர் ஹியூஜன்பர்க், எ∴கு தொழில் அதிபர் பிரிட்ஸ் திஸ்ஸன். ஆகியோரைத் தன் கருவிகளாகப் பயன்படுத்த எண்ணினார். 1933, ஜனவரி 4ஆம் நாள் பேப்பன், உயர்ரகத் தேறல் வியாபாரியான ஜோச்சிம் வான் ரிப்பன்டிராப் என்ற கையாள் மூலம் ஹிட்லரைக் கொலோனிலுள்ள திஸ்ஸியனின் நண்பனும் பாங்கு முதலாளியுமான பாரன் குர்ட் வான் ஸ்க்ரோடரிடன் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'காதல் விருந்தில்' கலந்து கொள்ளுமாறு அழைத்தார். இச் சதித்திட்டத்தை நிறைவேற்றும்பொருட்டு ரைன்லாந்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் நாசிக் கருவூலத்திற்கு (treasury) 4,000,000 மார்க்குகள் வழங்கினர்.

செர்மானியப் பேரரசை ஹிட்லரிடமிருந்து காப்பாற்றுவான் வேண்டி, பிரன்னிங், தாராளவாதிகள், சோசியலிஸ்ட்டுகள் ஆகியோரின் ஆதரவால் ஒன்பது மாதங்களுக்குமுன் ஹிண்டன்பர்க் ஜனாதிபதியாக மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இப்போது 'விவசாய பால்சிவிசத்தினின்றும்' 'பயிர்த் தொழிலைக் (agriculture) காப்பாற்றும்படி' தூண்டப்பட்டார். இக் குறிக்கோளை எய்துவான் வேண்டி, அவர் 1933 ஜனவரி 30 ஆம் நாள் ஸ்கிலீச்சரைப் பதவியினின்று நீக்கிவிட்டு ஹிட்லரை சான்சலராகவும், பாப்பனை உபசான்சலராகவும், ஹ்யூகன்பர்க்கைப் பொருளாதார அமைச்சராகவும், இதர பதவிகளுக்குப் பிற்போக்காளரையும் நியமனம் செய்தார். ஹிட்லர் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு (dissolve), 1933, மார்ச்சு 5ஆம் நாள் தேர்தல் நடத்துமாறு ஆணையிட்டார்.

தேர்தலுக்கு ஆறு நாட்களுக்கு முன் நாசிகளின் ரகசிய ஏஜன்டுகள் பாராளுமன்றக் கட்டடத்திற்குத் தீ வைத்துக் கொளுத்தி விட்டனர். உடனே ஹிட்லர் கம்யூனிஸ்ட்டுகளே இத் தீ வைக்கும் (arson) புரட்சிக்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டினர் (accuse). மேலும் அவர் 'கம்யூனிச அச்சுறுத்தலினின்றும்' மக்களைக் காப்பவர் போல் நடித்தார். ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட்டுகளையும்

சோசியலிஸ்ட்டுகளையும் சிறையில் தள்ளும்படி ஆணையிட்டார். நாசிகளின் எதிர்க் கட்சிகள் செய்த தேர்தல் பிரச்சாரத்தை அடக்கி ஒடுக்கினர். கம்யூனிசத் தீங்கிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் பெயரில் மக்களின் சிவில் உரிமைகளை (civil liberties) நீக்கிவிடுமாறு ஹிண்டன்பர்கைத் தூண்டினர். இவற்றுடன் நின்று விடாமல் வாக்காளர்களையும் அச்சத்திற்குள்ளாக்கினர். அவரைச் சேர்ந்தவர்களுக்குத் தேர்தலில் 44 சதவீத வாக்குகள் கிடைத்தன. புதுச் சட்டசபையின் பெரும்பான்மை (இடங்கள்) அவர்கள் கைவசம் ஆயின. கம்யூனிஸ்ட்டுகள் அனைவரும் சிறை செய்யப்பட்டனர். புதுச் சட்டசபை 'சாதகச் சட்டம்' (Enabling Act) ஒன்றை இயற்றியது. அச்சட்டம் காபினட்டுக்கு சருவாதிகாரத்தை (dictatorial power) அளித்தது. அச்சட்டத்தை எதிர்த்து சோசியலிஸ்ட்டு ஜனநாயகவாதிகள் மட்டுமே வாக்களித்தனர்.

இத்தாலியில் முசோலினி மூன்று ஆண்டுகளில் செய்து முடித்த வற்றை ஹிட்லரும் அவருடைய கூட்டாளிகளும் (ஜெர்மனியில்) மூன்று மாதங்களில் நிறைவேற்றினர். இக் குறுகிய காலத்திற்குள் நாசியாட்சிக்கு ஏற்பட்டிருந்த சீரான எதிர்ப்பனைத்தும் வேருடன் களைந்தெறியப்பட்டன; ஆளுங் கட்சியைத் (நாசி) தவிர மற்றெல்லாக் கட்சிகளும் சட்டவிரோதமாக்கப்பட்டன; கம்யூனிஸ்ட்டு ரஷ்யாவைப் போன்று முழு அதிகாரம் படைத்த, கொள்கை வேறுபாடு காணப் பெறுத, 'முழு' (சருவாதிகார) அரசு ஒன்று நிறுவப்பட்டது. கம்யூனிஸ்ட்டுகளால் சுதந்திர உலகிற்கு (Free World) ஏற்படக் கூடிய தீங்குகளைவிட அதிகமான தீங்கைப் பெய்யக்கூடிய குறிக் கோள்கள் அதனுடைய குறிக்கோள்களாக ஆயின. ஜெர்மானியத் தீவிரவாதிகள் (radicals) தாராளவாதிகள், பழங் கொள்கையினர் ஆகிய மூவரும் 1933-ல் ஆற்றுமை, புரியாமை, தற்கொலை ஆகிய வற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினர். யு. எஸ். எஸ். ஆர். நீங்கலாக, உலகிலேயே மிகப் பிரமாண்டமானதாய் விளங்கி வந்த ஜெர்மன் கம்யூனிஸ்ட்டுக் கட்சி, 'சோசியல் பாசிஸ்ட்டுகள்' என்ற புதுப் பெயர் தாங்கிப் போராட்டலாயிற்று. நாசிகள் இப் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டால், அது கம்யூனிசப் புரட்சிக்கு வழிவகுத்துவிடும் என்ற தப்புக் கணக்குப் போட்டு சோசியலிஸ்ட்டுகளுடன் போரிடலாயிற்று. ஹிட்லர் கம்யூனிஸ்ட்டுகளை அடக்கி ஒடுக்குவதைக் கண்ணுற்ற (சோசியலிஸ்டுகள் உள்ளிட்ட) கம்யூனிச எதிரிகள் அனைவரும் அவரை வாயார வாழ்த்தினர். கம்யூனிசம் அடக்கப்படுவதைத் தட்டிக் கேட்பவர் கம்யூனிச ஆதரவாளரைத் தவிர வேறு யாராய் இருக்க முடியும்?

1933ஆம் ஆண்டு மே நாள் பண்டிகை தினத்தை நாசிகள் 'தேசிய உழைப்பாளிகள் தினம்' ஆக மாற்றியமைத்தனர். தொழிலாளிகள் நலன்களிலேயே கவலைகொண்டிருந்த புதிய காபினட்

மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் வெற்றியாய் முடிந்தன அடுத்த நாள் எவ்வித எதிர்ப்புமின்றி எல்லா ஜெர்மன் தொழிற் சங்கங்களும், ஹிட்லரின் படையினரால் அடக்கப்பட்டன; அவைகளின் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்; அவர்கள் பத்திரிகை தடைசெய்யப்பட்டது; அவர்கள் நிதியனைத்தும் பறிமுதல் செய்யப் பட்டது; 'வேலைநிறுத்த' உரிமை நீக்கப்பட்டது; மேலும், பாட்டாளிகள் அனைவரும் ராபர்ட் லீயின் நாசி முன்னணிக் கட்சி யுடன் 'இணைக்கப்பட்டனர்'. மே 17 ஆம் நாள் சட்டசபையின் மற்றெல்லாக் கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு சோசியலிஸ்ட்டு ஜனநாயகவாதிகள் ஹிட்லரின் 'சமாதான' வெளிநாட்டுக் கொள்கைக்கு முழு 'ஆதரவு' அளித்தனர். ஜூன் 22 ஆம் நாள் சோசியலிச ஜனநாயகக் கட்சியை அடக்குமாறு காபினட் ஆணை யிட்டது. சோசியலிஸ்ட்டு எதிரிகள் அனைவரும் இதை வரவேற்றனர். சோசியலிசம் அடக்கப்படுவதைத் தட்டிக் கேட்பவர் சோசியலிச ஆதரவாளரைத் தவிர வேறு யாராய் இருக்க முடியும்?

ஜூன் மாதம் 29ஆம் நாள் ஹ்யூஜர்பர்க் காபினட்டிலிருந்து வலுவந்தமாய் நீக்கப்பட்டார். அவருடைய தேசீய கட்சியும் 'தானுகவே முன்வந்து' மறைந்து போயிற்று. அதை எல்லா பிற்போக்குக் கொள்கை எதிரிகளும் ஒப்புக் கொண்டனர். ஜூலையில் காபினட்டின் பெரும்பான்மை இடங்கள் நாசிகள் கைவசம் இருந்தன. ஜூலை 3ஆம் நாள் நாசியாட்சி போப்பின் வாட்டிகனுடன் ஓர் உடன்படிக்கை செய்தது. அது ஜூலை 4ஆம் நாள் கத்தோலிக்க மத்திய கட்சியையும், பவேரியரின் மக்கள் கட்சியையும் அடக்கி ஒடுக்கியது. காபினட் வெளியிட்ட ஆணை (decree) 'ஜெர்மனியில் தேசீய சோசியலிஸ்ட் ஜெர்மன் தொழிலாளர் கட்சி ஒன்றே உள்ளது' என்றும், வேறெருரு கட்சியை யாராவது நிறுவினாலோ அன்றி ஆதரவு அளித்தாலோ அவர்களுக்குக் கடுந் தண்டனைகள் அளிக்கப் படும் என்றும் அச்சுறுத்தியது. புதிய 'தலைமைக் கொள்கையின் படி' 'ஹிட்லரிடமே இறுதிப் பொறுப்பு இருக்கிறது. அவர் நோக்கமே சட்டம் ஆகும்' என்று 1933, செப்டம்பர் 15ஆம் நாள் கோரிங் பறைசாற்றினர். ஹிட்லரை அடக்கிவிடலாம் என்ற நம்பிக்கையில் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, அவரை அதிகார பீடத்தில் அமர்த்திய பணக்காரர்களும், நிலச்சுவான்தார் களும் இப்போது பைத்தியக்காரர்களால் நடத்தப்படும் சருவாதிகாரத் தில் அகப்பட்டுக்கொண்டு கண்விழி பிதுங்க விழித்தார்கள். எனினும், புதிய ஆட்சி முறையால் தங்களுக்கு லாபமும் தனிச் சலுகைகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அதற்கு முழு ஆதரவு அளித்து வந்தார்கள்.

புதிய ஆட்சியின் சமூக அமைப்பு, பொருளாதாரத் திட்டம் ஆகியவைபற்றிய சந்தேகங்கள் அனைத்தும் விரைவில் நீங்கலாயின.

1934, ஜூன் 30ஆம் நாள் 'குருதிக்கறை படிந்த சனிக்கிழமை' யன்று முன்னூள் இராணுவத்தினருக்கு அறைகூவல் விடுத்தும், 'தேசீய சோசியலிசத்திற்காக' மார்தட்டியும் நின்ற ஆளுங்கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகளும் (ஹிட்லர்) படைத்தலைவர்களும் 'நாட்டுத் துரோகக் குற்றத்திற்காக' (treason) சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஏனஸ்ட்டு ரோஹ்ம், கிரேகர் ஸ்ட்ராசர், கார்ல் ஏனஸ்ட்டு, ஸ்க்ளீச்சர், அவரது மனைவியார் எரிக் க்ளாசனர், பாப்பனின் உதவியாளர் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதிலிருந்து தப்பிய பாப்பன் மட்டும் வியன்னாவிற்குத் தூதராக அனுப்பப்பட்டார். (1934, ஆகஸ்ட் 2ஆம் நாள் ஹிண்டன்பர்க் மறைந்ததும் ஹிட்லர் ஜனாதிபதியாக மாறினார்)

'திட்டப் பொருளாதாரக் கொள்கையின் (policy of planned economy) மூலம் நாட்டின் செழுமையை மீண்டும் வளர்ப்பதே புதிய ஆட்சியின் நோக்கமாகும். அதற்காகத் தனியார் சுவாதீனம் (private monopoly) அளிக்கவும் பொது நிதியை படைக்கலப் பெருக்கத்தில் செலவிடவும் வகை செய்யப்பட்டது. படைக்கலப் பெருக்கத்தால் வேலையின்றித் தவித்த பாட்டாளிகளுக்கு வேலையும், குடியானவர்களுக்கு வருவாயும் (income) தொழிலதிபர்க்கு லாபமும், சிறு வயது ஜெர்மானியப் பிரபுக்களுக்கு (ஜன்கர்களுக்கு): படைக் கமிஷன் அலுவலும் தேசபக்தாகளுக்குப் பெருமையும் கிடைத்தன. சுருங்கச் சொல்லின் சமூகக் கீழ் ஜாதியினரைத் (pariah) தவிர மற்றெல்லோரும் பயனடைந்தனர். மகிழ்ச்சியுற்றனர். உணர்ச்சி வயப்பட்ட கீழ்மக்கள் சமூக ஏணியில் தங்கள் தலைவர்களுக்கு நிகராயினர். அதன்பின் அவர்களைக் கேட்கவேண்டுமா ? தங்களுக்குக் கீழானவர்களையும், அயல்நாட்டு 'விரோதிகளா'கக் கருதப் பட்டவர்களையும், உள்நாட்டைச் சேர்ந்த ஏமாளிகளையும், ஆக்கிரமிப்புச் செய்தனர். யூதர்களும் அவர்களுடைய வன்செயலுக்கு ஆளாயினர். அவர்களை அவமானப்படுத்தி, உடைமைகளைப் பறித்துக்கொண்டு, அடித்து உதைத்ததோடல்லாமல், இறுதியில் அழித்தும் விட்டார்கள். பொருளாதார மந்த நோயால் அல்லலுற்றுக் கிடந்த சமுதாயமும் ஜெர்மானியப் பொருளாதாரமும் இந்த அறுவை சிகிச்சையால் ஒருவாறு குணமடைந்தது. அத்துடன் பிறந்த இராணுவத்துவம் செழிப்பை ஈந்தது. எனினும், குணமடைந்த சமுதாயம் பைத்தியம்பிடித்து இறுதியில் வலிப்பு நோய்க்கு இரையாகி மடிந்தது.

நாசிகள் வகுத்த போர்வழி

ஹிட்லர் தன் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைத் தான் எழுதிய 'என் போராட்டம்' என்ற நூலில் தெளிவாகக் கூறியுள்ளார் : 'வலிமையான வாள் உற்பத்தியைப் பெருக்குதலே

உள்நாட்டு அரசியல் தலைமையின் கடமை ஆகும்; படையுதவி அளிக்கத்தக்கவர்களாகப் பார்த்து அவர்களுடைய நட்பைப் பெறுவதே வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியச் செயலாகும்.' இக் கொள்கைக் கிணங்க அவர் படைக்கலங்களைப் பெருக்கவும், இத்தாலி, ஜப்பான், முடிந்தால் பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் நேசவுடன்படிக்கை செய்துகொள்ளவும்; ஃபிரான்சை அழிக்கவும், கம்யூனிச எதிர்ப்பு என்னும் பெயரில் ரஷ்யாவைக் கைப்பற்றவும் திட்டம் தீட்டினார். ஹிட்லரின் கம்யூனிச எதிர்ப்பையும் (ஜெர்மன்—ரஷ்யப் போர் மேகங்கள் சூழ்ந்து வருவதையும் கண்ட மேற்கத்திய அரசியல் வல்லுநர்கள் (statesmen) உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஜெர்மன் ரக பாசிஸம் உள்நாட்டில் அமைதியைக் காக்கவும், வளப்பத்தைப் பெருக்கவும் வெளிநாடுகளுடன் போர்புரிதலை இன்றியமையாததாகச் செய்துவிட்டது. அவ்வாட்சியாளர்கள் போருக்குப் பலியாகக்கூடியவர்களை நிர்ணயஞ் செய்யவும் முடிந்தது. 'கம்யூனிச எதிர்ப்புப் போர்' பற்றிய ஊக்கமான பேச்சுக்களை ஜெர்மானியர் பெரிதும் விரும்பினர்; மேலும், அது பிரெஞ்சுக்காரர், பிரிட்டிஷார், அமெரிக்கர் ஆகியவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தவும் பெரிதும் பயன்பட்டது. எனினும், நாசிகள் பிஸ்மார்க், ராத்தினோ ஆகியவர்களின் அறிவுரையை நினைவிலிருத்தியிருக்கலாம்; அப்படிச் செய்தாரில்லை. ஹிட்லரோ அன்றி ஸ்டாலினோ தங்கள் கொள்கை வெறியை (ideological fanaticism) வெளிநாட்டுக் கொள்கையின் ஆதாரமாக்க விரும்பவில்லை. அப் பெருந்தவற்றை இருவரும் புரியவில்லை. நாசிகளின் 'கம்யூனிச எதிர்ப்பு', கம்யூனிஸ்ட்டுகளின் 'பாசிஸ எதிர்ப்பைப்போன்று இரு தரப்பிற்கும் நலனை விளைக்கக்கூடிய பேச்சுவார்த்தைகட்கு இடமில்லாது செய்யவில்லை. கார்ல் ஹௌஷோஃபரும் புதிய படை அலுவலாளரும் (general staff) ரஷ்யாவுடன் போர் தொடுத்தால் அது பேராபத்தில்தான் கொண்டு போய்விடும் என்பதையும், ஜெர்மானியப் பேரரசுக்கு எவ்வித ஊறும் ஏற்படாமல் இரு தரப்பினருக்கும் நலனை விளைவிக்கக்கூடிய பெர்லின்—மாஸ்கோ நேசவுடன்படிக்கையைச் செய்ய முடியும் என்பதையும் நன்கு உணர்ந்தனர்.

ரஷ்யாவுக்கும் மேலை வல்லரசுகட்கும் இடையே ஜெர்மனியின் நிலை என்னவாக இருக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாகும். அதுவே ஃபிரடெரிக் மாமன்னர் காலத்திலும், நெப்போலியனின் 'விடுதலைப் போர்க்' காலத்திலும் ஐரோப்பிய அரசியலின் ஒரே முக்கிய பிரச்சினையாக இருந்தது. அதுவே பிஸ்மார்க் காலத்திலும், இரண்டாம் வெல்ஹம் காலத்திலும் உலக அரசியலின் ஒரே முக்கியப் பிரச்சினையாக விளங்கிற்று. அதுவே வீமர் குடியரசில், நாசிப் பேரரசின் அரசியல் தூதர்களின் பெருஞ்

சிக்கலாய் விளங்கிற்று. அதுவே இன்றும், இனியும் ஜெர்மனி, ஐரோப்பா, ஏன் கிழக்கு மேற்கு உலகம் ஆகிய எல்லாவற்றுக்கும் ஒரே பெரும் பிரச்சினையாக நெடுநாள் நீடித்து நிற்கும் என்று ஐயந்திரிபறக் கூறலாம். இக் காரணத்தை முன்னிட்டு நாம் ஹிட்லரின் காலத்திலும் அவருக்குப் பின்னரும் ஜெர்மனி கடைப்பிடித்த வெளி நாட்டுக் கொள்கையைச் சற்று விரிவாக நோக்குவோம். மேலை நாடுகளின் நலன்களைப் போலல்லாமல் ஜெர்மன், ரஷ்ய நலன்களை ஜெர்மானிய—ரஷ்ய உடன்படிக்கைமூலமே பெருக்க முடியும் என்பது அனுபவம் படிப்பித்த பாடமாகும். இதற்குத் தக்க சான்றுகள் உள. கொள்கை வகுப்பாளர்கள் புத்தியின்றிச் 'சரித்திரப் படிப்பினையை' மறந்து திரிகின்றனர். ஹிட்லரின் கட்டாய இணைப்புத் திட்டம் (aggiandisement) 3ஆம் ஜெர்மானியப் பேரரசின் முதல் எட்டு வருடங்கள்வரை அபூர்வத் திறமையுடனும் சிறப்பான வெற்றியுடனும் நிறைவேற்றப்பட்டது. மேற்கத்திய 'மியூனிச்சியர்' (Munichmen) மனமார விரும்பிய இவ் வஞ்சகத் திட்டத்தின் விளைவுகள் அடிக்கடி விவரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு நாம் தொடர்ச்சியாக ஏற்பட்ட வெற்றிகள் எவ்வெப்போது ஏற்பட்டன என்பதை மட்டும் ஆராய்வோம்.



1933, அக்டோபர் 14. சர்வதேசச் சங்கத்தைவிட்டும் (League of Nations) படைக்கலக் குறைப்பு மாநாட்டைவிட்டும் (Disarmament Conference) வெளியேறல்.

1934, ஜனவரி 26. போலந்துடன் செய்யப்பட்ட 10ஆண்டு அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகுதல்.

1935, மார்ச்சு 1. சாரை (Saar) மீட்டல்.

1935, மார்ச்சு 16. கட்டாயப்படைச் சேர்ப்பை (conscription) மீண்டும் அமலாக்கல்; வெர்செய்லஸ் உடன்படிக்கையின் 5ஆம் பிரிவை மறுதளித்தல்.

1935, ஜூன் 18. ஜெர்மன் மறுபடைச் சேர்ப்பை அனுமதிக்கும் ஆங்கிலோ-ஜெர்மன் கடற்படை ஒப்பந்தம் கையெழுத்தாகுதல்.

1936, மார்ச்சு 7. ரைன்லாந்தை மீண்டும் இராணுவமயமாக்கல்; லொக்கார்னே உடன்படிக்கைகளை ரத்துசெய்தல்.

1936, அக்டோபர் 25. ஸ்பெயின், டான்யூப் பகுதிகளில் ஒத்துழைப்பதற்காக வரையப்பட்ட பெர்லின்-ரோம் உடன்படிக்கை.

1936, நவம்பர் 25. பெர்லின்-டோக்கியோ கமின்டான்-எதிர்ப்பு ஒப்பந்தம்.

1938, மார்ச்சு 12 ஆஸ்திரியாமீது படையெடுத்து அதைக் கைப்பற்றல்.

1938, அக்டோபர் 1. நாசிகளின் பயங்கரப் போர் நடவடிக்கையும் அச்சுறுத்தலும்; ரெய்சிற்குச் சேம்பர்லின் (அடிக்கடி) போய் வருதல்; மியூனிச் 'அமைதி' ஒப்பந்தம்; ஹிட்லரிடம் சுதெத்தன்லாந்தைச் சரணடையும்படி, பிரேகிற்கு செப்டம்பர் 19ஆம் நாள் விடுக்கப்பட்ட ஆங்கிலோ-பிரெஞ்சு இறுதி எச்சரிக்கை (ultimatum); அக்டோபர் 1ஆம் தேதி ஆங்கிலோ-ஜெர்மன் அணுக்கிரமிப்பு ஒப்பந்தம்; டிசம்பர் 6ஆம் தேதி பிரெஞ்சு-ஜெர்மன் அணுக்கிரமிப்பு ஒப்பந்தம்.

1939, மார்ச்சு 15. செக்கோசுலேவாக்கியா மீது படையெடுத்து அதைக் கைப்பற்றல்.

1939, ஏப்ரல் 28. 1934ஆம் ஆண்டு போலந்திய அணுக்கிரமிப்பு ஒப்பந்தமும், 1935ஆம் ஆண்டின் ஆங்கிலோ-ஜெர்மன் கடற்படை ஒப்பந்தமும் பிரிட்டன் போலந்துக்கு அளித்த பாதுகாப்பிற்குப் பதிலாகக் கைவிடப்படல்.

1939, மே 22. இத்தாலியுடன் நட்புச் சேரல்.

1939, ஆகஸ்டு 23. ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் 10 ஆண்டு நடுநிலைமை, அணுக்கிரமிப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகுதல்.[4]

[4] *1939; ஆக 23ஆம் நாள் கையொப்பமான சோவியத்-ஜெர்மன் அணுக்கிரமிப்பு ஒப்பந்தம் பின்வருமாறு:*

ஜெர்மனியும் சோவியத் சோசியலிஸ்ட்டு குடியரசுகள் கூட்டமைப்பும் (USSR) அவனியில் அமைதியை வலுப்படுத்தும் உன்னத நோக்கத்தில், 1926, ஏப்ரல் மாதம் இரு நாடுகளுக்கும் இடையே வரையப்பட்ட நடுநிலைமை ஒப்பந்தம் விதிக்கும் கடமையினின்றும் சிறிதும் வழுவாமல், பின்வரும் ஒப்பந்தத்தைச் செய்ய முன்வருகின்றன.

1. ஒப்பந்தத்திற்குரிய இரு தரப்பினரும் தாமாகவோ அன்றிப் பிற நாடுகளின் பக்க பலத்திலோ ஒருவரை யொருவர் வன்செயல் ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என்றும், தாக்குவதில்லை என்றும் உறுதி பூணுகின்றனர்.

2. ஒப்பந்த நாடுகளில் ஒன்றை வேறொரு (மூன்றும்) நாடு தாக்கும்பட்சத்தில், ஒப்பந்தத்திற்குரிய மற்ற நாடு அந்த மூன்றும் நாட்டுக்கு எவ்வித ஊக்க மும அளிக்கக் கூடாது.

3. ஒப்பந்தத்திற்குரிய இரு நாட்டு நலன்களையும் பாதிக்கக்கூடிய விஷயங்களை இரு நாட்டு அரசாங்கங்களும் ஒன்றுகூடி கலந்து ஆலோசிக்கும்.

4. ஒரு தரப்பினர்க்கு எதிரான செயலில் காலந்தாழ்த்தியோ, அன்றி உடனடியாகவோ ஈடுபடும் வேறு நாடுகளுடன் மற்றத் தரப்பினர் சேரக்கூடாது.

5. இரு தரப்பினருக்கும் இடையில் ஏதாவது தகராறு ஏற்படின் அது நட்புடன்கூடிய கருத்துப் பரிவர்த்தனை (exchange of views) மூலமாகவோ, அன்றி நடுவர் நீதிக் குழுக்கள் மூலமாகவோதான் தீர்க்கப்படவேண்டும்.

6. இவ்வொப்பந்தம் பத்து ஆண்டுகள் நீடித்து இருக்கும். ஆனால், அது காலாவதியாக ஓர் ஆண்டுக்கு முன் ஏதாவது ஒரு தரப்பினர் அதை மீறி நடந்தால், அவ்வொபபந்தம் தானாகவே இன்னும் 5 ஆண்டுகள் நீடித்து நிற்கும் படி ஆகிவிடும்.

7. கூடிய சீக்கிரத்தில் இவ்வுடன்படிக்கை ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். ஏற்புப் (ஒப்புதல்) பத்திரம (instruments of ratification) பெர்லினில் மாற்றிக் கொள்ளப்படும். கையெழுத்தான உடனேயே ஒப்பந்தம் அமலுக்கு வரும்.

ரகசிய உப ஒப்பந்தம் (protocol):

ஜெர்மானியப் பேரரசும் சோவியத் சோசியலிஸ்ட்டுக் குடியரசுகள் கூட்டமைப்பும் இவ்வனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தினமே, இருதரப்பினர் சார்பிலும் கீழே கையெழுத்திட்ட இருவரும் கிழக்கு ஐரோப்பாவில் தங்களுக்குச் சேரவேண்டிய செலவாக்கு மண்டலத்தின் எல்லை (boundary) குறித்து ரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்கள். அப் பேச்சுவார்த்தைக்கு இறுதியில் கீழ்க்கண்ட முடிவை மேற்கொண்டார்கள்.

1. பால்டிக் நாடுகளைச் (பின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லித்துவானியா) சேர்ந்த நிலப்பகுதிகளுக்கு மறு நில, அரசியல் ஏற்பாடு செய்யப்படின், லித்துவானியாவின் வடக்கெல்லை, ஜெர்மனி, யு. எஸ். எஸ். ஆர். ஆகிய இரு நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களின் எல்லையாக அமையும். இது தொடர்பாக வில்னு பகுதியில் லித்துவானியாவின் நலன்களைப் பாதுகாக்க இரு தரப்பினரும் பொறுப்பு ஏற்றுக்கொள்கின்றனர்.

2. போலிஷ் நாட்டைச் சேர்ந்த நிலப்பகுதிகள் மறு நில, அரசியல் ஏற்பாட்டின்கீழ் வரின், ஜெர்மனி, யு. எஸ். எஸ். ஆர். ஆகிய இரு நாடுகளின செல்வாக்கு மண்டல எல்லைகள் ஏறக்குறைய நாரீ, வீஸ்டுலா, சான் நதிகளின் கரைகளால் நிர்ணயிக்கப்படும்.

இரு தரப்பினரின் நலன்களைப் பாதுகாப்பான்வேண்டி சுதந்திர போலிஷ் அரசு ஒன்றை நிலைநாட்டுதல் அவசியமா இல்லையா என்பதும், எப்படி அதன் எல்லைகளை வரையறுத்தல் என்பதும் இனி நடக்கவிருக்கும் அரசியல் நிகழ்ச்சிகளையே பொறுத்திருக்கிறது.

(வருங்கால நிகழ்ச்சி எதுவாயிருப்பினும்) இப் பிரச்சினையை இரு நாட்டு அரசாங்கங்களும் நட்பு உடன்படிக்கைமூலமாகவே தீர்க்கவேண்டும்.

தென்கிழக்கு ஐரோப்பாவைப் பொறுத்தவரை பெஸ்ஸரேபியாவில் அதன் செல்வாக்கிற்குக் கவனம் செலுத்தவேண்டும் என்று சோவியத் யூனியன் கூறுகிறது. ஜெர்மனியோ இப் பிராந்தியத்தில் எவ்விதமான அரசியல் தலையீடும் இலலாமல அதைச் சுதந்திரமாக விட்டுவிட வேண்டும் என்று திட்டவட்டமாகக கூறுகிறது.

"இரு தரப்பினரும் இவ்வுடன்படிக்கையை கடுமையான ரகசிய உடன்படிக்கையாகக் கொள்வர்.

"மாஸ்கோ, 1939, ஆக 23.

ஜெர்மானிய அரசாங்கத்தின் சார்பாக:
வி. ரிப்பன் டிராஃப்

யு. எஸ். எஸ். ஆர்.
அரசாங்க முழு உரிமைத் தூதர்
வி. மொலடோவ"

இவ்வுடன்படிக்கைக்குப் பின் ஹிட்லர் தன் 'கம்யூனிச எதிர்ப்புப் போரை' திடீரென்று நிறுத்திவிட்டு, ரபாலோ, பிஸ்மார்க்கின் அறிவுரைக்கு தலைசாய்க்கலானார். அதனால் நாசிகளின் போர்த் திட்டத்துக்கு ஏற்பட்ட நற்பயன்களை, பின்னர் நடந்த நிகழ்ச்சிகளி னின்றும் தெளிவாக யூகித்துக் கொள்ளலாம்.

1939, செப்டம்பர் 1. போலந்தின்மீது படையெடுத்து, அதைக் கைப்பற்றல்; முன்னாள் போலிஷ் அரசு துண்டாடப்படல்.

1940, ஏப்ரல் 9. டென்மார்க், நார்வே தாக்கப்பட்டு கைப்பற்றப் படல்.

1940, மே 10. லக்சம்பர்க், பெல்சியம், நெதர்லாந்து, பிரான்சு தாக்கப்படல்; ஜூன் 3ஆம் நாள் டன்கர்க்கிலிருந்து பிரிட்டன் வெளியேறல்; ஜூன் 14-ல் பாரிஸின் வீழ்ச்சி; ஜூன் 22-ல் பிரான்சு சரணடைதல் (capitulation), போர் நிறுத்த (ormistice) உடன்பாடு ஏற்படல்.

1940, செப்டம்பர் 27. முக்கூட்டு ஒப்பந்தம் (Triplice alliance) கையெழுத்தாகுதல்.

1940, அக்டோபர் 8. ருமேனியா கைப்பற்றப்படல்.

1941, ஏப்ரல் 6-27. யூகோசுலேவியா, கிரீஸ் தாக்கப்பட்டு, கைப்பற்றப்படல்.

பழிக்குப்பழி

ரஷ்யாவிற்கு மேற்கே ஐரோப்பா முழுவதையும் எதிர்ப்பின்றி ஆண்டுவந்த நாசித் தலைவர்கள், மேற்கத்தியப் படையினருக்குச் சற்றும் மசியாத ஜெர்மன் தரைப்படைத் (wehrmacht) தலைவர்கள், 1939-ல் பேரறிவு காட்டிய சுடர் வழியைக் கைவிட்டு விட்டு, 1941-ல் பைத்தியக்கார வழி சென்று அழிவுக்கு ஆளானது ஏன்? நாசிகள் இத் தீர்மானத்திற்கு வருவதற்கு 1940-ல் பெர்லினில் மொலட்டோவ் கொண்டுவந்த 'கோரிக்கைகளே' காரணம் என்று அமெரிக்க வெளி விவகாரத்துறை (State Department) எண்ணியது தவருகும். (இது பற்றிய விவரங்களுக்கு ஜேம்ஸ் வைரன்சின் 'மனம்விட்டுப் பேசுங் கால்' பக்கம் 288 என்ற கட்டுரையை, நாசி-சோவியத் தொடர்புகள், 1939-41, என்ற நூலில் பார்க்கவும். தங்களை சோவியத் யூனியன் ஒருகால் தாக்கும் என்று அவர்கள் கனவில்கூட நினைத்ததில்லை. இது சரியே. சில ஜெர்மன் அதிகாரிகள் (பெரும்பாலான மேலை 'நிபுணர்களைப்' போன்று) ஆறு வாரங்களில் ரஷ்யாவை நிச்சய மாய்க் கைப்பற்றிவிடலாம் என்று நினைத்தார்கள். இவ்வா சையைக் கட்டுப்படுத்துவது மிகச் சிரமமாயிற்று. இதே தவறு முன்னும் நடந்துள்ளது, இனியும் நடக்கலாம். எனவே, இவ்வாசை யால் ஏற்பட்ட விளைவுகளைச் சற்று ஆராய்வோம்.

(1940ஆம் ஆண்டு நடுவில் ஹிட்லரை ஒரு பிரச்சினை எதிர்நோக்கிற்று. பிரிட்டனைக் கைப்பற்றுவதா அல்லது அதனுடன் சமாதானம் செய்துகொள்வதா என்பதுதான் அது.) ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளை (colonies) அதனிடமே திரும்பக் கொடுத்துவிடும்படியும், மேற்கு ஐரோப்பா முழுவதிலும் அதற்கு இருக்கும் அதிகாரத்தை ஒப்புக் கொள்ளும்படியும் அவர் ஜூன் மாத இறுதியில் பிரிட்டனைக் கேட்டார். பிரிட்டனிடமிருந்து அதற்கு எவ்வித பதிலும் வரவில்லை. ஆனால், ரஷ்யாவை ஜெர்மனி தாக்க பிரிட்டன் விட்டுக்கொடுக்கும், அவ் வன் செயலுக்கு அது இணங்கும் என்ற எண்ணம் ஏற்கெனவே மறைந்து விட்டது. 1941, மே 10ஆம் நாள் நாசிகளின் இரண்டாம் தலைவர் ருடோல்ஃப் ஹெஸ் 'அமைதித் தூதராக' (peace mission) ஸ்காட்லாந்துக்கு விமானத்தில் பறந்து சென்றார். (அங்குதான் அவர் பிடி



பட்டார்.) இங்கிலாந்தைத் தாக்கும் திட்டம் தகர்ந்தது. ஏனெனில், ஜெர்மனியின் கடற்படை வலிமை அதற்குப் போதிய அளவு இல்லை. மேலும் மன்னர், (பிரிட்டிஷ்) விமானப் படையை (RAF) கோரிங்கின் விமானப்படை (Luftwaffe) தோற்கடித்தாலன்றி பிரிட்டனை

இங்கிலீஷ் கால்வாய் (channel) மூலம் தாக்கும் சாத்தியம் இல்லை. ஏனெனில், அவ்வளவு வலிமை ஜெர்மானியத் தரைப்படையிடம் அதற்காகப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டும், இறுதியில் 1940 செப்டம்பரில் நடைபெற்ற பிரிட்டன் போரில் லுஃப்ட்வேப் எனப்படும் ஜெர்மானிய விமானப்படை படுதோல்வியடைந்தது. எனவே, பிரிட்டன்மீது மேற்கொள்ளவிருந்த படையெடுப்பும் தள்ளிப்போடப் பட்டது.

பிரிட்டனை இறுதியாக ஒழித்துக்கட்டுமுன் ரஷ்யாவைத் தீர்த்துவிடவேண்டும் என்ற முடிவு 1940 ஆகஸ்ட்டில் ரகசியமாக எடுக்கப் பட்டது. போக்குவரத்து இடையூறுகளால் இலையுதிர் காலத்தில் மேற்கொள்ளவிருந்த படையெடுப்புத் திட்டம் நிறைவேற வழியில்லாது போயிற்று. மே மாதத்திலாவது இத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்ற நோக்கத்தில் குளிர்காலம், வசந்த காலம் முழுதும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மே மாதமும் திட்டம் நிறைவேறியபாடில்லை. யூகோசுலேவ்-கிரீக் போர்த் திட்டத்தின் காரணமாக அது இறுதியில் ஜூன் மாதம் வரை ஒத்திப்போடப் பட்டது; 1939, ஆகஸ்ட்டில் போலந்துடன் ரிப்பன்டிராஃப் நடத்திய 'பேச்சு வார்த்தைகளை'ப்போல், இம்முறை அவர் மொலட்டோவுக்கு விடுத்த அழைப்பும் (எதிரியின்) சந்தேகத்தைப் போக்கவும், (தன் திட்டத்தை நிறைவேற்றற்குரிய) காலம் வரும்வரை காத்திருக்கவும் அவர் செய்த சூழ்ச்சியேயன்றி வேறில்லை.[5]

இப் புதுப் போர்த்திட்டம் மக்களிடையே எழுச்சியை உண்டாக்கியது. ஹிட்லர் 1939, நவ. 23ஆம் நாள் தன் படைத்தலைவர்களிடம் (Generals) கூறிய வார்த்தைகளினின்றும் அப்போது நிலவிய எழுச்சி நிலையை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். 'நான் (பகைவனைத்) தாக்குவேனேயன்றி அவனுக்கு ஒருபோதும் சரணடையேன். (பகைவனுக்கு) இணங்கிப் போவது—அவனுக்கு விட்டுக்கொடுப்பது என்பது சிறுபிள்ளைத்தனம். அது வெற்றியோ தோல்வியோ, இங்கு நாம் நினைவில் கொள்ளவேண்டியது, நாசி ஜெர்மனியின் முடிவு என்னவாகுமோ என்பது அன்று, வருங்காலத்தில் ஐரோப்பாவை யார் ஆட்சி செய்வது என்பது ஆகும். இச் சூதாட்டத்திற்காக நான் இதுவரை அடைந்த வெற்றிகளைப் பணயம் வைக்கிறேன். நான் எதற்கும் அஞ்சமாட்டேன். மாறுக, என்னை எதிர்க்கும் அனைவரையும் அடியோடு அழிக்கப்போகிறேன்.

[5] போலந்துமீது படையெடுக்கவேண்டும் என்ற நாசிகளின் முடிவு 1939, செப்டம்பர் முதல் தேதியன்றும், யு.எஸ்.எஸ்.ஆர். மீது படையெடுக்கவேண்டும் என்ற முடிவு 1940, ஆகஸ்ட்டிலும் எடுக்கப்பட்டன. இதற்குரிய ஆதாரத்தை 'சர்வதேச இராணுவ நீதிமன்றத்தின முன் மகாயுத்தக் குற்றவாளிகளின் விசாரணை' என்ற நூலில் தகுந்த அட்டவணைக் குறிப்புகளைப் பார்க்கவும். ஆதாரத்திற்கு 'நடப்பு வரலாறு' என்னும் நூலில் (1953 ஜனவரி, ஏப்ரல்) 'நாசிகள் காட்டிய போர்வழி' என்ற தலைப்புக் கட்டுரையை வாசிக்கவும்.

இப்போராட்டத்தில் நான் வெற்றிபெற்றாலும் சரி அல்லது தோல்வியுற்றாலும் சரி இந்நாட்டு மக்களின் தோல்விக்குப்பின் நான் உயிருடன் வாழ்ந்திருக்கமாட்டேன். மற்ற நாடுகளுக்குச் சரணடையப் போவதுமில்லை, அன்றி உள்நாட்டு சக்திகளின் புரட்சிக்கு இடங்கொடுக்கப் போவதுமில்லை' என்று ஹிட்லர் வீராவேசத்துடன் பேசினார். அதற்கு ஏழு ஆண்டுகட்கு முன்னர் அவர் பர்ச்டெஸ்காடனில் ஹெர்மான் ரோச்னிங் இடம் 'நாம் அழிந்தாலும் அழியலாம்; ஆனால், நாம் மட்டும் அழியும்பட்சத்தில் நம்முடன் இவ்வுலகே சேர்ந்து அழியும் என்பது திண்ணம்' என்று கூறியதை இங்கு நினைவிலிருத்தல் நன்று.

1940, நவம்பர் 12—14ஆம் நாள் ரிப்பன்ட்ராஃபும் ஹிட்லரும் பெர்லினில் மொலட்டோவைச் சந்தித்துப் பேசினர். அவரிடம், அவர்கள் பிரிட்டனை முறியடித்துவிட்டதாகவும், ரஷ்யா முக்கூட்டு ஒப்பந்தத்தில் அவசியம் சேரவேண்டுமென்றும் அது தென்திசை மூலமாக கடலுக்குச் செல்லும் உரிமை கொண்டாட வேண்டுமென்றும், பிரிட்டிஷ் பேரரசைத் தகர்க்கும் முயற்சியில் அது இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றும் அவர்கள் கூறினர். இவ் வார்த்தையைச் செவியுற்ற மொலட்டோவ் 'எந்தக் கடல்' என்று வினவினர். அவருக்கு ஜலசந்திமீதும் (straits) மத்தியதரைக்கடல்மீதும் நோக்கம் இருந்தது. ஜெர்மனியோ பாரசிக வளைகுடாவைக் (gulf) குறிப்பிட்டது. ரஷ்யர்கள் தங்கள் நிபந்தனைகளைக் கொண்டு வந்தார்கள் – ஜெர்மானியப் படைகள் பின்லாந்திலிருந்து வெளியேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ருமேனியாவுக்கு ஜெர்மனி 'பாதுகாப்பு' (guarantee) அளித்தமைக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதற்கு ஈடாக புல்கேரியாவுக்கு ரஷ்யா 'பாதுகாப்பு' அளிக்கவேண்டும் என்று ஆலோசனை கூறினர்கள். அவர்கள் மீண்டும் இரவில் சந்தித்துப் பேசினர்கள். அப்போது ரிப்பன்ட்ராஃப் நாற்கூட்டு நேச உடன்படிக்கையின் வரைவை (draft) மற்றவர் முன்னிலையில் வைத்தார். அத்துடன் இருந்த ரகசிய உடன்படிக்கை 'இந்துமகா சமுத்திரத்தின் திசையே' யுள்ள நிலப்பகுதிகளை எதிர்கால ரஷ்யா செல்வாக்கு மண்டலங்களாக ஒதுக்கிற்று. சுவீடன், போலந்து, ஹங்கேரி, ருமேனியா, யூகோசுலேவியா, கிரீஸ் ஆகிய நாடுகளில் ஜெர்மனி கொண்டிருக்கும் நோக்கம் என்னவென்று அறிய மொலட்டோவ் உறுதியாக விரும்பினர். ரஷ்யா தன்னை 'நெருக்கடியான கேள்விகள்' கேட்கிறது என்று ரிப்பன்ட்ராஃப் புகார் செய்தார். மேலும், ரஷ்யா ஜெர்மனியுடன் சேர்ந்து பிரிட்டிஷ் பேரரசைத் தகர்த்துவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதற்கு மாலட்டோவ், 'பிரிட்டன் தோல்வியடைந்தது உண்மையானால்

நாம் ஏன் உங்களுடைய விமானப் படைத்தாக்கு காவற்கூடத்தி லிருந்து இவற்றை வாதித்துக்கொண்டிருக்கிறோம்' என்று பட்டென்று கேட்டார்.

இரண்டு வாரங்களுக்குப் பின் மாஸ்கோ மேற்படி வரைவில் கையெழுத்திட முன்வந்தது. எனினும், அது சில நிபந்தனைகள் விதித்தது. முதலில் பின்லாந்திலிருந்து ஜெர்மனி உடனடியாக வெளியேற வேண்டும்; அடுத்து, அது சோவியத்-புல்கேரிய பரஸ்பர உதவி ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்; டார்டனல்சில் சோவியத் தளங்கள் இருப்பதற்குச் சம்மதிக்க வேண்டும்; காகஸஸ் மலைத்தொடருக்கும் பாரசீக வளைகுடாவிற்கும் இடையேயுள்ள பிராந்தியத்தை சோவியத் யூனியனின் மண்டல மாக ஏற்றுக்கொள்ளவேண்டும்; மேலும், வடசகாவினில் ஜப்பான் அடைந்துவரும் நிலக்கரி, எண்ணெய்ச் சலுகைகளைக் கைவிடுமாறு செய்யவேண்டும்; இவையே ரஷ்யாவின் நிபந்தனைகள். இந் நிபந் தனைகளுக்கு ஜெர்மனி சம்மதித்தால்தான் அவ் வுடன்படிக்கை யில் கையெழுத்திடத் தயார் என்று மாஸ்கோ கூறிற்று. ஸ்டாலின் சோவியத் நலன்களைப் பாதுகாக்க விரும்பினர். அவற்றிற்கு எத் திசையிலிருந்து இடையூறு ஏற்படுகின்றன என்பதும் இப்போது அவருக்கு நன்கு புலப்பட்டுவிட்டது. (ஹிட்லரோ ஸ்டாலினை 'இரத்த வெறிபிடித்த அச்சுறுத்தக்காரன்' என்று பழித்தார்.) பிரிட்டன் அமெரிக்க உதவியுடன் தன் பதவிக்கு அறைகூவல் விடுக்குமுன், தான் ரஷ்யாவை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்பது ஹிட்லரின் திட்டம். அதன்பின் வேண்டு மானால் ஆங்கிலோ அமெரிக்க முகாமுடன் நெடுநாள் போர் புரிந்துகொள்ளலாம் என்றும், அம் முகாமைத் தோற்கடிப்பது கடினமாயினும், அந் நாடுகள் நாசியுரேசியாவைத் தாக்க முடியாது என்றும் அவர் நினைத்தார்.

(1941ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை, கருக்கலுக்கு முன் நாசி விமானப்படை சோவியத் விமானத் தளங்களைத் தாக்கி அவற்றின்மீது குண்டுமாரி பொழிய லாயிற்று.) அதே வேளை மூன்று பெரும்படைகள் தங்களை யாரும் வெல்லமுடியாது என்ற ஆணவத்துடன் ரஷ்யாவின் எல்லையை நோக்கிச் சென்றன. (அவற்றுள் ஒன்று லெனின்கிரேடையும், மற்றொன்று மாஸ்கோவையும், மூன்றாவது கார்கோவ், ரோஸ்டோவ், காகஸஸ் மூன்றையும் தாக்கின.) ஹிட்லரும் ஸிப்பன்ட்ராப்பும் பால்சிவிஸத்தைப் பழித்தனர்; ரஷ்யா ஆக்கிரமிப்புச் செய்யத் திட்டமிட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டினர். பிரிட்டனும், அமெரிக்காவும் ரஷ்யாவுக்கு அதிக உதவி செய்ய இயலாத நிலைமையில் இருந்தபோதிலும் உடனே அவைகள் ரஷ்யாவின்

உதவிக்கு முன்வந்தன. (இத்தாலி, சுலேவேக்கியா, குரோஷியா, ஹங்கேரி, ருமேனியா. பின்லாந்து, விஷி (Vishy), ∴பிரான்சு. பிராங்கோவின் ஸ்பெயின் (அது பால்சிவிசத்துடன் போரிட ஒரு படையையே அனுப்பி வைத்தது) ஆகிய நாடுகள் ஹிட்லர் நடத்தும் புனிதப் போரில் அவருடன் செயல்படலாயின.) (இப் போர் ஏற்பட ஓராண்டுக்கு முன்னமேயே சர்ச்சில் (ஜெர்மனியின் விபரீதப் போக்கைப்பற்றி) ∴பிளாண்டர்சிலும் பிகார்டியிலும் முன்னறிவிப்புச் செய்தார்.) அவர் கூறியதாவது: 'ஜெர்மன் எரிமலை ஒரு கூரிய அரிவாளைப்போன்று வடக்கேயுள்ள படைகளின் முதுகில் பாய்ந்து ஆழமாக வெட்டிவிட்டது. இவ் எதிரித் தாக்குதலுக்குப் பின்னுல் லாரிக்கணக்கில் படைகள் வந்து குவிந்தன. அவற்றிற்குப் பின்னுல் சுதந்திரமும் வசதியும் என்ன வென்றே தங்கள் நாட்டில் அறிந்திராத, ஆனுல். பிறநாடுகளில் அவற்றை அழிக்க எப்போதும் தயாராயுள்ள ஜெர்மானியரும் அவர்கள் படையினரும் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் வந்து மொய்த்தனர்.' (இதே போர் நாடகம் மீண்டும் ஸ்டெப்பி (புல்வெளி) முழுவதிலும் நடைபெறலாயிற்று.) எண்ணற்ற சோவியத் படையினர் கொல்லப்பட்டதாயும், (பிடிபட்டதாயும் பெர்லின் அறிக்கை (report) வெளியிட்டது.) ஜெர்மன் படை சோவியத் யூனியனுக்குள் நம்பமுடியாத தூரம்வரை ஊடுருவிச் சென்றது. சென்ற வழியெல்லாம் நாசமாக்கியது. அதைப் பார்க்குமிடத்து இத் தாக்குதலை நிறுத்தவே முடியாதுபோல் தோன்றிற்று. (அக்டோபர் 3ஆம் நாள் ஹிட்லர் 'எதிரியை முறியடித்து விட்டோம். இனிமேல் அவன் தலைதூக்கவே மாட்டான்' என்று பெருமிதமாகப் பேசினர்.) அவர் கூற்றை கிட்டத்தட்ட எல்லா அட்லான்டிக் சமுதாயத்தினரும் நம்பிவிட்டனர். (ரஷ்யாவை அழித்துவிட்டால் உலகை வென்ற மாதிரி என்று ஹிட்லர் 1941ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலிருந்து எண்ணிவந்தார்.)

லெனின்கிரேடு, சிவாஸ்டோபல் ஆகிய நகரங்களின் காவலாளர்களின் (தற்பாதுகாப்புக்) குண்டுகள் வெடிக்கு முன்னரே இவ்வெண்ணம் சிதறியது. இக் காவலாளர்கள் பகைவனுக்குச் சரணடைவதற்குப் பதிலாகப் பட்டினிகிடந்து மடிய விரும்பினர். மாஸ்கோவின் பாதுகாப்பாளர்கள் வெடித்த குண்டுகளுடன் ஹிட்லரின் மனக்கோட்டையும் தகர்ந்துபோயிற்று. அக்டோபர், நவம்பரில் நடைபெற்ற கடும் போர்களில் சோவியத் படையினர் ஜெர்மானியப் படையினரை மேலே செல்லமுடியாதவாறு தடுத்து நிறுத்தினர். இரண்டாம் உலக மகாயுத்தத்தில் முதல் முறையாக இவ்வாறு (ஜெர்மன் படையினர்) தடுக்கப்பட்டு இறுதியில் வந்த வழியே விரட்டியடிக்கப்பட்டார்கள். இதனைக் கண்ட ஜெர்மன் அதிகாரிகள், சோவியத் சிப்பாய்கள் (soldiers) கம்யூனிசத்தினுல்

முறையாக (நீதியுடன்) போரிடமுடியாதவாறு 'மிருகத்தன்மை யாக்கப்பட்டு விட்டார்கள்' என்றும், அச்சுறுத்த முடியாத அளவிற்கு மார்க்சீயத்தால் தங்கள் ஒழுக்கத்தை தவற விட்டு விட்டார்கள் என்றும், எங்கு அவர்கள் கடுமையாகத் தோற்கடிக்கப் பட்டார்கள் என்பதை உணரக்கூடிய அறிவில்லாதவர்களாக ஆகி விட்டார்கள் என்றும் தூற்றினர்கள். நவம்பர் இறுதியில் சோவியத் படைகள் எதிரியை முறியடிக்க முற்பட்டன. முதலில் ரஸ்டோவைக் கைப்பற்றின ; பின்னர் கிரெம்லினுக்கு அருகிலேயே வான்போக்கின் துருப்புகளைச் சிதறடித்தன.

முன்பொருகால் ஹிட்லர் இங்குக் கூறியது குறிப்பிடத்தக்கது. 'தூக்கத்தில் நடப்பவனைப்போல் நானும் உறுதியுடன் நான் விரும்பும் வழியில் செல்கிறேன். இறைவன் எனக்குக் காட்டி இருக்கும் வழிதான் அது'. ஹிட்லரின் உள்ளுணர்வே செர்மானியப் பேரரசு ஐரோப்பா முழுவதையும் கைப்பற்றத் தூண்டியது. அதுவே போனபார்ட்டின் அழிவுக்குக் காரணமாய் அமைந்த செயலில் ஈடுபடும்படி தூண்டியது. கார்சிக்கா நாட்டவனுகிய நெப்போலியனை வீணில் மஸ்கோவியைக் கைப்பற்றினன். இவ்வாஸ்திரியப் போர்வீரருக்கோ (ஹிட்லரோ) அதுதானும் கைப்பற்ற இயலவில்லை. பனிச்சரிவால் ரஷ்யாவை அழிக்க முடியாவிட்டாலும் அதைப் போர் மூலமாவது அழித்தாக வேண்டும். ஆனால், இவ் வழியைப் பின்பற்றுவதற்கு முதலில் அமெரிக்காவிலிருந்து (தொடக்கத்தில் கொஞ்சமாகவும், பின்னர் ஏராளமாகவும்) ரஷ்யாவுக்கு ஏற்றுமதி யாகும் உணவுப் பொருட்களைத் தடை செய்யவேண்டும். இதற்கு ஜெர்மனி ஒரு வழி கண்டுபிடித்தது. அமெரிக்கக் கடற் படை வலிமையை ஜப்பான் அழித்துவிட்டுக் கிழக்கு ஆசியாவின் பெரும்பகுதியைத் தன் குடைக்கீழ்க் கொண்டுவந்துவிட்டால், அட்லான்டிக் மகா சமுத்திரத்திலுள்ள நாசிகளின் 'யூ' படகுகள் அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்குமிடையேயுள்ள கடல்வழியை அடைத்துவிடும் என்றும், வடதிசை மார்க்கமாக முர்மான்சுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரும் கப்பல்களை மூழ்கச்செய்து விடும் என்றும், எதிர்பார்க்கப்பட்டது. இங்ஙனம் செய்தால் ரஷ்யாவை வென்றுவிடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆனால், பிரிட்டனை..... அடுத்து அமெரிக்காவை எங்ஙனம் வெல்வது?

பர்ல் துறைமுகம் ஹிட்லரின் கண்ணை உறுத்தியது. 1941, டிசம்பர் 11ஆம் நாள் ஜெர்மனி அமெரிக்காமீது போர் தொடுத்தது. ஜெர்மன் பாராளுமன்றத்தில் பேசுகையில் ஹிட்லர், 'இறைவன் என்னை இம் முக்கியமான பழிக்குப் பழிவாங்கும்படி கட்டளை யிட்டுள்ளான். அக் கட்டளையை நிறைவேற்றும் செயலில்தான்

நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம்' என்று கூறினர். மேலும் அவர் கூறியதாவது: 'ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கும் எனக்கு மிடையே உலகளவு வித்தியாசம் இருக்கிறது. ரூஸ்வெல்ட் என்னைக் கொள்ளைக் கூட்டத் தலைவர் என்று சொன்னால் சொல்லட்டும். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ரூஸ்வெல்ட்டால் என்னை அவமானப்படுத்த முடியாது. ஏனெனில், ஜனாதிபதி வில்சனைப் போன்று அவருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது. இதற் கெல்லாம் காரணம் இந்த யூதர்கள்தாம்; இனிமேல் நாம் பொறுத்துக்கொண்டிருக்க வியலாது' என்று கூச்சலிட்டார்.

அதே நாள் புதிய ஒப்பந்தம் ஒன்று வரையப்பட்டது. அது 1940 செப்டம்பர் 27-ல் செய்யப்பட்ட முக்கூட்டு ஒப்பந்தத்தின் பிற் சேர்க்கையாகும். அதன் பிரகாரம் ரோம், பெர்லின், டோக்கியோ ஆகிய மூன்றும் ஒன்றுசேர்ந்து பிரிட்டனையும் அமெரிக்காவையும் ஒழித்துக்கட்ட உறுதிபூண்டன. மேலும், தனிப்பட்ட எந்தப் போர் நிறுத்த உடன்பாட்டிற்கோ அன்றிச் சமாதானத்திற்கோ இசைவதில்லையென்றும் உறுதி பூண்டன. அன்றியும், வெற்றிக்குப் பின்னர் 'உலகில் நேர்மையான அரசு முறையை ஏற்படுத்த வேண்டும்' என்றும், அவ்வரும்பெரும் பணியில் மூன்று நாடு களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. 1942-ல் ஜப்பான், கிழக்கு ஆசியா முழுவதையும் தன் குடைக் கீழ்க் கொண்டுவந்துவிட்டது. ஜெர்மானியப் படை ரஷ்யாவைமறு முறை கைப்பற்றும் நோக்கத்தில் வால்காவரை சென்றுவிட்டது. படைகள் கைகலக்க இன்னும் நேரம் இருந்தது....

ஜெர்மன் தெய்வங்களின் (தலைவரின்) இறுதிப் போரும் மூடிவும் (Götterdämmerung): ரஷ்யாவின் வீரம், அமெரிக்கப் போர் உற்பத்தி, பிரிட்டிஷ் மனவுறுதி, கைப்பற்றப்பட்ட நாடுகள் மறைமுகமாக நடத்திய ரகசியப் போர் ஆகியவனைத்தும் சேர்ந்து உலகை வெல்ல ஜெர்மன் வல்லாட்சியாளர் போட்ட திட்டத்தைத் தவிடுபொடியாக்கின. 1941 நவம்பர் 7ஆம் நாள் பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த 400 விமானங்கள் (Planes) பெர்லின்மீது குண்டுமாரி பொழிந்தன. 1942 மே 30ஆம் நாள் ஆயிரம் விமானங்கள் சேர்ந்துகொண்டு 3,000 குண்டுகளைக் கலோன்மீது சொரிந்தன. அதற்கு அடுத்த நாள் எஸ்ஸனிலுள்ள க்ருப் போர்க்கருவித் தொழிற்சாலைமீது ஆயிரக்கணக்கான குண்டுகள் வெடித்தன. 1943ஆம் ஆண்டு கோடையில் அமெரிக்கப் போர் விமானங்கள் (bombers) பட்டப் பகலில் ஜெர்மன் நகரங்களைத் தரையோடு தரையாக்கிவருங்கால் பிரிட்டிஷ் விமானங்கள் இரவில் அவ் வேலையைத் தொடர்ந்து செய்யலாயின. இக் குண்டுமாரியால் ஏற்பட்ட உயிர்ச்சேதமும்

நட்டமும் அளவிறந்தனவாயினும் ஜெர்மானியப் போர்த் தலைவர்கள் உற்பத்திக்கு ஊறுவராதவாறு பார்த்துக்கொண்டனர். 1943-ல் முன்னினும் உற்பத்தி பன்மடங்கு அதிகமாயிற்று. ஜெர்மானியப் படையின் பேரரசைப் பாதுகாக்க முடியாது போனலும், அவர்கள் எண்ணிக்கை மட்டும் குறையவில்லை. மாறுக, அவர்கள் எதிரியின் படை பலத்தைக் குன்றச் செய்தனர். 1944ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நேசநாடுகளின் விமானங்கள் (ஜெர்மனியின்) விமானத் தளங்களைத் தங்கள் குறியாகக் கொண்டு குண்டுகளை அவற்றின்மீது அள்ளிச் சொரிந்தன. 1944 மார்ச் 8ஆம் நாள் 2,000-க்கும் அதிகமான அமெரிக்க விமானங்கள் பெர்லினைத் தரைமட்டமாக்கின. போர் முடியுமுன்னரே அந்த நகரிலுள்ள முக்கியமான இடங்கள் உட்பட எல்லாம் மண்ணோடு மண்ணாய்க் கலந்துபோயின.

எனினும், நாசி அரக்கன் முற்றிலும் மடிய இன்னும் சில காலம் பிடித்தது. 1943, பிப்ரவரி முதல் நாளன்று பாலசின் 6ஆம் படை ஸ்டாலின்கிரேடில் சோவியத் படையினரால் சூழப்பட்டு இறுதியில் அதற்குச் சரணடைந்தது. அது சோவியத் யூனியனின் இரண்டாவது பெரிய தாக்குதலாகும். அது பின்னல் நடக்கவிருந்த நிகழ்ச்சிகளின் முன்னோடியாய்—முன்னறிவிப்பாய் அமைந்தது. போரினல் களைப்படைந்து, நம்பிக்கையிழந்து நின்ற மக்களைத் தம் தோல்வியினின்றும் பிறந்த வீரச் சொற்களால் ஊக்குவித்தார் கோபெல்சு. அது நல்ல பயனளித்தது. என்ன ஆச்சரியம்! அவரது வீரச் சொற்களைக் கேட்ட மக்கள் வீறுகொண்டெழுந்தனர்; சோர்வுற்றுக் கிடந்தவர் (நொடிப்பொழுதில்) கொள்கை வெறியர்களாய் மாறினர். 'ஐரோப்பா எனப்படும் கோட்டையைக்' (Fortress) காக்கத் துள்ளிக் குதித்தனர். நாசித் தலைவர்கள் யூ எஸ் எஸ். ஆருக்கும் அட்லான்டிக் வல்லரசுகளுக்குமிடையே பிளவை விரும்பினர். அவர்கள் விருப்பம் நிறைவேறவிருந்தது. எனினும், அது காலங் கடந்து நிறைவேறியதால் அவர்களுக்குப் பயனில்லாமல் போயிற்று. 'யு' படகுகளின் போர்த்திட்டத் தோல்வி, வட ஆஃப்ரிக்க இழப்பு, இத்தாலியின் சதிச் செயல், ஜூனில் நடைபெற்ற நார்மண்டி படையெடுப்பு, டெனிபர், விஸ்டுலா, ஓடர் நதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இரக்கமற்ற சோவியத் படையெடுப்பு, ரைன் நதிவரைக்கும், அதற்கு மேலும் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகளால் ஏற்பட்ட அழிவு—இவையனைத்தும் (ஜெர்மன் நாடகத்தின்) சோக முடிவைப் படம் பிடித்துக் காட்டின.

நாசித் தலைமையைப் (ஹிட்லரை) பதவியிலிருந்து நீக்குவதற்காக உள்நாட்டினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியுற்றதால் (ஜெர்மனி) முழுச் சரணடைய வேண்டியதாயிற்று. அதனலன்றி

நேச நாடுகள் கடைப்பிடித்த 'நிபந்தனையற்ற சரண்' கொள்கை 1944, ஜூலை 20ஆம் நாளன்று 'எலிகள் ஒழிப்பு' என்ற தலையங்கத்தையொட்டி ஒலிபரப்பவிருந்த ரேடியோ பெர்லின், அதற்குப் பதிலாக ஹிட்லர் கொலைகாரர்களின் குறியில் விழுந்துவிட்டார் என்று ஒலிபரப்பியது. கிழக்கே தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற படைத்தலைவர் (staff) மாநாட்டில் கானல் கவுன்ட் கிளாஸ் வான் ஸ்டாபென்வர்க் ஹிட்லரின் நாற்காலிக்குப் பக்கத்தில் ஒரு சிறிய பெட்டி வைத்திருந்தார். அதற்குள் மணிக் கணக்குப்படி வெடிக்கும் குண்டு ஒளிமறைவாய் வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பலியாயினர் சில அதிகாரிகள். அதனால் காயமடைந்தோர் ஒரு டஜன் பேர். ஆனால், ஹிட்லர் தனக்குப் பலத்த காயம் ஏற்படாமல் தப்பித்துக்கொண்டார். குண்டு வெடித்ததோ இல்லையோ உடனே அவர் ஒலிபெருக்கி (microphone) இருக்கும் இடத்திற்கு விரைந்தார். அதற்குள் தான் இறந்ததாக வெளியான செய்தியை மறுக்கவே அவ்விதம் விரைந்து சென்றார். அவ்வமயம் சதியாளர்கள் பெர்லினிலுள்ள பொதுக் கட்டடங்களைப் பிடிக்க எத்தனித்தனர். கிராண்டு அட்மிரல் கார்ல் டோனிட்சு அப்போது பேசுங்கால், 'புனிதமான சினத்துடனும், வரையறையற்ற மூர்க்கத்தனத்துடனும் நாம் இத் துரோகிகளைக் கைப்பற்ற முடியும்' என்றும், 'பைத்தியம் பிடித்த படைத் தலைவர்களைக் கொண்ட இச்சிறு கூட்டத்தை ஒழித்துக் கட்டுவோம' என்றும் கூறினார். இச் சதிச் செயலில் ஈடுபட்டவர்களில் உல்ரிச்வான் ஹாஸ்ஸல் போன்ற தூதர்களும், மாஸ்கோவிற்கு அனுப்பப்பட்ட இறுதித் தூதர் கவுன்ட் ஃபிரெட்ரிக் வெர்னர் வான் டெர் ஸ்கூலன்பர்க்கும், கார்ல் கோர்டலர் போன்ற தொழிலதிபர்களும் இருந்தனர்.

கட்சி உறுப்பினரின் 'இரத்தச் சுத்த சோதனை' (blood-purge) ஆரம்பமாயிற்று. அதன் விளைவுகளுக்கு ஆளாகாமல் தற்கொலை மூலமாகவோ, தூக்குப்போட்டுக்கொண்டோ அன்றித் தன்னைத்தானே சுட்டுக்கொண்டோ இறந்தவர்கள் பலர். அவர்களில் ஜெனரல் ஃபிரடெரிக் ஒல்பிரிட்ச், ஜெனரல் ஏனர்ஸ்ட் ஹோப்னர் போன்ற தலைவர்களும், ஜெனரல் லுட்விக் வான்போக், குர்ட் சீச்சர் போன்ற முன்னாள் படைத்தலைவர்களும், ரோமல், ஹெல்டோர்ஃப், ஹாஸ்ஸல், ஸ்குலன்பர்க், கோர்டலர், விட்ஸ் லீபன், ஆல்பிரெக்ட் ஹாஷோபர் ஆகியோரும் இன்னும் பலரும் இருந்தனர். இதனால் ஏற்பட்ட போரில் ஜெர்மானியப் படை வெறியுடன் போரிட்டது. எனினும், அப் படை இப்போது தாயகத்தின் எல்லைக்குத் திரும்பலாயிற்று. அப் போரில் புதிய உள்நாட்டுப் படையும் கலந்துகொண்டது. இஸ்தாம்புலில் இருந்த அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த தூதியல் அதிகாரி (naval attache) ஜார்ஜ் எச். ஏர்ல் என்பவரிடம் நாசி ஏஜன்டுகள் சரணடைய முன்வந்தார்கள். ஆனால், அவர்கள் ஒரு

நிபந்தனை விதித்தார்கள். நேசநாடுகள் படைத்தலைமை ஜெர்மானியப் படை உதவியுடன் 'ஐரோப்பாவினின்று' ரஷ்யாவை வெளியேறச் செய்தால் தாங்கள் சரணடையத் தயாராக இருப்பதாகக் கூறினர். இதைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற அமெரிக்க அதிகாரி இப் பிரேரணையை ரூஸ்வெல்டிற்கு அனுப்பினர். அமெரிக்க ஜனாதிபதியோ அதைப் பார்த்துவிட்டு மூச்சுப் பேச்சு விடாமல் அவ் அமெரிக்க அதிகாரி ஏர்லி சமோவாவிற்கு மாற்றிவிட்டார். நவம்பர் மாதம் பீர் ஹால் புட்ஷ் எனப்படும் புரட்சி நிகழ்ச்சியின் ஆண்டு விழாவிற்கு ஹிட்லர் ஒரு செய்தி அனுப்பினர். அதில் 'ஜனநாயகங்களின் ஆதரவினால் சோவியத்துவம் (sovietism) நம் ஜெர்மானியப் பேரரசையும் நம் நாட்டு மக்களையும் அழிக்க முயன்றுவருகிறது. ஜனநாயகத்தை ஈர்க்கும் சக்தியுடைய யூதனே பால்சிவிசத்தைத் தோற்றுவித்தவன். அதைத் தூண்டிவிடுவதும் அவனே..... நம் நாட்டு மக்கள் அடுத்தடுத்து துரோகத்திற்கு ஆளாகி வருகின்றனர்..... (எனினும்) நான் இவ்வுலகில் உயிரோடு இருக்கும் வரை மற்ற ஐரோப்பிய நாடுகளை பால்சிவிசம் விழுங்கியமாதிரி அது ஜெர்மனியையும் விழுங்கவிடமாட்டேன்' என்று வீராவேசத்துடன் கூறினர்.

இறுதியாக 1944, டிசம்பரில் ஜெர்மனியப் படையினர் ஹங்கேரியில் ரஷ்யர்களைத் தாக்கினர்; பெல்ஜியத்திலும் லக்சம்பர்க்கிலும் அமெரிக்கப் படையோடு மோதினர். எனினும், முதற் கைகலப்பால் புதாபெஸ்டின் முற்றுகையை (seige) அவர்களால் நீக்கமுடியவில்லை. ஆர்டனீசில் ருண்டுஸ்டெடின் திடீர்தாக்குதலால் அமெரிக்காவின் முதற்படை சின்னபின்னப்படுத்தப்பட்டது. பின்னர் அது மியூஸ் ஆற்றை நோக்கிச் சென்றது. ஆனால், ஜனவரி நடுவில் ஏற்பட்ட 'பல்ஜ் போர்க்களத்தில்' ஜெர்மனியப் படை தோற்கடிக்கப்பட்டது. மத்திய போலந்தை கம்யூனிஸ்ட் படையினர் இறுதியாகத் தாக்கியதே இதற்கு முக்கிய காரணமாகும். எதிரிகள் (சோவியத் படையினர்) அருகே வரவர நாசித் தலைவர்கள் தங்கள் படையினர் உள்ளத்தில் வீரக்கனலை மூட்டினர். வீரவுரையைச் செவிமடுத்தோர் வீறுகொண்டெழும்படி ஊக்குவித்தனர்; எதிரியை அச்சுறுத்தினர். ரூஸ்வெல்ட் இறந்த செய்தியைக் கேட்ட ஹிட்லர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். அவர் 'போர்க் குற்றவாளிகளிலேயே கடுங் குற்றவாளியை (ரூஸ்வெல்டை) ஊழ்வினை இவ்வுலகினின்றும் நீக்கி விட்டது' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் கூறினர். ஆல்பைன் காவற்கோட்டைப் (Redoubt) பாதுகாப்பிற்காகவும், எதிரிகளின் கையாள்கள் நேசநாட்டுப் படைக்குப் பின்னால் நின்று அவற்றை அழிக்கக்கூடிய படையினரைத் தயாரிப்பதற்காகவும் திட்டங்கள் தீட்டப்பட்டன. வன்செயலில் ஈடுபடவே இத் திட்டங்கள் வகுக்கப்பட்டனவென்று கூறலாம்.

தீட்டங்களனைத்தும் தவிடுபொடியாயின. ஏப்ரல் 13ஆம் நாள் வியன்னா ரஷ்யர் கைவசமாயிற்று. ஏப்ரல் 30 அன்று மியூனிச் அமெரிக்கர் வசமாயிற்று. சூக்கோவின் படையினர் ஏப்ரல் 22-ல் பெர்லின்மீது தங்கள் இறுதித் தாக்குதலில் ஈடுபட்டனர். ஆயிரக் கணக்கான குண்டுகளும், டாங்கிகளும் (tanks), விமானங்களும் இடியோசைபோல் குமுறத் தொடங்கின மூன்று நாட்களுக்குப் பின்னர் எல்பி நதிக் கரையிலுள்ள டார்கோ என்னுமிடத்தில் ரஷ்யரும் அமெரிக்கரும் மகிழ்ச்சியுடன் கூடினர். முன்னரே வீழ்ச்சியுற்றுப்போன தலைநகரில் ஜெர்மன் பாராளுமன்றக் கட்டடம் மறுமுறையும் தீயினுக்கு இரையாயிற்று. இம் முறை வால்காவிலிருந்து கிளம்பி வழி முழுவதும் சண்டைசெய்து இறுதியில் இவ் வெற்றியைச் சுவைக்க வந்த கம்யூனிஸ்ட்டுகளே ஜெர்மன் பாராளுமன்றக் கட்டடத்துக்குத் தீ வைத்தனர். ஏப்ரல் 29-ல் காசர்விட்டால் இத்தாலியிலும் ஆஸ்திரியாவிலுமிருந்த ஒரு மில்லியன் ஜெர்மன் வீரர்கள் சரணடைந்தனர். கடைசியில் மே 2-ல் பெர்லின் சரணடைந்தது. மே 4-ல் ஹாலந்து, டென்மார்க், வட ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்த ஜெர்மன் படையினர் சரணடைந்தனர். ரஷ்யருக்குச் சரணடைவோம் என்று அவர்கள் (ஜெர்மானியர்) கனவில்கூட நினைத்திலர். எனினும், அப்போதைய நிலைமையில் அப்படி நடப்பதற்கில்லை என்றும் திட்டவட்டமாகக் கூறமுடியாத வாறு இருந்தது.

கைப்பற்றல்: ஜெர்மனி படுதோல்விக்கு ஆளான அதே ஆண்டு, மே மாதத் தொடக்கத்தில் ஃபிலன்ஸ்பர்க்கில் மேலை வல்லரசுகளுடன் சமாதானம் செய்துகொள்வதற்காகவும், ரஷ்யாவுடன் போரைத் தொடர்ந்து நடத்தவும் ஓர் 'அரசாங்கத்தை' ஏற்படுத்த டோனிட்சு முன்வந்தார். அவரது முயற்சிகள் பயனளிக்க வில்லை. ஆனால், பெரிய 'ஐக்கிய நாடுகளோ', 'ஜெர்மன் பிரச்சினைக்கு' யால்டாவில் தாம் அனைத்தும்கூடி ஒரு தீர்வு கண்டுவிட்டதாய் நினைத்தன. ஜெர்மனி நான்கு மண்டலங்களாகத் துண்டாடப்பட்டது. பெர்லின்மீது வெற்றி பெற்ற நால்வரும் ஆட்சி செய்து வந்தனர். அந் நகருக்கு ஏற்பட்ட சேதத்தை நான்கு கூறு போட்டனர். ஜெர்மனி முழுவதையும் பாதிக்கும் விஷயங்களைக் கலந்து ஆராய்வதற்காக ஒரு நேச நாடுகளின் இராணுவ ஆதீனக் (கட்டுப்பாட்டுக்) கவுன்சில் (ஐசன்-ஹோவர், மாண்ட்கோமரி, சூக்கோ, டி-லாட்ரே ஆகியோரைக் கொண்டது) அமைக்கப்பட்டது. அது 1945, ஜூன் 5-ல் முதன் முதலாகப் பெர்லினில் கூடியது. ஜெர்மனியைத் தொழில்மயமாக்குவதற்காகத் தீட்டப்பட்ட 'மார்கென்தோ திட்டம்' செயல்படுத்தப் பட்டிருப்பின் 25,000,000 ஜெர்மானியர் பிழைக்க வழியின்றித் திண்டாடிப்போய் இருப்பர். எனவே, அத் திட்டம் கவனமாக

ஆலோசிக்கப்படவில்லை. போட்ஸ்டாமில் வெளிவிவகார அமைச்சர்கள் கவுன்சில் ஒன்று கூடி, இறுதியாக 'ஜெர்மனிக்கு ஒரு சமாதான உடன்படிக்கையைத் தயாரிக்க வேண்டுமென்றும், அதை ஒப்புக்கொள்ளத்தக்க அரசாங்கம் ஒன்று ஜெர்மனியில் அமைக்கப்பட்டதும் அதை அவ்வரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது'. நான்கு நாடுகளுமாகச் சேர்ந்து ஜெர்மனியைக் கைப்பற்றியதன் நோக்கம் நான்கு ஆகும். அவை (1) நாசி மயமாக்குவதற்கு எதிர்ப்பு, (2) இராணுவக் கலைப்பு, (3) கார்ட்டல் என்ற வர்த்தகக் குழுக்களின் கலைப்பு, மற்றும் (4) ஜனநாயக மயமாக்குதல் ஆகியன.

வெற்றி பெற்றோருக்கு இடையில் 'கெடுபிடிப் போர்' மூண்டுவிடவே, இந் நான்கு குறிக்கோள்களும் மறு ஆய்வு செய்யப்பட்டன. அப்போது நிலவிய சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு ஜெர்மன் தேசீயவாதிகள் தங்கள் நாடு குறிப்பிட்ட காலக்கிரமத்தில் கார்ட்டல்மயம், இராணுவமயம், நாசிமயம் ஆகியவற்றைக் கொண்டுவருவதில் வெற்றி பெற்றனர். அவர்களில் செல்வாக்குடன் திகழ்ந்தவர்கள் நாசிகளே. கிழக்கு ஜெர்மனியைத் தவிர மற்றெல்லாப் பகுதிகளிலும், இத்தாலியிலும் ஜப்பானிலும் ஏற்பட்டது போல், தோல்வியினாலும், கைப்பற்றுதலினாலும் எவ்விதச் சமூகப் புரட்சியும் தோன்றிவிடவில்லை. கிழக்கில்மட்டும் இதுகாறும் நிலச் செல்வந்தர்களாய் விளங்கிவந்த ஜன்க்கர்களிடமிருந்தும், பல நூற்றாண்டுகளாக பிரஷ்யாவின் அரசியல் - இராணுவச் செல்வாக்குக் குழுவினராக விளங்கியவர்களிடமிருந்தும் ரஷ்யரும் போலந்தியரும் அவர்களின் உரிமையைப் பிடுங்கிக்கொண்டனர். கம்யூனிச வலுவந்த இணைப்பிற்குப் பெரிதும் உதவியாய் இருப்பது சமூகப் புரட்சி. இரண்டாம், மூன்றும் ஜெர்மானியப் பேரரசின் முதுகெலும்பாய் விளங்கியவர் நிலச்சுவான்தாரிகளும் தொழில், வர்த்தக அதிபர்களுமாவர். எனவே, இவர்களுடைய நெடுநாளைய அந்தஸ்தில் மாற்றங் கொண்டுவர மேலை வல்லரசுகள் தத்தம் மண்டலங்களில் விரும்பவில்லை.[6]

[6] 'மறுமுறை கார்ட்டல் மயமாக்கும் கொள்கைக்கு' என்ன ஏற்பட்டது என்பதுபற்றி விளக்கமாகத் தெரிந்துகொள்ள ஜேம்ஸ் ஸ்டூவர்ட் மார்டின் எழுதிய 'எல்லா மதிப்பு மிக்க மனிதர்களும்' என்ற நூலைப் (லிட்டில், பிரௌன், 1951) பார்க்கவும். இக் கொள்கையின் நடைமுறைக்கு எடுத்துக்காட்டாக ஆல்பிரட் குருப்வான் பேரஹ்லன் உண்ட் ஹால்பாச்சைக் கூறலாம். இவரது குடும்பத்தார் முதல் இரண்டு உலக மகாயுத்தத்தில் செர்மானியப் படையினருக்குப் போரிட உதவியாகவிருந்த பேரர்க் கலங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்த போர்க்கருவி உற்பத்தி சாலைகளின் சொந்தக்காரர்களாவர். அவர் தமக்கு 12 ஆண்டுகள் விதிக்கப்பட்டிருந்த சிறைத் தண்டனையை 6 ஆண்டுகளில் கழித்தார். அவர் அடிமைகளைப் பயன்படுத்தியதற்காகவும், அவர்களைத் துன்புறுத்தி வேலை வாங்கியதற்காகவும் 'போர்க் குற்றவாளி' என்று குற்றஞ்சாட்டப்பட்டார். அமெரிக்க ஹைகமிஷனர் ஜான் மக்லாய் அவரது தண்டனையைக் குறைத்தார். அவரது சொத்து சுகங்களைப் பறிமுதல் செய்யவேண்டும் என்று அளிக்கப்பட்டிருந்த தீர்ப்பை நீக்கினர். எனினும், அவரது உடைமைகளைக் கார்ட்டல் எதிர்ப்பு

நேச நாடுகள் செய்த ஒப்பந்தம் விரைவில் கைவிடப்பட்டது. நான்கு மண்டலங்களும் ஒரே பொருளாதார யூனிட்டாக—பகுதியாகக் கருதப்பட வேண்டியிருந்தது. ரூரையும் ரைன்லாந்தையும் ஜெர்மன் நாட்டினின்றும் பிரித்தாலொழியத் தான் ஒத்துழைக்கப் போவதில்லை என்று பாரிஸ் கூறிற்று; வாசிங்டனும் லண்டனும் அதற்கு இசையவில்லை. ரூரை நான்கு வல்லரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தாலொழிய, யு.எஸ்.எஸ் ஆர்.க்கு

10,000,000,000 டாலர்கள் போர் நஷ்ட ஈடு கொடுப்பது என்று உறுதியளித்தாலொழியத் தான் ஒத்துழைக்கப் போவதில்லை என்று மாஸ்கோ உறுதியாகக் கூறிற்று. இதற்கும் வாசிங்டனும் லண்டனும் இசையவில்லை. ∴பிரெஞ்சு (அரசாங்கத்தின்) அச்சத்தைப் போக்கும் நோக்கத்தில் ஜெர்மனியின் படைக்கலக் குறைப்புக்காக பைரன்சு (1946, ஏப்ரல் 29) 25 ஆண்டுகள் அல்லது 40 ஆண்டுகள்

கடவடிக்கைகட்குள் கொண்டுவர வகை செய்யப்பட்டது. நேச நாடுகளின் ஒத்துழைப்பினை பேரில் குருப் 1952 ஆகஸ்டு மாதம். எஸ்ஸனிலுள்ள தன் எஃகு, நிலக்கரித் தொழிற்சாலைகளையும் மற்றத் தொழில்களையும விற்கவோ அல்லது குத்தகைக்குவிடவோ ஒப்புக்கொண்டார். எனினும், அவர், தம் நீராவி இயந்திரம் (locomotive), ட்ரக் தொழிற்சாலைகள், ஹோட்டல்களையும், மற்றும் தனக்குச் சொந்தமான உண்மையான பண்ணை—எஸ்டேட்டுகளையும் (estate) மற்றத் தொழில் துறைகளையும் வைத்துக்கொண்டார். ஹாம்பர்க்கிலுள்ள புளோம் அண்டு வாஸ் கப்பல் கட்டும் தொழிற்சாலைமீது கட்டுப்பாடு உரிமைமட்டும் அவர் வைத்துக்கொண்டார்.

செல்லக்கூடிய நான்கு வல்லரசுகள் ஒப்பந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதைப் பாரிசும் மாஸ்கோவும் ஒப்புக்கொள்ள வில்லை. மாஸ்கோ தன் கைவசமிருந்த விவசாயத் தன்நிறைவு பெற்றிருந்த கிழக்கு மண்டலத்தினின்றும் போர் நட்ட ஈடு பெற முடிந்தது. ஆனால், வாசிங்டனும் லண்டனும் ஜெர்மானியர் பட்டினி கிடப்பதைத் தவிர்க்கவும், அவர்கள் பொருளாதாரத் துறையில் இழந்தவற்றை மீட்கவும், பெரிதும் தொழில்மயமாக்கப் பட்ட நகர்ப்புறமான மேற்கத்திய மண்டலங்களில் ஆண்டுதோறும் ஒரு மில்லியன் டாலர் செலவிட முன்வந்தன. இது போதாதென்று அவைகள், போலந்து, செக்கோசுலேவேக்கியாவிலிருந்தும், கிழக்கே கம்யூனிஸ்டு நாடுகளின் பயங்கரச் செயலிலிருந்தும் தப்பித்து வந்த அகதிகளுக்கு (rufugees) அபயம் அளிக்கும்படி நேர்ந்தது. இச் சூழ்நிலையில் மாஸ்கோ காலந்தாழ்த்தியது; பாரிஸ் தர்க்கம் செய்தது; லண்டனும் வாசிங்டனும் தங்கள் இரு மண்டலங்களையும் ஒன்றுக இணைத்து அதை 'பிசோனியா' என்று அழைக்க முடிவு கட்டின. மேலும், துண்டாடப்பட்டிருக்கும் இந் நாட்டின் பாது காப்பினல் தமக்கு நட்டம் ஏற்படாமல் லாபம் ஏற்படும் வகையில் ஓர் உடன்படிக்கை செய்வதற்குரிய முயற்சிகளில் அவை முனைந்தன.

இதற்கிடையில் தோல்வியடைந்த 'உயர்வினத்தார்' குறுகிய, உள்ளூர் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடலானார்கள். நான்கு அரசியல் கட்சிகள் அமைக்கப்பட்டன. அவை நான்கும் கிருத்துவ ஜனநாயகவாதிகள், சுதந்திர ஜனநாயகவாதிகள், சோசியல் ஜனநாயகவாதிகள், கம்யூனிஸ்ட்டு கட்சி முதலியவை ஆகும். கம்யூனிஸ்ட்டுகள் ரஷ்ய மண்டலத்தில்மட்டுமே செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அதுவும் ரஷ்ய ஆதரவினல். எனவே, அவர்கள் ரஷ்யாவின் கைப்பாவையாக—விளையாட்டுப் பொருளாக விளங்கி வந்தனர். இங்கு ரஷ்யா கொண்டுவந்த நெருக்கத்தினல் சோசியல் ஜனநாயகவாதியான ஓட்டோ குரோட்வோலும், கம்யூனிஸ்ட்டு களான வில்ஹம் பீக்கும் வால்ட்டர், உல்பிரைட்டும் 1946, ஏப்ரல் மாதம் தங்கள் இரு மார்க்சீய கட்சிகளையும் ஒன்றுக இணைத்து. அதற்கு சோசியலிஸ்ட்டு ஒற்றுமைக் கட்சி அல்லது எஸ்.இ.டி. (SED) என்று பெயரிட்டனர். மேற்கு மண்டல சோசியல் ஜனநாயக வாதிகள் குரோட்வோல் ஒரு துரோகி என்று கண்டனம் செய் தனர். எஸ்.இ.டி. மேற்கு மண்டலத்தில் தடை செய்யப்பட்டது. சோசியல் ஜனநாயகவாதிகள் கட்சி கிழக்கு மண்டலத்தில் தடை செய்யப்பட்டது.

1946-ல் உள்ளூர் அரசாங்கத் தேர்தல்கள் நடைபெற்றன. அதனல் ஏற்பட்ட அரசியல் நிலைமை சில ஆண்டுகள் நீடித் திருந்தது. கிழக்கில் சோவியத்முறைத் 'தேர்தல்கள்' எஸ்.இ.டி.-க்குப்

பெரும்பான்மை நிலைமையை அளித்தன. மேற்கிலோ தேர்தல்கள் சுதந்திரமாக நடைபெற்றன. அங்கு கன்சர்வேடிவ் தலைவர் கொன்ராடு அடினூரின் தலைமையில் இயங்கிய கித்துவர் ஜனநாயகவாதிகள் கட்சி, பாதி இடங்களைக் கைப்பற்றியது. குர்ட் சூமாக்கரின் சோசியல் ஜனநாயகக் கட்சி, மூன்றில் ஒரு பங்கு இடத்தைக் கைப்பற்றியது. ஆனால், அது பெர்லினின் மேற்குப் பகுதிகளில் பெரும்பான்மை இடத்தைக் கைப்பற்றியது. சுதந்திர ஜனநாயகவாதிகள் மொத்த வாக்குகளில் 10 சதவீதமும், கம்யூனிஸ்ட்டுகள் கஷ்டப்பட்டு 5 சதவீதமும் பெற்றனர். அதைவிட்டு அவர்கள் எப்போதும் தாண்டியதில்லை. அனேக ஜெர்மானியர், யூதர்கள் துன்புறுத்தப்பட்ட நாட்களும், கம்யூனிஸ்ட்டுகள் எதிர்க்கப்பட்ட நாட்களும், (ஜெர்மனிக்கு) வெற்றி வரும் நாட்களும் எப்போது மீண்டும் வரும் என்று கனவு கண்டனர். ஆனபோதிலும், போரைத் தொடங்காமல் அதில் தோல்வியுற்றதற்காக ஹிட்லரைக் குறை கூறிவந்த நாசிகள் கூட்டத்தினர் பகிரங்கமாகச் சட்ட விரோதமாக்கப்பட்டனர். ஜெர்மன் (பேரரசுக்) கட்சி (கார்ல் ஸ்காபெர்), சோசியலிஸ்ட்டு செர்மன் கட்சி (ஃபிரிட்ஸ் டோர்ல்ஸ்) போன்ற புதிய—நாசிக் கட்சிகளும், போலி நாசிக் கூட்டத்தினரும் 1920முதல் 30 வரை நடந்த தேர்தல்களில் என்.எஸ்.டி.ஏ.பி (NSDAP) கட்சியைவிட அதிக வாக்குகள் பெறமுடியவில்லை எனினும், அவை தத்தம் குறிக்கோளை வருங்காலத்திலாவது எய்திவிடலாம் என்று கனவு கண்டு வந்தன.

ஜெர்மானியரை அவர்களுக்கெதிராகப் பயன்படுத்தும் கீழ்நோக்கத்தில் வல்லரசுகள் அனைத்தும் அவர்களின் உதவிக்குக் கெஞ்சிக் கூத்தாடின. ஜெர்மன் மீட்பு, படைக்கலக் குறைப்பு, நடுநிலைமை, ஃபாசிஸ எதிர்ப்பு, 'சோசியலீசம்,' புதிய எல்லைகளுக்குள் ஒற்றுமை ஆகியவற்றை ஆதரித்தார் மொலட்டோவ். ஸ்டட்கார்ட்டிலும் (1946, செப்டம்பர் 6) மற்ற இடங்களிலும் பேசுங்கால் பைரன்சு, ஜெர்மன் அரசு இறைமை (sovereignty), முதலாளித்துவம், கம்யூனிச-எதிர்ப்பு, ஜெர்மனிக்குச் சாதகமாக ஓடன்-நீசி கோட்டை மாற்றியமைத்தல் ஆகியவற்றை ஆதரித்துப் பேசினார். அவர் 'ஒற்றுமையையும்' விரும்பினார். அதற்காக மேற்கு ஜெர்மனியுடன் ஒரு தனி உடன்படிக்கை செய்யவும் முன்வந்தார். அதன்கீழ் பிரஷ்யாவை ரஷ்யாவிடமிருந்து காக்கவேண்டுமென்பது அவரது நோக்கம். இதே கருத்துகளை ஜெனரல் லூசியஸ் க்ளேயும், ஜெனியர் வில்லியம் எஸ். டிரேப்பரும் கொண்டிருந்தனர். இவையனைத்தும் நேச நாடுகள் வெற்றியடைந்து இரண்டு ஆண்டுகளுக்குள் செர்மானியர் உள்ளத்தில் புதிய நம்பிக்கைச் சுடரை உண்டாக்கின. இவையனைத்தும் காலஞ்சென்ற டாக்டர் கோபல்சு 'இட்ட கட்டளைகள்' ஆயின.

ஜெர்மனியை ஆள நடைபெற்ற சண்டை: இந் நூற்றாண்டு நடுவில் ஜெர்மனியை ஆளும் (அதிகாரம் பெறும்) தோக்கத்தில் ஒரு பெரும் போராட்டமே நடைபெறலாயிற்று. அதில் எங்குத் துண்டாடப்பட்ட செர்மனி ஒன்றுசேர்க்கப்பட்டு ரஷ்யாவின் துணை நாடாக (satellite) ஆக்கப்பட்டுவிடுமோ என்றும், அதனால் எங்கு (ஐரோப்பாக்) கண்டத்தில் ரஷ்யாவை எதிர்க்க முடியாது போய்விடுமோ என்றும், அதனால் எங்கு ஐரோப்பா முழுவதும் கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கத்தில் கொண்டுவரப்பட்டு விடுமோவென்றும் யு.எஸ்.ஏ. அச்சமடைந்தது. அமெரிக்காவோ, ஜெர்மனி முழுவதையாயினும், அல்லது அது இயலாவிட்டால் மேற்கு ஜெர்மனியையாயினும் கிழக்கிற்கு (ரஷ்யாவிற்கு) எதிராக மேற்கு நாடுகளின் நலனுக்காகக் கைப்பற்றிவிடலாம் என்று நம்பிக்கை பூண்டது. அதே அச்சம் ரஷ்யாவிற்கும் ஏற்பட்டது. எங்கு ஜெர்மனி ஒற்றுமையாக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டு, 1945-ல் கிரெம்லின் கிழக்கு ஐரோப்பாமீது நிலைநாட்டிய அதிகாரத்திற்கு ஊறு ஏற்பட்டுவிடுமோ என்றும், எங்கு மேற்கு ஐரோப்பாவை 'சோவியத் மயமாக்கும்' தனது கனவில் இடி விழுந்துவிடுமோ வென்றும் ரஷ்யா அஞ்சியது. ஒன்றுபட்ட ஜெர்மனியை ரஷ்யாவின் நேச நாடாக ஆக்க முடியும் என்பதுதான் மாஸ்கோவின் நம்பிக்கை. அந் நம்பிக்கை பலிக்காதுபோகும் பட்சத்தில் ஜெர்மனியின் படைகளைக் கலைத்து அதை ஒரு நடுநிலை நாடாக ஆக்க விரும்பியது. அதுவும் நடக்காதபட்சத்தில் கிழக்கு ஜெர்மனியையாவது சோவியத் முகாமிற்குள் இணைத்து மேலை நாடுகளுக்கு எதிராக அதன் வலிமையை அதிகரித்துவிடலாம் என்று அது நம்பிக்கை பூண்டது.

இரு பெரு வல்லரசுகளும் இந் நம்பிக்கைகளை வளர்த்து வந்தனவேயன்றி, இக் கனவை நனவாக்கக்கூடிய செயலில் ஈடுபடக் கூடிய துணிவு அவைகளிடம் இல்லை. தன் வலிமையைப் பயன் படுத்த அவை அஞ்சின. பலாத்காரத்தில் இறங்கினால் அதனால் ஏற்படக்கூடிய உலகப் போரை எங்ஙனம் 'வெல்ல' முடியும் என்ற பெருங் கேள்விக்குறி அவைகளைச் செயலில் ஈடுபடாமல் தடுத்து வந்தது. எனவே, இரண்டும் அரசியல் தூதியல் தந்திரத்தில் இறங்கின. அங்கும் பேச்சுவார்த்தைகள் வெற்றியுடன் நடைபெற்றால் ஒரு முடிவுக்கு—உடன்படிக்கைக்கு வரவேண்டி வந்துவிடும் அல்லவா? அதனாலும், இரு தரப்பினரும் தத்தம் 'முக்கிய' நலன்களையும் 'புனிதமான' கொள்கைகளையும் கைவிட முன்வரவில்லை. ஆகையால் அவைகட்கு இடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளால் உடன் படிக்கை எதுவும் உருவாகவில்லை. அதற்கு மாறாக, ஜெர்மன் நாட்டைக் கைப்பற்றியவுடன் (வல்லரசுகள்) துண்டாடியதுபோல் இம் முறையும் அது கூறுபோடப்படும் நிலைமை ஏற்பட்டது.

சோவியத் யூனியன் நேசநாட்டு ஆதிக்கக் கவுன்சிலினின்றும் வெளிநடப்புச் (walkout) செய்ததும், பெர்லினிலுள்ள நேசநாட்டு ஆதிக்கக் கவுன்சிலும் 1948, மார்ச்சு மாதம்முதல் செயல்படாமல் இருந்துவிட்டது. மேலை வல்லரசுகள் 'ட்ரீசோனுவில்' மேற்கு ஜெர்மன் அரசை அமைத்துவிட முடிவு செய்தன. ஜூன் மாதம் மேற்கு ஜெர்மனியில் புதிய நாணய முறை (currency) அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. பழைய பத்து மார்க்குகள் (Reichsmarks) ஒரு புதிய மார்க்கிற்குச் (Deutsche Mark) சமமாக்கப்பட்டன. ஜூன் 24ஆம் நாள் சோவியத் அதிகாரிகள் மேற்கு பெர்லினுக்கும் மேலை மண்டலங்களுக்குமிடையே இருந்த நில, நீர்ப் போக்குவரத்து மார்க்கங்களையும் பிரயாணத்தையும் அவற்றில் 'ஏதோ நுணுக்கமான கோளாறுகள்' ஏற்பட்டுவிட்டனவென்ற சாக்குபோக்குக் காட்டி அடைத்துவிட்டனர். உண்மையில் அவர்கள் நோக்கமே வேறு. புதிய மேலை நாணய முறையை அவர்கள் தடுக்க விரும்பினர்கள். மேலை வல்லரசுகளை பெர்லினிலிருந்து வெளியேற்றிவிட முடியுமா இல்லையா என்று பார்ப்பதற்காகவும், அது முடியாவிட்டால் அவர்கள் ஆதிக்கத்திலிருக்கும் (மேற்கு) மண்டலங்களில் மேற்கு ஜெர்மன் அரசை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு செய்வதற்காகவுமே இந்த 'பெர்லின் முற்றுகையை' (Blockade) ரஷ்யா விதித்தது என்று துணிந்து கூறலாம். படைவலிமைகொண்டு போக்குவரத்துச் சாலைகளை (highways) மீண்டும் திறப்பதற்காக ஜெனரல் க்ளே முயற்சித்தார். அதற்கு (நேசநாட்டு அரசாங்கங்கள்) இசையவில்லை. சோவியத் நடவடிக்கைகளைக் கண்டு மேலை வல்லரசுகள் வாளாவிருக்கவில்லை. வாசிங்டனும், லண்டனும், பாரிசும் முற்றுகை செய்யப்பட்டிருக்கும் மேற்கு பெர்லின் மக்களுக்கு 'விமானம்' மூலம் உணவுப் பொருள்களும் எரிபொருள்களும் ஏராளமாக அனுப்பிவைத்தன. இதனால் கம்யூனிஸ்ட்டுகள் போட்ட திட்டம் பலிக்காதுபோயிற்று. எனவே, நேசநாட்டு விமானங்களைச் சுட்டு வீழ்த்தவேண்டுமென்று ஒருசில சோவியத் அதிகாரிகள் விரும்பினர். ஆனால், அவ் விருப்பத்திற்கு (கம்யூனிஸ்ட்டு அரசாங்கம்) இசையவில்லை.

ஐ.நா.விற்கு உள்ளும் புறமும் மேற்கொள்ளப்பட்ட நீண்ட பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை. மீண்டும் மீண்டும் முட்டு நிலையே ஏற்பட்டது. பின்னர் 1949, ஜனவரியில், நியூயார்க்கில் ஜெசப்-மாலிக் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மேலை வல்லரசுகள் தாங்கள் விதித்திருக்கும் போக்குவரத்து எதிர்ப்புத் தடையை (counter blockade) நீக்கிவிட்டுப், புதிய வெளிநாட்டு அமைச்சர்கள் கவுன்சில் ஒன்றைக் கூட்டுவதற்கு முன்வந்தால், புது நாணய முறை பற்றிய பிரச்சினையை அறவே மறந்துவிட்டுப் போக்குவரத்துத் தடையை நீக்க மாஸ்கோவும் தயாராக இருப்பதை அப் பேச்சுவார்த்தைகள் உணர்த்தின. இதற்கு இருதரப்பினரும் ஒப்புக்

கொள்ளவே, 1949, மே 11-ல் போக்குவரத்துத்தடை நீக்கப்பட்டது. எனினும், மேயில் நடைபெற்ற கவுன்சில் கூட்டத்தில் அடிப்படைப் பிரச்சினைபற்றியே ஆலோசிக்கப்படவில்லை.

அதற்கிடையில் மேலை வல்லரசுகள் தங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைந்தன. பிரிட்டன் கொண்ட ஐயுறவுகளையும், ஃபிரான்சு அடைந்த அச்சத்தையும் யூ.எஸ்.ஏ. முதலில் நீக்கியது. பின்னர் அது வரவர முதலில் பொருளாதார மீட்சி என்ற பெயரிலும், அடுத்து அரசியல் ஒற்றுமை என்ற பெயரிலும், இறுதியில் மறுபடைக் கலச் சேர்ப்பு என்ற பெயரிலும் செர்மன் கோரிக்கைகளுக்குத் தலைசாய்த்தது. மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்புத் திட்டத்தில் ஜெர்மனியையும் பங்குகொள்ள வைப்பதற்குத்தான் அது இவ்விதம் செய்தது. 1949-ல் யூ.எஸ்.எஸ்.ஆர். நீங்கலாக ஒரு சர்வதேச ரூர் அதிகாரக் குழு (authority) அமைக்கப்பட்டது. பின்னால், ரூர் ஜெர்மன் அரசிறைமையின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. பானில் செயலாற்றிய சட்டசபை (assembly) அநேக ஆரவாரங்களுக்குப் பின்னர், ஓர் அடிப்படைச் சட்டமாக அரசியலமைப்பை வரைந்தது. அது 1949, மே 20ஆம் நாள் அமலாக்கப்பட்டது. அதன்கீழ் 'ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு' (federal republic) அமைக்கப்பட்டது. அத்துடன் இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. 'சுவாதீனச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. நேசநாட்டு உயர்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஜெனரல் க்ளேயின் இடத்தில் மக்கிளாய் நியமிக்கப்பட்டார். 1949, ஆக. 14-ல் ஜெர்மன் சட்டசபைக்கு (Bundestag) தேர்தல்கள் நடைபெற்றன. அதில் கிறித்துவ ஜனநாயகவாதிகட்கு 139 இடங்களும், சோசியல் ஜனநாயகவாதி கட்கு 131 இடங்களும், சுதந்திர ஜனநாயகவாதிகட்கு 52 இடங் களும், பவேரியன் கட்சிக்கும் ஜெர்மன் கட்சிக்கும் தலைக்கு 17 இடங் களும், கம்யூனிஸ்ட்டுகளுக்கு 15 இடங்களும் கிடைத்தன. இப் புதிய ஆட்சியில் பெத்தோவன் பிறந்த பான் மாநகரத்தில் (சுதந்திர ஜனநாயகவாதியான) தியடோர் ஹீயஸ் குடியரசுத் தலைவராகவும், கொன்ராடு அடினுர் சான்சலராகவும் நியமிக்கப்பட்டனர். இதைக் கண்ணுற்ற மாஸ்கோ, தன் ஆதிக்கத்தின் கீழுள்ளமண்டலத்தில் எஸ். இ. டி. (சோசியலிச ஒற்றுமைக் கட்சி) மூலம் 'ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை' நிறுவியது. பெர்லின் அதன் தலைநகரா கியது. வில்ஹெல்ம் குடியரசுத் தலைவராகவும், ஓட்டோ குரோட்வோல் தலைமை அமைச்சராகவும், வால்டர் உல்பார்ட் உபதலைமை அமைச்ச ராகவும் (1949, அக்டோபர் 11-ல்) நியமிக்கப்பட்டனர்.

சூமாக்கரின் சோசியல் ஜனநாயகவாதிகளால் தூண்டப்பட்ட மேற்கு ஜெர்மன் குடியரசு, சாரில் ஃபிரெஞ்சு ஆதிக்கம் இருப்பதைப் பழித்தது; 1937-ல் நிலவிய ஜெர்மன் எல்லைகள் மீண்டும் வரை

யறுக்கப்படவேண்டும் என்று அது உறுதியாகக் கூறியது; விஸ்ட்டுலா வில் ஜெர்மன் குடியரசு பாதுகாக்கப்படவேண்டும் என்று அது ஒருதலைக்கு நின்றது; வார்சா, பிரேக் ஆகியவற்றுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளை அது கண்டனம் செய்தது. ஏனெனில், அவற்றின்கீழ்க் கிழக்கு ஜெர்மன் குடியரசு அன்று நிலவிய நில ஆட்சி நடைமுறை நிலைமையை (territorial status quo) ஒப்புக் கொண்டது. மேலும், மேற்கு ஜெர்மன் குடியரசு, கொரியப் போர் மூளுவதற்கு முன்னரே 1950-ல் கொண்டுவரப்பட்ட அமெரிக்கக் கோரிக்கைகளில் பொதிந்துகிடந்த சலுகைகளைப் பெறத் துடித்தது. அப்போதும் அதன் பின்னரும் ஜெர்மன் படைக்கலப் பெருக்கத்திற்கு மிக ஊக்கமுடன் இருந்தது. ஃபிரெஞ்சுக்காரரையும் பிரிட்டிஷார் களையும்போல் சோசியல் ஜனநாயகவாதிகளும் மற்றவர்களும் படைக்கலப் பெருக்கத்திற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார் கள். ஜெர்மனியில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பொருளாதார வளர்ச்சி மீண்டும் ஏற்பட்டபோதிலும், அங்குள்ள பெரும்பாலான நகரங்கள் (எங்களைக் கணக்கில் சேர்க்காதீர் என்று கூறுவதுபோல் சிதைந்து கிடந்தன. இச் சூழலில் அமெரிக்க வற்புறுத்தலுக்கு அடிஞர் மட்டும் தலையாட்டாமல் இருந்திருக்கும்பட்சம் அவர் நாட்டுப்பற்று இல்லாதவரென்றும், நடைமுறை அரசியலைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவர் என்றும் தூற்றப்பட்டிருப்பார். 1951, ஏப்ரல் 18-ல் கையெழுத்தான சூமன் திட்டத்தை வாசிங்டனும் பானும் ஒப்புக்கொண்டன. அதன்பிரகாரம் அவை இரண்டும் ஃபிரெஞ்சு ஒத்துழைப்பிற்கான பணச்செலவை ஏற்றுக்கொள்ளும்படி ஆயிற்று. அன்றியும், அந்த் திட்டத்தின்கீழ் ஜெர்மனியின் நிலக்கரி (coal), இரும்பு (iron). எஃகு (steel), தொழில்களை ஃபிரெஞ்சு, பெனிலக்ஸ், இத்தாலியத் தொழில்களுடன் இணைத்துவிடுதல் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதேபோல் வாசிங்டனும் பானும் ப்ளீவன் திட்டத்தையும் ஏற்றன. அதன்பிரகாரம் ஜெர்மன் படை கள் 'ஐரோப்பியப் படையின்' யூனிட்டுகளாகவே கருதப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. 1951, செம்டம்பரில் வாசிங்டனில் மேலை (வல்லரசுகள்) வெளிநாட்டு அமைச்சர்களின் கூட்டம் ஒன்று நடை பெற்றது. அதில், (மேற்கு) ஜெர்மன் குடியரசுக்கு முழுச் சுதந்திரமும் (independence) அளித்துவிடுவது என்றும், (ஜெர்மனியைக்) கைப்பற்றிய படைகளை சோவியத் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் பாதுகாப்புப் படைகளாக மாற்றிவிடவேண்டும் என்றும், சுவாதீனச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஓர் ஒப்பந்த உடன்படிக்கை —தனிப்பட்ட சமாதான உடன்படிக்கை—செய்யவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. உண்மையில் பான் தலைவர்கள் அவ் வுடன் படிக்கை அப்படி அழைக்கப்படுவதைச் சற்றும் விரும்பவில்லை. ஏனெனில், அது ஜெர்மனி துண்டாடப்படுவதை அவர்கள்

அனைவரும் ஒப்புக்கொள்வதுபோலக் காட்டும். எனினும், இம் முடிவுகளைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

மேலை வல்லரசுகட்கும் மேற்கு ஜெர்மன் குடியரசுக்கும் இடையே குழப்பமான பேச்சுவார்த்தைகள் நடக்கலாயின. அதில் பான் தனக்குச் சாதகமான எல்லாவற்றையும் பெற முயற்சி புரிந்தது. (∴பிரெஞ்சு, பிரிட்டிஷ் சம்மதத்துடன்) பாடையை மறுமுறை பெருக்குதல் பானின் 'கடமை' (duty) யாகுமேயன்றி அதன் 'உரிமை'யாகாதென்று வாசிங்டன் கூறியது. அதைக் கேள்வியுற்ற அடினூர், தான் எதை (மேலைவல்லரசுகளுடன்) மன்றுடிச் செய்திருப்பாரோ, அதைச் செய்ய இப்போது நிபந்தனைகள் விதிக்கலானார். அதன் விளைவாக, 1952, மே 26-ல் பானில் பல உடன்படிக்கைகள் வரையப்பட்டன. சிக்கல் வாய்ந்த அமெரிக்க-ஆங்கிலோ-∴பிரெஞ்சு-ஜெர்மன் 'உறவு ஒப்பந்தம்' (Convention), 'போர், சுவாதீனம் தொடர்பான விஷயங்களைப்பற்றிய ஒப்பந்தம்', 'அயல்நாட்டுப் படைகளின் உரிமை, கடமை, கூட்டாட்சிக் குடியரசில் அவைகள் உறுப்பினர் சம்பந்தமான ஒப்பந்தம்,' 'நிதி ஒப்பந்தம்' ஆகிய அனைத்தும் அப்போது வரையப்பட்டவைதாம். அதோடல்லாமல், 'ஒப்பந்த உடன்படிக்கை' சம்பந்தமான தபால்களும் பரிமாறிக்கொள்ளப் பட்டன. அடுத்த நாள் பாரிசில், பான், பாரிஸ், ரோம், பெனிலக்ஸ் அரசுகளின் பிரதிநிதிகள் கூடி, 50 ஆண்டு உதவி ஒப்பந்தம் ஒன்று செய்து முடித்தார்கள். அது 'ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயம்,' (European Defence Community—EDC) அமைப்பதற்கு வகை செய்தது. அச் சமுதாயத்தைச் செயல்படுத்துவதற்காக ஒரு படைத் தலைவர் துறை, ஒரு படையுணவுத் துறை (Commissariate), ஓர் அமைச்சரவை (Council of Ministers), ஒரு சட்டசபை, ஒரு நீதிமன்றம் ஆகியவை அமைக்கப்படுவதற்கும் அது வகை செய்தது. இவற்றுள் பின்னைய இரண்டும் சூமன் திட்டத்தில் வகுக்கப்பட்ட அதே நிறுவனங்கள்தாம். அத்துடன் ஐரோப்பியப் பாதுகாப்பு சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு பிரிட்டிஷ் உடன்படிக்கையும், மேற்படி சமுதாயத்திற்கு வடஅட்லான்டிக் உடன்படிக்கைப் பாதுகாப்பு அளிக்க வழிசெய்யும் ஓர் ஒப்பந்தமும் (Protocol) வரையப் பட்டன. அவற்றுடன் ஓர் இணைப்பும் சேர்க்கப்பட்டது. அது மூன்று ஆண்டுகளில் 55 படைப் பிரிவுகளை (divisions) உடைய ஐரோப்பியச் சேனை ஒன்றை எழுப்ப வகை செய்தது. அவற்றில் 40 டிவிஷன்கள் எப்போதும் ஈடுபடக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும், மொத்தத்தில் 14 ∴பிரெஞ்சு, 12 ஜெர்மன், 11 இத்தாலிய, 3 பெனிலக்ஸ், 15 கையிருப்பு (reserve) டிவிஷன்கள் எழுப்பப்பட வேண்டுமென்றும் அது கூறியது. இந்த 'ஐரோப்பியச் சேனையை' ஆதரிக்கும் முறையில் மேற்கு ஜெர்மனியின் படைபலத்தை

MADRAS PUBLIC LIBRARY 31 MAR 1994

மீண்டும் வலுப்படுத்துவது என்றும், மேலும், அதை வடஅட்லான்டிக் கூட்டின் சமவுரிமையுள்ள, இறைமையுடைய கூட்டு நேச நாடாக (co-ally) ஆக்கிவிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துவந்த குர்ட் சூமாக்கர் 1952, ஆகஸ்டு 20 அன்று இறந்துபோகவும், எவ்வித இடையூறுமில்லாமல் மேற்கு ஜெர்மனி இதை ஒப்புக்கொண்டுவிடும் என்று நம்பப்பட்டது. ஆனால், ஜனாதிபதி ஐசன்ஹோவரும் வெளிவிவகார அமைச்சர் (Secretary of State) டல்லசும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தும், மேற்கு ஜெர்மனி 1953-ல் அதை ஒப்புக்கொள்வது சந்தேகமாய் இருந்தது.

இதற்கிடையில் கிழக்கு செர்மனி வேறு வழியின்றி சோவியத் வழியில் அடியெடுத்துவைக்கலாயிற்று. மேல்நாடுகளின் எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல் 1950-ல் மக்கள் போலீசுப் படை ஒன்றை எழுப்பியது; இந்த 'மக்கள் ஜனநாயகங்களுடன்' (People's Democracy) ஒப்பந்தம் (accord) செய்தது. 1950, அக். 15அன்று சோவியத் முறையில் மக்கள் சட்டசபைக்கு – பிரதிநிதிகள் சபைக்குத் (Peoples Chamber) தேர்தலும் நடைபெற்றது. அதில் சோசியலிஸ்டு ஒற்றுமைக் கட்சியும், அதைச் சேர்ந்த மற்றக் கட்சிகளும் 70 சதவீத இடத்தைக் கைப்பற்றின. கிறித்துவ ஜனநாயகவாதிகளும் சுதந்திர ஜனநாயகவாதிகளும் 30 சதவீத இடத்தைக் கைப்பற்றினர். செர்மனியை 'ஐக்கியப்படுத்த' முன்வருமாறும், அமெரிக்கக் கோரிக்கைகளை மறுத்துவிடுமாறும் பானை (Bonn) குரோட்வால் வேண்டிக்கொண்டார். அவர் 'அனைத்து செர்மன் சுதந்திரத் தேர்தலுக்கு' முன்வந்தாரெனினும், பான் விதித்த நிபந்தனைகளை ஏற்றார் இல்லை. அரசியல் உரிமைகளும் (political rights), தனிமனித சுதந்திரமும் (personal freedom) அளிக்கப்பட வேண்டுமென்றும், அரசியல் கைதிகள் விடுதலையாக்கப்பட வேண்டுமென்றும் பான் நிபந்தனை இட்டது.

நம்பவைக்கும் களிநாடகம்: 1949-ல் செர்மனி துண்டாடப்பட்டது என்று பார்த்தோம் அல்லவா? அதன் பின்னர் துண்டாடப்பட்ட நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான முயற்சிகளை வல்லரசுகள் மேற்கொள்ளாமல் இருந்துவிடவில்லை செர்மன் ஐக்கியத்தால் தமக்கு நன்மை விளையலாம் என்ற நம்பிக்கையில், அவை 'பேச்சுவார்த்தைகள்' நடத்த முன்வந்தன. எனினும், அவை உண்மையான நோக்கத்துடன் 'பேச்சுவார்த்தைகள்' நடத்தவில்லை. ஆனால், வெறும் பிரசாரத்திற்காகவே நட்த்தின என்பதை உலகம் அறியுமாறு திரும்பத்திரும்ப வெளியிடப்பட்ட 'குறிப்புகளிலிருந்து' (notes) எளிதில் அறிந்துகொள்ளலாம். ஏனென்னில், அரசியல் தந்திரம் அவைகளின் உண்மையான நோக்கமாய் இருந்திருக்கும்

பட்சத்தில், இப் பேச்சுவார்த்தைகள் தனிப்பட்ட விவாதங்களாக மாறியிருக்கும் அல்லவா?

வல்லரசுகட்கிடையே ஏற்பட்ட கருத்துப் பரிவர்த்தனை, 'பேச்சுவார்த்தைபோல்' தோன்றினவேயன்றி, அவை உண்மையில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கெடுபிடிப் போரில் கையாண்ட கருவிகள் அல்லது ஆயுதங்கள் என்றே சொல்ல வேண்டும். இதனாலும் இந் நூற்றாண்டு நடுவில் 'செர்மன் பிரச்சினை'பற்றி அவை ஓரளவு கருத்துச் சுடரை அள்ளி வீசுவதாலும், அவற்றை இங்கு சற்று நோக்குவோம். உண்மையான அரசியல் தந்திரம் என்பது என்ன? எதிர்க்கட்சி தன் கோரிக்கைகட்கு இணங்குவதால் அதற்கு ஏற்படக்கூடிய நன்மைகளையும், இணங்காததால் விளையக்கூடிய தீமைகளையும் எடுத்துக்காட்டி, அதைத் தன் கோரிக்கைகட்கு இசையச் செய்வதே உண்மையான அரசியல் தந்திரம் ஆகும்.

செர்மனியை மீண்டும் தன் படையைப் பெருக்கவைக்கச் செய்ய வேண்டும் என்பதே அமெரிக்காவின் அடிப்படை எண்ணம். ஆனால், செர்மனியை எப்படித் தூண்டுவது? மறுபடைக்கலச் சேர்ப்பிற்குப் பதிலாகத் தான் அதற்கு முழு இறைமை அளிக்கவும், அத்துடன் நேசவுடன்படிக்கை செய்துகொள்ளவும், செர்மனியை ஐக்கியப்படுத்தவும், கிழக்கே (மேற்கு) செர்மனியின் எல்லையை (அதற்குச் சாதகமான முறையில்) மீண்டும் வரையறுக்கவும் ஆயத்தமாக இருப்பதாக வாசிங்டன், மேற்கு செர்மனிக்கு ஆசை காட்டியது. இவற்றில், முதல் இரண்டும் அமெரிக்கா சுயமாகச் செய்யக்கூடியவை ஆகும். ஆனால், கடைசி இரண்டும் ஓர் அமெரிக்க-சோவியத் உடன்பாடு ஏற்படாமல், அமெரிக்காவினால் மட்டுமே செய்யக்கூடிய காரியங்கள் அல்ல. நடைமுறை நிலைமையை நீடிக்கவைப்பதேயன்றி வேறு எந்தவிதமான அச்சுறுத்தலும் அதனால் செய்யவியலவில்லை. வாசிங்டன் விரிக்கும் வலையில் சிக்குண்டுபோய்விடாமல் செர்மானியரை இருக்கும்படி செய்வதற்கு யூ எஸ் எஸ்.ஆர். சில ஆசாபாசங்களைக் காட்டியது. பிளவுண்டு நிற்கும் செர்மனியை ஐக்கியப்படுத்தவும், ஒரு தேசீயப் படையைத் தயாரிக்கவும், (செர்மனியைக்) கைப்பற்றிய சேனைகளைத் திரும்புமாறு செய்யவும், செர்மன் பண்டங்களுக்குப் புதுச் சந்தைகள் தேடித்தரவும் தன்னால் முடியும் என்று அது செர்மனியைத் தூண்டியது. இவற்றிற்கு ஈடாக அது 'நடுநிலைமை'யுடன் விளங்க வேண்டும்; அதாவது, மேற்கு வல்லரசுடன் அது எவ்விதமான உடன்படிக்கையையும் செய்யக்கூடாது. இதற்கு அது சம்மதிக்காவிடில் அது மேன்மேலும் துண்டாடப்பட நேரிடும் என்றும், உள்நாட்டுப் போர் நிகழக்கூடும் என்றும் அச்சுறுத்தியது.

அக்கீசன் வகுத்த 'முழு அரசியல் தந்திரக்' கொள்கைக் கிணங்க அமெரிக்காவும் ரஷ்யாவுக்கு ஆசை எதுவும் காட்டி (உண்மையான பேச்சுவார்த்தைக்கு) அதைத் தூண்ட முன்வர வில்லை. ஆனால், வாசிங்டன் ஒன்றுபட்ட படைபலம் பொருந்திய செர்மனியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்வதற்கான பேச்சுவார்த்தை கள் நடத்த விரும்பியது. அதற்கும் அது சில நிபந்தனைகள் இட்டது. முதலில் செர்மனி முழுவதிலும் சர்வதேச மேற்பார்வை யின்கீழ் (supervision) சுதந்திரத் தேர்தல்கள் நடைபெறவேண்டும்; இரண்டாவது, ஓடர்-நிசி எல்லையை மீண்டும் வரையறுத்து செர்மனி முழுவதும் விரிவாக்கப்படவேண்டும்; மூன்றுவது, விஸ்தீரணப்படுத்தப்பட்ட செர்மனி, ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக் காவின் நேசநாடாக ஆகிவிட வேண்டும். வாசிங்டன் செர்மனியின் படைவலிமையை அதிகரிக்க (ஏற்கெனவே ஒப்புக்கொண்டுவிட்ட தால்) அக் காரணம் காட்டி இப்போது அதனால் அச்சுறுத்த முடிய வில்லை. மேலும், அது (ஏற்கெனவே) கிழக்கு-மேற்கு வர்த்தகத் தைத் துண்டித்துக்கொண்டுவிட்டதால், இப்போது அப்படிச் செய்யப்போவதாய்க் கூறி அச்சுறுத்த முடியவில்லை. எனவே, அதனால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால், (இதற்கு மாறாக) சோவியத் யூனியன் அமெரிக்காவைத் தூண்ட முன்வந்தது. செர்மனியை ஐக்கியப்படுத்தவும், படைக்கலங்களைப் பெருக்கவும், 'சுதந்திரத்' தேர்தல்கள் நடத்தவும், சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளவும் தான் தயார் என்று மாஸ்கோ கூறியது. மேலும், கிரோட்வோல்-பீக் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் தயார் என்று அது உணர்த்தாமல் உணர்த்திற்று. சுருங்கச் சொல்லின், வாசிங்டனுக்கு விருப்பமான அனைத்தையும் அது செய்ய முன்வந்தது; ஆனால், ஒரே ஒரு நிபந்தனையை மட்டும் விதித்தது. செர்மனி நடுநிலைமையுடன் விளங்கினால் தான், தான் இவையனைத்தையும் செய்யமுடியும் என்று மாஸ்கோ அறுதியிட்டுக் கூறியது. இவற்றிற்கு வாசிங்டன் உடன்படா விட்டால், செர்மனி நிரந்தரமாகத் துண்டாடப்பட்டுவிடும் என்றும், கிழக்கு செர்மனியில் படைவலிமை மீண்டும் அதிகரிக்கப் பட்டுவிடும் என்றும், மீண்டும் பெர்லின் முற்றுகை ஏற்பட நேரிடும் என்றும் மாஸ்கோ அச்சுறுத்தியது.

இம் மூவர் சூதாட்டத்தில், பெரிய ஆட்டக்காரர் இருவரும் ஆடுவதுபோல் பாசாங்குதான் செய்தனர். இதற்கு அமெரிக் காவும் சோவியத் யூனியனும் ஒன்றையொன்று நம்பாததுதான் காரணம். என்ன வந்தாலும் சரி, ஐக்கிய செர்மனியின் 'நடு நிலைமையை' மட்டும் ஒருகாலும் ஒப்புக்கொள்ளலாகாது என்று அமெரிக்கா முடிவு கட்டியது. ஏனெனில், நடுநிலை ஜெர்மனி பின் ஒருகால் யு.எஸ்.ஏ.-க்கு எதிராக யூ.எஸ்.எஸ்.ஆருடன் சேர்ந்து

விட்டால் என்ன ஆவது? இந்த அச்சம் அமெரிக்காவை வாட்டியது. அதுபோல் ரஷ்யாவும், என்னவாயினும் சரி, ஐக்கிய ஜெர்மனியின் 'மக்களாட்சியை' மட்டும் ஒருகாலும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று தீர்மானித்தது. ஏனெனில், பின்னால் ஜெர்மன் ஜனநாயகம் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவுடன் சேர்ந்துவிட்டால் என்ன ஆவது? இந்த பயம் ரஷ்யாவை வாட்டியது.

படைக்கலப் பெருக்க புதிர்:[7] ஜெர்மன் ஐக்கியப் பிரச்சினை மேலே கண்ட காரணங்களை முன்னிட்டு நெடுநாள் தீர்க்கப்படாது போனாலும், படைக்கலப் பெருக்கம்பற்றிய சிக்கல் ஓர் உடன்படிக்கையைப் பொறுத்தவரையிலாவது 'தீர்க்கப்பட்டுவிட்டது' என்றுதான் கூறவேண்டும். எனினும், ஜப்பானைப்போன்று ஜெர்மனியிலும், அதற்கும் இவ்வணுவாயுத யுகத்தில் பாதுகாப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய முக்கியப் பணிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் இருந்தது. 1952, மே 26-ல் தீட்டப்பட்ட பாரிஸ் திட்டப்படி, ஜெர்மன் படைகள், 'ஐரோப்பியப் பாதுகாப்பு சமுதாயத்தின்' கீழ்ச் செயல்படும் சர்வதேசச் சேனையின் உறுப்பாகப் பணியாற்றவேண்டியிருந்தன. ஆனால், இத் திட்டத்தினால் எப் பயனும் ஏற்படவில்லை. டன்அக்கீசன் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்; நெருக்கிப்பார்த்தார். அவருக்குப் பின்வந்த (successor) ஜான் போஸ்ட்டர் டல்லஸ் அதனினும் அதிகமாக நெருக்கிப் பிடித்தார். மேற்கு ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கத் திட்டத்தை ஏற்காவிடில் அதன் (அமெரிக்காவின்) பாதுகாப்புக் கொள்கை (அந் நாடுகட்குக்) 'கடுந் துயரத்தை விளைவிக்கக்கூடிய முறையில் மீண்டும் மாற்றியமைக்கப் பட்டுவிடும்' என்றும் அவர் 1953 ஜனவரியில் அச்சுறுத்தினார். ஆனால், இவற்றிற்குச் சிறிதும் அசையவில்லை ஃபிரான்ஸ். ஃபிரெஞ்சு சட்டசபை நீண்ட நேரம் வாதித்துவிட்டு, 1954 ஆகஸ்ட்டில் ஐரோப்பியப் பாதுகாப்பு சமுதாய உடன்படிக்கைகளை ரத்து (repudiate) செய்துவிட்டது. எனினும், தலைமையமைச்சர் பியரி மெண்டிஸ் ஃபிரான்ஸ் அமெரிக்காவின் கோரிக்கைகட்குத் தலை சாய்க்கும்படி நேரிட்டது. ஜெர்மன் படைபலத்தைப் பெருக்கும் பொருட்டு, அமெரிக்கா இம் முறை ஒரு புதுத்திட்டத்தைக் கொண்டு வந்தது. இப் புதுப்படை (பண்டிஷீர்—Bundeswehr) என்று அழைக்கப்படும் என்றும், அது 'மேற்கு நாடுகளின் கூட்டுச் சேனையின்' ஓர் உறுப்பாகக் கருதப்படுமென்றும், மேற்கு ஜெர்மனி நேட்டோவின் உறுப்பினராக ஆகிவிடவேண்டுமென்றும், அதன் படைக்கலங்கள்மீது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும்

[7] *இதையொட்டிவரும் அடுத்த நான்கு பத்திகளும் சிறிது மாற்றத்துடன் '1917 முதல் ரஷ்யா' என்ற நூலில் ஏற்கெனவே வெளியாகியிருக்கின்றன. அவை இந்நூலில் குமனன் ஆல்ஃபிரடு ஏ. நாப், இன்க், (பதிப்புரிமை 1957) உடைய அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.*

அத் திட்டம் உணர்த்திற்று. முன்னுள் அனுபவத்தினின்றும் நோக்குங்கால் இக் கட்டுப்பாடுகள் அனைத்தும் வீணனவை என்பது தெள்ளிதின் விளங்கும். இவ் ஏவற்பாடுகள் அனைத்தும் 1954, அக். 23-ல் பாரிஸில் கையெழுத்தாகிய உடன்படிக்கைகளில் இடம்பெற்றன. அவைகள் பிரிட்டிஷ் மக்கள் சபையிலும் (House of Commons), அமெரிக்கக் காங்கிரசிலும்—பாராளுமன்றத்திலும் (Congress) பெரும்பான்மை வாக்குகளால் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஜெர்மனியின் படைக்கலப் பெருக்கத்தைத் தடுக்க விரும்பிய மெண்டிஸ்-ஃபிரான்ஸ் லண்டனையும் வாசிங்டனையும் நேசநாடுகள் கூட்டுப்படை ஒன்றை எழுப்புமாறும், மேற்கு ஐரோப்பியக் கூட்டரசு ஒன்றை அமைக்குமாறும், நால்வர் வல்லரசுகள் மாநாட்டைக் கூட்டுமாறும் வீணில் கோரினர். ஃபிரெஞ்சு தலைமையமைச்சரை ஜெர்மன் படைக்கலப் பெருக்க ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு எவ்வளவோ வேண்டியும், ஃபிரெஞ்சுச் சட்டசபை 1954, டிசம்பர் 24-ல் அதை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது. 281 உறுப்பினர்கள் அதற்கு எதிராகவும், 257 பேர் அதற்குச் சாதகமாகவும் வாக்களித்தனர். இதைக் கண்ட தலைமையமைச்சர் (தன் அரசாங்கத்தின்மீதுள்ள) 'நம்பிக்கையை' அறிய விரும்பினர். உடனே அங்கத்தினர்கள் வேறு வழியின்றி அவ் வொப்பந்தத்தை டிசம்பர் 30 அன்று ஏற்கும்படி ஆயிற்று. 287 பேர் அதற்குச் சாதகமாகவும், 260 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். அநேகம் பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவே இல்லை. மெண்டிஸ்-ஃபிரான்சின் பாதுகாப்புப் பிரேரணைகளை வாசிங்டனும், லண்டனும், பானும் உதறித்தள்ளிவிட்டன. அதன்பின்னர், அவரது வடஆஃப்ரிக்கக் கொள்கையை விரும்பாத சட்டசபை, 1955, பெப்ரவரி 5-ல் அவரது காபினட் அமைச்சவையைப் பதவியிலிருந்து நீக்கியது. 319 பேர் (அரசாங்கத்திற்கு) எதிராகவும், 273 பேர் அரசாங்கத்தின் கொள்கையை ஆதரித்தும் வாக்களித்தனர். ஜெர்மன் படைக்கலப் பெருக்கத்தை ஆதரித்த தீர்மானம் மாற்றியமைக்கப்படமாட்டாது என்று சட்டசபை முடிவு செய்தது.

படைவலிமையின் புதிய உண்மைகளை உணர்ந்திருக்கும் பட்சத்தில், ஜெர்மன் படைக்கலப் பெருக்கத்தை முன்னிட்டு மேலை வல்லரசுகள் நம்பிக்கை கொள்ளவும், சோவியத் யூனியன் அச்சங் கொள்ளவும் இடமே இருந்திருக்காது. 12 டிவிஷன்களையும், 6 மோட்டார் டிவிஷன்களையும், 2 எந்திர டிவிஷன்களையும், 4 பான்சர் (Panzer) டிவிஷன்களையும் கொண்ட புதிய ஜெர்மன் படை எழுப்பப் பட்டிருக்குமாயின், அது மேற்கு ஐரோப்பாவிலேயே மிகப் பிரமாண்டமான படையாக விளங்கியிருக்கும். ஆனால், (படைவலிமை பூண்ட கிழக்கு ஜெர்மனியையும், இப்போது மேற்கொண்ட) கம்யூனிஸ்ட்டு முகாமின் படைபலத்திற்கு முன்னுல் அது தற்பாது

சாப்பிற்கோ, அன்றித் தாக்குதலுக்கோ பயன்பட்டிருக்காது என்று துணிந்து கூறலாம். ஏனெனில், கம்யூனிஸ்ட்டு முகாமிடமும் எதிர் தரப்பினரின் படைவலிமைக்கு நிகராக டாங்கிகளுக்கு டாங்கிகளும், குண்டுகளுக்கு குண்டும், டிவிஷன்களுக்கு டிவிஷன்களும் 2 அல்லது 3-க்கு 1 என்ற விகிதத்தில் இருந்தன. ரஷ்யாவின் தொழில்மயத் தால் மேற்கு ஜெர்மனி இனிமேல் ஒரு 'வல்லரசாகவே' (Great Power) விளங்க முடியாதுபோய்விட்டது.

1954, டிசம்பரில் நேட்டோ மன்றம் கூடியது. அதில், புதி தாகப் போர் மூண்டால், ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் பிரமாண்டமான நில, விமானப் படைபலத்தைச் சரிக்கட்ட உடனே (நேசநாடுகள்) சக்திவாய்ந்த அணுகுண்டுப் பிரயோகம் செய்யவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. 1955, பெப்ர வரியில் ஃபிராங்க்ஃபர்ட்டர் அல்ஜீமீன் ஜீடுங் என்ற பத்திரிகை, லிட்டல் ஹார்ட் எழுதிய இரு கட்டுரைகளைப் பிரசுரித்தது. அது மேற்படி தீர்மானம் செயலாக்கப்படின், அது அந் நாடுகட்கே (மேலை வல்லரசுகட்கே) சொல்லொணாத் துயரத்தைப் பெய்யும் என்ற கருத்தை எதிர்த்தது. மார்ச் மாதம், பானில் பதவியிலிருந்த கர்னல் போகிஸ்லாவ், பாதுகாப்பு அமைச்சர் தியோடர் பிளாங்கால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் வெளிப்படையாகவும், கட்டளைகளை (order) மீறியும், சண்டைகளில் ஜெர்மனியை அழித்து விடக்கூடிய ஒரு சேனையைத் திரட்டுதல் முடியாத காரியம் என்று கூறியதே அவரது பதவி நீக்கத்திற்குக் காரணம் ஆகும். 1955, ஜூன் மாதம் நேட்டோ விமானப் படை போர்ச்சூழ்ச்சி நடவடிக்கை களில் ஈடுபட்டது. அப் படையின் அடையாளச் சொல் (code-name) 'கார்டி பிளாங்க்' எனப்படும். ஹாம்பர்க்கிற்கும் மியூனிச்சிற்கும் இடையே 335 சிறிய அணுகுண்டுகள் போட்டால் அவற்றுல் 1,700,000 பேர் இறந்துவிடுவர் என்றும், 3,500,000 ஜெர்மானியர் காயமடைவர் என்றும், கதிர்வீச்சால் (radiation) இறப்பவர் எண்ணி லடங்காரென்றும் இந் நடவடிக்கைகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

சரியான தோதுபார்த்து பத்து ஹைடிரஜன் (Hydrogen) குண்டு களைப் போட்டால் மேற்கு ஜெர்மனி முழுவதையும், அதன் மக்களை யும் அடியோடு அழித்துவிடலாம் என்ற உண்மை மேன்மேலும் நடத்தப்பட்ட சோதனைகளின் (test) அறிக்கைகளினின்றும் தன்னுலே விளங்கிற்று. இந்நிலையில் ஜெர்மனியின் புதுச் சேனை யால் ரஷ்யாவின் படைவலிமையை எதிர்க்கமுடியாதுபோனலும், ஒருவேளை சோவியத் யூனியனின் மறைமுக ஆதரவினுலேயே மேற்கு ஐரோப்பா முழுவதையும் அது தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்துவிட முடியும் என்று தெரியவந்தது. அதை ஆங்கிலோ-அமெரிக்கத் தலைவர்கள் சற்றும் விரும்பவில்லை. 1957, ஏப்ரல் முதல்

தேதியன்று நாசி ஜெனரல் ஹான்ஸ் ஸ்பீடல் நேட்டோ தரைப் படைத் தலைவராகப் பொறுப்பேற்பார் என்று அமெரிக்கப் படைத் தலைவர் லாரிஸ் நோர்ஸ்டாடு (1957, பெப்ரவரி 6) பதவி அறிக்கையை வெளியிட்டார். எனினும், அதனல் அந் நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்பட வில்லை.

அடினர் யுகம்; சில ஆண்டுகட்குமுன் பேரழிவுக்கும் பெருத் துயருக்கும் ஆளாகி நின்ற மேற்கு ஜெர்மனி, பத்தே ஆண்டுகளில் (1950-லிருந்து 60-க்குள்) ஐரோப்பாவிலேயே அதிகச் செழுமையும் செல்வமும் பொருந்திய சமுதாயமாய் மாறிவிட்டது. இவ் வியத்தகு 'பொருளாதார அற்புதம்' ஏற்படக் காரணமாய் இருந்தவை மூன்று பில்லியன் டாலர் அமெரிக்க உதவிமானியமும், பொருளாதார அமைச்சர் லுட்விக் பின்பற்றிய அரசாங்கக் கொள்கையும், நிதி அமைச்சர் (Finance Minister) ஃபிரிட்ஸ் ஸ்காஃபரின் கொள்கையுமே ஆகும் என்பதில் ஐயமில்லை. 'முதலாளித்துவ' அல்லது 'சுதந்திரத் தொழில் முயற்சிப் பொருளாதாரத்தில்' (free-enterprise economy) எக் காரணங்களால் எவ்வித விளைவுகள் ஏற்படும் என்பதைத் திட்ட வட்டமாய் அளந்தறியக்கூடிய சாதனங்கள்—கருவிகள் கூரிய அறிவுடைய பொருளாதார நிபுணர்களிடம்கூட இல்லை. எனினும், ஜெர்மனியின் வளப்பமானது (பொருளாதார முன்னேற்றமும்) ஓரளவு கார்ட்டல் முறையை மீண்டும் கடைப்பிடித்ததாலும், ஓரளவு தொழிலதிபர், பாங்குதாரர்களின் (bankers) கடும் உழைப்பு, நேர்மை ஆகியவற்றினலும், வெளியே மார்க்சீயர்போல் தோற்ற மளித்தாலும் உள்ளூர முழு மனத்துடன் கம்யூனிசத்தை எதிர்த்துக் கடும் உழைப்பாலும் திறமையாலும் (நாட்டின்) செல்வத்தில் பங்கு கொள்ள விரும்பிய 'பாட்டாளிகளின்' பணிவினலும் ஒழுக்கத் தினலும் ஏற்பட்டதென்பதில் ஐயமில்லை. அன்றியும், இதுகாறும் சென்ற அழிவுப் பாதையை விடுத்து, அரசியல் கொள்கை வெறி யைக் கைவிட்டுவிட்டுப் பொருளீட்டலிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்த கீழினத்தார், விவசாயிகள் ஆகியோரின் ஊக்கமும் தொழில் ஆர்வமும் ஓரளவு இதற்குக் காரணமாகும். இந் நற் சூழலில் அரசியல், வர்த்தகப் பெரும்புள்ளிகள் கையில் இருந்தது. எனவே, அதன் போக்கை இங்குச் சற்று ஆராய்வோம்.

1953, செப்டம்பர் 6ஆம் நாள் 484 உறுப்பினர்கள் பானில் புதிய ஜெர்மன் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர், அரசியலி லிருந்து 'சிறு சிறு கட்சிகளை' (splinter parties) ஒழித்துவிடுவதற் காகச் (புதுவிதமான) சிக்கலான தேர்தல் சட்டம் கையாளப்பட்டது. அதன்கீழ் எந்தக் கட்சிக்கு எந்த ஒரு வாக்காளர் தொகுதியிலாவது (constituency) பெரும்பான்மை இடம் கிடைக்கவில்லையோ அல்லது மொத்தத்தில் 5 சதவீத வாக்குகள் கிடைக்கவில்லையோ, அதற்குச்

சட்ட சபையில் அறவே இடம் கிடைக்காமற்போய்விடும் என்று முடிவுசெய்யப்பட்டது. கொன்ராடு அடினூரின் கிருத்துவ ஜனநாயகக் கட்சிக்கு 12,440,799 வாக்குகள் கிடைத்தன. அதாவது, சட்டசபையில் 244 இடங்களை அது கைப்பற்றியது. சோசியல் ஜனநாயகவாதிகள் 7,939,774 வாக்குகள் பெற்று 150 இடத்தைக் கைப்பற்றினர். சட்டசபையில் அவர்களுக்குக் கிடைத்தது இரண்டாவது இடம். சுதந்திர ஜனநாயகவாதிகள் 2,628,146 வாக்குகள் பெற்று 48 இடங்களைக் கைப்பற்றினர். ஜெர்மன் கட்சிக்கு 897,952 வாக்குகளும் 48 இடங்களும் கிடைத்தன. அகதிகள் (Refugee) கட்சிக்கு 1,614,474 வாக்குகளும் 27 இடங்களும் கிடைத்தன. கம்யூனிஸ்டுகளுக்கும் புதிய நாசிகளுக்கும் ஓர் இடம்கூடக் கிடைக்கவில்லை.

வெளிவிவகாரத்துறையும் சான்சலர் பதவியும் அடினூர்வசமே இருந்தன. அவரது கூட்டுக் காபினட் அமைச்சவையில் கிறித்துவ, சுதந்திர ஜனநாயகவாதிகள், ஜெர்மன் கட்சியினர், அகதிகள் கட்சியினர் ஆகியோர் இடம்பெற்றனர். டிசம்பர் மாதத்தில் தொழில் உற்பத்தி 1948-ல் இருந்த நிலைமையைவிட 226 சதவீதம் கூடுதல் ஆகியது. ஏற்றுமதிகளும் அதிகமாயின. மத்திய பாங்கு முன்னைவிட அதிக அளவில் அன்னியச் செலாவணியைச் சேமித்தது. பால்கனுக்கும் துருக்கிக்கும் அடினூர் நல்லெண்ணச் சுற்றுப்பயணம் (good-will visits) செய்துவிட்டுத் திரும்பினார். 1954, ஏப்ரலில் ஜெர்மன் சட்டசபையில் முழுமனமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. 'ஜெர்மன் பிரிவினையை ஜெர்மானியர் ஒருபோதும் சம்மதியார்; ஜெர்மனி இரு வெவ்வேறு நாடுகளாக விளங்குவதையும் ஒப்புக்கொள்ளார். சோவியத் மண்டலத்தில் நிலவிவரும் கம்யூனிஸ்ட்டு ஆட்சி பலாத்காரத்தின் மூலமாகவே நடந்து வருகிறது. அது ஜெர்மானியரின் பிரதிநிதித்துவ ஆட்சி இல்லை என்று சட்டசபை மீண்டும் வலியுறுத்துகிறது' என்று அத் தீர்மானம் கூறிற்று. அடினூருக்கு இத் தீர்மானத்தின்மீது மிக்க மகிழ்ச்சி; சோசியல் ஜனநாயகவாதிகளும் அதை மனமுவந்து வரவேற்றனர்.

எனினும், அடினூரின் 'மேற்கத்திய போக்கிற்குக்' கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. வர்த்தகப் பழைமைவாதிகளும், பத்திரிகைகளும், சோசியலிச ஜனநாயகவாதிகளும் கிழக்கு ஜெர்மனியுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினர். ஜூன் மாதம் டஸ்ஸல்டிராப்பில் தொழிலதிபர்கள் முன்னால் பேசும்போது, முன்னாள் சான்சலர்களான பிரான்னிங், லூதர் இருவரும் கிழக்கு மேற்கிற்கு இடையே 'சுதந்திரம்' நிலவவேண்டும் என்று வலியுறுத்தினர். 1954, ஜூன் 27-ல் வடரைன்—வெஸ்ட்டு பாலியாவில் நடைபெற்ற தேர்தலில் கிருத்துவ ஜனநாயகவாதிகளின் பலம் 49 சதவீதத்திலிருந்து 41 சதவீதத்திற்குக் குறையலாயிற்று. ஜனாதிபதி தியோடர் ஹஸ்ஸை

மற்றோர் ஐந்தாண்டுகாலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு ஜெர்மன் பாராளுமன்ற இருசபை உறுப்பினர்களும் மேற்கு பெர்லினில் (1954, ஜூலை 17) கூடி அவரைத் தேர்ந்தெடுத்தனர். அத் தேர்தல் உறுப்பினர்க்கிடையே கணிசமான ஒற்றுமை இருப்பதை உணர்த்திற்று. எனினும், அவ்வொற்றுமை நெடுநாள் நீடித்திருக்கவில்லை. ஜூலை மாதம் மேற்கு ஜெர்மனியின் உயர் பாதுகாப்பு அதிகாரி டாக்டர் ஓட்டோ ஜான் தன் நாட்டைக் கைவிட்டுவிட்டு (கம்யூனிஸ்ட்டு) கிழக்கு ஜெர்மனிக்குத் தப்பியோடியதுமே, அவ்வொற்றுமை குலையத் தலைப்பட்டது. பானும் வாசிங்டனும் கடைப்பிடித்துவரும் கொள்கைகள் மீண்டும் நாசிசத்தையும் போரையும் உருவாக்கக்கூடியவை என்றும், அந்தப் பயமே தான் கிழக்கு ஜெர்மனிக்கு ஓடிவந்ததற்குக் காரணம் என்றும் அவர் விளக்கினர். (அவர் 1955, டிசம்பரில் தாயகம் திரும்பியதும், நாட்டுத் துரோகக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு, 1956, டிசம்பரில் 4 ஆண்டுகள் கடும் உழைப்புத் தண்டனையளிக்கப்பட்டார்.) அடினூர் அக்டோபர் இறுதியில் வாசிங்டன், நியூயார்க் சென்று திரும்பினர். அவ்வாண்டு இறுதியிலேயே பவாரிஸ், ஹெஸ்ஸியில் நடைபெற்ற தலத் தேர்தல்களில் அவரது கட்சி பதவியிலிருந்து நீக்கப்பட்டது. அவ்விடத்தை சோசியல் ஜனநாயகவாதிகள் பிடித்துக்கொண்டனர். படைக்கலப் பெருக்கத்தை எதிர்த்தும், இரு ஜெர்மனியையும் 'நடுநிலைமை' மூலமே ஐக்கியப்படுத்த முடியும் என்ற கொள்கையை ஆதரித்தும் தேர்தலில் அவர்கள் கலந்துகொண்டனர்.

சார் (மாகாணத்தைப்) பற்றி அடினூர் கடைப்பிடித்துவந்த 'விட்டுக்கொடுக்கும்' கொள்கையை அநேகம் பேர் எதிர்த்தும் குறை கூறியும் வந்தனர். ஆயினும், 1955, பிப்ரவரி 27-ல் ஜெர்மன் பாராளுமன்றம் படைக்கலப் பெருக்கத்திற்காகச் செய்யப்பட்ட பாரிஸ் ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டது. அத்துடன் ஆதிக்கச் சட்டமும் ஹைகமிஷனும் மறைந்துபோயின. அத்துடன் மேற்கு ஜெர்மனி முழு இறைமையைப் பெற்ற நாடாயிற்று. தன்னைப் பின் பற்றுவோர் படைக்கலப் பெருக்கத்தை எதிர்த்தபோதிலும், அடினூர் அதையே விரும்பினர். எனினும், அவர் (வாசிங்டனுக்குப் போய் விட்டுத் திரும்பியபின்) செப்டம்பர் மாத நடுவில் மாஸ்கோவிற்கு வரும்படி அனுப்பப்பட்ட சோவியத் அழைப்பிற்கு அவர் இணங்கினர். அங்குச் சென்று மேற்கு ஜெர்மனிக்கும் யூ.எஸ்.எஸ்.ஆருக்கும் இடையே தூதியல், வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்துவதற்கு ஒப்புக் கொண்டார். ஆனால், ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதில் வெற்றி கண்டார் இல்லை. கோடைக்கால நடுவில் ஜெனீவாவில் 'உச்சக் கட்ட மாநாடு' (summit conference) நடைபெற்றது. அங்கும் கிழக்கு மேற்கு நாடுகளின் ஜெர்மன் ஐக்கியத்தைப்பற்றி முன்போல் தத்தம் கொள்கையை விட்டுக்கொடுக்க முன்வராததால், அப் பிரச்

சீனைக்கு வழிகாண முடியாதுபோயிற்று. தன் கருத்தை மாற்றுமாறு அடினுர் எவ்வளவோ நெருக்கப்பட்டார். எனினும், அவரும் அவரது வெளிவிவகார அமைச்சர் ஹென்ரிச் வான் பிரெண்டானோவும், மேலை வல்லரசுகள் நட்புறவுடனும் படைவலிமையுடனும் இப் பிரச்சினைக்கு வழிகாண முற்பட்டனர். எந்த நாடு கிழக்கு ஜெர்மனியிலுள்ள ஆட்சியை ஒப்புக்கொள்ளுகிறதோ (recognise) அந்த நாட்டுடன் தான் கொண்டிருக்கும் தொடர்பைத் துண்டித்துவிடும் என்று பான் அரசாங்கம் 1955 டிசம்பரில் எச்சரிக்கை விடுத்தது.

இம் மாற்றங்களுக்கும் குழப்பங்களுக்கும் இடையில் சார் (மாகாணம்) மேற்கு ஜெர்மனியின் கைவசமாயிற்று. பாரிஸ் ஒப்பந்தப்படி 1955, அக்டோபர் 23-ல் தலக் 'குடியொப்பம்' (referendum) நடைபெற்றது. அதில் சார் மாகாண மக்கள் தங்கள் நிலம் (territory) 'ஐரோப்பிய மயமாக்கப்படுவதை' எதிர்த்தும், அது (மேற்கு) ஜெர்மனிவசமே திரும்ப ஒப்படைக்கப் படுவதை விரும்பியும் வாக்களித்தனர். அவர்கள் விருப்பம் 1957, ஜனவரி முதல் நாள் நிறைவேறிற்று. இவ் வெற்றிக்குப் பின்னரும் அடினுரின் நண்பர்களான சுதந்திர ஜனநாயகவாதிகள், சோசியல் ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்துகொண்டு, அவரைக் குறை கூறலாயினர். ஜெர்மனி மீண்டும் ஐக்கியப்படுவதை அவர் (சான்சலர்) விரும்பவில்லை என்றும், கிழக்கு ஜெர்மனியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியே இக் குறிக்கோளை எய்த முடியு மென்றும் அவர்கள் அடினுரைக் குறைகூறினர். பின்னர் ஏற்பட்ட அரசியல் கருத்து வேறுபாடுகளையும், தலத்தேர்தல்களில் தன்னுடைய கிருத்துவ ஜனநாயகக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விகளையும் பார்த்துவிட்டு, அவர் (சான்சலர்) 1956, அக்டோபரில் தன்னுடைய காபினட் அமைச்சரவையை மாற்றியமைத்தார். பாதுகாப்பு அமைச்சர் தியோடர் பிளாங்கிற்குப் பதிலாக ஃபிரான்ஸ் ஜோசப் ஸ்ட்ராஸ் நியமிக்கப்பட்டார். மாஸ்கோவுடன் ஏற்பட்ட புதுத் தகராறுகட்கிடையில் ஜெர்மனியின் படைக்கலப் பெருக்கம் திட்ட வேகத்தில் செல்வதைத் தடுத்தார். மிகச் சிறிய மேற்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சட்டவிரோதமாக்கினர். 1957, மார்ச்சு மாதம் பிரெண்டானோ வாசிங்டனுக்குப் போய்வந்தார். அங்கு அமெரிக்கக் கொள்கைகட்கு பான் (அரசாங்கத்தின்) ஆதரவை மீண்டும் வலியுறுத்தினர். இராணுவத் திட்டங்களைக் குறைத்துவிட்டு அணு ஆயுதங்களைக்கொண்ட சிறிய ஒரு சேனையைமட்டும் வைத்துக் கொள்ள பான் அரசாங்கம் முடிவு செய்தது. இதைக் கேள்வியுற்றதுமே நோபல் பரிசு பெற்ற 4 விஞ்ஞானிகள் உட்பட 18 ஜெர்மன் பௌதிக நிபுணர்களும் (physicists) ஒன்றுபட்டு அணு ஆயுதங்கள் (nuclear arms) உற்பத்தி, சோதனை, பயன் ஆகியவற்றிற்குத் தாங்கள் ஒத்துழைக்கப்போவதில்லை என்று முடிவுசெய்திருப்பதாக (1957,

ஏப்ரல் 12) அறிவித்தனர். டல்லசும் மாக்மிலனும் மே மாத நடுவில் பானுக்கும், அடினர் மே மாத இறுதியில் வாசிங்டன், கெட்டிஸ்பர்க் கிற்கும் சென்றுவந்தபோதிலும், படைக்கலப் பெருக்கம், ஜெர்மன் ஐக்கியப் பிரச்சினைகட்கு ஒரு முடிவு கண்டார் இல்லை. கிழக்கு மேற்கு நாடுகள் கொண்டிருந்த கொள்கைகளே இதற்குக் காரணம் ஆகும்.

(அடினரின் அரசாங்கம் கடைப்பிடித்த உள்நாட்டுக் கொள்கையால்) நாட்டின் செழுமை குறிப்பிடத்தக்க முறையில் அதிகரித்தது. அதன் விளைவு 1957, செப்டம்பர் 15-ல் ஜெர்மன் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தல்களில் பிரதிபலித்தது. அதில் அடினரின் கிருத்துவ ஜனநாயகக் கட்சிக்குப் பெருத்த வெற்றி கிடைத்தது. அதற்கு 14,998,754 (51°8%) வாக்குகளும் மொத்த இடங்களில் 497-ல் 270 இடங்களும் கிடைத்தன. சோசியல் ஜனநாயகவாதிகள் 9,490,726 (31·7%) வாக்குகளே பெற்றனர்—169 இடங்களையே அவர்கள் கைப்பற்றினர். சுதந்திர ஜனநாயகவாதிகள் இம் முறை 2,304,846 வாக்குப் (7·7%) பெற்று 41 இடங்களைப் பெறமுடிந்தது. கம்யூனிஸ்ட்டுகள் சட்டவிரோதமாக்கப்பட்டதால் அவர்களுடைய அபேட்சகர்கள் தேர்தலில் கலந்துகொள்ள முடியவில்லை. புதிய நாசி வலதுசாரிக் கூட்டங்களான அகதிகள் கட்சி, ஜெர்மன் கட்சி, ஜெர்மன் அரசு கட்சி அனைத்திற்கும் ஒரு வாக்காளர் தொகுதியில் கூடப் பெரும்பான்மைநிலை அல்லது 5 சதவீத வாக்குகள் கிடைக்க வில்லை. ஆகையால், அவைகளால் பாராளுமன்றத்திற்கு ஓர் உறுப்பினரைக்கூட அனுப்ப முடியவில்லை. தேர்தல் முடிவைக் கேள்வியுற்ற மேலைநாடுகள் மகிழ்ச்சி அடைந்தன. கிழக்கு நாடுகள் அடினரின் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டு வருந்தின.

திடமும் கண்ணியமும் பொருந்திய சான்சலர் அடினர் தமது எண்பத்து இரண்டாவது வயதை எட்டிப்பிடித்தார். ஆனால், திறமையிலும், பலத்திலும் அவருக்கு நிகராக அவருடைய பதவியை ஏற்கக்கூடியவர் அருகில் எவருமில்லை. ஜெர்மன் ஐக்கியத்திற்காக அவர் கடைப்பிடித்த கொள்கை நலிவானதுதான். ஆனாலும், அதனாலன்றோ செர்மனி பிளவுண்டு கிடக்க முடிந்தது! அதைக் கண்டு களிப்புற்றவர் பலர். ஏனெனில், செர்மனி ஒன்றுபட்டிருக்கும் பட்சத்தில் சமயத்துறையில் (religion) புரோடஸ்டான்டு மதத்தினரும், அரசியலில் சோசியல் ஜனநாயகவாதிகளும் பெரும் பான்மையாக இருந்திருப்பர். அவர் பின்பற்றிய கொள்கை நாடு ஒற்றுமையடைய விரும்பிய மக்களின் நம்பிக்கையைச் சிதறடித்தது; அணு ஆயுதப் போர் ஏற்படும்பட்சத்தில் ஜெர்மனி அழிந்து போகுமென்ற அச்சுறுத்தலை என்றும் உணர்த்திவந்தது ; செர்மனி பிளவுண்டு நிற்பதற்கு உடன்பட்டது; மாபெரும் வல்லரசுகட்கிடையே நிம்மதியான சமாதானம் ஏற்படுவதைத் தடுத்துவந்தது.

அடினூரின் பின்தோன்றல்களும் இதே கொள்கையைத்தான் தொடர்ந்து பின்பற்றி நடப்பர் என்று 1958-ல் துணிந்து கூறுதற்கில்லை.

எல்பிக்கு அப்பால் : (இதற்கிடையில் கிழக்கு செர்மனியின் நிலை எவ்வாறுயிற்று என்பதைச் சற்றுப் பார்ப்போம்). 'ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில்' மார்க்சீய (சோவியத்ரக) பொருளாதார மந்திரம் பலிக்கவில்லை. அங்கு ஜனாதிபதி வில்ஹம் பீக்கும், தலைமையமைச்சர் ஓட்டோ குரோட்வாலும் 400 'தேர்ந்தெடுக்கப்பட்ட' உறுப்பினரைக்கொண்ட மக்கள்சபையின் (Volkskammer) உதவியால் ஆட்சி செய்து வந்தார்கள். கிழக்கு பெர்லினில் உருவாக வேண்டிய (அரசாங்கம்) பொதுக் கொள்கைகள் மாஸ்கோவில் உருவாகியமையால், அவற்றிற்கும் கிழக்கு செர்மனியின் 17,000,000 மக்களின் தேவைகளுக்கும் நம்பிக்கைகட்கும் எவ்விதத் தொடர்புமில்லாமல் இருந்தது. கடமையினின்றும் வழுவியவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் அடுத்தடுத்துப் 'பதவியினின்று அகற்றப்பட்டார்கள்.' 1953, ஜன. 15ஆம் நாள் வெளிவிவகார அமைச்சர் ஜியார்ஜ் டர்ட்டின்ஜர் சிறைசெய்யப்பட்டார். எனினும், இந் நடவடிக்கைகளால் (நாட்டின் நிலைமையில்) குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 1953ஆம் ஆண்டு வசந்தகாலத்தில் தன் துணைநாட்டின் (கிழக்கு ஜெர்மனி) மீது கொண்டிருந்த இராணுவக் கட்டுப்பாட்டை மாஸ்கோ சற்றுத் தளர்த்தியது. மக்களின் அமைதியின்மையைப் போக்கும் நோக்கத்தில் குரோட்டோவேஸ் பொருளாதாரச் சலுகைகளை அள்ளி இறைத்தார். அவற்றால் மக்களின் துயரம் நீங்கவில்லை; கவலை களையப்படவில்லை. அதற்கு மாறாக, 1953, ஜூன் 16-ல் கிழக்கு பெர்லினில் வேலைநிறுத்தம் செய்த மக்கள் அன்றைய ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்தனர். அதற்கு மறுநாள், மக்கள் கும்பல் கும்பலாகப் பல நகரங்களில் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தைத் தாக்கினர். நாட்டின் 'சமூக அமைதியை (law and order) மீண்டும் நிலைநாட்ட' சோவியத் துருப்புகள் கொண்டுவரப்பட்டன. அவற்றிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் இரையாயினர்; ஏராளமான பொருள் சேதமும் ஏற்பட்டது.

மீண்டும் 'நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு விளைக்கத்தக்கவர்' என்று கருதப்பட்டோர் தூய்மையாக்கப்பட்டார்கள். இம் முறை அதிகப்படியான மக்கள் பரிசுத்தப்படுத்தப்பட்டார்கள். அதை யொட்டினூற்போல், குரோட்வோலும் உல்பிரிட்டும் மாஸ்கோவிற்கு விஜயம் செய்தனர். அதற்குப் பின்னர் கிழக்கு செர்மனியின் (கம்யூனிஸ்ட்டு) ஆட்சியை நீடிக்கவைக்கும் நோக்கத்தில் மாஸ்கோ

பொருளாதாரச் சலுகைகளை வாரி வழங்கிற்று. ஆயிரக்கணக்கான போர்க் குற்றவாளிகளை சிறையிலிருந்து விடுதலை செய்தது. விடுதலை செய்யப்பட்டவர்களில் மார்ஷல் பாலசும் ஒருவராவர். 1954, மார்ச்சு 25ஆம் நாள் மாஸ்கோ தன் நேசநாடாகிய கிழக்கு செர்மனிக்கு 'முழு இறைமை' வழங்கியது. எனினும், அதற்குப் பின்னரும் சோவியத் துருப்புகள் அங்கு இருக்கத்தான் செய்தன. 1954, அக்டோபர் 17-ல் மற்றொரு சோவியத் முறைத் 'தேர்தல்' அங்கு நடைபெற்றது. அதில் 'தேசீய முன்னணி' 99·3 சதவீத வாக்குகளைக் கைப்பற்றியது. குரோட்வோல் அமைத்த புதிய காபினட்டில் மொத்தம் 27 பேரில் 18 பேர் கம்யூனிஸ்ட்டுகள் ஆவர். உல்பிரிட்டும் குரோட்வோலும் அடிஞரை 1954, செப்டம்பர் மாதம் மாஸ்கோவுக்கு வரும்படி அழைத்தனர். அங்குச் சென்ற கிழக்கு செர்மன் தலைவர்கள் சோவியத் யூனியன் ஏற்கெனவே தங்கள் நாட்டிற்கு அளித்த 'முழு இறைமை' உரிமையை விளக்கும் ஒப்பந்தத்துடன் தாயகம் திரும்பினர்.

இதற்கிடையில் வார்சா ஒப்பந்த நாடுகளில் ஒன்றுகிவிட்ட 'செர்மன் ஜனநாயகக் குடியரசு' 1956, ஜனவரியில் தன் மக்கள் போலிசுப் படையை இராணுவமாகவே மாற்றிவிட்டது. வில்லி ஸ்டோஃப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அந் நாட்டுத் தலைவர்கள் அப்போது நிலவிவந்த ஸ்டாலின் கொள்கை எதிர்ப்பு அரசியலில் மாஸ்கோ காட்டிய வழியே செல்லத் தலைப்பட்டார்கள். போலாந்திலும் ஹங்கேரியிலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கண்டு அச்சமடைந்தனர். பல்வேறுவிதமான பொருளாதார, சமூகச் சீர்திருத்தங்களின்மூலம் தன் நாட்டவரின் அமைதியின்மையைப் போக்க முற்பட்டனர்.

மேற்கு ஜெர்மனியுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, கிழக்கு ஜெர்மனி வறுமையிலேயே மூழ்கிக் கிடந்தது. பத்து ஆண்டுகளில் 1950-60 வரை ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் சுதந்திரத் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளவும், தங்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும் கிழக்கிலிருந்து மேற்கு செர்மனிக்கு ஓடிப் போயினர். மாஸ்கோ பொருளுதவி செய்தபோதிலும், பொருளாதார வளர்ச்சிக்காகப் பகட்டான திட்டங்கள் தீட்டப்பட்டபோதிலும், எல்பி நதிக்கு அப்பால் 'பாட்டாளிகள் சொர்க்கம்' (workers' paradise) தோன்றியபாடில்லை. எனினும், இச் செயற்கைப் போலிசுத் துணைநாடு (Satellite, police-state) நீடிப்பதற்குரிய சாத்தியங்கள் இருக்கத்தான் செய்தன. சோவியத் இராணுவ வலிமை அங்கு வெற்றிகரமான புரட்சி ஏற்பட வழியில்லாது செய்துவிட்டது. பான், லண்டன், பாரிஸ், வாஷிங்டன் ஆகிய தலைநகரங்களில் ஏற்பட்ட விழிப்பு, கிழக்கு ஜெர்மனியை 'விடுதலை' செய்யமுற்பட

தான் மேல்நாடுகளே முயற்சிகளில் ஈடுபடாவண்ணம் இருக்கும்படி செய்துவிட்டது. ஜெர்மனியின் படைபலம் பெருகவேண்டும். அது தங்கள் நேசநாடாக விளங்க வேண்டும் என்று மேல் நாடுகள் ஒரே பிடிக்கு நின்றன. அதுபோல் ஜெர்மனி ஒற்றுமையாக வேண்டுமென்றால் முதலில் அது 'நடுநிலைமையுடன்' விளங்க வேண்டும் என்று சோவியத் யூனியன் பிடிவாதம் செய்தது. ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காத, முரண்பாடான இக் (கிழக்கு-மேற்குக்) கொள்கைகள் ஜெர்மன் ஐக்கியத்திற்காகக் கிழக்கு மேற்கு நாடுகட்கிடையே பேச்சுவார்த்தைகள் நடக்க இடமில்லாமல் செய்துவிட்டன. எனவே, கிழக்கேயுள்ள 'குடியரசு' துயரமளிக்கும் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் தன்னால் முடிந்தமட்டும் தீர்க்க முயன்றது; அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பை பலாத்காரத்தால் அது அடக்கியது; பான் தலைவர்களுக்கு முற்றிலும் ஒவ்வாத முறையில் இரு ஜெர்மன் அரசுகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்துவதன்மூலமே செர்மன் ஐக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற மாஸ்கோவின் கொள்கைக்கு அதுவும் ஒத்துழைத்தது.

ஜெர்மன் புதிர் : ஜெர்மனியைப்பற்றிக் கணக்கிட முற்படுபவர், அது சம்பந்தமான நுணுக்கங்களையும், அளந்து மதிப்பிடத்தக்க வற்றையும் கருத்தில்கொள்ளுதல் இன்றியமையாததாகும். எனினும், அவற்றை அடிப்படையாக வைத்துக்கூட ஜெர்மனியின் வருங்கால நிலைமை குறித்து 1950–60-ல் எதையும் நிச்சயமாக அறிதியிட்டுக் கூற வழியில்லை. முன்பு ஜெர்மனியின் கொள்கை வகுப்பாளர் நல்லதற்கோ, கெடுதலுக்கோ மாற்ற முடியாத முடிவுகளை மேற் கொண்டபோதாவது ஜெர்மனியின் நிலைகுறித்து முன்னறிவுப்புச் செய்ய முடிந்தது. அக் காலம் இப்போது சென்றுவிட்டது. புத்திசாலித்தனமான அரசியலறிஞர் எவரும் மாற்றமுடியாத முடிவுகளை மேற்கொள்ளமாட்டார். பிரிந்துகிடக்கும் அரசியலறிஞர் களால் எவ்விதமான முடிவுக்குமே வர இயலாது. 1950-60-ல் செர்மானியர் பிரிந்துகிடந்ததோடல்லாமல் தத்தம் நிலப்பகுதியில் ஆட்சியிலிருந்தோரின் நண்பர்கள் விரோதிகளுக்கு இடையேயும், செர்மன் நாட்டு நலத்தைப் பெருக்குவதுபற்றிக் கருத்து வேற்றுமை கொண்டிருந்தோருக்கு இடையேயும் பிரிந்து கிடந் தனர். ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பலத்தையும் நோக்கங்களையும்பற்றி செர்மனி முன்பு தவருன எடைபோட்டது அல்லவா? அவற்றைப்பற்றி மீண்டும் அதே மாதிரியான கருத்துக் கொள்வதற்கு அது அஞ்சியது.

இப் பிரச்சினைபற்றிய இன்னும் முக்கியமான உண்மைகளைச் சற்றுப் பார்ப்போம். நாட்டுணர்ச்சி யுகம் இன்னும் நம்மை

விட்டுப் பிரியவில்லை. பிரிந்துகிடக்கும் ஜெர்மனி ஒரு நாள் ஒன்றுபடவே போகிறது — அதற்காக முயற்சி புரிந்துவருகிறது. அம் முயற்சி நீண்ட காலத்துக்கு நடைபெறலாம். அதற்கு அநேக முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். ஆனால், அம் முயற்சி இருந்துகொண்டேதான் இருக்கும். வலிமை அரசியல் (power politics) இன்னும் நம்மைவிட்டுப் பிரிந்தபாடில்லை. அது நிலைத்து நிற்கும் வரையிலும், ஒன்றுபட்ட ஜெர்மனி தன்னுடைய பலத்தை அதிகரிக்கவே முயலும் என்பது உறுதி. மற்ற வல்லரசுகளின் வலிமையை அதிகரிக்க அது ஒருகாலும் முன்வராது என்பதும் உறுதி. ஆனால், அமெரிக்க—சோவியத் ஒப்பந்தத்தின்மூலமே ஜெர்மனி ஐக்கியப்பட முடியும்; அல்லது மூன்றும் உலகப் போரில் ரஷ்யாவை அமெரிக்காவோ, அன்றி அமெரிக்காவை ரஷ்யாவோ தோற்கடித்தால்தான் ஜெர்மனி ஐக்கிய மாக முடியும். அமெரிக்க—சோவியத் ஒப்பந்தம் ஏற்படும் என்பது வெறும் பகற்கனவே. ஏனெனில், ஜெர்மனி நடுநிலைமையாக்கப்படும் கருத்தை அமெரிக்கா மறுத்துவிட்டது. ஜெர்மனி மேலைநாடு களுடன் கூட்டுச் சேருவதை ரஷ்யா எதிர்த்துவருகிறது. அமெரிக்க—சோவியத் போர் ஏற்படுமாயின், அதன் விளைவு என்ன வாயிருந்தாலும், ஜெர்மன் சமுதாயமே அழிந்துபோவது நிச்சயம். எனவே, ஜெர்மனி நிலைத்து நிற்பதென்றால் அது நெடுநாள் துண்டாடப்பட்டுக் கிடப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது புரிந்துவிட்டது. மேற்கு (ஜெர்மன்) குடியரசு மேலை வல்லரசு களுடனும், கிழக்கு (ஜெர்மன்) குடியரசு கீழை வல்லரசுகளுடனும் நேசம் பூண்டு இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இக் கிழக்கு—மேற்குப் போட்டியைத் (பகைமையைக்) தங்களுக் குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, (இரு) ஜெர்மன் நாட்டு அரசியல் தலைவர்களும் ஒருவேளை தங்கள் நாட்டை ஐக்கியப் படுத்திவிட்டாலும் விடலாம். முழுச் சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும் கடைப்பிடிக்கலாம். இக் குறிக் கோளை எய்தும் வழிகளையும், அதனை எய்துவதால் பெறப்போகும் நன்மையையும் கருத்தில் கொண்டு நோக்குங்கால், நடப்பு அரசியல் சக்திகள் வலியுறுத்துவதற்கேற்ப, ஜெர்மனி ஒரு சுதந்திர 'மூன்றும்' தனி நாடாய் உருவானால்தான் அக் குறிக் கோளை எய்த முடியும் என்பது புலப்படும். அதை விடுத்துக் '(கருத் துக்) கொள்கை' அடிப்படையில் செல்வதால் இரு வல்லரசுகட்கும் இரு ஜெர்மனிகளும் ஒன்றுக்கு எதிராக மற்றொன்றுக்கு நெடுநாள் கடமையாற்றவேண்டிய கட்டாயம் வந்துவிடும். நிலையான கடமை ஏற்பட்டுவிடின், பின்னர் பேச்சுவார்த்தைமூலம் ஓர் உடன்பாட்டிற்கு வரவே இடமில்லாதுபோய்விடும். ஆதலின், ஜெர்மன் அரசியல்

வல்லுநர்க்கிடையே பேச்சுவார்த்தை நடக்க வாய்ப்பு வருமாயின், அதுவரை அவர்கள் தெளிந்த அறிவுடன் இருப்பராயின், ∴பிரெடரிக், பிஸ்மார்க், ராத்தினே ஆகிய அறிஞர்கள் காட்டிய அறிவுப்பாதையில் செல்ல முன்வருவர். இவ்விருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலவிவரும் புதிய உலக அரசியல் சூழலில் அமெரிக்கர்கள் உதவிமானியத் தொகை அளிப்பதையன்றி, நடைமுறை நிலைமையைப் பாதுகாப்பதன்றி, மூன்றாம் உலகப் போரில் ஏற்படக்கூடிய அழிவை உணர்த்துவதையன்றி வேறெதுவும் சாதிப்பதற்கில்லை. ரஷ்யரும் (ஜெர்மன் நாட்டுப் பொருள்களுக்குச்) சந்தைகள் வழங்குவதையன்றி, (அந்நாடு) இழந்த மாகாணங்களை (pronvices) மீண்டும் அதனிடமே கொடுத்துவிடுவதையன்றி ஐரோப்பிய ஆதிக்கத்தில் பங்கு அளிப்பதையன்றி வேறெதுவும் செய்வதற்கில்லை. தெளிந்த அறிவிற்குரிய ஆற்றலற்ற ஜெர்மானியரை, நியோ ∴பாசிசம் என்ற பலத்கார அரசியற் கோட்பாடு ஒருவேளை ஹிட்லரின் மூளைக்குழப்பத்திற்கு ஆளாக்கினாலும் ஆக்கிவிடலாம். ஆனால், ஜெர்மானியரிடம் பகுத்தறிவு இருக்குமாயின், அது அவர்களை முற்றிலும் வேறான வழியில் செல்லும்படி தூண்டும். அவ்வழி ஜெர்மனியும், ஐரோப்பாவும், நம் உலக சமுதாயமும் உய்யும் வழியாக அமையும்.

12. கம்யூனிச இடைமறிப்பு

1. யூ. எஸ். எஸ். ஆர். : முடிவிலாப் பணி

'ஐரோப்பாவில் ஒரு பேய் நடமாட்டம் இருந்து கொண்டு வருகிறது — கம்யூனிசப் பேய்தான் அது. அதிகார பீடத்தில் அமர்ந்திருந்தவர்களால் கம்யூனிஸ்ட் கட்சி அதுவே என்று இகழப்பட்ட எதிர்க் கட்சி எங்கே? கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் கருத்துகள், குறிக்கோள்கள், போக்குகள் ஆகியவற்றை வெளிப்படையாக உலகம் அறியுமாறு பிரசுரிக்கும் நேரம் வந்துவிட்டது. இக் கம்யூனிசப் பேய்பற்றிப் பரவிவரும் (பொய்)கதையைக் கட்சிக் கொள்கை அறிக்கை (manifesto) மூலம் ஒழித்துக் கட்டவேண்டும்... கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் கருத்துகள், குறிக்கோள்கள் ஆகியவை மறைக்கப்படுவதை வெறுப்பவர்கள். நடை முறையிலிருந்துவரும் சமூக நிலைமைகளை வல்லந்தமாக ஒழித்தால்தான் தங்கள் குறிக்கோள்களை எய்தமுடியும் என்று அவர்கள் வெட்டவெளிச்சமாகப் பறைசாற்றுகிறார்கள். எனவே (இதைத் தெரிந்தபின்பாவது), ஆளும் வகுப்பினர் கம்யூனிஸ்ட்டு புரட்சியைக் கேட்டு நடுங்கட்டும். பாட்டாளிகட்கு அவர்கள் அடிமைத்தளை அறுபடுமேயன்றி வேறெருரு குறையும் வராது. அவர்கள் இவ்வுலகையே வெல்லவிருக்கிறார்கள். ஓ ! எல்லா நாட்டுப் பாட்டாளி மக்களே ! வாருங்கள், ஒன்றுபடுங்கள் !'

கார்ல் மார்க்ஸ், ஃபிரடரிக் ஏஞ்சல் ஆகியோர் எழுதிய 'கம்யூனிஸ்ட் கொள்கை விளக்கம் (The Communist Manifesto), 1848' என்ற நூலிலிருந்து ஒரு பகுதி.

ஐரோப்பிய நாடுகளிலேயே அதிக ஜன நெருக்கம் வாய்ந்ததும், பரந்த நிலப்பரப்பையுடையதுமான நாடு ரஷ்யா ஒன்றுதான். அண்மைக் காலம்வரை தொழில்துறையில் மிகவும் பிற்போக்காக இருந்ததும் அதுவே. கடுமையான தட்பவெப்பநிலை, பண்படாப் பழங்கால விவசாயிகள் சமுதாயம், பிற்போக்குக்காரப் பிரபுக்கள் கூட்டம், அறியாமையில் மூழ்கிக் கிடந்த எதேச்சாதி

காரம் ஆகியவையும், அச்சத்தில் 'மேற்கத்திய மயம்', கிழக்கித் தியத் தனிமை—இவ்விரண்டு கொள்கைகளையும் விட்டுவிட்டுப் பிற் பற்றும் நாட்டின் போக்கும் இதற்குக் காரணமாகும். இந் நாட் டின் கரடுமுரடான இறந்தகால வரலாற்றினின்றும் இவற்றைப் பற்றி ஓரளவு தெளிவாகவும் விவரமாகவும் அறியலாம். ஆயிரம் ஆண்டுகட்குமுன் முதல், 'ரஷ்யர்' எனப்படுவோர் தங்களை ஆட்சி செய்வதற்காகக் கீவிலிருந்து பண்டைக் கால டேனியக் கடலரசர்களைத் தங்கள் நாட்டிற்கு அழைத்துவந்தார்களாம்.) அப் போது அவர்கள் பைசான்டியத்தில் நிலவிவந்த மதத்தைத் தழுவி வந்தார்கள்.) அங்கிருந்தே மேலை நாடுகளுடன் தொடர்பு கொள்ளத் தலைப்பட்டார்கள். (ஆசியாவிலிருந்து ஸ்டெப்பி புல் வெளிமூலம் வந்த காட்டுமிராண்டிகள் கூட்டத்தினரால் அவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டுவந்தார்கள்) இக் கூட்டத்தைச் சேர்ந்த இறுதி பராக்கிரமசாலியான மங்கோலியரால் கைப்பற்றப்பட்டு, நெடுநாள் (1240–1480) அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தார்கள்.) மஸ்கோவி கோமகன்கள் (Dukes) தங்கள் நாட்டை மங்கோலியரின் கைவசமிருந்து மீட்பதற்கு உள்நாட்டுக் குழப்பத்தையும் வெளி நாட்டுத் தாக்குதலையும் எதிர்க்க வேண்டியாயிற்று. அதற்காக அவர்கள் பயங்கரக் கொடுங்கோன்மை செலுத்தவும் அஞ்சவில்லை. மேலைநாடுகளில் ஏற்பட்ட மக்களை ஊக்குவிக்கும் மறுமலர்ச்சி இயக்கத்தைப்போலவோ (renaissance), அன்றி சமயச் சீர்திருத்த இயக்கத்தைப்போலவோ (reformation) எதுவும் இந் நாட்டில் நிகழ வில்லை. ஆனால், கொடுங்கோன்மைமட்டும் (tyranny) வலிமை மிக்க நாடுகளுடன் பின்னல் ஏற்பட்ட சண்டைசச்சரவுகளால் ரோமனோவ்சார் ஆட்சியின்கீழ் (1613–1917) வேரூன்றலாயிற்று. 19ஆம் நூற்றாண்டில் இந் நாட்டினர் யூரேசியா முழுவதும் பரவி விட்டனர். (உலக நிலப்பரப்பில் ஆறில் ஒரு பகுதி அவர்களுடைய நாடாகிவிட்டது.) காலங்கடந்து இங்கு ஏற்பட்ட எழுச்சியில், இந் நாட்டினர் பண்பாட்டு வரலாற்றிலேயே கதை, கவிதை, நாடகம், இசை, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கிளர்ச்சியூட்டும் நூல்களை எழுதி வெளியிட்டனர்.

1917-ல் ரஷ்யா ஒரு சிறிய புரட்சிக்கார வெறியர் கூட்டத்தின் ஆட்சிக்குள்ளானது.) ஆணவங்கொண்ட வல்லாட்சியாளர் (autocrats), பாதுகாப்பற்ற பணக்காரர், நில ஆசை பிடித்த விவசாயிகள், வறுமையில் உழலும் நகர்ப்புற உழைப்பாளிகள் ஆகியவர்களைக் கொண்ட இந் நாட்டில் நெடுநாளாகப் புரட்சி வாழையடி வாழை யாய் இருந்துவருகிறது. வெளிநாடுகளுடன் ஏற்படும் போரில் இந் நாட்டிற்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டால் உடனே உள்நாட்டில் புரட்சி மூண்டுவிடும். இது இந் நாட்டைப் பொறுத்தமட்டில் வழக்க

மாக ஏற்படும் ஒரு நிகழ்ச்சியாகும். இதற்கு அனேக சான்றுகள் உள. கிரிமியாப் போரில் (1854–56) ரஷ்யாவுக்குத் தோல்வி ஏற்பட்டதோ இல்லையோ, உள்நாட்டில் 'சீர்திருத்தம்' என்னும் பெயரில் அடிமைத் தளை அறுக்கப்பட்டது; தல சுய ஆட்சி முறை (local self-government) நிறுவப்பட்டது. தூரக்கிழக்கில் தோல்வி ஏற்பட்டதுமே இங்கு 1905–06ஆம் ஆண்டில் பயனற்ற ஒரு புரட்சி ஏற்பட்டது. அப்போதுதான் டூமா (Duma) எனப்படும் முதல் பாராளுமன்றமும் அமைக்கப்பட்டது. முதல் உலக மகா யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்ததோ இல்லையோ, இங்கு உள்நாட்டில் வல்லாட்சி முற்றுப்பெற்றது. சமூகப் புரட்சி தலை விரித்தாடியது. அப் புரட்சியின்போதுதான் படைவீரர்கள் படையைவிட்டு ஓடினர்; பண்ணைகள் விவசாயிகளின் கைவசம் ஆயின; தொழிற்சாலைகள் (factories), ஆலைகள் (mills), மற்றும் சுரங்கங்கள் (mines) தொழிலாளிகளின் கைவசம் ஆயின; இவை யனைத்தும் 'சோசியலிசத்தை' நிலைநாட்டவேண்டும் என்ற குழப்ப மான நோக்கத்துடன் நடைபெற்றன. 1917, மார்ச்சு 15 அன்று இரண்டாம் நிகோலாஸ் மன்னர் தம் அரசிருக்கையை நீத்தார் (abdicate). 1918, ஜூலை 17ஆம் நாள் ஏற்பட்ட உள்நாட்டுச் சண்டைக்கும் குழப்பத்திற்கும் இடையே அவரும், அவரது மனைவி மக்களும், வேலையாட்களும் இகாடெரிங்பரிங் (ஸ்வர்டிலோவஸ்க்) என்னுமிடத்தில் கம்யூனிஸ்ட் காவலாளிகளால் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

'லெனின்' என்ற நூலை எழுதிய விளடிமிர் இலிச் உலியா னோவின் (1870–1924) என்பவருடைய தலைமையில் தாயகம் திரும்பிய நாடுகடத்தப்பட்டவர்களும் (exiles) மறைமுகமாகச் சதி வேலையில் ஈடுபட்டிருந்தவர்களும் இயங்கிவந்தார்கள். அவர்கள், 'நாங்கள் விரும்புவது அமைதி, நிலம், உணவு;' 'எல்லா அதிகாரமும் சோவியத்துகள் கைவசமிருக்க வேண்டும்' என்ற குரல்களை எழுப்பினர். அவர்கள் புரட்சி மக்களின் தலைவர்களா யினர். புரட்சிக்கென்றே தங்களை அர்ப்பணித்த இத் துணிகர வீரர்கள் 1917, நவ. 7ஆம் நாள் (பழைய சோவியத் காலண்டர் முறைப்படி அக். 25ஆம் நாள்) கெரன்சிகி தலைமையில் இயங்கிய 'தற்காலிக அரசாங்கத்தைக்' (Provisional Government) கவிழ்த்து விட்டு 'சோவியத் அரசாங்கம்' ஒன்றை அதற்குப் பதிலாக அமைத்தனர். இப் புது அரசாங்கமும், மார்க்சீயப் 'பாட்டாளிகள் சர்வாதிகாரமும்' (dictatorship of the proletariat) ஒன்று என்று அவர்கள் கருதினர். 1918-ல் இவ்வாட்சி நேசநாடுகள் தலையீடு, இடைமறிப்பு, உள்நாட்டுப் போர் ஆகிவற்றிற்கு ஈடுகொடுக்க வேண்டியதாயிற்று. அதன் பின்னர் அது ஒரு கட்டு

ஆட்சியாகவும் (one-party polity), 'காவல் அரசாகவும்' (police state) மாறியது. அடுத்தாற்போல் அது நம் காலத்தில் முதல் 'சர்வாதிகார ஆட்சி'யாகவும் ஆகியது. அதன் ஆட்சியாளர்கள் தீவிரப் பெரும்பான்மைக் (பால்சிவிக்) கட்சியின் உறுப்பினராவர். அவர்கள் அடிக்கடி ரஷ்ய சோசியல் ஜனநாயகத் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த மிதவாதச் சிறுபான்மைக் (மென்ஷிவிக்) கூட்டத்தாருடன் மோதிவந்தனர். 1918-ல் அவர்கள் தங்களைக் 'கம்யூனிஸ்டுகள்' என்று மார்க்சீய முறையில் அழைத்துக்கொள்ளத் தொடங்கினர். அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து 1919–21-ல் தங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளைத் தோற்கடித்தனர். அதிகார பீடத்தில் அமர்ந்த நாள் முதற்கொண்டு அவர்கள் 'முதலாளித்துவத்தை' ஒழித்துக்கட்டும் சாக்கில் 'உலகப் புரட்சி' என்ற பெயரில் உலகையே தங்கள் குடைக்கீழ்க் கொண்டுவர முயன்றனர். அவர்கள் உற்பத்திச் சாதனங்களாக (means of production) விளங்கும் தனியார் சொத்தைப் (private property) பறிமுதல் செய்து, அதை சோசியலிசமயமாக்க விழைந்தனர். மேலும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டும், ஒடுக்கப்பட்டும், நசுக்கப்பட்டும் வந்தவர் என்று சொல்லப்பட்ட தொழிலாளர், விவசாயிகள், மற்ற நாட்டுக் குடியேற்ற நாட்டு மக்கள் ஆகியோரை 'விடுதலை' செய்ய (கம்யூனிச ஆட்சிக்கு அடிமையாக்க) விரும்பினர்.

நினைத்ததும் நடந்ததும் : 'ஆக்டோபர் புரட்சி' ஏற்பட்ட நாள் முதற்கொண்டு மேலைநாட்டினர் இரு வினுக்கள் எழுப்பி அவற்றைப் பற்றி வாதம் செய்தவாறு இருக்கிறார்கள். மஸ்கோவிய கம்யூனிஸ்ட் ஆட்சியாளர் உலகப் புரட்சியில் மும்முரமாக அக்கறை செலுத்தி வருகிறார்களா, இல்லை ரஷ்யநாட்டு நலன்மீது கண்ணுங்கருத்துமாய் இருந்துவருகிறார்களா என்பது அவர்கள் எழுப்பும் முதற் கேள்வி. கிரெம்லின் கம்யூனிச ஆட்சியாளருடன் சமாதன சகவாழ்வு (peaceful coexistence) ஏற்பட வழியுண்டா இல்லையா என்பது அடுத்த கேள்வி. எவ்வெப்போது எங்கெங்கு அதிக இடையூறின்றிப் புரட்சியைத் தூண்டிவிட முடியுமோ அவ்வப்போது ஆங்காங்கு உலகப் புரட்சியை உண்டுபண்ணவும், பிறநாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகள்மூலம் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் குறிக்கோள்களை எய்தவும் சோவியத் கூட்டமைப்பின் வலிமை சரிசமமாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது என்று முதல் வினுவுக்கு விடையளிக்கப்படுகிறது. இரண்டாவது வினுவுக்கு விடையளிக்குங்கால் சோவியத் யூனியன் 1958 வரை மேலை வல்லரசுகளுடன் 41 ஆண்டுகள் சகவாழ்வு நடத்திவந்திருக்கிறது என்ற உண்மையை நினைவிலிருத்தவேண்டும். அவற்றில் 9 ஆண்டுகளே (1918–21, 1939–45) போரிலும், மீதி 32 ஆண்டுகளும் பெரும்பாலும் சமாதானத்



RUSSIAN WAR FRONTS: 1919-1920

① *Farthest Southern Advance of Allied Troops in North Russia, January 1919*
② *Farthest Westward Advance of White Army of Kolchak, May 1919*
③ *Farthest Northward Advance of White Army of Denikin, October 1919*
④ *Farthest Eastward Advance of White Army of Yudenitch, October 1919*
⑤ *Farthest Eastward Advance of Polish Army, June 1920*
⑥ *Farthest Westward Advance of Red Army into Poland, August 1920*
⑦ *Farthest Northward Advance of White Army of Wrangel, November 1920*

திலுமே கழிந்திருக்கின்றன. மேலும், ஒன்பது ஆண்டுகள் நடை பெற்ற போரைப்பற்றிய உண்மையை நாம் மறந்துவிடலாகாது. (சோவியத் ஆக்கிரமிப்பாலும், பின்லாந்திய எதிர்ப்பாலும் 1939–40-ல் பின்லாந்துடன் நடைபெற்ற ஒரு குறுப்பிட்ட தலவரம்பிற்குட்பட்ட குளிர்காலப் போர் நீங்கலாக) மற்றபடி நடைபெற்ற போர் அனைத்தும் கம்யூனிஸ்ட் சேனைகள் மேலை வல்லரசுகளைத் தாக்கினதால் எற்பட்ட விளைவு அல்ல. ஆனால், ரஷ்யக் கூட்டமைப்பின் மேல் கம்யூனிசத்திற்கு எதிராக ஏற்பட்ட இராணுவத் தாக்குதலின் விளைவே அது என்று ஐயந்திரிபறக் கூறலாம்.

1920ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் வார்சாவுக்கு முன்னிலையில் செம் (கம்யூனிஸ்ட்டு) படை மண்ணைக் கவ்வியது. (ஊக்ரெயினைக் கைப்பற்றுவதற்காக பில்சுட்ஸ்கியின் புதிய போலந்து நாடு வசந்த காலத்தில் அப் போரை மேற்கொண்டது.) அதிலிருந்து லெனின் ஓர் உண்மையை அறியலானார்: இராணுவ வலிமைமூலம் கம்யூனிசத்தைப் பரப்பிவிடலாம் என்று நினைப்பது ஒரு 'தவறு' என்பதை அதிலிருந்து உணர்ந்தார். அதே உண்மை 1939-ல் பின்லாந்திலும், 1950-ல் கொரியாவிலும் மீண்டும் உணர்த்தப்பட்டது. பாசிஸ வல்லினைப்பைப் போன்றதன்று கம்யூனிச வல்லினைப்பு. அது படையெடுப்பைக்காட்டிலும் சதியையே பெரிதும் நம்பியிருக்கிறது. இக் காரணத்தினலன்றே கம்யூனிச வல்லினைப்பு சுதந்திர உலகிற்கு ஒரு புரியாத புதிராகவும், பெருந் தீங்கை விளைவிக்கக்கூடியதாகவும் இருந்துவருகிறது. ரஷ்யா நீங்கலாக வேறெந்த நாட்டிலும் சதிச் செயல்மட்டும் நிலையான கம்யூனிச ஆட்சியை நிறுவியதில்லை. ஒரு கம்யூனிசக் கட்சிகூட (சான்மாரினே, கேரளாவைத் தவிர) சுதந்திர மான, நேர்மையான தேர்தலில் பெரும்பான்மை வாக்குப் பெற்ற தில்லை. எனவே, சதிவேலை, எதிர்ப் படையெடுப்பு ஆகியவை மூலமாகவே 1944–48-ல் பெரும்பாலான கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கம்யூனிச ஆட்சியை அமைக்கும்படி நேர்ந்தது. சோவியத் கூட் டமைப்பை ஒழித்துவிடும் எண்ணத்துடன் அதன்மீது மேற்கொள்ளப் பட்ட 'சினமூட்டாத (காரணமற்ற) தாக்குதலை' (unprovoked attack) எதிர்த்து ரஷ்யா 'பாதுகாப்புப் போர்' செய்யும்படி ஆயிற்று. அப் போருக்கப்புறமே ஐரோப்பிய நாடுகள் கம்யூனிச ஆட்சியை நிறுவின.

கிரெம்லின் கம்யூனிஸ்ட் தலைவர்கள் இறுதியில் 'முதலாளித் துவத்திற்கு' முற்றுப்புள்ளி வைக்க முற்படுகிறார்கள். மார்க்சீயம்—லெனினிசம்—ஸ்டாலினிசம் போதிக்கும் மெஸ்ஸானிய நற்செய்தியை உலகமயமாக்க உறுதி பூண்டுள்ளார்கள். இதைக் கண்டு அச்சமடை யும் வல்லரசுகள் தங்களைத் தாக்கும் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும்; இருப்பினும் இது சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின்

'நிலையான' அம்சமாகிவிட்டது. அவர்கள் 'இரு வெவ்வேறு (அரசியல்) முறைகளுக்கும்' இடையே போர் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று முதல் நாள் கூறுகிறார்கள். அதற்கு அடுத்த நாளே சமாதான சகவாழ்வு நடத்த முடியும்; சகவாழ்வு வாழ்வதுதான் நலம் என்று பறைசாற்றுகிறார்கள். இம் முன்னுக்குப்பின் முரணான பேச்சின் பொருள் என்ன? அவர்கள் இவ்விரண்டில் எதில் நம்பிக்கை பூண்டு செயலில் ஈடுபட்டுவருகிறார்கள்? இவ் வினாக்களுக்கு விடையளிக்க முற்படுங்கால், அவர்கள் (கம்யூனிஸ்டு தலைவர்கள்) இரண்டிலும் முழு நம்பிக்கை வைத்திருப்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆனால், அமெரிக்கர்களுக்கு இவ்வுயர் ரகத் தர்க்கத்துடன் பழக்கம் இல்லாதலால் அவர்களுக்கு இம் முரண்பாடும் புரியாதிருப்பது இயற்கையே.

மேலைநாட்டுக் கொள்கை வகுப்பாளர், தற்காப்பை முன்னிட்டு சோவியத் கூட்டமைப்பை அழித்து ஒழித்துவிடவேண்டும் என்ற நிலையான நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதுபோல் சோவியத் கொள்கை வகுப்பாளரும், தங்கள் 'தற்காப்பிற்காக' அவர்களுக்கே உரிய பைசான்டிய—மங்கோலிய—மார்க்சீயத் தர்க்க முறைப்படி, மேலைவல்லரசுகளை ஒழித்துக்கட்ட நிலையான உறுதி பூண்டுள்ளார்கள். இம் மனவுறுதியே இந் நூற்றாண்டுக் கிழக்கு—மேற்குத் தொடர்புகளின் நிலையான அம்சம் ஆகும். ஆனால், இத்தகைய நம்பிக்கைகள் எல்லா அரசுமுறைகளிலும், வல்லரசுகள் தொடர்பான எல்லா வலிமை அரசியலிலும் காணப்பட்டுவருகின்றன. ஆனால், இங்கு அவை மீண்டும் சுடர்விட்டு எரியத் தொடங்கியிருக்கின்றன. இதற்குக் கிழக்கு—மேற்குக் கொள்கை முரண்பாடே அடிப்படைக் காரணம் ஆகும். கொள்கையை அடிப்படையாகக் கொண்ட காரணங்கள் பல இருக்கின்றன. 'முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகள் தங்களைத் தாக்குவது நிச்சயம்' என்று கம்யூனிஸ்ட்டுகள் அச்சம் அடைந்துவருதல் ஒன்று; அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் மக்களை விடுதலை செய்யவேண்டும் என்று கிரெம்லின் கட்டிவரும் மனக் கோட்டை இரண்டு; கம்யூனிஸ்ட் அடிமைத் தளையையும் அதனால் ஏற்படும் அஞ்சத்தக்க விளைவுகளையும்—அதாவது, நடுச்சாம உபத்திரவம், உப்புச் சுரங்கம், அடிமை முகாம்களுக்குத் தள்ளப்படல், (அதிகாரிகளுக்கு) இணங்கா தாரைச் சுட்டுவீழ்த்தல்—ஆகியவற்றைக் கண்டு மேலைவல்லரசுகள் அடைந்துவரும் பீதி மூன்று; கம்யூனிசக் கொடுங்கோன்மைக்கு அடிமையாகிக்கிடக்கும் மக்களை விடுதலைசெய்ய இயலும் என்று மேலைவல்லரசுகள் கொண்டிருக்கும் நம்பிக்கை நான்கு. எனினும், அதிகார பீடத்தில் வீற்றிருப்போரில் தெளிந்த அறிவுடையவர் இந்த அச்சத்தைக் களையவும், நம்பிக்கைகளை நனவாக்கவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மிதமானவையாகவே இருக்கும். ஏனெனில், அவர்கள் தாங்கள் மேற்கொள்ள நினைத்திருக்கும்

நடவடிக்கைகளின் செலவு, நன்மை, தீமைகளை எடைபோட்டுப் பார்த்துவிட்டு அச்சமடைந்துவிடுகின்றனர். மஸ்கோவிய கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் கோழைகள் ஆயினும், அவர்கள் இதுவரை உலக விஷயங்களில் பைத்தியங்கள்போல் நடந்துகொண்டதில்லை. அவர்கள் ஆட்சி செய்துவரும் மக்களும் உள்நாட்டு நெருக்கடிகளை வெளிநாட்டு இராணுவத் தாக்குதல்மூலம் சமாளிக்கும் மனப்பான்மை கொண்டவர்களுமல்லர். 1930–40-ல் இத்தாலி, சப்பான், செர்மனி ஆகிய நாடுகளை ஆட்சி செய்துவந்த பாசிஸ்ட் பைத்தியங்களைத் தவிர, மற்ற மேலைநாட்டுக் கொள்கை வகுப்பாளர் அனைவரும் தங்கள் விருப்பத்தைப் பூர்த்தியாக்கத்தக்க நடவடிக்கைகளின் விளைவுகளை எடைபோடுவதைப் பொறுத்தமட்டில் இதுவரை தெளிந்த அறிவுடையவர்களாகவே விளங்கிவந்திருக்கிறார்கள்.

இவற்றிலிருந்து நாம் அறிவது என்ன? ஐயுறவான வழிபாட்டை—மதத்தைத் தழுவியவர்களை (கம்யூனிஸ்ட்டு மதத்திற்கு மாறியவர்களை) ரஷ்யப் புரட்சி அதிகார பீடத்தில் அமர்த்தியது. அவர்கள் அதிகாரத்திற்கு வந்தார்களோ இல்லையோ, உடனடியாக ஒப்பந்தங்களை ரத்து செய்யவும், பொதுக் (அரசாங்கக்) கடன்களைத் தள்ளுபடி செய்யவும், சொத்துசுகங்களைப் பறிமுதல் செய்யவும் தயங்கினரில்லை. அதோடுமட்டும் நின்றுவிடாது, ஒவ்வொரு நாட்டு மக்களையும் கலகம் செய்யுமாறு தூண்டினர்—புரட்சி செய்யுமாறு போதித்தனர். இவ்வச்சுறுத்தலைக் கண்டு ஆத்திரமடைந்த மேலைவல்லரசுகள் இப் புது ஆட்சியை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பின. மறுபுறம் தோழர் லெனினும் அவர் கூட்டாளிகளும் சேர்ந்து புரட்சிப் படைகளைத் திரட்டினர். அவை படையெடுத்து வந்தவர்களையும், 'வெள்ளைப் புரட்சிச் சேனைகளையும்' தோற்கடித்தன. (1919-ல் மார்ச்சு மாதம் மேலைநாடுகளில் பால்சிவிசத்தைப பரப்புவான் வேண்டி 'கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனேல்' ஸ்தாபனம் அமைக்கப் பட்டது.) அது 'உலகப் புரட்சியின் இரணுவத் தளபதி' (General Staff) ஆகப் பணியாற்றத் திட்டமிடப்பட்டது. (1919ஆம் ஆண்டு வசந்தத்தில் மியூனிச்சிலும், புதாபெஸ்ட்டிலும் சதியாளர்கள் 'சோவியத்' ஆட்சியை நிறுவினர்.) அது கம்யூனிஸ்ட்டுகளின் நம்பிக்கையை வளர்த்தது. அவ்வாட்சியை சமூக அமைதிச் சக்திகள் (forces of law and order) அடக்கி ஒடுக்கியதும், அந் நம்பிக்கைகள் சிதறிப் போயின. (1920 ஜூலையில் கம்யூனிஸ்ட் சேனைகள் வார்சாவின் வாயிலை வந்தடைந்ததும், நம்பிக்கை மீண்டும் சுடர் விட்டெரியத் தொடங்கிற்று. அப் படை முறியடிக்கப்பட்டதும் நம்பிக்கை மீண்டும் சிதறிப்போயிற்று.) ஆனால், சோவியத் நாடு மட்டும் தப்பிக்கொண்டது. என்னினும், ரஷ்யாவுக்கு அப்பால் அதனால் புரட்சியைப் பரப்ப முடியவில்லை. மேலைவல்லரசுகள் 'உலகப் புரட்சிக்கு' ஊறு இழைத்தன. எனினும், அவைகளால்

ரஷ்ய நாட்டை அழிக்க முடியவில்லை. இருதரப்பினரும் மீண்டும் மீண்டும் இதே செயலில் ஈடுபட முன்வரவில்லை. அதனால், வீணாயும் நலனாவிடத் தீமையும் செலவுமே அதிகமாகும் என்று நன்கு தெரிய வந்ததால், அவைகள் மேற்படி நடவடிக்கையில் ஈடுபட விரும்ப வில்லை.

1921-லும் அதற்கு அப்பாலும் ஏற்பட்ட 'தற்காலிகப் போர் நிறுத்த உடன்பாடு' (truce) பகைவர் இருவரும் நாடிய நாட்டங் களையும் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் பிரதிபலித்தது. பின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லித்துவானியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை மாஸ்கோ ஒப்புக்கொண்டது. மேற்கு பைலோ ரஷ்யாவும் மேற்கு ஊக்ரெயினும் புதிய போலந்துடனும், பெஸ்ஸ ரேபியா ருமேனியாவுடனும் இணைக்கப்படுவதை ஒப்புக்கொண்டது; காரஸ், அர்தான் ஆகிய இரண்டையும் துருக்கி இழப்பதற்கு இணங் கியது; தூரக்கிழக்கில் ரஷ்யாவின் முன்னுள் நிலையை மீண்டும் பெறுவதில் கணிசமான வெற்றி பெற்றது; மற்றும் மேலைவல்லரசு களில் 'முதலாளித்துவ எதிரிகளுடன்' சமாதானத்தையும் வர்த்த கத்தையும் வளர்த்தது. இந் நாடுகள் (இப் பாவத்திற்கு இடங் கொடுக்க மறுத்த அமெரிக்கா நீங்கலாக) அதற்கு ஈடாக சோவியத் அரசாங்கத்தை ஒப்புக்கொண்டன. அதனுடன் தத்தம் நலனை வளர்க்க வர்த்தக, அரசியல் ஒப்பந்தமும் செய்துகொண்டன. அவை நெடுங்காலத் 'தற்காலிக உடன்படிக்கைகள்' (modus vivendi) ஆகும். பெரும் பொருளாதார மந்தம்மட்டும் ஏற்படா சப்பானிலும் செர் மனியிலும் ஃபாசிஸம் வெற்றி பெறுதிருக்கும்பட்சத்தில் அவை காலவரையறையின்றி நீடித்து இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

புது வல்லரசு: மஸ்கோவிய அறியாமைமீது சீற்றங்கொள்வதும், ரஷ்ய ஆற்றல்களை என்றும் குறைவாகவே எடைபோடுவதும் மேலை வல்லரசுகளின் நெடுநாளைய பழக்கம் ஆகிவிட்டது. 1920–30-ல் அழிவுக்கும் வறுமைக்கும் ஆளாகி நின்ற ரஷ்யாவைக் கண்டு எவரும் அச்சம் அடையவோ, அன்றி அதன் வலிமையைக் கண்டு பீதி யடையவோ இடமில்லாது இருந்தது. எனினும், சொல்லொணாத் துயரத்தினின்றும் கடுமையான வறுமையினின்றும் உருவாகிய புதிய ரஷ்யாவின் வலிமையை மேலை அரசியல் வல்லுநர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமல் தப்புக் கணக்குப் போட்டார்கள். லெனின் மார்க்சீய சித்தாந்தத்தைக் (dogma) கைவிட்டுவிட்டுப் 'புதுப் பொருளாதாரக் கொள்கையைக்' கடைப்பிடிக்கலானார். அக் கொள்கை 1921–28 வரை நீடித்தது. போர் ஏற்படும் முன்பே, உற்பத்தி (production) சீரடையவும், ஸ்டாலின் சோசியலிசத் தொழில்மயம், கூட்டு விவசாயக் கொள்கை முதலியவற்றைக் கையாண்டார். இக் கொள்கை முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் (five year plan)

(1928–32), அதனை அடுத்த திட்டங்களிலும் இடம் பெற்றன. எண்ணற்ற மக்கள் பஞ்சத்திற்குப் பலியாயினர்; அடிமைத் தளையால் அழிந்து ஒழிந்தனர். எண்ணற்ற மக்கள் தாங்கள் கொண்டிருந்த கொள்கைப் பற்றுக்காக இன்னுயிர் இழந்தனர். டிரெய்ட்ஸ்கி 'உலகப் புரட்சியை' ஆதரித்தார்; 'தனி ஒரு நாட்டு சோசியலிசக் கொள்கையை' எதிர்த்தார். (கம்யூனிசக்) கட்சி ஸ்டாலின் தலைமையில் இருப்பதைக் கடுமையாக எதிர்த்தார். அதன் விளைவாகப் பதவி இறக்கம் (demotion) செய்யப்பட்டு, நாடும் கடத்தப்பட்டார். இறுதியில் மெக்சிகோவில் (1940, ஆகஸ்டு 21ஆம் நாள்) கொலை செய்யப்பட்டார். ஸ்டாலின் அதிகார வர்க்கத்தினர் மார்க்சீய கோஷம் எழுப்பினர். அவர்கள் 1936-ல் 'ஜனநாயகக்' கூட்டாட்சி அரசியலமைப்பு (democratic federal constitution) ஒன்றைத் தயாரித்து வெளியிட்டனர் (promulgated). அதன்கீழ் நிறுவப்பட்ட அரசுமுறை செங்கிஸ்கான், கொடுங்கோலன் ஐவான், மற்றும் பீட்டர் மாமன்னன் ஆகியோர் அமைத்த அரசுமுறைகளின் நவீன இணைப்பு என்று சொல்லலாம்.

கம்யூனிஸ்ட்டுகள் கையாண்ட முறைகளைக் கொள்கை சகிப்பின்மையிலிருந்தும், பிறர் புகழ்ப் பாடலினின்றும் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். 1929–33-ல் குலக்குகள் (kulaks) எனப்படும் பொருளாதார வசதிபெற்ற எண்ணற்ற விவசாயிகள் ஒழித்துக் கட்டப்பட்டனர். 1935–38-ல் கட்சி வேறுபாடுடையவர்கள் 'இரத்தத் (கட்சித்) தூய்மை' செய்யப்பட்டார்கள்; அன்றியும், அடிமைகள் 'சீர்திருத்தத் தொழிலாளர் முகாமில்' தள்ளப்பட்டார்கள்; ஒவ்வொருவரும் மற்றனைவர்க்கும், எல்லோரும் ஒருவனுக்கும் அடிபணிந்து நடந்தனர். இம் முறைகள் அனைத்தும் மேலை வல்லரசுகளுக்கு வெறுப்பூட்டின. எனினும், அவற்றின் உதவியால் இந்த ராட்சஸ வல்லரசு (monstrous leviathan) எண்ணற்ற மக்களை ஆர்வமூட்டித் தியாகம் செய்யத் தூண்டியது; ஏழை மக்களை எள்ளாக நசுக்கிப் பிழிந்து, கூட்டுப் பண்ணை முறையில் விவசாய அபிவிருத்தி செய்வதிலும், சோசியலிச பாணியில் கைத்தொழில்களை வளர்ப்பதிலும் வெற்றி கண்டது. ஒரு பிற்போக்கான, விவசாய, பழங்கால நாகரிகத்திலிருந்து ரஷ்ய சமுதாயத்தை நகர்ப்புற நாகரிகத்திற்கு மாற்றியமைத்த செயல் 20ஆம் நூற்றாண்டு உலக அரசியலிலேயே முக்கியமான புதிய நிகழ்ச்சியாகும்.

இவ்வுண்மையை மேலை அரசாங்கங்களும் மக்களும் ஏனோ 1930–40-ல் உணரத் தவறினர். முன்பெல்லாம் வாளாவிருந்து விட்டுப் பின்னால் ஃபாசிஸ்ட் ஆக்கிரமிப்பைக் கண்டு அஞ்சிய மக்களாட்சிகள் மனமில்லாமல் தங்கள் ஆதரவிற்கு ரஷ்யாவை எதிர்பார்த்தன. சோவியத் யூனியனும் மேலை நாடுகளின்

அழைப்பிற்கிணங்க சர்வதேச சங்கத்தில் (1934, செப். 18) சேர்ந்தது; ∴பிரான்சு (1935, மே 2), செக்கோசுலோவாக்கியா (1935, மே 16) ஆகிய நாடுகளுடன் நேச உடன்படிக்கை செய்து கொண்டது. சப்பான், செர்மனி முதலிய நாடுகள் கொண்டிருக்கும் ஆசைகளைக் கண்டு அச்சமடைந்த கிரெம்லின் தலைவர்கள், இப்போது 'கூட்டுப் பாதுகாப்பில்' (collective security) இறங்கினர்; நாவன்மை வாய்ந்த லிட்டினே அதற்குப் பெரிதும் பயன்பட்டார். ∴பாசிஸத்தை எதிர்ப்பான் வேண்டி, கம்யூனிஸ்ட்டுகள், சோசிய லிஸ்ட்டுகள், தாராளவாதிகள் ஆகியோர் அனைவரும் சேர்ந்து, 'மக்கள் முன்னணியை' அமைத்தார்கள். அதற்கு இத் தலைவர்கள் இதர கம்யூனிஸ்ட் கட்சிகள் வாயிலாக ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தலைப்பட்டார்கள்.

நேச உடன்படிக்கை ஏற்பட்டதேயன்றி, உடன்படிக்கை நாடுகளுக்கிடையே பரஸ்பர நம்பிக்கை உண்டாகவில்லை. பாரிஸ், லண்டனைச் சேர்ந்த கொள்கை வகுப்பாளர், ∴பாசிஸத்தைவிடக் கம்யூனிஸத்தைக் கண்டே அதிகம் நடுங்கினர். ∴பாசிஸ்ட் சீசர்களைச் சமாதானப்படுத்தும்பொருட்டு மியூனிக் 'சமாதான' உடன்படிக்கை செய்தனர். இதனைக் கண்ணுற்ற மாஸ்கோ ∴பாசிஸ்ட் தாக்குதலுக்குத் தான்மட்டும் இரையாகும் நிலையில் இருப்பதை உணர்ந்து, மக்களாட்சிகள் தன்னைவிட்டுப் பிரிந்து நிற்பதை அறிந்து, வேறு வழிகளில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தீர்மானித்தது. ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25ஆம் கூட்டத்தில் பேசுகையில், ஸ்டாலின் (1939, மார்ச்சு 10) தன் நாடு பின்பற்றக்கூடிய வழிகளைக் குறிப்பாக உணர்த்தினர். அவர் கூறியது பின்வருமாறு :

"பெரும்பாலான அனைக்கிரமிப்பு நாடுகள், குறிப்பாக இங்கிலாந்தும் பிரான்சும் கூட்டுப் பாதுகாப்புக் கொள்கையை—ஆக்கிரமிப்பாளரைக் கூடி எதிர்க்கும் கொள்கையை—அடியோடு மறுத்து விட்டன. அவை தலையிடாக் கொள்கையை, 'நடுநிலைமைக்' கொள்கையைக் கடைப்பிடித்துவருகின்றன. ஆக்கிரமிப்பாளனை அவன் புரியும் கொடிய செயலிலிருந்து தடுக்கும் எண்ணமே—ஆசையே இக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளிடம் இல்லை எனலாம். சான்ருக, சீனவுடனே அன்றி சோவியத் யூனியனுடனே சப்பான் போரில் இறங்குவதைத் தடுக்கும் நோக்கமே இந் நாடுகளிடம் இல்லை ; செர்மனி, ஐரோப்பிய விஷயங்களில் தலையிடுவதையோ, அன்றி சோவியத் யூனியனுடன் போரில் இறங்குவதையோ தடுக்கும் நோக்கம் இல்லை. இக் கொள்கை மிகத் தாழ்மையானது, எளிமையானது ! சான்ருக, செர்மனியை எடுத்துக்கொள்வோம். இந் நாடுகள் ஆஸ்திரியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்குப்

பதிலாக செர்மனி அதை இணைத்துக்கொள்ள இடங்கொடுத்து வருகின்றன ; சுடேட்டன் (Sudetan) வட்டாரத்தையும் அது இணைத்துக்கொள்ள விட்டுவிட்டன ; தங்கள் கடமைகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு செக்கோசுலோவாக்கியாவிற்கு என்ன ஆனாலும் ஆகட்டும் என்று விட்டுவிட்டன ; கடமையினின்று அவர்கள் நழுவி விட்டதை மறந்துவிட்டு, 'ரஷ்யப் படை வலிமையற்றது' என்றும், 'ரஷ்ய விமானப்படை (air force) ஒழுக்கந் தவறி நடக்கிறது' என்றும், சோவியத் யூனியனில் 'கலகங்கள்' நடக்கின்றனவென்றும் பத்திரிகைகளில் பொய்க்கூச்சல் இட்டு, செர்மனியை மேன்மேலும் கிழக்கே (ரஷ்யாவை நோக்கி) படையெடுக்குமாறு தூண்டிவருகின்றன. 'பால்சிவிஸ்ட்டுகள்மீது போர் தொடுத்துவிட்டால் போதும், எல்லாம் சரியாக முடிந்துவிடும்' என்று தூண்டிவருகின்றன''.....

'தலையிடாக் கொள்கைபற்றியோ, நாட்டுத் துரோகம் பற்றியோ நான் நுண்ணராய்ச்சியிலீடுபடப்போவதில்லை. மனிதகுல நன்னெறிகளை ஒப்புக்கொள்ளா மக்களுக்கு நெறிமுறைகளைப் பற்றிப் போதித்தல் எளிமையான செயலாகும். (தம் கொள்கையில்) அசைக்கமுடியா நம்பிக்கையுடைய இடைநிலை வகுப்புத் (bourgeois) தூதர்களின் பழங்காலக் கூற்றைப்போல், அரசியல் அரசியல்தான். எனினும், இத் தலையிடாக் கொள்கையை ஆதரிப்பவர்களால் தொடங்கப்பட்டிருக்கும் இப் பெரிய அபாயகரமான விளையாட்டு இறுதியில் அவர்களுக்கே படுதோல்வியாக முடியும் என்பதை மறந்துவிடலாகாது '.....

1. 'நாம் சமாதானம்—அமைதியையே விரும்புகிறோம். மற்றெல்லா நாடுகளுடனும் வியாபாரத் தொடர்புகளை வலுப்படுத்த விரும்புகிறோம். இதுவே நம்முடைய நிலையாகும். மற்ற நாடுகளும் சோவியத் யூனியனுடன் இதே தொடர்புகள் கொள்ளுமாயின், நம் நாட்டு நலன்களுக்கு ஊறு விளைவிக்க முயலாமல் இருக்குமாயின், நாம் இதே நிலையிலேயே நிற்போம். '

2. 'யூ. எஸ். எஸ். ஆருடன் பொதுவான எல்லைகளுடைய எல்லா அண்டை நாடுகளுடனும் நாம் சமாதானத்தையும் நெருங்கிய நட்புறவையுமே விரும்புகிறோம். இதுவே நம்முடைய நிலையாகும் ; மேலும், இந் நாடுகள் சோவியத் யூனியனுடன் இதே உறவைப் பேணிக் காக்குமாயின், அவைகள் வெளிப்படையாக நம் நாட்டு எல்லைகளின் உரிமைக்கோ அன்றிப் பாதுகாப்பிற்கோ ஊறு தேடாதிருக்குமாயின், நாம் அந் நிலையிலிருந்து எள்ளளவும் அசையமாட்டோம்.'

3. 'ஆக்கிரமிப்புக்குப் பலியான நாடுகட்கும், தங்கள் நாட்டுச் சுதந்திரத்திற்காகப் போராடும் தேசங்களுக்கும் முழு ஆதரவளிப்பதே நம் நோக்கம்.'

4. 'ஆக்கிரமிப்பாளரின் அசீசுறுத்தல்களுக்கு நாம் அஞ்ச வில்லை. நம் நாட்டு எல்லையை மீறிக் கடக்க முயலும் போர் வெறியர்கள் ஓரடி கொடுத்தால் நாம் ஈரடி கொடுக்கத் தயாராக வுள்ளோம்.'

நடுநிலைமையும் பாதுகாப்பும்

ஒரு வாரத்திற்குள் ஹிட்லர் செக்கோசுலோவாக்கியாவைத் தீர்த்துக்கட்டிவிட்டு கார்பாதோ—ஊக்ரெயினை அங்கேரிக்கு அளித்தார். இறுதியில் செர்மனி தாக்க முற்பட்டதும், யூ.எஸ்.எஸ். ஆரைவிட மேலைநாடுகளே 'அதன் குறியாக இருக்கும்' என்றும், 'அவைகளே விடப்போவதில்லை' யென்றும், மேற்கத்திய மியூனிச்சியருக்குத் தம் நோக்கத்தை உணர்த்தினர். இம் முயற்சியில் ஈடுபட சோவியத் ஒத்துழைப்பு வேண்டியிருந்தது. நாடுகட்கிடையே ஒன்றுக்கொன்று நன்மதிப்பு இல்லையெனில், பொது அபாயத்தைப் பற்றிய நினைப்பு இல்லாவிடில் நடப்பு அரசியலின் போக்கைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? யூ.எஸ்.எஸ். ஆருடன் சமாதானத்திற்கு வரும் முன்பே போலந்தையும், ருமேனியாவையும், கிரீசையும் கூடப்பாதுகாக்க பிரிட்டன் முன்வந்தது. இப் போக்கு மாஸ்கோவிற்கு ஆத்திரமூட்டியது. 1939 ஏப்ரல் 4ஆம் நாள் பிராவ்தா செய்தித் தாளில் ஒரு கேலிச்சித்திரம் வெளியாயிற்று. சுரு மீன் நிறைந்த கொந்தளிப்புக் கடலில் சிக்குண்டு தவிக்கும் நாடுகட்குப் பட்டுத் தொப்பியணிந்த பிரிட்டிஷ் சிங்கம் ஒன்று படகில் உட்கார்ந்து கொண்டு அவற்றின் உயிரைக் காப்பாற்ற மலைப்பகுதி ஒன்றை அளிப்பதுபோல் சித்திரம் தீட்டப்பட்டிருந்தது. அதை இங்கு நினைவில் கொள்ளுதல் நன்று.

ஏப்ரல் மாத நடுவில் ஆங்கிலோ-சோவியத் பேச்சுவார்த்தைகள் தொடங்கியதும், இரு நாடுகளையும் கட்டுப்படுத்தும் உடன்படிக்கை (binding alliance) ஏற்படவேண்டுமென்று மாஸ்கோ வேண்டுகோள் விடுத்தது. ஆனால், லண்டன் அவ் வேண்டுகோளுக்கு இணங்காமல், 'எளிதில் மாற்றக்கூடிய' (flexible) விதி முறையை விரும்பிற்று. சோவியத் வெளிவிவகாரத் துறைத் தலைவர் (commissar) லிட்டினேவ், தம் பதவியை ராஜினாமா செய்தார். அவ்விடத்தில் தலைமையமைச்சர் வியாசிலாவ் மொலொட்டோவ் நியமிக்கப்பட்டார். இது நடந்து நான்கு நாட்களுக்குப் பின்னர், பெர்லினிலிருந்து பிரெஞ்சுத் தூதர் சோவியத்-நாசி (செர்மன்) இணக்கம் ஏற்படுவது சாத்தியம் என்றும், அதனையொட்டி போலந்து (பிரெஞ்சு மஞ்சள் புத்தகம் 1939, நம்பர் 123) புதிதாகத் துண்டாடப்படலாம் என்றும் அச்சமூட்டும் அறிக்கைகள் வெளியிடத் தொடங்கினர். அப்படியிருந்தும் சேம்பர்லின் எவ்வித முடிவுக்கும் வரவில்லை. மே 8ஆம்

நாள், பிரிட்டன் தன் எதிர்ப் பிரேரணைகளை வெளியிட்டது. அதில் போலந்தையோ, அன்றி ருமேனியாவையோ பாதுகாக்கும்பொருட்டு பிரிட்டனும் பிரான்சும் சண்டை செய்யவேண்டி வந்தால் அதற்கு ஈடாக சோவியத் யூனியன் அவைகட்கு உதவியளிக்க வேண்டும் என்று அப் பிரேரணை கூறிற்று. மற்ற நாடுகள் ரஷ்யாவைத் தாக்கினாலோ, அன்றி அது பால்டிக் நாடுகளின் பாதுகாப்பிற்காகப் போரிட நேரிட்டாலோ, அதற்கு ஆங்கிலோ-பிரெஞ்சு உதவியளிக்கப்பட வேண்டும் என்று மாஸ்கோ கூறிற்று. மூன்று வல்லரசுகளும் ஒன்றையொன்று பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மேலும், ஒருபுறம் செர்மனிக்கும் (ரெய்ச்சுக்கும்) சோவியத் யூனியனுக்கும் இடையேயுள்ள எல்லை நாடுகளுக்கும் (சுவிட்சர்லாந்து, பெல்சியம், நெதர்லாந்து ஆகியவை) மற்றொரு புறம் செர்மனிக்கும் மேலை வல்லரசுகட்கும் இடையேயுள்ள நாடுகட்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். மொலொட்டோவின் நிபந்தனைக்கு இணங்குமாறு சர்ச்சிலும், லாயிட் ஜார்ஜும் வலியுறுத்தினர்கள். ஆனால், சேம்பர்லினும் ஹாலிபாக்சும் மறுத்துவிட்டார்கள். பால்டிக் நாடுகளோ 'நடுநிலைமையை' விரும்பின; ரஷ்யா அளிக்கக்கூடிய எவ்வித சர்வதேசப் பாதுகாப்பையும் அவர்கள் விரும்பவில்லை. பாதுகாப்பை விரும்பாத நாடுகட்குப் பாதுகாப்பு அளிக்க டௌனிங் வீதியும் (இங்கிலாந்தும்) முன்வரவில்லை. பால்டிக் அரசுகளின்மீது நாசி ஆக்கிரமிப்பு ஏற்படுங்கால் 'கூட்டாலோசனை' (consultation) செய்ய வேண்டும் என்று அது கூறியது. ஆனால், பிரிட்டன் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலும் வழியே இது என்பதை மாஸ்கோ நன்கு அறிந்துகொண்டது.

மேலைவல்லரசுகள் 'பரஸ்பர, சர்வ சம அடிப்படையில் கடமைகளை' ஒப்புக்கொள்ள முன்வராவிடில், மாஸ்கோ எவ்வித ஒப்பந்தமும் செய்யப் போவதில்லை என்று மொலொட்டோவ் மே மாத இறுதியில் ஐயப்பாட்டுக்கு இடமில்லாதவகையில் கூறினார். ஒன்று, அது எல்லோரையும் (எல்லா உடன்படிக்கை நாடுகளையும்) கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்; இரண்டு, ரஷ்ய எல்லையிலுள்ள ஐரோப்பிய நாடுகளனைத்திற்கும் அது கூட்டுப் பாதுகாப்பு அளிக்க வகை செய்ய வேண்டும்; மூன்று, பாதுகாப்பு அளிக்கப்பட்ட நாடுகள் ஆக்கிரமிப்புக்கு ஆளாகுங்கால் அவைகட்குப் பரஸ்பர உதவியும் பாதுகாப்பும் அளிக்க வேண்டும். இந் நிபந்தனைகட்கு இணங்கினால்தான் ரஷ்யா ஒப்பந்தம் செய்ய முன்வரும் என்றும் அவர் தெளிவாக்கினார். லண்டனும் பாரிசும் முதல் நிபந்தனைகட்கு இணங்கின. மற்ற இரண்டு நிபந்தனைகளையும் ஏற்க மறுத்துவிட்டன. பேச்சுவார்த்தைகள் நீண்டுகொண்டே சென்றனவேயன்றி முடிவு எதுவும் ஏற்பட்டபாடில்லை. ரஷ்யாவுடன் சர்வ சம அடிப்படையில் ஒப்பந்தம் செய்யும் நோக்கம் பிரிட்டிஷ் 'பிரெஞ்சு அரசாங்கங்கட்கு இல்லவே

இல்லை என்று லெனின்கிரேடு (கம்யூனிஸ்ட்) கட்சித் தலைவர் ஆண்டிரீ சடானேவ் பிராவ்தாவில் ஜூன் மாத இறுதியில் எழுதினர். இறுதியில் மாஸ்கோவுக்கு ஆங்கிலோ-பிரெஞ்சு இராணுவக் குழு பேச்சுவார்த்தை நடத்தச் செல்லப்போவதாக ஜூலை மாத இறுதியில் சேம்பர்லின் அறிவித்தார். 'மறைமுக ஆக்கிரமிப்பின்' சரியான பொருள்பற்றிக் கருத்துப் பேதம் நிலவி வருவதே திட்டவட்டமான ஒப்பந்தம் செய்ய முடியாமல் இருந்து வருவதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார். அக் குழுக்களில் புகழ் பெற்றோர் ஒருவர்கூட இல்லை. அவைகளும் சாவகாசமாக சோவியத் தலைநகர் போய்ச் சேர்ந்தன. அவைகள் ஒப்பந்தம் செய்யும் அதிகாரத்துடன் வரு மென்றும், அவ்வொப்பந்தம் பால்டிக் அரசுகள் எப்போது அச்சுறுத் தப்படுகின்றன என்பதை நிர்ணயிக்கவும், அச்சுறுத்தலைப் போக்க ஆவன செய்யவும், பால்டிக் நாடுகட்குள்ளும் போலந்திற்குள்ளும் இராணுவ வலிமையுடன் நுழையவும், பிரிட்டன், பிரான்சு ஆகிய வற்றைத் தன் உதவிக்கு அழைக்கவும், சோவியத் யூனியனுக்கு அதிகாரம் ஈயவும் வகை செய்யுமென்று மொலொட்டோவ், வொரோசி லோவ், ஸ்டாலின் மூவரும் எதிர்பார்த்தனர். ஆனால், அக் குழுக்களோ இவ்வதிகாரத்தைப் பெற்று வரவில்லை. செப்டம்பரில் போலந்தின் மீது படையெடுக்க ஹிட்லர் ஏப்ரல் மாதமே ரகசிய முடிவு செய்து விட்டார்.

இப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுறவுமே சோவியத் அரச தந்திரத்திலும் முற்றிலும் புரட்சி ஏற்படலாயிற்று. (ரிப்பன்டிராப் ஆகஸ்டு 23ஆம் நாள் மாஸ்கோ சென்று செர்மன்-சோவியத் அனுக் கிரமிப்பு ஒப்பந்தம் செய்து முடித்தார்.) கம்யூனிஸ்ட் படை போலந்திற்குள் நுழையாமல் போலந்தை ரஷ்யா பாதுகாக்க முடியாது என்று வொரோசிலாவ் அறிவித்தார்) ஆனால், வார்சா, பாரிஸ், லண்டன் எதுவும் அவ்வனுமதியளிக்கத் தயாராயில்லை. ஹிட்லருடன் இவ்வொப்பந்தம் செய்ததும் ஆகஸ்டு 31ஆம் நாள் மொலொட்டோவ் சுப்ரீம் சோவியத்தில் (ரஷ்யப் பாராளுமன்றத்தில்) பேசினார். மேலை நாடுகள் சோவியத் யூனியன் வலிமையடைய விரும்புவதற்குப் பதிலாக 'நம்மைப் போரில் இழுக்கச் சதி செய்து விட்டன' என்று அப்போது கூறினார். செர்மனியோ சோவியத் எதிர்ப்புக் கொள்கையை முற்றிலும் கைவிட்டது. சோவியத் யூனிய னுக்கு எந்தக் கட்சியுடனும் சேரும் தேவையில்லாது போயிற்று. அது அமைதியில் வாழ விரும்பியது. குழப்பம் சில வாரம் நீடித்தது. அதன்பின் கிரெம்லினின் புதிய முடிவுகளைப்பற்றி ஒன்றுமே அறியாத பிரெஞ்சு, பிரிட்டிஷ், அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சிகள், 'மக்கள் முன்னணி, 'பாசிஸ்ட் ஆக்கிரமிப்புக் கெதிரான ஒற்றுமை' போன்ற சுலோகங்கள் எழுப்புவதை விட்டுவிட்டன; அதற்குப் பதிலாக, போலாந்துமீது ஹிட்லர் மேற்கொண்ட படையெடுப்பை

ஓர் 'ஏகாதிபத்தியப் போர்' என்று தூற்றின. அதோடு நின்று விடாது ஒரு புரட்சிகரத் தோல்விக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கின. அக் கொள்கை ஸ்டாலின், ஹிட்லர் இருவருக்கும் பெரிதும் பயன்பட்டது.

சண்டை மூண்டதும் ரஷ்யா நடுநிலையினின்று சற்றும் நழுவாமல் நடந்துகொள்ள முடிவு செய்தது. ஆனால், செர்மனிக்கு எதிராக ரஷ்யாவின் பாதுகாப்பைப் பலப்படுத்தக்கூடிய முறையில் தன் நடுநிலைக் கொள்கையை ஹிட்லருக்கு விற்க கிரெம்லின் உறுதி பூண்டது. அதற்கிணங்க அது முதன்முதலில் போலந்தில் முன்னாள் ரஷ்யாவுக்குச் சொந்தமாக இருந்த நிலப்பகுதிகளைக் கைப்பற்ற விரும்பியது, அடுத்தாற்போல் கார்காசைப் பங்கு போடுவதற்காகப் பெர்லினுடன் புதிய ஒப்பந்தங்கள் செய்ய முற்பட்டது. போலந்து தேசம் 'உண்மையில் மறைந்துவிட்டது' என்றும், கைவிடப்பட்ட 'உடன்பிறப்பான' (blood brothers) ஊக்ரெய்னியர், பைலோரஷ்யர்களைப் பாதுகாப்பது செம்படையின் கடமையென்றும் 1939, செப், 17-ல் மாஸ்கோ அறிவித்தது. சோவியத் துருப்புகள் ஏற்கெனவே படையெடுத்துக்கொண்டிருந்தன.

அவை இதுவரை செர்மன் சேனைகள் கைவசமில்லாக் கிழக்குப் போலந்து முழுதையும் அதி விரைவில் கைப்பற்றின. ரிப்பன் ட்ராஃப் மறுமுறை மாஸ்கோவிற்கு விஜயம் செய்தார். செப்டம்பர் 28ஆம் நாள் புதிய செர்மன் சோவியத் உடன்படிக்கை ஒன்று கையொப்பமாயிற்று. அதன்கீழ் இன அடிப்படையில் (ethinolo gical) போலந்து துண்டாடப்பட்டது. போலிஷ் நிலப்பகுதிகள் செர்மனிக்கு அளிக்கப்பட்டன. பைலோரஷ்யாவும் 1914-க்கு முன் ஆஸ்திரியா-ஹங்கேரிக்குச் சொந்தமாக இருந்த மேற்கு காலிசியா உள்பட ஊக்ரெயினும் சோவியத் யூனியன் கைவசம் ஆயின. 1939, அக். 5-லும், 1941, சன. 10-லும் கையொப்பமான ஒப்பந்தங்களின் கீழ் எல்லைபற்றிய விவரங்கள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டன. இவ்வாறு பால்சிவிஸம் மேற்குத் திசையில் 250 மைல்கள் பரவியதை ஸ்டாலினின் முதல் வெற்றி எனலாம். அதை (சோவியத் யூனியன்) கிழக்கில் அளித்த 'மறுகாப்புறுதிக்கு' ஈடாக பெர்லின் மாஸ்கோவிற்குச் செலுத்திய தொகையின் முதல் தவணைத் தொகை எனலாம்.

அடுத்தாற்போல் கிரெம்லின் பால்டிக் நாடுகளைத் தன் காப்பரசு நாடுகளாக்கிற்று. ஹிட்லரும் டியூடோனிய வீரர்களின் பண்டைய நாடுகள்மீது ரஷ்யா நிலைநாட்டியுள்ள இராணுவ ஆதீனத்திற்கு அடிபணிந்துவிட்டார். மேலும், ஏழு நூற்றாண்டுகளாக பால்டிக் கடற்கரையோரம் வாழ்ந்து வந்த செர்மானியர் 'தாமாகவே முன்வந்து' செர்மனிக்கு வெளியேறுவதற்கு அவர் இசைந்தார். மாஸ்கோ

பொய்க் குற்றச்சாட்டுகள் கொண்டுவந்து, அழைப்புகள் அனுப்பி, படையெடுத்துவிடப்போவதாக அச்சுறுத்தி இறுதியில் எஸ்டோனியா (செப் 28), லாட்வியா (அக். 5), லித்துவானியா (அக். 10) ஆகிய நாடுகளை பரஸ்பர உதவி ஒப்பந்தங்கள் செய்யுமாறு தூண்டியது. அவற்றின்கீழ் 'எந்த ஐரோப்பிய வல்லரசாவது நேரடியாக ஆக்கிரமிப்புச் செய்தாலோ, அன்றி, ஆக்கிரமிப்புச் செய்யப் போவதாகப் பயமுறுத்தினாலோ' இவ்வொப்பந்த நாடுகட்குப் பொதுப் பாதுகாப்பு அளிப்பதென்று உறுதி செய்யப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் கீழ் பால்டிக் நாடுகளில் தன் சேனைகளை வைத்துக்கொள்ளும் உரிமை மாஸ்கோவிற்குக் கிடைத்தது. மேலும், அதற்கு பால்டிஸ்கி, ஓயிசல், ஹீயுமா, லிபா, வென்ட்ஸ்பில்ஸ் ஆகிய இடங்களில் கப்பல், விமானத்தளங்கள் அமைக்கும் உரிமையும் கிட்டியது. இதற்கு ஈடாக பால்டிக் நாடுகளின் ஆள்நிலவுரிமையும்,' 'இறையுரிமைகளும்' சின்னஞ் 'பாதுகாக்கப்பட்டன'. லித்துவானியாவுக்கு அது நெடுநாள் ஆசை வைத்துவந்த நகரமும் வில்னா வட்டாரமும் அளிக்கப்பட்டன.

'அமைதியை' நாடிய பெர்லினுக்கு மாஸ்கோ 1939 அக்டோபரில் தார்மீக ஆதரவு அளித்தது ஆனால், செர்மனி போரில் வெற்றி பெற வேண்டும் என்ற விருப்பத்தால், மாஸ்கோ இந்த ஆதரவு அளிக்கவில்லை. புதிய நடைமுறை நிலைமையில் செய்யப்படும் உடன்பாடு, யூ.எஸ்.எஸ்.ஆரைப் புதிதாகக் கிட்டிய நிலையங்களில் கவலையின்றி அமர்ந்துகொள்ள வகை செய்யும் என்ற அசைக்கமுடியா நப்பிக்கையே இதன் உண்மையான நோக்கம் ஆகும். இந் நிலை ஏற்படுமாயின் அது மேலைவல்லரசுகளை அழிவிலிருந்து காப்பாற்றும் என்றும், அவற்றின் நம்பத்தகாத தலைவர்களை மாஸ்கோ விதிக்கும் நிபந்தனைகளுக்கேற்ப, வெற்றி மாலை சூடியிருக்கும் செர்மனியிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வழிசெய்யும் புதிய நேசவுடன்படிக்கை ஒன்றையும் ரஷ்யாவுடன் செய்யத் தூண்டும் என்றும் மாஸ்கோ கருதியது. உண்மை அரசியலின் இத் தேவையின் அவசியத்தை, கம்யூனிஸ்ட்டுகள் பழைய சமாதானப் புகழைப் பாடியும், ஆங்கிலோ-பிரெஞ்சு 'ஏகாதிபத்திய'க் குற்றச்சாட்டுக் கொண்டுவந்தும் எண்டிசையும் உணர்த்தி வந்தார்கள். ஆனால், லண்டனும் பாரிசும் போருக்கு முன் நிலவிய நடைமுறை நிலைமையை மீண்டும் ஏற்படுத்த உறுதிபூண்டிருந்தன. எனவே, அவைகள் புதிய சோவியத் ஆள்நிலங்கள்மீது ரஷ்யா கொண்டாடும் பாத்தியதையையும் (title) ஏற்கவில்லை, ஹிட்லருடன் சமாதானம் செய்துகொள்ளவும் முன்வரவில்லை. எனவே, ஸ்டாலின் 'முதலாளித்துவ' வல்லரசுகளுக்கு எதிராகத் தன் நாட்டின் வலிமையைப் பெருக்கும் மற்ற நடவடிக்கையில் கவனம் செலுத்தலானார்.

வெற்றியின் வேதனை : பரஸ்பர உதவிபற்றி சோவியத் யூனியன் கொண்டுவந்த பிரேரணைகளை 1939 இலையுதிர் காலத்தில் துருக்கி நிராகரித்துவிட்டது. மேலைநாடுகளின் நட்புறவினால் விளையும் நலன்கள் சந்தேகமாக இருந்தபோதிலும் (பரஸ்பர உதவி ஒப்பந்தத்திற்குப் பதிலாக) துருக்கி அதையே விரும்பியது. இது 'பாதுகாப்பு' அளிக்க முன்வந்த கரடிக்கு (சோவியத் யூனியனுக்கு) வேதனையளித்தது. மாஸ்கோ வேறு வழியின்றி இதற்கு உடன்பட்டது. பின்லாந்தும் சோவியத் பிரேரணைகளை நிராகரித்துவிடவும்தான் கிரெம்லின் போருக்குச் (1939, நவ. 30) சென்றது. ஓட்டோ கூசினன் தலைமையில் இயங்கிய நாடு கடத்தப்பட்ட பின்லாந்திய கம்யூனிஸ்ட்டுகளின் பொம்மை அரசாங்கத்திற்கு சோவியத் யூனியன் ஆதரவு அளித்தால், அது ஹெல்சிங்ஃபோர்சைச் (பின்லாந்திய அரசாங்கத்தைச்) சரணடையச் செய்துவிடும் என்று கிரெம்லின் மடத்தனமான முடிவுக்கு வந்தது. மார்ஷல் குஸ்டோவ் மானர்ஹீம் தலைமையில் பின்லாந்தியர் வீரா வேசத்துடன் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்ததும், அவர்களைத் தோற்கடிப்பான்வேண்டி கிரெம்லின் தன் சேனைகளைப் பெருமளவில் திரட்ட ஆரம்பித்தது. கைகலப்பில் ரஷ்யாவுக்கு ஏற்பட்ட பெருத்த சேதத்தையும், மந்தமான முன்னேற்றத்தையும் பார்த்துவிட்டு யூ.எஸ்.எஸ்.ஆர். பெரிய இராணுவ வல்லரசு ஆகிவிடவில்லை, என்று மேலைநாடுகள் தப்புக் கணக்குப் போட்டன. மேலைநாடுகள் ஹெல்சிங்ஃபோர்சுக்குத் தக்க உதவியளிக்க முடியாது போய்விடவும் அவர்கள் சரணடைந்தனர். 1940 மார்ச் 12ஆம் நாள் சமாதான உடன்பாடு ஏற்பட்டது. அதற்கிணங்க, பின்லாந்து சோவியத் யூனியனுக்கு காரிலியன் ஜலசந்தி, லடோகா ஏரிக்கரைகள், பெட்சாமோவுக்கு அருகில் வடக்கே சில நிலப்பகுதி, பெரும்பாலான வளைகுடா தீவுகள், ஒரு சோவியத் குத்தகை நிலம், மற்றும் ஆங்கோவிலிருந்த கப்பற்படைத்தளம் ஆகிய அனைத்தையும் அளித்தது. இங்ஙனம் வடக்கே மாஸ்கோவிற்குக் கிட்டிய 'பாதுகாப்பு' நெடுநாள் நிலைக்கவில்லை.

கிரெம்லின் விதித்த நிபந்தனைகளுக்கு மேலை வல்லரசுகள் இணங்காமற் போகவும், அவைகளுடன் நட்புடன்படிக்கை செய்துகொள்ள மாஸ்கோ மறுத்துவிட்டது. இதுவே 1940 வசந்தத்தில் செர்மன் படை (ஐரோப்பியக்) கண்டத்தைக் கைப்பற்றியதற்கும், அப்போது மாஸ்கோ தனிமையில் நின்று தவித்ததற்கும் மூல காரணம் ஆகும். அதன்பின் மாஸ்கோ தல இராணுவ நடவடிக்கைகள் எடுத்தது. சான்றாக, ஜூன் 15—17-ல் பால்டிக் நாடுகளைத் தன் இராணுவ வலிமையால் கைப்பற்றியது; தலத் 'தேர்தல்களுக்கு' அப்புறம் அவற்றை யூ.எஸ்.எஸ்.ஆருடன் இணைத்துக் கொண்டது. ஜூன் 28-ல் பெஸ்ஸரேபியா, வட புக்கோவினா ஆகிய இரண்டையும்

இணைத்துக்கொண்டது. அக்டோபரில் ருமேனியாவின் எஞ்சிய பகுதியை செர்மனி இணைத்துக்கொண்டது. இது கிரெம்லினுக்குக் கடுவேதனையளித்தது. ரஷ்யாவைத் தாக்கவேண்டுமென்று அக்டோபர் மாதத்திலேயே செர்மனி முடிவு கட்டி விட்டது என்று முன்னர்ப் பார்த்தோம் அல்லவா? அம் முடிவு மேலே கூறப்பட்ட சோவியத் நடவடிக்கைகளால் அன்று. ஆனல், பிரிட்டனை அழிக்குமுன் ரஷ்யாவைத் தாக்க முடியும், தீர்த்துக் கட்ட முடியும் என்று செர்மன் வல்லாட்சியாளர்–ஹிட்லர் கொண்டிருந்த குருட்டு நம்பிக்கையே காரணம். மாஸ்கோ வருங்கால விளைவுகளைப்பற்றி எச்சரிக்கை விடுத்தது; பால்கனின்மீது செர்மன் நாசி ஆதிக்கம் ஏற்படுவதை அதனல் முடிந்த அளவு 1941 வசந்தத்தில் குலைத்தது; சப்பானை நடுநிலையில் நிற்கவைக்க முயன்றது. பின்னதில் வெற்றி கண்டது. ஆனல், முன்னதில் தோல்வியடைந்தது.

1941 ஜூன் மாதம் ஃபாசிஸ்ட் ஐரோப்பா முழுதும் சேர்ந்துகொண்டு ரஷ்யாவைத் தாக்கிற்று. தாக்கிய நாடுகளின் சனத்தொகை 300,000,000 மக்களுக்குமேல் இருந்தது. ரஷ்யாவின் சனத்தொகையோ 200,000,000தான்; ஆக்கிரமிப்பாளரின் கூட்டு எஃகு உற்பத்தி ஏறக்குறைய 50,000,000 டன்கள் எனலாம். இதற்கு எதிராக ரஷ்யாவின் உற்பத்தி 18,000,000 டன்தான் இருந்தது; இராணுவ, மனித சக்தி ஆக்கிரமிப்புக்குப் பலியான நாட்டைவிட எதிரியிடம் 3 : 2 மடங்கு அதிகம் இருந்தது. அங்ஙனமே ஆயுதங்களும் யுத்தத் தளவாடங்களும் எதிரி வசம் 5 : 2 மடங்கு அதிகம் இருந்தது. இதுவரை வெல்ல முடியாது என்று கருதப்பட்டு வந்த செர்மன் படையும் அதன் நேச நாடுகளின் நானுவிதப் படைகளும் சேர்ந்துகொண்டு ரஷ்யாவைக் கடுமையாகத் தாக்கின. இதைப் போன்று நவீனகால சரித்திரத்திலேயே ஒரு தேசீய அரசுக்கு எதிராக எந்த நாடும் தாக்கியதில்லையென்று துணிந்து கூறலாம். சோவியத் படைகளும் மக்களும் திரண்டெழுந்தனர். பகைவனை முறியடிக்கக் கங்கணம் கட்டினர். அவர்களின் முடிவான (இத்) தீர்மானம் சோவியத் அரசாங்க முறையும் அதன் பொருளாதாரமும் எதிரி விளைக்கக்கூடிய சுமைகளை—மற்றெந்த நவீன சமுதாயமும் இதுவரை தாங்காத சுமைகளைத்—தாங்க முடியும் என்று நிரூபித்தது. போரில் (ரஷ்யாவுக்கு) ஏற்பட்ட ஆள் சேதமும் பொருள் சேதமும் அளவிடற்கரியது. இக் கொடுமையான விலை கொடுத்து சோவியத் மக்கள் தங்கள் நாட்டைக் காப்பாற்றினர். தங்கள் லட்சியத்தில் வெற்றி கண்டனர். அதன்மூலம் ஐ.நா.விற்கும் வெற்றி பெற்றுத் தந்தனர்.

உடனே சர்ச்சில் ஹிட்லருக்கு எதிராக ரஷ்யாவுக்கு உறுதியான ஆதரவு அளித்தார். ஹிட்லரை 'இரத்த வெறி பிடித்த கீழ் மகன்'

என்றும், 'கொடிய இராட்சசன்' என்றும், 'அவன் தீர்க்க முடியா இரத்த, கொள்ளைத் தாகம் பிடித்தவன்' என்றும் தூற்றினர். ரஷ்யாவுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதில் அமெரிக்காவும் பின்வாங்கவில்லை. சம்னர் வெல்ஸ் மூலம் (அதிபர்) ரூஸ்வெல்ட்டும் ஹிட்லரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர். ஜூலை 12ஆம் நாள் கிரிப்சும் மொலொட்டோவும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். அது 1942, மே 26-ல் ஆங்கிலோ-சோவியத் நட்புடன்படிக்கை ஏற்பட வகை செய்தது. ஆகஸ்ட்டில் ஹாரி ஹாப்கின்சும் அக்டோபரில் ஹாரிமன், பீவர்புரூக் இருவரும் மாஸ்கோவிற்கு விஜயம் செய்தனர். அமெரிக்க லீஜன் (Legion) சேர்ந்த நியூயார்க் மாகாண மாநாடு (Convention) ஸ்டாலின் 'கொடிய கொலைகளுக்குப்' பொறுப்பாளி என்று குற்றஞ் சாட்டிற்று. மார்டின் டைஸ் என்பவர் 'சோவியத்துகளால் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான வாயில்லா கிருத்துவ தியாகிகள் சார்பில்' எதிர்ப்புத் தெரிவித்தார். நவம்பர் 7ஆம் நாள் எஃப்.டி.ஆர். (ரூஸ்வெல்ட்) கலீனினுக்கு வாழ்த்துகள் அனுப்பினர். அவர் யூ.எஸ்.எஸ். ஆருக்கு 1,000,000,000 டாலர் கடன் குத்தகை உதவி (lend-lease aid) யளிக்க உறுதி பூண்டிருப்பதாகவும் அறிவித்தார். கணிசமான அளவில் அமெரிக்கக் கப்பற் சரக்குகள் (shipments) அனுப்பப்பட்டது. 50,000,000,000 டாலர் மொத்தக் கடன்-குத்தகை உதவியில் அமெரிக்கா 11,000,000,000 டாலர் அளித்தது. அதில் பாதி பிரிட்டிஷ் காமென்வெல்த்திற்குச் சென்றுவிட்டது. அமெரிக்கா விடமிருந்து யூ.எஸ்.எஸ்.ஆர். 6,800 டாங்கிகள் 13,300 விமானங்கள் 1,000 ரயில் எந்திரங்கள் (locomotives), 406,000 மோட்டார் கார்கள், 2,000,000 டன் பெறுமான எஃகு, 11,000,000 ஜதை காலணிகள் பெற்றது. இவ்வுதவி வெள்ளம் 1941-ல் நிலவிய நெருக்கடியில் ஒரு நீர்த்துளி என்றே கூற வேண்டும். அதுவும் 1942, 1943-ல் அவற்றைக் கணிசமான உதவி என்று கூறுதற்கு இடமில்லாமல் போய்விட்டது. ரஷ்யப் போர் தொடங்கி 3 ஆண்டுகட்குப் பின்னரும் பயன்தரக்கூடிய 'இரண்டாம் முனை' ஒன்று நிறுவப்படவில்லை. 1941ஆம் ஆண்டு வரைக்கும் ரஷ்யா செர்மனியின் தாக்குதலைத் தனியாக, சோவியத் ஆயுதங்கள் போக்குவரத்து சாதனங்களைக் கொண்டே சமாளித்து வந்தது.

1941, ஜூலை முதல் தேதி 'தேசீயப் பாதுகாப்புக் கமிட்டி' ஒன்று அமைக்கப்பட்டது. ஸ்டாலின் அதன் தலைவராகவும் (Chairman), மொலொட்டோவ் உப தலைவராகவும், வொரோஷிலோவ், பெரியா, மாலன்கோவ் அதன் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டனர். உள் விவகாரத் துறையும் (Commissariats of Internal Affairs) தேசியப் பாதுகாப்புத் துறையும் ஒன்றுக இணைக்கப்பட்டன. பெரியா அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். இப் போர் 'இரண்டாம் நாட்டுப் பற்றுப் போர்' என்று அழைக்கப்பட்டது. 1812-ல் நெப்போலியன்

மீது ரஷ்யாவுக்குக் கிட்டிய வெற்றியின் ஞாபகார்த்தமாய் இவ்வாறு அழைக்கப்பட்டது. போர் வரலாற்றிலேயே இதுவே மிகப் பிரமாண்டமான பேரழிவைப் பெய்த, கொலைகாரப் போர் ஆகும். இரண்டே வாரங்களில் புதிய எல்லைப் பிராந்தியங்கள் அனைத்தும் எதிரி கைவசமாயின. கம்யூனிஸ்ட்டுப் படைத் தலைமை, 'ஆழ்ந்த பாதுகாப்பு' ஒன்றிலுலே தோல்வியைத் தவிர்க்க முடியும் என்று முடிவு செய்ததே இதற்குக் காரணம் ஆகும். வடக்கே மானர்ஹீம், ஃபால்கன்ஹோர்ஸ்ட்—ஆகிய இருவர் படைகளும் லெனின்கிரேடைத் தாக்கின. தெற்கே அண்டோனிஸ்குவின் படைகள் ஊக்ரெயினைத் தாக்கின. இரண்டிற்கும் இடையே லீபு, பாக்கு, ருண்டஸ்டெடு ஆகியோர் தலைமையில் பெருத்த நாசி சேனைகள் லெனின்கிரேடு, மாஸ்கோ, ரோஸ்டோவ் ஆகிய நகரங்களைத் தாக்கின. ஜூலை மாத நடுவில் ஸ்மோலென்ஸ்க் நகரம் கவிழ்ந்தது. டிமோஷென்கோ என்னும் நகரம் கிழக்கிலிருந்து ஏற்படக்கூடிய தாக்குதல்களைத் தற்காலிகமாகத் தடுத்து வந்தது. அக்டோபரில் கீவ், ஒடிசா, கார்காவ் ஆகிய நகரங்கள் பகைவர் கைவசமாயின.

அக்டோபர் திங்கள் ஆரம்பத்தில் ரஷ்யா கைப்பற்றப்பட்டு விட்டது என்று நாசி வட்டாரங்கள் அறிவித்தன. அவ்வேளை செர்மன் படை மாஸ்கோவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அதற்குள் அனேக அரசாங்கத் துறைகளும் தூதரகங்களும் வோல்கா நதிக்கரையில் அமைந்துள்ள குய்பிஷெவ் (சாமாரா) நகருக்கு மாற்றப்பட்டுவிட்டன. எனினும், ஸ்டாலின் மட்டும் கிரெம்லினை விட்டு அகலவில்லை. கம்யூனிஸ்ட் புரட்சியின் ஆண்டு விழாவில் பேசுகையில் அவர் எதிரிக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்குமாறு தன் நாட்டு மக்களுக்குப் போதித்தார். மனமுறிந்துபோன ஸ்டாலின் முதலில் நடுத்தரமான கொள்கையைப் பின்பற்றினர். பின்னர், நல்வினைப் பயனைப் புதிய வாய்ப்புகள் கிடைத்ததும், அவர் அக் கொள்கையை முற்றிலும் கைவிட்டுவிட்டு, நேர்மாறான வழியில் சென்றார். ஆண்டு விழாவில் தன் நாட்டு மக்களை நோக்கி அவர் பின்வருமாறு பேசினர்:

'செர்மன் தாக்குதல்காரர்களுக்கு நாம் ஒருகாலும் இரங்கக் கூடாது! மாறுக, அவர்களின் உயிருக்கு உலைவைக்க வேண்டும்!... (ஆனால்) மற்ற நாடுகளைக் கைப்பற்றும் நோக்கமோ, அன்றி, மற்ற நாட்டு மக்களை நமக்கு அடிமைப்படுத்தும் நோக்கமோ நமக்குக் கிடையாது. அந்நாடுகள், அம் மக்கள் ஐரோப்பாவில் இருந்தாலும் சரி, அல்லது இரான் உள்பட ஆசியாவில் இருந்தாலும் சரி நம் நாட்டிற்குச் சொந்தமான நிலப்பகுதிகளையும் நம் நாட்டு மக்களையும் செர்மன், ஃபாசிஸ்ட் அடிமைத் தளையினின்றும் விடுவிப்பதே நம் முதல் குறிக்கோளாகும். ஸ்லாவ் மக்கள்மீதோ, அன்றி நம்

உதவியை எதிர்பார்த்து நிற்கும்—அடிமைத்தளைக்கு ஆளாகியிருக்கும் மற்ற ஐரோப்பியர்மீதோ நம் விருப்பத்தையோ, அன்றி நம் ஆட்சியையோ நாம் புகுத்த முடியாது. அத்தகைய போர்க் குறிகளும் நம்மிடமில்லை. ஹிட்லரின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள 'இம் மக்கள் நடத்தி வரும் போராட்டத்தில் அவர்களுக்கு உதவியளித்து, விடுதலைக்குப் பின்னர் அவர்கள் நாட்டை அவர்களே ஆளவிடுவதே நம் விருப்பம்—நம் குறிக்கோள். அந்நிய நாட்டு, உள் நாட்டு விவகாரங்களில் நாம் தலையிட விரும்பவில்லை. இக் குறிக்கோள்களை நாம் எய்த வேண்டுமெனில் முதலில் செர்மன் தாக்குதல்காரர்களின் வலிமையை அடியோடு குலைத்துவிட வேண்டும்... இதுவே நாம் செய்ய வேண்டிய முதற் காரியம் ஆகும். நம்மால் இக் காரியத்தைச் செய்யமுடியும், செய்தே ஆக வேண்டும். இக் காரியத்தைச் செய்து, செர்மன் படையெடுப்பினரை அடியோடு அழித்து ஒழித்தால்தான் நம்மால் நிலையான, நேர்மையான அமைதியை ஸ்தாபிக்க முடியும்.'

நவம்பர் மாத இறுதியில் செர்மன் படைகள் மாஸ்கோவைப் பிடிக்க இன்னும் 13 மைல்கள்களுக்கும் குறைவான தூரமே இருந்தது. எல்லா முயற்சியும் தோல்வியுற்றதுபோல் தோன்றியதும், ஜெனரல் (பின்னல் மார்ஷல்) ஜார்ஜ் கே. ஷூகோவ் எதிரியை முதன்முதலாகக் கடுமையாகத் தாக்கும்படி தன் படைகளுக்கு உத்தரவிட்டார். டிசம்பர் மாத ஆரம்பத்தில் லிட்டினேவ் அமெரிக்கா சென்றிருந்த வேளை பார்த்து சப்பான் பர்ல் துறைமுகத்தைத் தாக்கியது. அதன் ஆதரவாளர் மாஸ்கோ போர்க்களத்தில் வெற்றிமாலை சூடினர். ரஷ்யாவின் குளிர் பொறுக்க முடியாமல், பகைவன் படைகள் திரும்பும் வழியில் நடுங்க ஆரம்பித்தன. எனினும், அவை பகைவனை திரும்பத் தாக்கும் நோக்கத்தில் தமக்குச் சாதகமான 'பாதுகாப்பு' அளிக்கக்கூடிய இடங்களாகப் பார்த்து நன்றாக அமர்ந்து கொண்டன.

1942 ஆம் ஆண்டு கோடை காலத்தில் பாசிஸ்ட் சேனைகள் முன் ஆண்டைவிட அதிகமாகவும் பிரமாண்டமாகவும் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. அச் சேனைகள் இம்முறை சோவியத் நாட்டைப் பாதுகாத்து நின்றவர்மீது அரியேறெனப் பாய்ந்தன. மற்றொரு படை தெற்கில் கடுமையாகத் தாக்கிற்று. வால்கா நதி வரை சென்று காகாசிய எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்றவும், மாஸ்கோவைக் கிழக்கிலிருந்து வளைத்துக்கொள்ளவும். அது திட்டமிட்டது. ஆகஸ்ட்டு மாத இறுதியில் படையெடுப்பாளர் ஸ்டாலின் கிரேடிற்குள் நுழைந்துவிட்டனர். இங்குப் படைத் தலைவர் பிரெடரிக் வான் பால்ஸ் தலைமையில் அரை மில்லியன் துருப்புகள் ஏராளமான ஆயுதங்களுடன் ஒரு நகருக்குள் வந்து புகுந்தன.


WAR IN RUSSIA
1941-1945
SCALE OF MILES
BATTLE FRONTS
December 6, 1941
November 19, 1942
June 23, 1944
Barents Sea
White Sea
Black Sea
SWEDEN
FINLAND
Gulf of Bothnia
URAL MTS.
CAUCASUS MTS
SLOVAKIA
HUNGARY
RUMANIA
JUGOSLAVIA
BULGARIA
TURKEY
IRAN
POLAND
UKRAINE
LATVIA
LITHUANIA
ESTONIA
EAST PRUSSIA
CRIMEA
BESSARABIA
Tromsoe
Narvik
Kirkenes
Petsamo
Murmansk
Kandalaksha
Mezen
Archangel
Kem
Suomassalmi
Onega
Seregovsk
Ust Sysolsk
Cherdyn
Kotlas
Viliky Ustyug
Perm
Kargopol
Sortavala
Vytegra
Tolma
Vyatka
Kotelnich
Nolinsk
Sarapul
Lake Ladoga
Vyborg
HELSINKI
LENINGRAD
Cherepovets
Vologda
Bui
Hangoe
STOCKHOLM
TALLINN
Narva
Novgorod
Volochok
Yaroslavl
Kazan
Buguima
Paernu
Tartu
Pskov
Kalinin
Nizhni Novgorod (Maxim Gorki)
Murom
Cesis
Kholm
MOSCOW
Syzran
Samara
RIGA
Ventspils
Libau
Dvinsk
Ryazan
Marshansk
Penza
Pugachev
Shavli
Memel
Vitebsk
Smolensk
Kaluga
Tula
Ryazsk
Tambov
Kaunas
Koenigsberg
Orsha
Roslavl
Saratov
Vilna
Minsk
Mogilev
Bryansk
Orel
Novo Uzen
Grodno
Bobruisk
Gomel
Voronezh
Kursk
Kamyshin
Bialystok
Pinsk
Chernigov
Korotoya
Belgorod
Stalingrad
WARSAW
Brest Litovsk
Nyezhin
Sumy
Kharkov
Lublin
Kowel
Rowno
Kiev
Priluki
Kamensk
Lwow
Lutsk
Zhitomir
Berdichev
Cherkasy
Artemovsk
Astrakhan
Cracow
Tarnopol
Przemysl
Proskurov
Vinnitsa
Uman
Dniepropetrovsk
Stalin
Taganrog
Rostov
Cernauti
Balta
Krivoy Rog
Melitopol
Stavropol
Armavir
Kishinev
Nikolaiev
Kherson
Kerch
Krasnodar
Kislyar
Jassy
Odessa
Pyatigorsk
Grozny
Novorossiysk
Vladikavkaz
Galati
Sevastopol
Ploesti
Constanta
Poti
Tiflis
Batum
Leninakan
Kars
Nish
SOFIA
Plovdiv
Trebizond
Samsun
Erzerum
Istanbul

அது அவ்வளவு பெரிய நகர் இல்லை. அது ஒரு விரிந்த நதியின் உயரமான மேற்குக் கரையோரமாக சுமார் 50 மைல்களுக்கு மேல் நீண்டிருந்தது. அந்நதியில் ஒரு பாலம்கூட இல்லை. அறிவு இட்ட ஆணைகளுக்கேற்ப சோவியத் துருப்புகள் கிழக்குக் கரைக்குத் திரும்பின. எனினும், பாதுகாப்புப் படைகள் பகைவன் தென்பட்ட இடமெல்லாம் கடுமையாக எதிர்க்கத் தயாராயின. இது ஒன்றே இரண்டாம் உலகப் போரின் மிகமிகக் காட்டுமிராண்டித்தனமான போர் ஆகும்.

செப்டம்பர் மாத இறுதியில் 'நாம் ஸ்டாலின்கிரேடைப் பிடித்துவிட்டோம்' என்று ஹிட்லர் பெருமிதமாகக் கூறினார். அவர் கூற்றில் சற்று உண்மை இருக்கத்தான் செய்தது. ஏனெனில், அந்நகரின் பெரும் பகுதி நாசிகள் கைவசம் இருந்தது. நாசிகள் கால்வைத்த இடமெல்லாம் நாசந்தான் ஏற்பட்டது. எனினும், பாதுகாப்பாளர் (சோவியத் படையினர்) தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்தனர். அவர்கள் பாழடைந்துபோன கட்டடங்களிலிருந்தும், வீழ்ச்சி அடைந்துகொண்டிருந்த தொழிற்சாலைகளிலிருந்துகொண்டும், தங்கள் உறைவிடங்களினின்றும் தங்கள் கைக்கு அகப்பட்ட துப்பாக்கிகள் (rifles), வெடிகுண்டுகள் (grenades), எந்திரக் குண்டுகள் (machine guns), எரிபொருள்கள், ராக்கெட்டுகள் (rockets), கத்திகள் முதலிய ஆயுதங்களைக் கொண்டு பகைவன்மீது புலிபோல் பாய்ந்தனர். நியூயார்க் நகரில் 20,000 அமெரிக்கர்கள் 'ஸ்டாலின்கிரேடு தினவிழா' வன்று (1942 நவ. 8) ஒன்றுகூடினர். ரூஸ்வெல்ட், ஐசன் ஹோவர் ஆகியோரிடமிருந்து நல்வாழ்த்துப் பெற்றனர். லிட்டிஞ் விற்குச் செவிசாய்த்தனர். ஹென்ரி ஏ. வாலாசின் புது ஜனநாயக வேண்டுகோளை மெச்சினர். சாவில்கூட அமெரிக்கரும் ரஷ்யரும் கைகோத்துச் செத்தனர். ஆனால், (அதே மக்கள்) மூன்று ஆண்டு கட்குப் பின்னர் ஒருவரையொருவர் சந்தேகிக்கலாயினர். அதே மக்கள் நான்கு ஆண்டுகட்குப் பின்னர் வருங்கால எதிரிகளாகி விட்டனர். இதை விதியின் விளையாட்டு என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது? ஆனால், 1942-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஐக்கியநாடுகள் சபையிலுமுள்ள எல்லா மக்களும் ஸ்டாலின்கிரேடு வீரர்களுக்குப் புகழ்மாலை சூட்டினர். நேசநாட்டுப் படைகளிலேயே இவர்கள் மட்டுமே மற்றெல்லோரையும்விட எதிரி வெற்றிபெறும் வாய்ப்பைக் குலைத்தனர்.

ஸ்டாலின், ஷூக்கோவ், வட்யூட்டின், வரோனேவ், எரிமென்கோ, ரொக்கோவ்ஸ்கி ஆகியோர் நுணுக்கமான திட்ட ஆராய்ச்சிக்குப் பின்னர் 1942, நவ 19ஆம் நாள் அன்று தங்கள் வலையை விரித்தனர். புதிய சோவியத் படைகள் ஸ்டாலின்கிரேடிற்கு வடக்கிலும்

தெற்கிலும் தாக்கின. நவ. 23ஆம் நாள் காலாச் என்னுமிடத்தில் எதிரியுடன் மோதி, வோல்கா நதிக்கு மேற்கே செர்மன் படைகளைச் சுற்றி வளைத்து முற்றுகை செய்தன. ஹிட்லர் எதிரிக்கு விட்டுக்கொடுக்காதிருக்கும்படி ஜெனரல் பாலஸை வற்புறுத்தினர். ஆனால், அவர் முயற்சி பலிக்கவில்லை. கடுமையான எதிர்ப்புக்குப்பின் 330,000 நாஸித் துருப்புகள் சின்னபின்னப்படுத்தப்பட்டன. 1943 பிப்ரவரி முதல் தேதியன்று பாலஸ் தன்னுடைய மற்ற 24 படைத்தலைவர்கள், 2,400 அதிகாரிகள், தப்பிப்பிழைத்த 91,000 சிப்பாய்கள், 750 விமானங்கள், 1,550 டாங்குகள், 6,700 குண்டுகள், 61,000 மோட்டார் வண்டிகள், இதர ஆயுதங்கள் ஆகியவற்றுடன் சரணடைந்தார்.

இப் படுதோல்விக்குப் பின்னர் செர்மன் படை ரஷ்யாவைத் தாக்கி அதில் முழுவெற்றி காண இயலவில்லை. 1942-43 ஆம் ஆண்டு குளிர்காலத்தில் சோவியத் படைகள் செர்மன் துருப்புகளை 400 மைல்கள் மேற்கே துரத்தியடித்துவிட்டு, 200,000 சதுர மைல் அடங்கிய சோவியத் மாநிலத்தைப் பகைவனின் கோரப்பிடியிலிருந்து விடுவித்தன. அம்மட்டோ! ஒரு மில்லியன் எண்ணிக்கையிருந்த பகைவன் துருப்புகளில் மூன்றில் ஒரு பகுதியைத் பிடித்தன. சுமார் 1,000,000 பேர்களைக் கொன்று குவித்தன. 2,000 மைல் நீளமான போர்முனையின் வழியாக சோவியத் துருப்புகள் மேலும் முன்னேக்கிச் சென்று, மாதத்திற்கு 40 மைல் வீதம் வோல்காவிலிருந்து எல்பி நதிவரை பரவியுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றின. 1943, ஜூலை மாதம் செர்மானியப் படையினர் தங்கள் மூன்றாம் கோடைகாலத் தாக்குதலில் இறங்கினர். இம்முறை கூர்ஸ்க், ஓரல், பெல்கொராட் என்னும் நகரங்களைச் சுற்றித் தாக்குதல் ஏற்பட்டது. ஆனால், இம்முறையும் செர்மன் படையினர் பலத்த சேதத்திற்குள்ளாயினர். அவர்கள் 1000 குண்டுகள், 3,000 டாங்குகள், 70,000 போர்வீரர்கள் முதலியவற்றை ஒருசில நாட்களில் கடுமையான போரில் இழந்து தவித்தனர். ஆனால், அதே வேளை அவர்களுடைய எதிரிவசமோ (ரஷ்யாவிடமோ) தரத்தில் உயர்ந்த ஆயுதங்களும் ஆட்களும், படைத் தலைமையும் இருந்தன. இலையுதிர்காலத்திற்குள் ஊக்ரெய்னின் பெரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்பட்டுவிட்டன. லெனின்கிரேடைச் சுற்றி நாசிகள் போட்ட முற்றுகை முறியடிக்கப்பட்டது. சனவரித் திங்களில் லெனின் கிரேடு மாநகரின் வேதனையும் அத்துடன் நீங்கிவிட்டது எனலாம். கோடைகாலத்தில் ரஷ்யப் படைகள் பின்லாந்து, போலந்து, ருமேனியா ஆகிய நாடுகள்மீது படையெடுத்துக் கொண்டிருந்தன.

சோவியத் நடவடிக்கை பிரான்சின்மீது படையெடுத்த ஆங்கிலோ-அமெரிக்கர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தது. பைலோ

ரஷ்யாவும் போலந்தின் பெரும் பகுதியும் விடுவிக்கப்பட்டன. 1944, ஆகஸ்ட்டு 2ஆம் நாள் பேசுகையில் 'ரஷ்யப் படையே செர்மானியப் படையினரின் தைரியத்தைச் சிதறடித்தது' என்று சர்ச்சில் கூறினார். அவ்வாண்டு இலையுதிர் காலத்தில் ருமேனியா, பின்லாந்து, பல்கேரியா ஆகிய நாடுகள் சரணடைந்தன. பால்டிக் பிராந்தியத்தை விடுவித்தபின், வாகைசூடிய (ரஷ்ய) வீரர்கள் புதா :பெஸ்ட்டை வந்து அடைந்தனர். அங்கிருந்து 1945ஆம் ஆண்டு சனவரி மாத நடுவில் மத்திய போலந்தைத் தாக்கினர். இதுவே அவர்களுடைய இறுதித் தாக்குதல் ஆகும். தாக்குதல் பெர்லினிலும், எல்பி நதிவரையிலும் சென்று முடிவடைந்தது. அத்துடன் நாசி ரீச்சும் இறந்துபோயிற்று. மாஸ்கோவின் 'வெற்றி நாள்' கொண்டாட்டத்தில் ஸ்டாலின் பின்வருமாறு அறிவித்தார்.

'ஸ்லாவ் மக்கள் (பிறரைப் போல்) வாழ்வதற்காகவும். சுதந்திரத்துடன் திகழ்வதற்காகவும் செர்மன் படையெடுப்பினரையும் செர்மன் கொடுங்கோன்மையையும் எதிர்த்து நடத்திய நெடுநாள் போராட்டம் வெற்றி கண்டுவிட்டது. இனிமேல் நாடுகளின் சுதந்திர உயர்கொடியும், நாடுகட்கிடையே அமைதிக் கொடியும் ஐரோப்பா முழுவதும் பெருமிதத்துடன் பறக்கும் ... தம் நாட்டு மக்களின் சுதந்திர நல்வாழ்விற்காகப் போர்க்களத்தில் பகைவனுக்குப் பலியான வீரர்கள் வீர சொர்க்கம் அடைந்துவிட்டார்கள்!'

ஆனால், இவ் வெற்றியின் விலை என்னவென்று ஆராயுமிடத்து பெருமூச்சுதான் விடவேண்டியிருக்கிறது. அவ்வளவு கடுமையான விலைகொடுத்து ரஷ்யா இவ் வெற்றியை விலைக்கு வாங்கிற்று. ரஷ்யக் குடிமக்களில் (citizens) 38,000,000 பேர் தத்தம் இல்லங்களிலிருந்து விரட்டப்பட்டனர். போரில் மாண்ட சிப்பாய்கள், மாலுமிகள், விமானிகள், கட்சிக்காரர், சிவில் மக்கள் ஆகியோரின் எண்ணிக்கை 7,000,000 ஆகும். இவர்களில் போரில் காயமடைந்து இறந்தோரும் இருந்தனர். பட்டினி, கட்டாய உழைப்பு, துன்புறுத்தல், பாமரமக்கள் படுகொலை (எதிரி நாட்டில்) ஆகியவற்றால் உயிர் துறந்தோரும் இருந்தனர். போரினால் ஏற்பட்ட அதிகமான சாவு வீதத்தினாலும், குறைந்த பிறப்பு வீதத்தாலும் கழிந்துபோனவர் குறைந்தது 8,000,000 பேர் ஆகும். போரினால் சோவியத் யூனியனுக்கு ஏற்பட்ட ஆள் பொருள் சேதம் மேலை நாடுகள் அனைத்தின் சேதங்களையெல்லாம்விடப் பத்து மடங்கு அதிகமாக இருந்தது. பொருட்சேதம் மட்டும் 679,000,000,000 ரூபிள்கள் என்று கணக்கிடப்பட்டது. 6,000,000 கட்டடங்கள் தவிடுபொடியாயின; 1,700 நகரங்கள் பாழடைந்து போயின. 70,000 கிராமங்கள் அழிந்துபோயின; 84,000 பள்ளிக்கூடங்கள், 43,000 வாசகசாலைகள், 31,000 தொழிற்சாலைகள், 13,000 பாலங்கள்,

40,000 மைல் நீளத் தண்டவாளங்கள் ஆகியவனைத்தும் சேர்ந்து அழிந்துபோயின. அதோடல்லாமல் 7,000,000 குதிரைகளும், 17,000,000, கால்நடைகளும் 20,000,000 பன்றிகளும், 27,000,000 செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் பலியாயின. மிசிசிப்பிக்கு கிழக்கேயுள்ள பிராந்தியங்கள்மீது போர்த்தாக்குதல் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அ. ஐ. நாடும் கனத்த சேதத்திற்குள்ளாகியிருக்கும். குறைந்தது 9,000,000 அமெரிக்கர்கள் கொலை செய்யப்பட்டிருப்பர், 27,000,000 பேர் வீடின்றித் தவித்திருப்பர்.

வெற்றியறுவடை : புது ஏகாதிபத்தியம் : இந்நூற்றாண்டின் நடுவில் மேலைநாட்டு அரசாங்கங்களும் மக்களும் பயங்கரமும், வீரவுணர்ச்சியும் ததும்பும் ரஷ்யாவின் நெடுநாளைய இரத்தக்கறை படிந்த போராட்டத்தில் சிறிதும் கவனம் செலுத்த விரும்பவில்லை. கிரெம்லின் போக்கு மேலைநாடுகளின் நெடுநாளைய அச்சங்களை உறுதிப்படுத்திற்று. கம்யூனிசத்தின்மீது நாசிஸம் வெற்றி கண்டிருப்பின் அது எவ்விதம் மேலைநாட்டவரின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவித்திருக்குமோ, அதைப்போல் இப்போது நாசிசத்தின் மீது ஏற்பட்டுள்ள கம்யூனிச வெற்றியால் தங்கள் பாதுகாப்புக்கு பழுது ஏற்படவிருப்பதை மேலைநாடுகள் நன்கு உணரத் தலைப்பட்டன. இவ்விரண்டையும் அவைகள் விரும்பவில்லைதான், ஆனால், அவை சோவியத் அரசியல்முறை, பொருளாதாரம். சமுதாய அமைப்பு ஆகியவற்றின்மீது ஏற்பட்ட போர் விளைவுகளை 'இரும்புத் திரை' வாயிலாய் (வெளியுலகிற்கு) நன்முகத் தெரியப் படுத்தின. இப் பிரச்சினைகளும் அதற்கு மேலைநாடுகள் அளித்த பதில்களும் மனிதகுல வாழ்வையும் நற்பேற்றையும் இந் நூற்றாண்டு இறுதிவரை பெரிதும் பாதிக்கவிருந்தன.

போரின்போதும், பொருக்குப் பின்னர் ஏற்பட்ட 'கெடுபிடிப் போரிலும்' கிரெம்லின் ஆட்சியாளர் மக்களைச் சட்டத்திற்கு அடி பணிய வைப்பதிலும், உற்சாக மூட்டுவதிலும், உற்பத்தியைப் பெருக்குவதிலும் முனைந்து முயன்றனர். இக் குறிக்கோள்களை எய்த அவர்கள் கடைப்பிடித்த வழிகள் பல. அவை யனைத்தும் மங்கோலிய மஸ்கோவிய எதேச்சாதிகார முறையையே தழுவியிருந்தன. எனினும், குறிக்கோளை எய்துவதில் அவை பெரிதும் பயனளித்தன. எதிரிக்கு இரக்கம் தெரிவித்த சிறுபான்மை வகுப்பினர் அடியோடு ஆசியாவுக்குக் கடத்தப்பட்டனர். 1944, செப்டம்பர் முதல் தேதியன்று மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தம் (constitutional amendment) யூனியன் குடியரசுகளுக்கு அதிகச் 'சுதந்திரம்' வழங்கிற்று. அவைகள் தத்தம் படைகளை வைத்துக்கொள்ளவும், பிறநாடுகளுடன் தூதியல் உறவு கொள்ளவும் அனுமதிக்கப்பட்டன. கம்யூனிஸ்ட்டு கட்சியின் அங்கத்தினர் எண்ணிக்கை இரு மடங்காயிற்று. 1947-ல்

உறுப்பினர் எண்ணிக்கை 6,000,000 ஆக உயர்ந்தது. எனினும், 1952, அக்டோபரில் 19ஆம் காங்கிரஸ் கூடும்வரை கட்சி ஜனநாயகம் பெயரளவிலுமில்லை, நடைமுறையிலுமில்லை. கட்சித் தலைமை மாறுமலிருந்ததோடல்லாமல், அது தொடர்ந்து பதவியிலிருப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுவந்தது. மக்களிடையே புதிய சோவியத் நாட்டுப்பற்று உருவானது. மக்கள் பண்டையப் புகழ் வாய்ந்த ரஷ்யாவில் தோன்றிய வீரர்களுக்குப் புகழ்மாலை சூட்டினர். இப் புதிய நாட்டுப்பற்று முன்னிலையப் புரட்சிகர சர்வதேசத்துவத்தின் (internationalism) இடத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டது. 'இறையிலார் சங்கம்' எடுக்கப்பட்டது. வைதீகத் திருச்சபைக்குரிய (Orthodox Church) இடமும் மரியாதையும் மீண்டும் அளிக்கப்பட்டன. எனினும், கம்யூனிஸ்ட்டுகள் மட்டும் நாத்திகர்களாகவே விளங்கி வந்தனர். சுப்ரீம் சோவியத்திற்கு—சோவியத் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேசீயத் தேர்தல்கள் (1946, பெப். 10, 1950, மார்ச் 12, 1954, மார்ச் 14, 1958, மார்ச் 16) அனைத்தும் பெயருக்குத்தான் தேர்தல்கள் ஆகும். ஏனெனில், எதிர்க் கட்சிகளுக்கே இடமளிக்கப்படவில்லை. பன்முக அபேட்சக முறையும் (multiple candidacies) அனுமதிக்கப்படவில்லை. எனவே, அத் தேர்தல்கள் '(கம்யூனிசக்) கட்சி, கட்சி சார்பற்ற மக்கள் கூட்டின்' பெயரில் நடத்தப்பட்டன. அவை மன ஒருமையை வெளிக்காட்டுவதற்காக நடைபெற்ற தேர்தல் ஆகும். அன்றியும் இலக்கியம் (literature), விஞ்ஞானம் (science), கலைகள் (arts) ஆகிய துறைகளில் கொள்கைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இந்நாடு கடைப்பிடித்த சோசியலிஸ்டுப் பொருளாதாரத் திட்டம் (socialist economic planning) போர்ச் சேதனையைச் சமாளித்ததோடல்லாமல் உற்பத்தியையும் பெருக்கிற்று. 1947, டிசம்பர் 14 அன்று, போர்க்காலத்தில் நடைமுறைக்கு வந்த பங்கீட்டு முறை (rationing) நீக்கப்பட்டது. 'நாணயச் சீர்திருத்தம்' போர்க்காலப் பணவீக்கத்தால் புழக்கத்திலிருந்த நுகர்வோரின் (consumer) கையில் அதிகப்படியான வாங்கும் திறனை (purchasing power) நீக்கிற்று. அடுத்தாற்போல் ஏற்பட்ட வருடாந்தர விலைக்குறைவுகள் உற்பத்திப் பெருக்கத்திற்கு (increased output) ஏற்றாற்போல் மாற்றியமைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை (living standards) மெதுவாக உயர்த்தின. மேலும், இத்தகைய நடவடிக்கைகள் போருக்குப் பின்னால் மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உயரும் விலைவாசிகட்கும் உயரும் கூலிகட்கும் (wages) இடையே ஏற்பட்ட இடைவிடாப் போட்டியை இங்கு நீக்கின. சர்வாதிகார சோசியலிச முறைகளைப் பின்பற்றி முதல் திரட்டப்பட்டது (capital accumulation). சான்றாக, நுகர்வு (consumption) உற்பத்தியைவிட எப்போதும் குறைவாகவே இருக்கும்படி பார்த்துக்

கொள்ளப்பட்டது. அவ்வாறு திரட்டப்பட்ட முதல் தொழில்களிலும் விவசாயத்திலும் (agriculture) முதலீடு (investment) செய்யப்பட்டது. அதன் விளைவாக அதிகப்படியான நுகர்வைவிட உற்பத்தி பெருகியது. உற்பத்தி உயர்வும் நுகர்வுக் குறைவும் தொடர்ந்து பல்லாண்டுகள் ஏற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ரஷ்ய வர்த்தக நிருவாகிகளும் (managers) அவர்கள் கூட்டாளிகளும் பிற நாட்டு உதவியில்லாமலேயே தத்தம் காலை ஊன்றிக்கொண்டே தொழில் உற்பத்தியைப் (industrial output) பெருக்கி வந்தார்கள். உற்பத்திப் பெருக்கம் மேற்கு ஐரோப்பா, ஏன் அமெரிக்காவையும்விட இங்கு அதிகமான வேகத்தில் சென்றது. பெரும் பெரும் கால்வாய், அணைக்கட்டுத் திட்டங்கள், நீர்ப்பாசன முயற்சிகள் (irrigation enterprises) ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. நீர் மின்சார நிலையங்கள் (hydroelectric stations) புதிய தொழிற்சாலைகள் ஆகியவை குறிப்பாக வோல்கா நதிப்பள்ளத்தாக்கிலும், சைபீரியாவிலும் மத்திய ஆசியாவிலும் அமைக்கப்பட்டன. இத்திட்டங்கள் (சோவியத் அரசாங்கக்) குறிக்கோள்களை நிச்சயமாக அடைந்துவிடலாமென்பதை உணர்த்தின. மேலும், 1970-ல் சோவியத் தொழில் உற்பத்தியும் இரு மடங்கு அதிகமாக சாத்தியம் என்பதையும் அவை உணர்த்தின.

கம்யூனிஸ்டு கட்சியின் 19ஆம் காங்கிரஸ் (1952, அக்டோபர் 5-15) கூடுவதற்கு சற்றுமுன் ஸ்டாலின் பின்வருமாறு கூறினார். 'தடையில்லா உற்பத்திப் பெருக்கமே' சோசியலிசத்தின் அடிப்படையான பொருளாதாரச் சட்டம்; கம்யூனிஸ்டு முகாம் தன்னிறைவு அடைந்துவிட்டது ; வெகு விரைவில் அது ஏற்றுமதி செய்யக் கூடிய முறையில் பண்டங்கள் உபரியாக உற்பத்தி செய்யப்படும். உலகச் சந்தை அழிந்துபோனதால் 'புதிய முதலாளித்துவ நெருக்கடி' ஏற்பட்டுள்ளது; அதன் விளைவாக 'சோசியலிசத்திற்கும்' 'முதலாளித்துவத்திற்கும்' இடையே போர் ஏற்படுவதற்குப் பதிலாக முதலாளித்துவ நாடுகட்கிடையே வருங்காலத்தில் போர்மூளுவது சாத்தியம் 'இவ்வாறு அவர் உறுதியாக கூறினார் காங்கிரஸ் புதிய கட்சி விதிகளைக் கொண்டு வந்தது; 125 உறுப்பினர்களும் 110 மாற்று உறுப்பினர்களையும் (alternates) கொண்ட புதிய மத்திய கமிட்டி ஒன்றை அமைத்தது; பழைய பொலிட்பீரோவை (Politburo) நீக்கிவிட்டு அதனிடத்தில் 25 உறுப்பினர்களையும் 11 மாற்று உறுப்பினரையும் கொண்ட 'பிரசிடியம்' (Presidium) என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தியது. எனினும், கட்சித் தலைமையில்—செல்வச் சிறுகுழுவாட்சியில் (oligarchy)—மட்டும் எந்தவிதமான மாறுதல்களும் ஏற்படாமல் பார்த்துக்கொண்டது. ஜார்ஜ் எம் மெலென்கோவ் ஸ்டாலினின் (அரசியல்) வாரிசாக விளங்கி வந்தார்.

கிரெம்லின் செல்வச் சிறு குழுவாட்சி மேலை நட்பு நாடுகளுடன் ஒத்துழைப்பதுபோல் நடித்து வந்தது. ஆனால், எவ்வளவு தூரம் சோவியத் அதிகாரத்தை வல்லந்தமாகப் பரப்ப முடியுமோ அவ்வளவு தூரம் பரப்புவதே அதன் உண்மையான நோக்கமாகும். இந் நோக்கத்தை அறிந்துகொண்ட மேலை நாடுகள், உலகை ஆள முயலும் சோவியத் யூனியனிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடிவு செய்தன. அதற்காகக் 'கெடுபிடிப் போரில்' ஈடுபடுவதைத் தவிர அவற்றிற்கு வேறு வழியில்லாமற் போயிற்று. அப்போது மேலை நாடுகளுக்கிடையே நிலவிவந்த பகைமை, வலியின்மை, குழப்பம் இவற்றிற்கிடையில் 1984ஆம் ஆண்டின் கோணத்திலிருந்து நோக்கும்போது, (மேலை நாடுகளின்) இம் முடிவு புத்தி கூர்மையும் திறமைமிக்கதுமாகவே படுகிறது. அதே சமயம் இது ஒரு தற்கொலை முடிவு என்றும் கருத இடம் இருக்கிறது. ஏனெனில், இம் முடிவாலன்றே சோவியத் யூனியனிடம் அமெரிக்கா தீராத பகைமை செலுத்த உறுதி பூண்டுள்ளது! 1950-60-ல் இம் முடிவைப்பற்றி ஆராயுமிடத்து இது தற்காலிகமானது என்றும் (நடுநிலையாளர்க்கு) தோன்றுகிறது. எனினும், அதைப்பற்றிச் சிறிது பார்ப்போம்.

ரஷ்யா உலகப் புரட்சியில் மீண்டும் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாக மேலை நாடுகள் அச்சமடைந்துவந்தன. அந்த அச்சத்தைப் போக்குவான் வேண்டி மாஸ்கோ, 1943, மே 22ஆம் நாள் கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனலைக் கலைத்துவிட்டது. எனினும், அது மீண்டும் 1947 அக்டோபர் 5ஆம் நாள் அப் பேய்க்கு உயிரளித்தது. இம்முறை அது அமெரிக்காவிற்கு எதிரான 'கம்யூனிஸ்ட் செய்தி பீரோ' அல்லது கமின்ஃபர்ம் (Cominform) என்ற பெயரில் தலைதூக்கியது. தெஹரான், யால்டா, போட்ஸ்டாம் ஆகிய இடங்களில் (புதிதாக) விடுதலை செய்யப்பட்ட நாடுகளில் 'ஜனநாயகத்தை' நிறுவ ஒப்புக் கொண்டது மாஸ்கோ. ஆனால், அது சேர்மன் தோல்விக்குப்பின் கிழக்கு ஐரோப்பாவையே சோவியத் அதிகார மண்டலத்திற்குள் கொண்டுவரத் திட்டமிட்டது. அதற்கிணங்க (புதிதாக விடுதலை யடைந்த) நாடுகளில் அது கம்யூனிஸ்ட் கொடுங்கோன்மை யாட்சியை வலுவந்தமாக நிறுவ முயன்றது. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் மாபெருஞ் சூழ்ச்சித் திட்டத்தை வகுக்குங்கால் சர்ச்சில் இதையே தவிர்க்க நாடினர். இக் குறிக்கோளை எய்துவதற்காக அவர் முதலில் கிழக்கு ஐரோப்பாவிலும் பால்கனிலும் மட்டும் ஆங்கிலோ-அமெரிக்க நடவடிக்கை எடுக்க விரும்பினர். ஆனால், இக் கொள்கையை வாஷிங்டன் நிராகரித்துவிடவே (அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர் போரில் 'வெற்றி'யடைவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தார்களேயன்றி அவர்கள் அரசியல் விளைவுகளைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளவேயில்லை), அடுத்தாற்போல் சர்ச்சில் தென்கிழக்கு ஐரோப்

பாவை 'மண்டலங்களாகப்' பிரிப்பதற்கு 1944, அக்டோபரில் ஸ்டாலினை இணங்கச் செய்தார். வாஷிங்டன் அதற்கும் மறுப்புத் தெரிவித்தது. ஏனெனில், இதையே ரூஸ்வெல்ட் தவிர்க்க விரும்பினார். அவர் 'ஜோ மாமாவுடன்' உளங்கனிந்த உறவு பூண்டும், நிலையான கிழக்கு-மேற்கு ஒத்துழைப்பிருந்தால் மாஸ்கோவின் 'நியாயமான' விருப்பங்கள் நிறைவேறுமென்று கிரெம்லினுக்கு வாக்குறுதியளித்தும், தன் எண்ணத்தை நிறைவேற்றப் பார்த்தார். மேலை நாடுகள் வகுத்த ஒவ்வொரு 'கொள்கைக்கும்' மாஸ்கோ தலையை ஆட்டிவிட்டு உண்மையில் தன் மனம் போன போக்கில் செல்ல ஆரம்பித்தது. அதே வேளை மேலைக் கொள்கை வகுப்பாளரும் இதை நன்கு உணர்ந்து கொண்டு, சோவியத் யூனியன் கொண்டுவரும் ஒவ்வொரு பிரேரணையையும் அதே காரணத்திற்காக (ipso facto) 'நியாயமற்றது' என்றும், அது அந்நாட்டின் கட்டுக்கடங்காப் பேராசையைப் பிரதிபலிக்கிறதென்றும் கூறித் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

சோவியத் யூனியன் 1939-ல் நிலவிய எல்லைகளை—'கர்ஸன் லைன்' விஸ்தரிக்கவேண்டுமென்று ஒரே தலைக்கு நின்றது. புதிய ரஷ்ய-போலந்திய எல்லை, பெஸ்ஸரேபியா வட புக்கோவினு எல்லை, காப்பாத்தோ-ஊக்ரெய்ன் (1945, ஜூன் 29-ல் பிரேகால் விடப்பட்டது) வடகிழக்குப் பிரஷ்யா, மங்கோலியாவிலுள்ள டானூ துவா, தென் சகாலின், குரில் தீவுகள், போர்ட் ஆர்த்தர் ஆகியவை புது எல்லைகளுக்குள் அமைய வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறிற்று. மேலை அரசியல் வல்லுநர்கள் முதலில் சோவியத் வேண்டுகோளை எதிர்க்கவில்லை. ஆனால், பால்கன், கிழக்கு ஐரோப்பாவின் நிலைமை குறித்துச் சண்டை மூள ஆரம்பித்தது. அத்தீனிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக கிரேக்க கம்யூனிஸ்ட்டுகள் மேற்கொண்ட முயற்சியை அடியோடு ஒழிப்பதற்காக 1944-45ஆம் ஆண்டு குளிர்காலத்தில் கிரீசில் பிரிட்டிஷ் துருப்புகள் கையாளப்பட்டன. அது ஆங்கிலோ, அமெரிக்க மோதலுக்கு வழி வகுத்தது. மேலும் அது, நடந்து முடிந்த காரியத்திற்கு (fait accompli) ஆங்கிலோ-அமெரிக்க இணக்கம் ஏற்பட்டுவிடும் என்று ஸ்டாலினை நம்பும்படி தூண்டியது. (ஸ்டாலினே கிரீஸ், பிரிட்டிஷ் மண்டலத்திற்குள் இருக்குமாறு சர்ச்சிலுடன் செய்த ஒப்பந்தத்தைக் கைவிடாதிருந்தார்.) அவர் ஆங்கிலோ—அமெரிக்க வேண்டுகோள்களுக்குத் தலைசாய்ப்பதுபோல் நடந்துகொண்டே யால்டாவில் பெரு வெற்றிகள் பெற்றார். அதன் பின் உடனேயே கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் அதிகாரத்தை வல்லந்தவாகச் செலுத்தத் தலைப்பட்டார்.

1945, பிப்ரவரி 27ஆம் நாள் பிரிட்டிஷ் கீழ்ச்சபையில் பேசுங்கால், 'சோவியத் தலைவர்கள் மேலை ஜனநாயகங்களுடன் கௌரவ நட்புடனும் சமத்துவத்துடனும் வாழ விரும்புகிறார்கள். அவர்கள்

சொல்லே அவர்கள் கட்டுப்பாடாகும்' என்று சர்ச்சில் கூறினார். அதே இரவு புகாரெஸ்ட்டில் விஷின்ஸ்கி, தலைமையமைச்சர் ராடெஸ்க்யூவைப் பதவியிலிருந்து நீக்கிவிடுமாறு மைக்கேல் மன்னரை வற்புறுத்தினார். நான்கு நாட்களுக்குப் பின் அமெரிக்கக் காங்கிரஸிற்குச் செய்தியனுப்புங்கால், 'யால்டாவில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கிணங்க முன்னைவிட அரசியலில் கிழக்கு ஐரோப்பா ஸ்திரமாக இருக்கும் என்று இறுதியாக நினைக்கிறேன்' என்று ரூஸ்வெல்ட் கூறினார். ஆனால், அதே இரவு ருமேனிய கம்யூனிஸ்ட்டுகள் தலைவரான பெட்ரூ குரோசை மைக்கேல் மன்னர் தலைமையமைச்சராக நியமிக்குமாறு விஷின்ஸ்கி செய்துவிட்டார்.

இதே மோசடியும் வல்லிணப்பும் போலந்து, அங்கேரி, யூகோஸ்லேவியா, அல்பேனியா, பல்கேரியா, செக்கோசுலோவாக்கியா, கிழக்கு செர்மனி ஆகிய நாடுகளிலும் ஏற்பட்டது. ரூஸ்வெல்ட் தான் இறப்பதற்குச் (1945, ஏப்ரல் 12) சற்று முன்னர், ஸ்டாலினுடனும், இரண்டாம் உலகமகா யுத்தத்தில் ஆங்கிலோ-அமெரிக்கச் சூழ்ச்சியால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாதாயிருக்கலாம் என்பதை நன்கு அறிந்திருந்த சர்ச்சிலுடனும் கடுமையான சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார். மேலை வல்லரசுகள், கிழக்கு ஐரோப்பா, பால்கன்ஸ் ஆகியவைபற்றித் தாங்கள் கவலை கொள்ளப்போவதில்லை என்பதை மியூனிச்சில் முதலில் தெரியப்படுத்திவிட்டு, ஓராண்டிற்குப் பின்னர் இதே பிராந்தியத்தில் ஆதிக்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகப் போரில் இறங்கின. அவைகள் இப்போது இங்குப் பரவியிருந்த கம்யூனிசத்தை எதிர்நோக்க வேண்டியனவாயின. கெடுபிடிப் போர். 1945-க்குப் பின்னரும் இராட்சச வல்லரசுகள் உலகைத் தத்தம் குடைக்கீழ்க் கொண்டுவர முயற்சிபுரிந்தன. 'இப் போர்' போரில் கலந்து கொண்டோர், பார்ப் போர் ஆகியோருடைய உள்ளத்தில் கிரெம்லின் உலகை வெல்ல முடிவு கட்டியுள்ளது என்பதையும், அமெரிக்காவோ அவ்வெண்ணம் நிறைவேறுதபடி தடுக்க முயலுகிறது என்பதையும், சோவியத் அதிகாரம் பரவுதலைத் 'தடுத்து நிறுத்த' வேண்டுமென்றும், முடிந்தால் மஸ்கோவியக் கோட்டையைத் தகர்த்து அதில் அடைபட்டிருக்கும் மக்களை விடுவித்துவிடலாம் என்ற நோக்கம் கொண்டிருப்பதையும் உணர்த்திற்று. நினைத்ததற்கும் நடந்ததற்கும் சற்றுத் தொடர்பு இருக்கத்தான் செய்தது என்பதை அமெரிக்கரும் ரஷ்யரும் பேசிக்கொண்ட முறையிலிருந்தும் நடந்துகொண்ட விதத்திலிருந்தும் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம். அதையே கீழே குறிப்பிடப்போகிறோம். கிழக்கு ஐரோப்பாமீதும் பால்கன்ஸ் மீதும் யார் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதே முதலில் எழுந்த பிரச்சினையாகும். இந் நாடுகளில் 'ஜனநாயகம்' ஏற்படுவதற்கு ரஷ்யா இணங்கிவிட்டால் அவை சோவியத் ஆதிக்கத்தின்கீழ் வரமாட்டா என்று வாஷிங்டனும் லண்டனும் 1944-45-ல் நினைத்தன

SOVIET IMPERIALISM
1944-1948
SCALE OF MILES
0 100 200 300
The Front, Jan 12, 1945
Soviet Republics
Soviet Allies
Soviet Occupation Zones
NATO Members
Petsamo
KARELO FINNISH SSR
Vipuri
Helsinki
Leningrad
NORWAY
Oslo
Stockholm
SWEDEN
Tallin
EST S.S.R.
R.S.F.S.R.
LATVIAN S.S.R.
Riga
MOSCOW
Bornholm
Kaliningrad
LITH S.S.R.
Kaunas
Minsk
Stettin
Berlin
BYELORUSSIAN S.S.R.
Warsaw
POLAND
Prague
Kiev
CZECHO-SLOVAKIA
UKRAINIAN S.S.R.
Munich
Vienna
AUSTRIA
Budapest
HUNGARY
MOLDAVIAN S.S.R.
Odessa
Trieste
RUMANIA
SOVIET ALLY, 1945
BREAK WITH MOSCOW
JUNE 1948
Belgrade
Bucharest
JUGOSLAVIA
US PROTECTORATES UNDER TRUMAN DOCTRINE MARCH 1947
Sofia
BULGARIA
TURKEY
Istanbul
Naples
GREECE

மாஸ்கோவோ கம்யூனிசமே உண்மையான ஜனநாயகம் என்ற கருத்தில் அந் நாடுகளைச் சோவியத் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தது. அவற்றைத் (படைத்) தளமாகக்கொண்டு ஐரோப்பாவையே தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரும் நோக்கத்தில் கிரெம்லின் இம் முடிவிற்கு வந்திருக்காது என்பது உறுதி. (ஆனால், கம்யூனிச விளம் பரமும் நடத்தையும் இச் சந்தேகத்தை உறுதிப்படுத்தின.) மாறாக, மேலை நாடுகட்கு எதிராக ஒரு பாதுகாப்பு அரங்கை நிலைநாட்டுவதற் காகவே இம் முடிவிற்கு வந்திருக்கலாம். மேலை நாடுகள் மட்டும் சோவியத் உட்கருத்துகள்—அடிப்படை நோக்கங்கள்மீது அவ நம்பிக்கை கொண்டிருக்காவிடில் அவைகள் கிழக்கு ஐரோப்பாவில் இறுதியில் சோவியத் ஆதிக்கம் பரவுவதற்கு ஒப்புக்கொண்டிருக்க வேண்டி வந்திருக்கும். ஆனால், மேலைக்கொள்கை வகுப்பாளர்கள் தக்க தருணத்தில் விழித்துக்கொண்டார்கள். ஐரோப்பா முழுவதை யும் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர கிரெம்லின் திட்டம் போட் டிருப்பதை நன்கு புரிந்துகொண்ட அவர்கள் அதற்கு இசைய வில்லை.

அடுத்து மூண்ட சண்டையில் சோவியத் ஆட்சியாளர்க்கும் அவர்கள் எதிர்க்கும் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி ஏற்பட்டன. 1948-ல் (ரஷ்யா) யூகோஸ்லேவியாவை இழக்க நேரிட்டது. வலிமை அரசியலில் மேலை நாடுகள் காட்டிய திறமையால் இந்நாட்டை ரஷ்யா இழக்கவில்லை. ஆனால், தன் ஏனைய மண்டல நாடுகளைப்போல் இங்கும் சோவியத் யூனியன் தன் கொள்கைக்கு முழு ஆதரவு கிடைக்க முயற்சிபுரிந்தது. இங்குப் பதவியிலிருந்த தேசிய கம்யூனிஸ்ட் ஆட்சியைத் தனக்கு அடிமைப்படுத்த நினைத்தது. ஆனால், அதற்கு அவ்வாட்சி இடந்தரவில்லை. மாறாக, அது கிரெம்லினை எதிர்க்கப் புறப்பட்டது. எனவே, சோவியத் எண்ணம் நிறைவேறவில்லை. இதுவே யூகோசுலேவிய இழப்பிற்கு அடிப்படைக் காரணம் எனலாம். யூகோசுலேவியாவை இழந்த பின் கிரீசைக் கம்யூனிச மயமாக்கும் நம்பிக்கை சிதறிப்போயிற்று. ஆனால், (அதுவரை) அல்பேனியா சோவியத் மண்டலத்திற்குள்தான் இருந்தது. மேலை நாடுகள் ராஜ தந்திர அறைகூவல்மூலமாயும், விளம்பரம்வாயிலாயும் மற்ற (சோவியத்) எல்லைப்புற நாடுகளைக் கம்யூனிசத்தின் கோரப் பிடியி லிருந்து விடுதலை செய்ய முயன்றன. அது பலிக்கவில்லை. சோவியத் யூனியன் அவற்றின்மீது தன் அதிகாரத்தைச் செலுத்தியே வந்தது. ஸ்வீடன் 'நடுநிலைமையில்' நின்றுகொண்டது. ஸ்வீடிஷ் 'நடுநிலைமையைப்' பேணிக் காக்கும் பொருட்டு பின்லாந்து 'மக்கள் ஜனநாயகத்தை' விரும்பவில்லை. செர்மனியும் ஆஸ்திரியாவும் பிளவுண்டு நின்றன. யூகோசுலேவியா, கிரீஸ், துருக்கி, இரான் ஆகிய நாடுகளும் மேற்கு ஐரோப்பா முழுதும் அமெரிக்க முகாமில் சேர்ந்துவிட்டன. எனினும், அரபு நாடுகளில் அமெரிக்கச் செல்வாக்கு

அவ்வளவு நிலையாய் இல்லை. இந்தியா, பர்மா, இந்தோனீசியா ஆகிய நாடுகளிலோ அதுதானுமில்லை. தென்கிழக்கு ஆசியாவிலும் தூரக்கிழக்கிலும் அமெரிக்கச் செல்வாக்கால் ஏற்படும் பயன் சந்தேக மாயிருந்தது.

மனித குலமே இறுதியில் கம்யூனிசத்தைக் கடைப்பிடிப்பது தவிர்க்கொணாதது என்றும், அதற்கு ஆவன செய்வது தங்கள் கடமையென்றும் கிரெம்லின் ஆட்சியாளர் உறுதி பூண்டிருந்தனர். அவர்கள் கொள்கைப் பிடிவாதமே இதற்குக் காரணம். எனினும், (இக் குறிக்கோளை எய்துவதற்கான) ஒரு குறிப்பிட்ட 'கால அட்டவணை' அவர்களிடமில்லை. அன்றியும், அவர்களை மனநோய் பிடித்தவர்கள் என்றோ, அன்றிப், புதிதாக உருவாக்கப்பட்ட சமூக முறைக்குப் பலியானவர்களென்றோ சொல்வதற்கில்லை. எனவே, போர் செய்து பிறநாட்டைக் கைப்பற்றுவதையன்றி இத் தலைவர்களுக்கு எதிரே வேறு வழியொன்றும் புலப்படவில்லை. அமெரிக்கா தன் உலகப் பொறுப்பு களைப் பொறுத்தமட்டும் தாறுமாறாக நடந்து பெருங் குழப்பத்தை உண்டாக்கும் என்றும், ஆதரவின்றித் தவிக்குமென்றும், உள் நாட்டிலும் ஊக்கமின்றிச் சோர்ந்துபோகும் என்றும் இத் தலைவர்கள் நம்பிக்கை பூண்டிருந்தார்கள்; அல்லது அமெரிக்கா ரஷ்யாவுடனோ, அன்றி சீனாவுடனோ, அன்றி இரண்டிற்கும் எதிராகவோ 'தற்காப்புப் போரில்' இறங்கினாலும் இறங்கலாமென்று நினைத்தனர். நடக்கப் போவது என்ன என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். அமெரிக்காவின் சினத்தை மூட்டி, அதை அவமானப்படுத்த விரும்பினர். அதை மார்க்சீயலாந்தைச் சுற்றிலும் வலுச்சண்டைக்கு இழுத்து, அதன் வளங்களையும் வலிமை யையும் அழிக்க எண்ணினர். அந் நாட்டுத் தலைவர்களையும் மக்களையும் கம்யூனிச எதிர்ப்புப் பித்துப் பிடித்து அலையவைக்க நினைத்தனர். இறுதியில் கம்யூனிசப் பேரரசு தோற்றுவித்திருக்கும் ராட்சசப் பேயை எதிர்க்க அமெரிக்கா உறுதியுடன் செயலில் ஈடு படுங்கால் ஏற்படும் நீண்ட போராட்டத்தில் அது தன் வலிமையை இழந்து தவிக்க நேரிடும் என்றும், அச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் திட்டம் தீட்டினர். சுருங்கச் சொல்லின், இந் நூற்றாண்டு நடுவில் மாஸ்கோவின் போக்கு இதுவே என்று துணிந்து கூறலாம்.

ஸ்டாலின் முதல் குருசேவ் வரை: சோவியத் யூனியனின் (இவ்) வெளிநாட்டுக் கொள்கையில் 1953-க்குப் பின்னர் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டன. ஒருபுறம் உலக அரங்கில் ஏற்பட்ட மாறுதல்களாலும், மற்றொருபுறம் உள்நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களாலும் ஏற்பட்ட புதிய நம்பிக்கைகள், அச்சங்கள், ஆசைகள், வாய்ப்புகளே இதற்குக் காரணம். புதிய தலைவர்கள்

உள்நாட்டு அரசியல் ஆட்டத்தில் பங்குகொள்ளப் புறப்பட்டனர். சோவியத் அரசியல் சூழ்ச்சிப் போக்கைப்பற்றி இவ்வத்தியாய இறுதியில் பார்ப்போம். ஒரு நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் பிரிக்க முடியாதவை. இது மக்களாட்சிகளுக்கும் சர்வாதிகார ஆட்சிகளுக்கும் நன்கு பொருந்தும். சோவியத் ஆட்சி தோன்றி 4ஆவது பத்தாண்டுத் தொகுதியின் இறுதியில் சோவியத் யூனியனில் உள்நாட்டு விவகாரங்களில் ஏற்பட்ட பெரிய மாறுதல்களை இங்குக் குறிப்பிடுவோம்.[1]

1953 சனவரித் திங்கள் நடுவில் சோவியத் பத்திரிகை புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விளக்கமில்லார் கொடிய சதித்திட்டம் ஒன்றைப் பிரசுரித்தது. அதில், பெரும்பாலும் யூதர் இனத்தைச் சேர்ந்த கிரெம்லின் மருத்துவர் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் 'ஏகாதிபத்திய தாகம் வாய்ந்த யூத உளவுக்காரர்களுடன்' (spies) சேர்ந்து கொண்டு இச் சதியில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது. அவர்கள் ஸ்கெர்பாக்கோவ் (1945), ஷத்னேவ் (1948) ஆகிய இருவரின் உடல் நோய்களை வேண்டுமென்றே தவருக ஆராய்ச்சி செய்து, இல்லாத நோய்க்கு மருந்துகளைக் கொடுத்து, அவர்கள் உயிருக்கு உலைவைத்தார்களாம். மேலும், அவர்கள் உயர் இராணுவ அதிகாரிகளையும் சதியால் கொன்றதாகவும் சொல்லப்பட்டது. எனவே, செமெடிச (யூத) எதிர்ப்புக் கொள்கை (Anti-semitism) சோவியத் பத்திரிகையின் ஒரே நோக்கமாக இருந்ததில் ஆச்சரியம் இல்லை அல்லவா ? தெல் அவீவிலிருந்த சோவியத் தூதரகத்தை (legation) பயங்கரவாதிகள் (terrorists) தாக்கியதும், மாஸ்கோ (பெப். 12) இஸ்ரேலுடன் தான் கொண்டிருந்த தூதியல் உறவைத் துண்டித்துக் கொண்டுவிட்டது.

தீக்கனுக்களுக்கும்கூட ஒரு முடிவு இருக்கத்தான் செய்கிறது. மார்ச்சு 4ஆம் நாள் கம்யூனிஸ்ட்டு கட்சியின் மத்திய கமிட்டியும் அமைச்சவையும் (Council of Ministers) சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டன. அதில் மார்ச்சு 1-2 ஆம் நாள் இரவு ஸ்டாலினுக்கு அவரை வாட்டிவந்த நோயின் மற்றொரு கடுமையான தாக்குதல் ஏற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. அடுத்து வெளியான மருத்துவ அறிக்கையில் (medical bulletin) ஸ்டாலின் 1953ஆம் ஆண்டு மார்ச்சு 5ஆம் நாள் காலை 9-50 மணிக்கு இறந்துவிட்டாக வெளியிடப்பட்டது. அரச இறுதிச் சடங்கில் (State funeral) மெலென்கோவ், மொலெட்டோவ், பெரியா ஆகியோர் ஸ்டாலினுக்குப்

[1] இதைப்பற்றிய முழு விவரங்களுக்கு இத்தலைப்பு முடிவில் கொடுக்கப்பட்டிருக்கும் நூல்களைப் படிக்கவும். மற்றும், இதே ஆசிரியர் கீபங்க், வரக்னரின் புதிய சர்வதேச நூலில் 'யு. எஸ். எஸ். ஆர்.' என்ற தலைப்பில் எழுதியிருக்கும் கட்டுரையையும், '1917-க்குப் பின்னர் ரஷ்யா : 40 ஆண்டு சோவியத் அரசியல்' என்ற கட்டுரையையும் பார்க்கவும். இதன் பகுதிகளில் சில இந் நூலில அடுத்துவரும் பக்கங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

புகழ்மாலை சூட்டினர். ஒரு ஜியார்ஜிய சக்கிலியன் மகன், திபுவிஸிலி சமய சித்தாந்தம் பயின்ற மாணவன், தொழில் புரட்சிவாதி, 30 ஆண்டுகள் ரஷ்யாவை ஆண்டுவந்த மார்க்சீய சர்வாதிகாரி ஜோசப் விசாரியோனேவிச் ஜுகாஷிவிலி எனப்படும் ஸ்டாலின் தம் எழுபத்து நான்காம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

1953, மார்ச்சு 6 ஆம் நாள் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியும், அமைச்சரவையும், சுப்ரீம் சோவியத்தின் பிரெசிடியமும் கூட்டாக 51 வயதான ஜார்ஜி மாக்ஸ்மில்லியனேவிச் மெலென்கோவைத் தலைமையமைச்சராகவும், பெரியா, மொலெட்டோவ், புல்கானின், ககனேவிச் ஆகியோரை உப தலைமையமைச்சர்களாகவும் (Vice Premiers) நியமித்தன. கட்சி பிரசிடியத்தின் (பொலிட் பீரோவின்) உறுப்பினர் எண்ணிக்கை 25-லிருந்து 10-க்குக் குறைக்கப் பட்டது. 'ஐக்கியம்,' 'அமைதி', 'விழிப்பு', 'சிவில் சுதந்திர உரிமைகள்', 'சமாதானம்', 'கூட்டுத் தலைமை', 'மனித வழிபாட்டு ஒழிப்பு' (Hero-worship). இச் சுலோகங்கள் எண்டிசையும் முழங்கின. மெலென்கோவ் கட்சி மத்திய கமிட்டியின் செயலாளர் (secretary) பதவியிலிருந்து விலகினார். அவ்விடத்தில் நிக்கீட்டா எஸ். குரூச்சேவ் நியமிக்கப்பட்டார். அரசாங்கம் பொதுக் குற்ற மன்னிப்புச் (amnesty) செய்தது. அதன் விளைவாக அநேக கைதிகள் (prisoners) சிறைகளிலிருந்தும், உழைப்புக் கூடாரங் களினின்றும் விடுதலை செய்யப்பட்டனர். 'யூத மருத்துவர்களும்' விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள்மீது சுமத்தப்பட்டிருந்த 'சதிக்' குற்றச்சாட்டு பொய்யென்று நிராகரிக்கப்பட்டது.

பிரமாண்டமான தொழில்மயம், நகர்ப்புற மயம், கல்வி, (education) ஆகியவற்றின் உதவியால் புதிய 'கூட்டுத் தலைவர் களில்' பெரும்பாலோர் ஸ்டாலின் மறைவால் தங்களுக்குத் தக்கதோர் வாய்ப்புக் கிட்டியிருப்பதாக நினைத்தார்கள். அதை ஓர் இன்றி யமையாத வாய்ப்பாகவும் கருதினார்கள். சட்டச் சீர்திருத்தங்கள், அதிகாரப் பங்கீடு (decentralisation) ஆகிய நடவடிக்கைகளை மேற் கொண்டு, இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி, அதன்மூலம் ஸ்டாலின் நிறுவிய போலீஸ் (காவல்) அரசாங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டுப் புதிய, தாராளநோக்குடைய, மனிதத்தன்மை வாய்ந்த அதிகார முறையை அமைக்க விரும்பினர். இதுவே அவர்கள் இலட்சியம். அதை அடைவதற்காக அநேக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால், அவை பல கடுமையும் குழப்பமும் நிறைந்த பிரச்சினைகளை உள்நாட்டு அரங்கிலும் வெளிநாட்டு அரங்கிலும் தோற்றுவித்தன. குறிக்கோளை யடையக் கடந்துசெல்ல வேண்டிய வழி கரடுமுரடாக இருந்தது. வழியில் பல முட்டுக்கட்டை களைத் தாண்டிச் செல்லவேண்டியிருந்தது. பொதுவாக, உயிரற்றுப் போன நடைமுறை நிலைமையை உயிருடன் பிறக்கத் தத்தளிக்கும்

நடைமுறை நிலைமைக்கு மாற்றுங்கால் இதைப் போன்ற பிரச்சினைகள் குறுக்கிடுவது சகஜமே. ஸ்டாலின் தனக்குப் பின்னால் தோன்றும் தலைவர்களுக்கு விட்டுச் சென்ற யூ. எஸ். எஸ். ஆரிலுள்ள பெரும் பாலான உழைப்பாளிகள், கூட்டு விவசாயிகள், போர்வீரர்கள், அறிவாளிகள், மற்றும் புதிய நிர்வாகத் திறமை பெற்ற நடுத்தர வகுப்பினர் ஆகியோர், ஸ்டாலின் விட்டுச் சென்றவற்றில் தீயவற்றை அடியோடு அகற்றுவதற்காகப் புதிய தலைமை மேற் கொண்ட நடவடிக்கைகளை மனமார வரவேற்றனர். இதைச் சில அதிகாரவர்க்கத்தினரும் கட்சி உறுப்பினரும் எதிர்த்தனர். அப்போது ஏற்பட்ட போராட்டத்தில் (புதிய தலைமைக்கு) எதிர்ப்புத் தெரிவித் தவர்கள் அடியோடு ஒழிக்கப்பட்டார்கள். ஸ்டாலின் கொள்கையை எதிர்த்த புதிய 'தாராளவாதிகள்' வாகைசூடிப் பீடுநடை போட்டனர்.

கோடையில் நிலவிய அமைதி வெகுவிரைவில் குலைந்தது. பெரியா தன் எம். வி. டி. (MVD) எனப்படும் 'அரசியல் காவல் (போலிசுப்) படையைக்' 'கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் மேலான தாய்ப் பாராட்டி' வருகிறார் என்றும், 'சர்வதேச ஏகாதிபத்தியக் கையாளாக' ஆக்கிவிட்டார் என்றும் 1953, ஜூலை 10 அன்று அறிவிக்கப்பட்டது. அதன்பின் கேட்கவா வேண்டும்? அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஜூன் 26ஆம் நாள் 'மக்களின் எதிரி' என்பதற்காகச் சிறை செய்யப்பட்டார். இராஜதுரோகக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டார். ஸ்டாலின் முறையில் இராணுவ நீதிமன்றம் இரகசிய விசாரணை செய்தது. பெரியாவும் அவரது உடந்தையாட்களும் (accomplices) 1953 டிசம்பரில் தூக்கில் இடப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. எம். வி. டி. 'சோசியலிச சட்டத்தின்' செல்லுபடியாகும் தன்மை (legality), 'சட்ட ஆட்சி' (rule of law) என்ற பெயரில் தாழ்த்தப்பட்டது. அன்றியும், காவலில் வைக்கவும், சிறை செய்யவும், 'அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்வோரைத்' (subversives) தூக்கிலிடவும் வரம்பற்ற அதிகாரம் பெற்றிருந்த இத் தாபனம் (எம். வி. டி.) அவ்வதிகாரம் முழுவதையும் இழந்தது. பெரியாவின் மறைவிற்குப் பின்னர் மற்றவைகளில் சிலர் பதவியிறக்கம் செய்யப்பட்டுச் சிறைவைக்கப்பட்டு, விசாரணைக் குப்பின் இறுதியில் தூக்கிலிடப்பட்டார்கள். இயல்புக்கு மாறுன இச் சூழலில் இதுகாறும் சோவியத் அரசியல் முறையில் 'நாட் டிற்குள் நாடாக' விளங்கிவந்ததும், நெடுநாள் சர்வாதிகார ஆட்சியின் கொடிய கருவியாக விளங்கிவந்ததுமான எம். வி. டி. இப்போது அப் பணியைப் பெரிதும் இழக்க நேரிட்டது.

ஸ்டாலினுக்குப் பின் தோன்றிய தலைவர்கள் எதிர்நோக்கிய மற்ற அதிகார, கொள்கைப் பிரச்சினைகள் இதைவிட அதிகக் குழப்பம் வாய்ந்தவையாக இருந்தன. அவற்றைச் சுருக்கமாக

ஆராய்தல் என்பது இயலாக் காரியமாகும். ஏனெனில், அவை உள்நாடடு, வெளிநாட்டு விவகாரங்களில் வெவ்வேருன போக்கைக் கடைப்பிடிப்பதால், சோவியத் ஆட்சியாளர்க்கு ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களைப்பற்றி அமைந்திருந்தன. சோவியத் பொருளாதாரத் திட்டம் உடன்துய்புக்குரிய பண்டங்களுக்கு (consumer's goods) முக்கியத்துவம் அளிக்குமா அல்லது தொழில்மயமாக்கலில் ஆர்வம் செலுத்துமா என்ற பிரச்சினைபற்றி மேலை நாட்டுப் பத்திரிகைகள் பெரிதாக வாதித்தன. ஆனபோதிலும், 1955-ல் சோவியத் அதி காரபீடத்தில் ஏற்பட்ட மாற்றம், மேலைநாடுகள் செர்மன் படைப் பெருக்கத்தை இறுதியாக உறுதிப்படுத்திவிட்டதன் எதிரொலி என்றே கருதவேண்டும். இப் புதுச் சூழலில் கம்யூனிஸ்ட்டு கட்சிக்கும் படைக்கும் இடையே நெருங்கிய உறவு (liaison) ஏற்படுவது அவசியம் என்றும், தூதியல் துறையில் பணிபுரியும் தூதர்களுக்குப் (professional diplomats) பதிலாக நாட்டின் உயர் தலைவர்கள் அரசியல் தந்திரத் தாக்குதலில் ஈடுபடுதல் முக்கியம் என்றும் சோவியத் கொள்கை வகுப்பாளர்கள் முடிவு கட்டினர்கள். விவசாயத்தின் அதிருப்தியளிக்கும் நிலையைச் சமாளிப்பதற்குப் போதுமான அனுபவமும் பொறுப்பும் தம்மிடம் இல்லையென்று கூறி, மெலென்கோவ் 1955, பிப்ரவரி 8ஆம் நாள் தலைமையமைச்சர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அந்த இடத்தில் மார்ஷல் நிக்கோலாய் ஏ. புல்கானின் நியமிக்கப்பட்டார். மெலென்கோவ் உபதலைமையமைச்சராகவும் மின்விசை நிலையங்கள் (Electric Power Stations) அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். ஷுக்கோ பாதுகாப்பு மந்திரி (Defence Minister) ஆனர்.

குரூச்சேவ் கம்யூனிஸ்ட்டுகளின் புதுத் தலைவராகத் தோன்றினர். தனக்குச் சொந்தமாக எந்த அதிகாரமும் விரும்பவில்லை யென்றும், 'கூட்டுத் தலைமையையே' விரும்புவதாகவும் அவர் கூறினர். கம்யூனிஸ்ட்டு கட்சியின் 20ஆவது காங்கிரஸ் கிரெம்லின் அரண் மனையின் செயின்ட் ஆண்டுரூஸ் ஹாலில் (1966, பிப்ரவரி 14-25) கூடியது. அதில் 1,355 பேர் 7,215,505 கட்சி உறுப்பினர்களின் பிரதிநிதியாக வீற்றிருந்தார்கள். 'ஆட்சியைப் பலமுகப் படுத்துவது' குறித்தும், 'சமாதான சகவாழ்வு' பற்றியும் பெரும்பாலோர் பேசினர். ஆனல், மேலை ஜனநாயகத்தில் வாழ்ப வர்களுக்கு அக் கூட்டத்தில் சுதந்திரவாதத்திற்கோ, அன்றி முக்கிய மான முடிவுகள் எடுப்பதற்கோ சிறிதுகூட இடமிருந்திருக்காது என்றுதான் தோன்றும். அக் கூட்டத்தில் அன்றுவரை யூ. எஸ்.எஸ். ஆரில் வெளியிடப்படாத, ஆனல், கட்சித் தலைவர்கள் தத்தம் ஊர்களில் ஏராளமான மக்களுக்கு ஆயிரக்கணக்கான கூட்டங்களில் தெரியப்படுத்திய ஸ்டாலின் செய்த குற்றங்களை வன்மையாகக் கண்டித்துக் குருச்சேவ் பேசினர். அத்துடன் காங்கிரசும்

முடிவுற்றது. ஸ்டாலின் இழைத்த குற்றங்களை வெளிப்படுத்தியதன் உட்கருத்து யாதெனில், நெடுநாள் கடைப்பிடிக்கப்பட்டுவந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தவறின்மைக் கொள்கையைக் கட்சியும் பொதுமக்களும் தவறு என்று நினைத்துத் தள்ளிவிட்டு, கொள்கை வகுப்பதில் பெரும்பாலான மக்கள் பங்குகொள்வதற்குத் துணை செய்யத்தக்க புதுப்புதுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வைக்குமாறு செய்வதுதான். திறனுய்தல், தன்—திறனுய்தல், தொடங்கும் சக்தி ஆகிய புதுப் பழக்கவழக்கங்களைக் கட்சியும் மக்களும் கடைப்பிடிக்க விரும்பினர் குரூச்சேவ். இதைக் கேட்டு மக்கள் திடுக் கிட்டுப்போயினர். நெடுநாள் சர்வாதிகாரக் கொடுங்கோன்மையிலே வாழ்ந்துவந்த தலைமுறைக்கு, ஆளும் வெகு சிலரின் முடிவுகளைத் தட்டாது தலைசாய்த்துவந்த மக்களுக்கு இவ்வரசியல் பழக்கம், போக்குகள் ஆகியவற்றை முற்றிலும் மாற்றியமைப்பது கடினமா யிருந்தது. வெகுசிலரே தங்கள் அரசியல் பழக்கத்தைப் புதிய சூழலுக்கேற்ப மாற்றிக்கொள்ள முன்வந்தார்கள். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஜனநாயகத்தைச் சர்வாதிகாரமாக மாற்றுவது எளிது; ஆனால், சர்வாதிகாரத்தை ஜனநாயகமாக்குவது கடினம்.

இந் நூற்றாண்டின் 5ஆம் பத்தாண்டுத் தொகுதி இறுதியில் குரூச்சேவும் அவருடைய ஆதரவாளரும் உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை இதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந் தார்கள். சர்வாதிகாரக் கட்டுப்பாடுகள் வரவரத் தளர்த்தப்பட்டன. மக்களுக்குப் பேச்சுரிமை (freedom of expression) கொஞ்சம் அளிக்கப்பட்டது. ஸ்டாலின் யுகத்திற்குப் பின்னர் ஏற்பட்ட 'எழுச்சி' நிலையை இந்நடவடிக்கைகள் வலியுறுத்தின. எனினும், இரு அல்லது பன்முகக் கட்சி அரசியல் முறையைப் (two or multi-party system) பற்றிக் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் அதுவரை கருதவேயில்லை. ஆனால், அவர்கள் (கம்யூனிஸ்ட்) கட்சி அதிகார ஏணியை (hierarchy) ஜனநாயக மயமாக்கியும், யூ. எஸ். எஸ். ஆர். முழுவதும் பரவியிருந்த அதிகார வர்க்கத்தில் ஆட்சியாளர்க்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையேயுள்ள தொடர்புகளை மனிதத் தன்மையுடையனவாகச் செய்தும் இதுகாறும் நிலவிவந்த 'காவல் அரசை' 'முன்னேற்றப் பாதையில் (தாராளப் பாதையில்)' செலுத்த முயன்றனர். 1957-ல், அதாவது, சோவியத் ஆட்சி தனது ஐந்தாவது பத்தாண்டுத் தொகுதியில் காலெடுத்து வைக்குங்கால், இம் முயற்சியின் பொதுத்துறை விளைவுகள் வெளியாக வில்லை. ஆனால், கம்யூனிஸ்ட் ஆட்சியின் நாற்பதாவது ஆண்டில் (நாட்டின்) தலைமையில் ஏற்பட்ட மாறுதல்கள் இந் நடவடிக்கை களால் ஏற்பட்ட அதிகாரபூர்வமான விளைவுகளைப் (official results) பிரதிபலித்தன.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் நாள் டிட்டோ மாஸ்கோவுக்கு விஜயம் செய்தார். அதே நாள் வெளியுறவு அமைச்சராகப் பணியாற்றிய தேர்ச்சிபெற்ற மொலொட்டோவ் அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவ்விடத்தில் 'பிராவ்தா' பத்திரிகையின் ஆசிரியரான திமித்ரி ஷெப்பிலோவ் நியமிக்கப் பட்டார். அவரும் அப் பதவியில் நெடுநாள் இருக்க முடியவில்லை. 1957, பிப்ரவரி 15ஆம் நாள் நெடுநாள் சோவியத் தூதராகத் தேர்ச்சி பெற்றிருந்த ஆண்ட்ரீ குரோமிகோ வெளியுறவு அமைச்ச ராஞர். 1957 ஆம் ஆண்டு வசந்தத்தில், குரூச்சேவ் தொழில்துறை நிர்வாகத்தைப் (industrial management) பன்முகப்படுத்துவதில் ஈடுபட்டார். மாஸ்கோவிலிருந்த தொழில் அமைச்சுகள் (industrial Ministries) 90 வேறு வட்டாரங்களுக்கு மாற்றப்பட்டன. அவற்றோடு நின்றுவிடாது அவர் அமெரிக்காவில் துய்ப்போர் ஒவ்வொருவருக்கும் தலா ரீதியில் (per capita) இறைச்சியும் பால்பண்ணைப் பண்டங் களும் (dairy products) கிடைப்பதைப்போல் சோவியத் துய்ப்பாள ருக்கும் அளிக்கத்தக்க ஒரு பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வந்தார். கூட்டு விவசாயிகள் தத்தம் வீட்டுக் கொல்லைத் தோட்டத்தில் விளைந்த பொருள்களைக் கட்டாயமாக அரசுக்கு அளித்துவந்த முறைக்கும் அத் திட்டம் முற்றுப்புள்ளி வைக்க முயன்றது. குரூச்சேவின் கூட்டாளி இக் கொள்கைக் கட்டளை களைச் (policy directives) சற்றும் விரும்பவில்லை. அவை தீங்கை விளைக்குமென்று கருதி அவர்கள் எதிர்த்தார்கள்.

சோவியத் தலைவர்களுக்கு இடையே நிலவிவந்த கொள்கை முரண்பாடு 1957, ஜூலை 4ஆம் நாள் கொந்தளித்தது. குரூச்சேவின் கொள்கையைந் தாக்கியவர்கள் அவரைப் பதவியிலிருந்தே நீக்க முயன்றனர். ஜூன் மாத இறுதியில் கட்சி பிரசிடியத்திலும் அவர்கள் நிலைக்கே (stand)—கொள்கைக்கே பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது. ஆனால், குரூச்சேவ் இப் பிரச்சினையைக் கட்சி மத்திய கமிட்டியே நிர்ணயிக்கவேண்டுமென்று ஒருதலைக்கு நின்றார். அதன் பேரில் மத்திய கமிட்டியின் முடிவுக்கு இச் சிக்கல் விடப் பட்டது. அங்கு குரூச்சேவ் 'கொள்கை'க்கே முழு ஆதரவு கிடைத்தது. பின்னர் கேட்கவா வேண்டும் ? மொலொட்டோவ், மெலென்கோவ், ககனோவிச், ஷெப்பிலோவ் ஆகியோர் 'கட்சிக்கு எதிரான' செயல்களில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட் டார்கள். அன்றியும், பிரசிடியத்தைவிட்டும், கட்சி மத்தியக் கமிட்டியை விட்டும் நீக்கப்பட்டார்கள். அரசாங்கப் பதவிகளைவிட்டும் அகற்றப் பட்டார்கள். இறுதியில் 1930—40-ல் ஸ்டாலின் ஈடுபட்டிருந்த கட்சித் தூய்மையில் நேரடிப் பங்கு பெற்றிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். அதுவும் போதாதென்று, 1949-ல் வொஸ்னி சென்ஸ்கியை முதலில் கொள்கை முரண்பாட்டுக்குற்றஞ்சாட்டி

இறுதியில் தூக்கிலிடக் காரணமாயிருந்த 'லெனின்கிரேடு வழக்கிலும்' (case) இவர்கள் ஈடுபட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். ஜூலை 5ஆம் நாள் பெர்வுக்கின், சபுரோவ் இருவரும் முதல் துணைத் தலைமையமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்கள். பின்னர் கட்சிப் பிரசிடியத்தை விட்டே நீக்கப்பட்டார்கள்.[2]

பொதுக்கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் இவர்கள்மீது பயங்கரக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. ஆனபோதிலும், ஸ்டாலின் ஆட்சியில் பெயர்போன கட்சி வேறுபாடுடையவர்களுக்குக் கிட்டிய தண்டனை இவர்களுக்கு விதிக்கப்படவில்லை. கட்சி வேறுபாடுடையவர்கள் (ஸ்டாலின் காலத்தில்) முதலில் கட்சியிலிருந்து விலக்கப்பட்டுச் சிறைசெய்யப்பட்டு, 'பாவமன்னிப்புக்' கோருவதற்கு வாய்ப்பு சிலவேளை அளித்தும் சிலவேளை அளிக்காமலும் விசாரணை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டனர். இதற்கு நேர்மாறாக, குரூச்சேவ் ஆட்சியில் மெலென்கோவ் கஸாக் குடியரசில் உஸ்ட் காமினேகோர்ஸ்க் என்னுமிடத்திலுள்ள நீர் மின்சார நிலையத்தின் நிர்வாகியாக நியமனம் செய்யப்பட்டார். மொலொட்டோவ் வெளி மங்கோலியாவுக்குத் தூதராக அனுப்பப்பட்டார். ககனோவிச்சோ மத்திய ஆசியாவில் எங்கேயோயுள்ள ஒரு சிமெண்ட் தொழிற் சாலையின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். ஆனால், ஷெப்பிலோவ், சபுரோவ், பெர்வுகின் ஆகியோரின் புதிய பதவியைப்பற்றி ஒன்றுமே அறிவிக்கப்படவில்லை. 1957, அக்டோபர் மாத இறுதியில்

[2] இம் முடிபுகள் ஸ்டாலின் காலத்தில் போன்று கட்சித் 'தலைவர் யதேச்சாதிகாரமாக இட்டகட்டளைகளின் விளைவால்தோன்றியவை அல்லவென்றும், கம்யூனிஸ்ட் கட்சி பிரசிடியமும் மத்தியக் கமிட்டியும் உண்மையான வாதத் திற்குப் பின்னரே இம் முடிபுகளை ஆதரித்து வாக்களித்தனவென்றும் பின்னர் உடனடியாக நடந்த நிகழ்ச்சிகளின்றும் தெரியவந்தது. 11 உறுப்பினர்களடங்கிய முன்னிய பிரசிடியத்தில் குரூச்சேவ் புதிதாகக் கொண்டுவந்த நிட்டத்தின பெரும் பகுதியை மெலென்கோவ், மொலெட்டோவ், ககனோவிச் ஆகியோர் எதிர்த்தனர்; சபுரோவும பெர்வுக்கினும் அதில பாதியை எதிர்த்தனர்: புல்கானின், மிக்கோயான், வொரோஷிலோவ் சஸ்லோவ் மற்றும் கிரிசென்கோ ஆகியோரே அவற்றை ஆதரித்தனர். 1957, ஜூன் 14ஆம் நாள் குரூச்சேவும் புல்கானினும் பின்லாந்திலிருந்து தாயகம திரும்பியதும், பிரசிடியம் குரூச்சேவிற்கு எதிராக வாகளித்தது. பிரசிடியத்தில் வாதம் நடைபெறுங்கால் வொரோஷிலோவ், சஸ்சுலோவ், கிரிசென்கோ ஆகிய மூவரும் மாஸ்கோவில் இல்லாததே இதற்குக் காரணம். ஷூக்கோ குரூச்சேவிற்கு ஆதரவாக கூட்டத்தில் பேசினார். அப்போது அவர் பிரசிடியத்தின் வாக்குரிமையற்ற உறுப்பினராக இருந்த போதிலும், அவர் சோவியத் படைக்காகப் பரிந்து பேசினார். புதிய பிரசிடியத்தில், 15 பேர் இருந்தனர். அவர்களில் ஆறு பேர் (புல்கானின், குரூச்சேவ், மிக்கோயான், ஸ்வெர்னிக், வொரோஷிலோவ், கிரிசென்கோவ்) 'பழைய காவலர்' ஆவர். ஓர் உறுப்பினர் 'பழைய பால்ஷிவிக்' கட்சியினர்; அவரே ஒட்டோகௌசினன் என்பவர். இவர் ஒரு பின்லாந்திய கம்யூனிஸ்ட்வாதியாவார். தன் நாட்டிலிருந்து கடத்தப்பட்டு நெடுநாள் மாஸ்கோவில் வாழ்ந்துவந்தார். தொழில் நுணுக்கமுடைய சஸ்லோவும் ஓர் உறுப்பினர் ஆவார். படையின் உருவாய் விளங்கிய மார்ஷல் ஷூக்கோவ், பேர்போன பெண்தலைவர்: இகாதீனா புர்ட்சேவாவும இதன் உறுப்பினராய் விளங்கினர். பின்னல் வந்துசேர்ந்த புதியவர்கள் ஐவர். லெனின்கிரேடு கட்சித்தலைவர் எஸ்ப். ஆர். கோசுலோவ், லியனிட் ஐ. பிரஸ்னேவ் (கசாகிஸ்தானில் கட்சித் தலைவர்), என். ஜி. இக்னடீவ், அரிஸ்டோவ் பெலியாயேவ்—இவ் ஐவரைப்பற்றி அதிகமான விவரம் ஒன்றும் இல்லை.

பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிவந்த ஷுக்கோவ் நீக்கப்பட்டு, அவ்விடத்தில் மார்ஷல் ரோடியன் வி. மாலினேவிஸ்கி நியமிக்கப் பட்டார். நவம்பர் 2 ஆம் நாள் ஷுக்கோவ் கட்சி பிரசிடியத்தைவிட்டும் மத்தியக் கமிட்டியைவிட்டும் நீக்கப்பட்டார். அவர் மக்கள் 'தன்னை வழிபடுமாறு' செய்ய முயன்றார் என்றும், படையைக் கட்சி கட்டுப் படுத்திவருவதை எதிர்த்தார் என்றும், வெளிநாட்டுக் கொள்கையில் 'செல்லுபடியற்ற அரசியல் போக்கில் துணிந்து இறங்கிவிட்டார்' என்றும் குற்றஞ்சாட்டப்பட்டார். இக் குற்றங்களுக்காக அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகப் பின்னால் அறிவிக்கப்பட்டது. இச் சோவியத் போர்வீரருக்குப் 'புதிய கடமைகள்' அளிக்கப் பட்டன. இங்ஙனம் ஒருகால் ரஷ்ய ஆட்சியாளருள் பேரதிகாரம் பெற்றுத் திகழ்ந்தவர்கள் இகழ்ச்சிக்குள்ளானார்கள். எனினும், இவர் களின் பதவியிறக்கங்கள் எதிரியிடம் நடந்துகொள்ளும் முறையில் ஏற்பட்ட புதிய மாறுதல்களைப் படம்பிடித்துக் காட்டின. 1957, ஜூலை மாத இறுதியில் குருச்சேவ் பிரேகிற்கு விஜயம் செய்தார். அங்கு பேசுங்கால், 'கறுப்பு மந்தையாடுகளை (கட்சி எதிரிகளை) ஒழித்துக் கட்டியாயிற்று' என்றும், 'மார்ச்சீயத்தை மேம்படச் செய்வதற்காக ஒருவர் ஒரு ரொட்டித் துண்டையும் வெண்ணெயையும் போடுவதில் தப்பு இல்லை' என்றும், 'புதிய சமூக அமைப்பு உருவாகுவதை எவராலும் தடுக்கவியலாது' என்றும், 'நாமே உலகின் இரண்டாவது தொழில் (சக்தி) வல்லரசு; (கூடிய விரைவில்) அமெரிக்காவுக்குச் சரிநிகராகிவிடுவோம்' என்றும், 'உணவுப் பண்டங்களில் நாம் வெகுவிரைவில் அமெரிக்காவை எட்டிப் பிடித்துவிடுவோம்' என்றும் கருத்துரைத்தார்.

புதிய சாதனைகள் : யூ. எஸ். எஸ். ஆர். சில அரும்பெருஞ் சாதனைகள் புரிந்தது. 1949 ஆம் ஆண்டு செப்டம்பரில் அமெரிக் காவின் அணு ஆயுதச் சுவாதீனத்தைத் தகர்த்தது; 1953 ஆம் ஆண்டு ஆகஸ்டில் ஹைடிரஜன் குண்டைத் தயாரித்தது; 1957 ஆம் ஆண்டுக் கோடையில் அமெரிக்கா பதிலடி கொடுப்பதற்கு முன்பாகவே, சோவியத் சர்வதேச ஏவுகணை (ICBM) சம்பந்தமான சோதனைகளை வெற்றியுடன் செய்து முடித்தது. இச் சாதனைகளைக் கண்டு மேலை யுலகம் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்தது. எனினும், பெரும் பாலான மேலை நாடுகள் சோவியத் சாதனை குறித்து ஐயுறவு கொண்டன. ஆனால், சோவியத் யூனியனே இச் சாதனைகளுக்கு இடையே ஆண்டுதோறும் அமெரிக்காவையும் மேற்கு ஐரோப்பா வையும்விட அதிகமான பொறியியல் வல்லுநர்களையும் (engineers) விஞ்ஞானிகளையும் (scientists) நாட்டிற்கு ஈந்தது. தொழில் உற் பத்தியிலும் வாழ்க்கைத்தரத்திலும் அது அமெரிக்காவை எட்டிப் பிடிக்க வெகு தொலை இருந்தது. எனினும், தேசிய வலிமையைப்

பொறுத்தமட்டில், 1960-ல் மார்க்சீய மாஸ்கோவி அமெரிக்க ராட்சசனுக்குச் சரிநிகர் சமானமாகிவிட்டதென்று கூறலாம்.

மார்க்ஸ்லாந்துக்கும் சுதந்திர உலகிற்கும் இடையிலான 'சக்தி சமநிலை'ப் பிரச்சினை தலைசுற்றச் செய்கின்ற, ஒரு பயனற்ற பிரச்சினையாகும். பொருளியல் அடிப்படையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது இயலாத காரியம். ஏனெனில், பொருளியல் அல்லாத, ஆனால், சக்தியோடு சம்பந்தப்பட்ட மற்ற மூலக்கூறுகள் இங்கு முக்கியம். எனினும், இவ்விரு ராட்சச வல்லரசுகளின் தேசிய வலிமையின் பருப்பொருள் மூலக்கூறுகள் (physical elements) பற்றிச் சற்று ஆராய்வோம். ஏனெனில், அத்தகைய ஆராய்ச்சி எதிர்காலத்தில் வரவிருக்கும் மாற்றத்தின் வெவ்வேறு போக்குகள்பற்றி அறிந்துகொள்ளவும், வல்லரசுகளின் ஒப்பிடத் தக்க வலிமையைப் பிரதிபலிக்கும் கண்ணுடியாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை. 1955-ல் சோவியத் தொழில் உற்பத்தி ஏறத்தாழ 1951-ல் இருந்த அமெரிக்க தொழில் உற்பத்தியில் பாதி எனலாம். (தலா வருவாய்—per capita—அடிப்படையில் பாதிக்கும் குறைவே), ஆனால், அதே உற்பத்தி 1945-ல் முன்றில் ஒரு பங்கு வீதமும், தொழில்மயம் ஏற்படுமுன் 1925-ல் பத்தில் ஒரு பங்கு வீதமும்தான் இருந்தது என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். 1950-ல் சோவியத் சராசரி (average) வாழ்க்கைத்தரம் அமெரிக்க சராசரி வாழ்க்கைத்தரத்தில் மூன்றில் ஒரு பகுதி ஆகிவிட்டது. ஆனால், உலகிலேயே மிகப்பெரிய தரைப் படையும், மிகப்பெரிய நீர்மூழ்கிக் கப்பற்படையும், மிகப்பெரிய விமானப்படையும் மாஸ்கோவிடமே இருந்தது. மற்றெல்லா நாடு களின் கப்பற்படை அனைத்தையும்விட வாஷிங்டனின் கப்பற்படை பெரிதாய் இருந்தது. அதன் உற்பத்தி சக்தியே மற்ற உலக நாடுகளின் மொத்த உற்பத்தி சக்தியில் சரிபாதி எனலாம். அமெரிக்கா வலிமையுடன் அதன் நம்பகமான நேசநாடுகளான மேற்கு ஐரோப்பா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, சப்பான், தென்கிழக்கு ஆசியா முதலிய நாடுகளின் மக்கள் பலமும் உற் பத்தி சக்தியும் சேர்ந்து மேற்கு முகாமின் வலிமையை யூ. எஸ். எஸ். ஆரைவிடப் பன்மடங்கு பெரிதாகக் (காகிதத்தில்) காட்டிற்று. அதுபோல் சோவியத் வலிமையுடன் அதன் நம்பகமான நேச நாடுகளான கிழக்கு ஐரோப்பா, சனத்தொகை மிக்க, தொழில் முன்னேற்றத்தில் பிற்போக்கான சீனு ஆகிய நாடுகளின் மக்கள் வலிமையும் உற்பத்தி சக்தியும் சேர்ந்து மார்க்ஸ்லாந்தின் வலிமையை அமெரிக்க சக்தியில் ஏறத்தாழ சரிபாதியாகக் காட்டிற்று.

1960ஆம் ஆண்டு தொடக்கத்தில் 8,400,000 சதுரமைல் நிலத்தில் வாழ்ந்துவந்த 208,000,000 மக்களைக் கொண்ட

யூ. எஸ். எஸ். ஆர். 3,000,000 சதுரமைல் பரப்பில் வாழ்ந்து வந்த சுமார் 175,000,000 மக்களைக் கொண்ட யு. எஸ். ஏ.யை எதிர்த்து நின்றது. இது இவ்வாருக ஆண்டுக்கு சுமார் 500,000,000 டன் நிலக்கரி சோவியத் யூனியனில் உற்பத்தி செய்யப்பட்டது. இதைப் பார்க்குமிடத்து சோவியத் யூனியன் நிலக்கரி உற்பத்தியில் அமெரிக்காவைக் கிட்டத்தட்ட எட்டிப் பிடித்து விட்டது என்றுதான் தோன்றியது. நிற்க, சோவியத் எண்ணெய் உற்பத்தி அமெரிக்க உற்பத்தியில் ஐந்தில் ஒரு மடங்கிற்குக் குறைவாகவே இருந்தது. கார் உற்பத்தி சோவியத் யூனியனில் ஆண்டுக்கு 600,000 கார்கள் வீதமும், அமெரிக்காவில் 7,000,000 கார்கள் வீதமும் அல்லது அதற்கு அதிகமாகவும் இருந்தது. மின்சக்தியை எடுத்துக் கொண்டால் சோவியத் உற்பத்தி ஆண்டுக்கு 200,000,000 ஆயிரம் கிலோவாட் வீதமும் அமெரிக்க உற்பத்தியோ 500,000,000 ஆயிரம் கிலோவாட் வீதமும் இருந்தது. சோவியத் வருடாந்தர எஃகு உற்பத்தி அமெரிக்காவின் 110 000,000 டன் வருடாந்தர உற்பத்திக்கு எதிராகக் கிட்டத்தட்ட 70,000 000 டன் தான் இருந்தது. சோவியத் யூனியனின் கப்பல், விமானம், அணு ஆயுத சக்தி ஆகியவற்றில் டன் ரீதியில் அமெரிக்க வலிமைக்கு அடுத்த இடத்தைப் பிடித்துவிட்டது. சோவியத் பொருளாதார வருடாந்தர உற்பத்தி, 1958-ல் ஏற்பட்ட பின்னிறக்கத்திற்கு (recession) முன், அமெரிக்காவின் 4 சதவீத உற்பத்திக்கு எதிராக 8 சதவீதம் இருந்தது. அதுவும் தொடக்கத்தில் சோவியத் உற்பத்தி சற்றுக் குறையத் தலைப்பட்டும், என்ன ஆச்சரியம், அமெரிக்க உற்பத்திக்கு அது பின்வாங்கிடவில்லை !

ரஷ்யாவையும் அமெரிக்காவையும் ஒப்பிடுங்கால் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். 'அடுத்த போரில் ஜெயிப்பவர் யார்' என்ற வினாவிற்கு விடை காண்பதற்காக இத்தகைய ஒப்பீடுகள் செய்வதில் பலனில்லை. ஏனெனில், அடுத்த போரில் ஜெயிப்பவர் எவருமே இருக்க மாட்டார்! (ஏன் என்று ஆச்சரியப் படுகிறீர்களா ? காலம் அவ்வாறு மாறிப்போய்விட்டது) அடுத்த போரைத் -தடுப்பதற்காகவோ, அன்றிக் கெடுபிடிப்போரில் வாகை சூடிக்கொள்வதற்காகவோ உலகில் சக்தி சம நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நம்பிக்கையூட்டும் பிரச்சினையும் அதைப்போன்றது தான். ஏனெனில், இவ்விரு இராட்சச வல்லரசுகளுக்கிடையே ஏற்படும் உலகப் போராட்டத்தில் மனித, பொருள் வளங்களால் உருவாகும் இராணுவ வல்மையால் மட்டும் வெற்றி கிடைத்து விடாது. மாருக, இந்நிலையில் வெற்றி ஏற்பட வேண்டுமானால் அது (இராணுவ வலிமையைவிட) பயனுள்ள விளம்பரம், தூர தரிசன—கணிப்பு, பிறநாடுகளின் நட்பைப் பெற்று வளர்க்கும் பகுத்தறிவுணர்வுடைய ராஜதந்திரம், பகைவனின் கூட்டைத் துச்ச

மாக மதித்து, முடிந்தால் பகைவனைத் தன்வழிக்கு இழுக்கும் திறன், அப்படி அவனைத் தனக்கு இணங்கச் செய்து போர்த்திறமையில் முழு சமநிலையைத் தோற்றுவிக்கும் வழியில் அவனுடன் உடன் படிக்கை செய்துகொள்ளும் திறமை ஆகியவற்றையே பெரிதும் பொறுத்திருக்கின்றது.

இக் கம்யூனிசப் பேராட்சியாளர்கள் கொள்கைப் பிடிவாதமும், விட்டுக்கொடுக்கா மனப்பான்மையும், எல்லா பிரச்சினையிலும் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று வற்புறுத்தும் மனப்பான்மையும் கொண்டவர்கள். அவர்கள் நேச நாடுகளுடன் கொண்டிருக்கும் பொருத்தமற்ற போக்கிற்கும், மற்றும் எதிரி களுடனே, அன்றி நட்புநாடுகளுடனே தங்கள் எண்ணம் பலிக்காது போகும் அளவுக்கு உடன்படிக்கை செய்துவருவதற்கும் இவையே காரணம் ஆகும். இதை உலகமக்களின் ஐயுறவு, அச்சம், வெறுப்பு ஆகியவற்றைக் கிளறிவிடும் அவர்களின் திறமையினின்றும் தெரிந்து கொள்ளலாம். எனினும், 'பிற்போக்கான' மக்களை சக்தியும் பெருமை யும் உள்ளவர்களாகச் செய்ய முடியும் என்பதையும், வறுமையில் வாடிக்கிடந்தோர்க்கு வளஞ்சிறந்த வாழ்வு அளிக்க முடியும் என்பதை யும் அவர்களின் பொருளாதார, சமூக ஏற்பாடுகள் நிரூபித்துவிட்டன. அவர்கள் செய்திருக்கும் துரோகம், அட்டூழியம், கொடுமைகள் முதலி யவை ஒருபுறம் இருந்தபோதிலும், யூரேசியா, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த அறிவாளிகள், கடன்சுமையுடைய விவசாயிகள், மகிழ்ச்சி யற்ற உழைப்பாளிகள், கறுப்பர்கள், மற்றும் மன நிறைவற்ற கோடானு கோடி மக்கள் ஆகியோரை அவர்களுடைய கொள்கை தொடர்ந்து ஆட்கொண்டுவிட்டது அவர்களைத் தனக்குப் பரவச மாக்கிவிட்டது. அவர்களாலும் (கம்யூனிஸ்ட்டுகளாலும்) அரசியலில் ஈடுபட முடியும், ராஜதந்திரத்துடன் நடந்துகொள்ள முடியும், சூழ்ச்சியுடனும் திறமையுடனும் போரிடமுடியும் என்பதை அவர் களைச் சேர்ந்த செல்வாக்குக்காரர்கள் (இலட்) நிரூபித்துவிட்டனர். இன்று அவனியில் வறுமையில் வாடும் கோடிக்கணக்கான பிற்போக் கான மக்கள் அமெரிக்க வாழ்க்கைத் தரத்திற்கேற்பத் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விரும்பியபோதிலும், அவர்களுக்கு அமெரிக்கா தன் உயிராகக் பாராட்டிவரும் கருத்துகள்மீதோ, அன்றி அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க அமெரிக்கத் திறமையின் மீதோ அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. இத்தகைய மக்களே கம்யூனிச வலையில் எளிதாகவும் ஏராளமாகவும் விழக் கூடியவர்கள் என்று ஐயம்திரிபறக் கூறலாம். இவர்களே கம்யூனிசப் பொருள்களுக்கு ஏற்ற மார்க்கெட்டுகள் அளிக்கத்தக்கவர்கள்.

இம் மார்க்கெட்டுகளையும்—பிற்போக்கு மக்களையும் மேலை நாடுகள் இழைக்கும் தவறுகளையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்

கெர்ண்டு குப்லாகானின் இப் புது ஆட்சியாளர்கள் மார்க்ஸ்லாந்தை இப்போதினும் அதிகமாக விரிவாக்கலாம். ஆனால், அவர்களால் 'இவ்வுலகை வெல்லுதல் என்பது இயலாத காரியம்'. உலகை வெல்லவும் அவர்கள் முயலமாட்டார்கள். ஏனெனில், அத்தகைய முயற்சி முழுப்போரில்தான் கொண்டுவிடும். அதோடல்லாமல் அத்தகைய போர் ஒன்றில் ரஷ்யா அமெரிக்காவின் கையில் முழுத் தோல்வியடைய நேரிடும். இவ்வுண்மையறிந்து ரஷ்யா சினமூட்டாது இருக்கும்பட்சத்தில், அமெரிக்கா அவர்களை (கம்யூனிச ஆட்சியாளரை) அடியோடு தீர்த்துக்கட்டவியலாது; அதுமட்டுமா? தன் வலிமைக்கு ஊறுதேடாத அவர்களுடைய வலிமையை அடியோடு அழிக்கமுடியாது! எனவே, அவர்கள் தொடர்ந்து சுதந்திர உலகின் எரிச்சலை கிளப்பிக்கொண்டும் அறைகூவல் விடுத்துக் கொண்டும், அச்சுறுத்திக்கொண்டுந்தான் இருப்பர். அவர்கள் இழைத்துவரும் அடக்கமற்ற அவமானத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பதைவிட, கடுமையான பாரத்தை முடிவேயில்லாமல் சுமந்து கொண்டிருப்பதைவிட அவர்களுடைய அச்சுறுத்தலை வன் முறையால் ஒழித்துக்கட்டிவிட வேண்டும்போல்தான் தோன்றும். ஆனால், இவ்வெண்ணத்திற்கு இடங்கொடுத்து வன்முறையில் இறங்க நேரிடின் அதனால் (இம் மிக்குயர்) சமுதாயத்தின் ஆணிவேர் ஆட்டங்கண்டுவிடும். அதன்பின் அதை ஊன்றச் செய்ய எதுவுமே செய்யவியலாது போய்விடும். எனவே, மேலைநாட்டினர் விழிப்பு, அறிவு, பொறுமை ஆகியவற்றோடு விளங்கினால்தான், தத்தம் இல்லத்தை முறையுடனும் அமைதியுடனும் வைத்துக்கொண்டால் தான், பாதுகாப்புடன் விளங்க முடியும். அன்றியும், காலவரையறையின்றித் தங்கள் பாதுகாப்புப் பொறுப்பை இன்முகத்துடன் ஏற்று, மங்கோலியருக்குப்பின் இவ்வுலகைத் தம் குடைக்கீழ்க் கொண்டுவரத் துடிதுடிக்கும் வலிமைமிக்க கம்யூனிஸ்டு ஆட்சியாளர் விடுக்கும் பயங்கர அறைகூவலுக்குமுன் தங்கள் உயிரெனப் போற்றும் இலட்சியங்களின் கொள்கைகளின் நேர்மையை அவர்கள் இவ்வுலகிற்கு வலியுறுத்தினால்தான் பாதுகாப்புடன் திகழவியலும்.

* * *

ஸ்டாலின் கொடிய முறைகளைக் கையாண்டு ரஷ்யாவைத் தொழில்மயமாக்க, நகர்ப்புற மையமாக்க அங்குக் கல்வியைப் பரப்பினர் என்று மேலே கண்டோம். அவற்றால் மனித குலத்திற்கு ஏற்பட்ட முக்கிய விளைவுகளை சர்வதேச அரசியலில் வலிமைத் தராசுகொண்டு நிறுக்கமுடியாது என்ற உண்மையைக் காலத்தேராழி புலப்படுத்தும். இப் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்காவிடில் 1940—50-ல் ஹிட்லரைப் புதிய மஸ்கோவியால் தோற்கடித்திருக்க முடியாது. 1950—60-ல்

அதனால் அமெரிக்காவை எதிர்த்திருக்க முடியாது. ஆனால், ரஷ்யாவின் புது சகாப்தத்தின் விளைவுகள் வேறுவிதமாகவும் நம்பிக்கையூட்டுவனவாயும் தோன்றின. மாபெரும் நகரங்களையும், பெரிய தொழிற்சாலைகளையும் அதிகப்படியான கற்றறிந்த மக்களையும் கொண்ட சோவியத் யூனியனை ஸ்டாலின் மேற்கொண்ட வழிமுறைகளின் வாயிலாய் ஆட்சி செய்வதென்பது முடியாத காரியம். ஏனெனில், அவ் வழிமுறைகள் ஒரு தலைமுறைக்கு முன் பண்டைய வறுமையில் உழன்ற பிற்போக்கான நாட்டுப்புற மக்களைக் கொண்டிருந்த யூ. எஸ். எஸ். ஆரை ஆட்சி செய்யத்தான் பயன் பட்டிருக்கும். இந்நாட்டில் புதிய புரட்சி ஒன்றைத் தவிர்க்க வேண்டுமானால் 'சீர்திருத்தம் செய்யப்பட்ட', 'தாராள மனப் போக்குடைய', 'ஜனநாயக' ஆட்சி இன்றியமையாதென்பதையும் தவிர்க்கொணாதென்பதையும் அந்நாட்டுக் கூட்டுத் தலைவர்கள் நன்கு அறிவர். இவ்வுண்மையை உலகமும் அறியும். இப் புது அமைப்பு எவ்விதம் அமையும் என்பது இந் நூலை எழுதும் வேளை அவ்வளவு தெளிவாய்த் தெரியவில்லையெனினும், இம் மாற்றத்தின் போக்கு இப்பொழுதே குன்றிடையிட்ட விளக்காகிவிட்டது.

இச் சூழ்நிலைகளின் நெரிசலால் உலக அரங்கில் இனிமேல் ரஷ்யா ஆடவிருக்கும் ஆட்டம் முற்றிலும் வேறுனதாகவே இருக்கும். அது 'உலகப் புரட்சிக்' கோட்பாட்டிற்கு எதிராகவே அமையும். உலகை 'முதலாளித்துவ' அல்லது மற்றப் பாவத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற சிலாவிய மக்களின் (Slavs) பண்டைய மெஸ்ஸியப் 'பணிக்கு' அது நேர்மாறுனதாகவே இருக்கும். நிர்வாகிகள், தொழில்நுட்ப வல்லுநர், பொறியியல் வல்லுநர், தொழில் வல்லுநர், திறம்படைத்த உழைப்பாளிகள் ஆகியோர் இன்று இந்நாட்டு 'ஆட்சியாளராகத்' திகழ்கின்றார்கள். இப் பெரிய செல்வாக்குப் படைத்த ஆட்சி வகுப்பினர் நடைமுறை நிலையில் நன்கு காலூன்றி விட்டார்கள். எனவே, இவ்வாட்சியாளரின் தனியுரிமைகட்கு ஊறு ஏற்படுத்தத்தக்க எந்த அவசரமான வெளிநாட்டுத் துணிகரச் செயலிலும் ஈடுபட்டு, போரில் எல்லாவற்றையும் இழக்க நேரிடுதல் பைத்தியக்காரத்தனமாகும். ஆனால் இன்றைய மார்க்சீய மஸ்கோவிய ஆட்சியாளர்களோ பைத்தியக்காரர்களுமல்லர்; வெளிநாடுகளில் சண்டையை விதைத்து உள்நாட்டில் ஒற்றுமையை வளர்க்கத் தூண்டும் உள்நாட்டுப் பிரச்சினைகளும் அவர்களுக்கு இல்லை. 'முதலாளித்துவம் அழியும்' என்பதும் 'கம்யூனிசம் வெற்றியுடன் பீடு நடை போடும்' என்பதும் வைதீக மார்க்சீயர்களின் நிலையான நம்பிக்கையாகும். ஆனால், அவர்களின் வேலைச் செயல்களோ செல்வாக்கு வகுப்பினரின், ஏன் சோவியத் பாமர மக்களின் செல்வத்தைப் பெருக்கத்தான் துணைபுரிகின்றன.

2. சீனா: சொர்க்கத்தின் கட்டளை

''தலைசிறந்த ஆட்சியாளர்கள் இருந்து வருகிறார்கள்' என்று மட்டுமே மகளுக்குத் தெரியும். அவர்களுக்கு அடுத்தாற்போல் சிறந்து விளங்குபவர்களிடம் மக்கள் அன்பு செலுத்தியும் அவர்களுக்குப் புகழ்மாலை சூட்டியும் வருகிறார்கள். அடுத்தாற்போல் உள்ளவர்களுக்கோ அஞ்சி நடக்கிறார்கள். அதற்கும் அடுத்தாற்போல் இருப்பவர்களை வன்மையாகக் கண்டனம் செய்து வருகிறார்கள் அவர்கள். (ஆட்சியாளர்கள்) மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகாது போய்விடின் மக்களில் சிலர் ஆட்சியாளர்மீது கொண்டு இருக்கும் விசுவாசத்தைக் கைவிட்டுவிடுவர். அதன்பின் அவர்கள் சத்தியம் செய்ய உறுதி மொழி கூறத் துணிந்து விடுவர்? ஆனால், தலைசிறந்த ஆட்சியாளர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றினால் 'அதை நாங்கள்தான் செய்து முடித்தோம்' என்று மக்கள் சொல்லித் திரிவர்.''

—டோ(கி. மு. 540) பற்றிய நூல் லோ-சீ, மொழி பெயர்ப்பு: லின் யூடாங்.

'அரசாங்கத்தைப்பற்றி சூ-சாங் வினவிக் கொண்டிருந்தார். குரு சொன்னார்: 'அரசாங்கத்தின் தேவைகள் உணவுத் தன்னிறைவு, படைக்கலத் தன்னிறைவு, அரசன் மீது மக்கள் வைக்கும் நம்பிக்கை என்று மூன்று வகைப்படும்.' சூ-சாங் வினவினான்: 'இம் மூன்றில் ஒன்றைக் கைவிட நேரிட்டால் முதலில் எதைக் கைவிடுதல் நன்று?' 'படைக்கலங்களைக் கைவிடுதல் நன்று' என்று கூறினார் குரு. சூ-சாங் மறுபடியும் வினவினார்: 'மீதம இருக்கும் இரண்டில் ஒன்றைக் கைவிடுமாறு நேரிட்டால் எதை முதலில் கைவிடுதல் நன்று?' குரு சொன்னார்: 'உணவைக் கைவிடு' அவர் மீண்டும் தொடர்ந்து கூறினார்: 'பண்டைக் காலம் முதற்கொண்டு சாவே மனிதர் அனைவரின் ஊழ்வினையாக இருந்து வருகிறது; ஆனால், தங்களை ஆள்பவர்மீது அவநம்பிக்கை கொண்ட மக்களின் கதியைப்பற்றி அப்புறம் கூறத் தேவையில்லை'

—கன்ஃபியூசியஸ், 'அனலெக்ட்ஸ்' கி. மு. 490.

முதல் உலகப் போர் விளைவித்த அழிவும் சேதமும், நேச நாடுகளும் அவற்றின் பகைவர்களும் இழைத்த தவறுகளும்தான் ரஷ்யாவைக் கம்யூனிசத்தைப் பின்பற்றும்படி செய்தன. அதே போல் இரண்டாம் உலகப் போர் விளைவித்த அழிவும் சேதமும், நேச நாடுகளும் அவைகளின் பகைவர்களும் இழைத்த தவறுகளுமே சீனாவைக் கம்யூனிசத்தைப் பின்பற்றும்படி செய்தன. இவ்விரு நிகழ்ச்சிகளையும் கண்ட அமெரிக்கா அதிர்ச்சியடைந்தது. அந்த அதிர்ச்சியில் அமெரிக்கர்களில் பெரும்பாலோர் 1917—18-ல் ரஷ்யப் புரட்சியைப் பார்த்து அது 'செர்மனியின் சதிச் செயல்' என்று கூறினர்.

1949–50-ல் அவர்களே சீனப் புரட்சியைப் பார்த்து 'இது ரஷ்யா செய்த சதி,' அல்லது அது வாஷிங்டனிலிருந்த 'ராஜ துரோகிகள்' செய்த சதியின் விளைவாக இருக்கலாம் என்று சொல்லிக் கொண்டனர்[8]. ஆனால், இக் கருத்துகள் ஒன்றில்கூட உண்மை இல்லை. எனவே, அவற்றைப்பற்றி இங்கு ஆராய வேண்டியதில்லை. ரஷ்யாவை கம்யூனிசம் கைப்பற்றியது என்றால் அது ரஷ்யரின் வேலைதான். சீனாவை கம்யூனிசம் கைப்பற்றியது என்றால் அது சீனரின் கைவேலையேயன்றி அமெரிக்கருடையதுமன்று, ரஷ்ய ருடையதுமன்று. இக் கம்யூனிச வெற்றியை ரஷ்யாவின் தலைசிறந்த வெற்றியென்றும், அமெரிக்காவின் 20 ஆம் நூற்றாண்டின்படுதோல்வி யென்றும் கூறலாம்.

இத் தீங்கு எப்படி விளைந்தது? அதை நன்மை என்று பெரும் பாலான சீனர்கள் எங்ஙனம் கருதப் புறப்பட்டனர். இவ் வினாக் களுக்கு இங்கு விடையளிப்பது முடியாத காரியம். பின்னால் கூறப் போவதைத் தொடக்கத்திலேயே கூறிவிடலாம். சீனாவின் நிலப் பரப்பு யு. எஸ். ஏ. யைவிட ஒரு மில்லியன் சதுர மைல் அதிகமானது. அதன் நிலப் பரப்பு யூ. எஸ். எஸ். ஆரில் பாதியாகும். இதுவே மனித வர்க்கத்தின் ஜன நெருக்கமான தேசிய மாளிகையாகும். மனித இனத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஹோமோசேப்பியரின்—மனித குலத்தின் பண்டைய உயிருடன் திகழும் நாகரிகம் சீனா ஒன்றே. ஏன் என்று கேட் கிறீர்களா? ஏனெனில், சீனர்கள்தாம் 5,000 ஆண்டுகட்கு முன்னர் எழுதவும், படிக்கவும், நகரங்களில் வாழவும் கற்றிருந்தனர். சுமேரியரும், எகிப்தியரும் இந் நூதனங்களைக் கண்டுபிடித்து

[8] அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் அக்கீசனும் அவரது சகாக்களும் 1949-50-ல் சீன கம்யூனிஸ்ட்டுகள் 'சீனர்கள்' அல்லவென்று வெளிப்படை யாகக கூறிவந்தார்கள்; அவர்கள் மஞ்சூரியா, மங்கோலியா, சிங்கியாங் ஆகிய வற்றை மாஸ்கோ இணைத்துகொள்ளவும், சீனாவை சோவியத் யூனியன் அடிமைப் படுத்தவும் உதவிபுரியும் கிரெம்லினின் கருவிகள் என்றும் பறைசாற்றினர். அதே வேளை அமெரிக்க மேல்சபை உறுப்பினர் ஜோசப் மக்கார்த்தி சீனாவில் நடந்தவை ஜெனரல் ஜார்ஜ் சி. மார்ஷல், ஓவன்லாட்டிமூர் ஆகியோரின் 'சதி வேலைகளின்' விளைவேயாகும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திவந்தார்; சமாதான உறவு வளர்ப்பு நிலையத்தைப்பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உப கமிட்டியின் தலைவர் செனட்டர் பாட் மக்கரான் 1952 ஜூலையில் வெளியான பெரிய அறிக்கை ஒன்றில் பின்வருமாறு வரைகிறார். 'இருபத்தி ஐந்து ஆண்டு காட்கு முன்னர் தூரகிழக்கில் ஆசை வைத்த ஒரு சிறிய கூட்டம் ரஷ்யாவுடன் ஒரு கூட்டுறவு செய்தது. அக் கூட்டமே அந்த நிலையத்தைக் கட்டுப்படுத்தியும் செயலில் ஈடுபடுத்தியும் வந்தது. அக் கூட்டத்தின் சூழ்ச்சி நடவடிக்கைகள் இல்லாதிருந்திருக்கும்பட்சத்தில், சீனா இன்று ஒரு சுதந்திர நாடாகத் திகழ்வ துடன் தூரகிழக்கில் கம்யூனிசக் கொள்கைக் கூட்டத்தினர் முன்னேறுமல் தடுத்து மிருக்கும்.' ஆனால், இவ்வறிக்கையைப் பார்த்த வாஷிங்டன் போஸ்ட் எனப்படும் பத்திரிகையோ (1952, ஜூலை 4) இது ஒரு 'வினை அர்த்தமற்ற முடிவு என்றும், 'காங்கிரஸ் உரிமையின் வெறுக்கத்தக்க துர்ப்பிரயோகம்' என்றும், மக்கார்த் தியின் கொள்கை வெறியாலும், மக்கரானெஸ்கியின் சினத்தாலும் மக் கார்த்தரின் கட்டுக்கதையாலும் ஏற்பட்ட ஒரு 'வரலாற்றுத்திரிபு' என்றும் குறிப்பிட்டது. இது 'அமெரிக்க மக்களை ஏமாற்றுவதற்கும் வஞ்சிப்பதற்கும் செய்யப்படும் முயற்சியேயன்றி வேறல்ல என்று அது மேலும் வலியுறுத்திற்று.

மண்ணோடு மண்ணாகி 20 நூற்றாண்டுகட்குப் பின்னரே சீனர்கள் முதல் தடவையாக எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டனர். கிரீஸ் தேசம் சீரும் சிறப்புடனும் விளங்கிய காலை, ரோம் இளமைப் பொலிவுடன் விளங்கிய நாளில் அதாவது, 2000 ஆண்டுகட்கு முன் திகழ்ந்த சீனா எல்லா மக்களும் அடங்கிய உலக சாம்ராச்சியத்தை எழுப்பும் தீக்கனா கண்டுவந்தது. கனவு நனவாவதற்கும் ஆவன செய்து வந்தது. சீனர்கள் வாழ்க்கைமுறை கடுமையான வைதீக அடிப்படையில் (கன்ஃபியூசியஸ் கொள்கைக் கிணங்க) அமைந்திருந்தது. அரசியலைப் பொறுத்தவரையில் ஏதேச்சாதிகாரமும் (authoritarianism) கொடுங் கோன்மையும் தாண்டவமாடின. சீனப் பேரரசர் (சுவர்க்கப் புதல்வன்) வரம்பற்ற அதிகாரம் செலுத்தி வந்தார். கட்டாயக் கொள்கைப் பயிற்சி (indoctrination) பெற்றவருள் பொறுக்கி எடுக்கப்பட்டவர் அடங்கிய செல்வாக்குக் குழு ஒன்று நாட்டை ஆட்சி புரிந்து வந்தது. இவற்றைப் பார்க்குமிடத்து (சீனாவில் இன்று உருவாகியிருக்கும்) புது மார்க்சீயம் புதியதோர் கண்டுபிடிப்பு என்று கருதுவதைவிட நவீன முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்டைய வழிமுறையே என்று கூறுவது மிகவும் பொருந்தும். இங்குப் புதுமை எதுவென்றால், நெடுநாள் தேங்கி முடங்கிக்கிடந்த விவசாயப் பொருளாதாரத்தை மாற்றியமைப்பதற்காகக் கடைப் பிடிக்கப்பட்ட மேலை விஞ்ஞானமும், தொழில் நுணுக்கக் கலையும், சமூகப் புரட்சியை உண்டுபண்ணிப் பொருளாதார மாற்றங்கொண்டு வருவதற்குரிய கருவிகளாகக் கடைப்பிடிக்கப்பட்ட மேலை சர்வாதி காரத்துவமும்தான்.

வானளாவும் பேரரசிலிருந்து கியூமிண்டாங் வரை; சீனாவின் மாபெரும் மனிதத் திரள் என்றுமே தன்னுடன் சங்கமமாக வரும் கொள்கை நதிகளை ஒன்றுவிடாமல் விழுங்கி வந்தி ருக்கிறது. தன்மீது அடிக்கும் வெற்றிப் புயல்கள் அனைத்தையும் தன்கீழ் அடக்கி வந்திருக்கிறது. சென்ற நூற்றாண்டில் அதன்மீது அடித்த அலைகளும் புயல்களும் இதற்கு விதிவிலக்கன்று. சிறப்புடன் திகழ்ந்துவந்த சுங் அரசவம்ச ஆட்சி (960—1280) மங்கோலியரால் தாக்கப்பட்டு, அதன்பின் ஏற்பட்ட மங்கோலிய அரசவம்ச ஆட்சி யாலும் (1280—1368) அழிந்துபோயிற்று. ஆனால், புதிய ஆட்சி யாளர்கள் சீனராக மாறினர். மிங் அரசவம்ச ஆட்சி (1368—1644) மஞ்சுவர் தாக்குதலால் ஆட்டங்கண்டு வீழ்ச்சியுற்றது. எனினும், அதன்பின் நிறுவப்பட்ட மஞ்சு அரசவம்ச ஆட்சியின்போது (1644 –1911), இத் தாக்குதல்காரர்களும் சீனர்களாக மாறினர். தன் மீது தாக்கிய நாடோடிக் காட்டுமிராண்டிகளை அல்லது 'வெளிநாட் டுப் பேய்கள்' என்று கருதப்பட்டவர்களைத் தன்னுடன் உட் கொள்வதே சீனாவின் நிரந்தரப் போக்காக இருந்துவந்திருக் கிறது. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில் மேலை

வல்லரசுகளால் ஏற்பட்ட கடுமையான விளைவுகளால் இப் போக்கு வெற்றிபெறவில்லை. மேலை நாடுகளின் வலிமைக்கு முன்னால் சீனாவின் தொழிற்கலையும், பண்டையப் போர்முறையும் பகலவன் முன் பனிபோல் ஆயின ; மேலும், வெளிநாட்டு ஆக்கிரமிப்பையோ, அன்றி இந் 'நடு அரசின்மீது' மேலை நாடுகளின் நெருக்குதலால் விளைந்த உள்நாட்டு எழுச்சிகளையோ சீனப் பேரரசாங்கத்தால் சமாளிக்க முடியவில்லை.

மேலை நாடுகளுடன் போரில் (1839–42) இறங்கி மண்ணைக் கவ்விய நாள்முதல் சீனாவில் குழப்பம் நீடித்துக்கொண்டேதான் சென்றது. அது போதாதென்று தெய்ப்பிங் கலகம் (1848—64) கிளப்பிவிட்ட கொடிய வெறியும் சேர்ந்துகொண்டது. ஐரோப்பிய வல்லரசுகளும், பின்னால் சப்பானும் சீனாவைக் கைப்பற்றவோ அல்லது துண்டாடவோ மேற்கொள்ளும் முயற்சிகளை எதிர்ப்பான்வேண்டி இந்நாடு கடைப்பிடித்த அரசியல், இராணுவத் தொழில் நுணுக்க வழிகளே இந்தக் குழப்பமும் வெறியும் என்று கொள்ளலாம். இது ஒரு குழப்பமான வழி என்பதில் ஐயமில்லை. இருப்பினும், இதனால் ஒரு புதிய நாட்டுணர்ச்சியே பிறந்தது ; ஒரு புதுமுறையான அரசு தோன்றியது. அன்றியும், படை நிலமானியப் பிரபுக்கள் செய்த கொடுமையை எதிர்த்து இறுதியில் பெரிய விவசாயிகளின் கலகமே ஏற்பட்டுவிட்டது. இக் குழப்பம் சீனாவின் நவீன வரலாற்றிலும் தொடரலாம். ஆனால், உலக அரசியலில் ஏற்படும் விளைவுகளை ஆராய்வதே இங்கு நம் நோக்கம் ஆகும்.

சன்-யாத்-சென் (1866 — 1924) சீனர்களின் ஆத்மீகத் தலைவராகவும், சீனப்புரட்சியின் அரசியல் கர்த்தாவாகவும் விளங்கி வந்தார். தேசியப் புரட்சி இயக்கம், முதன்முதலில் நெறியிழந்து, தளர்ந்து நின்ற மஞ்சு ஆட்சிக்கு எதிராக ஈடுபட்டது அதன்பின் அது சீனாவின் அரசியல், சமூகப் புனரமைப்பில் கருத்தைச் செலுத்திற்று. 1911-ல் மஞ்சு அரச வம்சத்தினர் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டார்கள். எனினும், சன்-யாத்-சென் புதிய குடியரசின் தலைவராகவில்லை. மாறுக, அவர் கான்டனுக்குச் சென்றுவிட்டார். தான் பேரரசராக ஆகிவிடவேண்டுமென்று தக்க சமயம் நோக்கி காத்துக்கொண்டிருந்த துணிச்சல் வாய்ந்த யுவான் ஷி காய், குடியரசுத் தலைவரானார். சன் யாத்-சென்னைப் பின்பற்றியவர் கியூமின்டாங் அல்லது தேசிய மக்கள் கட்சியை அமைத்தனர் : மேலை முறை அடிப்படையில் பாராளுமன்ற ஜனநாயகம் ஒன்றை நிறுவ விழைந்தனர் ; அதற்குச் சோசியலிசப் பூச்சுக் கொடுக்க விரும்பினர். ஆனால், யுவான் அயல்நாட்டு பாங்கு உடைமையாளருக்கு அடிமையானதும், 1915-ல் அவர் சப்பானுக்குச் சரணடைந்ததும், அதற்கு அடுத்த ஆண்டில் அரசனுக்கேயுரிய

சிறப்புகளைத் தனக்குத் தேடவும் நாட்டில் ஒரு புதிய புரட்சி ஏற்பட்டது. அப் புரட்சி நீண்ட உள்நாட்டுப் புரட்சி யுகத்தையே தோற்றுவித்துவிட்டது என்று கூறலாம். இவ் அவல நிலைக்கு மத்திய அரசாங்கத்தின் வலியின்மையும், பாதி சுதந்திரமான ராஜ்யத் தலைவர்களாகிய போர் வெறியரின் கட்டிலடங்காப் பேராசையும், கட்டுப்பாடு உணர்ச்சியற்ற கூலிப்படையின் தலைதூக்கலும், அரசியல் ஒற்றுமை, ஐக்கியம் ஆகியவற்றை வளர்த்த சமூக, பொருளாதாரச் சக்திகள் விரைவில் வீழ்ச்சியடைந்ததுமே காரணங்கள் ஆகும்.

புரட்சிக் குழப்பம் தலைவிரித்தாடிய வேளை யுவான் ஷி காய் 1916, ஜூன் மாதம் இறைவனடி சேர்ந்தார். அவர் மறைந்தாரோ இல்லையோ மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போர் வெறி பிடித்த தலைவர்கள் தங்களுக்கிடையே போராடத் தொடங்கிவிட்டார்கள். சிஹ்லி கும்பல் தலைவர் ஊ-பீ-ஃப்பு, மஞ்சூரியாவைச் சேர்ந்த சாங் சோலின், ஃபெங் யூ-சியாங் என்ற ஷான்சியைச் சேர்ந்த 'சிறுபடைத் தலைவர்' மற்றும் பல படைநிலமானியத் தலைவர்கள் (feudal chieftains) போராடத் தொடங்கினர். சாங்கின் செல்வாக்கு மஞ்சூரியாவில்தான் பரவியிருந்தது. எனவே, தொடர்ந்து தன் மாகாணத்தின் (satrapy) மீது ஆட்சிசெலுத்த சப்பானின் உதவியை நாடி நின்றார். பெங் என்பவரின் அதிகாரம் மங்கோலியாமீது மட்டுமே பரவியிருந்தது; எனவே, அவர் மாஸ்கோவின் உதவியை எதிர்பார்த்திருந்தார். ஒருவரையொருவர் அழிக்கும் இச் சண்டைகள் வடக்கில் நடந்து கொண்டிருக்குங்கால், சன் யாத்-சென்னின் கியூமின்டாங் சீடர்கள் கான்டனில் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். அவர்கள் சன் போதித்த 'மூக்கொள்கை'யான – மக்கள் நாட்டுணர்ச்சி, மக்கள் ஜனநாயகம், மக்கள் பிழைப்பு ஆகிய அடிப்படையில் சீனுவை ஐக்கியப்படுத்துவதற்குத் தங்களை ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தார்கள். கான்டனில் 1913-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரில் எஞ்சியிருந்தோர் 1921-ல் சன் யாத்-சேனைத் தங்கள் குடியரசுத் தலைவராகத் 'தேர்ந்தெடுத்தார்கள்'. ஆனால், அவருக்கு அடக்குமுறையாளரிடமிருந்து கடும் எதிர்ப்புத் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தது. எனவே, சன் வெளிநாட்டு உதவியை நாடினார். கம்யூனிஸ்ட்டு ரஷ்யா அவருக்கு உறுதுணையாய் நின்றது.

1923ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் மைகேல் பொரோடின் கியூமின்டாங்கின் முக்கிய ஆலோசகராக மாஸ்கோவிலிருந்து அனுப்பப்பட்டார். அதற்கிடையில் கான்டனின் சுங்கவரித் தீர்வையை வல்லந்தமாகக் கைக்கொள்ளப்போவதாக சன் யாத்-சென் அச்சுறுத்தினர். அவ்வச்சுறுத்தலை எதிர்ப்பான்வேண்டி மேலை வல்லரசுகள் தங்கள் கப்பற்படையின் கைவரிசையைக் காட்டின,

TO USSR 1945
Kyzl
TANNU TUVA
SIBERIA
Sergiopol
Balkash
Chuguchak
RUSSIAN PROTECTORATE, 1913
SOVIET ALLY SINCE 1934
MONGOL
PEOPLES' REP
GOBI
Alma Ata
DZUNGARIA
Tihwah (Urumchi)
SINKIANG
TARIM BASIN
Kashgar
Yarkand
Khotan
Charchan
PAK
KANSU
NINGSI
Nin
Sining
Lan
TSINGHAI
TIBET
BRITISH PROTECTORATE 1914
NEPAL
Lhasa
SIKANG
SZEC
CHUNG
Kangting
BHUTAN
INDIA
PAK
TO BRITAIN, 1886 INDEPENDENT, 1947
Calcutta
Kunming
BURMA
YUNNAN
Lashio
Mandalay
WESTERN CHINA
SCALE OF MILES
10 100 200 300 400 500
Rangoon
LAOS
THAILAND

TO RUSSIA, 1858-1860
Blagoveshchensk
Amur R.
Khabarovsk
SO SAKHALIN TO JAPAN 1905 TO U.S.S.R. 1945
HEILUNGKIANG
Tsitsihar
Harbin
MANCHURIA
KIRIN
Changchun
Hsinking
Vladivostok
LIAONING
Mukden
SOVIET-ZONE 1945
TO JAPAN 1910
US ZONE 1945
JEHOL
Jehol
SUIYUAN
Kweisui
Kalgan
Peiping
Tientsin
Port Arthur
TO RUSSIA 1897 TO JAPAN 1905 TO U.S.S.R. 1945
HOPEH
Wei Hai Wei
TO BRITAIN, 1898
Yangku
Yenan
SHANSI
Tsinan
SHANTUNG
Kiaochow
TO GERMANY, 1897- TO JAPAN, 1914- EVACUATED 1922
ALLIANCE WITH U.S.A. Sept 8 1951
Sian
Kaifeng
SHENSI
HONAN
KIANGSU
Chinkiang
Nanking
Shanghai
ANHWEI
HWAN
HUPEH
Hankow
Wuchang
Hwaining
Hangchow
CHEKIANG
LIU-KIU ISLANDS
Okinawa
HUNAN
Changsha
Nanchang
KIANGSI
KWEICHOW
Kweiyang
FUKIEN
Foochow
Taipei
HQ OF CHINESE NATIONALIST GOVT Dec. 1949 & U.S. PROTECTORATE June 27 1950
FORMOSA
PESCADORES
KWANGSI
KWANTUNG
Canton
Swatow
Kowloon
Hong Kong
TO JAPAN 1895 TO CHINA 1945
Nanning
TO BRITAIN 1842, 1860
Kwangchowan
TO FRANCE, 1898
HAINAN
PHILIPPINE ISLANDS
Manila
VIET NAM
EASTERN CHINA
SCALE OF MILES
0 100 200 300 400 600
Mid-Century Protectorates of the U.S.A.

பொரோடினின் தலைமைக்கு அது பெரிதும் துணைபுரிந்தது. நான்கு—ஆண்டு சோவியத்—கியூமின்டாங் ஒத்துழைப்புக்கு வெற்றி கரமான வழி வகுக்கப்பட்டது.

ரஷ்ய இராணுவ அதிகாரிகள் புதிய தேசியப் படைக்குப் பயிற்சி (training) அளித்தனர். ரஷ்யக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியைப் போல் கடுமையான கட்டுப்பாட்டுடன்கூடிய சகோதரத்துவமாக கியூமின்டாங் திருத்தியமைக்கப்பட்டது. அது சர்வாதிகாரக் கட்சி யாக ஆகவிருந்தது. 1924-ல் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே சென்ற சீனக் கம்யூனிஸ்ட்டுகள் அக் கட்சியில் சேர்க்கப் பட்டனர். அத்துடன் நடுத்தர வகுப்பினர்க்கும் விவசாய, பாட்டாளிகளுக்குமிடையே போராட்டமும் தொடங்கிவிட்டது. அப் போராட்டம் இறுதியில் கடுந்துன்பத்தையே விளைத்தது. ஆனால், தொடக்கத்தில் சோவியத் ஆலோசகர்களும் உள்நாட்டு கம்யூ னிஸ்ட்டுகளும் அளித்த பேராதரவால் அது வலுவடைந்துகொண்டே சென்றது. சீனவை ஐக்கியப்படுத்தும் திட்டத்தில் அது முழு நம்பிக்கையுடன் இறங்கியது.

1924, ஏப்ரல் திங்கள் சன்-யாத்-சென் தன் இன்னுயிர் நீத்தார். அவர் மறைவுக்குப் பின்னர் கான்டனில் குழப்பம் சூழ்ந்து கொண்டது. சியாங் கே-ஷேக் பொரோடினின் உதவியால் கான் டனைத் தன் குடைக்கீழ்க் கொண்டு வந்தார். நாடு முழுவதையும் (கம்யூனிச மதத்திலிருந்து) மாற்றுவதற்காகவும், ஐக்கியப்படுத்து வதற்காகவும் நடவடிக்கைகள் வெகு மும்முரமாக மேற்கொள்ளப் பட்டன. 1927, மார்ச்சு மாதத்திற்குள் யாங்லி நதிப் பள்ளத் தாக்கும் ஷாங்காயும் தென்னவர் கைவசமாயின. எனினும், வெற்றி சியாங் கே-ஷேக்கிற்கும் பொரோடினுக்குமிடையே தவிர்க்க முடியாத பிளவை ஏற்படுத்திற்று. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் தனது குறிக்கோள்களை எய்துவதற்காகப் பயன்படுத்த விரும்பினர். இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் கம்யூனிச விரோதிகளையும், நடுத்தர வகுப்பினரையும், இராணுவத்தினரையும் தன் உதவிக்கு வருமாறு சியாங் அழைத்தார். கியூமின்டாங்கின் கம்யூனிச இடதுசாரிகள் நான்கிங்கைக் கைப்பற்றினர். அதோடு நின்றுவிடாது நகரிலிருந்த வெளிநாட்டினரின் சொத்துச் சுகங்களையும் தாக்க முற்பட்டனர். இதைச் சகிக்காத அமெரிக்க, பிரிட்டிஷ் கப்பல்கள் நான்கிங்கின் ஒரு பகுதிமீது குண்டுமாரி பொழிந்தன. இப்போது சியாங், ஷாங்காயின் வணிகப் பெருமக்களுடனும் பங்குதாரர்களுடனும் சேர்ந்து கொண் டார். 1927, ஏப்ரல் மாதம் அவர் ஷாங்காய், கான்டன் ஆகிய இரு நகரங்களிலுமிருந்த ரஷ்யர், கம்யூனிஸ்ட்டுகள் ஆகிய அனைவரையும் சிறை செய்து தூக்கிலிட்டார். பெங்-யூ-சியாங் இப்போது வலதுசாரி தேசியவாதிகளுடன் சேர்ந்துகொண்டார்.

சியாங்கின் இராணுவ ஆட்சியின்கீழ், இப்போது முற்றிலும் நடுத்தர வகுப்பு ஆகிவிட்ட கியூமின்டாங் (கட்சி), ஆயிரக்கணக்கான தொழிலாளர் தலைவர்களையும், விவசாயிகளையும், மாணவர்களையும், தீவிரவாதிகளையும் ஒழித்துக் கட்டியது. இக் கொடிய சம்பவத்திற்குப் பின் பொரோடின் ஜெலை மாதம் ரஷ்யாவுக்குச் சென்றுவிட்டார். மேடம் சன் யாத்-சென் உள்பட அவரது சீடர்கள் அனைவரும் சியாங் ஒரு (கொள்கை) கட்சிமாறி என்றும், புரட்சியின் துரோகி என்றும் தூற்றினர். சியாங் நான்கிங்கில் தன் சொந்த சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டினர். அத்துடன் சோவியத் வாணிபத் தூதரங்கள் (consulates) மூடப்பட்டன ; தென்னக நகரங்களில் கம்யூனிஸ்ட்டுகளின் கொலை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. சாங் சோ-லின் ஆதிக்கத்தின்கீழ் இப்போது இருந்த பெய்ப்பிங்கிற்கு தேசியப் படைகள் சென்றுகொண்டிருந்தன ; ஆனால் அவர்கள் வழியில் சினன் என்னுமிடத்தில் சப்பானியத் துருப்புகளை எதிர் நோக்க வேண்டியதாயிற்று. மஞ்சூரியப் போர்த் தலைவர் கியூமின் டாங்கின் நெருக்கலுக்கும், சப்பான் அமைச்சரின் ஆலோசனைக்கும் ஆளாகி ஜூன் மாதம் பெய்ப்பிங்கை விட்டுவிட்டு முகடன் என்னும் ஊருக்கு ஏகினர். செல்லும் வழியில் குண்டுக்கு இரையாகி மாண்டார். தந்தையின் மறைவுக்குப்பின் தனயன் சாங்-ஷூ-லியாங் அவ்விடத்தைக் கைப்பற்றினர். அதே சமயம் யென்-சி-ஷாவின் துருப்புகள் கியூமின்டாங் பெயரில் பெய்ப்பிங் நகரைக் கைப்பற்றின. சீனா முழுதும் நான்கிங் நகரில் வீற்றிருந்த சியாங் கே-ஷேக்கின் தேசிய அரசாங்கத்தின்கீழ் ஒன்றுபட்டுவிட்டதுபோல் தோன்றிற்று.

சுத்தேயில் குழப்பம்

ஆனால், இவ்வொற்றுமை கானல்நீர் போல் ஆயிற்று. சமத்துவமற்ற உடன்படிக்கைகளை ரத்து செய்தல் (abrogate), அயலிட உரிமைக்கு (extraterritoriality) முற்றுப்புள்ளி வைத்தல், வெளி நாட்டுச் சலுகைகளைக் கைப்பற்றல், வெளிநாட்டு நலன்களுக்கு ஊறுவிளைத்தல் ஆகிய அம்சங்களடங்கிய (கியூமின்டாங்) கட்சித் திட்டம் புதிய குழப்பங்களால் தவிடுபொடியாயிற்று. 1928, அக்டோபர் மாதம் சீனக்குடியரசின் தேசிய அரசாங்கம் உறுப்புச் சட்டம் (organic law) ஒன்றைக் கொண்டுவந்தது. அச் சட்டம் கியூமின்டாங்கின் ஒரே கட்சி சர்வாதிகாரம் காலவரையறையின்றி நீடித்து நிற்க வகை செய்தது. ஆனால், கொள்ளைக்காரப் படைகளைப் போர்த் தலைவர்கள் (tuchuns) திரட்டுவதை நிறுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளனைத்தும் வீணுக்கிப்போயின. 1929 பிப்ரவரித் திங்கள் ஷான்டுங், ஹூனன் ஆகிய இரு மாகாணங்களிலும் உள்நாட்டுக் கலகம் மூண்டது. உஹான்-க்வாங்சி கட்சியுடன் சியாங் மோதினர் ; இப்போது புரட்சிகரமாகிவிட்ட பெங்கைத் தண்டிப்பதற்காக அவர்

இராணுவத்தை அனுப்பினர். அதற்குச் சற்றுப் பின்னர் பெங் 'வழிக்கு வந்துவீட்டார்', சரணடைந்தார். 1929, ஜூலை மாதம் இளமை வாய்ந்த மார்ஷல் சாங் சீனக் கிழக்கு ரெயில்வேயைக் கைப் பற்றியதும், சோவியத் படையினர் பொரோடினின் முன்னாள் கூட்டாளியும் கான்டனில் இராணுவ ஆலோசகராகப் பணியாற்றிய வருமான ஜெனரல் புளூச்சர் தலைமையில் மஞ்சூரியாவிற்குள் புகுந்து ஏற்கெனவே வேரூன்றிவிட்ட உடன்படிக்கைகளைப் போர்த் தலைவர் வேறு வழியின்றி மதித்து நடக்குமாறு செய்தனர். இந் நிகழ்ச்சி மாஸ்கோவுக்கும் நான்கிங்கிற்கும் இடையே நிலவிவந்த தூதியல் உறவைத் துண்டிக்கச் செய்தது.

சுதந்திரப் போர் வெறியர், தன்னலமிக்க மாகாண கவர்னர் களுக்கும் (தலைவர்கள்) மற்றும் உட்பகையுடைய கியூமின்டாங் கட்சி களுக்குமிடையே நிலவி வந்த நிலையற்ற சக்தி சமநிலையை நெடுநாள் பேணிக்காக்க இயலாது போயிற்று. கலகம், கிளர்ச்சி, திடீர்ப் புரட்சி முதலியவற்றால் நான்கிங் அரசாங்கம் அழிவுக்கு இலக்காகிக் கொண்டு இருந்தது. 1930 ஆம் ஆண்டின் துவக்கத்தில் சியாங் கே-ஷேக் கிற்கும் பெங், யென்-ஷி-ஷான் ஆகியோருக்குமிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. அக்டோபர் மாத இறுதியில் சியாங் மறுபடியும் வெற்றி மாலை சூடினர். ஆனால், கடும் விலை கொடுத்து அவர் அவ் வெற்றியை வாங்கினர். மக்கள் ஆயிரக்கணக்கில் போரில் மடிந்தனர், பொருட்சேதமும் ஆட்சேதமும் குறைவில்லை. இறுதியில் நாடு வளமெல்லாம் இழந்து வறுமையில் வாடிநின்றதுதான் மிச்சம். பெங், யென் ஆகிய இருவரையும் தீர்த்துக்கட்டுவதில் சாங் ஷூ-லியாங் சியாங்குடன் ஒத்துழைத்தார். எனினும், அவர் 1931-ல் சப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியதும் இருந்த இடம் தெரியாது மறைந்துபோனார். அதற்குப் பின்னர் ஏற்பட்ட சீன-சப்பானியச் சண்டைகளால் நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்பட்டது. போரினால் சப்பானின் வாணிபம் நாடுமுழுதும் ஏற்பட்ட பகிஷ்கரிப்பால் (boycot) குலைந்துபோனாலும், சப்பானின் இராணுவ வலிமையைக்கண்டு சீன அரசாங்கம் ஒன்றும் செய்ய இயலாது தத்தளித்தது. சியாங் எப்படித் தான் அதிகார பீடத்தில் தொடர்ந்து அமர முடியும் என்ற வினாவிற்கு விடை காணுவதில் கவனத்தைச் செலுத்தினாரேயன்றி, எதிரியை முறியடிக்க மக்களை ஆயத்தமாக்குவதில் அவர் கவனம் சிறிதும் செல்லவில்லை. சோவியத் யூனியனுடன் தூதியல் உறவு மீண்டும் மேற்கொள்ளப்பட்டது. எனினும், சோவியத்-கியூமின் டாங் ஒத்துழைப்பு பகற்கனவாயிற்று. சப்பான் மீண்டும் புதிதாகத் துராக்கிரமிப்புச் செய்தகாலை, சியாங்கின் முனைப்பற்ற போக்கைக் கண்டு தேச பக்தர்களும், மாணவர்களும் அறிவாளிகளும் 1936ஆம் ஆண்டு வசந்தத்தில் டோக்கியோவுக்கு எதிராகப் போரில் குதிக்கத் தயாரானார்கள். அவர்கள் குருதி கொதித்தது. கம்யூனிஸ்ட்டுகளின்

தல சோவியத்துகள் சுமார் 50,000,000 மக்கள்மீது பல மாகாணங்களில் அதிகாரம் செலுத்தி வந்தன. கம்யூனிஸ்ட்டுகளை எதிர்ப்பான் வேண்டி, சியாங் மேற்கொண்ட போர்கள் கடுமையான ஆட்சேதத்தையும் பொருட்சேதத்தையும் விளைத்தனவேயன்றி, சப்பானின் துராக்கிரமிப்பை எதிர்க்கத் தக்க முறையில் நாட்டின் ஒற்றுமையை ஓங்கச் செய்யவில்லை. 1934–35-ல் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தம்மைப் பின்பற்றுவோருள் உறுதி பொருந்தியவர்களையும் வெறி பிடித்தவர்களையும் பொறுக்கி எடுத்துக், கேட்போர் நம்பமுடியாதவாறு கியாங்சிலிருந்து ஷென்சி வரை 'நீண்ட படையெடுப்புச்' செய்தனர். அதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. ஷென்சி மாகாணத்திலுள்ள யெனானைத் தங்கள் 'தலைநகராக்கிக்' கொண்டனர்.

சியாங் கே-ஷேக் ஷென்சியிலுள்ள சியான்ஃபு நகருக்குச் சென்றிருந்த வேளை பார்த்து சாங் ஷூ-லியாங்கின் ஆட்கள் (1936 டிசம்பர் 12—24-ல்) அவரைக் 'கடத்திச் சென்று' விட்டனர்: சியாங் செஞ்சீனாவுடன் பொருதுவதை நிறுத்திஞலொழிய, சப்பான் எதிர்ப்பு 'ஐக்கிய முன்னணிக்கு' வழிவகுத்தாலொழிய, சப்பானுக்கு எதிராகக் கம்யூனிஸ்ட்டுகளுடனும் வட இராணுவத் தலைவர்களுடனும் ஒத்துழைத்தாலன்றி, அவரை விடுவிக்கப்போவதில்லை என்று அவர்கள் பிடிவாதமாக இருந்தனர். இந் நிபந்தனைகட்கு இணங்க சியாங் விடுதலை செய்யப்பட்டார். இச் சம்பவத்தால் (சீனாவில்) உண்மையான ஒற்றுமை ஏற்பட்டுவிடும்போல் தோன்றியது. அவ்வாறு ஏற்பட்டுவிட்டால் என செய்வது என்று எண்ணிய சப்பான் சீனாவை மீண்டும் 1937, ஜூலையில் கடுமையாகத் தாக்கிற்று. அதில் புகைய ஆரம்பித்த நெருப்புதான் வரவர பரவிக் கொண்டே சென்று இறுதியில் இரண்டாம் உலகப்போர் என்ற பெருந்தீயாகப் பற்றிக்கொண்டுவிட்டது. அத்தீக்கு இரையானவர் கோடி. அதில் தம் இல்லத்தை இழந்து தவித்தவர் பல கோடி. கடைசியாகத் புதியதோர் கியூமின்டாங்-கம்யூனிஸ்ட்டுக் கூட்டு உருவானது. மக்கள் படை ஒன்று உருவானது. உள்நாட்டு மாகாணங்களில் கூட்டுறவுத் தொழிலும் விவசாயமும் வளர்ந்தன. இவற்றின் விளைவாகப் பொதுவாகச் சீனப் பொதுமக்களனைவரும் உண்மையிலேயே புத்துயிர் பெற்றுத் திகழ்ந்தனர். படையெடுப்புக் காரர்கள் கடற்கரை நகரங்களையும் யாங்ட்சி நதிப் பள்ளத்தாக்கையும் பிடித்துக்கொண்டபோதிலும் அவர்களின் முன்னேற்றம் (கம்யூனிஸ்ட்டுக்) கட்சியைச் சேர்ந்த விவசாயிகள், மற்றும் தக்க உடையுமின்றி ஆயுதமுமின்றி முடங்கிக் கிடந்த போர்வீரர்கள் ஆகியோரின் எதிர்ப்பால் தடைப்பட்டது. சுங்கிங்கிலிருந்த சியாங் அரசாங்கத்திற்கு அதற்குமேல் எதுவும் செய்ய இயலவில்லை.

சீனாவின் போர் நிலைமை அதன் உண்மையான நிலையைப் படம் பிடித்துக் காட்டவில்லை என்பது பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சி

களினின்று தெரியவந்தது. மேற்போக்காகப் பார்க்குமிடத்து மஞ்சூரியா, வட மாகாணங்கள், கடற்கரை நகரங்கள், யாங்சி பள்ளத் தாக்கின் பெரும்பகுதி ஆகியவை சப்பானியப் படையெடுப்பாளர் கையில் இருந்தன. அவ்வமயம் யாங்சி பள்ளத்தாக்கு வாங்-சிங்-வீ யின் பொம்மை அரசாங்கத்தின்கீழ் (1944, நவ. 10.) இருந்து வந்தது. சுங்கிங்கிலிருந்த சியாங் கே-ஷேக்கின் கியூமின்டாங்ஆட்சி வடக்கே இருந்த கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுடன் கைகோத்துக் கொண்டு மற்றப் பிராந்தியங்களில் கடுமையான எதிர்ப்புத் தெரி வித்து வந்தது. இது வெளிப்படையாக நிலவிவந்த நிலைமையாகும். உண்மையான நிலைமை முற்றிலும் வேருக இருந்தது. 'சப்பான் வசமிருந்த' மாகாணங்களனைத்தும் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் கையில் இருந்து வந்தன. தென்னகத்தின் உண்மையான நிலைமையை அதிகார பீடத்தில் வீற்றிருந்தோரின் குடும்ப உறவுமுறை தெளி வாக்கிற்று. சன் யாத்-செனும், சியாங் கே-ஷேக்கும் சகோதரிகளை மணந்துகொண்டனர். அவர்கள் இருவரும் 'சார்லி' சூங் என்பவரின் புதல்வியர் ஆவர். அவர் ஓர் அமெரிக்க நாகரிகப் பற்றுள்ள மெத்த டிஸ்ட் மதத்தைச் சேர்ந்தவர். அவர் கிருத்துவர்களின் வேதமாகிய பைபிளை விற்றுச் செல்வம் திரட்டினர். அவருக்கு மூன்று புதல்வி யரும் மூன்று புதல்வரும் இருந்தனர். அவருடைய மூத்த மகளான அய்-லிங்கு சூங்கை 'யால்மேன்' எச். எச். குங் மணந்து கொண்டார். இவர் செல்வம் திரட்டுவதிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். இரண்டாவது மகளான சிங்-லிங்கு சூங்கை சன்யாத்-சென் மணந்து கொண்டார். எல்லாவற்றிற்கும் இளைய மகளான மீ-லிங்கு சூங் 1927-ல் சியாங் கே-ஷேக்கின் இல்லக்கிழத்தியாயினர். இம் மூவருள் முதல் பெண் திரவியம் தேடுவதிலும், இரண்டாமவள் சுதந்திரம் பெறுவதிலும், மூன்றுமவள் அதிகாரத்தைக் கைப்பற்று வதிலும் நாட்டமுடையவராயிருந்தனர். சியாங்கின் முதற்பற்று அதிகாரத்தின்மீதும் தனியுரிமைமீதும்தான் இருந்தது. 1941, டிசம்பர் மாதம் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்ட அவரது மைத்துனர் டி. வி. சூங் என்பவருக்கும் அதே பற்றுதான். எனவே, குங், சுங் குடும்பத்தார் கியூமின்டாங்கில் நிலவிவந்த ஊழல் (corruption), உறவினர் தனிச்சலுகை (nepotism) ஆகியவற்றிற்குச் சான்றுக விளங்கினர். 'மோசடி' (graft) ஒன்றிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த கைக்கூலி பெறும் இயல்புள்ள சிவில், இராணுவ அதிகாரவர்க்கத்தினரே அவ்வமயம் கியூமின்டாங்கின் உறுப்பினரா யிருந்தனர்.

1937 முதல் சூ-என்-லாய், மாசே-துங் தலைமையில் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் அதிகார மண்டலத்தைப் பத்து ஆண்டுகள் பரப்பி வந்தார்கள். வடக்கே சில மில்லியன் கணக்கில் வாழ்ந்து வந்த விவசாயிகள் பத்து ஆண்டுகளில் 100,000,000 பேர்களாயினர்.

100,000 வீரர்களைமட்டுமே கொண்டிருந்த அவர்களின் இராணுவ வலிமை 1,000,000 நிரந்தரத் துருப்புகளையும் 2,000,000 விவசாயி கட்சி உறுப்பினரையும் கொண்ட பெரும்படையாக மாறிற்று. சோவியத் உதவியால் இவ் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டதென்று சொல்வதற்கில்லை. மாருக, கியூமின்டாங் ஆட்சியில் தலைவிரித்தாடிய மோசடி, கைக்கூலி, சர்வாதிகாரம், அடக்குமுறை ஆகிய கொடுமை களுக்கு முன்னர் கம்யூனிஸ்ட்டுகள் என்ன பாவந்தான் செய்த போதிலும் பரவாயில்லை என்பதுபோல் ஆயிரக்கணக்கான சீன விவசாயிகள், பாட்டாளிகள், பெரும்பாலான வியாபாரிகள் ஆகியோ ருடைய மனத்தில் பட்டது. இவ்வுணர்வுதான் கண்டோர் வியக்கும், கேட்போர் புகழும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தது. கம்யூனிஸ்ட்டுகளின் பொருளாதாரத் திட்டம் கம்யூனிசத்தையோ, அன்றி சோசியலிசத்தையோ தழுவி அமையவில்லை. நெடுநாட் களுக்குப் பின்னரே அது சோசியலிச உருப்பெற்றது. அப்படியெனில், எத்தகைய திட்டம் அது? அதன் நோக்கம்—இலக்குகள் (targets) யாவை, என்ற வினு எழுகிறது அல்லவா? பெரும்பெரும் பண்ணைகளைச் சிறிய தனியார் நிலங்களாகத் துண்டாடல், குத்தகையைக் குறைத்தல், சுரண்டலை ஒழித்தல், வரியளவுகளை நேர் மையுடன் திட்டமிட்டுச் செய்து வசூலித்தல்—இவையே அவர்களின் பொருளாதாரத் திட்டத்தின் நோக்கம் ஆகும். மக்களுக்கு எழுத்தறி வித்தல், கல்வியைப் பரப்பல், கூட்டுறவுப் பண்ணைகளை வளர்த்தல், நவீன விவசாய முறைகளுக்கு ஊக்கம் அளித்தல், விவசாயிகளை மனிதத் தன்மையுடன் நடத்துதல் ஆகியவையும் அத் திட்டத்தின் குறிக்கோள்களாக அமைந்தன. கம்யூனிஸ்ட்டுகள் பெற்றிருந்த எதிர்க்கும் சக்தியையோ, அன்றி மனவுறுதியையோ சப்பானியப் படையெடுப்பாளரால் அழிக்க முடியவில்லை. ஆனால், 1942-ல் ஏற்பட்ட பகைவன் படையெடுப்பு சியாங் கே-ஷேக்கின் சீனுவை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளினின்றும் பிரித்துவிட்டது. மேலும், சுங்கிங் (அரசாங்கத்தைப்) பேருக்காகவாவது போரில் எப்படி விட்டுவைப்பது என்ற வினுவையும் எழுப்பிற்று.

அமெரிக்கத் தலையீடு, ரஷ்யாவில் 1917-க்கும் 1921-க்கு மிடையே அமெரிக்கா எவ்வாறு நடந்துகொண்டதோ அதேபோல்தான் 1942-க்கும் 1949-க்குமிடையே சீனுவிலும் நடந்துகொண்டது. விளங்கக் கூறின் அதற்கும் அதன் நேசநாட்டிற்கும் எதிரான கம்யூனிசத்தைப் பின்பற்றுவோரைத் தோற்கடிக்கவும், சமூக அமைதியை நிலைநாட்டவும், பகைவரை முறியடிக்கவும் வேண்டிய உதவியை நேசநாட்டுக்கு அளித்துவந்தது. இரண்டு முறையும் அதன் முயற்சிகள் பலிக்கவில்லையென்றுல் அதற்கு அது முயற்சி எடுக்காமல் இருந்துவிட்டதென்றே, அன்றி மேலிடத்து 'துரோகத்தினுல் அதன் நடவடிக்கைகள் பயன்தரவில்லையென்றே

கருதுவதற்குச் சிறிதும் இடமில்லை. அமெரிக்கா போட்ட தப்புக் கணக்கும் தவறான முடிவுகளுமே காரணம் ஆகும். பொதுவாக ஒரு நாட்டை எடுத்துக்கொண்டால், அதன் ஜனத்தொகையில் பெரும் பகுதியினர் நாட்டுப்பற்றுடனே விளங்கிவருகிறார்கள் எனவே, உள்நாட்டுப் போர்களில் வெளிநாட்டு உதவியை எதிர்பார்த்து இருப்பவர்கள் இறுதியில் தோல்வியே அடைவர். வலிமை அல்லது சக்தி என்பது என்றுமே ஒரு வரம்புக்குட்பட்டது. இது வல்லரசுகளின் வல்லரசுக்கும் (அமெரிக்காவிற்கும்) நன்கு பொருந்தும், ஆகையினால்தான் யூரேசியாவின் பரந்து விரிந்த நிலப்பகுதியில் வாழ்ந்துவரும் கோடானுகோடி மக்களின் ஊழ்வினையைக் கட்டுப்படுத்தும் சக்தி இன்னும் இந்த ராட்சச வல்லரசிற்குப் (அமெரிக்காவிற்குப்) பிறக்கவில்லை. இந்நாடு மேற்கொண்ட முடிவுகளையும், அது போட்ட தப்பு எடைகளையும்பற்றி இங்குச் சுருக்கமாகத்தான் குறிப்பிடமுடியும். தோல்வியில் பிறந்த கொடிய வெறுப்பையும். கடுமையான பழியையும் 'வரலாற்றின் முடிவுக்கு' விட்டுவிடுவோம்.

1942ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் மாஜி லெப்டினென்ட் ஜெனரல் ஜோசப் டபிள்யு. ஸ்டில்வெல் சீனாவுக்கு அனுப்பப் பட்டார்; அங்கு வெகுவிரைவில் சீன-பர்மா-இந்தியப் போர்க்களத்தில் படைத் தலைவராகவும் (Commander-in-Chief) சியாங்கின் படைகளின் தலைவராகவும் (Chief of Staff) நியமிக்கப்பட்டார். வளமான ஆதாரங்கள் மிகக் குறைவாக இருந்த நேரம் அது அவற்றுள் சேமிக்க முடிந்தவற்றைச் சேமிப்பதும், சப்பானை சீனர்கள் கடுமையாக எதிர்க்குமாறு செய்வதும் அவர் பொறுப்பாயிற்று. பர்மா எதிரி கைவசமாயிற்று. எதிரிக்கு 'நல்ல அடிகொடுத்திருக்கிறோம்' என்று வினிகார்கோ கூறினார். சுங்கிங்கிலிருந்த சியாங்கின் அரசாங்கத்திற்கு அமெரிக்கா உதவியளித்து வந்தது. அது பிரிட்டனுடன் சேர்ந்து 1943, சனவரி 11ஆம் தேதி கையொப்பமான உடன்படிக்கைகள் மூலம் அயலிட உரிமைகளை ரத்து செய்து விட்டது. பிப்ரவரி மாதம் மேடம் சியாங் வாஷிங்டன் சென்றார். காங்கிரசில் உரையாற்றினார். கேட்போர் மயங்கும்படி தன் சொல் வன்மையால் ஜனநாயகம், சுதந்திரம், நீதி ஆகியவைபற்றிப் பேசினார். ஸ்டில்வெல் சீனத் துருப்புகளுக்குப் பயிற்சியளிக்கவும், பர்மாவை மீண்டும் கைப்பற்றவும் முயற்சித்தார். ஆனால், சியாங் அதற்கு இணங்கவில்லை. ஊழல் நிறைந்த அவர் ஆட்சிக்குத் (பர்மாவைக் கைப்பற்றும் அளவுக்குத்) திறமை இல்லை. ஸ்டில்வெல் நிர்வாகத் துறையில் 'சீர்திருத்தம்' கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்கும் படை முதல்வர் (Generalissimo)—சியாங் இசையாதுபோகவே அவரைக் கண்டனம் செய்தார். ஸ்டில்வெல் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று சியாங் பிடிவாதம் செய்தார். போர் முயற்சியில் கம்யூனிஸ்ட்-தேசிய ஒத்துழைப்பால்

என்ன செய்ய முடியும் என்பதை ஆராய்ந்தறிவதற்காக 1944ஆம் ஆண்டின் வசந்தத்தில் உப-ஜனாதிபதி வாலாஸ் சீனுவுக்கு அனுப்பப்பட்டார். அவர் ஓவன் லாட்டிமோர் மற்றும் ஜான் கார்ட்டர் வின்சென்ட் ஆகியோர் முன்னிலையில், அவர்களின் இணக்கத்திற் கேற்ப ஸ்டில்வெலை நீக்கிவிட்டு வெடிமீயரை நியமிக்கவேண்டும் என்று ரூஸ்வெல்ட்டுக்கு சிபாரிசு செய்தார். கியூமின்டாங் ஆட்சியும் சற்று சுதந்திரமாக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறினார். அதன் விளைவாக 1944, அக்டோபர் 19ஆம் நாள் ஸ்டில்வெல் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவ்விடத்தில் ஜெனரல் ஆல்பர்ட் வெடிமீயர் நியமிக்கப்பட்டார். அவர் வெகு விரைவில் சியாங்குடன் சுமுகமான உறவை ஸ்தாபித்தார். ஏற்கெனவே சீனுவில் ரூஸ்வெல்ட்டின் தனி ஏஜென்டாக இருந்த மேஜர் ஜெனரல் பாட்ரிக் ஹர்லி 1945, சனவரியில் (அமெரிக்கத்) தூதராக நியமிக்கப்பட்டார்.

ஹர்லி போருக்கு அப்புறம் உருவான அமெரிக்கக் கொள்கையின் முதற் சிற்பியாவர். ஜான் டேவீசும், ஜான் ஸ்டூவர்ட் செர்விசுச் அவருடைய திறமை மிக்க ஆலோசகர்கள். ரஷ்யா ஆக்கிரமிப்புச் செய்யத்திட்டமிட்டு வருகிறது என்றும், கியூமின்டாங் சிதைந்து கொண்டுவருகிறது என்றும், எந்த உள்நாட்டுப் போரிலும் கம்யூனிஸ்ட்டுகள் வென்றுவிடுவர் என்றும், எனவே, அமெரிக்கா கம்யூனிஸ்ட்—தேசியக் கூட்டுக்கு வழிசெய்ய வேண்டும் என்றும் அவர்கள் இருவரும் ஹர்லிக்கு எச்சரித்தனர். அமெரிக்கத் தூதர் 1944 ஆகஸ்டில் ஒரு முறையும், 1945 ஏப்ரலில் ஒரு முறையும் மாஸ்கோவுக்கு விஜயம் செய்தார். இருமுறையும் மொலொட்டோவும் ஸ்டாலினும் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் 'உண்மையான கம்யூனிஸ்ட்டுகள்' அல்லர் என்றும், சியாங் கே-ஷேக்கின் தலைமையில் சீன ஒற்றுமையை வளர்க்க முயலும் அமெரிக்கக் கொள்கையை யூ எஸ்.எஸ்.ஆர். ஆதரிக்கிறது என்றும் கூறினர். ஹர்லி சோவியத் உட்கருத்தைச் சரியாக உணராமல் மிகவும் நம்பிக்கையுடன் இருந்துவருகிறார் என்று கென்னன் ஹரிமேனை எச்சரித்தார். சீனக் கம்யூனிஸ்டுகள் 'ஆயுதந்தாங்கிய ஓக்லஹோமா குடியரசுக் கட்சிக்காரர்களைப்' போன்றவர்கள்தாம் என்று ஹர்லி பின்னால் உணர்ந்து உரைத்தார். அவர் 1944 நவம்பரில் கம்யூனிஸ்ட்—தேசிய கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கான முடிவற்ற பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்துக்கொண்டார். சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு அமெரிக்கா ஆயுத உதவி அனுப்பவேண்டும் என்று ஹர்லி யோசித்தார். அவர் யோசனையை (அவரது அறிவுரையாளர் இருவரும் எதிர்த்தபோதிலும்) ரூஸ்வெல்ட் ஆதரித்தார்.

சப்பானை அதிவிரைவில் குறைந்த அமெரிக்க ஆட்சேதத்தில் தோற்கடிக்க வேண்டும் என்று அமெரிக்கா ஆசைப்பட்டது.

அவ்வாசை அப்போது மேற்கொண்ட நடவடிக்கையனைத்திலும் பிரதிபலித்தது. யால்டா உடன்படிக்கையிலும் அப்படியே. வெடிமீயர், மக்ஆர்தர், மார்ஷல், ஐசன்ஹோவர், இணைப்படைத் தலைவர்கள் (Joint Chiefs of Staff) ஆகியோர் எப்படியாவது ரஷ்யாவை சப்பானுக்கு எதிராகப் போரில் கொண்டுவந்து விடுவதன் அவசியத்தைப்பற்றி வலியுறுத்தினர். அதன் விளைவாக பிப்ரவரி 11ஆம் நாள் ஓர் உடன்படிக்கையும், 1945, ஆகஸ்டு 14ஆம் நாள் சீன-சோவியத் உடன்படிக்கையும் வரையப்பட்டன. அவற்றின் கீழ் சோவியத் யூனியன் தேசிய அரசாங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென்றும், அதற்கு ஈடாக மஞ்சூரியாவில் ரஷ்யாவுக்கு இராணுவ ஆதிக்கமும் அரசியல் தனியுரிமைகளும் அளிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இவ் வுரிமைகளை ரஷ்யா, சப்பான் சரணடைந்தபின் தொழில் துணைச் சாதனங்கள் உள்ள தலங்களை எடுத்துக்கொள்ளவும், சப்பானிய ஆயுதங்களை சீன கம்யூனிஸ்ட்டுகள் கைப்பற்றிக்கொள்ளவும், மஞ்சூரியாவில் தங்கள் ஆதிக்கத்தை விஸ்தீரணப்படுத்தவும் பயன்படுத்தியது. இவற்றை எதிர்ப்பான் வேண்டி அமெரிக்கா அரை மில்லியன் தேசியத் துருப்புகளை வட சீனுவுக்கு விமானங்கள் மூலம் அனுப்பிவைத்தது. இதைக் கண்டு சீற்றம் அடைந்த ஹர்லி 1945, நவம்பர் 26ஆம் நாள் பதவியிலிருந்து விலகிக்கொண்டு, தன் ஆலோசகர்களும் வெளி விவகாரத் துறையிலுள்ள 'துரோகிகளும்' சீனுவில் அமெரிக்க நலன்களுக்கு ஏதிராகக் 'கம்யூனிஸ்டுகளுடனும்' 'ஏகாதிபத்தியர்களுடனும்' சேர்ந்துவிட்டனர் என்று குற்றஞ்சாட்டினார்.

இச் சம்பவம் நடந்த மறுநாளே ஜெனரல் மார்ஷல் (அமெரிக்க) ஜனாதிபதியின் தனித் தூதராக நியமிக்கப்பட்டார். கம்யூனிஸ்ட்-தேசியக் கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைத்து அதன்மூலம் உள்நாட்டுப் போரைத் தடுக்குமாறும், ஒற்றுமை பொருந்திய ஜனநாயக சீனுவை உருவாக்குமாறும், இதற்கு ஒத்துவராவிட்டால் தேசிய அரசாங்கத்திற்குக் கிடைத்துவரும் பொருளாதார உதவி கிடைக்காமற்போகும் என்று அச்சுறுத்துமாறும் அவர் அறிவுறுத்தப் பட்டார். இக் கொள்கை படுதோல்வியடைந்துபோகவே, இதற்கு யார் பொறுப்பாளி என்று வீண்வாதம் செய்வதில் காலமும் பொழுதும் வீணையின. அடுத்தாற்போல் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சில பேர், சான்ருக, வால்ட்டர் ஜூடு, ஃபிரெடா உட்லி, வில்லியம் சி. புல்விட் ஆகியோரும், 'சீனுவுக்கு ஆதரவு தேடும் குழு' (Lobby) என்று பின்னல் அழைக்கப்பட்ட ஆர்பர்டு கோல்பர்க்கை சுற்றி வட்டமிட்ட ஒரு குழுவும், சீன கம்யூனிஸ்ட்டுகளை அடியோடு தீர்த்துக்கட்ட சியாங்கிற்கு எல்லா இராணுவ உதவியும் அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். மேலும், அவர்கள் வாஷிங்டனிலிருக்கும்

கம்யூனிசத்தை ஆதரிக்கும் சில உயர்விடத்து நபர்களே இப் படுதோல்விக்கு மூல காரணம் என்றும் உணர்த்தாமல் உணர்த்தினர். வேறு சிலர், சான்ருக, மக்கார்த்தி, ஜென்னர் போன்ற செனட்டர்கள் மார்ஷலே ராஜதுரோகம் செய்துவிட்டார் என்று குற்றஞ்சாட்டினர். தோல்வியின் காரணத்தை திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. சியாங் கே-ஷேக்கை கைவிடுவதற்குப் பதிலாக யு.எஸ்.ஏ. அவருக்கு எல்லாவித பொருளாதார, இராணுவ உதவியும் அளித்தது. (இவ் வுதவித் தொகையில் பெரும்பகுதி கம்யூனிஸ்ட்டுகளே வேரறுப்பதிலோ அல்லது லஞ்சம் கொடுப்பதிலோ விரயம் செய்யப்பட்டது.) வெற்றி நாள் (V-J Day) முதல் 1949ஆம் ஆண்டு இறுதிவரை அளிக்கப்பட்ட அமெரிக்க உதவியின் மதிப்பு 2,254,000,000 டாலர்கள் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதைப்போல் மூன்று மடங்கு, இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமான தொகை சாதனங்களுக்கும் மாற்றும் செலவிடப்பட்டது. மார்ஷலின் பணி முதலில் வெற்றியடைந்தாலும் இறுதியில் அது தோல்வியடைய நேரிட்டது. இதற்கு கம்யூனிஸ்ட்டுகளுக்கும் தேசியவாதிகளுக்கும் இடையே நிலவிய தீர்க்கமுடியா முரண்பாடுதான் காரணம். இம் முரண்பாட்டிற்கு அமெரிக்கக் கொள்கைமட்டும் காரணம் அன்று. ஆனால், சியாங் தன் எதிரிகள்மீது அவநம்பிக்கை வைத்திருந்த வரை, கம்யூனிசத்திற்கு எதிராக அமெரிக்க உதவி தனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும் என்று நம்பியிருந்தவரை அமெரிக்காவால் இம் முரண்பாட்டைப் போக்கமுடியவில்லை. இக் காரணங்களால் தான் சியாங் கம்யூனிஸ்டுகளின் கோரிக்கைகட்குச் சற்றும் இணங்க விரும்பவில்லை. அதேபோல் கம்யூனிஸ்டுகளும் சியாங்கின்மீது கொண்டிருந்த அவநம்பிக்கையாலும், அமெரிக்கா தன் எதிரிக்கு அளித்துவரும் உதவியைக் கடுமையாக எதிர்த்ததாலும் அவர்கள் தேசியவாதிகளின் கோரிக்கையை நிறைவேற்றச் சிறிதும் விரும்பவில்லை.

பணியில் தோல்வி : மார்ஷல் 'நடுவராக' (mediator) நின்று 1936, சனவரி 10ஆம் நாள் ஒரு தற்காலிகப் போர் நிறுத்த உடன்பாட்டைக் கொண்டுவந்தார். அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம் (constitutional government) ஒன்றையும், ஐக்கிய தேசியப் படையொன்றையும் அமைப்பதற்குரிய சிக்கல்வாய்ந்த விதிமுறைகள் அவரை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கச் செய்தன. ஆனால், இவற்றுல் விளையும் நன்மைக்குச் 'சீன மக்கள் சமாதானத்திலும் வளஞ்சிறந்த வாழ்விலும் கொண்டிருக்கும் தீராத ஆசையைத் தன் நலத்தை முன்னிட்டுத் தோற்கடிக்கக் காத்துக்கொண்டிருக்கும், எதற்கும் ஒத்து வராத ஒரு சிறிய கூட்டத்தினரின் வேலை முறைகளால் எந்தவித ஊறும் ஏற்பட்டுவிடக்கூடாதே' என்று அவர் கவலைப்பட்டார். மஞ்சூரியப் பிரச்சினையையொட்டித் தற்காலிகப் போர் நிறுத்த

உடன்பாடும் முறிந்துபோயிற்று. தேசியவாதிகட்கு அளிக்கப்பட்டு வந்த அமெரிக்க இராணுவ உதவியை கம்யூனிஸ்ட்டுகள் எதிர்த்து வந்தார்கள்; :மார்ஷலோ 'அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கருவி' என்று வன்மையாகக் கண்டனம் செய்தார்கள். கம்யூனிஸ்ட்டுகளின் படை வலிமையைவிட தேசியப்படை வலிமை மூன்று மடங்கு அதிகமாக இருந்தது. இவ் வுண்மையையறிந்த படை முதல்வர் (சியாங்) வட சீனவிலிருந்த கம்யூனிஸ்ட்டுகளைப் படைவலிமை கொண்டு வேரறுக்க முடிவு செய்தார். அவர் மார்ஷல், தூதர் ஜே. லெப்டன் ஸ்டூவர்ட் ஆகியோரின் எச்சரிக்கையைக் காதில் போட்டுக்கொள்ள வில்லை. இராணுவப் படையெடுப்புச் செய்ய வேண்டாம் என்று ட்ரூமன் 1946, ஆகஸ்டு10 ஆம்நாள் பகிரங்கமாக சியாங்கைக் கேட்டுக் கொண்டார். இச் சிக்கலுக்கு 'அமைதியான முறையில்' வழிகாண்பதில் ஏற்படும் 'உண்மையான முன்னேற்றம்' பற்றி 'தக்க சான்று' தருமாறு கேட்டுக்கொண்டார். மேலும் அவர் 'தீவிரவாதிகளின் சுயநலத்தைக்' கண்டு வருந்தினர். அன்றியும், காலத்தின் போக்கைப் புரிந்துகொள்ளாமல் நாட்டின் பொதுநலத் திற்கு முட்டுக்கட்டை போடுபவர்களின் சுயநலத்தைக் கண்டும் அவர் வருந்தினர். 'இவ் அவல நிலைமையை அமெரிக்க மக்கள் கடுமையாக வெறுக்கிறார்கள்' என்றும் கூறிப் பார்த்தார். இவையனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு ஆயின.

அமெரிக்க இராணுவ உதவியைப் பெற்ற சியாங் கம்யூனிஸ்ட்டு களைப் படைவலிமையால் தீர்த்துக்கட்டிவிடலாம் என்று இறுமாந்து நின்றார். சீனவிலேயே தாராளவாதக் கொள்கையைப் பின்பற்றி வந்த ஒரே ஒரு கட்சியான ஜனநாயக லீக்கின் தலைவர்களும் 1946, ஜூலையில் படுகொலைக்கு ஆளானார்கள். லீகும் 1947, அக்டோபரில் ஒழிக்கப்பட்டது. அதற்கிடையில் 1946–47-ல் யு.எஸ். ஏ. ஏறத்தாழ ஓராண்டுவரை சீனவுக்கு ஆயுதங்கள் அனுப்புவதைத் தடை செய்தது (embargo). எனினும், அதே ஆண்டில் அது சீனவிலும் மேற்கு பசிஃபிக்கிலும் 'உபரியாக' (surplus) இருந்த சுமார் 1,000,000,000 டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை சியாங் கே-ஷேக் கைக்கு மாற்றியது. அதோடும் நில்லாது (1946, நவம்பர் 4-ல்) அவருடன் நட்பும், வாணிப உடன்படிக்கையும் செய்தது. பிணக்குடைய இரு கட்சிகளில் ஒன்றுக்கு மட்டும் உதவியளித்துக்கொண்டும் மற்றதற்கு உதவியே அளிக்காமலும் இருந்துவருங்கால் உள்நாட்டுப் போரில் அவ்விரு கட்சிகளுக்கு மிடையே 'நடுவராக நின்று தீர்ப்பு அளித்தல்' என்பது என்றுமே முடியாத காரியம் அல்லவா? அமைதியை நிலைநாட்டுமாறு அமெரிக்கா எவ்வளவோ கேட்டுக்கொண்டது. சியாங்கின் ஆட்சியில் நிலவிவந்த லஞ்சம் முதலிய நிர்வாகக் குறைகளைக் கண்டனம் செய்து பார்த்தது. ஆனால், ஒன்றும்

பலிக்கவில்லை. அமெரிக்க உதவி அவருக்குக் கிடைக்கும்வரை, சியாங்கிற்கு இவையனைத்தும் செவிடன் காதில் ஊதின சங்கு போலாயிற்று. 1946, நவம்பர் மாத நடுவில் 'ஜனநாயக' அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்காக நான்கிங்கில் தேசியச் சட்ட சபை (National Assembly) கூட்டப்பட்டது. அதில் ஜனநாயக லீகும், கம்யூனிஸ்ட்டுகளும் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர். சூ-என்-லாய் உடன்படிக்கைகளை ரத்துச் செய்தார். 1947, சனவரி 7ஆம் நாள் ட்ரூமென் மார்ஷலைப் பதவியிலிருந்து அழைத்து (recall) அவரை வெளிநாட்டு அமைச்சராக நியமித்தார். தகராறுள்ளவர்களுக்கிடையே நிலவிவந்த 'ஆழமான அவநம்பிக்கை' பற்றியும், கியூமின்டாங்கில் 'ஆதிக்கத்திலிருந்த பிற்போக்குவாதிகள் கூட்டம்' பின்பற்றிவந்த, எதையெடுத்தாலும் முட்டுக்கட்டை போடும்-'அழிவைப்பெய்யும்' கொள்கை குறித்தும், 'பற்றுறுதிமிக்க' கம்யூனிஸ்டுகளின் அழிவு வேலைகள், 'கொடிய பிரசாரம்' பற்றியும் மார்ஷல் எடுத்துரைத்தார். இக் கம்யூனிஸ்ட்டுகளையே சியாங் தீர்த்துக்கட்ட விரும்பினர் என்ற உண்மை அவருடைய நடத்தையிலிருந்து நன்கு தெரியவந்தது. மேலும், மார்ஷல் 'தாராளவாதிகள் தலைமையை—அதிலும் குறிப்பாக சியாங் கே-ஷேக்கின் தலைமையையே' விரும்பினர்.

கம்யூனிஸ்ட்டுகளை ஒழித்துக்கட்டும் போரில் கியூமின்டாங் ஈடுபட்டிருந்தது. அப்போது சியாங்கிற்கு யு.என்.ஆர்.ஆர்.ஏ. அரை பில்லியன் டாலர் மதிப்புள்ள பொருள் உதவி செய்தது. சிவில், இராணுவ உதவி அமெரிக்காவிலிருந்து வெள்ளப் பெருக்கெடுத்து (கியூமின்டாங்கிற்கு) ஓடியது. 271 அமெரிக்க கடற்படைக் கப்பல்கள், குண்டுகள், வெடி மருந்துகள், விமானங்கள், இதர போர்க்கலங்கள் அளிக்கப்பட்டன. தேசிய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்கென்று சுமார் 6,000 யு.எஸ் துருப்புகள் நிறுத்திவைக்கப்பட்டன. அமெரிக்க உதவி இரட்டிக்கப்பட்டிருந்தாலோ, அல்லது மும்மடங்காக்கப்பட்டிருந்தாலோ, அன்றி அமெரிக்கா தன் படையையே அனுப்பிப் போரில் பங்கு கொண்டிருந்தாலோ சியாங் கம்யூனிஸ்ட்டுகளைத் தீர்த்துக்கட்டியிருப்பார் என்று அனேக அமெரிக்கர்கள் கருதினர். இக் கருத்துச் சரியென்றோ தவறென்றோ கருதுவதற்கு இடமில்லை. எனினும், கியூமின்டாங் போரில் தோல்வியுற்றதற்குப் படைபலக் குறைவு காரணமன்று. சீன அறிவாளிகளும் விவசாயிகளும் தங்கள் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுமாறு தேசிய அரசாங்கம் நடந்துகொண்ட முறையே மூல காரணம் ஆகும் என்று ஐயந்திரிபறக் கூறலாம். 1947 சனவரி மாதத்தில் சியாங்கின் சிப்பாய்கள் கூட்டம் ஆயிரக்கணக்கான பார்மோசா மக்களை வாளுக்கிரையாக்கியது. கியூமின்டாங் ஆட்சியில் தலைவிரித்தாடிய ஊழல்களையும் கொடுமையையும் எதிர்த்

தார்களென்ற குற்றத்திற்காக அவர்கள் குத்திக் கொல்லப்பட்டார்கள். சியாங்கின் படைவீரர்கள் இக் கொடிய செயலில் ஈடுபட்டிருந்தக் கால், அவரது காவல்படையினர் தாராளவாதிகள் ஒருவர்கூட இல்லாமல் தீர்த்துக்கட்டினர். அவருடைய துருப்புகள், விவசாயச் சீர்திருத்தம் செய்யுமாறு விவசாயிகள் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளை அடியோடு ஒழித்தனர். இவையெல்லாம் போதாவென்று அவருடைய நிர்வாகிகளும் கையாட்களும் சுரண்டல், கொள்ளையடித்தல், பணவீக்கம், வாணிபச் சூதாட்டம் (speculation), எதிரிக்கு அமெரிக்கப் படைக்கலங்களை விற்றல் போன்ற முறைகளைக் கையாண்டு பெருத்த பணம் சம்பாதித்தனர். அவ்வமயம் அவரது விமானிகள் அமெரிக்கக் குண்டுகளை அமெரிக்க விமானங்களில் ஏற்றி உதவியற்றுத் தவித்துக் கொண்டிருந்த பொதுமக்கள்மீது குண்டுமாரி பொழிந்தனர். இக் கொடுமைகளைக் கண்ட சீன அறிவாளிகள், விவசாயிகள், பாட்டாளிகள், சிப்பாய்கள் ஆகியோர் வேறு வழியின்றி அவர்களுக்கு எது குறைந்த தீங்குடைய செயலாகத் தோன்றிற்றோ அதில் இறங்கினர்.

மோ காட்டிய வழி : சீனாவின் 'நிலைமையை அறிந்து வருவதற்காக' வாஷிங்டன் 1947 ஜூலையில் ஜெனரல் வெடிமீயரை அனுப்பி வைத்தது. தமது செப். 19ஆம் நாளைய அறிக்கையில் (1949 ஆகஸ்டு வரை அது ரகசியமாக இருந்தது) அவர் கம்யூனிசம் எண்டிசையிலிருந்தும் எதிர்க்கப்பட வேண்டுமென்றும், கருத்துரைத்தார்; கம்யூனிசத்தைத் தமது பரம விரோதியாகக் கருதிவரும் கியூமிண்டாங் ஆட்சியை வாயார வாழ்த்தினர்; அவ்வாட்சியில் நடந்துவந்த ஊழல்களையும் திறமையின்மையையும்பற்றிக் கண்டனம் செய்தார். மற்றும் மஞ்சூரியாவின்கீழ் ஐ.நா. தருமகர்த்தர் ஆட்சிக் குழு (U.N. Trusteeship Council) கொண்டுவரப்படவேண்டும் என்று எடுத்துரைத்தார். மேலும், மஞ்சூரியாவில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா. மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சியாங் ஏற்க வேண்டுமென்றும், 'எந்தக் காரணத்திற்காக அமெரிக்கா உதவியளிக்கிறதோ அதற்காகப் பயன்படுத்துமாறு சீனாவைத் தூண்டும்' அமெரிக்க அறிவுரையாளரை ஏற்கவேண்டுமென்றும், இந் நிபந்தனைகட்கு அவர் இணங்கினால் வேண்டிய தார்மீக பொருள், ஆயுத உதவியளிக்கலாமென்றும் அவர் தன் அறிக்கையில் சிபாரிசு செய்தார். சீனக் கம்யூனிஸ்ட்டுகளை 'சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் கையாள்களாகக்' கருத வேண்டும் என்றும் குறிப்பிட்டார். வாஷிங்டன் கொள்கை வகுப்பாளர் இச் சிபாரிசுகளுக்குத் தலைசாய்த்தனர். சியாங்கிற்கு வேண்டிய வுதவியளித்து வந்தனர். ஆனால், வெற்றியளிக்கத்தக்க வழியொன்றை அவர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை. அதற்கு சியாங் ஒத்து வந்தால் தானே? அவரோ பிரஞ்சு அரச குடும்பத்தவராகிய போர்பன்களைப்போல் ஒரு படிப்பினையும் கற்றுக்கொள்ளவில்லை, எதையும்

மறந்தாருமில்லை. மாருக அரசியல் தற்கொலை செய்து கொள்ளத் தயங்கினரில்லை.

1947 மார்ச் மாதம் கம்யூனிஸ்ட்டுகளின் 'தலைநகரான' எனன் தேசிய அரசாங்கப் படையினர் கைவசமாயிற்று. மஞ்சூரியா, ஷான்டுங் ஆகியவைமீதும் அவர்களுடைய 'வெற்றிக்கொடி' பறந்தது. ஆனால், அதே யாண்டு இறுதியில் மஞ்சூரியாவிலிருந்த கியூமின்டாங் துருப்புகளை சிங்கிங், முகடன் ஆகிய இரு நகரங்களிலும் கம்யூனிஸ்ட்டுகள் சுற்றிவளைத்துக் கொண்டனர். அதோடுமட்டுமல்ல, அவ்விரு நகரங்களையும் முறையே 1948 அக்டோபர் 5-லும் நவ. 1-லும் கைப்பற்றினர். 1948 ஏப்ரலில் எனன் மீண்டும் செம் படையினர் கைவசமாயிற்று. ஷான்டுங்கும் அப்படியே. சியாங்கின் 'சரணுக்குப்'பின் ஜனதிபதியாகப் பணியாற்றி வந்த (Acting President) ஜெனரல் வீசுங்-ஜென் 1949 சனவரியில் மாஸ்கோவுடன் ஓர் இராணுவ உடன்படிக்கை செய்யவும், அமெரிக்க உதவியை அதிகமாகப் பெறவும், கம்யூனிஸ்ட்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் முயன்றார். ஆனால், கம்யூனிஸ்ட்டுகளோ சியாங்கும் கியூமின்டாங் உயர் அதிகாரிகளும் 'போர்க் குற்றவாளிகளாகச்' சிறை செய்யப்பட்டாலொழியப் பேச்சுவார்த்தைக்கு வரமுடியாது. என்று ஒரே தலைக்கு நின்றனர். கியூமின்டாங் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் எதிரிபுறம் சேர்ந்துகொண்டதும். அவ்வாட்சி ஆட்டங்கண்டது. பிப்ரவரியில் தேசிய அரசாங்கம் நான்கிற்கு மாற்றப்பட்டது. 1945 ஏப்ரல் 20ஆம் நாள் நான்கிங்கையும் மே 25ஆம் நாள் ஷாங்காய் நகரையும் செம்படைகள் தம் கைவசமாக்கின. 1949 செப். 21 அன்று பெய்ப்பிங்கில், 'சீன மக்கள் குடியரசு' தாபிக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அக். 15 அன்று கான்டன் கம்யூனிஸ்ட்டுகள் கைவசமானது. டிசம்பருக்குள் எல்லாம் எதிரி கைவசமாகவே, கியூமின்டாங் அரசாங்கம் சியாங் தலைமையில் பார்மோசாவுக்கு ஓட்டம் பிடித்தது. அங்குள்ள மக்கள் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். 1950 ஜூன் 27-க்குப் பின் சீனனைவத் தோற்கடிக்க அதற்கு அமெரிக்க உதவியும் கிடைத்தது. இத் தோல்வியைப் பற்றிக் குறிப்பிடுங்கால் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் அக்கீசன் பின்வருமாறு கூறினர் :

'சீன உள்நாட்டுப் போரின் தீய விளைவை அமெரிக்க ஐக்கிய நாடுகள் கட்டுப்படுத்த முடியாமற்போனது ஒரு வருந்தத்தக்கதும் தவிர்க்கொணாததுமான நிகழ்ச்சியாகும். இந்நாடு என்ன செய்ததோ அல்லது அதன் சக்திக்கேற்ப என்ன செய்திருந்திருக்குமோ அதனால் இவ் விளைவை மாற்றியிருக்க முடிந்திருக்காது ; அது எதுவுமே செய்யாமல் இருந்திருந்தால்கூட இவ் விளைவை அதனால் கட்டுப்படுத்தியிருக்க முடியாதுதான். சீன உள்நாட்டு சக்திகளால் விளைந்ததே

இப் போர். இந்நாடு அச் சக்திகளை வசப்படுத்த முயன்றது; ஆனால் முடியவில்லை.'[4]

செம்படையின் வெற்றிகளைப்பற்றி மேலே கண்டோம். இப் படை 'மக்கள் விடுதலைப் படை' என்று அழைக்கப்பட்டது. இப் படை நிலை நாட்டிய வெற்றியின் விளைவாக, சொர்க்கப் பேரரசைச் சேர்ந்த பண்டைய பிராந்தியங்கள் (பார்மோசாவையும் நெடுநாள் சோவியத் காப்பரசு நாடாக விளங்கிவரும் வெளி மங்கோலிய மக்கள் குடியரசையும் தவிர) அனைத்தும் மார்க்சீயத்தைக் கடைப்பிடித்த சர்வாதிகாரக் கட்சி (கம்யூனிஸ்ட் கட்சி) வசமாயின. அக் கட்சி அறிவுரைகட்கு கிரெம்ளினை எதிர்நோக்கி நின்றது. ஆனால், மாஸ்கோவோ செம்படையினர் வெற்றியைக் கண்டு வியந்தது. வாஷிங்டனை பெருத்த ஏமாற்றமடைந்தது. புது ஆட்சி சீனாவின் 20ஆம் நூற்றாண்டிற்குரிய சிக்கலைத் தீர்ப்பதில் முனைந்தது. தொழில்மயப் பொருளாதாரத்திற்கு அடிகோலுதலும் மற்ற வல்லரசுகளுக்குச் சரிநிகர்சமானமாக நிற்கும் அளவுக்குச் செஞ்சீனை ஒரு 'வல்லரசாக' மாறுவதற்கு இன்றியமையாத வகையில் அதன் அதிகார அமைப்பை மாற்றியமைத்தலும் புது ஆட்சியின் உள்நாட்டுப் பிரச்சினையாகக் கருதப்பட்டது. இக் குறிக்கோளை எய்த சீனர்கள் கையாண்ட முறைகளைக் கண்டு அமெரிக்கா திடுக்கிட்டது. எனினும், சீனா விரைவிலோ அன்றித் தாமதித்தோ அதன் கம்யூனிஸ்ட் ஆட்சியாளரை ஒருநாள் கைவிட்டுவிடும் என்று அது நம்பிக்கை பூண்டது. ஆளுங்கட்சியின் அரசாங்கம் ஒரு கூட்டு அரசாங்கமாகும். அதில் கம்யூனிஸ்ட்டுகள், ஜனநாயக லீக், 'கியூமின்டாங் புரட்சிக் குழு' ஆகியவற்றின் பிரதிநிதிகளும், மற்றச் சில்லறைக் கூட்டத்தினரும் பங்கு கொண்டனர். யூ.எஸ்.எஸ்.ஆரில் இருந்ததுபோல் இங்கும் ஆளுங்கட்சியில் சுமார் 6,000,000 உறுப்பினர் இருந்தனர். கட்சியமைப்பு முறையும் மஸ்கோவிய முறையைத் தழுவி அமைக்கப்பட்டது. கட்சி காங்கிரஸ், (கட்சி) மத்தியக் குழு ஆகிய மேலிட ஸ்தாபனங்களையல்லாமல் அனேக 'கும்பல் அமைப்புகளும்' இருந்தன. பொலிட்பீரோவில் நாட்டின் தலைவர் மா-சே-துங், கட்சித் தலைமைப் பொதுச் செயலாளர் (Secretary-General) லியு-ஷோ-சீ, தலைமையமைச்சரும் வெளிநாட்டு அமைச்சருமான சூ-என்-லாய், படைத்தலைவர் சூ-தே, நிதி

[4] அமெரிக்க வெளிவிவகாரத்துறை தன் 3,573 ஆவது வெளியீடாக அமெரிக்க சீனத் தொடர்பு, 1944—49' என்ற 1054 பக்கங்கள் அடங்கிய 'வெள்ளை அறிக்கை' ஒன்றை 1949. ஆகஸ்டு மாதம வெளியிட்டது. இவ் வெளியீடு விரிவானமுறையில் அமெரிக்கக கொள்கையின போககு சரியென்று காட்டுகிறது. இதுவே இத்துறை ஆராய்ச்சியில் வருங்காலத்தைப் பொறுத்தவரை அமெரிக்கக் கொள்கைப் போக்கிலிருந்து மாறுபடும் முதல் நூலாகும். மற்றது யு.எஸ். செனட்டின், பூடைத்துறை வெளிநாட்டுத் தொடர்புகள் கமிட்டி வெளியிட்ட 'தூரக் கிழக்கு இராணுவ நிலைமைபற்றிய விசாரணைகள்' என்ற நூலாகும். இது 82ஆவது காங்கிரசின் 1951 மே முதல ஜூன் வரை நடந்த முதற்கூட்டத்தில் அமைக்கப்பட்ட கமிட்டியாகும்.

பொருளாதாரக் குழுத் தலைவர் சென்யுன், கௌ-காங், லின் பியாவ், காங் ஷெங், சாங்வென்-டீன் ஆகியோர் இடம் பெற்றனர். மேடம் சன்யாத் சென்னும் புது அரசாங்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

மா சே-துங் வரைந்த 'புது ஜனநாயகம்' சென்சீனாவின் குறிக்கோளை என்னவென்று திட்டவட்டமாகக் கூறியது. சோசியலிசம் மூலம் கம்யூனிஸத்தை நிலைநாட்டலே அக் குறிக்கோளாகும். 1921–29 வரை ரஷ்யா பின்பற்றிய 'புதுப் பொருளாதாரக் கொள்கை'யைப் போல் சீனாவும் 1950–60-ல் ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கத் திட்டமிட்டது. அதில் பல அம்சங்கள் இருந்தன. சான்றாக, பெரும் பெரும் நிலங்களைச் சிறிய விவசாயிகட்குப் பிரித்துக்கொடுத்து வருங்காலக் கூட்டுப்பண்ணை விவசாய முறைக்கு (collectivization) அடிகோலுதல்; வருங்கால சோசியலிச உடைமை (socialization) முறையை இலக்காகக் கொண்டு தொடக்கத்தில் லாபத்திற்காகச் செயல்படும் தனியார் வியாபாரத்தை அனுமதித்தல்; பொதுமக்களிடம் கல்வியைப் பரப்பல்; பொதுப் பிரசாரம் செய்தல்; பொதுமக்கள் தன்மறுப்பு மூலம் முதல் (capital) திரட்டி அதன் வாயிலாகத் தேசியப் பொருளாதாரத் திட்டத்திற்கும் தொழில்மயத்திற்கும் அடிக்கல் நாட்டுதல். இக் குறிக்கோள்களை எய்தும் வழிகளும் பல வகுக்கப்பட்டன. அரசியல் கொடுங்கோன்மை; கொள்கை முரட்டுவாதம் (விட்டுக் கொடுக்காமை); 'அறிவு, நினைவுக் கட்டுப்பாடு' (brain washing and thought control); கையாடல்கள், கொள்ளை, கொள்ளை லாபம் அடிப்பவரை எதிர்த்து அறப்போர் புரிதல்; கட்சிக் கொள்கையினின்று முரண்படுபவர், ஐயத்துக்கிடமானவர், '(பாட்டாளி) வகுப்பு விரோதிகள்' ஆகியோரிடமிருந்து கட்டாய வேலை வாங்கல்; 'மக்கள் விரோதிகள்' என்று கருதப்படுவோரைத் தீர்த்துக்கட்டல் ஆகிய பல வழிகள் வகுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து 1949–52-ல் ஆயிரக்கணக்கான மக்கள் தூக்கிலிடப்பட்டனர்.

மேலே குறிப்பிட்டவை சென்சீனாவின் உள்நாட்டுக் கொள்கையாகும். இப்போது அதன் வெளிநாட்டுக் கொள்கையைச் சற்று ஆராய்வோம். அமெரிக்க எதிர்ப்பே அதன் வெளிநாட்டுக் கொள்கை என்று சுருக்கமாகக் கூறிவிடலாம். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. புது ஆட்சியின் எதிரிகட்கு அமெரிக்கா படையுதவி அளித்தமை, புது அரசாங்கத்தை ஏற்க மறுத்தமை, மாறுக அதை ஒழித்துவிடுமாறு பலமுறை தூண்டியமை, பார்மோசாவில் நிலைநாட்டப்பட்ட தேசிய அரசாங்கத்தைப் பாதுகாத்தமை, சீனாவை (கம்யூனிஸ்ட்டுகளின் கோரப்பிடியிலிருந்து) விடுதலை செய்வதற்காக சியாங்கிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தமை—இவையே

சீனா அமெரிக்காவை எதிர்க்கத் தூண்டின. இதே காரணத்தை முன்னிட்டே பெய்ப்பிங் அரசாங்கம் யூ.எஸ்.எஸ்.ஆர். அரசாங்கத்துடன் நெருங்கிப் பழகியது; இதே காரணத்தை முன்னிட்டே இந்தோசீனா, மலாயா ஆகிய நாடுகளிலும் மற்ற இடங்களிலும் ஏகாதிபத்தியம் எதிரிகளுக்கு (மேலைநாட்டு எதிரி கட்கு) ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்தது. 1950-ல் கொரியா குடியரசுக்கு எதிராக வடகொரியாவில் கம்யூனிஸ்ட்டுகள் செய்த துராக்கிரமிப்பில் பெய்ப்பிங் என்ன பங்கு ஏற்றது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும், அமெரிக்கப் படைகள் யாலுவை வந்தடைவதைத் தடுத்துவிட பெய்ப்பிங் கட்டிய தீர்மானம் கொரியப் போரில் சீனத் 'தொண்டர்கள்' மேற்கொண்ட பிரமாண்டமான இராணுவத் தலையீட்டிற்கு முன்னமேயே தெளிவாகத் தெரியவந்தது. செம்படைகள் மேற்கத்தியத் துருப்பு களைத் தோற்கடித்ததோடல்லாமல் மேலே முன்னேறுதபடியும் தடுத்து நிறுத்தின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இதுபோல் ஆசியாவில் ஒரு சாதனை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இச் சாதனை செஞ்சீனா இராணுவ வலிமையுடனும் அதன் நிலப்பரப் பிற்கும் ஜனத்தொகைக்கும் ஏற்றார்போல் அரசியல் கௌரவத் துடனும் திகழவிருப்பதை உலகிற்கு நினைவூட்டிற்று.

மார்க்சிய நடு நாடு: இவ்வாறுக சீனக் கம்யூனிஸ்ட்டு ஆட்சி யாளர்கள் (வைதிகமார்க்சியம் போதிக்கும் வழிமுறைகளை அடுத்து) உழவர்கள்—பெருமக்கள் உதவியால் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதிகார பீடத்தில் அமர்ந்ததும் அவர்கள் முதன்முதலில் பழைய சமுதாயத்தின் தீமைகளைக் களைந்தெறிந்துவிட்டு நில வுடைமையைச் சரிசமானமாக்க விழைந்தனர். அவர்கள் 1930–40-ல் ரஷ்யா கிராமங்களில் ஆடிக் காட்டிய 'வகுப்புப் போர்' சோக நாடகத்தை மீண்டும் நடித்துக் காட்ட விரும்பாது. முற்றிலும் வேறான வழிகளில் செல்ல உறுதி பூண்டார்கள். பெருநிலச் சுவான்தாரர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டன; விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. மேலும், குத்தகைக்காரர்களுக்கு விவசாயம் செய்ய நிலம் பகிர்ந்தளிக்கப் பட்டது. அடுத்தாற்போல் விவசாயத்தைக் 'கூட்டுப் பண்ணை முறையில்' கொண்டுவருவதற்காக ஆவன செய்யப்பட்டது. இங்கும் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் தங்களுக்கேயுரிய கூட்டுறவு விவசாய முறையில் (collective farming) இதைச் சாதிக்க முற்பட்டனர். அதன் விளைவாக வசதியாக இருந்த விவசாயிகள் சற்றுத் துன்புறுத்தப்பட்டார்கள்; ஏழை உழவர்களும் கூட்டுறவுப் பண்ணையில் சேருமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். 1950ஆம் ஆண்டுத் தொடக்கத்திற்குள் சீனாவின் அரை பில்லியன் விவசாயி களில் பெரும்பாலோர் தூண்டுதல் மூலமாகவும் எடுத்துக்காட்டு

வாயிலாகவும் கூட்டுறவு விவசாய முறையின் நன்மைகளைத்தாமாகவே உணர்ந்து ஏதாவது ஒருவிதக் கூட்டுப் பண்ணை முறையைத் தழுவும்படி ஆயிற்று. வரிகள் (சீன வரலாற்றிலே முதல் தடவையாக) நேர்மையுடன் வசூலிக்கப்பட்டன ; நல்ல அறுவடையளிக்கும் புதிய பயிர்த்தொழில் முறையைப் பின்பற்றுமாறு விவசாயிகள் தூண்டப்பட்டார்கள். நிலச்சுவான்தாரர்கள் முன்போல் குத்தகைக்காரர்களிடம் கொடுமை செய்து பணம் வசூலிக்க இடமில்லாது போயிற்று. அவர்களின் (நிலச்சுவான்தாரர்களின்) உடைமையும் தனியுரிமைகளும் பறிக்கப்பட்டனவேயன்றி அவர்கள் உயிருக்கு ஊறு ஏற்படவில்லை. இவ் வேலை முறைகளால் நிலச் சாகுபடி ஒரே ரீதியில் அதிகரித்தது ; புதிதாக உருவான அரசுக்கும் பழைய உழவர் பெருமக்களுக்குமிடையே நல்ல பலனளிக்கும் தொடர்பு ஏற்பட்டது. அன்றியும், விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் சிறிது சிறிதாக உயரத் தொடங்கியது.

இனி நகர்ப்புறப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்களைச் சற்றுக் கவனிப்போம். விவசாயிகளையே பெருமளவில் கொண்ட இந்நாட்டில் நகர்ப்புறப் பொருளாதாரம் மிகச் சிறிதாகத்தானே இருக்கும் ! இச் சிறிய துறையிலும் புதிய ஆட்சியாளர்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சான்றாக பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தினர் ; விலைவாசியை ஸ்திரப்படுத்தினர் ; 1951-க்குள் நாட்டின் வரவு செலவைச் சமமாக்கினர் ; மேலும், புதிய இருப்புப் பாதைகளும் (railways) சாலைகளும் அமைத்தனர். கொரியப் போர்ச் செலவினாலும், அடிக்கடி ஏற்பட்ட வெள்ளத்தினாலும், அறுவடைக் குறைவாலும் தலைதூக்கிய பிரச்சினைகள் 1953-54-ல் தீர்க்கப்பட்டன. ஏனைய மார்க்சீய நாடுகளைப்போல் இங்கும் ஆட்சியாளர்கள் நாட்டைத் தொழில்மயமாக்கலையே தங்கள் தலையாய குறிக்கோளாகக் கொண்டனர். ரஷ்யா சென்ற பாதையிலே இவர்களும் சென்றனர். பொதுத்துறைப் பொருளாதாரத் திட்டத்தில் முழுமூச்சுடன் இறங்கினர். கட்டாய சேமிப்பு (savings), முதலீடு ஆகியவற்றின்மூலம் வேண்டிய முதல் திரட்டினர். உற்பத்தியைவிட நுகர்வைக் குறைவாக்கினர். ஆனால், ரஷ்யாவில் செய்யப்பட்டதுபோல், தனியார் தொழிலுக்கு இவர்கள் உலை வைக்கவில்லை. மாறாக, அதற்கு ஊக்கம் அளித்து வளர்த்து வந்தனர். அப்படி இருந்தும் 1952-க்குள் மொத்தத் தொழில் உற்பத்தியில் இருப்புப்பாதை உள்பட 64 சதவீதம் அரசின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டுவிட்டது. கனரகத் தொழில்களில் (heavy industries) 80 சதவீதமும், சாதாரணத் தொழிலில் 60 சதவீதமும், பாங்குத் தொழிலில் 90 சதவீதமும், மொத்த வியாபாரத்தில் பாதியும், சில்லறை வியாபாரத்தில் மூன்றில் ஒரு பகுதியும் அரசுக்குச் சொந்தமாயின.

வறுமையில் வாடிக்கிடந்த மக்களால் விரைவில் முதல் திரட்ட முடியாதுபோயிற்று. எனினும், யூ.எஸ்.எஸ்.ஆரிடமிருந்து பெற்ற கடன், தொழில்திறனுதவி, எந்திர இறக்குமதி ஆகிய வற்றைத் தவிர வேறெந்த வெளிநாட்டு உதவியுமில்லாமல் (உள்நாட்டு) சேமிப்பு, திட்டம், முதலீடு ஆகியவற்றின் மூலமாகவே தொழில்மயமாக்கலில் கணிசமான முன்னேற்ற மடைதல் என்பது வியத்தகு சாதனைதான். சீனக் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் இச் சாதனையைப் புரிந்தார்கள். முதல் ஐந்தாண் டுத் திட்டத்தின் (1953–57) குறிக்கோள்கள் இரண்டாவது திட்டத்தில் (1958–62) அதிகமாக்கப்பட்டன. 1955-ல் நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 12 சதவீதம் முதலீடு செய்யப்பட்டது. அதிலும் சரிபாதி தொழில்களில் முதலீடு செய்யப்பட்டது. அபிவிருத்திப் போக்கைக் கண்டு ஊக்கமடைந்த பெய்ப்பிங் 1957-ல் நிலக்கரி உற்பத்தி 113,000,000 டன்களாகவும், எஃகு உற்பத்தி 5,500,000 டன்களாகவும், மின்சக்தி (electrical power) உற்பத்தி 18 மில்லியன் கிலோவாட் மணிகளாகவும் உயரவேண்டுமெனத் திட்டமிட்டது. 1962-க்குள் திட்டத் தொழில் உற்பத்தி இரட்டிக்கப் படவிருந்தது. ஆனால், இவை எல்லாற்றையும்விட ஜனத் தொகைப் பெருக்கமே பெரிய பிரச்சினையாக இருந்தது. ஏற்கெனவே 600,000,000-க்கும் அதிகமான ஜனத்தொகையையுடைய சீனாவில் 1950–60-ல் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது 12,000,000 பேர் வீதத்தில் சனத்தொகை பெருகிக்கொண்டு சென்றது. இவர்களுக்கு உணவு அளித்துக் காப்பாற்றுவதற்கு மட்டும் 1952-க்கும் 1962-க்கும் இடையே உணவு உற்பத்தி 25 சதவீதம் அதிகரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்படியெனில், இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விவசாய உற்பத்தி எவ்வளவு தூரம் உயரவேண்டும் என்பது தெள்ளிதின் விளங்கும். பெய்ப்பிங் விவசாய உற்பத்தியை 35 சதவீதம் அதிகரிக்கத் திட்டமிட்டது. மேலைநாட்டு நிபுணர்களோ உற்பத்திப் பெருக்கம் 20 சதவீதமே இருக்கமுடியும் என்று மதிப்பிட்டார்கள். குடும்பக் கட்டுப்பாடு (birth control) செய்துகொள்ளுமாறு அரசு மக்களை வற்புறுத்திப் பார்த்தது; விஞ்ஞான முறையில் விவசாயம் செய்யுமாறு கட்டாயப்படுத்தியது. எண்ணத் தொலையாத் தொல்லைகள் இருந்தும் சீனாவின் பொருளாதார முன்னேற்றம் இந் நடவடிக்கைகளின் விளைவாகக் கணிசமான அளவுக்குக் கண்டோர் வியக்கும் வண்ணம் உயரத் தலைப்பட்டது.

இனி இம் மார்க்சிய நாட்டின் ஆட்சிமுறையைப் பற்றிச் சற்று நோகுவோம். விதி (கொள்கை) யளவில் இந்நாடு ஒரு சிக்கல் வாய்ந்த கடினமான கூட்டத்தால் (அரசாங்கத்தால்) ஆளப்பட்டு வந்தது. ஆனால், நடைமுறையில் கம்யூனிஸ்ட் தலைவர்கள்

மட்டுமே (நிர்வாக) முடிவுக்கு வரும் அதிகாரம் பெற்றுத் திகழ்ந்தனர். 1949-ல் சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனை மாநாடு என்ற ஒரு ஸ்தாபனம் செயல்பட்டு வந்தது. அதில் கம்யூனிஸ்ட் அல்லாதோர் பெரும்பான்மையாக இருந்தனர். அதைத் தவிர மத்திய மக்கள் அரசாங்கக்குழு மாவ் தலைமையிலும், அரசு ஆட்சி (நிர்வாகக்) குழு தலைமையமைச்சர் சூ என்-லாய் தலைமையிலும் இயங்கிவந்தன. மேலும், மக்கள் புரட்சி இராணுவக் குழு ஒன்று மா-சே-துங்கைத் தலைவராகவும், சூ தேயை (Chu Teh) துணைத் தலைவராகவும் கொண்டு பணியாற்றி வந்தது: 1954ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் புதிய அரசியலமைப்பை முதல் தேசிய மக்கள் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. அந்த அரசியலமைப்பு 'அரசு அதிகாரத்தின் உயர் உறுப்பு' என்று காங்கிரசை வருணிக்கிறது. எனினும், அதற்கும் மேலை நாட்டுப் பாராளுமன்றங்களுக்கும் (parliaments) இடையிலோ, அன்றி அதற்கும் யூ.எஸ்.எஸ்.ஆரின் சுப்ரீம் சோவியத்திற்குமிடையிலோ எந்தவித ஒற்றுமையுமில்லை. இக் காங்கிரசில் 1,226 உறுப்பினர் உளர். அனைவரும் பிரதேச காங்கிரசுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஏட்டளவில் சீன மக்கள் குடியரசுத் தலைவர் (மாவ்), துணைத்தலைவர் (சூ தே, 1954 வரை), அரசு குழு, தலைமையமைச்சரும் வெளிநாட்டு அமைச்சருமான சூ என்-லாய் ஆகியோர் காங்கிரஸ் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயல் பட்டுவந்தனர். இத் தலைவர்களையும் மற்ற நிறுவனங்களின் தலைவர்களையும்கொண்ட ஒரு 'புதிய அரசு உயர் மாநாடு', மற்ற அரசாங்க உறுப்புகளுக்குக் கொள்கையைப் பொறுத்தமட்டில் ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்பட்டது. தல ஆட்சிக்காக நாடே மாகாணங்கள், வட்டாரங்கள், மாவட்டங்கள் (districts) கோட்டங்கள் (counties), நகர சபைகள் என்று பிரிக்கப்பட்டிருக் கிறது. ஒவ்வொரு பிரிவிலும் மக்கள் கவுன்சிலும் மக்கள் காங்கிரசும் ஆட்சிபுரிந்து வருகின்றன. இவற்றின் உறுப்பினர் இவற்றின் கீழேயுள்ள தல ஆட்சிப் பிரிவின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். இதே முறைதான் யூ.எஸ்.எஸ்.ஆரிலும் 1917 முதல் 1936 வரை அமலில் இருந்துவந்தது.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிடமே உண்மையான அதிகாரம் இருந்துவருகிறது. 1957-ல் 12,000,000 கட்சி உறுப்பினர் இருந்தனர். ரஷ்யாவில் இருப்பதைப்போன்றே இங்கும் கட்சி அமைப்பு அமைந்துள்ளது. கட்சியின் உயர் அங்கம் காங்கிரஸ் ஆகும். அது மத்திய கமிட்டியைத் தேர்ந்தெடுக்கிறது. அக் கமிட்டி பொலிட்பீரோவையும் மத்தியச் செயலாண்மைத் துறையையும் (central secretariat) தேர்ந்தெடுக்கிறது. உண்மையில் அதிகார ஓட்டம் மேலே இருந்து கீழே பாய்கிறதேயன்றிக் கீழே யிருந்து மேலே செல்லவில்லை. தொடக்கத்திலிருந்து மாவே

காங்கிரஸ், பொலிட்பீரோ, செயலாண்மைத் துறை ஆகியவற்றின் தலைவராக இருந்துவருகிறார். ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், தொழிற்சாலையிலுமுள்ள தல ஆட்சி ஸ்தாபனங்கள் கட்சியின் கொள்கையையே நாடு முழுதும் அமலாக்கி வருகின்றன. ஏராளமான மக்கள் ஸ்தாபனங்கள் மூலம் இக்கட்சி பாமரமக்களுக்குக் கம்யூனிசம் ஒன்றே சரியான வழி என்று அவர்கள் நம்பும் அளவுக்குப் போதனை செய்து வருகிறது. இதற்கு உதவியாக ரகசியப் போலிசுப் படையும் இயங்கி வருகிறது. கொள்கையை எதிர்க்கும் 'துரோகிகளை' ஆயிரக்கணக்கில் தூக்கிலிடுவதும், கையாடல் புரிவோர், லஞ்சம் பெறும் அதிகார வர்க்கத்தினர், மக்களை ஏமாற்றும் தனி வியாபாரிகள், சோசியலிசப் பாதையில் நின்று 'விலகிச் செல்லும்' கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு எதிராகப் பிரச்சாரம் புரிவதும் கட்சியின் நடைமுறைகளாக (procedures) இருந்து வருகின்றன. இந் நடைமுறைகளில் சமீபத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் கட்சி விரோதிகளாகக் கருதப்பட்டோர் ஆயிரக்கணக்கில் தீர்த்துக்கட்டப் பட்டார்கள். ஆனால், இப்பொழுதோ அப்படிப்பட்டவர்கள் தங்கள் குற்றத்தைத் தாங்களே உணர்ந்து அதற்காக வருத்தப்படுமாறு செய்யப்படுகிறார்கள். மேலும், அவர்கள் 'கருத்து', கொள்கைக் கட்டுப் பாட்டின்கீழ்க் கொண்டுவரப்படுகிறார்கள்.

புதிய சீனா மாஸ்கோவுடன் கூடிக் குலாவியது. ஒரு 'வல்லரசாகவும்' தலையெடுக்கத் தொடங்கியது. ஆசாபாசங்களை வளர்த்து வந்தது. ஆனால், இந்த சீன-சோவியத் ஒற்றுமை இரு நாட்டின் பொது நலன்களாலோ அன்றிக் கொள்கையாலோ உருவாகவில்லை, ஒருபுறம் இருநாடுகளும் அமெரிக்காவைக் கண்டு அஞ்சி அதை வெறுத்து வந்ததால் இவ் வொற்றுமை விளைந்தது. மற்றொருபுறம் அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர், தங்களுடைய தவறான கருத்துகளிலும், பொதுமக்களுடைய தவறான கருத்திலும் (public opinion) சிக்குண்டு, சீன-ரஷ்ய வேறுபாட்டைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலில்லாது விளங்கிவந்ததாலும் ஏற்பட்டது. இவ் வொற்றுமை, மாவும், சூ-என்-லாயும் (சீன, சோவியத்) 'ஒற்றுமை' என்ற பெயரில் சீனாவில் சோவியத் யூனியன் பெற்றுவந்த தனியுரிமைகளைப் போக்கவும், தங்கள் நாட்டைத் தொழில்மயமாக்குவதற்குக் கணிசமான சோவியத் உதவியைப் பெறவும், ஓர் 'உடன்பாடு' செய்தார்கள். மஞ்சூரிய இருப்புப்பாதைமீது தனக்கிருந்த பங்கையும் சொத்துரிமையையும் 1953, டிசம்பர் 31ஆம் நாள் மாஸ்கோ பெய்ப்பிங்கிற்கு விட்டுக்கொடுத்தது. பின்னர் நடந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக சீனாவுக்கு யூ.எஸ்.எஸ்.ஆர். சுமார் ஒரு பில்லியன் மதிப்புள்ள கடனும் எந்திரங்களும்

வழங்குவதென்று 1954 அக்டோபர் 11 அன்று முடிவு செய்யப் பட்டது. மேலும், சோவியத் யூனியன் எல்லாக் கலப்பு 'கம்பெனிகளி லும்' தனக்குச் சொந்தமாக இருந்த பங்குகளை சீனுவுக்கு அளித்து விடுவது என்றும், இருப்புப்பாதை போடுவதிலும் விஞ்ஞான, தொழில் நுணுக்க நடவடிக்கைகளிலும் உதவியளிக்கவேண்டு மென்றும், 1956, ஜனவரி முதல் தேதிக்குள் ஆர்த்தர் துறை முகத்தைவிட்டு வெளியேறிவிடுவது என்றும் முடிவு செய்யப் பட்டது.

இவ்வாருக மாவும் சூ-என்-லாயும் சேர்ந்து மஞ்சூரியாவில் சீன இறைமையை (sovereignty) நிலைநாட்டினர்கள். அடுத்தாற் போல் சிங்கியாங்கைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார்கள். 1951-ல் வெகு காலம் சுதந்திரமாகத் திகழ்ந்துவந்த திபெத்தைக் கைப்பற்றினர்கள். 1947-ல் (இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டபோது) பிரிட்டன் தன் காப்பரசு நாடான திபெத்தை இந்தியாவிடம் ஒப்படைத்தது. புது டெல்லியோ திபெத்தின்மீது பெய்ப்பிங் கொண்டாடும் இறையுரிமையை 1954, ஏப்ரல் மாதம் ஒப்புக்கொண்டது. இந்தியச் சேனைகளை அங்கிருந்து நீக்கிவிடுவ தற்கு ஈடாக அதற்கு வர்த்தக உரிமைகள் அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. சீன எல்லையைச் சுற்றியுள்ள நாடுகளைப் பொறுத்த மட்டும், பெய்ப்பிங் ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் வலிமையைக் கண்டு அஞ்சி 'பார்மோசாவை' விடுதலை செய்யும் நோக்கத்தையே கைவிட்டுவிட்டார்கள். ஆனால், கொரியாவில் அவ்வாறு வாளா விருக்காமல் அமெரிக்காவுடன் தங்கள் தோள்வலிமையைக் காட்டி அதைத் தடுத்து நிறுத்தினர்கள். இறுதியில் வட கொரியாவையும் வடவியட்னுமையும் சீனக் காப்பரசு நாடாகவே மாற்றிவிட் டார்கள்.

1960-க்குச் சற்று முன்னரெல்லாம் நடுநிலை ஆசியா ஆஃப்ரிக்கா முழுவதிலும் சீனுவின் செல்வாக்கு ஓங்கி நின்றது. செஞ்சீனு தன் செல்வாக்கைப் பெருக்கவும் யு.எஸ் ஏ-யை அவமானப் படுத்தவும் தொடர்ந்து முயன்றுகொண்டேதான் இருக்கும். வாஷிங் டனுடன் போரில் நேரடியாகத் தன் தோள்வலிமையைக் காட்ட அது முன்வராது. ஆனால், வாஷிங்டன் 1950-ல் கொரியாவிலிருந்து சீன எல்லைகட்குத் தன் படையை அனுப்பிவைத்ததுபோல் மறுமுறை யும் செய்தாலோ, அன்றி சீனுவைக் கம்யூனிசப் பிடியிலிருந்து 'விடுதலை' செய்ய முயன்றாலோ செஞ்சீனு கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கப்போவதில்லை என்பது வெள்ளிடைமலை. மற்ற ஆசிய நாடுகளும் 'கம்யூனிஸ்ட் நாடுகளாக' மாறிவிடுமா அல்லது 'நடுநிலை நாடுகளாகவே' நின்றுவிடுமா அல்லது அமெரிக்கக் கூட்டில் சேர்ந்துவிடுமா என்பது, வறுமையில்

வாடிய மக்கள் இன்று வளமுடன் வாழ வழிசெய்திருக்கும் பெய்ப்பிங்கின் சாதனைக்குச் சமமான அல்லது அதனினும் பெரிய சாதனையை இந்த நாடுகள் அமெரிக்க உதவியால் செய்து காட்ட முடியுமா முடியாதா என்பதையே பொறுத்திருக்கிறது.

3. கூடிவாழும் வெல்திறம்

'நாம் ஓர் அரசில் மட்டும் வாழ்ந்துவரவில்லை; பல அரசுகள் சேர்ந்த ஓர் அமைப்பிலும் வாழ்ந்துவருகிறோம். ஏகாதிபத்திய அரசுகளுடன் சோவியத் குடியரசும் ஒரே சமயத்தில் நெடுநாள் தொடர்ந்து வாழ்ந்து வருமென்று கற்பனைகூடச் செய்வதற்கில்லை. இறுதியில் ஒன்று மற்றதை வெல்வது என்பது உறுதி. இது ஏற்படும் வரை சோவியத் குடியரசுக்கும் நடுத்தர வகுப்பு நாடுகட்குமிடையே தவிர்க்கொணு பயங்கரச் சண்டைகள் ஏற்படத்தான் செய்யும்.'—லெனின், சோச்சினெனியா, 24, 122, மார்ச் 1919.

'நம் முதலாளித்துவக் கூட்டாளிகள் மட்டும் ரஷ்யாவில் புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாதிருந்தால், சோவியத் அரசாங்கமும் முதலாளித்துவ நாடுகளில் புரட்சி நடவடிக்கைகள் எடுப்பதை விட்டுவிடும்; ஆனால், அவர்கள் புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாயின் நாமும் தீர்மானம் செய்வோம். ஒரு காலத்தில் படைநிலமானிய அரசு, முதலாளித்துவ அரசுகளுடன் வாழ்ந்துவந்தது. அவ்வமயம் தாராள மனப்போக்குடன் விளங்கிவந்த இங்கிலாந்து, அடிமைகளைக் கொண்டிருந்த ரஷ்யாவுடன் தொடர்ந்து சண்டையிடவில்லை. இப்போது முதலாளித்துவ நாடுகள் பாட்டாளி நாடுகளுடன் வாழமுடியும் என்று நாங்கள் கருதுகிறோம். இருதரப்பினரும் அமைதியுடன்படிக்கை செய்துகொண்டு ஒருவருக்கொருவர் பண்டங்களைப் பரிமாறிக்கொள்வதில் தான் அவர்களுக்கு நன்மை இருக்கிறது. எனவேதான், நாங்கள் இதுவரை எங்களுடன் பொருதியவண்ணமிருந்து, இனிமேல் எங்களுடைய எந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவற்றுக்குப் பதிலாகத் தங்களுடைய கச்சாப் பொருள்களையும் தானியங்களையும் பரிமாறிக் கொள்ள முன்வரும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதியுடன்படிக்கை செய்துகொள்ளத் தயாராக இருக்கிறோம். எங்களிடமிருந்து எங்கள் பகைவர்கள் கோரும் பாதுகாப்புகள் இருதரப்பினருக்கும் நன்மையே பயக்கும்.'—கார்ல் ராடெக், தந்தியில்லாக் கம்பிச் செய்தி, மாஸ்கோ, மார்ச் 3, 1920.

இது அணுசக்தி யுகம் அல்லவா? இந்த யுகம் தோன்று முன்னர், மேலை அரசுமுறையின் அமைப்பில் அமைதி அமைதிக்கே என்ற கருத்து எந்த மேலை நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை

யின் குறிக்கோளாக என்றுமே விளங்கவில்லை. நாட்டின் சக்தியை (வலிமையை) மற்ற நாட்டு அச்சுறுத்தல்களுக்கு எதிராகப் பாதுகாக்கவும், நெருக்கடி சமயத்தில் பேணிக் காக்கவும் வாய்ப்புக் கிடைக்குங்கால் நேர்மையான இடையூறுகளைப் பொருட்படுத்தாது, அதைப் பெருக்குவதும் ஓங்கச் செய்வதுமே வெளிநாட்டுக் கொள்கையின் குறிக்கோளாக இருந்துவருகிறது. ஸ்டாலின் மறைவிலிருந்தும், அதற்கு முற்பட்ட காலத்திலிருந்தும் கம்யூனிஸ்ட்டு ரஷ்யா, செஞ்சீனு ஆகிய நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் கெடுபிடிப் போரை நீடிப்பதால் ஏற்படும் இடர்ப்பாடுகள் நேர்மையானவை அல்ல என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். எனவே, தங்கள் நாட்டின் வலிமையைப் பாதுகாக்கவும், பேணி வளர்க்கவும், ஓங்கச் செய்யவும் 'அமைதி' இன்றியமையாதது என்ற உண்மையை அறிந்து அதையே நாடினர்.

ஸ்டாலின் உயிரோடு இருந்தவரையில் மாஸ்கோவிலும் பெய்ப்பிங்கிலும் அமைதியை நிலைநாட்டுதலுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக வெகு மும்முரமான பிரசாரம் செய்யப்பட்டது. அன்றியும், மேலைவல்லரசுகளையும் 'அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளையும்' தொல்லைப்படுத்தும் நோக்கத்துடனும் நெருக்கும் எண்ணத்துடனும் அநேக சில்லறை 'அகில முன்னணி நிலையங்கள்' அமைக்கப்பட்டன. ஆனால், நினைத்தது பலிக்கவில்லை. ஸ்டாலினின் மறைவுக்குப் பின்னர் அவரது பின்தோன்றல்கள் 'சமாதானச் சகவாழ்வு' என்ற பெயரில் பழைய அரசியல் தந்திரத்தில் (diplomacy) மனவுறுதியுடன் இறங்கினர். அட்லான்டிக் கூட்டு நாடுகளுடன் தாற்காலிக உடன்படிக்கை செய்ய விரும்பினர். மாஸ்கோவின் முயற்சி பூரண வெற்றி தரவில்லை. சீனுவின் முயற்சியோ அதுதானும் பலிக்கவில்லை. அதைப்பற்றி இங்குக் கூறத் தேவையில்லை.

பயன்தரக்கூடிய அரசியல் தந்திரத்தில் ஈடுபடுவதென்றால் என்றுமே 'வலிமையான நிலையில்' (ஓங்கிய கையுடன்) இருந்து கொண்டே செயல்படவேண்டும் என்பது அப்போது நிலவிவந்த அமெரிக்கக் கொள்கையாகும். இக் கொள்கையைக் கண்டு மாஸ்கோ, பெய்ப்பிங் கொள்கை வகுப்பாளர்கள் இடைவிடாது எள்ளி நகையாடியும் வசைமாரி பொழிந்தும் வந்தார்கள். ஆனால், அவர்களே அதே கொள்கைக்கிணங்க 'அரசியல் தந்திரத் தாக்குதலில்' எப்போதும் ஈடுபட்டுவந்தார்கள். அக்கால அதிகார வலிமை விளையாட்டில் 'சக்தி' (வலிமை) என்பது படைக்கலங்கள், மற்றும் நேசக்கூட்டுகள் ஆகியவற்றோடு ஒன்றுகக் கருதப்பட்டு வந்தது. எனவே, அதிகார பீடத்தில் வீற்றிருந்த கம்யூனிஸ்ட்டு தலைவர்கள் தங்கள் பகைவர்களைப்போல் படை திரட்டுவதிலும், பகைவர்களை

வியக்கச் செய்யும் கூட்டுகள் அமைப்பதிலும், 'நடுநிலை நாடுகளைத்' தங்களுடைய வலிமையை ஒப்புக்கொள்ளச் செய்வதிலும் வெகு மும் முரமாக ஈடுபட்டுவந்தனர்.

பேரதிகாரத்தின் இவ்விரு ராட்சசக் கூறுகளும் (ரஷ்யாவும் சீனுவும்) 30 ஆண்டு நட்பு, கூட்டு, பரஸ்பர உதவி உடன்படிக்கை ஒன்று செய்தன. சூ-என்-லாயும் விஷின்ஸ்கியும் மாஸ்கோவில் 1950 பெப். 14ஆம் நாள் இவ் வுடன்படிக்கையைச் செய்து முடித்தார்கள். அதன்கீழ், இருதரப்பினருள் ஒரு தரப்பினரின்மீது சப்பான் மீண்டும் துராக்கிரமிப்புச் செய்தாலோ, அன்றி 'வேறெந்த மூன்றும் நாடாவது மறைமுகமாகவோ அல்லது பகிரங்கமாகவோ சப்பானுடன் சேர்ந்து துராக்கிரமிப்புச் செய்தாலோ,' மற்றத் தரப்பு உடனடியாக இராணுவ உதவியளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் ஏற்பட்ட உதவி ஒப்பந்தங்களுக்கேற்ப சீனுவுக்கு 10 ஆண்டுக் கடனுதவி யளிக்கவும், அது சோவியத் எந்திரங்கள், ரயில்வே போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு ஒரு சதவீத வட்டியில் 5 ஆண்டுகளில் 60 மில்லியன் டாலர் கடன் கொடுக்கவும், சப்பானிய சொத்துரிமையாளரிடமிருந்து வாங்கப் பட்ட மஞ்சூரியச் சொத்து அனைத்தையும் சீனுவுக்கே அளித்து விடவும், 1952ஆம் ஆண்டு இறுதிக்குள் ஆர்த்தூர் துறைமுகம், டாரியன், மஞ்சூரிய-செங்சுன் இருப்புப்பாதை ஆகியவற்றை சீனுவின் அதிகாரத்தின்கீழ் விட்டுவிடவும் மாஸ்கோ இணங்கிற்று. சூ-என்-லாய் 1952 கோடையில் மாஸ்கோவுக்கு விஜயம் செய்த போது செங்சுன் இருப்புப்பாதை உடனே சீனுவிடம் ஒப்படைக்கப் பட்டுவிடும் என்றும், ஆனால், சப்பானிய—சீன—ரஷ்ய அமைதி யுடன்படிக்கை ஏற்படும்வரை, பெய்ப்பிங்கின் கோரிக்கையின் பேரில் ஆர்த்தூர் துறைமுகம் சோவியத் தளமாக விளங்கிவரும் என்றும் (செப். 16) அறிவிக்கப்பட்டது. நாம் மேலே பார்த்தது போல் அத் துறைமுகம் 1955ஆம் ஆண்டுத் தொடக்கத்திலேயே சீனுவசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

கம்யூனிஸ்ட்டு ரஷ்யாவின் ஐரோப்பியத் துணை நாடுகள் (satellites) அனைத்தும் பெயரளவில்தான் 'இறைமை' பெற்று விளங்கின. உடன்படிக்கைகள்மூலம் அவைகள் ஒன்றோடொன்றும் ரஷ்யாவுடனும் பிணைக்கப்பட்டன. அவ் வுடன்படிக்கைகளனைத்தும், 1948, மார்ச் 18ஆம் நாள் செய்யப்பட்ட புல்கேரிய - ரஷ்ய ஒப்பந்தத்தில் காணப்படுகிற விதியைப்போல் பரஸ்பர உதவிக்கு வகை செய்தன. அவ் விதியாவது: 'உடன்படிக்கைக்குரிய மேம் பாட்டுக் கட்சிகளில் ஒன்று ஆக்கிரமிப்புக் கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்கக் காத்திருக்கும் செர்மனிக்கு எதிராகவோ, அன்றி வேறெந்த நாடாவது நேரிடையாகவோ அல்லது வேறெந்த

முறையிலோ செர்மனியின் ஆக்கிரமிப்புக் கொள்கையை ஆதரிக்கும் வகையில் அதனுடன் (செர்மனியுடன்) சேர்ந்தாலோ, அதற்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் இறங்கினால், அவ்வாறு செயலில் ஈடுபட்டிருக்கும் கட்சிக்கு மற்ற உடன்படிக்கைக் கட்சி உடனடியாக இராணுவ உதவியும் அதனால் முடிந்த எல்லா வகையுதவிகளும் அளிக்கவேண்டும்.'

ஆனால், இவ்வொவ்வொரு நாட்டிலும் தேசிய கம்யூனிஸ்ட்டு கட்சிகளே அந்தந்த நாட்டுக் காபினட்டுகள் 'பாராளுமன்றங்களின்' கட்டுப்பாட்டின் வாயிலாக உண்மையான அதிகாரம் செலுத்தி வந்தன. அவ்வாறு அதிகாரம் செலுத்திவந்த கட்சிகளனைத்தும் கிரெம்லின் கட்டுப்பாட்டின்கீழ்தான் இயங்கிவந்தன. நெடு நாளாக சுதந்திரத்தை விரும்பி, அதற்காகப் பாடுபட்டவர்கள் உட்பட சுதந்திரத் தாகம்படைத்த அனைவரும் மிகக் கடூரமாகப் பதவியிறக்கம் செய்யப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டு இறுதியில் கட்சித் 'துரோகிகள்', என்ற குற்றஞ் சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்கள். புல்கேரியாவில் நிக்கோலா பெட்கோவ், ஹங்கேரியில் லாஸ்லோராஜ்க்,செக்கோசுலேவாக்கியாவில் ரடோல்ஃப்ஸ்லான்ஸ்கி, ருமேனியாவில் அனு பாக்கர் ஆகியோரையும் நூற்றுக்கணக்கான கட்சிக் கொள்கை வேறுபாட்டுத் தலைவர்களையும் இதற்குச் சான்றாகக் கூறலாம். அன்றியும், ஆளும் கம்யூனிஸ்ட்டு கட்சி அமைக்கப் போவதாக வாக்குறுதியளித்த புது சொர்க்கம், புது உலகம் என்ற கருத்துக்கோ அல்லது இந்தக்கட்சிக் கொடுங்கோன்மைக்கோ எதிர்ப்புத் தெரிவித்த ஆயிரக்கணக்கான பாமர மக்களும் இந்த விதிக்கு ஆளாயினர்.

கமின்ஃபர்ம், கம்இகான்—கம்யூனிஸ்ட்டு நாடுகளின் பொருளாதார இணைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு (Comecon) போன்ற நிறுவனங்களைத் தவிர அவற்றிற்கு உதவியாக அநேக நேசவுடன் படிக்கைகளும் செய்யப்பட்டன. அவற்றுள் முக்கியமானது 'வார்சா ஒப்பந்தம்' ஆகும். 1955, மே 14ஆம் நாள் புல்கானினும் மொலெட்டோவும் போலாந்து, செக்கோசுலேவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா, புல்கேரியா, அல்பானியா, கிழக்கு செர்மனி ஆகிய நாடுகளின் தூதர்களுடன் வார்சாவில் கூடி இவ் வொப்பந்தத்தை வரைந்தார்கள். எனவே, இது எட்டு நாடுகள் சேர்ந்து 20ஆண்டு கட்கு நிலைத்து நிற்குமாறு செய்யப்பட்ட நட்பு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஒப்பந்தமாகும். அதில் 11 விதிகள் இடம் பெற்றிருக்கின்றன. இது நேட்டோவுக்கு எதிராகச் செய்யப்பட்ட உடன் படிக்கையாகக் கருதப்பட்டது. மார்ஷல், ஐவான் எஸ். கோனீவ் கூட்டுப் பொதுப்படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இதனால் ஒரு புதிய சக்தியே உண்டாகிவிட்டதுபோல் தோன்றியது. இந்த

ஒப்பந்த அடிப்படையில்தான் மாஸ்கோ, நண்பர்களைத் (நட்பு நாடுகளைத்) தேடவும், மக்களைத் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரவும் சுதந்திரமுடன் புறப்பட முடிந்தது.

மெதுவாகவும் படிப்படியாகவும் இம் முயற்சியில் ரஷ்யா முழு மூச்சுடன் இறங்கியது. அது 1953ஆம் ஆண்டு கோடையில் மாஸ்கோ, யூகோஸ்லேவியா, கிரீஸ், இசுரேல் ஆகிய நாடுகளுடன் தூதியல் உறவு பூண்டது; தன்னுடன் பின்னர் சேரவேண்டிய கார்ஸ், அர்தான், அர்ட்வின் ஆகியவற்றின்மீதுள்ள உரிமையைக் கைவிட்டுவிட்டதாக துருக்கிக்கு அது வாக்குறுதியளித்தது; இந்த ஐலசந்திகளின் பாதுகாப்பில் பங்கெடுத்துக்கொள்ளவும் முன் வந்தது. கொரியாவில் ஏற்பட்ட தற்காலிகப் போர் நிறுத்த உடன்பாடு மாஸ்கோவும் பெய்ப்பிங்கும் இட்ட புதுக் கட்டளைகளின் விளைவே என்று ஐயம்திரிபறக் கூறலாம். 1954-ன் புத்தாண்டு தினத்தன்று மெலென்கோவ் யு.எஸ்.ஏ-யை அமைதியுடனும் நட்புடனும் நடந்துகொள்ளுமாறு வேண்டினார். மார்ச் 31ஆம் நாள் அவர் அணு ஆயுதப் போர், 'முதலாளித்துவத்தை' மட்டும் அல்லாமல் 'உலக நாகரிகத்தையே' அழித்துவிடும் என்ற உண்மையை ஒப்புக்கொண்டார். இவற்றிற்கிடையில் சென்ற ஐந்தாண்டுகளில் முதல் முறையாக வெளிநாட்டு அமைச்சரவை மறுபடியும் 1954, சனவரி 25ஆம் நாளும், பிறகு பெப்ரவரி 18 அன்றும் பெர்லினில் கூடி கொரியா, இந்தோசீனா பற்றி வாதிப்பதற்கு செனீவாவில் ஒரு மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று முடிவு செய்தது. 1954ஆம் ஆண்டு ஏப்ரல் 26 முதல் சூலை 21 வரை நடைபெற்ற செனீவா மாநாடு, பல தற்காலிகப் போர்நிறுத்த உடன்படிக்கைகளின் வாயிலாகவும், லாவோஸ், கம்போடியா, பிரிவினை செய்யப்பட்ட வியட்னாம் ஆகிய நாடுகட்கு சுதந்திரம் அளிப்பதன்மூலமாகவும் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்படவிருந்த கடுமையான போரைத் தடுத்து நிறுத்தியது.

கெடுபிடிப் போரை ஒருவிதமாக நிறுத்த முடிவு செய்த மாஸ்கோ, 1954, மார்ச் 31ஆம் நாள் ஒரு புதிய ஐரோப்பியப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்றும், தன்னை நேட்டோவின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டியது. ஆனால், வாசிங்டன் அவ் வேண்டுகோளை மே 7ஆம் நாள் நிராகரித்து விட்டது. மாஸ்கோ பல முறை வலிய வந்து முயன்றும், அதன் முயற்சிகள் பலிக்கவில்லை. அதன் விளைவு என்ன தெரியுமா? 1942-லும் 1944-லும் பிரிட்டனுடனும் ஃபிரான்சுடனும் சோவியத் யூனியன் செய்த உடன்படிக்கைகளை சுப்ரீம் சோவியத்தின் (ரஷ்யப் பாராளுமன்றத்தின்) பிரெசிடியம் 1955, மே 7ஆம் நாள் ரத்து செய்துவிட்டது. இதற்கு, செர்மனியின் படைக்கலப் பெருக்கத்திற்கு

பிரிட்டனும் ∴பிரான்சும் அங்கீகாரம் அளித்தது. மேற்படி உடன் படிக்கைகளை அர்த்தமற்றதாகச் செய்துவிட்டது என்று காரணம் கூறப்பட்டது. அதன் பின்னர் முன்னைய சோவியத் கொள்கைகள் திடீரென்று மாற்றியமைக்கப்பட்டன. அதன் விளைவாக 1955, மே 15ஆம் நாள் மொலொட்டோவ், டல்லஸ், பினுய், மாக்மில்லன், ∴பிக்ல் ஆகியோர் வியன்னாவில் கூடி 38 விதிகள் அடங்கிய ஓர் உடன்படிக்கையை வரைந்தார்கள். அது ஆஸ்திரியா 'ஓர் இறையுரிமையுடைய, சுதந்திர, ஜனநாயக நாடு' என்பதை ஒப்புக் கொண்டது. மேலும், அது ஆஸ்திரியா நடு நிலைமையுடன் விளங்கும் என்ற வாக்குறுதியின்பேரில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

1955 சூலை 18 முதல் 23 வரை செனீவாவில் 'ஓர் உச்சகட்ட மாநாடு' நடைபெற்றது. அதில் ஐசன்ஹோவர், புல்கானின், ∴பாரே, ஈடன் ஆகியோர் கலந்துகொண்டனர். மாநாடு கூடு வதற்குச் சற்று முன்னர் புல்கானின், 'நல்ல சண்டையினும் மோச மான அமைதி சாலச் சிறந்தது' என்றும், ஐசன்ஹோவர், 'உலகின் சுதந்திர மக்கள் போரை வெறுத்தும் அமைதியை விரும்பியும் வருகிறார்கள்' என்றும் குறிப்பிட்டார்கள். இக் கூற்றுகள் மாநாட்டுத் தொடக்கத்தில் நல்ல சூழ்நிலையையும் நல்லெண்ணத் தையும் உண்டாக்கின. அநேக, ஆக்கப் (நல்ல) பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. ஆனால், படைக்கலக் குறைப்பு குறித்தும், செர்மன் ஐக்கியம் குறித்தும் ஒருவருக்கொருவர் ஏற்க முடியாத கருத்துகள் கொண்டிருந்ததால், உருப்படியான உடன்பாட்டிற்கு வர முடியாது போயிற்று. அடுத்தாற்போல் மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தி உடன்படிக் கைகள் செய்யும் நோக்கத்தில் செனீவாவில் (1955, அக். 27— நவ. 16) கூட்டப்பட்ட நான்கு வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடும் முட்டு நிலையை யடைந்தது. அப்போது கிடைத்த வாய்ப்புகள் மட்டும் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தால், 1956-ல் ஏற்பட்ட சோக நிகழ்ச்சிகள் நடந்தே இரா என்று துணிந்து கூறலாம்.

ஆஸ்திரிய உடன்படிக்கையும் 'செனீவா மனப்பான்மையும்' ஏற்பட்டதைத் தவிர, 'சமாதானச் சகவாழ்வு' முயற்சியில் உருப் படியாக எந்தவித உடன்பாடும் ஏற்படாதுபோயிற்று. எனவே, சோவியத் கொள்கை வகுப்பாளர்கள் இருமுக உடன்படிக்கைகள் (bilateral bargains) செய்வதிலும், 'நட்பை' வளர்க்கும் சுற்றுப் பயணம் செல்வதிலும் கருத்தைச் செலுத்தலானார்கள். அதற் கிணங்க குரூச்சேவும் புல்கானினும் 1955, சூன் மாதம் நேருவையும், சூலை மாதம் ஹோ-சீ-மின்னையும் தங்கள் நாட்டில் அன்புடன்

வரவேற்று இன்புடன் உபசரித்தார்கள்; சூலை மாத இறுதியில் கிழக்கு செர்மனிக்கு விஜயம் செய்தார்கள்; செப்டெம்பர் மாதத் தொடக்கத்தில் மாஸ்கோவில் அடினாரையும், பிரெண்டானோவையும், அதற்கு அப்புறம் குரோட்டுவாலையும் வரவேற்றார்கள்; அம் மாத இறுதியில் பின்லாந்து தலைவர்களை வரவேற்று உபசரித்தார்கள்; 1948ஆம் ஆண்டின் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தை 20 ஆண்டுக் காலத்திற்குப் புதுப்பிப்பதற்கு ஈடாக, போர்க்காலா எனப்படும் கடற்படைத் தளம் பின்லாந்துக்கு அளிக்கப்பட்டது; அக்டோபர் மாதம் கனடாவின் வெளிநாட்டு அமைச்சரையும், நார்வே, பர்மாவின் தலைமையமைச்சர்களையும் சோவியத் தலைவர்கள் இன்புடன் வரவேற்றார்கள்; 1955, நவம்பர் 17 முதல் டிசம்பர் 22 வரை இந்தியா, பர்மா, ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகட்கு விஜயம் செய்து அமைதியையும் நட்பையும் வளர்க்கவும், கடன் வழங்கவும், பண்டங்களைப் பரிமாறிக்கொள்ளவும் வகை செய்துவிட்டு வெற்றியுடன் தாயகம் திரும்பினார்கள்.

1956-ல் நிலைமை மோசமடைய ஆரம்பித்தது. ஆங்காங்கே கருமேகங்கள் வந்து சூழ்ந்துகொண்டன. மார்ச் மாத இறுதியிலும் ஏப்ரலிலும் மெலென்கோவ் பிரிட்டனுக்கு விஜயம் செய்தார். அவருக்கு அடுத்தாற்போல் குரூச்சேவும் புல்கானினும் (ஏப்ரல் 18—27) விஜயம் செய்தார்கள். ஆனால், அவர்களுக்கு நல்ல வரவேற்பு அளிக்கப்படவில்லை. எம். வி. டி. (M.V.D.)யின் ஜெனரல் ஐவான் ஏ. சிராவ் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பயங்கரமான சோவியத் ஜெட் போக்குவரத்து விமானமான டியூ-104-ல் லண்டனில் வந்து இறங்கியபோது அந்த வரவேற்புகூட அளிக்கப்படவில்லை. பிரிட்டிஷ் போலிசுப் படையுடன் (Scotland Yard) பாதுகாப்புப் பேச்சு நடத்துவதற்காகச் சென்றார் அவர். அவரை பிரிட்டிஷ் பத்திரிகைகள் 'கொள்ளைக்காரன்' என்றும், 'நரி' என்றும் பலவிதமாகத் திட்டி வர்ணித்திருந்தன. இப்போதும் உருப்படியான உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. மார்ச் மாதத்தில் மிக்கோயன் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். மே 15 முதல் 19 வரை மொலெட்டும், பினியூவும் மாஸ்கோவில் வரவேற்கப்பட்டார்கள். இரான் மன்னர் யூ.எஸ்.எஸ்.ஆரில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்த வேளையில், ஷெப்பிலோவ் கெய்ரோவுக்கும், சூனில் ஆதென்சுக்கும் விஜயம் செய்தார். இகத்ரீனா ஃபுர்ட்சீவா சூலையில் பிரிட்டனுக்கும், நவம்பரில் இத்தாலிக்கும் சென்றுவந்தார். செப்டம்பரில் மிக்கோயான் பெய்ப்பிங் [illegible]க்கால் இந்தோனேசிய ஜனாதிபதி சூகர்னோ மாஸ்கோவிற்கு விஜயம் செய்துவிட்டு, 100,000,000 டாலர் மதிப்புள்ள சோவியத் [illegible]தவியுடன் தாயகம் திரும்பினார். நவம்பரில் சிரியா ஜனாதிபதி குவதலி சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்து, [illegible] உதவி வாக்குறுதியும் மற்ற உதவி வாக்குறுதி

PUBLIC LIBRARY MAR 1961

களும் பெற்றுத் தாயகம் திரும்பினர். இவ்வாறு பல நாட்டுத் தலைவர்களும் சோவியத் தலைவர்களும் வந்துபோய்க்கொண்டிருந்தார்களேயன்றி, அவற்றுல் கிழக்கு-மேற்கு உடன்பாட்டைப் பொறுத்தவரை 1956, அக்டோபர் 19-ல் சப்பானுடன் செய்யப்பட்ட 'அமைதி அறிக்கை' ஒன்றைத் தவிர, உருப்படியாக எதுவும் உருவான பாடில்லை. இவ் வறிக்கையின்படி மாஸ்கோ டோக்கியோவுடன் தூதியல் வர்த்தக உறவு பூண்டது. தென் சகாலின், குரில் தீவுகளைத் தன்வசமே வைத்துக்கொள்ளப்போவதாக மீண்டும் தன் நோக்கத்தைத் தெரியப்படுத்தியது. சிறிய தீவுகளான ஷிகோடான், ஹபோமாய் இரண்டையும் உடன்படிக்கை வெளிப்படையாக ஏற்படுங்கால் சப்பானிடமே மீண்டும் தந்துவிடுவதாக வாக்குறுதியளித்தது.

கூரிய பார்வையுடன் இன்று நோக்குங்கால், டான்யூப், நைல் ஆகிய நதிகளின்மேல் நடந்த மூர்க்கத்தனமான செயல்களைத் தவிர்க்கக்கூடிய வல்லரசுகள் உடன்பாடு ஒன்று உருவாவதற்கு 1955-லேயே, பொதுவாக எல்லா வல்லரசுகளும், குறிப்பாக யூ.எஸ்.எஸ்.ஆரும், யு.எஸ்.ஏயும் அதிதீவிரமாக முயன்றிருக்க வேண்டும் என்பது புலப்படும். அரசியல் வல்லமைத் தோல்வியாலேயே இரண்டு கூட்டுகளும் முறிந்துபோயின. இரு கூட்டுகட்கும் இடையே இணக்கம் ஏற்படுவது மிகக் கடினமாகிக்கொண்டிருந்தது. 1955-க்கு மூன்று ஆண்டுகட்கு முன்பிருந்தே மிகச் சிரமப்பட்டு மேலைநாடுகளுக்கும் யூ.எஸ்.எஸ்.ஆருக்கும் இடையே வளர்க்கப்பட்டுவந்த நல்லெண்ணமானது, ஹங்கேரியப் புரட்சியை சோவியத் யூனியன் கொடுமையாக அடக்கியதாலும், மேலை நாடுகட்கு எதிராக ரஷ்ய நாடு, எகிப்து, சிரியா, எமன் ஆகிய நாடுகட்கு ஆதரவு அளித்ததாலும் சிதறுண்டுபோயிற்று.

உலக அரசியல் அரங்கில் வலிமையுடன் நிலையாக நின்று வரும் ஓர் நாட்டின் தேவைகளை, வலிமையில் பங்கு கொள்ளும் மற்ற நாடுகளால் வெற்றியுடன் எதிர்க்கவோ, அன்றித் தடை செய்யவோ முடியாது. அமெரிக்காவோ அல்லது ரஷ்யாவோ ஒருகாலும் ஒருவர்மீது மற்றவர் போர்முலமாகப் பயனுள்ள 'வெற்றி' எதுவும் காணமுடியாது என்பதும், கம்யூனிச முகாமும் அட்லான்டிக் கூட்டும், ஒன்று மற்றதன்மீது தன் வலிமையை அதிகரிக்க முயல்வதன்மூலம் திக்குமுக்காடிவருவதும், 1950-60 இறுதியில் எல்லோருக்கும் நன்கு புலப்பட்டுவிட்டது. வலிமை குறித்த சிக்கல்களை வன்செயலின்மூலம் தீர்க்கமுடியாதுபோனபின், பேச்சுவார்த்தை மூலம் அவற்றைத் தீர்ப்பதைத்தவிர வேறு என்ன வழி இருக்கிறது? எனவே, ஒருவருடைய கருத்து—கொள்கைகளுக்கு மற்றவர் விட்டுக்கொடுத்து இருவரும் ஓர் இணக்கத்திற்கு வந்தாலன்றி, இருவரும்


RUSSIA AND THE FAR EAST
SCALE OF MILES
0 50 100 150 200
U. S. S. R.
SIBERIA
MANCHURIA
MONGOLIA
JEHOL
CHINA
KOREA
Sea of Japan
Yellow Sea
Pacific Ocean
Sea of Okhotsk
KAMCHATKA
Petropavlovsk
PARAMUSHIRU
Okha
Nikolayevsk
SAKHALIN
KURILE ISLANDS
URUPPU
ETOROFU
KUNASHIRI
SHIKOTAN
HABOMAI
Komsomolsk
Smirnykh
Ilynski
Kholmsk
Yuzhno-Sakhalinsk
Korsakov
Gornozavodsk
Amur
Khabarovsk
Blagoveschensk
Nunkiang
Tsitsihar
Harbin
Mutankiang
Changchun
Kirin
Voroshilov
Vladivostok
Najin
Chungjin
Mukden
Antung
Chinchow
PEKING
Tientsin
Port Arthur
Dairen
Pyongyang
Wonsan
Seoul
Inchon
Chefoo
Tsingtao
Licheng
Mokpo
Taegu
Pusan
Masan
Hiroshima
Shimonoseki
Sasebo
Nagasaki
Kagoshima
SHIKOKU
KYUSHU
Miyazaki
Tungshan
Yangtze
Nanking
Shanghai
Asahigawa
Sapporo
Otaru
HOKKAIDO
Hakodate
Aomori
Hachinohe
Niigata
Yokohama
TOKYO
Nagoya
Kyoto
Osaka
Wakayama

சேர்ந்து அழிவது திண்ணம். வருங்காலத்தில் இந்தப் போக்கில் கம்யூனிஸ்ட்டு மேலை நாட்டுத் தூதர்கள் முயற்சி செய்வார்கள். அம் முயற்சி ஓரளவே வெற்றியைக் கொடுக்கும். அவற்றுல் மனித வர்க்கத்தைத் தனக்குக் கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் மார்க்ஸ் லாந்தும் சுதந்திர உலகமும் நடத்திவரும் போட்டியை ஒருகாலும் நீக்க முடியாது. ஆனல், அந்தப் போட்டிமட்டும் பலாத் காரமாக மாறிவிடாதிருக்கும்பட்சத்தில், இந் நூற்ருண்டில் மிச்ச மிருக்கும் காலத்திலாவது, அது மனிதகுல நம்பிக்கைகளே அறவே அழித்துவிடாமல் ஆக்கமும் ஊக்கமும் அளித்து அந் நம்பிக்கைச் சுடரை ஒளிப்பிழம்பாக்க வாய்ப்பு இருக்கிறது.

4. மார்க்ஸ் நாட்டில் ஒற்றுமையின்மை

'ஆயிரம் ஆண்டுக்கால வரலாறு இயற்றியதை, அகில அடிமைத்துவம் அழிக்கப் பார்க்கிறது. ஐரோப்பியப் படத்தி லிருந்து துருக்கி, அங்கோரி, செர்மனியில் பாதி ஆகிய வற்றை நீக்காமல் இதில் வெற்றி பெறுதல் என்பது இயலாத காரியம் ஆகும். அப்படி இதைச் சாதித்து விட்டால், பிறகு ஐரோப்பாவையே அடிமைப்படுத்தினுல் தான் அது நிலைத்து நிற்க முடியும். முதலில் நம்பிக்கை யளவில் இருந்த இந்த அகில அடிமைக் கொள்கை இன்று ஓர் அரசியல் திட்டமாகவே ஆகிவிட்டது. இன்று ரஷ்யா மட்டும் அன்று; ஆனல், அகில அடிமைத்துவ சதியே ஐரோப்பாவின் சிதைவின்மேல் தன் கோட்டையை எழுப்ப எத்தனித்துக்கொண்டிருக்கிறது. இதனுல் ஒன்று, ஐரோப்பா அடிமைத்தளைக்கு ஆளாகவேண்டும்; அல்லது தன்னை அடிமைப்படுத்த எத்தனிக்கும் சக்தியை அழிக்க வேண்டும். இதையன்றி அதற்கு வேறு வழியேயில்லை.
—கார்ல் மார்ஸ், ஏப்ரல் 1855

'நாங்கள் விரும்பியதெல்லாம் சுதந்திரந்தான்; சௌகரியமான வாழ்க்கையை விரும்பவில்லை. எங்களிடம் உண்ண உணவும், மற்றும் வாழ்க்கைக்கு அத்தியாவசிய மானவையும் இல்லாது இருந்திருக்கலாம். ஆனல், நாங்கள் விரும்பியது சுதந்திரமே. சிறுவர்களாகிய நாங்கள் பொய்யே நிலவும் சூழலில் வளர்க்கப்பட்டு வந்ததால், அது குறிப்பாக எங்களுக்கு இடையூறு விளைத்து வந்தது. பிறருடைய பொய்ப் போதனையால் நல்ல எண்ணம்—கருத்து எங்களிடம் பிறக்கவே வழியில்லாது போயிற்று. எனவே, நாங்கள் சிந்தனைச் சுதந்திரத்தையே (freedom of thought) பெரிதும் விரும்பினேம்...'—1956 ஆம் ஆண்டு அங்கேரிப் புரட்சியில் பங்கெடுத்துக்கொண்ட பதினெட்டு வயது மாணவி ஒருத்தி, இவ்வாறு 1957-ல் அங்கேரி பிரச்சினை குறித்து நியமிக்கப்பட்ட ஐ.நா. தனிக்குழு ஒன்றுக்கு எழுதினுள்.

20ஆம் நூற்றாண்டு சருவாதிகாரிகள் ஃபாசிஸ்ட்டுகளாக இருந்தாலும் சரி, அல்லது கம்யூனிஸ்ட்டுகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு மனிதகுலத்தின் ஊழ்வினைகள், மனிதன் செய்யும் சதிகளாலேயே விளைபவை என்று பொருள் கூறும் பழக்கமாகிவிட்டது. ஃபாசிஸ்ட்டுகளுக்கு 'யூத சதிகள்', 'மெஸ்ஸிய சதிகள்', 'முதலாளித்துவ சதிகள்', மற்றும் 'மார்க்சீய சதிகள்' ஆகியவற்றைப்பற்றிப் பேசுவதென்றால் பெரு விருப்பம் உண்டு. அதுபோல் கம்யூனிஸ்ட்டுகளுக்கு, 'ஃபாசிஸ்ட்டு சதிகள்', 'முதலாளித்துவ சதிகள்', 'வால் வீதிச் சதிகள்', 'ஏகாதிபத்தியச் சதிகள்' முதலியவற்றைப்பற்றிப் பேசுவதென்றால் வெகு பிரியம். இரு கூட்டத்தாருமே ஒரே வகையைச் சேர்ந்தவர்கள்தாம். இரு கூட்டத்தவரும் சதியாளர்தாம் திருடனுக்குத் திருட்டுப் புத்தி என்பதுபோல் இவர்கள் தாங்கள் சதியாளர் என்பதை மறந்துவிட்டுப் பிறரைச் சதியாளர் என்று மட்டும் அழைக்கத் தவறுவதில்லை. ஆனால், ஜனநாயக வாழ்க்கை முறையில் பற்றும் நம்பிக்கையும் உள்ளவர்களோ தம்மிடையேயுள்ள இடது அல்லது வலதுசாரிச் சதியாளர்களுக்கு எதிராக ஜாக்கிரதையாக இருந்துகொள்வர். பெரும் நகரங்களில் வாழ்ந்துவரும் முக்கியச் சமுதாயத்தினர் பொங்கி எழுந்தால்கூட அவர்களை இவர்களில் அறிவுடையோர் சதியாளர் என்று அழைக்கக் கூசுவர். உண்மையிலேயே அது சதியாக இருந்தாலும்கூட, அதில் ஈடுபட்டவர்கள் சந்தேகமின்றிச் சூழ்ச்சிக்காரர்களாகவே இருந்தாலும்கூட, அப் பெயர் கொண்டு அவர்களை ஒருகாலும் அழைக்கமாட்டார்கள்; அப்படி அழைக்கத் தயங்குவர். எந்த அரசியல் நடைமுறையை எடுத்துக்கொண்டாலும், சதிச் செயல் புரிந்தோ, அன்றிச் சருவாதிகார முறையைக் கையாண்டோ அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்புபவர்கள், அதற்கு மக்களுடைய ஆதரவைக் கணிசமான முறையில் பெருமல் அதிகார பீடத்தில் அமர்வதென்பது இயலாத காரியம். மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அல்லது பூர்த்தி செய்வதுபோல் தென்படும் காரியங்கள், மக்கள் நம்பிக்கையை வளர்க்கும் அல்லது வளர்ப்பதுபோல் தோன்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளாமல் மக்களின் ஆதரவைக் கணிசமான அளவில் பெறமுடியாது. இதைப் புரிந்துகொண்டால், ஜனநாயக முறையில் பற்று உள்ளவர்கள், அரியேறெனச் சினந்தெழும் மக்கள் ஆர்ப்பாட்டத்தைச் சதியென்று அழைக்க ஏன் தயங்குகிறார்கள் என்பதும், அவ்வாறு இவர்கள் தயங்குவது சரிதான் என்பதும் புலப்படும்.

எண்டிசை நோக்கினும் இவ்வுலகில் மக்களிடையே வஞ்சகமும் மூடத்தனமும் பரவியிருப்பது கண்கூடாகும். எனவேதான், மூடர்கள் போக்கிரிகளை அடிக்கடி ஏமாற்றிவருகிறார்கள். மனிதர் அனைவரும், அல்லது மனிதரில் பெரும்பாலோர் வஞ்சகர்கள், அல்லது மூடர்கள் என்று 'வரலாற்றின் சதிக் கொள்கை' கூறுகிறது. ஆனால், இது

தவருன கொள்கை என்பது வெள்ளிடைமலை. சிறந்த சமுதாயத்தில் சிறந்த வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற உணர்ச்சியும் ஆசையும் உடையவன் மனிதன். இதுவே பொதுவாக மனிதர் அனைவருடைய வாழ்க்கையின் குறிக்கோளுமாகும். அவர்கள் மேற்கொள்ளும் நட வடிக்கைகள் எவ்வளவு தவருனவையாக இருந்தாலும், அவர்களின் நிராசை எவ்வளவு மோசமானதாகவோ அல்லது பைத்தியக்காரத் தனமானதாகவோ இருந்தாலும்கூட, அவர்கள் இதே குறிக்கோளை அடையவே முற்படுகின்றனர். மனிதரில் பெரும்பாலோர் எப்பொழு தும் அரசியல் முதலிய துறைகளில் நடந்துகொள்ளும் முறையையும் மனிதர் அனைவருமே திரும்பத்திரும்ப நடந்துகொள்ளும் விதத்தை யும் நாம் பார்க்குங்கால், இவ்வுண்மை புலப்படும். இவ் வுண்மையால் உந்தப்பட்டுதான் அவர்கள் தங்கள் நலனை வளர்க்கக்கூடியவர்கள், தங்கள் கனவை நனவாக்குவோர் என்று கருதுபவர்களிடம், விசுவாசங் காட்டிவருகிறார்கள். ஆனால், நடைமுறையில் இவ்விரு நம்பிக்கைகளும் சிதறிப்போய்விடுவதைப் பார்க்கிறோம். இதற்குச் சூழ்நிலைச் சதியே காரணமன்றி, மனிதன் வேண்டுமென்றே செய்யும் சூழ்ச்சி காரணமன்று. நம்பிக்கை நனவாகாது போய்விடுவதால் ஏற்படும் ஏமாற்றத்தில், நாம் தவருன முடிவுக்கு வந்துவிடலாகாது. மனிதரிலே மோசமானவர்கூட அவரவர் நம்பிக்கைகளால் வாழ விரும்புகின்றனரேயன்றிப் பேராசையாலோ, அச்சத்தினாலோ, வெறுப்பினாலோ அன்று. இந்த உண்மை ஃபாசிஸ்ட்டுகளுக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும்கூடப் பொருந்தும். ஒளிவிட்டெரியும் (நம்) நம்பிக்கைச் சுடர் மங்கித் தூர்ந்துபோகுங்கால் ஏற்படும் ஏமாற்றம் இவ் வுண்மையை மறைக்கும்படி செய்யவிடலாகாது.

கம்யூனிஸ்ட்டுகளின் உலகச் சதி பொய் அன்று. அது உண்மை தான். 1848-லிருந்தே இச் சதியைப்பற்றி மனிதரனைவரும் எச்சரிக் கப்பட்டுவந்திருக்கிறார்கள். ஆனால், இன்றுவரை இச் சதிக்குக் கிட்டி யிருக்கும் வெற்றிகளை நாம் புரிந்துகொள்ளவியலாது. எனவே, அதைப் பயனளிக்கும் முறையில் எதிர்க்கவுமுடியாது. அதனால் கயவர் கள் போக்கிரிகளைத் தம் பக்கம் இழுத்துக்கொண்டுவிட்டார்கள்; பொது மக்களுக்கு வெறியூட்டி அம் மயக்கத்தில் மூடர்களைத் தங்களுக்கு அடிமைப்படுத்திவிட்டார்கள் அல்லது அழித்துவிட்டார்கள் என்று தட்டிக்கழிக்க முடியாது. இக் கூட்டு வழியை எவராலும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அது பொருத்தமற்ற சமுதாயங்களில் கம்யூனிசம், ஃபாசிஸம் ஆகியவற்றை வளர்ப்பதிலும், பரப்புவதிலும், ஜனநாயக அரசியலில் கும்பலாட்சியை உருவாக்குவதிலும் பெரிதும் பயன்பட்டுவருகிறது என்பதை உணரவேண்டும். மகிழ்ச்சியின்றிக் கவலையில் தோய்ந்துபோய்க் கிடக்கும் கோடிக்கணக்கான மக்கள் நம்பிக்கையை இழந்து தவித்து நிற்கும் வேளையில், தம் வாழ்க்கை மலர் பூத்துக் குலுங்க '(கம்யூனிசம் காட்டும்) வழி இங்கே இருக்கிறது;

அவ் வழி சென்று வேண்டிய தியாகமெல்லாம் செய்தாவது இறுதியில் மனிதனுக்கு வாழ வழி பிறக்கும்' என்று கருதிச் செயல்படுவதால் தான், பெரிய (திரளான) மக்கள் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங் களும் 'பெரிய' 'பொதுமக்கள்' போராட்டங்களாக ஆகிவிடுகின்றன.

இவ் வியத்தகு மாற்றத்தை உண்டுபண்ணும் கம்யூனிசச் சதி எப்போது பிறந்தது? யாரால் பிறந்தது? என்ற வினாக்கள் எழுகின்றன அல்லவா? குழப்பத்தில் மூழ்கிக் கிடந்த கோடிக்கணக் கான மக்களே இத்தகைய சமயச் சார்பற்ற மதம் (secular faith) ஒன்றைப் பின்பற்றுமாறு செய்தனர் நால்வர். அப்போதிலிருந்தே இச் சதி ஆரம்பமாகிவிட்டது எனலாம். அந் நால்வரில் ஒருவர் சுமார் 100 ஆண்டுகட்கு முன்னர் பிரிட்டிஷ் கண்காட்சிசாலையில் வைக்கப் பட்டிருந்த நூல்களை மிக நன்முகக் கற்றுக்கொண்டிருந்தார். மற்றொருவர் மான்செஸ்டரில் தொழிற்சாலை ஒன்று நடத்திவந்தார். மது, மகளிர், இன்னிசை ஆகிய இவற்றில் தம் பொழுதைப் போக்கி வந்தார். மூன்முமவர் அரை நூற்முண்டுகட்குப் பின்னர், ஸ்விட்சர் லாந்தில் வறுமையுடன் போராடிக்கொண்டே, பத்திரிகைகட்குக் கட்டுரைகள் வரைந்துகொண்டு இருந்தவர், திடீரென்று ஒரு நாள் தான் ஒரு புரட்சித் தலைவராகிவிட்டதை அறிந்தார். நான்காமவர் பாங்கிகளைக் கொள்ளையடிப்பதும் சிறை செல்லுவதுமாக இருந்து வந்தார். இந் நால்வரும் வேறு யாருமில்லை. அவர்கள் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர்தாம். இவர்களுடைய சீடர்கள்தாம் 20ஆம் நூற்முண்டின் நடுவில் எல்பி நதியிலிருந்து சீனக் கடல்வரை பரவியிருந்த 14,000,000 சதுரமைல் பரப்புள்ள நிலப்பகுதியில் வாழ்ந்துவந்த மனித குலத்திலேயே மூன்றில் ஒரு பகுதியான சுமார் 800,000,000 மக்களை ஆண்டுவந்தார்கள். எஞ்சியோர் இவ் வுயர்குருக்கள் காட்டிய வழியில் மூடநம்பிக்கை கொண்டு, தங்களுடைய நாட்டின்மீது காட்டவேண்டிய விசுவாசத் தைப் 'பாட்டாளிகள் தாய்நாடான' யூ.எஸ்.எஸ்.ஆரிடம் காட்டி வந்தார்கள்.

வையகமெங்கும் இயங்கிவரும் 'பாட்டாளிகள் புரட்சி' மூலம் ஓர் உலக அரசு அமையப்போகிறது; அது இறுதியில் உலக சோவியத் குடியரசாக மாறப்போகிறது; கம்யூனிஸ்ட்டுகள் உலகையே ஆளப் போகின்றனர் என்ற புதிய எண்ணம் நம் கால மக்களில் பெரும் பாலோர் உள்ளத்தில் குடிபுகுந்தது. அன்னூர் கடைசி மனித சமுதாயம் கடைசியில் ஒன்றுபட்டுச் சகோதரத்துவத்தில் ஐக்கியமாகி 'சமூக நியாயத்துடன்' வாழப் போகிறது என்ற உச்ச கோட்டை கட்டி வந்தார்கள். எவ்வளவுதான் சீரிய நோக்கமும் தூய்மையான எண்ணமும் உடையதாக இருந்தபோதிலும், இக் கனவு நனவாகப் போவதில்லை. ஏனெனில், நடைமுறையில் இவ் வெண்ணங்கள்

தவருனவையாக மாறிவிடுகின்றன. மார்க்ஸ் கண்ட கனவை ரஷ்யாவிலும் சீனாவிலும் நனவாக்க முயன்றுவந்த சீடர்கள், இறுதியில் சருவாதிகாரத்துவக் கொடுங்கோலாட்சியை நிறுவவில்லையா? மக்களை அடக்கி ஒடுக்கித் துன்புறுத்தவில்லையா? மார்க்சையும் அவருடைய முதற் சீடர்களையும் ஊக்குவித்த, தூண்டிய உயரிய மனித எண்ணங்களும் கருத்துகளும் காற்றில் பறக்கவில்லையா? அவ்வாறிருந்தும், (கம்யூனிச மதத்தில்) பற்றுள்ள விசுவாசிகள், உண்மையான மதம் ஒன்றை நாடி, மற்ற மதங்களில் விசுவாசங் கொள்ளாமல் விசுவாசிகளாகவே விளங்கிவந்தார்கள். அவர்கள் நாடிய மதம் விசுவாசிகளின் நம்பிக்கையைப் பற்றுறுதியைப் பல வழிகளில் காட்டிக் கொடுத்தும் அவர்கள் அதையே பின்பற்றிவந்தார்கள்.

இங்கு நாம் புதிய கம்யூனிச சாம்ராச்சியத்தின் ஒற்றுமை வலிமையின் பல்வேறு கூறுகளையும், அதன் பல பகுதிகட்கு இடையேயும், அதன் எல்லைகட்கப்பால் வாழ்ந்துவரும் கம்யூனிச ஆதரவாளர்க்கிடையேயும் நிலவிவரும் கருத்து வேற்றுமைகள், பிளவுகள் ஆகிய இவற்றின் காரணத்தையும் போக்கையும் பற்றி ஆராய்வோம். இச் சாம்ராச்சியத்தின் தோற்றுவாயைப் பொறுத்த மட்டும் உண்மைக் கண்கொண்டு நோக்குமிடத்து (சியாங்கே ஷேக் உட்பட), பலர் நம்பிவரும் அமெரிக்கக் கருத்துத் தவருனது என்பதைத் தொடக்கத்திலேயே உணர்த்திவிடுவது நன்று. பலாத்காரம், வஞ்சம் ஆகியவற்றின்மூலம் யூரேசியாவின் பெரும் பகுதியின்மேல் 'ரஷ்யாவின் வெற்றிக்கொடியை நாட்டியவர்' என்று குற்றஞ் சாட்டப்படும் மாஸ்கோ தலைவர்களின் சூழ்ச்சியாலேயே சீனாவும், கிழக்கு ஐரோப்பாவும் 'கம்யூனிசமயமாகின' என்ற அமெரிக்கக் கொள்கை முற்றிலும் உண்மைக்குப் பொருந்தாததாகும். பிறரை எளிதில் நம்பவைப்பதிலும், அவ்வாறு நம்பியவரைக் கிறித்துவ எதிரிகளான மஸ்கோவியரின் பேய்வலிமையைக் கண்டு அஞ்சுமாறு செய்வதிலும் தாம் இக் கொள்கையின் நயம் இருக்கிறது. ஆனால், உண்மைக்கும் அதற்கும் (கொள்கைக்கும்) வெகுதூரம் இருப்பதே அதன் பெருங் குறையாகும்.

சீனப் புரட்சி 'வளர இனிவாய்ப்பில்லை' என்றும், எனவே, சீனக் கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் படையைக் கலைத்துவிடுமாறும், கியூமிண்டாங்குடன் ஒத்துழைக்குமாறும், சியாங்கே-ஷேக்கிற்கு ஆதரவு அளிக்குமாறும் 1945-ல் ஸ்டாலின் மாவிடம் கேட்டுக்கொண்டார். பின்னர் ஸ்டாலினே தன் கருத்துத் 'தவருனது' என்று ஒப்புக் கொண்டார். 1948-ல் கொரில்லாப் போர் முறையில் மட்டும் ஈடுபடுமாறும், சீனாவின் பெரிய நகரங்களைக் கைப்பற்றும் நோக்கத்தைக் கைவிடுமாறும் அவர் மாவிற்கு ஆலோசனை கூறினார். இதைச் செவியுற்ற மாவும் அவர்து சகாக்களும்

ஸ்டாலினைப் பார்த்து மௌனமாக எள்ளி நகையாடிவிட்டுத் தமக்கு எது சிறந்ததென்று தோன்றியதோ அதைச் செய்தார்கள். மயக்கத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அமெரிக்கக் கொள்கையின் நற்பயனைச் செஞ்சீனாவும் ரஷ்யாவும் நெருங்கிய நேசநாடுகளாயின. ஆனால், பெய்ப்பிங் ஆட்சியாளர்கள் ஒருகாலும் கிரெம்லினின் கைப்பாவையாக ஆகவில்லை; ஆகவும் போவதில்லை. அவர்கள் ஆட்சியும் சோவியத் துணைநாடு என்று சொல்வதற்கில்லை. மாறாக, நாம் மேலே கண்டதுபோல் ஸ்டாலினும், அவருடைய பின்தோன்றல்களும் தங்களுக்குப் பிடிக்காதுபோனாலும் போர்ட் ஆர்த்தர், டெய்ரன் உட்பட மஞ்சூரியாவில் தங்களுக்குச் சொந்தமாக இருந்த உரிமைகள், தனியுரிமைகள் அனைத்தையும் பெய்ப்பிங்கிற்கு விட்டு விடுவதன் அவசியத்தை நன்கு உணரத் துவங்கினர். மேலும், சீனாவை சோவியத் நலனை வளர்க்கப் பயன்படுத்துவதற்கு இயலாது என்பதையும் உணர்ந்து, சோவியத் பொருளாதாரம் திக்குமுக்காடும் அளவுக்குத் தங்கள் புதிய நேசநாட்டிற்குப் பொருளுதவியும் தொழில் நுணுக்க உதவியும் அளிக்கத் தலைப்பட்டார்கள்.

கிழக்கு ஐரோப்பாவைப் பொறுத்தவரை, பயங்கர மாஸ்கோ ராட்சசன், சோவியத் ஏகாதிபத்தியத்திற்கு இரையான, உதவியற்று நின்ற மக்களைத் தாக்கி, அவர்களைச் சுரண்ட முற்பட்டது உண்மையே. இங்கும் பெரும்பாலான மேற்கத்தியர்கள் எதிர் பார்த்ததுபோல் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. 1944–46-ல் மாஸ்கோ ஆட்சியாளர்கள் எல்பி நதிவரைக்கும், அட்ரியாட்டிக் கடல்வரைக்கும் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றனர். இந்த ஆதிக்க நோக்கத்தை மறைக்கும் முகத்தான், இப் பிராந்தியத்தில் ஜனநாயக ஆட்சி போன்ற 'நடுத்தர வகுப்பினருடைய' கூட்டு ஆட்சிகளை நிறுவப் பாடுபடுவதுபோல் நடந்துகொண்டார்கள். இது ஓரளவு சகிக்கக்கூடிய கொள்கையென்றே கூறவேண்டும். இதை யறிந்து பெவின், பைரன்ஸ், சர்ச்சில், ட்ரூமென் ஆகியோர் ஒன்றுதிரண்டு கிழக்கு ஐரோப்பாவிலிருந்து சோவியத் ஆதிக்கத்தைத் துடைத்து விடவும், சோவியத் 'இரும்புத் திரையை' முன்பிருந்த எல்லைவரை சுற்றி வைத்துவிடவும் தீர்மானம் செய்யவுமே, மாஸ்கோ இக் கொள்கையைக் கைவிட்டுவிட்டது. சோவியத் ஆதிக்கத்தைக் குலைத்துக் கம்யூனிசக் கேட்டிலிருந்து காப்பாற்ற, மேற்கு ஐரோப்பாவுக்குப் பொருளாதார மறுவாழ்வு அளிக்கவும், அதை இராணுவ வலிமையுள்ளதாகச் செய்யவும் தீர்மானித்தார்கள். ட்ரூமென் கொள்கையையும் மார்ஷல் திட்டத்தையும் மாஸ்கோ (1947, செப்டெம்பரில்) வரவேற்றதன் அடிப்படை நோக்கம் என்ன வென்றால், கமின்ஃபர்மை அமைக்கவும், கம்யூனிஸ்ட்டு அல்லாத தலைவர்களை இப் பிராந்தியங்களிலிருந்து விரட்டியடிக்கவும் அல்லது தொலைத்துக்கட்டவும், அப்படிப்பட்ட தலைவர்களைப் பின்பற்றுவோரை

அழித்துவிடவும், இல்லாவிட்டால் அவர்களைத் தம் பக்கம் முழுக்க முழுக்கக் கம்யூனிச ஆட்சியை இங்கு நிறுவவும், இறுதியில் இழுத்துக் கொள்ளவும், செக்கோசுலோவாக்கியாவில் 1948, பெப்ரவரியில் திடீர்ப் புரட்சி ஒன்றை உண்டாக்கவும்தான் என்று துணிந்து கூறலாம். டிட்டோ தன் நாட்டுத் தேசீய சுதந்திரத்திற்கு இழுக்கு வராமல், அதைக் கட்டிக்காப்பாற்றத் துடிதுடித்ததால் அவரைக் கமின்ஃபோர்ம் 1948 சூன் மாதம் (கம்யூனிச) 'சாதியிலிருந்து விலக்கி விட்டது.' அதன் பின்னர் ஸ்டாலினின் மூர்க்கத் தலைமையில் சோவியத் துணைநாடுகளனைத்தும் 'டிட்டோ வாதிகள்,' 'ட்ராட்ஸ்கி வாதிகள்', 'ஏகாதிபத்தியக் கையாளர்கள்' ஆகியோரைத் தொலைத்துக் கட்ட முற்பட்டன. தேசிய சுயநிர்ணய உரிமையை (right of national self-determination) நாடி நின்றதே இவர்கள் புரிந்த பெருங் குற்றமாகும். மீண்டும் செக்கோசுலோவாக்கியா இவ்வூர்வலத்தில் இறுதியில் நின்றது. ஸ்டாலின் இறக்க மூன்றே மாதங்கள் இருக்குங் கால், 1952, டிசம்பரில் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் முன்னாள் செக்ரடரி ஜெனரலான ரடோல்ஃப் ஸ்லான்ஸ்கியும், முன்னாள் வெளி விவகார அமைச்சரான வலாதிமீர் கிளமெண்டிஸும், இதர 'இணைப்பரசுக்காரர் களும்' (confederates) பிரேக்கில் தூக்கிலிடப்பட்டார்கள்.

ஸ்டாலின் நோய்வாய்ப்படவுமே அவர் அகமும் புறமும் கடைப் பிடித்து வந்த அடக்குமுறைக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க குருச்சேவ் முடிவு செய்துவிட்டார். அவர் கட்டியெழுப்பிய பிரமாண்ட மான மார்க்ஸ்லாந்தும் இடிந்துவிழப் புறப்பட்டது. 1953, சூன் மாதம் கிழக்கு செர்மனியில் நடைபெற்ற கலகங்கள், 1956, சூனில் நடந்த பொஸ்ஞன் கலகங்கள், போலாந்திய நெருக்கடி, அங்கேரிப் புரட்சி ஆகிய திடீர் நிகழ்ச்சிகள் அனைத்தும் சோவியத் துணைநாடுகளிலும், நாற்றிசையுமிருந்த கம்யூனிஸ்ட்டுகளுக்கு இடையேயும் தலைதூக்கிய குழப்பத்தைப் படம்பிடித்துக் காட்டின. 'ஸ்டாலின் எதிர்ப்புக் கொள்கை' ஒரு நீண்ட கதையாகும். அதை இங்குச் சுருக்கமாகக் குழப்பமின்றிக் குறிப்பிட இயலாது. கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் 20ஆம் காங்கிரஸ் கூட்டத்திலும், ஸ்டாலின் இழைத்த குற்றங்கள் குறித்து குருச்சேவ் ஆற்றிய இறுதி உரையிலும், 'மனிதர் வழிபாட்டுக் கொள்கை' (cult of personality) மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டது. குருச்சேவின் உரையை 1956, சூன் 4ஆம் நாள் அமெரிக்க வெளி விவகாரத் துறை முதன்முதலாக வெளியிட்டது. மனித வழிபாட்டுக் கொள்கை தொடர்ந்து பழிக்கப்பட்டபோது, மார்க்ஸ்லாந்து முழுதிலும் ஏற்பட்ட முக்கியமான விளைவுகள் பல. அவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம்.

இத்தாலியில் தொக்லியாத்தி ரஷ்யாவின் புது ஆட்சியாளரைப் பற்றிக் குறைகூறத் தொடங்கினர். அவர்கள் குற்றம் புரிவதில் ஈடு

பட்டிருப்பதையும், 'சோவியத் சமுதாயம் தானுகவே வகுத்த ஜன நாயக, சட்டப் பாதையை விட்டுவிட்டு எப்படி, எதற்காக சிதைவுப் பாதையை நோக்கிச் செல்கிறது', என்ற முக்கியமான பிரச்சினையைப் பற்றி அவர்கள் சிரத்தை காட்டாமலிருக்கிறார்கள் என்றும், குறை கூறினர். நென்னி தனக்குக் கிடைத்த ஸ்டாலின் அமைதிப் பரிசை ஏற்க மறுத்துவிட்டு, இத்தாலியின் வலதுசாரி சோசியலிஸ்ட்டு களுடன் கூட்டுச் சேர முயன்றார். மேலும், அவர் 'இந்த சமூக நெருக்கடி ஸ்டாலின் புரிந்த குற்றங்களுடன் மட்டுமல்ல சோவியத் முறையுடனும் சம்பந்தப்பட்டது' என்று கூறினர். அமெரிக்காவின் சிறிய கம்யூனிஸ்ட்டுப் போராட்டத்தில் ஹோவர்டு பாஸ்ட்டு என்பவர் (இவர் பின்னர் கம்யூனிசத்தையே விட்டுவிட்டார்) குரூச்சேவின் சொற்பொழிவு 'காட்டுமிராண்டித் தனத்தையும் இரத்த வெறிப்பாதை யையும் காட்டுகிறது என்றும், அது நாகரிக மனிதனுக்கே என்றும் நிலைத்து நிற்கக்கூடிய வெட்கக் கேடான ஞாபகார்த்தம் என்றும்' ஆணித்தரமாக எடுத்துரைத்தார். மேலும், தாம் சோசியலிசம் என்ற பெயரில் இனிமேல் சகிப்பின்மையையோ, அன்றி அநீதியையோ மன்னிக்கப் போவதில்லையென்றும் உறுதி எடுத்துக்கொண்டார். யூஜென் டெனிஸ் தமது குறையைக் கொண்டுவந்தார். (அது பிராவ்தாவில் 1956, சூன் 27ஆம் நாள் இதழில் வெளியிடப்பட்டது). அதே வேளை 'நித்திய உழைப்பாளி' என்ற பத்திரிகை, குரூச்சேவின் சொற்பொழிவை வெளியிடாததைக் குறித்து சோவியத் கம்யூனிஸ்ட்டு கட்சியைப் பழித்தது. இது இவ்வாருக, பாரிசில் பிரெஞ்சு கம்யூ னிஸ்ட்டுக் கட்சியின் பத்திரிகையும் அவ்வாறே ரஷ்ய கம்யூனிஸ்ட்டுக் கட்சியை இடித்துரைத்து, குரூச்சேவைப் பலவிதங்களில் குறை கூறிற்று.

போலாந்தில் ஸ்டாலின் எதிர்ப்பு, 'தேசியக் கம்யூனிசம்' என்ற தீ கம்யூனிசக் கட்சியைப் பற்றிப் பிடித்துக் கொண்டுவிட்டது. கட்சியின் செயலாளர் விளாடிஸ்லாவ் கொமுல்கா (1951-ல் 'டிட்டோ வாதி' என்று குற்றஞ் சாட்டப்பட்டவர்) இப்போது சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு, முன்னுள் பதவியிலேயே மீண்டும் நியமிக்கப் பட்டார். போலாந்திற்கும், யு.எஸ்.எஸ். ஆருக்கும் இடையே நிலவி வரும் உறவில் ஓர் அமைதியான புரட்சியை உண்டுபண்ணுமாறு சொல்லி, அவருக்கு போலாந்தியர் பெருமளவில் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். அங்கேரியின் சோக நாடகம் இதர நாட்டுக் கம்யூ னிஸ்ட்டுகள் ஒரு புதிய வழியைக் கடைப்பிடிக்குமாறு தூண்டியது. 'தேசியக் கம்யூனிசத்தின்' பிறப்பிடமாய்த் திகழ்ந்த டிட்டோவுடன் இப்போது மாஸ்கோ கைகோத்துக்கொண்டது. அங்கேரியில் முதலில் ஏற்பட்ட சோவியத் தலையீட்டைத் தவறு என்று எண்ணிய வர் இரண்டாவது தலையீடு தவிர்க்க முடியாத தேவை என்று கரு

தினுர். அவர் ரஷ்யரல்லா கம்யூனிஸ்ட்டுகளுக்கிடையே நிலவி வந்த 'செண்ட்ரிஸ்ட்' (centrist) கொள்கையை ஆதரித்தார். ஒவ்வொரு மார்க்சீய நாடும் தத்தம் வழி சென்று தான் விரும்பும் பாணியில் ரஷ்யாவின் வற்புறுத்தலின்றி, அல்லது அதன் உதாரணத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுமல், சோசியலிசத்தைப் பின்பற்றும் சுதந்திரமுடன் திகழ வேண்டும் என்பதே அக் கொள்கை. மாஸ்கோ வின் புதிய செல்வச் சிறு குழுவாட்சியினர் தமக்குள் சண்டை போட்டுக்கொண்டபோதிலும், அவர்களே அனைவரும் ஒன்றுபட்டு ரஷ்யத் தாய்க்கும், கிழக்கு ஐரோப்பாவில் அது எடுத்து வளர்த்த குழந்தை (நாடு) கட்கும் இடையே புதியதும் உறுதியானதும் ஸ்டாலின் முறையில் அமையாததுமான நட்புறவை வளர்க்க முனைந்து முயன்றனர். 1957ஆம் ஆண்டு செப்டம்பர் மாத நடுவில் பெல்கிரேடிற்கு விஜயம் செய்தபோது கோமுல்காவும் டிட்டோவும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். மார்க்ஸ்லாந்தைச் சேர்ந்த நாடு களனைத்திற்குமிடையே தேசிய சுதந்திர அடிப்படையில் நெருக்கமான ஒத்துழைப்பு இருக்க வேண்டு மென்றும், சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியக் குறிக்கோள்களுக்கு அவைகள் முழு ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் இருவரும் ஒப்புக்கொண்டனர்.

இவ் விஷயங்களில் பெய்ப்பிங் எவ்வாறு நடந்துகொள்ளப் போகிறது என்று ஒருவராலும் நிச்சயமாய்க் கூற முடியவில்லை. எனினும், அதன் நடத்தை அதன் எதிர்காலப் போக்கை பிரதிபலிக்கா மலில்லை. செஞ்சீனத் தலைவர்கள் இதர ஆசிய நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம் செய்து, அதன்மூலம் நண்பர்களைத் தம் பக்கம் இழுப்பதிலும், மக்களைத் தங்களுக்கு ஆதரவு அளிக்குமாறு செய்வதி லும் முனைந்து முயன்றனர். அவர்கள் 'டிட்டோவின் கொள்கையை' மாறி மாறித் தாக்குவதும், புகழுவதுமாக இருந்தார்கள். அங்கோரிப் புரட்சி 'ஒரு பைத்தியக்கார சதி வேலை' என்று (1957, சனவரி 12ஆம் நாள்) சூஎன்-லாய் வார்சாவில் இடித்துரைத்தார். கம்யூனிஸ்ட்டு நாடுகளனைத்தும் 'சரிசமமானவை' என்றும், அவையனைத்தும் ஒரே பொதுநோக்குடையவையாகையால் அவைகட்கு இடையேயுள்ள கருத்து வேறுபாடுகள் நட்பு மகாநாடு கூட்டித் தீர்க்கப்பட வேண்டும் என்றும் ஒரு பிடிக்கு நின்றார்கள். 1957 பிப்ரவரியில் பெய்ப்பிங்கில் அரசு உயர் மாநாட்டில் மௌ 'கருத்து வேறுபாடுகளைக் கையும் சரியான முறை' பற்றி ஒரு பேருரையாற்றினர். அப்போது அவர் அங்கேரியில் சோவியத் யூனியன் நடந்துகொண்ட முறையைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர். மேலும், கம்யூனிச சாம்ராச்சியத்தில் அடங்கிய நாடுகட்கு இடையே நிலவும் முரண்பாடுகள் அனைத்தும் 'பொறுமையான இசைவு, மறுபயிற்சி ஆகியவற்றின் மூலம்' தீர்க்கப் படவேண்டும் என்றும், 'முரட்டுத்தனமான நிர்வாக முறைகள்

வாயிலாய்' தீர்ப்பது தவறு என்றும் கருத்துரைத்தார் ஸ்டாலினின் 'அடக்குமுறை' ஆட்சி கடுமையாகத் தாக்கப்பட்டது. வேலைநிறுத்தங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும்கூட ஆதரவளிப்பது நல்லது என்றும், ஏனெனில், அவை 'தவறுகளை' அம்பலப்படுத்தும் என்றும் கூறப்பட்டது. கெட்டதை நல்லதாக்கிவிடலாம்; எதிரியை எதிர்க்க வேண்டும். ஆனால், மக்களில் விமரிசனம் செய்பவர்களுக்குச் செவி சாய்த்து அவர்களை வழிக்குக் கொண்டுவர வேண்டும். நறுமணம் கமழும் மலர்களுக்கும் நச்சுக்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமையை அறிய வேண்டும். பேச்சுரிமை மூலமே அறிவையும் நியாயத்தையும் வளர்க்க முடியுமேயன்றி ஒரு வைதீகக் கொள்கையைக் கட்டாயமாகப் பிறர் மேல் புகுத்துவதால் முடியாது. 'நூற்றுக்கணக்கான மலர்கள் மலரட்டும். நூற்றுக்கணக்கான கொள்கை வகுப்பாளர் தர்க்கம் செய்யட்டும்'. (பேருரை முழுவதையும் 1957, சூன் 19ஆம் நாள் வெளியான 'நியூயார்க் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் பார்க்கவும்).

யு.எஸ்.எஸ்.ஆரில் சுற்றுப்பயணம் செய்து, மாஸ்கோவில் சோவியத் தலைவர்களுடன் கருத்துப் பரிமாறிய பின், மௌ 1957 அக்டோபரில் போலாந்துக்கு விஜயம் செய்தார். அங்கு மார்க்ஸ் லாந்தின் நிர்வாக முறையைப் பொறுத்தவரை மௌ விடுத்திருக்கும் 'தாராளக் கொள்கை'களுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. அதற்கிடையில் சீனாவில் மௌவின் புதுக் (தாராளக்) கொள்கை கடுமையான ஆய்வு வெள்ளத்திற்கு அடிகோலிற்று. கட்சிக் குழுவினரும் பொறுக்க முடியா அளவுக்கு அது மீறிவிட்டது. அவர்கள் 'வலது சாரிகளை'த் தாக்குவதிலும், எதிர்ப்பதிலும் முனைந்தனர். வார்சாவிலும் மௌ தமது தாராளத்துவக் கொள்கையை ஆதரிக்குமாறு வேண்டினார். அவ்வாறு அவர் வேண்டிநின்றதன் முக்கிய நோக்கம் உடனே தெரியாது போனாலும், ஒருவேளை மாஸ்கோ தன் துணை நாடுகள்மீது சருவாதிகாரக் கட்டுப்பாடுகளைக் கட்டாயமாகத் திணிப்பதைத் தடுப்பதற்காக இருந்தாலும் இருக்கலாம் என்பது வெள்ளிடைமலை.

ஆனால், எவ்வளவுதான் கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும் குரூச்சேவ் ஆட்சிக்கு மேற்படி நோக்கம் இல்லை. அது வேறு வழியின்றிக் குறுகிய குழப்பமான மார்க்சிய விவாத முறை எல்லைக்குள்ளிருந்துகொண்டே, இதர கம்யூனிச நாடுகள் தாம் கொண்டிருக்கும் தொடர்புகளைப் பொறுத்தவரை, நம்பிக்கையளிக்கத் தக்க முறையில் தன் அதிகாரத்தை ஓங்கச் செய்ய அயராது போராடிக் கொண்டிருந்தது. ஸ்டாலின் வல்லாட்சியின் (autocracy) கீழ்ப் பல் லாண்டுகள் இருந்த சோவியத் நாட்டை 'ஜனநாயகமாக்குவது'

போன்ற மிகக் கடுமையான பிரச்சினையாகும் அது. இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல், கம்யூனிச சாம்ராச்சியமே சிதைவுண்டு போகும்; குழப்பம் தலைதூக்கும் என்று மேலை நாட்டினர் கனவு கண்டனர். கம்யூனிச உலகிற்குக் கிட்டிய வெற்றிகளையும், அதன் எதிர்கால வாய்ப்பையும் நோக்குமிடத்து, 1950-60-ல் இக் கனவு எவ்வளவு அர்த்தமற்றது என்று விளங்கும். யு.எஸ்.எஸ்.ஆரின் மனவுறுதியும், பிறர் கருத்துக்குச் செவிசாய்க்கும் இயல்புமுடைய புதிய செல்வாக்குடைய நிர்வாகக்காரர்கள், தங்களுடைய முதிர்ந்த அனுபவத்தினுல் தீர்க்க முடியாததுபோல் காணப்படும் பிரச்சினை கட்குக்கூடத் தீர்வு காணும் திறமை பெற்றிருந்தனர். சுதந்திர நாடுகளைக் கொண்ட பிரிட்டிஷ் முறை கூட்டுறவு காமன் வெல்த்து (common wealth) போல் மார்க்ஸ்லாந்து மாறுது என்றுதான் தோன்றுகிறது. சுதந்திரம், ஜனநாயகம் பற்றி மேலை நாட்டினர் கொண்டிருக்கும் கருத்துகளுக்கேற்ப இறைமை சுய உரிமையுடைய நாடுகளாக மார்க்ஸ்லாந்தில் பல பகுதிகள் வருங்காலத்தில் சர்வதேச அரங்கில் ஒத்துழைக்கும் என்று எண்ணவும் இடமில்லை. அவை யெல்லாம் கூடி ஓர் உண்மையான கூட்டரசாகவாவது அமையுமா வென்று ஆராயுமிடத்து, அதற்கும் வழியில்லை என்றுதான் தோன்று கிறது. சோவியத், யூகோசுலேவியக் கூட்டரசு அரசியலமைப்பு களுக்கும் (federal constitutions) மேலை நாட்டுக் கூட்டரசுகளுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதம் இருக்கிறது. சோவியத் யூனிய னிலோ, அன்றி யூகோசுலேவியாவிலோ உண்மையான கூட்டரசு இருப்பதாகத் தெரியவில்லை. அவைகள் பெயரளவில்தான் கூட்டரசுகள் ஆகும். ஆனுல், மார்க்ஸ்லாந்துத் தலைவர்கள் ஸ்டாலின் கடைப்பிடித்த அடக்குமுறைக் கொள்கையில் சென்ருல் புரட்சியும் சிதைவுமே தங்களை எதிர்நோக்கும் என்பதை நன்குணர்ந்து, அவ் வழி செல்லாது தங்களுடைய புதிய பேரதிகாரத்தை நிலைநாட்ட முற்றிலும் வேருன வழியைக் கண்டுபிடிக்கக் கூடியவர்கள். அப்படி அவர்கள் புது வழியைக் கண்டுபிடித்தால் அதில் ஆச்சரியப்படு வதற்கு ஒன்றுமில்லை. தூர நோக்குடன் ஆராயுமிடத்து கம்யூனிச உலகெங்கும் உறுதியான அதிகாரம், வருங்காலத்தில் மாஸ்கோ கைவசமிருந்து பெய்ப்பிங் கைமாறும். அவ்வாறு மாறுவதைத் தவிர்க்க முடியாது என்பது புலப்படும். சீனு ஒரு முக்கியமான தொழில் பலம் வாய்ந்த வல்லரசாக மாறவெகு காலம் பிடிக்கலாம். ஆனுல், சீனுவின் ஜனத்தொகை யு.எஸ்.எஸ்.ஆரைவிட மூன்று மடங்கு அதிகம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும், அதன் மார்க்சீயத் தலைவர்கள் ஆசியா முழுவதிலும் நல்ல கௌரவத்துடன் விளங்கி வருகிறார்கள். தொடக்கத்தில் மேலை நாட்டவர் வகுத்த கொள்கையி லல்லவா இன்று சீனத் தலைவர்கள் முழு மூச்சுடன் இறங்கியிருக்கி ருர்கள்? ஆனுல், அவர்களுடைய கொள்கைவெறி லெனின்,

ஸ்டாலின், குரூச்சேவ் ஆகியோரின் கொள்கை வெறியைப் போன்ற தல்ல. அது தீவிரமான கன்ம்பியூசியஸ் வகுத்த கொள்கையாலும், உலகிலேயே இன்று உயிருடன் திகழும் பண்டைய நாகரிகத்தின் மனிதத் தன்மை வாய்ந்த பரம்பரையாலும் மிதமாகிவிட்டது. இச் சூழலில் கி.பி. 1984-லிலோ, அன்றி 2000-லோ, மார்க்சீயப் பேரதிகாரத்தின் இயக்கு மையம் மாஸ்கோவிலிருந்து கதேயிக்கு மாறுமானால் அதைக் கண்டு மேலை நாட்டினர் எவரும் ஆச்சரியப்படக் கூடாது.

13. ஜனநாயகப் பாதுகாப்பு

1. பிரான்ஸ்: கைவிட்ட குறிக்கோள்

"பிரான்சிலிருந்து நான் உங்களுக்கு அழிவு, கொலை, தோல்வி ஆகியவைபற்றிய துக்கச் செய்தியைக் கொண்டு வருகிறேன்; கினி, காம்பேன், ரீம்ஸ், ஓர்லீன்ஸ், பாரிஸ் கைசர்ஸ், பாய்ஸ்டர்ஸ் எல்லாம் இழக்கப்பட்டுப்போய் விட்டன....."எப்படி அவைகள் இழக்கப்பட்டுப்போயின? இதற்கு என்ன சதி காரணம்?' ஒரு சதியும் செய்யப்பட வில்லை. ஆள்பலமும் பொருள்பலமும் இல்லாமையே காரணம். படைவீரர்கள் தங்களுக்குள் முணுமுணுத்தார்கள். 'இங்குதான் கட்சி மனப்பான்மை நிலவுகிறதே, போர்க் களம் சென்று போர்புரிய வேண்டிய வேளையில், நீரோ படைத்தலைவர்பற்றித் தர்க்கம் செய்து கொண்டிருக்கிறீர். குறைந்த செலவில் நீண்ட போரை நடத்திவிடலாம் என்று நினைக்கிறார் ஒருவர்; சிறகுமட்டும் இருந்தால் பறந்தேவிடலாம் என்று நினைக்கிறார் மற்றொருவர்; செலவில்லாமலேயே போரை நடத்தி விடலாமென்று நினைக்கிறார் இன்னொருவர்; வஞ்சகமாகப் பேசியே அமைதியை நிலைநாட்டிவிடலாமென்று நினைப்பவருமுளர் .....இங்கிலாந்தின் மேற்சட்டையில் (coat) பாதி வெட்டப்பட்டுவிட்டது.'— வில்லியம் ஷேக்ஸ்பியர், 6ஆம் ஹென்றி, பிரிவு 1, காட்சி 1, நிகழ்ச்சி 1.

இதுவரையில் மனிதன் இக்கோளத்தில் சோதனை செய்திருக்கும் அரசாங்க முறைகளிலேயே அதிக மோசமானது ஜனநாயகமே என்று ஒருமுறை வின்ஸ்டன் சர்ச்சில் கருத்துரைத்தார். 1917-லிருந்து சுமார் 40 ஆண்டுகளாக ஜனநாயக வல்லரசுகள் கடைப் பிடித்து வந்திருக்கும் கொள்கைகளின் விளைவு என்ன? அவை உணர்த்துவ தென்ன? இவ் விஞ்சுக்களுக்குச் சற்று விடைகாண முயலுவோம். வாழவிரும்பும் சுதந்திர மனிதன் ஆர்வத்தையும் தீரத்தையும்தான் அவை பிரதிபலிக்கின்றன. சருவாதிகாரம் தொடர்ந்து விடுக்கும் அறைகூவல்களின் முன்னர், தன் நாட்டு நலன்களைக் காப்பாற்றும் திறமையோ, அன்றி அரசியல் வல்லமையோ சனநாயக அரசாங்கங்களிடம் இல்லை என்பதையே

அவை அறிவுறுத்துகின்றன. என்ன குழப்பம் இருந்தாலும் சரி, தலைசுற்றவைக்கும் தவறுகளே நடந்துவிட்டாலும் சரி, அழிவைப் பெய்யும், ஆளுல், தவிர்க்கூடிய போர்களே நடைபெற்ருலும் சரி, வெற்றிகள் வீணுயினுலும் சரி, என்றும் சுதந்திர மனிதன் தவறு புரிந்தாவது குழப்பத்திற்குள்ளாவர்' என்பது பண்டைக்காலம் தொட்டுநடந்துவரும் உண்மையாகும், 'நரகத்தைப் போல் கொடுங்கோலாட்சியையும் எளிதில் வெல்ல முடியாது' என்று 1776-ல் டாம் பெயின் வரைந்தார். எனினும், மக்களாட்சிகளேவிடக் கொடுங்கோலாட்சிகள் விரைவில் தோல்வியடைந்து வருவதுபோல் தோன்றுகிறது அல்லவா? இப் பயங்கர உலகில் தலையான மக்களாட்சிகளின் தோல்விகள், வெற்றிகள், அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவைபற்றி ஆராய்ச்சி செய்யுமிடத்து, அவற்றின் குறைவும் நிறைவும் நன்கு தெரியவரும். வருங்கால அறைகூவலுக்கு அவை பொருத்தமானதாகவே அமையும்.

தற்காலிகத் தேசிய அரசுகளிலேயே முதலாவதும் தொன்மையானதும் பிரான்சு நாடு ஒன்றே. அதோடுமட்டுமல்லாமல் அது ஐரோப்பிய 'வல்லரசுகளிலேயே' அதிகச் செல்வமும், ஜனத்தொகையும், வலிமையும் பொருந்திய நாடாகவும் விளங்கிற்று. மேலும், அது மாபெரும் (பிரெஞ்சுப்) புரட்சியின்போதும் அதன் பின்னும் தாராளவாதிகளின் இரண்டாம் தாய் நாடாகவும், ஐரோப்பாவிலும் ஏன் உலகெங்கிலுமிருந்த சுதந்திர ஆர்வமுள்ள மக்களின் தலையான ஊக்கு சத்தியாகவும் விளங்கிவந்தது. சென்ற நூற்ருண்டில் பிரான்சின் இடத்தை பிரிட்டன், செர்மனி, அமெரிக்கா, ரஷ்யா போன்ற பெரிய நாடுகள் பிடித்துக் கொண்டுவிட்டன. அதற்குதவியாக பிரெஞ்சு ஜனநாயகமும், உள்நாட்டில் வகுப்பு, கொள்கைச் சண்டை சச்சரவுகளால் நலியத் தலைப்பட்டது. இக் கடுமையான சூழ்நிலையில் பிரெஞ்சு நாட்டு மக்களும் அரசியல் மேதைகளும் நடந்துகொண்ட விதத்தையும், அவர்கள் தவற்றையும் பற்றி இங்கு ஆராய்வோம்.

வெற்றியின் தோல்வி

முதல் உலகப்போரில் குருதி வெள்ளம் கரைபுரண்டோடிற்று. எங்கு நோக்கினுலும் அழிவு கோர நடனம் புரிந்துகொண்டிருந்தது. இவ்வாறு நான்கு ஆண்டுகள் மூன்று மாதங்கள் உருண்டோடின. அதற்கப்புறம் 1918-ல் பிரான்சு 1871-முதல் தன் தூதர்களும், போர் வீரர்களும் எய்தப் பாடுபட்ட குறிக்கோள்களே இறுதியில் எய்தியது. நடு வல்லரசுகட்கு எதிராக உலகமே திரண்டு எழுந்த பின்னரே பிரான்சு வெற்றியடைய முடிந்தது, பிரெஞ்சுக் குடியரசின் நேசநாடான ரஷ்யா சின்னபின்னப்படுத்தப்பட்டது. பிரிட்டன், இத்தாலி,

யு. எஸ். ஏ., ஆகிய நாடுகளும் இதர சிறிய நேசநாடுகளும் பிரான்சுக்கு மட்டும் உரிய அமைதிக்கு எதிராக நின்றன. அவை ரைன்லாந்தை பிரான்சு இணைத்துக்கொள்வதை எதிர்த்தன. மேலும், செர்மன் குடியேற்ற நாடுகளை பிரான்சு இணைத்துக்கொள்வதற்கும் அவை கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வந்தன. வருங்காலத்தில் செர்மனிக்கு எதிராக மாறும் உடன்படிக்கை செய்துகொள்ளவும் அவை மறுத்துவிட்டன. இத் தடைகள் இருந்தும் பிரான்சு வாகைசூட முடிந்தது. பைன்காரும் மற்றத் தீவிரத் தேசியவாதிகளும் அமைதி உடன்படிக்கையின் 'தாராளத்தைப்' பற்றி வெறுப்படைந்தனர். என்ருலும் (இதற்குப் பின் உருவான) புதிய ஐரோப்பா, செர்மனி நிலையான தாழ்வுறவும் பிரான்சு நிலையான மேம்பாடடையவும் என்ணற்ற வாய்ப்பு அளித்தது.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைக்குப் பின் தோன்றிய பிரான்சின் வெளிநாட்டுக் கொள்கையே, இக் குறிக்கோளை அடைவதில்தான் முனைந்துவிட்டது. குறிக்கோளை அடையும் வழிகள்பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்தது. பாதுகாப்பு நிலைநாட்டுதலுக்கு —ஐரோப்பாக் கண்டத்தின்மீது பிரான்சின் பேரதிகாரத்தை நிலைநிறுத்தலுக்கு—செர்மனியை நலிவுறச் செய்வதும், பிரான்சை வலிமைபொருந்தியதாகச் செய்வதும் இன்றியமையாததாகிவிட்டது. 'இக் குறிக்கோளை எய்தும் முகத்தான் பாரிஸ் செர்மனியின் படைகளைக் குறைக்கவும், அதை வறுமைக்கும், தனிமைக்கும் உள்ளாக்கவும் ஆவன செய்து வந்தது. செர்மனியின் வருங்கால மறு எழுச்சிக்கு எதிராக நட்பு நாடுகளைச் சேகரிக்கத் தொடங்கியது. பெல்சியமும் போலாந்தும் பிரான்சின் துணைநாடுகளாயின. சிறு நேசவுடன்பாடு நாடுகளான செக்கோசுலேவாக்கியா, யுகோஸ்லேவியா, ருமேனியா ஆகிய மூன்றும் நடைமுறை நிலைமையைக் பேணிக்காக்க உறுதிபூண்டன. அவையனைத்தும் பிரான்சின் துணை நாடுகளாயின. அதோடல்லாமல் பிரான்சின் அறிவுரையையும் கடனுதவியையும் பெற்ற இந் நாடுகள் செர்மனிமுதல் வடக்கு வரையோ, அவர்களுக்கிடையேயுள்ள அங்கேரி அல்லது ஆஸ்திரியா முதல் அல்லது இத்தாலி முதல் மேற்குவரையோ, அல்லது ரஷ்யா முதல் கிழக்கு வரையோ அப்போது நிலவிவந்த நில, அதிகாரப் பங்கீட்டை மாற்றியமைப்பதில்லை என்றும் முடிவு செய்தன. செர்மனியின் எல்லைகளைச் சுற்றி வியாபித்திருந்த பிரெஞ்சு அதிகார மண்டலம் இந்நாடுகளின் நலனை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டது. 15 ஆண்டுகள்வரை பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்க்கத்தக்க பன்னாட்டு கூட்டுசக்தி எதுவும் தோன்றவில்லை. முடிசூடும் தலைக்கு இருக்கும் ஆபத்தைப் போல் (பிரெஞ்ச ஆதிக்கத்தால் நிலைநாட்டப்பட்ட) பாதுகாப்பு அவ்வளவு நிலையானதாக

அமையவில்லை. அப் பாதுகாப்புக்குப் பல கோணத்திலிருந்தும் ஆபத்து இருந்துகொண்டிருந்தது.

பிரெஞ்சு அரசியல் தந்திர வரலாறு 1933-ல் ஒரு புதிய அழிவுக் கட்டத்தை வந்தடைந்தது. செர்மன் குடியரசுக்கு சலுகைகள் அளிப்பதற்கு அதிக எதிர்ப்பு இருந்துவந்தது. அந்த எதிர்ப்பு ரைனுக்கு அப்பால் நிலவிவந்த தாராளத்துவக் கொள்கைக்குக் கேட்டை விளைவித்தது; ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்ற வழி வகுத்தது. செர்மனிக்கு எதிராக இருந்த எதிர்ப்பு அதிகமாக அதிகமாக செர்மனியின் வலிமை அதிகமாகிக்கொண்டே சென்றது. இதை உணர்ந்ததும் பலாத்காரத்தின்மூலம் நடைமுறை நிலைமையைப் பாதுகாக்க வேண்டுமென்ற பிரான்சின் விருப்பம் குறையலாயிற்று. அமைதியை உயிர்நாடிபோல் நினைத்துவந்த பிரான்சு செர்மனியில் புதிதாக உருவாகி இருக்கும் இராணுவத்து வத்தை எதிர்த்து முறியடிப்பதற்குக்கூடப் பலாத்காரத்தைக் கையாள விரும்பவில்லை. மூன்றும் ரெய்ச்சை (ஜெர்மன் அரசை) எதிர்க்கப் பிரான்சு மறுக்கவுமே, மில்சுட்ஸ்கி 1934, சனவரில் ஹிட்லருடன் அணுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்று செய்துவிட்டார்.

Aug 22, 1948
Aug 23, 1948
Aug 24, 1948
Aug 25, 1948
Aug 26, 1948
Aug 27, 1948
Aug 28, 1948
Aug 29, 1948
Aug 30, 1948
Aug 31, 1948
Sept 1, 1948
Sept 2, 1948
Sept 3, 1948
Sept 4, 1948
Sept 5, 1948
Sept 6, 1948
Sept 7, 1948
Sept 8, 1948
Sept 9, 1948
Sept 10, 1948
Sept 11, 1948
Sept 12, 1948
Sept 13, 1948
Sept 14, 1948
Sept 15, 1948
Sept 16, 1948
Sept 17, 1948
Sept 18, 1948
Sept 19, 1948
Sept 20, 1948
Sept 21, 1948
Sept 22, 1948
Sept 23, 1948
Sept 24, 1948
Sept 25, 1948
Sept 26, 1948
Sept 27, 1948
Sept 28, 1948
Sept 29, 1948
Sept 30, 1948
Oct 1, 1948
Oct 2, 1948
Oct 3, 1948
Oct 4, 1948
Oct 5, 1948
Oct 6, 1948
Oct 7, 1948
Oct 8, 1948
Oct 9, 1948
Oct 10, 1948
Oct 11, 1948
Oct 12, 1948
Oct 13, 1948
Oct 14, 1948
Oct 15, 1948
Oct 16, 1948
Oct 17, 1948
Oct 18, 1948
Oct 19, 1948
Oct 20, 1948
Oct 21, 1948
Oct 22, 1948
Oct 23, 1948
Oct 24, 1948
Oct 25, 1948
Oct 26, 1948
Oct 27, 1948
Oct 28, 1948
Oct 29, 1948
Oct 30, 1948
Oct 31, 1948
Nov 1, 1948
Nov 2, 1948
Nov 3, 1948
Nov 4, 1948
Nov 5, 1948
Nov 6, 1948
Nov 7, 1948
Nov 8, 1948
Nov 9, 1948
Nov 10, 1948
Nov 11, 1948
Nov 12, 1948
Nov 13, 1948
Nov 14, 1948
Nov 15, 1948
Nov 16, 1948
Nov 17, 1948
Nov 18, 1948
Nov 19, 1948
Nov 20, 1948
Nov 21, 1948
Nov 22, 1948
Nov 23, 1948
Nov 24, 1948
Nov 25, 1948
Nov 26, 1948
Nov 27, 1948
Nov 28, 1948
Nov 29, 1948
Nov 30, 1948
Dec 1, 1948
Dec 2, 1948
Dec 3, 1948
Dec 4, 1948
Dec 5, 1948
Dec 6, 1948
Dec 7, 1948
Dec 8, 1948
Dec 9, 1948
Dec 10, 1948
Dec 11, 1948
Dec 12, 1948
Dec 13, 1948
Dec 14, 1948
Dec 15, 1948
Dec 16, 1948
Dec 17, 1948
Dec 18, 1948
Dec 19, 1948
Dec 20, 1948
Dec 21, 1948
Dec 22, 1948
Dec 23, 1948
Dec 24, 1948
Dec 25, 1948
Dec 26, 1948
Dec 27, 1948
Dec 28, 1948
Dec 29, 1948
Dec 30, 1948
Dec 31, 1948
Jan 1, 1949
Jan 2, 1949
Jan 3, 1949
Jan 4, 1949
Jan 5, 1949
Jan 6, 1949
Jan 7, 1949
Jan 8, 1949
Jan 9, 1949
Jan 10, 1949
Jan 11, 1949
Jan 12, 1949
Jan 13, 1949
Jan 14, 1949
Jan 15, 1949
Jan 16, 1949
Jan 17, 1949
Jan 18, 1949
Jan 19, 1949
Jan 20, 1949
Jan 21, 1949
J

போலாயிற்று. கீழ்ச் சபையிலேயே பெரிய அரசியல் கட்சியாக விளங்கிவந்த கம்யூனிஸ்ட்டுகளும், 1947ஆம் ஆண்டு மே மாதம் காபினட்டிலிருந்து நீக்கப்பட்டார்கள். உடனே அவர்கள் அரசாங்கத்தை எதிர்க்கப் புறப்பட்டனர். ஒரு புறம் அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டே, மற்றொரு புறம் மார்ஷல் திட்டம், அட்லான்டிக் ஒப்பந்தம் ஆகியவற்றைத் தாக்கி, சோவியத் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஆதரவளித்தும், அமைதிக்காகப் போராடியும், இந்தோசீனாவில் நடந்துவந்த போரைக் கடுமையாகப் பழித்தும் வந்தார்கள். அன்றியும் உழைப்பாளிகள் பொதுக் கூட்டமைப்பு என்ற நிறுவனத்தின்மீது அவர்களுக்கு இருந்த கட்டுப்பாட்டு ஆதிக்கத்தின்மூலம் ஃபிரெஞ்சு மக்களின் துயரங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியும் வந்தார்கள். அதோடல்லாமல் அவர்கள் புரட்சிகர முறையில் அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்தில் அதற்கான சூழ்நிலை வாய்ப்பை உருவாக்க அவ்வப்போது அரசியல் வேலை நிறுத்தம் ஏற்படும்படி செய்ய, இந் நிறுவனத்தைப் பயன்படுத்தத் தயங்கினரில்லை. 1947, நவம்பரில் அமைக்கப்பட்ட ராபர்ட் சூமெனின் காபினட் மக்கள் குடியரசுக்காரர், சோசியலிஸ்ட்டுகள், புரட்சிக்காரர் (ஃபிரெஞ்சு அரசியல் அதிகாரத்தின்படி பழைமைவாதிகள்) ஆகிய பல திறப்பட்டவர்களைக் கொண்டதொரு கூட்டு அரசாங்கமாகும். அப்போதிலிருந்தே வலது சாரிகள் பக்கம் வீசத் தொடங்கிய அரசியல் காற்று நெடுநாள் அத் திசையை நோக்கியே அடித்துக்கொண்டிருந்தது. எனினும், டிகாலின் புது பாசிஸ்ட்டுவாதிகள் இவ் வாய்ப்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. அதிகாரத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுவதற்கு அவர் (டிகால்) மறுத்ததும், அவரிடம் அதிகாரத்தைத் தன் கைவசப்படுத்தும் திறமையில்லாமையும், அதனால் அவரைப் பின்பற்றியோர்க்கிடையில் ஏற்பட்ட பிளவுமே அதற்குக் காரணம் ஆகும்.

இரவு போய், பொழுது புலர்வதுபோல் காபினட் அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டு வந்தது. மக்கள் கட்சியினர், குடியரசுக் கட்சியினர், சோசியலிஸ்ட்டுகள், புரட்சிக்காரர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு கூட்டுக் காபினட் அமைக்கப்பட்டது. 1948-ல் ஆண்டிரீ மேரி, ஹென்றி குவைவி என்ற புரட்சிக்காரர்கள் தலைமையமைச்சராளுர்கள். 1951-ல் புதிய தேர்தல் சட்டம் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றத் தீவிர அரசியல் கட்சிகளின் வலிமையைக் குறைக்கும் முகத்தான் அச் சட்டம் விகிதப் பிரதிநிதித்துவ முறையைச் (proportional representation) சற்று மாற்றி அமைத்தது. 1951, ஜூன் 17ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்ச்சபையில் டிகால் கட்சியினருக்கு 118 இடங்களும், சோசியலிஸ்ட்டுகளுக்கு 104 இடங்களும், கம்யூனிஸ்ட்டுகளுக்கு 103 இடங்களும், புரட்சியாளர், அவருடைய கூட்டைச் சேர்ந்தவர்க்கு 94 இடங்களும், மக்கள் குடியரசினர்க்கு

81 இடங்களும் கிடைத்தன. பழைமைவாதிகள், குடியானவர் குழுக்களுக்கு 99 இடங்கள் கிடைத்தன. மக்களின் வாக்குகளைக் கணக்கிட்டுப் பார்க்கையில் கம்யூனிஸ்ட்டுகளே ஒரு பெரிய கட்சியாக (26·5%) விளங்கினர். அதற்கடுத்தாற்போல் டி கால் கட்சியினரும் (21·7%), அதன்பின் சோசியலிஸ்ட்டுகள், மக்கள் குடியரசினர், புரட்சிக்காரர்கள் ஆகியோர் முறையே 14·5%, 12·2%, 11·5%) இருந்தனர். எனவே, முதலிரு கட்சிகளையும் தவிர இதர கட்சிகளின் வலிமை குறைந்துபோயிற்று. 'வலிமை மிக்க மூன்றும் கட்சியோ' அன்றி 'நடுத்தர'ப் பெரும்பான்மைக் கட்சியோ உருவாக வழியில்லை. 1951, ஆகஸ்ட்டில் ரெனி பிளீவன் புதிய காபினட் ஒன்றமைத்தார். கீழ்ச்சபையில் அதற்கு சோசியலிஸ்ட்டுகள் ஆதரவு அளித்துவந்தனர். ஆனால். அதில் ஒரு சோசியலிஸ்ட் அமைச்சர்கூட இடம் பெறவில்லை. 1952, சனவரியில் சோசியலிஸ்ட்டுகள் எதிர்க்கட்சியுடன் சேர்ந்துகொண்டு பிளீவன் காபினட்டைத் தோற்கடித்தனர். அதன்பின் எட்கர் பாரே என்ற புரட்சிக்காரரின் புதிய காபினட் பதவியேற்றது. அதுவும் நெடிது நீடிக்கவில்லை. மார்ச் மாதமே அதுவும் கலைக்கப்பட்டது. அண்டோயின் பினேய் என்ற வர்த்தகரின் பழைமைவாதியின் வலதுசாரி-நடுவினர் காபினட் அதிகார பீடத்தில் அமர்ந்தது. புது அமைச்சவை அரசாங்க வரவு செலவைச் சரிசமமாக்கவும் (balance budget), பண வீக்கத்தை நிறுத்தவும், பண்டங்களின் விலைகளைக் குறைக்கவும், பொருளாதார, சமூக நிலைமையை நிலையானதாகச் செய்யவும் அரிதின் முயன்றது. முயற்சி ஓரளவு வெற்றியளித்தது. பிரெஞ்சு சமுதாயத்தில் தொடர்ந்து நிலவிவந்த பிளவுகளும், உலக அரங்கில் நிலவிய குழப்பங்களும் இடர்களும் இக் குறிக்கோள்களை என்றுமே அடையமுடியாதவைபோலச் செய்துவந்தன.

1952, டிசம்பரில் பினே பதவியிலிருந்து நீங்கினர். 1953, சனவரியில் புதிய காபினட் அமைக்கப்பட்டது. ரெனி மேயர் என்ற புரட்சிக்காரர் அதன் தலைவரானார். அக் காபினட் டி கால் கட்சியினரின் ஆதரவைப் பெரிதும் சார்ந்திருந்தது. நான்கு ஆண்டுகள் வெளி நாட்டு அமைச்சராக விளங்கிவந்த ராபர்ட் சூமன் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் இடத்தில் ஜார்ஜெஸ் பிதால்ட் நியமிக்கப்பட்டார். விடுதலையாகி எட்டு ஆண்டுகள் கழிந்து அழகுவாய்ந்த நாடான பிரான்ஸ் (la belle France) வலதுசாரிகளாலும், பிற்போக்குவாதிகளாலும் ஆட்சி செய்யப்பட்டுவந்தது. இவ்வாட்சியாளர்கள் உயிரற்ற புது நாட்டுணர்ச்சி வயப்பட்டு, வழக்கிறந்த குடியேற்ற நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்துவந்தனர். இவர்கள் (வரவர அமெரிக்காவை அதிகமாக எதிர்த்தபோதிலும்) அமெரிக்காவையே பெரிதும் நம்பியிருந்தனர். இவர்கள் பின்பற்றிய

கொள்கையால் நாட்டு நலனுக்கு ஊறுதான் ஏற்பட்டதேயன்றி, ∴பிரெஞ்சு ஜனநாயகம் பூத்துக் குலுங்க வழியில்லாது போயிற்று. முன்னெவிட அதிகமான பண வீக்கமும், வரி நழுவலும் (tax evasion), சமூக நெருக்கடிகளும், வகுப்புக் கலவரங்களும் ஏற்பட்டதுதான் மிச்சம்.

இவ்வாறு நான்காம் குடியரசு அகமும் புறமும் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. இந்நிலையில், நிச்சயமாக நாட்டின் நலனை வளர்க்கக்கூடிய, அல்லது நாடு முன்னெவிட வருங்காலத்தில் கடுந்துன்பம் அடைவதைத் தடுக்கக்கூடிய வெளி நாட்டுக் கொள்கை ஒன்றை, எல்லாம் அறியும் திறன் படைத்தவரேயல்லாமல் வேறெவராலும் உருவாக்க முடியாது என்பது வெள்ளிடைமலையாயிற்று. இறுதியில் உருவான வெளிநாட்டுக் கொள்கையால் வலிமைமிக்க வல்லரசுகளின் ஆதரவை ∴பிரான்ஸ் பெரிதும் நம்பியிருக்கவேண்டியதாயிற்று. மேலும், அதன் கீழ் ஏற்கெனவே சிதைந்துகொண்டிருந்த குடியேற்ற நாட்டுப் பேரரசை எப்படியாவது கட்டிக்காப்பாற்ற ∴பிரான்ஸ் உறுதி பூண்டது. ரஷ்யாவைக் கண்டு அஞ்சியது. செர்மனியைக் கண்டு அதன் குலை நடுங்கியது. அமெரிக்காவின் போக்குக் குறித்து ஐயமடைந்தது. சமயத்திற்குத் தகுந்தாற்போல் நிறத்தை மாற்றிக்கொள்ளும் பச்சோந்திபோல் நடந்துவந்தது. அதில் ஓரளவு வெற்றி ஏற்படுவதைக் கண்டு ஊக்கமடைந்தது.

இவ்வாறு இந் நூற்றாண்டு நடுவில் பிதால்ட்டும் ராபர்ட் சூமனும் அடங்கிய அமைச்சவையில் மீண்டும் பிதால்ட்டே தலைமையமைச்சர் பதவியை அலங்கரித்து வந்தார். என்றாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் முரண்பாடான கொள்கையையே பின்பற்றி வந்தார்கள். அம் முரண்பாட்டைப் போக்குவார் ∴பிரான்சில் எவருமிலர். 1941, டிச. 10ஆம் நாள் பிதால்ட்டும் மொலொட்டோவும் 20 ஆண்டு ∴பிரெஞ்சு-சோவியத் நட்புடன்படிக்கை ஒன்று செய்தார்கள். அதன் கீழ் 'செர்மனி புதிதாக அச்சுறுத்துமானால் அதைப் போக்குவதற்கான எல்லா நடவடிக்கைகளையும்' (உடன்படிக்கையின்) இருதரப்பினரும் எடுப்பது என்று இரு நாடுகளும் உறுதி பூண்டன. மேலும் வருங்கால செர்மன் ஆக்கிரமிப்பை முன்னிட்டோ அல்லது அதைத் தடுக்கும்பொருட்டு மேற்கொள்ளப்படும் ∴பிரெஞ்சு அல்லது ரஷ்ய நடவடிக்கையை முன்னிட்டோ இருதரப்பினருள் 'ஒரு தரப்பினர் செர்மனியுடன் போர் செய்ய நேரிடுங்கால்' அத் தரப்பினருக்கு மற்றத் தரப்பினர் 'தன்னால் முடிந்த எல்லா உதவியும் நல்குவதென்றும்' உறுதி பூண்டனர். அன்றியும், 'ஒரு தரப்புக்கு எதிராக எந்த உடன்படிக்கையோ கூட்டோ மற்றத் தரப்புச் செய்யலாகாது' என்றும் விதிக்கப்பட்டது. ஆனால், வாசிங்டன், லண்டன்,

பாரிஸ் ஆகியவற்றின் கொள்கை வகுப்பாளர், செர்மனி அச்சுறுத்த வில்லை; ஆனால் ரஷ்ய ஆக்கிரமிப்பே அச்சுறுத்தி வருகிறது என்று 1946–47-ல் முடிவு செய்யவும், இவ் உடன்படிக்கை உயிரற்ற வெறும் ஏடாக மாறியது.

டி கால் எவ்வளவோ தேசபக்திக் கீதங்கள் பாடியும், கம்யூனிஸ்ட் கள் எவ்வளவோ அவர்கள் சூழ்ச்சிபற்றிப் பிரச்சாரம் செய்தும், 'நடுநிலையாளர்' 'சுதந்திரத்திற்காக' எவ்வளவோ மன்றுடியும், நவ ∴பிரான்ஸ் தன் நாணயத்தையும் பாதுகாப்பையும் பொறுத்த மட்டில் அமெரிக்காவையே சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. 1947 மார்ச் 4ஆம் நாள் பிரிட்டனும் ∴பிரான்சும் டன்க்கர்க் என்னுமிடத்தில் 50 ஆண்டு நட்புடன்படிக்கை ஒன்று செய்தன. அவ் வுடன்படிக் கையின்கீழ், 'படைத்தாக்குதலினின்றே', அல்லது 'படைக்கலக் குறைப்பு, படைக்கல ஒழிப்பு, சம்பந்தமாக செர்மனி தன் பொறுப்பி லிருந்து நழுவுவதைத் தடுப்பதற்காகவோ, அல்லது செர்மனி அமைதிக்கு ஊறு விளைக்காமல் பார்த்துக்கொள்வதற்காகவோ, மேற்கொள்ளப்படும் சர்வதேச நடவடிக்கையினின்றே செர்மனி யுடன் வருங்காலத்தில் மோதல் ஏற்படுங்கால் இரு நாடுகளும் பரஸ்பர உதவி செய்துகொள்ள வேண்டுமென்று உறுதி செய்யப் பட்டது. 1948, மார்ச் 17ஆம் நாள் பிரிட்டன், பெனிலக்ஸ் நாடு களுடன் ∴பிரான்ஸ் 50 ஆண்டு பிரஸ்ஸல்ஸ் நட்பு உடன்படிக்கை செய்தது. அதுவும் ஒரு பரஸ்பர உதவி ஒப்பந்தமே. அது 'படைத் தாக்குதல் ஐரோப்பாவில் ஏற்படுங்கால்' ஐ. நா. சாசனத் தின் (U. N. Charter) 51ஆவது சரத்தின்கீழ் பரஸ்பர உதவி செய்துகொள்ள வகை செய்தது. மேலும், 'உடன்படிக்கைக் கட்சி ஒன்றுக்கு எதிராக மற்றக் கட்சிகள்' பிற நாடுகளுடன் நேசவுடன் படிக்கையோ கூட்டோ செய்யலாகாது என்றும் அது கட்டளையிட்டது. 1949, ஏப்ரல் 4ஆம் நாள் வரையப்பட்ட வட அட்லான்டிக் ஒப்பந்தம் (NATO) இதே கொள்கையை மீண்டும் வலியுறுத்துவதுபோலவும் ∴பிரெஞ்சுப் பாதுகாப்புக்கு மற்றோர் அரணிட்டது போன்றும் தோன்றியது.

சோவியத் ஆக்கிரமிப்பிலிருந்து ஐரோப்பாவைப் பாது காப்பதற்கு செர்மனியின் படை வலிமையைப் பெருக்குதல் இன்றி யமையாததென்று யு.எஸ்.ஏ. முடிவு செய்தது. இம் முடிவு செய்ததோ, இல்லையோ, எரியும் நெருப்பில் எண்ணெய் சேர்த்துக்கொண்டது. இச் சூழலில் ∴பிரான்ஸ் இருதலைக் கொள்ளிக் கிடையே அகப்பட்டுக்கொண்டு திக்குமுக்காடியது. அதன் நிலை இரக்கத்திற்கும், சோகத்திற்கும், நம்பிக்கைக்கும் இடமளித்தது. எனவே, ∴பிரான்சை செர்மனிக்கு எதிராக வலுப்படுத்துவதற்காக பாரிஸ், சார் (Saar) பிரதேசத்தை மீண்டும் கைப்பற்றியது.

மேலும், இனிமேல் அதைக் கைவிடுவதில்லை என்றும் முடிவுகட்டியது. அதுபோல் தேசபக்தியுடைய செர்மானியர் அனைவரும் ஒருகாலும் சார் பிரதேசத்தை இழப்பதில்லை என்று உறுதி பூண்டனர். அப்படி. செர்மனி தான் இழந்த கிழக்குப் பிரதேசங்களை மீண்டும் கைப்பற்ற முயற்சி செய்தால், அப்போது ரஷ்யாவுடன் போரில் இறங்குவ தில்லை என்று ஃபிரான்ஸ் உறுதி பூண்டது. அதுபோல் பானும் (Bonn) எப்படியாவது இழந்த பிரதேசங்களைக் கைப்பற்றியே தீர வேண்டுமென்ற உறுதி பூண்டது. இதற்கிடையில் கிழக்கு ஐரோப்பாவைக் கம்யூனிச அடிமைத் தளையினின்று இறுதியில் காப் பாற்றியே தீரவேண்டுமென்று பெரும்பாலான அமெரிக்கர்கள் முடிவு கட்டினர்.

ஃபிரான்ஸ் இந்த இருதலைக் கொள்ளிக்கு இடையே அகப்பட்டுக் கொண்டு கண் விழி பிதுங்க விழித்தது. இம் முட்டு நிலையினின்று வெளியேறப் பல வழிகள் கையாளப்பட்டன. அவற்றுள் சூமன் திட்ட மும் பிளீவன் திட்டமும் ஒன்றாகும். சூமன் திட்டம் மேற்கு ஐரோப் பாவின் எஃகு, இரும்பு, நிலக்கரித் தொழில்களைக் கூட்டு—கார்ட்டல் (cartel) நிர்வாக முறையின்கீழ்க் கொண்டுவரவும், அதன் கொள்கை களை செர்மனிக்குப் பதிலாக ஃபிரான்ஸ் கட்டுப்படுத்தும்படி செய்யவும் வகை செய்தது. செர்மனியின் சிறிய சேனைகளை ஐரோப்பியப் படை யாகமாற்றி, அதைப் பயன்படுத்தி அடைய வேண்டிய குறிக்கோள்கள் மீது செர்மனிக்குப் பதிலாக ஃபிரான்ஸ் ஆதிக்கம் செலுத்துமாறு செய்ய, பிளீவன் திட்டம் தீட்டப்பட்டது. மேலும் ஃபிரெஞ்சுப் பொருளாதாரத்திற்கும், ஃபிரெஞ்சுப் படைக் குவிப்புக்கும், இந்தோ சீனாவில் நடைபெறும் போருக்கும் வேண்டிய நிதியுதவியளிக்குமாறு ஃபிரான்ஸ் அமெரிக்காவை மன்றாடியது. அன்றியும் மேற்கு ஐரோப்பியக் கூட்டரசின் அமைப்பையும் திட்டத்தையும் செர்மனிக்குப் பதிலாக ஃபிரான்ஸை நிர்ணயிக்க வேண்டும் என்று ஒரே தலைக்கு நிற்குமாறு அமெரிக்காவை மன்றாடியது. ஃபிரெஞ்சு மக்களில் பெரும் பான்மையாக இருந்த டி கால் கட்சியினர், 'தாராளவாத' நடுநிலை யாளர், மற்றும் மாஸ்கோ ஆதரவான கம்யூனிஸ்ட்டுகள் ஆகியோர் இக் கொள்கை நாட்டிற்குக் கேட்டையே விளைவிக்குமென்று எண்ணி அதை அறவே வெறுத்து வந்தனர். ஆனால், அவர்களிடம் வேறு சரக்கு இல்லை. இதற்கு மாற்றுக் கொள்கை எதுவுமில்லை. ஃபிரெஞ்சு காபினெட்டாலும் இதைத் தவிர வேறு கொள்கை வகுக்க முடிய வில்லை. எனவே, இது ஃபிரெஞ்சு வெளி நாட்டுக் கொள்கையின் உயிர்நாடியாக அமைந்தது. இக் கொள்கை நன்மையையே பயக்குமென்று எல்லோரும் எதிர்பார்த்தாரேயன்றி அதன்மீது ஒருவருக்கும் திடமான நம்பிக்கை பிறக்கவில்லை.

இக் கொள்கையின் பயன்கள் விரைவில் எதிரொலித்தன. வல்லரசுகளின் வரிசையில் விளங்கிவந்த ஃபிரான்ஸ், இப்போது அந்

நிலையிழந்து, சிறு வல்லரசுகளில் ஒன்றாகி, தன் எதிர்காலத்தைத் தானே நிர்ணயிக்கும் சக்தியை இழந்து நின்றது. இராட்சச வல்லரசுகட்கிடையே போர் மூளும்பட்சத்தில் ரஷ்யாவால் ஃபிரான்ஸ் கைப்பற்றப்படுவது நிச்சயமாயிற்று. ஏனெனில், செர்மனியின் ஒத்துழைப்புடனோ, அது இல்லாமலோ, செம்படையின் (ரஷ்யாவின்) பிடியிலிருந்து மேற்கு ஐரோப்பாவைப் பாதுகாப்பது முடியாத காரியமாகிவிட்டது. அவ்வமயம் ஃபிரெஞ்சுக்காரர் நால்வரில் ஒருவர், கம்யூனிஸ்ட்டாக விளங்கினர். அவர்கள் படையெடுப்பாளரை வரவேற்றார்கள்; எதிரியின் 'கையாளாக,' 'ட்ரோஜன் குதிரைகளாக,' 'கூட்டாளிகளாக' விளங்கி வந்தனர். அணுகுண்டு பயன்படுத்தக் கற்றிருக்கும் அமெரிக்கப் படைகளைப் பயன்படுத்தி, நாட்டை 'விடுதலை' செய்யத் துணிதல் ஃபிரான்சின் தற்கொலையிலே சென்று முடியும் என்று பெரும்பாலான ஃபிரெஞ்சுக்காரர்கள் நினைத்தனர். அமைதியிலும் அவர்களுக்கு அச்சம் இருக்கத்தான் செய்தது. ஏனெனில், ஐரோப்பாமீது அமெரிக்கா புதிய செர்மன் ஆதிக்கத்தை நிலைநாட்டி விடுமோவென்று அஞ்சினர். சரி, இவ் வெளிநாட்டுக் கொள்கையை விட்டுவிட்டு நன்மை பயக்கும் மற்றொரு கொள்கையைக் கடைப்பிடிக்கலாமென்றால் அதற்கும் இடமில்லாதிருந்தது. ஏனெனில், பெரும்பாலான ஃபிரெஞ்சுக்காரர்கள் தங்கள் வகுப்பு, குழு நலன்களைத் தேச நலனுக்குக் கட்டுப்படுத்த மறுத்துவிட்டனர். மேலும், அவர்கள் பிரெஞ்சுப் பொருளாதாரத்திலோ, அரசியலிலோ குழப்பத்திற்குப் பதிலாக அமைதி நிலவிவர விரும்பவில்லை. எனவே, இத்தகைய மனப்பான்மை பொது வாழ்வில் முன்போல் பெருங்கேட்டைத்தான் விளைத்தது. இனியும் அதைத்தான் விளைக்கப்போகிறது என்பது நிச்சயம்.

எனினும், என்றும் நிலையான ஃபிரான்ஸ் ஒரு புறம் பெருத்த கேட்டை நினைத்து அஞ்சிக்கொண்டே மற்றொரு புறம் நன்மையை ஆவலுடன் எதிர்பார்த்தது. இறைவன் இன்றைய மனித சமுதாயத்திலே மிக அழகானதும், மிக நாகரிகம் வாய்ந்ததுமான நாட்டை (ஃபிரான்சை) ஒருகாலும் அழிக்க இடந்தரமாட்டான் என்ற நம்பிக்கையே அவர்களை இப்படி எதிர்பார்க்க வைத்தது.

ஒரு பொருள் அதிகமான அளவில் மாற மாற, அது தன் சுய ரூபத்தையே அடையும் என்பது (plus ca change, plus cest la meme chose) ஃபிரெஞ்சு மூதுரையாகும். அது ஃபிரான்சுக்கே பொருந்திற்று. இந் நூற்றாண்டின் நடுவில் ஃபிரெஞ்சு நாடக மேடை போர்பன் அரண்மனையைவிட்டும், தலைமையமைச்சர் இல்லத்தைவிட்டும் சற்று மாறியது. நடிகர்களும் அப்படியே மாறினர். உள்நாட்டு அரசியலிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் ஏற்பட்ட மாறுதல்களே இதற்குக் காரணம். என்றாலும், உள்நாட்டு அரங்கிலோ உலக அரங்கிலோ

தோற்றுவிக்கப்பட்ட நாடகத்தில் முக்கியமான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஐரோப்பாவில் தப்பித் தவறி இருந்த ஃபிரெஞ்சுத் தூதுக் குழுக்கள் தாய்நாட்டுக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் விளங்கி வந்தன. ஆசியா, ஆப்பிரிக்காவிலிருந்த தூதுக் குழுக்களோ வல்லந்தமாக (ஃபிரெஞ்சுக்) குடியேற்ற சாம்ராச்சியத்தைக் காப்பாற்றும் தோல்விப் பணியில் ஈடுபட்டிருந்தன. சுதேசவாசிகட்குச் சுதந்திரம் அளிக்காமல் அச் சாம்ராச்சியத்தைக் காப்பாற்றுவது முடியாத காரியமாயிற்று. எட்டு ஆண்டுகள் வீணில் போர் செய்து படையையும் பொருளையும் இழந்து, பின்னர் 1954 ஜூலையில் ஃபிரான்ஸ் இந்தோசீனாவை இழக்கும்படி ஆயிற்று. இத் தவறு மொரோக்கோவிலும் டுனீசியாவிலும் இழைக்கப்படவில்லை யென்றாலும், அல்சீரியாவில் இழைக்கப்பட்டது. இங்கு 1954, நவம்பரில் மிகப் பயங்கரச் சண்டை ஆரம்பமாயிற்று. ஃபிரெஞ்சு அரசியல் நாடக மேடையில் விளையாடப்பட்ட அவலச் சுவை நிரம்பிய இசை நாடகத்தில் (boffe) வந்த இசையெல்லாம் பாராளுமன்ற அரசியலின் முரண்பாடுகளே; அதன் அடிப்படைக் கருத்து ஃபிரெஞ்சு வாக்காளரின் முறையற்ற நடத்தையும், (incivisme) ஃபிரெஞ்சு அரசியல் வல்லமையின் அடுத்தடுத்து வந்த தோல்விகளையும் தவிர வேறில்லை. இதையே இந்த இசை நாடக ஏடு (libretto) உணர்த்திற்று. இதையே இங்கு நடந்த முக்கிய நிகழ்ச்சிகளின் சுருக்கமும் உணர்த்துகிறது.

1952-ல் பணவாட்டம் (deflation), வரவுசெலவுத் திட்ட சமன்பாடு, ஸ்திரமான நிதி நிலை ஆகிய துறைகளில் வலது சாரிகள் செய்த சோதனைகளனைத்தும் தோல்வியடைந்தன. அவற்றுல் டிசம்பரில் (1944-க்குப் பின் ஃபிரான்சின் தலைவராக விளங்கிவந்த) பினுய் ராஜினுமா செய்ய நேரிட்டதுதான் மிச்சம். அவரிடத்தில் சனவரியில் ரெனி மேயர் நியமிக்கப்பட்டார். அவருடைய அமைச்சு ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயத்தை (European Defence Community) மாற்றியமைக்கவும், நிதி, அரசியலமைப்புச் 'சீர்திருத்தம்' கொண்டுவரவும் உறுதி பூண்டது. ஆனால், செயலில் ஒன்றையும் அது சாதிக்கவில்லை. வரவு செலவுத் திட்டத்தில் கொண்டு வரப்பட இருந்த வெட்டுக்கள் (budget cuts) 1953, மே 21ஆம் நாள் காபினெட்டின் வீழ்ச்சியையே உண்டுபண்ணிவிட்டன. கீழ்ச்சபையில் எப்படியாவது பெரும்பான்மையிடத்தை அடையப் பல வாரங்கள் முயற்சி செய்து தோற்ற பின், பழைமைவாதி வர்த்தகரும், ரேனுடின் சுதந்திரக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான ஜோசப் லேனியல் 'தற்காலிக' அமைச்சரவை ஒன்றை நிறுவினர். அது எல்லாப் பிரச்சினைகளையும் ஒத்திப் போட்டுவிட்டு ஒருவகையாகப் பாராளுமன்றத்தில் தப்பிப் பிழைத்துக் கொண்டது. அரசாங்கம் மேற்கொள்ளும் சிக்கன நடவடிக்கைகளனைத்தும், பணக்காரர்களின் செல்வத்தை அதிகமாக்கவே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன என்ற எண்ணம், ஏழை

களின் உள்ளத்தில் உதிக்க ஆரம்பித்தது. அதன்பின் கேட்கவா வேண்டும்? சுமார் 2,000,000-க்கும் மேற்பட்ட உழைப்பாளிகள் அதிக ஊதியம் கேட்டு வேலை நிறுத்தம் செய்யவே 1953, ஆகஸ்டில் ஃபிரெஞ்சுக் குடியரசு வலுவிழந்து நலியத் தலைப்பட்டது. கம்யூனிஸ்ட்டுகள் இவ் வேலை நிறுத்தத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். என்ரூலும், கத்தோலிக்க யூனியன்களும் கம்யூனிச எதிர்ச் சக்தியுமே (Force Ouvriere) இவ் வேலை நிறுத்தத்தை நடத்தின. அரசாங்கம் சலுகைகள் வழங்கிற்று. உழைப்பாளிகள் மீண்டும் தத்தம் வேலைக்குத் திரும்பினர். ஆனால், வெற்றி ஏற்பட்டபாடில்லை. எல்லாப் பிரச்சினைகளும் (மறுபடியும்) ஒத்தி வைக்கப்பட்டன.

1954ஆம் ஆண்டு பிறந்தபோது புதிய தலைமையும், புதிய நம்பிக்கைகளும், புதிய முடிவுகளும், 'நியூ டீல்' பற்றிய புது நம்பிக்கைகளும் சேர்ந்து பிறந்தன: ஆனால், அவை ஒன்றுகூட நிலைத்து நிற்கவில்லை. வெர்செய்ல்சில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் லேனியல், குடியரசின் தலைவராக வர விரும்பினர். ஆனால், 12ஆவது வாக்கெடுப்பில் (ballot) பின்வாங்கிக்கொண்டார். இது வரை புகழுடன் திகழாத பிற்போக்குவாதியும் 71 வயதினருமான ரெனி கோட்டி 13ஆவது வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வென்றார். எலிசி அரண்மனையை இதுகாறும் அலங்கரித்து வந்த ஓரியல் இடத்தில் சனவரியில் அமர்ந்தார். கம்யூனிஸ்ட்டுகள் புதிய 'மக்கள் முன்னணி' ஒன்றை அமைக்க வருமாறு சோசிய லிஸ்ட்டுகளைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு சோசியலிஸ்ட்டுகள் மறுத்துவிட்டனர். ஆனால், பொதுமக்கள் பணவாட்டம், ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயம், இந்தோசீனப் போர் ஆகியவற்றில் திருப்தி இழக்கவும், இடதுசாரிகள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தமக்கு ஆதரவு தேடிக்கொண்டனர். ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயத்தை ஒப்புக்கொள்ளுமாறு அமெரிக்கா இடைவிடாது நெருக்கிக்கொண்டிருந்தது. ஆனபோதிலும் அத் துறை உள்பட எல்லா முடிவுகளையும் லேனியல் தள்ளிப்போட்டார். இந்தோசீனவில் அமெரிக்காவின் இராணுவத் தலையீட்டை அதிகரிக்குமாறு வெளிநாட்டு அமைச்சர் பிதால்ட் வேண்டுகோள் விடுத்தார். அவ் வேண்டுகோளுக்குத் தலைசாய்த்துவிட்டதாக ஜசன்ஹோவர் அவரை (பிதால்ட்டை) ஏமாற்றிவிட்டார். காபினட் ஹோ சீ மின்னுடன் பேச்சுவார்த்தை நடத்தவோ, அன்றி வியட்னாமுக்குச் சுதந்திரமளிக்கவோ முன்வரவில்லை. சென்வா மாநாட்டின்போது டியன்பியன்பூவின் தோல்வி ஏற்படவுமே ஃபிரெஞ்சு காபினட்டும் ஜூன் 12ஆம் நாள் கவிழ்ந்துவிட்டது.

லேனியலின் பின்தோன்றலான 47 வயதுடைய புரட்சிக்கார பியரி மெண்டஸ்-ஃபிரான்ஸ் ஓர் இடதுசாரி, பொருளியலறிஞர்,

யூதரினத்தைச் சேர்ந்தவர். ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயத்தின் ஆதரவாளர். அவரே தலைமையமைச்சராகவும் வெளிநாட்டு அமைச்சராகவும் விளங்கினார். ஆனால், அவரது காபினட் வலதுசாரிகளையே கொண்டிருந்தது. ஏனெனில், சோசியலிஸ்ட்டுகள் அவருடன் கூட்டுச் சேர மறுத்துவிட்டனர். மக்கள் குடியரசுக் கட்சியினரும் விலகிக்கொண்டார்கள். மெண்டசின் காபினட் அசாதாரணமான பெரும்பான்மை வாக்குப் பெற்று வென்றது. அதற்கு 419 இடங்களும், எதிர்க்கட்சியினருக்கு 47 இடங்களும் கிடைத்தன. ஜூலை 20-க்குள் இந்தோசீனாவில் அமைதியை நிலைநாட்டத் தவறினால் தான் ராஜினாமா செய்துவிடுவதாக உறுதியளித்தார் ஜூலை 21ஆம் நாள் செனீவாவில் போர் நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்திட்டார். ஃபிரெஞ்சுக் கீழ்ச்சபையில் பேசுங்கால் 'கொடிய உண்மைகளை உள்ளடக்கிய இவ் ஏடுகளும் சில வேளை கொடிதாகவே தோன்றுகின்றன' என்றுரைத்தார். ஜூலை 23ஆம் நாள் சபையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுப்போயிற்று. காபினட் சார்பில் 417 வாக்குகளும் எதிர்க்கட்சித் தரப்பில் 14 வாக்குகளும் விழுந்தன. சபையின் நம்பிக்கையைப் பெற்றதுடன் அவர் தொழிலையும் வேளாண்மையையும் நவீனமாக்கவும், 'பொருளாதாரப் புரட்சி' மூலம் உற்பத்தியைப் பெருக்கவும் அங்கத்தினரிடமிருந்து 'தனி அதிகாரம்' பெற்றார்.

ஆனால், அதேயளவு வெற்றி செர்மன் படைக் குவிப்பு குறித்து அவர் பெற்றாரில்லை. ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயம்பற்றி (ஐ.பா.ச.) அவர் கொண்டுவந்த திருத்தங்களை ஆகஸ்ட்டு மாதம் ஃபிரசெல்சில் கூடிய 'ஆறு நாடு மாநாடு' ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது. ஜசன்ஹோவர், டல்லஸ், அடிலாய் ஸ்டீவன்சன் ஆகியோர் ஐ.பா.ச. ஒப்பந்தங்களைச் சபையிடம் ஒப்படைக்க வேண்டாமென்று எவ்வளவோ அவரிடம் சொல்லிப் பார்த்தும் அவர் கேட்டாரில்லை. ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தாமல் சடையிடம் அவற்றைச் சமர்ப்பித்தார். ஆனால், 1954 ஆகஸ்ட் 30ஆம் நாள் சபை அங்கத்தினர் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். 319 பேர் அதை எதிர்த்தும் 264 பேர் அதற்குச் சாதகமாகவும் வாக்களித்தனர். ஆனால், வரவர ஆங்கிலோ-அமெரிக்க நெருக்கடியை மெண்டஸ் சமாளிக்க முடியவில்லை. லண்டனில் (செப். 28—அக். 3வரை) 'ஒன்பது நாடு மாநாடு' ஒன்று கூட்டப்பட்டது. அதில் எல்லா நாடுகளின் சம்மதத்தின்பேரில் புதிய கொள்கை ஒன்று வகுக்கப்பட்டது. அதன்படி மேற்கு செர்மனி நேட்டோ, பிரசெல்ஸ் ஒப்பந்த அமைப்பு ஆகியவற்றில் சேரவேண்டுமென்றும், மேற்படி அமைப்பை 'மேற்கு ஐரோப்பிய சங்கம்' என்று மாற்றியழைப்பதென்றும்; 12 டிவிஷன்கள் புதிதாகத் திரட்டவேண்டுமென்றும் ஆனால், செர்மனியில் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் தொடர்ந்து

இருப்பதை (ஃபிரான்ஸ்) ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும், அதன் படைகள் நேட்டோ படைத் தலைமையின்கீழ் இயங்கவேண்டுமென்றும், ஐக்கியம் உண்டாக்க பலாத்காரத்தில் இறங்குவதை விட்டுவிடவேண்டுமென்றும், கன போர்த்தளவாடங்கள், ஏவு கணைகள் (missiles), உயிர், ரசாயன, அணு ஆயுதங்களை முற்றிலும் கைவிட்டுவிட வேண்டுமென்றும், சார் மாகாணத்தை முடிந்தால் 'ஐரோப்பியமயமாக்குவதற்கு' ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. 1954அக். 23ஆம் நாள் ஃபிரெஞ்சுத் தலைமை அமைச்சர் இல்லத்தில் 15 நாட்டுத் தூதர்கள் கூடி இக் குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் யாரும் நம்பாத முறையில் பல சிக்கலான ஒப்பந்தங்கள் செய்து முடித்தனர். ஆனால், ஃபிரெஞ்சு மக்கள் மனத்தில் சோவியத் ஆக்கிரமிப்பைவிட செர்மன் படைக் குவிப்பே பீதியையுண்டாக்கியது. எனவே, டிசம்பர் 24ஆம் நாள் சபை உறுப்பினர் இவ் வொப்பந்தங்களை ஏற்க மறுத்துவிட்டனர். 281 வாக்குகள் ஒப்பந்தங்களை எதிர்த்தும், 257 வாக்குகள் அவற்றை ஆதரித்தும் இருந்தன. மெண்டஸ்-ஃபிரான்ஸ் அவற்றை ஏற்குமாறு எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அதற்கு செவிசாய்க்க மறுத்தது சபை. ஆனால், அவர் நம்பிக்கைப் பிரச்சினையை எழுப்பவும் டிச. 30ஆம் நாள் சபை அவற்றை ஏற்றுக்கொண்டது. 287 பேர் அதற்குச் சாதகமாயும் 260 பேர் பாதகமாயும் வாக்களித்தனர். வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதோர் அனேகர்.

மெண்டஸ்–ஃபிரான்ஸ் முதல் ஃபாரே வரை

மெண்டஸ்-ஃபிரான்சுக்கு வெளிநாட்டுக்கொள்கையில் கிடைத்த வெற்றிகளனைத்தும் தோல்வியாகவே மாறின. என்றாலும், அவைகளை 'இயல்வாய்மை' அல்லது (realism) உண்மைக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், அவை விரும்பத்தக்க தோல்வியாகவே விளங்கின. இந்தோசீனா இழக்கப்பட்டு, தென் கிழக்கு ஆசியாவில் அமைதி நிலைநாட்டப்பட்டது. மொரோக்கோ விலும், டுனீசியாவிலும் அதே விலை கொடுத்து அமைதி நிலை நாட்டப்பட்டது. கோவாமீது ஆட்சியுரிமை கொண்டாடிய போர்த்துக்கல் நாட்டைப் போலல்லாது ஃபிரான்ஸ் அதன் ஆதிக் கத்தின்கீழ் இருந்த சுமார் 193 சதுர மைல் பரப்புள்ளதும், 320,000 பேர் வாழ்ந்து வந்ததுமான பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனன் ஆகிய சிறிய கடற்கரைப் பகுதிகளை இந்தியாவிடமே 1954, அக்டோபர் 21ஆம் நாள் ஒப்படைத்தது. சார் மாகாணத் தையும் ஃபிரான்ஸ் இழக்கவேண்டியதாயிற்று. செர்மன் படைக் குவிப்பைத் தடுக்கும் நம்பிக்கையையும் கைவிடவேண்டியதாயிற்று. அமைதிப் பசி கொண்டிருந்த ஃபிரான்ஸ் அதைப் பாதுகாக்க அஞ்சியது. தன் பண்டைச் சிறப்புகளைக் கைவிட நேரிடும்

நிலையை வெறுத்தது. இந்நாடு, பத்தாண்டுகள் பெயர் பெற்று விளங்கிய தன் பிரதமருக்கு எதிராக மாறியது.

1954 நவம்பரில் யு.எஸ்.ஏ., கனடா ஆகிய நாடுகட்கு வெற்றிகரமாக விஜயம் செய்து திரும்பியபின், 1955ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மெண்டஸ்-ஃபிரான்ஸ் இத்தாலிக்கும், செர்மனிக்கும் விஜயம் செய்து வந்தார். அவர் ஃபிரான்சின் நேசநாடுகளே ஐரோப்பியப் 'படைக்கலக் குவியல்' ஒன்றை எழுப்பு மாறும், ஐரோப்பியக் கூட்டரசை அமைப்பதற்கு ஆவன செய்யு மாறும், செர்மனியின் படைக்கலக் குவிப்பைத் தடுக்கும் நோக்கத் துடன் ரஷ்யாவையும் சேர்த்துக்கொண்டு நான்கு வல்லரசு மாநாடு ஒன்றைக் கூட்டுமாறும் வற்புறுத்தினர். ஆனல். இம் முயற்சி ஒன்று கூடப் பலன் தரவில்லை. அதன்பின் அல்ஜீரியாவில் அமைதியை நிலைநாட்ட விழைந்தார். அதற்காக தேசியவாதிகளுடன் சமரசம் செய்யவும் முன்வந்தார். அப்போதுதான் அவருடைய வட ஆஃப்ரிக்கக் கொள்கைகளே ஏற்குமாறு கீழ்ச்சபையை வேண்டினர். ஆனல், பிப்ரவரி 5ஆம் நாள் சபை அவற்றை நிராகரித்துவிட்டது. 319 பேர் அவருடைய கொள்கைக்கு எதிராகவும், 273 பேர் அதற்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். மெண்டசின் காபினட் தோற்றுப்போனதும் 1955 பிப்ரவரி 23ஆம் நாள் புதிய காபினட் அமைக்கப்பட்டது. அதில் அந்தோனி பினுய் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். எட்கர் ஃபாரே தலைமையமைச்ச ரானர். இவர் ஒரு புரட்சிக்காரர். (இவர் பதவிக்கு வந்தாரோ இல்லையோ, இவர் மெண்டஸ்-ஃபிரான்சின் அரசியல் விரோதி யானர்.) இவர் ஒரு புரட்சிக்காரராக இருந்தபோதிலும் அவரது காபினட்டுதான் இரண்டாம் உலகப் போருக்குப்பின் அமைக்கப் பட்ட காபினட்டுகளிலேயே வலதுசாரி அமைச்சவை எனலாம்.

ஃபாரேயின் அமைச்சவை, 1944ஆம் ஆண்டு உடன்படிக்கையை சோவியத் யூனியன் ரத்து செய்ததைக்கூடப் பொருட்படுத்தவில்லை. ஆனல், பியரி பௌஜாடே என்ற புதிய ஃபாசிஸ்ட் தலைவரின் 'வர்த்தகர் பாதுகாப்புச் சங்கத்தின்' எழுச்சியையும் நடவடிக்கை களையும் கண்டு திகைத்தது. மக்களைத் தன்வசப்படுத்தும் திறமை பெற்றிருந்த இந்த நியோ-ஃபாசிஸ்ட் தலைவர் சிறு வர்த்தக சமுதாயத்தினரையும், உழவர்களையும் அரசாங்கத்திற்கு எதிராக 'வரி நிறுத்தம்' (tax strike) செய்யுமாறு தூண்டினர். பினுய் ஏப்ரலில் லண்டனுக்கும், ஜூனில் வாசிங்டன், சான் ஃபிரான் சிஸ்கோவுக்கும், ஜூலை அக்டோபரில் சென்வாவில் நடைபெற்ற நான்கு வல்லரசு மாநாட்டுக்கும் விஜயம் செய்து திரும்பினர். தன் நாட்டிற்கு விஜயம் செய்துவிட்டுப் போகுமாறு மாஸ்கோ விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். ஆனல், ஃபிரான்சின் அரசியல் தந்திரம் பலிக்கவில்லை. ஃபாரே பாராளுமன்றத்

தேர்தல்களை 1956 ஜூன் மாதம் நடைபெறுவதற்குப் பதிலாக டிசம்பரில் நடத்தத் திட்டமிட்டார். அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிந்துவிடும் என்று எண்ணினார். இதைச் சற்றும் விரும்பாத மெண்டஸ்-ஃபிரான்ஸ், இடதுசாரிகளை நலியவைக்கவும், வலதுசாரிகளை வலுப்படுத்தவுமே ஃபாரே இந்த அரசியல் தந்திரம் செய்கிறார் என்று குற்றஞ்சாட்டினார். அதனை யொட்டித் தேர்தல் முறையில் கொண்டுவரவேண்டிய மாற்றங்கள் குறித்து ஏற்பட்ட சண்டையில் சபையினர் ஃபாரேயின் காபினட்டை 1955, நவம்பர் 30ஆம் நாள் பதவியிலிருந்து விலக்கிவிட்டனர். 318 உறுப்பினர் அவருக்கு எதிராகவும், 218 பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர். 18 மாதத்திற்குள் இரண்டு காபினட் நெருக்கடிகள் ஏற்பட்டு, அதிலிருந்து பெரும்பான்மையினருக்கும் மேலான (314) உறுப்பினர் (அரசாங்கத்தை) எதிர்க்கின்றனர் என்று தெரிய வந்தால் அப்போது காபினட் கீழ்ச்சபையைக் கலைக்குமாறும், புதிய தேர்தல்களுக்குக் கட்டளையிடுமாறும் அரசியலமைப்பின் 49, 51 ஆவது ஷரத்தின்படி ஜனாதிபதியை வேண்டலாம். 1955, பிப்ரவரி 5ஆம் நாளும், நவம்பர் 30ஆம் நாளும் கீழ்ச்சபையில் நடந்த வாக்கெடுப்பு இந்நிபந்தனையைப் பூர்த்தி செய்தது. எனவே, 1877ஆம் ஆண்டுக்குப்பின் முதல் தடவையாக சபையைக் கலைக்கும் காபினட் உத்தரவு பிறந்தது. அதன்பிரகாரம், தேர்தல்கள் 1956, ஜனவரி 2ஆம் நாள் நடைபெறவேண்டியதாயிற்று. ஃபாரே பலாத்காரப் புரட்சி (coup de force) செய்வதாக மெண்டஸ்-ஃபிரான்ஸ் குற்றஞ்சாட்டினார். தம் புரட்சிக்காரர்களின் தலைமையை வலுப்படுத்தினர். அன்றியும், கட்சியிலிருந்து ஃபாரேயை வெளியே தள்ளுவதற்கான நடவடிக்கைகளும் எடுத்தார்.

ஃபாரே காலம்முதல் மொலட் காலம்வரையிலும், அதற்கப் புறமும்

1956, ஜனவரி 2ஆம் தேதி தேர்தல் முடிவுகள் 1951ஆம் ஆண்டுத் தேர்தலைவிட அதிகமான குழப்பத்தையும் மயக்கத்தையும் உண்டாக்கின. மனக்குறையுடைய ஃபிரெஞ்சு வாக்காளரில் மூன்றில் ஒரு பகுதி மக்கள், முடிவேயில்லாத அர்த்தமற்ற அரசியல் பாடலின் மீது வெறுப்படைந்துபோய் தீவிரக் கட்சி அபேட்சகர்களுக்கு எதிர்ப்பின் அறிகுறியாகத் தங்கள் வாக்குகளை அளித்தார்கள்; அவை பாராளுமன்ற சனநாயக எதிர்ப்புக் கட்சிகள். இந்த நிலைமைதான் தேர்தலுக்குப்பின் குறிப்பாக மனவமைதியைக் குலைத்தது. இத் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு 145, பௌஜா கட்சியினர்க்கு 51, டிகால்வாதியர்க்கு 16 இடங்கள் கிடைத்தன. சோசியலிஸ்ட்டுகள் 88 இடங்களையும், மக்கள் குடியரசுக் கட்சி 70 இடங்களையும், தனியாளர் (Independents) 94 இடங்களையும் கைப்பற்றினர். பிளவுண்டு நின்ற புரட்சியாளர் 71 இடங்களைமட்டுமே பிடிக்க முடிந்தது. அதிலும்

மெண்டஸ்-பிரான்ஸ் பாரேயைத் தோற்கடித்துவிட்டார். மக்கள் வாக்குகளைப் பொறுத்தமட்டும் மொத்தத்தில் கம்யூனிஸ்ட்டுகள் 25%, பௌஜா கட்சியினர் 12%, சோசியலிஸ்ட்டுகள், மக்கள் குடியரசு வாதியினர், தனிப்பட்டோர், புரட்சியாளர் ஒவ்வொருவரும் 15% வாக்குகளே பெற்றனர். எனவே, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை முன்னைவிடக் கடுமையாகப் பிளவுண்டு நின்றது.

கம்யூனிஸ்ட்டு அல்லது பௌஜா கட்சியினரின் ஒத்துழைப்பில்லாமல் பாராளுமன்றத்தில் நிலையான பெரும்பான்மை ஏற்பட வழியில்லாது இருந்தது. அப்படியிருந்தும், தங்களுடன் சேர்ந்து புதிய 'மக்கள் முன்னணி' ஒன்று அமைக்க முன்வருமாறு கம்யூனிஸ்ட்டுகள் விடுத்த வேண்டுகோளை சோசியலிஸ்ட்டுகளும் புரட்சிக்காரர்களும் ஏற்க மறுத்துவிட்டனர். இதற்கிடையில் முன்னாள் உயர்நிலைப் பள்ளி ஆசிரியரும், 50 வயதான சோசியலிஸ்ட்டுமான கெய் மொலெட் ஜனவரி மாதம் மெண்டஸ்-பிரான்சுடன் ஓர் உடன்பாடு செய்தார். அதன்படி, மொலெட் தலைமையில் சோசியலிஸ்ட்டுகள், புரட்சிக்காரர்களைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டது. அதில் மெண்டஸ்-பிரான்ஸ் 'நிர்வாகத்துறையற்ற (Portfolio) இராஜாங்க அமைச்சராக' (Minister of State) நியமிக்கப்பட்டார். சோசியலிஸ்ட்டு கிறித்துவக் கட்சியினரான பிளுவ் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். கட்சி அமைப்பை (party composition) பொறுத்தமட்டும் இக் காபினட் பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் விளங்க முடியாதுபோனாலும், அதை 1956, பெப்ரவரி முதல் தேதியன்று சபை ஏற்றுக்கொண்டது. 420 உறுப்பினர் அதற்குச் சார்பாகவும், 71 பேர் அதற்கு எதிராகவும் வாக்களித்தனர். இக் காபினட்டைப் பொறுத்தவரை மற்றோர் அதிசயம் என்னவென்றால், நான்காம் குடியரசிலேயே இதுவரை நீடித்து நின்ற காபினட் இது ஒன்றே. விதியின் விளையாட்டு என்றுதானே இதைச் சொல்ல முடியும்! இல்லையா? இதன் இரகசியம் என்னவென்றால், இந்தக் காபினட்டை விட்டால் வேறொரு காபினட் அமைக்க வழியே இல்லாமலிருந்ததுதான். அன்றியும், மொலெட்டின் அரசாங்கத்தை நடுவினரும் கம்யூனிஸ்ட்டுகளும் சில பிரச்சினைகளில் ஆதரித்துவந்தனர். மற்றச் சிக்கலில் பௌஜாவின் கட்சியினரும் மற்றவர்களும் ஆதரவு அளித்துவந்தனர்.

நிலையான பாராளுமன்ற ஆதரவு இல்லாத நேரத்தில், அந்த ஆதரவையும் இழக்கச் செய்யும் வாதத்திற்குரிய பொதுப் பிரச்சினைகள் எதையும் ஆளும் அமைச்சு எடுக்காமலிருப்பதே அல்லது காலங்கடத்துவதே உசிதமாகத் தோன்றிற்று. இவ் வுண்மையை நன்கு உணர்ந்த மொலெட் அதன்படியே நடந்தார். பார்ப்பதற்கு தேசபக்தியற்ற செயலாக அது தோன்றினாலும், அதையே அவர்

தன் திறமையால் ஒரு நுண்கலையாக்கிவிட்டார். அதனால்தான் அவர் 1957, மே 21ஆம் நாள்வரை தலைமையமைச்சராக விளங்க முடிந்தது. ஆனால், விதியின் விளையாட்டு அவரையும் விடவில்லை. பத்து ஆண்டுகட்கு முன்னர் லியான் ப்ளம் நடந்துகொண்டது போல் இச் சோசியலிஸ்ட்டு தலைவரும் சோசியலிச நெறிகளையெல்லாம் மறந்துவிட்டு, சுதந்திரம் கேட்டு எழுச்சியுற்ற சுதேச வாசிகட்கு எதிராக 'நெறியற்ற' கெடுதலான குடியேற்றப் போர்க் கணையை ஏவினர். இச் செயல், போர்பன் மக்களைப்போல் சோசியலிஸ்ட்டுகளும் ஒன்றையும் கற்கமாட்டார்கள், ஒன்றையும் மறக்க மாட்டார்கள் என்பதையே உணர்த்திற்று. ஆனால், இவ் வுவமை அவ்வளவு பொருத்தமானது அன்று. ஏனெனில், பாராளுமன்றத்தில் நிலவிவந்த சக்திச் சமநிலையில் மொலெட்டின் அமைச்சுக்கு இதைத் துறந்தால் வேறு வழியே இல்லை. மொராக்கோவுக்கும் டுனீசியாவுக்கும் முறையே 1956, மார்ச்சு 2ஆம் தேதியும், 20ஆம் தேதியும் சுதந்திரம் வழங்கப்பட்டது. மொலெட்டும் பினவும் மே மாதம் மாஸ்கோவுக்கு விஜயம் செய்தனர். ஜூலை மாதம் அவர்கள் நேருவுக்குப் பாரிசில் வரவேற்பு அளித்தனர். ஆனால், இம் முயற்சிகள் ஒரு பலனையும் அளிக்கவில்லை. இவற்றுல் கிழக்கு மேற்கு உடன்பாடோ, அன்றி ஃபிரான்சுக்கும் மேற்கு ஆசிய, வட ஆஃப்ரிக்க புதுத் தேசியவாதி கட்குமிடையே இணக்கமோ ஏற்படவில்லை. மென்டஸ்-ஃபிரான்ஸ் 1956, மே 23 ஆம் நாள் காபினட்டிலிருந்து விலகிக்கொண்டுவிட்டார். அல்ஜிரியச் சிக்கலுக்கு இராணுவத் தீர்ப்புக்குப் பதிலாக மொலெட், அரசியல் தீர்வு காணத் தவறியதே அவருடைய (மெண்டஸ்-ஃபிரான்சின்) ராஜினமாவுக்குக் காரணம் ஆகும். அத்துடன் அவர் புரட்சிக் கட்சித் தலைமையையும் தற்காலிகமாக இழந்தார்.

1956-ல் பிரிட்டன், இசுரேலுடன் ஃபிரான்சும் கைகோத்துக் கொண்டு எகிப்தை (பலவந்தமாகத் தாக்கிப்) படுதோல்வியடைந்ததை உலகம் முழுவதும் அறியும். இத் தோல்வியும் யு.எஸ்.ஏ., யூ எஸ்.எஸ்.ஆர்., ஐ.நா. மற்றும் ஆசிய ஆஃப்ரிக்க அரசாங்கங்கள், மக்கள் அனைவரையும் சின்னஞ் சிறு நாடு வலுவின்றி எதிர்த்தமையும், இன்னும் ஃபிரான்ஸ் ஒரு 'வல்லரசு' தானு இல்லையா என்ற வினு சம்பந்தமாக மனத்தில் தோன்றிய ஐயங்கள் அனைத்தையும் நீக்கின. எனினும், இப் படுதோல்விக் கப்புறமும் ஈடனைப்போல் அல்லாமல் இவர் (மொலெட்) தொடர்ந்து பதவியிலிருக்க முடிந்தது. பிரிட்டிஷ் தொழிற் கட்சிக்காரர்களைப் போல் அல்லாமல் பெரும்பாலான ஃபிரெஞ்சு சோசியலிஸ்ட்டுகள் இப் பலாத்கார நடத்தைக்கு முதலில் இணங்கிவிட்டு, பின்னர் வருந்தினர். யு.எஸ்.ஏ. நாசருக்கு உதவியளித்துவருதல் 'நியாயம்' அல்லவென்று பினவ் முறையிட்டார். 'என்னதான் விவெறுப்படைந்தபோதிலும், நாம் அமெரிக்க நட்பைத் துறக்க

முடியாது; அட்லான்டிக் நேச உடன்படிக்கையைக் கைவிட முடியாது. ஏனெனில், அங்கேரிக்கு ஏற்பட்ட தலைவிதி நம் நாட்டுக்கும் ஏற்படாமல் தடுப்பது அது ஒன்றே. ஆனால், நாம் என்றும் அமெரிக்க விருப்பத்திற்கே தலைசாய்த்தாக வேண்டும் என்பது இதன் பொருளன்று...' என்று உரைத்தார். 1956ஆம் ஆண்டு டிசம்பர் மாத நடுவில் டல்லஸ் பாரிசுக்கு விஜயம் செய்தார். அது இரு நாடுகட்குமிடையே நிலவிய 'ஒற்றுமையை' மீண்டும் வலியுறுத்தியது. ஆனால், ஆங்கிலோ-ஃபிரெஞ்சு-அமெரிக்க ஒற்றுமைக்குக் கடுமையான ஊறு ஏற்பட்டுவிட்டதென்பது—அதாவது, 1956-க்குமுன் இந் நாடுகட்கு இடையே நிலவிவந்த பரஸ்பர நம்பிக்கையும் ஒத்துழைப்பும் இனித் திரும்பிவரா என்ற உண்மை—குருடனைத் தவிர மற்ற அனைவருக்கும் புரிந்துவிட்டது. உயர் கூட்டுகள் (Grand Coalitions) இரண்டும் சிதைந்து மறைந்தாலன்றி, ஃபிரான்ஸ் இனியும் ஒரு வல்லரசாக அதன் இஷ்டத்திற்கு நடக்க முடியாது என்பதும், அத்தகைய வாய்ப்பு 1950—60-ல் ஏற்பட இடமில்லை என்பதும் அதனிலும் தெளிவாயிற்று.

இச் சூழலில்தான் பிளவ் 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வாசிங்டனுக்கு விஜயம் செய்தார். அதற்கு அடுத்த மாதம் மொலெட்டும் போய்வந்தார். அப்போது இருநாடுகட்குமிடையே நிலவிய 'ஒற்றுமையை' மீண்டும் ஐசன்ஹோவரிடம் வலியுறுத்தினர். ஆனால், வெளியில் வாசிங்டனுக்கும் தெல் அவீவிற்குமிடையே இசுரேல் பிரச்சினைகள்குறித்து நிலவிவந்த கருத்து வேறுபாடுகளில் இசுரேல் பக்கம் பேசினர். எனவே, இவ்விரு விஜயங்களும் நிலைமையை மாற்றவில்லை. வாசிங்டனுக்குச் செல்லும் வழியே கோல்டா மீயருக்கு மார்ச்சு மாத நடுவில் பாரிசில் மொலெட்டோவை சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது 'நம்மிரு நாடுகட்குமிடையே ஒருவிதக் கருத்து வேறுபாடுமில்லை என்று நான் நம்புகிறேன்' என்று அவர் கூறினர். அப்போது அவர் பாதுகாப்பு அமைச்சர் மோரிஸ் பர்கஸ்-மனோரியையும் சந்தித்தார். மார்ச்சு மாதம் ஆங்கிலோ-அமெரிக்க பெர்முதா மாநாட்டிற்கு ஃபிரான்ஸ் அழைக்கப்படவில்லை. இதைக்கண்டு ஃபிரெஞ்சுக் கொள்கை வகுப்பாளர்கள் வருந்தினர். ஃபிரெஞ்சுப் புரட்சிக்காரர்களில் தேர்ச்சியும் மதிப்பும்மிக்க தலைவராகப் பல்லாண்டுக் காலம் திகழ்ந்துவந்த எட்வர்டு ஹெரியட் தமது 84ஆவது வயதில் 1957, மார்ச்சு 26ஆம் நாள் தம் பூதவுடல் நீத்துப் புகழுடம்பெய்தினர். அவர் மறைவு கட்சித் தலைமை வாரிசு யார் என்பதுபற்றிப் பல சந்தேகங்களை எழுப்பியது. ஏப்ரல் மாதம் இரண்டாம் எலிசபெத் மகாராணி பாரிசுக்கு விஜயம் செய்தபோது அவர்களுக்கு அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதற்கிடையில் இடைவிடாது நடந்துவந்த கொடிய அல்ஜீரியப் போரில் ஆண்கள் ஆண்களையும், ஏன் பெண்களையும்

குழந்தைகளையும்கூடக் கொன்று குவித்துக்கொண்டிருந்தனர். அப் போரை மொலெட்டின் அமைச்சவையால் முடிவுக்குக் கொண்டுவர இயலவில்லை.

1957, மே 21ஆம் நாள் அரசாங்கத்தின்மீது சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் முப்பத்து நான்காவது முறையாகக் கொண்டு வரப்பட்டது. வரிகளை (taxes) அதிகமாக்கும் நுணுக்கமான மசோதா (bill) சபையின்முன் இருந்தது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு இம்மசோதா காரணமன்று. உண்மையில் அல்ஜீரியாவில் அரசாங்கம் அமைதியை நிலைநாட்டத் தவறியதும், உலக அரங்கில் ஃபிரான்சின் நிலையை உணர்த்தத் தவறியதும் சபையின் சினத்தை மூட்டியது. இதுதான் தக்க சமயமென்று நினைத்த உறுப்பினர், அரசாங்கத்திற் கெதிராக வாக்களித்து அதைக் கவிழ்த்துவிட்டார்கள். 250 பேர் எதிராகவும், 213 பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர். ஃபிரான்சின் பண்டைய புகழும், வலிமையும் தவிர எல்லாம் மறைந்துபோயின. மக்கள் குடியரசுக் கட்சித் தலைவர் பியரி பிளிம்லின் புதிய அமைச்சு ஒன்றை அமைக்க வீணில் முயன்றார். அதன்பின் 42 வயதான புரட்சித் தலைவர் மோரிஸ் பர்க்ஸ்-மனேரி சோசியலிஸ்ட்டு புரட்சிக காரர் கூட்டு அரசாங்கத்தை அமைத்தார். வேறு வழியில்லாததை அறிந்த பாராளுமன்றம், 1957 ஜூன் 13ஆம் நாள் அரைகுறை மனத்துடன் புதிய அரசாங்கத்தை ஒப்புக்கொண்டது. 240 பேர் அரசாங்கத்தின் சார்பிலும், 194 பேர் எதிராகவும் வாக்களித்தனர். எப்படிப் பாராளுமன்றம் அரசாங்கத்தை ஏற்றதோ அதுபோல் காபினட்டின் புதிய வரி மசோதாக்களையும் மனமின்றி ஏற்றது. ஆனால், சபையினர் 1957, செப். 30ஆம் நாள் அரசாங்கம் கொண்டுவந்த அல்ஜீரிய 'சீர்திருத்த மசோதாவை' ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். அதன் விளைவாக ஏற்பட்ட காபினட் நெருக்கடியை நான்காம் ஃபிரெஞ்சுக் குடியரசின் வரலாற்றிலேயே நெடுநாள் நீடித்திருந்த நெருக்கடி என்று நாம் கூறலாம். அக்டோபர் மாத இறுதிவரை புரட்சிக் கட்சித் தலைவர்கள் பேரறிவுடைய புரட்சிப் பொருளியலறிஞரும் ஃபிரெஞ்சுத் தலைமையமைச்சர்களிலேயே வயதில் (37) மிகச் சிறியவருமான பெலிக்ஸ் கெய்லார்டின் காபினட்டிற்கு ஆதரவு அளிக்க முன்வரவில்லை. ஃபிரான்சின் நீண்ட நாள் அரசியல் வாதநோயைக் குணப்படுத்த இளமையாலும் அறிவாலும் முடியவில்லை. ஏனெனில், அந் நோய் உள்நாட்டு அரங்கில் பயன்தரவல்ல எந்தப் பொருளாதார, அரசியல் சீர்திருத்தமும் கொண்டுவர இடந்தரவில்லை. மேலும், வெளிநாட்டு அரங்கில் அதுவட ஆஃப்ரிக்காவில் கொடிய போர் தொடுக்கும்படியும், உலக விவகாரங்களில் (ஃபிரான்ஸ்) வல்லமை இழக்கும்படியும் செய்தது.

இனி, பொருளாதாரத்துறையைச் சற்றுக் கவனிப்போம். 1957–59-ல் ஃபிரெஞ்சுப் பொருளாதாரம் பணவீக்கச் செழுமையுடன் பீடுநடை போட்டது. ஆனால், பன்னாட்டுச் செலுத்துதலில் (international payments) இந்நாடு நெடுநாள் பற்றுக்குறை யுடனேயே (deficit) விளங்கிவந்தது. ஏற்றுமதியினும் (exports) அதிகமான இறக்குமதி (imports) (அமெரிக்காவிடமிருந்து வருடாந்தர உதவித் தொகை பெற்றும்), பொதுத்துறையில் வரவுக்கு (revenue) மிஞ்சின செலவு (expenditure) ஆகிய இவையே இதற்குக் காரணம். அல்ஜீரியப் போர்ச்செலவும், ஃபிரெஞ்சு மக்கள் வரிகொடாமல் நழுவியதுமே பொருளாதாரத்துறையில் இவ் அவல நிலை ஏற்பட்டதற்குக் காரணம் ஆகும். ஃபிரெஞ்சு நாணயத்தின் (franc) மதிப்புக் குறைக்கப்பட்டது. 1914-க்குமுன் ஒரு டாலருக்கு 5 ஃபிராங்கு சமமாக இருந்தது. ஆனால், மதிப்புக் குறைப்பிற்குப் (devaluation) பின், 1957, ஆகஸ்ட்டில் ஒரு டாலருக்கு 350—450 ஃபிராங்குகளாக மதிப்புக் குறைந்துபோயிற்று. இக் கொள்கையின் விளைவாக ஃபிரெஞ்சுப் பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட இடர்ப் பாடுகள் தற்காலிகமாக நீங்கின. உலக நாடுகளை நாம் கூர்ந்து கவனிக்குங்கால், தனது உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் விருப்பமும் சக்தியுமுள்ள அரசாங்கம் ஒன்றுக்கே மக்கள் மனமுவந்து என்றும் அளிக்காவிட்டாலும், பொதுவாகத் தாமாகவே முன்வந்து வரி செலுத்துவதைப் பார்க்கிறோம். ஆனால், இத்தகைய மக்கள், நான்காம் குடியரசு தனது 20ஆவது வயதை எட்டிப் பிடித்த நிலையில், அதனுடைய அரசியல் அமைப்பு முறையில் நம்பிக்கை கொண்டவர்களாக வெகு சிலரே இருந்தனர்.

இவ்வாறானபோதிலும், ஃபிரெஞ்சுக்காரர்கள் சிறந்த வாழ்க்கையையே நடத்தினர்கள். ஏழை பணக்காரர்களுக்கிடையே மனக் கசப்பு நிலவிவந்தபோதிலும், அவர்கள், மனித சமுதாயத்திலே சிறந்த வாழ்வு, பொருளாதாரத்துறையில் அன்று, மற்றத் துறைகளில் வாழ்ந்துவந்தார்கள் என்றே சொல்லவேண்டும். ஃபிரெஞ்சு சமையற் கலையும் இன்ப வாழ்வுக் கலைகளும் உலகிலேயே ஈடும் எடுப்புமின்றி விளங்கியபோதிலும், அவர்களின் பொருளாதார நிலை உயரவில்லை. ஆனால், அவர்கள் அழகு, ஆன்மீக அறிவு, அனுபவத் துறைகளைப் பொறுத்தவரை எல்லோரையும்விடச் சிறந்த வாழ்வு வாழ்ந்துவந்தார்கள் என்று ஐயந்திரிபறக் கூறலாம். 'உள் நாட்டு, வெளிநாட்டு அரங்குகள் இரண்டிலும் கடுந்துன்பம் ஒரே சமயத்தில் நிகழாதவரையில், அரசியலும் தூதியலும் அவ்வளவு முக்கியம் வாய்ந்தவை அல்ல' என்ற கருத்தில் இவர்களைப்போல் செர்மானியர் நீங்கலாக மற்றெந்தச் சமுதாயத்தினரும் இக் கால உலகில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்ததில்லை. எடுத்ததற்கெல்லாம் குறைகூறும் ஃபிரெஞ்சு மக்களில் பெரும்பாலோர், தமது நீண்ட காலக்

கசப்பான அனுபவத்திற்குப்பின் பல கேள்விக் குறிகளை எழுப்பு கின்றனர். அவற்றைச் செவியில் போடாமல் இந் நாட்டு மக்கள், 'அரசியல் புறக்கணிப்பே கடுந்துயரத்தின் தோற்றுவாய், அரசியல் ஆர்வம் ஒன்றே நம்பிக்கையையும் நலனையும் அளிக்கும்' என்ற உண்மையை 1914-லும் 1939-லும் ஃபிரான்ஸ் உணர்ந்து வீறுகொண் டெழுந்ததுபோல் மீண்டும் இப்போது உணர்ந்தெழவேண்டும்; மேற்கூறியவாறுன போர்ச் சூழ்நிலையானது தோன்றுதவரையில் ஏகாதிபத்தியக் காவல்-அரசு சகாப்தத்தில், அரசியல் நடவடிக்கையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் மனப்பான்மை பின் விளையப்போகும் பேரிடரைக் காட்டுமென்பதையும், சரியான அரசியலுணர்வு பல ஃபிரெஞ்சுக்காரர் நினைப்பதுபோலல்லாமல் நம்பிக்கையையும் (மறுபுறம்) ஆக்கத்திற்கு வழியையும் காட்டு மென்பதையும் அம் மக்கள் உணரவேண்டும்.

2. பிரிட்டன் : வெற்றியில் தோல்வி

'அரசரின் இவ்வரியணை, இச் செங்கோல் ஆட்சித்தீவு, மன்னர்களின் இப் பிறந்தகம், போர்த்தெய்வத்தின் இவ் விருப்பிடம், இச் சொர்க்கம், பிணியினின்றும், போரி னின்றும் தன்னைக் காக்க இயற்கையன்னை சமைத்துக் கொண்ட இவ்வரண், பாற்கடலின் இவ் விலை மதியா இரத்தினம், பொருமை பிடித்த, நற்பேறற்ற நாடுகட்கு எதிரான இச் சுவர், இல்லத்திற்கு அரண்போல் விளங்கும் இம் மதில், இந் நல்லிடம், இப் பூமி, இவ்வரசு, இங்கிலாந்து, இச் செவிலித்தாய், பிறப்பிலும், வளர்ப்பிலும், செயலிலும் கிறித்துவமதச் சேவையிலும், உண்மை வீரத்திலும் ஒளி வீசும் மட்டற்ற மன்னர்களின் பிறப்பிடம்.....உயர்ந் தோரின் உறைவிடம், இவ்வருமை நாடு, நாற்றிசையும் புகழ் மணக்கும் இந் நன்னாடு இன்று ஒரு மனைபோல், ஒரு நிலம்போல் குத்தகைக்கு விடப்பட்டுவிட்டது என்று சொல்லிக்கொண்டே என் உயிரை விடுகிறேன். கடல் தெய்வ முற்றுகையை முறியடிக்கும் வெற்றிக் கடலின் குன்று நிறை கரை சூழ்ந்த இங்கிலாந்து இன்றே வெட்கத்தில் மூழ்கி நிற்கிறது. அந் நாடு இன்று அடிமை யாகித் தவிக்கிறது; பிற நாடுகளை வென்ற இங்கிலாந்து இன்றே தன்னையே கைப்பற்ற விட்டுவிட்டது. ஐயோ! இப் பழி என்னுடன் நீங்கினால் என் சாவில் எனக்குத்தான் என்ன மகிழ்ச்சி!' — வில்லியம் ஷேக்ஸ்பியர், எழுதிய 'அரசர் இரண்டாம் ரிச்சர்டு' என்னும் நாடகத்திலிருந்து. களம் 2, காட்சி 1.

1953ஆம் ஆண்டு, ஜூன் மாதம் பகலவன் தன் வெள்ளிக் கிரணங்களை அள்ளி வீசிக்கொண்டிருந்தான். லண்டன் மாநகரில் வண்ணக் கண்காட்சிக்கு இடையே முடிசூட்டு விழா நடைபெற்றது.

விண்ட்சர் குடும்பத்தைச் சேர்ந்த 2ஆம் எலிசபெத் மகாராணி, 'இறைவன் திருவருளால் கிரேட் பிரிட்டன், அயர்லாந்து, கடல்களுக் கப்பால் பரவியிருந்த பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் ஆகியவற்றின் மகாராணியாக, (பிராட்டஸ்டன்டு) மதக் காப்பாளராக' முடிசூட்டப்பட்டார். மகாராணியார் தம் மணவாளர், ∴பிலிப் மௌன்ட் பேட்டன், கிரேக்க நாட்டு இளவரசர், எடின்பரோ கோமகன் புடைசூழ 1952, பெப். 6ஆம் நாள் கென்யாவில் உல்லாசப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவ்வமயம்தான் தம் தந்தை 6ஆம் ஜார்ஜ் மன்னர் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்திய செய்தியைக் கேட்டார். உடனே விமானத்தில் தாயகம் விரைந்து அரியணை ஏறினர். 6ஆம் ஜார்ஜ் மன்னரின் தந்தை 5ஆம் ஜார்ஜ் 1936, ஜன. 20ஆம் நாள் தம் இன்னுயிர் நீத்து விண்ணுல கெய்தினர். அரியணை அமரவேண்டிய இவரது தமையனர் 8ஆம் எட்வர்டு தாம் காதலித்த பெண்ணையே மணமுடிக்க விரும்பினர்- சட்டம் இடந்தரவில்லை. அரசிருக்கையைத் துறந்து (abdicate) தம் அன்பின் கரங்களைப் பற்றினர்! அரியணைப் பீடத்தில் அன்பைப் பலி கொடுக்க அவர் விரும்பினரில்லை. அன்பிற்காக அரியணையையே (1936, டிச. 11) துறந்தார். அதன் பின்னரே 6ஆம் ஜார்ஜ் 1937, மே. 12ஆம் நாள் முடிசூட்டப்பெற்றார். முதலாம் எலிசபெத் மகாராணியைப்போல் புதிய மகாராணியும் தம் 25ஆவது வயதில் அரியணையேறினர். அந்த எலிசபெத் யுகத்தைப்போன்றே இந்த 20ஆம் நூற்றாண்டிலும் சிக்கன நிலைமை பிரிட்டானியரை எதிர் நோக்கியபோதிலும், புது மகாராணியார் முன்னுள் இன்ப நினைவு களுக்குத் தகுதியான முறையில் நீண்ட நாள் செங்கோலோச்சும் நம்பிக்கை பூண்டார்.

செங்கோலாட்சி நிலவிவரும் இத் தீவிற்கு அப்பால் வாழ்ந்து வரும் மக்களுக்கு இந்த முடியாட்சியின் இரகசியம் ஒரு புதிராகவே இருந்துவருகிறது. இது உலகமெங்கும் பரவி வாழ்ந்துவரும் பிரிட்டிஷார் அனைவரின் ஐக்கியச் சின்னமாகவும், அவர்களின் வரலாற்றுத் தொடர்பு, தொலைநோக்கு சக்தி ஆகியவற்றின் குறை யில்லா உணர்வின் ஒளிவிளக்காகவும் திகழ்ந்துவருகிறது; அவர்கள் மூதாதையரின் பண்டைக்கால மேம்பாட்டையும் புகழையும் நினைவூட்டுகிறது. அப் பெரியோர்களன்றே 'பாராளுமன்றங்களின் தாயைத்' தோற்றுவித்தார்கள்! அவர்களன்றே உலகிலேயே மிகப் பெரியதான ஒரு சாம்ராச்சியத்தை எழுப்பினர்! அவர்களன்றே தொழிற் புரட்சிக்கு (Industrial Revolution) வித்திட்டனர்! அவர்க ளன்றே பிரிட்டானிய சாம்ராச்சியத்தின்மூலம் அனைவர்க்கும் சேவை புரிந்தனர்! இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவை உள்ளடங்கிய யூனைடெட் கிங்டம்—ஐக்கிய அரசு (1921ஆம் ஆண்டு சுதந்திர நாட்டுச் சட்டத்திற்கும்

பின்) அயர்லாந்தில் ஆறு வடகிழக்கு மாவட்டங்களே மட்டுமே கொண்டிருந்தது; மற்றவை சுதந்திரமடைந்து விட்டன. (அவற்றை இழந்ததிலிருந்து அதற்கு மனம் ஆறவேயில்லை) ஒருகாலம் அது மிகப்பெரிய வல்லரசாக விளங்கிவந்தது. ஆனால், அதோடு இந்நூற்றாண்டு நடுவில் அந்நிலை குலைந்து வல்லரசுகள்



எண்ணிக்கையில் மூன்றுவது, நாலாவது இடத்தில் நிற்கும்படி ஆயிற்று. ஏனெனில், புது வல்லரசுகளில் ஒன்றுக எண்ணும்படி செஞ்சீனவும் தலைதூக்கியது ஒரு காரணம், பிரிட்டனுக்கு அப்பாற் பட்ட சக்திகளின் வலிமையால் அந்நாடு இந்நிலையையடைய நேரிட்டது. மற்றொரு காரணம், அவற்றில் செர்மனி, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் தொழில்மயமானதும் முக்கியம் ஆகும்.

உலகைத் தம் குடைக்கீழ் கொண்டுவரப் போட்டியிட்ட இளைய வல்லரசுகளின் அறைகூவல்களை அது (பிரிட்டன்) சமாளிக்கத் தவறியதும் இன்னொரு காரணமாகும். 1930—40-ல் ஏற்பட்டுவிடும் போல் தோன்றிய, 1960—70-ல் ஏற்பட்டாம்போல் தோன்றுகிற பைத்தியக்கார நிலைமைமட்டும் மனிதகுலத்தை ஆட்கொள்ளாமல் இருக்குமானால், மனித வர்க்கத்தின் செல்வம், சுகம் இன்பம் ஆகிய துறைகளில் 'இங்கிலாந்தும் என்றும் உறுதுணையாய்' விளங்கி வரும் என்பதில் ஐயமில்லை. மீண்டும் மீண்டும் இடர்ப்பாடுகள் தலை தூக்கிய கெட்ட நேரத்தில், பிரிட்டிஷ் வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தவர்கள் மேற்கொண்ட முடிவுகளையும், அவர்கள் செய்யத் தவறியதையும் ஆராய்வதே இங்கு நம் நோக்கமாகும்.

'சக்திச் சமநிலை' குலைந்த விதம்: எந்த ஒரு வல்லரசும் ஐரோப்பாமீது ஆதிக்கம் செலுத்தாதபடி பிரிட்டன் பல நூற்றாண்டுக் காலம் தடுத்துவந்தது. அக் கொள்கையால்தான் அது தன்னை ஐரோப்பிய ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் முடிந்தது. அதனால்தான் உலக வர்த்தகம், முதலீடு வாயிலாக பிரிட்டனின் செழுமையை வளர்க்க முடிந்தது. இதே குறிக்கோளை முன்வைத்தே நேசக்கூட்டுகள் செய்யப்பட்டன; படைக்கலங்கள் குவிக்கப்பட்டன. சக்திச் சமநிலையைப் பாதுகாக்கவே (அவசியம் ஏற்பட்டபோது), 2ஆம் ஃபிலிப், 14ஆம் லூயி, முதலாம் நெப்போலியன், 2ஆம் வில்கம் ஆகியோருடன் போரிடும்படி ஆயிற்று. அதற்காக வேண்டியே நெப்போலிய சகாப்தத்தில் ஃபிரான்சுக்கு எதிராக ரஷ்யாவிடமிருந்தும், முதல் உலகப் போரில் செர்மனிக்கு எதிராக ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளிடமிருந்தும், 2ஆம் உலகப் போரில் ஃபாசிஸ்ட்டு முக்கூட்டிற்கு எதிராக மீண்டும் அவைகளிடமிருந்தும் பிரிட்டன் உதவிபெற வேண்டியதாயிற்று. ஆனால், இக் (பொன்னான) குறிக்கோளை அது 1930—40-ல் மறந்துவிட்டதும், 1950—60-ல் மீண்டும் அடைய முடியாதவாறு அது கைநழுவவிட்டது. எவ்விதம், ஏன் இது ஏற்படலாயிற்று என்பது நம் காலத்தில் பிரிட்டிஷ் அரசியல் தந்திரத்தை சீர்தூக்கிப் பார்ப்பவர் அனைவர்க்கும் ஒரு மாற்றமாகவே தோன்றும்.

1918-ல் செர்மனிமீது கிட்டிய வெற்றி ஐரோப்பாக் கண்டத்தில் சக்திச் சமநிலையை மீண்டும் உருவாக்கியது. ஃபிரெஞ்சு முகாமின் ஆதிக்கத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் அடிக்கடி குலைத்துவந்தது. என்றாலும், அவ்வாதிக்கத்தைத் தன் நாட்டு நலன்களுக்கு இடையூறுக் கருதவில்லை. அவ்வாறு கருதாததும் சரியே. தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஃபிரான்ஸ் பிரிட்டிஷ் உதவியை வேண்டி நின்றபோது, லண்டனின் கொள்கை வகுப்பாளர்—தொழிற்கட்சி

யினரும் சரி, பழமைவாதியினரும் சரி—இருதரப்பினருமே விலகிச் சென்றுவிட்டனர். ஐரோப்பாவை எந்த ஒரு நாடும் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவராதவரை, பிரிட்டன் 'தலையிடாக் கொள்கை'யைப் (isolationism) பின்பற்றுவதில் தவறென்றுமில்லை என்ற கருத்தையே அவர்களின் இந்த நடத்தை உணர்த்தாமல் உணர்த்திற்று. ஐரோப்பிய நிலைமை பிரிட்டன் நினைத்ததுபோல் இருந்தவரை இக் கருத்தும் சரியானதாகவே விளங்கிற்று. ஆனால், ஹிட்லரின் ரெய்ச் (செர்மனி) ஐரோப்பாவைத் தன் குடைக்கீழ்க் கொண்டுவர மும்முரமாக ஈடுபட்டதும், இக் கருத்துத் தவருனதாக சொல்லப்போனால், கேடு நிறைந்ததாகவே ஆகிவிட்டது. ஏனெனில், பிரிட்டனில் 1930—40-ல் பதவியிலிருந்த டோரி அரசாங்கங்கள் அனைத்தும் ரெய்ச்சின் நோக்கத்தை அறியத் தவறி டானிங் வீதி எடுத்த ஒவ்வொரு முடிவும் செர்மன், இத்தாலிய வல்லினைப்புக்கு (aggrandisement) உதவியாகவும், ஃபிரான்ஸ், பிரிட்டன் கிழக்கத்திய நேசநாடுகள் ஆகியவற்றின் வலிமையைக் குலைப்பதற்கு ஏதுவாகவும் அமைந்தது. அவ்வாறிருந்தும் பிரிட்டிஷ் தலைமையமைச்சர் ஸ்டான்லி பால்டுவின் (1935–37), நெவில் சேம்பர்லின் (1937–40) ஆகிய இருவருமே சீசர்களின் 'மண்ணாசையைத் தணிக்கும்' இக் கொள்கையை வெகு மும்முரமாகக் கடைப்பிடித்து வந்தார்கள். அதில்தான் தங்கள் நாட்டிற்கு நன்மை இருப்பதாகவும் நினைத்தார்கள். செர்மனியும் ரஷ்யாவும் ஒன்றுக்கொன்று சக்தியைப் பொறுத்தமட்டும் 'சமமாகிவிடும்' எனவும், அதன் பின்னர் அவை ஃபிரான்சுடன் ஒன்றுக்கொன்று எதிராகத் தம் வலிமை இழந்து தட்டுக்கெட்டுப்போகும்வரை போர்புரிவதில் ஈடுபடும் எனவும், அதில் பிரிட்டன் தலையிடாமல் நடுநிலைமையுடன் விளங்கினால் அது தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும், அதுவே நாட்டிற்குப் பெரிய நன்மையாக முடியும் எனவும் அவர்கள் கருதினார்கள். ஆனால், இந்த நினைப்பு நனவாகவில்லை. அவர்கள் கருத்துப் பலிக்கவில்லை. அவர்கள் கடைப்பிடித்துவந்த கொள்கை பின்னால் பிரிட்டனின் தற்கொலையில் சென்று முடியும் நிலையை உண்டாக்கிற்று. அது பிரிட்டன், காமன்வெல்த், மற்றும் பிரிட்டிஷ் சாம்ராச்சியம் ஆகியவற்றின் புகழுக்கே இழுக்கைத் தேடித்தரும் பொருத்தமற்ற கொள்கையாகவும் மாறியது.

இக்கால அரசியல் மேதைகள், அரசியல் தந்திரிகள், சூழ்ச்சிக்காரர்கள் ஆகியோருள் அறிவுடைமையுடன் விளங்கிவந்த இவர்கள் எப்படி இந்த அழிவுக் கொள்கையைப் பின்பற்றினார்கள் என்ற வினா எழுகிறது அல்லவா? இதற்குரிய விடைபற்றிப் பல்லாண்டுக் காலம் கருத்து வேற்றுமை நிலவிவருகிறது; இனியும் நெடுநாள் நிலவிவரும். ஏனெனில், பிரிட்டிஷ் தலைவர்கள்கூட நடப்பு அரசியலின் பண்டைக் கட்டளையை என்றுமே மறந்ததில்லை. தங்கள்

மனத்திலிருக்கும் பொருளை மறைக்க வார்த்தைகளைப் பிரயோகிக்கச் சொல்வதே அக் கட்டளை. எளிமையானதும் உண்மைக்கு அருகில் வரக்கூடியதுமான விடை யாதெனில், 1930—40-ல் பிரிட்டிஷ் கொள்கையை வகுத்துவந்த டோரி கட்சியைச் சேர்ந்த செல்வர்களும் வர்த்தகப் பிரமுகர்களும் இத்தாலி, சேர்மனி, ஸ்பெயின் ஆகியவற்றில் நிலவிவந்த ஃபாசிஸத்தைக் கண்டு அது உண்மைக்கே கம்யூனிசத்திற்கு எதிரான 'பாதுகாப்பு' என்று அவர்கள் வியந்து பாராட்டியதும், நாசி ஆக்கிரமிப்பு மேலை வல்லரசுகளை அணுக முடியாமல் அதைக் கிழக்குத் திசைப் பக்கம் திருப்பிவிடலாமென்று அவர்கள் மனக்கோட்டை கட்டியதுமேயாகும். 'அமைதியை'[1] நிலைநாட்ட இக் கொள்கை இன்றியமையாதது என்று சொல்லி மக்களின் ஆதரவு அதற்குத் தேடப்பட்டது.

[1] 1921ஆம் ஆண்டிலேயே வெர்செயலஸ் உடன்படிக்கைக்குமுன் பொலினி விருந்த பிரிட்டிஷ் தூதர் வைகவுண்ட் டி ஆபர்னன் இக் கருத்தை உரைத்தார். 'ஒரு தூதரின் நாட்குறிப்பு, வொசெய்லஸ் முதல் ரபாலோ வரை, 1920—22' (மீயூயார்க், டிபின்டே, 1929), பக். 21 உடன் ஒப்பிடவும். இக் கருத்தின் அடிப்படைக் காரணத்தைக் கீழ்வரும் மேற்கோள்கள்மூலம் விளக்குவோம்.

1934-ல் திரு. எல். லாட்டன் 'அரைமாத ஆய்வுரையில்' பின்வருமாறு எழுதினர். 'முன்பெல்லாம் சேர்மன் அரசியல் வல்லுநர்கள் மேற்கை, மேலை யுலகங்கள் இரண்டின்மீதும் கவனத்தைச் செலுத்திவந்தார்கள். ஆனல், ஹிட்லரோ இன்று கிழக்கில் மட்டுமே தன் பார்வையைச் செலுத்திவருகிறர்..... கிழக்கு ஐரோப்பிய நிலப்படத்தைப் பார்ப்பவர் அனைவரும், மற்ற நாடுகளைப் பலியிட்டு சேர்மன்-போலாந்திய சமரசம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதை நன்கறிவர். ஜுக்ரெயினை மேலை ஐரோப்பிய முறைக்குள் கொண்டுவந்துவிட்டு, ரஷ்யாவைக் கீழையுலகுடன் தள்ளிவிடும் ஆசை நிச்சயமாக இருந்துவருகிறது..... ஜுக்ரெயினும் ஒரு ஜனநாயகக் கூட்டாட்சியின் அங்கமாகிவிட்டால். அத்துடன் பல நாடுகளைக்கொண்ட ஒரு குழுவும் தோன்றிவிடும்; அத்துடன் கிரேட் பிரிட்டன் நட்புறவு கொண்டாடும் என்றும் நம்பப்படுகிறது. கிழக்கு ஐரோப்பாவில் அத்தகைய குழு ஒன்று எப்பொழுதோ ஏற்பட வேண்டியது.'

முன்னாள் குடியேற்ற விவகார அமைச்சர் திரு. எல். எஸ். அமரி 'முன்நோக்குக் கருத்து' (1935) என்ற இதழில் பின்வருமாறு எழுதினர்: 'ஐரோப்பாவில் அமைதி நிலவவேண்டுமாயின், முதன்முதலில் சேர்மனியின் படைக்கல விவகாரம் அதனுடையதேயன்றி வேறெந்த நாட்டின் விவகாரமுமன்று என்ற உண்மையை அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். (பக். 71)..... சர்வதேசச் சங்க சாசனத்தை, குறிப்பாக சங்கத்தின் உயர்-அரசுக் (Super-State) கொள்கையைத் (விதி 10, 16) திருத்தும் நேரம் வந்துவிட்டது. ... போர் இன்றியமையாக் கொள்கை பகுத்தறிவற்ற கொள்கை என்பதில் சந்தேகமில்லை (பக். 283)..... ஐரோப்பிய நாடுகளில் நாமும் ஒரு நாடு என்று நாம் எண்ணவில்லை (பக். 285)..... கிழக்கு சைபீரியாவில் சப்பானின் ஆதிக்கத்தைத் தடுப்பது நம் பொறுப்பு அன்று (பக். 288).'

பல சுரங்கங்கள், பெரும் பண்ணைகள் ஆகியவற்றின் உரிமையாளியான லண்டன் டெரியின் கோமகன (Marquess) தன் கூட்டாளிகள் கருத்தினின்றும் வேறுபட்டார். அவர் தனது கருத்தை டெய்லி மோட்டி, திரு. ஜி. வார்டு பிரைஸ் ஆகியோருடன் பின்வருமாறு தெரிவித்துள்ளார். அதாவது:

'ஃபிரான்சுடன் நாம் கொண்டிருக்கும் தொடர்பு காரணமாக, நம் வெளி விவகாரக் காரியாலயம் (Foreign Office) கம்யூனிசம், பால்சிவிஸம் ஆகியவற்றுடன் ஏறபடும் தொடர்புகளை மன்னித்துவருகிறது. அதனல்தான் அது சேர்மனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளில் கம்யூனிசத்திற்கும் பால்சிவிஸத்திற்கும் இருக்கும் கடுமையான எதிர்ப்பைக்கூடப் பொருட்படுத்தாது இருந்துவருகிறது. உலகப் புரட்சியைத் தோற்றுவிக்கும் நோக்கத்தில் தற்கால அரசாங்க முறைகள் அனைத்திலும் உள்நாட்டுக் கொந்தளிப்பைக் கொண்டுவரப் பாடுபட்டு உலக

அரசியல் வலிமை விளையாட்டில் ஒரு கொள்கையின் வெற்றி அதன் விளைவுகளைப் பொறுத்திருக்கிறதேயன்றி அதன் நோக்கங்களையோ, நம்பிக்கையையோ அன்று. 1930—40-வரை பால்டுவின், சேம்பர்லின், சைமன், ஆலிபாக்ஸ், ஹோர் ஆகியோர் பின்பற்றி வந்த கொள்கை ஐரோப்பாவை செர்மனி கைப்பற்றப் பெரிதும் துணை புரிந்தது. அதனேடல்லாமல் பிரிட்டனின் உயிருக்கே உலைவைத்து விட்டது. நார்மன் படையெடுப்புக்குப் பின் அந்நாடு இதுபோல் ஒரு பேரிடரை எதிர்நோக்கியதே இல்லை. அச்சு வல்லரசுகளை எதிர்ப்பதற்குத் தன்னுடன் சேர்ந்து உயர் நட்புக் கூட்டுச் செய்ய முன்வருமாறு ரஷ்யா விடுத்த அழைப்பிற்கு பிரிட்டன் மட்டும் இணங்கியிருந்தால், இந்தப் பேரிடரைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், இதைச் செய்ய டோரிக் கட்சித் தலைவர்கள் அறவே விரும்பவில்லை. செர்மனியின் வலிமையைவிட ரஷ்யாவின் வலிமை பெருகி விட்டால், அது தன் நாட்டுக்குப் பெருத்த கேட்டை விளைவித்துவிடும் என்று அவர்கள் நினைத்ததே இதற்குக் காரணம். இக் கொள்கை ஏட்டளவிலும் நீண்ட காலத்தைப் பொறுத்தமட்டும் உகந்ததாகத் தோன்றியது. ஆனால், அது சின்னாட்களிலேயே செர்மனியும் ரஷ்யாவும் ஓர் உடன்பாட்டுக்கு வர வழிவகுத்தது. இக் கொள்கையால் ஒரு போரே மூண்டுவிட்டது எனலாம். அதன் தொடக்கத்தில் செர்மன் படையெடுப்பு பிரிட்டனை அச்சுறுத்தி வந்தது. போரின் இறுதியில் ஐரோப்பாவின் பெரும்பகுதி ரஷ்ய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1940, மே, 10ஆம் நாள் சேம்பர்லின் பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். அப்போது செர்மன் படையினர் கீழைநாடுகள்மீதும் ஃபிரான்சின் மீதும் படையெடுத்துக்கொண்டிருந்தனர். 1940, நவ. 9ஆம் நாள்

மெங்கும் பரவியிருக்கும் கோட்பாடு பால்ஷிவிஸம். செர்மனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகள் பால்ஷிவிஸத்தைக் கடுமையாகத் தாக்கிவருகின்றனவென்றால், அது அவர்களின் உள்ளப்போக்கு. அப் போக்கை இந் நாடு இன்னும் உணர்ந்து மதிக்க முன்வரவில்லை..... ஸ்பெயினின் இன்றைய நிலைமை கம்யூனிஸ்ட்டுகளின் கரவுச் செயலினால்தான் ஏற்பட்டது என்ற உண்மையை நாம் உணரத் தவறி விட்டோம். இரண்டு ஆண்டுகட்கு முன்னர் ஹெர் ஹிட்லர் என்னிடம் நேரடியாகக் கூறிய அளவுக்கு இன்று ஃபிரெஞ்சு சட்டசபையில் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதித்துவம் உயர்ந்துவிட்டது. இவ் உண்மையை நாம் மறந்துவிட்டு, ஃபிரெஞ்சு நாட்டு உழவர்கள் பழைமைவாதிகள் ஆகையால் ஃபிரான்சின் நகர்ப்புற மக்களுக்கிடையில் பால்ஷிவிஸம் கேடு விளைக்கும் அளவுக்குப் பரவ இடமில்லை என்று ஆறுதல் அடைந்துவருகிறோம். பெல்ஜியத்தில் பால்ஷிவிஸத்தின் அறிகுறிகள் தென்படுகின்றன. செர்மனியோ தான் பால்ஷிவிச நாடுகளால் சூழப்பட்டிருப்பதையும், அதனால் கடுமையான இராணுவ, பொருளாதார வீளைவுகள் ஏற்பட இருப்பதையும் நன்கு உணர்ந்துவருகிறது. ஆனால், நாமோ இவற்றையெல்லாம் கண்டும் அமைதியுடன் இருந்துவருகிறோம். 'தலையிடாக்கொள்கை'யின்மீது நாம் ஸ்பெயினில் கம்யூனிஸ்ட்டுகள் பக்கம் சாய்ந்து வருகிறோம். பெல்ஜியமும் ஃபிரான்சும் அப்படியே நடந்துவருகின்றன. இந் நிலையில் செர்மனி, இத்தாலி ஆகியவற்றின் வலிமையும் பெருமையும் உயர்ந்துவரும்போது, அவைகளின் முரட்டுத்தனத்தைக் கண்டு நாம் வியப்படைந்துவருகிறோம். (பக். 21—22)..... கம்யூனிசத்திற்கு எதிராக நாம் ஏன் செர்மனியுடன் சேரக்கூடாது என்று எனக்குப் புரியவில்லை..... கம்யூனிச எதிர்ப்பரங்கு முன்போல் (இன்றும்) இன்றியமையாததாகும் (பக். 129)" ('நாமும் செர்மனியும்', 1938).

சேம்பர்லின் இறைவனடி சேர்ந்தார். நான்கு ஆண்டுகளாகவே சர்ச்சில் தம் நாட்டவருக்கு இக் கேடுகளைப்பற்றி வீணில் எச்சரிக்கை செய்துவந்தார். 1940-க்குப் பிறகு அவர் தம் நாட்டின் தலைமை பூண்டார். அவரது ஊக்கம் பொருந்திய தலைமையின்கீழ் நாடு தனக்கு வந்த கேடுகளை 'இரத்தம் சிந்தி, அரும்பாடுபட்டு, நெற்றி வேர்வை நிலத்தில் விழக்' கடுமையாக உழைத்து எதிர்நோக்கிற்று. சர்ச்சிலின் சொந்த வார்த்தைகளில், 'இதுவே அவர்களின் சிறப்பான நேரம்' என்று பிரிட்டிஷாரைப் பார்த்துப பிறநாட்டு மக்கள் கூறினர். பிரிட்டனின் இறுதி வெற்றியின் மூலச் சிற்பியாக அவர் விளங்கினர். என்ருலும் ரஷ்யாவை ஹிட்லர் தாக்கிய பெருந்தவறும், அமெரிக்க உதவியுமே அவ் வெற்றி ஏற்படக் காரணமாய் அமைந்தன. 1940-ல் சர்ச்சில் தம் நாட்டவர்க்கு விடுத்த எச்சரிக்கை அப்படியே உண்மையாயிற்று. எனினும், அவரது நல்ல நம்பிக்கைகள் முற்றிலும் நனவாகவில்லை. அவர் நம்பிக்கையுடன் சொன்னர்: 'நாம் செல்லும் பாதையில் சாவும் துன்பமுமே நமக்கு வழித் தோழராவர்; கடும் உழைப்பே நம் ஆடையாகும்; விடாமுயற்சியும் வீரமுமே நமது கவசமாகும். நாம் மீண்டும் ஒன்றுபடவேண்டும்; அஞ்சா நெஞ்சுடன் மேற்செல்லவேண்டும்; அசையா நம்பிக்கை யுடனும் மனவுறுதியுடனும் இருக்கவேண்டும். நம் பண்புகளும் செயல்களும் நமக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக ஆகும்வரை அது இருள்சூழ் ஐரோப்பா முழுதும் ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டும்.'

வறுமையில் அரசியல்: பிரிட்டன் மற்றவர்களை மனவிரக்க மின்றித் தனக்குக் கட்டுப்படுத்தியும், பொதுநோக்குக் கொள்கைகளை உருவாக்கியும் வந்தது என்று மேலே பார்த்தோம். அந்நாட்டின் நிலைமை 1945-க்குப் பின் உலக விவகாரங்களில் வெறும் பொருளாதார நிலைமையாகவே மாறிவிட்டது. பச்சையாகச் சொல்லவேண்டு மானால் பிரிட்டன் திவாலாகிவிட்டது எனலாம். எனினும், பாரிஸ், ரோம் போன்ற தலைநகரங்களில் நடக்காதவை இங்கு சாத்திய மாயிற்று பொதுத்துறைச் செலவுகளை (public expenditure) சரிக் கட்டப் போதுமான வரிவசூல் (ஓரளவு) செய்யப்பட்டது. பெரும் பாலான பிரிட்டிஷ் தொழில் நிலையங்களும் இல்லங்களும் அவைகள் அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய தொகையைக் கொடுக்கும் நிலையில் இருந்தன. இந்நிலையில் பிரிட்டனின் வறுமைபற்றிப் பலர் குழப்பமடையலாயினர். இதற்கு அவ்வமயம் (பொரு ளியல், அரசியல் வட்டாரங்களில்) நிலவிவந்த சில சொற் ருெடர்களே காரணம். குறிப்பாக, 'ஏற்றுமதிக் குறைபாடு', 'இறக்குமதி உபரி', 'டாலர் குறைவு', 'செலவாணிச் சமநிலை இன்மை' (exchange inbalance) போன்ற பதங்கள் பிரிட்டனின் வறுமையை உணர்த்தப் பேச்சு வழக்கில் கையாளப்பட்டு வந்தன. ஆனல்

பிரிட்டனின் உண்மையான பொருளாதார நிலைமை யாதெனில், வெளிநாடுகளில் விற்பனையாகும் அதன் உற்பத்திப் பொருள்கள், அது செய்த உணவுப் பண்டம், கச்சாப் பொருள் இறக்குமதியைச் சரிக்கட்டக்கூடப் போதுமானவையாக இல்லை. பிரிட்டிஷாரின் வாழ்க்கைத் தரத்தைக்கூடப் பேணிக்காக்கப் போதவில்லை. ஆனால், அம் மக்களோ, தங்கள் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கை பூண்டிருந்தார்கள். ஏட்டளவில் எளிமையாகவும் நடைமுறையில் மிகவும் கடினமாகவும் விளங்கிய இச் சிக்கல்களின் தீர்வு விற்பனையைப் பெருக்குவதிலும், தேவையைக் குறைத்துக்கொள்வதிலும், குறைந்த வாழ்க்கைத் தரத்தை ஒப்புக்கொள்வதிலும், அயல்நாட்டுத் தானத்தின் மூலம் வாழ்க்கைத் தரத்தைக் காப்பாற்றுவதிலுமே இருந்தது. இவைகளே நாட்டின் வறுமையைப் போக்கும் எனக் கருதப்பட்டது.

வறுமையின் காரணங்கள் மிகவும் தெளிவாயின. இரண்டாம் உலக மகா யுத்தம், போருக்கு முன் இருந்த பிரிட்டனின் ஏற்றுமதி அளவை 30 சதவீதத்திற்குக் குறைத்துவிட்டது. மேலும், பிரிட்டிஷ் முதலீட்டில் ஐந்தில் நான்கு பாகம் வெளி நாடுகளில் இருந்தது. அதுவும் போரினால் தீர்ந்துபோய்விட்டது. சண்டையின்போது வெளிநாடுகளுக்கு பிரிட்டன் கொடுக்க வேண்டிய கடன் தொகை 760-லிருந்து 3,335 மில்லியன் பவுனுக்கு உயர்ந்தது. கடன்-குத்தகைத் திட்டம் திடீரென்று 1945, ஆகஸ்ட்டு மாதம் கைவிடப்பட்டதும், பிரிட்டனுக்குப் பெருத்த சங்கடம் ஏற்பட்டது. இதையுணர்ந்த யு.எஸ்.ஏ. பிரிட்டனுக்கு டிசம்பர் மாதம் 3,750,000,000 டாலர் மதிப்புள்ள கடன் வழங்கியது. அத் தொகை 2 சதவீத வட்டியில் 1951-லிருந்து ஆரம்பித்து கி.பி. 2001-க்குள் செலுத்தப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. 1920—30-ல் இழைக்கப்பட்ட நிதிக் கொள்கை சம்பந்தமான தவறுகள் மறு முறையும் வீணில் இழைக்கப்பட்டன. அக் கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்கும் தேவையே இல்லைதான். பிரிட்டனின் தருமசங்கடத்தை நன்குணர்ந்த யு.எஸ்.ஏ. அந் நாட்டுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்திக்கொண்டு மார்ஷல் திட்டத்தின் கீழும், அதற்கடுத்தாற்போல் மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர உதவி ஏஜென்சி திட்டத்தின் கீழும் சுமார் ஒரு பில்லியன் டாலர் மதிப்புள்ள தொகையை அள்ளிக் கொடுத்தது. இவ்வாறு பல முறைகளைக் கையாண்டு பிரிட்டிஷார் தம் பொருளாதாரச் சிக்கலுக்கு வழி காண ஊக்கமுடன் முயன்றுவந்தார்கள். அதே நோக்குடன் 1949, செப். 19ஆம் நாள் பிரிட்டிஷ் நாணயத்தின் மதிப்பை 30·5 சதவீதம் குறைத்தார்கள். முயற்சி எதிர்பார்த்த பலனளித்தது. பிரிட்டிஷ் பொருளாதார விளக்கப்பட்டியில் ஏற்ற இறக்கம் தோன்றியது. எனினும், ரஷ்ய-அமெரிக்கக் கெடுபிடிப் போரால்

உண்டாகிய உலகச் சூழ்நிலையில் இந் நூற்றாண்டு நடுவில் பிரிட்டிஷ் பொருளாதாரம் செழுமையாக விளங்க முடியவில்லை.

அகமும் புறமும் பிரிட்டிஷ் அரசியல் வறுமையுடன் போராட வேண்டியிருந்தது. என்ன செய்தும் வறுமைப் பேயை நிலையாக ஓட்டியடிக்க முடியவில்லை. இந்நிலையில் 1945, ஜூலை 5ஆம் நாள் பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெற்றன. அது பிரிட்டிஷ் வரலாற்றிலேயே பத்து ஆண்டுகட்குப் பின் முதல் தடவையாக நடந்த தேர்தலாகும். அதில் தொழிற்கட்சிக்கு 12,000,000 வாக்குகளும், அதாவது கீழ்சபையில் 393 இடங்களும், கன்சர்வேடிவ் கட்சிக்கு 9,000,000 வாக்குகளும், அதாவது 198 இடங்களும், தாராளவாதிக் கட்சியினர்க்கு 2,330,000 வாக்குகளும் அதாவது 24 இடங்களும் கிடைத்தன. எனவே, பிரிட்டனில் நன்மைக்கோ தீமைக்கோ விகிதப் பிரதிநிதித்துவம் ஏற்பட முடியாமற் போயிற்று. கர்னல் கிளெமென்ட் அட்லி தலைமையமைச்சரானார். வாணிபச் சங்கத்தினரான எர்னஸ்ட்டு பெவின் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். சனநாயக சோசியலிசப் பாதையில் செல்ல உறுதி பூண்ட காபினட் முதலில் பாங்க் ஆஃப் இங்கிலாந்தை தேசிய மயமாக்கிற்று (nationalise). அடுத்தாற்போல் நிலக்கரி, சிவில் வானூர்திப் போக்குவரத்து (civil aviation), இருப்புப்பாதை, மற்றப் போக்குவரத்து, இரும்பு, எஃகு தொழில்களை இவ் வரிசைக் கிரமத்தில் தேசியமயமாக்கிற்று. இவ்வாறுக, பொருளாதாரத்தின் முக்கியமான (key) பகுதிகள் சோசியலிசமயமாக்கப்பட்டன. மற்றவை தனியார் துறையில் விடப்பட்டன. 'நேர்மை' என்ற பெயரில் வருமானங்கள் சமமாக்கப்பட்டன. அனைவர்க்கும் இலவச மருத்துவ உதவியும், பல் சம்பந்தமான வியாதிகளுக்கான உதவியும் அளிக்கப்பட்டது. பிறப்பு முதல் இறப்பு வரை அனைவர்க்கும் முழுப் பாதுகாப்புக்கு வகை செய்யப்பட்டது.

பழைய நிலவுடைமைக்காரர்களும் பணக்காரர்களும் சோசியலிசத்தைக் கடுமையாகத் தாக்கிவந்தார்கள். ஆனால், 'கீழ்த்தர வகுப்பினரோ' அதைப் பெரிதும் வரவேற்றனர். ஏனெனில், அவர்களுக்கு அதனால் பெருத்த பலன் ஏற்பட்டது. எனினும், பிரிட்டிஷ் பொருளாதாரத்தின் தலைவலி நீங்கினபாடில்லை. ஏனெனில், உள்நாட்டில் 'சோசியலிசம்' அல்லது 'முதலாளித்துவத்தைக்' கடைப்பிடித்துத் தன் வெளியுலகச் சிக்கலுக்குத் தான் வழிகாண முடியாது என்பதை பிரிட்டன் உணர்ந்தது. பிரிட்டனின் பொருளாதார நோயைத் நீர்க்க, சிக்கல்களுக்குத் தீர்வு காண, அரசாங்கச் செலாவணிக் கட்டுப்பாடுகள், சாதன, உழைப்பாளிப் பங்கீடு, விலை நிர்ணயம், பங்கீடு, ஏற்றுமதி உதவித் தொகைகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆகிய நடவடிக்கைகள் இன்றியமையாதனவாயின.

மேலும், கீழ்ச்சபை பெரும்பான்மையினரில் வகுப்புச் சலுகைகள், அவர்கள் கொள்கை இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பொதுத்துறைப் 'பொருளாதாரத் திட்டமும்' அவசியமாயிற்று.

1950, பெப்ரவரி 23ஆம் நாள் மீண்டும் தேர்தல் நடைபெற்றது, அதில் தொழிற்கட்சியினரின் 315 இடங்களும், கன்சர்வேட்டிவ் கட்சியினர் 297 இடங்களும், தாராளவாதிகள் 10 இடங்களும் பெற்று வென்றனர். தம் கட்சிக்கு உறுதியான பெரும்பான்மை நிலை கிடைக்காமற்போகவே 1951, அக்டோபர் 25ஆம் நாள் அன்று மறு தேர்தல் நடத்துமாறு அட்லி வாக்காளர்களைக் கேட்டுக்கொண்டார். அதில் தொழிற்கட்சியின் 48·7 சதவீத ஓட்டுகளும், கன்சர்வேட்டிவ் கட்சினர் 48 சதவீத ஓட்டுகளும் பெற்றனர். எனினும் கன்சர்வேட்டிவ் கட்சியினர் 321 இடங்களைப் பிடித்துக்கொண்டனர்; தொழிற்கட்சியினர் 295 இடங்களையே பிடிக்க முடிந்தது. தாராளவாதிகட்கு 6 இடங்கள்கிடைத்தன. சர்ச்சில் மீண்டும் தலைமையமைச்சரானார். ஈடன் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆனால், அரசாங்கத்திற்கு வாக்காளரின் சரிசம ஆதரவு கிடைக்கவில்லை.

பிரிட்டிஷ் அரசியல் தந்திர வேதனை : பிரிட்டனின் பொருளாதார வேதனையை மேலே கண்டோம். அத்தகைய சூழ்நிலையில் யு.எஸ்.எஸ்.ஆரும் பிரிட்டிஷ் பொருளாதாரத்திற்கு உதவியளித்துக் கைதூக்கிவிட முன்வரவில்லை. ஆதலால், வேறு வழியின்றி பிரிட்டன் வெளிநாட்டுக் கொள்கையில் அமெரிக்காவுடன் கைகோக்க வேண்டியதாயிற்று. கிழக்கு ஐரோப்பாமீது சோவியத் ஆதிக்கத்தைத் தடுக்கவோ, குறைக்கவோ சர்ச்சில் பெரிதும் முயன்றார். அதற்கான சூழ்ச்சிபற்றியும் போரின்போது அவர் பெரிதும் வாதித்தார். ஆனால், அவர் முயற்சி பலிக்கவில்லை. இதனை அறிந்ததும் வாஷிங்டன் சம்பந்தம் இல்லாமலேயே மாஸ்கோவுடன் உடன்படிக்கை செய்ய முயன்றார். சிக்கல்கள் கடுமையாவதற்கு முன்பாகவே இம் முயற்சியின் காரணமாக 1942, மே 26ஆம் நாள் ஈடனும் மொலெட்டோவும் 20 ஆண்டு நட்புடன்படிக்கை யொன்று வரைந்து முடித்தனர். அதன்கீழ் சேர்மனிக்கு எதிராக பரஸ்பர உதவியளிக்கவும், போர் முடிந்தபின் ஒப்பந்த நாடுகளில் ஒன்று ஐரோப்பாவில் அதனுடன் ஆக்கிரமிப்பு வேலையில் ஈடுபட்டிருக்கும் 'சேர்மனியுடனே அன்றி மற்ற நாடுகளுடனே சண்டை செய்ய நேரிடுங்கால்' அதற்கு மற்றக் கட்சி உதவி செய்வதற்கும் வழி செய்யப்பட்டது.

மேலும், உடன்படிக்கைத் தரப்பினர் இருவரும் 'பிற நாட்டுப் பகுதிகளை வலுவந்தமாக இணைத்துக்கொள்வதில்லை' யென்றும், 'பிறநாட்டு உள் விவகாரத்தில் தலையிடுவதில்லை' யென்றும் உறுதி பூண்டனர். அன்றியும், 'ஒரு கட்சிக்கு எதிராக மற்றக்

கட்சி நேசவுடன்படிக்கையோ அல்லது கூட்டோ செய்வதில்லை' என்றும் உறுதி பூண்டனர்.

ஆனால், இவ் உறுதிப்பாடுகளனைத்தும் ஒருபுறம் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியன் பின்பற்றிவந்த கொள்கையாலும், மற்றொருபுறம் அக் கொள்கைக்கு எதிராக அமெரிக்கா எடுத்த நடவடிக்கைகளாலும் பயனற்றுப் போயின. பைரன்சுடன் பெவினும் சேர்ந்து சோவியத் யூனியன் புனிதமான (உடன்படிக்கைப்) பொறுப்புகளினின்றும் நழுவிவிட்டதென்று 1945, ஆகஸ்ட்டு மாதம் கடுமையாகத் தாக்கினர். கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ஆதிக்கத்திற்கு அறைகூவல் விடுத்தார்கள். 'நாம் எதேச்சாதிகாரம் ஒரு ரூபம் விட்டு மற்றொரு ரூபம் எடுப்பதை அவசியம் தடுக்கவேண்டும்' என்று இருவரும் முழங்கினர். தொழிற் கட்சியைச் சேர்ந்த இடதுசாரி கலகக்காரர்கள், காபினட், 'டோரி' (கன்சர்வேடிவ்) வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதாகக் குற்றஞ்சாட்டினர். ஆனால், உடனடியான விளைவொன்றும் ஏற்படவில்லை. 1946, மார்ச்சு, 5ஆம் நாள் ஃபுல்டன் என்னுமிடத்தில் ஜனாதிபதி ட்ரூமென் முன்னிலையில் சர்ச்சில் சோவியத் யூனியனைத் தாக்கிப் பேசினார். கோபில்சுக்குப் பிடித்தமான சோவியத் 'இரும்புத் திரை' என்ற பதத்தை அவர் அனுமதியின்றியே பிரயோகித்தார். ஐரோப்பாவில் ஆடும் 'சோவியத் இரும்புத் திரையைக்' கடுமையாகத் தாக்கிப் பேசினர். மேலும், சுதந்திரத்தையும் கிறித்துவ நாகரிகத்தையும் பேணிக் காக்க ஆங்கிலோ-அமெரிக்கக் கூட்டு இன்றியமையாததென்றும் வாதித்தார். இதற்கு ஓராண்டு கழித்து 'ட்ரூமன் கொள்கை' மார்ஷல் திட்டம், டன்கர்க், பிரசெல்ஸ் உடன்படிக்கைகள், வட அட்லான்டிக் இராணுவ (பாதுகாப்பு) ஒப்பந்தம், கொரியாப் போர் இவையனைத்தும் அடுக்கடுக்காய் ஏற்பட்டன. இதற்கிடையில் பிரிட்டன், அமெரிக்கா, மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் நேசநாடாக சோவியத் மாறியது.

இக் கொள்கை ஒரு வகையில் பிரிட்டிஷ் சிக்கல்களைத் 'தீர்த்தது' எனலாம். ஏனெனில், பிரிட்டனுக்குத் தொடர்ந்து அமெரிக்க உதவித் தொகை கிடைத்துவந்தது. மேலும், ஐரோப்பா முழுவதையும் ரஷ்யா தனக்கு அடிமையாக்க முயலுங்கால், அமெரிக்க அரக்கனின் உதவி பிரிட்டனுக்குக் கிடைப்பதும் உறுதியாயிற்று. இருந்தாலும் பழைய சிக்கல்களைத் தீர்க்கப்போய் புதுச் சிக்கல்கள் முளைக்க ஆரம்பித்தன. 'வலிமை மூலம அமைதி' யென்ற அமெரிக்கக் கொள்கையின் இறுதிக் குறிக்கோள் பற்றி அமெரிக்கா சந்தேகத்தை எழுப்பியது. அதனோடல்லாமல் பிரிட்டனும் மேற்கு ஐரோப்பாவும் பெருத்த படை வலிமையுடன் விளங்கவேண்டும்

என்று ஒருதலைக்கு நின்றது. ஐரோப்பா முழுவதையும் சோவியத் இராணுவ ஆக்கிரமிப்பும் படையெடுப்பும் அச்சுறுத்தி வருகிறது என்ற அமெரிக்கக் கொள்கையை, ஒருசில பிரிட்டிஷாரே ஏற்க முன் வந்தனர். அதனினும் வெகுசிலரே அட்லாண்டிக் சமுதாயத்தினரைப் பாதுகாக்க முதலில் கம்யூனிச ஆதிக்கத்திலிருந்து கிழக்கு ஐரோப்பாவை 'விடுவிக்க' வேண்டும் என்ற கொள்கையை நம்பினர். அமெரிக்கக் கொள்கையின் பொறுப்பு, அறிவுடைமை ஆகியவைபற்றிப் பலர் சந்தேகம் கொள்ளலாயினர். செஞ்சீனாவுக் கெதிராக மேலை நாடுகள் போருக்குச் செல்வதை அனைவருமே எதிர்த்தனர். மேலும், அமெரிக்கத் திட்டம் அமைதியை நிலை நாட்டுவதற்குப் பதில், இறுதியில் இராட்சச வல்லரசுகட்கிடையே போரைத் தோற்றுவிக்கும்பட்சம் மேற்கு ஐரோப்பா முழுவதுமே போர்க்களமாகிவிடும் என்றும, அப்போது பிரிட்டன் செய்வ தொன்றுமின்றித் தவிக்குமென்றும், மேலும் அது இறுதியில் அழிந்தேபோகுமென்றும் அனைவரும் திடமாக நம்பினர். பிரிட்டிஷ் அணுசக்தி பௌதிகர் 1947 செப்டம்பர் 17ஆம் நாள் பின்வருமாறு கருத்துரைத்தார் : 'அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்வதால், (இங்கிலீஷ்) கால்வாய்த் துறைமுகங்களைக் கைப்பற்றக்கூடியதும் அணுகுண்டுகள் வைத்திருப்பதுமான வல்லரசு ஒன்றுக்கு எதிராகப் போர் மூளும்பட்சத்தில், இந் நாட்டால் (பிரிட்டனால்) ஒன்றும் செய்ய முடியாது. இப்போதைய முன்னேற்றத்தில் 50 ஏவுகணைகள், வி. 2 ஆயுதங்களுடன் ஏவப்பட்டால், அவை லண்டனின் ஜனத் தொகையில் நான்கில் ஒரு பாகத்தைக் கொன்று குவிப்பதோடல் லாமல் அது அந் நகரிலே எவரும் தங்கி வாழமுடியாதவாறு செய்துவிடும்' என்று எடுத்துரைத்தார்.

அச்சமூட்டும் இத்தகைய கூற்றுகள் பிரிட்டனை 'நடுநிலை' வழியிற் செல்லுமாறு செய்தன. கம்யூனிச எதேச்சாதிகாரம், பொருளாதார உதவிக்காக அமெரிக்காமீது சார்ந்திருத்தல் ஆகிய இரண்டும் கடுமையாக வெறுக்கப்பட்டு வந்தபோதிலும் இந் நாடு நடுநிலை வழி செல்வதே உகந்ததென்று தோன்றிற்று. மேலும் இந்த அச்சம் வாஷிங்டனை (பிரிட்டிஷ்) காபினெட் எச்சரிக்கவும், காபினெட்டைப் பாராளுமன்றம் எச்சரிக்கவும் செய்தது இப் போக்கை சர்ச்சிலின் பின்வரும் வார்த்தைகளின் வாயிலாக அறியலாம்.

1946, ஜூன் 5. 'இனியும் (எதிரி) நம்மை வெற்றிகொள்ள விடலாகாது. பிளவுபட்டு நிற்கும் உலகைவிட ஒற்றுமையுடன் திகழும் உலகமே மேல்; ஆனல், அழிந்தொழிந்துபோகும் உலகை விடப் பிளவுண்டு நிற்கும் உலகே மேல்'.

1948, சனவரி 23. 'காலதாமதம் ஆகுமுன்பே நமக்குள்ள விவகாரங்களை சோவியத் அரசாங்கத்துடன் தீர்த்துக்கொள்வதே போதை

நிறுத்தும் சிறந்தவழியாகும்...அதை விடுத்து நாம் வாளாவிருப்பின் விவகாரங்கள் தம் போக்கில் விஷம்போல் ஏறிக்கொண்டே போய்ப் பெருங்கேட்டை விளைத்துவிடும். அச் சக்திகள் ஓரளவை மீறிச் சென்றுவிட்டால், நம் கட்டுப்பாட்டிற்கு அப்பால் சென்றுவிடும்... எனவே, தனிமைக்கும் அமைதி முக்கியத்துவத்திற்கும் இடமளிக்கும் தூதியல் நடவடிக்கைகள்மூலம் விவகாரங்களுக்கு நிலையான முடிவு காண்பதே இப்போது நாம் செய்யவேண்டிய சிறந்த செயலாகும்.'

1950, மார்ச் 28. 'பயங்கர அழிவைப் பெய்யும் மற்றோர் உலகப் போர் ஏற்படும்... பரஸ்பர அச்சுறுத்தலுக்குப் பதிலாக அமைதிக்குச் சிறந்த அடித்தளம் ஒன்று அமையவில்லையே என்று அறநெறியாளர் வருந்துவர். ஆனால், என்னைப் பொறுத்தமட்டும் இந்த அடித்தளம் மட்டும் ஸ்திரமாக இருந்தாலே போதும். எனக்குத் திருப்தி ஏற்பட்டு விடும். ஏனெனில், அதன்மூலம் இவ் விவகாரங்களுக்கு ஓர் உலக உடன்பாடு காண்பதற்கு வேண்டிய நேரம் கிடைக்கும்.

இக் கருத்துகள் ஆர்னல்டு டாயின்பீயின் 'பிரதிநிதித்துவ மில்லாமல் அழிவில்லை' என்ற சுலோகத்தில் எதிரொலித்தது. மேலும், தொழிற்கட்சி உறுப்பினரும் இக் கருத்துகளை மும்மரமாக வலியுறுத்தலானார்கள். அதன் விளைவாக 1950 டிசம்பர் மாதம் அட்லி வாஷிங்டனுக்கு விஜயம் செய்து, அமெரிக்கா சீனமீது அணு குண்டுப் பிரயோகம் செய்யவோ, அன்றி பெய்ப்பிங்கிற்கு எதிராகப் போரில் இறங்கவோ நாடியிருக்குமாயின், அதனுடன் பிரிட்டன் ஒத்துழைக்கப்போவதில்லை என்று, ட்ரூமனிடம் ஐயம் திரிபறக் கூறினர். எனினும், அமெரிக்காவின் நெரிசல் தாங்கமுடியாமல், அவர் 1951, சன. 29ஆம் நாள் அடுத்த மூன்றாண்டுகளில் பிரிட்டிஷ் படைக்கலப் பெருக்கத்திற்காக 4,700,000,000 பவுன் (13,160,000,000 டாலர்) செலவிடத் திட்டம் போட்டிருப்பதாகத் தெரிவித்தார். அதனோடல்லாமல், சீனா ஓர் ஆக்கிரமிப்பு நாடு என்று ஐ. நா. வில் யு.எஸ். கொண்டுவந்த தீர்மானத்திற்கு முழு ஆதரவளித்தார். அதற்கிடையில் வெளிவிவகார அலுவலகத்தில் (Foreign Office) உடல்நலமில்லாதிருந்த எர்னஸ்ட்டு பெவினுக்குப் பதிலாக ஹெர்பர்ட்டு மோரிசன் (1951, மார்ச் 14ஆம் நாள்) நியமிக்கப்பட்டார். பெவின் ஏப்ரல் 14ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். அதற்கிடையில் மக் ஆர்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார் என்ற செய்தி பிரிட்டிஷார் அனைவருக்கும் சற்று நிம்மதியளித்தது. அச் செய்தியை அவர்கள் நாடு முழுதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அரசாங்கம் சமூகத் தொண்டுக்குப் பதிலாகப் படைக்கலக் குவிப்புக்கு முதலிடம் அளிக்க முடிவு செய்திருப்பதை உணர்ந்த தொழிற்கட்சி அமைச்சர் அனூரின் பெவானும், வர்த்தக போர்டின் (Board of Trade) தலைவரான ஹெரால்டு வில்சனும் அரசாங்கத்தின் இந்த முடிவுக்குத்

தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும்பொருட்டு 1951, ஏப். 22ஆம் நாள் காபினட்டிலிருந்து விலகிக்கொண்டுவிட்டார்கள். பெவான் 'வலியின்மை, சகிப்பின்மை, வெறுப்பு' ஆகியவற்றையும் 'தன்னைக் கட்டுப்படுத்த இயலாத அமெரிக்க முதலாளித்துவம்' மீது அரசாங்கம் சார்ந்திருப்பதையும் வன்மையாகக் கண்டித்தார். மேலும், அவர் 'அமெரிக்க அரசியல் தந்திரச் சக்கரம் நம்மை வெகுதூரம் இழுத்துக்கொண்டு செல்லுமாறு விட்டுவிட்டோம்' என்றும் தாக்கிப் பேசினர். அரசாங்கத்தின் படைக்கலச் செலவுத் திட்டம், 'நம்பத் தகாத குற்றம்' என்றும், அது 'ஏற்கெனவே உயிரற்ற ஓர் ஏடாகி விட்ட'தென்றும் கடுமையாகப் பேசினர். இடதுசாரிகளுக்கு எதிராக ஏற்பட்ட இக் கலகத்தை அட்லி காபினட் ஒருவிதமாகச் சமாளித்தது. ஆனால், தொழிற்கட்சிக்காரர்களுக்குள் கட்சி உட்பகையும் சண்டையும் புகைய ஆரம்பித்தன. பெவான் தலைமையில், அமெரிக்க சோசியவிச, அமைதித் திட்டம் கடுமையாக எதிர்க்கப்பட்டு வந்தது. மீண்டும் அதிகார பீடத்தில் அமர்ந்த சர்ச்சில் 1951, டிச. 6ஆம் நாள் படைக்கல பட்ஜட்பற்றிய பெவானின் கூற்றுத் 'தற்செயலாக' உண்மையாகிவிட்டதென்று ஒப்புக் கொண்டார். மேலும், படைக்கலங்கள்மீது செலவிடப்படவேண்டி யிருந்த தொகையைக் குறைக்க முடிவு செய்தார். கணிசமான அளவில் அமெரிக்க உதவி வந்துகொண்டிருந்தபோதிலும், 1952-ல் நிலவிவந்த நிலைமையால் அவர் இம் முடிவுக்கு வருவது இன்றியமை யாததாயிற்று.

இவ் விவகாரங்கள் குறித்துக் குழப்பமும் கருத்து வேற்றுமையும் 1952, பெப்ரவரி மாத இறுதியில் நிலவிவந்தன என்பது, சர்ச்சில் வாஷிங்டன் சென்று வந்ததும் தொழிற்கட்சியாளர் அவரைத் தாக்கி யதிலிருந்து தெரியவந்தது. கொரியப் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு, பின்னால் அதை எதிரிகள் மீறி நடப்பின், அவ்வமயம் பிரிட்டன் அமெரிக்காவுக்கு அளிக்கும் உதவி 'உடனடியானதாகவும், உறுதியானதாகவும், பயன்தரக்கூடியதாகவும்' இருக்கும் என்று அவர் (சர்ச்சில்) அமெரிக்கப் பாராளுமன்றத்தில் கூறினர். இக் கொள்கையை எதிர்த்தே தொழிற்கட்சியினர் அவரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர். சர்ச்சிலின் நோக்கம் யாதெனில், கொரியாவி லிருந்த ஐ.நா. படையினர்மீது சீனாவின் படைத் தளங்களிலிருந்து கடுமையான விமானத் தாக்குதல் ஏற்பட்டால், அவ்வமயம் மஞ்சூரியாமீது விமானத் தாக்குதல் செய்ய அட்லியும் மோரிசனும் 1951 மே மாதம் முடிவு செய்திருந்தனர் என்பதையும் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் முறிந்துபோகும்பட்சத்தில் சீனாவுக்கு எதிராகக் 'குறுகலான தாக்குதல்' செய்ய 1951 செப்டம்பரில் முடிவு செய் திருந்தனர் என்பதையும் அனைவரும் அறியவேண்டும் என்பதே.

இந் நூற்றாண்டு நடுவில் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்காவுக்கு ஆதரவு அளிப்பதைத் தவிர பிரிட்டனுக்கு வேறு வழியேயில்லை. ஏனெனில், அதை விடுத்தால் அது (பிரிட்டன்) அழிவு, அன்றி வறுமை, அன்றி இரண்டிற்குமே ஆளாகவேண்டியிருந்தது. ஆனால், அதே சமயத்தில், அது தன் விருப்பத்தினால் அவ்வாதரவை யளிக்கவில்லை. ஏனெனில் தன் நாட்டு நலன்களுக்கு முன்னிலையில் அமெரிக்கக் கொள்கைகள் அவ்வளவு உகந்ததாயில்லை. காரணம், அக் கொள்கைகள் கிழக்கு-மேற்கு வர்த்தகத்தை முடக்கி விட்டன; மேற்கு ஐரோப்பாவையும், காமன்வெல்த்தையும் நிரந்தரமாக அமெரிக்க உதவியின்மீது சார்ந்திருக்கச் செய்துவிட்டன; பாதுகாக்கப்படவேண்டிய மக்களை வறுமையில் ஆழ்த்தும் அளவுக்குப் படைகளைக் குவிக்குமாறு செய்தன; சமீப, மத்தியக் கிழக்கில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நலன்களுக்கு ஊறு விளைவித்தன. மேலும் அவை கம்யூனிச பாவத்தில் மூழ்கிக்கிடக்கும் மக்களை கம்யூனிசக் கொடுங்கோலாட்சியினின்று விடுதலை செய்யும்பொருட்டு ரஷ்யா, செஞ்சீனா ஆகியவற்றுடன் புனித சமயப் போர் (Holy War) புரிவதற்கு 'வல்லமையை' விரும்பினவேயன்றி, விவகாரங்களுக்குத் தீர்வு காண அல்ல. இப்படித்தான் அமெரிக்கக் கொள்கை பெரும்பாலான பிரிட்டிஷாருக்குப் பட்டது. பிரிட்டன் அமெரிக்காவின் 'நம்பர் 1 விமானப் படைத்தளமாகும்'. போரில். இத் தளத்தின்மூலம் ஐரோப்பாவை மீண்டும் கைப்பற்றப்போகும் போரில் பிரிட்டிஷ் தீவுகளில் வாழ்ந்துவரும் மக்கள் அளப்பரிய அழிவுக்கும் வறுமைக்கும் ஆளாவது நிச்சயம்.

ஐரோப்பாவில் சக்திச் சமநிலையை மீண்டும் எடுத்து வைத்து நிலைநிறுத்த முடியாத அளவுக்கு அது சீர்குலைந்துபோய்விட்டது. செர்மெனியின் வலிமையைப் பெருக்க அமெரிக்கா எவ்வளவோ முயன்றுபார்த்தது. அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே 3 ஆம் உலகப் போரைத் தடுக்கவல்ல உலக சக்திச் சமநிலை ஏற்படுவதன் மூலமே, பிரிட்டிஷ் பாதுகாப்பையும் செழுமையையும் காப்பாற்ற முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. கம்யூனிச ஆக்கிரமிப்பால் ஏற்படும் போரில், பிரிட்டன் அமெரிக்காவுடன் சேர்ந்து செயற்படும் என்ற உண்மையை மாஸ்கோவுக்கும், அமெரிக்காவால் மூளக்கூடிய கம்யூனிச எதிர்ப்புப் 'போரில்' அல்லது 'தடுப்புப் போரில்' பிரிட்டன் நடுநிலைமையுடன் விளங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை வாஷிங்டனுக்கும், பிரிட்டன் உணர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1930-40-ல் பிரிட்டிஷ் அரசியல் வல்லமை அழிவுப் பாதையில் சென்றுவிட்டபோதிலும், பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் சிக்கலான பிரச்சினைகளுக்கு வழி காண்பதில் நல்ல திறமை காட்டிற்று என்பது உண்மையே.

அவ்வாறே 20ஆம் நூற்றாண்டிலும் அதனால் நல்ல பெயர் எடுக்க முடியும். பிரிட்டனையும், ஐரோப்பாவையும், இன்றைய நாகரிகத்தையும் பிரிட்டன் மனம் வைத்தால் காப்பாற்றலாம். அத் திறமை அதனிடம் உண்டு என்பதை மாஸ்கோவும் வாஷிங்டனும் அறியச் செய்யலாம்.

பெர்முதா முதல் சூயஸ்வரை: பிரிட்டனின் ஆட்சியாளர் கீழ்ச் சபையில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்களாவர். அவர்கள் இந் நூற்றாண்டு நடுவில் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தைத் தாமாகவே முன்வந்த சுதந்திர நாடுகளடங்கிய காமன்வெல்த்தாக மாற்றியமைத்தனர். அதை ஐக்கியப்படுத்தும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் மகாராணியார் உலகச் சுற்றுப் பயணம் செய்தார்; பிரிட்டனைச் சேர்ந்த நாடுகளுக்கெல்லாம் சென்று வந்தார். 1953, நவம்பர் மாதம் முதல் 1954 மே மாதம் வரை அவர் பெர்முதா, ஜமைக்கா முதல் மால்ட்டா, ஜிப்ரால்ட்டர் வரை சென்று வந்தார். வழியில் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, ஏடன், உகாண்டா ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்தார். இச் சுற்றுலா பிரிட்டனை மீண்டும் செழிப்படையச் செய்தது. சோசியலிஸ்ட்டுகள், சோசியலிச விரோதிகள் என்ற வேற்றுமையில்லாமல் பெரும்பாலான பிரிட்டிசார் 'சேம நல அரசு' (Welfare State) கருத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு செய்தது. சமூக சேவையையும் பாதுகாப்பையும், பொதுத்துறைப் பொருளாதாரத் திட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு இக் கருத்து, 'தனியார் சுதந்திர முறை' (free enterprise), 'தேசியமயமாக்கல்' கொள்கைக்கு முரணானது என்ற பிரச்சினை குறித்து நிலவிவந்த சிக்கல்களை வரவர அர்த்தமற்றதாகச் செய்தது. ஆனால், இதுபோல் பிரிட்டிஷ் ஆட்சியாளர் வெளிநாட்டுத் துறையில் வெற்றி கண்டனர் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், அவர்களால் ஒருபுறம் வாஷிங்டனுக்கும் மற்றொருபுறம் மாஸ்கோவுக்கும் பெய்ப்பிங்கிற்கும் இடையே தாற்காலிக 'சமரசம்' செய்யவும் முடியவில்லை; அவர்களுடைய பிரமாண்டமான டிரான்ஸ் அட்லான்டிக் நேச நாட்டுடன் (அதாவது அமெரிக்காவுடன்) பிறர் கண்டு பொருமைப்படும் விதத்தில் தங்களுடைய தொடர்பு முறையை அமைத்துக்கொள்ளவும் முடியவில்லை.

1953ஆம் ஆண்டு டிசம்பர் மாதம். இடம்: பெர்முதா. சர்ச்சில் தமது 80ஆம் வயதில் ஐசன்ஹோவரையும் லெனியலையும் அன்புடன் வரவேற்று இன்புடன் உபசரித்தார். யு.எஸ்.எஸ். ஆருடன் மேலிடத்துப் பேச்சு வார்த்தை நடத்தவேண்டுமென்று அவர் நீண்ட நாள் கனவுகண்டு வந்தார். அக் கனவு ஓரளவு 1954-லும் 1955-லும் நனவாயிற்று. ஆஸ்திரிய உடன்படிக்கையையும் 'செனீவா மனப்பான்மை'யையும் தவிர, உருப்படியாக

வேருென்றும் உருவாகவில்லே. மற்ற விஷயங்களேனத்தும் குழப்ப மாகவே இருந்தன. அவற்றுல் கிழக்கு-மேற்கு தாற்காலிக உடன் படிக்கைக்கு நடைமுறையில் (modus vivendi) ஒரு வழி வகுக்க முடியவில்லே. இரானிய-எகிப்திய உடன்பாடுகள், சியாட்டோவின் உறுப்பினராதல், செர்மன் படைக்கலக் குவிப்பிற்காக 1954-ல் புதிதாகக் கொண்டுவரப்பட்ட விதி — இவையனேத்தும் பிரிட்டனின் மற்ற அரசியல் தந்திர 'வெற்றிகளாகக்' கருதப்பட்டு வந்தன. ஆனுல், அவையனேத்தும் பிரிட்டிஷ் நலன்களேப் பொறுத்தமட்டும் உண்மையிலேயே அமெரிக்க வெற்றிகள் என்றுதான் கூற வேண்டும். வெற்றிக்கு ஈடாக வெளிநாட்டு அமைச்சர் ஆன்தனி ஈடன் 1954, அக். 20ஆம் நாள் 'கார்ட்டர் நைட்' (Knighthood) பட்டம் அளிக்கப்பட்டார். அவரும் சர்ச்சிலும் ஆங்கிலோ-அமெரிக்க வேற்றுமைகளே அகற்றும் நோக்குடன் ஜூலே மாதம் வாஷிங்டனுக்கு விஜயம் செய்தனர்.

1955 ஏப்ரல் 5ஆம் நாள் சர்ச்சில் அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெற்ருர். அவரிடத்தில் ஈடன் தலேமையமைச்சராக நியமிக்கப் பட்டார். ஹெரால்டு மாக்மில்லன் வெளிநாட்டு அமைச்சராகவும், சில்வின் லேயடு பாதுகாப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்றனர். (மாக்மிலன் பின்னர் நிதியமைச்சராகவும்–Chancellor of exchequer, லேயடு வெளிநாட்டு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர்). டிசம்பர் மாதம் 73 வயதான கிளெமென்ட் அட்லியும் அரசியல் வாழ்வி லிருந்து ஓய்வு பெற்ருர். அதன் பின்னர் ஹ்யூப் கெய்ட்ஸ்கல் பாராளுமன்றத் தொழிற் கட்சித் தலேவரானுர். இதற்கிடையில் ஈடன் 1955, மே 26ஆம் நாள் புதுத் தேர்தலுக்கு ஆணேயிட்டார். அதில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் முன்னேவிட அதிகமான இடங்களேப் பெற்று ஜெயித்தனர். முன்னர் அவர்களிடமிருந்த 321 இடங்களும் தேர்தலுக்குப் பின்னர் 344 இடங்களாக உயர்ந்தன. அதே சமயம் தொழிற் கட்சியினர் வலிமை 295-லிருந்து 277 இடங்களாகக் குறைந்துபோயிற்று. தேர்தலேத் தொடர்ந்த அடுத்த 18 மாதங்களும் வாஷிங்டன், மாஸ்கோவுடன் சிக்கல்வாய்ந்த தூதியல் பரிமாற்றங்களிலும் ஆங்கிலோ-அமெரிக்க ஒற்றுமை, ஆங்கிலோ-சோவியத் நட்பு (இதன் உச்சக் கட்டம் 1956, ஏப்ரலில் குரூச்சேவும் புல்கானினும் பிரிட்டனுக்குச் செய்த விஜயம்) ஆகியவற்றில் கழிந்தன. ஆனுல், இவற்றுல் உருப்படியான விஷயம் ஏதும் தோன்றவில்லே. வாஷிங்டனுடனும் மாஸ்கோவுடனும் உடன் பாட்டுக்கு வர பிரிட்டிஷ் அரசியல் தந்திரம் மும்மரமாகவும், கற்பனே யுடனும், முழு மனத்துடனும் ஈடுபட்டிருந்தால் பின்னர் நடக்க விருந்த சோக நாடகங்களேத் தவிர்த்திருக்கலாம் என்றும் உறுதி யாகச் சொல்வதற்கில்லே. எனவே, அமெரிக்க, சோவியத், பிரிட்டிஷ்

விருப்புவெறுப்புகள் இந் நாடுகட்கிடையில் மனமுறிவை ஏற்படுத்தியதுதான் மிச்சம்.

அதன் விளைவு சினுய், சூயஸ், அங்கேரி ஆகியவற்றில் 1956-ல் ஏற்பட்ட பலாத்காரத்தில் எதிரொலித்தது. இந் நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் ஏற்கெனவே (முதல்) விரிவாக ஆராய்ந்திருப்பதால் அவற்றை இங்கு மீண்டும் கூறத் தேவையில்லை. ஆனல், இங்கு நாம் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். ஃபிரெஞ்சுத் தலைவர்களைப்போல் பிரிட்டிஷ் கொள்கை வகுப்பாளரும், இறைமையுரிமையுடனும் சுதந்திரத்துடனும் விளங்கும் 'பெரிய வல்லரசுகள்' தங்கள் நாட்டு நலன்களைக் காப்பாற்றுவான் வேண்டி அவசியப்பட்டால் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதுபோல் அவர்களும் நடக்க விரும்பினர்கள். ஆனல், அவர்கள் இதில் வெற்றிகாணும் சமயம் பார்த்து அமெரிக்க, ஆசிய-ஆப்பிரிக்க, சோவியத் வற்புறுத்தலால் அத்தகைய நடவடிக்கையைக் கைவிட நேரிட்டது.

வருங்காலம் எப்படியோ? டோரி கட்சியினர் பாரிஸ், தெல் ஆவீவுடன் கூடிக் குலாவி எகிப்தைத் தாக்கியதையும், அதில் படுதோல்வி யடைந்ததையும் உலகம் அறியும். தோல்வி ஏற்பட்டதோ இல்லையோ ஆன்தனி நட்டிங், சர் எட்வர்டு போயில் ஆகியோரும் இன்னும் சில கன்சர்வேட்டிவ் காட்சியினரும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகத் தங்கள் பொதுப் பணிகளிலிருந்து ராஜினமா செய்தனர். அவர்களின் நடவடிக்கை எதிர்க்கட்சியான தொழிற் கட்சியில் கொந்தளிப்பை உண்டாக்கியது. டிச. 17ஆம் நாள் கேசோலின் (கல்லெண்ணெய் வகை) பங்கீடு சம்பந்தமாக ஆணை பிறந்தது. எகிப்திலிருந்து பிரிட்டன் வெளியேற ஒப்புக்கொண்டதும், அமெரிக்கப் பெட்ரோலிய வெள்ளம் லண்டனுக்குப் பாய ஆரம்பித்தது. அதன் பின்னரே பெட்ரோல் ரேஷன் நீக்கப்பட்டது. ஆனல், அமெரிக்காவிற்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பு இருந்து வந்தது. நூறு கன்சர்வேடிவ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி அமெரிக்காவின் கொள்கைகள் அட்லான்டிக் நேச வுடன்பாட்டிற்கு ஊறு விளைப்பதாக ஓர் அறிக்கை (1956, நவ. 27ஆம் நாள்) வெளியிட்டனர். 1946-ல் தான் வட்டிக்கு வாங்கிய கடன் தொகைக்குரிய வட்டியை நீக்கிவிடுமாறு டிசம்பர் மாதம் பிரிட்டன் யு.எஸ்.ஏ.யையும் கனடாவையும் கேட்டுக்கொள்ளும்படி ஆயிற்று. அதேசமயம் அது சர்வதேச நாணய நிதியிடமிருந்து (International Monetary Fund) 1,300,000,000 டாலர் மதிப்புள்ள ஒரு கடனும், வாஷிங்டனிலிருக்கும் ஏற்றுமதி-இறக்குமதி பாங்கிடமிருந்து 500,000,000 டாலர் மதிப்புள்ள மற்றொரு கடனும் வாங்கியது.

'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோல்' என்று சொல்லுவார்கள். 1956-க்குப் பின் பிரிட்டன் அவ்வளவு வறுமை

யடையவில்லை. மாறாக, பணவீக்கத்தால் குறிப்பிடத்தக்க செழிப்புடன் விளங்கியது. மேலும் அணுகுண்டு, ஹைடிரஜன் குண்டுகளைப் பொறுத்தமட்டில், அது வல்லரசுகளில் மூன்றும் இடத்தைப் பிடித்து விட்டது. எனினும, அதனால் 'சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைக்' கடைப்பிடிக்க முடியவில்லை. ராட்சச வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா முதலியவற்றாலேயே அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாதபோது, தன் மக்களை வளர்க்க அனைத்துலக வெளிநாட்டு வர்த்தகத்தையே பெரிதும் நம்பியிருந்த நாட்டில் அது எங்ஙனம் முடியும்? அணு ஆயுதப் போர் வரின், அதில் அழிந்தொழிந்து போகக்கூடிய ஒரு 'சிறிய தீவினால்' (பிரிட்டனால்) எங்ஙனம் இயலும்?

நேசநாடுகளைத் தேடுவதிலும் மக்களைத் தூண்டுவதிலும் பிரிட்டனால் உலக அரசியலைத் தன்வசப்படுத்த முடியுமேயொழிய, 'தேசிய வல்லமையால்' இனி முடியாது. இவ்வுண்மை முன்னாள் 'வல்லரசுகள்' அனைத்திற்கும் பொருந்தும். ஆனால், இன்றைய தேவைகளை பிரிட்டிஷார் உணர்ந்த அளவுக்கு அமெரிக்க, ரஷ்ய மக்களோ, கொள்கை வகுப்பாளரோ உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

தவறு செய்து கற்கும் கொள்கையையே பிரிட்டன் காலமெல்லாம் கடைப்பிடித்து வந்திருக்கிறது. 1957–58-ல் தலைநீட்டிய பிரச்சினைகளை இவ் வழியை விட்டுவிட்டு எங்ஙனம் தீர்ப்பதென்று ஒருவருக்கும் புலப்படவில்லை. அதைத் தவிர வேறு வழிகளும் அப்போதில்லை. 1957, சன. 9ஆம் நாள் வெளியான பக்கிங்காம் அரண்மனை அறிவிப்பு ஒன்றில், 'மகாராணியாரை மாலை சந்தித்த பின் மதிப்பிற்குரிய, பாராளுமன்ற உறுப்பினர் சர் ஆன்தனி ஈடன், தம்முடைய தலைமையமைச்சர் பதவியையும், நிதித்துறையின் முதல் தலைவர் பதவியையும் ராஜினாமா செய்துவிட்டதாகவும், அதை மாட்சிமை பொருந்திய மகாராணியார் ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும்' கூறிற்று. 'இன்று பிற்பகல் மகாராணியார் பாராளுமன்ற உறுப்பினரான மதிப்பிற்குரிய ஹெரால்டு மாக்மிலனை வரவேற்று, அவருக்குத் தலைமையமைச்சர் பதவியையும் நிதித்துறையின் முதல் தலைவர் பதவியையும் அளித்து இருக்கிறார்' என்றும், 'மாக்மிலன் ராணியாரின் கைகளை முத்தமிட்டு அப் பதவியை ஏற்றுக்கொண்டார்' என்றும் சன. 10ஆம் நாள் வெளியான மற்றோர் அறிக்கை கூறிற்று.

இவ்விதமாகக் கன்சர்வேடிவ் கட்சி உடல் நலமற்றிருந்த ஈடனின் ராஜினாமாவை ஒப்புக்கொண்டுவிட்டு, மாக்மிலன் தலைமையில் புதிய காபினட் ஒன்றை அமைத்தது. அதில் சில்வன்லையட் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் சன. 17ஆம் நாள் 'பிரிட்டன் ஓர் உயர்ந்த நாடாகவே விளங்கிவந்

துள்ளது, விளங்கியும் வருகிறது. நமக்குள்ள உயர்வு தாழ்வு மனப்பான்மையைக் களைந்துவிட்டு, செயலில் மட்டும், நாம் ஈடுபடுவோமாயின், வருங்காலத்திலும் அது உயர்ந்த நாடாகவே விளங்கும்' என்று பிரிட்டிஷ் மக்களுக்குக் கூறினர். அவர் மாஸ்கோ விஜயத்தைக் கைவிட்டார். பிரிட்டன், யு.எஸ்.ஏயின் 'சரிசம நேச நாடாக' விளங்கவேண்டுமேயன்றித் 'துணை நாடாக' விளங்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினர். பாதுகாப்பு அமைச்சர் டன்கன் சாண்டீஸ் தயாரித்த காபினெட் 'வெள்ளை அறிக்கை' (White Paper) ஒன்று 1957 ஏப். 4ஆம் நாள் வெளியிடப்பட்டது. அதில் அவர் தீவிர இராணுவக் கொள்கைச் சீர்திருத்தம் ஒன்று கொண்டுவந்தார். 'அணு ஆயுதத் தாக்குதலுக்கு ஆளாக நேரிட்டால் இந்த நாட்டு மக்களை அவ்வழியினின்றும் காப்பாற்ற ஒரு வழியுமில்லை என்ற உண்மையை அனைவரும் அறிதல் வேண்டும்' என்று அவ்வறிக்கை கூறிற்று. எனவே, அரசாங்கம் இனிமேல் அன்னியர் தாக்குதலைத் 'தடுக்கும்' தன்மையுடைய அணுகுண்டுகள், ஆகியவற்றின்மீது சார்ந்திருக்கவேண்டியது இன்றியமையாததாகி விட்டது. எனவே, ராக்கெட்டுகள் முப்படைகளின் எண்ணிக்கையை 690,000-லிருந்து 375,000 ஆக 1962ஆம் ஆண்டு இறுதியில் குறைக்க உத்தேசித்துள்ளது. அதனுடன் போர்க்கப்பல்களையும் அறவே வைத்துக்கொள்ளப்போவதில்லை; சாம்ராச்சியமெங்கிலும் சேர்மனியிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் படைகள் குறைக்கப்படும்; கட்டாயப் படைச் சேவை நீக்கப்படும்; மேலும், பிரிட்டனின் வருடாந்தரப் பாதுகாப்பு பட்ஜெட் 4,000,000,000 பவுனிலிருந்து பிரிட்டிஷ் பொருளாதார நிலைமை அனுமதிக்கும் அளவுக்குக் குறைக்கப்படும்.

பிரிட்டனின் இத் தீவிர யோசனையைக் கேட்ட வாஷிங்டன் அது 'தோல்வியின் அறிகுறியே' யன்றி வேறில்லை என்று மட்டமாக நினைத்தது. ஆனால், உண்மையில் இக் கொள்கை தொடர்ந்து அரசியல் வலிமை விளையாட்டில் பிரிட்டன் பங்குகொள்ள இயலாமையையே உணர்த்திற்று. எனினும், வருங்காலக் கண்ணோட்டத்துடன் பார்க்குங்கால், இது வருங்காலத்திற்காக மனிதகுலத்திற்கு பிரிட்டன் காட்டும் மற்றொரு வழிகாட்டி என்பது இனிது விளங்கும். ஏற்கெனவே இந்த நாடு பாராளுமன்ற அரசாங்க முறையிலும், தொழிற் புரட்சியிலும், குடியேற்ற நாட்டு மக்களுக்குச் சுதந்திரம் வழங்குவதிலும், உலகிற்கே முன்மாதிரியாக விளங்கி வருவதை அனைவரும் அறிவர். இந்த அணுசக்தி யுகத்தில் படைக்கலங்களால் மட்டுமோ, அல்லது அவை யின்றியோ 'தேசியப் பாதுகாப்பைக்' காப்பது இயலாத காரியம். ஆனால் இவ்வுண்மையை வாஷிங்டனை, மாஸ்கோவோ (பெய்ப்பிங், பாரிஸ், பான், ரோம் ஆகிய தலை நகரங்களோ) 1958-ல்கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை. பல

கட்சியையும் சேர்ந்த பெரும்பாலான பிரிட்டிஷாரே இவ்வுண்மையை உணர்ந்துள்ளனர். வெற்றியால் தோல்வியுண்டிருப்பதும், இன்று பயனற்றுப்போன சக்தியில் வலிவற்று நிற்கின்ற நாடாகிய பிரிட்டன், முன்போல் இன்றும் இப் புதிய யுகத்தின் தேவைகள் என்னவென்பதை உலகிற்கு உணர்த்தி, மனித குலத்தின் பாராட்டுக்கு உரித்தாகும்.

3. அமெரிக்கா: வலிமைத் தடுமாற்றம்

'அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில், அமெரிக்க ஜனநாயகமானது எவ்வளவு அறிவுக் கூர்மையைக் காட்டப் போகிறது என்று இன்று திட்டவட்டமாகக் கூறுவது கடினமான செயலாகும்; இது விஷயத்தில் அக்கொள்கை வகுப்பினரும், அதனை இடித்துரைப்பவரும் தத்தம் முடிபுகளை நிறுத்திவைப்பது அவசியம்.'—அலெக்சிஸ் டி டாக்யூவீல், 'அமெரிக்காவில் ஜனநாயகம்,' 1839.

அமெரிக்கா என்றால் என்ன: இந்த 20ஆம் நூற்றாண்டு நடுவில் உலக அரசு முறையிலேயே ஜன நெருக்கமான அங்கமாக விளங்கி வந்த ஒரே நாடு சீனு. அதிகமான தொடர் நிலப்பரப்பை (contiguous territory) பெற்று விளங்கிய ஒரே நாடு சோவியத் யூனியன். அதிகமான கடல் கடந்த பிரதேசங்களையும் மக்களையும் கொண்டிருந்தது பிரிட்டிஷ் காமன்வெல்த் ஒன்றே. ஆனால் உலகிலேயே அதிகச் செல்வத்துடனும், செழிப்புடனும், மிகப் பிரமாண்டமானதாகவும் விளங்கியது அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒன்றே என்று ஐயம் திரிபறக் கூறலாம்.

அமெரிக்க மக்களுக்கும் உலகிற்கும் இறுதியில் அமெரிக்கா எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை முரட்டுவாதம் பேசாதவர்களாலும், சூதுவாது அற்றவர்களாலுமே வரையறுக்க முடியும். ஏனெனில், அமெரிக்கா எளிதில் மாறும் தன்மையது; அது மக்களை வர்க்கும் எதை வேண்டுமானாலும் தரவல்லது. இதுவே அதனுடைய விசேடத் தன்மையாகும். இவ்வுண்மையையே 'விசுவாசச் சோதனைகளைக்' கண்டுபிடிப்பதற்காகவும், 'அமெரிக்கத்துவத்தின்' பொருளை வைதீக முறையில் வரையறுப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வலியுறுத்துகின்றன. எல்லாம் அறியும் சக்தி தம்மிடம் இல்லை என்பதை நன்கறிந்த உணர்ச்சி மிக்க பார்வையாளருக்கு, அது பல முரண்பாடுகளைக் கொண்ட பலதரப்பட்ட நாடாகத் தோன்றும். ஏனெனில், இங்குதான் புரட்சித் தீவிரவாதமும், பிற்போக்குப் பழைமைவாதமும், அரசியல் ஜனநாயகமும்

பொருளாதாரச் செல்வர் சிறுகுழுவரட்சியும், பல்லினங்களின் பிறப்பிடமும் இனவெறுப்பின் சாக்கடையும் கன்னமும் தாடையும் போல் உடனிருந்து வருகின்றனவே! இந் நாடுதான் சுதந்திரத்தின் கோட்டையாகவும் மூட நம்பிக்கைகளின் முறிவிடமாகவும் விளங்கி வருகிறதே! இந் நாடுதான் சுதந்திரத்தின் கனவாகவும் சிறப் புரிமையின் அரணுகவும் திகழ்ந்து வருகிறதே! அம்மட்டோ! இந் நாட்டிலன்ரே முழுக்கல்வியும் முழுப் படிப்பின்மையும், ஓடு போட்ட குளிக்கும் அறைகளும் தார்-காகிதக் குடிசைகளும், மொத்தக் குடியேற்றமும் நாடுகடத்தும் மயக்க வெறியும், அறநெறி ஆலயங்களும் 'திருட்டுப் பிரபுக்களும்', கிறுத்துவர் பொறுமையும் 'கிறுத்துவ முன்னணியும்,' வால்ட் ஒயிட்மேனும் எட்கர் கஸ்ட்டும், உலகத் தொழில்துறை உழைப்பாளிகள் சங்கமும் சர்வதேச ரோட்டரி சங்கமும், தாமஸ் பெயினும் கால்வின் கூலிட்ஜும், புது இசையும் நியூயார்க் ஸ்டாக் எச்சேஞ்சும்! நம்பிக்கை யூட்டுவோரும் நம்பிக்கைத் துரோகம் செய்வோரும், யூஜேன் டெப்சும் ஜோசப் பியூவும், ஆர்வமான சமாதானத்துவமும் நூறு சதவீத அமெரிக்கத் துவமும், ஆண்ட்ரூ வோல்ஸ்டெரும் மார்ட்டின் டையசும், நகைச்சுவை நாடகங்களும் இன்ப வெறுப்புச் சமயமும், ஜாக் லண்டனும் ஆடோல்ஃப் மென்ஜோவும், நம்பத்தகா பேராசையும் நம்பமுடியாக் கருணையும், பால் புன்யானும் ஜார்ஜ் எ.ஃப். பாமிட்டும், ஜோசப் மக்கார்த்தியும் ஏர்ல் வாரனும், உயிருடன் தோலுரிக்கும் மக்கள் கும்பலும் சமுதாயச் சேவைப் பெட்டிகளும் இன்னும் எண்ணற்றவைகளும் வாழையடி வாழையாகவும் ஒரே சமயத்திலும் இருந்துவந்திருக்கின்றன!

அமெரிக்கா பல வண்ணவுருவங்களைக் காட்டும் ஒரு கருவி போன்றது. அதன் வண்ண ஜாலங்களை இங்கு விவரித்தல் நோக்க மன்று. இதுவரை அமெரிக்காவுக்கு இலக்கணம் வகுத்தோர் ஒருவருமிலர். ஒருசில அமெரிக்கரே கூலியாட்கள் சுலோகங்களில் அதற்கு இதுவரை பொருள்கூறியிருக்கின்றனர். அதன் உலகப் பணி காலங்கடந்தே உணரப்பட்டது. என்றாலும், அதனால் அந்நாட்டு மக்களுக்கும் அதன் அண்டை நாட்டுக்கும் அளவிடற்கரிய நன்மையும் கிடைக்கலாம். அல்லது சொல்லொணாத் துயரமும் ஏற்படலாம். ஆங்கிலேய அரசியலமைப்பு மாதிரிகளிலிருந்தும், பிரெஞ்சு ஊக்குசக்தியிலிருந்தும், சுதேச அனுபவத்திலிருந்தும் பிறந்தது அமெரிக்க அரசியல். உண்மை மெய்ம்மையைத் தேடியலை வோரின் தர்க்கத்திற்கு இந்நாட்டு அரசியல் ஒரு தலைசிறந்த தலைப்பாகவும், பிரதேச விருப்பு வெறுப்பு சுயநலம்பற்றிய ஒரு சாதாரண நகைச்சுவை நாடகமாகவும் விளங்கி வருகிறது. 'அமெரிக் கர்கள் செல்வ வழிபாட்டுக்காரர்கள், காற்றுள்ளபோது தூற்றிக் கொள்பவர்கள், சம்பாதிக்காமல் பணம்பெற விரும்புபவர்கள்,

செல்வந்தர்களைப்போல் நடக்க விரும்புபவர்கள், வீண் செலவு செய்வதில் பெரிய ஆட்கள் என்று வெளிநாட்டினர் குறை கூறுவது நன்கு பொருந்தும். இல்லை, அமெரிக்கர்கள் எல்லாவற்றையும்விட சுதந்திரத்தையும் நீதியையும் உயிரெனக் காப்பவர் என்று அவர்களைக் கண்டு வியப்போர் கூறும் கூற்றும் முற்றிலும் உண்மைதான். மேலையுலகத்துடன் அமெரிக்காவும் பண்டைக் காலத்திலிருந்தே யூத-கிரேக்க-கிறுத்துவ சம்பிரதாயத்தின் கால வரையற்ற சமூகமரபைத் தன் வாரிசுச் சொத்தாகப் பாவித்து வருகிறது. அச் சம்பிரதாயத்திலிருந்து நோக்குமிடத்து, அமெரிக்கர் கண்டுவரும் கனவு, சிலவேளை அறியாமைப் பொருளாசைபற்றிய பயங்கரக் கனவாகவும், சிலவேளை மனிதவர்க்கத்தையே விண்மீன் வழியே சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் காட்சியாகவும் தோன்றும்.

மற்றெல்லாக் கொள்கைகளையும்போல் (ஒரு நாட்டு) வெளி நாட்டுக் கொள்கையும், முக்கியத்துவத்தில் ஒன்றேடொன்று போட்டி போடும் வேறுபல குறிக்கோள்களைப்போல நெருக்கடியான சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி ஆகும். நிலையற்ற அரசு முறையில், குறிப்பாக, அது நிலையான பூகோள உண்மை களாலும், மாறியவண்ணமிருக்கும் வலிமைத் தொடர்புகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது. பிறநாட்டுத் தொடர்பு, உறவு முதலிய வற்றுள் அமெரிக்கா அடைய விரும்பும் தேசியக் குறிக்கோள் என்ன வென்று ஆராயுமிடத்து, அது சென்ற ஆறு தலைமுறையாக (அமெரிக்க சமுதாயத்தில்) அடுத்தடுத்து செல்வாக்குப் பெற்ற குழுவினர்கள் தாம் அடைய விரும்பிய நலன்களைத் தவிர வேறில்லை, என்பது இனிது விளங்கும். கொழுத்த பணக்காரர், அடிமையாட்சிக் காரர், வர்த்தகப் பெரும் புள்ளிகள், தொழிற்கூட அதிபர், பாங்கு தாரிகள், தொழிற் சுவாதீனக்காரர், பங்கு நடுவர், அறிவாளிகள்— ஆகிய இவர்களே சமுதாயத்தில் அடுத்தடுத்துச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தவர்கள். இப்போதைய செல்வாக்குக்காரர்களான புதுமுயற்சியாளர், கைவேலைக்காரர், எல்லைக் காப்பாளர், உழவர் பெருமக்கள், பாட்டாளிகள், நுகர்வோர், சிறு வியாபாரிகள், பங்கு தேடிகள், 'பொருளாதார மன்னர்கள்', அமைதி தேடி யலைபவர் ஆகியவர்களுக்கு அறைகூவல் விடுக்கும் செல்வாக்கில்லாத கூட்டத்தினரின் ஆர்வங்களையும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை பிரதிபலித்து வந்தது. வெளிநாட்டுக் கொள்கையால் ஏற்பட்ட விளைவுகளை மட்டும் இங்கு எடுத்தியம்ப முடியுமேயன்றி அவற்றை எய்த மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக முறைகளைப்பற்றி விவரித்தல் இயலாத காரியமாகும்.

வெளிநாட்டுக் கொள்கையால் ஏற்பட்ட விளைவுகள் பல. அவற்றைப் பிறர் கண்கொண்டு நோக்குமிடத்து மக்களின் விருப்பு

வெறுப்புகளும், அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளும் தெள்ளிதின் விளங்கும். அவற்றினின்றும் பிறந்த 'நெறிகள்' நாளடைவில் அனுபவத்தின் வாயிலாய் மூன்று முக்கியமான கொள்கைகளாக மாறின. அம் மூன்றும் வருங்கால வழிகாட்டியாக அமைந்தன. அமெரிக்கர்கள் ஐரோப்பியருடன் வியாபாரம் செய்ய வேண்டும்; ஆனல், ஐரோப்பிய அதிகார அரசியலில் தலையிட லாகாது என்பது ஒன்று. ஐரோப்பியர் அமெரிக்கருடன் வியாபாரம் செய்யவேண்டும்; ஆனல், அமெரிக்கரின் அதிகார அரசியலில் தலையிடலாகாது என்பது இரண்டு. அமெரிக்கரும் ஐரோப்பியரும் சேர்ந்து ஆசிய மக்களுடன் வர்த்தகம் செய்ய வேண்டும்; ஆனல், ஆசியாவின் அதிகார அரசியலில் அவர்கள் தலையிடலாகாது என்பது மூன்று. இவற்றுள் முதலாவது கட்டளை (injunction) வாசிங்டனின் இறுதி உரையிலும், ஜெஃப்பர்சனின் தொடக்க உரையிலும், இரண்டாவது, மன்ரோ கொள்கையிலும், மூன்றுவது தலையிடாக் கொள்கையிலும் (Open Door Policy) பிரதிபலித்தன. மூன்று நெறிகளுமே பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க நலனை வளர்க்க ஏதுவாயிருந்தன ஆனல், அதே நெறிகள் 20ஆம் நூற்றாண்டில் தோல்வியடைந்துவிட்டன. உலகம் அதிவிரைவில் மாறுவதும், அவ்விரைவுக்கு ஏற்றாற்போல் அமெரிக்கக் கொள்கைகள் மாறுததுமே இதற்குக காரணம். இறுதியில் அவ்வறநெறி விடுத்து ஐரோப்பிய ஆப்பிரிக்க ஆசிய விவகாரங்களில் அமெரிக்கா அரசியல் தந்திரம் மூலமாயும், போர்க்கலங்கள் வாயிலாயும் பெரிதும் தலையிட்டு வரத்தொடங்கியது. தற்பாதுகாப்பு, செழிப்பு, சுயநலம் பற்றிய எண்ணம், அதன் பராக்கிரம சக்தி, 'உலகத்திற்கே தலைமை தாங்க வேண்டும்' என்ற அவா, ஆகியவைகளே இவ்விரும்பத்தகாத செயலுக்குக் காரணம் ஆகும். தலைமை தாங்கும் பணியில் அமெரிக்கா எவ்வளவு தூரம் வெற்றிகண்டிருக்கிறதென்பது இந்நூல் எழுதுங்கால் அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை.

தலையிடாக் கொள்கையும் நடப்பு அரசியலும்: அனுபவத் திலிருந்து பாடம் கற்றுக்கொள்வது மனித இயல்பு. ஆனல், அவ்வாறு அனுபவத்திலிருந்து கற்ற பாடங்கள் வெறும் மந்திரச் சொற்றொடராகிவிடின் அவை உணர்ச்சியைக் கிளறிவிடும். புதுப்புதுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இன்றியமையாத மாற்றங்கள் மீது அச்சத்தை ஊட்டிவிடும் அவ்வாறுகும்பட்சத்தில் அப் பாடங்கள் புதுப்பாடங்களைக் கற்றுக்கொள்ள இடைஞ்சலாக நிற்கும். அவை நெருக்கடிகளைச் சமாளிப்பதைக் கடினமாக்கிவிடும்; உயிரினங்கள் பிழைத்து வாழ்வதற்கு இன்றியமையாத சூழ்நிலைக்கேற்ப, மாறும் சக்தியையும் பெறமுடியாது செய்துவிடும். இவை எல்லாவற்றையும் விட இம் மந்திரச் சொற்கள் இன்றைக்குப் பயனில்லாமலும்,

நாளைக்கு அபாயகரமாகவும், கடந்த காலத்தைப் பொறுத்தமட்டில் வெறும் பொய்யாகவும் விளங்க நேரிடும்.

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை என்றுலே அமெரிக்கர் களுக்கும் பிறருக்கும் பண்டைய 'தலையிடாமைக் கொள்கையும்,' இன்றைய சர்வதேசத்துவமும்தான் மாறிமாறி நினைவுக்கு வரும். இது ஓரளவு உண்மையே என்றாலும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை என்ன என்பதை அதனால் அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. எதைப் பற்றியது அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை என்பதைப் (வெளிநாடு களில் இருக்கும் அமெரிக்கர்களுக்கே தெரியாது) பற்றி அறிய வேண்டு மானால், அதிகார (வலிமை) விளையாட்டின் அடிப்படைத்தத்துவத்தை முதலில் நாம் அறியவேண்டும். அத் தத்துவத்தை யுணர்ந்து, அதன் படி நடக்காவிடில் மேலை அரசு முறையின் எந்த அங்கமும் அரசியல் துறையில் வாழ முடியாது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரான்சுடன் 1778, பெப். 6ஆம் நாள் பாரிசில் ஓர் இராணுவ நேசவுடன்படிக்கை செய்ய நேரிட்டது. அதன் சுதந்திர வாழ்வே அதனுடன் பிறந்தது எனலாம். அதனுடன்தான் அது மேலை அரசு முறையின் ஓர் அங்கமாக உருப் பெற்றது. 1949, ஏப். 4ஆம் நாள் செய்யப்பட்ட வடஅட்லான்டிக் ஒப்பந்தத்திற்கு முன் இதுவே அ. ஐ. நா. செய்த ஆதி அந்த ஒப்பந்தமாகும். முதல், இரண்டாம் உலக மகா யுத்தங்களின்போது நேச நாடுகளுடன் செய்த உடன்பாடுகள் ஒருகாலும் நேச உடன்படிக்கைகளாகா. இம் முதல் உடன்பாடும் பிரெஞ்சு முடியாட்சி வாதிகட்கும் அமெரிக்கப் புரட்சிக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட பரஸ்பர கருத்துக் கொள்கை வியப்பின் விளைவு என்று சொல்வதற் கில்லை. ஆராய்ந்து நோக்குமிடத்து அது இருநாடுகளும் கொண் டிருந்த பொதுவான நோக்கத்தில், குறிக்கோளின் விளைவே என்பது புலனாகும். அமெரிக்காவும் பிரான்சும் இங்கிலாந்தை நலிவுறச் செய்து அதைத் தோற்கடித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தன. 1783ஆம் ஆண்டு லண்டன் அமெரிக்கா வுடன் சமாதானம் செய்து, அதற்குச் சுதந்திரம் வழங்கியதும் அவர்கள் ஆசையும் நிறைவேறிற்று.

பண்டை நாடுகட்கிடையே சக்தி சமநிலை நிலவிய வரையில், இப் புதிய 'நாடும்' (வல்லரசும்) பயமின்றிப் பாதுகாப்புடன் விளங்கி வரமுடிந்தது. ஆனால், அவைகளில் ஏதாவது ஒன்று பிறநாடுகளைத் தனக்கு அடிமைப்படுத்தி, கூட்டுப் பலத்துடன் அமெரிக்காவை எதிர்க்கத்தொடங்கியபோதே, இப் புதிய 'நாட்டால்' சமாளிக்கமுடிய வில்லை. 1792-ல் புரட்சிநாடு பிரான்ஸ் போருக்குச் சென்றக்கால், அப் போது சின்னஞ்சிறு நாடான அமெரிக்காவுக்கு அது பெரிய தலைவலி யாகிப்போய்விட்டது. செய்வதென்னவென்றறியாது அது தவித்தது.

இந் நிலையில் (பிரான்சுடன்) செய்த உடன்படிக்கைப் பொறுப்புகளும், கருத்து ஒற்றுமையும் இங்கிலாந்துக்கும் ஐரோப்பிய முடியரசுகட்கும் எதிராக அமெரிக்காவை பிரான்சுடன் சேருமாறு வற்புறுத்தின. ஆனால், 'நடுநிலையில்' நிற்பதே தேசநலனுக்கு உகந்ததாய் அதற்குத் தோன்றிற்று. தேச நலனுல் உந்தப்பட்டு 1793-ல் யு. எஸ். தனது 'நடுநிலைமைக்' கொள்கையைப் பிரகடனப்படுத்தியது. 1778-ல் செய்யப்பட்ட நேசவுடன்படிக்கையை காங்கிரஸ் ஒரு சட்டம் கொண்டுவந்து தள்ளுபடி செய்தது. இவ்வுடன்படிக்கைப் பொறுப்புகள் அமெரிக்காவுக்கு எவ்வளவு தருமசங்கடத்தை யளித்தது என்பது 1796-ல் வாசிங்டன் ஆற்றிய (அலெக்சாண்டர் ஹாமில்ட்டன் தயாரித்த) இறுதியுரையிலும், 1801-ல் ஜெஃப்பர்சன் பதவியேற்றபோது ஆற்றிய பேருரையிலுமிருந்து அறிந்துகொள்ளலாம். பிற நாடுகளுடன் நிலையான ஒப்பந்தங்களே செய்துகொள்ளக் கூடாது என்று வாசிங்டனும், 'எல்லா நாடுகளுடனும் அமைதியுடனும் நேர்மையான நட்புறவுடனும் வாழவேண்டும், வர்த்தகம் செய்ய வேண்டும், ஆனால், எந்த நாட்டுடனும் துயரந்தரும் உடன்பாடுகள் எதுவும் செய்யப்போவதில்லை' என்று ஜெஃப்பர்சனும் அறிவித்தார்கள்.

ஆனால், 1812-ல் அமெரிக்க உள்ளத்தில் நிலவி வந்த குழப்பம் உண்மையில் அதை பிரிட்டனுக்கு எதிராக பிரான்சின் நேசநாடாக ஆக்கிவிட்டது இதை விதியின் விளையாட்டு என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்வது? வல்லரசுகளிலேயே மிக வலிமையுடன் சக்தி சமநிலையை மீண்டும் நிலைநாட்டப் பாடுபட்டுவந்த வல்லரசை எதிர்த்து வந்தது பிரிட்டன். இதில் ஏற்பட்ட தோல்வி அமெரிக்கப் பாதுகாப்புக்குப் பெரிதும் பயன்பட்டது. பிரிட்டனை வெல்லவோ, அன்றி ரஷ்யாவை போனபார்ட் கைப்பற்றவோ அது அவ்வளவு துணைபுரியவில்லை. அவ்வாறு நிகழ்ந்திருப்பின் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு என்றும் எதிரான ஓர் அரசு முறையே உருவாகியிருக்கும். இதை ஜெஃப்பர்சனின் வாயிலாய் அறியலாம். 1814-ல் பேசுங்கால் 'ரஷ்யாவை போனபார்ட் கைப்பற்ற நாம் ஒருவரும் விரும்பவில்லை. அதைக் கைப்பற்றிவிட்டால் ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் கைப்பற்றியது போல்தான். அதன் பின்னர் இங்கிலாந்து காலையுணவைப் போன்றதுதான்.....அப்புறம் நாம் எதிர்க்க முடியாத அளவுக்கு பிரிட்டிஷ் கப்பல்களிலேயே படைகளை அனுப்பிவிடுவான்' என்று கூறினர்.

1815-க்குப் பின் ஒரு நூற்றாண்டு காலம் நடுநிலைமை, மன்ரோ கொள்கை, தலையிடாக் கொள்கை ஆகியவற்றைத் தோற்றுவித்த அமெரிக்க வெளி நாட்டுக் கொள்கை, ஐரோப்பிய - ஆசிய வல்லரசுகளுக்கு இடையே நிலையான சக்தி சமநிலையைப் பெரிதும்

சார்ந்திருந்தது. மேலும், அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர் அங்ஙனம் (சக்தி சமநிலை நிலவி வருவதாக) நினைத்து வந்தனர். 'தலையிடாக் கொள்கை' உலக சமநிலை என்ற ஒரு சுவரில் விழுந்த நிழல் என்றே சொல்ல வேண்டும். அச் சமநிலைக்குப் பங்கம் ஏற்பட்ட போதெல்லாம் அந் நிழலும் மறைந்துவிட்டது. எனவே தான் ஏகாதிபத்திய செர்மனி ஐரோப்பாவை ஐக்கியப்படுத்துவதைத் தடுக்கும் நோக்கத்தில் அமெரிக்கா 1917-ல் போரில் இறங்கியது. சக்தி சமநிலை மீண்டும் உருவானதோ இல்லையோ, அமெரிக்கா 1920-30-லும், 1930-40-லும் ஐரோப்பிய-ஆசிய 'அதிகார (வலிமை) அரசியலில்' அக்கறை காட்டாதது போல் நடந்துகொண்டது. மேலும், 1935-37-ல் கொண்டுவரப்பட்ட 'நடுநிலைமைச்' சட்டங்கள் மூலம் அது 'மற்ற மக்களின் போரில் தலையிடவே போவதில்லை' என்று உறுதி பூண்டது. அச் சட்டங்கள் அமெரிக்கர்கள், பிறநாட்டுப் போர்வாதி கட்குப் படைக்கலம் விற்பனை செய்வதையோ, அன்றிக் கடன் கொடுப்பதையோ அன்றிப் போர்வாதிகளின் கப்பல்களில் பிரயாணம் செய்வதையோ தடுத்தன. இதற்குக் காரணம், 'கடற் சுதந்திரத்தையும்' வெடிமருந்து ஏற்றுமதியையும், கைவிட்டுவிட்டால், வெளிநாட்டுச் சண்டைகளில் அமெரிக்கா தலையிடாமல் இருக்கமுடியும் என்று தவருக நினைத்ததே ஆகும். அமெரிக்காவும் சக்தி சமநிலையும். ஐரோப்பாவைத் தம் குடைக்கீழ்க் கொண்டுவரத் தீட்டப்பட்ட நாசித்திட்டத்தினாலும், ஆசியாவைக் கைப்பற்ற சப்பான் போட்ட திட்டத்தினாலும் சக்தி சமநிலைக்கு மீண்டுப் பழுது ஏற்பட்டது. இவற்றைக் கண்ணுற்ற அமெரிக்கா, வெளிவிவகாரக் கொள்கைத் துறையில் தான் கொண்டிருந்த கருத்துகள் எவ்வளவு தவருனவை என்பதை உணரத் தொடங்கிற்று. அதன் விளைவாக மேற்படி (ஆக்கிரமிப்புத்) திட்டங்களையும் எதிர்க்கலாயிற்று. இது சம்பந்தமாக அது வெளியிட்ட கருத்துகளனைத்தும் என்றும் நிலையான அறிவுக் களஞ்சியமாக அமைந்துவிட்டன. இப்புது வுணர்ச்சியின் அறிகுறியாக 1939 நவ. 4ஆம் நாள் புதிய 'நடுநிலைமைச்' சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அச்சட்டம் மீண்டும் அமெரிக்கர்கள் போர்வாதிகட்குக் கடன் கொடுப்பதையும், அவர்களுடன் வியாபாரம் செய்வதையும், அவர்களுடன் பிரயாணம் செய்வதையும் போர்க்களக் கடலில் அமெரிக்கக் கப்பல்களைச் செலுத்துவதையும் தடுத்தது.

ஆனால், (அப்போது மிகவும் முக்கியமான) போர்க்களத் தடையாணையை நீக்கியது; 'பணத்தைக் கட்டி எடுத்துச் செல்' (cash and carry) என்ற அடிப்படையில் போர் நாடுகள், (பிரான்ஸ், பிரிட்டன்) அமெரிக்காவிடமிருந்து வெடி மருந்துகளை விலைக்கு வாங்கித் தங்கள் கப்பல்களிலேயே ஏற்றிச் செல்ல அது அனுமதித்தது. உலகைக் கைப்பற்றத் தீட்டப்பட்டிருந்த முக்கூட்டு ஒப்பந்தம் வெற்றியுடன் செயலாகிவந்தது. 1940 வசந்தத்தில் அமெ

ரிக்காவுக்கு எட்டியது. இதைக் கேட்டு பீதியுற்ற அமெரிக்கா அதைக் குலைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தது. வில்லியம் ஆலன் ஒயிட் தலைமையில் 'நேச நாடுகட்கு உதவியளித்து, அமெரிக்காவைப் பாதுகாக்கும் கமிட்டி' ஒன்றும், 'நடுநிலைமையை' அடிப்படையாகக் கொண்ட ஜெனரல் ராபர்ட் உட்டின் 'அமெரிக்க முதற் கமிட்டியும்' அமைக்கப்பட்டன. இரண்டும் பொதுமக்கள் ஆதரவிற்காகப் போட்டி போட்டன. அதில் ஒயிட்டின் கமிட்டி வெற்றிபெற்றது. அவ் வாண்டு இறுதியில் காங்கிரஸ், படைக்கலங்களுக்காக 12,000,000,000 டாலர் செலவு செய்ய அனுமதியளித்தது. அதன் பின்னர் சொல்லவா வேண்டும்? அக் கோடையில் குண்டுகளும் விமானங்களும் இங்கிலாந்திற்கு விரைந்து எடுத்துச் செல்லப்பட்டன. செப்டம்பர் 2ஆம் நாள் பிரிட்டனுடன் தான் 'நிர்வாக ஒப்பந்தம்' (executive agreement) ஒன்று செய்திருப்பதை ரூஸ்வெல்ட் அறிவித்தார். அதன் கீழ் பிரிட்டனுக்கு 50 போர்க்கப்பல்கள் யு. எஸ். ஏ. யிடமிருந்து மாற்றப்பட்டன. அதற்கு ஈடாக மேற்கு அட்லான்டிக் பிராந்தியத்தில் நீர்-விமானப் போர்த்தளங்கள் 99 ஆண்டுகளுக்கு அமெரிக்காவுக்குக் குத்தகையாக விடப்பட்டன.

இவைகளுக்குப் பின்னால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளும், ஆண்டாண்டுக்காலம் நடுநிலைமைக் கடமை குறித்து நிலவிவந்த சட்டப் பொருளைக் காற்றில் பறக்கவிட்டன. மேலும், இவையனைத்தும் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டுவந்த 'தலையிடாக் கொள்கை'யையும் முற்றிலும் கைவிடச் செய்தன. வல்லரசுகளுக்கு இடையே நிகழும் போரில் எந்தக் கட்சிக்கும் உதவியோ, ஊரே யு. எஸ். ஏ. அளிக்கலாகாது என்பதே அக் கொள்கை. 1950—60 ஆகிய பத்தாண்டுகளில் தோன்றிய 'கொள்கைத் திருத்தக்காரர்கள்,' 1920—30-ல் இருந்த அவர்கள் முன்னோர்களைப் போல் வில்சன் ஆட்சியும், ரூஸ்வெல்ட் ஆட்சியும் பின்பற்றி வந்த நடுநிலையற்ற போக்கே அமெரிக்காவைப் போரில் ஈடுபடச் செய்தது என்று நம்பினர்கள். அது உண்மைதான். சிக்கலான நிலையில் 'உடன்படிக்கை மூலம் ஐரோப்பிய அமைதியை' 1917-லும், 1941-லும் நிலைநாட்டிவிடலாம்; அதன்மூலம் சக்தி சமநிலையைப் பாதுகாக்க முடியும் என்றும், அன்றி ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சக்தி சமநிலை அழிந்து போனால் அதன் விளைவாக அமெரிக்காவுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படாது என்றும் நினைத்ததுதான் அவர்களின் நம்பிக்கைக்குக் காரணம். அமெரிக்க மக்கள் எவ்வளவோ குழம்பிப்போய் இருந்த போதிலும், இப் பின்னைய கருத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்தாரில்லை. அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை பன்னூற்றாண்டுக் காலமாக இருந்துவரும் பிரிட்டிஷ் வெளிநாட்டுக் கொள்கையைப் போன்று எளிமையானது. எந்த ஒரு வல்லரசும் அல்லது பல வல்லரசுகள்

கூடியும் ஐரோப்பா மீதும், ஆசியா மீதும் எதிர்ப்பில்லாத ஆதிக்கம் செலுத்தவிடலாகாது; ஏனெனில், அத்தகைய நிலைமை ஏற்படின் அது அமெரிக்க நாட்டு நலனுக்கே பெருத்த கேட்டை விளைவித்து விடும்; அப்புறம் அமெரிக்கா ஒரு தனி சுதந்திர நாடாக விளங்கவே முடியாமல் போய்விடும்; எனவே, அரசியல் தந்திரம் மூலமாகவும், படைக்கலங்கள் வாயிலாகவும், முழுப்போரின் நாணவித ஆயுதங்களின் பலத்தினாலும், அத்தகைய முயற்சிகளை எதிர்க்க வேண்டும். இதுதான் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் சாரம்.

அமெரிக்கர்களே மிச்சம் சொச்சமில்லாமல் தங்கள் நாட்டு தலன்கள் என்ன வென்பதை வரையறுத்து அவற்றிற்கேற்ப நடக்கும் திறமையற்றவர்கள். மேலும் அவர்கள் 'தங்கள் வெளி நாட்டுக் கொள்கை அதிகாரச் (வலிமை) சிக்கல்களுடன் சம்பந்தமில்லாதது (இத்தகைய சிக்கல்களுடன்தான் ஒரு பகுத்தறிவான வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்டிருக்க முடியும்); அறவியல் ஒன்றுடனேயே (அத்தகைய சிக்கல்களுக்கும் அதிகார அரசியலுக்கும் பிரச்சாரம் ஒன்றை விடுத்து மற்ற சம்பந்தம் ஏதும் இல்லை) அது சம்பந்த முடையது,' என்று தங்களையும் பிறரையும் என்றும் நம்பவைக்க முயல்பவர்கள். இப் பண்புதான் அமெரிக்காவையும் பிற நாட்டவரையும் பயங்கரக் குழப்பத்திலாழ்த்துவது. இதனாலன்றே செர்மனி ஐரோப்பாவைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் உன்னதப் பகுத்தறிவான குறிக்கோளை அப்படியே பச்சையாகக் கூறுமல், கெய்சருடைய கரும்பாவங்களின்மீது சினந்தெழுந்தும், 'இராணுவத்துவம்', 'எதேச்சாதிகார ஆட்சி' 'பிரஷ்யக் கொள்கை' ஒழிப்பு ஆகிய பற்றிப் பேசியும், 'ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பாக இவ்வுலகை மாற்றியமைத்தல் 'போரை நிறுத்தப் போரை வெல்லல்' போன்ற பொதுவான கருத்துகள் மூலமாக அமெரிக்கர் அதைத் தெரியப்படுத்தினர்கள். இதனாலன்றே ஐரோப்பாவையும் ஆசியாவையும் செர்மனியும் சப்பானும் சேர்ந்து கைப்பற்றுவதைத் தடுக்கும் உன்னத நோக்கத்தை நேரடியாக அவர்கள் சொல்லாமல், ஹிட்லரின் பாவங்கள் மீதும், பாசிசத்தின் கொடுமை மீதும் சினந்தெழுந்தும், கொடுங்கோலாட்சிகளை ஒழிக்கப் போவதாகவும், 'உலகமெங்கினும் நான்கு வகை சுதந்திரத்தை' நிலைநாட்டப் போவதாகவும் (எப். டி. ஆர். 1941, சனவரி 6.) கூறி அதன்மூலம் வெளியிட்டார்கள். மேலும் அதனாலன்றே 1950—60-ல் ஐரோப்பாவையும் ஆசியாவையும் ரஷ்யாவும் சீனவும் சேர்ந்து கைப்பற்றுவதைத் தடுக்க நினைத்தவர்கள் அக்குறிக்கோளை நேரடியாகச் சொல்லாமல், ஸ்டாலின், மௌ ஆகிய இருவரின் செம்பாவங்கள் மீதும், கம்யூனிசத்தின் கொடுமை மீதும் தங்கள் சினத்தைத் தெரியப்படுத்தியும்; கம்யூனிசக் கொடுங்கோன்மையை ஒழிக்கப்

போவதாகவும், மனித குலத்தை மார்க்சீய அடிமைத்தளையிலிருந்து விடுதலையாக்கப் போவதாகவும் கூறி அவர்கள் தெரிவித்தார்கள்.

இக் குழப்பம் நிலவிவந்த போதிலும், உலக விவகாரங்களில் யு.எஸ்.ஏ. எளிதான, முன்பின் முரண்பாடற்ற, பகுத்தறிவான பாதையிலேயே சென்று வருகிறது என்பதை அனைவரும் உணரவேண்டும். இது ஊக்கமூட்டும் நற்செயல்தான். மேலும், அதன் கொள்கை வகுப்பாளர் மட்டும் பகுத்தறிவை இழக்காது இருப்பின், அல்லது அமெரிக்கர்கள் வேண்டாத அறநெறிகளை அரசியல் உண்மையாகக் கருதாதுமட்டும் இருப்பின், இப் பாதையிலேயே அமெரிக்கா தொடர்ந்து செல்லும் என்று நம்பலாம். சுய நேர்மைபற்றிய வெறும் பனிமூடலுக்குப் பின்னால், இப் பாதையின் போக்கு மிகத் தெளிவாகவுள்ளது. 1941, மார்ச்சு 11ஆம் நாள் இயற்றப்பட்ட 'கடன் - குத்தகைச்' சட்டம் 'யு. எஸ். ஏ. யின் பாதுகாப்புக்கு இன்றியமையாததாக ஜனாதிபதிக்குத் தோன்றும் எந்த நாட்டுக்கும்' படைக்கலங்களைத் திருப்புவதற்கு அச் சட்டம் ஜனாதிபதிக்கு அதிகாரம் அளித்தது. அத்தகைய கொள்கை 1936-ல் ஒருவேளை இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், 1941-ல் அது முக்கூட்டுத் தாக்குதலுக்கு வழியமைத்தது.

'தக்க சமயத்தில் ஒரு கிழிசலைத் தைத்தால், பின்னர் வரக் கூடிய ஒன்பது தையல்களைத் தடுக்கலாம்' என்பது முதுமொழி. ஆனால், அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கையாளர்க்கு, அவர் கொள்கையால் வேறென்ன மேன்மைகள் இருந்தாலும், வேறுபல முதுமொழிகளே உதவியாக இருந்தன. 'சிறு நாணயத்தைச் சேகரிப்பதில் புத்திசாலித்தனமும், பெரு நாணயத்தை வீணுக்கு வதில் அறியாமையும்,' 'குதிரை களவாடப்பட்ட பின்னரே எப்போதும் லாயத்தைப் பூட்டி வை,' 'நேற்று முன் தினமே செய்யப்படவேண்டிய காரியத்தை நீ நாளை மறுநாள்வரை தள்ளிப் போடலாமென்றால், அதை நீ இன்று செய்யவே செய்யாதே.' 'ஒரு பெண்ணியை வீணுக்கினால், அது சேகரிக்கப்பட்டதே,'— ஆகிய இவை போன்றவையே அவர்களுக்கு உதவின.

1941 ஆகஸ்ட்டில் அட்லாண்டிக் சாசனம் வரையப்பட்டது. அவ்வமயம் செர்மனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகட்கு எதிராக பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் அமெரிக்கா எல்லாவிதமான உதவியளித்து வந்தது. அவ்வுதவி அளவில் அதிகமில்லையென்றாலும், 'போருக்கு' வழிவகுத்தது. எப்படியாவது முக்கூட்டு நாடுகளைத் தோற்கடிக்க வேண்டும் என்பதே அமெரிக்க ஆட்சியின் குறிக்கோள், அமெரிக்கப் பாராளுமன்றத்தையும் அமெரிக்க மக்களையும் போரில் ஈடுபடச் செய்வான் வேண்டி அவ்வாட்சி தாக்குதலுக்கு அடிகோல உறுதி பூண்டது. பர்ல்

துறைமுகத் தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்குப் பின், அமெரிக்க ஜனாதிபதி பிராங்க்லின் டி. ரூஸ்வெல்ட் தன் நாட்டினரை நோக்கிச் சொன்னார் :

'இது ஒரு நீண்ட போர் மட்டுமன்று. கடுமையான போருங்கூட. முழு வெற்றியையன்றி யு. எஸ். ஏ. வேறெதையும் ஒப்புக்கொள்ளாது...போரில் நாம் வெற்றி பெறுவோம். அத்துடன் அதன் பின்வரும் அமைதியையும் நாம் வெற்றிகொள்வோம்...மனித குலத்தில் பெரும் பகுதி நம் பக்கம் இருக்கிறது...இறைவன் கீழ் சுதந்திரத்திற்காக நாமும் அவர்களும் கொண்டிருக்கும் நம்பிக்கையையே நாம் பிரதிபலிக்கிறோம்.'

அவர் கூறியபடி அமெரிக்கர போரில் வெற்றிமாலை சூடிற்று. முன்னைவிட இப்போது செல்வத்துடன் திகழ்ந்தது. ஐரோப்பாவையும் ஆசியாவையும் வென்று வாகைசூட நினைத்தவர்கள் அடியோடு ஒழிக்கப்பட்டனர். ஆனால், அவர்களால் அமைதியை வெற்றி கொள்ள வியலவில்லை. இதற்குக் காரணம் வேறெதுவுமில்லை. அமெரிக்கர்களே வலிமை அரசியலால் மூளும் போர்கள் புரிவதில் திறமைமிக்கவர்கள் (ஆனால், அப்போர்களைத் தடுக்கும் திறமை எப்போதுமே இல்லாதவர்கள்). ஆனால், அமைதி அரசியலை நடைமுறையில் ஆளுவதற்குரிய திறமை அவர்களிடமில்லை. இராணுவ வெற்றி ஒன்றே போரின் ஒரே குறிக்கோள் என்றும், வெற்றியால் ஏற்படும் அதிகார (வலிமைப்) பிரச்சினைகள் உண்மையான அதிகாரப் பிரச்சினைகள் அல்ல வென்றும், ஆனால், அவை அறநெறிச் சிக்கல்கள் என்றும், எனவே, அவை 'நெறிகள்' மூலமாகவே தீர்க்கப்படவேண்டுமென்றும், அந்நெறி விடுத்து வேறு வழி செல்பவர்கள் நெறிகெட்ட பாவிகள் என்றும் அவர்கள் கருதி வருவதே இதற்குக் காரணம். நடுவல்லரசுகளின் தோல்விக்குப் பின் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் ஏற்பட்ட சக்தி சமநிலையினால் 1920-க்குப் பின் அமெரிக்காவால் 'தலையிடாக் கொள்கையை' லாபகரமாகக் கடைப்பிடிக்க முடிந்தது, ஆனால், அதே கொள்கையை 1945-க்குப் பின் அதனால் கடைப்பிடிக்க முடியாது போயிற்று. ஏனெனில், மூக்கூட்டு நாடுகளின் தோல்விக்குப் பின் (ஓரளவு அமெரிக்க வெற்றித் தந்திரத்தினால்) ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் கம்யூனிஸ்ட் வல்லரசுகளின் புதிய பேராதிக்கம் ஏற்படலாயிற்று.

புதுச் சிக்கலும் புது விடையும் : அறைகூவல் தங்களை எதிர்நோக்கும்போதெல்லாம் முன்னர் அமெரிக்கர்கள் எப்படி நடந்து கொண்டார்களோ, அதேபோல் இம்முறையும் இச்சிக்கலைப் பொறுத்த வரை அவர்கள் நடந்து வந்தார்கள். படைகளைக் குவிப்பது, நேசநாடுகளுக்கு ஆதரவு அளிப்பது, புதிய பேராதிக்கம் செலுத்த விரும்புவோரை முழுப்போர் பயங்காட்டி அச்சுறுத்த ஆயத்தமாதல் –

இவைகளே அவர்கள் எப்போதும் கடைப்பிடித்து வரும் வழிகளாகும். இம்முறையும் அவர்கள் அவற்றையே கைக்கொண்டார்கள், ஆனால், முன்னிலும் சற்றுத் தாமதத்துடனும் வேண்டாவெறுப்புடனும் செயல்பட்டார்கள். இதுவரை அவர்கள் எப்போதும் செய்து



வந்ததையே இம்முறை முன்னிலும் சற்று விரைவாகவும் ஆவலுடனும் செய்தார்கள். அதாவது, தங்கள் தேச நலன்கள் நல்லவையென்றும், மாற்றான் தேச நலன்கள் பொல்லாதவையென்றும் நம்பிச் செயலில் ஈடுபட்டனர். இந்நூற்றாண்டு நடுவில் கருமேகங்கள் சூழ்ந்த சூழ் நிலையில் நின்றுகொண்டு நோக்குங்கால், இனி ஏற்படவிருக்கும் விளைவு முன்பு இரண்டு முறையும் ஏற்பட்ட விளைவைப் போன்றே

இருக்கும் என்று தோன்றுகிறது. ஆசியாவையும், ஐரோப்பாவையும் வெல்ல விரும்புவோரைப் போரில் முறியடித்து, அடியோடு தொலைத்துக்கட்டுவதும், கைநழுவிய அமைதியிலிருந்து புதிய வெற்றியாளர்கள் தோன்றுவதும்தான் ஏற்பட்டு வருகிறது. அப்படியே இனியும் ஏற்படும். ஆனால், எதிரிடையாக நோக்குமிடத்து அவ்வினவு எந்த முன்னைய அறைகூவலினாலும் ஏற்படவில்லை யென்றும், ஓரளவு கடந்துவிட்டால் அதைச் சாதாரண படைக்கலங்களாலும், நேசக் கூட்டுகளாலும் தக்க முறையில் சமாளிக்க முடியாதென்பதும் விளங்கும். மேலும், போரில் புதிதாக இடைமறிப்பவர்கள் தங்கள் முன்னைய அதிகாரத்தை இழப்பதற்குப் பதிலாக, என்றுமே புதிய அதிகாரத்தையே பெற்று வருகின்றனர். ஆனால், அணுசக்திப் போரில் வாகைசூடுவோர் எவருமிலர். அப்போரில் தப்பிப் பிழைப்பவரும் வெகு சிலரே இருப்பர். அவர்களும் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாகவே இருப்பர். இக் கசப்பான சூழ்நிலைகளே ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அரை நூற்றாண்டிற்குள் மூன்றாம் முறையாக சக்தி சமநிலையைக் காப்பதற்கு, அமெரிக்கா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை மிகவும் கடினமானதாகவும் புதிதாகவும் செய்துவிட்டன. ஆனால், அம் முயற்சி என்றும் அறிவுடன் கூடியதாக இல்லாவிட்டாலும், ஆர்வமுடனும் சக்தியுடனும் மேற்கொள்ளப் பட்டது.

இம் முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் அனைத்தும் எந்தப் 'பெரிய திட்டத்தின்' கீழும் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வப்போது ஏற்பட்ட அறைகூவல்களைச் சமாளிப்பதற்கு எது உகந்ததாகத் தோன்றியதோ அதுவே மேற்கொள்ளப்பட்டது. ஆனால், எந்த நெருக்கடியை எடுத்துக்கொண்டாலும் அமெரிக்கா ஒரே குறிக்கோளுடனேயே அதைச் சமாளித்து வந்தது என்பது பின்னர்ப் புலனாயிற்று. ஐரோப்பாவையும் ஆசியாவையும் பிறர் (கம்யூனிஸ்ட்டுகள்) வெல்வதைத் தடுப்பதே அக் குறிக்கோள். ஆனால், இக் குறிக்கோளை எய்த அமெரிக்கா கையாண்ட முறைகளோ, பழங் காலந்தொட்டு நாடுகள் மேற்கொண்டுவரும் நேசக் கூட்டுகளும், ஆயுதங்களும்தான். 1945 ஏப்ரல் 12-ஆம் தேதிக்குப் பின்னரும் பிராங்லின் டி. ரூஸ்வெல்ட் உயிருடன் இருந்திருந்தால், 'அமைதி' எப்படி இருந்திருக்கும் என்ற பிரச்சினை, எண்பது ஆண்டுகட்கு முன்னர் 1865 ஏப்ரல் 14 ஆம் தேதிக்குப் பின்னரும், ஆப்ரஹாம் லிங்கன் உயிருடன் இருந்திருந்தால் 'அமைதி' எப்படி இருந்திருக்கும் என்ற பிரச்சினையைப் போன்று பயனற்ற கற்பனையாகும். ட்ரூமன் ஆட்சியைக் கையாடல் கும்பல்காரர் மூலம் ஏற்பட்ட ஆட்சியாகவே வரலாறு கருதும். எனினும், அது சமூக நீதியையும், தனி மனிதன் சுதந்திரத்தையும் காக்கப் பெரிதும் பாடுபட்டது. இந்நூற்றாண்டு நடுவில் பெரும்பாலான அமெரிக்கர்களை வாட்டி

வந்த கம்யூனிசப் பீதி அதையும் பிடித்துக்கொண்டது. கம்யூனிச அச்சுறுத்தலை எதிர்க்க மேற்கொள்ளப்பட்ட முக்கியமான முடிவுகள் அமெரிக்காவின் உலக அரசியல் கொள்கையைப் பிரதிபலிக்கின்றன. அவைகள் காலக்கிரமப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

1945 ஆகஸ்டு 18. இரண்டு நாட்களுக்குப் பின் பெவின் அளித்த ஆதரவுடன் தற்காலிக புல்கேரிய அரசாங்கம் ஒரு ஜனநாயகமாகாது என்று பைரன்ஸ் அறைகூவல் விடுக்கிறார். கிழக்கு ஐரோப்பாவில் 'சனநாயக ஆட்சி' ஏற்படுத்த வேண்டும் 'சுதந்திரத் தேர்தல்கள்' நடத்தப்படவேண்டும் என்று யால்ட்டாவில் மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகளை மாஸ்கோ காற்றில் பறக்க விட்டுவிட்டதென்று ஆங்கிலோ - அமெரிக்க ஆட்சியாளர் குற்றஞ்சாட்டுவதில் பல மாதங்களும் நாட்களும் கழிந்து வருகின்றன. 1944—45-ல் சோவியத் படை வலிமை மூலம் நாசிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட, இப்போது சோவியத் ஆதிக்கத்திலிருக்கும் பிராந்தியங்களில் நிறுவப்பட்டிருக்கும் 'மக்கள் சனநாயக ஆட்சிகளைச்' சட்டைசெய்யாமல் இருப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மேற்கத்திய முயற்சிகளனைத்தும் தோல்வி அடைந்துவிடுகின்றன.

1946, மார்ச் 5. கிறுத்துவ நாகரிகத்தை சோவியத் அபாயத்திலிருந்து காப்பாற்றவும், 'இரும்புத் திரையை' அகற்றி எறியவும், கம்யூனிசக் கொடுங்கோன்மைக்கு ஆளாகியிருக்கும மக்களின் அடிமைத் தளையை வெட்டி எறியவும் ஆங்கிலோ-அமெரிக்க உடன்பாடு ஏற்பட வேண்டும்மென்று அப்போது ஃபுல்டனில் இருந்த வின்ஸ்ட்டன் சர்ச்சில் வற்புறுத்துகிறார்.

1946, செப். 20. 'எப்படி லத்தீன் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலியவற்றின் அரசியல் விவகாரங்களில் தலையிட ரஷ்யாவுக்கு உரிமையில்லையோ, அதுபோல் கிழக்கு ஐரோப்பாவின் அரசியல் விவகாரங்களில் தலையிட நமக்கு எவ்வித உரிமையுமில்லை என்பதை நாம் உணர வேண்டும்' என்று செப். 12ஆம் நாள் முன்னாள் உப ஜனாதிபதியும் வணிக அமைச்சருமான ஹென்றி ஏ. வாலாஸ் நியூயார்க்கில் பகிரங்கமாக மக்களை வேண்டிக்கொண்டார். இதைச் சகிக்க முடியாத பைரன்ஸ் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிடுமாறு ட்ரூமனை வற்புறுத்தினர். அதற்குச் செவிசாய்த்த ட்ரூமன் பதவியிலிருந்து நீங்கிக் கொள்ளுமாறு வாலசைக் கேட்டுக்கொண்டார்.

1947, மார்ச் 12. 'சருவாதிகார ஆட்சியைப் பிறநாட்டு மக்கள் மீது புகுத்த முயலும் சக்திகளின் பிடியிலிருந்து அம் மக்களைக் காப்பாற்றவும், அவர்களின் சுதந்திர நிறுவனங்களைக் காப்பாற்றவும், அவர்கள் நாட்டு எல்லையை மதிக்கவும்' வேண்டி, கிரீசுக்கும்,

துருக்கிக்கும் உதவியளிப்பதற்காக ட்ரூமன் காங்கிரசிடமிருந்து 400,000,000 டாலர் தொகை கேட்கிறார். சோவியத் ஆதிக்கம் பரவுவதைத் 'தடுக்கும்' கொள்கையின் ஓர் அங்கமாக 'ட்ரூமன் கொள்கை' கருதப்படுகிறது. அவ்விதத் தடுப்பு இருக்கும் பட்சத்தில் சோவியத் யூனியன் 'வழிக்கு வந்துவிடும்' அல்லது நிலை குலைந்துபோகும் என்றும் கருதப்படுகிறது.

1947, சூன் 5. 'பசி, வறுமை, அவநம்பிக்கை, குழப்பம்' ஆகிய விரோதிகளை எதிர்க்க ஐரோப்பாவுக்கு அமெரிக்கவுதவி யளிக்க வேண்டுமென்று ஹார்வார்ட்டில் மார்ஷல் வரதாடுகிறார். அதன் விளைவாக 'மார்ஷல் திட்டம்' அல்லது ஐரோப்பிய மீட்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. பொருளாதார மீட்புக்காகவும், கம்யூனிச எதிர்ப்பிற்காகவும் சுமார் 20 மில்லியன் டாலர் மேற்கு ஐரோப்பாவுக்கு உதவியாக நான்கு ஆண்டுகளில் அளிக்கப்படவிருக் கிறது. யு. எஸ். எஸ் ஆரும், அதன் துணை நாடுகளும் இதில் கலந்து கொள்ள மறுத்துவிடுகின்றன. மேலும், இத்திட்டம் 'அமெரிக்க ஏகாதிபத்தியமே' யன்றி வேறில்லை என்று அவை கடுமையாகத் தாக்குகின்றன.

1948, சூன் 11. யு. எஸ். செனட் அகில அமெரிக்க 'பெட்ரோ போலிஸ் சட்டத்தைத்' தழுவிய வாண்டன்பர்க் தீர்மானத்துக்குச் சம்மதம் தெரிவிக்கிறது. ஐ. நா. மூலம் உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுதலில்' தனக்கு இருக்கும் நம்பிக்கையை மீண்டும் அது உறுதிப்படுத்திக்கொள்கிறது. 'தனிப்பட்ட, கூட்டுத் தற்பாதுகாப்பிற்காக பிராந்தியக் கூட்டு ஏற்பாடுகள்' செய்யப்பட வேண்டுமென்றும், அவை 'தொடர்ச்சியான உறுதியான தன்னுதவி, பரஸ்பரவுதவி ஆகியவற்றைத் தழுவி யமையவேண்டு'மென்றும் அது வற்புறுத்தியது.

1949, சன. 4. ட்ரூமன் 'நான்கு முனைத் திட்டத்தை' அறி விக்கிறார்.

1949, ஏப்ரல் 4. யு. எஸ். ஏ., கனடாவுடனும், பத்து மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும் சேர்ந்து 20 ஆண்டு வட அட்லான்டிக் (பாதுகாப்பு) ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறது. அவ்வொப்பந்தம் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பரஸ்பர உதவியளிக்க வகை செய்கிறது. 1947—48-ன் வாண்டன்பர்க் நியதியே இதன் நியதியு மாகும். நேட்டோவின் விஸ்பன் மாநாடு கூடும்போது (1952, பெப்ரவரியில்) கிரீசும் துருக்கியும் இக்கூட்டில் சேர்த்துக்கொள்ளப் பட்டன. அம் மாநாட்டில் மேற்கு ஐரோப்பாவில் துரிதமாகப் படைக் குவிப்பு செய்வதென்றும் உறுப்பு நாடுகள் உறுதி பூண்டன.

ஆனால், அவர்கள் முடிவு செய்த அளவு, விரைவுக்கு ஏற்ருற்போல் படைக்குவிப்பு செய்ய முடியாமற்போய்விடுகிறது.[2]

1950, சூன் 27. கம்யூனிச ஆக்கிரமிப்புக்கு எதிராக யு.எஸ்.ஏ. தென்கொரியாவின் இராணுவப் பாதுகாப்புக்கு வருகிறது; பார்மோசா மீதும், ஆசியாவில் கம்யூனிச ஆக்கிரமிப்பால் அச்சுறுத்தப்பட்டு வரும் மற்ற இடங்கள்மீதும் காப்பரசை ஏற்படுத்துகிறது; இராணுவப் படையெடுப்புமூலம் கம்யூனிசம் உலகையே வெல்ல இப்போது தயாராகிவிட்டது என்ற நம்பிக்கையில் பிரமாண்டமான படைக் கலக் குவிப்பில் இறங்குகிறது

1951, ஏப்ரல் 11. 1950-ல் வடகொரியாவில் யு. எஸ். படைகளை சீனு வென்றுவிடவும், அதனுடன் போரிடவேண்டுமென்று வெளிப் படையாக மக்ஆர்த்தர் வாதாடினர். அவருடைய இந்தக் கீழ்ப் படிதலில்லாமைக்காக ட்ரூமன் அவரைப் பதவியிலிருந்து நீக்கி விடுகிறார். அதன் வரலாற்றிலேயே அதிக சுபிட்ச நிலையிலிருக்கும் யு. எஸ் ஏ. மார்ஷல் திட்டத்திற்குப் பதிலாக பரஸ்பரப் பாதுகாப்பு ஏஜென்சி திட்டத்தை மேற்கொள்ளுகிறது. ஐரோப்பாவுக்கும் சுதந்திர உலகிற்கும் தொடர்ந்து பொருளாதார, இராணுவ உதவி

[2] முகப்பு (Preamble) : இவ்வுடன்படிக்கைக்குரிய கட்சியினர் ஐ. நா. சாசனத்தின் குறிக்கோள்கள், நெறிகள் ஆகியவற்றின் மீதும் எல்லா மக்களுடனும், அரசாங்கத்துடனும் அமைதியுடன் கூடிவாழும் ஆசையின்மீதும் தங்களுக்குள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள்.

அவர்கள் சுதந்திரம், எல்லாருக்கும் பொதுவான மரபுரிமை, மற்றும் ஜனநாயகம், தனியார் சுதந்திரம், மற்றும் சட்ட ஆட்சி (Rule of Law) ஆகிய நெறிகளைத் தழுவியமைந்த தம் மக்களின் நாகரிகம் ஆகியவற்றைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளனர்.

அவர்கள் வட அட்லான்டிக் பிராந்தியத்தில் ஸ்திரமான நிலைமையை உருவாக்கவும் அதை சுபிட்சப்படுத்தவும் விழைகின்றனர்.

அவர்கள் கூட்டுப் பாதுகாப்பிற்காகவும், அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணிக் காப்பதற்காகவும் கூடி ஒத்துழைப்பதென்று முடிவு செய்கின்றனர்.

எனவே, அவர்கள் இந்த வட அட்லான்டிக் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள் கின்றனர்.

விதி 1 : உடன்படிக்கைக் கட்சியினர் ஐ. நா. சாசனத்தில் சொல்லப்பட் டிருப்பதைப் போன்று தங்களுக்குள் தோன்றும் சர்வதேச வழக்குகளை உலக அமைதி, பாதுகாப்பு, நீதி ஆகியவற்றுக்கு ஊறு விளையாவண்ணம் அமைதியான முறையில் தீர்த்துகொள்வதென்றும், சர்வதேச உறவுகளில் ஐ. நா. வின் குறிக்கோளுக்கு கெடுவாத எந்த முறையிலும், பலாதகாரத்தின் மூலம அச்சுறுத்தலும் செய்வதிலிலையென்றும், படை வலிமையைப் பிரயோகிப்பதில்லை என்றும் பொறுப் பேற்கின்றனர்.

விதி 2 : உடன்படிக்கையினர் தங்கள் சுதந்திர நிறுவனங்களை வலுப்படுத்து வதன் மூலமாயும், இந்நிறுவனங்களின் அடிப்படை நெறிகளைப் பிறர் நன்முகப புரிந்து கொள்ளுமாறு செயவதன் மூலமாயும், ஸ்திரமான நிலையையும் சுபிட்சத்தையும் வளர்ப்பதன் மூலமாயும் அமைதியும நட்பும் வாய்ந்த சர்வதேச உறவை வளர்க்கப் பாடுபடுவர். அவர்கள தங்களின் சர்வதேசப் பொருளாதார கொள்கைகளில் ஏறபடும முரண்பாடுகளை நீக்கவும் அவர்கள் இருவருக்குமிடையிலேயா, அல்லது அவருகு மிடையிலேயோ பொருளாதார விஷயத்தில் ஒத்துழைக்கவும் முயல்வார்கள்.

அளிப்பதற்காக இத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. உறுதியான பரஸ்பரப் பாதுகாப்புக்கு செர்மனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளில் படைக்கலக் குவிப்பைப் பெருக்கவேண்டும் என்று வாஷிங்டன் ஒரே பிடிக்கு நிற்கிறது.

1951, செப். 8. யு. எஸ். ஏ. சப்பானுடன் அமைதி, நட்புறவு முதலிய உடன்படிக்கைகளைச் செய்கிறது. மேலும், தொடர்ந்து அதே பிலிப்பைன் குடியரசுடன் (1951, ஆக. 30) ஒரு பரஸ்பரப் பாதுகாப்பு ஒப்பந்தமும், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றுடன் (1951, செப். 1) ஒரு முக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்கிறது. இவ்வெல்லா உடன்படிக்கைகளுமே 'ஒரு காலவரையின்றி அமுலில் இருக்கவேண்டியவை'யாகும். இவ்விரு ஒப்பந்தங்களிலுமே முக்கியமான ஷரத்துகள் ஒரே மாதிரியானவை. 'விதி 2. இவ்வொப்

விதி 3 : இவ்வொப்பந்தத்தில் குறிக்கோள்களை உறுதியாக அடையும் முகத்தான், உடன்படிக்கைக் கட்சியினர் தனியாகவும் கூட்டாகவும் தொடர்ந்த உறுதியான சுயவுதவி மூலமாயும் பரஸ்பாவுதவி வாயிலாகவும் படைத் தாக்குதலை எதிர்க்கத்தக்க தனி வலிமையையும் கூட்டு வலிமையையும் வளர்ப்பர்.

விதி 4 : உடன்படிக்கைக் குரிய நாடுகளின் எல்லையுரிமைக்கோ, அன்றி அரசியல் சுதந்திரத்திற்கோ, அன்றிப் பாதுகாப்புக்கோ ஊறு ஏற்பட்டு விட்டதாக ஏதாவது ஒரு கட்சி கருதுமாயின் அப்போது அதுபற்றி எல்லாக் கட்சியினரும் கூடி ஆலோசனை செய்வர்.

விதி 5 : ஐரோப்பாவிலோ, அன்றி வட அமெரிக்காவிலோ ஒப்பந்த நாடுகளில் ஒன்றோ அல்லது பல நாடுகளோ தாக்கப்படுமாயின், அத்தாக்குதலை மற்றக் கட்சியினர் தங்கள் மீது ஏற்பட்ட தாக்குதலாகக் கருத வேண்டும்; அப்படி ஒரு தாக்குதல் ஏற்படும்பட்சத்தில் ஐ. நா. சாசனத்தின் 51ஆவது சரத்து (விதி) அளிக்கும் தனியார் அல்லது கூட்டு சுயவுதவி யுரிமையைப் பயன்படுத்தி, தாக்கப்பட்ட நாட்டுக்குத், தனியாகவோ அன்றி மற்றக் கட்சியுடன் கூடியோ வேண்டிய உதவி செய்ய வேண்டும்; மேலும், பலாத்காரம் உள்பட வேண்டிய நடவடிக்கை எடுத்து, வட அட்லான்டிக் பிராந்தியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அப்படி ஒரு தாக்குதல் ஏற்பட்டு (மேற்படி) நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அதை உடனே பாதுகாப்பு சபையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் காப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பாதுகாப்பு சபை மேற்கொண்டவுடனே, உடன்படிக்கைக் கட்சிகள் எடுத்த நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.

விதி 6 : 5ஆவது விதியில் காணப்படும் படைத் தாக்குதல் என்பது, ஐரோப்பா, அல்லது வட அமெரிக்காவில் ஒப்பந்தத்திற்குரிய எந்த நாட்டின் மீலம், பிரானசின் அல்ஜீரிய டிபார்ட் மென்டுகள், ஐரோப்பாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்த நாட்டின் படைகள், வடஅயனக் கோட்டிற்கு வடக்கே வட அட்லான்டிக் பிராந்தியத்தில் எந்தக் கட்சிக்காவது உரிமையான நிலைகள் அல்லது எந்தக் கட்சியின் கப்பல்கள் அல்லது விமானங்கள் மீது ஏற்படும் படைத்தாக்குதல் எனப் பொருள் படும்.

விதி 7 : இவ்வொப்பந்தம் ஐ. நா. வின் உறுப்பு நாடுகளுக்குரிய சாசனத்தின் கீழுள்ள உரிமைகள் கடமைகள் ஆகியவற்றையோ, அன்றி உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டும் பாதுகாப்பு சபைக்குரிய பொறுப்பையோ பாதிக்க வில்லை ; அப்படிப் பாதிப்பதாகவும் கருதலாகாது.

விதி 8 : ஒவ்வொரு கட்சியும் தனக்கும் பிற கட்சிகளுக்கும் இடையிலோ அன்றித் தனக்கும் வேறொரு மூன்றாம் அரசுக்கும் இடையிலோ செய்யப்பட்டிருக்கும் சர்வதேச ஒப்பந்தங்கள் இந்த (வட அட்லாண்டிக்) ஒப்பந்தத்திற்கு எதிரானவை அல்ல வென்று கூறுகின்றன: மேலும் அப்படி அதற்கு முரணை எந்த சர்வதேச உடன்படிக்கையும் செய்வதில்லை யென்றும் உறுதி கூறுகின்றன.

பந்தத்தின் குறிக்கோள்களை உறுதியாக அடையும்முகத்தான் உடன்படிக்கைக் கட்சியினர் தனியாகவும் கூட்டாகவும் தொடர்ந்த உறுதியான சுயவுதவிமூலமாயும் பரஸ்பர உதவி வாயிலாகவும் படைத்தாக்குதலை எதிர்க்கத்தக்க தனி வலிமையையும் கூட்டு வலிமையையும் வளர்ப்பர். விதி 3. பசிஃபிக்கில் உடன்படிக்கைக்குரிய நாடுகளின் எல்லையுரிமைக்கோ, அன்றி அரசியல் சுதந்திரத்திற்கோ, அன்றிப் பாதுகாப்புக்கோ ஊறு ஏற்பட்டுவிட்டதாக ஏதாவது ஒரு கட்சி கருதுமாயின், அப்போது அதுபற்றி எல்லாக் கட்சியினருமே கூடி ஆலோசனை செய்வர். விதி 4. பசிஃபிக் வட்டாரத்தில் உடன் படிக்கைக் கட்சியில் ஏதாவது ஒன்று தாக்கப்படுமாயின், அது தன்னுடைய அமைதிக்கும் பாதுகாவலுக்கும் அபாயமானது என்று ஒவ்வொரு கட்சியும் கருதும். மேலும், அந்தப் பொதுவான அபாயத்தை எதிர்க்கும் முகத்தான் அது தன்னுடைய அரசியலமைப்பு நடைமுறைக்கேற்றாற்போல் ஆவன செய்வதாகவும் உறுதி செய்கிறது. அப்படிப் படைத்தாக்குதல் ஏற்பட்டு அதை எதிர்க்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் காப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பாதுகாப்பு சபை மேற்

விதி 9 : உடன்படிக்கைக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து ஒரு மன்றத்தை (கவுன்சில்) இப்பொழுதே அமைக்கும். அதில் ஒவ்வோர் உறுப்பு நாட்டுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். அது இவ் வொப்பந்தத்தை அமலாக்குவது சம்பந்தமான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க எந்த நேரத்திலும் உடனடியாகக் கூட வழிசெய்யும் முறையில் அம் மன்றம் அமைக்கப்படும். அம மன்றம் அவசியமான மற்றத் துணை நிறுவனங்களை அமைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும்; குறிப்பாக அது ஒப்பந்தத்தின் 3ஆவது ரீவது விதிகளை அமலாக்குவதற்குரிய நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்வதற்காகப் பாதுகாப்புக் கமிட்டியொன்றை உடனடியாக அமைக்கும்.

விதி 10 : இவ் உடன்படிக்கையின் நெறிகளை மேலும் வளர்க்கக்கூடியதும் வட அட்லான்டிக் பிராந்தியத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தக் கூடியதுமான எந்த ஐரோப்பிய நாட்டையும் இவ் ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ளுமாறு உறுப்பு நாடுகள் ஒருமனதாக அழைக்கலாம். அப்படி அழைக்கப்பட்ட எந்த நாடும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அரசாங்கத்திடம் சேர்க்கைப் பத்திரத்தை (Instrument of accession) ஒப்படைத்துவிட்டு, இவ் வொப்பந்தத்தின் ஓர் உறுப்பு நாடாக ஆகி விடலாம். அப்படி ஒரு நாடு இவ்வொப்பந்தத்தில் சேருமாயின், அது தன்னிடம் சேர்க்கைப் பத்திரத்தை அளித்துவிட்டதென்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் அரசாங்கம் மற்ற உறுப்பு நாடுகளுக்குத் தெரியப்படுத்தும்.

விதி 11 : ஒவ்வோர் உறுப்பு நாட்டின் அரசியலமைப்பு நடைமுறைக்கேற்ப இவ் வொப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டு, அதன் ஷரத்துகள் அமலாக்கப்படும். சேர்க்கைப் பத்திரங்கள் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு சேர்க்கைப் பத்திரம் குறித்தும் அவ் அரசாங்கம் உறுப்பு நாடுகளனைத்திற்கும் தெரியப்படுத்தும். பெல்ஜியம், கனடா, ஃபிரான்ஸ், லக்சம்பர்க், நெதர்லாந்து, யூனைடெட் கிங்டம் (பிரிட்டன்), யூனைடெட் ஸ்டேட்ஸ் ஆகிய நாடுகள் உள்பட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பெரும்பான்மை நாடுகள் அதை ஏற்றுக்கொண்டதுமே அவ் வொப்பந்தம் அந்நாடுகளில் அமலுக்கு வந்துவிடும். பிறநாடுகளில் அவைகள் சேர்க்கைப் பத்திரத்தை அளித்த தேதியிலிருந்தே அமலுக்கு வரும்.

விதி 12 : பத்து ஆண்டுகள் அமலில் இருந்த பின், அல்லது அதற்குப் பின் எப்போதாவது ஒப்பந்தக் கட்சிகளில் ஏதாவது ஒன்றின் வேண்டுகோளுக்கேற்ப

கொண்டதும், உடன்படிக்கைக் கட்சிகள் தாங்கள் எடுத்த நடவடிக்கை களைக் கைவிடவேண்டும். விதி 5. 4ஆவது விதியில் காணப்படும் படைத்தாக்குதல் என்பது ஒப்பந்தத்திற்குரிய நாடுகளின் தலை நகரங்களைச் சேர்ந்த இடங்கள், அல்லது பசிஃபிக் பிராந்தியத்தில் அதன் ஆதிக்கத்தின்கீழிருக்கும் தீவுகள் அல்லது பசிஃபிக்கில் உள்ள அதன் படைகள், பொதுத்துறைக் கப்பல்கள் அல்லது விமானங்கள் ஆகியவற்றின்மீது ஏற்படும் தாக்குதலைக் குறிக்கும்.

1952, மே 26. யு. எஸ். ஏ. மேற்கு செர்மனியுடன் அமைதி, நட்பு உடன்படிக்கைகள் செய்துகொள்ளுகிறது.

1952-53 பொதுத்துறை வாழ்வில் பெயர் பெற்ற பலஅமெரிக்கத் தலைவர்கள் (கம்யூனிசம் பரவுவதைத்) 'தடுத்தல்'; 'எதிர்மறையான' காரியம் செய்தல்; மேலும் அது 'போதாததாக' இருத்தல். ஐரோப்பாவிலோ, அன்றி ஆசியாவிலோ எதிரியுடன் சமாதான உடன்படிக்கை செய்வதற்கே இடமில்லை. அடிமைத் தளையில் சிக்குண்டு கிடக்கும் மக்களை 'விடுதலை' செய்யவேண்டுமானால், போரைத் தவிர மற்றெல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வழிவகுக்கும் திட்டமொன்றை யு.எஸ்.ஏ.யும் அதன் துணைநாடுகளும் வகுக்க வேண்டும்.

இவற்றிற்கிடையில் இருபது ஆண்டுகளாக இருந்துவந்த சனநாயகக் கட்சி ஆட்சி, 1952, நவம்பர் மாதம் குடியரசுக் கட்சி வெற்றிபெறவும், முடிவடைந்தது. கவர்னர் ஸ்டீவன்சன் தோற்கடிக் கப்பட்டு, ஜெனரல் ஐசன்ஹோவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றும், அமெரிக்கக் கொள்கையில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஏற்கெனவே உருவாக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையையே பொதுவாக எல்லோராலும் விரும்பப்பட்ட 'லக்கும்' பின்பற்றலானார்.

எல்லாக் கட்சியினரும் கூடி ஒப்பந்தத்தைச் சீர்தூக்கிப் பார்க்கலாம். அப்படிப் பார்க்குங்கால் அப்போது வட அட்லான்டிக் பிராந்தியத்தின் அமைதியையும் பாதுகாப்பையும் பாதிக்கும் சக்திகளையும், சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் வளர்க்கத்தக்க ஐ.நா. சாசனத்தின்மேற் அமையவல்ல உலக, பிராந்திய ஏற்பாடு களையும் மனத்தில் கொள்ளவேண்டும்.

விதி 13: 20 ஆண்டுகள் இந்த ஒப்பந்தம் அமலில் இருந்த பின்னர், உறுப்பு நாடுகளில் ஏதாவது ஒன்று அதை விட்டு நீங்கிக்கொள்ள விரும்புமாயின், விலகுவதற்கு ஓராண்டிற்கு முன்பே அதுகுறித்து முன்னறிவிப்பு விட வேண்டும். அப்படி முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு அது நீங்கிக்கொள்ளலாம். அந்த முன்னறிவிப்பு அமெரிக்க அரசாங்கத்திடம் அளிக்கப்படவேண்டும். அவ்வரசாங்கம் அவ்வாறு தன்னிடம் வந்து சேரும் ஒவ்வொரு விலகல் முன்னறிவிப்புக் குறித்தும் பிற உறுப்பு நாடுகட்குத் தெரியப்படுத்தும்.

விதி 14: ஆங்கிலத்திலும் ஃபிரெஞ்சு மொழியிலும் வரையப்பட்டிருக்கும் இவ் வொப்பந்தத்தின் ஏடுகள் இரண்டுமே நம்பத்தகுந்தவை. இவ்வேடுகள் அமெரிக்க அரசாங்கத்தின் ஆவணக்களரியில் (archives) வைக்கப்படும். அவ்வரசாங்கத்தால் சரியானவை என்று உறுதியளிக்கப்பட்ட நகல்கள் (certified copies) மற்றக் கையொப்ப நாடுகட்கு அளிக்கப்படும்.

இதற்குச் சாட்சியாக முழு உரிமை பெற்ற தூதர்கள் (Plenipotentiary) இவ் வொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

உள்நாட்டுச் 'சக்திச் சமநிலையைப்' பொறுத்தமட்டும் ட்ரூமன் ஆட்சியிலேயே செல்வாக்குநிலை, கட்டமைப்புக்குள் கொண்டுவரப் பட்ட தொழிலாளிகள் (organised labour), விவசாயிகள் முகாம், மற்றும் சிவில் அதிகார வர்க்கம் ஆகியவற்றிலிருந்து அப்பால் அகன்றுவிட்டது. அவ்விடத்தை 'வியாபாரப் பெரும்புள்ளிகளும்', படையையே தொழிலாகக் கொண்ட இராணுவ நிபுணர்களும் பிடித்துக்கொண்டுவிட்டார்கள். அதன் விளைவாக இதுகாறும் ஹாரிங்டன், மாண்டெஸ்க்யூ, மாடிசன் ஆகிய அரசியலறிஞர்கள் கண்டுவந்த கனவு நனவாகலாயிற்று—இந் நூற்றாண்டின் நடுவில் பொருளாதார சக்திக்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இடையே அமெரிக்க சமுதாயத்தில் கலப்பு ஏற்படலாயிற்று. பொருளாதாரத் துறையில் 'மாற்றம் ஏற்படுவதற்குரிய காலம்' வந்துவிட்டதென்று மக்கள் திடமான நம்பிக்கை பூண்டிருந்ததால், 'நியூடீல்', 'ஃபேர் டீல்' (Fair Deal) யுகத்தில் நலியத் தொடங்கிய கூட்டுத் தொழில், நிதித் துறைகள் மழையைக் கண்ட கொடிகளாயின. மாட்சிமை பொருந்திய குடியரசுக்கும் சுதந்திர உலகிற்கும் சேவை செய்யும் வாய்ப்பும், வருங்கால அறைகூவலை நல்ல முறையில் சமாளிப்பதற்குரிய புதுப் பொறுப்பும் அவற்றிற்குக் கிட்டின.

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் (ஐக்) .1952, டிசம்பரில் கொரியாவுக்கு விஜயம் செய்தார். 1953 ஜனவரியில் வின்ஸ்டன் சர்ச்சில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். இவ் விஜயங்களுடன் ஒரு புதிய யுகமும் பிறந்துவிட்டது எனலாம். புதிய உலகம் சென்ற தலைமை அமைச்சர் (சர்ச்சில்), தோல்வி அல்லது உலகப் போரினும் திக்குமுக்காடல் சாலச் சிறந்தது என்ற கருத்தை எடுத்துரைத்தார். இது 'தடுப்பிற்குப்'[3] பதில் 'விடுதலையை' விரும்புகின்ற வெளிநாட்டு அமைச்சர் ஜான் ஃபோஸ்ட்டர் டல்ல சுக்குப் பெரிய தருமசங்கடமாகப்போய்விட்டது. அவர் மேற்கு ஐரோப்பாவில் படைக்கலங்களைக் குவித்து அதை மீண்டும் ஐக்கியப் படுத்தவும், பிரிட்டிஷ், ஐரோப்பியப் பொருளாதாரப் பெறுமானத்தை (solvency) பலப்படுத்தவும், ரஷ்யாவுக்கு எதிராகத் தீங்கான

[3] 1952, ஜூன் 21ஆம் தேதி பக்ஸ்பேலோ என்ற இடத்தில் ஆற்றிய உரையிலிருந்து திரு. டல்லஸின் நம்பிக்கைகளை அறிந்துகொள்ளலாம். 'இன்று மனித வர்க்கத்தில் மூன்றில் ஒரு பாகம் ஒரு புதிய இருள் யுகத்தின் கொடுங்கோன்மை அடக்குமுறைக்கு ஆளாகி நிற்கிறது. இந் நிலைமையை நாம் என்றும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. மேலும், அவ்வடிமை நிலையை உறுதிப்படுத்தும் எந்த 'உடன்படிக்கை'மூலமும் நாம் பாதுகாப்பை வீலை கொடுத்து வாங்க முடியாது. அடிமையுண்டு கிடக்கும் 800,000,000 மக்களைத் தடுக்கும் எந்தத் தடுப்புக்கும் நாம் தயாரில்லை.' ஆனால், 'தடுப்புக் கொள்கை'யின் தந்தையான ஜார்ஜ் எஃப். கென்னன் என்பவரோ பின்வருமாறு வாதிப்பது வழக்கம்: நடத்தை—செயலைக் கட்டுப்படுத்தும்: எதிர்மறைத் தடைகளாகமட்டும் வெளிநாட்டுக் கொள்கையில் அறநெறிகளைக் கருதவேண்டும். அவற்றை இராஜதந்திரம் அல்லது போர்மூலம் எய்தக்கூடிய உடன்பாட்டுக் குறிக்கோளாகக் கொள்ளலாகாது. 1952, மே 14ஆம் நாள் கென்னன் ரஷ்யாவுக்கு யு.எஸ். தூதராக நியமிக்கப்பட்டார். அவர் தம் முன்னோர்களைப்போலல்லாது, ரஷ்யரையும் ரஷ்யாவையும் என்னவென்று நன்கு

நடவடிக்கைகள் எடுக்கவும், சியாங்கே-ஷேக்கின் மூலமாகவோ அன்றிச் செஞ்சீனுவை மறித்தோ, அன்றி அதன்மீது குண்டுமாரி பொழிந்தோ எதிரியைப் பணியவைக்கவும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். உலகப் போருக்கு அடிகோலாத, முடிவேயில்லாத கெடுபிடிப் போர்தான் யு.எஸ். வெளிநாட்டுக் கொள்கை, உலக அரசியல் கொள்கை ஆகியவற்றின் நிலையான குறிக்கோளாகி விட்டது. (இவ் அணுச் சக்தி யுகத்தில்) வல்லரசுகள் ஒன்றை யொன்று அடியோடு தோற்கடிக்க முடியாமையே இதற்குக் காரணம்.

அமெரிக்க முடிவு: உலகை வெல்லச் சருவாதிகார வல்லரசுகள் சமீபத்தில் விடுத்த அறைகூவலைச் சமாளிக்க இந் நூற்றாண்டின் நடுவில் அமெரிக்கா எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளித்தவை, தோல்வியடைந்துவிட்டனவா என்பது குறித்துக் கருத்து வேற்றுமை நிலவி வருகிறது. ஒருவிதத்தில் அது தோல்வியே என்றுதான் தோன்றுகிறது. ஏனெனில், இப் புதுப் பகைவன் பார்மோசாவைத் தவிர சீனு முழுவதையும் கைப்பற்றியதோடல்லாமல், யூகோசுலேவியாவைத் தவிர வால்கன்ஸிலும் கிழக்கு ஐரோப்பா முழுவதிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்திவர முடிந்தது. ஆனால், மற்றொரு கோணத்திலிருந்து பார்க்குங்கால், அது வெற்றியென்றே தோன்றுகிறது. ஏனெனில், தென்கிழக்கு ஆசியாவிலேயே, கிட்ட, மத்தியக் கிழக்கிலோ, அன்றி மேற்கு ஐரோப்பாவிலோ பகைவன் புதிய இடங்கள் எதையும் கைப்பற்ற முடியாதுபோயிற்று. அமெரிக்க நடவடிக்கை பணவீக்கச் செழுமையை ஏற்படுத்தியது. கட்சிகளாகப் பிரிந்து நின்ற மக்களின் முழு ஆதரவையும் பெற்றது. அதன் இறுதி விளைவுகள் யாதாயிருக்கும் என்பதும், அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் (கம்யூனிசத்தைத்) 'தடுத்து', மார்க்ஸ்லாந்துடன் சக்தி - சமநிலையைக் காக்க வலுவான நிலையிலிருந்து கொண்டு இறுதியில் தற்காலிக உடன்பாட்டுக்கு வருவார்களா, அல்லது தம் வலிமையாலும் படைக்கலக் குவிப்புப் பொருளாதாரத்தின் அரசியல் தேவைகளாலும் உந்தப்பட்டு, அடிமையாகிக்

புரிந்துவைத்திருந்தார். மேலும், அவர் புலன்களுக்கு அப்பாற்பட்ட சட்ட அல்லது அறநெறிக் கருத்துகளைவிடச் சரியாக வரையறுக்கப்பட்ட 'நாட்டின் நலனே' ஒரு நாட்டின் கொள்கைக்கு அடிப்படையாக விளங்கவேண்டும் என்று கருதிவந்தார். இப் பண்புகள் இருந்தும், ஒருவேளை இப் பண்புகளாலேயோ என்னவோ அவரை யு.எஸ்.எஸ்.ஆர். 1952, அக். 8ஆம் நாள் ஒரு 'விரும்பத்தகாதவர்' (persona non grata) என்று கூறி, நாட்டிலிருந்து நீக்கிவிடுமாறு செய்துவிட்டது. செப். 19ஆம் நாள் பெர்லினில் அவர் பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்த கருத்துகளே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. 1941-ல் சேர்மனியில் அவர் அடைபட்டுக் கிடந்ததை நினைவுபடுத்திக்கொண்டு அக் கூட்டத்தில் அவர் கூறியதாவது: 'சேர்மானியருடன் பேசும் உரிமையில்லாமல் வீதிகளில்மட்டும் செல்ல நாசிகள் அனுமதித்திருந்தால் அது எப்படி இருந்திருக்குமோ, அதேபோல்தான் மாஸ்கோவில் இன்று நாங்கள் வாழவேண்டியிருக்கிறது' என்று கூறினர். மாஸ்கோவிலுள்ள வெளிநாட்டுத் தூதர்களின் நிலைமைபற்றிய இவ் வருணனையை இரெம்லின் 'ஒரு பாசாண்டம், அவதூறு, பொய்' என்று இடித்துக் கூறியது.

கிடக்கும் மக்களின் அடிமைத் தளையைக் களைந்தெறிந்து, பகைவலின் படைவலிமையை அடியோடு ஒழிப்பார்களா என்பதும் தெரியவில்லை. முதற் பாதையில் இறங்குவார்களேயானால், போருக்கே இடமில்லாத முறையில் இதுகாறும் வாழையடி வாழையாய் இருந்துவரும் முக்கியமான குறிக்கோளான சக்தி - சமநிலையைத் தாபிக்க முடியும். இல்லையெனில், பின்னைய பாதையில் செல்வார்களேயானால், 'சிலுவைப் போரைப்'போன்ற ஒரு போர் ஏற்படுவது நிச்சயம். அப் போரில் வெற்றிபெற்றோர் எவருமே இரார். இவை இரண்டும் 1950–60 அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைபற்றிப் பின்வரும் முக்கியமான வினுக்களை எழுப்பின :

1. அமெரிக்கத் தொழில், படைத் துறைகளை வளர்த்தும், நேச நாடுகட்கு உறுதியளித்தும், அமெரிக்கா உலகில் கம்யூனிஸ்ட் சக்திக்கு நிகராகத் தன் சக்தியைச் 'சமப்படுத்துவதா ?, அன்றிக் கம்யூனிச இராணுவ வலிமைக்கு நிகராக மேற்கு ஐரோப்பாவிலும் கிழக்கு ஆசியாவிலும் தன் இராணுவ வலிமையைப் பெருக்குவதா ?' என்பது முதல் வினு. யு.எஸ்.ஏ. 1950-ல் இரண்டாவது வழியில் இறங்கியது. ஆனால், வெகு விரைவில், அது தன் ஐரோப்பிய ஆசிய நேசநாடுகளின் பொருளாதார, சமூக, அரசியல் ஸ்திரத்துடன் தன் பெறுமானம் ஒத்துப்போகாது என்பதை உணரத் தொடங்கியது.

2. மேற்கு ஐரோப்பாவுக்கும் கிழக்கு ஆசியாவுக்கும் காலவரையறையின்றி அமெரிக்கா உதவிமானியத் தொகை அளித்துவருவதா? இல்லை, இந் நாடுகள் தம் வலிமையிலேயே ஊன்றி நிற்கும்படி செய்வதற்காக அமெரிக்காவுக்கும் அதன் 'எதிரிக்கும்' தம் பண்டங்களைப் போதிய அளவு விற்பனை செய்ய விடுவதா ? இவற்றில் அமெரிக்கா முதல் வழியைக் கடைப்பிடித்தது. ஆனால், இக் கொள்கை தம் பெரும்பாலான நேசநாடுகட்குப் பிடிக்கவில்லை என்பதை வெகுசீக்கிரம் உணர்ந்தது. அவைகள் 'வியாபாரத்தையேயன்றி உதவியை ' விரும்பவில்லை.

3. படைக்கலப் பெருக்கத்திலும் வெளிநாட்டு உதவியிலும் பணத்தை வாரி இறைத்துக் கணக்கு வழக்கு இல்லாமல் அமெரிக்கா தன் சுபிட்சத்தைப் பெருக்குவதா ? (1950-க்குப்பின் இக் கொள்கையையே யு.எஸ்.ஏ. கடைப்பிடித்துவந்திருக்கிறது.) இல்லை, தொழிற் சாலைகளும் விவசாயமும் மட்டில்லாமல் உற்பத்தி செய்திருக்கும் பண்டங்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைகள் தேடுவதா ?

4. உலகப் போருக்கு அடிகோலாமல், எதிரி முகாமில் அடிமைக்கு ஆளாகி நிற்கும் மக்களைப் புரட்சி செய்யுமாறு தூண்டுவதா ? அன்றி, (இறுதியில் சக்தி - சமநிலை ஏற்பட்டுவிடும், அல்லது தற்காலிக உடன்பாடு ஏற்படும் என்ற நம்பிக்கையில்) எதிரி மண்ட

ல்களாக உலகம் பிளவுண்டு நிற்பதற்கு இசைந்தோ அமெரிக்கா கெடுபிடிப் போரில் வெற்றியடைய முயல்வது நல்லதா? 1951-ல் யு எஸ்.ஏ. இவற்றுள் முதல் வழியைப் பின்பற்றியது. கம்யூனிசத்தைத் 'தடுப்பது' மட்டும் போதாது. அடிமைக்கு ஆளாகியிருக்கும் மக்களை 'விடுதலை' செய்வதும் அவசியம் என்று வாதிக்கப்பட்டது. ஆனால், அடிமைத் தளையை அறுத்தெறிவதில் அது எவ் வெற்றியும் காண முடியவில்லை.[4]

5. அமெரிக்கா புதிதாகப் படைவலிமையின் உதவிகொண்டு, கொடுங்கோன்மைக்கு ஆளாகியிருக்கும் மக்களை விடுதலை செய்யும் நோக்கத்தில் பாவத்தை எதிர்த்துப் புதிய புனிதப் போரில் இறங்குவதா, அல்லது புதிய சக்தி-சமநிலை அடிப்படையில் கொடிய சக்திகளுடன் உலகைத் துண்டாட முன்வருவதா? இதில் பெரும்பாலான அமெரிக்கருக்கு இரண்டாவது வழி அறவே பிடிக்கவில்லை. அதில் இறங்குவதும் தீயவைக்குத் தலைசாய்ப்பதும், சுதந்திரம் பற்றிய அமெரிக்கர் கருத்துகளைக் காற்றில் பறக்கவிடுவதும் ஒன்றே.

[4] 1951-ல் இயற்றப்பட்ட பரஸ்பரப் பாதுகாப்புச் சட்டத்திற்கு விஸ்கான்சினைச் சேர்ந்த ஹானரபிள் சார்லஸ் ஜே. கெர்ஸ்ட்டன் ஒரு திருத்தம் கொண்டு வந்தார். (அது பின்னால் இயற்றப்பட்ட சட்டங்களிலும் தொடர்ந்து இடம் பெற்று வந்தது.) அதனமூலம் எதிரி முகாமில் புரட்சி ஏற்படுத்த அரசாங்கத்திற்குக் காங்கிரஸ் அனுமதித்தது. மேலும், அது 'சோவியத் யூனியன், செக்கோசுலேவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா, புல்கேரியா, அல்பானியா, லித்துவானியா, லாட்வியா, எஸ்டோனியா, அல்லது கம்யூனிஸ்ட்டு ஆதிக்கத்திலிருக்கும் அல்லது கம்யூனிஸ்ட்டுகள் கைப்பற்றியிருக்கும் சேர்மனி, ஆஸ்திரியாவைச் சேர்ந்த இடங்கள், அல்லது சோவியத் யூனியன விழுங்கிவிட்ட மற்ற நாடுகள் முதலியவற்றில் வாழ்ந்துவரும் அல்லது அவற்றினின்று தப்பித்து ஓடும் குறிப்பிட்ட சில நபர்களைச் சேர்த்து அவர்களை நேட்டோவை ஆதரிக்கும் இராணுவத்தில் சேர்க்கவும், மற்றத் தேவைகட்காகவும்' 100,000,000 டாலர்கள் அளித்தது.

மாஸ்கோவில் முன்னுள் யு. எஸ். தூதராகப் பணியாற்றிய அட்மிரல் ஆலன் ஜே. கர்க், 'ரஷ்ய மக்கள் விடுதலைக்கான அமெரிக்கக் கமிட்டி'யின் தலைவராக உடனடியாக நியமிக்கப்பட்டார். அவரை 1952, ஆக. 14ஆம் நாள் ஜனுபதி ட்ரூமன், உளப்பாங்கு திறமுறை போர்டின் (Psychological Strategy Board) டைரக்டராக நியமித்தார். வாஷிங்டன் சர்வகலாசாலையின் ஜனுபதி டாக்டர் ரேமாண்டு பி. ஆலன் இதற்குமுன அப் பதவி வகித்துவந்தார். அட்மிரல் கர்க் இப் பதவிக்கு ஏற்றவர் என்பது அவருடைய வெற்றிகளிலிருந்து தெரியவந்தது. சோவியத் யூனியனுக்கு எதிரான ரஷ்யர், யுக்ரேனியர் பல குழுவாக இருந்தார்கள். மேலும், அவர்கள் முன்னுள் பகைமையாகவும் இருந்துவந்தனர். சோவியத் ஆட்சியைக் கவிழ்க்க அவர்களைத் திரட்டின பெருமை அட்மிரல் கர்க்கையே சாரும். அதே நாள் திரு. கர்ஸ்ட்டன் பின்வருமாறு சொன்னதாகக் கூறப்பட்டது. 'தடுப்பு, ஒப்பந்த சகவாழ்வுக்' கொள்கை ஓர் எதிர்மறைக் கொள்கையாகும். மேலும், அது நெறியற்றதும், கிறித்துவ மதத்திற்கு எதிரானதுங்கூட. ஏனெனில், அது எந்த மதத்தின் கண்ணோட்டத்திலும் அறநெறியிலுமிருந்தும் பார்க்குங்கால், தீயவை—கொடியவை, என்று தோன்றுபவைகளுக்குத் தலைசாய்த்ததுபோலாகும். இக் கொள்கை மனிதவர்க்கத்தின் மூன்றில் ஒரு பகுதியைக் கம்யூனிஸ்ட்டுப் போலிசு (காவல்) அரசாங்கத்தின் அடிமைத் தளைக்கு ஆளாக்குகிறது. இது அமெரிக்கா நாட்டுக்கே எதிரான கொள்கையாகும். ஏனெனில், இது சுதந்திரப் பிரகடனத்திற்கு (Declaration of Independence) முரணைச் செல்கிறது. அது கடைசியில் மூன்றும் உலகப் போரில் தான் போய் நிற்கும்....அதனால் பொருள் வீரயமாவதுடன், அது நாட்டையே வறுமையில் ஆழ்த்திவிடும். டுவைட் டி. ஐசன்ஹோவர் குறிப்பிட்டார்: 'அமெரிக்காவின் உண்மையான அமைதித் திட்டம், ஐரோப்பிய, ஆசிய அடிமை நாடுகளை விடுதலை செய்வதை அவர்கள் தனது அமைதிக் குறிக்கோள்களில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.'

என்று கருதினர். சரி, அதை விட்டுவிட்டு முதற் கொள்கையைக் கடைப்பிடிக்கலாமென்றால் அது மூன்றும் உலகப் போரில் கொண்டு போய்விடும் என்பது நிச்சயமாகத் தோன்றியது. அப்படி ஒரு போர் ஏற்படின் அதில் 'வாகை சூடுவோர்' எவராயிருப்பர் என்றோ, அன்றி விடுதலை செய்ய எவரும் பிழைத்திருப்பரா என்றோ, எவராலும் கூறுவதற்கில்லை.

அனைத்துமே கடினமான கேள்விகள். அவற்றிற்கு எளிமையான விடை கண்டுபிடித்துவிடலாமென்று நினைப்பவர்கள் வெறுங் கற்பனையாளர்களே. என்னதான் அறநெறி பேசினாலும், அமெரிக்காவின் அடிப்படைக் குறிக்கோள் முன்போல் இன்றும் என்றும் ஒன்றே. பகை வல்லரசானது ஐரோப்பாவையும் ஆசியாவையும் வெல்வதைத் தடுப்பதே அக் குறிக்கோள் ஆகும். 1945 முதல் 55 வரை மேற்கொள்ளப்பட்ட அமெரிக்கக் கொள்கைகள் இக் குறிக்கோளை அடையப் பயன்பட்டனவா, இல்லை, எதை அமெரிக்கா தடுக்க வேண்டுமென்று பாடுபட்டதோ அதைத் தோற்றுவித்ததா என்பது எண்ணற்ற, நினைத்துப் பார்க்க முடியாத பல சக்திகளைப்பொறுத்து இருக்கிறது. அவைகள் சாலமனின் அறிவிற்குக்கூட எட்டாதது. மேலும், அது அமெரிக்க முயற்சிக்கு மாஸ்கோ, பெய்ப்பிங் தலைவர்கள் அளிக்கும் விடையையும் பொறுத்திருக்கிறது. இதுவரை அளித்த விடை சொல்லளவில் உகந்ததாயிராவிட்டாலும், செயலைப் பொறுத்தமட்டும் அறிவுடன் கூடியதாகவே அமைந்திருக்கின்றது. அது கெடுபிடிப் போரில் அமெரிக்க அரசியல் மேதைகளுக்குள்ள கூரிய அறிவையே உணர்த்துகிறது. இனி, நடக்கவிருக்கும் செயல்கள் வாஷிங்டன், மாஸ்கோ, பெய்ப்பிங் ஆகியவை காட்டும் அறிவையே பொறுத்திருக்கிறது. நடைமுறை அரசியலில் இருதரப் பினரும் பகுத்தறிவுவழி செல்லின் சக்தி-சமநிலை ஏற்படும்; அத்துடன் கூடிய ஒருவகை மனநிம்மதியற்ற அமைதியும் உருவாகும். இரு தரப்பினரும் மெஸ்ஸியானிக் கொள்கையைக் கடைப்பிடிப்பின், அது அழிவைப் பெய்யும்; போரையே உண்டுபண்ணும். அத்துடன் கீழ்வரும் அமெரிக்கத் துதிப்பாடல் உணர்த்தும் மனித நம்பிக்கைக்கே உலை வைத்துவிடும்.'

> 'கிரீன்லாந்தின் பனிமலையிலிருந்து
> இந்தியாவின் பவளக் கரையிலிருந்து,
> பொன்கலந்த மண்ணை அடித்துவரும்
> ஆஃப்ரிக்காவின் தங்கச் சுனையிலிருந்து,
> பண்டைய நதிகள் பலவற்றிலிருந்து
> செழிப்பான சமவெளி பலவற்றிலிருந்து
> குற்றங்களிலிருந்து தங்கள் நாட்டை
> விடுதலை செய்யுமாறு நம்மை அழைக்கின்றார்கள்...'

விடுதலையும் உதவியும்: 'சமைத்த சூட்டுடன் சூப்பைச் சாப்பிடுவதில்லை' என்பது ஒரு பழங்கால ரஷ்யப் பழமொழி. ஐசன்ஹோவர் ஆட்சிக்காரர்கள் (1953–61), வெளிநாட்டுக் கொள்கையில் முதலில் அனலைக் கக்கினர்கள். ஆனால், கடைசியிலோ அமைதிக்காக முயலலானர்கள். டல்லஸ் ஆரம்பத்தில் 'விடுதலைக்காக' விடுத்த வேண்டுகோள்கள் அனைத்தும் ஐசன்ஹோவரின் கருத்துகளில் பிரதிபலித்தன. 'எங்களுக்கு லாபம் சம்பாதிப்பதற்காக நாங்கள் ஒருகாலும் எந்த மக்களும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு மனம் ஒப்போம்.....ஐரோப்பாவிலும் இரண்டு அமெரிக்காவிலும் நாங்கள் கண்ணெனப் போற்றிப் பாதுகாத்து வரும் சுதந்திரமும், ஆசியாவில் இன்று நசுக்கப்படும் சுதந்திரமும் வெவ்வேறன்று' என்று ஜனாதிபதி கூறினர். 1953, பெப்ரவரி 2ஆம் நாள் இப் 'புதிய உடன்பாடு' வெளிநாட்டுக் கொள்கையானது, ஐசன்ஹோவர் பார்மோசாவிலிருந்து யு.எஸ்.ஏயைச் சேர்ந்த 7ஆவது கப்பற்படையை நீக்கிவிட்டு, சியாங்கை-ஷேக்கை 'சீனு (செஞ்சீனு) சென்று அதைக் கம்யூனிசத்திலிருந்து விடுதலை செய்ய வேண்டும்' என்ற அவரது (சியாங்கின்) நெடுநாள் ஆசையை நிறைவேற்றிக்கொள்ளுமாறு அனுமதித்தபோது, முதலில் அமலாக்கப்பட்டது எனலாம். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர், போர்க் கைதிகளை அவரவர் நாட்டுக்குத் திரும்ப அனுப்புவதற்குக் கம்யூனிஸ்ட்டுகள் தலைசாய்த்ததற்கப்புறம், கொரியாவில் நடைபெற்றுவந்த சிக்கலான சண்டையில் 25,604 அமெரிக்கர்கள் மடிந்தபின், 108,718 பேர் காயமடைந்தபின், 7,955 பேர் காணுமற்போனபின், 1953 ஜூலை 26ஆம் நாள் செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தால் அச் சண்டை முடிவடைந்தது. ஓராண்டு கழிந்து ஐசன்ஹோவர் இந்தோசீனுவில் யு.எஸ். இராணுவத் தலையீடு செய்யவேண்டுமென்று இராணுவச் சிப்பந்திக் கூட்டுத் தலைவர்கள் கூறிய ஆலோசனையை ஏற்க மறுத்துவிட்டு, 1954-ல் ஜெனீவா மாநாட்டில் குழப்பம், பிளவுக்கு இடையில் செய்யப்பட்ட அமைதி உடன்படிக்கைக்குத் தான் ஒரு கட்சியாகாமலேயே இசைந்தார்.

ஐசன்ஹோவரின் முதல் ஆட்சியில் அமெரிக்காவின் கௌரவம் இருந்த இடம் தெரியாமல் குலைந்துவிட்டதென்று கூறலாம். இதற்கு 'மக்கார்த்தியின் கொள்கையே' காரணம். அந்தப் பொருத்தமற்ற (மடத்தனமான) கம்யூனிச எதிர்ப்புக் கொள்கையை ஜனாதிபதியும், காபினட்டும், வெளிவிவகாரத்துறையும், காங்கிரசும், பத்திரிகைகளும், பொதுமக்களும் மாதக்கணக்கில், வருடக்கணக்கில் ஆதரித்துவந்தார்கள். அதை நாட்டுப் பற்றின் சிகரமாகக் கருதி வந்தார்கள். இந்தக் கம்யூனிச எதிர்ப்புக் கொள்கை, 1953, ஜூன் 19ஆம் நாள் 'அணுச்சக்தி வேவுகாரர்கள்' என்று சந்தேகிக்கப்பட்ட

ஜூலியஸ், ஈதல் ரோசன்பர்க் என்ற இருவரும் மின்பாய்ச்சலால் (electrocution) கொல்லப்பட்டபோது, அதன் உச்ச கட்டத்தை அடைந்தது எனலாம். அவர்கள் புரிந்த குற்றமோ ஐயத்திற்கிடமானது. யு.எஸ்.எஸ்.ஆர்., அமெரிக்காவின் போர்க்கால நேச நாடாக இருந்தபோது யு.எஸ்.எஸ்.ஆருக்கு 'இரகசியங்களைத்' தெரியப்படுத்தியதே அவர்கள் இழைத்த குற்றம். ஆனால், அவர்களுக்கு அளித்த தண்டனை குற்றத்திற்கு ஏற்றாற்போல் அமையவில்லை. அதன் விளைவு யாதெனில், சுதந்திர உலகிலும் நடுநிலை உலகிலுமிருந்த எண்ணற்ற தாராளவாதிகள் இத் தண்டனையைக் கேட்டு இடியோசை கேட்ட நாகம்போலானார்கள். கம்யூனிஸ்ட்டுகளோ இதைவிடக் கொடிய அட்டூழியங்கள் தங்கள் தலைவர்கள் புரிந்ததை மறைத்துவிட்டு, ரோசன்பர்க் வழக்கை எடுத்துக்காட்டாகக் கொண்டு, இருந்த இடமெல்லாம் 'அமெரிக்காவுக்கு எதிராகப்' பிரசாரம் செய்யப் புறப்பட்டார்கள். 1954–55-ல் விஸ்கான்சினிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஜூனியர் செனட்டர் ஜோசஃப் மக் ஆர்த்தி கும்பலாட்சி, பொறுப்பின்மை, நிரபராதிகளைத் துன்புறுத்தல், நூல்களைக் கொளுத்துதல், பகுத்தறிவின்மை ஆகியவற்றின் சின்னமாக உலகெங்கும் கருதப்பட்டார். கடைசியில் அவர் மதிப்பிழந்து, பொதுமக்களின் ஆதரவை இழந்து, செனட்டால் சோதிக்கப்பட்டு, அமெரிக்கா 'துரோகிகளைக்' கண்டுபிடிக்கும் பணியில் ஓரளவு பகுத்தறிவுடன் நடக்க முயன்றபின் (1957மே 2ஆம் நாள் தமது 47ஆவது வயதில்) இறைவனடி சேர்ந்தார். அதற்கிடையில் மக்கார்த்தியின் கொள்கைக்குப் பலியான ஆயிரக்கணக்கான மக்கள் (அவர்களில் ஒருவர்கூட கம்யூனிஸ்ட் இல்லை) தமது பதவியை இழந்து, சமூக பகிஷ்கரிப்புக்கு ஆளாகிச் சிறை செல்ல நேரிட்டது. 1954-ல் வீவிஸ்பர்க்கிலுள்ள மத்திய சிறைச்சாலையில், தான் கம்யூனிஸ்ட் அல்லவென்று மறுத்த வில்லியம் ரெமிங்டன், பொய்ச் சான்றுக் குற்றத்திற்காக அவருடன் சிறையிலிருந்தவர்களின் கத்திக்கு இரையானார். அதே சமயம் கம்யூனிஸ்ட்டு வேவுகாரர்களுக்குத் தான் 'இரகசியத்தைத்' தெரியப்படுத்தவில்லை என்று வாதாடிய அல்ஜர் ஹிஸ் என்பவர் தன்னுடைய தண்டனை முடிந்ததும், விடுதலை செய்யப்பட்டார்.[5]

யு.எஸ்.எஸ்.ஆரின் கொள்கை வகுப்பாளரைப் போன்று, அதற்கு முந்திய முசோலினியின் இத்தாலி, ஹிட்லரின் செர்மனியைச் சேர்ந்த கொள்கை வகுப்பாளரைப் போன்று, யு.எஸ்.ஏ.யின் கொள்கை வகுப்பாளரும் 'பாதுகாப்பு' என்ற

[5] இவ் வழக்குகள்பற்றி எழுதப்பட்டிருக்கும் கருத்துகளை இங்குக் கூறுவது இயலாதது. எனவே, ஓவன் லாட்டிமோரின், 'அவதூறுப் பட்ட பாடு'; வில்லியம் ஏ. ரீபெனின், 'அணுச்சக்தி வேவு மோசடி'; ஹார்வி மாட்டுசோவின், 'பொய்ச் சான்று'; அல்ஜர் ஹிஸ்ஸின், 'பொதுமக்கள் கருத்து நீதிமன்றத்தில்,' மற்றும் ஃபிரெட் ஜே. கூக்கின், 'ரகசியம்' என்ற நூல்களையும் பார்க்கவும்.

பெயரில் பொறுமையின்மை, அநீதி ஆகியவற்றை ஆதரிக்கும் எந்த நாடும் படைவலிமை அல்லது சலுகைகள் இவற்றைத் தவிர சாதாரணமாக நண்பர்களைப் பெறவோ, மக்களின் ஆதரவைப் பெறவோ ஒருகாலும் முடியாது என்ற உண்மையைக் காலங்கடந்து உணரப் புறப்பட்டார்கள். சருவாதிகாரப் பொய் மன்னர்கள் புரிந்த குற்றங்கள், யு.எஸ்.ஏ.யில் மக்கார்த்தி இழைத்ததைவிடப் பன்மடங்கு கொடியவை. ஆனால், 20ஆம் நூற்றாண்டில் ஜனநாயகம், சுதந்திரம், நீதி ஆகியவற்றின் உலக மையமாக விளங்கிவருவதாகச் சொல்லித் திரிந்தது வட அமெரிக்கக் குடியரசேயன்றி, ரோம், பெர்லின், மாஸ்கோ இவைகளின் கொடுங்கோலர்கள் அல்லர். அம்மட்டோ? இங்கு—அமெரிக்காவில்தான் கோடிக்கணக்கான வெள்ளையரல்லாத அமெரிக்கர்கள் கீழ்ச் சாதியினரைப்போல் சமூக பகிஷ்கரிப்புக்கும், பாரபட்சத்துக்கும், இனவெறுப்புக்கும் ஆளாக்கப் பட்டார்கள். வெளிநாடுகளில் வாழ்ந்துவந்த எண்ணற்ற மக்கள் இதுபற்றி அவரவர் முடிவுக்கு வந்தனர்.

இச் சூழ்நிலையிலும் வாஷிங்டன் மற்ற மக்கள், அரசாங்கங்களின் விருப்பு வெறுப்பையும் முடிபுகளையும் ஓரளவு கட்டுப்படுத்தி வந்தமை வியப்பையே அளிக்கிறது. இதற்குக் காரணம் இரண்டாகும். ஒன்று, அமெரிக்க வலிமையும் பணமும்; மற்றொன்று, கம்யூனிச சருவாதிகாரத்தால் விளையும் தீங்குகளைச் சுதந்திர உலகமெங்கும் வாழ்ந்துவந்தவர் அடியோடு வெறுத்து வந்தமை. 1955-லும் அதன் பின்னரும் வாஷிங்டனிலுள்ள அதி காரிகள் சிலவேளை கம்யூனிஸ்ட் எதிரியைத் தாக்குவதிலும், சில வேளை அத்துடன் சமாதானத்திற்கு வரும் நோக்கத்திலும் இப்படி யாக மாறிமாறி நடந்துவந்தார்கள்.

தூரக்கிழக்கில் நெருக்கடிகள் ஏற்பட்டவண்ணமிருந்தன. 1954, டிச. 2ஆம் நாள் யு.எஸ்.ஏ.யும் தேசிய சீனவும் ஒரு பரஸ்பர பாது காப்பு ஒப்பந்தம் செய்துகொண்டன. 'அவர்கள் நாட்டு மண்ணுக்கு எதிராகவோ, அன்றி அரசியல் ஸ்திரத்திற்கு எதிராகவோ வெளிநாட்டி விருந்து படைத்தாக்குதல் ஏற்பட்டாலும், அவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் கரவுச் செயலில் கம்யூனிஸ்ட்டுகள் ஈடுபட்டாலும்', ஒப் பந்தத்திற்குரிய இருதரப்பினரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவேண்டும் என்பதே அவ் வொப்பந்தத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். மேலும், அது, 'பாதுகாப்பிற்கு இன்றியமையாதது' என்று இருதரப்பினரும் ஒப்புக்கொண்டால், தெய்வானிலும் (பார் மோசாவிலும்), அதற்கருகிலும், மற்றும் பெஸ்காடோரஸ் தீவிலு முள்ள முப்படைகளையும் தான் விரும்பியவாறு பயன்படுத்திக்கொள் வதற்கு வேண்டிய அதிகாரத்தை யு.எஸ்.ஏ.க்கு அளித்தது. கம்யூனிஸ்ட்டுகள் செய்த அட்டூழியங்களால் தாசென் தீவுகளை

விட்டுத் தேசியவாதிகள் வெளியேற நேரிட்டபோது, தென்சீனக் கரைக்கப்பாலுள்ள க்யூமாஸ், மட்சு (பார்மோசா) முதலியவற்றை அச்சுறுத்தியபோது, யு.எஸ். ஜனாதிபதி, காங்கிரஸ்முன் ஒரு புதிய பிரேரணை கொண்டுவந்து, அதைச் சட்டமாக்கும்படி வேண்டினார். 'எதிரியின் படைத்தாக்குதலிலிருந்து பார்மோசாவையும், பிஸ்காடோரஸ் தீவுகளையும் பாதுகாப்பதற்காக அமெரிக்கப் படைகளைத் தான் அவசியமென்று எண்ணுமிடத்தில் (நேரத்தில்) பயன்படுத்துவதற்குக் காங்கிரஸ் அனுமதியளிக்கவேண்டும்.' 'தற்போது நட்பினர் கையிலிருக்கும் அதனை (பார்மோசாவை) யொட்டிய தளங்களும், இடங்களும், அவசியமானால் பாதுகாக்கும் அதிகாரமும் அதற்குள் அடங்கவேண்டும்.' அன்றியும், 'பார்மோசா, பிஸ்காடோரஸ் தீவுகளைப் பாதுகாப்பதற்காக அவர் எடுக்க விரும்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரமும் அதனுள் அடங்கவேண்டும்.' இத் தீர்மானம் 1955, ஜன. 24ஆம் நாள் காங்கிரஸ்முன் கொண்டுவரப் பட்டது.

இந்தத் தீவிரமான போர் அச்சுறுத்தல் விரைவில் நீங்கியது, தெய்வானுக்குச் சுமார் 100 மைல்களுக்கு அப்பால் பார்மோசா ஜலசந்திக்குக் குறுக்கே அமைந்திருக்கும் க்யூமாவையும் மட்சுவையும் யு.எஸ்.ஏ. பாதுகாப்பதா, இல்லையா என்ற பிரச்சினைக்கு டல்லஸ் ஐயத்திற்கு இடமான முறையில் நடந்துகொண்டார். பார்மோசாவைத் தாக்குவதற்காக முதலில் மேற்படி தீவுகள் தாக்கப்பட்டால் அவற்றை வாஷிங்டன் காப்பாற்றும் என்றுரைத்தார். ஆனால், எவ்விதத் தாக்குதலும் ஏற்படவில்லை. ஏனெனில், யு.எஸ்.ஏ.யுடன் பெய்ப்பிங் ஆட்சியாளர் போர்தொடுக்க விரும்பவில்லை. அத்துடன் அவர்கள், வாஷிங்டன் என்னதான் செய்தாலும் அல்லது அச்சுறுத்தினாலும் நாளடைவில் பார்மோசா தங்களைச் சேர்வது நிச்சயம் என்று கருதி வந்தார்கள்.

இங்கும் தவிர்க்க முடியாத சிரமமான நிலைமை தலைதூக்கியது. இந்த இராட்சசப் போட்டியில் இருதரப்புமே போரில் தங்கள் தோள் வரிசையைப் பார்க்க விரும்பவில்லை. எனவே, 1955ஆம் ஆண்டு ஒரு தற்காலிக உடன்படிக்கை காணுவதிலேயே கழிந்தது எனலாம். ஜெனீவாவில் நடைபெற்ற 'உச்சகட்ட மாநாடும்', அதன் பின் ஜெனீவாவில் ஏற்பட்ட வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடும் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கின. 1955, மே 15ஆம் நாள் ஏற்பட்ட ஆஸ்திரிய உடன்படிக்கையைத் தவிர உருப்படியான காரியம் வேறெதுவும் நடைபெறவில்லை. மாறுக இருவர் தலையீட்டாலும் தவற்றினாலும் 1956-ல் இருந்த வாய்ப்புகளனைத்தும் வீணுகிப் போயின. அதோடுமட்டுமல்லாமல், மத்தியக் கிழக்கிலும் ஹங்கேரியிலும் நாம் முன்னர் கண்டதுபோல் வன்மை நிகழ்ச்சி ஏற்பட லாயிற்று.

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைப் புதிர்

அமைதியை நிலைநாட்டவும் கம்யூனிசத்தைத் 'தடுக்கவும்' யு.எஸ்.ஏ.யின் வன்மைச் செயல் பலிக்கவில்லை. அப்படியிருந்தும், ஒருவேளை அதனாலேயோ என்னவோ, டுவைட் ஐசன்ஹோவர் 1956, நவ. 6ஆம் நாள் ஜனாதிபதியாக மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். சரித்திரத்திலே முதல் தடவையாக அதிக எண்ணிக்கை வாக்குகளுடன் (9,553,349) தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய அரசியல் எதிரி அடிலாய் இ. ஸ்டீவன்சனுக்கு 26,028,887 வாக்குகளே விழுந்தன. எனவே, 'ஐக்' 41 இராஜ்ஜியங்களில் 457 தேர்தல் வாக்குகளைப் பெற்றார். ஸ்டீவன்சனுக்கோ ஏழே ஏழு ராஜ்யங்களில் மட்டும் 74 தேர்தல் வாக்குகள் விழுந்தன. ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வாகைசூடியபோதிலும், காங்கிரசின் இரு சபைகளிலுமே அது ஜனநாயகக் கட்சிக்குத் தோல்வியைத் தர நேரிட்டது. இத் தேர்தலில் அமெரிக்க வாக்காளர்கள் 'கட்சிச் சார்பான' வெளி நாட்டுக் கொள்கையைச் சீர்தூக்கிப் பார்த்ததாகத் தெரியவில்லை. அணுகுண்டு சோதனையைக் கைவிடவேண்டுமென்று ஸ்டீவன்சன் காலதாமதமாக வேண்டினார் (அதை புல்கானின் ஆதரித்தார்). ஆனால், ஐசன்ஹோவர் அத்தகைய தவறு எதுவும் புரியத் தான் தயாராயில்லை என்று கூறிவிட்டார்.

ஓரிரு எடுத்துக்காட்டைத் தவிர மற்றபடி வெளிநாட்டுக் கொள்கை 'வளரட்டும்' என்று 'ஐக்' விட்டுவிட்டார். 1955-க்குப்பின் டல்லசின் செயல்திறம் போரில் வெற்றி கொள்வதற்கோ, அன்றிக் கம்யூனிஸ்ட்டு முகாமுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்கோ இடந்தரவில்லை. இரு முகாம்களுக்கும் இடையே போர் ஏற்படச் சாத்தியமில்லை. இதற்கு அவைகளின் இராணுவ பலமே காரணம். 1956, மே 23ஆம் நாள் பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசுங்கால், 'அணுகுண்டு, ஹைடிரஜன் குண்டுகள் வைத்திருக்கும் இருபெரு நாடுகட்கிடையே இன்று போரைத் தடுக்கும் மதிப்பைத் தவிர வேறில்லை' என்று ஐசன்ஹோவரும் இதே கருத்தைத் தெரிவித்தார். போர் ஏற்படத்தான் வழியில்லாமற்போயிற்று என்றால் சமாதானம் ஏற்படவும் சாத்தியமில்லை. இதற்கு செர்மனி, சீனா படைக்கலப்பு, (அல்லது)மத்தியக் கிழக்கின் சிக்கல்வாய்ந்த பிரச்சினை ஆகிய வற்றைப்பற்றி மாஸ்கோ, பெய்ப்பிங் ஆட்சியாளருடன் உடன் படிக்கைப் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்க்கு விருப்பமே இல்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் நிபந்தனையற்ற சரண் ஒன்றே.

வல்லரசுகட்கு வல்லரசான யு.எஸ்.ஏ.யின் வெளிநாட்டுக் கொள்கை சமயம், வாய்ப்பு, இடம், பொருள், காலத்திற்குத் தகுந் தாற்போல் மாறும் தன்மை பெற்றுவிட்டது. கம்யூனிச எதிர்ப்பே

அதன் மூச்சு. இந்த எதிர்மறைக் கொள்கை ஒன்றும் புதிதன்று. யுரேசியாவைப் பகை வல்லரசு ஆட்கொண்டுவிடுவதைத் தடுக்கும் கொள்கை மிகப் பழைமையானது. இதன் குழவியே இன்றைய அமெரிக்கக் கொள்கை. ஆனால், சுதந்திர உலகின் பெரும்பகுதியும், நடுநிலை நாடுகள் அனைத்தும் அமெரிக்கா எதை எதிர்க்கின்றது என்பதை அறிய விரும்பவில்லை; ஆனால், அது எதை விரும்புகிறது என்பதையே அவை அறிய விரும்புகின்றன. எதை முன்னிட்டு அது சியாங்கே-ஷேக்கையும், டிட்டோவையும், சிங்மன் ரீயையும், கொமுல்காவையும், அடினூரையும், பிராங்கோவையும், ஃபாசிஸ்ட்டு சருவாதிகாரத்தையும், ஜனநாயகத்தையும், இசுரேலையும், அரபு நாட்டுணர்ச்சியையும், குடியேற்றக் கொள்கையையும், குடியேற்ற எதிர்ப்புக் கொள்கையையும், இராணுவத்துவத்தையும், படைக்கலக் குறைப்பையும், கம்யூனிச எதிர்ப்பையும், 'சேமநல அரசையும்' இன வேறுபாட்டையும், இனச் சமத்துவத்தையும், படை நிலமானிய முறையையும், அதன் எதிர்ப்பையும் ஏன் ஆதரித்துவருகின்றது என்றுதான் புரியவில்லை. அதனாலும் இவற்றிற்குப் பிற மக்கள் நம்பக்கூடிய முறையில் 'பகுத்தறிவான' பதிலிறுக்க முடியவில்லை.

அமெரிக்கப் 'பாதுகாப்புக் கொள்கையும்' அதேபோல்தான் ஒரு புரியாத புதிராக இருக்கிறது. பதவியில் அமர்ந்தவுடன் டல்லஸ் விடுத்த பல பொது அறிக்கைகளில், ''உலகில் எக்கோணத்திலாவது கம்யூனிஸ்ட்டு ஆக்கிரமிப்பு ஏற்படுமாயின், அதனை எதிர்த்துப் 'பயங்கரப் பதிலடி' (அணுச்சக்திப் பிரயோகம்) கொடுக்கப்படும்'' என்று கருத்துரைத்தார். ஆனால், அவரே மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், ''அவசியமான அரசியல் வல்லமைக் கலை, கொரியா, இந்தோசீனா, பார்மோசா முதலியவற்றில் நடைபெற்றதைப்போல் போரின் 'எல்லைவரை செல்வதில்' தானிருக்கிறது; 'அவ்வெல்லைவரை' நாங்கள் சென்றோம். அதையும் பார்த்தோம். அதற்கான நடவடிக்கைகள் எடுத்தோம்'' என்று விளக்கினார். வெகுசில வெளி நாட்டவருக்கே இந்த யு.எஸ். உயர்கொள்கையின் விளக்கத்தை உண்மையில் நடந்த நிகழ்ச்சிகளுடன் பொருந்தச் செய்ய முடியும்; அல்லது 'போர் எல்லையைத் தொடும் கொள்கை' மூலம் அமைதியை நிலைநாட்டுவது புரியும். 1957 இலையுதிர் காலத்தில் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் (டல்லஸ்), 'அணுகுண்டு சோதனைகளைத் தொடர்ந்து நடத்திச் சுத்தமான சிறிய நுணுக்கமான அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டும். அவற்றால்தான் நம் நாகரிகத்திற்கு ஊறு வராமலேயே கம்யூனிசக் கள்வர்களின்—கொள்ளைக் கூட்டத்தினரின் தாக்குதலுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்' என்று வாதாடினார். அனேக வெளி

நாட்டவருக்கு இக் கொள்கைக்கும் உண்மையான நிகழ்ச்சிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்றுதான் பட்டது.

இதற்கிடையில் அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் கம்யூனிச சாம்ராஜ்ஜியத்தைச் சுற்றியும் குண்டுபோடும் தளங்களைச் சேகரித்துவந்தார்கள்; பொருளாதார உதவியை வரவரக் குறைத்து விட்டு, நேசநாடுகட்கு இராணுவம் சம்பந்தமான பொருள்கள், ஆயுதங்களை அதிகமாக ஏற்றுமதி செய்து வந்தார்கள்; சர்வ தேச உடன்படிக்கைமூலம் படைக்கலக் குறைப்பை ஆதரித்து வந்தார்கள்; படைக்கலக் குறைப்பு உடன்பாடே ஏற்பட முடியா வண்ணம் 'மடமைத் தடையுள்ள' மேற்பார்வைத் திட்டங்களைக் கொண்டுவந்தார்கள்; 'பாதுகாப்புக்குப்' பங்கம் வந்துவிட்ட தென்று ஜனநாயகக் கட்சியினர் குற்றங் கண்டுபிடிக்கும் அளவுக் குச் 'சிக்கனம்' என்ற பெயரில் இராணுவப் படைகளைக் குறைத்து வந்தார்கள். அமெரிக்காவின் இந்தப் புதிரான 'உலகத் தலைமை' அதன் நண்பர்களையும் பகைவர்களையும் வியப்பில் ஆழ்த்திவந்தது. மேலும், 1956–57-ல் அவர்கள் நம்பிக்கை இழந்ததோடல்லாமல் (அக் கொள்கையை) எதிர்க்கவும் புறப்பட்டுவிட்டார்கள்!

1945, ஜூலை முதல் தேதி முதல் 1957 ஜூலை முதல் தேதிவரை வெளிநாட்டு உதவியில்மட்டும் 62,000,000,000 டாலர், அதாவது, தலைக்கு 324 டாலர் வீதம் பணத்தைப் பணமென்று பார்க்காமல் வாரி இறைத்தும், அமெரிக்காவால் ஏன் நேசநாடுகளையும் பிற நாட்டு மக்களின் ஆதரவையும் பெறமுடியவில்லை என்பதுதான் பல அமெரிக்கர்களுக்கு ஒரு புரியாத புதிராக இருந்தது. அப் புதிருக்கு இங்கு விடையளிப்பதற்கில்லை. எனினும், அது ஏற் பட்ட காரணத்தைப்பற்றி இங்குச் சற்று உரைக்கமுடியும். அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் குறிக்கோள்களையோ, அன்றி அவற்றை அடையும் வழிமுறைகளையோ முன்பின் முரண் பாடின்றி வளர்த்துவருவதற்குத் தகுந்தாற்போன்ற முறையில் யு.எஸ்.ஏ.யின் பரந்து விரிந்திருந்ததும், பணவிரயம் செய்து வந்ததுமான ∴பெடரல் அதிகார வர்க்கம் அமைக்கப்படவில்லை. மேலும், தங்களுக்குப் புகழ் தேடிக்கொள்வதிலும் மக்களின் வாக்குகளைப் பெறுவதிலுமே கண்ணுங் கருத்துமாயிருந்த காங்கிரசின் 'விசாரணை யாளர்கள்' முரண்பாடுகளையும் குழப்பத்தையும் அதிகமாகக் குழப்பி வந்தார்கள். ஊக்கமான நிர்வாகத் தலைமை ஒன்றுலேதான் அப் போது நிலவிவந்த குழப்பத்தைப் போக்கி அமைதியை நிலை நாட்டியிருக்க முடியும். ஆனால், அத்தகைய தலைமை 1953–61-ல் இருந்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் தங்களை விரும்பவேண்டு மென்று நினைக்கும் அரசியல் தலைவர்கள் இறுதியில் எவராலும் விரும்பப்படார். தன்னுடைய கொடைவண்மைமூலம் நண்பர்களைச்

சேகரிக்க முற்படுபவர், வெகு விரைவில் தம் உதவியைப் பெறு வோர் தம்முடைய தயாளசிந்தையை எதிர்ப்பதையும், தன் எண்ணத் தைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதையும், உதவியைத் தங்கள் 'உரிமை'யாகக் கருதி உதவி தராவிட்டால் அச்சுறுத்தல் செய் வதையும் உணர்வர். இம் முரண்பாட்டின் மற்ற மூலக்கூறுகள் அமெரிக்க நாடக மேடையை சமீபகாலந்தொட்டும் இப்போதும் கருத்தூன்றிப் பார்த்துவருபவர்களுக்குப் புரியும்.

1955-க்குப்பின் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைத்துறையில் ஒரு முக்கியமான இருதலைக் கொள்ளி தலைதூக்கிற்று. தேசிய நலன்களாலும் வலிமை அரசியலாலும் உந்தப்பட்டு, வாஷிங்டன் புதிதாக உலகைத் தம் குடைக்கீழ்க் கொண்டுவர முயலும் சக்திகளை அச்சுறுத்தி, உலக சக்தி-சமநிலையைப் பாதுகாக்க முயன்றது. அம் முயற்சியில் நேசநாடுகளின் அக்கறைகளையும் (நலன்களையும்), அது போல் 'நடுநிலைமைக் கொள்கை'யை விரும்பியவர்களின் அக்கறை களையும் அமெரிக்கா மதித்து நடப்பது இன்றியமையாததாகிவிட்டது. ஆனால், வாஷிங்டனே தன்னுடைய பெரிய நேசநாடுகளின் குறிக் கோள்களைப் புறக்கணிக்கவும், அன்றி அவற்றிற்கு எதிராகச் செல்லவும் தயங்கவில்லை. மேலும், அது நடுநிலை நாடுகளை அவற்றின் விருப்பத்திற்கு எதிராகக் கம்யூனிசத்தை எதிர்க்கும் நோக்கில் உயர் நேசவுடன்பாட்டில் சேரும்படி இடைவிடாது வற் புறுத்திவந்தது. 1918-லும் 1945-லும் நடந்தது போல் 'எதிரியை' உலகப் போரில் வெற்றி பெற்று முற்றிலும் தீர்த்துக்கட்ட முடியாது போயிற்று. ஏனெனில், எதிரியின் வலிமையே அதிகமாயிருந்தது. அத்துடன் அப்படிப்பட்ட போர் நிகழும்பட்சத்தில் நாகரிகமே அணுகுண்டு தற்கொலையால் அழிந்தொழிந்துபோயிருக்கும்.

அதிகாரம் (வலிமை) பற்றிய சிக்கல்களைப் பலவந்தத்தின்மூலம் தீர்க்க முடியாமற்போய்விட்டால், அரசியல் வெல்திறத்தின் மூல மாகவே பிறகு அவற்றைத் தீர்க்க முடியும். அதாவது, தற்காலிக உடன்பாடு எப்படியும் செய்துவிடவேண்டும் என்ற உண்மையான நோக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே அப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். ஆனால், அமெரிக்கர்களோ 'அமைதியை' உண்மையாக விரும்பினர்; ஆனால், பாவத்திற்குக் கும்பிடு போட அவர்கள் மறுத்து விட்டார்கள். மேலும், அவர்கள் (அமெரிக்கா வரையறுக்கும்) 'நீதியும்' 'சுதந்திரமும்' அமைதியைவிடப் பன்மடங்கு முக்கியம் என்றும், இக் கருத்தை உலகெங்கும் நிலைநாட்டும் சக்தியின்மை 'நெறிகேடாவ துடன்', மற்றெருபுறம் வெற்றியையே வழிபடுகின்ற மக்களுக்குப் பொறுக்கமுடியாத 'தோல்வியுமாகும்' என்றும் மிக எளிதில் கருதக் கூடியவர்கள். இந் நூற்றாண்டு நடுவில் அமெரிக்கா ஒவ்வொரு நெருக் கடியிலும் அழிவை விட்டும், அறிவுடன் விலகிச் சென்றும் வந்தது.

மேலும், அது ஒருகால் காலஞ்சென்ற சார்லஸ் ஏ. பியர்டு கூறிய 'நிலையான அமைதிக்கு நிலையான போர்' என்ற பெயரில் கொடியதை எதிர்த்துப் புதிதான ஒரு புனிதப் போர் நடத்தினால், அதில் அறம் மறத்தை வெல்லும் என்ற நம்பிக்கையையும் தொடர்ந்து கைக்கொண்டிருந்தது.

ஆனால், இக் கட்டளை, இந் நிபந்தனைகள் ஆகியவற்றின்மூலம் அமைதியை ஒருநாளும் நிலைநாட்ட முடியாது என்பது வெள்ளிடை மலையாகும். மற்றோர் உலகப் போரோ அசாத்தியமானது; நினைத்தே பார்க்க முடியாதது. இதை விட்டால் மாற்று வழி ஒன்றே ஒன்றுதான் உள்ளது. நினைத்தே பார்க்க முடியாத மிகப் பெரிய கேட்டைத் தவிர்ப்பான்வேண்டி கொடிய சக்திகளுக்கு விட்டுக் கொடுப்பதே அவ் வழியாகும். இத் தேவையை ஓரளவு உணர்ந்த ஜனாதிபதியின் ஈடு இணையற்ற புகழ், 1955-ல் மார்ஸ்லாந்துடன் ஒப்பந்தத்தின் வாயிலைத் தொடும்படி செய்யவைத்தது. ஆனால், அவருடைய சுகக்குறைவும், அடுத்தாற்போல் மாற்று வழிகள்பற்றி ஏற்பட்ட மயக்கமும் பேச்சுவார்த்தைகளைப் பயனறச் செய்துவிட்டன. சுய நேர்மையில் சீர்மிகுந்துள்ள கம்யூனிசக் கட்டுப்பாட்டை (ஆதிக்கத்தை) ஒப்புக்கொள்ள மறுப்பதும், படைக்கலக் குறைப்பு, சேர்மன் ஐக்கியம், மத்தியக் கிழக்கு ஆகியவைபற்றி மாஸ்கோ ஒருகாலும் ஒப்புக்கொள்ளாது என்று அனைவரும் அறிந்த நிபந்தனைகளின் அடிப்படையில் யு.எஸ்.எஸ்.ஆருடன் 'பேச்சுவார்த்தை' நடத்துவதுபோல் பாசாங்கு செய்வதும், அரசியல் (ராஜ) தந்திரத்தைப் பயனில்லாது செய்ததேயன்றி வேறில்லை.[6] எனினும், அத் தோல்வி தற்காலிகமானதே. இறுதியில், எவ்வளவு காலந்தான் சென்றாலும், வாஷிங்டனும், மாஸ்கோவும், பெய்ப்பிங்கும் 'சமாதானத்திற்கே' வர நேரிடும். ஏனெனில், அதை விட்டால்தான் (உலகம் உய்ய) வேறு வழியே இல்லையே!

[6] மத்தியக் கிழக்கில் நிலவிவந்த சண்டை சச்சரவுகள், மூரண்பாடுகள் குறித்து உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக 1957ஆம் ஆண்டு முழுவதும் மாஸ்கோ விடுத்த பிரேரணைகளை யு.எஸ்.ஏ. இடைவிடாது மறுத்து வந்திருந்து, இப் போக்குகள் வெள்ளிடைமலையாயிற்று. இதற்கு அமெரிக்கக் கொள்கை வகுப்பாளரின் அடிப்படைக் கருத்து யாதெனில், எல்லா அமெரிக்கத் தலையீடும் படையுதவியும் அறச்செயலாகும். அதே காரியத்தை சோவியத் யூனியன் செய்வது அறநெறியற்ற கொடிய செயலாகும் என்று கருதும் மனப்பான்மைதான். அதோடல்லாமல், யு.எஸ்.எஸ்.ஆருக்கு அருகிலும், யு.எஸ்.ஏ.யிலிருந்து 6,000 மைல்களுக்கு அப்பாலும் அமைந்திருக்கும் நிலப்பகுதி முழுவதையும், சோவியத் அக்கறைகளை நேத்தையும் புறக்கணித்துவிட்டும், மாஸ்கோவின் விருப்பங்களைப் புறக்கணித்து விட்டும் வாஷிங்டனிலிருந்தே உறுதியாகக் கட்டுப்பாடு செய்ய முடியும் என்றும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால், உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் இந் நம்பிக்கையை நனவாக்கவில்லை. எனவே, இறுதியில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும். 1957, அக்டோபரில் நெருக்கடி ஏற்பட்ட போதிலும், அவ்வமயம் சிரியாவின் பாதுகாப்புப் பொறுப்பேற்றிருந்த மாஸ்கோவும், துருக்கியின் பாதுகாப்பிற்காக நின்ற வாஷிங்டனும் மத்தியக் கிழக்கில் போர் மூளாதவாறு ஒருவரையொருவர் எச்சரிக்கை செய்துவந்தபோதிலும், இருதரப்பினருக்கு மிடையே பேச்சுவார்த்தை இறுதியில் நடக்கும் என்றே தோன்றுகிறது.

4. சுதந்திர உலகில் பிளவு

'ஒரே போர்க்களத்தில் பிலப்பனீசியரும் அவர்கள் நண்பர்களும் கிரேக்கர்களை எதிர்த்து விரட்டமுடியும். ஆனால், அவர்கள் இனத்தைச் சேராத மற்ற வல்லரசுடன் போரிடும் சகதி அவர்களிடமில்லை. உடனடியான, பயன்தரக்கூடிய நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒரு சட்டசபை (single council chamber) இல்லாததே இதற்குக் காரணமாகும். அதற்குப் பதில், சம வாக்கு உரிமையும், தன்னுடைய காரியத்திலே கண்ணுங் கருத்துமாயிருக்கும் பல இனங்களைக் கொண்ட சட்டசபை (diet) பணியாற்றி வருவதுமே இதற்குக் காரணம். இப்படிப்பட்ட சட்டசபையால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட பகைவனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்பது சிலருடைய பெருத்த ஆசை. வேறு சிலருக்கோ, தம் பணத்தைச் சேமிக்க வேண்டுமென்ற ஆசை. பொதுநல விஷயத்திற்காக அவர்கள் செலவிடும் நேரம் மிகக் குறைவு. ஆனால், தத்தம் காரியங்களைக் கவனிப்பதென்றால் தங்களின் பெரும்பாலான நேரத்தை அதிலே கழிப்பார்கள். தம்முடைய கவனக் குறைவால் எந்தத் தீங்கும் தமக்கு வந்துவிடலாகாது என்று ஒவ்வொரு வரும் விரும்புகின்றனர். ஒருவன் தன் காரியம் பிறருடைய கடமை எனக் கருதுகிறான். இப்படியே அனைவரும் நினைக்கின்றனர். இம் மனப்போக்கால் இறுதியில் பொதுக் காரியம் அவர்களை அறியாமலேயே பாழடைந்துவிடுகிறது.'

தூசிடைடஸ், 'பிலப்பனீசியப் போர்' மேற்கோள், பெரிக்கில்ஸ்.

மார்க்ஸ்லாந்து (சுதந்திர உலகிற்கு) எதிராகச் செய்த கூட்டுகளை மேலே பார்த்தோம். அதுபோல் 1940-50 வரையும், 1950-60 வரையும் யு.எஸ்.ஏ. அமைத்த உயர்கூட்டுப்பற்றியும் நாம் பார்க்கப் புகுங்கால், அப்படியே தலை சுற்ற ஆரம்பிக்கிறது. ஏனெனில், யு.எஸ்.ஏ யின் நேசநாடுகள் பரந்து கிடப்பதுடன், மிக்க வேற்றுமை யுடனும் விளங்கிவருகின்றன. 1958-ல் இருந்த நேசநாடுகளின் எண்ணிக்கைமட்டும் 44 ஆகும். அவற்றுள் பெரும்பாலான நாடுகளுடன் யு.எஸ்.ஏ. 'இராணுவ' உடன்படிக்கைகள் செய்திருப்பதுடன், நேசக்கூட்டும் செய்திருக்கிறது. அவைகள் காலப்போக்கில் மிக்க சிக்கல் வாய்ந்தனவாக மாறிவிட்டன. இவையே கம்யூனிசக் கூட்டுக்கு எதிராக அமைக்கப்பட்ட இக் கூட்டுகளின் தனிச் சிறப்பாகும். இவையே இன்று அக் கூட்டின் உறுப்பு நாடுகளுக்கிடையே நிலவிவரும் குழப்பத்திற்கும் மோதலுக்கும் அடிப்படைக் காரணமாகும். ஒன்றுபட்ட இறைமையுரிமையுடைய நாடுகளைக்கொண்ட உலக முகாம் இராசதந்திரத்திலும் சரி, போரிலும் சரி, 'தன் வலிமை' மூலம் வெற்றிகொள்ள விழைந்தது. ஆனால், அது கடைசியில் உட்பகையாலும் பிளவுகளாலும் ஒற்றுமை என்ற நாமங்கூட இல்லாமல் வேறுபட்டு நின்றதுதான் மிச்சம். கம்யூனிச இராணுவ ஆக்கிரமிப்பு

மட்டும் வெறுங் கற்பனையாக இல்லாமல் உண்மையானதாக இருக்கும் பட்சத்தில், இக் கூட்டு ஒற்றுமையுடன் விளங்கிவந்திருக்கும் என்று நிச்சயமாகக் கூறலாம். ஏனெனில், எவ்வித ஒப்பந்தத்திற்கும் வர முடியாத பரம விரோதியைப் போர்மூலம் அடியோடு தீர்த்துக்கட்டி விடும் நோக்கமும் ஒற்றுமையும் நேசநாடுகட்குள் சாதாரணமாக இருந்துவருவது வழக்கம். ஆனால், அந்த நிலை இல்லாததால், இவ்வுயர் கூட்டால் ஒற்றுமையினும் வேற்றுமையே ஏற்பட்டது.

சில நாடுகட்கு எதிராக மற்ற நாடுகள் கூடிக்கொண்டு முன் போல் இராணுவக் கூட்டுகள் செய்துகொள்வது இன்று சாத்திய மில்லை. இப் பழங்கால வழிகள் இன்று கடுமையாகத் தாக்கப்பட்டு வருகின்றன. அரசியல் மேதைகள் அனைவருமே, 'அமைதியை விரும்பும்' நாடுகளடங்கிய உலக சமுதாயத்தில், உலகக் 'கூட்டுப் பாதுகாப்பு' முறை அமைக்கவேண்டும் என்று கூறும் ஐ.நா. சாசனத்திற்கு வெறும் சொல்லாதரவாவது அளிக்கத்தான் வேண்டும். இது பொய்யானதும் நடைமுறைக்கு ஒவ்வாததுமான ஒரு கூற்றுத் தான். எனினும், இதுவே உண்மையென்றும், அதைச் செயலிலும் கடைப்பிடிக்கலாமென்றும் எண்ணற்ற மக்கள் நம்பிவருகின்றனர். எனவே, இராசதந்திரிகள், தங்கள் நட்புறவு உடன்படிக்கைத் திட்டங்கள் இந் நம்பிக்கைக்கு ஏற்ருற்போல் அமையும்படி செய்ய வேண்டும். இந் நோக்கத்துடனேயே கம்யூனிசத்தை முறியடிக்க அமெரிக்காவின் மிக்குயர் திட்டம் வகுக்கப்பட்டது. அந் நோக்குட னேயே பெட்ரோபோலிஸ் சட்டமும், 1948ஆம் ஆண்டில் வாண்டன் பர்க் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. ஐ நா. சாசனத்தின் 51ஆம் விதியின்கீழ், 'தனிப்பட்ட, மற்றும் கூட்டுப் பாதுகாப் பிற்காகத் தொடர்ந்து உறுதியான சுய உதவியும் பரஸ்பர உதவியும் அளிக்க வகை செய்யும் பிராந்திய, மற்றக் கூட்டு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்' என்று இவற்றில் கூறப்பட்டிருப்பது கவனிக்க வேண்டிய தாகும். இதை விரும்பிய மேற்கத்திய பொது மக்கள், 1949, ஏப்ரல் 4ஆம் நாள் செய்யப்பட்ட வட அட்லான்டிக் ஒப்பந்தத்தில் உடனடி யாகவும், சுதந்திர உலகின் கூட்டை விரிவுபடுத்தவும் ஸ்திரப் படுத்தவும் பின்னால் செய்யப்பட்ட அனேக ஒப்பந்தங்களிலும் இவ் விதியை இணைத்துவிட்டார்கள்.

இவ்வுயர்கூட்டு வரவர விரிவடைந்தபோதிலும், அமெரிக்கக் கொள்கை வகுப்பாளரின் நம்பிக்கைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றால், அதற்குச் சொற்களாலமைந்த விதிகளின் குறைபாடுகள் காரணம் அல்ல. (ஏனெனில், இவ் விஷயங்களில் மக்கள் ஆதரிக்கும் எந்த விதியும் நினைத்த பலனை அளிக்கும்); மாறுக, மனிதகுலத்தின் அரசுமுறை தோன்றியது. முதல் இருந்துவரும் கூட்டுகளின் அடிப்படைத் தத்துவத்திலிருந்து இவ்வுயர்கூட்டுப் பிரிந்துசென்றதே

இதற்குக் காரணம் ஆகும். பரஸ்பர நலன்களால் பிணைக்கப்பட்ட வலிமை மிக்க நேசநாடுகளுடன் ஒருசில நேசக்கூட்டுகள் செய்து கொள்வதே, வலிவற்ற பல நாடுகளுடன் செய்யப்படும் பல நேசக் கூட்டைவிடத் தங்களுடைய நலனுக்கு உகந்ததும் விரும்பத்தக்கது மாகும். இதுவே அவ் விதியாகும். ஏனெனில், முன்னையது மிக எளிதாகவும், பயன்படும் முறையிலும் செயற்படக்கூடியது; பின்னையதிலோ பெரும்பாலான நேசநாடுகள் உதவியளிப்பனவாக இருப்பதைவிடச் செலவுக்கு வழிசெய்பவையாகவே விளங்கும்.

வெளி விவகார அமைச்சர் டல்லஸ் (நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையைச் சேர்ந்த சைரஸ் எல். சுல்ஸ்பர்கர் டல்லசின் அரசியல் தந்திரத்தைக் குறிக்கப் பயன்படுத்திய சொல்லிற்கேற்ப, 'ஒப்பந்தப் பைத்தியம்' பிடித்தவராவார். அந்த ஆர்வத்தில் அவர் செய்த ஒப்பந்தங்கள் பல. அவற்றுள் நடைமுறையில் பயன்தராதவை சில; 'நடுநிலை நாடுகளின்' ஆதரவை இழக்கும்படி செய்தவை சில; 'நண்பர்களே' வலிவடையச் செய்வதற்குப் பதிலாக 'எதிரிக்கு' உதவி செய்தவை சில. சேர்மனி, சப்பான், பார்மோசா ஆகிய நாடுகளுடனும், பிராங்கோவின் ஸ்பெயின் தேசத்துடனும் யு.எஸ்.ஏ. செய்துகொண்ட நேசக்கூட்டுக்களோப் பொறுத்தமட்டும் இது முற்றிலும் உண்மை என்பதை காலக்கிரமத்தில் நடந்த நிகழ்ச்சிகள் நிரூபித்துவிட்டன. பக்தாத் உடன்படிக்கை பற்றியும் உடனடியாக ஏற்பட்ட விளைவுகள் இம் முடிவையே வலியுறுத்துகின்றன. இவ்வுட்ன்படிக்கையின் விளைவுகள் அதன் அடிப்படை நோக்கத்தையே தோற்கடித்துவிட்டன எனலாம். சியாட்டோ (Seato) அல்லது தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பு எவ்வாறு முடியப்போகிறதென்று இப்போது நிச்சயமாய் எதுவும் சொல்வதற்கில்லை.

நேட்டோவைப்போல் ஆசியாவிலும் ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று பிரிட்டன், ஆஸ்திரேலியா, தென் கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் 1949-ல் வலியுறுத்திவந்தன. ஆனால், கொரியாப் போரில் சென்சீனு தலையிடும்வரை, இந்தோசீனக் கலகக் காரர்களுக்கு, சீனு உதவியளித்து, கம்யூனிச வலிமையைப் பெருக்கி (அதன் மூலம் சுதந்திர உலகிற்கு) அபாயத்தை விளைவிக்கும்வரை, வாஷிங்டன் இந் நாடுகளின் வேண்டுகோள்களுக்குத் தலைசாய்க்கவில்லை. 1954-ல் ஏற்பட்ட ஆங்கிலோ-அமெரிக்க மோதலால் மேலும் நடவடிக்கை தாமதமாயிற்று. ஜெனீவாவில் இந்தோசீன தாற்காலிகப் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னர், மகாநாடு கூட்டவேண்டுமென்று யு.எஸ்.ஏ. ஒரே பிடியாக நின்றது. ஆனால், இந்தியா, பர்மா, இலங்கை, இந்தோனேசியா ஆகிய நாடுகள் தாங்கள் அப்படிப்பட்ட இராணுவ முகாமில் சேரமாட்டோம் என்று

சொன்னதும், பிரிட்டிஷ் நம்பிக்கை மறைந்தது. அப்படிப்பட்ட (இராணுவ) ஒப்பந்தத்தால் நன்மையைவிடத் தீமையே விளையும் என்று நேரு சொல்லிவிட்டார். எனினும், 1954 செப்டம்பர் 6ஆம் நாள் மணிலாவுக்கு அருகேயுள்ள பகியோ என்னுமிடத்தில் பிரதிநிதிகள் கூடினர். அலெக்சாண்டர் ஸ்மித், மைக் மான்ஸ்ஃபீல்டு என்ற இரு செனட்டர்களுடன் டல்லஸ் சென்றார். பெய்ப்பிங் வானொலி 'இவ்வாக்கிரமிப்புக் கூட்டு, சீன மக்களுக்கும் மற்ற ஆசிய நாட்டு மக்களுக்கும் எதிரானது' என்று கடுமையாகத் தாக்கிய போதிலும், டல்லசும் மற்றவர்களும் அதைப் பொருட்படுத்தவில்லை.

மாநாட்டில் கலந்துகொண்டோருக்கிடையில் கருத்து வேற்றுமை நிலவியது. இறுதியில் அனைவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, 'தென்கிழக்கு ஆசியக் கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கையை' (Seato) வரைந்து முடித்தனர். அது 1954 செப்டம்பர் 8ஆம் நாள் கையொப்பமானது. யு.எஸ்.ஏ., பிரிட்டன், ஃபிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள் அதில் கையொப்பமிட்டனர்; அவர்கள் 'சம இறைமையுரிமையையும்', 'மக்களின் சம உரிமைகள், சுயநிர்ணயவுரிமை' முதலியவற்றையும், 'அமைதியான வழிகள் மூலம் தகராறுகள் தீர்க்கப்படுவதையும்' ஆதரித்தார்கள். மேலும், 'ஐ.நா வின் குறிக்கோள்களுக்கு முரணுக வலிமையைப் பயன்படுத்துவதில்லை என்றும், வல்லமையைக் காட்டி அச்சுறுத்துவதில்லை' என்றும் உறுதிபூண்டார்கள். அன்றியும் அவர்கள், 'தனியாகவும், கூட்டாகவும், இடைவிடாத, உறுதியான சுய உதவி மூலமாகவும் பரஸ்பர உதவி வாயிலாகவும், படைத்தாக்குதலை எதிர்ப்பதற்காகவும், தங்கள் புனித பூமிக்கும் அரசியல் ஸ்திரத்திற்கும் ஊறு ஏற்படும் வகையில் செய்யப்படும் கரவுச் செயல்களைக் குலைப்பதற்காகவும், தங்களின் தனிப்பட்ட, கூட்டுத்திறமையை வளர்க்கவேண்டும்' என்னும் உறுதி பூண்டார்கள் (விதி 2). 'உடன்படிக்கைக்குட்பட்ட எந்த இடத்திலாவது ஆக்கிரமிப்பு ஏற்பட்டால்', அதை (விதி. 4) ஒவ்வொரு கட்சியும் 'அதனதன் அரசியலமைப்பு நடைமுறைக்கு ஏற்ருற்போல்' எதிர்க்கவேண்டும். மற்ற அச்சுறுத்தல்கள் அனைத்தையும்பற்றி ஆலோசனைக்கு விட்டுவிடலாம். ஆனால், (தாக்குதலுக்கு ஆளான) நாட்டின் 'அரசாங்கத்தின் அழைப்பு அல்லது சம்மதம் இல்லாமல் எந்த நடவடிக்கையும் எடுக்கலாகாது.' உடன்படிக்கைக்கு உட்பட்ட பிரதேசத்தில் பார்மோசா சேர்க்கப்படவில்லை. லாஓஸ், கம்போடியா, தெற்கு வியட்னும் ஆகிய நாடுகளின் 'பாதுகாப்புக்கு' வகைசெய்யும் உடன்படிக்கை (Protocal) ஒன்றும் வரையப்பட்டது. இந்த நாடுகளில் ஒன்றுகூட அதில் கையெழுத்திட்டுச் சேரவில்லை. அமெரிக்காவின் பொறுப்பு, 'கம்யூனிச ஆக்கிர

மிப்பதை'த் தடுப்பதில்தானிருக்கிறதென்று யு. எஸ். அறிக்கை கூறிற்று; பின்னர் சேர்க்கப்பட்ட 'அமைதி சாசனம்' அமைதி, பாதுகாப்பு, சுதந்திரம், நீதி, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது.

1955 பெப்ரவரி 19ஆம் நாள் அன்றுதான் சியாட்டோ அறிவிப்புச் செய்யப்பட்டது. ஆனால், அதன் பொறுப்புகளும் அதன் வெளி அமைப்பும் நேட்டோவைப்போல் அமையவில்லை. மேலும் அதில் மூன்றே மூன்று ஆசிய நாடுகள்தாம் இருந்தன. அவையும் வறுமையுடனும் நலிவுடனும் இருந்தன. ஜக்கார்த்தா, ரங்கூன், டெல்லி ஆகியவை ஒருபுறமும், பெய்ப்பிங்கும் மாஸ்கோவும் மற்றொரு புறமும் சியாட்டோவைப்பற்றி இடித்துரைத்தன. சியாட்டோவின் வெளிநாட்டு அமைச்சர் கவுன்சில் 1955 பெப்ரவரி 23—25 வரை பாங்காக்கில் தாய்லாந்தைச் சேர்ந்த வான் வைத்போக்கன் என்ற இளவரசர் தலைமையில் கூடியது. பாங்காக்கில் ஒரு செயலாண்மைத் துறையை (secretariat) அமைக்க அம் மன்றம் முடிவு செய்தது. ஆனால், சியாட்டோவை ஓர் உயிருள்ள கூட்டாக ஆக்குவதற்கான வழி எதுவும் வகுக்கப்படவில்லை. தென்கிழக்கு ஆசியாவில் 'தலைதூக்கும் நடுநிலைமையை' நசுக்கும் நோக்கத்துடன், தாய்லாந்தில் பெப்ரவரி மாதம் 'போர் விளையாட்டுகள்' நடந்தன. அவை பெய்ப்பிங் கருதுவதுபோல் சியாட்டோ ஒரு 'காகிதப் புலி' அல்லவென்று எடுத்துக்காட்டுவதற்காகவே ஆடப்பட்டன. அதனால் சப்பான் ஐயம் அடைந்ததும், பாகிஸ்தான் கலந்து கொள்ளாமல் போனதும்தான் மிச்சம். இராணுவக் கூட்டுறவுக்குப் பதிலாகப் பொருளாதாரக் கூட்டுறவு நல்லது. அதுதான் ஏற்பட வேண்டும் என்று லண்டன் வலியுறுத்தியது. மார்ச் மாதத் தொடக்கத்தில் சியாட்டோவின் கவுன்சில் கராச்சியில் கூடியது. அதில் டல்லசும் சில்வின் லேயடும், கம்யூனிச ஆக்கிரமிப்புத் தொடர்ந்து இருந்துவரும் அபாயம் என்று பகிரங்கமான எச்சரிக்கை விடுத்தனர். ஆனால், இக் கூட்டின் சரியான கடமைகுறித்து அவர்கள் தங்களுக்குள் வேறுபட்டார்கள். புது டில்லியிலும் ஜக்கார்த்தாவிலும் இந்தியாவுக்கும் இந்தோனீசியாவுக்கும் மீண்டும் உறுதியளிக்க டல்லஸ் எவ்வளவோ முயன்று பார்த்தார்; ஒன்றும் பலிக்கவில்லை. 'குடியேற்ற நாட்டுக் கொள்கைக்கு' எதிராக அவர் தெரிவித்த கருத்துகள் டச்சு அரசாங்கத்தின் சினத்தை மூட்டியதுதான் மிச்சம்.

1957-ல் சியாட்டோவின் மாறுபடும் நிலைமை மிகத் தெளிவாகியது. இராணுவ பலத்தால் சமாளிக்க முடியாத அபாயங்களுக்கு எதிராக வலிமை பிரயோகிக்கப்படாததையும், இராணுவக் கூட்டுகளின் இடர்ப்பாடுகளையும் ஏமாற்றங்களையுமே அது

உணர்த்திற்று. மார்ச் மாதத் தொடக்கத்தில் நடைபெற்ற தேர்தலில் தலைமையமைச்சர் பிபுல் சங்கராமுக்குச் சிறிய அளவில் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன. தாய் அரசாங்கத்தைக் கவிழ்க்க, ஏதோ ஒரு 'மேஞ்ட்டில்' சதிவேலை நடப்பதாகத் தாய் இராணுவ அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டினர். அதைத் தக்க தருணத்தில் சியாட்டோ பாங்காக்கிற்குத் தெரியப்படுத்திற்று. மார்ச் மாத நடுவில் டல்லஸ் கான்பராவிற்கு விஜயம் செய்தார். அங்கு சியாட்டோ கவுன்சில் 'அரசியல் ஸ்திரத்தையும், ஒற்றுமையையும், வலிமையையும் அதிகரித்துவிட்டதாகவும்', 'சர்வதேசக் கம்யூனிசம் ஒரு நிலையான அம்சம் அல்லவென்றும், தாற்காலிகமானதென்றும்' அவர் கூறினர். மார்ச் 13ஆம் நாள் அமைதிக்காகவும் கம்யூனிச ஒழிப்பிற்காகவும் சியாட்டோ செய்திருக்கும் தொண்டுபற்றி நீண்ட அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. 1957 செப்டம்பர் 17ஆம் நாள் ஏற்பட்ட இராணுவப் புரட்சி, பிபுல் சங்கராமைப் பதவியிலிருந்து நீக்கியது. அவர், தப்பித்தோம், பிழைத்தோம் என்று கம்போடியாவுக்கு ஓடிவிட்டார். மார்ஷல் சாரித்தனரத் தொடர்ந்து மேலை - நட்புறவுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார். அவர் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறும், புதுத் தேர்தலுக்கு ஆணையிடுமாறும், வாஷிங்டனில் முன்னர் தூதராகப் பணியாற்றியவரும், சியாட்டோவின் செக்ரடரி—ஜெனரலுமான போட்டே சாரசின் என்பவரைத் தாற்காலிகப் பிரதமராக நியமிக்குமாறும், மன்னர் பூமிபோன் அடுண்டெட்டைத் தூண்டினர். ஆனால், சியாமீஸ் மக்களுக்குள் நிலவிவந்த அரசியல் ஸ்திரமின்மையையோ, அன்றி நிலையாகத் தலைதூக்கிவந்த 'நடுநிலை' மனப்போக்கையோ இவ்வுறுதிப்பாடுகளால் மறைக்க முடியவில்லை.

உலக அரசியல் மேடையில் அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் இக் கம்யூனிச எதிர்க் கூட்டைக் காக்கவும் விரிவுபடுத்தவும் அயராது உழைத்துவந்தார்கள். ஆனால், இடர்ப்பாடுகளும் முரண்பாடுகளும் அவர்களை எதிர்நோக்கின. அவையனைத்தையும்பற்றி இங்குச் சுருக்கமாகக்கூடக் குறிப்பிடுவதற்கில்லை. ஏனெனில், அவை இக் கூட்டு, படுதோல்வியடைந்துவிட்டதென்ற உணர்ச்சியைக் கிளப்பும். ஆனால், அது உண்மையன்று. எனவே, வாஷிங்டனை எதிர்நோக்கும் சில கடுமையான சிக்கல்களைப் பற்றிமட்டும் இங்கு ஆராய்வோம்.

யு. எஸ். ஏ. தன் ஐரோப்பிய, ஆசிய நேசநாடுகட்கு மட்டும் இராணுவப் பொருளாதார உதவியை அள்ளிச் சொரிகிறது என்றும், ஆனால், தென் அமெரிக்கக் குடியரசுகளைப் பொறுத்தமட்டும் உலோபி போல் நடந்துவருகிறது என்றும், அதனால் அருகேயுள்ள, தனக்கு நெருக்கமான நண்பர்களைப் புறக்கணித்தும், அவர்கள் ஆதரவை

இழந்தும் வருகிறதென்றும் லத்தீன் அமெரிக்க மக்கள் மனக் கசப்புடன் குற்றஞ்சாட்டி வந்தனர். 1957 ஜூன் 11 ஆம் நாள் 110 கன்சர்வேட்டியரையும் 103 தாராளவாதிகளையும் மக்கள் சபைக்குக் (House of Commons) கனடியர்கள் தேர்ந்தெடுத்தனர். இத் தேர்தலின் விளைவாக 22 ஆண்டுகள் நிலவிவந்த லிபரல் ஆட்சி முடிவடைந்தது. லூயி செயிண்ட் லாரென்ட் என்பவர் இடத்தில் ஜான் டெஃப்பன் பேக்கர் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் பதவிக்கு வந்ததுமே, யு.எஸ்.ஏ. யின் முதலீடும் காப்பு வரிக் கொள்கையும் கனடிய சுதந்திரத்திற்கும் செழுமைக்கும் ஊறு விளைவித்துவருவதாய்க் குற்றஞ்சாட்டினர். 1956-ல் யு. எஸ். ஏ. சிறிதும் அறிவில்லாமல் பாரிஸ், லண்டன், தெல் அவீவ் முதலிய வற்றைப் பலாத்காரத்தில் இறங்கும்படி தூண்டிய கதையையும், எங்ஙனம் அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர் மத்தியக் கிழக்கில் தீர்க்க முடியாத பிரச்சினையில் தலையிட்டுத் தவித்ததையும் பற்றி நாம் மேலே ஆராய்ந்துள்ளோம். அதனுடன் செர்மனி, சப்பான் முதலியவற்றின் அண்டை நாடுகள் பீதியடையும் வகையில், அவற்றின் படை பலத்தை யு. எஸ். ஏ. அதிகரித்தது பற்றியும் கண்டோம்.

இச் சிக்கல்கள் எளிமையானவை. ஆனால், மற்றச் சிக்கல்களுடன் ஒப்பிடுங்கால், அவை சிக்கல் வாய்ந்த, மிகச் சிரமமான, தீர்வே யில்லாத சிக்கல்களாகத் தோன்றும். இங்குச் சிலவற்றை எடுத்துக் காட்டாகப் பார்ப்போம். அமெரிக்கா, பிரிட்டனுடனும், கிரீசுடனும், துருக்கியுடனும் நட்புறவு கொண்டிருந்தது. சைப்ரஸ் தீவு (1878-ல் உதுமானியப் பேரரசிடமிருந்து கைப்பற்றியது முதல்) பிரிட்டீஷ் குடியேற்ற நாடாக விளங்கிவந்தது. அது ஒரு பெரிய முப்படைத் தளமாகவும் விளங்கிவந்தது. அதில் வாழ்ந்துவந்த 500,000 மொத்த மக்களில் 80 சதவீதம் கிறிஸ்துவராவர். மீதியுள்ளோர் (20%) துருக்கி முஸ்லீம்கள். 1954—55-ல் கிரீசிலும் சைப்ரசிலும் வாழ்ந்துவந்த கிரேக்க தேசியவாதிகள் தங்கள் நாட்டுக்கு 'நீதி' அளிக்கப்படவேண்டுமென்றும், சைப்ரசிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சி ஒழிய வேண்டுமென்றும், கிரீசுடன் சைப்ரசை இணைத்துவிட வேண்டுமென்றும் முடிவு கட்டினர். இதற்கு பிரிட்டனும் துருக்கியும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தன. அப்புறம் கேட்கவா வேண்டும் ? எங்குப் பார்த்தாலும் பலாத்காரம் கோர நடனம் ஆடியது. கொலை, கொள்ளை, அழிவு அன்றாட நிகழ்ச்சிகளாயின. இச் சூழ்நிலையில் 'நேசநாடுகளாம்' பிரிட்டனும் கிரீசும், 'நேச நாடுகளாம்' கிரீசும் துருக்கியும் பரம விரோதியாயின. இக் கூட்டு களின் தரயான யு. எஸ். ஏ.-யால் பரம விரோதிகள் இருவருக்கும் சம்மதமான (பிடித்தமான) கொள்கை ஒன்றை வகுத்துத்தர முடிய வில்லை. லண்டன் சைப்ரசுக்கு நிபந்தனையற்ற சுதந்திரமளிக்கப் படவேண்டுமென்றது. ஏதென்ஸ் சைப்ரசை கிரீசுடன் இணைத்து

விடவேண்டுமென்று வாதாடியது. அங்காராவோ சைப்ரசைப் பிரிவினை (partition) செய்யவேண்டுமென்று ஒருதலைக்கு நின்றது. சைப்ரசிலுள்ள கிரேக்க வைதிகத் திருக்கோயிலைச் (சர்ச்) சேர்ந்த ஆர்ச்பிஷப் மாக்காரியோஸ், பயங்கரவாதிகளுடன் கூடிக்கொண்டு ஒத்துழைப்பதாய் பிரிட்டிஷ் அதிகாரிகள் குற்றஞ்சாட்டி, அவரை 1956 மார்ச் 9ஆம் நாள் இந்து மகாசமுத்திரத்திலுள்ள செக்கலீஸ் தீவுகளுக்குக் கடத்தினர். சைப்பிரசிலும், கிரீசிலும், துருக்கியிலும் வேலை நிறுத்தங்களும் கலகங்களும் தலைவிரித்தாடின. அதில் அனேகம் பேர் (சில அமெரிக்கர்களும்) கொலை செய்யப்பட்டனர். இப் பலாத்காரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கச் சம்மதித்த மாக்காரியோசை, 1957 மார்ச் 28 ஆம் நாள் லண்டன் விடுதலை செய்தது. ஆனால், அவர் சைப்ரஸ் வரக்கூடாதென்ற நிபந்தனை விதித்தது. மாக்காரியோஸ் நேரே கிரீஸ் சென்றார். 1958-ல் பரஸ்பரக் குற்றச் சாட்டுகளாலும், ஐ. நா. வுக்கு விடப்பட்ட பரஸ்பர வேண்டு கோள்களாலும் எதுவும் செய்யமுடியவில்லை. அது மட்டுமல்ல. வாஷிங்டனின் அரசியல் மேதைகளால் மற்ற நேசநாடுகட் கிடையேயும் ஒற்றுமையை வளர்க்க முடியவில்லை. மனக்கசப்பும் ஏமாற்றமுமே வட ஆப்பிரிக்காவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தலைதூக்கிய பலாத்காரத்தை அடக்குவதிலும் ஒடுக்குவதிலும் அமெரிக்கக் கொள்கை வகுப்பாளரை எதிர்நோக்கியது. பாகிஸ் தான், பக்தாத் ஒப்பந்தம், சியாட்டோ ஆகிய இரண்டின் உறுப்பு நாடாகும். உறுப்பு நாடு என்ற முறையில் அது யு.எஸ்.ஏ. யிட மிருந்து கணிசமான இராணுவ உதவி பெற்றிருக்கிறது. அதன் அண்டை நாடான ஆப்கானிஸ்தான் பாக்கிஸ்தானை பாதிக்கும் வகையில் 'புஷ்டுனிஸ்தானை' அமைத்து, அதன் வாயிலாய்க் கடலுரிமை கொண்டாட விரும்பிற்று. (இதற்குத் தக்க ஆதரவு கிடைக்காது போகவும்) அது அமெரிக்காவின் எதிரியாகி உதவிக்கும் ஆதரவுக்கும் மாஸ்கோவை எதிர்பார்த்தது. காஷ்மீர் பிரச்சினை குறித்து பாகிஸ்தானுடன் வழக்குக் கொண்டிருந்த அண்டை நாடான இந்தியா, கராச்சிக்கு அளிக்கப்பட்டுவரும் யு. எஸ். இராணுவ உதவியைக் கடுமையாக எதிர்த்துவந்தது. ஏனெனில், யு. எஸ். ஏ. தனக்குப் பொருளாதார உதவியை அளித்தாலும், அதைத் தன் பொருளாதாரம் தாங்க முடியாத அளவுக்குப் படைக் கலங்களில் செலவிடும்படியாக பாக்கிஸ்தானுக்குக் கிடைக்கும் அமெரிக்க இராணுவ உதவி செய்துவருகிறது என்று புது டெல்லி குற்றஞ்சாட்டிற்று.

எடுத்துக்காட்டுகளைப் பெருக்கிக்கொண்டு போகவேண்டிய தில்லை. அவையனைத்திலும் ஒரு பொதுவான அம்சத்தைக் காண லாம். அது மார்க்ஸ்லாந்துக்கும் பொருந்தும். 'அமெரிக்க ஏகாதி பத்திய' எதிர்ப்பில் எல்லாக் கம்யூனிஸ்ட்டு நாடுகளையும் தனக்குக்

கட்டுப்பட்டு நடக்குமாறு செய்ய முயன்றது மாஸ்கோ. ஆனால், அது பலிக்காது என்பதை அது வெகு விரைவில் உணர்ந்தது. ஏனெனில், இந் நாடுகள் தத்தம் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தன. அவைகள் கற்பனையான அச்சுறுத்தலுக்கு எதிராகக் கிரெம்லினுக்கு அடிபணிய முன்வரவில்லை. அதுபோல் 'கம்யூனிச ஏகாதிபத்தியத்தை' எதிர்க்கும் பணியில் கம்யூனிச - எதிர்ப்பு நாடுகளனைத்தையும் தனக்குக் கட்டுப்படுத்த முயன்றது வாஷிங்டன். இம் முயற்சியில் (மாஸ்கோவைப் போல்) அதுவும் படுதோல்வியடைந்தது. ஏனெனில், அதனுடைய நட்பு நாடுகள் தத்தம் தேச நலன்களில் ஈடுபாடு செலுத்தி வந்தனவேயன்றி, 'கம்யூனிச அபாயத்தைப்'பற்றி அவைகள் இப்போது கவலைப்படவில்லை என்பதை அது உணரும்படியாயிற்று. ஏதாவது ஓர் உருவத்திலாவது மாஸ்கோ அமைத்த உயர் கூட்டு நிலைத்து நிற்கும்வரை அமெரிக்கா அமைத்த உயர் கூட்டு நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், கெடுபிடிப் போரின் பிரச்சினைகள், உலக சமுதாயத்தின் இறையுரிமையுடன் திகழும் நாடுகள் அனைத்தின் அல்லது பெரும்பாலானவற்றின் அரசியல் மேதைகளும் தேசபக்தர்களும் கொண்டிருக்கும் குழப்பமான முரண்பாடான ஆசைகள் உண்மையான சிக்கல்களைவிட முக்கியமானவை அல்லவென்று மனித குலமே நினைக்க முன்வந்துவிடுமாயின், இக் கூட்டுகள் இரண்டும் 1855-60-ல் தோன்றுவதுபோல் தாற்காலிகமானவையாகவும் நலிவுடையவையாகவுமே ஆகிவிடும். அமெரிக்கா 1940—1950-லும் 1950—60-லும் கடைப்பிடித்துவந்த வெளிநாட்டுக் கொள்கையை ஆதரிப்போர், வாஷிங்டனின் போக்குதான் கம்யூனிசம் 'உலகை வெல்ல முயுயாமல்' தடுத்துவிட்டது என்றும், அதன் மூலம் அமெரிக்கா தன் பாதுகாப்புக்கு இன்றியமையாத 'சக்தி சம நிலையைப்' பாதுகாத்தது என்றும் பேசுவார்கள். ஆனால், அக் கொள்கையைத் தாக்குவோர், கம்யூனிச ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தல் எல்லாம் வெறும் கற்பனையேயன்றி வேறில்லை; எதிர்த் தரப்பினர் அதுபற்றி மிகையாகப் பேசிவருகின்றனர்; மனித உள்ளத்தைக் கட்டுப்படுத்தப் போட்டியிடும் கம்யூனிசத்தின் உண்மையான அபாயத்தைப் போக்க, 'பாதுகாப்பு'ப் பற்றி முற்றிலும் வேருன கருத்து அவசியம். நேசக்கூட்டுகளுக்கும் இராணுவ உதவிக்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தால் அமெரிக்க அக்கறைகளுக்கு நன்மையைவிடத் தீமையே விளைந்தது என்று கூறுவார்கள். 'வரலாற்றின் தீர்ப்போ முடிவற்றது'. 1960ஆம் ஆண்டு பிறப்பதற்கு முன்பே, அமெரிக்கா சென்ற 20 ஆண்டுகளாக வெளிவிவகாரத் துறையில் கடைப்பிடித்துவந்த கொள்கையை மறுபடியும் சீர்தூக்கிப் பார்ப்பது இன்றியமையாததாகும் என்ற உண்மை இன்று வெளியாகிவிட்டது.

14. ஏழைகள் பாடு

1. எத்தனை உலகம்?

'மற்ற அரசுகளைப்பற்றி நீர் பேசுங்கால் பன்மையில் பேசவேண்டும்; அவற்றில் ஒன்றுகூட ஒரே நகரத்தா லானதன்று; மாருக, அவை (ஒவ்வொன்றும்) பல நகரங் களைக் கொண்டவை.....ஏனெனில், ஒவ்வொரு நகரமும் எவ்வளவுதான் சிறியதாக இருந்தபோதிலும், இரு வெவ் வேறு நகரங்களாக—எளியோர் நகர், பணக்காரர் நகர் என்று பிரிந்துகிடக்கிறது; அதுமட்டுமன்று. அவை இரண் டும் ஒன்றோடொன்று எப்போதும் பொருதுகொண்டே யிருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் சிறிய பல பிரிவு களைக் காணலாம். அவையனைத்தும் ஒரே நாட்டைச் சேர்ந்தவை என்று நீர் கருதுவீராகில், அது ஒரு தவருகும்.' —பிளேட்டோ எழுதிய 'குடியரசு' என்ற நூலிலிருந்து.

20ஆம் நூற்ருண்டு உலக சமுதாயத்தில் வாழ்ந்துவரும் மனித குலத்தின் எழுச்சிகளையும் முயற்சிகளையும் நோக்குங்கால், அவற்றின் எதிர்காலம் வேற்றுமை நிறைந்ததாயும், பகைமை யுணர்ச்சி பொருந்தியதாயும், சுதந்திர உலகிற்கும் கம்யூனிச உல கிற்கும் (மார்க்ஸ்லாந்துக்கும்) இடையே சண்டை சச்சரவு நிறைந்ததாயுமே இருக்கும் என்று ஒருபுறம் பெரும்பாலான அமெரிக்கரும் மேற்கு ஐரோப்பியரும், மற்ருெருபுறம் பெரும்பாலான ரஷ்யரும் சீனரும் கருதிவருகின்றனர். இந் நூற்ருண்டு நடுவில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தால் இப்படிக் கருதுகின்றனர் போலும். சுதந்திர உலகமும் கம்யூனிச உலகமும் ஒரே குறிக் கோளையே கொண்டுள்ளன. எப்படியாவது உலகைத் தம் குடைக் கீழ்க் கொணர்ந்து, 'உலகின் தலைமையைத்' தாம் ஏற்கவேண்டு மென்று இருதரப்பினரும் நினைக்கின்றனர். இதனுல் இருவருமே மற்றவரின் ஆசை தோல்வி அடைய முயன்றுவருகின்றனர். இக் கண்ணுடி வழியே மேலைக்கண்ணுேட்டத்துடன் பார்க்குங்கால், மனித குலம் சீவித்துவரும் இவ்வுலகம் மூன்று 'உலகங்களாகப்' பிரிந்துகிடப்பது தெரியவரும். வழி தவறிச் செல்லும் நடுநிலை யாளரின் உலகம் ஒன்று. இது காலக்கிரமத்தில் இராட்சச வல்லரசு களின் எதிரெதிரான முகாம் ஒன்றுடன் சேர்க்கப்பட்டுவிடும். சோவியத் பாணி சோசியலிச, அரசியல் சருவாதிகார உலகம் இரண் டாவது; இது (நடைமுறையில் இருந்துவரும்) அரசாங்கங்களைக் கவிழ்க்கவும், ஒவ்வோர் இடத்திலும் வாழ்ந்துவரும் மக்களை வென்று தனக்கு அடிமைப்படுத்தவும் முயன்று வருகிறது. சுதந்திர முயற்சியில் நம்பிக்கையுள்ள முதலாளித்துவ, ஜனநாயக உலகம் மூன்ருவது. இவ்வுலக மக்களனைவரும் சுதந்திரம் பெறவும்

திரவியம் தேடவும் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. அதே கண்ணுடி வழியாக, ஆனல், கிழக்கத்திய கண்ணுேட்டத்துடன் பார்க்குங்கால், கம்யூனிசம் 'எதிர்காலத்தின் அலேயாயும்', முதலாளித்துவமோ சீர்குலேந்து சிதறிப்போன உள்நாட்டுச் சுரண்டல், வெளிநாட்டு ஏகாதிபத்திய முறையாயும், நடுநிலே நாடுகள் இறுதியில் கம்யூனிச வர்க்கத்திற்குள் சென்றுவிடும் போலவும் தோன்றுகிறது.

மனித குலம் தன் எதிர்காலத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் எண்ணம் வெறும் மனக்கோட்டையேயன்றி வேறில்லே என்பது 1960-க்குச் சற்று முன்னரே புலனுயிற்று. அதனுடைய எண்ணத்திற்கும் வருங்காலத்தில் நடக்கவிருப்பதற்கும் சற்றும் தொடர்பு இராது என்ற உண்மை வெளியாயிற்று. அதற்குப் பல காரணங்கள் உண்டு. உலகைக் கட்டியாளும் நோக்கத்தில் நடந்து வரும் கெடுபிடிப் போர்பற்றி மனிதகுலம் ஏற்கெனவே கொண்டிருந்த கருத்துகளாலும், சமாதானச் சகவாழ்வு வாழ வழிசெய்யும் இராசதந்திரத்தாலும், குறிப்பாக யூ. எஸ். எஸ். ஆரின் தொழில்மய சமுதாயங்களுக்கும், அட்லான்டிக் சமுதாயங்களுக்குமிடையே உருவாகிவரும் 'பண்பாட்டுக் கலப்பாலும்,' இவ் வையத்தின் பரந்து விரிந்து கிடக்கும் 'பிற்போக்கான' அல்லது 'அபிவிருத்திக் குறைவான' பிரதேசங்களில் வாழ்ந்துவரும் எண்ணற்ற மக்கள் 'எதிர்பார்க்கும் நற்போர்ப் புரட்சி'யாலும் பொய்யாகிவிட்டன. இன்றும் வருங்காலத்திலும் மனிதகுலத்தை ஆட்டிவைக்கும் சக்திகள்பற்றியும், மாற்றத்தின் இப் போக்குகள்பற்றியும் நாம் ஆராய்தல் இன்றியமையாததாகும்.

புது 'முதலாளித்துவம்': மார்க்சீயத்தின் உயர்பணியைப் பின்னேக்குடன் பார்க்குங்கால், அது மார்க்சும் மார்க்ஸீயவாதிகளும் கொண்டிருந்த நம்பிக்கைகளுக்கு நேர் முரணுகச் செல்வது புலனுகும். முதலாளித்துவத்தின் 'தீமைகட்கும்' முதலாளித்துவத்தின் பணிக்கும், நெடுநாளாக எதிர்பார்க்கப்படும் அதன் (முதலாளித்துவத்தின் 'வீழ்ச்சிக்கும்' அதன் பணிக்கும் எவ்விதப் பொருத்தமுமில்லே. இதுவரை இருந்த பொருத்தமும் (தொடர்பும்) எதிர்மறையாகவே இருக்கிறது. என்ருலும், அது ஆக்கத்தன்மையுடையது. இது ஒரு முரண்பாடுதான். 'பாட்டாளிகள் புரட்சி எங்கும் ஏற்பட வேண்டும்' என்றும், 'நடுத்தர வகுப்பினரைக் கவிழ்த்துவிட வேண்டும், என்றும் போதிக்கும் மார்க்ஸீயம் விடுக்கும் அறைகூவல்கள், 'முதலாளி கட்கும்' 'நடுத்தர வகுப்பு நாடுகட்கும்' தத்தம் தவறுகளேப் போக்கவும் அவ்வறைகூவல்களே எதிர்க்கவுமே ஊக்கம் அளித்தன. அதனல்தான் பிஸ்மார்க் இரண்டாம் ரெய்ச்சில் மார்க்சீயத்துடன் வெற்றிகரமாகப் போராடினர். அடுந்த பல்லாண்டுகளில் ஒருபுறம்

உலக மகாயுத்தம் (இருமுறை) ஏற்பட்டும், அப் போர் புரிந்து கொண்டே அட்லான்டிக் சமுதாயத்தினர், 'முதலாளித்துவத்தை' முற்றிலும் வேறு தன்மையுடையதாகச் செய்துவிட்டார்கள். மார்க்ஸே இன்று உயிருடன் இருந்திருந்தால், 19ஆம் நூற்றாண்டு நடுவில் நடைமுறையிலிருந்த தனியார் சுதந்திரப் (laissez-faire) பொருளாதாரங்களைப்பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்கும், இன்று நிலவிவரும் முதலாளித்துவத்துக்கும் சிறிதுகூட ஒற்றுமை யில்லை என்பதை ஒப்புக்கொண்டிருப்பார்.

இன்றைய (முதலாளித்துவப் பொருளாதாரங்களிலுள்ள) தொழி லாளர்களின் நிலைமைக்கும், சில தலைமுறைக்கு முன்னால் இருந்த அவர்களின் நிலைமைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை இருக்கிறது என்றால், அது மிகையாகாது. ஏனெனில், சமூகச் சீர் திருத்தக்காரர்களும், தொழிலாளர் நிறுவனங்களும், கூட்டுத் தொழில் இயக்குநர்களும் கொண்டுவந்த நெரிசலாலும், தொழிலாளர் சங்கங் களுடன் தொடர்பு கொள்ளவேண்டிய அவசியத்தாலும், பெருவாரி உற்பத்தியில் (large scale production) தொழில் திறமை இருக்க வேண்டிய அவசியத்தாலும், சட்டசபையினர், தொழில் மயத்தால் தொடக்கத்தில் ஏற்பட்ட ஆபத்துகள், அநியாயங்கள் ஆகியவற்றி னின்றும் 'பாட்டாளிகளைப்' பெருமளவு காப்பாற்ற வழிவகுத்துத் தந்திருக்கிறார்கள். தொழில் முன்னேற்றமடைந்திருக்கும் ஒவ்வொரு நாட்டிலும், விதி விலக்கில்லாமல் பாட்டாளிகளின் வேலைநேரம் குறைக்கப்பட்டும், ஊதியம் அதிகரிக்கப்பட்டும் வருகிறது; பெண் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருகிறது; சிறுவர் ஊழியம் தடை செய்யப்பட்டுவருகிறது. விபத்து, நோய், தொழி லின்மை, முதுமை ஆகியவற்றிலிருந்து ஊழியர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில், முன்பெல்லாம் கனவில்கூடக் கருத முடியாத அள வுக்கு இன்று 'சமூகப் பாதுகாப்பு' அளிக்கப்பட்டுவருகிறது. மற்றொரு புறம் பொதுக் கொள்கை வகுப்பாளர்கள், மார்க்ஸ், ரிக்கார்டோ, ஆதம் ஸ்மித் இவர்களையெல்லாம்விட, தற்போது கெயின்ஸ் என்ற பொருளியலறிஞரின் பொருளியலால் ஊக்குவிக்கப்பட்டுப் பண, நிதிக் கட்டுப்பாட்டு வழிகள், வரி, சீர்திருத்தம், பொதுத்துறைச் செலவு, திட்டம் ஆகிய துறைகளிலும், மற்றும் பணச் சேமிப்பு முறைகள் முதலீடுகள், உற்பத்தி, நுகர்வு ஆகிய துறைகளிலும் புதுப்புது வழிகளைக் கையாண்டுவருகின்றனர். அன்றியும், முன்போல் அல் லாமல், எளிதில் மாறும் பொருளாதாரச் சக்தி சமநிலை வளர்ச்சி யில் 'வர்த்தகச் சுழலின்' பழைய உருவமே போய்விட்டது. வர்த்தக 'மந்தங்கள்', 'பீதிகள்' முதலியவற்றுக்கே இன்று இடமில்லாமல் போய்விட்டது.

இவ்வளப்பரிய மாற்றங்களைப் பார்த்துவிட்டு, 'முதலாளிகள்' 'சோசியலிஸ்ட்டுகளாக' மாறிவிட்டனர் என்றோ, அன்றி முதலாளித்துவம் சோசியலிசத்தினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக 'சோசியலிஸ்ட்டாக' மாறிவிட்டதென்றோ கூறிச் சொற்சிலம்பாடுவதில் அர்த்தமில்லை. யு. எஸ். ஏ., கனடா, மேற்கு ஐரோப்பா ஆகியவற்றின் பொருளாதாரங்கள், அழிவைத் தரும் போட்டி, 'சுதந்திரச் சந்தையின்' விலைவாசி மாற்றங்கள் ஆகிய இவற்றையெல்லாம் பொறுத்து இன்று இயங்கிவரவில்லை. மாறாக, அவை இன்று பொதுத்துறைச் சீர்திருத்தம், திட்டம், 'நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்படும் விலைகள்' (administered prices), குறைந்தபட்சக் கூலி, கூட்டுப் பேரம் பேசல் ஆகிய இவற்றையே பெரிதும் சார்ந்திருக்கின்றன. மேலும், வர்த்தகத் துறையில் அரசாங்கத்தின் தலையீடு வரவர அதிகரித்துவருகிறது.[1] இதன் விளைவை வேண்டுமானால் 'மக்கள் முதலாளித்துவம்' என்றோ, அன்றிச் 'சேமநல அரசு' என்றோ, அன்றி, 'எட்டிப்பார்க்கும் சோசியலிசம்' என்றோ, அன்றி, 'அடிமைத்துவத்தின் பாதை' என்றோ அழைக்கலாம். இங்கு உண்மை எது என்பதுபற்றிக் கவனிப்பதுதான், நம் அக்கறையேயன்றி, அதன் முடிவு பற்றியன்று. உண்மை எதுவென்பதும் அனைவருக்கும் தெரியும்.

புது சோசியலிசம்: இதற்கு எதிராகப் பார்க்குங்கால், ரஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் தொழில் மயம். நகர மயம், மற்றும் கல்வி முன்னேற்றம் ஆகியவை ரஷ்ய சமுதாயத்தையே மாற்றிவிட்டது புலனாகும். அதன் போக்கைப் பழங்காலத் திசையில் மாற்றியமைப்பதென்பது முடியாத காரியம். இம் மாற்றங்கள்

[1] இக் கருத்தை யு. எஸ். வர்த்தகத்துறையும் ஃபெடரல் ரிசர்வ் வெளியிடும் வெளியிட்டன. அமெரிக்கப் பொருளாதாரத்தின் புதிய மாறும் தன்மையை அனைவரும் அறிந்ததே. 1929-ல் ஆண்டின் நாட்டு மொத்த வருமானம் (gross nationai product) 104 பில்லியன் டாலர்; அதில் மக்களின் நுகர்வு 78 பில்லியன் டாலர்; தனியார் முதலீடு 16 பில்லியன் டாலர்; அரசாங்கச் செலவு 8 பில்லியன் டாலர். 1933-ல், அதாவது, மந்தத்திற்குப்பின், இதே முறையில் பார்க்குமிடத்து, அவ்வெண்கள் 46, 1, 8 பில்லியன் டாலர்களாயிருந்தன. அப்போதைய தேசிய வருவாய் 55 பில்லியன் டாலர் ஆகும். போரிலும், அதன் பின்னர் ஏறபட்ட பொருளாதார விக்கத்திலும (boom) 20 ஆண்டுகள் கழிந்தன. அதன் பினனர், 1955-ல் இதே முறையில் பார்க்குமிடத்து, அவ்வெண்கள் 255, 59, 75 பில்லியன் டாலராகவும், தேசிய வருமானம் 387 பில்லியன டாலராகவும இருந்தன. எனவே, 1929-ல் 'அரசாங்கத் துறை'யின் பங்கு 8 சதவீதமே இருந்தது. 1955-ல அது 25 சதவீதமாயிற்று. தேசிய வருமானம் 425 பில்லியன் டாலர் என்று மதிப்பிடப்பட்டது. அதில் தனியார் முதலீட்டிற்காகப் பொருளிலும் சேவையிலும செலவிடப்படுவது மொத்தத்தில் 15 சதவீதம் என்றும், அரசாங்கத்தின் கொள்முதல் 20 சதவீதத்திற்கும் மேல் என்றும் கணக்கிடப்பட்டது. ஜனநாயகி ஜான்ஹோவரின் 1957—58ஆம் ஆண்டின் ஃபெடரல் வரவுசெலவு திட்டத்தில் 75 சதவீதம் இனம் நேராகவோ, மறைமுகமாகவோ பண்டைய, இப்போதைய, வருங்காலப போருக்குடையதாக இருந்தது. இராணுவச் செலவு பணவீக்கத்தினமூலம் 'சோசியலிசத்திற்கு' அமெரிக்கா மாறியதுபற்றி அறிந்துகொள்ள வாரென்ஸ் டெனவிஸ் என்பவரின் மாதாந்தர வெளியீடான 'பகுத்தறிவின் வேண்டுகோள்' என்பதைப் பார்க்கவும். அதனுடன் 'புதிய குடியரசு' என்ற நூலில் இந் நூல் ஆசிரியர் (சூமன்) எழுதியிருக்கும் 'எத்தனை உலகங்கள்' என்ற கட்டுரையையும் பார்க்கவும்.

மாஸ்கோ, லெனின்கிரேடு, கீவ், ஸ்டாலின் கிரேடு ஆகிய மாபெரு நகரங்களில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையையும் சமுதாயப் பிரச்சினைகளையும் ஆம்பர்க், மியூனிச், ரோம், பாரிஸ், லண்டன், மான்செஸ்டர், நியூயார்க், டெட்ராய்ட், சிக்காகோ ஆகிய நகரங்களில் வாழும் மக்களுடையது போல் செய்துவிட்டன. அதே சமயத்தில் கருத்துக் கொள்கை (அயிடியலாஜிகல்) வேற்றுமையையும் நிறுவனங்களின் பேதங்களையும் நினைவிலிறுத்த வேண்டும். அரசியலைக் கவனிக்குங்கால், சோவியத் நிபுணர்களின் ஆட்சி (elite) இன்னும் மக்களாட்சியாக ஆனபாடில்லை; மக்களாட்சியாகவும் அது ஆகப்போவதில்லை. என்றாலும்கூட, சோவியத் சமுதாயத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்களால் கம்யூனிச ஆட்சியைத் தாராள மனப்போக்குடையதாகவும் ஜனநாயகமாகவும் ஆக்குவது இன்றியமையாததாகிவிட்டது. இனியும் ஸ்டாலினிச முறைகளின் வாயிலாய் சோவியத் சமுதாயத்தை ஆள்வதற்கில்லை. யு. எஸ். எஸ். ஆரில் உற்பத்திக்குரிய சொத்து அனைத்தும் தேசியமயமாக்கப் பட்டுவிட்டது. ஆனால், மேலை சமுதாயத்திலோ அதன் பெரும்பாகம் 'தனியார்' கையிலேயே இருக்கிறது. எனினும், 'உடைமைக்கும்' 'நிர்வாகத்துக்கும்' இடையேயுள்ள வேற்றுமை, அமெரிக்காவைவிட இன்றைய ரஷ்யாவில்தான் பளிச்சென்று தெரிகிறது. இன்று யு. எஸ். எஸ். ஆரில் நிர்வாகத் திற்மை வாய்ந்த அதிகார வர்க்கத் தினர், எந்திரம்போல் இயங்கும் அரசியல்வாதிகள், 'வியாபாரப் பெரும்புள்ளிகள்' ஆகிய இவர்களே செல்வாக்குடன் விளங்கிவரு கிறார்கள். இதைக் காணுமிடத்து, ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கு மிடையே அதிக வேற்றுமையில்லை என்பது தெளிவாகும். எனினும், ஒரு விதத்தில் சோவியத் பொருளாதாரம் இன்றும் அமெரிக்கப் பொருளாதாரத்தைவிடக் குறிப்பிடத்தக்க முறையில் வேறுபட்டு நிற் கிறது. கட்டாயச் சேமிப்பு, திட்ட அடிப்படை, முதலீடு போன்ற 'சோசியலிச' முறைகளைக் கையாண்டு, மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலியவற்றில் நிலவிவருவதைவிட, ரஷ்யா தன்னுடைய பொரு ளாதார வளர்ச்சியின் வருடாந்தர உயர்வை இருமடங்காக்கிவிட்டது. இந்த அம்சம் பல்லாண்டுகளாக இருந்துவருகிறது. அதோடல் லாமல், இது உலக அரசியலிலேயே முக்கியமானதும்கூட.

இவ்விருவகை வெவ்வேறான அமைப்புகளுக்குமிடையே என்றுமே போக்க முடியாத வேற்றுமைகள், முரண்பாடுகள் என்று கருதப் பட்டவைகூட இன்று மாறிவிட்டன. அவைகள் இன்று ஒரு கொட்டை யிலிருக்கும் இரு பட்டாணியைப்போல் விரைவில் ஆகிக்கொண்டு வருகின்றன. சான்றாக, சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். 'சேம நல அரசு' என்பது இரண்டுக்கும் பொருந்தும். 'மக்கள் முதலாளித்துவம்,' 'மக்கள் சோசியலிசம்' — இவைகள்; இரு முகாம்களிலும் உற்பத்திச் சாதனங்களின் உரிமை வெவ்வேறு.

கையில் இருந்தபோதிலும், இவைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும், அடைந்திருக்கும் வெற்றிகளும் ஒன்றேதான். கூலி, ஊதியம், போனஸ், வெகுமதி, மற்றும் 'இலாபம் – அடிப்பதற்குரிய' மற்ற வெகுமதிகள் ஆகியவற்றிற்கிடையே நிலவிவரும் கூர்மையான வேற்றுமைகள், 'முதலாளித்துவ' வழிமுறையாகும். இவற்றைக் கையாண்டு, யூ. எஸ். எஸ். ஆர். தனது தேசிய வருவாயைப் பங்கீடு செய்துவருகிறது. அதைப் பார்க்குமிடத்து, யு. எஸ். ஏ. யில் நிலவி வரும் அமைப்புக்கும் ரஷ்யாவுக்கு மிடையே வேற்றுமையில்லை என்றுதான் தோன்றுகிறது. அன்றியும், இன்று நிலவிவரும் திட நம்பிக்கையின்மை, இளைஞர் கடமை நழுவல், ஒத்தூதல், அறிவு வளர்ச்சி எதிர்ப்பு, அதிகார வர்க்கத்துவம், போக்குவரத்து நெருக்கடி, குடி, நிர்வாகிகளின் குடற்புண், வலிப்பு நோய் — இவையனைத்தை யும் இருபுறத்திலும் காணலாம்.

அன்றுட வாழ்க்கையின் இவ்வம்சங்களும், இவை போன்ற கணக்கிலடங்கா நிகழ்ச்சிகளும் பெருந்தொழில், பெருவியாபாரம், பெரிய நகரங்கள், பெரிய அரசாங்கம், கடு உழைப்பு ஆகிய இவற்றின் விளைவுகளாகும். அது 'முதலாளித்துவ' சமுதாயமாக இருந்தாலும் சரி, இல்லை 'சோசியலிச' சமுதாயமாக இருத்தாலும் சரி, இரண்டிலுமே இவற்றைக் காணலாம். அமெரிக்கத் தொழில் உற்பத்திக்கு நிகராகத் தங்கள் உற்பத்தியைப் பெருக்க முயன்றது மார்க்ஸ்லாந்து. அதுபோல் தன்னைக் 'கம்யூனிசத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ள முயற்சிபுரிந்து வருகிறது சுதந்திர உலகம். இம் முயற்சியில் இரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிவந்து கொண்டிருக்கின்றன. இதைப் பார்க்குங்கால், 1839-ல் டி. டாக்குவேல் எழுதிவைத்துச் சென்றது எவ்வளவு உண்மை என்பது விளங்கும். 'தற்கால உலகில் இருபெரு நாடுகள் உள்ளன; இரண்டும் வெவ் வேறு தானத்திலிருந்து கிளம்பியபோதிலும், ஒரே குறிக்கோளை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றன. இங்கு ரஷ்யரையும் அமெரிக்கரையுமே குறிப்பிடுகிறேன்' என்று அவர் எழுதினர்.

தொழில் முன்னேற்றச் சமுதாயங்களில் ஏற்பட்டிருக்கும் கலப் பைப் பார்த்துவிட்டு, அவற்றிற்கிடையே 'சமாதானம்' ஏற்பட்டு விட்டதாகக் கருதிவிடலாகாது. உலக அரசாங்கம் என்பதன் அருகில்கூட வர இயலாத அரசு முறையில் 'அமைதி' உண்டாகும் பாதை என்றுமே இடையூறு நிறைந்ததாகத் தானிருக்கும். அதிகத் தொழில் முன்னேற்றமடைந்த நாட்டு அரசுகள் தத்தம் பொருளாதார, சமுதாய வாழ்வில் ஒரே மாதிரிச் சிக்கல்களைச் எதிர் நோக்கிவருகின்றன. இதற்கு அவர்களின் குறிக்கோள்கள் ஒரே மாதிரியாக இருப்பதே காரணம். எனவே, அவைகள் தத்தம் கொள்கைகளுக்கு இணங்க நடக்கவே முயல்கின்றன. அதன்

பொருட்டு ஒன்றையொன்று அழிக்கக்கூட அவைகள் தயங்கமாட்டா. இதுவே முதல் இரு உலகப் போரிலிருந்தும் நாம் கற்ற படிப் பினையாகும். ஆனால், 1914-லும் 1939-லும் போரிட்ட 'வல்லரசுகள்' உண்மையிலேயே தொழில் வளர்ச்சியில் வெகு முன்னேற்றமடைந் திருந்த காரணத்தால், 'வல்லரசுகளாக' விளங்கிவந்தன. எனவே தான், உழவுத்தொழிலையே பெரிதும் நம்பியிருந்த, பணிந்துபோகும் பண்புடைய ஆசிய, ஆப்பிரிக்க மக்களில் பெரும்பாலோரைத் தம் குடைக்கீழ்க் கொண்டுவரும் போட்டியில் இறங்க முடிந்தது. அதிலிருந்து ஆசிய, ஆப்பிரிக்க மக்களில் சிலர் தாங்களும் தொழில்மயமாக்கலில் இறங்க முடியும் என்றும், அதன் வாயிலா மேற்கத்திய வாழ்க்கைத் தரத்தின் அளவை எட்டிப் பிடித்துத் தங்களின் பழங்கால வறுமையைப் போக்கிவிட முடியும் என்றும் கருதி வந்தனர்.

ஆனால், இன்றோ இவையனைத்தும் முயற்கொம்பாகிவிட்டன. மேலைநாட்டு விஞ்ஞானம், தொழில்நுணுக்கக் கலை, தொழில்துறை ஆகியவற்றில் சமீபகாலத்தில் ஏற்பட்ட வெற்றிகள், பணம் பீடைத்த நாடுகட்கும் வறுமையில் வாடிவரும் நாடுகட்கும் இடையேயுள்ள தூரத்தைக் குறைப்பதற்குப் பதில் அதிகரித்துவிட்டன. ஆனால், 'குடியேற்ற நாட்டுக் கொள்கையோ' இன்று மலையேறிவிட்டது. முற்கால 'தேசவாசிகள்' மேலைநாட்டு எடுத்துக்காட்டில் இறங்கி விட்டார்கள்; மேலைநாட்டு நாட்டுணர்ச்சியைத் தழுவிவருகிறார்கள்; மேலைநாட்டுக் குண்டுகளைக் கடன்வாங்கிவருகிறார்கள்; மேலை நாட்டவர் 'இறைமையுரிமை' என்பதைப்பற்றிக் கொண்டிருக்கும் கருத்துகளை வலியுறுத்திவருகிறார்கள்; அதுபோல் தொழில்மய மாக்கலிலும் மேலைநாடுகளையே தங்கள் எடுத்துக்காட்டாகக் கொண்டு ஊக்கமுடன் முயன்றுவருகிறார்கள்.

புதுப் 'பாட்டாளிகள்': இவற்றிலிருந்து நாம் அறிவதென்ன வென்றால், உலக சமுதாயத்தின் வருங்கால நற்பேறுகள் 'முதலாளி களுக்கும்' கம்யூனிஸ்டுகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளைப் பொறுத்து இருக்கப்போவதில்லை. மாறாக, செல்வம் படைத்த நாடு கட்கும் வறுமையில் உழலும் நாடுகட்குமிடையே ஏற்படும் உறவையே பொறுத்திருக்கப்போகிறது. ஏனெனில், முதலாளித்துவக் கொள்கை யினரும் கம்யூனிஸ்ட்டுகளும் நவீனத் தொழிற்கலை நல்கிய வெற்றி களால் கொழுத்த பணக்காரர்களாகிவிட்டனர். ஆனால், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களோ வறுமையில் வாடிக் கிடக்கின்றனர். எனவே, கம்யூனிஸ்ட் உலகமோ, அன்றிச் சுதந்திர உலகமோ நண்பர்களைத் தேடுவதிலும், உலக மக்களைத் தமக்கிணங்க நடக்கவைப்பதிலும், தாங்கள் இறங்கி யிருக்கும் பலாத்காரமற்ற உலகப் போட்டியில் வெற்றி காண

வேண்டுமானால், அவ்வெற்றியானது, வறுமையில் வாடிக்கிடக்கும் மக்களுக்கு உதவியளித்து, அவர்களின் வாழ்க்கையை வளம் பொருந்தியதாகச் செய்யவைக்கும் திறமையில்தான் இருக்கிறது என்பது தெள்ளிதின் விளங்கும். பொருளாதார அதிசயத்தைத் தோற்றுவிக்கக் கடும்போட்டி போட்டு, முயற்சிபுரிந்துவரும் இரு தரப்பினரும் எதிர்நோக்கவேண்டிய பிரமாண்டமான இடர்களைப் பற்றி இங்குச் சற்றுப் பார்ப்போம். பணக்கார, ஏழை நாடுகள் என்று பிரிந்து கிடக்கும் இன்றைய உலக சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தில் நிலவிவரும் திடுக்கிடச் செய்யும் வேற்றுமையிலிருந்து இது எவ்வளவு பிரமாண்டமான பிரச்சினை என்பது புரியும்.

ஐ.நா. பொருளியல் வல்லுநர்களும் புள்ளியியல் வல்லுநர்களும் அப்போது கிடைத்த சரியான ஆதாரங்களை வைத்துப் பல வேறு நாடுகளில் நிலவிவந்த சராசரி வருடாந்தர வருமானம் 1949-ல் தலைக்கு 400 யு. எஸ். டாலர் என்று கணக்கிட்டுக் கீழே தந்திருக்கிறார்கள். அப்போது இருந்த மொத்த சனத்தொகை 2,400,000,000-ல் 300,000,000 பேர் 15 நாடுகளில் வாழ்ந்துவந்தார்கள். யு.எஸ்.ஏ. 1,453 டாலர்; கனடா 870 டாலர்; நியூசிலாந்து 856 டாலர்; சுவிட்சர்லாந்து 849 டாலர்; ஸ்வீடன் 780 டாலர்; யு.கே. 773 டாலர்; டென்மார்க் 689 டாலர்; ஆஸ்த்திரேலியா 679 டாலர்; நார்வே 587 டாலர்; பெல்ஜியம் 582 டாலர்; லக்சம்பர்க் 553 டாலர்; நெதர்லாந்து 502 டாலர்; பிரான்ஸ் 482 டாலர்; ஐஸ்லாந்து 476 டாலர்; அயர்லாந்து 420 டாலர்.

வருடாந்தர தலா வருமானம் 100 டாலருக்கும் 400 டாலருக்கும் இடையேயிருந்த நாடுகளில் மட்டும் 500,000,000 பேர் வாழ்ந்துவந்தார்கள். அதில் இஸ்ரேல் 389 டாலர்; செக்கோசுலேவாக்கியா 371 டாலர்; பின்லாந்து 348 டாலர்; அர்ஜன்டைனா 346 டாலர்; மேற்கு செர்மனி 320 டாலர்; யு. எஸ். எஸ். ஆர். 308 டாலர்; அங்கேரி 269 டாலர்; இத்தாலி 235 டாலர்; துருக்கி 125 டாலர்; மெக்சிகோ 121 டாலர்; பிரேசில் 112 டாலர்.

வறுமையில் வாடியோர் மட்டும் உலக சனத்தொகையிலேயே மூன்றில் இரண்டு பாகம் இருந்தனர். இவர்கள் லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு நாடுகள் ஆகியவற்றில் வாழ்ந்துவந்தனர். இவர்களின் தலா வருமானம் ஆண்டு 1-க்கு 100 டாலருக்கும் குறைவாகவே இருந்தது. அதில் இரான் 85 டாலர்; சிலோன் 67 டாலர்; இந்தியா 57 டாலர்; பாகிஸ்தான் 51 டாலர்; பிலிப்பைன்ஸ் 44 டாலர்; பர்மா, தாய்லாந்து 36 டாலர்; கொரியா 35 டாலர்; சீனா 27 டாலர்; இந்தோனீசியா 25 டாலர்.[2]

[2] இன்றைக்கு இவ்வெண்கள் எப்படி இருக்கும் என்று துணிந்து வசமாகக் கூறுவதற்கில்லை. இதற்கு ஐ.நா. புள்ளியியல் நிபுணர்களோ, வேறு எவருமோ

அட்லான்டிக் சமுதாயத்தில் வசதியுடன் வாழ்ந்துவரும் வெள்ளையருடன் ஒப்பிடுங்கால், மனித சமுதாயத்திலேயே வறுமையால் பீடிக்கப்பட்டுக் கிடப்பவர்கள் 'கறுப்பர்களே' என்பது புலப்படும். இதை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது. யு.எஸ்.ஏ.யில் வாழ்ந்துவரும் 15,000,000 நீக்ரோ மக்களும் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டுவந்த நியாயமற்ற பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, உலகிலேயே செல்வம் பொருந்திய நாட்டில் மிக எளிமையுடன் வாழ்ந்துவருகிறார்கள். இக் காலக் குடியேற்ற நாட்டு எதிர்ப்பு, இன வெறுப்பு எதிர்ப்புப் புரட்சிகள் ஆகியவற்றினின்றும் என்று நல்ல காலம் நமக்குப் பிறக்கப்போகிறது என்று எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் எண்ணற்ற எளியோரின் 'புரட்சியைத்' தனியாகப் பிரிக்க முடியாது. இப் புரட்சிகள், வெள்ளையன், வெள்ளைத் தோலற்றவர்களை–'கறுப்பர்', 'மாநிறம் வாய்ந்தவர்', 'மஞ்சள் நிறத்தவர்', 'சிவப்பர்' ஆகியோரை ஏற்கெனவே மதித்து நடக்குமாறு செய்துவிட்டன. ஆனால், இவர்களில் (வெள்ளையரல்லாதவர்களில்) சிலர் தாம் வெள்ளையருக்குத் தாழ்ந்தவர் என்ற மனப்பான்மையை நிலையாகக் கொண்டுவிட்டார்கள். எளியோர் வறுமை நீங்குமா, நீங்காதா என்பது பற்றி இனி ஆராய்வோம்.

2. மக்கள், வறுமை, நல்வாழ்வு வாழும் வழிகள்

> 'ஓ, மால்தூஸ், பூமியிலிருந்து விளையும் பொருள்கள் அனைத்தும் தீர்ந்தபின், பச்சிளங் குழந்தைகள் பால் இல்லாமல் சாகுங்கால், இச் சனத்தொகை எப்படி வளரும் என்பதுபற்றி சிசரோனிய நடையில் கூறும்'—மால்தூசியக் கொள்கையின் பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பு.

தொழிற் புரட்சி முதன் முதலாக இங்கிலாந்தில்தான் தோன்றியது. இலாபம் அடிப்படையிலே கண்ணுங் கருத்துமாயிருந்த புதிய தொழில் நிர்வாகிகள் வேலையாட்களை மிருக்கங்களைப்போல் நடத்தி வந்தார்கள். ஆடுமாடுகளைப்போல் வேலையாட்களைத் தொழிற் கூடங்களில் தள்ளி, அவர்களின் வயிற்றை வளர்க்கக்கூடப் போதாத அளவு கூலி கொடுத்துவந்தார்கள். நிலக்கரிச் சுரங்கங்களில் பெண்

இதுவரை அவற்றை 1949-க்குப் பின் கண்டுபிடிக்க முயலாமையே காரணமாகும். யு. எஸ். சென்சஸ் பீரோ 1956-ல் யு. எஸ். நகரவாசிகளின் சொந்த வருமானத்தைக் கணக்கிட்டது. அதன்பிரகாரம் வரி செலுத்தும் சராசரி தலா வருமானம் 1,940 டாலர் என்று கணிக்கப்பட்டது. அதில் நிலாவார் (2,858 டாலர்) மாகாணம் சராசரியைவிட அதிகமான தலா வருமானமும், மிசிசிப்பி, (964 டாலர்) சராசரியைவிடக் குறைவான தலா வருமானமும் பெற்றிருந்தன. இதனுடன் ஒப்பிடக்கூடிய எண்கள் டைத்திருக்கும்பட்சத்தில், அவை 1956-60 யு.எஸ்.எஸ்.ஆர்., மேற்கு செர்மனி, மேற்கு ஐரோப்பிய நாடுகள்–என் சீனு இந்தியா–ஆகிய நாடுகளின் தலா தேசிய வருமானத்தைக்கூடக் கணகிட்டிருக்கலாம். 1949ஆம் ஆண்டு ஐ. நா. மதிப்பீடு, மூன்றில் இரண்டு பகுதியினர் வறுமையில் வாடி வதங்குகின்றனர் என்றும், வசதியுடன் வாழ்பவர் மூன்றில் ஒரு பகுதியினரே என்றும், அவர்களும் வட அமெரிக்காவிலும் வட ஐரோப்பாவிலுமே வாழ்ந்துவருகின்றனர் என்றும் கூறுகிறது.

கள் வேலை பார்த்துவந்தார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளைக்கூட விட்டுவிடவில்லை. அவர்களும் 'இருளடைந்த குட்டிச்சாத்தான் குடி கொண்டிருந்த ஆலைகளில்' குறைந்த கூலிக்குக் கடுமையாக உழைத்து வந்தார்கள். தினமும் 12-லிருந்து 14 மணிநேரம் வேலை பார்த்து வந்தார்கள். இவ்வாறுக இயந்திர யுகம் தோன்றிய தொடக்கத்தில், தனியார்-சுதந்திர முதலாளித்துவக் கொள்கையினர் புதிய பாட்டாளி வகுப்பினர்மீது பல அநியாயங்கள் புரிந்துவந்தனர். அவர்கள் வாழ்க்கையையே நரகமாக்கிக்கொண்டிருந்தார்கள். மக்கட் பணியாளரும் சமூக சீர்திருத்தக்காரர்களும் மெதுவாக இக் கொடுமையை உணர ஆரம்பித்தனர். பின்னர் கேட்கவா வேண்டும்? பாட்டாளிகள் துயரைத் துடைக்கத் 'தொழிற்சாலைச் சட்டங்கள்' கொண்டுவரப்பட வேண்டுமென்றும், அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் போராடினர். தனது இலாபத்திலே குறியாய் இருந்து கொண்டே, பிறர் நலத்தையும் கவனிக்க முடியும் என்று போதித்த ஆதம் ஸ்மித்தின் 'கொள்கை' பலிக்கவில்லை. இக் காரணங்களால் 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பொருளியல் 'துயர்நிறை அறிவியல்' என்று அழைக்கப்பட்டுவந்தது.

இத் துயரங்களும் அநீதிகளுமே, முதலாளித்துவம் ஒரு கொடிய, தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் சுரண்டல் முறை என்று கார்ல் மார்க்ஸும் பிரடரிக் ஏஞ்சலும் பழித்துரைக்குமாறு செய்தன. ஆனால், இன்றோ அவைகள் தொழில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் பண்பட்டுப்போன முதலாளித்துவத்தின் பழைய ஞாபகார்த்தங்களாகி விட்டன. எனினும், தொழில்மயமாக்கலின் தொடக்கம் பொதுவாக மக்கள் எல்லோருக்கும் துயரையே தருகிறது. ஏனெனில், நுகர்வை விட அதிகமாக உற்பத்தி செய்யுமாறு பலாத்காரத்தைக் காட்டியாகிலும் அவர்களைத் தூண்டவேண்டியிருக்கிறது. வறுமையில் சிக்குண்டு கிடக்கும் விவசாய சமுதாயங்களில் முதலீடு, தொழிற் பெருக்கம், பொருளாதார வளர்ச்சி முதலியவை ஏற்படுவதற்கு வேண்டிய முதலைத் திரட்டுவதற்கு (accumulation of capital) இதை விட்டால் வேறு வழி இல்லவே இல்லை. யு.எஸ்.எஸ்.ஆரில் 'சோசிய லிசத் தொழில்மயம்' ஏற்பட்டபோதும், அதற்காக முதல் திரட்டப்பட்ட போதும் (முதலாளித்துவ நாடுகளைவிட) அதிகமான கொடுமைகள் ஏற்பட்டன. அதன் பின்னரே செழுமை தலைதூக்கியது. உலகத்தில் எத் திசையாக இருந்தாலும் சரி, வறுமைப் பேயுடன் போராடுபவர்களை ஒன்றோடொன்று ஒப்பிடக்கூடிய பிரச்சினைகளும் மயக்கங்களுமே உலகை எதிர்நோக்குகின்றன.

பொருளியல் வல்லுநர்களிலேயே துயரக் கண்ணோட்டம் கொண்டவர் தாமஸ் மால்தூஸ் (1776—1834) என்ற ஒருவர்தாம். அவருடைய முரணுரை (paradox) ஒரு காலத்தில் வெறும் கட்டுக் கதை என்று கருதப்பட்டுவந்தது. ஆனால், இன்றோ அது கவலையைத்

தரக்கூடிய (தவிர்க்க முடியாத) உண்மை என்று பெரும்பாலான மக்களுக்குப் படுகிறது. மால்தூஸ் மனித குலத்தின் நிலைமைபற்றி எழுச்சி குன்றிய சிந்தனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார். அம் முடிவு தவறானது என்று தொழில் முன்னேற்றமடைந்த மேனாட்டு உலகம் நிரூபித்துவிட்டது. ஆனால், ஆசியா, ஆப்பிரிக்கா முதலியவற்றின் பெரும்பகுதியைப் பொறுத்தமட்டும் அது முற்றிலும் சரிதான் என்று தோன்றுகிறது. சனத்தொகை தொடர்ந்து வளர்ச்சியடைந்து செல்லுமென்றும், அவ் வளர்ச்சி பெருக்கல் விகிதத்திலும் (geometric ratio), பிழைப்பு வழிகளின் வளர்ச்சி கணக்கியல் விகிதத்திலும் (arithmetic ratio) செல்லும் என்று அவர் முடிவுக்கு வந்தார். எனவே, அவருடைய கூற்றுப்படி, வாழ்க்கைத்தரம் உயருவதற்கு வழியே இல்லை. ஏனெனில், வளங்களைவிட சனத்தொகை பெருகிக்கொண்டே போய், ஏழைகளை என்றும் ஏழைகளாகவே இருக்கச் செய்துவிடும். இதுதான் மால்தூசியக் கொள்கை.

சனத்தொகைப் புதிர்: மால்தூசின் கொள்கை தவறானது. அவர் தொழில் வளர்ச்சியால் வாழ்க்கைத் தரத்திலும், சனத்தொகை வளர்ச்சியிலும் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்தாரில்லை. நகர்ப்புற சனத்தொகை தன்னைத் தானே பெருக்கம் செய்து கொள்வது அரிதுதான். மேனாடுகளை எடுத்துக்கொண்டால், கத்தோலிக்க சமய எதிர்ப்பு இருந்தபோதிலும், இன்று பொதுவாகத் திட்ட அடிப்படையில்தான் தாய்மை ஏற்பட்டுவருகிறது. சில தடைகளும் தாய்மைமீது விதிக்கப்பட்டுவருகின்றன. கருத்தடைகளும் செய்யப்பட்டுவருகின்றன. சனத்தொகை வளர்ச்சி இனப் பெருக்கத்திற்கும் (reproduction), வளங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பினால் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், அது (1) பிறப்பு விகிதங்கள், (2) இறப்பு விகிதங்கள், (3) ஒரு குறிப்பிட்ட சனத்தொகைக்குக் கிடைக்கும் வளங்கள், மற்றும் (4) தொழில் நுணுக்கக் கலையின் வளர்ச்சி மட்டம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. இவற்றில் பிறப்பு விகிதத்தைப் பின்னால் பெறும் தாய்மார்களின் பின்னால் பெறக்கூடிய செழுமை, கருத்தடை, மற்றும் சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவை பாதிக்கின்றன; இறப்பு விகிதத்தை நீண்ட ஆயுள், போர், நோய்க் கட்டுப்பாடு ஆகியவை பாதிக்கின்றன. பிறப்பு, இறப்பு விகிதம் இரண்டையும் வளங்கள் பாதிக்கின்றன. தொழில் நுணுக்கக் கலை வளச்சியோ இம் மூன்றையும் (பிறப்பு, இறப்பு விகிதம், வளங்கள்) பாதிக்கின்றது.

எனவே, இந் நான்கு மூலக்கூறுகளையும் மறந்துவிட்டு, 'அமித சனத்தொகை' (over-population), 'குறைந்த சனத்தொகை (under-population), 'உபரி சனத்தொகை' (surplus population) என்று பேசுவதில் அர்த்தமில்லை. ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள

அமித சனத்தொகைக்கும், அவ்விடத்தின் அளவுக்கும், அடர்த்திக்கும், அச் சனத்தொகையின் வளத்திற்கும் எந்தவிதமான தொடர்புமில்லை. எங்கு (ஏற்கெனவே நிலவிவரும்) வாழ்க்கைத்தரம் குறையும் அளவுக்கு அல்லது வாழ்க்கைத்தரம் உயரும் அளவுக்குக் குறுக்கீடாய் சனநெருக்கடி அதிகமாகிறதோ, அதைத்தான் அமித சனத்தொகை என்று கூறவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள வளங்களை இலாபகரமாகப் பயன்படுத்தும் அளவுக்குக் குறைவாக சனத்தொகை இருந்தால், அதைத்தான் குறைந்த சனத்தொகை என்று கூறவேண்டும். அமித சனத்தொகை, அல்லது நுகர்வுக் குறைவு (under-consumption), அல்லது தொழில் வளர்ச்சிக் குறைவு (இம் மூன்றும் ஒன்றுதான்) எனப்படுபவை ஆசியாவின் பெரும்பாலான பகுதிகளில் நெடுநாளாக இருந்துவருகின்றன. இங்குக் கைத்தொழிற்கலையும் வளர்ச்சியின்றி, ஒரே நிலையில் பல நூற்றாண்டுகளாக இருந்துவருகிறது. இங்குக் கருத்தடை என்பதே பழக்கத்திலில்லை. அன்றியும், வாழ்க்கைத் தரம் பிழைப்பு மட்டத்திலேயே இருந்துவருகிறது. இப்படிப்பட்ட சனத்தொகை அதிகமான இடங்களில் பஞ்சம், கொள்ளை நோய், வேலைக் குறைவு, மற்றும் குடியேற்ற மிகுதி ஆகியவை அன்றாட நிகழ்ச்சிகளாகும். ஆனால், தொழில் முன்னேற்றத்தின்மூலம் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தில், அதிகமான சனத்தொகையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்துச் சமாளிக்க முடியும். ஆனால், கைத்தொழில் வளர்ச்சி குறையுமாயின், இது முடியாத காரியம். சான்றாக, யு.எஸ்.ஏ.யை எடுத்துக்கொள்வோம். கொலம்பஸ் காலத்திற்கு முன்னர் இந் நாட்டில் ஒரே ஒரு மில்லியன் ஜனங்களே வாழ்ந்துவந்தார்கள். அதற்குமேல் அந் நாட்டால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஏனெனில், அம் மக்கள் வேட்டையாடியும், மீன் பிடித்தும், பண்டை முறையில் விவசாயம் செய்துமே ஜீவனம் நடத்திவந்தார்கள். ஆனால், அதே நாடோ இன்று (1956-ல்) 175,000,000 மக்களைக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமா ! அவர்களின் வாழ்க்கைத் தரம் உலகிலேயே உயர்ந்த நிலையில் உள்ளது. இவ்வளப்பரிய மாற்றத்திற்குச் செறிந்த வேளாண்மை (intensive cultivation), கைத்தொழில், வர்த்தகம் ஆகிய இவையே காரணம். அடுத்து செர்மனியைப் பார்ப்போம். இந் நாடு 19ஆம் நூற்றாண்டு நடுவில் சனத்தொகை மிக்க தேசமாகக் கருதப்பட்டுவந்தது. அதற்குத் தகுந்தாற்போல் அங்கு வாழ்ந்துவந்த 30,000,000 மக்களின் வாழ்க்கைத்தரம் மிகக்குறைவாக இருந்தது; குடியேற்றமும் அதிகமாக இருந்தது. அதே நாட்டில் 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் 60,000,000 மக்கள் வாழ்ந்துவந்தும், அதை சனத்தொகை மிகுந்த நாடாக எவரும் கருதவில்லை; இதற்கு இங்கு ஏற்பட்ட தொழிற் புரட்சியே காரணம். இனி, சப்பானையும் இத்தாலியையும் எடுத்துக்கொள்வோம். இவை

இரண்டும் சனத்தொகை மிகுந்த நாடுகளாக வெகு நாட்களாகக் கருதப்பட்டுவந்தன. ஆனால், வியாபரப் பெருமந்தம் ஏற்படுவதற்கு முன்னர்கூட, இந் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறைவு எதுவும் ஏற்படவில்லை. ஒரு சதுர மைலில் இருக்கும் சன நெருக்கத்தை அளவுகோலாகக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட இடம் சனத் தொகை மிகுதியாக இருக்கிறது என்றும் சொல்வதற்கில்லை. இரண்டாம் உலகப் போருக்குமுன் ஒரு சதுர மைலில் நெதர்லாந்தில் 669 பேரும், பெல்ஜியத்தில் 755 பேரும், செர்மனியில் 371 பேரும், இத்தாலியில் 350 பேரும், சப்பானில் 476 பேரும் வாழ்ந்துவந்தனர். ஆனால், அமெரிக்காவிலோ ஒரு சதுரமைலில் 34 பேரும், யு.எஸ். எஸ். ஆரில் 21 பேரும், பிரேசலில் 9 பேரும், அர்ஜென்டைனாவில் 7 பேரும், கனடாவில் 2 பேரும், ஆஸ்திரேலியாவில் 2 பேருக்குக் குறைவாகவும் வாழ்ந்துவந்தார்கள். இவ்வெண்களைப் பார்த்து விட்டு, முன் பட்டியலில் அடங்கிய நாடுகள் சனத்தொகை மிக்கவை என்றும், பின் பட்டியலில் உள்ள நாடுகள் சனத்தொகை குறைவானவை என்றும் சொல்லிவிட முடியாது. எனவே, சனத் தொகை மிகுதிபற்றித் தவறின்றிப் பேசவேண்டுமாயின், எப்போதும் (சனத்தொகை) எண்கள், வளங்கள், கைத்தொழில், வாழ்க்கைத்தரம் ஆகிய இவற்றைக் குறிப்பிட்டே பேசவேண்டும். இவ் வார்த்தை பொருளாதார, சமூக உண்மைகளை அறிவிப்பதைவிட, அவற்றைப் பெருக்கும் ஆர்வத்தையே உணர்த்துகிறது.

அவ்வாறெனில், உத்தம சனத்தொகை (optimum population) என்றால் என்ன? இருக்கும் வளங்களைக்கொண்டு கைத்தொழில் மூலம் உயர்ந்தவாழ்க்கைத் தரத்தை அடையும் சனத்தொகையையே உத்தம சனத்தொகை எனப்படும். எனவே, பொருளாதார உத்தம சனத்தொகையை உண்டாக்க முயலும் கொள்கையே பகுத் தறிவான அறிவியல் சனத்தொகைக் கொள்கையாகும். அத்தகைய கொள்கையின்கீழ் ரஷ்யா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, அர்ஜன் டைனா ஆகிய நாடுகளின் சனத்தொகை அதிகரிக்க வேண்டும்; அதிகத் தொழில் முன்னேற்றமடைந்த அரசுகளில் சனத்தொகை குறையவேண்டும். சனத்தொகை விஷயத்தில் பொருளாதார கூபீட்சம் ஒன்றே அறிவுடைமைக் கொள்கையை உணர்த்துகிறது என்று கொள்வோமேயானால், வருங்காலத் தலைமுறைகளின் நலனை முன்னிட்டுப் பெரும்பாலான பெரிய அரசுகளில் சனத்தொகை கணிசமான அளவுக்குக் குறைவாக இருப்பதே நல்லது. ஆனால், இக் கருத்தை இத் துறை நிபுணர் அனைவரும் ஒருமனமாக ஏற்கத் தயாராயில்லை. அரசாங்கங்களும் சனத்தொகையைக் குறைப்ப தென்றால், ஒரே பீதியடைந்துவிடுகின்றன.

தேசபக்தியும் மக்களும்: அரசாங்கக் கொள்கைகளைப் பெரிதாக வலியுறுத்திவரும் பொருளாதார தேச பக்தர்களின்

தலையான குறிக்கோள் ஒன்றே ஒன்றுதான். சமூக நலனைவிட இராணுவ வலிமையைப் பெறுவதே அக் குறிக்கோளாகும். சனத் தொகையை அதிகமாக்க உதவிபுரிவதுபோல் தோன்றும் தடையில்லாக் குடியிறக்கம் ஒன்றைத் தவிர எல்லா நடவடிக்கைகளையும் விரும்புகிறான் தேசபக்தன். தடையில்லா சனத்தொகை வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கும் அனைத்தையும் அவன் கடுமையாகத் தாக்குகிறான். சமய காரணங்களுக்காகக் கருத்தடையை ஆட்சேபிக்கும் கிறித்துவப் பாதிரிமார்களும் குருக்களும் அவனுக்குத் துணையாக இருக்கிறார்கள். இவனுடன் அறநெறியாளரும், கட்டற்ற விடுதலையைச் (licence) சுதந்திரமாகக் கருதும் சமூகச் சீர்திருத்தக்காரர்களும் கூடச்சேர்ந்துகொள்கிறார்கள். இவர்கள் நல்வாழ்வை அடைவதற்கு அறிவுடைமை, தேர்ந்தெடுக்கும் உரிமை ஆகிய இவைகளைவிடக் கட்டாயப்படுத்தலும் தடைகளுமே சிறந்தன என்று கருதுபவர்கள். இவர்களையல்லாமல் இன்னும் பலர் இவனுடன் ஒத்தூத இருக்கிறார்கள். வேலையளிப்பவர் (employer), வேலையாள் (employee) குறைந்த கூலிக்கு வந்தால் நல்லது என்று நினைக்கின்றனர். வேலையாட்களின் எண்ணிக்கை அதிகம் இருந்தால்தானே குறைந்த கூலிக்கு வேலைக்கு வருவர்? அடுத்தாற்போல் இராணுவ நிபுணர் இருக்கிறார். அவரோ மனிதனைவிட எந்திரமே போரில் வெற்றி பெறத் துணைபுரியும் என்று நினைக்கிறார்; அடுத்துப் பொதுமக்களை அறியாமையில் மூழ்க வைக்கும் மருத்துவரும், தக்க தருணத்தில் உதவும் அரசியல்வாதியும் அவனுடன் (தேசபக்தனுடன்) சேர்ந்துகொண்டு விட்டனர். இப் பட்டியலில் கடைசியாக இருக்கும் சமூக வல்லுநரும் பொருளியலறிஞர்களும், சனத்தொகை குறைந்துவிட்டால் என் செய்வதென்று பீதியடைபவர்கள். வருங்காலச் சந்ததியாரின் பொருளாதார நலனுக்கும் இவர்கள் கலக்கத்திற்கும் சிறிதும் தொடர்பு இல்லை. இவர்கள் அனைவரும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இது ஒரு பிரமாண்டமான, முக்கியமான கூட்டமுங்கூட.

யு.எஸ்.ஏ.விற்குக் குடியேறிச் சென்றவர்களின் கடு உழைப்பும், அவர்களுக்குப் பின்னர் குடியேறியவர்களின் உழைப்பும் மனக்கோட்டையுமே அதை உலகிலேயே செல்வமும் வலிமையும் பொருந்திய நாடாகச் செய்தன. அதன் சுதந்திரச் சிலையில் பின் வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது: 'உங்களில் களைப்பானவர், எளியவர், வழி தடுமாறியவர், சுதந்திரமடைய விரும்புபவர், உம் முடைய எண்ணற்ற கடற்கரைகளில் வாழ்ந்துவரும் கீழினத்தோர்; இல்லம் அற்றவர், புயலுக்கு இரையானவர்—இவர்களையெல்லாம் என்னிடம் அனுப்புக. தங்கக் கதவருகேயுள்ள (சுதந்திரத்) தீபத்தை நான் (அவர்கள் பக்கம்) உயர்த்துகிறேன்'. 1914-க்குப் பத்தாண்டுகட்கு முன்னர் இங்கு (அமெரிக்காவில்) குடியேறிய

ஐரோப்பியரின் சராசரி எண்ணிக்கை, ஆண்டு ஒன்றுக்கு ஒரு மில்லியனுக இருந்தது. 1882-ல் கிழக்கத்தியர் (orientals) எவரும் குடியேற அனுமதிக்கப்படவில்லை. ஆனல், 1920ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆண்டு ஒன்றுக்கு 150,000 பேர்களேமட்டுமே அமெரிக்கா குடியேற அனுமதித்தது. அவர்களும் கோட்டா (quota) அல்லது பங்கீட்டு முறையின்கீழ் அனுமதிக்கப்பட்டனர். இதனல் வடமேற்கு ஐரோப்பியர் இலாபம் அடைந்தனர்; தென்கிழக்கு ஐரோப்பியர் இதனல் பாதிக்கப்பட்டனர்.

பீதியை உண்டாக்கும், சந்தேகத்தை எழுப்பும், 'பாதுகாப்பு' நாட்டுணர்ச்சியின் கவர்ச்சிக்கு ஆளான நாட்டு அரசுகளைப் போன்று, அமெரிக்காவும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர் அனைவரும் சமம் என்று கருதவில்லை. வேலே தேடியும் இல்லம் தேடியும் அலேபவர்களே அது வரவேற்பதில்லை. குடியேற்றம்பற்றிய பழைய சட்டங்கள் அனைத்தையும் தோவை செய்தது, 1952 மக்காரன் வால்ட்டர் குடியேற்றச் சட்டம். அது 1924ஆம் ஆண்டு 'தேசியத் தோற்றுவாய்'க் கோட்டா முறையை அப்படியே கடைப்பிடித்தது. அதன்கீழ் 1920 ஆம் ஆண்டில் இங்கு வாழ்ந்துவந்த வெளிநாட்டவர் எண்ணிக்கை, ஒவ்வோர் ஆண்டும் குடியேறுபவர் தொகையை நிர்ணயம் செய்யும். அதன்பிரகாரம் ஆண்டுதோறும் 154, 658 வெளிநாட்டவர் அனுமதிக்கப்படுகின்றனர். யு.எஸ்.ஏ.யிலிருந்த 85,000 சப்பானியர் உட்பட கிழக்கத்தியருக்கு முதல் முறையாக யு. எஸ். குடியுரிமை (citizenship) அளிக்கப்பட்டது. ஆனல், ஆசியாவிலிருந்து குடியேறுபவர் எண்ணிக்கை மிகக் குறைவுதான். ஆண்டு ஒன்றுக்கு சப்பானிலிருந்து 185 பேரும், மற்ற ஆசிய நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் 100 பேர்களும்தாம் குடியேற முடிந்தது. ஐரிஷ், பிரிட்டிஷ், செர்மானிய மக்கள்—ஆகியவர்களுக்கு மட்டும் தனிச் சலுகையளிக்கப்பட்டது. லத்தீனியர், ஸ்லாவியர், மற்றும் பாதி கிழக்கத்திய முன்னேருக்குப் பிறந்தவர் ஆகிய அனைவரும் இதனல் பாதிக்கப்பட்டார்கள். அமெரிக்காவில் வாழ்ந்துவந்த அந்நியர் 'தேசியப் பாதுகாப்புக்குப் பங்கம் விளேவிப்பவர்' என்று கருதப்பட்டோர், அல்லது 'பொதுநலனுக்கு எதிராகச் செல்பவர்' என்று குற்றஞ் சாட்டப்பட்டோர் விசாரணையின்றி நாடுகடத்தப்பட்டார்கள்[3]. இன்று உலகின் எண்டிசையிலும் முழங்கும் ஒரே சுலோகம் 'அந்நியரே, வெளியேறு', 'குற்றவாளி தண்டிக்கப்படுவார்' என்பதே ஆகும். இச் சுலோகம் அமெரிக்காவிலும் நிலவிவருகிறது.

[3] மக்காரன் சட்டத்தை வெளி விவகார நீதித் துறைகளும், ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்ட்டிகேஷனும், சி. ஐ. ஏ. யும், குடியேற்றம், செயற்கைக் குடியுரிமை சர்வீசும் ஆதரித்தபோதிலும், ஜனதிபதி ட்ரூமன் அதை ஏற்க மறுத்து விட்டார். 1952 ஜூன் 25ஆம் நாள் வெளியிட்ட செய்தியில் அவர் இச்சட்ட வரைவு 'மனிதத்தன்மையற்றது, ஜனநாயகத்திற்கு முரணனது' என்றும், 'சிந்தனேக் கட்டுப்பாடு' செய்வதே அதன் நோக்கம் என்றும், '1798ஆம் ஆண்டின் புகழற்ற

குழந்தைகள் எண்ணிக்கை வளர்ச்சி : 20ஆம் நூற்றாண்டு நடுவில் சனத்தொகை வளர்ச்சியில் ஏற்பட்ட மாறும் போக்கு, முன்னுள் 'நிபுணர்களின்' முன்னறிவிப்புகளை மேலும் குழப்பமாக்கியது. ஆனால், மால்தூசின் சோகச்சித்திரம் உலகில் சேரிகளில் வாழும் மக்களின் உண்மையான சித்திரமாக ஆகிவிட்டது. 1930-ல் ஏற்பட்ட பெரிய வியாபார மந்தம் சனத்தொகை வளர்ச்சியைத் தடை செய்தது. குறிப்பாக அட்லாண்டிக் சமுதாயத்தில் இத் தடை ஏற்பட்டது. மேலை நாட்டினர் வேலை கிடைக்காவிட்டால், குடும்பங்களைச் சிறியவாக வைத்துக்கொள்ள வழி தேடுகின்றனர். அதே ஆண்டுகளில் யு. எஸ். எஸ். ஆரின் கம்யூனிஸ்ட் செல்வச் சிறுகுடியாட்சியாளர் விவாகரத்து (divorce), கருத்தடை, கருச்சிதைவு (abortion) செய்யும் உரிமை ஆகியவற்றை நீக்கிவிட்டு, ஸ்திரமான மணவாழ்க்கையையும் பெரிய குடும்பங்களையும் ஆதரித்துவந்தார்கள். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரும் இக் கொள்கையை அவர்கள் கடைப்பிடித்துவந்தார்கள். ஏனெனில், அப் போரில் மாண்ட சோவியத் சமுதாயத்தினரின் எண்ணிக்கை கொஞ்சநஞ்சம் அல்ல. அமைச்சவையின் மத்திய புள்ளி இயல் போர்டு 1956 ஜூலையில் வெளியிட்ட அறிக்கையின்படி, 1940இல் இங்கு மொத்தம் 191,700,000 பேர் வாழ்ந்துவந்தனர். ஆனால், 1956 ஏப்ரலில் 200,200,000 சனத்தொகையே இருந்தது. மேனாடுகளுடன் ஒப்பிடுங்கால், இவ்வுயர்வு மிகக் குறைவுதான். ஊக்ரெயின் பைலோ-ரஷ்யாவிலோ 1940-லிருந்ததைவிட 1956-ல் சனத்தொகை மிகமிகக் குறைந்துவிட்டது. எனவே, செலவின்றி, தானுகவே முன் வந்து கருச்சிதைவு செய்துகொள்ளும் முறை மறு முறையும் 1955-ல் சட்ட பூர்வமாக்கப்பட்டது.

வெளிநாட்டவர் சட்டத்தைவிட மோசமானது என்றும் இடித்துரைத்தார். ஜனதிபதி தன மறுப்பு அதிகாரத்தைப் பயன்படுத்திவிட்டார் என்று கேட்டதும், பாட் மக்காரன் என்ற சினேட்டர், 'என் பொதுவாழ்விலேயே நான் இதைப் போன்ற அமெரிக்காவுக்கு எதிரான நடத்தையைக் கண்டதில்லை' என்றும், 'தினக் கூலி' என்ற பத்திரிகையின் கோட்பாட்டை அது தழுவியுள்ளதென்றும் அறிவித்தார். ஆனால், காங்கிரஸ் அவ் வரைவை மீண்டும் மீறைவேற்றிச் சட்டமாக்கியது. 1952, ஜூன் 27ஆம் நாள் அச் சட்டம் அமலுக்கு வந்தது. அது (மக்காரன்) உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தை அப்படியே மீண்டும் மீறை வேற்றியதுடன், அதன் ஷரத்துகள் சிலவற்றையும் விரிவாக்கியது. இச் சட்டமும் முதலில் ஜனதிபதியால் மறுக்கப்பட்டுப் பின்பு காங்கிரசால் மறுமுறை மீறை வேற்றப்பட்டது. இச் சட்டம், கம்யூனிஸ்ட் நடவடிக்கை, கம்யூனிஸ்ட்-எதிர்ப்பு நிறுவனங்கள், கம்யூனிஸ்ட்டுகளுக்குப் பிரயாணச்சீட்டு (passport) வழங்க மறுத்தல், தாங்கள் 'ஏமாற்றப்பட்டுவிட்டவர்' என்று நிரூபிக்க முடியாத ஊறு விளைக்கும் அங்கியர் முதலியோர் (நாட்டிற்குள்) அனுமதிக்கப்படமாட்டார்களென்றும், செயற்கைக் குடியுரிமை வழங்கப்படமாட்டார்களென்றும், மாருகக் குடியுரிமை வழங்கப்படாமல் நாடுகடத்தப்படுவர் என்று அறிவித்தல் ஆகியவற்றைப் பதிவு செய்யும்படியும் வேண்டியது. ஜனதிபதி ஐசன்ஹோவரின் நம்பிக்கைகள், பிரேரணைகளுக்கு எதிராக 1957-ல் காங்கிரஸ் இச் சட்டத்தைச் 'சற்றுத் தளர்த்திற்று.' சில 'கடுமையான வழக்குகளுக்கு' நிவாரணம் அளிக்கும் முகத்தான் இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால், அதன் தடைசெய்யும், பிரிவுணர்ச்சியுள்ள, அரிதி இழைக்கும் தன்மைமட்டும் மாறுமல் அப்படியே இருந்தது.

இவையனைத்தும் வருங்கால சனத்தொகை ஒரே நிலையிலேயே இருக்கும் என்பதை உணர்த்தின. ஆனால், திடீரென்று அந் நிலைமை எதிர்த்திசையில் மாறியது. ரஷ்யாவிலும் கம்யூனிஸ்ட் சீனாவிலும் இப் போக்கு வெள்ளிடை மலையாயிற்று. சுருங்கச் சொல்லின், 1950—60-ல் எங்கும் சனத்தொகைப் பெருக்கம் ஏற்படத்தான் செய்தது. ஐ. நா. மதிப்பீட்டிற்கிணங்க, 1920-ல் உலக சனத்தொகை மொத்தம் 1,810,000,000 இருந்தது; 1930-ல் 2,013,000,000; 1950-ல் 2,504,000,000; 1954-ல் 2,652,000,000; 1957-ல் 2,750,000,000; 1956-ல் நிலவிய ஜனத்தொகை வளர்ச்சியை, ஆண்டு ஒன்றுக்கு 40,000,000 பேர் அதிகம் என்ற அடிப்படையில் கணக்கிட்டுப் பார்க்குமிடத்து, 1975-ல் உலகின் சனத்தொகை 3,500,000,000 ஆக ஆகிவிடும் என்று மதிப்பிடப்படுகிறது.

அகிலத்தின் இச் சனத்தொகைப் பெருக்கம் தொழில் முன்னேற்றச் சமுதாயங்களில் பணவீக்கச் செழுமையால் ஏற்பட்டதாகும். யு.எஸ்.ஏ.யில் 1935-க்கும் 1955-க்குமிடையே ஓர் ஆயிரத்தில் இறப்பு விகிதம் குறைந்துவிட்டது (11-லிருந்து 9ஆக ஆகிவிட்டது); ஆனால், பிறப்பு விகிதமோ 17 லிருந்து 25 ஆக உயர்ந்தது. அதன் பிரகாரம், ஆண்டுதோறும் 2,500,000-க்கும்மேல் சனத்தொகை அதிகரித்துச் சென்றது. செல்வத்தில் திளைத்த அமெரிக்கர்கள் அணு ஆயுதப் போருக்குச் சிறிதும் அஞ்சாமல், குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்து வந்தார்கள்.

ரஷ்யாவின் அனுபவம் உலகின் மற்ற நாடுகட்கும் பொருந்தும். மார்க்சீய மாஸ்கோவில் ஓர் ஆயிரம் மக்களுக்குப் பிறப்பு விகிதம் 1940-ல் 32ஆக இருந்தது; 1955-ல் அது 26 ஆகக் குறைந்தது. அதே காலத்தில் இறப்பு விகிதம் 18-லிருந்து 8 ஆகக் குறைந்தது. குடியேற்ற நாடுகளிலும் சமீபத்திலான குடியேற்ற நாடுகளிலும், உலகிலுள்ள ஏழை மக்கள் வாழ்ந்துவரும் இடங்களிலும், மேலை நாட்டுச் சுகாதாரம் (hygiene), துப்புரவு (sanitation), மருந்து ஆகியவற்றுல் இறப்பு விகிதம் குறைந்துவிட்டது. ஆனால், பிறப்பு விகிதம் அதுபோல் குறையவில்லை. உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) உதவியால் இலங்கை 1945-க்கும் 1955-க்குமிடையே இறப்பு விகிதத்தை 20-லிருந்து 10-க்குக் குறைத்துவிட்டது. பிறப்பு விகிதம் 40-ல் நிற்கிறது. எனவே, இன்னும் 25 ஆண்டுகளில் அதன் சனத்தொகை இருமடங்காகிவிடும். மலாயா மெக்சிகோ, போர்ட்டோ ரிக்கோ, கொலம்பியா, துருக்கி, சிரியா ஆகிய நாடுகளிலும் இதே நிலைதான் நிலவிவருகிறது. கிழக்கு ஆசியாவை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் 1955—60-ல் ஆண்டு தோறும் 5,000,000 மக்கள் அதிகரித்துவருகிறார்கள். சீனாவில்

ஆண்டுதோறும் 12,000,000 பேர் அதிகரித்துவருகிறார்கள். இங்கு வடமேற்கு ஐரோப்பாவைவிட சீனர்கள் மும்மடங்கு அதிகமாகிக் கொண்டு செல்கிறார்கள். லத்தீன் அமெரிக்காவின் சனத்தொகைப் பெருக்கம் ஐரோப்பாவைவிட நான்கு மடங்கு அதிகமாகும். உலகின் தொழில் முன்னேற்றமடையா நாடுகளில் இறப்பு வீகிதம் சாதாரணமாக ஆகியும், பிறப்பு விகிதம் வட அட்லான்டிக் நாடுகளை விட இருமடங்கு அதிகமாகவே இருந்துவருகிறது.

பிற்போக்கான இடங்களின் மயக்கம்: ஹோமோசேப்பியரின் (மனித இனத்தாரின்) இம் மாபெரும்பெருக்கம், உலகில் 'வெள்ளையரல்லாத', வறுமையில் வாடும், மூன்றில் இரண்டு பகுதி மக்களின் தாழ்ந்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவான் வேண்டி மேற்கொள்ளப்படும் தேசிய சர்வதேச முயற்சிகளனைத்தையும் களர் நிலத்து விதைத்த விதைகளாக்கிவிட்டன. முன்னுள் அனுபவத்திலிருந்து பார்க்குங்கால், தொழில் வளர்ச்சிமூலம் பிறப்பு விகிதம் 40-லிருந்து 20 ஆகக் குறைந்துவிடும் என்றுதான் தோன்றுகிறது. எனினும், சேரிகள் உறுதியான தொழில் முன்னேற்றமடைய இன்னும் வெகு தூரம் இருக்கிறது. அதுவும் நிச்சயமில்லை. ஏனெனில், குழந்தைகள்தாம் தினமும் கணக்கில்லாமல் பிறக்கின்றனவே! அது மட்டுமா ? இவ்வாறு பிறக்கும் குழத்தைகள் வரவர 'இளமையுடன்' விளங்குவார்கள். தங்கள் ஜீவனுச்சத்திற்காகப் வேலை பார்த்துப் பிழைக்கும் பெரியவர்களை நம்பியிருக்கும் சிறுவர்கள் வரவர அதிகரிப்பார்கள். இளமை வாய்ந்த தாய்மார்கள் முன்னைவிட நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள். அதிகப் பிள்ளைகளும் பெறுவார்கள்.

இச் சிக்கலை அரசாங்கங்கள் எங்ஙனம் சமாளிக்கப்போகின்றனவென்றுதான் தெரியவில்லை. ஆனால், எப்படியாவது வானளாவும் ஜனத்தொகை வளர்ச்சியை நிறுத்த வேண்டிய அவசியத்தைப் பொதுக் கொள்கை வகுப்பாளர் உணரும்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பொதுக் கட்டுப்பாடு ஏற்படுவதும் சாத்தியம். சப்பானின் ஜனத்தொகை 1920-ல் 56,000,000 ஆக இருந்தது. ஆனால், 1957-ல் அது 91,000,000 ஆக ஆகிவிட்டது. 1948-ல் பிறப்பு விகிதம் 34 ஆகவும், இறப்பு விகிதம் 12 ஆகவும் ஆகிவிடவே, 32 ஆண்டுகளில் ஜனத்தொகை இரு மடங்காகிவிடும் என்று சட்டசபையினர் (Members of Diet) அச்சமடைந்தனர். உடனே அவர்கள் கருச்சிதைவு, கருத்தடை ஆகியற்றைச் சட்டபூர்வமாக்கினர். அதோடு மட்டும் நின்றுவிடாமல் நாடெங்கும் குடும்பக்கட்டுப்பாட்டு மருத்துவ நிலையங்கள் (birth control clinics) திறக்க வழி செய்தனர். இந் நடவடிக்கைகளின் விளைவாக 1955-ல் பிறப்பு விகிதம் 19-க்குக் குறைந்துவிட்டது. சீன அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் அதும்

போன்ற திட்டங்களில் இறங்கி இருக்கின்றன. அதன் விளைவு களும் நம்பிக்கையளிக்கும். சமயச் சார்பாளர் கருத்தடை செய்வது 'பெரிய பாவம்' என்று ஓலமிட்டபோதிலும், கருத்தடையை உறுதி யாகச் செய்யும், விலை மலிவான, வாய் வழியே உட்கொள்ளும் மருந்தை ஏராளமான மக்கள் பயன்படுத்த முன்வந்துவிட்டால், பின்னர் இச் சனத்தொகை வளர்ச்சி குன்றிவிடும்; ஜனத்தொகை வளர்ச்சி ஒரு கட்டுப்பாட்டின்கீழ் வந்துவிடும். ஆண் பெண்களில் மிக ஏழ்மையானவர், அறிவிலிகளுக்குக்கூட நறுக்கென்று மூன்று அல்லது நான்கு குழந்தைகளைப் பெற்று அவர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களின் வாழ்க்கையை வளம்பெறச் செய்வதே, பல பிள்ளைகளைப் பெற்று, அவர்களுக்குக் கல்வியறிவு இல்லாமல் வறுமையில் வாழ விடுவதினும் சாலச் சிறந்தது என்ற உண்மையை உணர்த்த முடியும்.

குழந்தைகளின் பெருக்கத்தைக் குறைத்தால்கூட, உலகில் வாழும் எளியோரின் வறுமையை அகற்றி, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பிரச்சினை மிகக் கடுமையானதாகவே இருக்கும். இத்தகைய கோடான கோடி மக்கள் நிலத்தையே பெரிதும் நம்பி இருக்கிறார்கள். அவர்கள் பழைய விவசாய முறைகளையே இன்னும் கையாண்டு வருகிறார்கள். அவர்கள் வயிற்றைக் கழுவுவதற்கே அவர்களால் உற்பத்தி செய்ய முடியாதபோது, நகர்ப்புற சந்தைகளில் விற்பதற்கு எங்கு மிஞ்சும்? இஸ்லாம் நிலவும் நாடுகளிலும் லத்தீன் அமெரிக்கா விலும் ஏழைக் குடியானவர்களைப் படை நிலமானிய நிலச்சுவான் தாரிகளும், கொள்ளையடிக்கும் அரசியல் வாதிகளும் சுரண்டி வருகிறார்கள். நாற்றிசையும் கம்யூனிஸ்ட்டுகள் நம்பிக்கையை வளர்த்து வருகிறார்கள். அவர்கள் விடுக்கும் அறைகூவலை மேலை யுலகம் இன்னும் சமாளித்தபாடில்லை. நிலச்சுவான்தாரிகளை ஒழித்துக்கட்டிவிட்டு, அரசியல்வாதிகளை அகற்றிவிட்டு, விவசா யத்தைக் கூட்டான முறையில் கொண்டுவந்து, தொழில் முன்னேற் றத்தைத் திட்ட அடிப்படையில் கொணர்ந்து, எளியோரின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்த முடியும் என்ற நம்பிக்கையூட்டி வருகிறார்கள் கம்யூனிஸ்ட்டுகள். இவ் வழி முறைகளைக் கையாண்டதில் ரஷ்யாவில் பல அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சீனாவிலும் இவ் வழிகளைக் கையாண்டு நல்ல பயனடைந்து வருகின்றார்கள். எனினும், சீனாவில் வாழ்ந்து வரும் அரை பில்லியன் விவசாயிகள், இன்னும் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்குக்கூட உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே, தொழில் வளர்ச்சிக்கு அவர்களால் எந்த உதவியும் அளிக்க முடியவில்லை. யு. எஸ். எஸ். ஆரில்கூட 6ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 50,000,000 கூட்டுறவு விவசாயிகள் விற்பனை செய்யத்தக்க உணவுப் பண்டங்கள், புதிய நகரங்களில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளுக்கு

வேண்டிய கச்சாப் பொருள்கள் முதலியவற்றைக் (தேவைக்கும்) குறைவாகவே உற்பத்தி செய்து வருகிறார்கள். அதேயளவு பண்டங்களையும் பொருள்களையும் யு. எஸ். ஏ. யில் 6,000,000 குடியானவர்கள் உற்பத்தி செய்து வருகிறார்கள்.

சுற்றிச் சுற்றி வரும் இக் கொடிய வறுமையை மிகத் தீவிர நடவடிக்கையாலும், புரட்சிகரமான சீர்திருத்தங்களாலும்கூட ஒழிக்க முடியாது. ஏழைகள் ஏழைகளாக இருப்பதால், தங்கள் பிழைப்பிற்கு வேண்டியதற்குச் சற்று அதிகமாகக்கூட அவர்கள் சேமிப்பதில்லை. அவர்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஏனெனில், கல்விக்காகச் செலவு செய்ய அவர்களிடம் காசு இல்லை. அறியாமையில் மூழ்கிக் கிடப்பதால், அவர்கள் திறமான விவசாய முறைகளைக் கற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் தங்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியவில்லை, தொழில் முன்னேற்றத்திற்கு வேண்டிய முதலைச் சம்பாதிக்க முடியவுமில்லை. அதோடல்லாமல், ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அவர்கள் தங்கள் மூதாதையர் அமைத்துத் தந்த குடும்ப முறையையும், சமூக வாழ்வையும், சாதி வேற்றுமையையும் பின்பற்றி வருகிறார்கள். பண்டைய முறைகளையே பின்பற்றி நடக்குமாறு தூண்டுவதும், தொடங்கும் திறமை, சுதந்திரம் முதலியவற்றைத் தடை செய்வதுமான படை நிலமானியத் தொடர்புகளும் அவர்களுக்குள் நிலவி வருகின்றன. இவை குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியின் குறுக்கே நிற்கின்றன. நல்வாழ்வின் குறுக்கே நிற்கும் மனிதனால் ஏற்பட்ட இம் முட்டுக்கட்டைகளை விரைவிலோ, எளிதிலோ நீக்குவதென்பது இயலாத காரியம்.

சுதந்திர உலகமும் கம்யூனிஸ்ட் உலகமும் வறுமையிலும் துயரத்திலும் காலந்தள்ளிவரும் கோடானுகோடி மக்களின் விசுவாசத்தைப் பெற ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு வருகின்றன. இப் போட்டியை உதவித் தொகை (grant), கடன், முதலீடு, தொழில் திறனுதவி ஆகிய துறைகளில் காணலாம். ஏழைகளைப் பணக்காரர்களாக்க முடியாவிட்டாலும், ஏழைகளின் ஏழ்மையை ஓரளவு நீக்க இத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவைபற்றிச் சொல் நயத்துடன் வெற்றுப் பேச்சுப் பேசுவதில் புண்ணியம் என்ன இருக்கிறது? இம் முயற்சிகளின் அளவும் ஆற்றல் எல்லையும் மிகச் சிறியவை. உலகிலேயே செல்வம் பொருந்திய நாடான யு. எஸ். ஏ., பொருளாதார வளர்ச்சிக்கான ஐ. நா. தனி நிதிக்கு - SUNFED—(Special United Nations Fund for Economic Development) ஆதரவளிக்க மறுத்துவிட்டது. படைக் கலங்கள்மீது ஏற்படும் இன்றியமையாச் செலவுகள் இருக்குங்கால், வறுமையை உலகிலிருந்தே அடியோடு துடைத்துவிடக்கூடிய

எந்தத் திட்டத்திலும் இறங்க முடியாது என்று கூறி இந் நிதிக்கு ஆதரவளிக்க அது மறுத்துவிட்டது. சேரிகளில் வாழ்ந்துவரும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவான்வேண்டித் தொழில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் சமீபத்திலும் தற்போதும் அளித்து வரும் பொருளாதார உதவியை கெடுபிடிப்போரில் ஒரு முகமாகச் சிறிய அளவில் ஆடும் முதல் ஆட்டம் என்றே கொள்ள வேண்டும். இவ் உதவிகளனைத்தும் குறிப்பிடத்தக்கதன்று.

1949, சன. 20ஆம் நாள் ஜனதிபதி ட்ரூமன் தன் பதவியேற்பு விழாவில் ஆற்றிய பேருரை இங்குக் குறிப்பிடத்தக்கது. அவர் பின்வருமாறு பேசினார்:

'வருங்காலத்தில் நம்முடைய சமாதான, சுதந்திரத் திட்டம் தான்கு முக்கிய நடவடிக்கைகளையே வலியுறுத்தும். (1) ஐக்கிய நாடுகள் சபைக்குத் தயக்கமின்றி ஆதரவளித்தல்; (2) உலகப் பொருளாதார சுபிட்சத்திற்காக நம்முடைய திட்டங்களைத் தொடர்ந்து நடத்துதல்; (3) ஆக்கிரமிப்பு அபாயத்திற்கு எதிராகச் சுதந்திரத்தை விரும்பும் நாடுகளை வலிவடையச் செய்தல்; மற்றும் (4) முன்னேற்ற மடையாத நாடுகளின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் நம்முடைய விஞ்ஞான வளர்ச்சியையும், கைத்தொழில் முன் னேற்றத்தையும் பயன்படுத்தும் புதிய ஊக்கமான திட்டத்தில் இறங்குதல். உலக மக்களில் பாதிக்கு மேலானவர் துயரத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்களுக்குக் கிடைப்பதும் பற்றுத உணவு. அவர்கள் நோய்க்குப் பலியாகி வருகிறார்கள். அவர்களுடைய பொருளாதார வாழ்வோ பண்டைய வளர்ச்சியற்ற நிலையிலேயே நிற்கிறது. வறுமை அவர்களையும், சற்று முன்னேற்றமடைந்த இடங்களையும் அச்சுறுத்தி வருகிறது. வரலாற்றிலேயே முதல் முறையாக இம் மக்களின் துயரைத் துடைக்கும் அறிவையும் திறனையும் மனிதகுலம் பெற்றிருக்கிறது..... அமைதியை விரும்பும் மக்கள் தல்வாழ்வு வாழவும் விரும்புகின்றனர். அவ் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் நம்முடைய தொழில் நுணுக்க அறிவை அவர்கள் பயன்படுத்துமாறு செய்யவேண்டும் என்று நான் நினைக்கிறேன். மற்ற நாடுகளின் கூட்டுறவுடன் அபிவிருத்தி தேவைப்படும் இடங்களில் நாம் முதலீடு செய்ய முயல வேண்டும். உலகில் சுதந்திரத்துடன் வாழும் மக்கள் அவர்கள் முயற்சியாலேயே அதிக உணவை உற்பத்தி செய்யவும் அதிகத் துணிகள் நெய்யவும், வீடு கட்டுவதற்கான பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவும், அவர்கள் சுமையைத் தணிப் பதற்கு அதிகமான எந்திரச் சக்தியை உண்டாக்கவும் நாம் உதவி புரியவேண்டும் என்பதே நம் குறிக்கோள்..... இது ஒரு கூட்டு முயற்சியாகவே முடியும். அதில் எல்லா நாடுகளும் ஐக்கிய

நாடுகள் சபைமூலமாயும் அதன் தனிப்பட்ட ஏஜென்சிகள் வாயிலாயும் பங்கெடுத்துக்கொண்டு இக் குறிக்கோளை அடைய உதவிபுரியும். இது சமாதானத்தையும், செழுமையையும், சுதந்திரத்தையும் அடையும் ஓர் உலக முயற்சியாக அமையவேண்டும்.... முதலீடு செய்பவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்புகளும், அபிவிருத்திக்காகத் தங்கள் வளங்களையும் உழைப்பையும் நல்கும் மக்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்புகளும் சமமாக இருத்தல் வேண்டும். அந்தக்கால ஏகாதிபத்தியத்திற்கு—அந்நியர் இலாபத்திற்காகச் சுரண்டும் முறைக்கு நம் திட்டங்களில் இடமில்லை. சனநாயகம், நேர்மை ஆகிய அடிப்படையில் அமைந்திருக்கும் அபிவிருத்தித் திட்டமே நம் மனத்தில் இருக்கிறது.'

படைக்கலங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, அமெரிக்கக் காங்கிரஸ் ஒதுக்கிய தொகை (appropriations) மிகக் குறைவே என்பது புலப்படும். ஐ.நா. தொழில் நுணுக்க (அறிவு) உதவித் திட்டம் ஒன்றில் இறங்கியது. 1950 சனவரியில் பிரிட்டிஷ் காமன்வெல்த்தைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாடு கொழும்பில் (இலங்கை) கூடியது. அதில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்பெண்டர் என்பவர் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார். தென் ஆசியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம் அது. ஆறு ஆண்டுகளில் ஏறத்தாழ, 2,000,000,000 பவுன் செலவிட வழி வகுக்கப்பட்டது. அதை எல்லோரும் ஒப்புக்கொண்டனர். ஜனாதிபதி ட்ரூமன் சர்வதேச வளர்ச்சி ஆலோசனைக் கழகம் ஒன்றை நிறுவினர். அதன் தலைவர் நெல்சன் ராக்ஃபெல்லர். அவர் 1951 மார்ச்சு 11ஆம் நாள் 'அபிவிருத்தியில் பங்காளிகள்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கை வெளியிட்டார். சுதந்திர மக்கள் 'இரு பெரும் அச்சுறுத்தலை எதிர் நோக்கி வருகிறார்கள். இராணுவ ஆக்கிரமிப்பும் துரோகமும் ஒன்று. பசி, வறுமை, நோய், கல்லாமை ஆகியவை மற்றொன்று' என்று அவ்வறிக்கை கூறிற்று. அக் கழகம் பல திட்டங்களைக் கொண்டு வந்தது. எப்படியாவது வெளிநாடுகளில் ஆண்டுதோறுமுள்ள ஒரு பில்லியன் டாலர் மதிப்புள்ள அமெரிக்கத் தனியார் முதலீட்டை இரு பில்லியன் டாலராகச் செய்துவிடவேண்டும். இதற்காக 'வரிச் சலுகை' அளித்தல், புதிய உடன்படிக்கைகள் செய்தல், இன்சூரன்ஸ் திட்டம் கொண்டுவருதல், புனரமைப்பு வளர்ச்சிக்கான சர்வதேச பாங்கின் (International Bank of Reconstruction and Development) ஒரு பகுதியாக சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷன் (International Monetary Fund) ஒன்றை அமைத்தல், 'தனியார் முயற்சிக்கு அதிக ஊக்கம் அளிப்

பதற்காக வெளிநாட்டுத் துணைப் பொருளாதார ஆலோசகர் பணி' யிடம் ஒன்றை நிறுவுதல் ஆகிய திட்டங்களை அக் கழகம் கொண்டுவந்தது. 'இந்த நான்குமுனைத் திட்டம், சரியாக நடத்தப்படுதல் சுதந்திர உலகின் வெற்றிகரப் பாதுகாப்புக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்' என்று ஜனதிபதி ட்ரூமன் பாராட்டினார்.

இந்த 'ஊக்கமான புதிய திட்டம்' நிறைவேறுவதற்கு ஸ்ட்ரிங் பெல்லோ பார், ஜேம்ஸ் பி. வார்பர்க், ஹென்றி ஏ. வாலாஸ், வால்ட்டர் ரூத்தர், சினட்டர் மக்மோகன் ஆகியோரும் இன்னுஞ் சிலரும் வலியுறுத்திய ஊக்கமும் அஞ்சா நெஞ்சமுமே தேவைப் பட்டன. உலக வளர்ச்சி நிறுவனம் ஒன்றை யமைக்காமல் குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் அடைய முடியாது என்று இவர்கள் எடுத்துக் கூறினர். அந் நிறுவனம் முதலீட்டிற்காகப் பெரிய நிதி யுடையதாய் அமையவேண்டும். செல்வம்படைத்த அட்லான்டிக் சமுதாயங்களின் அரசாங்கங்களும் மக்களும் அதற்கு முழுமனமாக ஆதரவு அளிக்கவேண்டும். அதன் குறிக்கோள்கள் இரண்டு. ஒன்று, தனியார் இலாபத்திற்காகவே பல்லாண்டுகாலம் இயங்கிவரும் தொழில் நிறுவனங்களினின்றும் முதலைத் திருப்புதல்; தேசிய சக்தியைப் படைக்கலங்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளில் செலவிடாமல், அபிவிருத்தித் திட்டங்களிலும் பல்லாண்டுகள் பயன்தராத் திட்டங்களிலும் பயன்படுத்தல். சுதேச உழைப்பாளி களைச் 'சுரண்டாமல்', சுதேச நிலச்சுவான்தாரிகளுக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் கைக்கூலி கொடுக்காமல், தல இறைமையில் (local sovereignty) அந்நியர் தலையீடு ஏற்படவிடாமல், (ஏற்கெனவே) செய்யப்பட்டிருக்கும் முதலீடு நல்ல பயனைத்தரும் அளவுக்குப் 'பிற்போக்கு' இடங்களின் சமூக, பொருளாதார அமைப்பில் வேண்டிய மாறுதல்களைக் கொண்டுவரல் மற்றொரு குறிக்கோளாகும். இவ்விரண்டையும் நோக்கி, அந்த ஏஜென்சியை இயக்காவிட்டால் அது தோல்வியடைவது நிச்சயம். படைக்கலப் போட்டி இதை ஒரு கல்வி சம்பந்தப்பட்ட பிரச்சினையாக்கிவிட்டது. எனினும், பண முதலீட்டைப் பொறுத்தமட்டும் முக்கியமான ஒரே நாடான அமெரிக்காவின் ஆட்சியாளர்கள், இந் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யப்போவதில்லை என்றுதான் தோன்றுகிறது. நாட்டுணர்ச்சி வயப்பட்ட ஆட்சிகள் (சான்றாக இந்தோனேசியா, எகிப்து, பொலிவியா, இரான், தாய்லாந்து) பண்டைய தவறுகளைப் பழித்துரைக்கவும், தத்தம் மண்ணிலிருந்த அந்நியர் முதலீட்டைத் தேசிய மயமாக்கவும் அல்லது பறிமுதல் செய்யவும், வெளி நாட்டினருக்குச் சொந்தமான வியாபாரங்களில் நானாவிதமான தடைகள் விதிக்கவும் முற்படவே, பிற்போக்கு நாடுகளை நோக்கித் தனியார் முதலீடு செய்தல் தடைப்பட்டது. ஒரு பெரிய வல்லரசு

தன் தனியார் முதலீட்டுக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும் அவர்கள் நஷ்டத்தை வரி செலுத்துவோர்மீது சுமத்துவதற்கும், தனக்குச் சொந்தமான துயரமிக்க இடங்களின் வளர்ச்சியை விட்டுவிட்டு, கடல் கடந்திருக்கும் பிற்போக்குப் பொருளாதாரங்களின் அபிவிருத்திக்காகப் பொது நிதிகளை 'சோசியலிசப்' பாணியில் செலவிடுவதற்கும் உள்நாட்டில் அவ்வளவு பொது உற்சாகம் ஏற்படாது என்றுதான் தோன்றுகிறது. அப்படிப்பட்ட எந்த ஏற்பாடும் அரசியல் அல்லது இராணுவ 'நிபந்தனைகளுடன்' (strings) கூடியதாகவே இருக்கும். அது இத்தகைய உதவியைப் பெறும் நாடுகட்கு இறுதியில் பிடிக்காமல் தான் போய்விடும்.

பிற்போக்கு நாடுகளில் நெடுநாள் நிலவிவந்த படைநில மானியச் சுரண்டல், அதிகாரிகள் கையாடல், அடக்குமுறை— இவற்றை முதலில் ஒழித்துக்கட்டாமல், 'நான்குமுனைத் திட்டம்' நிதிகளையும் பொருள்களையும் இங்குப் பயன்தரும் முறையில் பயன்படுத்த முடியாது என்ற உண்மை புலனையிற்று. இதுவே ஒரு முக்கியமான தடையாக நின்றது. இந் நெடுநாள் பழக்க வழக்கங்களைப் பின்பற்றிவந்தோர், இப் புதிய கொள்கையால் தங்களுக்குத் தீமையே விளையும் என்றுணர்ந்தார். எனவே, அவர்கள் அதைக் கடைப்பிடிப்பதுபோல் பாசாங்கு செய்துகொண்டே, அதைத் தங்கள் நலனை வளர்க்கப் பயன்படுத்தி, அதன் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் குலைக்கப் பார்த்தார்கள். இந்நிலையில் யு.எஸ்.ஏ. நாற்றிசையும் உதவித் தொகையையும் ஆதரவையும் கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்காக அளித்து வந்தது. ஆனால், இவ்வுதவி செல்வாக்குப் பெற்றிருந்தவர்களுக்கே அளிக்கப்பட்டது. அவர்களுடைய சொத்தும் வலிமையும், நிலச் சீர்திருத்தம், பொது மக்கள் கல்வி, கைத்தொழில் வளர்ச்சி, உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை எய்த முடியாமல் செய்தது. இந்தக் குழப்பம் நிலவி வருங்கால் ஜஸ்டிஸ் வில்லியம் ஓ. டக்ளஸ் என்பவர் 1951–52-ல் பிற்போக்குச் சமுதாயங்களில் சமூகப் புரட்சியைத் தோற்றுவிப்பதற்கு ஊக்கமளிக்கும் 'ஐம்முனைத் திட்டம்' ஒன்றைக் கொண்டு வந்தார். ஆனால், அரசியல், பொருளாதார உண்மைகளை அறிந்தோருக்கு அவருடைய ஆலோசனை எளிமையானதும் பொறுப்பற்றதுமாகப் பட்டது.

இவ் வையத்தில் வாழும் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சியில் ஏற்படும் இடர்களை நீக்குவதென்பது, முடியாத காரியம். இம் முட்டுக்கட்டைகள் தனித் தன்மை வாய்ந்தவை, மிகப் பிரமாண்டமானவை. இந் நிலையில் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் சமூக, அரசியல், கருத்துக் கொள்கையின் எல்லைக்குள், இந் நூற்றாண்டு நடுவே அமைக்கப்பட்ட அட்லான்டிக்

நட்புக் கூட்டிற்குள் இம் முட்டுக்கட்டைகளை நீக்கிவிட முடியாது. 'நான்கு முனைத் திட்டம்.' சமூகப் புரட்சிக்குப் பதிலாக வகுக்கப் பட்ட திட்டமேயன்றி, அதனை எய்துவதற்காக வகுக்கப்படவில்லை. மேலும், அது கம்யூனிசத்தை எதிர்க்க வந்த திட்டமேயன்றி, அதைப் போன்ற ஒன்று அன்று. இவ்வாறே இத் திட்டத்தை வகுத்தவர்களில் பெரும்பாலோர் கருதுகிறார்கள். இங்ஙனம் நோக்குங்கால் இத் திட்டம் அறவே தீர்க்க முடியாதது போலவும், போர், அமைதி முதலிய பிரச்சினைகளுடன் தொடர்பற்றது போலவும், தோன்றுகிறது. எப்படியாவது இத் திட்டம் எதிர்பார்க்கப்படும் போரில் மேற்கொள்ள வேண்டிய கடுமையான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்க வழி வகுத்தாலொழிய, அது பெருமளவு உற்பத்தி செய்யும் பண்டங்கள், பொருள்களுக்குச் சந்தைகள் தேடிக் கொடுத்தாலொழிய, இத் திட்டம் இவ்வாறு (பயனற்றதாக) தான் கருதப்படும். அதற்கிடையில் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் சேரியில் வாழ்ந்துவரும் மக்கள் கனவு கண்டு வரும் நல் வாழ்வு நனவாகுவதற்கு, அவர்கள் தாங்களே வழிவகுத்துக்கொண்டாலும் கொள்ளலாம்! இல்லை அந்நியர் காட்டிய வழி, அவர்கள் அளிக்கும் ஊக்கம் அல்லது அவர்கள் தலைமையில் சென்றாலும் செல்லலாம்.

ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்து வரும் கோடான கோடி மக்களின் விசுவாசம் யாரிடம் இருக்கும், என்ற வினா எழுகிறது அல்லவா? அவர்கள் விரும்புவதெல்லாம் பகட்டான வாழ்வை அன்று; நீதியுடன்கூடிய மதிப்பான வாழ்க்கை ஒன்றையே ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர். அவர்களின் இந்த நெடுநாள் ஆவலை மேலை ஜனநாயகமும் முதலாளித்துவமும் பூர்த்தி செய்யுமா அல்லது சோவியத் எதேச்சாதிகாரமும் சோசிய லிசமும் பூர்த்தி செய்யுமா என்று இந் நூற்றாண்டு நடுவில்கூடத் தெளிவாகத் தெரியவில்லை. எது அவர்களின் ஆசையை நிறைவேற்று கிறதோ அதனிடந்தான் அவர்களின் விசுவாசமும் இருக்குமே யொழிய, பெரிய நாடுகளைச் சேர்ந்த கொள்கை வகுப்பாளர் சொல் மாரூட்டத் தந்திரத்தில் அல்ல. இறுதியில் சுதந்திரமும் நீதியும் தழைக்குமாறு ஆட்சி செய்யப்படும் ஒருலகை விட்டால் வேறு முடிவேயில்லை, அத்தகைய உலகம் சோவியத் உலகமாகவோ, அன்றி அமெரிக்க உலகமாகவோ இருக்க முடியாது. ஐக்கிய நாடுகள் சபை ஒன்றே இந்த நம்பிக்கையைப் பூர்த்தி செய்ய முடியும். அதுவும் முதன்முதலில் தன் வெளி வேடத்தைக் களையவேண்டும்; அதற்கு அடுத்தாற்போல் பயன்தரக்கூடிய செயலில் ஈடுபடுவதவும் கருவியாக மாறவேண்டும். இந்நூலை எழுதுங்கால் இந் நம்பிக்கை நனவாக வெகு தூரம் இருந்தது. (ஒருலகம் ஓர் அரசாங்கம் என்ற) இக் கருத்து மீண்டும் உதித்துப் புத்துயிர் பெறும் என்பதே, உலகில் அடக்கி ஒடுக்கப்படும், வறுமையில் காலந்தள்ளி வரும்

ஏழைகளின் சரிபாளர் அனைவரும் வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனை யாகும். இவர்கள் மட்டுமே தங்கள் மக்கள் துய்த்த இன்னல்களை அறிவர்; இவர்கள் மட்டுமே விடுதலையும், முக்தியும், சுயநலமான அந்நியர் குடியேற்ற நாட்டுக் கொள்கைகளைக் குறுகியமனப் பான்மை யுடைய தேசியவுணர்ச்சிகளாலோ, அன்றிக் கெடுபிடிப்போரின் புதிய 'ஏகாதிபத்தியத்தாலோ,' மாற்றுவதில் இல்லை என்பதையும் அறிவர்.

3. வறுமையின் அரசியல்

'மனித குலம் முழுவதும் ஓர் இறைவனுல் படைக்கப் பட்டது. அவர் எல்லோரும் ஒரு தொகுதியைச் சேர்ந்தவர் .. தானுகவே (பிறர் உதவியின்றி) வாழக்கூடிய மனிதனே இல்லை. ஒவ்வொரு மனிதனும் இக் கண்டத்தின் ஒரு துண்டு, ஒரு சிறு துண்டு. ஒவ்வொரு மனிதனின் சாவும் என்னைக் குறைத்துவிடுகிறது. ஏனெனில், நான் மனித குலத்தைச் சேர்ந்தவன்; எனவே, யாருக்காக இந்த மணி யடிக்கிறதென்று அறியப் புறப்படாதீர். அது உமக்காகக் கூட இருக்கலாம்.'

—ஜான் டன்.

இவ் வையத்தில் வாழ்ந்து வரும் ஏழை மக்களின் நாடுகளைச் சுற்றிப் பார்த்து வருபவர் எவராக இருந்தாலும் சரி, அவர் உள்ளத்தில், இம் மக்களுக்குள் தலைசுற்றும் அளவுக்கு நிலவிவரும் விதவிதமான இனங்கள், மதங்கள், மொழிகள், பழக்கவழக்கங்கள், சமூக அமைப்புகள்—இவையனைத்தும் அப்படியே பதிந்துவிடும். அவர்கள் எல்லோரும் வெள்ளைத் தோல் இல்லாதவர்களாயும், ஏழ்மையாகவும் இருப்பதைத் தவிர அவர்களுக்குள் வேறு எந்த ஒற்றுமையையும் காண்பதரிது. எனவே, அவர்களை எதிர் நோக்கும் சிக்கல்களையும் அரசியலையும் பொதுக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதில் பயனெதுவுமில்லை. எனினும், பொது வாழ்விற்குரிய சில பொதுவான அம்சங்கள் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபட்டாலும், இத்தகைய எல்லா இடங்களிலும் அவற்றைக் காணலாம். இப்போது அம்சங்கள் அம் மக்களுக்கு மட்டும் முக்கியமானவை அல்ல; உலக சமுதாயத்திற்கே மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். எனவே, அவற்றை இங்குச் சில எடுத்துக்காட்டுகளுடன் பார்ப்போம்.

பெரும்பாலான இச் சமுதாயங்களில் ஜனநாயகம் தழைத்து வளர்வதற்கு இன்றியமையாத சில சூழ்நிலைகள் இருக்க வேண்டும். அரசியலமைப்புகளும் நடைமுறையிலிருந்துவரும் கொள்கைகளும் 'ஜனநாயக அடிப்படையில் அமைந்திருந்தால்' மட்டும் போதாது. இந் நாடுகளில் நாம் காண்பதென்ன? இங்கு நிலச்சுவான்தார்களும், வியாபாரிகளும் செல்வாக்குடன் விளங்கி வருகிறார்கள். ஆனால்,

அவர்கள் எண்ணிக்கையோ குறைவு; அவர்களுக்குப் பாதுகாப்பும் ஒன்றுமில்லை. அடுத்துக் கல்வியறிவு பெற்ற, ஆனால், மனக்குறை வுடைய கூட்டத்தினரைக் காணலாம்; இவர்களுக்கு சிவில் பணியை விட்டால், மதிப்புடன்கூடிய வேலைபார்ப்பதற்கு வேறு வாய்ப்புகளே இல்லை. அடுத்து இராணுவ அதிகாரிகளின் படைப் பிரிவுகளைக் (Corps) காணலாம்; அவர்கள் 'அரசியலுக்கு மேற்பட்டவர்களாக' இருக்கமாட்டார்கள்; மாறுக, அரசியலிலேயே மூழ்கி இருப்பார்கள். அடுத்தபடியாக, அரசியலையே தொழிலாகக் கொண்ட அரசியல் வாதிகள் கூட்டத்தைப் பார்க்கலாம்; இவர்களில் பெரும்பாலோர்க்கு பொது வாழ்க்கை என்பது, சமுதாயத்திற்குச் செய்யும் சேவை அன்று; மாறுக அது, 'சுரண்டல்,' கைக்கூலி, கொள்ளை ஆகிய இவற்றின்மூலம் தங்களைப் பணக்காரர்களாகச் செய்யும் வழியாகும். அதற்கு அடுத்தாற்போல் குறிப்பிடத்தக்க அளவிலில்லாத நடுத்தர வகுப்பினர் உள்ளனர்; இவர்களோ பொதுக் காரியங்களைத் தொடர்ச்சியாகவும், ஸ்திரமாகவும் நிர்வாகஞ் செய்யத் துணைபுரிய இயலாதவர்கள். கடைசியாக, கல்வி வாசனையற்ற கடனுக்கு ஆளான, அன்றுடச் சீவனத்திற்குமட்டும் சம்பாதிக்கும் விவசாயி களைக் காணலாம்; இவர்களின் எண்ணிக்கையோ மிகப் பெரிது; இச் சூழ்நிலையில் உண்மையான ஜனநாயகம் ஏற்படுதல் முயற் கொம்புதான். அந்த அரசின் அமைப்பு எப்படியாக இருந்த போதிலும் சரி, அங்கு சனநாயகம் ஏட்டளவில்தான் இருக்க முடியுமேயன்றி, நடைமுறையில் திகழ முடியாது.

இப்படிப்பட்ட சமுதாயங்களில் நிலையற்ற அரசியல் தன்மை நிலவிவருதல் இயற்கையே. இந்த அரசியல் ஸ்திரமின்மையே, இராணுவ ஆட்சியாளரோ, அன்றிப் பொதுமக்களைத் தங்கள் சொல் வன்மையால் மயக்கிவிடும் சிவில் தலைவர்களோ, தேர்தல் நடத்தியோ, இல்லாமலோ அடிக்கடி சருவாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்குக் காரணம் ஆகும்; அதன் விளைவுமாகும். இவ்விடங்களில் அதிகாரம் ஒழுங்கான (அமைதியான) முறையிலும் கைமாறும்; அரசியல் கொலை அல்லது புரட்சிமூலமும் அது கைமாறி சருவாதிகாரம் ஏற்படும். சருவாதிகாரிகள் தங்கள் குடிமக்களைச் சுரண்டி வருவர். மக்கள் இதை எதிர்க்குங்கால் நாட்டையே விட்டுவிட்டு, தங்கள் காமக் கிழத்தியருடனும் பொது நிதியுடனும் வெளிநாடுகட்கு ஓடிவிடுவர். நேர்மையான தேர்தல் பிரச்சாரம் செய்தல், சட்டசபை, ஆட்சி, நீதி நிர்வாகம் இவற்றைத் திறம்பட நடத்தும் திறமை இவர்களிடமிராது. ஆனால், இவற்றிற்குப் பதிலாக இங்குள்ள அரசியல் சூழ்நிலை திடீர்ப் புரட்சி, ரகசியப் போலீஸ், ஒற்று, பாசாண்டம், குறை கூறுபவர்களையும், எதிரிகளையும் படிப்படியாக அச்சுறுத்தி வருதல் ஆகியவற்றை இன்றியமையாததாக்கிவிடும். வெவ்வேறு வகுப்பினர் தம்முடைய தனியுரிமைகட்குப் பயந்து, கொள்கையளவிலும், நடை

முறையிலும் ஃபாசிஸத்தைக் கடைப்பிடிக்க முனைவர். பெரும்மக்களோ தங்களுக்கு நற்காலம் பிறக்காதது கண்டு, சொர்க்கத்தையே இப் புவியில் ஸ்தாபித்துவிடும் 'சீர்திருத்தங்களைக்' கொண்டு வருவதாக உறுதியளிக்கும் கம்யூனிசக் கிளர்ச்சிக்காரர்களுக்குச் செவி சாய்க்கப் பின்வாங்கமாட்டார். கம்யூனிசம் வெற்றி பெற்றுவிட்டால், ஜனநாயகமும் சிவில் உரிமைகளும் அழிந்துவிடும். ஆனால், சிவில் உரிமைகளையே கண்டறியாதவர்களுக்கு, சனநாயகத்தை எள்ளி நகையாடுபவர்களுக்கு, சனநாயகம் எப்படிப் போனாலும், அதில் அக்கறையே இருக்காது அல்லவா ?

பெரும்பாலான மக்களுக்கு மனமுறிவு ஏற்பட்டுவிட்டால் ஆக்கிரமிப்புகள் அதிகமாகிவிடும். அப்புறம் அரசியல் வாழ்வில் வெறுப்பும், பலாத்காரமும் தலைவிரித்தாடும். உண்ண உணவும் உடுத்த உடையும் அற்ற மக்கள் கூட்டம், ஏமாளிகளை கைக்குள் வைத்துக்கொண்டு வறுமை, துயரம்—இவற்றைச் சித்திரிக்கும் தலைவர்களைக் கைதட்டிப் பாராட்டத் தயங்கமாட்டா. இத் துயரைத் துடைத்தல் மிகக் கடினம்; அதுவும் எங்கு நிலச்சுவான்தாரிகள் தங்கள் தனிச் சலுகைகளை இழக்க நேரிடுகிறதோ அங்கு இது மிகக் கடினம். ஆனால், 'குடியேற்ற நாட்டுக் கொள்கையினரையும்,' 'ஏகாதிபத்தியரையும்' மிக எளிதில் குறைகூறி விடலாம். அதுபோல் இன, மதச் சிறுபான்மையினருக்கு எதிராக மக்களின் சினத்தை எழுப்பிவிடுவதும்; பொறுமையின்மைபற்றிப் போதிப்பதும் நடை முறையில் அதைப் பின்பற்றி வருதலும்; கொள்ளை, தீக்கோல், கொலை முதலியவற்றைப் புரியுமாறு மக்களைத் தூண்டிவிடுவதும், அண்டை நாடுகளைச் சண்டைக்கு இழுப்பதும் மிக எளிதான செயலாகும்.

வறுமையாகவும், பிற்போக்காகவும், தொழில் முன்னேற்றமில்லா மலும் வாழ்ந்து வரும் பெரும்பாலான மனிதர்களின் அரசியல் வாழ்வில், இத் துயர் நாடகத்தையே பல்லாண்டுகளாகக் கண்டு வருகிறோம். இதைப் பார்த்துவிட்டு மேலை நாட்டவர் தங்களைப் பற்றிப் பெருமையாக நினைத்துகொள்ள இடமில்லை. இது ரஷ்யர், இத்தாலியர், செர்மானியர், ஸ்பானியர், ஆஸ்திரியர், அங்கேரியர் இவர்கள் அனைவர்க்கும் பொருந்தும். ஏனெனில், முதல் உலகப் போரும், அதற்குப் பத்து ஆண்டுகட்குப் பின்னர் ஏற்பட்ட வியாபாரப் பெருமந்தமும் மக்களின் மனத்தை உடைத்துவிட்டது. அப்போது எழுந்த அரசியல் பிரச்சினைகளை அவர்களும் (மேலை நாட்டினர்) இதுபோன்றே 'சமாளித்தார்கள்'. இவ்வரசியல் போக்கு இக்காலப் பெரிய தொழில் முன்னேற்ற சமுதாயங்களைப் பொறுத்த மட்டும் 'அசாதாரணமான'தென்றும், பிற்போக்குச் சமுதாயங்களைப் பொறுத்தமட்டும் 'சாதாரணம்' என்றும் கருதப்படுகிறது. எனவே, வறுமையின் அரசியலைப் புரிந்த எவரும், இவ்வரசியல் போக்குப்பற்றி

எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்தல் எவ்வளவு முக்கியம் என்பதை அறிவர். மத்திய கிழக்கில் இப் போக்கினால் ஏற்பட்ட விளைவுகள், சிக்கல்கள் ஆகியவைபற்றி முன்பே ஆராய்ந்தோம். எனவே, உலகின் சேரிகளில் இவ்வரசியல் போக்கு விளைவித்த சிக்கல்களைப் பார்ப்பதே இங்கு நமது நோக்கமாகும்.

லத்தீன் அமெரிக்கா: உயர்ந்த பீடபூமிகள், கடற்கரைச் சம வெளிகள், சூரிய வெப்பமான தீவுகள், வெப்ப மண்டலக் காடுகள், செழிப்பான பள்ளத்தாக்குகள், அகன்ற புல் சமவெளிகள் ஆகிய வற்றை ரியோ கிராண்டுக்கும், தென் அமெரிக்காவின் தென் முனைக்கும் இடையே காணலாம். இங்கு சுமார் 200,000,000 பேர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் 20 இறைமை அரசுகளாகப் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். இந் நாடுகளனைத்தும் கரீபியனிலும் கினியா விலும் அமைந்திருக்கின்றன. இங்கு ஐரோப்பியக் குடியேற்ற நாட்டுக் கொள்கையின் அடிச்சுவடுகளைக் காணலாம். இவைகள் அமெரிக்காவின் அருகிலுள்ள அண்டை நாடுகளாகும். இங்கு அமெரிந்தியர், காக்காசியர், நீக்ரோக்கள், மெஸ்டிசோ இனத்தார் முதலியோர் வாழ்ந்து வருகிறார்கள். கரீபியனிலுள்ள நாடுகளில் நீக்ரோக்களே அதிகம் இருக்கிறார்கள். பிரேசிலின் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க அளவு நீக்ரோக்கள் வசித்து வருகிறார்கள். இங்குப் பாதி வெள்ளை மூதாதையர்களுக்குப் (தாய் வெள்ளையாகவும் தகப்பன் கறுப்பாகவும் உள்ளவர்களுக்கு) பிறந்தவர்கூட 'வெள்ளையராகவே' கருதப்படுகிறார்கள். ஆனால், அமெரிக்காவிலோ பாதி நீக்ரோ முன்னோர்களுக்குப் பிறந்தவர்கள் 'நீக்கிரோக்களாகவே' கருதப்படு கிறார்கள். மெக்சிகோ, கொலம்பியா, யூக்வடார், பெரு, பொலிவியா ஆகிய நாடுகளில் மெஸ்டிசோ இனத்தார் அதிகமாக வாழ்ந்து வரு கிறார்கள். அர்ஜென்டைனு, சில்லி, பராகுவே, உருகுவே ஆகிய நாடு களில் பெரும்பான்மையாக வசித்து வருபவர்கள் ஸ்பானியர் வமிசத் தாரின் சந்ததிகள். பின்னர் ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர் களின் சந்ததியார்களும் அங்கு அதிகமாக வசித்து வருகிறார்கள். அவர்கள் அனைவருமே ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர் கள்தாம். அவர்கள் பெரும்பாலும் ஸ்பானிய மொழியே (பிரேசில் மக்கள் போர்த்துக்கீசிய மொழியே) பேசி வருகிறார்கள். ஆனால், அமெரிந்தியரில் பெரும்பாலோர் கொலம்பஸ் காலத்திற்குமுன் பேச்சு வழக்கிலிருந்த மொழிகளையே இன்னும் பேசி வருகிறார்கள். லத்தீன் அமெரிக்க மக்களில் பெரும்பாலோர் இன்னும் கல்வி வாசனையற்றவர் களாகவே — அதாவது, எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

லத்தீன் அமெரிக்காவின் சிக்கல் வாய்ந்த துயரம் தேசிய, சர்வ தேசிய அரசியலைப்பற்றி இங்கு ஆராய்வதற்கில்லை. அதுபற்றி விளக்

மான பல நூல்கள் இருக்கின்றன. அவற்றைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், இந்நாடுகளனைத்திலும் ஒரு பொதுவான போக்கைப் பார்க்கலாம். நிலையான, முறையான, சனநாயகத்தைத் தாபிக்கும் முயற்சியில் அடிக்கடி போராட்டங்கள் ஏற்படுவதும், மன முறிவு ஏற்படுவதும், அவற்றிற்கிடையே 'தலைவர்கள்' சருவாதிகார ஆட்சியை ஸ்தாபிப்பதுமாக இருந்து வருகிறது. லத்தீன் அமெரிக்காவில் சனத்தொகை மிகுந்த இரண்டாவது நாடு மெக்சிக்கோ. இங்கு 30,000,000 பேர் வாழ்ந்து வருகிறார்கள். 1910–17-ல் ஏற்பட்ட சமூகப் புரட்சியின் விளைவாக இங்கு அரசியல் துறையில் அதிக அளவு ஸ்திரமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இப் புரட்சியின்போதே நிலம் தேசியமயமாக்கப்பட்டுக் கிராமச் சமுதாயங்களில் வாழ்ந்துவந்த பணியாட்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதன் பின்னரே பெரும்பாலும் யு. எஸ். கம்பெனிகளுக்குச் சொந்தமான எண்ணெய்த் தொழிற்சாலைகள் தேசியமயமாக்கப்பட்டன. இவ்வாறுகப் பாதி சோசியலிச 'சேமநல நாடு' கடுமையான முயற்சியால் இங்கு உருவாயிற்று. ∴பெடரல் குடியரசின் சமீபகால ஜனாதிபதிகள், 6 ஆண்டு பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் 1917 ஆம் ஆண்டு அரசியலமைப்புத் திட்டத்தின்கீழ் மறு தேர்வுக்குத் தகுதியற்றவர்களாகிவிட்டனர். மிகுல் அலிமான் (1946-52), அடோல்ப் ரூயிஸ் கார்ட்டின்ஸ் (1952-58) ஆகிய இருவரும் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்கள்.

பிரேசில் ஐக்கிய அரசு மிகப் பெரிய, அதிக சனநெருக்கமான தென் குடியரசாகும். இது தென் அமெரிகாவின் நிலப்பகுதியிலும் சனத்தொகையிலும் மூன்றில் ஒரு மடங்கைக் கொண்டுள்ளது. ஆனால், இங்கு அரசியல் ஸ்திரநிலைமையோ, குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியோ இதுகாறும் ஏற்பட்டபாடில்லை. அங்கு 60,000,000 மக்கள் (1958-ல்) வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 40,000,000 பேர் மருத்துவரையோ (doctor), காலணிகளையோ, கட்டிலையோ, பள்ளியையோ கண்டதில்லை. வியாபாரப் பெருமந்தத்தின் விளைவாக சனநாயக ஆட்சி மாறி 1930-ல் இராணுவ ஆட்சி ஏற்பட்டது. கெட்டுலியோ வர்கஸ் என்பவர் ஜனாதிபதியானார். அவர் 1954, ஆகஸ்டு 24 ஆம் நாள் வரை, இடைவிட்டு, ஜனாதிபதி பதவியில் இருந்துவந்தார். இராணுவத்தினர் அவரைக் கட்டாயப் பதவி நீக்கம் செய்த பின்னர், அவர் இத் தேதியன்று தற்கொலை புரிந்துகொண்டார். 1946 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சனநாயகத்திற்கும், சமூக நீதிக்கும் நல்ல ஆதரவு அளிக்கிறது. ஆனால் 'சனநாயகத்தை எதிர்க்கும்' அரசியல் கட்சிகளை அது தடை செய்கிறது. கார்லோ லூயி பிரெஸ்டஸ் என்பவரின் தலைமையில் வெகுநாள் இயங்கிவரும் கம்யூனிஸ்ட் சார்பான போராட்டமும் தடை செய்யப்பட்டுள்ளது. 1955-ல் டாக்டர் ஜூசிலோனே குபிட்ஷெக்

என்பவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1956, சனவரி 31ஆம் நாள் பதவியிலமர்ந்தார். அவர் பொருளாதார வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தீட்டுவதாக வாக்களித்தார்; அமெரிக்காவிடமிருந்து சிறிய கடன்கள் வாங்கினர்; பத்திரிகை, செய்தித்தாள் கூக் கண்டிப்புச் (censor) செய்தார்; கலகங்கூ அடக்கினர்.

அடுத்தது அர்ஜன்டைனு. இங்கு 20,000,000 பேர் வாழ்ந்து வருகிறார்கள். பெரிய லத்தீன் அமெரிக்கச் சமுதாயங்களிலே இங்குதான் தலா வருமானம் அதிகம்; இங்குதான் கைத்தொழில் வளர்ச்சியும், கல்விப் பெருக்கமும் அதிகம். இங்குள்ள சனத்தொகையில் 80 சதவீதத்திற்கும் மேல் ஐரோப்பியராவர். இவையெல்லாம் இருந்தும் பொதுக் காரியங்களில் இந்நாட்டு மக்கள் அவ்வளவு நற்பேறு அடைந்திருப்பதாகத் தெரியவில்லை. சருவாதிகாரம், சனநாயகம் இரண்டையும் மாறிமாறிக் கடைப்பிடித்தபின், இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது அர்ஜென்டைனுவின் ஜனாவான் பெரான் அரை ஃபாசிஸ்ட், அரை எதேச்சாதிகார சருவாதிகார ஆட்சி ஒன்றை நிறுவினர். ஆனால், 1951-ல் கலகம் ஏற்படலாயிற்று. அது 1955 செப்டம்பர் 16ஆம் நாள் உச்ச கட்டத்தை யடைந்தது. அன்றே பெரான் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, நாடுகடத்தப்பட்டார். 1853ஆம் ஆண்டின் 'தாராளத்துவ' அரசியலமைப்பு, 1956 மேமுதல் நாளன்று மீண்டும் அமலாக்கப்பட்டது. பெரானால் பறிமுதல் செய்யப்பட்டு, பெரானிஸ்ட்டா தொழிலாளிகளால் கான்ஃபெடரேஷனுக மாற்றியமைக்கப்பட்டு, 5 ஆண்டுகட்குப் பின்னர், புவனஸ் ஓரஸிலிருந்து வெளியான 'லா பிரென்சா' என்ற பத்திரிகை மீண்டும் 1956, பெப்ரவரியில் பிரசுரிக்கப்பட்டது. பத்திரிகையின் முன்னாள் சொந்தக்காரரும் பிரசுரகர்த்தருமான டாக்டர் ஆல்பெர்ட்டோ கெயின்சா பாஸ் என்பவர் இப் பத்திரிகையைத் தனிப்பட்ட முறையில் பிரசுரித்தார். இது பத்திரிகை உரிமைக்கே ஒரு குறிப்பிடத்தக்க வெற்றிதான். ஜனாதிபதி பெட்ரோ யூஜினே அராம்புருவின் ஆட்சியில் அரசியலின் சனநாயகப் போக்கு மீண்டும் தென்பட்டது. ஆனால், அவ்வாட்சியை பெரான் அளித்த ஊக்கத்தில் இராணுவக் கலகம் அச்சுறுத்தி வந்தது.

மற்றச் சிறிய குடியரசுகளில் அரசியல் வாழ்க்கை, அதிகாரத்தைக் கைப்பற்றுவான்வேண்டி நடத்தப்படும் குழப்பமான போராட்டமாகவே இருந்து வருகிறது. இதில் போட்டி மனப்பான்மையுடைய அரசியல்வாதிகளும், இராணுவ அதிகாரிகளும் உள்ளூர் நிலச்சுவான்தாரிகளுடனும் வியாபாரிகள், அயல்நாட்டு முதலீட்டுக்காரர்களுடனும் சேர்ந்துகொண்டு, அதிகாரத்திற்காகப் போராடி வருகிறார்கள். 'தாராளவாதிகளும்', தீவிரவாதிகளும் பண்டைக் காலை அரைகுறையான படைநிலமானிய முறையையும், குடியேற்ற

நாட்டுப் பொருளாதாரங்களையும் சீர்திருத்தம் செய்ய முயன்று தோல்வியடைந்தார்கள். ஜனாதிபதி ஜெனரல் கார்லஸ் இபனீஸ் (1952–58) ஆட்சியில் சில்லியில் நம்பமுடியாத அளவுக்கு நாணயப் பணவீக்கமும், பித்தளைச் சுரங்கங்களில் வேலை பார்ப்போர்களின் வேலை நிறுத்தங்களும், இடதுசாரிகளால் தூண்டப்பட்ட திடீர்க் கலகங்களும் தாண்டவமாடின. மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளில் பொதுவாழ்வில் ஒழுங்கும் அமைதியும் நிலவவில்லை. இதற்கு அரசியல் பலாத்கார நடவடிக்கைகளின் நீண்ட பட்டியலே சான்றாகும். இச் சமுதாயங்களில் வறுமையால் ஏற்பட்ட துயரமும், ஏழை பணக்காரர்கள் போட்டுக் கொண்ட சண்டைகளும், ஏழைகளைச் சுரண்டி, தங்களுக்கென்று தனியுரிமை பெறுவதற்காகப் பணக் காரர்கள் நடத்திய போர்களுமே இங்கு நிலவிவந்த அமைதி யின்மைக்குக் காரணமாகும்.

1955 சன. 3. பனாமாவின் ஜனாதிபதி ஜோசி அன்டோனியோ ரமோன் படுகொலை செய்யப்படுகிறார். முன்னாள் ஜனாதிபதியான ஆர்னல்ப் அரியாஸ் கைது செய்யப்படுகிறார். நேஷனல் அசெம்பிளி முற்றுகை நிலை ஏற்பட்டுவிட்டதாக அறிவிப்புச் செய்கிறது. புதிய ஜனாதிபதி ஜோசி ரமோன் குய்சாடோ குற்றஞ்சாட்டப்படுகிறார். இந் நிலையற்ற ஆட்சிக்குப் பின்னர் 1956, மே 13 ஆம் நாள் ஏர்னஸ்ட்டோ டிலா கார்டியா, ஜூனியர் பிரசிடென்டாக நியமிக்கப் படுகிறார்.

1955 சன. 9. அமெரிக்க அரசுகள் நிறுவனத்தின் முன்னர் காஸ்ட்டா ரீக்காவின் ஜனாதிபதி ஜோசி பிகரஸ், நிக்கராகுவா தன் நாட்டின்மீது படையெடுக்கப்போவதாய் அச்சுறுத்தி வருகிறது என்று குற்றஞ்சாட்டுகிறார். நிக்கராகுவாவின் சருவாதிகாரி அனஸ்டாசியோ சொமோஸா காஸ்ட்டா ரீக்கா தன்னைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டி வருவதாக ஏற்கெனவே குற்றஞ்சாட்டி இருக் கிறார். சொமோஸா சண்டைக்கு வருமாறு பிகரசுக்கு அறைகூவல் விடுக்கிறார். அதே வேளை நிகராடுவேயிலிருந்து ஆக்கமும் ஊக்கமும் பெற்ற கலகக்காரர்கள் காஸ்ட்டா ரீக்காவின் நகரங்களைக் கொள்ளை யடிக்கின்றனர். காஸ்ட்டா ரீக்காவைப் பாதுகாப்பதற்காக யு.ஸ்.ஏ. நான்கு போர் விமானங்களை அனுப்பி வைக்கிறது. கலகக்காரர்கள் அடக்கப்படுகிறார்கள். ஒரு 'காப்பு மண்டலம்' (buffer zone) இரு நாடுகளின் எல்லையையொட்டி அமைக்க இரு தரப்பினரும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

1955 பெப். 19. நிக்கராகுவேக்கு 'நல்லெண்ண' விஜயம் செய்த யு. எஸ். உப ஜனாதிபதி ரிச்சர்டு எம். நிக்சனிடம் சொமோஸா, தன்னைக் கொல்வதற்காக பிகரஸ் அனுப்பிய படைக்கலங்களைக்

காட்டுகிறார். பிகரஸ் கம்யூனிசத் தொடர்புகள் கொண்டவர் என்று குற்றஞ்சாட்டுகிறார். 'அப் பைத்தியக்காரனின் கைகளுக்கு விலங்கிடு மாறு' யு.எஸ்.ஏ யைக் கேட்டுக்கொள்கிறார்.

1955 செப். 19. யூக்கேடருக்கும் பெருவிற்கும் நீண்ட நாட்களாக எல்லைத் தகராறு இருந்து வருகிறது. ஒன்று மற்றதன்மேல் படை யெடுக்கப்போவதாக இரு நாடுகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டி வருகின்றன. இதனை முன்னிட்டு யு.எஸ்.ஏ., அர்ஜென்டைனா, பிரேசில், சில்லி ஆகிய நாட்டுத் தூதர் குழுவினர் (attaches) எல்லை நிலைமைகள்பற்றிக் கூட்டு விசாரணை நடத்துகிறார்கள்.

1956 டிச. 10. போர்ட்-அவ்-பிரின்ஸ் என்னுமிடத்தில் வேலை நிறுத்தம் ஒன்று ஏற்படுகிறது. அதனால் ஹெய்ட்டியின் இராணுவம் 1950-லிருந்து ஜனாதிபதியாக விளங்கிவந்த சருவாதிகாரி பால் இ. மக்லோயர் என்பவரைப் பதவியிலிருந்து விலக்கிவிடுகிறது. மூன்று குறிப்பிட்ட ஜனாதிபதிகள் சிறை செய்யப்பட்ட பின், 1957 மே மாதம் ஜெனரல் லியான் காண்ட்டேவ் ஜனாதிபதியாகிறார். 1957 மே 21 ஆம் நாள் அவர் இராணுவ ஆட்சியைப் பிறப்பிக்கிறார். அதனை யொட்டி ஏற்படும் பலாத்காரத்தில் பியரி யூஸ்டாஸ் டேனியல் பிக்னேல் 'கூட்டு ஆட்சியின்' தற்காலிக ஜனாதிபதியாக 1957 மே 26ஆம் நாள் நியமிக்கப்படுகிறார். அவரையும் ஜூன் 14ஆம் நாள் இராணுவம் பதவியிலிருந்து நீக்கிவிடுகிறது.

1957 மார்ச் 13. கியூபாவின் ஜனாதிபதி புல்ஜென்சியோ பாடிஸ்ட்டாவின் சருவாதிகார ஆட்சியைக் கவிழ்க்க ஹவானாவில் முயன்ற 40 மாணவர்கள் ஜனாதிபதி மாளிகையில் கொல்லப்படு கிறார்கள். காஸ்ட்ரோ தலைமையில் செயல்பட்டுவரும் கலகக்காரர்களைக் 'கம்யூனிஸ்ட்டுகள்' என்று பாடிஸ்ட்டா குற்றஞ்சாட்டுகிறார். புரட்சிக்கான மறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1957 மே 10. 1933 முதல் கொலம்பியாவின் ஜனாதிபதியாக விளங்கிவந்த சருவாதிகாரி கஸ்ட்டாவோ ரோஜாஸ்பினிலா என்பவரை இராணுவ ஆட்சியாளர் பெரிய கலகத்திற்குப்பின் பதவி யிலிருந்து நீக்கிவிடுகிறார்கள்.

1957 மே 29. 1956 டிச. 3ஆம் நாள் டொமினிகன் ஏர்லைன்ஸைச் சேர்ந்த ஜெரால்டு லெஸ்ட்டர் மர்ஃபி என்ற துணை விமானி காணாமற்போய்விட்டார். இவ் விஷயம், 1930-லிருந்து டொமினிகன் குடியரசின் சருவாதிகாரியாக விளங்கி வந்த ஜெனரல் ராபேல் எல். ட்ருஜிலோவின் நெடுநாள் விரோதியான டாக்டர் ஜீஸஸ் டி கலிண்டஸ் என்ற கொலம்பியா சர்வகலாசாலை விரிவுரையாளர் 1956 மார்ச் 12ஆம் நாள் காணாமற்போனதுடன் சம்பந்தப்பட்டது என்று யு.எஸ்.ஏ. வெளிவிவகாரத் துறை குற்றஞ்சாட்டுகிறது.

1957 ஆக. 10. 1954-ல் எல்சால்வேடர், ஆண்டுராஸ் ஆகிய இரண்டும் யு.எஸ்.ஏ. யிடமிருந்து உதவி பெற்று, படையெடுப்பு, புரட்சி முதலியவற்றின்மூலம் 'கம்யூனிசத்திலிருந்து' கௌத்த மாலாவை இடதுசாரி ஜனாதிபதி ஜேகபோ ஆர்பென்ஸ் குஸ்மான் என்பவரை ஆட்சியிலிருந்து ஜூன் 1954-ல் நீக்கிவிடுகிறார் ஜனாதிபதி கார்லஸ் காஸ்ட்டிலோ ஆர்மாஸ். இவர் (ஆர்மாஸ்) 1957, ஆக. 10-ல் நாள் அரசியல் படுகொலைக்கு ஆளாகின்றார்.

1958 சன. 23. 3,000,000.000 யு. எஸ். டாலர்கள் முதலீடு செய்யப்பட்டிருக்கும் எண்ணெய் வளம் நிறைந்த வெனிசூலாவில் 1948 முதல் சருவாதிகாரியாக விளங்கிவந்த ஜெனரல் மார்க்கஸ் பீரஸ் ஜிமீனஸ் என்பவர், பலர் இரத்தம் சிந்திய கலகத்திற்குப்பின் பதவியிலிருந்து நீக்கப்படுகிறார். உல்ஃப்காங் லராசாபெல் என்ற கடற்படைத் தலைவர் (Rear Admiral) தலைமையில் புதிய ஆட்சி ஒன்று நிறுவப்படுகிறது.

மற்ற லத்தீன் அமெரிக்கக் குடியரசுகளின் கதையையோ, அன்றிப் பின்னர் ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளைப்பற்றியோ சொல்ல வேண்டுமானால் சலிப்புத் தட்டிவிடும். இந் நாடுகளில் 50 அல்லது 100 ஆண்டுகட்கு முன்னர் நடந்த கதையும் இதுபோல் குழப்பம் நிறைந்ததாகவே இருக்கும். இனி வரவிருக்கும் 50 ஆண்டுகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை. எனவே. நல்லெண்ணம் படைத்த மக்களே இவ்வாறு நடக்கக்கூடாதென்று பிரார்த்தனை செய்யவேண்டும். லத்தீன் அமெரிக்கர்கள் சனநாயக சுய ஆட்சி நடத்தும் திறனற்றவர்கள் என்பது அல்ல நாம் இதிலிருந்து 'கற்கும் பாடம்'. பார்க்கப்போனால் எண்ணற்ற லத்தீன் அமெரிக்கக் குடிமக்களும், அரசியல் மேதைகளும் சனநாயகத்தின் வளர்ச்சிக்கு ஏட்டளவிலும் நடைமுறையிலும் பெரும் அளவு பாடுபட்டிருக்கிறார்கள். அதுமட்டுமன்று ; லத்தீன் அமெரிக்க அறிவாளிகளில் பலர் மனிதகுலத்தின் பொதுச் சொத்தான இலக்கியம், கலை, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் மதிப்பிட முடியாத் தொண்டாற்றியிருக்கிறார்கள். எனவே, இதிலிருந்து நாம் அறிவது என்ன வென்றால், லத்தீன் அமெரிக்காவிலும், ஆசியா, ஆப்பிரிக்கா இவைகளின் பெரும் பகுதியைப்போல், துன்பமும், கல்லாமையும் பீடித்திருக்கும் சமுதாயங்களில், அரசியல் துறையில் ஸ்திரமான நிலையையும், முறையான அரசாங்கத்தையும் ஏற்படுத்துதல் மலையைக் கல்லி எலியைப் பிடிப்பதுபோல்தான்.

லத்தீன் அமெரிக்கர்கள் நெடுநாளாக 'அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்'மீது ஐயங்கொண்டு வந்தார்கள். எனினும், 'வடக்கின் இம் மாபெரும் செல்வம் பொருந்திய இராட்சசன்' தங்களின் அவல நிலைமையைப் போக்க முன்வரும், ஆவன செய்யும் என்றும்

எதிர்பார்த்து வந்தார்கள். ஆனால், அவர்கள் நம்பிக்கை நனவாகாததால் ஏமாற்றமடைந்தனர். லத்தீன் அமெரிக்கா ஒரு சேரி நிறைந்த நாடு மட்டுமன்று. அதைச் சுற்றி ஏற்படும் பெருஞ் சண்டைகட்கும் அதுவே காரணம். இச் சண்டைகள் உலக சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவை என்று 'வல்லரசு'களைச் சேர்ந்த அரசியல் மேதைகள் கருதி வருகின்றனர். ஒருவேளை அக் கருத்துத் தவருக இருந்தாலும் இருக்கலாம். (அமெரிக்காவுக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகட்குமிடையே) ஏற்பட்ட மாநாடுகள், தூதியல் பரிவர்த்தனைகள் (diplomatic exchanges) ஆகிய இவற்றையல்லாமல், ஜனாதிபதி ஐசன்ஹோவர் 1956 ஜூலை மாதம் பனமாவில் லத்தீன் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார். பழைய உண்மைகளையே மீண்டும் உறுதிப்படுத்தும் மற்றொரு 'பனமா அறிக்கையில்' கையொப்பமிட்டபோது அவர் மேற்கு உலகம் முழுவதும் 'அணுசக்தியை அதிவிரைவில் பயன்படுத்துவதற்காக' இன்டர் அமெரிக்கக் கமிஷன் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார். எல்லோரும் அக் கருத்தை வரவேற்றனர். ஆனால், லத்தீன் அமெரிக்க வறுமையைப் போக்க எடுக்கப்படும் முயற்சிகள் சற்றுத் தாமதித்தே பயனளிக்கும் இதற்கிடையில் 1954-ல் கௌத்தமாலாவில் செய்ததுபோல் வாஷிங்டன் உறுதியான நடவடிக்கை எடுக்கலாயிற்று. ஆனால், 'சர்வதேசக் கம்யூனிசம்' இரு அமெரிக்காவில் எங்கேயாவது ஓரிடத்தில் காலை ஊன்றிவிடுவது சாத்தியம் என்ற நிலைமை ஏற்பட்ட பின்னரே, அந் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமுள்ள தன்னுடைய நேசநாடுகட்கு வாஷிங்டன் அளித்த இராணுவ உதவியுடனும், பொருளாதார உதவி மானியத் தொகையுடனும் ஒப்பிடுங்கால், அது லத்தீன் அமெரிக்காவுக்கு 1940-50-லும், 1950-60-லும் அளித்த பொருளாதார, தொழில்நுணுக்க உதவி மிகமிகக் குறைவே என்பது புலனாகும். இக் கொள்கையின் அடிப்படைக் கருத்துகள் இரண்டு. லத்தீன் அமெரிக்காமீது அக்கறை செலுத்தத் தேவையில்லை என்பது ஒன்று ; வறுமையைத் துடைத்து நல்வாழ்வு வாழ வேண்டும் என்று அது கண்டுவரும் கனவு வருங்காலத்தில் நனவாகப்போவதில்லை என்பது மற்றொன்று. எவ்வளவு தூரம் இவை சரியென்பதை வருங்கால நிகழ்ச்சிகளாலேயே உணர்த்த முடியும்.

இந்தியா : திட்டம் அமைப்போர் : கிரிஸ்டஃபர் கொலம்பஸ் 1492, அக்டோபர் 12ஆம் நாள் கரீபியனை முதன்முதலாகத் தொட்டார். அப்போது அவருக்குப் 'புது உலகத்தில்' தான் கால் வைத்தது தெரியாது. மேலும், அது அவருடைய பொய்கூறும் சமகாலத்தவரும் அறிமுகப்பட்டவருமான அமெரிகோ வெஸ்புக்கி

என்பவர் பெயரால் நீதியற்ற முறையில் அழைக்கப்படும் என்றும் அவருக்குத் தெரியாது. அமெரிகோ தனது 1497ஆம் ஆண்டின் கடற் சுற்றுப்பயணம் குறித்து வெளியிட்டதனைத்தும் வெறும் கட்டுக் கதையே. இந்தியத் தீவுகளையும் இந்தியாவையும் மேற்குத் திசை வழியே கண்டுபிடிக்க முற்பட்டார் கொலம்பஸ். அவ்வமயம் அவர் காரீப் சுதேசவாசிகளை மதமாற்றலுக்காக ஸ்பெயினுக்கு மீண்டும் அழைத்துச் சென்றார். இப்படிச் செய்ததே இந்த நாட்டு மக்களை 'இந்தியர்' என்று ஐரோப்பியர் அனைவரும் தவறுக் கருதக் காரணமாகும். ஆனால், உண்மையில் அவர்கள் மங்கோலிய நாடோடிகளாவர். சுமார் 20,000 ஆண்டுகட்குமுன் பெரிங் ஜலசந்தி வழியே ஆசியாவிலிருந்து புது உலகிற்குக் குடியேறியவர்கள். அவர்கள் ஒருவேளை மலாயிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்ற தென்கடல் தீவினருடன் கலந்திருக்கலாம். எனவே, அவர்களை 'அமெரிந்தியர் என்று அழைப்பதே நியாயம். அதுகூட வரலாறு, பூகோள அடிப்படையிலிருந்து நோக்குங்கால் தவறுகவேபடும்.

தொடக்கத்திலிருந்தே அழைக்கப்பட்டுவந்த உண்மையான இந்தியா, இரண்டு அமெரிக்காவிலிருந்து உலகின் குறுக்கே அமைந்துள்ளது. இந்த நாடு மனித குலத்தின் மிகப் பழைமையான கற்றறிந்த பண்பாடுகளின் பிறப்பிடங்களில் ஒன்றாகும். அதே நாடு 20ஆம் நூற்றாண்டு நடுவில் உலகிலேயே அதிக சனத்தொகையுடைய நாடுகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றது. இங்குச் சுமார் 400,000,000 மக்கள் செழிப்பான பள்ளத்தாக்குகளிலும், கடற்கரைச் சமவெளிகளிலும், பரந்த மலைகளிலும் நெருக்கமாகவும் வெப்பமண்டலக் காடுகளிலும், பனிமூடிய வடக்கேயுள்ள பீடபூமிகளின் ஓரங்களிலும், திபெத்துக்கும் சீனாவுக்கும் குறுக்கேயுள்ள உலகத்திலேயே பெரிய மலைகளிலும் பரவலாகவும் வசித்துவருகிறார்கள். இந்தியர்களை லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 'இந்தியருடன்' ஒப்பிடுங்கால், பொதுவான மனிதத் தன்மையை விட வேறு எந்த ஒற்றுமையும் இல்லை என்பது தெரியவரும். இனம், மொழி, சமயம் இவற்றைப் பொறுத்தமட்டும் இருவருக்குமிடையே பூமிக்கும் வானத்துக்குமிடையே உள்ள வேறுபாட்டைக் காணலாம். எனினும், இந்தியர்களுக்கும் அமெரிந்தியர்களுக்கும் பொதுவான ஒரே ஓர் அம்சம் உண்டு என்றால், அது வறுமையைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

இந்தியக் குடியரசு சுதந்திரக் கருவிலிருந்து பிறந்தது. அது மனிதராகப் படைக்கப்பட்ட அனைவரும் சமம் என்ற அடிப்படையில் செயல்பட்டுவருகிறது. வறுமையை எதிர்த்து அது நடத்தும் போராட்டம் உலகிற்கே ஓர் எடுத்துக்காட்டாகும். சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் தன் உயிரும் உடலுமாகக் கருதி

வரும் இந்நாடு, நகரம், கைத்தொழில், கல்வி முன்னேற்றம் ஆகிய துறைகளில் சோவியத் யூனியன், சீனு போன்ற நாடுகள் எதேச் சாதிகாரக் காப்பரசு முறைகளைக் கையாண்டு அடைந்திருக்கும் வெற்றிகளுக்குச் சமமான அல்லது அதைவிட அதிகமான வெற்றி பெறுமா என்ற சோதனையில் ஈடுபட்டுவருகிறது. இம் முன்னேற்றம் ஒன்றே வறுமையை அகற்ற முடியும், 'சனநாயகத் திட்டத்தில்' இறங்கியிருக்கும் முயற்சியின் விளைவுகள் 1955-ல் அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. எனினும், அதுபற்றி இங்கு ஆராய்தல் இன்றியமையாததாகும்.

இந்திய சனநாயகத்தின் உண்மையான உருவத்தைப்பற்றி அறியவேண்டுமானால், முதன்முதலில் எந்த அடிப்படையில் அந் நாடு சனநாயகத் திட்டத்தில் இறங்கிற்று என்பதை அறிய வேண்டும். இந்தியத் துணைகண்டம் பிரிவினைக்கு ஆளானதைத் தொடர்ந்து 1947-ல் ஏற்பட்ட இந்து—முஸ்லீம் கலகங்களையும், அவற்றில் ஏற்பட்ட பயங்கரப் படுகொலைகளையும் தவிர, மற்றபடி இந்தியா, ஏன், பாகிஸ்தானும்கூட வறுமையையும் கல்லாமை யையும் அடியோடு நீக்கும் முயற்சியில் வழக்கமாக ஏற்படும் அரசியல் விளைவுகளை வெற்றிகரமாகத் தவிர்த்துவிட்டன. வெவ்வேறு பண்பாடு, இனங்களையுடைய சமூகத்தினர்க்கிடையே சண்டை; சச்சரவுகள் ஏற்படுவதைத் தடுப்பான் வேண்டி 1955–56-ல் மொழி யடிப்படையில் இராஜ்ஜியங்களின் (மாகாணங்களின்) எல்லைகள் மீண்டும் வரையறுக்கப்பட்டன. இறுதியில் இந்தியக் கூட்டரசில் 16 அங்க இராஜ்ஜியங்கள் தோன்றின. முன்னுள் சுதேசராஜ்ஜியங் களும் இவற்றுடன் இணைக்கப்பட்டன. பலாத்காரப் பிரயோகமின்றி இதைச் செய்து முடிக்க இயலவில்லை. பம்பாய மாகாணத்தை குஜராத் தியும் மராத்தியும் வழங்கும் இரு இராஜ்ஜியங்களாகப் பிரிக்கவேண்டு மென்று முதலில் முயற்சி எடுக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் (குஜராத்தி உயர்நிலை வகுப்பினரையும் மராத்தி கீழ்நிலை வகுப் பினரையும் கொண்ட) பம்பாய் ஒரு கூட்டரசு மாவட்டமாகக் (federal district) கருதப்பட விருந்தது. ஆனால், இத் திட்டம் மராத்தியரைக் கலகஞ் செய்யத் தூண்டவே, இரு மொழிவாரியினரையும் கொண்ட ஒரே பம்பாய் இராஜ்ஜியத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டது. ஏனைய இடங்களில் மக்களுக்கு ஏற்பட்ட மனமுறிவு, சமூக அமைப்பு நிலைமையைப் பாதிக்காதபடி பார்த்துக்கொள்ளப்பட்டது. ஒருவகை ஆங்கிலம், படித்த சிறுபான்மையினரின் பொது மொழியாக விளங்கிவந்தது. அமைதியுடன் நடக்கச் செய்யும் பிரிட்டிஷ் பழக்க வழக்கமும்; காந்திமகான் போதித்த அஹிம்சையும் உள்நாட்டு அமைதியைப் பேணிக்காக்கப் பெரிதும் பயன்பட்டன. ஐந்து வட மத்திய இராஜ்ஜியங்களும் இந்தி பேசும் இராஜ்ஜியங்களாகும். புதி தாகத் தோன்றிய தென் இராஜ்ஜியங்களான ஆந்திரா (தெலுங்கு),

மதராஸ் (தமிழ்), கர்னாடகம் (கன்னடம்), கேரளம் (மலையாளம்) ஆகியன திராவிட மொழி பேசும் இராஜ்ஜியங்களாகும்.

இந்தக் கூட்டரசில் அதிகாரத்திலிருந்துவரும் காங்கிரஸ் கட்சி, நேரு தலைமையில் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறுகளாய் நிற்கும் பண்டைக் காலப் பழக்கவழக்கங்கள், கொடிய நடத்தைகளை வேரறுப்பதில் முழு வெற்றிபடையாதுபோனலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தது. 1955-ல் மொத்த மாநிலங்கள் பதினைநில் 5 மாநிலங்கள் ஆளில்லா நிலவுடைமை முறையான ஜமீன்தார் முறையை அடியோடு ஒழித்தன. நிலத்தைக் குத்தகைக்கு விடும் முறை பல இடங்களில் பரவியிருந்தபோதிலும், ஏழு விவசாயிகள் குடும்பங்களில் ஒரு குடும்பம் நிலம் இல்லாமலேயே இருந்துவந்தது (1958). அரசாங்கத்திற்குப் பலதவணைகளில் பணம் செலுத்திப் பல விவசாயிகள் நிலவுரிமை (title to land) பெற்றார்கள். அரசாங்கம் முன்னாள் நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு அளித்தது. சமத்துவம், (அரசியல்) ஸ்திர நிலை, செழுமை ஆகிய வற்றைத் தோற்றுவிப்பதில் காந்தி கனவுகண்டுவந்த சிறிய தன்னிறைவான கைத்தொழிலும், குடும்பப் பண்ணைப் பொருளா தாரமும், மேற்கத்திய சமூகப் பாதுகாப்பு சேமநல அரசு, சனநாயக சோசியலிசம் ஆகியவற்றுடன் கலக்கப்பட்டிருக்கின்றன. பெண் களுக்குச் சமத்துவம் அளிப்பது (அதுவல்லாமல் பொருளாதார முன்னேற்றம் அடைவது மிகக் கடினம்) மிகமிகச் சிரமமான செயலாகும். ஏனெனில், பழங்காலந்தொட்டு சமூகத்தில் நிலவிவரும் கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையும் மாற்றியமைத்தால்தான் சமத்துவம் நிலவமுடியும். இதுகாறும் (இந்திய சமுதாயத்தில் நிலவி வந்த) சாதிக் கட்டுப்பாட்டு முறையை (caste system) ஒழித்துக் கட்டி விட்டு, சாதிக்கு அப்பால் வைக்கப்பட்டிருந்த 'கீழ்ச்சாதியினருக்கு' முழுச் சுதந்திரமும் சமத்துவமும் அளிப்பது (இதுவல்லாமல் பொருளாதார முன்னேற்றமடைதல் மிகக் கடினம்) அதைவிடக் கடினமான செயலாகும். எனவே, இதற்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. பொதுமக்கள் கருத்தும் இதை நோக்கித் திருப்பப்பட்டுவருகிறது.

இந் நடவடிக்கைகளனைத்தும் இந்திய அரசியலமைப்பின் கட்டமைப்பிற்குள்தான் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. 1950-ல் அமலுக்கு வந்த இந்திய அரசியலமைப்பு மிகமிக நீளமான தஸ்தாவேஜு ஆகும். இந்தியக் குடியரசு ஒரு கூட்டரசு யூனியன் (federal union) ஆகும். ஆனால், எஞ்சிய அதிகாரங்கள் (residual powers) கனடாவில் இருப்பதுபோல் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறதேயன்றி, யு. எஸ். ஏயில் இருப்பதுபோன்று மாநிலங்கள் (states) கையில் இல்லை. கூட்டரசு (மத்திய) அரசாங்கம் ஒரு

ஜனாதிபதி, உபஜனாதிபதி ஆகியோர் தலைமையில் இயங்கிவருகிறது. இருவருமே ஐந்தாண்டு, பணிக்காலத்திற்காகப் பாராளுமன்றத்தின் இருசபைகளிலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும், மாநிலச் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஜனாதிபதி தலைமை அமைச்சரையும் அவருடைய மற்றக் காபினட் கூட்டாளிகளையும் நியமிக்கிறார். ஆனால், அவர்கள் (காபினட்) பதவியிலிருப்பதற்கு மக்கள் சபையின் பெரும்பாலான உறுப்பினரின் ஆதரவு தேவை. கீழ்ச்சபையில் (மக்கள் சபையில்) 500 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் 5 ஆண்டுக்கு ஒருமுறை சர்வ ஓட்டுரிமையால் (21 வயதுக்கு மேல்பட்ட ஆண் பெண் இருபாலர்களாலும்) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கவுன்ஸில் ஆஃப் ஸ்டேட்ஸ் எனப்படும் மேல் சபையில் 250 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மாநிலச் சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

1951–52-ல் நடைபெற்ற தேர்தல்களில் 8 பெரிய கட்சிகளும், 40 சிறிய கட்சிகளும் பங்கு பெற்றன. அவை எல்லாமே எழுத்தறிவில்லா வாக்காளர்களுக்குப் (illiterate electorate) புரியக்கூடிய சின்னங்களை முன்வைத்துப் போட்டியிட்டன. அதில் காங்கிரஸ்கட்சி 45 சதவீத ஓட்டுப் பெற்று 367 இடங்களைக் கீழ்ச்சபையில் பெற்றது. கம்யூனிஸ்ட்டுகள் 27 இடங்கள்; சோசியலிஸ்ட்டுகள் 12; மக்கள் கம்யூனிச எதிர்ப்புக்கட்சி, 10; கன்சர்வேடிவ் இந்துக்கள் கட்சியான இப்போதைய ஜனசங்கக் கட்சி 3 இடங்களைக் கைப்பற்றின. இரண்டாவது பொதுத் தேர்தல்களில் (பெப்.—மார்ச் 1957) 193,000,000-க்கும் அதிகமான வாக்காளர்கள் தேர்தலில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தினர்கள். இம் முறையும் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே அதிக வெற்றி கிட்டியது. அவர்கள் 50 சதவீதத்திற்கும் அதிகமான ஓட்டுகள் பெற்றனர். சோசியலிஸ்ட்டுகளோ முன்னைவிடக் குறைவான ஓட்டுப் பெற்றனர். கம்யூனிஸ்ட்டுகள் முன்னிலும் அதிக ஓட்டுக்கள் பெற்றனர்—5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு உயர்ந்துவிட்டனர். வறுமைமிக்கதென் மாநிலமான கேரளத்தில் 1957, ஏப். 5ஆம் நாள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இலாங்குளம் மனக்காய் சங்கரன் நம்பூதிரிபாடு என்ற அறிவாளி முதல் அமைச்சரானார். அவர் தூய்மையான பிராமணர் ஆவார். அப்போதைய கம்யூனிஸ்ட் சுலோகம், 'நாங்கள் விசித்திரம் எதுவும் செய்யப் போவதில்லை' என்று முழங்கியபோதிலும், அவர்தாம் விவசாயச் சீர்திருத்தம் கொண்டுவரப்போவதாக உறுதி கூறினர்.

இத் தேர்தல் வெற்றிதோல்விகள், அறைகூவல்களுக்கு இடையில், காங்கிரஸ் கட்சியும் கூட்டரசு அரசாங்கமும் திட்டக் குழு (Planning Commission) ஒன்றை அமைத்தன. அதில் அமைச்சர்

களும் பொருளியலறிஞர்களும் இருந்தனர்; அனைவரும் காபினட் அந்தஸ்துடன் விளங்கினர். திட்டக் கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை (1951-56) வரைந்தது. தானிய, பருத்தி உற்பத்தியைப் பெருக்கல், மின்விசையை அதிகரித்தல், போக்குவரத்து, நீர்ப் பாசனத்தை விரிவாக்கல், மற்றும் நெசவாலை வளர்ச்சி—இவைகளே முதல் திட்டத்தின் குறிக்கோள்களாகும். 4,500,000,000 டாலர் மதிப்புள்ள தொகை இத் திட்டத்தின்கீழ்ச் செலவிட முடிவு செய்யப்பட்டது. இடப்போக்குவரத்து (transportation), செய்தியறிவிப்பு (communication), நீர்ப்பாசனம், மின்விசை ஆகிய துறைகளில் இத் தொகையில் பாதிக்குமேலும், தனியார் முதலீடுகளில் 1,250,000,000 டாலரும் செலவிட முடிவு செய்யப்பட்டது. சுருங்கச் சொல்லின், தேசிய வருவாயில் 5 அல்லது 6 சதவீதம் (1951-ல் அது 20 பில்லியன் டாலர் என்று மதிப்பிடப்பட்டது) திட்டத்தின்கீழ்ச் செலவிடவிருந்தது. 1956-ல் தேசிய வருவாய் இதைவிடச் சற்று கூடும் (11 சதவீதம்) என்று எதிர்பார்க்கப்பட்டது. 1956-ல் எதிர் பார்க்கப்பட்ட உணவு உற்பத்தி (61·6 மில்லியன் டாலர்), 1954-லிலேயே (65·4 மில்லியன் டாலர்) அதிகமாகிவிட்டது. 1950-ல் மொத்த உணவு உற்பத்தி 40 சதவீதத்திற்கு உயர்ந்தது. ஆனால், மின்சக்தி உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 42 சதவீதமும், எஃகு உற்பத்தி 15 சதவீதத்திற்குக் குறைவாகவும் இருந்தது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முதல் திட்டத்தைவிட ஆர்வ மிக்கது. அது தேசியக் தலா வருமானத்தில் 18 சதவீத உயர்வை எதிர்பார்த்தது. 11·7 பில்லியன் டாலர் முதலீடு செய்ய உத்தேசிக் கப்பட்டது. அதில் பாதித்தொகை போக்குவரத்து, செய்தியறிவிப்பு, கல்வி, மின்சக்தி ஆகிய துறைகளிலும்; நான்கில் ஒரு பாகம் தொழில்துறையிலும்; ஆறில் ஒரு பாகம் விவசாயத்திலும் குடிசைத் தொழிலிலும் செலவு செய்ய முடிவு செய்யப்பட்டது. பொருளா தாரத்தின் இவ்வங்கங்களில் (துறைகளில்) மட்டும் தேசிய வருமான உயர்வில் பாதி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், திட்ட இறுதியில் தானிய உற்பத்தி 15 சதவீதமும், பருத்தி 31 சத வீதமும், சணல் 25 சதவீதமும், கரும்பு 28 சதவீதமும், எண்ணெய் வித்துகள் 27 சதவீதமுமே உயரும் என்று கருதப்பட்டது.[4]

1957-ல் திட்டம் தீட்டுவோர் கடுமையான சிரமங்களை எதிர் நோக்க வேண்டியதாயிற்று. வறுமையை அகற்றிச் செழுமை யடையத் தீட்டப்பட்ட முதல் திட்டம் எதிர்பார்த்த பலனை அளிக் காதுபோகவே, பொதுமக்கள் மன முறிவும் அதிருப்தியும் அடைந் தனர். அதனாலேயே இரண்டாவது திட்டம் சற்று ஆர்வமிக்கதாகத்

[4] இதுபற்றிய முழு விவரத்திற்குத் 'தூரக் கிழக்கு' என்ற பிரட் ஹிரின் என்பவரின் நூலைப் பார்க்கவும்.

தீட்டப்பட்டது. 'சோஷியலிசத்' திட்டத்தின்கீழ்ச் சருவாதிகார முறையைக் கையாண்டுவந்த கம்யூனிஸ்ட் சீனு (இந்தியாவைவிட) அதிக முன்னேற்றம் அடைந்துவருவதுபோல் தோன்றியதும் இரண்டாவது திட்டத்தின் ஆர்வத்துக்கு ஒரு காரணமாகும். எனினும், இரண்டாம் திட்டத்தின் குறிக்கோள்கள் அடையமுடியாதவை என்று கூறிவிடமுடியாது. ஏனெனில், அக் குறிக்கோள்கள் அனைத்தையும் அடைந்தால்கூட, இந்திய தேசியத் தலா வருமானம் 1949-ல் 57 டாலராகவே இருக்கும் என்று ஐ. நா. இட்ட மதிப்பின்படி, 1961-ல் 69·5 டாலராகவே இருந்திருக்கும். ஆனால், இக் குறிக்கோள்கள்கூட சந்தேகத்திற்கு இடமாயின. வெளி நாட்டு உதவி (திட்டத்தில் காட்டியிருப்பதைவிட) இருமடங்காகும் என்பது அவற்றில் ஒன்று. யு. எஸ். பொருளாதார உதவித் தொகைகள், மற்றும் 100,000,000 டாலர் மதிப்புள்ள ரஷ்யா அமைத்துத்தரும் இந்திய எஃகு தொழிற்சாலை உட்பட சோவியத் கடன் தொகைகளும் கையில் இருந்தும், 1957-ல் வெளிநாட்டு உதவி குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும், விலைவாசிகள் அப்படியே நிலையாக இருக்குமென்றும், முதலீட்டுக்காகக் கைக்கு வரும் சேமிப்புத் தொகை அதிகரிக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உண்மையில் உலக விலைவாசிகள் (விஷம்போல்) ஏறிக் கொண்டே சென்றன. அதன் விளைவாக இந்தியத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுடன் 2,000,000,000 டாலர் அதிகமாயிற்று. இந்தியத் தனியார் முதலீடு குறைந்துபோயிற்று. நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி 1957, செப்டம்பர் மாதம் யு. எஸ். விஜயம் செய்தார். அடுத்த 18 மாதங்களில் 500,000,000 டாலரும், மொத்தத்தில் 2,000,000 டாலரும் (உதவியாகப்),பெறும் நோக்கத்தில் அவர் சென்றார். ஆனால், 1958ஆம் ஆண்டுத் தொடக்கத்திலேயே அவரது அமைச்சரவையின் ஊழல்கள் அம்பலத்துக்கு வரவும், அதையொட்டி அவர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்ய எதிர்பார்க்கப்பட்ட யு.எஸ். உதவி அப்படியே நின்றுவிட்டது.

இந் நிலையில், வறுமையில் சிக்குண்டு துயரடைந்துவரும் ஒரு சமுதாயம், 'சனநாயகத் திட்டத்தைக்' கடைப்பிடித்து அதன் மூலம் பயன்தரும் தொழில் வளர்ச்சியைத் துவக்க முடியுமா? அல்லது இவற்றை அடைய சனநாயகமற்ற முறையில் கட்டாயச் சேமிப்பு, கட்டாயக் கூட்டுப் பண்ணை முறை ஆகிய இவற்றைக் கடைப்பிடிப்பதா என்ற புதிர், திட்டம் தீட்டியோரை எதிர்நோக்கிற்று. மனித குலத்திலேயே ஏழில் ஒரு பாக மக்கள் இந்தியாவில் வாழ்ந்துவருகிறார்கள். சனநாயக வழிகளைக் கடைப்பிடித்து வறுமையைத் துடைக்க முயன்றுவரும் ஒரே பெரிய ஜனநாயகம் உலகிலேயே இந்தியா ஒன்றுதான். எனவே, இந்திய வாழ்வுமட்டு

மல்லாமல் மனித குல வாழ்வே அதன் முயற்சியைப் பொறுத்திருக்கிறது என்ருல் அது மிகையாகாது.

ஆஃப்ரிக்கா : பயங்கரவாதிகள் : ஆஃப்ரிக்காவிலும் (உலகின் ஏனைய பகுதிகளேப்போன்று பல்லாண்டுக் காலம்) வறுமை தலேவிரித்தாடிவருகிறது. இங்குள்ள அரசியல் சூழ்நிலேயை இந்த இருண்ட கண்டத்திலுள்ள நாடுகளில், குறிப்பாக இரண்டை எடுத்துக்காட்டாகக்கொண்டு ஆராய்வோம். அல்ஜீரியாவில் 1,250,000 கலோன்ஸ் எனப்படும் வெள்ளே நிறம் படைத்த ஃபிரெஞ்சுக்காரர்கள் வசித்துவருகிருர்கள். அங்குள்ள சுதேச வாசிகளின் எண்ணிக்கை 8,000,000. இவர்களில் பெரும்பாலோர் அரபியரும் பெர்பெர்களும் ஆவர். தீக்கோல், கொள்ளே, சித்திரவதை, கொலே, படுகொலே — ஆகிய இவையே இவ்விருதரப்பினர்க்குமிடையே நிலவிவந்தன. தென் ஆஃப்ரிக்காவில் 3,000,000 டச்சுக்காரர்களும், ஆங்கிலேயரும், 300,000 இந்தியர்களும், 'வெள்ளே நிறமில்லாத, ஆசிய நாட்டவர் 1,000,000 பேர்களும், 9,000,000 சுதேச நீக்கிரோக்களும் வாழ்ந்துவருகிருர்கள். இங்குக் குடியேறிவந்த வெள்ளேயர் சிறுபான்மையாக இருந்தபோதிலும், பெரும்பான்மையாக இருக்கும் நீக்கிரோக்களேக் கீழினத்தவர் எனக் கருதி, அவர்களுக்கு எதிராகப் பல அநியாயங்கள் புரிந்துவருகிருர்கள். இவ்வநீதியும் இன வெறுப்புக் கொள்கையும் ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் பலாத்காரத்தைத் தோற்றுவிக்கப்போவது நிச்சயம்.

வடக்கிலிருந்து தெற்கே, அல்ஜியர்ஸ்க்கும் கேப் டவுனுக்கும் இடையே, மேற்கிலிருந்து கிழக்கே டாக்காருக்கும் ஏடன் வளேகுடாவுக்கும் இடையே சுமார் 200,000,000 மக்கள் வாழ்ந்துவருகிருர்கள். அவர்கள் அனேவரும் (வெள்ளே நிறம் படைத்த நிலச்சுவான்தாரிகள், வியாபாரிகள், குடியேற்ற நாட்டு அதிகாரிகள், ஒருசில சுதேச ஆட்சியாளர்—இவர்கள் நீங்கலாக) சொல்லொணு வறுமையில் வாழ்ந்துவருகிருர்கள். அவர்களில் பெரும்பாலோர்க்கு எந்த மொழியிலும் எழுதப்படிக்கத் தெரியாது. அவர்களுடைய பண்பாடு எழுதப்படிக்கத் தெரியாத காலத்தைச் சேர்ந்தது. வெள்ளே நாகரிகத்துடன் ஏற்பட்ட தொடர்பால் அதற்குக் கேடு விளேந்ததுதான் மிச்சம். இக் கண்டத்திலுள்ள ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு, அது படும் பாட்டையும், அடைந்துவரும் துன்பத்தையும், அங்குள்ளோர் கொண்டிருக்கும் நம்பிக்கைகளேயும், எதிர்கால வாய்ப்புகளேயும்பற்றி இங்கு ஆராய்தல் முடியாத காரியம். எனவே, ஒருசில பிராந்தியங்களேமட்டும் ஆராய்வோம்.

எங்குக் குடியேறிய வெள்ளேயர் குறைவாகவும், அந் நாட்டு மக்களின் சுயஆட்சி அனுபவம் கணிசமாகவும் இருக்கிறதோ, அங்கு அந்நியர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் திரும்புதலே எவராலும்

தவிர்க்க முடியாது. இவ்வாறே குடியேற்ற நாடாக விளங்கிவந்த கோல்டு கோஸ்ட் இன்று காணா என்ற சுதந்திர நாடாகத் திகழ்ந்து வருகிறது. குவாமி அங்க்ரூமா என்பவர் (ஆக்ஸ்ஃபர்டிலுள்ள லண்டன் சர்வகலாசாலையிலும் பென்சில்வேனியா சர்வகலாச்சாலையிலும் பயின்றவர்) ஆக்ராவிலுள்ள ஜேம்ஸ் டவுன் சிறைச்சாலையிலிருந்து 1951 பெப்ரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டார். உடனே இதுகாறும் ஆஃப்ரிக்கக் குடியேற்ற நாடாக விளங்கிவந்த கோல்டு கோஸ்ட்டின் முதல் ஆஃப்ரிக்கத் தலைமை அமைச்சரானார். இந்த நாட்டில் 5,000,000 சுதேசவாசிகள் வாழ்ந்துவந்தனர். உலகிலேயே மூன்றில் ஒரு பகுதி கொக்கோ உற்பத்தி செய்யும் இந்த நாடு 1957, மார்ச் 6ஆம் நாள் காணா என்ற புதுப் பெயரில் சுதந்திர நாடாயிற்று. அச் சுதந்திர விழாவில் பல நாட்டுத் தூதர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். இதற்கிடையில் அதே சமயம் கிழக்கேயுள்ள, உலகிலேயே அதிக நீக்ரோ மக்கள் வாழ்ந்துவரும் நாடான நைஜீரியாவுக்கு இறுதியில் சுதந்திரம் அளிக்கும் நோக்கத்தில் ஒயிட் ஹால் (பிரிட்டிஷ் அரசாங்கம்), சுய ஆட்சியில் அந்த நாட்டு மக்களுக்குள்ள அனுபவத்தை அதிகரிக்க முயன்றுவந்தது. ஃபிரான்ஸ், பெல்ஜியம், போர்த்துகல் —இவை ஒவ்வொன்றுக்கும் மத்திய ஆஃப்ரிக்காவில் நிறைய காலனிகள் இருக்கத்தான் செய்தன. ஆனால், இந்த நாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் சுதேசவாசிகட்கு சுய ஆட்சி வழங்கும் திசையில் நடவடிக்கை எடுக்கத் தயங்கினர்கள். இந்த நாட்டு மக்கள் (சுதேசவாசிகள்) வேண்டுமென்றே அறியாமையில் வைக்கப்பட்டிருந்தார்கள். தல ஆட்சியில் (local administration) கூட அவர்களுக்குப் பங்கு அளிக்கப்படவில்லை. அங்கோலா, மொசாம்பிக் ஆகிய காலனிகளைப் பார்க்கப்போனால், அதைவிட அநியாயங்களும் அட்டூழியங்களும் நிலவிவந்தது புலனாகும். ஏனெனில், இங்கு போர்த்துகீசிய அதிகாரிகள் சுதேசவாசிகள்மீது கட்டாய உழைப்புத் திட்டத்தைப் புகுத்திவந்தார்கள். அதுமட்டுமன்று; இக் காலனிகளில் மேன்மேலும் வெள்ளையரைக் கூட்டிவந்து குடிவைக்கும் கரவு நோக்கத்தில் அமைதியை வளர்ப்பதற்கான தீய திட்டங்கள் தீட்டிவந்தார்கள்.

பிரிட்டிஷ் கிழக்கு ஆஃப்ரிக்காவில் நிலவிவரும் சூழ்நிலையோ எதிர்காலம் பற்றித் திட்டவட்டமாகக் கூறுவதற்கு இடந்தரவில்லை. உகாண்டாவில் மொத்தம் 5,000,000 சுதேசவாசிகள் வாழ்ந்துவருகிறார்கள். இந்த நாடு 12 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் தல சுய ஆட்சி நடந்துவருகிறது. ஒவ்வொரு மாவட்ட மக்களும் தத்தம் மாவட்டத்தின்மீதுதான் பாசம் பற்றுக் கொண்டிருக்கிறார்களே தவிர, தங்கள் நாடு சுதந்திரம் அடைய வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையையும் நாட்டுப் பற்றையும் அவர்களிடம் காணோம். 1952 முதல் உகாண்டா தேசியக் காங்கிரஸ்

நாட்டின் முழுச் சுதந்திரத்திற்காக எவ்வளவோ பாடுபட்டும், மக்கள் இன்னும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தாரில்லை. உகாண்டாவின் மிகப் பெரிய மாவட்டம் புகாண்டா. இது ஒரு தனி அரசு என்றுதான் சொல்லவேண்டும். இங்கு ஆட்சி செய்துவந்த கபாக்கா என்ற மன்னர் லண்டனுக்குத் துரத்தப்பட்டார். பின்னர் 1955, அக்டோபரில் அவர் மீண்டும் தன் நாடு திரும்பி, பொதுமக்களின் ஆட்சேபம், வேண்டுகோள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், அரசியலமைப்பு ஆட்சியாளராக (constitutional ruler) ஆனார். சிக்கலான கூட்டரசு ஆட்சிமுறை, இக் காப்பரசில் தேசிய ஒற்றுமையை வளர்த்து, குழப்பமின்றி, பலாத்காரமின்றி அது சுதந்திரம் பெறும்படி செய்ய முடியுமா, முடியாதா என்ற வினவுக்கு எதிர்காலம் ஒன்றுலேயே பதிலிறுக்க முடியும்.[5]

அண்டை நாடான கென்யாவில் 30,000 வெள்ளை நிறத்தவரும், 150,000 இந்துக்களும் பாகிஸ்தானியரும், 6,000,000 சுதேசவாசிகளும் வாழ்ந்துவருகிறார்கள். சுதேச மக்களில் கிக்குயு கூட்டமே (tribe) மிகப் பெரிதாகும். இக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு மில்லியன் மக்கள் இருக்கிறார்கள். இக் கூட்டத்தவர் கையில் இருந்த மிகச் செழிப்பான நிலங்களை வெள்ளையரில் மூன்றில் ஒரு பகுதியினர் பிடுங்கிக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் நிலத்தைப் பிடுங்கிக் கொண்டதோடல்லாமல், அவர்களைச் செழிப்பற்ற நிலங்களில் கூலியாட்களாக அமர்த்தி வேலையளித்துவந்தார்கள். அவர்கள் ரொக்கம் பயிர் (cash crops) விளைச்சல் செய்யக்கூடாதென்றும் தடுத்துவந்தார்கள். ரொக்கப் பயிர் விளைச்சல் செய்துவிட்டால், பின்னர் அவர்கள் 'வெள்ளையர் மலைப்பிரதேசத்தில்' பெரிய பெரிய தோட்டங்கள் வைத்திருக்கும் ஐரோப்பியருடன் போட்டிபோடப் புறப்பட்டு விடுவார்களல்லவா ? இதனால் கடுமையான விளைவுகள் ஏற்பட லாயின. முதலில் ஜோமோ கென்யாட்டா தலைமையில் இயங்கி வந்த இக் கிக்குயு கூட்டத்தினர் எப்படியாவது தாங்கள் இழந்த நிலங்களை மீட்கவும், கென்யாவிலிருந்து வெள்ளையரைத் துரத்தவும் முடிவு செய்து சமூகப் புரட்சி செய்யலானார்கள். அதனால் அவர்கள் பலாத்காரத்தைப் பிரயோகிக்கவும் தயங்கவில்லை. ஆனால், அம் முயற்சி படுதோல்வியடைய நேரிட்டது. இக் கலகக்காரர்கள் இரகசிய சங்கம் ஒன்றை அமைத்தார்கள். அதன் பெயர் மாவ்மாவ் எனப்படும். பயங்கரத்துவம்—அடக்குமுறை—இதுவே அவர்கள் கருவி.

1952-க்கும், அதாவது, 'மாவ்மாவ் நெருக்கடி' அறிவிக்கப்பட்டதற்கும், 1956, அக்டோபர்—நவம்பருக்கும், அதாவது, மாவ்மாவின் தலைவர் தீடான் கிமாத்தி பிடிபட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டு பிரிட்டிஷ்

[5] டேவிட் இ. ஆப்டர் எழுதிய 'உகாண்டா அரசியல் வளர்ச்சி' என்ற கட்டுரையை 'இன்றைய வரலாறு' என்ற நூலில் (மே, 1956, பக்கம் 269—278) பார்க்கவும்.

இராணுவ நடவடிக்கைகள் முடிந்ததற்கும் இடையே, மனிதனின் பேய்த்தன்மையே கென்யாவில் அரசனுக ஆட்சி செய்துவந்தது. யயங்கரவாதிகள் நூற்றுக்கணக்கான ஐரோப்பியர் ஆசியர்களையும், 1,500 ஆப்ரிக்கரையும், 600 'பாதுகாப்புப் படையினரையும்' கொன்று குவித்தனர். பாதுகாப்புப் படையினர் பதிலுக்குப் பதில் 70,000 சுதேசவாசிகளை ஆடுமாடுகளைப்போல் சிறைகளிலும், மற்றக் குறிப்பிட்ட இடங்களிலும் தள்ளினர்; 700 பேர்களைக் கழுமரமேற்றினர்; 8,000 பேர்களைப் போர்க்களத்தில் கொன்று குவித்தனர். இருதரப்பினரும் சந்தேகப்பட்டவர்களைக் கொலைக்கும், கொள்ளைக்கும், சித்திரவதைக்கும் ஆளாக்கித் தீர்த்துக்கட்டினர். இத் துயர் நாட்டில் சுதேசவாசிகட்குக் குறுகிய வாக்குரிமையளித்துங்கூட, 1957–58-ல் அமைதியை நிலைநாட்ட வழி ஏற்படவில்லை. ஏனெனில், இங்குதான் வெள்ளையர் கறுப்பர்களை (சுதேசவாசிகளை) எள்ளாக ஆட்டி எண்ணெயாகப் பிழிந்து எடுக்கிறார்களே! கறுப்பருக்கோ நாடு முழுவதற்கும் கல்வி பயில ஒரே ஒரு பள்ளியே நிறுவப்பட்டுள்ளது; மேல்படிப்பிற்கோ அதுதானுமில்லை.[6]

வடக்கே 1950–60-ல் பெரிய தீப்பிடித்துக் (பலாத்காரம்) கொள்வதற்கான புகை மூளத் தொடங்கியது. வட ஆப்ரிக்கத் தேசியவாதிகள் ஐ.நா.விற்கு எதிராகச் சென்று தென்மேற்கு ஆப்ரிக்காவைத் தங்கள் நாட்டுடன் வல்லந்தமாக இணைத்துக்கொண்டது பற்றி பச்சுளைாந்து, ரொடீசியா ஆகியவைகளின்மீதும் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்ப முனைந்தார்கள். அத்துடனல்லாமல், அவர்கள் கடைப்பிடித்துவந்த இனவெறுப்புக் கொள்கையையும் (apartheid) இந் நாடுகளில் பரப்பப் பார்த்தார்கள். இதனைக் கண்ணுற்ற பிரிட்டிஷ் கொள்கை வகுப்பாளர் அவ்வாசையில் தீவைக்க முடிவு செய்தனர். அந் நோக்கத்தில், சுதேசவாசிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், தென், வட ரொடீசியாவையும் நியாசாலாந்தையும் கொண்ட மத்திய ஆப்ரிக்கக் கூட்டரசை 1953, ஆகஸ்டு முதல் நாளன்று ஏற்படுத்தினர்கள். அக் கூட்டரசு பிரிட்டிஷ் மகாராணியார் 2ஆம் எலிசபெத் கையெழுத்திட்ட ஆர்டர்—இன்—கவுன்சிலால் எழுப்பப்பட்டது. எனினும், தென் ஆப்ரிக்காவில்போல் இங்கும் இன வெறுப்பும் அநீதியும் தலைவிரித்தாடின. 300,000-க்கும் குறைவான வெள்ளையர் 7,000,000 சுதேசவாசிகளைத் தங்களுக்கு அடிமையாக்கிக் கொண்டு ஆண்டுவந்தார்கள். சுதேசவாசிகளில் ஒருசிலருக்கே வாக்குரிமையளிக்கப்பட்டது. 1961-ல் சாம்பசி நதியில் கட்டி முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படும் கரீபா அணைக்கட்டு நிச்சயமாகப் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணைபுரியும்; மக்களின் வாழ்க்

[6] ஜான் வி. முர்ராவின் 'கென்யாவில் நெருக்கடி' என்ற கட்டுரையை இதே நூலில் (பக்கம் 279—284) பார்க்கவும்.

கைத் தரத்தை உயர்த்தும். ஆனால், அதற்கிடையில் இக் கூட்டரசின் பொருளாதாரம், வட ரொடீசிய செம்புத் தொழிற்சாலையின் கட்டுப் பாட்டிலல்லவா இருந்துவருகிறது! இத் தொழிற்சாலையில் பாதி காலஞ்சென்ற ஒரு வட ஆஃப்ரிக்கத் தொழிலதிபரான சர் ஏர்னஸ்ட் ஓப்பன்ஹீமரின் ஆங்கிலோ—அமெரிக்கக் கார்ப்பரேஷன் கையிலும், பாதி ஓர் அமெரிக்க உலோகக் கம்பெனி கையிலும் இருந்துவருகிறது. செப்புச் சுரங்கங்களில் வேலைசெய்பவர்களைப் பொறுத்தமட்டும் 1950-ன் தொடக்கத்தில் ஆண்டு ஒன்றுக்கு வெள்ளையர் சராசரி வீதத்தில் 6,000 டாலரும், ஆப்பிரிக்கர்கள் 400 டாலருக்கும் குறை வாகவும் சம்பாதித்து வந்தார்கள். இந்த அநீதியைப் பொறுக்க முடியாத ஆஃப்ரிக்க வேலையாட்கள், 1955-ல், இரண்டு மாதம் தங்கள் ஊதியம் உயரவேண்டுமென்று வேலைநிறுத்தம் செய்தனர். ஆனால், வேலை நிறுத்தத்திற்குப் பின்னர் பார்க்குமிடத்து அவர்கள் நிலைமை முன்னைவிட மோசமாகிவிட்டது. கட்டடக்கலை, சுகாதாரச் சேவைகள், பள்ளிகள் ஆகியவற்றில் வெள்ளையருக்கு உயர்ந்த சம்பளமும் கறுப் பர்களுக்குக் குறைந்த சம்பளமும் அளிக்கப்பட்டுவருகிறது. தல சுய-ஆட்சி வெகுதூரத்தில் இருக்கிறது. ஏனெனில், அது செல் வாக்குள்ள ஐரோப்பியரின் தனியுரிமைகளைப் பாதிக்கும் என்று கருதப்பட்டுவருகிறது.

இந்த நீதியற்ற, கொடிய இனவெறுப்புக் கொள்கை தென் ஆஃப்ரிக்க யூனியனில் குடிகொண்டுவிட்டது; அங்குதான் அது உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது. இங்கு 'சுதந்திரம் படைத்த மக்கள்,' 'சுதந்திரமான' டொமினியனில் வெள்ளையருக்குமட்டும் சுதந்திரம் அளித்தும், பெரும்பான்மையிலிருக்கும் சுதேசவாசிகட்கு எல்லா உரிமைகளையும் சுதந்திரத்தையும் தர மறுத்தும், அது 'சுதந்திரமுடன்' திகழ்ந்துவருகிறது. தன் நாட்டில் சிறுபான்மை யாக இருக்கும் நீக்ரோக்கள் குறைந்த அளவு சிவில் உரிமைகள் (civil rights), சமவாய்ப்புகளையாவது அனுபவிக்க வகைசெய்ய வேண்டும் என்ற சீரிய நோக்கில், யு.எஸ்.ஏ. இனவெறுப்புக் கொள்கையையும் பாரபட்சத்தையும் எதிர்த்துப் போராடியது. ஆனால், தென் ஆஃப்ரிக்காவோ அதே ஊக்கத்துடன் பாரபட்சத்தையும் இன வெறுப்புக் கொள்கையையும், கறுப்பர்களுக்குச் சாதகமாக அடிக்கும் அலையில் எப்படியாவது வெள்ளையரின் தனியுரிமைகளைக் காப்பாற்றி விடவேண்டும் என்ற கீழ்நோக்கத்தில் ஆதரித்துவருகிறது.

பிரெட்டோரியாவில் தலைமை அமைச்சர் டேனியல் எஃப். மலானின் கட்சியான ஆஃப்ரிக்கானிர் தேசியக் கட்சியின் நம்பர் 2 ஆவது தலைவர் ஜொஹனஸ் ஜி. ஸ்டிரைடம் தன்னுடைய 'வெள்ளை யர் ஆதிக்கக்' கொள்கைகளுக்கு பிரெஞ்சு, பெல்ஜிய, போர்த்துகீசிய, பிரிட்டிஷ் ஆதரவை 1954 ஆகஸ்டு 17ஆம் நாள் வேண்டினர். அவர்

கூறினார்: 'வெள்ளையர் ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும்; இல்லாவிடில், அவர்களும் நாமும் (இவ்வுலகை விட்டும்) சேர்ந்து மறைந்து விடுவோம். ஆசியா, ஆஃப்ரிக்காவெங்கும் நிலவிவரும் சூழ்நிலைகளைக் கண்டு அஞ்சாத வெள்ளையன் ஒரு பொறுப்பற்ற முட்டாளன்றி வேறில்லை'. 1954, நவம்பர் 30ஆம் நாள் மலானின் இடத்தில் ஸ்டிரைடம் தலைமை அமைச்சராக அமர்ந்தார். ஜே.ஜி.என். ஸ்ட்ராஸ் தலைமையில் இயங்கிவந்த எதிர்க்கட்சியான ஐக்கியக் கட்சியும், இன வெறுப்புக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. பல்லின சமத்துவ சனநாயகத்தை ஆதரித்துவந்த லிபரல் கட்சிக்கு ஆஃப்ரிக்கானீரிடமிருந்தோ, அன்றி வெள்ளையரில் ஆங்கிலேயரிடமிருந்தோ 1950–60-ல் ஆன பொதுமக்கள் ஆதரவு கிடைக்கவில்லை.

தென் ஆஃப்ரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இன வெறுப்புக் கொள்கையின் பொருள் (அர்த்தம்) தென் அமெரிக்காவிலுள்ள மிகத் தீவிரமான இனவெறுப்பாளரைக்கூட வியப்பில் ஆழ்த்திவிடும் என்பதில் ஐயமில்லை. சமீபகாலம்வரை இவ் 'வெள்ளையர் ஆதிக்கக்' கோட்டைகள் இரண்டிலும் வெள்ளையர், கறுப்பருக்கென்று தனித்தனி ரயில் வண்டிகள், பஸ்கள், பள்ளிகள், குடியிருப்புகள் முதலியவை இருந்துவந்தன. இரண்டிலும் நீக்ரோக்களுக்கு வாக்குரிமையளிக்கப்படவில்லை. ஆனால், இதைவிட அதிகமான அநீதியும் கொடுமையும் இழைக்கப்படவிருந்தது. 1913-ல் தென் ஆஃப்ரிக்காவில் ஆஃப்ரிக்கர்கள் தனிப்பட்ட 'ரிசர்வில்' (இருப்பில்) வைக்கப்பட்டிருந்த நிலங்களை மட்டுமே தம்மிடம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அது ஒன்றும் அதிகமில்லை; தென் ஆஃப்ரிக்க யூனியனின் நிலப்பரப்பில் அது 12·5 சதவீதமே இருந்தது. 1936-லேயே குடியுரிமைப் பட்டியலிலிருந்து ஆஃப்ரிக்கர்கள் நீக்கப்பட்டார்கள். மேலும், அவர்கள் பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் வெள்ளையர் சிலரைமட்டுமே தேர்ந்தெடுத்து அனுப்ப அனுமதிக்கப்பட்டார்கள். காப்புப்படையில் இல்லா ஒவ்வோர் ஆஃப்ரிக்கனும் தான் ஒரு நகருக்குச் சென்றாலோ அல்லது வெள்ளையருக்குச் சொந்தமான பண்ணைக்குச் சென்றாலோ அல்லது வேலை தேடிச் சென்றாலோ அல்லது ஊர்ப்புறத்தில் 'தங்கி' வாழச் சென்றாலோ அல்லது ஊரடங்கிற்குப் (curfew) பின்னர் இரவில் வெளியே செல்ல நினைத்தாலோ, அவன் தன்னுடன் அனுமதிச் சீட்டு (pass) ஒன்றையும் எடுத்துக்கொண்டு செல்லவேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகளை மற்ற நாடுகளில் காண்பதரிது. மேலும், அவை மிகமிகக் கடுமையான கட்டுப்பாடுகள் ஆகும். அதனாலன்றோ இவற்றை 'மீறி நடந்ததற்காக' ஆண்டுதோறும் மில்லியன் சுதேச வாசிகள் கைது செய்யப்பட்டு 20,000 பேர் சிறையில் தள்ளப்பட்டு வந்தார்கள்?

1950ஆம் ஆண்டுக் கூட்டு இடங்கள் சட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான சுதேசவாசிகள் ஜோஹன்ஸ்பர்க்கிலும் மற்ற இடங்களிலும் அவரவர் இல்லத்திலிருந்து கிளப்பப்பட்டார்கள். 1950ஆம் ஆண்டு பாண்ட்டு கல்விச் சட்டத்தின்கீழ், ஆஃப்ரிக்கர்கள் திறனற்ற வேலையாட்களாகவும், பண்ணை ஊழியர்களாகவும், வீட்டு வேலைக்காரர்களாகவுமே பயிற்சி பெறலாம். முறையீட்டு நீதிமன்றங்கள் (Appeal Courts), வாக்காளர் தனிப் பிரதிநிதித்துவச் சட்டம் அரசியலமைப்புக்கு விரோதமானது என்று தீர்ப்பு அளித்தன. ஏனெனில், அது அரசியலமைப்பின்கீழ்ப் பாராளுமன்றத்தின் இரு சபையின் மூன்றில் இரண்டு பகுதியினரால் நிறைவேற்றப்படவேண்டும். அதனால் தேசியவாதிகள் 1952–ல் இரு சபைகளின் உறுப்பினர்களையும் அதிகமாக்கி, வேண்டிய பெரும்பான்மையைப் பெற்றனர். 'கம்யூனிச ஒழிப்புச் சட்டத்தின் (1950)'கீழ் ஆஃப்ரிக்க தேசியக் காங்கிரஸ், மற்றும் தென் ஆஃப்ரிக்க இந்தியக் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் நடவடிக்கைகள் எடுக்காதபடி தடுக்கப்பட்டார்கள். அவர்கள் 'இராஜதுரோகிகள்' என்று கருதப்பட்டுவந்தார்கள். இக் கொடுமையைப் பொறுக்கமுடியாமல் ஆஃப்ரிக்கரும், இந்தியரும், வெள்ளையரல்லாதவரும் அமைதியான முறையில் இதுகாறும் அமலில் இருந்த சட்டங்களை எதிர்ப்பதில் ஒன்றுபட்டார்கள். இப் போராட்டம் ஆறு மாதங்கள் நடைபெற்றன. 1953-ல் பொதுப் பாதுகாப்புச் சட்டமும் குற்றச் சட்டத் திருத்தச் சட்டமும் கொண்டு வரப்பட்டன. இவை சிவில் உரிமைகளை நிறுத்திவைக்க வகை செய்தன. மேலும், இவற்றின்கீழ் 9,000 தொண்டர்களைக் கைது செய்யவும், 5 வருடத்திற்கும் மேலான சிறைத்தண்டனையளிக்கவும், 300 பவுன் தண்டம் கொடுக்குமாறு செய்யவும், 15 கசையடி கொடுக்கவும் முடிந்தது.

இந்தியாவும், மற்ற ஆசிய நாடுகளும், ஐ.நா.வும் கடுமையாகத் தாக்கிப் பேசியும், தென்னாஃப்ரிக்காவின் பயங்கொள்ளி வெள்ளையாட்சியாளர் இக் கொள்கையையே கடைப்பிடித்துவருகின்றனர். பிரிட்டனும் அமெரிக்காவும் வேறு கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு வேண்டியும், உலகமே அதைப் பழித்தும், அந் நாடு ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளாமல், பிடிவாதத்துடன் அதே கொள்கையையே கடைப்பிடித்துவருகிறது. கம்யூனிஸ்ட் நாடுகள் இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திவருகிறார்கள். தென் ஆஃப்ரிக்காவில் வாழ்ந்துவரும் ஆஃப்ரிக்கர்கள் தங்களின் துயரைத் துடைக்க இதுவரை பலாத்காரத்திலோ, அன்றிப் புரட்சியிலோ இறங்கினதில்லை. ஆனால், தென் ஆஃப்ரிக்க ஐரோப்பியர், தென் ஆஃப்ரிக்க ஆஃப்ரிக்கரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இதைவிட நல்ல வழியைக் காணுவிடில், விரைவிலோ அன்றிச் சற்றுப் பொறுத்தோ பலாத்காரம் தலைவிரித்தாடுவது நிச்சயம். அதன் விளைவுகள் மிகக் கடுமை

யானவாகவும் கணக்கிடமுடியாதனவாகவும் இருக்கும். நடக்க விருக்கும் இப் பயங்கரச் செயல்கள் ஆஃப்ரிக்கரின் வாழ்க்கைத்தரங் களை உயர்த்தப்போவதில்லை. வெள்ளையர்கள் தாங்கள் நம்புவதாகச் சொல்லும் கிருஸ்துவ, ஜனநாயக இரக்கம், சமத்துவம் ஆகிய கோட் பாடுகளின்படி நடந்தாலொழிய, ஆஃப்ரிக்கர் தம் இரத்தம் சிந்தி யாவது வெள்ளையர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவர் என்று ஐயந்திரிபறக் கூறலாம்.

4. புது நடுநிலை நாடுகள்

'வெளிநாடுகளுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக் கொள்வதுடன் நாம் நின்றுகொள்ள வேண்டும். கூடிய மட்டும் அரசியல் தொடர்பைக் குறைக்கப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே நாம் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தங்களை முற்றிலும் நல்லெண்ணத்துடன் நிறை வேற்ற வேண்டும். இத்துடன் நாம் நின்றுகொள்ள வேண்டும்.

ஐரோப்பாவின் அடிப்படை அக்கறைகளுடன் நமக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. எனவே, அது அடிக்கடி தர்க்கத்தில் ஈடுபடவேண்டிவரும். நமக்கும் அத் தர்க்கத் தின் காரணத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. எனவே, செயற்கை உறவுமூலம் நாம் அதன் அரசியலில் ஏற்படும் சாதாரண மாற்றங்களிலோ அல்லது நட்புறவு அல்லது பகைமைக் கூட்டிலோ தலையிடுவது அறிவுடைமை யன்று... ..

வெளியுலகில் எந்தப் பகுதியுடனுவது நிலையான நட்புக் கூட்டுச் செய்துகொள்வதே நம் கொள்கை. அச் சுதந்திரம் இப்போது நமக்கு இருக்கிறது.....

நாம் மதிப்புடன்கூடிய பாதுகாப்பு நிலையில் இருப்பதற் கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். எதிர்பாராத நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக நாம் தற்காலிக நேச வுடன்படிக்கைகள் வேண்டுமானால் செய்துகொள்ள லாம்.....

ஒவ்வொரு நாட்டிலிருந்தும் நமக்குக் கிடைக்கும் உண்மையான சலுகைகளை என்னவென்று எதிர்பார்ப்பது அல்லது கணக்கிடுவதுபோல் பெரிய தவறு வேறொன்று மில்லை. இம் மாருட்டத்தை அனுபவம் ஒன்றே குணப் படுத்த முடியும். உண்மையான பெருமை ஒன்றுலே வேண்டாமென்று அதைத் தள்ள முடியும்.....'—ஜார்ஜ் வாஷிங்டன், 1796, செப்டம்பர் 17.

மனிதகுலத்தின் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் இன்னும் வறுமையிலும் அறியாமையிலுமே தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இவ் வறுமையும் அறியாமையுமே, அறிவு வளர்ச்சியை யும் செழுமையையும் தோற்றுவிக்கக்கூடிய எந்தத் திட்டத்தையும்

தீட்டும் திறனறச் செய்துவருகிறது. இக் குறிக்கோளை அடையும் முகத்தான் சிலர் கம்யூனிசத்தில் இறங்கிவிட்டனர். இவற்றிற்கும் சான்றாக வட கொரியா, வட வியட்னும், கோடிக்கணக்கான மக்கள் வாழும் சீனா ஆகிய நாடுகளைக் கூறலாம். இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் சனநாயக, பாதி சோஷியலிஸ்ட் பொருளாதாரத் திட்டத்தில் இறங்கியிருக்கின்றன. வேறு சில, வெள்ளையர் 'குடியேற்ற நாட்டுக் கொள்கையை' எதிர்ப்பான்வேண்டி அடக்குமுறையிலும் பலாத்காரக் கலகங்களிலும் இறங்கியுள்ளன. இன்னும் சில நாடுகளோ, அமைதியாகப் பிறரைக் கவனித்துக் கொண்டு, மனத்தில் நம்பிக்கைக் கோட்டை கட்டிவருகின்றன. துருக்கி, இரான், இராக், பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், லத்தீன் அமெரிக்கக் குடியரசுகள் ஆகிய நாடுகளோ, இராணுவப் பாதுகாப்பும் பொருளாதார உதவியும் பெறும் நோக்கத்தில் கிழக்கிற்கு எதிராக மேற்குடன் (மேலை நாடுகளுடன்) சேர்ந்துகொண்டிருக்கின்றன. இவற்றைக் கண்ணுறுங்கால், உலகில் வாழும் ஏழைகளில் பெரும்பான்மை மக்களிடத்திலாவது பொதுவான ஒரு குணுதிசயம் நிலவிவருவது வியப்பாக இருக்கிறது. இனவெறுப்புக் கொள்கையையும் குடியேற்ற நாட்டுக் கொள்கையையும் எதிர்ப்பதிலும், ஆஃப்ரிக்க, ஆசிய நாடுகட்கிடையே ஒற்றுமையையும் நட்பையும் வளர்ப்பதிலும் அவர்கள் ஒன்றுபட்டு நிற்கின்றனர். இவர்களில் அனேகம் பேர் இராணுவக் கூட்டுகளை எதிர்ப்பவர்கள்; இவ் விநோதமான புது உலகில் புதியதொரு 'நடுநிலைமைக் கொள்கையைக்' கடைப்பிடித்துவருபவர்கள். அக் கொள்கை ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்துபோன்ற நாடுகளின் நெடுநாள் நடுநிலைமையையும், சமீபத்தில் ஆஸ்திரியாவும், யூகோசுலேவியாவும் கடைப்பிடித்துவரும் நடுநிலைக் கொள்கையையும் எதிரொலித்துவருகிறது. இப் புது நடுநிலை முகாமின் முக்கியத்துவத்தையும் அதன் வெற்றிகளையும்பற்றி ஆராயுமுன், ஆஃப்ரிக்க, ஆசிய நாடுகள் தங்கள் பொதுவான குறிக்கோளை அடையும் முகத்தான் மேற்கொண்டிருக்கும் கூட்டு நடவடிக்கைகள், முயற்சிகள் ஆகியவற்றைப்பற்றி ஆராய்வோம்.

பண்டுங் மாநாடு: 1955ஆம் ஆண்டு ஏப்ரல் 18 முதல் 24ஆம் தேதிவரை, ஜக்கார்த்தாவுக்கு 75 மைல் தொலைவிலுள்ள இந்தோனீசிய மலைநகரான பண்டுங் என்னுமிடத்தில் 29 ஆசிய, ஆஃப்ரிக்க நாட்டு அரசியல் தலைவர்கள் கூடினர். அவர்களின் பொது ஆர்வங்களை வரையறுப்பதே இம் மாநாட்டின் நோக்கமாகும். ஒரு புதிய முகாமையோ, அன்றி நட்புடன்படிக்கையையோ, அன்றி ஒரு கூட்டையோ இக்கூட்டம் தோற்றுவிக்கவில்லை. ஆனால், இது முக்கியமான தொடர்புகள் கொள்ளவும், உலக விவகாரங்களில் புதிய வழியில் செல்லவும், குடியேற்ற ஆட்சியிலிருந்து புதிதாக விடுதலைபெற்ற

மக்களுக்கிடையில் அதிக ஒற்றுமையுணர்ச்சியை ஏற்படுத்தவும் ஒரு நல்ல வாய்ப்பை அளித்தது.[7]

'கொழும்பு திட்ட' நாட்டுத் தலைமை அமைச்சர்கள் (பாகிஸ்தானின் முகமது அலி, இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, பர்மாவின் யூநூ, சிலோனின் ஜான் கொத்தலவாலா, இந்தோனீசியாவின் அலி. சஸ்த்ரோமிங் ஜோஜோ ஆகியோர்) 1954, டிச. 28, 29 அன்று ஜக்கார்த்தாவுக்கு அருகேயுள்ள போகர் என்னுமிடத்தில் கூடிப் பேசினர். ஏப்ரல் மாதமே கூடிய முதற் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட ஆலோசனையின்பேரில் நடவடிக்கை எடுப்பதென்று முடிவு செய்தனர். இவையல்லாமல் மற்ற 25 நாடுகள் தங்கள் தலைமை அமைச்சர்களையோ, அன்றி வெளிநாட்டு அமைச்சர்களையோ 1955, ஏப்ரல் மாத இறுதியில் இந்தோனீசியாவுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று இவர்கள் அனைவரும் முடிவு செய்தனர். மேலும் அவர்கள் 'ஆசிய, ஆஃப்ரிக்க நாடுகட்கிடையே நல்லெண்ணம், கூட்டுறவு ஆகியவற்றை வளர்க்கவும்,.....சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சிக்கல்கள்பற்றியும்..... ஆசிய ஆஃப்ரிக்க மக்களுக்கு மட்டும் தனி அக்கறையுள்ள சிக்கல்கள்—தேசிய இறைமை, இன வெறுப்பு, குடியேற்றநாட்டுக் கொள்கைகள் போன்ற சிக்கல்களைப் பற்றியும் ஆராயவும், உலக விவகாரங்களில் ஆசிய, ஆஃப்ரிக்க நிலைமையையும் இவ் இருகண்டத்து மக்கள் நிலைமையையும் உலக அமைதியையும் கூட்டுறவையும் வளர்ப்பதற்காக அவர்கள் ஆற்றியிருக்கும் தொண்டையும்பற்றி ஆராயவும்' ஒப்புக்கொண்டார்கள். மாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு அழைக்கப்பட்ட நாடுகளில் மத்திய ஆஃப்ரிக்கக் கூட்டரசுமட்டும் கலந்துகொள்ளவில்லை. மற்ற நாடுகளனைத்தும் தத்தம் தூது கோஷ்டிகளை அனுப்பிவைத்தன. அவைகளாவன : ஆஃப்கானிஸ்தான், கமபோடியா, செஞ்சீனா, எகிப்து, எத்தியோப்பியா, கோல்டு கோஸ்டு, இரான், இராக், சப்பான், ஜோர்டான், லாவோஸ், லெபனான், லிபீரியா, லிபியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், சவூதி அரேபியா, சூதான், சிரியா, தாய்லாந்து, துருக்கி, வட வியட்னும், தென் வியட்னும், ஏமன், இந்தியாவும் பர்மாவும் செஞ்சீனா மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தன. இலங்கையும் பாகிஸ்தானும் அதை எதிர்த்தன. இவ் எதிர்ப்பைச் சமாளிக்கும் பொருட்டு சப்பான் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அரபு நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்துவிடும் என்ற காரணத்தால் இஸ்ரேல் மாநாட்டிற்கு அழைக்கப்படவில்லை. ஃபார்மோசா, ஆஃப்ரிக்கா, இன்னும் மற்றக்

[7] இந் நூலாசிரியர் (குமன்), 'புதிய சர்வதேச ஆண்டு மலர்—1955-ன் நிகழ்ச்சிகள்' என்ற நூலில் 'ஆசிய—ஆஃப்ரிக்க மாநாடு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார். மேலே வரும் பிரிவிலுள்ள கருத்துகள், அந் நூலிலிருந்து மேற்படி மலரின் வெளியீட்டாளரான பங்க் அண்டு வகனலஸ் கம்பெனியாரின் அனுமதியுடன், ஒருசில சிறிய மாற்றங்களுடன் மறுபடியும் அச்சிடப்பட்டுள்ளது.

குடியேற்றநாட்டு அரசுகளை மாநாட்டில் சேர்த்துக்கொள்ள எல்லா நாடுகட்கும் விருப்பமில்லையாகையால், அவைகளும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ஏப்ரல் 11ஆம் நாள் ஏர் இந்திய விமானம் 8 விமான ஊழியர், 2 ஐரோப்பியப் பத்திரிகையாளர், ஒரு வியட்னும் தேசத்தவர், 8 கம்யூனிஸ்ட் சீனவின் மைனர் பிரதிநிதிகள் ஆகியோரை ஏற்றிக் கொண்டு ஹாங்காங்கிலிருந்து ஜக்கார்த்தாவுக்குச் சென்றது. செல்லும் வழியில் அது போர்னியோவுக்கு அப்பால் இந்தோனீசியா வின் ஆதிக்கத்திலுள்ள கடலில் வெடித்து விழுந்தது. அதில் பிழைத்தவர்கள் மூன்றே மூன்று பேர்தாம். இவ் விபத்தில் யு.எஸ்.ஏ.யும் சியாங்கே-ஷேக்கும்தாம் இவ் அழிவு வேலைக்குக் காரணம் என்றும், இதுபற்றி ஹாங்காங் அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டும் அவர்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்களென்றும் பெய்ப்பிங் குற்றஞ்சாட்டியது. ஆனால், ஏப்ரல் 17ஆம் நாள் இக் குற்றச் சாட்டுகளை லண்டன் ஏற்க மறுத்துவிட்டு, பாதுகாப்புக்காக எடுக்கப் பட்ட நடவடிக்கைகளை அறிவித்தது. 3 நாட்களுக்குப் பின்னர், விமான நிலையத்தில் எந்த அழிவு வேலையும் நடக்கவில்லை என்று இதுபற்றி நடத்தப்பட்ட விசாரணை உறுதிப்படுத்துகிறதென்று ஹாங்காங் அறிவித்தது. மே 26ஆம் நாள் புது டில்லியும் ஜக்கார்த்தாவும் சேர்ந்து, இந்தோனீசிய விசாரணைக் குழு அறிக்கையை வெளியிட்டன. அதில் குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் குண்டு ஒன்று விமானத்தில் வைக்கப்பட்டிருந்ததால்தான் விமானம் வெடித்து விழுந்தது என்று கூறப்பட்டது. இந்த அழிவு வேலையில் ஈடுபட்டோரைக் கண்டுபிடித்துக்கொடுப்பவர்களுக்கு 100,000 ஹாங்காங் டாலர் (17,200 டாலர்) பரிசாகக் கிடைக்கு மென்று ஹாங்காங் போலிஸ் ஜூன் 12 ஆம் நாள் அறிவித்தது. இதைத் தொடர்ந்து பலர் கைதுசெய்யப்பட்டார்கள். மே மாதம் ஹாங்காங்கிலிருந்து ஃபார்மோசாவுக்கு ஓடிப்போய்விட்ட சீன விமான நிலைய ஊழியரை அவருடைய நாட்டுக்குத் திரும்ப அனுப்புமாறு பிரிட்டன் வேண்டியது. ஆனால், அவ் வேண்டுகோளை செப்டம்பர் மாதம் ஃபார்மோசா ஏற்க மறுத்துவிட்டது.

1955, ஏப்ரல் மாத நடுவில் 4 தலைமை அமைச்சர்கள் சூ-என்-லாய், நேரு, யூநூ, அப்துல் கமால் நாசர் (எகிப்து) ஆகியோர் பண்டுங்கிற்குப் போகும் வழியில் ரங்கூனில் சந்தித்துப் பேசினர். ஏப்ரல் 18ஆம் நாள் முன்னுள் டச்சுக் கிளப்பில் கூடியிருந்த 29 தூது கோஷ்டியினர், உலக சனத்தொகையில் பாதிக்கும் அதிகமான மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளித்தார்கள். மாநாட்டினரை வரவேற்றுப் பேசுங்கால், ஜனாதிபதி சுகர்னோ, "இம் மாநாடு மனிதகுலத்திற்கு வழிகாட்டியாய் அமையுமென்று

நம்புகிறேன். ஆசியாவும் ஆஃப்ரிக்காவும் மறுபிறப்பு எடுத்துவிட்ட தென்பதற்கு இது ஒரு சான்றுப் விளங்குமென்று நம்புகிறேன் மனித வாழ்வு இன்று அரிக்கப்பட்டுவருகிறது. அச்சத்தால் மனிதனுக்கு வாழ்வில் கசப்புத் தட்டிவிட்டது' என்றார். ஏழு முனை நிகழ்ச்சி நிரல் (agenda) ஒன்று கொண்டுவரப்பட்டது. அவை யாவன : பொருளாதார ஒத்துழைப்பு, பண்பாட்டு ஒத்துழைப்பு, சுய நிர்ணய உரிமையும் மனித உரிமைகளும், ஆக்க அணுசக்திப் பிரயோகம், உலக அமைதி, அணு ஆயுதங்களின் அழிவுப் பிரயோகம், மற்றும் சார்பு நாட்டு (காப்பு நாட்டு) மக்களின் சிக்கல்கள். சியானிசத்தையும் (zionism) சோவியத் ஏகாதிபத்தியத்தையும் இராக்கி, இரானியத் தூதுக்குழுவினர் கடுமையாகத் தாக்கினர். அத் தாக்குதல் தொடக்கத்திலேயே நேருவின் தலைமைக்கு அறைகூவல் விடுத்தது. கம்யூனிசம் ஒரு புதிய கொடுங்கோலாட்சி என்று கார்லஸ் ரோமுலோ விடுத்த எச்சரிக்கையும் அப்படித்தான். ஏப்ரல் 20ஆம் நாள் சூ-என்-லாய் ஒற்றுமை, அமைதி, தலையிடாமை, சகவாழ்வு ஆகிய வற்றுக்காகப் பாடுபடுமாறு மெதுவாக வலியுறுத்தினர். அதற்கு இரண்டு நாட்களுக்குப் பின்னர், இலங்கைத் தலைமை அமைச்சர் புதிய சோவியத் குடியேற்றநாட்டுக் கொள்கையை வன்மையாக இடித்துரைத்தார். இந்த நடைமுறைகளைக் கண்டு களித்தது அமெரிக்க வெளிநாட்டு இலாகா. ஆனால், அதிகாரபூர்வமற்ற பார்வை யாளராக பண்டுங் சென்றிருந்த அமெரிக்கக் காங்கிரஸ் (பாராளு மன்ற) உறுப்பினர் ஆதம் கிளேடன் போவெல் என்பவர், இம் மாநாடு அமெரிக்காவுக்கு எதிரானது என்றும், குடியேற்றநாட்டுக் கொள்கைக்கும் இனவெறுப்புக் கொள்கைக்கும் எதிராக அது (அமெரிக்கா) சினந்தெழாவிட்டால் அம் மாநாடு வெள்ளையருக்கே எதிரானதாக ஆகிவிடுமென்றும் எச்சரித்தார்.

சூ-என்-லாய் ஏப்ரல் 23ஆம் நாள் கூறியது உலகமெங்கும் பரபரப்பை உண்டுபண்ணியது. 'சீனர்கள் அமெரிக்கர்களுடன் நட்புக் கொண்டிருக்கிறார்கள். சீனர்கள் யு.எஸ்.ஏ.யுடன் போரிட விரும்பவில்லை. சீன அரசாங்கம் யு.எஸ். அரசாங்கத்துடன் உட்கார்ந்து ஃபார்மோசா பிராந்தியத்தில் நிலவிவரும் நெருக்கடியைக் குறைக்கப் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறது' என்றார் அவர். அத்தகைய பேச்சுவார்த்தைகளில் தேசிய சீனாவும் சமவுரிமையுள்ள நாடாகக் கலந்துகொள்வது அவசியம் என்று வெளிவிவகார இலாகா இதற்குப் பதிலளித்ததும், ஃபார்மோசாவை 'விடுவிக்கும்' 'உரிமை' பெய்ப்பிங்கிற்கு உள்ளது என்று ஏப்ரல் 24ஆம் நாள் சூ-என்-லாய் மறுமொழியளித்தார். இவ்வாறுக அவர், பேச்சு வார்த்தைமூலம் ஏற்படும் எந்த ஒப்பந்தத்துக்கும் அறைகூவல் விடுத்தார்.

ஏப்ரல் 24ஆம் தேதி இறுதியறிக்கை (communique) ஒன்று வெளியானது. அது பல திட்டங்களைக் கொண்டுவந்தது. அது வெளிநாட்டு உதவி, ஐ. நா. நிதி, தொழில் வல்லுநர் பரிமாற்றம், பன்முக வர்த்தகம், பலதரப்பட்ட ஏற்றுமதி ஆகியவற்றின்மூலம் ஆசிய-ஆஃப்ரிக்க நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று கூறியது. 'விரைவில் சர்வதேச அணுசக்தி ஏஜென்சி ஒன்றை அமைக்கவேண்டுமென்றும், அதில் ஆசிய-ஆஃப்ரிக்க நாடுகட்குப் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியது'. இனவெறுப்புக் கொள்கை, குடியேற்றநாட்டுக் கொள்கை 'எந்த உருவத்தில் நிலவிவந்தாலும்', குறிப்பாக வட, தென் ஆஃப்ரிக்காவில் நிலவிவரும் இக் கொள்கைகள் மனித கௌரவத்துக்கே ஓர் இழுக்காகும் என்று அக் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தது. 'பாலஸ்தீனத்தில் அரபு நாட்டு மக்களுக்குள்ள உரிமைகளுக்கு அது முழு ஆதரவு அளிப்பதாக' அறிவித்தது. 'பாலஸ்தீனச் சிக்கல் அமைதியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று ஐ. நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அமலாக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது. மேற்கு இரியனில் இந்தோனீசியாவுக்கு இருக்கும் உரிமைக்கு ஆதரவு அளித்தது. ஐ. நா. உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாகவேண்டு மென்றும், ஆசிய-ஆஃப்ரிக்கப் பிரதிநிதித்துவம் போதுமான அளவு இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது. படைக்குறைப்பு, உறுதியான சர்வதேசக் கட்டுப்பாட்டுடன்கூடிய அணு ஆயுதத் தடை, அவ் ஆயுதங்களின் சோதனை நிறுத்தம் முதலியவை ஏற்பட வேண்டுமென்று கோரியது. மேலும், மனித உரிமைகள் எல்லா நாடுகளின் இறைமை, தேசிய எல்லைப் பாதுகாப்பு, எல்லா இனங் களுக்கும் நாடுகட்கும் இடையேயும் சமத்துவம், தலையிடாமை ஆகியவற்றை மதித்து நடக்கும் ஐ.நா. சாசனத்திற்கிணங்கத் தன்னந்தனியாகவோ, அன்றிக கூட்டாகவோ தன்னைப் பாது காத்துக்கொள்ளும் உரிமையை மதித்தும், வலிமை அரசியல், நெரிசல், ஆக்கிரமிப்பு ஆகிய இவற்றைக் கைவிட்டும், தகராறுகளை அமைதியாகத் தீர்த்தும் சுதந்திரம், அமைதி, பொறுமை—ஆகிய இவற்றைக் காக்க வேண்டுமென்று அவ் அறிக்கை மேலும் கூறிற்று.

இத்தகைய மாநாடுகளைப்பற்றி வெளிவரும் செய்திகள் நீங்கலாக, இந்த பண்டுங் கூட்டம் சில உருப்படியான விளைவுகளைத் தோற்றுவித்தது. தாய்லாந்திலிருந்து 40,000 கம்யூனிசத்தை ஆதரிக்கும் வியட்னும் அகதிகளை வெளியேற்றல்; சென்னீவாவில் யு. எஸ். ஏ.-க்கும் செஞ்சீனாவுக்குமிடையே பேச்சுவார்த்தை நடந்தது; பெய்ப்பிங் ஆட்சிக்குக் கிட்டிய மதிப்பு, இனவெறுப்புக் கொள்கை எதிர்ப்பு, குடியேற்றநாட்டுக் கொள்கை எதிர்ப்பு; இவற்றைத் தனக்குச் சாதகமாய் சோவியத் யூனியன் பயன்படுத்தியதால்

அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் எதிர்நோக்கவேண்டிவந்த சிக்கல்கள்; ஐ. நாவில் ஆசிய-ஆஃப்ரிக்க முகாம் தோன்றியது—இவைகள் அவற்றுள் சிலவாகும். பண்டுங் மாநாடு ஒரு கண்ணுடி என்றே சொல்லவேண்டும். ஒரு மங்கிய கண்ணுடியே என்றாலும், அது மனித குலத்தின் பெரும்பான்மை மக்களின் மிக அவசரமான வேண்டுகோளை அப்படியே பிரதிபலிக்கிறது. இப் பெரும்பான்மையினர் வெள்ளையரல்லர். அவர்கள் வெளித்தோலின் நிறம் மஞ்சள், மாநிறம், கறுப்பு ஆக உள்ளது. வருங்காலச் சந்ததியாரும் இவர்களைப்போன்றே இருப்பர். இம் மாநாட்டுக்குப் பின்னர் 1957, டிசம்பரில் கெய்ரோவில் அரசாங்கத் தொடர்பற்ற 'ஆசிய-ஆஃப்ரிக்க மக்கள் ஒற்றுமை மாநாடு' ஒன்று கூடிற்று. அதில் சோவியத் பிரதிநிதிகள் குடியேற்ற நாட்டுக் கொள்கையை எதிர்த்து நடக்கும் சுதந்திரப் போராட்டங்கள் அனைத்துக்கும் தாங்கள் முழு ஆதரவு அளிப்பதாகவும், எல்லா ஆஃப்ரிக்க-ஆசிய மக்களுக்கும் 'அண்ணன் தம்பிகள் உதவிக்கொள்வதுபோல்' பொருளாதார உதவி அளிப்பதாகவும் கூறினர்.

மூவர் உரையாடல்: 1955—60-ல் வெளிவிவகார இலாக்காக்களில் ஏற்பட்ட தூதியல் பரிவர்த்தனைகள், அரசாங்கங்கள் விளம்பரத்திற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், வெளிநாட்டு அமைச்சர்கள், நாட்டுத் தலைவர்கள் மேற்கொண்ட உலகச் சுற்றுப் பயணங்கள்—இவையனைத்தும் சுதந்திர உலகிற்கும், கம்யூனிச உலகிற்கும், புதிதாகப் பிறந்த நடுநிலை நாடுகட்குமிடையே ஏற்பட்ட உரையாடலையே உணர்த்துகின்றன. வாஷிங்டன், லண்டன், பாரிஸ்—இம் மூன்று தலைநகரங்களும் நடுநிலை நாடுகளைத் தங்கள் அக்கறைகளை வளர்க்கும் முயற்சியில் மாற்ற எத்தனித்தன. மாஸ்கோவும் பெய்ப்பிங்கும் அங்ஙனம் செய்ய முடியாமல் நடுநிலை நாடுகளின் நடுநிலைமையை ஒப்புக் கொண்டு, பிறரையும் இந் நாடுகளை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொண்டன. நடுநிலை நாடுகளும் வாளாவிருந்துவிடாமல், இப் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்துக்கொண்டன. அவைகள் தாங்களாகவே முன்வந்து கூட்டுச் சேராக் கொள்கையைக் (policy of nonalignment) கடைப்பிடித்துவருவதாக, இரு உயர் கூட்டுகளுக்கும் (முதலாளித்துவ, கம்யூனிசக் கூட்டுகளுக்கும்) உணர்த்தின. மேலும், அவர்கள் இவர்களுக்குப் பாவத்தின் பலனையும், நன்மையின் விளைவையும், பாவத்திற்காக மன்றாடுதலின் அவசியத்தையும், சீர்திருத்தம் செய்யவேண்டியதையும் உணர்த்தினர்கள். பெரும்பாலான நடுநிலை நாடுகள் மனத்தில் மேலைக் குடியேற்றநாட்டுக் கொள்கை பசுமரத்தாணிபோல் பதிந்திருந்ததாலும் சோவியத் ஏகாதிபத்தியத்துடன் அவர்களுக்கு அனுபவம் ஏற்படாததாலும்,

அவர்கள் கீழையுலகத்தைவிட மேலையுலகத்தையே குற்றஞ்சாட்டியும் புத்தி கற்பித்தும் வந்தார்கள்.

1956 மே மாத நடுவில் இந்தோனீசிய ஜனதிபதி சுகர்னோ வாஷிங்டனுக்கு விஜயம் செய்தார். அங்கு அவர் காங்கிரசில் உரையாற்றினார்; ஐசன்ஹோவருடன் கூடிப் பேசினார்; பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார்; மேடையேறிப் பேசினார்; எல்லா இடங்களிலும் அவர் குடியேற்ற நாட்டுக் கொள்கையைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். 'கம்யூனிசத்தைத் தோற்கடிப்பதிலும்' முக்கியமான 'அர்த்தமுள்ள சுதந்திரம் மனித குலத்திற்குத் தேவை' என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார். மேற்கு இரியனில் (நெதர்லாந்து, நியூ கினியா) இந்தோனீசியாவுக்கு உள்ள உரிமைக்கு ஆதரவு அளிக்குமாறு யு. எஸ். ஏ.ஐ வேண்டினார். அமெரிக்கத் தலைநகரை உபஜனதிபதி நிக்சனுடன் திறந்த காரில் சென்று சுற்றிப் பார்த்தார். குழந்தைகளையும் வழிப்போக்கர்களையும் கொண்டாடினார். வாஷிங்டன், ஜெஃப்பர்சன், லிங்கன் ஆகியோருக்குப் புகழ்மாலை சூட்டினார்; எல்லோரையும் வசீகரப் படுத்தினர். வெளிநாடுகட்கு அளிக்கப்பட்டுவரும் இராணுவ உதவிக்கு எதிராகப் பேசினர். பொருளாதார உதவி அளிக்கப்பட வேண்டுமென்றும், புதிதாக எழுந்திருக்கும் நாட்டுணர்ச்சியை அமெரிக்கா சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றும், அதுவல்லாமல் எவ்வளவுதான் சிந்தித்தாலும், வார்த்தைகளை அள்ளி வீசினாலும், நயகரா நீர்வீழ்ச்சிபோன்ற டாலரைத் தண்ணீர் போல் அள்ளிச் சொரிந்தாலும் கசப்பும் மயக்கமுமே ஏற்படும்' என்றும் அவர் அமெரிக்கப் பாராளுமன்றத்தினருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

நேருவின் செய்தியும் அதைப்போன்றதே. 1956 மார்ச்சு மாதம் சில்வின் லேயடும் டல்லசும் புதுடில்லிக்கு விஜயம் செய்தார்கள். சியாட்டோவால் இந்தியாவுக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படாது என்று நம்புமாறு அவர்கள் நேருவிடம் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்கள். ஆனால், அவர் (நேரு) இராணுவக் கூட்டுகளே பொதுவாக அமைதிக்கும், குறிப்பாக இந்தியாவுக்கும் அபாயகரமானது என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். ஜூலையில் அவர் நாசருடனும் டிட்டோவுடனும் யூகோசுலேவியாவில் கூட்டு ஆலோசனை செய்தார். அதன் பின்னர் பாண்மா நகரத்தில் அடினுருடன் உரையாடினர். ஆனால், செர்மன் ஐக்கியம்பற்றி சான்சலர் (அடினரின்) கருத்துகளை ஏற்க அவர் முன்வரவில்லை. கிழக்கு ஐரோப்பாவில் இருந்துவரும் சோவியத் ஆதிக்கத்தை வன்மையாகக் கண்டித்தார்; கெடுபிடிப் போருக்கு மாஸ்கோவும் வாஷிங்டனுமே காரணம் என்று தெளிவாகக் கூறினர். 1956 நவம்பர் மாத நடுவில்

பர்மா, இலங்கை, இந்தோனீசியத் தலைமை அமைச்சர்கள் நேருவை புது டில்லியில் சந்தித்தார்கள். அனைவரும் சேர்ந்து அங்கோரியிலும் எகிப்திலும் நடந்த பலாத்காரச் செயலை வன்மையாகக் கண்டனம் செய்தார்கள். சூ-என்-லாய் நவம்பர் இறுதியில் புதுடில்லி வந்து சேர்ந்தார். அவர் அன்புடன் வரவேற்கப்பட்டு இன்புடன் உபசரிக்கப் பட்டார். அவரும் முறையுடனும் படபடப்பின்றியும் மெதுவாகப் பேசினர். 1956 டிசம்பர் மாத நடுவில், நேரு வாஷிங்டனுக்கு விஜயம் செய்தார். அங்கு ஐசன்ஹோவருடனும் டல்லசுடனும் கூடிப் பேசினர். டெலிவிஷன்மூலமாயும் வானொலி மூலமாயும் அவர் பின்வரும் கருத்துரைத்தார்:

'அமைதியைக் காப்பதே இந்தியக் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோளாகும். இக் கொள்கையை முன்னிட்டே நாங்கள் கூட்டுச் சேரா வழியில் செல்ல முடிவுகட்டியுள்ளோம். சிந்தனை செய்யாமலோ, அன்றி நடவடிக்கை எடுக்காமலோ வாளாவிருத்தலே இக் கொள்கை என்று பொருள் கூறல் தவறு. எங்களிடம் திடமான நம்பிக்கையில்லை என்று கருதுவதும் தப்பு. தீங்கென்று நினைப்ப தற்குத் தலைசாய்த்தலே இக் கொள்கை என்று நினைப்பதும் தவறு. ஒவ்வொரு நாட்டுக்கும் சுதந்திரவுரிமை மட்டும் அன்று; அதனதன் கொள்கையையும் வாழ்வையும் நிர்ணயிக்கும் உரிமையும் உண்டு என்று நம்புகிறவர்கள் நாங்கள். ...எனவேதான், நாங்கள் அணுக்கிரமிப்பிலும், பிறநாட்டு விஷயங்களில் தலையிடாமல் இருப்பதிலும், நாடுகட்கிடையே பொறுமை வளர்வதிலும், சமாதான சகவாழ்விலும் பூரண நம்பிக்கை வைத்துள்ளோம்.'

நேருவின் நடுநிலைமை 'சோவியத் யூனியனுக்குச் சாதகமாக வும்', 'மேலை நாடுகட்குப்' பாதகமாகவும் செல்லுகிறதென்று மேற்கத்தியர் குற்றஞ்சாட்டினர். மேலும், மிதவாதம் பேசும் இவர் (நேரு) பாகிஸ்தானுடன் இந்தியா கொண்டிருக்கும் காஷ்மீர் தகராறில் ஏன் அதைக் கடைப்பிடிக்கலாகாது என்று ஆலோசித்தனர். இங்கு முஸ்லீம்கள்தாம் (4,000,000) அதிகம். காஷ்மீரின் மூன்றில் இரண்டு பகுதியும், அதன் சனத்தொகையில் ஐந்தில் நான்கு பகுதி மக்களும் அதன் தலைநகரான ஸ்ரீநகர் உட்பட 1949 ஜூலை மாதப் போர்நிறுத்த உடன்பாட்டுப்படி இந்திய இராணு வத்தின் ஆதிக்கத்திற்குள் இருந்தனர். செழிப்பான கண்ணைக் கவரும் அழகுவாய்ந்த காஷ்மீர் பள்ளத்தாக்கும் இந்த ஆதிக்கத் திற்குள் தானிருந்தது. இந் நிலை இப்படியே நீடித்துச் சென்றது. 1957, சனவரி 23ஆம் நாள் ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலில் பேசுங்கால், (காஷ்மீரில்) பிளபிசிட்—அபிப்பிராயக் கணிப்பு (plebiscite) நடத்தும் நோக்கம் இந்தியாவுக்கு இல்லை என்று கிருஷ்ணமேனன் கூறிவிட்டார். ஆனால், பாதுகாப்புக்

கவுன்சில் பிளபிசிட் நடத்தவேண்டுமென்று மீண்டும் ஜனவரி 24ஆம் நாள் வேண்டியது. புதுடில்லி இத் தீர்மானத்தைப் புறக்கணித்துவிட்டு, அதன் பக்கம் இருந்த காஷ்மீர்ப் பகுதியை வெளிப்படையாக, மீண்டும் 'மாற்ற முடியாதவாறு' (கைவிட முடியாத வாறு) இந்திய யூனியனுடன் இணைத்துக்கொண்டுவிட்டது. பாகிஸ்தான் சம்மதிக்கும் முறையில் (இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்) உடன்பாட்டுக்கு வர மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளனைத்தும் வீணாயின. காஷ்மீரின் பெரும் பகுதியைத் தன்னுடன் வைத்துக்கொள்ளவேண்டும். கோவாவிலிருந்து போர்த்துகீசியரை இறுதியில் வெளியேற்றிவிடவேண்டும் என்ற தீர்மானத்துக்கு நடுநிலை இந்தியா வந்ததற்கு, அதன் தேசிய நலன்களும் (ஆக்கறைகளும்) மண்ணாசையுமே காரணம் ஆகும். நடுநிலை நாடான இந்தோனீசியாவும் இதே ஆசையில்தான் நெதர்லாந்தில் 'நாடு கடத்தப்பட்ட அரசாங்கத்தை' (government-in-exile) நடத்திவந்த 'தென் மொலுக்கஸ் குடியரசைப்' புறக்கணித்துவிட்டு மேற்கு இரியனைத் தன்னுடன் இணைத்துக்கொள்ளத் தீர்மானித்தது.

அமெரிக்காவும் ரஷ்யாவும் 'நடுநிலை நாடுகளைத் தங்கள் விருப்பத்திற்கிணங்க' நடக்கச் செய்வதற்காக எடுத்த எதிரெதிரான முயற்சிகள் ஒரு நீண்ட சிக்கலான கதையாகும். அதை இதோடு சுருக்கமாகக்கூடச் சொல்வதற்கில்லை. ஆசியாவிலும் ஆப்ரிக்காவிலும் மாஸ்கோ செய்த விளம்பரம்பற்றியும், நடத்திய அரசியல் பற்றியும் முன்பே ஆராய்ந்து இருக்கிறோம். ரஷ்யத் தலைவர்கள் ஆசிய நாடுகட்குச் சென்றவிடமெல்லாம் தங்களை வரவேற்றவரை மலைக்கச் செய்யும் அளவுக்கு, அவர்கள் மேலை நாடுகளைக் கடுமையாக இடித்துரைத்துவந்தனர். அவர்களது இப் போக்கும், அவர்கள் 1956-ல் ஏற்பட்ட அங்கேரிப் புரட்சியை அடக்கி ஒடுக்கியதும், சோவியத் வேண்டுகோளின் வலிமையைக் குறைத்துவந்தன. ஆனால், மற்றொரு பக்கம், இந் நாடுகள் உபரியாக உற்பத்தி செய்து வரும் பொருள்களை (சான்றாக அரிசி, பருத்தி) உதவி அளிக்காமல் விலைக்கு வாங்கி, வியாபாரம் செய்ய மாஸ்கோவுக்கு இருந்த விருப்பமும் சக்தியும்; அது குறைந்த வட்டி வீதத்தில் அளித்து வந்த நெடுநாள் தவணைக் கட்டன்களும்; அரசியல் நிபந்தனைகள் விதிக்கவோ அல்லது இராணுவத் தளங்கள் தனக்கு வேண்டுமென்று கேட்கவோ விரும்பாமையும்; மனிதத் தோலின் நிறத்தில் அக்கறையில்லாத, இன வெறுப்பற்ற தொழில் வல்லுநர்கள் தொழில் நுணுக்க உதவியளிக்க முன்வந்தமையும் அதே வேண்டுகோள்களை வலுவாக்கின.[8] இதே நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா

[8] இளாஸ் இ. நோர் என்பவரின் 'ரூபிள் அரசியல் தந்திரம் : அமெரிக்க வெளிநாட்டுதவிக்கு அறைகூவல்' சர்வதேச ஆராய்ச்சி நிலையம், பிரின்ஸ்டன் சர்வகலாசாலை என்ற நூலை வாசிக்கவும்.

விடம் திறமையுமில்லை; விருப்பமுமில்லை. மேலும், அது இவற்றிற்குப் பதிலாக (ஆசிய ஆஃப்ரிக்க நாடுகட்கு) வெகுமதிகளும் உதவித் தொகையும் வழங்கும் திட்டத்தில் இறங்கிற்று. இத்திட்டம் எதிர்பார்த்த நன்றியைவிட அமெரிக்காவுக்கு எதிர்ப்பையே தோற்றுவித்தது. அன்றியும், அது (அமெரிக்கா) கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுப்பதிலும், இராணுவக் கூட்டாளிகளைச் சேகரிப்பதிலும் கண்ணயராது இருந்துவந்தது. இக் கொள்கையே அமெரிக்காவிடம் ரஷ்யாவைவிட அதிகமான வளங்கள் இருந்தும், உலகில் வாழும் ஏழைகளிடம் தன் செல்வாக்கைப் பரப்புவதில் ரஷ்யாவுடன் அது வெற்றிகரமாகப் போட்டிபோடும் திறமையைக் குறைத்துவிட்டது.[9]

இவ் விஷயங்களில் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட மயக்கம் 1957-ல் குன்றிடையிட்ட விளக்காயிற்று. பெப்ரவரி 28ஆம் நாள் அமெரிக்க உபஜனாதிபதி ரிச்சர்டு எம். நிக்சன் 19,000 மைல் ஆஃப்ரிக்கப் பயணத்திற்குப் புறப்பட்டார். மொரோக்கோவுக்கு விஜயம் செய்த பின், காணாவின் சுதந்திர விழாவில் ஜனாதிபதி ஐசன்ஹோவரின் பிரதிநிதியாக வருகை தந்து சிறப்பித்தார். அக்ராவில் அவரும் அவருடைய மனைவியும் நிதி அமைச்சர் கிம்லா அக்பெல்க்பெடி மாவின் இல்லத்தில் மதிய உணவு அருந்தினர். 2,000 புத்தகங்களடங்கிய தொழில்நுணுக்க நூலகம் (library) ஒன்றைத் தலைமை அமைச்சர் குவாமி அங்க்ரூமாவுக்கு அவர் அன்பளிப்பாகக் கொடுத்தார். லிபீரியாவில் நீக்ரோ குடியரசுக்கு அவர் இரண்டு கோஸ்ட் கார்டு சிற்ப வேலைப்பாடுகளை அன்பளிப்பாகக் கொடுத்தார். அங்குள்ள ஃபையர்ஸ்டோன் கம்பெனிக்குச் சொந்தமான ரப்பர்த் தோட்டத்தைப் பார்வையிடச் சென்றார். ஜனாதிபதி வில்லியம் வி. எஸ். டப்மானுடன் பொருளாதார உதவிபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர். தன் நாட்டுக்கு ஒரு பொருளாதாரக் கோஷ்டியை போலந்து அனுப்பவிருந்த திட்டத்தையும், மாஸ்கோவுக்கு விஜயம் செய்ய வருமாறு சோவியத் யூனியன் தனக்கு விடுத்திருந்த

[9] யு.எஸ். தனியார் கம்பெனிகள் 'பிற்போக்கு நாடுகளில்' பொருளாதார வளர்ச்சிக்காகவும், முதலீடு செய்தல், புது முயற்சியில் ஈடுபடல்போன்ற பொது நலக் காரியங்களுக்காகவும் செய்துவரும் பயனதரக்கூடிய செயல்களைத் தற்கால உலக விவகாரத்தைப்பற்றிச் சிந்தனை செய்யும் மாணவர் எவரும் அலட்சியமாகத் தள்ளிவிடலாகாது. அவர்கள் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் பயன் சிறிதாக இருந்தாலும்கூட இவ்வாறு செய்யலாகாது. அதைப்பற்றி இங்கு எடுத்துரைக்க இடமில்லை. ஆகையால், தேசியத் திட்டக் கழகம், 1606 நியூ ஆம்ஸ்பையர் அவென்யு, என்.டபிள்யு. வாஷிங்டன் 9 டி. சி. துண்டு வெளியீடுகளாக 'வெளி நாட்டில் யுனைடெட் ஸ்டேட்சின் வர்த்தக நடத்தை' என்ற பெயரில் வெளியிடப்படும் தனி ஆராய்ச்சி நூல்களைப் படிக்கவும். இப்போது கிடைக்கக்கூடிய அத்துண்டு வெளியீடுகள் பின்வருமாறு: சீர்ஸ் ரோபக் டி மெக்சிக்கோ (1953), பெருவில் காஸா கிரேஸ் (1954), பிலிப்பைன் - அமெரிக்க ஆயுள் இன்ஷூரன்ஸ் கம்பெனி (1955), வெனிசுலா கிரியோல் பெட்ரோலியக் கம்பெனி (1955), லிபீரியாவில் ஃபையர்ஸ்டோன் நடவடிக்கைகள் (1956), இந்தோனீசியாவில் ஸ்டான்வாக் (1957).

அழைப்பையும் தான் ஏற்கப்போவதில்லையென்று அவர் (ஜனதிபதி) உணர்த்தினர். உகாண்டாவில் தங்கிவிட்டு, அவர் (நிக்சன்) அடிஸ் அபாபாவில் ஹெய்லி சலாசி சக்கரவர்த்தியுடன் கலந்து பேசினர். எத்தியோப்பியாவில் யு. எஸ். விமானப் படைத்தள மொன்றை நிறுவவும், செங்கடற் கரையில் மசாவா என்னுமிடத்தில் கப்பல் தங்குவதற்கான தனியுரிமை அளிக்குமாறும் வேண்டினர். அதற்கு இப் பிரேரணைகளைத் தான் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு முதலில் எத்தியோப்பியாவை 'சமத்துவக்' கண்கொண்டு நோக்கவேண்டு மென்று—அதாவது, அதற்கு இராணுவ உதவி அதிகமாக அளித்தால், தான் அவற்றிற்குச் சம்மதிப்பதாகச் சக்கரவர்த்தி கூறினர். சுதான் (அதுவும் அதிக யு. எஸ். உதவி கேட்டது), லிபியா, டுனீசியா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்தபின் போப்பாண்டவர் 12ஆம் பயசைச் சந்தித்துப் பேசிவிட்டு, மார்ச் 21ஆம் நாள் வாஷிங்டன் திரும்பினர் நிக்சன். ஏப்ரல் 6ஆம் நாள் அவர் பொது அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் அமெரிக்கா, ஆஃப்ரிக்காமேல் அதிகக் கவனம் செலுத்த வேண்டு மென்றும், அதிக உதவுயளிக்க வேண்டுமென்றும், இதுவே 'சர்வ தேச கம்யூனிஸ்ட் போராட்டத்தின் முக்கியமான குறிக்கோளாகு' மென்றும் வலியுறுத்தினர். மேலும், அவர் 'ஆஃப்ரிக்க-ஆசிய மக்களிடத்தில் நாம் இனச் சமத்துவம்பற்றிப் பேசிவிட்டு, நமது நாட்டிலே (யு. எஸ். ஏ.) சமத்துவமின்மையைக் கடைப்பிடித்து வரமுடியாது. நம் தேச நலனை முன்னிட்டும் அறநெறிக்காகவும் நாம் யுனைடெட் ஸ்டேட்சில் நிலவிவரும் பாகுபாட்டை ஒழிப்ப தற்கான எல்லா முயற்சிகளையும் ஆதரித்தாக வேண்டும்' என்று அறிவுறுத்தினர்.

நிக்சனின் இவ் வார்த்தைகள் முழுவதும் உண்மையேயென்றாலும், அவற்றைக் கடைப்பிடிக்கும் நேரம் 1957 இலையுதிர்காலத்தில்தான் வந்தது. பலாத்காரத்திலிருந்து (தம் மாநிலத்தில்) 'சமூக அமைதியைக்' (Law and Order) காப்பதற்காக கவர்னர் ஓர்வல் பாபுஸ் என்பவர் அர்கன்சாஸ் தேசியப் பாதுகாப்புப் படையினருக்கு ஆணையிட்டார். அதையொட்டி அவர்கள் ஒன்பது நீக்கிரோ மாண வர்கள் லிட்டில் ராக்கிலுள்ள மத்திய உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல விடாமல் தடுத்து நிறுத்துமாறு ஆணையிடப்பட்டனர். இம் மாணவர்கள் பொதுக் கல்வித் துறையில் நிலவிவரும் இனவேற்றுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் இப் பள்ளிக்குச் செல்லப் புறப்பட்டு நின்றார்கள். இச் சோக நிகழ்ச்சி ஆஃப்ரிக்க-ஆசிய நாட்டு மக்கள் கண்ணெதிரில் அமெரிக்காவின் புகழை மிகவும் குறைத்துவிட்டது. அதை ஓரளவு சீரமைக்க முயன்றார் ஐசன்ஹோவர். அந்த நீக்கிரோ மக்களின் பள்ளி செல்லும் உரிமையைப் பாதுகாப்பதற்காக அவர் கூட்டரசுத் துருப்புகளைச் சற்று தாமதித்தே லிட்டில் ராக்கிற்கு

அனுப்பிவைத்தார். யு. எஸ். எஸ். ஆர்., செஞ்சீனு ஆகியவற்றை விட அறநெறியில் தான் ஒருபடி உயர்ந்துவிட்டதாக இதுகாறும் இறுமாப்படைந்துவந்த அமெரிக்காவின் தலையில் ஓங்கி மற்றொரு பலமான அடி விழுந்தது. அமெரிக்கா கண்டுபிடிப்பதற்கு முன்பே சோவியத் யூனியன் 'ஐசிபிஎம்' (ICBM), பூமியைச் சுற்றிவரும் செயற்கைக் கிரகம் ஆகிய இவற்றைக் கண்டுபிடித்ததும், அது விஞ்ஞான, தொழில்நுணுக்க வளர்ச்சியிலும் பின்தங்கிவிட்டது. அக்டோபர் 9ஆம் நாள் அமெரிக்கா சென்றிருந்த காணு நிதி அமைச்சர், திலாபர் மாநிலத்திலுள்ள டோவர் என்னும் நகரில் ஹோவர்டு ஜான்சன் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றிருந்தபோது, அங்கு அவரை நுழையவிட மறுத்துவிட்டார்கள். 'வெள்ளையரல்லா தவர் இங்கு உணவருந்த அனுமதிக்கப்படார்' என்று கூறிவிட்டனர். இதைக் கேள்வியுற்ற ஜனதிபதி ஐசன்ஹோவர், அந்நியமைச்சரைத் தன் மாளிகையில் (ஓயிட் ஹவுஸில்) தன்னுடன் காலையுணவு அருந்த வருமாறு அழைத்தார். எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியது போலாயிற்று நிலைமை. மனித குலத்திலே மூன்றில் இரண்டு பகுதி மக்கள் 'வெள்ளைத் தோல் உடையவர்கள் அல்லர்'. அப்படிப்பட்ட உலக சமுதாயத்தில் 'தான் தலைமை தாங்கவேண்டும்' என்று அமெரிக்கா முயன்று வந்தது. இந்நிகழ்ச்சி அம் முயற்சியைத் தோற்கடித்தது.

நடுநிலைமை செல்வதெங்கே ? : இந் நூற்றாண்டு நடுவிலும் அதன் பின்னும் வறுமையால் இவ்வுலகில் பீடிக்கப்பட்ட கோடானகோடி ஏழைகளைப் பல துயர்மிக்க நெருக்கடிகளும் சிக்கல்வாய்ந்த பிரச்சினைகளும் எதிர்நோக்கின. அவற்றுள் இனவெறுப்பு, தல நாட்டுணர்ச்சி வெறி, 'குடியேற்ற நாட்டுக் கொள்கை', மற்றும் 'வெள்ளையர் ஆதிக்கத்தின்' அடிச்சுவடுகள் முதலியவை சிலவாகும். வறுமையை அகற்றி நல்வாழ்வு வாழ விரும்பும் மக்களுக்கு இக் கஷ்டங்களெல்லாம் எதிர்ப்பட்டன. இதைவிட நல்ல சூழ்நிலை நிலவிவரும் இடங்களில்கூட இத்தகைய இடர்ப்பாடுகள் தோன்றத்தான் செய்யும். இவற்றில் ஒன்றுகூட எளிதாகத் தீர்க்கக்கூடிய சிக்கலாகத் தெரியவில்லை. ஏனெனில், இச் சிக்கல்களின் தீர்வு பணத்திலோ, அன்றிப் படைகளிலோ, அன்றித் தொழில்நுணுக்கத்திலோ அல்லது இவற்றின் பற்றுக்குறையிலோ இல்லை ; ஆனால், அவை இந் நவயுகத்தில் பழங்காலப் பழக்கவழக்கங் களில் பற்றுடைய மக்களின் உள்ளத்திலும் மனத்திலும்தாம் இருக்கின்றன ! ஏழைகளாக இருந்தாலும் பணக்காரர்களாக இருந்தாலும், ஒரு நல்ல சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ முயலுங் கால் இப் பண்டைய பழக்கவழக்கங்கள் பெரிய முட்டுக்கட்டை களாகவே நிற்கும். அவற்றைத் தாண்டிச் செல்வது மிகச் சிரமம்.

இவற்றுள் ஒரே ஒரு சிக்கலை மட்டும் எடுத்துக்கொண்டு நம்முடைய இவ்வாராய்ச்சியை முடித்துக்கொள்வோம். இச் சிக்கல் இவ்வுலகிலுள்ள ஏழைகளை மட்டும் எதிர்நோக்கவில்லை. முடிவே யில்லாமல் ஆடப்பட்டுவரும் உலக அரசியல் ஆட்டத்தில் இன்னும் வருங்காலத்திலும், கூடி ஆடும் இறையுரிமை நாடுகட்கும் மிகவும் முக்கியமான சிக்கல் ஆகும். 'நடுநிலைமைக் கொள்கையில்' இறங்கி யிருக்கும் நாடுகளின் எண்ணிக்கையும் செல்வாக்கும் வருங்காலத்தில் பெருகுமா ? அல்லது பெரும்பாலான நடுநிலை நாடுகள் 'தங்களின் தவற்றையுணர்ந்து' (வாஷிங்டனிலும், மாஸ்கோவிலும் கூறப் படுவதுபோல்) ஏதாவது ஓர் உயர்கூட்டுடன் சேர்வது சாத்தியமா? இதுவே அச் சிக்கல்.

குழப்ப மேகங்கள் சூழ்ந்திருக்கும் இச் சர்வதேச அரசியல் அடிவானத்திலிருந்து ஆராயுங்கால், இச் சிக்கல் எப்படித் தீரப் போகிறதோ தெரியவில்லை என்ற உணர்ச்சிதான் ஏற்படுகிறது. அதன் தீர்வைப்பற்றி எதையும் நிச்சயமாய்க் கூறுவதற்கில்லை. பல தலைநகரங்களிலுள்ள மக்களையும் தலைவர்களையும் உணர்ச்சிவயப் படுத்தும் பொருள்கள், அவர்களுடைய வெறுப்புகள் ஆகிய இவற்றின் விளைவையும், அவர்கள் தமக்கு எது நல்லது என்று போடும் கணக்கு, பகுத்தறிவற்ற அவர்களின் நெடுநாள் போக்கு, பண்டை அனுபவங்களின் நினைவுகள், வருங்காலத்திலாவது வாழ்வு மலராதா என்ற ஏக்கம்—இவற்றின் விளைவுகளையும் பொறுத்தே அச் சிக்கல் தீர்க்கப்படமுடியும். ஐரோப்பாவில் ஸ்விட்சர்லாந்தும் ஸ்வீடனுமே நடுநிலைக் கொள்கையை என்றுமே கைவிட முடியாத அளவுக்குக் கடைப்பிடித்து வருகின்றன. ஏனெனில், இக் கொள்கையே அவைகளை இந்த 20ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற இரு உலக மகாயுத்தங்களிலும் தலையிடாமல் காப்பாற்றியது என்று பொதுமக்களாலும் அதிகாரபூர்வமாகவும் சொல்லப்படுகிறது. டிட்டோவின் நாடான யுகோசுலேவியாவும் ஆஸ்திரியாவும் இக் கொள்கை ஒன்றே வெளிநாட்டு ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சுதந்திரத்தை அளிக்க முடியும் என்ற கருத்தில் முறையே 1948-க்குப் பின்னரும் 1955-லும் இதைக் கடைப்பிடித்து வரலாயின. அநேக அரசியல் தலைவர்கள், கம்யூனிஸ்ட்டுகளும் சரி, கம்யூனிஸ்ட்டுகள் அல்லாதவரும் சரி, செக்கோசுலேவாக்கியா, போலந்து, அங்கேரி, ருமேனியா, ஏன், புல்கேரியா, மற்றும் சிறிய அல்பானியாகூட இக்கொள்கையைத்தான் கடைப்பிடித்து வரவேண்டு மென்று விரும்பினர். ஆனால், மாஸ்கோ அனைவருக்கும் தெரிந்த காரணத்திற்காக இவ் விருப்பத்தை எதிர்த்துவந்தது. ஆனால், செர்மன் ஐக்கியத்திற்காக செர்மனி மட்டும் 'நடுநிலையாக்கப்பட வேண்டும்' என்று உறுதியாக நின்றது. பாணும் வாஷிங்டனும் லண்டன், பாரிஸ், ரோம் முதலியவை வேண்டாவெறுப்புடன் அளித்த

ஆதரவில் செர்மனியை நடுநிலையாக்குவது சாத்தியமன்று என்று வலியுறுத்தின. மேலும், கீழையுலகிற்கு எதிராக மேலையுலகுடன் நட்புக்கொண்டுள்ள ஐக்கிய செர்மனியை உருவாக்கப் பெரிதும் முயன்றன. அம் முயற்சி அதன் இயல்பிலேயே தோல்வியடையக் காத்திருந்தது. ஏனெனில், இக் கொள்கையை முதன்முதலில் மேலை நாடுகள் சோவியத் முகாம்மீது திணிக்கவும் முடியாது; அடுத்த படியாக அதையே பின்பற்றியும் வர இயலாது. இக் கொள்கையைக் கடைப்பிடிக்கும்பட்சத்தில் அது செர்மானியரை நிலையாகப் பிடித்து வைத்துவிடும்.[10]

கிழக்கிற்கு எதிராக மேற்குடன் கூட்டுச் சேர்வதோ, அன்றி மேற்கிற்கு எதிராகக் கிழக்குடன் கூட்டுச் சேர்வதோ பயனளிக்காது என்று ஐரோப்பிய அரசாங்கங்களின் கொள்கைகளைக் குறைகூறுவோர் 1950—60-ல் முடிவுக்கு வந்தனர். அது ஆசிய ஆஃப்ரிக்க நாடுகட்கும் பொருந்தும் எனலாம். முன்னுள் செல்வாக்குடன் விளங்கிவந்த நிலச்சுவான்தாரிகள், பணக்காரர்களை ஒழித்துவிட்டு, கூட்டுப் பண்ணைமுறை, பொருளாதாரத் திட்டம் போன்ற சருவாதிகார முறைகளைக் கையாண்டு மாஸ்கோவும் பெய்ப்பிங்கும் வெகுவிரைவில் தொழிற் புரட்சியைக் கொண்டுவரத்தக்க புரட்சிகரமான வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்; கோடிக்கணக்கில் இருக்கும் கறுப்பர்களில் இவ் வழியைப் புரிந்துகொள்ளக்கூடியவர்கள் வெகு சிலரே. புரிந்துகொண்டபின் அவர்கள் அதன் முழு வசீகரத்திற்கு ஆளாகிவிடுகின்றனர். ஆனால், சொத்துசுகம், தனியுரிமைகள் ஆகியவற்றை அனுபவித்துவருவோர் இவ் வழியைக் கடுமையாக எதிர்த்துவருகின்றனர். அவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பது எல்லோருக்கும் புரியும். கம்யூனிசத்திற்கு எதிராக வாஷிங்டன் இராணுவக் கூட்டுகள் செய்ய முன்வந்தது. ஏராளமான படைக்கல உதவியும், கணிசமான பொருளாதார உதவியும் அளித்து வந்தது. மேலும், அது (சிலவேளைகளில் தானுகவே தோல்வியுறும்) சிக்கலான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் கொண்டுவந்தது.

இந் நிலையில் புதிதாக நாட்டுணர்ச்சி தோன்றிய ஆசிய-ஆஃப்ரிக்க நாட்டுத் தலைவர்கள், அரசியல், இராணுவப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டு, தாங்கள் தனிச்சலுகை பெறும் விஷயத்தில் கிழக்கையும் மேற்கையும் ஒன்றோடொன்று விளையாட விட்டுப்பார்க்காமலிருப்பதில்தான் அதிகபட்சப் பயனையும் குறைந்தபட்ச இன்னலையும் துய்க்கமுடியும் என்று கருதினர். இவ் வழி

[10] அமெரிக்க அக்காடமியின் 'அரசியல், சமூகவியல்' வரலாறு' என்ற நூலில் 1957 ஜூலையில் வெளியாகியிருக்கும் ஃபிரடரிக் எல். சூமனின் 'சோவியத் யூனியனும் செர்மன் படைக்குவிப்பும்' என்ற கட்டுரையைப் (பக். 77—83) படித்துப் பார்க்கவும்.

துறந்து மார்க்ஸ்லாந்திற்கு எதிராகச் சுதந்திர உலகுடன் கூட்டுச் சேர்ந்த நாடுகட்குக் குறிப்பிடத்தக்க நல்ல பயன் எதுவும் விளைய வில்லை. அவர்கள் இக் கூட்டினால் பெற்றதெல்லாம் படைக்கலங் களும், பணவுதவியும், இராணுவப் பாதுகாப்பு உறுதிகளும்தாம். அவர்களை வாட்டி எடுத்த வறுமையைத் துடைக்க இவை உதவ வில்லை. ஆனால், 'நடுநிலைக் கொள்கையைக்' கடைப்பிடித்த நாடுகளை புத்திசாலித்தனமாக நடந்துகொண்டனவென்று சொல்ல வேண்டும். ஏனெனில், அவை இரு உயர் கூட்டுகளினின்றும் பொருளாதார உதவிபெற முடிந்தது. அதோடல்லாமல் இரு முகாம்களிடமிருந்தும் அவை தனிச்சலுகைகளும் பெறமுடிந்தது. இச் சலுகைகள் அளிப்பதில் இரு முகாம்களும் ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டன. ஏனெனில், ஒன்று அதிகச் சலுகைகள் அளித்துவிட்டால் அது மற்றதைப் பாதிக்குமல்லவா ? எனவே, இவ்வச்சம் அவர்களிடம் குடிகொண்டிருந்தது.

இந் நிலை, இம் மனப்போக்கு நெடுநாள் நீடிக்கும்போல் தோன்றியது. இந் நிலை நிலவிவரும்வரை இப் புதிய நாடுகளில் 'நடுநிலைமைக் கொள்கையை'யே கடைப்பிடிக்கவேண்டும் என்ற தூண்டுதல் ஏற்படுமேயொழிய, அச்சத்தினாலோ அல்லது நம்பிக்கை யாலோ வல்லரசுகளுடன் கூட்டுச் சேரவேண்டும் என்ற கருத்து அவர்கள் மனத்தில் உதிக்கப்போவதில்லை. இக் கருத்து வரவர வலுப் பெற்றது. இரு இராட்சச வல்லரசுகளும் 1950-60-லேயே உலகைத் தன் குடைக்கீழ்க் கொண்டுவரும் பேராசையால் உந்தப்பட்டு, ஒன்றோடொன்று போட்டியிட்டுவந்தன. பத்து ஆண்டுக்குப்பின் இரண்டும் இராணுவச் சதுராட்டத்தில் இறங்கி, நம்பிக்கைக்கு இடமற்ற அளவில் திக்குமுக்காடிக்கொண்டிருந்தன. அந்த நிலையைத் தாண்ட முயன்றால் அது பேரழிவைப் பெய்வதுடன் மனிதகுலத்தையே கூண்டோடு கைலாசத்திற்கு அனுப்பிவிடும் என்ற அச்சம் அவர்களை அங்ஙனம் செய்யவொண்ணாமல் தடுத்து வந்தது. உலக சமுதாயத்தில் துயரும் வறுமையும் பீடித்திருக்கும் மக்கள் இந்த ராட்சச வல்லரசுகட்கு ஆதரவு அளிக்க மறுத்ததால், அவர்களுக்கு எந்த நாட்டமும் ஏற்படவில்லை. மாறாக, அவர்களுக்கு அதனால் நன்மையே விளைந்தது. எனவே, அவைகள் இருமுகாம் களும் தங்கள் தோள்வலிமையைக் காட்ட எத்தனிக்காதவாறு ஒரு தற்காலிக ஒப்பந்தத்திற்கு வர ஆவன செய்துவந்தன. இக் கார ணங்களால் உயர்கூட்டுகள் வருங்காலத்தில் வெற்றியடையா வென்றும், ஆனால், 'நடுநிலைக் கொள்கை' வெற்றிபெற்றுப் பீடுநடை போடும் என்றும் 1950—60-ல் நிலவும் சூழ்நிலையிலிருந்து முடிவுக்கு வரலாம்.

கம்யூனிச ஆதிக்கத்திலிருக்கும் எந்த நாட்டையும் மார்க்ஸ் லாந்து இழக்கப்போவதில்லை. ஆனால், இரு முகாம்களுடனும்

கூடாமல் நடுநிலை வழியே செல்ல முடிவுசெய்துவிட்ட நடுநிலை நாடுகள், 'நடுநிலையாகவே' விளங்கிவரும் என்பதில் ஐயமில்லை. வாஷிங்டனுடனும் மாஸ்கோவுடனும் கூட்டுச் சேர்ந்திருக்கும் சில ஆசிய-ஆஃப்ரிக்க, ஏன், ஐரோப்பிய அரசுகள்கூடத் தங்கள் வழியை—போக்கை மாற்றியமைக்க முற்பட்டாலும் முற்படலாம். அப்படி அவை மத்திய ஐரோப்பாவிலும் யுரேசியாவிலும் முயற்சி செய்து நடுநிலை நாடுகளாக மாறிவிடின், 'அந் நடுநிலை முகாம்' பொது அக்கறைகளாலும் குறிக்கோள்களாலும் உந்தப்பட்டு ஒன்றுபட்டுச் செயல்படுமாயின், ஒற்றுமையே பலம் என்றதுபோல் இராட்சச வல்லரசுகள் தங்கள் சண்டை சச்சரவுகளைத் தங்கள் படை வலிமையால் தீர்த்துக்கொள்ளாதபடி செய்துவிட முடியும்; செய்தும் விடும்.

நடுநிலைமைக் கொள்கை ஏழைகளின் வறுமையைப் போக்கி அவர்களைச் செல்வந்தர்களாக ஆக்கக்கூடிய வழியன்று என்று கூறத் தேவையில்லை. அது எல்லோரும் அழியக்கூடிய மற்றொரு போரைத் தடுக்கக்கூடிய வழியே அன்றி வேறில்லை. இரு பெரும் முகாம்கள் (முதலாளித்துவ, கம்யூனிச முகாம்கள்) மட்டும் சமாதானச் சகவாழ்வு வாழ முடிவு செய்தால், இரண்டிற்குமிடையே உலக ஆதிக்கம், அதிகாரம் ஆகியவற்றுக்காக நடந்துவரும் போராட்டம் மட்டும் இவ் வையத்தில் சேரிகளில் வாழ்ந்துவரும் மக்களின் துயரைத் துடைப்பதிலுள்ள புகழை எய்தும் போட்டியாக மாறினால், 'முதலாளித்துவமும்' 'கம்யூனிசமும்' நிலவிவரும் தொழில்முன்னேற்றமிக்க சமுதாயங்கள் அனைத்தும் நாளையே ஏழைகளுக்கு நல்வாழ்வு அளிக்கும் நற்பணியில் கூடிச் செயற்படப் புறப்பட்டுவிடும். ஏழைகளின் பிரச்சினைகள் கொஞ்சநஞ்சமல்ல. வெளியுதவியின்றி வெகுசில (எளிய) நாடுகளே இவ்வளப்பரிய மாற்றத்தைக் கொண்டுவர முடியும். எனவே, உலக சமுதாயத்தி லிருந்தே வறுமையைத் துடைத்து நல்வாழ்வைப் பொழிய வருங்காலக் கூட்டுத் திட்டங்களாலேயே முடியும் என்ற இறுதி நம்பிக்கை ஏழைகள் உள்ளத்தில் இருக்கலாம்.

15. அணுயுகம்

அணுகுண்டும் அதன் விளைவுகளும்

'எதிரியைப் பழிக்குப் பழிவாங்க வேண்டும். அதுவே நம் முடிவாக இருக்கவேண்டும். வடதுருவப் பள்ளத்தாக்கிலிருந்து (முதற்) தாக்குதல் ஏற்படும். அதன் விளைவாக 24 மணி நேரத்திற்குள் 25,000,000 ஆண், பெண், குழந்தைகள் மடிந்துபோவார்கள். எதிரி தொடர்ந்து நம்மைத் தாக்குவதைத் தடுக்கவேண்டுமாயின், நாம் அவன் இருக்கும் இடத்தில் போர்புரியவேண்டும்..... ஆதலின், வெகுதூரம் செல்லக்கூடிய, கனத்த பளுவைத் தாங்கிச் செல்லக்கூடிய குண்டுவீச்சு விமானங்களும், வெகுதூரம் செல்லக்கூடிய போர்விமானங்களும் அவர்களைப் பாதுகாப்பதற்கு (நாட்டுப் பாதுகாப்பு) இன்றியமையாததாகும். ஏனெனில், இது விமானப் போரில் நாம் வெற்றிபெறவும், நம் தளப்படைகள் எதிரியின் நாட்டின்மீது படையெடுக்கவும், அதைக் கைப்பற்றவும் முடியும் என்பதற்குச் சிறந்த உறுதியளிக்கிறது'. ஜெனரல் ஜார்ஜ் சி. கென்னடி, யு.எஸ். ஸ்ட்ராடிஜிக் விமானப்படைத் தலைவர், வாஷிங்டன் டி.சி.யில் 1947, ஜனவரி 26ஆம் நாள் நடைபெற்ற தேசியப் பாதுகாப்பின் பெண்கள் நாட்டுப்பற்று மாநாட்டின் 21ஆவது கூட்டத்தில் இவ்வாறு உரையாற்றினார்:

'விமானங்கள் குண்டுவீச்சு விமானங்களாக இருந்தாலும் சரி, இல்லை போர்விமானங்களாக இருந்தாலும் சரி, அவை இன்று நலிவடைந்து வருகின்றன..... நமக்குத் தேவையான எல்லாவகை ஏவுகணைகளும் (ராக்கெட்டுகளும்) நம்மிடம் உள்ளன. நெடுந்தூரம் செல்லக்கூடிய ராக்கெட்டுகள், நடுத்தரமான ராக்கெட்டுகள், (எதிரியின் இலக்குகளுக்கு) அருகில் சென்று தாக்கக்கூடிய ராக்கெட்டுகள் எல்லாம் இருக்கின்றன ... நாம் செயற்கைக் கிரகங்களையும் (சாட்டிலைட்டுகளையும் - satellites) அனுப்ப முடியும். ஏனெனில், இப்போது அவற்றைத் தாங்கிச் செல்லக்கூடிய பாலிஸ்டிக் மிசில்ஸ் எனப்படும் சாட்டிலைட் தாங்கியும் (ballistic missiles) நம்மிடம் இருக்கிறது..... உங்களிடமும் இவை இருக்கலாம்... நம்மையும் பிற மக்களையும் நாம் வஞ்சிக்கக் கூடாது. அரசியல் மேதைகள்போல் நாம் போரைத் தடுப்பதற்கான

நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும். படைக்கலக் கலைப்பு உட்பட எல்லா முக்கியமான சர்வதேசச் சிக்கல்களுக்கும் அமைதியான உடன்பாடு காண வேண்டும்'. இவ்வாறு நிக்கீட்டா குருச்சேவ், ஜேம்ஸ் ரெஸ்ட்டனிடம் 1957 அக். 7ஆம் நாள் எடுத்துக்கூறினர்.

'பௌதிக சாஸ்திர அறிவு வளர்ச்சி திடீரென்று அதிகமாக வளர்ந்திருப்பது, இக்காலத்துக்கேயுரிய ஒரு தனிச் சிறப்பாகும். விஞ்ஞானத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது கலையை எடுத்துக்கொண்டாலும் சரி, ஒரு துறைகூட அது 50 ஆண்டுகட்கு முன் இருந்ததுபோல் இன்றில்லை. நம்மைச் சுற்றிலும்..... கண்டு பிடிப்புகள் (inventions) நிறைந்த ஓர் உலகம் வளர்ச்சியடைந்து வருகிறது. அதை நாம் காணுமல் இருக்க முடியாது; ஒரு புதிய கருத்துலகமும் நம்மைச் சுற்றி உருவாகியுள்ளது. அதை நாம் இப் பொய்க்கண்களால் பார்க்கமுடியாதுபோனலும், அது நம்மிடையே இருந்துவருகிறது ..... இவற்றினல் பல விளைவுகள் ஏற்பட்டிருக் கின்றன. அவற்றில் மிக முக்கியமானது யாதெனில், அவ் விளைவினல் எல்லாப் பொருள்களும் 'பழைமையானவாக' ஆகிவிட்டதுதான்..... விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பார்க்குமிடத்து, மனிதனே 'பழைமை யாகி' விட்டான் என்றுதான் தோன்றுகிறது'.

இவ்வாறு எழுதியவர் யார் தெரியுமா? அவர்தான் 'பௌதிகமும் அரசியலும்' என்ற நூலை எழுதிய, புகழ்பெற்ற பிரிட்டிஷ் கட்டுரை யாளரான வால்ட்டர் பேஜ்ஹாட். இதை அவர் 1945-ல் எழுதவில்லை. ஆனல், 1869-ல் எழுதினர் என்று கேட்கும்போது வியப்பாக இருக் கிறது அல்லவா? இந் நூலே இச் சொற்களைக் கொண்டுதான் துவங்கு கிறது. இவ்வாசிரியர் புதிய விஞ்ஞான வளர்ச்சியால் நவீன நாக ரிகத்துக்கு ஏற்படக்கூடிய விளைவுகளை நன்குணர்ந்து இவ்வாறு எழுதியிருக்கிறார். இவ் விளைவுகள் இன்று மட்டிலடங்காமல் இருக் கின்றன. மனிதகுல உறவுகள் பற்றிய ஆராய்ச்சியில் விஞ்ஞான முறையைக் கையாண்டால் மனிதகுலம் தன்னைத் தானே புரிந்து கொள்வதிலும் கட்டுப்படுத்திக்கொள்வதிலும் ஒரு புதிய சக்தி யையே பெற்றுவிடும் என்று இவர் கருதுகிறார். இவருடைய காலத் திற்குப் பின்னர் வந்த நூற்றாண்டில் விஞ்ஞானம்மட்டும் போதாது என்ற கருத்து மக்களிடையே நிலவிவரலாயிற்று. இன்றைய விஞ் ஞானிகளின் இரசவாதம் (alchemy) பழைமையை எள்ளி நகையாடு கிறது. அத்தனை தூரம் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இயற்கைத் தெய்வங்களுடனும் பேய்களுடனும் போராடி, சொர்க்கத்தின் சக்திகளையும் நரகத்தின் தீயையும் வென்று வாகை சூடிவிட்டனர். ஆனல், இவ் வெற்றியின் விளைவு எப்படி இருக்கப் போகிறது தெரியுமா ? இன்றைய பண்பாடு மேன்மேலும் வளர்ந்து

வளம் பெறுவதற்குப் பதிலாக அழிவையே–சாவையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு விஞ்ஞான வளர்ச்சியே (மறைமுகமான) காரணம் ஆகும்.

இது ஒரு முரண்பாடு என்று தோன்றுகிறதல்லவா? இந்நிலைக்கு ஸ்பெங்லரும் டாயின்பீயும் கருதுவதுபோல், நாகரிகத்தின் தன்மையே மூலகாரணமாகும். நம்முடைய நாகரிகத்திற்கு விஞ்ஞானத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளை பிளேட்டோவின் அக் காலப் புலம்பலிலிருந்தே நன்கு புரிந்து கொள்ளலாம். மனித சமுதாயத்தில் தத்துவ அறிஞர்களோ (philosophers), விஞ்ஞானிகளோ (seientists) முக்கியமான முடிவுகளை எடுப்பதில்லை. அவைகளை அதிகார பீடத்தில் வீற்றிருப்போரே எடுத்துவருகின்றனர். அவர்களோ தத்துவ அறிஞர்களும் ஆகமாட்டார்; விஞ்ஞானிகளுமாகார். எனவே, புதிய அறிவை சமூக நோக்கங்களுக்காகப் பயன்படுத்து முன்னர் அதை எந்தத் துறையில், எப்படி, எவ்வளவு தூரம் பயன் படுத்தவேண்டும் என்று ஒரு வார்த்தைகூடத் தத்துவ அறிஞர் களையோ அல்லது விஞ்ஞானிகளையோ கலந்து ஆலோசிக்காமல் மனித சமுதாயத்தில் இவ்வறிவு பயன்படுத்திவரப்படுகிறது. சமூக நோக்கங்களுக்காக இவ்வறிவைப் பயன்படுத்துமாறு இவர்களை (தத்துவ அறிஞர், விஞ்ஞானிகள்) விடுவோமாயின், அவர்கள் இப் போது (அரசியலார்) எடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூசுவர். ஆனால், இன்றோ நாடுகள், வகுப்புகள், அக்கறைக் கூட்டங்கள் ஆகியவற்றிற்கிடையே நிலவிவரும் தொடர்புகளாலும், எது நல்லது, உண்மையானது, அழகானது என்பதுபற்றிப் பாரம்பரியமாக சமுதாயத்தில் இருந்துவரும் கருத்துகளாலுமல்லவா இன்று (விஞ்ஞான) அறிவு பயன்படுத்தப்பட்டுவருகிறது?

இதுபற்றி மேற்கத்திய நாட்டு முறை என்னவென்று சற்றுப் பார்ப்போம். பெரும்பாலான மேற்கத்திய நாட்டு-அரசுகளில் பல நூற்றாண்டுக் காலமாக சமய குருக்களும், பிரபுக்களும், செல்வந்தர் களும் முக்கியமான சமூக முடிவுகளைப் பொறுத்தமட்டும் செல்வாக்குடன் திகழ்ந்துவந்திருக்கிறார்கள். அரசியலும் ஆட்சியும் இவர்கள் கையில்தான் இருந்துவந்தது. இவர்கள் ஆட்சியை அவ்வப்போது தோன்றிய செல்வாக்குக்காரர்களும் சமூக ஏணியில் கீழ்ப்படியில் நின்றவர்களும் எதிர்த்துப் போராடி வந்தார்கள். உலகம் வரவர மதச்சார்பற்றதாக ஆகிக்கொண்டு வந்தது. அதில் கிருஸ்துவ வேதத்தின் காப்பாளரான கிருஸ்துவப் பாதிரிமார்களும் குருக்களும் வரவரத் தங்கள் புகழை இழந்து வந்தார்கள். மேலும், அவர்கள் விஞ்ஞானத்தைப்பற்றிக் கவலைப்படாமலோ, அன்றி அதன்மீது பகைமை மனப்பான்மையை வளர்த்தோ வந்தார்கள். ஆனால், இதற்கு நேர்மாறாக, பட்டம் பெற்றவரும் பணம் படைத்தவரும் விஞ்ஞான அறிவைப் பெரிதும் பயன்படுத்தப் பிரியப்பட்டார்கள். ஆனால், அவர்

களெல்லோருமே மேற்கத்திய அல்லது பாஸ்டிய (faustian) அதிகார வர்க்கத்தினரும் பண வழிபாட்டுக்காரர்களுமாவர். கலையைப்போன்று விஞ்ஞானத்திற்கு ஆதரவு அளிப்போரில் தனி மக்களும் இருக்கிறார்கள்; பொது ஆதரவாளரும் இருக்கிறார்கள். அதன் வளர்ச்சியும் பயனும் இவர்கள் கையில்தானிருக்கின்றன. இவ்வாறு லாபம் தேடியலையும் பொருளாதார நிர்வாகிகளுக்கும், தேசிய வலிமையைப் பெருக்க முயலும் தேசபக்தர்கள், தூதர்கள், தேசத்தைப் பாதுகாத்து வரும் படையினர் ஆகியவர்களுக்கும் விஞ்ஞானம் துணையாக நின்று, இன்றைய மனித குலத்துக்கு அரும் பெருஞ் சேவை செய்து வருகிறது.

இவ் விஞ்ஞான வளர்ச்சி நீடித்துக்கொண்டே சென்றால் இறுதியில் உயர் (பெரிய) சமுதாயம் (மனித சமுதாயம்) பிளவுண்டு அழிந்து விடும் என்று சிலர் ஐயமடைந்துவருகின்றனர். ஆனால், அதன் உடனடியான விளைவுகளை நோக்குமிடத்து அப்படி அச்சமூட்டுவதாயில்லை. உற்பத்தி, பங்கீடு, பயணம், வாகனம், போக்குவரத்து ஆகிய துறைகளிலும், வியாபாரத்திலும், அரசாங்கத்திலும் விஞ்ஞானம் புகுந்ததால் பெரும் பெரும் புரட்சிகள் ஏற்படலாயின. இப் புரட்சிகளால்தான் 'உலக வர்த்தகமும்' 'உலக அரசியலும்' நடைமுறைக்கு வர முடிந்தது. இன்று உருவாகியிருக்கும் உலகப் பொருளாதாரம், உலக அரசியல் முறை ஆகியவற்றின் குழவியே (அனைவரும் பேசும்) பெருஞ் சமுதாயம் ஆகும். இப் புரட்சிகளினால்தான் மார்க்ஸீயக் கூற்றிற்கு எதிராகப் பணக்காரர் முன்னைவிடப் பணக்காரர்களாகவும், ஏழைகள் முன்னைவிட எளிமை குறைந்தவர்களாகவும் திகழ்ந்துவருகிறார்கள். அட்லான்டிக் மகாசமுத்திரத்தின் இரு கரைகளிலும் மக்கள் கூட்டம் மாண்புற வாழ்ந்துவந்தது. அவர்களின் உடல் நிலையும் வசதியும் முன்காலத்தில் கனவில்கூடக் கண்டிராத அளவுக்கு உயர்ந்த நிலையை அடைந்தன. வல்லரசுகளின் உற்பத்தியும் ஜனத்தொகை வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்து சென்றதால், போருக்குத் தேவையான பொருள்களையும் தேவைகளையும் சமாளிக்க முடிந்தது. பொருள் வளமும் ஆள் வளமும் (சமீப காலம்வரை) தேவைக்கும் அதிகமாகவே உற்பத்தி செய்யப்பட்டன. வையத்தில் வாழ்வோர் அனைவரும் அவர்கள் விரும்பினார்களோ இல்லையோ, முன்னையெல்லாம்விட மிக அருகில் நெருங்கிவந்தார்கள்; வண்ண வண்ண நூல்களால் நெய்யப்பட்ட ஒரே துணிபோல் ஆனார்கள். அது ஒவ்வொரு தலைமுறைக்குப் பின்னரும் பல வண்ணப் பூக்களையுடைய ஒரே துணிபோல் ஆகிவிட்டது. பச்சையாகச் சொல்லவேண்டுமானால், உலக மக்கள் வரவர ஒற்றுமையுடன் வாழ்ந்துவரலானார்கள். எத்தனையோ வேற்றுமைகள் அவர்களுக்குள் நிலவியும் ஒற்றுமை ஒளிவீசத் தொடங்கிற்று.

மனித சமுதாயத்தை மீண்டும்மீண்டும் தனி இறைமையுடைய அரசுகளாக அரசியல் துண்டாடும் முறையும், விஞ்ஞானம், தொழில் நுணுக்கக் கலை, வியாபாரம் ஆகியவற்றால் உருவாகியுள்ள உலக ஒற்றுமையும் ஒத்துப்போகா. இவ்வுண்மையைத் தத்துவ அறிஞர் கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். அரசர்கள் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ளார். அது தெரிந்த விஷயம்தான். மனிதனின் ஊழ்வினை 'இது', 'அல்லது' என்பதற்கே இடம் தராது. ஏனெனில், பல பண்பாட்டுக் கூட்டங்கள் ஒன்றோடொன்று கலப்பதால், அவை களின் வேற்றுமைகள் மாறி, ஒரு புதிய விநோதமான பண்பாட்டுக் கலவை ஏற்பட்டுவிடுகிறது. பண்பாட்டுக் கலப்பிற்குமுன் உள்ள வேற்றுமைகளைக் குறிப்பிட்டுப் பேசுவோர் இதை முதலில் உணர்வ தில்லை. அவர்களுக்கு உணரவும் தெரியாது. ஆனபோதிலும், மேற் கத்திய அரசு முறையும் உலக நாகரிகமும் ஒன்றைவிட்டு ஒன்று நிலை யாகப் பிரிந்து செல்லும் கட்டத்தை அடைந்துவிட்டன, அல்லது அடைந்துவிடும் என்று சொன்னால் தகும். மேற்கத்திய அரசுமுறை உலக நாகரிகத்தின் ஓர் அங்கம் என்பது இங்கு நினைவிலிருக்க வேண்டும்.

விஞ்ஞானிகள், பொறியியல் வல்லுநர்கள், மற்றும் உலகச் சந்தையில் பொருள்—பண்டங்கள் விற்பனை செய்யும் வியாபாரிகள் ஆகியோர் தம்முடைய அரும்பெருஞ் செயல்களால் உலகப் பொருளா தாரத்தையும் உலக சமுதாயத்தையும் உருவாக்கியுள்ளனர் என்று மேலே கண்டோம். மனிதர் அவற்றின் பலாபலன்களைப் பேணிக் காத்தாலும் காக்கலாம்; மேன்மேலும் அவற்றை விருத்தி செய்தாலும் செய்யலாம்; அல்லது இவ்வறவழி துறந்து மறவழி சென்றாலும் செல்லலாம். சர்வதேசக் குழப்பம், வலிமை அரசியல், பொருளாதார நாட்டுணர்ச்சி, போர் போன்ற பண்டைய வழிகளில் சென்றாலும் செல்லலாம். இவ் வழியை அவர்கள் என்றுமே கைவிட்டதில்லை. இரண்டையும் அவர்களால் செய்ய முடியும் என்பது இயலாதகாரியம். ஏனெனில், ஏதாவது ஒரு வழியில் செல்ல உறுதி பூண்டுவிட்டால் மற்றதைக் கைவிடும்படிதான் நேரிடும் அல்லவா? ஒரே சமயத்தில் இரு வழிகளிலும் இறங்கினால் தோல்வியும் மனமுறிவுமே ஏற்படும். அதோடுமட்டுமல்லாமல் இவற்றால் ஆக்கிரமிப்பும், நாகரிகத்தையே நாசம்செய்யக்கூடிய பைத்தியமும், பலாத்காரமும்தாம் கோரநடனம் ஆடும்.

உயர் சமுதாயம் இன்னும் ஒன்றுபட்ட உலக சமுதாயமாக மாற வில்லை என்ற உண்மையை உள்ளத்தில் கொண்டே இச் சோக முடி வுக்கு வருகிறார்கள் சிலர். மேற்கில் உதயமான ஐரோப்பிய நாகரிகத் திற்கும், அமெரிந்தியர், ஆசிய மக்கள் நாகரிகத்திற்கும் இடையே கொடுக்கல்வாங்கல் பல நூற்றாண்டுக் காலமாக இருந்துவருகிறது. இதிலிருந்து fashions, பழக்கவழக்கங்கள், பழிச்செயல்கள் ஆகியன

பிறந்தன. இன்று உலகில் வாழ்ந்துவரும் மக்கள் அனைவரிடமும் இவற்றில் சிலவற்றைப் பொதுவாகக் காணலாம். தம்பலம் போடல், மது அருந்தல், காப்பி, தேநீர் குடித்தல், ஈறுகளைச் சுவைத்தல், (அபின் போன்ற) மயக்க மருந்துகள் (narcotics), மக்காச் சோளம், உருளைக்கிழங்கு சாப்பிடுதல், ரப்பர், பீங்கான், இரும்புக் கருவிகள், அழகு சாதனங்கள், வாசனைத் திரவியங்கள் இவற்றைப் பயன்படுத்துதல் இதற்குச் சான்றாகும். உலகமே நுகரும் இப் பொருள்கள் வாழ்க்கையையே தாங்கினாலும் தாங்கலாம், அல்லது அதைச் சிறப்படையச் செய்யலாம், அல்லது இழிவாக்கியும் விடலாம். மேலும், இவற்றின் உற்பத்தியாலும் விற்பனையாலும் மக்கள் குலமே இன்று ஒன்றுபட முடிகிறது. ஆனால், இவ்வொற்றுமை பொதுவான நோக்கங்கள், கருத்துகள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் சின்னங்களின்மீது மனிதகுலம் பற்றுறுதி வைக்குமாறு ஐக்கியப்படுத்தவில்லை. மேற்குலக விஞ்ஞானமும் தொழில்நுணுக்கக் கலையும் ஈந்தளித்திருக்கும் அச்சு, நீராவி எந்திரங்கள், தந்தி, மின்விசை, உள்ளே எரியும் எந்திரங்கள் (internal-cumbustion engines), ஜெட் எந்திரங்கள், திரைப்படங்கள், வானொலி, டெலிவிஷன் ஆகிய நூதனங்கள் உலகில் ஒவ்வொரு கோடியிலும் வாழ்ந்துவரும் மக்களுக்கு நல்வாழ்வு அளித்தாலும் அளிக்கலாம், அல்லது கேடு இழைத்தாலும் இழைக்கலாம். இவ்வுண்மையையும் எவரும் மறுக்க முடியாது. ஆனால், மனிதகுலம் வழிபாடு, வகுப்பு, பொருளாதாரம் முதலிய நிலைகளால் பிளவுண்டு கிடக்கும்வரை செய்தியறிவிப்பு, தொழிற்சக்தி சாதனம் முதலியவற்றால் அதை ஒன்றுபடுத்த முடியாது. இவ் வேறுபாடுகள் ஒன்றோடொன்று போட்டியிடும் நாட்டுணர்ச்சிகள், ஏகாதிபத்தியங்கள், கருத்துக் கொள்கைகள் ஆகிய இவற்றில் பிரதிபலிப்பதைக் காணலாம். எனவே, ஒற்றுமை அல்லது அழிவு என்ற இரண்டில் ஒன்றை மனிதன் தேர்ந்தெடுத்தாகவேண்டும் என்பதை, இதுகாறும் மனிதன் கண்டுபிடித்தவற்றுள் மிக முக்கியமானதும், முதன்முதலில் அவன் பயன்படுத்தக் கற்றுக்கொண்டதுமான 'தீ' ஒன்றே பறைசாற்றுகிறது.

1942ஆம் ஆண்டு, டிசம்பர் 2ஆம்நாள். இடம்: சிக்காகோ சர்வகலாசாலையிலுள்ள ஸ்டாக்ஃபீல்டு என்ற இடத்தின் மேற்குக் கோடி. இங்கு ஒரு முக்கியமான நிகழ்ச்சி நடைபெற்றது. ஏதோ விளையாட்டு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி என்று நினைத்துவிட வேண்டாம். ஒரு பரம ரகசியத் திட்டம் உருவான நாள் அது. அதற்கான ஆயத்தம் 1939ஆம் ஆண்டு இறுதியிலேயே துவக்கப்பட்டது. அலெக்சாண்டர் சாக்ஸ் என்பவர் (உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி) ஐன்ஸ்டெயினிடமிருந்து ஒரு கடிதத்தை வாங்கிக்கொண்டு ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைச் சந்திக்கச் சென்றார். ஒரு புதிய ஆராய்ச்சியில் இறங்குவதற்கு ஊக்கம் அளிக்குமாறு அவர் ஜனாதிபதியைத் தூண்டினார். அத் திட்டம் எது தெரியுமா? 'பதில் பொருள்கள் வளர்ச்சி' என்ற

புனைபெயர் அதற்கு அளிக்கப்பட்டது. யு.எஸ். படையைச் சேர்ந்த பொறியியல் வல்லுநர்கள் மண்ஹாத்தான் மாவட்டத்திலிருந்து அத் திட்டத்தை நடத்தி வந்தார்கள். அதன் செலவு 2,000,000,000 டாலர் பிடிக்கும் என்று கணக்கிடப்பட்டது. பிரிகேடியர் ஜெனரல் லெஸ்லீ ஆர். குரோவ்ஸ் என்பவர் அதன் இயக்குநர் (Director). முதன் முதலில் இத்திட்டத்தைச் சேர்ந்தவர்களில் பௌதிக வல்லுநரும், இரசாயன வல்லுநருமே (Physicists and chemists) இருந்தனர். பின்னர் திட்டம் செய்யும் ஆள் தொகுதியில் (personnel) பொறியியல் வல்லுநர்கள், கார்ப்பொரேஷன் (கூட்டுக் கழக) நிர்வாகிகள், ஆயிரக் கணக்கான வேலையாட்கள் முதலியோர் சேர்க்கப்பட்டார்கள். இவர் களில் பெரும்பாலோர்க்குத் திட்டம் எதைப்பற்றியது என்பதே தெரி யாது (ஒரு சிலரே அறிந்திருந்தனர்). அப்படி இருந்தும் அவர்கள் அனைவரும் இரகசிய உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

(ஸ்டாக்பீல்டு நிகழ்ச்சிக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தவர் என்ரிக்கோ பெர்மி என்பவர்) இவர் 'உலோக சோதனைக் கூடத்தைச் (laboratory) சேர்ந்தவர். இச் சோதனை கிராபைட் (graphite) எனப்படும் பென்சில் கரிக் 'குவியல்' மீது நடத்தப்பட்டது. கிராபைட்டுக்கு இடையிடையே பின்னல் செய்யப்பட்ட யுரேனியமும் (uranium), காட்மியத்தின் (cadmium) அசையக்கூடிய துண்டுகளும் வைக்கப்பட்டிருந்தன. இத் துண்டுகள் 'கட்டுப்பாடுகளாக' வைக்கப் பட்டிருந்தன. இப் பொருள்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டதும், அக் குவியல் வேண்டிய அளவுக்கு உயர்ந்துவிட்டது. உடனே அது உஷ்ணத்தை (heat) உற்பத்தி செய்தது. பிறகு யுரேனியத்தை வேறொரு புதிய பொருளாக—'ப்ளூட்டோனியம்' மாற்றியது. இந் நடைமுறை தொடர்ந்து ஒரே வேகத்தில் நடைபெற்றது. பொருள்களை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றவேண்டும் என்று ஆதிகாலந்தொட்டுக் கனவு கண்டுவந்தான் மனிதன். அக் கனவு இச் சோதனையால் நனவாகிற்று. இச் சோதனை தன்னைத் தானே தாங்கவல்ல, தொடர்ச்சியான எதிரியக்கத்தை ஏற்படுத்த வல்ல அணுசக்தியை உற்பத்தி செய்தது. இவ் விளைவுகள் மனித குலத்தை, இதுவரை கண்டிரா நவயுகத்திற்கே அழைத்துச் செல்ல வழி வகுத்தது எனலாம். மனிதன் எப்படி விரும்புகிறானோ, அப்படி அது சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றாலும் செல்லும், அல்லது நரகத்துக்கு இழுத்துச் சென்றாலும் செல்லும்.

நெருப்பைத் தங்களுக்குக் கட்டுப்படுத்த முயன்ற ஹோமோ சேப்பியர் (மனிதர்), உயிர் கூட்டுப்பொருள்களில் (organic compounds) உள்ள கூட்டணுக்களை (molecules) மீண்டும் சரிப்படுத்தி, அதிலிருந்து ஆக்ஸிஜன் ஏற்றம் (oxidation), அல்லது எரிதல் (combustion) மூலம் வெளியாகும் சக்தியைப் பயன்படுத்தக்

கற்றுக்கொண்டனர். மின்சாரத்தைக் (electricity) கண்டுபிடித்த போது, மனிதன் அணுக்களின் (atoms) உட்கருக்களைச் (nuclei) சுற்றியுள்ள எலக்ட்ரான் (electrons) எனப்படும் மின் அணுக்களின் இடமாற்றத்தால் வெளியாகும் சக்தியைப் பயன்படுத்தவும் கற்றுக் கொண்டுவிட்டான். அணுப்பிளவைக் (nuclear fission) கண்டு பிடித்தானே இல்லையோ, அணுவிலேயே புதைந்திருக்கும் சக்தியைப் பிரயோகிக்கவும் அவன் கற்றுக்கொண்டான். இச் சக்தி (அணு சக்தி) மற்றெல்லாச் சக்திகளைச் சேர்த்தாலும்கூட அவற்றையெல்லாம் விடப் பெரிய சக்தியாகும். இவ்வுண்மை ஒருபுறம் நல்ல நம்பிக்கை ஒளிக்கதிர்களை அள்ளி வீசுகிறது. ஆனால், மற்றொருபுறம் இக் காலத்திற்கேயுரிய அழிவைப் பெய்யும் அபாயத்தையும் அது நினை வூட்டுகிறது.

அணுச்சிதைவின் (nuclear disintegration) இயற்கைத் தன்மை முதன்முதலாக 1890—1900-ல் கண்டுபிடிக்கப்பட்டது. அரிதான உலோகமான ரேடியத்தைப் (radium) பற்றி ஆராய்ச்சி நடத்திவந்த போது, எச். பெக்கொரல், பியரி, மேரிக்யூரி ஆகியோர் இதைக் கண்டு பிடித்தனர். பொருளும் (matter), ஆற்றலும் (energy) அடிப்படை யான ஒரு பொருளின் (basic unity) இரு வெவ்வேறு உருவங்கள் ஆகும் என்று கண்டுபிடித்தவரும், அவை இரண்டுக்கும் இடையே யுள்ள தொடர்பை முதன்முதலில் வரையறுத்தவரும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்ற (புகழ்பெற்ற) விஞ்ஞானியாவார். கணக்கியல் கழித்தலைப் போட்டுக்கொண்டிருந்தக்கால், ஒருநாள், அவர் பொருள் ஆற்றலாக (சக்தியாக) மாறும்போது ஏற்படும் விளைவை $E=mc^2$ என்ற சமன்பாட்டால் விளக்கலாம் என்று 1905-ல் எழுதினர். இச் சமன்பாட்டில் வரும் E ஆற்றலையும், m பொருளையும் (mass), c ஒளி வேகத்தையும் (ஒரு வினாடிக்கு 187,000 மைல்) குறிக்கிறது.

ஒரு கிலோகிராம் (2·2 பௌண்டு) நிலக்கரிப் பொருள்கள் 8·5 கிலோவாட் மணி உஷ்ண சக்தியை உண்டாக்குகிறது. ஒரு கிலோகிராம் நிலக்கரி, ஐன்ஸ்டீனின் விதிப்படி, முழுதும் சக்தியாக மாற்றப்பட்டால், அவ்வுஷ்ண சக்தி சுமார் 25,000,000,000 கிலோ வாட் மணிகள் ஆகும். யு.எஸ்.ஏயின் மொத்த மின்சக்தித் தொழிற் சாலைகளின் 2 மாத உற்பத்திக்கு அது சமம் ஆகும். ஆனால், நடை முறையில் அத்தகைய முழு மாற்றம் அல்லது 'அழிவு விளைவு' ஏற்படுவதில்லை. சூரியனிலும் நட்சத்திரங்களிலும் மூலக அளவில் (periodic scale) குறைவாக இருக்கும் தனிமங்கள் (elements), (உதாரணமாக ஹைடிரஜன்), அணுச் சிதைவால் வேறு தனி மங்களாக (சான்ருக, ஹீலியமாக) மாறும்போது, அப் பொருளில் ஒரு சிறு பாகம் (1 சதவீதம்) வேருெரு பொருளாக மாறுமலேயே இருந்துவிடுகிறது. ஆனால், இதனால் ஏற்படும் எதிரியக்கத்தால்

(reaction) உஷ்ணமும் ஒளியும் உண்டாகின்றன. அணுப்பிளவில் சங்கிலிபோல் தொடர்ந்துவரும் எதிரியக்கத்தில், மூலக அளவில் அதிகமான தனிமங்கள் (உதாரணம், யுரேனியம் 235 அல்லது 233, தோரியம், அல்லது ப்ளூட்டோனியம்) ஒரு கனத்த அணுக்கரு (nucleus) நியூட்ரான்களாக வெடிக்கும்போது, அது இரு சமப்பொருள் துண்டுகளாகப் பிளந்து போய்விடுகிறது. அதனுடன் வேறு நியூட்ரான்களும் வெளிப்படுகின்றன. அவை மற்ற அணுக்கருக்களை அதுபோல் பிளக்கின்றன. அதிலிருந்து வெளிப்படும் நியூட்ரான்கள் இதுபோல் பெருக்கல் விகிதத்தில் அணுக்கருக்களைப் பிளந்து கொண்டே செல்கின்றன. ஆனால், இந்த அணுப்பிளவு ஏற்பட வேண்டுமானால், நியூட்ரான்கள் தப்பிச் சென்றுவிடாதபடி தடுக்கப் படவேண்டும். அசுத்தங்களாலோ (impurities) அல்லது சங்கிலி போல் தொடர்ந்த எதிரியக்கத்தை உண்டுபண்ணுத ஐசோ-டோப்புகள் (Isotopes) எனப்படும் ஓரகத் தனிமங்களாலோ (உதாரணம், யுரேனியம் 238) நியூட்ரான்கள் தங்களைத் தாங்களே உற்பத்தி செய்ய முடியாமல் உட்கவர்ந்துவிட்டால், இந்த அணுப்பிளவு ஏற்பட முடியாது. இந்த அணுப்பிளவால் உண்டாகும் பொருள்களின் கனம் (எடை) ஆரம்பத்தில் இருந்த பொருளின் எடைக்குச் சற்றுக் குறைவாக இருக்கும். பொருளின் $\frac{1}{1100}$ பகுதியே சக்தியாக மாறுகிறது. ஆனால் அப் பொருளுடன் ஒப்பிடுங்கால் இச் சக்தியின் ஆற்றல் அவ்வளவு அதிகமாக இருப்பதால், ஒரு பவுண்டு U-235 அல்லது ப்ளூட்டோனியம் முழுதும் பிளக்கப்பட்டால், அதிலிருந்து வெளியாகும் சக்தி 1,800,000 பவுண்டு கேசலின் (பெட்ரோல்), அல்லது 2,800,000 பவுண்டு நிலக்கரி எரியக்கூடிய சக்திக்கு, அல்லது 26,000,000 பவுண்டு TNT வெடிக்கக்கூடிய சக்திக்குச் சமமாக இருக்கும்.

சுத்தமான U-235-வின் சிறிய துண்டு அல்லது ப்ளூட்டானியம் சங்கிலிபோன்ற தொடர்ந்த எதிரியக்கத்தை ஏற்படுத்தாது. ஏனெனில், உலோகத்தின் மேல்பரப்பு மூலமாகத் தப்பித்துச் சென்று விடும் நியூட்ரான்கள், அணுக்கருக்களின் பிளவுகளால் உண்டாகும் நியூட்ரான்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகிவிடுகிறது ஆனால், 'கிரிடிகல் சைஸ்'ஐவிடப் பெரிதான, 'தடைப் பொருள்கள்' (retarding agents) இல்லாத, அல்லது அப் பொருளிலேயே 'கட்டுப் படுத்தக்கூடிய'—அடக்கக்கூடிய (control) பொருள் எதுவும் இல்லாத ஒரு பெரிய துண்டைச் சோதனைக்கு எடுத்துக்கொண்டால், அதில் விரைவாகவும் அதிகமாகவும் சங்கிலித் தொடர் எதிரியக்கம் ஏற்படுவதைக் காணலாம். ஆனால், இதிலிருந்து வெளியாகும் சக்தி அப் பொருளைச் சிறு சிறு துண்டுகளாக நொறுக்கிவிடுவதால், எதி ரியக்கம் திடீரென்று நின்றுவிடுகிறது. மிகச் சிறிதாகவும் மிகப் பெரி தாகவும் இல்லாத நடுத்தர (உத்தம) வடிவில் இருக்கும் இரு சிறு

துண்டுகளாகப் பார்த்து எடுத்துக்கொள்ளவும். உட்கவர்தலைக் (absorption) குறைக்கக்கூடிய அல்லது தப்பியோடும் நியூட்ரான்களின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சத்துக்குக் குறைக்கக்கூடிய ஒரு கனத்த பொருளாலான மூடிக்குள் அவற்றை (அத் துண்டுகளை) வெகு வேகத்தில் ஒன்றை ஒன்று எரியச் செய்தால் சங்கிலித்தொடர் எதிரியக்கம் ஏற்படும். எதிரியக்கம் அந்தக் கூட்டுப் பொருளுக்குள் (combined lump) நுழையும். ஆனால், எஞ்சியுள்ள பொருள் பிளவுபடாத துண்டுகளாகத் தனியே வீசப்படுவதற்கு முன்னதாகவே இந்த நுழைவு (penetration) ஏற்பட்டுவிடும். இந்த எதிரியக்கம் ஒரு வினாடியில் மில்லியனில் ஒரு பாக நேரத்திற்குள் நடந்து முடிந்து விடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் பிளக்கும் தன்மை வாய்ந்த துண்டுகளுக்கு ஒரு டிரிலியன் டிகிரி வெப்பநிலை (temperature) அளவுக்கு வேகம் இருக்குமாம். இதிலிருந்து 30 புதிய தனிமங்கள் உண்டாகின்றனவாம். அவற்றில் பெரும்பாலானவை கதிரியக்கம் (radioactive) உள்ளதாக இருக்குமாம். இவற்றையல்லாமல் வெவ்வேறு வேகங்களிலும் அளவுகளிலும் கதிரியக்கம் ஏற்படுமாம். இதிலிருந்து உண்டாகும் சக்தியின் திறனிலும், தன்மையிலும் 'வெடித்தல்' (explosion) ஏற்படுவது, உலகில் இதுவரை மனிதன் கண்டுபிடித்துள்ள எரிதல், வெடித்தல்கள் ஆகிய எல்லாவற்றையும்விடக் கணக்கிட முடியா அளவுக்கு அதிகமாக இருக்குமாம். அழிவுக் கலைகளிலேயே இதுபோன்ற வெடிக்கும் சக்தியை இதுவரை மனிதன் கண்டுபிடித்ததில்லையாம்.

வெடிக்கும் உருவத்தில் அணுசக்தி எதிரியக்கம் சங்கிலிபோல் தொடர்ந்து ஏற்படும் என்று யு.எஸ்.ஏ. சோதனை செய்து காட்டியதோ இல்லையோ, அணுகுண்டின் 'ரகசியம்' அணுசக்தி பௌதிக வல்லுநர் எங்கிருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் தீப்போல் பரவி விட்டது. ஆனால், இந்த ரகசியம் வெளியாகவில்லை என்று அனேகம் பேர் தவருக நினைத்துவந்தார்கள். 1945-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட 'ரகசியங்கள்' குண்டோடு சம்பந்தப்பட்டனவல்ல, ஆனால் யுரேனியத் தாதிலிருந்து (ove) பெரு மளவு பிளக்கும் தன்மைவாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்நடைமுறைகளைப் பொறுத்தனவாகும். இயற்கை யுரேனியத்திலுள்ள ஐசோடோப் U-235, ஐசோடோப் U-238-ன் 140-ல் ஒரு பாகந்தானிருக்கிறது. U-238 மெதுவான ரியாக்டரால் (Reactor) ப்ளூட்டோனியமாக மாற்றப்படுகிறது. ஆனால், இம் மாற்றத்தின் வேகம் மிகமிகக் குறைவாக இருப்பதால், இம் முறைமூலம் அணுகுண்டு தயாரித்தல் இயலாத காரியமாகும். U-238-லிருந்து யுரேனிய குண்டுகள் தயாரிக்கும் அளவுக்கு U-235ஐ எப்படிப் பிரித்தெடுப்பது என்ற பிரச்சினை 1942-43-ல் நிலவிவந்தது. யுரேனியத்திலிருந்து இரசாயன வழிகள்மூலமாக ப்ளூட்டோனியத்தைப்

பிரித்து எடுத்துவிட முடியும். ஆனால், அதுபோல் U-238-லிருந்து U-235ஐப் பிரித்தெரிக்க முடியாது. ஏனெனில், இரண்டும் ஒரே பொருளின் இரு வெவ்வேறான உருவங்கள் ஆகும். ஆனால், இச் சிக்கலுக்கு இறுதியாக (டெனிசியிலும் ஆன்பர்டு வாசிங்டனிலும் முள்ள) ஓக் ரிட்ஜ் என்ற இடத்திலுள்ள மாபெரும் தொழிற்சாலைகளில் தீர்வு காணப்பட்டது.

இச் செய்முறைகளை (process) ஹென்றி டி உல்ப் ஸ்மித் தம் முடைய அதிகாரபூர்வமான அறிக்கையில் சாதாரணச் சொற்களைக் கையாண்டு விவரித்திருக்கிறார். யுரேனிய உலோகத்தை இரசாயன முறையில் ஃப்ளோரினுடன் சேர்த்தால், அது யுரேனியம் ஹெக்ஸா புளோரைடு என்ற ஆவியாக (gas) மாறும். அப்போது யுரேனியத்திலுள்ள ஐசோடோப்புகளைப் பிரித்தெடுத்து, அதை ஆவிப்பரவல் (gaseous diffusion), புறமுக விசை (centrifugation), அணுப்பரவல் (thermodiffusion) வாயிலாகச் செறிவாக்க (concentration) முடியும். இது ஒரு நீண்ட கடினமான செய்முறையே என்றாலும், பல யுரேனிய குண்டுகள் செய்வதற்கான U-235 இதன் மூலம் பிரித்தெடுத்திருக்கிறார்கள். இதே நடைமுறை மூலம் U-238-லிருந்து அதிக அளவு ப்ளூட்டோனியம் தயாரிக்க முடிந்தது. ஆகையால் முதலில் வெடிக்கப்பட்ட இரு குண்டுகளையும் தவிர, மற்றெல்லா அணுகுண்டுகளும் ப்ளூட்டோனியம் குண்டுகள்தாம்.

இதனுடன் ஒரு புதிய தொழிற்சாலையே தோன்றிவிட்டது எனலாம். அது முதன்முதலில் யு.எஸ்.ஏ.யில்தான் தோன்றியது. மற்ற எல்லா இடங்களிலும் அதைச் 'சமூகச் சொத்தாக' அரசு நிர்வாகம் செய்துவந்தது. ஏனெனில், இதற்கு வேண்டிய மூல தனத்தைத் தனியார் கொடுத்துக் கட்டுபிடியாகாது. அதோடல்லாமல் வர்த்தகக் கண்ணோட்டத்துடன் பார்க்குங்கால் வெகுகாலம்வரை இலாபமே தராத பொருளை உற்பத்தி செய்யும் பொறுப்பைத் தனியார் ஏற்க முன்வாரார் அல்லவா? சுமார் ஒன்றரை மில்லியன் டாலர் முதலீடு செய்து, யு.எஸ்.ஏ. அரசாங்கம் 1943-ல் ஓக் ரிட்ஜ் தொழிற் சாலையிலிருந்து U-238-லிருந்து U-235-ஐத் தயாரித்துவந்தது. ஒரு பில்லியன் டாலருக்கும் அதிகமான தொகையை மீண்டும் முதலீடு செய்து, அவ் வரசாங்கம் ஆன்போர்டு (வாசிங்டனில்) என்ற இடத்தில் ஒரு தொழிற்சாலையை அதே ஆண்டு நிறுவியது. இது யுரேனியத்திலிருந்து ப்ளூட்டோனியத்தைப் பிரித்து எடுப்பதற்காக நிறுவப்பட்டது. மற்றோர் ஒன்றரை பில்லியன் டாலர் முதலீடு செய்யப்பட்டு, ஜார்ஜியா—தென் கலிஃபோர்னியா எல்லையில் 1950 நவம்பரில் ஒரு தொழிற்சாலையும், (கெண்டக்கிலுள்ள) படுவா என்னுமிடத்தில் ஒரு பில்லியன் டாலர் செலவில் மற்றொரு தொழிற்சாலையும் நிறுவப்பட்டன. ஓக் ரிட்ஜைப்போல் இங்கும் ஆவி பரவல் மூலம்

U-235-ஐத் தயாரிப்பதற்காக இப் புதுத் தொழிற்சாலை அமைக்கப் பட்டது. 1952, ஆகஸ்ட்டு மாதம் மற்றொரு U-235 தொழிற்சாலை ஓகியோ மாகாணத்திலுள்ள பிக்கி கவுன்டி என்னுமிடத்தில் ஒன்றே கால் பில்லியன் டாலர் செலவில் நிறுவப்பட்டது. வரவர இத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று. சோவியத் யூனி யனில் நிறுவப்பட்டுவரும் இத்தகைய தொழிற்சாலைகள் எங்கு, எவ் வளவு செலவில் அமைக்கப்படுகின்றன என்பதுபற்றிப் பொதுமக்க ளுக்கே தெரியாது. அதுபற்றிய தகவல்கள் வெளியிடப்படுவதில்லை.

இந்த அணு ஆயுத யுகத்தின் முதல் ஏழு ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட (அணு) குண்டுகளின் கதை சுருக்கமாகக் கால வரன் முறைப்படி கீழே தரப்பட்டுள்ளது :

1. 1945 சூலை 16. ஆல்புகர்க், என். எம்.-க்கு 120 மைல் தென்கிழக்கே இருக்கும் அலமாகோர்டோ விமான தளத்தில் முதல் யுரேனிய குண்டின் சோதனை எஃகு கோபுர உச்சியிலிருந்து நடை பெறுகிறது. டாக்டர் ஜே. ஆர். ஓப்பன்ஹீமர் அதன் டைரக்டர். மிகமிகப் பெரிய சப்தத்துடனும் அழுத்தத்துடனும் குண்டு வெடிக் கிறது. சூரியனிலும் அதிகப் பிரகாசமான ஒளி மின்னுகிறது. அதிலிருந்து பெரு நெருப்பு உண்டாகி, அது பல வர்ண, கொதிக் கும் ஆவியாக மாறி 40,000 அடி உயரத்திற்கு மேலே செல்கிறது. எஃகு கோபுரம் நீராவியால் சூழப்படுகிறது. எரிமலையின் வாயில் தரைமட்டம் கதிரியக்க எரிமலைக் கண்ணுடிக்குள் உருகிப்போய்விடு கிறது.

2. 1945 ஆக. 6. இடம் : சப்பானிலுள்ள ஹிரோஷிமா. அங்கு வாழும் சனத்தொகையின் எண்ணிக்கை 300,000. பூமியி லிருந்து 30,000 அடி உயரத்தில் எனோலா கேய் என்ற விமானம் பறந்துகொண்டிருக்கிறது. அதற்குள் 4,000 பவுண்டு எடையுள்ள அணுகுண்டு வைக்கப்பட்டிருக்கிறது. குண்டுக்குள்ளே 125 பவுண்டு U-235 வைக்கப்பட்டுள்ளது. இதுதான் முதல் முறையாகப் போரிலே பயன்படுத்தப்பட்ட குண்டு ஆகும். காலை நேரம். மணி 8 : 15, விமானத்திலிருத்து குண்டு வீசப்படுகிறது. 20,000 டன் T.N.T.க் குச் சமமான அளவு குண்டு வெடிக்கிறது. கண்ணைக் குருடாக்கி விடும் ஒளிப்பிழம்பு திடீரென்று நகரத்தின் நடுவிலிருந்து நூற்றுக் கணக்கான அடி உயரத்துக்கு மேலே செல்கிறது. அதைத் தொடர்ந்து பெரும் புகை மேகம் சூழ்ந்துகொள்ளுகிறது. அப் புகை மண்டலம் 40,000 அடி உயரத்துக்கு மேலே செல்கிறது. திடீ ரென்று வெளியான ஒளிப்பிழம்பால் எரியப்பட்டும், வெடியாலும், மேலே சென்ற நச்சுப் புகையிலிருந்து கீழே விழுந்த பொருள்க ளாலும், பெருந் தீயாலும் 78,150 பேர் இரையாகிவிடுகின்றனர் 13,983 பேர் காணுமற்போய்விடுகின்றனர். 37,425 பேர் காய

மடைந்துவிடுகின்றனர். அவர்களில் பலர் கதிரியக்க வியாதியால் இறந்துவிடுகின்றனர். 176,987 பேர் நோய்வாய்ப்பட்டு இல்லம் இன்றியும், பட்டினியிலும் வறுமையிலும் கிடந்து துடிக்கிறார்கள். ஹிரோஷிமா நகரைச் சேர்ந்த ஏறக்குறைய 5 சதுரமைல் இடங்கள் குண்டு வெடிப்பாலும், அதிலிருந்து பரவிய 'தீப்புயலாலும்' தரை மட்டமாகிவிடுகின்றன. 90,000 கட்டடங்கள் இருந்ததில் 62,000 அழிந்துவிடுகின்றன. 6,000 கட்டடங்கள் சேதமடைந்துவிடுகின்றன. எல்லாப் போக்குவரத்து, மின்சாரத் தொடர்புகளும் அறுந்துபோய் விடுகின்றன. அந்த நகரத்தில் இருந்த மருத்துவர்கள் மொத்தம் 200 பேர்கள்தாம். அதிலும் 180 பேர் குண்டுக்குப் பலியாகிவிட்டனர். மொத்தம் இருந்த 1,780 மருத்துவப் பணிப்பெண்களில் 1,654 பேர் இறந்தோ, காயமுற்றோ போய்விட்டனர். மொத்தம் இருந்த 45 மருத்துவ மனைகளில் எஞ்சியது மூன்றே மூன்றுதான். இதிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் அந்த நகரத்திலிருந்தே ஓடிவிடுகின்றனர். எஞ்சியோர் இறந்துவிட்டதால் 1945 நவம்பர் முதல் நாள் ஹிரோஷிமாவின் சனத்தொகை 137,000-ஆகக் குறைந்துவிடுகிறது.

3. 1945, ஆக. 9. சப்பானிலுள்ள நாகசாக்கி என்ற நகரம். அதன் சனத்தொகை 253,000 பேர். மிகப் பாதுகாப்பான கிராண்டு அரிஸ்ட்டே என்ற விமானம் அந்த நகர்மீது பறந்து சென்றுகொண்டிருக்கிறது. அதிலிருந்து ஒரு குண்டு வீசப்படுகிறது. அதன் எடை 11,000 பவுண்டு, காலை நேரம் : 11 : 02 மணி. அந்த குண்டுக்குள்ளே 12 பவுண்டு ப்ளூட்டோனியம் வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவு ஹிரோஷிமாவைப் போன்றதே. ஆனால், வெடித்தல் சத்தம் முன்னைவிடப் பன்மடங்கு அதிகம். ஆனபோதிலும் நகரத்திற்கு இடையே சிறுசிறு குன்றுகள் இருப்பதால் குண்டுக்குப் பலியானவர், அதனால் பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கை சற்றுக் குறைகிறது. எனினும், 35,000 பேர் இறந்துவிடுகின்றனர்; 40,000 பேர் காயமடைந்துவிடுகின்றனர்; மொத்தம் இருந்த 52,000 கட்டடங்களில் 14,000 இடிந்து தகர்ந்துவிடுகின்றன. நகரத்திலிருந்த மருத்துவமனைகளில் 80 சதவீதம் அழிந்துபோய்விடுகிறது.

4. 1946 சூலை 1. மார்ஷல் தீவுகள். இடம் : பிக்கினி அட்டோல் கடற்படை உபதலைவர், வில்லியம் எச். இ. பிளாண்டி தலைமையில் யு.எஸ். கடற்படைச் சோதனை நடைபெறுகிறது. 73 கப்பல்கள் கூட்டமாக நின்றுகொண்டிருக்கின்றன. அவற்றின்மீது விழுகிறது ஒரு குண்டு. அதில் 5 கப்பல்கள் நீரில் மூழ்கிவிடுகின்றன; 9-க்குப் பலத்த சேதம்; 45 கப்பல்களுக்குக் குறைந்த சேதம். ஒரே ஒரு கப்பல்தான் குண்டு வெடித்த இடத்திலிருந்து 1000 அடிக்குள் நின்றுகொண்டிருந்தது. குண்டிலிருந்து வெளிப்பட்ட உஷ்ணம்,

வெடித்தல், காமா ஒளிக்கதிர்கள் (Gama rays), மற்றும் நியூட்ரான்கள் ஆகியவற்றின் அளவுகளைக் கணக்கிடுங்கால், குண்டு வெடித்த இடத்திலிருந்து ஒரு மைலுக்குள் நின்றுகொண்டிருந்த கப்பல்களிலுள்ள ஆட்களுக்குப் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும் என்பதை அவை நிரூபிக்கின்றன. குண்டு வெடித்த இடத்திலிருந்து ½ மைல் விட்டத்திற்குள் இருந்தவர் அனைவரும் இறந்திருக்க வேண்டும், அல்லது பிழைத்து எழமுடியாத அளவுக்குக் காயமுற்றிருக்கவேண்டும்.

5. 1946, சூலை 25. அதே இடம் அணுகுண்டு வீச்சிலிருந்து எஞ்சிய கப்பல்கள் நடுத்தரமான ஆழத்தில் நின்றுகொண்டிருக்கின்றன. அதன்மீது ஒரு குண்டு விழுந்து வெடிக்கிறது. அரை மைல் அகலமும் ஒரு மைல் உயரமுமான (கப்பலின் படையின்) ஓரிடத்தில் குண்டு விழுந்து, அதனால்10,000,000 டன் எடையுள்ள தண்ணீர் ஆகாயத்தை நோக்கிச் சென்றுவிட்டுத் திரும்ப உப்பங்கழிகளில் வேகத்துடன் வந்து விழுகின்றன. அந்த வேகத்திலும் அழுத்தத்திலும் 30—100 அடி உயர அலைகள் உயர எழும்பிக் குறி வைக்கப்பட்ட கப்பல்கள் அனைத்தையும் தாக்குகின்றன. இதில் மூழ்கிய கப்பல்கள் பல. அவைகளில் அர்க்கன்சாஸ், நகாட்டோ என்ற போர்க் கப்பல்கள், சரோடோகா என்ற 'கெரியர்' கப்பல், நிற்கவைக்கும் கப்பல், நிற்கவைக்கும் விமானம், ஓர் எண்ணெய்க் கப்பல், பல நீர்மூழ்கிக் கப்பல்கள் அடங்கும். இவற்றையல்லாமல் ஏராளமான கப்பல்கள் சேதமடைந்துபோயின. எல்லாக் கப்பல்களுமே கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட கடல் தண்ணீரால் நனைந்து போய்விட்டன. கப்பல்களிலிருந்த ஆட்தொகுதியின் உயிருக்கே அது இறுதியில் பெருத்த கேட்டை விளைவிக்க இருந்தது. கதிரியக்கம் பரவுவதைத் தடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், உப்பங்கழிகளிலுள்ள தண்ணீரும் எஞ்சிய கப்பல்களும் பல மாதங்கள்வரை கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

6. 1948 ஏப்ரல் 7—8. மார்ஷல் தீவுகள் இனிவெட்டாக் என்ற இடம். 'மூன்று அணு ஆயுதங்கள்' பரம இரகசியமாகச் சோதனை செய்யப்படுகின்றன. சோதனையின் நோக்கமும் விளைவுகளும்பற்றி ஒரு தகவலும் அறிவிக்கப்படவில்லை, ஆனால், சோதனை 'வெற்றியாக' முடிந்துவிட்டது என்றும், அவ் வெற்றி 'நல்ல ஊக்கமளிக்கிறது என்றும்' அறிவிக்கப்படுகிறது.

7. 1949 பெப். 10. யு. எஸ். ஏ. தன்னுடைய 'அணு ஆயுதக் குவிப்பின்' அளவைத் தெரிவிக்கவேண்டும் என்று யு.எஸ்.எஸ்.ஆரும் பிரெயின் மக்மோஹன் என்ற செனட்டரும் வேண்டுகின்றனர். ஆனால், ட்ரூமன் அதை ஏற்க மறுத்துவிடுகிறார்.

8. 1949 செப். 23. 'ஒரு சில வாரங்கட்கு முன்னர் யு.எஸ்.எஸ்.ஆரில் அணு சோதனையால் வெடித்தல் ஏற்பட்டதாக நமக்குச் சான்று கிடைத்துள்ளது.....இவ்வாறு அந்த நாடு செய்யும் என்பதை நாம் என்றும் கவனத்தில் கொண்டிருந்தோம்' என்று ட்ரூமன் அறிவிக்கிறார். அதற்கு செனட்டர் மக்மோஹன் பின்வருமாறு பதிலிறுக்கின்றார்: 'அச்சத்தையும் பயத்தையும் நாம் தவிர்க்க வேண்டும். யு.எஸ்.ஏ. தன் வரலாற்றிலேயே இன்று மிக முக்கியமான மயக்கத்திற்கு ஆளாகி இருக்கிறதென்பதை நாம் அறிய வேண்டும்.' நவம்பர் 10ஆம் நாள் விஷின்ஸ்கி கூறுகிறார்: 'மலைகளைத் தரைமட்டமாக்கவும், கால்வாய்கள் கட்டவும், அடர்ந்த காடுகளை வெட்டிப் பாலைவனங்களை நீர்ப்பாசனப்படுத்தவுமே யு.எஸ்.எஸ்.ஆர். அணுசக்தியைப் பிரயோகித்து வருகிறது' (ஆனால், மேற்கு நாடுகள் இதில் ஐயம் கொண்டுள்ளன). இவ்வாறு பேசிவிட்டு யு.எஸ்ஸின் 'அணுசக்தி அரசியல் தந்திரத்தையும்', 'உலக ஆதிக்கத்திற்காக அது தீட்டிவரும் பைத்தியக்காரத் திட்டங்களையும்' கடுமையாக இடித்துரைக்கிறார்.

9. 1950 சன. ஹைடிரஜன் 'சூப்பர் குண்டு' பற்றிய வேலையைத் தொடர்ந்து செய்யுமாறு யு.எஸ். அணுசக்திக் குழுவுக்கு ட்ரூமன் ஆணையிடுகிறார். அணுசக்தி வெடிப்பினால் வெளியாகும் சக்தியைக் கொண்டு, ஹைடிரஜனின் ஓர் ஐசோடோப்பான டிரிட்டியம் என்பதை ஹீலியமாக அணுசக்தி எதிரியக்கத்தால் (சூரியனில் போன்று) மாற்றுவதுபற்றியது அவ்வேலை. இதனால் வெளிக்கிளம்பும் நச்சு சக்தி ப்ளூட்டோனிய குண்டிலிருந்து உண்டாகும் சக்தியைவிட 1000 மடங்கு அதிகம் இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. பௌதிக வல்லுநர் பலரின் கருத்துகள் பற்றி 'ஹைடிரஜன் குண்டால் உலக மக்களை அழிப்பது சாத்தியம்' என்ற தலைப்பில் நியூயார்க் டைம்ஸ் குறிப்பிட்டு, 1950 பெ. 7ஆம் நாள் எழுதியிருந்தது.

10. 1951 சன. 28. லாஸ்வென்காஸ் என்ற இடத்தில் யு.எஸ். அணுசக்திக் குழு பல சோதனைகள் நடத்துகிறது. அக்டோபர் இறுதியிலும் 1952, ஏப். 22ஆம் நாள் அன்றும் சோதனைகள் நடைபெறுகின்றன. இது 27ஆம் அணுகுண்டு சோதனை என்று யு.எஸ். அறிவிக்கிறது.

11. 1951. எனிவெட்டாக் என்ற இடம். மேலும் அணுசக்தி சோதனைகள் நடைபெறுகின்றன. ஹைடிரஜன் குண்டு, அணு ஆயுதங்களின் பயன், அணுசக்தி பீரங்கிப் (படைகளுக்கான) வெடி குண்டு இவைகளின் முன்னேற்றம் குறித்து அறிவிக்கப்படுகிறது.

12. 1951 ஆகஸ்டு 12. குரோட்டன் மின்சார போட் கம்பெனிக்கு யு.எஸ். கடற்படைத் துறை அணுசக்தி நீர்மூழ்கிக்-

கப்பல்கள் செய்வதற்காக முதல் ஒப்பந்தக் குத்தகை (contract) அளிக்கிறது. அதைத் தொடர்ந்து அணுசக்தி போர்க் கப்பல்கள், விமானங்கள் முதலியவை செய்வதற்காகவும் ஒப்பந்தம் வழங்கப்படுகிறது.

13. 1951 அக். 4. 'சோவியத் யூனியனில் மற்றோர் அணுகுண்டு வெடிக்கப்பட்டது' என்று ஒயிட் ஹவுஸ் அறிவிக்கிறது. வருங்காலத்தில் 'பலவிதமான' அணுகுண்டுகள் சோதிக்கப்படும் என்றும், அணுசக்திக் கட்டுப்பாடுபற்றி யு.எஸ். கொண்டுவந்த திட்டம் அவர்களுடைய காரியங்களைச் 'சட்டபூர்வமாக்கவும், சரியானதென்று நிரூபிப்பதற்காகவும்' கையாளப்படும் வழிகள் என்றும், 'சோவியத் யூனியன், யு.எஸ்.ஏ.யையோ, அன்றி வேறு எந்த நாட்டையோ தாக்கும் எண்ணம் கனவில்கூட இல்லை' என்றும் ஸ்டாலின் 'பிராவ்தா' செய்தித் தாளில் (அக். 6) ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்.

14. 1951 அக். 22. யு.எஸ்.எஸ்.ஆரில் மூன்றாவது 'அணுகுண்டு வெடிக்கப்பட்டுவிட்டது' என்று ஒயிட் ஹவுஸ் அறிவிக்கிறது.

15. 1952 அக். 3. ஆஸ்திரேலியாவுக்கு அப்பாலுள்ள மௌண்ட் பெல்லி தீவுகளுக்கு அருகே பிரிட்டன் தன் முதல் அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடிக்கிறது.

16. 1952 நவ. 1. எனிவெட்டாக் என்னுமிடத்தில் யு.எஸ். அதிகாரிகள் 'அணு ஆயுத ஆராய்ச்சி'ச் சோதனையை நடத்துகிறார்கள். அவை 'வெற்றிகரமாக' முடிந்துவிட்டன என்று அறிவிக்கப்படுகிறது. 'இவ் வழிவுச் சக்தியின் எதிர்பாரா அனுகூலங்களைப் பொறுத்தமட்டும் நாம் விரைவில் முன்னேறிச் செல்கின்றோம்' என்று ஒரு ஜனாதிபதி அறிக்கை கூறுகிறது. ஹைடிரஜன் ஐசோடோப்புகளின் 'சேர்க்கை' (fusion) எதிரியக்கத்தைத் தோற்றுவிப்பான் வேண்டிச் சேர்க்கைக் குண்டுகள் முதல் தடவையாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் 20,000,000 டி.என்.டி. அளவுக்குச் சமமான ஒரு ஹைடிரஜன் குண்டு தயாரிக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அத்தகைய குண்டு வெடிப்பதன் மூலம் 300 சதுர மைல்களையும், அதிலிருந்து பரவும் நெருப்பு மூலம் 1,200 சதுர மைல்களையும் நாசமாக்கிவிட முடியுமாம். அதுமட்டுமல்ல. உலகிலுள்ள மாநகரங்கள் அனைத்தும், அதன் கண் வாழும் மக்களும் ஒரே குண்டினால் மண்ணோடு மண்ணாகி அழிந்துபோவார்களாம். இவ் விளைவுகளின் கொடுமையை எந்த 'சிவில் பாதுகாப்பு' நடவடிக்கைகளாலும் குறைக்க முடியாதாம். இரண்டே இரண்டு நடவடிக்கைகள் மட்டும் சிறிது பலனளிக்கலாம். ஒன்று: குண்டின் குறிக்கோள் (இலக்கு) இடத்திலிருந்து, குண்டு போடுமுன்பே சனங்கள் ஓடிவிடுதல். இரண்டு: குண்டு வெடிப்பதைத் தடுத்தல்; இவற்றுலேயே ஏதாவது

செய்யமுடியும். இது முதலாவது நகர்ப்புற நாகரிகத்துக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும். இரண்டாவது தொழில் நுணுக்கச் சம்பந்தப்பட்டதோ அன்றி போர்ச் சூழ்ச்சி சம்பந்தப்பட்டதோ அன்று. இது ஓர் அரசியல் வெல்திறப் பிரச்சினையாகும்.

2. பௌதிக வல்லுநரும் அரசியல் தந்திரிகளும்

அமெரிக்காவில் நாம் பைத்தியக்காரர்களுக்கிடையே வாழ்ந்துவருகிறோம்... ..இந்தப் பைத்தியங்கள் கையில் ஒரு வால்மீன் (குண்டு) இருக்கிறது. தங்களின் நல்லுணர்வைப் பிறர் அறிவான் வேண்டி, இவர்கள் இதைக் குழந்தைகளின் வாண வெடிபோல் பாவித்துவருகிறார்கள். அதனுடன் விளையாடியும்வருகிறார்கள்; அதைச் சோதித்துப் பார்க்கிறார்கள்; இதைவிட வேகத்தில் செல்லக்கூடிய பெரிய வாண வெடிகளைப்பற்றிக் கனவு கண்டுவருகிறார்கள். இவற்றைக் கட்டுப்படுத்தும் விதிகளை இவர்களுடைய ஆசிரியர்கள் இவர்களுக்குக் கற்றுக்கொடுத்தாரில்லை. எனவே, குழந்தைகள், மத்தாப்பு, வெடி ஆகியவற்றை வெடித்து விளையாடுங்கால் என்ன சாக்கிரதை (அசாக்கிரதை)யுடன் இருக்கிறார்களோ, அதனினும் சாக்கிரதையாக இவர்கள் இருப்பதில்லை.....இப் பைத்தியங்களுக்கு நாம் ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கலாகாது? ஏன் நாம் அவர்களைத் தங்கள் மனம்போன போக்கில் நடக்கவிட வேண்டும்?..... இதற்கும் ஒரு காரணம் உண்டு. நாமும் அவர்களைப்போன்ற பைத்தியங்கள் தாம். நம் தலைவர்களின் பைத்தியக்காரத்தனம் அவர்களின் அறிவுடைமையையும் பொது அறிவையும் காட்டுவதாக நாம் நினைத்து வருகிறோம்; பாங்கு படுகொள்ளைபற்றிக் கேட்டோ, அல்லது சின்னஞ்சிறு மதலையின் கொடூரக் கொலைபற்றிக் கேட்டோ, அல்லது ரெயில் பாதைமீது வைக்கப்பட்டுள்ள நாசவேலை செய்யும் எந்திரத்தைப்பற்றிய செய்தியைக் கேட்டோ, மருந்துண்டவனைப்போல் கடைக்கண் பார்வையால் விழிக்கும் பொலீசைப்போன்று நாமும் அமைதியாக வாளா இருந்துவிடுகிறோம். செயலற்று நிற்பதே நம் பைத்தியக்காரத்தனமாகும்... .. அணுசக்திப் போர், இறுதியில் மூண்டுவிடுமாயின், பிறகு இவ்வுலகமே, உயிரினங்கள் அனைத்துமே மடிந்துவிடும் முகாமாக மாறிவிடும். மாநகரங்களனைத்தும் எல்லோரையும் எரித்துவிடும் நெருப்பாகி விடும். இதுவே பைத்தியங்கள் தலைவனுக்குப் பைத்தியக்காரன் செலுத்தும் இறுதி அஞ்சலியாகும். அத் தலைவனே, இப் பைத்தியம் எனப்படும் தூசியை, நம் கண்கள் குருடாகுமாறும், நம் புலன்கள் உணர்ச்சி இழக்குமாறும் தூவிவிட்டுத்தான் சாவான்'.—லூயிஸ் மம்போர்டு, தன்னுடைய 'கனவான்களே, நீங்கள் அனைவரும் பைத்தியம்!' (Saturday Review of Literature, 1946, மார்ச் 2) என்ற நூலில் இவ்வாறு வர்ணிக்கிறார்.

ஜூலை 16ஆம் நாள் நடத்தப்பட்ட சோதனையின் விளைவாக, ஹிரோஷிமா நகரம் அழிந்துவிட்டதாக ஆங்கிலோ-அமெரிக்க அதிகாரிகள் 1945 ஆக. 6ஆம் நாள் அறிவித்தார்கள். இதனுடன் அணுசக்தி யுகமும் தோன்றிவிட்டதாகக் கூறினார்கள். 'அண்டத்தின் இவ்வடிப்படைச் சக்தியைப் பயன்படுத்தவேண்டும்' என்று ஜனாதிபதி ட்ரூமனின் அறிக்கை கூறிற்று. வெளி விவகார அமைச்சர் ஸ்டிம்சன் அணுசக்தியின் வரலாற்றை ஆராய்ந்தார். சர்ச்சில் இது விஷயமாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபைக்கு அறிவித்தார். அணுசக்தி உற்பத்தி, அதன் பிரயோகம் ஆகியவற்றைப்பற்றிய விஷயங்களை 'நாட்டின் பாதுகாப்பை' முன்னிட்டு மிகவும் இரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை அனைவரும் உணர்த்தினர். உலக அரசாங்கத்தை இப்போது அமைப்பது சாத்தியம் என்றும், (அணு) குண்டினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சம் ஒன்றே அவர்களை இக் குறிக்கோளை எய்தச் செய்யும் என்றும் சான்சலர் ஹட்சின்ஸ் கருத்துத் தெரிவித்தார். 'நம்மைப்போல் மற்றெல்லா நாடுகளும் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆர்வத்தைக் காட்டும்வரை இந்த அணு ஆயுதங்கள் யு.எஸ். கட்டுப்பாட்டின்கீழ்த்தான் வைத்திருக்கவேண்டும்' என்று ஜெனரல் குரோவ்ஸ் (செப். 21) வலியுறுத்தினர். வர்த்தக அமைச்சர் ஹென்றி ஏ. வாலாஸ், அணுகுண்டுபற்றிய 'இரகசியங்களை ரஷ்யருடன் பங்கிட்டுக்கொள்ளவேண்டும்' என்று கூறியதாக வெளிவந்த பத்திரிகை அறிக்கைகளை ஜனாதிபதி ட்ரூமன் மறுத்தார். நிர்வாகக் (ஆட்சிக்) கொள்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் தம்மைத்தவிர வேறு யாரிடமும் இல்லை என்று அவர் ஒரேயடியாகக் கூறிவிட்டார். அணுகுண்டுபற்றிய இரகசியம் 'இரகசியம் ஆகாது' என்றும், எதிரியின் அணுஆயுதக் குவிப்பு எவ்வளவுதான் இருந்தபோதிலும், ஒருசில குண்டுகளாலேயே அவனை இன்று அழித்துவிடமுடியும் என்றும், ஆகையால் அணுஆயுதப் போட்டியில் எந்த நாடும் 'வெற்றிபெற' முடியாது என்றும், சர்வதேசக் கட்டுப்பாடு ஒன்றைத் தவிர மற்றவைகளால் இப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்றும், டாக்டர் ஜே. ஆர். ஓப்பன்ஹீமர் அக்டோபர் மாத நடுவில் எடுத்துரைத்தார். ராபர்ட் வில்சன், எச். ஜே. கர்ட்டிஸ் என்ற டாக்டர்களும் இக் கருத்துக்கு ஆதரவு அளித்தார்கள். அமெரிக்காவும் பிரிட்டனும் உலக அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக ரஷ்யாவை முன்வரும்படி அழைக்கவேண்டும் என்றும், அணுகுண்டுபற்றிய செய்திகளனைத்தையும் அவ்வரசாங்கத்திடம் ஒப்படைத்துவிடவேண்டுமென்றும் ஐன்ஸ்டெயின் (அக். 26) வலியுறுத்தினர்.

அணுகுண்டினால் ஏற்படவிருக்கும் அபாயத்தைப் போக்குவதற்கான உச்ச கட்ட சர்வதேசத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கான முயற்சி எதுவும் 1945 நவம்பர் மாத நடுவரையிலும் மேற்

கொள்ளப்படவில்லை. நவம்பர் 10ஆம் நாள் தலைமை அமைச்சர் அட்லியும், தலைமை அமைச்சர் மெக்கன்சி கிங் என்பவரும் ஜனாதிபதி ட்ரூமனுடன் வாசிங்டனில் உரையாடினர். அணுகுண்டு பற்றிய இரகசியத்தை (ரஷ்யா தன்னுடைய நல்லெண்ணம்பற்றிப் போதுமான உறுதிப்பாடுகள் அளிக்க முன்வந்தால்) பாதுகாப்புச் சபை உறுப்பினருடன் பகிர்ந்துகொள்ளலாமென்றும், அச்சபை கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்து, நிர்வாகம் செய்துவரவேண்டும் என்றும், அட்லி வலியுறுத்தியதாகக் கூறப்பட்டது. நவம்பர் 15ஆம் நாள் கூட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. 'அணுகுண்டு இதுவரை அறிந்திராத அழிவைப் பெய்யும் சாதனம். அதை எதிர்க்கத்தக்க போதுமான இராணுவப் பாதுகாப்பு இருக்க முடியாது. அதைப் (அணுகுண்டைப்) பொறுத்தமட்டும் எந்த ஒரு நாடும் தனியாகச் சுவாதீனத்துடன் விளங்கவும் முடியாது..... போரைத் தடுப்பதன்மூலமே நாசவழிகளில் பயன்படுத்தப்படும் விஞ்ஞான அறிவிலிருந்து நாகரிக உலகத்தை முற்றிலும் பாதுகாக்க முடியும்' என்று அவ்வறிக்கை கூறிற்று. 'ஆக்க (அமைதி) நோக்கங்கட்காக' விஞ்ஞான அறிவை நாடுகள் தமக்குள் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. ஆனால், பயன்தரக்கூடிய, பரஸ்பர, எல்லா நாடுகளும் ஒப்புக்கொள்ளக்கூடிய, அமலாக்கக்கூடிய பாதுகாப்புகளை வகுப்பதற்கு முன்னால், அணுசக்தியின் நடைமுறைப் பிரயோகம் குறித்துத் தனிப்பட்ட செய்திகளைப் பரிவர்த்தனை செய்துகொள்வது இயலாத காரியம் என்றும், அத்தகைய பட்சத்தில், 'இந்த அணுகுண்டுச் சிக்கலையே தீர்க்கமுடியாதென்றும் அறிக்கையில் உணர்த்தப்பட்டது.' 'நாசவேலைகட்காக அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கு எதிராகப் பயன்தரவல்ல, அமலாக்கக்கூடிய பாதுகாப்புகள் வகுக்கப்பட்டதும்' அணுசக்தியை நடைமுறைத் தொழில்துறையில் பயன்படுத்துவதுபற்றிய செய்திகளைத் தமக்குள் பரஸ்பர அடிப்படையில் பரிவர்த்தனை செய்துகொள்வதை அனைவரும் விரும்பினர். பொருள் மயக்கம்தரும் சொற்களும், தப்பித்துக்கொள்ள வழியுள்ள சொற்களும் இவ்வறிக்கையில் கையாளப்பட்டிருந்தன. ஆனபோதிலும், இவ் விஷயங்களில் சிபாரிசு செய்வதற்காக, ஐ.நா. ஒரு குழுவை நியமிக்கவேண்டும் என்ற நம்பிக்கையுடன் அவ்வறிக்கை முடிவடைந்தது. மேலும் அவ்வறிக்கை கூறிற்று:

அக் குழு வெகு விரைவில் தன் வேலைகளை முடிக்கவேண்டுமென்றும், அதன் வேலைகளின் பல்வேறு அம்சங்கள் குறித்துக் குறிப்பிட்ட நேரத்தில் சிபாரிசு செய்யவேண்டுமென்றும் அறிவுறுத்தப்படவேண்டும். அக் குழு கீழ்வரும் குறிப்பான விஷயங்களில் பிரேரணைகள் கொண்டுவரவேண்டும்:

(அ) ஆக்கத் துறைகளில் பயன்படுத்துவதற்காக அடிப்படை யான விஞ்ஞானச் செய்திகளை எல்லா நாடுகட்கிடையேயும் பரிவர்த்தனை செய்துகொள்ள வழிவகுக்குமாறும்;

(ஆ) ஆக்கத் துறைகளில்மட்டும் பயன்படுத்தப்படும் அணு சக்திக் கட்டுப்பாட்டைக் கொண்டுவருமாறும்;

(இ) ஒவ்வொரு நாட்டுப் பாசறைகளிலிருந்தும் அணு ஆயுதங் களையும் மற்ற நாச ஆயுதங்களையும் நீக்க வழி செய்யுமாறும்;

(ஈ) குழு வகுக்கும் திட்டங்களுக்கு அடிபணியும் அரசுகளை, அவற்றை மீறிநடக்கும் அல்லது அவற்றிலிருந்து தப்பிச்செல்லும் நாடுகளிடமிருந்து காப்பாற்றுவதற்கான வழிகளையும், மேற்பார்வை மூலம் பயன்தரும் பாதுகாப்புகளை அளிக்க வழி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இப் பொறுப்பையும் பணியையும் குழு, படிப்படியாக நிறை வேற்றவேண்டும். ஒவ்வொரு படியிலும் அது எடுக்கும் நடவடிக்கைகள் உலகிற்கு மனநிம்மதியும் ஊக்கமும் அளிக்க வேண்டும். இவ்வாறு ஒரு படி முடிந்த பின்னரே மற்றொரு படிக்கு ஏறவேண்டும். முதன்முதலில் இக் குழு, விஞ்ஞானிகளையும் விஞ்ஞானச் செய்திகளையும் பரிவர்த்தனை செய்வதில் குறிப்பான கவனம் செலுத்தவேண்டும். இரண்டாவது கட்டத்தில் கச்சரப் பொருள்களின் இயற்கை வளங்கள் குறித்து அறிவை வளர்ப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

வரவர அழிவு வேலைகளுக்காகவே விஞ்ஞானம் பெரிதும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இப் பயங்கர உண்மையை நாடுகள் அனைத்தும் மனத்தில் கொண்டு, முன்னைவிட தற்போது நாடுகட் கிடையே சட்ட ஆட்சி ஏற்படுவதன் அவசியத்தை உணர்ந்து, உலகிலிருந்தே போர் என்ற கடும்பகைவனை வேருடன் அறுத்தெறிய முன்வரவேண்டும். ஐக்கிய நாடுகள் சபைக்கு மனமார்ந்த ஆக்கமும் ஊக்கமும் அளித்தால்தான் இச் சீரிய பணியில் வெற்றி காண முடியும். அதோடல்லாமல் ஐ.நா.வின் அதிகாரத்தை மேன் மேலும் வலுப்படுத்துவதிலும் அதிகரிப்பதிலும் நாடுகளனைத்தும் மும்மரமாக ஈடுபடவேண்டும். அங்ஙனம் செயற்பட்டால்தான் பரஸ்பர நம்பிக்கை வளரும். பரஸ்பர நம்பிக்கை நிலவிவந்தால்தான் எல்லா மக்களும் அமைதியை வளர்ப்பதற்காகத் தங்களை அர்ப்பணிக்க முடியும். எனவே, எந் நிபந்தனையுமின்றி இக் குறிக்கோள்களை அடையப் பாடுபடவேண்டும் என்பதே நம்முடைய உறுதியான தீர்மானம்.

அணுசக்தியின் அழிவு வேலையிலிருந்து உலகைக் காக்கும் பிரச்சினையை இவ்விதி தீர்க்க முடியவில்லை. ஆனால், அது அதன்

தீர்வுக்கான ஒரு வழியை வகுத்துத் தந்தது. இதற்குப் பத்தாண்டுகள் கழிந்தும் இப் பிரச்சினை தீரவில்லை. இதற்கு இப் பிரச்சினையுடன் சம்பந்தமில்லாத சூழ்நிலைகள் என்று சொல்லப்படும், ஆனால் உண்மையிலேயே அதிலிருந்து (பிரச்சினையிலிருந்து) பிரிக்கமுடியாத சூழ்நிலைகளே காரணம். 1945-ல் இப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும்போல் தோன்றியது. நவம்பர் 16ஆம் நாள் சார்லெஸ்ட்டனில் பேருரை யாற்றிய பைரன்ஸ், 'அணு ஆயுதப்போரிலிருந்து நாகரிக உலகம் தப்பிப் பிழைக்க முடியாது. இது நம் தலைமுறைக்கே ஏற்பட்டுள்ள ஓர் அறைகூவல். அதைச் சமாளிக்கவேண்டுமானால், நம் உள்ளம் உரமாக இருக்கவேண்டும்' என்று ஒளிவுமறைவின்றி எடுத்துரைத்தார். பிரிட்டிஷ் கீழ்ச் சபையில் பேசுங்கால் (நவம்பர் 22ஆம் நாள்), 'எங்கு பரஸ்பர நம்பிக்கை இல்லையோ, அங்கு எந்த முறையும் (திட்டமும்) பயனைத் தராது.....எனவே, எல்லா நாடுகட்கிடையேயும் அத்தகைய நம்பிக்கையை வளர்க்கவேண்டும் என்பதே நம் விருப்பம்' என்று அட்லி அறிவுக் கூர்மையுடன் எடுத்தியம்பினர். ஈடனும் இச் சிக்கல் குறித்துக் கருத்துரைத்தார்: 'இறைமை யுரிமை பற்றி இன்று நாம் கொண்டிருக்கும் கருத்துகளைக் கைவிட்டாலன்றி அணுசக்தியிலிருந்து உலகைக் காக்கும் பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது. இதுவே என் வாழ்விலெல்லாம் (இப் பிரச்சினைக்கு) நான் கண்ட வழி' என்றார் அவர்.

1945, டிசம்பர் மாதம் மாஸ்கோ மாநகரத்தில், 'மும்பெரும் வல்லரசுகளின்' வெளிநாட்டு அமைச்சர்கள் கூடி, பல நடவடிக்கைகள் எடுக்க சம்மதித்தனர். இத்தாலியுடனும் மற்றச் சிறிய பகை நாடுகளுடனும் சமாதான உடன்படிக்கைகள் செய்வதற்கான ஆயத்தங்கள் செய்யவேண்டும் என்று முடிவுக்கு வந்தனர். அன்றியும், சப்பானின் நிர்வாகம்பற்றியும், கொரியா, சீனா, ருமேனியா, புல்கேரியா ஆகிய நாடுகள் குறித்தும் உடன்பாட்டுக்கு வந்தனர். இதன் விளைவாக அணுசக்தி குறித்தும் எல்லோருக்கும் சம்மதமான ஒரு நடைமுறையைக் கடைப்பிடிக்க முன்வந்தனர். டிசம்பர் 26ஆம் நாள் கூட்டறிக்கை யொன்று வெளியாயிற்று. அது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அத் தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையிடம் ஒப்படைக்கப்படவேண்டி இருந்தது. அணுசக்தி பற்றிய ஐ.நா. குழு ஒன்றை அமைக்கவேண்டும் என்று கூறியது அத் தீர்மானம். மேலும், அக் குழு மேலே குறிப்பிடப்பட்ட நான்கு குறிக்கோள்களையும் அடைவதற்குரிய திட்டத்தை வகுக்கவேண்டும் என்றும் கூறியது. ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பினரும், கனடாவும் அக்குழுவின் உறுப்பினர்களாக வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மேலும், அக் குழு 'அதன் அறிக்கைகளையும், சிபாரிசுகளையும் பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைக்கவேண்டும்'. அன்றியும்

அதனுடைய பணியைப் பொறுத்தமட்டும் அச் சபைக்கே அது பொறுப்பாளியாக வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 'பாதுகாப்புச் சபை, பாதுகாப்பு விஷயமாகக் குழுவுக்கு வேண்டிய ஆணைகள் இடவேண்டும்' என்றும் நிர்ணயம் செய்யப்பட்டது.[1]

அணுசக்திபற்றிய இரகசியங்களை ரஷ்யாவுக்கு அமெரிக்கா பரிவர்த்தனை செய்துகொள்ளும்படி ஆகிவிட்டால், என்ன ஆகும் என்று வாண்டன்பர்க்கு என்பவரும், மற்ற காங்கிரஸ் உறுப்பினரும் கவலையடைந்து வந்தனர். அணுசக்திபற்றிய மேற்பார்வை, கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பயன் குறித்து காங்கிரஸ் சம்மதிக்காதவரை எந்த 'இரகசியமும் ரஷ்யாவிற்குத் தெரிவிக்கப்படப்போவதில்லை' என்று ட்ரூமனும் பைரன்சும் வாக்குறுதியளித்தனர். சன. 24ஆம் நாள் ஐ.நா. பொதுச்சபை மாஸ்கோ அறிக்கையை மீண்டும் தீர்மானமாக நிறைவேற்றியது. 'காலத்தைச் சிறிதும் வீணுக்காமல் குழு உடனடியாகச் செயற்படவேண்டும்' என்று ஐ.நா. ஆணையிட்டும், ஆறுமாதங்கள் கழிந்த பின்னரே அக் குழு கூடிற்று. 1946 மார்ச் 18ஆம் நாள் ஜனதிபதி ட்ரூமன் பெர்னர்டு எம். பாருச் என்ற கோடீஸ்வரரை (அக் குழுவின்) யு.எஸ். பிரதிநிதியாக நியமனம் செய்தார். ஜான் ஆன்குக், பெர்டினன்டு எபர்ஸ்டாடு (வால்ஸ்ட்ரீட் பாங்குதாரிகள்), ஹெர்பர்ட்டு பேயர்டு ஸ்வூப் (பத்திரிகை வெளியீட்டளார்), பிரட்சியர்லஸ் (சுரங்கப் பொறியியல் வல்லுநரும் வர்த்தகரும்) ஆகியோர்களை அவருக்கு உதவியாக நியமித்தார். இப்படிப் பல ரக உறுப்பினர்களைக் கொண்ட யு.எஸ். தூதுகோஷ்டி இதுகாறும் முயற்சி எடுக்கப்பட்டுவரும் சோவியத் - அமெரிக்க உடன்பாடு ஏற்படமுடியுமா, பாங்குதாரிகளும், ஸ்டாக்பற்றி ஊகம் செய்பவர்களும் இதுவரை தங்கள் அனுபவத்திலேயே கண்டும் கேட்டுமிராத அறைகூவலைச் சமாளிக்க முடியுமா, முடியாதா என்ற வினவுக்கு வருங்கால நிகழ்ச்சிகளே விடை தரவேண்டும்.[2]

[1] அமெரிக்க வெளிவிவகாரத் துறைச் செய்தி அறிக்கை, 1945 டிச. 30, பக்கம் 1027—1032.

[2] பெர்னர்டு பாருச் 1870ஆம் ஆண்டில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் ஓர் அமெரிக்கக் கனவின் கனவாக விளங்கினர். 'ஓர் ஏழைப் பையன் தன் புத்தி கூர்மையாலும் கடு உழைப்பாலும் கோடீஸ்வரன் ஆகிவிடுகிறான். அதன் பின்னர், தான் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்காத வருமானத்தைப் பெற்றுக்கொண்டு மிகச் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறான்'. இதுவே பெரும்பாலான அமெரிக்கர்கள் காணும் கனவாகும். காங்கிரஸ் கமிட்டி ஒன்று ஒருநாள் அவரை நோக்கி, 'நும்முடைய தொழில் [illegible]' என்று கேட்ட கேள்விக்கு, 'நான் வாணிக ஊகம் செய்பவன்' (Speculator) என்று அவர் உண்மையை எடுத்துரைத்தார். இந் நூற்றாண்டின் [illegible] பத்திரங்கள் (securities) பற்றி வாணிக ஊகம் செய்து [illegible] ஒவ்வொரு வியாபார மந்தத்திலும், பொருளாதார [illegible] கொள்ளையாக இலாபம் அடித்தார். ஒரே நாளில் (1916 டிச. 18ஆம் நாள்) அவர் அரை மில்லியன் டாலர் இலாபம் அடித்தார். ஐரோப்பாவில் [illegible] நடக்கின்றன என்றவதற்கு பரவியதும் [illegible] விலைபொருள்கள் குறையலாயின. இதைப் பயன்படுத்திக்கொண்டு அவர் சிறிய விற்பனையில் (short-selling) ஈடுபட்டு, இப் பெருந் தொகையை ஒரே

PUBLIC LIBRARY 11 MAR 1994

1946 மார்ச் 4ஆம் நாள் லில்லியன்தால்—அக்கீசன் திட்டங்கள் வெளியிடப்பட்டன. அது அணுவர் உள்ளத்திலும் நம்பிக்கையை யூட்டியது. 'அணு சக்தியின் சர்வதேசக் கட்டுப்பாடுபற்றிய அறிக்கை' அது (வெளிவிவகாரத் துறை தஸ்தாவேஜுகள் 2498). அதைத் தயாரித்து அளித்தவர்கள் செஸ்ட்டர் ஐ. பெர்னர்டு, ஜே. ஆர். ஓப்பன்ஹீமர், சார்லஸ் ஏ. தாமஸ், ஹாரி ஏ. வின்னி, மற்றும் டேவிட் இ. லில்லியன்தால் (தலைவர்) முதலியோர். இவர்கள் அனைவரும் வெளிநாட்டு அமைச்சரின் அணுசக்திக் கமிட்டியின் ஆலோசனையாளர்கள். இக் கமிட்டியின் அடுத்த செயலாளர் (Under Secretary) டீன் - அக்கீசன்; வானிவர் புஷ், ஜேம்ஸ் பி. கோனெட், லெஸ்லி ஆர். குரோவ்ஸ், மற்றும் ஜான் டி. மக்கிளாய் ஆகியோர் உறுப்பினர்களாக அமர்ந்திருந்தனர். இந்த அறிக்கை (இலக்கியக் கண்ணோட்டத்துடன் பார்க்குங்கால்) ஒரு தலைசிறந்த படைப்பெனத் தோன்றும். ஆனால், அதைச் சுருக்கமாகக்கூட இங்குக் கூறுவதற்கில்லை. நாகரிகத்தின் ஊழ்வினையில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் அதைத் திரும்பத் திரும்பப் படித்து உணரவேண்டும். அது அணுசக்திப் பிரயோகத்தைத் 'தீங்கில்லாத', 'தீங்கான' நடவடிக்கைகள் என்று இரு பிரிவாகப் பிரிக்கிறது. யுரேனியம், தோரியம் இவற்றைச் சுரங்கத்திலிருந்து வெட்டி எடுத்தல், புளூட்டோனியம் தயாரிப்பதற்காகவும், அதைத் தனியாகப் பிரித்தெடுப்பதற்காகவும் ரியாக்டர் அமைத்தல், அணுசக்தி வெடிப்பொருள்கள்பற்றி ஆராய்ச்சி, உற்பத்தி—ஆகிய இவையனைத்தும் ஒரு நாட்டின் கையில் இருக்கும்பட்சத்தில் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவை 'தீங்கானவை'யாகவே கருதப்படவேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது. இப் பிரச்சினைக்குத் 'தீர்வு' காண்பதற்காக ஐ.நா. அணுசக்தி வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அமைக்கவேண்டும்

நாளில் சம்பாதித்து விட்டார்! 1916-ல் அவருடைய ஆண்டு வருமானம் 2,301,000 டாலர் ஆகும். பிற்காலத்தில் அவர் குதிரைப் பந்தயம், மக்கட்பணி ஆகியவற்றில் அக்கறை காட்டினர். பூங்காக்களில் உட்கார்ந்து பொழுது போக்குவது என்றால் அவருக்கு ரொம்பப் பிடித்தம். அவருக்கு 23,000 ஏக்கர் எஸ்டேட் இருந்தது. அது தென் கரோலீனாவில் 'அப்காபரோளி' என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. அவர் ஈளடைவில் ஒரு 'பெரிய அரசியல் மேதையாகி' பலரால் புகழ்மாலை சூட்டப்பட்டார், முதல் உலக மகா யுத்தத்தின்போது அவர் போர்த் தொழில் போர்டின் தலைவராகப் பணியாற்றினர். வில்சன், ஹீவர், ரூஸ்வெல்ட், ட்ரூமன் ஆகிய ஜனாதிபதிகட்கு ஆலோசனை கூறுபவராக விளங்கி இருகின்றார். இவரைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்வதற்கு ஜான் ஹெர்ஸி எழுதியிருக்கும் 'நியூயார்க்கர்' சன. 3, 1948 ff என்ற நூலைப் பார்க்கவும். இதில் இவரது 'பக்கத் தோற்றத்தைக் காணலாம். கார்ட் பீல்டு எழுதியிருக்கும் 'பெர்னர்டு பாருச், பூங்கா பெஞ்ச் அரசியல் மேதை' என்ற நூலையும் (மக்ஙிரா-ஹில், 1944) வாசிக்கவும். ஐ.நா. அணுசக்திக் குழுவிற்கு அவர் செய்திருக்கும் பணிகட்கு ஈடாக அவருக்குப் புகழ்மாலைகளும், பதக்கங்களும், பரிசுகளும், பட்டங்களும் வந்து குவிந்தன. வர்த்தக, அரசியல் உயரிடங்களே யு.எஸ்.ஏ.யில் இவருக்குப் புகழ்மாலை சூட்ட முன்வரவில்லை. ஆனால், இவரைப்பற்றிய வரலாற்றின் இறுதித் தீர்ப்பு வேறுக இருக்கவும் செய்யலாம். அவருடைய கொள்கையின் விளைவுகளே அதை நிர்ணயிக்கும். எனினும், பெர்னர்டு எம். பாருச்சே எழுதியுள்ள 'பாருச்: என் சொந்தக் கதை' என்ற (நியூயார்க், ஹென்றி ஹோல்ட், 1957) நூலை வாசிக்கவும்.

என்று அது கூறுகிறது. அது பாதுகாப்புச் சபையின் ஆணைக்கிணங்கச் செயல்படவேண்டும் என்றும், உலகிலுள்ள யுரேனியம், தோரியம் சுரங்கங்களனைத்தும் அதற்குச் சொந்தமாக இருக்கவேண்டும் என்றும், அவற்றிற்கான நடவடிக்கையை அதுவே செய்யவேண்டும் என்றும், இவற்றையல்லாமல் பிளக்க (வெடிக்கக்) கூடிய பொருள்களைப் பயன்படுத்தும் எல்லாச் சோதனைக் கூடங்களும் தொழிற்சாலைகளும் அதன் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும் என்றும், அணுசக்தி ஆராய்ச்சி, மேற்பார்வை, லைசென்ஸ் வழங்கல், குத்தகைக்கு விடல் ஆகிய துறைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை உலகமெங்கும் அதுவே மேற்கொள்ளவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது. அப்படிச் செய்தால்தான் முதலில் அணுகுண்டுகள் தயாரிக்கப்படுவதை முற்றிலும் தடுக்கமுடியும். இரண்டாவதாக, அணுசக்தியையும், அதன் பொருள்களையும் மனிதகுலம் உயர்வதற்காக ஆக்கவழிகளில் பயன்படுத்த முடியும்.

டெனிசி (நதிப்) பள்ளத்தாக்கு நிறுவனத்தைப்போல் ஐ.நா. அணுசக்தி வளர்ச்சி நிறுவனத்தையும் அமைப்பதற்காக இத் திட்டம் அறிவுக் கூர்மையுடன் வழிவகுத்தது. அது ஒரு சர்வதேசப் பொதுக் கார்ப்பொரேஷனாக (ADA) விளங்கவேண்டும்; அதன் பணிகளைச் செய்வதற்கான அதிகாரம் அதற்கு அளிக்கப்படவேண்டும்; ஆனால், அவ் வதிகாரம் தல சுதந்திரத்தையோ (local autonomy) அல்லது நாட்டின் இறைமையுரிமையையோ பாதிக்கலாகாது என்று அத் திட்டம் கூறிற்று. எனினும், இந் நிறுவனம் அதற்கு அளிக்கப் பட்டிருக்கும் அதிகாரத்திற்குள் ஒரு சிறிய 'உலக அரசாங்கமாக' ஆவது இன்றியமையாததாகும். ஆனால், இவ் வளர்ச்சி அறிக்கையில் பொதிந்து கிடந்தபோதிலும் அது வெளிப்படையாகவும் தெளிவாகவும் கூறவில்லை. இது கூட்டரசு விதிப்படி (federal principle) செயல்படவிருந்தது. அதன்கீழ் அது விசாரணை, உள்ளூர் போலிஸ் நடவடிக்கை, குற்றச்சாட்டு, நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவை மூலம் அணுசக்திச் சட்டத்தைத் தனிமனிதர்மீது அமல் செய்யும். ஆனால், சில நாடுகளோ அல்லது ஒரு சர்வதேச ஏஜென்சியோ, பிறநாடுகள் மீது பலாத்காரத்தைப் பயன்படுத்தினால், அது விஷயத்தில் இந் நிறுவனம் தலையிடாது (முதலாவது அதன் பணிகள் இதற்கு இடமளிக்காது). இதைவிட்டால் வேறு வழியில் இச்சிக்கல் தீர்ந்திருக்கும் என்றோ, அல்லது வேறு வழியில் தீர்ந்துவிடும் என்றோ நினைப்பதற்கு இடமில்லை; இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஒரே வழி இதுதான். ஆனால், ஐ.நா.விலுள்ள வல்லரசுகள் அணுசக்தி வளர்ச்சி நிறுவனத்தை அமைக்க முழுமனதாக முன்வரவேண்டும், அதனிடம் அதற்குத் தேவையான அதிகாரங்களும் வழங்கவேண்டும். அப்படி அவர்கள் முன்வரவேண்டுமானால், முதலில் வாசிங்டனும்;

லண்டனும், மாஸ்கோவும் பொதுக் குறிக்கோள்களை அடைவதில் ஒன்றுபடவேண்டும் அப்படியானால் உலக ஆதிக்கத்திற்காக இப் போது அவர்கள் நடத்தும் போராட்டமும் தேவைப்படாது. அவர் களும் ஒருவருக்கொருவர் எதிரிகளாகார்.

ஆனால், தீவினைப் பயனாக இந் நிறுவனத்தை அமைப்பதற்கான கூட்டு முடிவுக்கு வருவதற்கு முன்பே வல்லரசுகளெல்லாம் எதிரி களாகப் பிரிந்து கிடக்கின்றன. அணுகுண்டுபற்றி அவைகள் ஒரு முடிவுக்கு வரமுடியாததே அவைகளின் பகைமையுணர்ச்சிக்குக் காரணம் ஆகும். அவைகள் இவ்வாறு வேறுபட்டு நிற்குங்கால் அவைக ளிடையே எதனால் ஒற்றுமை ஏற்படவில்லை என்ற வினாவிற்கு விடை யளிக்கத் தேவையில்லை. இராணியும், பால்கன்சிலும் 1945—46ஆம் ஆண்டு இலையுதிர் காலம் சோவியத் யூனியன் கடைப்பிடித்துவந்த கொள்கை, லண்டனிலும் வாசிங்டனிலும் அச்சத்தை உண்டாக்கியது. அதுபோல் பைரன்ஸ்—பெவின் கொள்கை மாஸ்கோவுக்கு அச்சத்தை யளித்தது. யு.எஸ்.எஸ்.ஆரும் அதன் துணை நாடுகளும் ஏற்கெனவே ஐ.நா.வில் சிறுபான்மையினராக விளங்கிவந்தார்கள். ரஷ்யாவுக்கு எதிராக ஆங்கிலோ-அமெரிக்க நட்புக்கூட்டு ஒன்றைத் தோற்றுவிக்கவேண்டும் என்று சர்ச்சில் 1946 மார்ச் 5ஆம் நாள் புல்டனில் கூறினார். இக் கருத்துகளை வரவேற்று ஜனாதிபதி ட்ரூமன் சர்ச்சிலைப் பாராட்டினார். ஆனால், அவருடைய செயல் சோவியத் யூனியனுக்குச் சினத்தை மூட்டியது தெரியாது. தெரிந்ததும் அப்படியே வியப்படைந்து போனார். இச் சூழ்நிலையை மாற்றுவான் வேண்டி, யு.எஸ்.எஸ். மிஸ்ஸௌரி என்ற கப்பலில் தன் நாட்டுக்கு வந்து கொலம்பியாவில் தன் முன்னிலையில் உரையாற்ற வருமாறு ஸ்டாலினை அழைத்தார். ஆனால், ஸ்டாலின் இவ் வழைப்பை அமைதி யாக நிராகரித்துவிட்டார். அவரே இல்லை, வேறு எந்த வல்லரசின் முக்கிய நிர்வாகியும் (chief executive) இத்தகைய அவமதிக்கும் பிரேரணையை ஒப்புக்கொண்டிருக்க முடியாதுதான்.[3]

இந் நிலையில் வல்லரசுகட்கிடையே ஒற்றுமை ஏற்படுவது முயற் கொம்பாகிவிட்டது. யு.எஸ்.ஏ.யும் போர்க்கால விகிதத்தில் அணு குண்டுகளைத் தயாரித்துக்கொண்டு சென்றது. இவ்வாறு அது 'அணு ஆயுதங்களைப் பெருக்கிக்கொண்டு செல்லுதல் நாடுகட் கிடையே அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் நோக்கத்தில் அல்ல'வென்று மாஸ்கோ அமெரிக்காவைக் ('புதிய காலம்', மாஸ்கோ, 1946, மார்ச் 20) குற்றஞ்சாட்டியது. இதன் விளைவு என்ன ஆயிற்று தெரியுமா? யு.எஸ்.எஸ்.ஆர். ஒருகாலும் சம்மதிக்காது என்று

[3] சிக்காகோ 'தினைச்செய்தி', 'டென்வர் போஸ்ட்' (1948, பெ 2) என்ற பத்திரிகைகளில் பார்னெட் நோவர் என்பவரைப்பற்றி அறிந்துகொள்ளவும். ஒயிட் ஹவுஸ் செய்தித்துறை அமைச்சர் சார்லஸ் ஜி. ராஸ் இதை முற்றிலும் உண்மை என்று 1948 பெப். 5ஆம் நாள் ஒப்புக்கொண்டார்.

யு. எஸ். தலைவர்களுக்கு நன்கு தெரிந்தும், அவர்கள் அத்தகைய அணுசக்திக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தார்கள். சோவியத் யூனியனும் அதுபோல் செய்தது. யு.எஸ்.ஏ. ஒருகாலும் ஒப்புக்கொள்ளாது என்று நன்கு தெரிந்திருந்தும், அத்தகைய அணுசக்திக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை சோவியத் தலைவர்கள் வகுத்தார்கள். ஐ.நா. அணுசக்திக் குழு இறுதியாக 1946 சூன் 14ஆம் நாள் சந்தித்தபோது அமெரிக்கத் திட்டங்களை பெர்னர்டு பாருச் குழுவின்முன் வைத்தார். அது பின்வருமாறு :

'விரைவு, சாவு இவற்றில் ஒன்றை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவே நம் வேலை. அணுசக்தி யுகத்தின் துயர் எனும் இருளுக்குப் பின்னால் நம்பிக்கை ஒளிக்கதிர்கள் மின்னுகின்றன. நாம் அதில் நம்பிக்கை வைத்துச் செயல்பட்டால் அது நம்மைக் காப்பாற்றுவது உறுதி. ஆனால், நாம் இப் பணியில் தோல்வியுறுவோமாயின், ஒவ்வொரு மனிதனையும் அச்சத்துக்கு அடிமையாக்கிவிடுவோம். நம்மையே நாம் வஞ்சித்துக்கொள்ள வேண்டாம் ; உலக அமைதி அல்லது உலக அழிவு இவற்றில் ஒன்றை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.'

பாருச், உலக அணுசக்தி வளர்ச்சி நிறுவனம்பற்றிய கருத்தை முழுதும் ஆதரித்தார். ஆனால், தன்நாட்டு அரசாங்கம் அணுகுண்டுகளைத் தயாரிப்பதை நிறுத்திவிடும் என்றோ, அன்றி அணுசக்திபற்றிய செய்திகளை மற்ற நாடுகளுடன் பரிமாறிக்கொள்ளும் என்றோ உறுதியளிக்க அவர் முன்வரவில்லை. அணுசக்தி சர்வதேசக் கட்டுப்பாட்டு முறை ஒவ்வொரு கட்டத்திலும் பயனளித்தாலொழிய, அமெரிக்காவின் மன நிறைவுக்கு ஏற்றாற்போல் செயலாற்றினாலொழிய, அதற்கிடையில் மற்ற நாடுகள் (குறிப்பாக யு.எஸ்.எஸ்.ஆர்.) அணுகுண்டு செய்யாதபடி தடுக்கப்பட்டாலொழிய இவ் வுறுதிகளை அளிக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். எப்படியாவது சம்பந்தமில்லாத கட்டுப்பாட்டு முறைக்குத் திரும்பிவிட வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோள். 'போரைத் தவிர்ப்பதில்தான் இப் பிரச்சினைக்குரிய தீர்வு இருக்கிறது' என்று அவர் குறிப்பிட்டார். (இது பின்னால் மறுக்கப்பட்டது.) ஆனபோதிலும் போர் அச்சுறுத்தல் மூலமே, அதாவது, பல நாடுகள்மீது சில நாடுகள் பலாத்காரம் கொண்டுவருவதன் மூலமே அணுசக்திப் பொறுப்புகளை அமலாக்க முடியும் என்று அவர் கூறினார். அணுசக்திபற்றிய எல்லா விஷயங்களிலும் வல்லரசுகள் ஐ.நா. சாசனத்தின் அடிப்படை விதியைக் கைவிட்டுவிடவேண்டும் ; பலாத்காரம்பற்றிய விஷயங்களில் மறுப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் அவைகள் சம்மதிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். இந்நிலையில் குற்றஞ் சாட்டப்படும் நாடு தனது

பொறுப்புகளை மீறிவிட்டதாகப் பாதுகாப்பு சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களும் குற்றஞ்சாட்டினால், மற்ற நாடுகள் தங்கள் (வல்லரசுகள்) மீது சட்டபூர்வமாகப் போர் செய்யும் என்பதை அவைகள் முன்கூட்டியே ஒப்புக்கொள்ளும் என்றும் வலியுறுத்தினர்.

'சர்வதேச உடன்படிக்கைகளை மீறி நடக்கும் நாடுகளுக்கு நாம் உடனடியான, விரைவான, தகுந்த தண்டனை அளிக்கவேண்டும். தண்டித்தல் மிகவும் முக்கியமான செயல் ஆகும்... கட்டுப்பாட்டு விதிகளை மீறி நடப்போருக்குத் தகுந்த தண்டனைகள் வழங்குவது அவசியம். இவ் விதிகளை மீறி நடப்பதைச் சர்வதேசக் குற்றங்களாக, இழிவாகக் கருதவேண்டும். குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை அளித்தல் நம்முடைய இன்றையப் பாதுகாப்பு முறையின் அடிப்படை அம்சமாக இருக்கிறது என்பதை நான் உங்களுக்கும் உலகிற்கும் எடுத்துக் கூறுதிருந்தால், அது ஒரு வஞ்சகச் செயல் ஆகும். இவ் விஷயம் அணுசக்தியுடன் சம்பந்தப்பட்டது. ஆகையால் இது ஐ.நா. சாசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் மறுப்பு அதிகாரத்துடன் தொடர்புடையது என்பதையும் இங்கு நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.....தாங்களே முன்வந்து செய்த பவித்திரமான உடன்படிக்கைகளை மீறி நடப்போரைப் பாதுகாப்பதற்காக ரத்து அதிகாரம் பயன்படுத்தப்படலாகாது.'[4]

பாருச்சின் திட்டங்களைப்பற்றிக் குறிப்பிடாமலேயே ஆண்ரி குரோமிக்கோ, 1946 சூன் 19ஆம் நாள் யு.எஸ்.எஸ் ஆர். சார்பில் முற்றிலும் வேறான திட்டங்களைக் கொண்டுவந்தார். அணு ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதையும், பயன்படுத்தப்படுவதையும் தடுப்பதற்காகவும், ஏற்கெனவே 'ஸ்டாக்கில்' (இருப்பில்) இருக்கும் அணு ஆயுதக் குவியலை மூன்று மாதங்களில் அழிப்பதற்காகவும் எல்லா நாடுகளும் ஓர் உடன்பாட்டுக்கு வரச் சம்மதிக்க வேண்டும் என்று அத் திட்டம் கூறியது. மேலும், அவைகள் விஞ்ஞானச் செய்திப் பரிவர்த்தனைக்காக ஒரு ஐ.நா. கமிட்டியும், மேற்பார்வை, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வகுக்க மற்றொரு கமிட்டியும் ஏற்படுத்த முன்வரவேண்டும். என்று வலியுறுத்தியது. அன்றியும், பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் முழுமனதாக ஏற்றுக்கொள்ளும் விஷயங்களுக்குத் தீங்கிழைப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகள்

[4] வாசிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகையில் வால்ட்டர் லிப்மேன் எழுதிய குறிப்பைப் (1946, சூன் 20) பார்க்கவும். யு.எஸ். அரசியலமைப்பைப்போல் ஐ.நா. சாசனமும் 'உடன்படிக்கைகளை மீறி நடக்கும் நாடுகளைப் பாதுகாக்க வில்லை.' ஆனால், அதுபற்றி அது எதுவுமே கூறாமல் இருக்கிறது. போரில் இறங்குவதே செய்யவேண்டிய ஒரே காரியம் என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்... வருங்காலத்தில் யு.எஸ்.ஏ. யின் சம்மதமின்றியே அதைப்போரில் இறங்குமாறு செய்வதால் அமெரிக்காவுக்கு என்ன நன்மை விளையப்போகிறதென்று பாருசு நினைக்கிறாரோ தெரியவில்லை. மேலும், அவரும் நம்முடைய சொன்டும நம் அரசியலமைப்பின் கீழ் வருங்காலக் காங்கிரசைப் போரில் சட்டப்படியாக ஈடுபடுத்த முடியாது என்றே நினைக்கிறேன்..." என்று அவர் கூறியிருக்கிறார்.

உள்பட, அச் சபையின் நடவடிக்கைகளை அவமதிப்பதற்காக மேற் கொள்ளப்படும் முயற்சிகளனைத்தும் ஐக்கிய நாடுகள் சபையின் நலனுக்கு ஊறு விளைவிப்பவை... அத்தகைய முயற்சிகள் எதிர்க்கப் படவேண்டும்' என்று கூறியது. இதுவே குரோமிகோ கொண்டு வந்த திட்டம். மேலும் அவர், யு.எஸ்.எஸ்.ஆர். பாருச்சின் திட்டம் முழுவதையுமோ அன்றி அதன் ஒரு சில பகுதிகளையோ ஒருகாலும் ஏற்கப்போவதில்லை என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

ஐ.நா. அணுசக்திக் குழு 1946, சூன் மாதம் முதல் தடவையாகக் கூடியது. அக் கூட்டத்தில் ஏற்பட்ட இடர்நிலை (திக்குமுக்காட்டம்) இன்னும் நீங்கியபாடில்லை. அணுசக்தித் துறையில் தனியார்மீது புகுத்தவல்ல பயன்தரக்கூடிய சட்டத்திற்கு வழி வகுக்காமல் அணு குண்டைச் 'சட்ட விரோதமாக்கும்' சோவியத் திட்டம் இப் பிரச்சினையால் ஏற்படும் நிபந்தனைகளைச் சமாளிக்கத் தகுந்ததா யில்லை. இது அல்லாமல் மாஸ்கோ வலியுறுத்தும் உடன்படிக்கை மற்றொரு காகிதத் துண்டாகவே முடியும். அமெரிக்கத் திட்டங்களும் இப் புதிய காலத்தின் தேவைகட்கு ஏற்றதாய் அமையவில்லை. ஏனெனில், வாசிங்டன் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கூட்டரசு விதியைக் கடைப்பிடிக்க மறுத்துவிட்டது அடுத்தாற்போல் சில நாடுகள் மற்ற நாடுகளுடன் போர் தொடுத்தால் அப்போது (தாக்கப்படும்) நாடுகட்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும் அது உறுதியாக நின்றது. எதிர்க்கட்சியின் திட்டங்களைத் தான் ஏற்க முடியாது என்பது ஒவ்வோர் அரசாங்கத்திற்கும் தெரியும். எனவே, இரு நாட்டுத் தலைநகரங்களிலும் சில கொள்கை வகுப்பாளர்கள் படைக்கலப் போட்டி மும்மரமாக நடந்து செல்லட்டும் என்று இருந்துவிட்டார்கள். இருதரப்பினரும் 'நம் கட்சிதான் ஜெயிக்கும், என்று ஐயம்திரிபற நம்பிவந்தது இதற்குக் காரணமாக இருக்கலாம். 1947 பெப். 7ஆம் நாள் மக்கெல்லர் என்ற செனட்டர் 'நாம் உடன்பாட்டுக்கே என்றும் வராதபடி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்' என்றுராம்.

பெர்னர்டு பாரூச் 1946 சூன் 14ஆம் நாள் தம் திட்டத்தை அறிவிப்பதற்கு முன்பே, டேவிட் இ. லில்லியன்தாலும், செஸ்ட்டர் ஐ. பர்னர்டும் ரத்து அதிகாரப் பிரச்சினையை இங்குக் கொண்டு வருவதில் அர்த்தமில்லை என்றும், அது 'குருட்டு வழியில்' தான் கொண்டுவிடுமென்றும், எனவே, அதைத் திட்டத்திலேயே சேர்க்க வேண்டாமென்றும் அவரை வேண்டிக்கொண்டனர்.[5] எல்லோரும் எதிர்பார்த்தபடி இவ் விஷயத்தில் இக்கட்டான நிலை ஏற்பட்டது

[5] நியூயார்க் ஹெரால்டு டைம்ஸ் பத்திரிகையில் (1948 மார்ச் 28) மேற்கோளாகக் கொள்ளப்பட்டிருந்த 'டார்ட் மௌத்'

அதையொட்டி யு.எஸ்.ஏ. வர்த்தக அமைச்சர் ஹென்றி ஏ. வாலாஸ் சூலை 23ஆம் நாள் ஜனாதிபதிக்கு எழுதிய மடலிலும், பின்னர் செப். 12ஆம் நாள் பொதுமக்களுக்கு ஆற்றிய பேருரையிலும் 'ரத்து அதிகாரம் (இப் பிரச்சினையுடன்) சம்பந்தப்பட்டதல்ல' என்றும் கூறினர். மேலும், அவர் யு.எஸ்.எஸ்.ஆரின் உண்மையான கவலைகளையும், தேவைகளையும் பொருட்படுத்தாமல் பாருச் அணு ஆயுதப் போட்டியை வளர்த்து வருகிறார் என்று குற்றஞ்சாட்டினர். அக்டோபர் மாதத் தொடக்கத்தில் இருதரப்பினரும் செய்த பொதுக் குற்றச்சாட்டுகள் மேலும் நிலைமையை மோசமடையச் செய்தன.

இச் சூழ்நிலையில் அணுசக்தி அரசியல் தந்திரம் தோல்வியை எதிர்நோக்கிக்கொண்டிருந்தது.[6] யு.எஸ்.ஏ.யில் இராணுவத்தின் கையிலிருந்த அணுகுண்டு கட்டுப்பாடு ஒரு சிவில் அணுசக்திக் குழுவுக்கு மாற்றப்பட்டது. இம் மாறுதலை சென்ட் உறுப்பினர் கடுமையாகவும் வெற்றிகரமாகவும் எதிர்த்தும் பயனில்லாமல் போய்விட்டது. ஆனால், ஐ.நா. முன்னிலையில் யு.எஸ்.ஏ.யும், யு.எஸ்.எஸ்.ஆரும் ஆதரித்த கொள்கைகளுக்கு இடையே சமரசம் ஏற்படுவதற்கு வழியில்லாமல் போயிற்று. 'ரத்து அதிகாரத்தின்மூலம் தன்னுடைய பொறுப்புகளினின்றும் விடுவித்துக்கொள்ளும் உரிமை ஒரு பெரிய நாட்டுக்கு இல்லாவிட்டால் போரே வந்து முடியும் என்று சொல்லப்படுகிறது. இதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதை அனைவரும் உணர்தலே வரலாற்றிலேயே அமைதியை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பெரிய முயற்சியாகும்..... எனவே, கனவான்களே! ஒன்று 'இதுவாக' இருக்கவேண்டும், அல்லது 'அதுவாக முடியும்' என்று டிசம்பர் 27ஆம் நாள் பாருச் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். பாருச் போக்கையொட்டி தீட்டப்பட்ட ஒரு திட்டத்தை டிச. 30ஆம் நாள் ஐ.நா.அ.ச.கு. ஒப்புக்கொண்டது. ஆனால், போலாந்தும், யு.எஸ்.எஸ்.ஆரும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை (abstain). 1947 சன. 4ஆம் நாள் பாருச் பதவியிலிருந்து ராஜினாமா செய்தார். அவருடைய இடத்தில் நியமிக்கப்பட்ட வாரன் ஆர். ஆஸ்ட்டினும், பிரடெரிக் எச். ஓஸ்பனும் அமெரிக்க கொள்கையில் மாற்றம் எதுவும் கொண்டுவராமல் அதையே கடைப்பிடித்து வந்தனர். அதுபோல் எவ்வித மாற்றமுமின்றி குரோமிகோவும் சோவியத் கொள்கையை மீண்டும் வலியுறுத்திவந்தார்.

[6] இதுபற்றிய விளக்கத்திற்குப் பின்வரும் நூல்களைப் பார்க்கவும்: ஐ.நா. அணுசக்திக் குழுவின் பதிவேடுகள் (Records); சர்வதேசசமரசம் பற்றிய துண்டு வெளியீடு 430; ஏப்ரல், 1947; வில்லியம் டி. ஆர். பாகஸ் பொதுவிஷயங்கள் பற்றிய துண்டு வெளியீட்டில் 129: 1947-ல் எழுதியுள்ள 'அணுசக்திக் கட்டுப்பாட்டிற்கான போட்டி!' பாதுகாப்புச் சபையிடம ஒப்படைக்கப்பட்ட ஐ.நா. அணுசக்திக் குழுவின இரண்டாம் அறிக்கை 1947, செப். 11; மூன்றும் அறிக்கையின் வரைவு, 1948 மே 7.

'உலக மக்களை வஞ்சிப்பதற்காகத் தீட்டப்பட்டதே' சோவியத் திட்டங்கள் என்று ஓஸ்பன் 1947 ஜூன் மாதம் குற்றஞ்சாட்டினர். அதற்கு குரோமிகோ அணு ஆயுதங்களைச் சட்டவிரோதமாக்க வேண்டுமென்றும், குறைந்தபட்ச மேற்பார்வையையும் கட்டுப்பாட்டு முறையையும் உடனே கொண்டுவரவேண்டுமென்றும் உறுதியாக நின்றார். ஜூன் மாத இறுதியில் அணுசக்தி விஞ்ஞானிகளின் நெருக்கடி கமிட்டி ஓர் எச்சரிக்கைவிடுத்துக் கூறியது. 'தேசிய அரசாங்கத்தைவிடப் பெரிய அரசாங்கம் ஒன்றை அமைத்து, அமைதியை நிலைநாட்டுவதற்குப் போதுமான அதிகாரங்களையும் பொறுப்பையும் அதனிடம் வழங்குதல் மிக அவசியம் என்பதை அமெரிக்க மக்கள் அறியவேண்டும். இது செய்யக்கூடிய காரியம் தானே? இதைவிடச் செய்யக்கூடிய காரியம் வேறு இல்லை என்று நாங்கள் நம்புகிறோம்..... இப்போதையினும் அதிகமாக மனிதர்கள் உலகைப் புரிந்துகொள்ளவேண்டும்.'

இந்த எச்சரிக்கையால்கூடப் பயன் எதுவும் ஏற்படவில்லை. சோவியத் திட்டங்களை 'அறவே ஏற்கமுடியாது' என்று கூறிவிடுகிறார் ஓஸ்பன். அதற்கு 'அணுசக்தித் துறையில் அமெரிக்கா சுவாதீன நிலையை அடைவதற்காகவே யு.எஸ். திட்டங்கள் வகுக்கப்பட்டன'வென்றும், 'சோவியத் யூனியன் அத்தகைய திட்டங்களை ஏற்கமுடியாது' என்றும் குரோமிகோ வாய் அடைத்தாற் போல் பதிலிறுத்துவிட்டார். அமெரிக்க, சோவியத் நிலையில் மாற்றம் கொண்டு வருவதற்காகவோ, அல்லது இருதரப்பினரையும் சமரசப்படுத்தவோ எடுக்கப்பட்ட முயற்சிகளனைத்தும் (அம் முயற்சிகளில் பெரும்பாலானவை எல்லோருக்கும் தெரிந்த காரணங்களுக்காக அமெரிக்காவுக்குச் சாதகமாய் இருந்தன) எதிர்பார்த்த பயன் தராது போயின. இச் சிக்கலை வெகுவிரைவில் தீர்த்துவிடுமாறு பௌதிக வல்லுநரும், மற்றப் பார்வையாளரும் அரசியல்வாதிகட்கும் பொது மக்களுக்கும் எவ்வளவோ உணர்த்தியும், அவர்கள் முயற்சியெல்லாம் வீணாகிப்போயின. சோவியத் யூனியனின் குறைந்தபட்ச சர்வதேசக் கட்டுப்பாட்டுத் திட்டம் போதாது என்றும், அதைச் செயலில் கடைப்பிடிக்க முடியாது என்றும், தான் ஒப்புக்கொள்ளமுடியாது என்றும் ஐ.நா.அ.ச. குழுவின் செயல் கமிட்டி 1948 ஏப். 5ஆம் நாள் கூறிவிட்டது. இப் பிரச்சினைபற்றிய பேச்சுவார்த்தைகள் மேலே செல்லமுடியாத நிலையை அடைந்துவிட்டனவென்றும், யு.எஸ்.ஏ., பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளின் முயற்சியால் இதுபற்றி மேன்மேலும் வாதங்கள் நடைபெறுவது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும், இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகள் முற்றிலும் தோல்வியடைந்துவிட்டனவென்று அந் நாடுகளே ஒப்புக் கொண்டுவிட்டனவென்றும் 1948 மே மாதம் ஐ.நா.அ.ச.குழு அறிவித்தது.

இருதரப்பினருமே வழிக்குவர மறுத்துவிட்டனர். மாஸ்கோவோ தன் நாட்டு நலங்களுக்குப் பயன்படுத்துவதற்காக அணுசக்தியை உற்பத்தி செய்யத் தீர்மானித்தது. மேலும், அது ஓர் உடன்படிக்கை மூலம் அணு ஆயுதங்களைச் சட்டவிரோதமாக்க வேண்டும் என்ற தன்னுடைய திட்டத்தை,—அமெரிக்கா இதற்கு ஒப்புக்கொள்ளாது என்று நன்கு தெரிந்திருந்தும்—மீண்டும் மீண்டும் அதையே வலியுறுத்தி வந்தது. வாஷிங்டனும் தன்னுடைய பிடிவாதத்தில் ஒரு படிகூடக் குறையவில்லை. தன்னுடைய திட்டத்தை சோவியத் யூனியன் ஏற்கப்போவதில்லை என்பது அதற்கு நன்கு தெரியும்; அப்படியிருந்தும் அது அமெரிக்க அணுசக்தி சுவாதீனத்தை நெடுநாள் நிலைக்கவைக்கவே உறுதிபூண்டது. அன்றியும், மற்ற நாடுகள் அணுகுண்டைத் தயாரிப்பதைத் தடுக்கவும், தனக்கு முழுப் பாதுகாப்பு தேடிக்கொள்ளவும் (அது இவ்வுலகில் முடியாத காரியம்) அது தீர்மானித்தது. இந் நோக்கத்தில்தான் அது அணுசக்தியின் உடைமையும், நிர்வாகமும் 'சர்வதேச ஸ்தாபனம்' ஒன்றின் கையில் இருக்கவேண்டும் என்றும், 'ரத்து அதிகாரத்தை' எடுத்துவிட வேண்டும் என்றும், பிடிவாதம் செய்துவந்தது. ஐ.நா.அ.ச.கு. தன் பணியை நிறுத்திவைப்பதற்கு 1949 ஜூலை 29ஆம் நாள் தீர்மானித்தது. அடுத்தாற்போல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும், தேக்குமுக்காட்டு நிலைமையே நீடித்தது. இது 1949 அக்டோபர் 24ஆம் நாள் வெளியான அறிக்கையிலிருந்து தெரிய வந்தது. அணுசக்திக் கட்டுப்பாட்டுக்காக ஓர் உடன்படிக்கையும், அணு ஆயுதக் குவியலைச் சட்டவிரோதமாக்கவும் அழிக்கவும் வகை செய்யும் ஓர் உடன்படிக்கையும் ஒரே சமயத்தில் வரையப்பட வேண்டும் என்று மாஸ்கோ கூறியது. மேலும், ரத்து அல்லது தள்ளுபடி அதிகாரம் அணுசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் அல்லது சர்வதேச அணுசக்திக் கட்டுப்பாட்டுக் குழுவின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படலாகாது என்றும் வலியுறுத்தியது. ஆனால், 'இச் சலுகைகள்' அனைத்தும் பயனற்றவையேயன்றி வேறல்ல. 'உருப்படியான பேச்சுவார்த்தைகள் ஒன்றும் நடைபெறவில்லை' என்று டிர்கிவ்லீயே (ஐ.நா. செக்ரடரி ஜெனரலே) 1950 சனவரியில் கூறிவிட்டார்.

சோவியத் (அணு) இரண்டு தோன்றிய பின்பும் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.[1] 'இந் நிகழ்ச்சி நம்முடைய

[1] அணுசக்தி வளர்ச்சியில் சோவியத் யூனியனின் முன்னேற்றம் அதனுடைய விஞ்ஞானிகள், பொறியியல வல்லுநர்கள் ஆகியோரின் சுய முயற்சியால் ஏற்பட்டதா, அல்லது ஒற்றறிந்ததால் விளைந்ததா என்று நிச்சயமாகத் தெரியவில்லை. இக் கருத்துகளுக்குத் தக்க சான்றில்லை. ஒற்றறிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் ஆலன் மே நுன், குலாஸ் புக்ஸ்; இருவருக்கும் 1950 மார்ச் முதல்நாள் ஒரு பிரிட்டிஷ் நீதிமன்றம் 14 ஆண்டு சிறைத் தண்டனை அளித்தது: ஹாரிகோல்டு என்ற குற்றவாளி

கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படுத்தவில்லை' என்று அக்கீசன் கூறினார். டாஸ் செய்தித்தாள் 'சோவியத் அரசாங்கம் அதன் முன்னுள் நிலையையே கடைப்பிடித்துவருகிறது; இனியும் அதையே கடைப்பிடித்துவரும்' என்று கூறிற்று. ஆனால், உண்மையில் சோவியத் அணுகுண்டு முக்கியமான போர்ச்சூழ்ச்சி விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அணுகுண்டுச் சுவாதீனம் அமெரிக்கா கையில் இருந்ததனாலேயே மேற்கு ஐரோப்பாவை சோவியத் யூனியன் தன்னுடன் இணைத்துக்கொள்ள முடியவில்லை என்று சர்ச்சில் கருதிவந்தார். இக் கருத்து முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டதோ இல்லையோ, இப்போது அது ஒப்புக் கொள்ளப்படவில்லை. சோவியத் அணுகுண்டு தோன்றிவிட்டதால், அதற்குப் பதிலாக அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் செர்மனி, மேற்கு ஐரோப்பா முதலிய நாடுகளின் படைக்கலங்களைப் பெருக்க முற்பட்டார்கள். மார்க்ஸ்லாந்தின் எந்தப் பகுதியையும்விட ஐரோப்பா, பிரிட்டிஷ் தீவுகளின் நெருக்கமான நகரங்கள் முதலியவை அணுகுண்டுக்கு இரையாவது எளிது. எனவே, யு.எஸ்.எஸ்.ஆர், மற்றும் அதனுடைய நேச நாடுகளின் இராணுவ வலிமைக்கு நிகராக மேற்கு ஐரோப்பாவின் படைபலத்தைப் பெருக்குவதன் பயனே சோவியத் அணுகுண்டு மிகவும் குறைத்துவிட்டதென்று ஐயம் திரிபறக் கூறலாம். அதுபோன்றே அணுகுண்டுக்கு சப்பான் இரையாவது எளிது. ஆகையால், தூரகிழக்கிலும் அமெரிக்கா வகுத்த அதே திட்டங்கள் பயனில்லாதுபோய்விட்டன.

மனிதகுலம் முன்பெல்லாம்விட இன்றுதான் 'பண்பாட்டுப் பிற்போக்கு நிலைமை'க்குப் பலியாகிவருகிறது. இதுவே இப் பிரச்சினையின் முக்கிய அம்சம் ஆகும். அணுகுண்டு வந்து அதிகார (வலிமை) அரசியலைப் பயனில்லாது செய்துவிட்டது. ஏனெனில், அணு ஆயுதப் போரில் 'தோல்வியுற்றவர்களைப்' போன்றே 'வாகைசூடுவோரும்' துயரமடைவர்; காட்டுமிராண்டிகளாகிவிடுவர். எனவே, சாவுக்குப் பதில் வாழ்வை விரும்பும் மக்களை அரசியல் சிந்தனையிலும், நடவடிக்கையிலும் அமைதியை நிலைநாட்டத்தக்க உலக அரசாங்கத்தையோ அன்றி, புதிய அரசியல் தந்திரத்தையோ கையாளுமாறு அணுசக்தி இன்று அழைக்கிறது. ஆனால், அரசியல் மேதைகளும், போர்ச்சூழ்ச்சிக்காரர்களும், தேசபக்தர்களும் புதிய ஆயுதங்களை இதுவரை அவர்கள் எப்படிக் கையாண்டு வந்தார்களோ அதுபோன்றே இன்னும் இப் புதிய அணு ஆயுதங்களைத் தொடர்ந்து பிரயோகித்து வருகிறார்கள்.

பாகளின் கையாள் என்று ஒரு யு.எஸ். நீதிமன்றம் தீர்ப்பளித்து அவருக்கு 1950 டிசம்பர் 9ஆம் நாள் 30 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. மார்ட்டின் சோபெல் (30 வயது), டேவிட் கிரின்கிளாஸ் (15 வயது), ஜூலியஸ், சுதல் ரோசன்பர்க் ஆகியோருக்கு 1951 ஏப்ரல் மாதம் கூட்டரசு நீதிபதி இர்விங் ஆர். காப்மேன் ஆயுள் தண்டனையளித்தார்; புரோனே போண்டிகோர்வே பிரிட்டனிலிருந்து தப்பி ரஷ்யாவுக்கு ஓடிவிட்டார்.

அணுசக்தியின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால், அது மனிதகுலத்தையே இவ் வையத்தினின்றும் துடைத்துவிடும். இச் சிக்கலுக்கு இதுவரை தீர்வுகண்டபாடில்லை. அரசியல் தந்திரம் மூலம் இதற்குத் தீர்வுகாண விழையும் தேசியக் கொள்கை வகுப்பாளர்கள் மேற்கொண்டிருக்கும் சமீபகால முயற்சிகள்பற்றி ஆராயப் புகுமுன், அணுசக்தியால் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலையும் மதியாது 'தேசியப் பாதுகாப்பு' ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பௌதிக வல்லுநர், பொறியியல் வல்லுநர், இராணுவத் திட்டம் தீட்டுவோர் ஆகியவர்கள் புரிந்திருக்கும் புதிய வியத்தகு சாதனைகளைப் பார்ப்போம். யு.எஸ் ஏ.யும், யு.எஸ்.எஸ்.ஆரும், கிரேட் பிரிட்டனும் ஆண்டுதோறும் அணு ஆயுதச் சோதனைகள் செய்து வந்ததாலேயே இச் சாதனைகளைப் புரியமுடிந்தது. இச் சோதனைகளால் உலகம் முழுதும் பரவியிருக்கும் காற்றுமண்டலமே நச்சு வாயுவாலும் அணுசக்தி வெடிப்பொருள்களாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவிட்டது. அணுசக்தித் துகள்கள் மேலிருந்து பூமியை நோக்கிக் கீழே வருகின்றன. அவற்றைத் தாவரங்களும் மிருகங்களும் உட்கொண்டுவந்தன. ஏன்? வரவர மனித உணவிலும் அந்த நஞ்சு அதிகமாகக் கலந்துவிட்டது. இது இவ்வாறு நடந்துகொண்டிருக்குங்கால், மனித உடல்நலத்திற்குத் 'தீங்கிழைக்காத' கதிர்வீச்சு அளவுபற்றிக் (பன்னெட்டுத் தலைவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர்) காரசாரமாகத் தர்க்கம் செய்துகொண்டிருந்தனர். ஆனால், கதிர்வீச்சின் அளவு எவ்வளவு குறைவாக இருந்தபோதிலும் அது மனித உடல்நலத்திற்குக் கேடு விளைவிப்பது நிச்சயம் என்று அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

அணுசக்திச் சோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டால், ஒருபுறம் அணு ஆயுதப் போருக்கு அடிகோலுவதுடன், இன்னொரு புறம் எதிர்கால மனிதகுலத்திற்கே அது பெருத்த கேட்டை விளைவித்துவிடும் என்று அநேக பௌதிக வல்லுநர்களும் பிறப்பியல் வல்லுநர்களும் (geneticists) எச்சரித்தார்கள். ஸ்ட்ரான்டியம் 90, என்பது அணுசக்தி வெடிப்பினால் உண்டாகும் ஒரு பொருள் ஆகும். அதற்கு 25 ஆண்டுகள் அரை உயிருடன் இருக்கும் சக்தி உண்டு. அது கால்சியத்தைப் போன்று எலும்பில் தங்கி, எலும்புப் புற்று நோயையும் (bone cancer), லூக்கேமியா என்ற நோயையும் உண்டாக்கும். அணுப்பிளவினால் உண்டாகும் பொருள்கள் அனைத்துமே நச்சுப் பொருள்கள்தாம். அவற்றில் பலவற்றைப்பற்றி யாருமே இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஆனால், அவைகள் ஜெர்ம் பிளாசத்தில் (germ plasm) 'மாற்றங்கள்' ஏற்படுவதை விரைவுபடுத்துமாம். இத்தகைய மாற்றங்கள் மனிதனின் இயற்கை வெற்றியைப் (திறனை) பாதித்து, வருங்காலச் சந்ததியாரின் வாழ்நாளையே (ஆயுளை) குறைத்து

விடுமாம். இதனைக் கேள்வியுற்ற விஞ்ஞானிகளும் அறிவாற்றல் மிக்க தலைவர்களும் அணுசக்திச் சோதனைகளை நிறுத்திவிடுமாறு வேண்டுகோள் விடுத்தனர். இவர்களில் நேருவும், பெர்ட்ரண்டு ரஸ்ஸலும், டாக்டர் ஆல்பெர்ட் சுவிட்சரும் குறிப்பிடத்தக்கவர் களாவர். 1957 ஏப்ரல் 23ஆம் நாள் உலகத்திற்குத் தாம் ஆற்றிய வானொலிப் பேருரையில் ஸ்விட்சர், அணுசக்தி வெடிப்புகள் வருங்கால மனிதகுலத்தை அச்சுறுத்திவருகின்றனவென்று திறம் படக் கூறினர். ஆனால், மற்ற வல்லுநர்கள், குறிப்பாக யு.எஸ். அணுசக்திக் குழுவைச் சேர்ந்த நிபுணர்களோ, அத்தகைய அபாயம் ஏற்படாதென்றும், 'தேசியப் பாதுகாப்பிற்காக' அணுசக்திச் சோதனைகள் நடத்துவது மிகவும் இன்றியமையாததாகும் என்றும் வலியுறுத்திவந்தனர். இவ்வாறு தமக்குள் சண்டை போட்டுக் கொள்ளும் வல்லுநர்களைப் புரிந்து எடை போடமுடியாத சாதாரண மனிதர்கள், நடப்பது நடக்கத்தான் செய்யும் என்று வருங்காலத்தில் தங்களுக்கு ஏலேயவிருக்கும் கேடுகள்பற்றி ஒன்றும் தெரியாமல் சித்தாந்தம் பேசினர்.

அணுசக்தி தோன்றிய நாள்முதல் இதுவரை செய்யப்பட்டிருக்கும் சோதனைகளை ஆராய்ந்தால் மிகவும் களைத்துவிடுவோம். 1949 செப்டம்பரில் அணுகுண்டைக் கண்டுபிடித்தும், 1953 ஆகஸ்ட்டில் ஹைடிரஜன் குண்டைக் கண்டுபிடித்தும் யு.எஸ்.எஸ்.ஆர். அமெரிக்காவின் அணுகுண்டுச் சுவாதீனத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. அதோடு நின்றுவிடாமல் தொடர்ந்து உறுதியாகவும், முறையாகவும், அதிக விளம்பரமின்றியும் சோதனைகள் நடத்திவருகிறது. ஆனால், சோவியத் யூனியன் செய்த சோதனைகளில் பெரும்பாலான சோதனைகளைப்பற்றி வாஷிங்டன் அறிவித்தது. காற்றுமண்டலத்தில் புதிய அணுசக்தி வெடிப்புப் பொருள்கள் இருக்கின்றனவா என்று ஆராய்வதன்மூலம் உலகின் வடபாதியில் (Northern Hemisphere) எந்த இடத்தில் நடைபெற்ற சோதனைகளையும் கண்டுபிடித்துவிடலாம். உலகின் மூன்றும் அணுசக்தி வல்லரசான பிரிட்டன் இந் நூற்றாண்டு நடுவில் தன்னுடைய குறுகிய வளங்களின் உதவியால் அணுசக்திச் சோதனையில் ஈடுபட்டது. முதல் பிரிட்டிஷ் அணுகுண்டைச் செய்ய 100,000,000 பவுனுக்குமேல் செலவிட நேரிட்டதென்றும், இது 'அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே நெருங்கிய செய்திப் பரிவர்த்தனைக்கு வகை செய்யும்' என்றும் சர்ச்சில் கூறினர். ஆனால், அவர் நம்பிக்கை நனவாகவில்லை. தன் நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு அமெரிக்காவின் மிக நெருங்கிய நேசநாட்டிற்குக்கூடச் சில 'குறிப்பான' அணுசக்திச் செய்தியைப் பரிவர்த்தனை செய்வதை யு.எஸ். காங்கிரஸ் தடுத்துவந்தது. இத் தடை 1958-ல்தான் நீக்கப்பட்டது. 1953 அக். 15ஆம் நாள் இரண்டாவது பிரிட்டிஷ்

அணுகுண்டு தென் ஆஸ்திரேலியாவிலுள்ள ஊமெரா மலைப்பகுதியில் சோதனை செய்யப்பட்டது. 1957 மே 15ஆம் நாள்முதல் பிரிட்டிஷ் ஹைடிரஜன் குண்டு ஹவாய்க்கு 1,200 மைல் தெற்கேயுள்ள கிறிஸ்துமஸ் தீவில் வெடிக்கப்பட்டது. மே 31ஆம் நாள் இரண்டாவது குண்டு வெடித்தது. யு.எஸ்.ஏ. ஒவ்வோர் ஆண்டும் பல சோதனைகள் செய்துவந்தது. அவற்றுள் சில நிவேடாவிலுள்ள (வடகிழக்கு சாவுப் பள்ளத்தாக்கு) யூக்கா பிளாட்சிலும், சில பிக்கானியிலும், வேறு சில தென் பசிஃபிக் கடலிலுள்ள மார்ஷல் தீவிலுள்ள எனிவெட்டாக் என்னுமிடத்திலும் செய்யப்பட்டன. ஒவ்வொரு சோதனைக்கும் ஓர் 'இரம்மியமான' பெயர் சூட்டப்பட்டது. டிரினிட்டி, கிராஸ் ரோட்ஸ், சாண்டுஸ்டோன், ரேஞ்சர், கிரீன் ஹவுஸ், பஸ்ட்டர், ஜாங்கிலர் (1945—51) என்றும், காஸில், டிபாட், விக்ஹாம், ரெட்விங், பிளம்பாம் (1954—57) என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

அணுசக்திச் சோதனைகளால் 'கண்டுபிடிக்கப்பட்டவை' எவை என்பதையும், அவற்றிற்கு அச்சத்தாலும், நம்பிக்கையாலும், அவநம்பிக்கையாலும் எங்ஙனம் பொதுத்துறை அதிகாரிகள் மனிதத் தன்மையுடன் தலைசாய்த்தார்கள் என்பதையும் அமெரிக்க அனுபவத்தின்மூலம் இனி ஆராய்வோம். அது 1952—53-ல் அணுசக்தி பீரங்கிக் கவசத்தைக் (nuclear artillery shells) கண்டுபிடித்தது. யு. எஸ். எஸ். ஆரிடம் அத்தகைய ஆயுதங்கள் இல்லை என்று பெருமிதப்பட்டது. இந்த ஆயுதங்களைப் 'படைச்சூழ்ச்சியுடன்' (எதிரியின் நகர்களைப் பாழ்படுத்த) பிரயோகிப்பதற்குப் பதிலாகத் 'திறமையுடன்' (எதிரியின் படையை எதிர்க்கப்) பயன்படுத்தினால், மார்க்ஸ்லாந்தின் அதிகமான மனித, டாங்கி சக்திகளினின்றும் சுதந்திர உலகைப் பாதுகாத்துவிடலாம் என்று அது நினைத்தது. அந்த நோக்கத்தில்தான் அது (அமெரிக்கா) ஐரோப்பாவிலுள்ள நேட்டோ படைகளை அணுசக்தி பீரங்கியால் வலுப்படுத்தத் திட்டமிட்டது. ஆனால், எங்கும் அழிவையே பெய்யும் அணு ஆயுதப் போர் மேகங்கள் வந்து சூழ்ந்துகொண்டதும், 'இச்சிறிய வழிகளும்' குறிப்பிட்ட இடத்தில்' அணு ஆயுதப் போர் நடத்த முடியும் என்று அமெரிக்கா கண்டுவந்த கனவும் பலிக்காதுபோயிற்று. புளூட்டோனியம்போன்ற பளுவான தனிமங்களை அணுசக்திமூலம் பிளப்பதால் உண்டாகும் அணுகுண்டு உஷ்ணத்தைக் கொண்டு லேசான (ஹைடிரஜன் குண்டில் உள்ள ஹைடிரஜனைப் போன்ற) தனிமங்களின் அணுசக்திப் பிளவு எதிரியக்கத்தைக் கொண்டுவர முடியும். இப் புதிய கண்டுபிடிப்பின்மூலம் சூரியனிலும் நட்சத்திரங்களிலும் ஏற்படுவதுபோல் பூமியிலும் பொருளைச் சக்தியாகச் சிறிதளவு மாற்றலாம். இது கண்டுபிடிக்கப்பட்டதும் அணுசக்தியின் 'அளவில்லா' அழிவுச் சக்தி வெள்ளிடை மலையாயிற்று. இதுகாறும் கிலோ டன்னில்

கணக்கிடப்பட்டுவந்த வெடிப்புச் சக்தி (ஆயிரக்கணக்கான டன்-டி.என்.டி.) இப்போது மெகாடன்களாக (மில்லியன் டன்களாக) உரு மாற்றப்பட்டுவிட்டது. குண்டு தயாரிப்பாளரும் குண்டுகளை எடுத்துச் செல்வதற்காக இப்போது பழக்கத்தில் இருக்கும் சாதனங் களும் இதற்கு ஓர் அளவை நிர்ணயிக்கவில்லை.

1952 நவம்பர் முதல் நாள் எனிவெட்டாக் என்றவிடத்தில் 'மிக்ஷாட் ஆஃப் அப்பொரேஷன் ஐவி' என்ற சோதனை செய்யப் பட்டது. அதிலிருந்து ஒரு நெருப்புப் பந்தம் உண்டாயிற்று. அதன் விட்டம் $3\frac{1}{4}$ மைல். அது இலுகிளாபு என்ற தீவையே அழித்துவிட்டது. அந்த எரிமலையின் ஆழம் மட்டும் 175 அடி; அகலம் 1 மைல். இதிலிருந்து வெளிப்பட்ட அணுசக்தி மேகங்கள் 20 மைல் தூரம் உயரே சென்றதாம். இம் மேகங்கள் 100 மைல் அகலம் சூழ்ந்திருந்தனவாம். 'இப்படிப்பட்ட ஒரு குண்டு 6 மைல் விட்டத் திற்குள் இருப்பதனைத்தையும் ஒன்றுகூடப் பாக்கியில்லாமல் அழித்து விடும்; பத்து மைல் சுற்றுவட்டத்தில் 100 சதுர மைல் தூரத்தில் இருப்பவையனைத்துக்கும் பெருத்த சேதத்தை உண்டாக்கிவிடும்' என்று டபிள்யு. ஸ்டெர்லிங் கோடு என்ற அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர் (1953 பெப். 17ஆம் நாள்) எடுத்துரைத்தார். தம் பதவியிலிருந்து செல்லுங்கால் ஜனதிபதி ட்ரூமனும் இக் கருத்துக்கு ஆதரவு அளித்துச் சென்றார். ஆனால், 'ரஷ்யாவிடமும் இந்தக் குண்டு இருக்கிறது என்று மட்டும் நான் நம்பவில்லை.....அணுகுண்டு தயாரிக்கும் வேலையில் பயன்படுத்தப்படும் சிக்கலான வழிமுறையை ரஷ்யர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள் என்று நான் நம்பவில்லை' என்று அவர் (1953 ஜன. 27) கூறினர். இக் கருத்தை கோர்டன் டீனும் ஜனதிபதி ஐசன்ஹோவரும் எதிர்த்தார்கள். 1953 ஜூன் 23ஆம் நாள் ஐசன்ஹோவர், கடற்படைத்தலைவர் லூயி எல். ஸ்ட்ராஸ் என்பவரை யு. எஸ். அணுசக்திக் குழுவின் தலைவராக நியமித்தார். இப் புதுத்தலைவர் கோர்டன் டீனுடன் சேர்ந்துகொண்டு, என்ன பாடுபட்டும் ஹைடிரஜன் குண்டுகளைத் தயாரிக்கவேண்டும் என்று டாக்டர் ஓப்பன்ஹீமர் கூறிய ஆலோசனையை ஏற்க மறுத்துவிட்டார்.

யு. எஸ். எஸ். ஆரும் ஹைடிரஜன் குண்டைத் தயாரித்து விட்டதாக 1953 ஆக. 8ஆம் நாள் மெலென்கோவ் உணர்த்தினர். 'அதற்கு எவ்விதச் சான்றுமில்லை' என்று இதைக் கேட்ட வெளி நாட்டு அமைச்சர் டல்லஸ் பட்டென்று கூறிவிட்டார். 'அணு ஆயுதப் போர் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். ஆனால், மனித குலம் அதன் அழிவினின்றும் தப்பும் வழியை விரைவில் கண்டு பிடித்துவிடும் என்று நான் நம்பவில்லை. மனிதத் தன்மையையும் மனித அனுபவத்தையும் கொண்டு பார்க்குமிடத்து, அமைதியான முறையில் நம் சிக்கல்கள் தீர்க்கப்படமாட்டா என்றே தோன்று

கிறது' என்று யு.எஸ். சிவில் பாதுகாப்பு நிர்வாகத் தலைவர் வால் பீட்டர்சன் அக்டோபர் மாதம் கருத்துரைத்தார்.

1953ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அணுசக்தியின் பயன்கள் பற்றிய மறு ஆராய்ச்சி நடந்தது. அதில் முரண்பாடான கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. 60,000 கிலோவாட் அணுசக்தி உற்பத்தி செய்யக்கூடிய முதல் அமெரிக்க (அணு) சக்தி நிலையம் ஒன்றை அமைக்கப்போகும் திட்டத்தை வாஷிங்டன் அறிவித்தது. அணு சக்திப் பொருள்கள், செயல்முறைகள் (know-how) அமைதியை நிலை நாட்டுவதற்காகப் பயன்படுத்தவேண்டும் என்றும், அதற்காக ஓர் அனைத்துலகச் 'சேமிப்பு நிலையம்' அமைக்கப்படவேண்டும் என்றும், இதற்கு வழிசெய்யக்கூடிய சர்வதேச உடன்பாடு ஏற்படவேண்டும் என்றும் ஜனாதிபதி ஐசன்ஹோவர் (1953 டி. 8) ஐ. நா. விடம் ஊக்க மாகப் பிரேரேபித்தார். நம்பிக்கையூட்டும் இப் பிரேரணையை ஐ.நா. பொதுச்சபை நன்கு வாதித்துவிட்டு, 1954 டிச. 4ஆம் நாள் ஒரே மனமாக நிறைவேற்றியது. சர்வதேச அணுசக்தி ஏஜென்சியை அமைக்கவும், ஓர் பன்முக உடன்பாடு (multilateral accord) வரையப் பட்டது. அதை முதன்முதலில் 1957 ஏப்ரல் மாதம் ஒப்புக்கொண்ட நாடு யு. எஸ். எஸ். ஆர். தான். அடுத்தாற்போல் மற்ற நாடு களும் அதில் கையெழுத்திட்டன. 1957 அக்டோபர் மாதம் வியன்னாவில் அதன் திறப்பு விழா நடைபெற்றது. டபிள்யூ. ஸ்டெர்லிங் கோல் என்பவர் அதன் முதல் டைரக்டர்-ஜெனரலாகப் பதவியேற்றார். இது பொதுவாக மனித குலத்தின், குறிப்பாக, அணு சக்தியை விட்டால் வேறு சக்தி (விசை) உற்பத்தி வழிகள் குறைவாக இருக்கும் 'பிற்போக்கான' வட்டாரங்களின் உடலுரம், சேமநலம், நல்வாழ்வு ஆகியவற்றைப் பொறுத்தவரை உயர் நம்பிக்கையூட்டியது. ஆனால், இந் நம்பிக்கை பூரண நனவாகவேண்டுமானால், முப்பெரும் அணுசக்தி வல்லரசுகளிலும், மற்ற நாடுகளிலும் பொதுமக்கள் கவனமும் பொதுக் கொள்கையும் 'போருக்காக அணுசக்தியைப் பயன் படுத்துவதற்குப்' பதில் 'அமைதியை வளர்க்கப் (ஆக்கத் துறையில்) பயன்படுத்தும்' திசையில் திருப்பப்படவேண்டும்.

கெடுபிடிப் போர் நிலைமை வரவர மாறிவந்தது. 1955ஆம் ஆண்டில் ஜெனீவாவில் ஓர் உச்சகட்ட மாநாடு நடைபெற்றது. ஆனபோதிலும், அணுசக்தியின் குறிக்கோள்களைப் பொறுத்தமட்டும் அதனால் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 1954 ஜனவரி 21ஆம் நாள் குரோட்டன் என்னுமிடத்தில், யு.எஸ்.ஏ., 'நாட்டிலஸ்' என்ற முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலைக் கடலில் விட்டது. அதையொட்டி அனேக நீர்மூழ்கிக் கப்பல்கள் விடப்பட்டன. 1954 மார்ச் முதல் நாள் எனிவெட்டாக் என்ற இடத்தில் அமெரிக்கா இரண்டாவது ஹைடிரஜன் குண்டைச் சோதித்தது. இச் சோதனை

குறித்து மௌனம் நிலவிவந்தது. எனினும், மார்ச் 11ஆம் நாள் யு.எஸ். அணுசக்திக் குழு இச் சோதனையால் 28 அமெரிக்கர்களும், 236 சுதேசவாசிகளும் 'எதிர்பாராத விதமாகக்' 'கதிர் வீச்சால்' பாதிக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால், அதிலிருந்து அனைவரும் குணமடைந்துவருவதாகவும் அறிவித்தது. இச் சோதனைபற்றிக் குறிப்பிடுங்கால் (மார்ச் 11) கடற்படைத் தலைவர் ஸ்ட்ராஸ், இச் சோதனையால் 'மதிப்பிடப்பட்டதற்கு இரண்டு மடங்கு அதிகமாகவே' மெகா டன் கணக்கில் மாபெரும் வெடிப்பு ஏற்பட்டது' என்றும், இச் சக்தியால் யு.எஸ்.ஏ. இப்போது உலகிலுள்ள எந்த நகரையும் முற்றிலும் அழித்துவிட முடியும் என்றும் கூறினர். இச் சோதனையிலிருந்து விழுந்த விஷ 'அணுத்துகள்கள்' (lethal fall out) 7,000 சதுர மைல் பரவியதாக 1955 பெப்ரவரியில் அறிவிக்கப்பட்டது. இது நியூஜர்சி அல்லது மசாசூசெட்ஸ் மாநிலத்தின் நில அளவுக்குச் சிறிதே குறைவு என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இத் தூரத்திற்குள் நின்றுகொண்டிருந்த ஒரு சப்பானியப் போர்ப் படகைச் சேர்ந்த 23 பேர்களை கதிர்வீச்சு விடம் சூழ்ந்துகொண்டது. அதில் ஒருவர் இறந்தேபோனர். மற்ற அனைவரும் நோய்வாய்ப் பட்டனர். நஞ்சூட்டப்பட்ட மீன்கள் முழுவதும் அழிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சி சப்பானின் சினத்தை மூட்டியது. அதைத் தணிக்கும் முகத்தான் சப்பானுக்கு யு. எஸ். ஏ. 2,000,000 டாலர் நஷ்ட ஈடாக அளித்தது. அணுகுண்டுச் சோதனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுமாறு, மார்ஷல் தீவில் வாழ்ந்துவரும் மக்கள் ஐ.நா. தர்மகர்த்தா கவுன்சிலிடம் (UN Trusteeship Council) விண்ணப்பித்தனர் (petition). அந்த விண்ணப்பத்திற்கு இந்திய, ரஷ்யப் பிரதிநிதிகள் முழு ஆதரவு காட்டியும், அவ் வேண்டுகோளை ஏற்கக் கவுன்சில் மறுத்துவிட்டது.

மனிதன் தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் வழியைக் கண்டுபிடித்து, சோதனையும் செய்துபார்த்துவிட்டான். இனியாவது அரசியல் மேதைகள் அணுசக்தியை நாசவேலைகட்குப் பயன்படுத்தாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந் நம்பிக்கையில் விரைவில் மண் விழக் காத்திருந்தது. ஜனாதிபதி ஐசன்ஹோவரின் முன் அனுமதியுடன் 1954 ஏப்ரல் 12ஆம் நாள் யு.எஸ். அணுசக்திக் குழு, அமெரிக்காவின் முதல் அணுகுண்டைத் தயாரிப்பதற்கு உறுதுணையாக நின்ற டாக்டர் ராபர்ட் ஒப்பன்ஹீமர் என்பவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கலாயிற்று. ஹைடிரஜன் குண்டுகள் தயாரிக்கப்படுவதை அவர் தடுத்தார் என்பதற்காகவும், 1940ஆம் ஆண்டுக்குப்பின் அவர் 'கம்யூனிஸ்ட்டுகளுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்துவிட்டார்' என்ற குற்றத்திற்காகவும் அணுசக்தி பற்றிய 'குறிப்பிட்ட' விவாதங்களுக்கு அருகே அவர் செல்ல முடியாதவாறு செய்யப்பட்டார். ஓராண்டுக்குப் பின்னர், 1955 ஏப்ரல் 18ஆம்

நாள் 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த அறிவாளி, மேதை, அணு யுகத்தின் தந்தையாம் ஐன்ஸ்டெயின் தம் பூதவுடல் நீத்தார். அவர் அணுசக்தி மக்களின் சேமநலனுக்காகப் பயன்படுத்தப்படும் மனித இனத்தையே கூட்டோடு அழிப்பதற்காகப் பயன்படுத்தப்படமாட்டாது என்று நம்பியிருந்தார். ஆனால், அந்த நம்பிக்கை மொட்டு அழகான பூவாக மாறுமல் மொட்டிலேயே கருகிவிட்டது. 1955 ஜூன் 15ஆம் நாள் ஹைடிரஜன் குண்டு வெடிப்பிலிருந்து 'பாதுகாப்பு' அளிக்கும் சாதனங்கள், 'நடவடிக்கைத் தயார்முறை' மூலம் (Operation alert) மிக விரிவாகச் சோதிக்கப்பட்டன. அமெரிக்க அரசாங்கம் வாஷிங்டனிலிருந்து வேறேர் இடத்துக்கு மாற்றப்பட்டது. எல்லாம் பெரிய நகரங்களிலுமுள்ள வீதிகள் காலியாக்கப்பட்டன. ஓர் அணுசக்தி 'மாதிரித் தாக்குதல்' (mock attack) செய்யப்பட்டது. அதில் 8,200,000 பேர்களே 'கொல்லப்பட்டனர்'; 6,550,000 பேர் 'காய முற்றனர்'. ஒவ்வொரு மெகடன் குண்டிலிருந்தும் (வெடிக்கும்போது) வெளியாகும் 'அணுத்துகள்கள்' 2 வாரங்களுக்கு 100,000 சதுர மைல் இடத்தில் உயிரினங்களே வாழமுடியாதவாறு செய்துவிடும். மேலும், அதன்கண் வாழும் அனைவரையும் கூட்டோடு அழித்துவிடும். எனவே, இந்த நடவடிக்கை (மாதிரித் தாக்குதல்) அர்த்தமற்றது என்று அணுசக்தி பௌதிக வல்லுநரான ராஃப் இ. லாப் கருத்துரைத்தார்.

இதன்பின் என்ன நடந்தது என்பதை (ஆர்னல்டு டாயின்பீ தம்முடைய தலைசிறந்த படைப்பான 'நாகரிக வரலாற்றில்' கையாண்டிருக்கும் சொற்களில் கூறவேண்டுமாயின்), 'அது பெருமையின் (hybris or proud) பயனின்மையையும், பழிவாங்குதல் தவிர்க்க முடியாததையும் படம்பிடித்துக் காட்டிற்று' என்று கூறவேண்டும். 1957 அல்லது 1958-ல் உலகைச் சுற்றிவரும் துணைக்கோளம் (சாட்டிலைட்) ஒன்றை யு. எஸ். ஏ. அனுப்பும் என்று 1955 ஜூலை 29ஆம் நாள் அமெரிக்க அதிகாரிகள் வாஷிங்டனில் அறிவித்தனர். டிசம்பர் மாத இறுதியில் அவர்களே, யு.எஸ்.எஸ்.ஆர்., பயன்தரக் கூடிய கண்டம்விட்டுக் கண்டம் போகக்கூடிய ஏவுகணையை — இன்டர் கான்டினென்டல் பாலிஸ்டிக் மிசைலைக் (ICBM) கண்டுபிடித்துவிட்டதென்று பெருமிதத்துடன் புல்கானின் கூறியதை நம்ப மறுத்துவிட்டனர். 1956-ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் விளம்பரத்தின் கடைசியில், அணுசக்தி சோதனைகளை நிறுத்த வேண்டும் என்று அடிலாய் ஸ்டீவன்சன் வேண்டினார். புல்கானின் இதற்கு இசைய மறுக்கவே, குடியரசு கட்சியினர் ஸ்டீவன்சனின் வேண்டுகோள் நாட்டையே 'கவிழ்த்துவிடக் கூடியது' என்று குற்றஞ்சாட்டினர். இந்நிலையில், அணு ஆயுதப் போர் முறையில் அமெரிக்கா எல்லோரையும்விடப் பல படிகள் மேலே சென்றுவிட்ட

தாகப் பெரும்பாலும் எல்லா அமெரிக்கரும் கருதிவந்தார்கள். இது உண்மையா, இல்லையா என்பதை அறிய அவர்கள் முன்வந்தாரில்லை.

ஒருசில கருத்துகள் உண்மையானவை என்று கொள்வோமாயின், அமெரிக்கர்களின் இந்நினைப்பில் தவறில்லை என்பது புரியும். அவற்றில் ஒன்று யு.எஸ்.எஸ். ஆரின் பிற்போக்குத் தன்மை—அதாவது, துயருறும் அடிமைகளைக் கொடிய, அறிவற்ற கொடுங்கோலர்கள் ஆட்சிபுரிந்துவரும் பழங்காலச் சமுதாயமே யு.எஸ்.எஸ்.ஆர். என்று பெரும்பாலான அமெரிக்கர்கள் நினைக்கின்றனர். இது ஒரு கருத்து. வானூர்திக் கலையிலும் (aviation) அணு ஆயுதங்களிலும் அமெரிக்காவின் முன்னேற்றம் ரஷ்யாவை விடப் பன்மடங்கு அதிகம் என்பது மற்றொன்று. ஆகையால், கடல்களுக்கு அப்பால் இருக்கும் எண்ணிறந்த விமானப்படைத் தளங்களின்மூலம் யு.எஸ். போர்ச்சூழ்ச்சி விமானப்படைத் தலைமை, போர் நேரிடும்பட்சத்தில் சோவியத் யூனியன் முழுவதையும் அழித்து ஒழித்துவிடமுடியும். அத்தகைய போரில் அமெரிக்காவுக்கோ, அன்றி மேற்கு ஐரோப்பாவுக்கோ அவ்வளவு அழிவும் சேதமும் ஏற்படா. மற்றொரு கருத்தும் நிலவிவருகிறது. ராக்கெட் எந்திரங்களின் வளர்ச்சியிலும், எதிரியின் நகரங்களை விரைவாகவும் சரியாகவும் தீ வைத்து அழித்தொழிப்பதற்காக ஆயிரக்கணக்கான மைல்கள் உலகைச் சுற்றிலும் அணு ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு செல்லக்கூடிய மிசைல்கள் (missiles) வளர்ச்சியிலும் உலகிற்கே வழிகாட்டியது யு.எஸ்.ஏ.தான். இது மூன்றாவது கருத்து. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதுபோல் எங்கும்போல் இங்கும் வீழ்ச்சிக்குமுன் பெருமை (அமெரிக்கர்களை) ஆட்கொண்டுவிட்டது. அவ்வளவுதான்!

1946-47-ல் நடந்ததைப்போல் 1956-57-லும் 'படைக்கலக் கலைப்புப்' பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இருதரப்பினரும் ஒரே தந்திரத்தைக் கையாண்டனர். ஒவ்வொரு தரப்பினரும் மற்றத் தரப்பினர் என்றுமே ஒப்புக்கொள்ள முடியாத திட்டங்களையே கொண்டுவந்தனர். எதிர்த்தரப்பினர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று முன்கூட்டியே தெரியும். தெரிந்தும், வேண்டுமென்றே இருதரப்பினரும் அப்படிச் செய்தார்கள். ஏனெனில், இருவருமே இராணுவ நலன்களைப் பெருக்குவதிலே கண்ணுங்கருத்துமாய் இருந்தார்களேயன்றிப் படைக்கலக் கலைப்பில் அன்று. எனவே, அவர்கள் உண்மையில் எந்த சர்வதேச உடன்பாட்டுக்கும் வர விரும்பவில்லை. ஏனெனில், அத்தகைய உடன்பாடு ஏற்பட்டுவிடும் பட்சத்தில் இராணுவ நன்மைகள் கிடைக்காமற் போய்விடும் அல்லவா? எனவே, வாஷிங்டன், தான் அணு ஆயுதச் சோதனைகளைக் கைவிடுவதென்றால், அல்லது அணு ஆயுதங்களையே முற்றிலும்,

துறப்பது என்ருல், தான் விதிக்கும் நிபந்தனைக்கு மற்றவர்கள் தலைசாய்க்க வேண்டுமென்று பிடிவாதம் செய்தது. திடீர்த் தாக்குதலால் ஏற்படும் ஆபத்தைக் குறைப்பான் வேண்டி, 'குற்றம் குறையில்லா' ஆகாய, நில மேற்பார்வைத் திட்டம் செயற்பட வேண்டும் என்பதே அந் நிபந்தனை. யு.எஸ்.எஸ்.ஆர். முழுதும் ஒத்து நடத்த, ஒருகாலும் அந் நாடு சம்மதியாது என்று வாஷிங்டனுக்கு நன்கு தெரியும். எனவே, தன் திட்டத்தையும் அது ஒப்புக்கொள்ளாது என்று முன்கூட்டியே தெரியும். இது இவ்வாருக, மாஸ்கோவோ அரைகுறை மனத்துடன் மேற்பார்வைத் திட்டத்தை ஆதரித்துவந்தது. ஆனல், எந்த நிபந்தனையுமின்றிச் சோதனைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும், குண்டுகளை முற்றிலும் தடைசெய்ய வேண்டும் என்றும் அது உறுதியாகக் கூறிற்று. வாஷிங்டன் இத் திட்டத்திற்குச் சம்மதியாது என்று அதற்கும் நன்கு தெரியும். இந்தப் பரஸ்பர மாறுவேட விளையாட்டில் 1946-49-ல் மாஸ்கோவே 'ஜெயித்தது'. 1957-லும் அதுவே 'ஜெயித்தது'. நரகத்தின் வாயிலில் நின்றுகொண்டு குஸ்தி போடும் இரு குண்டர்களுக் கிடையில் என்ன 'வெற்றி' ஏற்படமுடியும் என்று பலர் கேட்கலாம். எனினும், மாஸ்கோவே இருமுறையும் வாகை சூடியது.

1957 வரை யு.எஸ்.ஏ. மிசைல் திட்டத்தில்மட்டும் 4,000,000,000 டாலர்கள் செலவிட்டது. ஆனல், 1957 ஜூன் 11ஆம் நாள் ஃபுளோரிடாவிலுள்ள கேப் கனவிரால் என்னுமிடத்தில் நடைபெற்ற முதல் அட்லாஸ் ஐ.சி.பி.எம். சோதனை எதிர்பார்த்த பயனளிக்க வில்லை. ஏனெனில், ராக்கெட் ஆயுதம் மேலே சென்றதோ இல்லையோ, கடலில் வெடித்து விழுந்துவிட்டது. ஆனல், இந் நிகழ்ச்சி ஜெனரல் லாரிஸ் நோர்ஸ்டெட் என்பவரின் பெருமிதத்தைச் சிறிதும் கட்டுப்படுத்தவில்லை. ஏனெனில், அவர் யு.எஸ்.எஸ்.ஆரில் உள்ள 'முக்கியமான ஒவ்வொரு பொருளையும் அழித்துவிடும் சக்தி' இப்போது நேட்டோ கையில் இருக்கிறது என்று மறுநாளே காங்கிரசிடம் கூறினர். மனிதனைக் கொல்லும் சக்தி வாய்ந்த 'அணுத்துகள்கள்' குறைவாய் விழக்கூடிய மனிதரை மில்லியன் கணக்கில் கொன்று குவிக்காமல், ஆயிரக் கணக்கில்மட்டும் கொல்லக் கூடிய ஒரு 'சுத்தமான' ஹைடிரஜன் குண்டைக் கண்டுபிடிக்கும் வரை அணுசக்தி சோதனையை இடைவிடாது நிகழ்த்தவேண்டும் என்று 1957 கோடைகாலம் முழுதும் வாஷிங்டனில் அதிகாரிகள் பேசிக்கொண்டார்கள். அத்தகைய ஆயுதம் கையில் வந்துவிட்டால், உலகிலேயேதான் உயர்ந்ததாக கற்பனைசெய்யும் யு.எஸ். போர்ச் சூழ்ச்சி விமானத் தலைமை, பிறகு அமெரிக்காவையும் சுதந்திர உலகையும் நிச்சயமாய்ப் பாதுகாக்கமுடியும் என்று கருதப்பட்டது.

'எதிரியின்' உட்கருத்துகளைக் கண்டு ரஷ்யர்கள் சிறிதும் அஞ்சவில்லை. மாருக, அவர்கள் முற்றிலும் வேறுவிதமாக

நினைக்கவும் நடக்கவும் புறப்பட்டார்கள்; அணுகுண்டுகளையும் ஹைடிரஜன் குண்டுகளையும் அமெரிக்க இலக்குகளுக்குத் தாங்கிச் செல்லக்கூடிய நீண்ட தொலைகளுக்குச் செல்லக்கூடிய விமானப்படை ஆயுதம் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். அதுதான் இப்போது ராக்கெட் (rocket) என்று அழைக்கப்படுகிறது. அரசியல் வெல்திறத்தால் வருங்காலத்தில் அணு ஆயுதப் போரை வரவொட்டாமல் தடுக்க முடியாவிட்டால், மற்ற ஆயுதங்களால் அப் போர் நடைபெற்றாலும் பெறலாம்; அப்போது குண்டுவீச்சு விமானங்கள் வந்து எப்படிப் போர்க்கப்பல்களைப் பயனறச் செய்துவிட்டனவோ, அப்படி இவ்வாயுதங்கள் குண்டுவீச்சு விமானங்களையே பயனறச் செய்தாலும் செய்யலாம் என்று அவர்கள் ஐயமடைந்தனர். அமெரிக்க இராணுவத் திட்டக்காரர்களுக்கும் இது நன்கு தெரியும். ஆனால், ஏனோ அவர்கள் ராக்கெட் போட்டியில் பின்தங்கிவிட்டார்கள். பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள (எதிரியின்) இலக்குகட்கு அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லக்கூடிய சிறந்த ஐ.சி.பி.எம். ஆயுதத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக 1957 ஆகஸ்டு 26ஆம் நாள் மாஸ்கோ அறிவிப்புச் செய்தது. ஆனால், வழக்கம்போல் இம் முறையும் வாஷிங்டன் இதை நம்ப மறுத்துவிட்டது.

1957ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 4ஆம் நாள் வெள்ளிக்கிழமை மனித வரலாற்றிலேயே என்றும் மறக்க முடியாத நாள்—ஸ்புட்னிக் யுகம் பிறந்த நாள்—ஸ்புட்னிக் எனப்படும் பூமியைச் சுற்றும் முதல் சாட்டிலைட்டை யு.எஸ்.எஸ்.ஆர். அனுப்பிய நாள், அதன் எடை 184 பவுண்டு என்று சொல்லப்பட்டது. பூமி மட்டத்திலிருந்து 500 மைல் தூரத்தில் அது பூமியை மணிக்கு 18,000 மைல் வேகத்தில் பல வாரங்கள் சுற்றிச் சுற்றி வந்தது. வரவர அதன் வேகமும் உயரமும் (altitude) குறையலாயின. இறுதியில் அது எரிந்து கருகி பூமியின் காற்றுமண்டலத்தில் விழுந்துவிட்டது. இவ் வியத்தகு விஞ்ஞான சாதனையின் முக்கியத்துவம் இச் சாதனையின் இராணுவ முக்கியத்துவத்திற்கு முன்னால் குறையலாயிற்று. அதன் பிறகு பல ஸ்புட்னிக்குகள் அனுப்பப்பட்டன. இவைகள், யு. எஸ். எஸ். ஆர். மிக அழுத்தமான ராக்கெட் எந்திரங்களை வைத்திருக்கிறது என்பதையும், எல்லா விமானப் படைகளையும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பயனில்லாது செய்துவிடும் ஐ. சி. பி. எம். அதன் கைவசம் இருக்கிறது என்பதையும் உலகிற்குப் பறைசாற்றின. அமெரிக்காவும் விரைவில் இத்தகைய சக்தியைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று குருச்சேவ் ஒப்புக்கொண்டபோதிலும், 1957—58-ல் இந்த ரஷ்ய அணுசக்தி ஆயுதத்திற்கு நிகராக யு. எஸ். ஏ.யிடம் ஆயுதம் இல்லைதான். [8]

[8] ஸ்புட்னிக I 23 அங்குல நீளமானது. 184 பவுண்டு கனம் உடையது. அதில் 2 ரேடியோ டிரான்ஸ்மிட்டர்கள் (transmitters) வைக்கப்பட்டிருந்தன.

வலிமை அரசியல் விளையாட்டு இன்று நகைப்புக்கு இடமாகி விட்டது (reductio ad absurdum). இந் நிலையை நாம் அடைந்து விட்டோம். ஒவ்வோர் இராட்சச வல்லரசும் ஒன்றை ஒன்று அழித்து விடும் சாதனத்தை—சக்தியைப் பெற்றிருக்குங்கால், போர், வலிமை (அதிகாரம்) பற்றிய சிக்கலைத் தீர்க்கும் கருவியாக ஆகமுடியாது. ஆனல், அது பரஸ்பரத் தற்கொலைச் சாதனமாக மாறிவிடும். இல்லையா? மேற்கு அரசு முறையின் நீண்ட வரலாற்றிலும், அவர்கள் முன்னோர் வாழ்ந்துவந்த பண்டைய நாகரிகங்களிலும் போர், 'தேசிய நலனைப்' பாதுகாக்கக்கூடிய பகுத்தறிவான கருவியாகவே கருதப்பட்டுவந்தது. பிற நாடுகளை வல்லினைப்புச் செய்ய உதவும் கருவியாகவும் கருதப்பட்டு வந்தது. ஆனல், 1945ஆம் ஆண்டுமுதல் அன்று, ஆனல் 1957 முதல் (இந் நிலை மாறி) வல்லரசுகட்குள் நடக்கும் போர் உலகையே அழித்துவிடும் சாதனமாக மாறிவிட்டது. இந்த ஒரே காரணத்தால்தான் உலகைக் கட்டி ஆளும் நோக்கத்தில் அணு ஆயுதப் போர் என்றுமே நடக்கப்போவதில்லை என்று அனைவரும் கருதுகின்றனர். ஏனெனில், ஒருசில பேர்களைத் தவிர அரசியல் மேதை அனைவரும் பைத்தியக்காரர்கள் இல்லை அல்லவா? இவ்வொருசிலரும் விதிவிலக்கானவர். இவ் விருபதாம் நூற்றாண்டில் உருவாகியிருக்கும் இரு உயர்கூட்டுகளின் (முகாம்களின்) கொள்கை வகுப்பாளர்கள் மட்டும் தத்தம் நாட்டு மக்களுக்கும் மனித குலத்தின் எதிர்காலத்திற்கும் தம்மிடம் உள்ள பொறுப்பை உய்த்துணர்ந்து, அதன்படி நடப்பராயின், அவர்கள் மறவழி விடுத்து அறவழி செல்வர்; அழிவுப் பாதையைக் கைவிட்டு அமைதிப் பாதையை நாடுவர்; பண்டுதொட்டு இருந்து வரும் கௌரவமிக்க அரசியல் வெல்திறத்தைக் கடைப்பிடிப்பர். இரு

பாட்டரிகளும் உள்ளே வைக்கப்பட்டிருந்தன. அது 92 நாட்களில் 1,370 முறை பூமியைச் சுற்றியது. மொத்தம் 35,000 மைல்கள் சுற்றியது. இறுதியில் அதன் உயரம் குறைந்துபோய், அது 1958, ஜனவரி 4ஆம் நாள் எரிந்தே போய விட்டது. ஸ்புட்னிக் II 1957, நவம்பர் 3ஆம் நாள் அனுப்பப்பட்டது. இம் முறை 1,050 மைல் உயரத்தில பூமியைச் சுற்றுவதற்கு வகை செய்யப்பட்டது. அதன் எடை 1,120 பவுண்டு. இம் முறை அதில் 'லெய்க்கா' என்ற நாயும் உள்ளே வைக்கப்பட்டிருந்தது. ஒரு வாரம்வரை அதன் உடல்நிலை நல்ல நிலையில் இருந்தது. 1958ஆம் ஆண்டுத் தொடக்கத்திலும் அந்த சாட்டிலைட் பூமியைச் சுற்றிக்கொண்டுதான் இருந்தது. இவ் வியத்தகு விஞ்ஞான சாதனையைக் கண்ட யு. எஸ். ஏ. வெட்கித் தலைகுனிய நேரிட்டது. குறிப்பாக, 1957 டிசம்பர் 6ஆம் நாள் ஃபுளோரிடாவிலுள்ள கேப் கனவிராவலிருந்து ஒரு யு. எஸ். கப்பற்படை வான்கார்டு (விமானம்) ஒரு சிறிய சாட்டிலைட்டைத் தாங்கிக்கொண்டு ஆகாயத் திறகுள் சென்றது. ஆனல, அந்த சாட்டிலைட் 1958 ஜனவரி 31ஆம நாள், இராணுவத்தைச் (தரைப்படையைச்) சேர்ந்த ஜூப்பிட்டர்—சி மிசைல், ஒரு சிலிண்டர் வடிவுள்ள, 'எக்ஸ்புளோரர்' என்ற பெயருள்ள சாட்டிலைட் ஒன்றை அனுப்பியதும் மேலே வந்துவிட்டது. இந்த சாட்டிலைட்டின் நீளம் 6 அடி 8 அங்குலம்; விட்டம் 6 அங்குலம். அதன எடை 29 பவுண்டு 11 அவுன்ஸ். அது மணிக்கு 1,700 மைல் வீதத்தில் சுற்றியது. 1958 மார்ச் 17ஆம் நாள் அதே கேப்பிலிருந்து யு. எஸ். கடற்படை வான்கார்டு 6·4 அங்குல நீளமும், 3 பவுண்டு கனமுமுள்ள சிறிய சாட்டிலைட் ஒன்றை அனுப்பியது. சிறிய பெரிய அமெரிக்க, ருஷ்ய சாட்டிலைட்டுகள் 1958ஆம் ஆண்டு இறுதியில் அனுப்பப்பட இருக்கின்றன.

தரப்பினரும் கூடி அழிவதற்குப் பதிலாக இந் நூற்றாண்டிலேயே பெரும்பகைவர்களாகப் பிரிந்து நிற்போர் சமாதானச் சகவாழ்வு வாழமுடியும் என்று நம்பலாம்.

ஆனால், இருதரப்புக் கொள்கை வகுப்பாளரும் கூடி ஆலோசித்து, இந் நல்வழியைச் செய்ய முடிவு செய்வதற்குக் காலம் இன்னும் விடியவில்லை. அமெரிக்காவின் DEW-line ராடார் நிலையங்களைப் (Distant Early Warning) போல் ரஷ்யாவிடமும் இருக்கின்றன. இந்த ஸ்டேஷன்கள் 1957-ல் மாதிரி, எதிரியின் குண்டுவீச்சு விமானங்கள் வருவதைச் சில மணி நேரங்களுக்கு முன்னாலேயே தலைமைக் காரியாலயத்திற்குத் தெரிவித்துவிடும். இதனால் கிட்டிய செய்திகளின் உண்மையை அறிய முடிகிறது. மேலும், எதிரியின் நடவடிக்கைகளைக் குலைப்பதற்குரிய எதிர் நடவடிக்கைகளோ, பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கைகளோ எடுக்க, தேசியக் கொள்கை வகுப்பாளர்க்கு அவகாசம் கிடைக்கிறது. ஆனால், 1958-லும் அதன் பின்னரும் ஐசிபிஎம் வருகிறது என்று எச்சரிக்கை விடுவதற்கு 15 நிமிடங்களுக்குமேல் பிடிக்காது. (ஐசிபிஎம் ஐப்போன்ற வேறொரு பொருள் ஆகாயத்தில் மறைந்து வந்தாலும், அதன் வருகையை எச்சரிக்கவும் இதே நேரந்தான் பிடிக்கும்). இந் நிலையில் அணு ஆயுதப் போரைத் துவக்க, 'ஒரு பித்தானை அழுத்தினால் போதும்.' இப் பொறுப்பை ஆகாயங்களில் சஞ்சரித்துக்கொண்டு (தங்கள் நாட்டின் எல்லைகளைப்) பாதுகாத்து நிற்கும் தடுமாற்றமடையும் விமானிகளிடமும், பதற்றமான செய்தியறிவிப்பு அதிகாரிகளிடமும் (intelligence officers), மிசைல் தளங்களை நிர்வகித்துவரும் பொறியியல் வல்லுநர்களிடமும், எலக்ட்ரானிக் கம்பியூட்டிங் எந்திரத்திடமும் ஒப்படைக்க வேண்டியது தான். இவ்வெந்திரம் முடிவுக்கு வருமாறு செய்துவிட்டால், பின்னர் இந்த அதிகாரம் மனிதக் கட்டுப்பாட்டிலிருந்தே போய்விடும். 1960ஆம் ஆண்டுக்குள் அல்லது அதன் பின்னரும் பல நாடுகள் அணு ஆயுதங்களையும் ராக்கெட்டுகளையும் பெற்றுவிடும். இவைகளில் ஃபிரான்ஸ், சீனா, இத்தாலி, செர்மனி ஆகிய நாடுகள் முதலில் இருக்கும். இதையல்லாமல் உலகின் சேரிகளில் ஆட்சி புரிந்துவரும் பொறுப்பற்ற சருவாதிகாரிகளும் இறுதியில் அந்த ஆயுதங்களைப் பெற்றுவிடுவர். சேரிவாழ் மக்கள் மனமுறிந்து போனால் ஆக்கிரமிப்பிலும் பலாத்காரத்திலும் இறங்கத் தயங்கார். அணுகுண்டு உற்பத்திப் பெருக்கத்தை நிறுத்த முடியாத அளவுக்கு மேற்கத்திய நாடுகளின் அரசியல் வெல்திறம் சூனியமாகிவிடின், மனிதகுலம் தன்னுடைய விஞ்ஞான அறிவு வளர்ச்சியாலும், அரசியல் பேதமையாலும், நெறி மாறுட்டத்தினாலும் திரும்பியே வரமுடியாத ஓர் இடத்திற்குச் சென்றுவிடும் என்பது நிச்சயம்...

3. வலிமை அரசியல் மறைவு

'அழிவைப் பெய்யும் விஞ்ஞானச் சாதனங்களைக் கண்டுபிடித்து நமது அறிவுக்கே களங்கம் தேடிக்கொண்டுவிட்டோம். நம்மை நாமே அழித்துக்கொள்ளும் அவலநிலையில் நிற்கின்றோம். இது ஒரு மோசமான நிலை. விஞ்ஞான முன்னேற்றம்மூலம் இந்த நிலையை மாற்றப் புகுந்து, அதை முன்னிலும் மோசமடையச் செய்துவிட்டோம். இறுதியில் தாம் படப்போகும் துயரம் அதிகமானதுதான் மிச்சம். இதன் விளைவு என்ன தெரியுமா? கண்களுக்குப் புலப்படாத மிசைல் மீதுள்ள ஸ்விட்சை தனிமையில் இருக்கும் ஒரு முரட்டு மனிதன் கைவைத்துவிட்டால் போதும். அப்புறம் விஞ்ஞான மேதைகளே ஒன்றுதிரண்டு செயற்பட்டாலும்கூட, (மனிதகுலத்தை அழிவினின்றும்) பாதுகாக்க முடியாதுபோய்விடும். அந்த நாளை நோக்கி நாம் மிக விரைவில் சென்றுகொண்டிருக்கிறோம். இந்த அழிவு என்னும் அச்சுறுத்தலைத் தவிர்ப்பான் வேண்டி, சென்ற 12 ஆண்டுகளாக முயற்சி புரிந்தோம். அதற்காகவே இறுதியான, நாசகர ஆயுதங்களைக் கண்டுபிடித்தோம். ஆனால், (கதையைச்) சுருங்கச் சொல்லின், உலகம் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர்க்கமுயன்ற நாம் அத் தற்கொலையை விரைவானதாகவும் எளிதானதாகவும், நிச்சயமானதாகவும் செய்துவிட்டோம் ..' என்று, படைத் தலைவர் ஓமர் என். பிராட்லி, வாஷிங்டன் டி. சி.யிலுள்ள செயின்ட் அல்பான்ஸ் என்னுமிடத்தில் 1957 நவ. 5ஆம் நாள் கருத்து உரைத்தார்.

மேலே நாம் ஆராய்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் இனி நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளில் மறைந்துபோய்விடும். இந் நிகழ்ச்சிகளின் சாராம்சமும் சுருக்கமும் நம் நினைவில் நிலைத்து நிற்கமாட்டா. அது பதிவேட்டுக்காரர்கள், நூல் வரலாற்று ஆசிரியர்கள், வரலாற்று ஆசிரியர்கள், கணக்கியலார் ஆகியவர்களுக்குத்தான் நினைவில் இருக்கும். ஏனெனில், இறந்தகாலம்பற்றிய மனித நினைவுகளே என்றும் நிலையாக இருக்கமாட்டா. அவர்களுடைய சொந்த அனுபவத்தைத் தவிர மற்றவையெல்லாம் நினைவில் நீடித்திரா. எந்தப் பண்பாட்டை எடுத்துக்கொண்டாலும், 'இடுக்கண்' திரும்பத் திரும்பப் பல உருவத்தில் வருவதைப் பார்க்கலாம். போர்கள், போர் பற்றிய வதந்திகள், புரட்சிகள், கொள்கை வெறி, சீர்திருத்தங்கள், அச்சம், வெறுப்பு ஆகிய இவையனைத்தும் பொதுவாக எல்லாக் காலங்களிலும் எல்லாப் பண்பாட்டிலும் நிகழ்ந்துவரும் சம்பவங்கள் ஆகும். எனவே, சென்ற வாரத் தலைப்புச் செய்திகள் அனைத்தும் சென்ற ஆண்டு பஞ்சாங்கம், அல்லது சென்ற நூற்றாண்டு வரலாற்றைப்போல் உணர்ச்சியற்றதாயும் அர்த்தமற்றதாயும் தோன்றுகின்றது.

நேற்றைவிட இன்று முக்கியம்; இன்றைவிட நாளை முக்கியம் என்று நினைத்துக்கொண்டு, நேற்றைய நற்பேறுகளைப் புரிந்து கொள்வதை விட்டுவிட்டுச் செல்பவர்கள், தம்மைத்தாமே தோற் கடித்துக்கொள்ளும் பேர்வழிகள் ஆவர். காலம் ஓர் ஓடும் நதியைப் போன்றது; ஏரிகளையோ, குட்டைகளையோ போன்றதன்று. மனிதத் தன் நிறைவின் அழகு ஆராய்ச்சி வெகுதொலைவில் உற்பத்தியாகி, நிலையான ஓடை வழியே பாய்ந்து சென்று, நெடுந்தூரமுள்ள ஆற்றின் கழிமுகத்தை வந்தடைகிறது. இந்த நீண்ட பிரயாணத்தின் குறுக்கே, அப்பப்பா! எத்தனை இடையூறுகள்! எத்தனை துன்பங்கள்! புயல்கள் என்ன! அலைகள் என்ன! திசையை மாற்றும் ஓடைகளும் நதிகளும் என்ன! அத்தனையையும் சமாளித்துக்கொண்டே செல் கிறது இப் பிரயாணம். இந்த நீரோடை எடுத்துக்காட்டை விட்டு விட்டு, வேறொன்றைக் கையாள்வோம். மனிதனின் ஊழ்வினையை அந்த நீரோடையின் அலைகளில் செல்லும் ஒரு கப்பலுக்கு ஒப்பிடு வோமேயானால், அந்தக் கப்பலோட்டிக்கு வழியில் மேல்கரையிலும் கீழ் கரையிலும் இருக்கும் குன்றுகளும், நீர்ச்சுழல்களும், மணல் திடல் களும், கப்பலை நிறுத்தும் இடங்களும், கால்வாய்களும், காலநிலையும் நன்கு தெரியுமாயின், பயணம் எச்சிரமும் இன்றி, கப்பற்சேதமின்றி தல்லபடியாகச் சேரவேண்டிய இடம் போய்ச் சேரும்.

இன்றைய மனிதகுலத்தின் பயணம் வெகு நீளமானது; வழி யெல்லாம் இடர்கள் நிறைந்தது. கடும் புயல்களும், கண்ணுக்குப் புலப்படா இடர்களும், அதிவேகமான நீர்வீழ்ச்சிகளும், நீர்ச்சுழல் களும் நிறைந்தது அப் பாதை. அப் பயணம் அக் கால இஸ்ரேல், ஏதன்சு, ரோம் ஆகியவற்றிலிருந்து தொடங்கி, வருங்கால உலக ஒற்றுமை அல்லது உலகக் குழப்பம் என்ற இடத்தைப் போய்ச் சேர வேண்டியது. இப் பயணத்தில் மனிதகுலத்தைக் கப்பலில் ஏற்றிச் செல்லும் கப்பலோட்டிகளிடம் திறமை இல்லையெனில், அதில் (கப்பலில்) உள்ளவர்கள் தலைவன் இடும் கட்டளைகளுக்குத் தலை சாய்த்து நடக்காவிடில், வழியில் இடர்கள் பல இவற்றுடன் சேர்ந்து கொண்டுவிடில், பயணம் பயணமாகத்தான் இருக்கும். எவ்வா றெனில் மேற்கு அரசு முறையின் ஊழ்வினை, அதன்கண் வாழும் உலக சமுதாயத்தின் ஊழ்வினைபற்றிய நம் ஆராய்ச்சியும், முன்னறி விப்புகளும், ஐயமும், தாழ்மையுணர்ச்சியும் நிறைந்ததாகவே இருக்கும். எனினும், இங்கு ஒரு தவிர்க்க முடியாத வினா எழுகிறது. கி.பி. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனிதனின் நிலைமை எங்ஙனம் அமையும்? இதுதான் அவ் வினா.

இவ்வுலகைவிட்டுப் பிரிந்தவர்கள், இனி இவ்வையத்தில் பிறக்க இருப்பவர்கள்—இவர்களின் கோணத்தில் நின்று ஆராயுங்கால், உயர் சமுதாயத்தில் இன்று வாழ்ந்துவரும் மக்களின் இரு முக்கிய

மான, எதிர்மறையான அம்சங்கள் நம் கவனத்தை ஈர்க்கும். ஒன்று, அவர்களைப் பிணைக்கும் ஒற்றுமை; இரண்டு, அவர்களைப் பிரிக்கும் வேற்றுமை. அவர்கள் குறிக்கோளைப் பொறுத்தமட்டும் அனைவரும் ஒற்றுமையுடன் திகழ்கிறார்கள்; ஆனால், அவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளும் குறிக்கோள்களை எய்தும் வழிகளைப் பொறுத்தமட்டும் வேறுபட்டு நிற்கின்றனர். குறிக்கோள்களை எய்தும் வழிகள் பல இருக்கின்றன. சிலர் சில பாதையிலும், சிலர் வேறு பாதையிலும் அதே இடத்தைப் போய்ச் சேரவிரும்புகின்றனர். எனவே, ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துகள் கொண்டிருக்கிறார்கள். உலகிலுள்ள மனிதர் அனைவரும் அவர்கள் எந்த மதத்தினராய் இருந்தாலும் சரி, எல்லோரும் இறைவனின் குழந்தைகள், எல்லோரும் சகோதரர்கள் என்றே கூறுகிறார்கள். பெரும்பாலும் அவர்கள் அனைவருமே சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், தனிமனிதன் மகளரவம், சமூக நீதி, சட்டத்தின்கீழ்ச் சுதந்திரம், ஓர் உலகத்தின் தேவை—இவைபற்றிப் போதனை செய்கிறார்கள். ஆனால், அதே மக்கள் வெவ்வேறு நாட்டுணர்ச்சிகள், கருத்துக் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறார்கள். தம் நாடு, தம் கொள்கை, தம் வகுப்பு ஆகியவற்றைச் சேராத பிறரை இவர்கள் நேசக்கண்ணுடன் பார்க்க முன்வருவதில்லை. ஆகையால், அவர்கள் பிறருக்குப் போதனை செய்வதைத் தம் செயலில் செய்துகாட்ட முடிவதில்லை. என்றுமே ஒன்றைச் சொல்லுவது எளிது; ஆனால், அதைச் செய்வது கடினம்தானே! மேலும், மேடும் பள்ளமும் நிறைந்த உலகப் பொருளாதாரத்தில், குழப்பம் நிறைந்த உலக அரசியல் முறையில் மனமுறிவும், அச்சமும், துன்பமும், மீண்டும் மீண்டும் மக்களை வாட்டிவருகின்றன. இந் நிலையில் மனிதர் அனைவருக்கும் தொண்டு செய்யும் ஊக்கமும் நோக்கமும் அனைக உள்ளத்தில் ஊன்றிவிடுகின்றன. ஆனால், மனிதகுலச் சேவையில் இறங்குபவர்கள் தம் வழி, சமயம் ஆகிய இவற்றைப் பின்பற்றாத மக்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களுக்கு எதிராகத் தங்கள் கவலையையும் சினத்தையும் ஏவிவிடுகின்றனர். (அதன் விளைவைப்பற்றிக் கேட்கவாவேண்டும்? பலாத்காரம் கோரநடனம் ஆடப் புறப்பட்டுவிடும்).

இதைவிட இன்றைய பெரிய சிக்கல்களில் உணர்ச்சி வயப்பட்டோர் இப் பிளவுகளை வேறு கண்களுடன் பார்க்கின்றனர். முக்கியமான சமூகச் சின்னங்களைப் புரிந்துகொள்ளும் சாதாரண பாமர மக்கள் நல்லதும் கெட்டதும், அறமும் பழிச்செயலும், உண்மையும் பொய்யும் ஒன்றுக்கொன்று முரணானது என்ற கண்ணோட்டத்தில் இச் சிக்கலை அணுகுகின்றனர். ஆனால், அவர்களை விடச் சற்று அதிகமாகப் புரிந்துகொள்ளும் சக்தியுடையவர்கள் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள பெரிய முரண்பாட்டின் கண்ணோட்டத்துடன் இச் சிக்கலை அணுகுகின்றனர். இந்த இரட்டைகளுக்கு ஏற்ப

இவ்வுலகையும் நிலஅடிப்படையில் இருபெரும் பிரிவாக (முகாமாக) வரையறுக்கலாம். யூரேசியாவைத் தொட்டு நிற்கும் பகுதிகள், அதன் பக்கத்திலிருக்கும் தீவுகள், அமெரிக்கா கண்டம் இவையனைத்தும் ஒரு பகுதியைச் சேர்ந்தவை; இங்குள்ள பொதுநோக்கு, பொதுக் கொள்கை வகுப்பாளர்கள், மனிதகுலம், கொள்கைகள் ஆகியவற்றைப் பொருத்தமட்டும் பின்வரும் முறையிலேயே தங்கள் விருப்பத்தைக் காட்டுவதாக நினைத்துவந்தனர். அதாவது, சுதந்திரமும் சருவாதி காரமும், தனியுரிமையும் எதேச்சாதிகாரமும், முதலாளித்துவமும் கூட்டுடைமைத்துவமும் (collectivism) (இதிலேயே சமுதாய ஜன நாயகமும் பொருளாதார அலலது அரசியல் சுவாதீனமும்), தாராளத் துவமும் கம்யூனிசமும், அமைதியை விரும்பிக் கூடி ஒத்துழைக்கும் இறையுரிமை நாடுகளும் மத்திய வல்லாட்சியாளர்க்கு (autocracy) அடிபணியும் காவல் அரசு (police-state) உலகமும், ஒன்றேடொன்று முரணானவை, ஒன்றேடொன்று சிறிதும் ஒத்துப்போகாதவை என்று நினைக்கின்றது இங்கு வாழும் மக்கள் இனம். யுரேசியாவின் உட் பகுதி, அதனைச் சுற்றியுள்ள காப்பரசுகள் இரண்டாவது பகுதியில் அடங்கும். இங்குப் பொது அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் உருவாக்குவோர் தங்கள் மக்கள் கொள்கைகளைப் பொறுத்தமட்டும் சமத்துவமும் பாகுபாடும், சமூகநீதியும் சுரண்டலும், கூட்டுடை மைத்துவமும் முதலாளித்துவமும், கம்யூனிசமும் பிற்போக்குக் கொள்கையும், 'ஜனநாயக' இறையுரிமை நாடுகளடங்கிய உலகமும் 'இடைநிலை வகுப்பு ஏகாதிபத்திய' அல்லது புது மலர்ச்சிபெற்ற ஃபாஸிஸ்ட்டு உலகமும் ஒன்றேடொன்று இம்மியும் ஒத்துப்போகாது. ஏனெனில், இவ்விரட்டைகள் முரண்பாடானவை என்று நினைப்பதாகக் கருதிவந்தனர். இக் கொள்கை விருப்பு வெறுப்புகள், உயர்சமுதாயத்தில் வாழ்ந்துவரும் உறுப்பினர் (மக்கள்) அனைவரையும் ஆட்கொள்ள முயல்கிறது. என்றாலும், கீழ் ஆசியாவிலும், ஆப்பிரிக்கா முழுவதிலும், லெவான்டிலும் (Levant) வாழ்ந்துவரும் கோடிக்கணக்கான மக்களும், இந்த இரு முகாம்களிலுமுள்ள மக்களில் கணிசமானவர்களும் இக் கொள்கை களை ஏற்க விருப்பமில்லாமலோ அல்லது அவற்றின் கருத்துகளை ஒப்புக்கொள்ள மனமில்லாமலோ இருந்து வருகிறார்கள். ஆகையால், அவர்கள் இன்னும் பண்டைய கோட்பாடுகளையே பின்பற்றி வருகிறார்கள்; இல்லாவிட்டால், நல்வாழ்வு அளிக்க வல்ல புதிய மார்க்கங்களைக் கண்முடித்தனமாகக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

மனிதனின் நம்பிக்கையையும் ஊழ்வினையையும்பற்றி அவசரப் பட்டு ஆராயுங்கால், (மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றேடொன்று முரண்பாடான இரட்டை இரட்டைக் கொள்கைகள்) எதிலும் நம்பிக்கையில்லாதவர்கள் இறுதியில் ஏதாவது ஒரு கொள்கைக்கு

மாறுவதைப்பொறுத்தே வருங்காலத்தின் தோற்றம் அமையும் என்று தோன்றுகிறது. அவ்வாறு அவர்கள் ஒரு கொள்கையைக் கடைப்பிடிப்பது நிச்சயம். அதுபோல் ஏதாவது ஒரு கொள்கை அதன் எதிர்க்கொள்கைமீது வெற்றிகொள்ளுதல் நிச்சயம். அங்ஙனம் வாகைசூடும் கொள்கை, தோல்வியடைந்த கொள்கையினரைத் தம் வழிக்குக் கொண்டுவந்துவிடுவதும் இயல்பு. முன்னைய அரசுமுறை களின் அனுபவம் இக் கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது. முன்னைய அரசுகளில் ஏதாவது ஒரு வலிமைமிக்க அரசு அதன் அரசியல் வெல் திறத்தாலோ, அன்றிப் படைவலிமையாலோ மற்றப் பகைநாடுகளைத் தனக்குப் பணியவைத்து, ஓருலக அரசை அமைத்திருப்பதாக வரலாறு கூறுகிறது. இதை அளவுகோலாகக்கொண்டால், யு.எஸ்.ஏ.யோ அல்லது யு.எஸ்.எஸ். ஆரோ, ஒன்று மற்றதை அடக்கி ஆண்டு, மனிதகுலத்தையே தன் விருப்பப்படி ஆட்சிசெய்யும் என்ற முடிவுக்குத் தான் வரவேண்டியிருக்கிறது.

ஆனால், இது ஐயத்தைக் கிளப்பும் முடிபுபோல்தான் தெரி கிறது. இரு முகாம்களும் இதுவரை வெளியிடாத இரு கருத்துகள் இருக்கின்றன. இது விஷயத்தில் எந்த முடிபுக்கும் வருவதற்கு முன் அக் கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அப்படிச் செய்தபின் மேற்கொள்ளப்படும் முடிபே ஐயத்திற்கு இடமளிக்காது. இக் கருத்துகள் வேறெதுவுமில்லை. (1) ஒவ்வொரு முகாமிலும் ஓர் இராட்சச வல்லரசையும், அதன் துணை (நேச) நாடுகள், காப்பரசுகள் ஆகியவற்றையும் காணலாம். இவைகளின் தங்களுக் கென்று வகுத்துக்கொண்டிருக்கும் குறிக்கோள்கள் பல. அவற்றிற் கும் அவர்களின் நடைமுறை அனுபவத்திற்குமிடையே நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. இவற்றை உணர்ந்த மக்கள் தங்கள் பொருளையும் உயிரையும் பணயம் வைத்துவிட்டு, எதிர் முகாமைப் போரில் ஒழித்துக்கட்ட முன்வருவார்களா என்ற ஐயம் ஏற்படுகிறது. (2) புவியியல், போர்ச்சூழ்ச்சி, புவி—அரசியல் உண்மைகளைக் கருத் தில் கொண்டால், இவை, ஒரு முகாம் மற்றொரு முகாமை 'வென்று வாகைசூட' விடாது என்பது நன்கு புரியும்.

இரு முகாம்களும் உலகைக் கட்டியாளும் போட்டியில் முனைந்து நிற்கின்றனவென்று பார்த்தோம். இத்தகைய உலகில் மஸ்கோவி யையும் (ரஷ்யாவையும்) அமெரிக்காவையும் எதிர்நோக்கும் முக்கிய மான சிக்கல் ஒன்று இருக்கிறது. இராணுவச் சொற்றொடரில் கூற வேண்டுமானால், அது ஒரு தீராப் பிரச்சினை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், இன்னொரு தலைமுறையாவது யு.எஸ்.ஏ. உலகிலேயே செல்வம் கொழிக்கும் பொன்னுடாகவும் அதிக உற்பத் தியும் அதிகப் படைவலிமையும் பொருந்திய நாடகவும், விளங்கும். இன்னும் ஒருசில ஆண்டுகளில் போர் நிகழுமாயின், அதில்

அமெரிக்க விமானப் படை யு.எஸ்.எஸ்.ஆரிலும், சீனாவிலுமுள்ள பெரிய நகரங்கள் அனைத்தையும் அழித்து ஒழித்துவிடும். அதனுடன் அது கோடான கோடி மக்களின் உயிருக்கும் உலைவைத்துவிடும். ஆனால், அமெரிக்காவின் விமானப் படை முழுவதையுமே திரட்டிப் போரில் பயன்படுத்தினாலுங்கூட, எதிரிப் படைகள் ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஆசியாவின் பெரும்பகுதியையும் கைப்பற்றுவதைத் தடுக்கமுடியாது. ஏனெனில், இது தொலைவின் உண்மைகளைப் பொறுத்திருக்கிறது. பகைவன்மீது படையெடுத்து, அவனை வெட்டி வீழ்த்துவதற்கு உதவியாகக் காவலரண்கள் தேடுவது அவசியம். போதுமான காவலரண்களைத் தேடுவதற்காக இந்த அணுசக்தி யுகத்தில் நீண்ட 'விடுதலைப்' போராட்டத்தில் இறங்குவது, யுரேசியாவைத் தொட்டுக்கொண்டிருக்கும் நிலப் பகுதிகள் அனைத்தையும் நாசமடையச் செய்யும் முயற்சியாகும். அத்தகைய நிலைமை ஏற்படின், யுரேசிய நாடுகளை வெற்றியுடன் தாக்கிவிடலாம் என்று நம்புவதற்கு இடமில்லை. அப்படியே இப் பிராந்தியங்களை 'விடுதலை' செய்வதில் அமெரிக்கா வெற்றி கண்டால்கூட, அது சமுதாயச் சீர்கேடும், பொருளாதார வறட்சியும், பஞ்சமும், நோயும், நொடியும், ஒழுக்கக்கேடும், போரில் தோற்கடிக்கப்பட்டு, அதில் தப்பிப் பிழைத்தோர் காட்டும் கொரில்லா முறை எதிர்ப்பும் நிறைந்த இந் நாடுகளை நிர்வாகம் செய்து கட்டியாளுவது முடியாத காரியம். இல்லை அந்தப் போரில் தோல்வி ஏற்பட்டாலும் அல்லது போரே ஏதாவது ஒரு கட்டத்தில் வளர்ந்துகொண்டே சென்றாலும், அதன் விளைவு மிகப் பயங்கரமானதாயிருக்கும். ஏனெனில், அப் போது பல அமெரிக்க நகரங்கள் அணுசக்தி நீராவியால் போர்த்தப் பட்டுவிடும். அதனுடனல்லாமல் தொலை தூரத் தாக்குதல், கடல், ஆகாயம் ஆகியவற்றின்மூலம் வரும் ராக்கெட்டுகள், நாசவேலைக் காரர்கள், எதிரி கையாள், தேசத் துரோகிகள் இவைகளுக்குக் கோடிக் கணக்கான அமெரிக்கக் குடிமக்கள் பலியாவது நிச்சயம்.

இவ் வையத்தை சோவியத் கம்யூனிசமே வெற்றி கொண்டால்கூட, இவ்வுலகை ஒன்றுபடுத்தும் பிரச்சினை தீர்க்கப்படப்போவதில்லைதான். சுதந்திர உலகினும் மார்க்சிய உலகம் வலிமை மிக்க முகாம்தான். போர்ச்சக்தியின் அரசியல், உளவியல் மூலக்கூறுகளிலும், வளமான பூமி, வளங்கள், ஆள்வலிமை ஆகியவற்றிலும் சுதந்திர உலகினும் சில படி உயர்ந்ததுதான். அணு ஆயுதப் போர் வரின், அதில் ஐரோப்பாவின் பெரும்பகுதியையும் ஆசியாவையும் கம்யூனிஸ்ட்டுப் படைகள் கைப்பற்ற முடியும்; கைப்பற்றவும் செய்யும். அதன்மூலம் பிரிட்டனும் சப்பானும் நடுநிலைமையில் நிற்கவேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுவிடும். என்றாலுங்கூட, உள்நாட்டுக் கம்யூனிஸ்ட்டுகளின் உதவியால் இந் நாடுகள் கைப்

பற்றப்பட்டபோதிலும், அதனால் ஏற்படும் வெற்றியால் கம்யூனிச சாம்ராச்சியத்திலுள்ள பெரும்பாலான தொழில் மையங்களும் சனங்களும் அணுசக்தி அழிவுக்கு ஆளாகாமல் தடுக்கமுடியாது. மேலும், அமெரிக்காமீது படையெடுத்து, அதைக் கைப்பற்றவும் அவ் வெற்றி உதவாது. பிறகு என்ன பயன்?

இதையும், திட்டத்தையும், நடைமுறை அரசியலையும் இராட்சச வல்லரசுகள் நன்கு உணருமாயின், அவைகள் வருங்காலத்தில் அணு ஆயுதப் போரில் ஈடுபடமாட்டா என்று உறுதி கூறுவதற்கு இடமில்லை. ஏனெனில், சூழ்நிலை அப்படி இருக்கிறது. அமெரிக்க ஆட்சியாளர் சனநாயகப் பற்றுடையவர்கள்தாம். ஆனால், அவர்களுக்கும் தங்கள் நலனைப் பெருக்க அயல்நாட்டுப் பேய்கள் தேவைப்படுகின்றன. ரஷ்ய, சீன ஆட்சியாளர்கள் சருவாதிகாரிகளே. ஆனால், அவர்களுக்கும் தாங்கள் என்றும் அதிகாரத்தில் அமர்ந்திருக்க, வெளிநாட்டுப் பேய்களின் உதவி தேவைப்படுகிறது. இத் தேவைகள் இறுதியில் போருக்குத்தான் அடிகோலும். மனிதர் கூடி உழைக்கும் பண்புடையவர். அப்படி அவர்கள் கூடிச் செயற்படுவது இறுதியில் பெறப்போகும் பகுத்தறிவான சீரிய செயல் அல்லது சிறந்த பொருளுக்காக அன்று. அப்போதைய பொருளாதார, அரசியல் ஆர்வங்களை உணர்ச்சிவயத்துடன் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே அவர்கள் கூடிச் செயற்படுகின்றனர். மூன்றாவது உலக மகாயுத்தம் தோன்ற அடிகோலுவோமாயின், அது ஓர் அணு ஆயுதப் போராகவே முடியும். மேலும், அது 'முழுப் போராகவும்' முடிந்துவிடும். அந்த அணுசக்தி அழிவு, நாசத்திலிருந்து பிழைப்பவரும் எவருமிலர்; வெற்றி பெறுவோரும் எவருமிலர். மனிதகுலமே மாண்டு மடிந்துவிடும். போருக்குப் பின்னால் நிலவும் சூழ்நிலைக்கும் ஆதிகாலக் காட்டுமிராண்டி நிலைக்கும் அதிக வேற்றுமை இராது. அத்தகைய நிலைமையே இப்போரில் தப்பிப் பிழைக்கும் ஒருவர் இருவரை (அது கூட அரிது) எதிர்நோக்கும். இத் துயரக் காட்சியைக் குற்றத்தின் கடுந்துயரத்துடனும் நம்பிக்கையில்லா விரைவுடனும் 1945ஆம் ஆண்டு முதல் பெரும்பாலான அணுசக்தி பௌதிக வல்லுநர் தீட்டி வருகிறார்கள். அணுசக்தி யுகம் தோன்றுவதற்கு முன்னரே இதைப் பலர் எதிர்பார்த்தனர்.[9]

[9] இதுபற்றிய விளக்கத்திற்கு ஹெச். ஜி. வெல்ஸ் எழுதிய 'வரப்போகும் நிலைமை' என்ற நூலையும், ஜேமஸ் ஹில்ட்டனின் 'கைவிட்ட அடிவானம்' என்ற கட்டுக்கதையையும் பார்க்கவும். 1937 அக்டோபர் 5ஆம் நாள் சிக்காக்கோ மாநகரில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு பேருரையாற்றினார். அவ்வமயம் அவர் இக்கதையிலிருந்து கணிசமான மேற்கோள்கள் கையாண்டார். அது இங்கு வேறெதையும்விடக் குறிப்பிடத்தக்கதாகும். 'ஆட்கொலை செய்யும் மகிழ்ச்சியில் திளைக்கும் மனிதர் அரியேறெனச் சினந்தெழுந்து, உலகில் விலைமதிக்கமுடியா அனைத்தையும் அழித்துவிடுவர். ஒவ்வொரு புத்தகமும், படமும், அழகும், அமைதியும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தேடித் திரட்டிய திரவியமும்— எல்லாம் அழிந்துவிடும். சிறியோர், மெலியோர், பாதுகாப்பிலார் அனைவரும்

ஆனால், அவர்களின் எச்சரிக்கை பொதுமக்களுக்கும் அரசியல் வாதிகட்கும் செவிடன்காதில் ஊதிய சங்குபோல் ஆயிற்று. மேலைப் பண்பாட்டுக்கு ஒரு நாள் இல்லை என்றாலும் ஒருநாள் ஏற்பட விருக்கும் பலத்த அடியையும் நாசத்தையுமே அது எச்சரிக்கின்றது.

இக் கொடிய நாசகாரப் போரிலிருந்து மனிதகுலம் தப்பிக்க வழியே இல்லையா என்று ஆராயுமிடத்து, இரு வழிகள் உள்ளத்தில் உதிக்கின்றன. உலகக் கூட்டரசுக் குடியரசு ஒன்றை அமைத்து, மனிதகுலத்தை உய்யவைப்பது ஒருவழி. இவ் வழி செல்லத் தீர்மானித்தால் எல்லா அரசாங்கங்களும், மக்களும் மத்திய அரசாங்கம் ஒன்றை அமைக்கவும், அதனிடம் பொதுப் பாதுகாப்பு, எல்லாவிடங்களிலுமுள்ள பொதுமக்கள் சேமநலத்திற்கான அதி காரங்கள் ஆகியவற்றை வழங்கவும் இசையவேண்டும். இவ்வழி செல்லும் திறமையும் மனவுறுதியும் இல்லையென்றால், 18ஆம் நூற்றாண்டில் நிலவிவந்த நோக்கங்கள், கொள்கைகளுக்குவேண்டு மானால் மனிதகுலம் திரும்பலாம். அதிலும் ஓரளவு வாழ்வுக்கு வழி இருக்கத்தான் செய்கிறது. அழிவையும் நாசத்தையும் குறைக்க இடமிருக்கிறது 18ஆம் நூற்றாண்டில் எல்லாப் போரும் அரசியல் சூழ்ச்சிகளும் கனவான்களின் பொழுதுபோக்காக இருந்துவந்திருக்கின்றன. இப் போரில் அவர்கள் கையாண்ட ஆயுத சாதனங்களோ சிறியவை; பகுத்தறிவுக்கு ஏற்றவை; அதுபோல் அவர்களின் குறிக்கோள்களும் சிறியனவாகவும் பகுத்தறிவுடன் கூடியனவாகவும் விளங்கிவந்தன. எனவே, ஏராள மான மக்கள் இப் போர்களால் சிறிதும் பாதிக்கப்படாமலேயே இருந்தனர். தீமையை எதிர்த்துப் போராடவோ, அல்லது உலகைப் பாவத்திலிருந்து காப்பாற்றவோ, அல்லது பாவம் செய்பவர்களை ஒழித்துக்கட்டவோ அன்றைய மக்கள் இன்றுபோல் வீறு கொண் டெழவில்லை.

உயர் சமுதாயத்தின் பல்வேறு தேசியப் பகுதிகளில் நட்பையும் ஆதரவையும் சம்பாதிக்க வல்லவர்கள் (தலைவர்கள்) இவ் வழிகளைப் பின்பற்றி நடக்கவும் விரும்பார்; அத் திறமையும் அவர்களிடமிராது எனலாம். ஏனெனில் இங்கு இன ஒற்றுமையும் கட்டுப்பாடின்மை யும் மக்களின் பாராட்டுதலை உண்டாக்குகிறது. ஆனால், நேர்மை யான வழியில் செல்பவரைப் பாராட்டுபவர் எவருமிலர். இந்த அவலநிலை ஏற்படுமாயின், மேலையுலகின் வீழ்ச்சியையும் நம் பொது

அழிந்துபோய்விடுவர். படைக்கலங்களால் பாதுகாப்பு இராது. அதிகாரத்தால் எவ்வுதவியுமிராது; விஞ்ஞானம் விடையளிக்காது. மனிதகுலமே பெருங்குழப்பத் திற்கு ஆளாகும்வரை, பண்பாடு எனப்படும் ஒவ்வொரு மலரும் காலில் மிதிபட்டுக் கசங்கிப்போகும்வரை இக்கடும் புயல் அடிக்கும்'. அணு ஆயுத மூன்றும் உலகப்போர் மனிதகுலத்திற்கே மூற்றுப்புள்ளி வைத்துவிடலாம். நீவைல் ஷூட் என்பவரின் 'கடற்கரையிலே' என்ற 1957ஆம் ஆண்டுக் கதையைப் பார்க்கவும்.

நாகரிகத்தையும் நரகத்து நெருப்பும் இரவின் இருளுந்தான் இடை விடாது சூழ்ந்துகொள்ளும்.

தங்களின் உயிருக்கே உலைவைக்கக்கூடிய நெருப்பைக் கையில் வைத்திருக்கும் குரங்கு மனிதரின் குழந்தைகள் வருங்காலத்தில் அழிவைப் பெய்யும் வழியைத் துறந்து, அமைதியுடன் அனைவரும் வாழ்வதற்கான மனித மாளிகையைக் கட்டிஞலும் கட்டலாம். இதுவும் சாத்தியம்தான். இம் மாளிகையில் தங்கிக்கொண்டு, விஞ்ஞானத்தின் வியத்தகு சக்தியால் அச்சத்தையும் தேவைகளையும் வெல்லலாம்; பழங்கால தேவதைகள் வழிபாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்; வலிமை அரசியலுக்கு முடிவு கண்டுவிடலாம்; உலகையே அழகான பூங்காவாக மாற்றிவிடலாம்; மனித ஆத்மாவின் புதிய எல்லைகளையும் புதிய வெற்றிகளையும்பற்றிய ஆராய்ச்சியில் மற்றக் கோளங்களுக்கே சென்றுவிடலாம்; இவற்றைச் சாதிக்கும் திறமை மனிதனிடம் இல்லாமலில்லை.

ஆனல், மனிதனே ஒரு முரண்பாடான படைப்பு என்றுதான் சொல்லவேண்டும். அணுக்கள், அண்டங்கள் ஆகிய இவற்றைப் பற்றிய அறிவு அவனிடம் அதிகம். ஆனல், அவனைப்பற்றிய அறிவோ மிகக் குறைவு. தனக்குப் பயன்படும் பிராணிகள், தாவரங்கள், தாதுப்பொருள்கள் ஆகிய இவற்றின்மீது அவனுக்கு இருக்கும் கட்டுப்பாட்டுச் சக்தி அளவிடற்கரியது. ஆனல், தன்னுடைய உள் அவா, ஊழ்வினை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் திறனே மிகக் குறைவு. மேலே கூறப்பட்டிருக்கும் மாற்று வழிகள் இரண்டையும் மனிதன் பின்பற்றப்போவதில்லை. இம் மனித இனம் 'தட்டுத்தடுமாறி, மேலும் கீழும் விழுந்து' எதிர்காலத்தை எட்டிப் பிடிக்கலாம். ஆனல், அதுவோ முன்காலத்தைப்போல் ஒரே சமயத்தில் நம்பிக்கைக்கு இடமில்லாமலும் நம்பிக்கையூட்டுவதாயும், பாதுகாப்பு அளிக்க வல்லதாயும் தீங்கானதாயும் இருக்கலாம். வருங்காலச் சந்ததியார் உலகம் முடிவதற்கு அஞ்சி, உலகமே சொர்க்கமாகி விடாதா என்று நம்பிக்கொண்டிருக்கலாம். ஆனல், அவர்களின் அன்ருட அனுபவம் அவர்களின் முன்னேர்களைப்போன்றே இருக்கும். அவர்கள் எண்ணங்களும், நம்பிக்கைகளும், கனவுகளும் பாதி நிறைவேறியும் பாதி நிறைவேருமலுந்தான் இருக்கும். மன முறிவும் இடர்களுமே அவர்களை அமைதியாக வரவேற்கும்.

நாம் இதுவரை செய்த ஆராய்ச்சியிலிருந்தும், இந்நூலின் முன்னுள் பதிப்புகளினின்றும் நம் எதிர்காலம் குறித்து நாம் கொள்ளும் முடிவு இதுதான். 'உலக அரசாங்கமோ' அன்றி, 'பகுத்தறிவுக் காலமோ' கண்களுக்கு இப்போது எட்டவில்லை. அவை வெகு தொலைவில் இருக்கின்றன. அவற்றை நோக்கி நாம் விரைவில் செல்லப்போவதுமில்லை. குழப்பமும், துயரமும், அச்ச

மும் நம் நெடுநாள் துணைவர்களாவர். ஆனால், அவை இம்முறை மூன்றும் உலகப் போருக்கு மட்டும் இழுத்துச் செல்லப்போவதில்லை. ஏனெனில், உலக மகா யுத்தங்களில் 'வெற்றி' தம் பக்கமே என்ற நிச்சயம் தெரிந்தபின்பே, கொள்கை வகுப்பாளர்கள் அப் போரில் இறங்கி இருக்கிறார்கள். ஆனால், அதே நிச்சயம் இன்றும் இருக்கிறது என்று மார்க்ஸ்லாந்திலும் சரி, சுதந்திர உலகிலும் சரி நல்லுணர்வுடன் இருக்கும் எந்தக் கொள்கை வகுப்பாளரும் சொல்ல மாட்டார். இது உண்மையாயின் (இந்நிலை நெடுநாள் நீடிக்கும் போல்தான் தெரிகிறது), வருங்கால நெருக்கடிகள் ஒவ்வொன்றிலும் இந்த இறுதியான, அதிலிருந்து என்றுமே திரும்பிவர முடியாத நடவடிக்கையான உலகப்போரில் மட்டும் அவர்கள் என்றுமே இறங்கமாட்டார்கள். வருங்காலம் வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கும் பூங்காவாக இருக்கப்போவதில்லை. அது எண்ணற்ற மோதல்களும் சண்டை சச்சரவுகளும் நிறைந்ததாகவே இருக்கும். ஆனால், உலகப் போர் மட்டும் மூண்டுவிடாது. வல்லரசுகட்கிடையே இன்று ஏற்பட்டிருக்கும் முட்டுநிலை மாறி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்கும் வழி இறுதியில் பிறக்கும்.

இந்த மனப்பான்மை ஏற்பட்டுவிட்டால் நாசம், நல்வாழ்வு என்ற இரு குறிக்கோள்களில் ஒன்றைப் போய் அடைய மனிதனுக்குப் பல வழிகள் பிறக்கும். மனிதனுக்கேயுரிய மனிதத் தன்மையே இங்கு இதற்கு நம்பிக்கையூட்டுகிறது. மனிதன், வாய்ப்பின் விளையாட்டுப் பொருள் அல்ல; மனிதனிடம் துணிவு இருக்கிறது. குழப்பம், பலாத்காரம், சாவு ஆகியவற்றை வளர்க்கும் பழங்கால வழிகளிலதான் செல்லவேண்டும் என்று அவர்கள் துணிந்துவிடுவாரயின், இது ஒரு பெருந்தவருகிவிடும். ஒரு முறை இத் தவறு செய்துவிட்டால், பிறகு அதிலிருந்து மனித உயர் சமுதாயம் உய்ய முடியும் என்று அவர்கள் எதிர்பார்க்கவே முடியாது. இல்லை. இன்று அவர்கள் கையில் இருக்கும் வியத்தகு விஞ்ஞான சக்தியைக் கொண்டு, நவ சொர்க்கம், நவ பூமியைப் படைக்கத் துணிவராயின் அதையும் செய்து முடிக்கலாம். அதற்கான திறமையும் சக்தியும் அவர்களிடம் உண்டு. ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகட்கு முன்னர் மிக்கோடெல்லா மிராண்டோலா என்பவர் இரண்டு மாற்று வழிகளை வகுத்தார். முன் எப்போதையும்விட இன்றுதான் மனிதன் அவ் வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டிய நேரமும் நிலைமையும் வந்துவிட்டது. அவற்றில் ஒன்று நல்வாழ்வு அளிக்கும் நல்வழி; மற்றொன்று, நாசத்தை உண்டாக்கும் நரக வழி. 'ஓ, மனிதரே மிருகங்களைப் போன்று தாழ்ந்த நிலையை அடைய விரும்புவராயின், அதற்கு உம்மிடம் சக்தியுண்டு; இல்லை, தெய்வீகப் பிறப்பு எடுக்க விரும்புவராயின் அதற்கும் உம்மிடம் ஆத்ம சக்தியுண்டு'.

தெரிவுசெய் நூற்பட்டியல்

SUGGESTED READINGS

CHAPTER 11.

2. JAPAN

Benedict, Ruth: *The Chrysanthemum and the Sword*, Boston, Houghton Mifflin, 1946.

Bisson, T. A.: *Zaibatsu Dissolution in Japan*, Berkeley, Calif., University of California Press, 1955.

Borton, Hugh: *Japan's Modern Century*, New York, Ronald, 1955.

Byas, Hugh: *Government by Assassination*, New York, Knopf, 1942.

Cameron, Meredith E., Thomas H. D. Mahoney, and George E. McReynolds: *China, Japan, and the Powers*, New York, Ronald, 1951.

Embree, John P.: *The Japanese Nation: A Social Survey*, New York, Rinehart, 1945.

Fearey, Robert A.: *The Occupation of Japan*, New York, Macmillan, 1950.

Feis, Herbert: *The Road to Pearl Harbor*, Princeton, N.J., Princeton University Press, 1950.

Gayn, Mark: *Japan Diary*, New York, Sloane, 1948.

Grew, Joseph C.: *Ten Years in Japan*, New York, Simon and Schuster, 1944.

Haring, Douglas G. (ed.): *Japan's Prospect*, Cambridge, Mass., Harvard University Press, 1946.

Ike, Nobutuka: *Japanese Politics: An Introductory Survey*, New York, Knopf, 1957.

James, David H.: *The Rise and Fall of the Japanese Empire*, New York, Macmillan, 1951.

Jones, F. C.: *Japan's New Order in East Asia: Its Rise and Fall*, 1937–45, New York, Oxford, 1954.

Kato, Masuo: *The Lost War*, New York, Knopf, 1946.

Latourette, Kenneth Scott: *The History of Japan*, New York, Macmillan, 1947.

Lattimore, Owen: *Manchuria, Cradle of Conflict*, New York, Macmillan, 1935.

Lockwood, William W.: *The Economic Development of Japan: Growth and Structural Change*, 1868–1938, Princeton, N. J., Princeton University Press, 1954.

Maki, John M.: *Japanese Militarism: Its Cause and Cure*, New York, Knopf, 1945.

Quigley, Harold S., and John E. Turner: *The New Japan: Government and Politics*, Minneapolis, University of Minnesota Press, 1956.

Reischauer, Edwin O.: *The United States and Japan*, Cambridge, Mass., Harvard University Press, 1950.

Sansom, G. B.: *The Western World and Japan: A Study in the Interaction of European and Asiatic Cultures*, New York, Knopf, 1950.

Scalapino, Robert A.: *Democracy and the Party Movement in Prewar Japan*, Berkeley, Calif., University of California Press, 1953.

Shigenori, Togo: *Diplomacy and the Pacific War*, New York, Simon and Schuster, 1956.

Stimson, H. L.: *The Far Eastern Crisis*, New York, Harper, 1936.

Swearingen, Rodger, and Paul Langer: *Red Flag in Japan. International Communism in Action*, 1919–1951, Cambridge, Mass., Harvard University Press, 1952.

Takeuchi, Sterling: *War and Diplomacy in the Japanese Empire*, New York, Doubleday, 1935.

Togo, Shigenori: *The Cause of Japan*, New York, Simon and Schuster, 1956.

Vinacke, Harold M.: *History of the Far East in Modern Times*, New York, Appleton-Century-Crofts, 1936.

3. ITALY

Alfieri, Dino: *Dictators Face to Face*, New York, New York University Press, 1955.

Borgese, G. A.: *Goliath: The March of Fascism*, New York, Viking, 1937.

De Bono, Emilio: *Anno XIIII: The Conquest of an Empire*, London, Cresset, 1937.

Dombrowski, Roman: *Mussolini: Twilight and Fall*, New York, Roy, 1956.

Finer, Herman: *Mussolini's Italy*, New York, Holt, 1935.

Gibson, Hugh (ed.): *The Ciano Diaries*, 1939–1943, New York, Doubleday, 1946.

Grindrod, Muriel: *Rebuilding of Italy: Politics and Economics*, 1945–1955, New York, The Royal Institute of International Affairs, 1956.

Halperin, S. William: *The Separation of Church and State in Italian Thought from Cavour to Mussolini*, Chicago, University of Chicago Press, 1939.

Hughes, H. Stuart: *The United States and Italy*, Cambridge, Mass, Harvard University Press, 1953.

Kogan, Norman: *Italy and the Allies*, Cambridge, Mass., Harvard University Press, 1956.

Macartney, M. H. H., and P. Cremona: *Italy's Foreign and Colonial Policy*, 1914–1937, New York, Oxford, 1938.

McKnight, John P.: *The Papacy: A New Appraisal*, New York, Rinehart, 1952.

Megaro, G.: *Mussolini in the Making*, Boston, Houghton Mifflin, 1938.

Naughton, James W.: *Pius XII on World Problems*, New York, America Press, 1943.

Pichon, Charles: *The Vatican and Its Role in World Affairs*, New York, Dutton, 1950.

Salvemini, Gaetano: *Under the Axe of Fascism*, New York, Viking Press, 1936.

——— : *Prelude to World War II*, New York, Doubleday, 1954.

Sforza, Count Carlo: *Contemporary Italy: Its Intellectual and Moral Origins*, New York, Dutton, 1944.

Villari, Luigi: *Italian Foreign Policy under Mussolini*, New York, Devin-Adair, 1956.

4. GERMANY

Almond, Gabriel A. (ed.): *The Struggle for Democracy in Germany*, Chapel Hill, N. C., University of North Carolina Press, 1949.

Bathurst, M. E., and J. L. Simpson: *Germany, and the North Atlantic Community*, New York, Praeger, 1956.

Baumont, Marice, John H. E. Fried, and Edmond Vermeil (eds.): *The Third Reich*, New York, Praeger, 1955.

ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் உறுப்பு நாடு அந்த சபைக்கு அளிக்க, பாக்கித்தொகை (arrears), அதற்கு முன் இரண்டாண்டுகளுக்கு அது செலுத்த வேண்டிய தொகைக்கு நிகராகவோ, அன்றி அதிகமாகவோ இருக்கும்பட்சத்தில், அந்த உறுப்பு நாட்டுக்குப் பொதுமன்றத்தில் வாக்குரிமை கிடையாது. ஆனால், அந்த நாட்டின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைமையால் அது செலுத்த முடியாமல் போய்விட்டது என்று பொதுமன்றம் கருதினால், அந்நாட்டுக்கு மன்றம் ஓட்டுரிமை அளிக்கலாம்.

நடைமுறை

விதி 20

ஒவ்வோர் ஆண்டும் பொதுமன்றத்தின் கூட்டம் நடைபெறும். அது அல்லாமல் சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் விசேஷக் கூட்டங்களும் நடைபெறலாம். ஆனால், விசேஷக் கூட்டத்தைப் பாதுகாப்பு சபையின் வேண்டுகோளின்பேரில், அல்லது ஐக்கிய நாடுகளின் உறுப்பினருள் பெரும்பான்மையோரின் கோரிக்கையின்பேரில் தலைமைச் செயலாளரே கூட்டலாம்.

விதி 21

பொதுமன்றமே தன்னுடைய நடைமுறை விதிகளை வகுத்துக் கொள்ளும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைவரை (President) அதுவே தேர்ந்தெடுக்கும்.

விதி 22

பொதுமன்றம் தன்னுடைய பணிகளை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாததாகத் தோன்றும் உதவி உறுப்புகளை அமைத்துக் கொள்ளும்.

அதிகாரம் 5 : பாதுகாப்பு சபை

அமைப்பு

விதி 23

1. பாதுகாப்பு சபை பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அதில் சீனக் குடியரசு, ஃபிரான்ஸ், சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகள் யூனியன் (யு.எஸ்.எஸ்.ஆர்.), கிரேட் பிரிட்டன், வட அயர்லாந்து அடங்கிய யுனைடெட் கிங்டம் (யூ.கே.) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (யு.எஸ்.ஏ.) முதலியவை நிலையான உறுப்பினராக (Permanent Members) அமர்வர். பொதுமன்றம் பாதுகாப்பு சபைக்கு ஆறு நிலையில்லா உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும். அப்படித் தேர்ந்தெடுக்குங்கால் முதன் முதலாகச் சர்வதேச அமைதிப் பாதுகாப்பில் ஐக்கிய நாடுகள் உறுப்பினரின் பங்கு, சபையின் மற்றக் குறிக்கோள்கள், சமநிலப் பங்கீட்டு முறை ஆகியவற்றைப் பொதுமன்றம் நினைவில் கொள்ளவேண்டும்.

2. பாதுகாப்பு சபையின் நிலையிலா உறுப்பினர், இரண்டு ஆண்டுப் பணிக்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால், நிலையிலா உறுப்பினரின் முதல் தேர்தலில் மூன்று உறுப்பினர் ஓராண்டிற்கே தேர்ந்தெடுக்கப்படுவர். பதவிகாலம் முடிந்து செல்லும் உறுப்பினர் உடனே அடுத்த தேர்தலுக்குத் தகுதியுடையவராகார்.

3. ஒவ்வொரு பாதுகாப்பு சபை உறுப்பினருக்கும் ஒரு பிரதிநிதி இருப்பார்.

பணிகளும் அதிகாரங்களும்

விதி 24

1. ஐக்கிய நாடுகள் துரிதமானதும் பயன்தரக்கூடியதுமான நடவடிக்கையை எடுக்குமாறு செய்ய, அதன் உறுப்பினர்கள், சர்வதேச அமைதி, பாதுகாப்பு முதலியவற்றை நிலைநாட்டலில் பாதுகாப்பு சபைக்குள்ள தலையாய பொறுப்புப்பற்றிக் கூடிப்பேசி, இப் பொறுப்பின்கீழ்க் கடமைகளை நிறைவேற்றுங்கால். பாதுகாப்பு சபை தங்கள் சார்பில் நடந்துகொள்ள இசையவேண்டும்.

2. இக் கடமைகளை ஆற்றுங்கால் பாதுகாப்பு சபை ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களுக்கும் நெறிகளுக்கும் இணங்கச் செயற்

படும். இக் கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பாதுகாப்பு சபைக்கு அளிக்கப்பட்டிருக்கும் விசேட அதிகாரங்கள் (special powers), 6, 7, 8, 12ஆவது அதிகாரங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

3. பாதுகாப்பு சபை பொதுமன்றத்தின் பரிசீலனைக்காக ஆண்டு அறிக்கையையும், தேவையிருப்பின், விசேட அறிக்கையையும் சமர்ப்பிக்கும்.

விதி 25

ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் பாதுகாப்பு சபையின் முடிவுகளை இந்த சாசனத்திற்கிணங்க ஒப்புக்கொண்டு, அவற்றை நிறைவேற்ற இசைகின்றனர்.

விதி 26

சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பேணிக் காப்பதற்காகவும், அதனுடன் உலகின் மனித, பொருளாதார வளங்கள் போர்க்கலப் பெருக்கத்தில் செலவிடப்படுவதை முற்றிலும் அகற்றுவதற்காகவும் பாதுகாப்பு சபை 47ஆம் விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் இராணுவ உதவிக் கமிட்டியின் (Military Staff Committee) உதவியைப் பெற்றுப் படைக்கலங்களின் ஒழுங்குமுறைத் திட்டம் ஒன்றை நிலைநாட்டுவதற்கான திட்டங்களை வகுத்துத் தரும் பொறுப்பை ஏற்கும்.

வாக்கெடுப்பு

விதி 27

1. பாதுகாப்பு சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு.

2. நடைமுறை விஷயங்களில் உறுப்பினர் எழுவரின் ஒருமித்த உடன்பாட்டு வாக்கினால் (affirmative vote) பாதுகாப்பு சபையின் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

3. மற்றெல்லா விஷயங்களிலும் நிலையான உறுப்பினரின் உடன்பாடான வாக்குகள் உட்பட ஏழு உறுப்பினரின் உடன்பாட்டு வாக்குகளால் பாதுகாப்பு சபையின் முடிவுகள் மேற்கொள்ளப்படும். ஆனால், 6ஆம் அதிகாரம் மற்றும் 52ஆம் விதி 3ஆம் பத்தியின்கீழ் மேற்கொள்ளப்படும் முடிவுகளில் பூசலில் ஈடுபட்டுள்ள கட்சிகளில் ஒன்று இத்தகைய வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாமல் விலகி இருந்துகொள்ளலாம்.

நடைமுறை

விதி 28

1. பாதுகாப்பு சபை தொடர்ந்து செயற்படுமாறு அமைக்கப்படவேண்டும். இதை முன்னிட்டுப் பாதுகாப்பு சபையின் ஒவ்வோர்

உறுப்பினருக்கும் ஐ. நா. தலைமைச் செயல் அலுவலகத்தில் நிலை யான பிரதிநிதி என்றும் இருந்துகொண்டிருக்கவேண்டும்.

2. பாதுகாப்பு சபையின் காலாந்தரக் கூட்டங்கள் நடை பெறுங்கால், ஒவ்வோர் உறுப்பினரும் விரும்பினால் தம் அரசாங் கத்தின் ஓர் உறுப்பினர்மூலமோ, அன்றி இதற்காகவே நியமிக்கப் பட்ட பிரதிநிதிமூலமோ செயற்படலாம்.

3. பாதுகாப்பு சபை தன் தலைமைக் காரியாலயத்தில் மட்டும் அல்லாமல் தன் பணி செவ்வனே நடக்கக்கூடிய இடம் என்று அது கருதும் இடங்களிலும் கூட்டங்கள் நடத்தலாம்.

விதி 29

பாதுகாப்பு சபை தன் பணிகள் நிறைவேறுவதற்கு இன்றி யமையாததாகத் தோன்றும் உப உறுப்புகளை நிறுவிக் கொள்ளலாம்.

விதி 30

பாதுகாப்பு சபை தன்னுடைய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை உட்பட, நடைமுறை விதிகளனைத்தையும் தானே வகுத்துக் கொள்ளும்.

விதி 31

பாதுகாப்பு சபை தன் முன்னால் உள்ள ஒரு விவகாரமானது தனது உறுப்பினரல்லாத, ஆனால், ஐக்கிய நாடுகளின் உறுப்பினரான எந்த ஒரு நாட்டின் நலன்களையும் பாதிக்கவல்லது என்று கருது மானால், அது பாதுகாப்பு சபையின் விவாதத்தில் வாக்குரிமை யின்றிப் பங்குகொள்ளலாம்.

விதி 32

பாதுகாப்பு சபையின் உறுப்பினரல்லாத ஐக்கிய நாடுகளின் எந்த ஓர் உறுப்பினரோ, அல்லது ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த ஒரு நாடோ பாதுகாப்பு சபை வாதித்துக்கொண்டிருக்கும் தகராறில் ஒரு கட்சியாய் விளங்கும் பட்சத்தில், அந்த நாடு, தகராறுபற்றி நடைபெறும் வாதத்தில் வாக்குரிமையின்றிக் கலந்துகொள்ள அழைக் கப்படலாம். ஐக்கியநாடுகளின் உறுப்பினரல்லாத ஒரு நாடு அப்படிப்பட்ட வாதத்தில் கலந்துகொள்ள வேண்டுமானால், பாது காப்பு சபையானது கூட்டத்தில் கலந்துகொள்வதற்குத் தனக்கு நியாயமாகத் தோன்றும் கோட்பாடுகளை வரையறுக்கும்.

அதிகாரம் 6 : தகராறுகளை அமைதியாகத் தீர்த்தல்

விதி 33

சர்வதேச அமைதிக்கு நாளாவட்டத்தில் கேடு விளைக்கத்தக்க எந்தத் தகராறையும் சேர்ந்த கட்சிகள், அதை முதன் முதலில் பேச்சுவார்த்தை (negotiation), விசாரணை (enquiry), மத்தியஸ்தம் (mediation), சமரசம் (conciliation), நடுவர் தீர்ப்பு (arbitration), நீதிமன்ற விசாரணை, வட்டார ஏஜென்சிகள், பிராந்திய ஏற்பாடுகள் முதலிய முறைகளின்மூலமாகவோ, அன்றி அவர்களுக்கே விருப்பமான மற்றெந்த அமைதியான வழிமூலமாகவோ அத் தகராறைத் தீர்க்க முயலவேண்டும்.

2. பாதுகாப்பு சபை, தேவைப்படுங்கால் இவ் வழிகளின்மூலம் தகராறைத் தீர்த்துக்கொள்ளுமாறு கட்சிகளைக் கேட்டுக் கொள்ளலாம்.

விதி 34

எந்த ஒரு தகராறும், அல்லது சர்வதேசக் கைகலப்பை உண்டாக்கக்கூடிய அல்லது தகராறாக மாறக்கூடிய எந்தச் சூழ்நிலையும், தொடர்ந்து செல்லவிட்டால், அது சர்வதேச அமைதிப் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்குமா, விளைவிக்காதா என்று அறிந்து கொள்வதற்காகப் பாதுகாப்பு சபை அந்தத் தகராறுபற்றியோ அன்றிச் சூழ்நிலை குறித்தோ விசாரணை செய்யலாம்.

விதி 35

1. ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் எவரும் எந்தத் தகராறையும் அல்லது 34ஆம் விதியில் கூறப்பட்டிருப்பவை போன்ற சூழ்நிலையையும் பாதுகாப்பு சபையின் அல்லது பொதுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

2. ஐக்கிய நாடுகளில் உறுப்பினரல்லாத ஒரு நாடு ஒரு தகராறைப் பாதுகாப்புசபையின் அல்லது பொது மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். ஆனால், அத் தகராறில் அதுவும் ஒரு கட்சியாக இருக்கவேண்டும். மேலும், அது அத் தகராறைப் பொறுத்தமட்டும் இந்த சாசனம் கூறும் அமைதி வழிகளின்றும் பிறக்கும் கடமைகளை முன்கூட்டியே ஏற்கவும் முன்வரவேண்டும்.

3. இந்த விதியின்கீழ், பொதுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் விஷயங்களுக்கு 11, 12ஆம் விதிகளில் வரும் ஷரத்துகள் பொருந்தும்.

விதி 36

1. 33ஆம் விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் இயல்புடைய தகராறில் அல்லது அதையொத்த நிலைமையின் எந்தக் கட்டத்திலும் பாதுகாப்பு சபை அதைச் சரிக்கட்டுவதற்குத் தகுந்த நடைமுறைகள் அல்லது வழிகளை சிபாரிசு செய்யலாம்.

2. தகராறுள்ள கட்சிகள் அதை நீக்கும்பொருட்டு, ஏற்கெனவே கையாண்டிருக்கும் நடைமுறைகளைப் பாதுகாப்பு சபை கவனத்திலிருத்தவேண்டும்.

3. சட்டத் தகராறுகள் சர்வதேச நீதிமன்ற சட்டத்திற்கிணங்க அந் நீதிமன்றத்திடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற பொது விதியையும், பாதுகாப்பு சபை இவ் விதியின் பிரகாரம் உறுப்பினருக்கு சிபாரிசு செய்யுங்கால் நினைவில் கொள்ள வேண்டும்.

விதி 37

1. 33ஆம் விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் இயல்புடைய தகராறு ஒன்றை, அதற்குரிய கட்சிகள் அதே விதி கூறும் வழிகளின் மூலம் தீர்க்கத் தவறினால், அதைப் பாதுகாப்பு சபையின் முன்னர் கொண்டுவரலாம்.

2. அத்த கராறு நீடித்துச் சென்றால், அது சர்வதேச அமைதிப் பாதுகாப்புக்குப் பங்கம் விளைக்குமென்று பாதுகாப்பு சபை கருதுமானால், அது 36ஆம் விதியின்கீழ் அத்தகராறு குறித்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்கலாம், அல்லது அத் தகராறைப் போக்குவதற்கேற்ற வழிகளை சிபாரிசு செய்யலாம்.

விதி 38

33-விருந்து 37ஆவது விதிவரையுள்ள ஷரத்துகளுக்கு முரண்பாடில்லாதபடி, தகராறுள்ள கட்சிகளனைத்தும் வேண்டுகோள் விடுக்குமாயின், பாதுகாப்பு சபை அத் தகராறை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ளும் வழிகள் குறித்து அக் கட்சிக்கு சிபாரிசு செய்யும்.

அதிகாரம் 7 : அமைதிக்கு அறைகூவல் விடுத்தல்

அமைதியைக் குலைத்தல், மற்றும் ஆக்கிரமிப்புச்செய்தல் சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கை

விதி 39

பாதுகாப்பு சபை அமைதிக்கு எந்த அச்சுறுத்தலும் இருக்கிறதா, அமைதி குலைந்துவிட்டதா, அல்லது ஆக்கிரமிப்பு நடந்துவிட்டதா என்று நிர்ணயம் செய்து, சர்வதேச அமைதியைப் பாது

காக்கச் செய்யும், அல்லது 41, 42ஆம் விதிகளுக்கிணங்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று முடிவு செய்யும்.

விதி 40

நிலைமை மோசமடைவதைத் தடுப்பான்வேண்டி சிபாரிசுகள் செய்யுமுன்போ, அன்றி, 39ஆம் விதியின்கீழ் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவுக்கு வருமுன்போ, பாதுகாப்பு சபை தான் இன்றியமையாததாகக் கருதுகின்ற அல்லது விரும்பத்தக்க தாற்காலிக நடவடிக்கைகளுக் கிணங்கவாவது நடக்குமாறு கட்சிகளை வலியுறுத்தவேண்டும். ஆனால், அத்தகைய தாற்காலிக நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட கட்சிகளின் உரிமைகள், பாத்தியதை (claim) அல்லது நிலைமை முதலியவற்றுக்குக் கெடுதி விளைவிக்காத முறையில் இருக்கவேண்டும். அத்தகைய தாற்காலிக நடவடிக்கைகளுக்கிணங்க கட்சிகள் நடக்கத் தவறினால் அதையும் பாதுகாப்பு சபை கவனிக்கும்.

விதி 41

தன் முடிவுகளுக்கு உயிரூட்டப் படைவலிப் பிரயோகத்தைத் தவிர, மற்ற என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது குறித்துப் பாதுகாப்பு சபை முடிவு செய்யும். மேலும், அந் நடவடிக்கைகளை நிறைவேற்றுமாறும் ஐக்கியநாடுகளின் உறுப்பினரை அது கோரும். பொருளாதார உறவுகளை முற்றிலுமோ அல்லது ஓரளவோ வெட்டிவிடுதல், இருப்புப்பாதை, கடல், விண்வழி, அஞ்சல், தந்தி, வானொலி மற்றும் இதரப் போக்குவரத்துத் தொடர்பை அறுத்துக்கொள்ளல், தூதியல் உறவுகளைத் துண்டித்தல் ஆகிய நடவடிக்கைகளும் அவற்றுடன் அடங்கும்.

விதி 42

41ஆம் விதியில் கூறப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் போதாதவை என்று பாதுகாப்பு சபை கருதுமாயின், அல்லது நடைமுறையில் அவை உண்மையிலேயே போதாதவையாகிவிடின், சர்வதேச அமைதியைப் பேணிக்காப்பதற்காக, அதை மீண்டும் நிலைநாட்டுவதற்காகப் பாதுகாப்பு சபை ஆகாய, கடல், தரைப் படைகள்மூலம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கலாம். எதிர்ப்பு, இடைமறிப்பு (blockade), ஐக்கிய நாடுகள் உறுப்பினரின் ஆகாய, கடல், தரைப் படைகளை பிரயோகித்தல் ஆகியவை அவற்றுள் அடங்கும்.

விதி 43

1. சர்வதேச அமைதியைப் பாதுகாப்பான்வேண்டிப் பாதுகாப்பு சபை அழைப்பு விடுக்குங்கால், ஐக்கிய நாடுகள் உறுப்பினர்

அனைவரும் தனிப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கைகட்கு இணங்க, அச் சபைக்குப் படைகளும் உதவியும், வழியுரிமை (Right of Passage) உள்பட சர்வதேச அமைதிக்கு இன்றியமையாத எல்லா வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும்.

2. அத்தகைய ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்கள் படைகளின் எண்ணிக்கை, விதம், அவைகளின் தயார் நிலை, இருக்கும் இடம், அளிக்கப் போகும் வசதிகள், உதவியின் தன்மை ஆகிய விஷயங்கள் பற்றி அமைந்திருக்கும்.

3. அத்தகைய ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்கள் பாதுகாப்பு சபையின் முயற்சியில் அதிவிரைவில் மேற்கொள்ளப்படவேண்டும். அவைகளைப் பாதுகாப்பு சபைக்கும் உறுப்பினருக்கும் இடையிலோ அல்லது பாதுகாப்பு சபைக்கும் உறுப்பினர்கள் கூட்டத்திற்கும் இடையிலோ செய்துகொள்ளலாம். ஆனால், அவைகள் அந்தந்த கையெழுத்திட்ட நாட்டின் அரசியலமைப்பு விதிகளுக்கிணங்க அங்கீகாரம் செய்யப்படவேண்டும்.

விதி 44

பாதுகாப்பு சபை படை வலிமையைப் பிரயோகிக்க முடிவு செய்தால், தன் உறுப்பினரல்லாத ஓர் (ஐ. நா.) உறுப்பு நாடு 43-ஆம் விதியின்கீழ் அது ஏற்கவேண்டிய பொறுப்பிற்கிணங்கப் படைகளை அளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கும் முன்னரே, அந்த உறுப்பு நாடு விரும்புமானால், அதன் துணைப்படைகளைப் பயன்படுத்துவது சம்பந்தமாகப் பாதுகாப்புசபை எடுக்கும் முடிவுகளில் கலந்து கொள்ளுமாறு அதற்கு அழைப்பு விடுக்கலாம்.

விதி 45

ஐக்கிய நாடுகள் துரிதமான இராணுவ நடவடிக்கை எடுக்குமாறு செய்ய, உறுப்பினர்கள் தத்தம் தேசிய விமானப் படைகளில் உடனடியாகத் தயாராக இருக்கும் துணைப் படையைக் கூட்டுச் சர்வதேச அமல் நடவடிக்கைக்காகப் பயன்படுத்த முன்வரவேண்டும். அப் படைகளின் எண்ணிக்கை, தயார் நிலை, கூட்டு நடவடிக்கையான திட்டங்கள் அனைத்தும் 43ஆம் விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் தனி ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களின் வரையறைக்குள் பாதுகாப்பு சபையால் இராணுவ உதவிக் குழுவின் உதவியின்மூலம் நிர்ணயம் செய்யப்படும்.

விதி 46

இராணுவ உதவிக் குழுவின் ஆலோசனைக்கிணங்கப் படைவலிப் பிரயோகம்பற்றிய திட்டங்களைப் பாதுகாப்பு சபை வகுக்கும்.

விதி 47

1. சர்வதேச அமைதிப் பாதுகாப்பிற்காகப் பாதுகாப்புசபை கைவசமுள்ள படைகளின் பிரயோகம், தலைமை ஆகியவற்றைக் குறித்தும், படைக்கலங்களின் ஒழுங்குமுறை, படைக்கலப்பு சாத்தியம் ஆகியவைபற்றியும், பாதுகாப்பு சபையின் இராணுவத் தேவைகள் குறித்தும் அதற்கு ஆலோசனை கூறவும், உதவியளிக்கவும் ஓர் இராணுவ உதவிக் குழு அமைக்கப்படவேண்டும்.

2. பாதுகாப்பு சபையின் நிலையான உறுப்பினரின் படைச் சிப்பந்தித் தலைவர்கள் (Chiefs of Staff) அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் இராணுவ உதவிக் குழுவின் உறுப்பினர்களாக அமர்வர். அக் குழுவில் நிலையான பிரதிநிதித்துவம் அளிக்கப்படாத ஐக்கிய நாடுகளின் எந்த உறுப்பு நாட்டின் உதவியும் குழுவின் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குத் தேவைப்படின், குழு அந் நாட்டிற்கு அழைப்பு விடுத்துக் கூட்டிக் கொள்ளலாம்.

3. பாதுகாப்பு சபையின் கைவசமுள்ள படைகளின் சூழ்ச்சிகரமான இயக்குதலுக்கு இராணுவ அலுவலர் குழு பாதுகாப்பு சபையின்கீழ்ப் பொறுப்பாக இருக்கும்.

4. இராணுவ அலுவலர் குழு, பாதுகாப்பு சபையின் அனுமதியுடன் தகுந்த வட்டார (பிராந்திய) ஏஜென்சிகளுடன் கலந்தாலோசித்து, வட்டாரத் துணைக் குழுக்களை அமைத்துக்கொள்ளும்.

விதி 48

1. சர்வதேச அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பாதுகாப்பு சபை மேற்கொண்ட முடிவுகளைச் செயலாக்குவதற்கான நடவடிக்கையை ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் அனைவருமோ, அன்றி அவர்களில் ஒருசிலரோ எடுப்பர். அதைப் பாதுகாப்பு சபை நிர்ணயிக்கும்.

2. அத்தகைய முடிவுகளை ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நேரடியாகவும், தாங்கள் உறுப்பினராக இருக்கும் சர்வதேச ஏஜென்சிகளின்மூலமாயும் நிறைவேற்றுவர்.

விதி 49

பாதுகாப்பு சபை முடிவு செய்த நடவடிக்கைகளை எடுப்பதில் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் பரஸ்பர உதவியளித்துக்கொள்வர்.

விதி 50

பாதுகாப்பு சபை ஏதாவது ஒரு நாட்டிற்கு எதிராகத் தடுப்பு அல்லது அமல் நடவடிக்கை எடுக்குமாயின், அதனால் வேறொரு நாடு தனிப்பட்ட பொருளாதாரச் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டு

மாயின், அந்த நாடு ஐக்கிய நாடுகளின் உறுப்பினராக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது குறித்துப் பாதுகாப்பு சபையுடன் கலந்தாலோசிக்க அதற்கு உரிமையுண்டு.

விதி 51

ஐக்கிய நாடுகளின் ஓர் உறுப்பு நாட்டின்மீது இராணுவத் தாக்குதல் ஏற்படுமாயின், சர்வதேச அமைதியைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்பு சபை தக்க நடவடிக்கைகள் எடுக்கும்வரை, அந் நாடு தனியாகவோ அல்லது கூட்டாகவோ தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமைக்கு இந்த சாசனத்தின் எந்த ஷரத்தும் தடையாக இராது.

அதிகாரம் 8 : பிராந்திய ஏற்பாடுகள்

விதி 52

1. வட்டார (பிராந்திய) ஏற்பாடுகளும் அல்லது ஏஜென்சிகளும், அவைகளின் நடவடிக்கைகளும் ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களுக்கும் நெறிகளுக்கும் முரணில்லாதவாறு அமைந்திருக்கும் வரை சர்வதேச அமைதிப் பாதுகாப்பை முன்னிட்டு, வட்டார நடவடிக்கை எடுக்கும் பிராந்திய ஏஜென்சிகளை இச் சாசனத்தின் எந்த ஷரத்தும் தடுக்காது.

2. அத்தகைய ஏற்பாடுகளையோ அல்லது ஏஜென்சிகளையோ அமைக்கும் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் தல (உள்ளூர்) தகராறுகளைப் பாதுகாப்பு சபையின் முன்னிலைக்குக் கொண்டுவருமுன், அந்த ஏற்பாடுகள் அல்லது ஏஜென்சிகள் மூலமேயே அமைதியான முறையில் அத் தகராறுக்கு வழி காண எல்லா முயற்சியும் எடுக்க வேண்டும்.

3. தகராறுகளை வட்டார ஏற்பாடுகள் அல்லது வட்டார ஏஜென்சிகள் வாயிலாக அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குப் பாதுகாப்பு சபை ஊக்கம் அளிக்கவேண்டும். அம் முயற்சி, தகராறு சம்பந்தப்பட்ட அரசுகளினின்றும் பிறக்கலாம் அல்லது பாதுகாப்பு சபையின் கவனத்திற்கு (அத் தகராறு) வந்ததால் முயற்சி அச் சபையிடமிருந்தும் பிறக்கலாம்.

4. 34, 35ஆம் விதிகளின் அமலாக்கத்தை இந்த விதி தடுக்காது.

விதி 53

1. பாதுகாப்பு சபை, பொருத்தமான இடங்களில் அமல் நடவடிக்கையை முன்னிட்டுத் தன்னுடைய அதிகாரத்தின்கீழ்

வட்டார ஏற்பாடுகள் அல்லது ஏஜென்சிகளைப் பயன்படுத்தலாம். ஆனால், பாதுகாப்பு சபையின் உத்திரவில்லாமல், வட்டார ஏற்பாடுகள் அல்லது வட்டார ஏஜென்சிகளின்கீழ் அமல் நடவடிக்கை எதனையும் எடுக்கக்கூடாது. ஆனால், இந்த விதியின் 2ஆம் பத்திக் கிணங்கப் பகை நாட்டிற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் இதற்கு விதிவிலக்காகும். மேலும் 107ஆம் விதியின்கீழ் அல்லது அத்தகைய நாடு ஒன்று மீண்டும் ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்குமானால், அதற்கு எதிராக, இதற்குச் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களின் வேண்டுகோளின் பேரில் அந்த (பகை) நாட்டால் மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபை ஏற்கும்வரை, வட்டார ஏற்பாடுகளின்கீழ் அமல் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2. இந்த சாசனத்தில் கையெழுத்திட்டிருக்கும் ஒரு நாட்டிற்கு இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது பகையாக விளங்கிய நாட்டையே இந்த விதியின் முதல் பத்தி பகை நாடு என்று குறிக்கிறது.

விதி 54

சர்வதேச அமைதிப் பாதுகாப்பிற்காக வட்டார ஏற்பாடுகள் அல்லது வட்டார ஏஜென்சிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப் போகும் நடவடிக்கைகள் குறித்துப் பாதுகாப்பு சபைக்கு என்றும் தெரிவிக்க வேண்டும்.

அதிகாரம் 9 : சர்வதேசப் பொருளாதார சமூக சபை

விதி 55

சமவுரிமை, மக்கள் சுயநிர்ணயவுரிமை முதலிய நெறிகளை மதித்து நடக்கும் நாடுகட்கிடையே அமைதியான நட்புறவை வளர்ப்பதற்கு இன்றியமையாத ஸ்திரமான நிலையையும் பொதுநலனையும் வளர்க்கத்தக்க நிலைமையை உண்டாக்குவதற்காக ஐக்கிய நாடுகள்:

(அ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், முழு வேலையளிப்பிற்கு வகை செய்யவும், பொருளாதார, சமூக முன்னேற்றம், அபிவிருத்திக்கான நிலைமை ஆகியவற்றை உருவாக்கவும் வேண்டும்.

(ஆ) சர்வதேசப் பொருளாதார, சமூக, சுகாதார, மற்றும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் கலாசார, கல்வித் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பைப் பெருக்கவும் வேண்டும்

(இ) இனம், பால், மொழி, அல்லது சமயம் என்ற வேறுபாடின்றி, மனிதகுலத்தவர் அனைவருக்கும் மனித உரிமைகளும் அடிப்

படை சுதந்திரமும்: உண்டு என்ற நெறியை உலகமே மதித்து, அதை நடைமுறையில் பின்பற்றச் செய்யவேண்டும்.

விதி 56

55ஆம் விதியில் சொல்லப்பட்டிருக்கும் குறிக்கோள்களை அடைவதற்காக உறுப்பினர் அனைவரும் ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்புடன் கூட்டாகவும் தனியாகவும் நடவடிக்கை எடுக்க உறுதி செய்கின்றனர்.

விதி 57

1. பல அரசாங்கங்களின் இணக்கத்தால் நிலைநாட்டப்பட்டிருக்கும் பெரிய சர்வதேசப் பொறுப்புடைய பல்வேறு தனித்திறமை பெற்ற ஏஜென்சிகள், அவர்களின் அடிப்படைப் பத்திரங்களில் வரையறுக்கப்பட்டிருப்பதுபோல், 63ஆம் விதிக்கிணங்கப் பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, சுகாதாரத் துறைகளிலும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட துறைகளிலும் ஐக்கிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளுமாறு செய்யவேண்டும்.

2. அவ்வாறு ஐக்கிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளுமாறு செய்யப்பட்டிருக்கும் ஏஜென்சிகள் இனிமேல் தனித்திறமை பெற்ற ஏஜென்சிகள் அல்லது விசேட நிறுவனங்கள் என்று அழைக்கப்படும்.

விதி 58

தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் இணைப்பதற்காக(co-ordination) ஐக்கிய நாடுகள் சபை சிபாரிசுகள் செய்யும்.

விதி 59

55ஆம் விதி குறிப்பிடும் குறிக்கோள்களை எய்துவான்வேண்டி, புதுத் தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளை ஏற்படுத்துவதற்காகப் பொருத்தமான இடங்களில் ஐக்கிய நாடுகள் சபை சம்பந்தப்பட்ட நாடுகட்கிடையே பேச்சுவார்த்தைகள் தொடங்கும்.

விதி 60

இந்த அதிகாரம் ஐக்கிய நாடுகட்கு அளித்திருக்கும் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பைப் பொது மன்றமும், அதன்கீழ்ச் செயற்படும் பொருளாதார, சமூக சபையும் பெற்றிருக்கும். இதற்காகப் பொருளாதார, சமூக சபை 10ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

அதிகாரம் 10 : பொருளாதார, சமூக சபை

அமைப்பு

விதி 61

1. பொருளாதார, சமூக சபை ஐக்கிய நாடுகள் உறுப்பினரில் பதினெட்டுப் பேரைக் கொண்டிருக்கும். அவர்கள் பொது மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2. 3ஆம் பத்தியின் ஷரத்துகளுக்கு உட்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் ஆறு பொருளாதார சமூக சபை உறுப்பினர் மூன்று ஆண்டுப் பணிக்காலத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர். பதவியிலிருந்து ஓய்வு பெறும் உறுப்பினர் உடனடியாக வரும் மறு தேர்தலில் பங்குகொள்ளத் தகுதியுடையவராவார்.

3. முதல் தேர்தலில் பொருளாதார, சமூக சபையின் பதினெட்டு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களில் ஆறு உறுப்பினரின் பணிக்காலம் முதல் ஆண்டின் இறுதியில் முடிவடைந்து விடும். அடுத்த ஆறு உறுப்பினரின் பதவிகாலம் இரண்டாவது ஆண்டு இறுதியில் முடிவடையும். இம்முறை பொது மன்றத்தின் ஏற்பாடுகளின்படி நடக்கும்.

4. ஒவ்வொரு பொருளாதார, சமூக சபை உறுப்பினருக்கும் ஒரு பிரதிநிதி இருப்பார்.

பணிகளும் அதிகாரங்களும்

விதி 62

1. பொருளாதார, சமூக சபை சர்வதேசப் பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, சுகாதாரத் துறைகளிலும், மற்றும் தொடர்பான விஷயங்களிலும் ஆராய்ச்சி செய்தோ, அன்றி ஆராய்ச்சி செய்யுமாறு மற்றவரைத் தூண்டுதல் செய்தோ, அவ் விஷயங்கள் குறித்துப் பொது மன்றத்திற்கும், ஐக்கிய நாடுகளின் உறுப்பினருக்கும் சம்பந்தப்பட்ட தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளுக்கும் சிபாரிசுகள் செய்யும்.

2. மக்கள் குலத்தவர் அனைவருக்கும் மனித உரிமைகளும் அடிப்படை சுதந்திரமும் உண்டு என்ற நெறியை உலகம் மதித்து நடக்குமாறும், அதை நடைமுறையில் கடைப்பிடிக்குமாறும் செய்வதற்கு சிபாரிசு செய்யும்.

3. அதன் அதிகார வரம்பிற்குள் அடங்கும் விஷயங்கள் குறித்துப் பொதுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்காக உடன்படிக்கை வரைவுகளைத் (draft conventions) தயார் செய்யும்.

4. அதன் அதிகார வரம்பிற்குள் அடங்கும் விஷயங்களில் ஐக்கிய நாடுகளின் சட்டதிட்டங்களுக்கிணங்க சர்வதேச மாநாடுகளைக் கூட்டும்.

விதி 63

1. பொருளாதார, சமூக சபை விதி 57-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏஜென்சிகளுள் எதனுடனுவது அந்த ஏஜென்சி, ஐக்கிய நாடுகளுடன் உறவு கொள்ளுவதற்கான நிபந்தனைகளை விளக்குமுகத்தான் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும். அத்தகைய ஒப்பந்தங்கள் பொது மன்றத்தின் ஒப்புதலுக்குட்பட்டவையாக இருக்கும்.

2. அது, தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளோடு கலந்து பேசுவதன்மூலமாகவும் ஆலோசனை கூறுவதன்மூலமாகவும், பொது மன்றத்திற்கும் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களுக்கும் ஆலோசனை கூறுவதன் வாயிலாகவும் அத்தகைய ஏஜென்சிகளின் நடவடிக்கைகளை ஒத்திசைவிக்கும்.

விதி 64

1. தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளிடமிருந்து முறையாக அறிக்கைகள் பெறுவதற்குப் பொருளாதார, சமூக சபை தக்க ஏற்பாடுகளைச் செய்யும், தன்னுடைய சிபாரிசுகளையும், தன் அதிகார வரம்பிற்குள் அடங்கும் விஷயங்களில் பொதுமன்றம் செய்த சிபாரிசுகளையும் நிறைவேற்றுவான்வேண்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கைகள் பெறுவதற்காக இச் சபை ஐக்கிய நாடுகள் உறுப்பினருடனும் தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளுடனும் ஏற்பாடுகள் செய்யும்.

2. அவ்வறிக்கைகள்பற்றிய தன் குறிப்புகளை அது பொது மன்றத்திற்குத் தெரியப்படுத்தும்.

விதி 65

பொருளாதார, சமூக சபை பாதுகாப்பு சபைக்குச் செய்திகள் தயாரித்து அளிக்கும். மேலும், பாதுகாப்பு சபை வேண்டுகோளின் பேரில் அதற்கு வேண்டிய உதவியளிக்கும்.

விதி 66

1. பொதுமன்றத்தின் சிபாரிசுகளை நிறைவேற்றும்பொருட்டுப் பொருளாதார, சமூக சபை தன் அதிகார வரம்பிற்குட்பட்ட பணிகளைச் செய்யும்.

2. ஐக்கிய நாடுகள் உறுப்பினரும் மற்றும் தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளும் விடுக்கும் வேண்டுகோளின்பேரில் பொது மன்றத்தின் அனுமதியுடன் அது பணிகள் புரியும்.

3. அது இந்தச் சாசனத்தில் வேறு இடங்களில் அதற்காகக் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிகளை அல்லது அதனிடம் பொதுமன்றம் ஒப்படைக்கும் பணிகளை நிறைவேற்றும்.

வாக்கெடுப்பு

விதி 67

1. ஒவ்வொரு பொருளாதார, சமூக சபை உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உண்டு.

2. பொருளாதார, சமூக சபையின் முடிவுகள் சபையில் ஆஜராகி வாக்கெடுப்பில் கலந்துகொள்பவரில் பெரும்பான்மையோரால் எடுக்கப்படும்.

நடைமுறை

விதி 68

பொருளாதார, சமூகத் துறைகளிலும், மனித உரிமையை நிலைநாட்டவும் பொருளாதார, சமூக சபையானது குழுக்களை (commissions) நியமிக்கும். அவையல்லாமல் தன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அது குழுக்களை நியமிக்கலாம்.

விதி 69

பொருளாதார, சமூக சபை, ஐக்கிய நாடுகளின் எந்த உறுப்பினரையும் பாதிக்கும் விஷயங்கள்பற்றிய வாதவிவாதங்கள் நடைபெறுங்கால், அதில் அந்த உறுப்பினருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லாமல், அதைப் பங்கு கொள்ளுமாறு அழைக்கலாம்.

விதி 70

பொருளாதார சமூக சபை, தன் மன்ற வாதவிவாதத்திலும், தன்னால் நியமிக்கப்பட்ட குழுக்களின் வாதவிவாதத்திலும், தனித் திறமை பெற்ற ஏஜென்சிகளின் பிரதிநிதிகள் வாக்குரிமையில்லாமல் கலந்துகொள்ளவும், அதுபோல் தனித்திறமைபெற்ற ஏஜென்சிகளின் வாதவிவாதத்தில் தன் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவும் ஏற்பாடு செய்யும்.

விதி 71

பொருளாதார, சமூக சபை தன் அதிகார வரம்பிற்குட்பட்ட விஷயங்களில் அக்கறைகொண்டுள்ள அரசாங்கத்தைச் சேராத நிலையங்களுடன் கூட்டாலோசனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும். அத்தகைய ஏற்பாடுகள் சர்வதேச நிலையங்களுடன் செய்யலாம். ஆனால், ஐக்கிய நாடுகள் உறுப்பினருடன் கலந்து ஆலோசித்த பின்னரே தேசிய நிலையங்களுடன் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

விதி 72

1. பொருளாதார, சமூக சபை தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை உட்படத் தன் மன்ற நடவடிக்கை விதிகளைத் தானே வகுத்துக்கொள்ளும்.

2. பொருளாதார, சமூக சபை தன் விதிகளுக்கேற்பக் கூட்டங்களைக் கூட்டும். ஆனால், அவ் விதிகள் அதன் உறுப்பினர்களுடைய வேண்டுகோளின்பேரில் கூட்டம் கூட்டப்படுவதற்கும் வழிசெய்ய வேண்டும்.

அதிகாரம் 11 : சுய-ஆட்சியில்லா பிரதேசங்கள்பற்றிய அறிக்கை

விதி 73

இன்னும் முழு சுய ஆட்சி உரிமை பெறுத மக்கள் வாழும் பிரதேசங்களின் நிர்வாகம் பொறுப்புகளை ஏற்றிருக்கும் அல்லது ஏற்கப்போகும் ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர், அம் மக்களின் அக்கறைகளே தலையானவை என்ற நெறியை ஒப்புக்கொண்டு இந்தச் சாசனம் அமைத்துள்ள சர்வதேச அமைதிப் பாதுகாப்பு முறைக்குள் அவர்களின் நலன்களைப் பெருக்கும் பொறுப்பை ஒரு புனிதமான பொறுப்புறுதியாக ஏற்று, பின்வரும் கடமைகளை நிறைவேற்ற முன்வருகின்றனர்.

(அ) சம்பந்தப்பட்ட மக்களின் கலாசாரத்தை மதித்து, அவர்களுடைய அரசியல், பொருளாதார, சமூக, கல்வி முன்னேற்றத்திற்காகப் பாடுபடுதல், அவர்களை நியாயமாக நடத்துதல், அவர்களைப் பழிப்புரையினின்றும் காப்பாற்றல்;

(ஆ) சுயாட்சியை வளர்த்தல், மக்களின் அரசியல் ஆர்வங்களைக் கருத்தில் கொண்டு செயலாற்றல், ஒவ்வொரு (சுயாட்சியில்லா) நிலப் பகுதியின் விசேஷ சூழ்நிலை, அதன்கண் வாழும் மக்கள், அவர்களின் வெவ்வேறான அபிவிருத்தி நிலை ஆகியவற்றிற்கேற்பத் தன்னுரிமையுடைய அரசியல் ஸ்தாபனங்கள் விரைவில் உருவாக உதவி புரிதல்;

(இ) சர்வதேச அமைதி மென்மேலும் நிலவப் பாடுபடுதல்;

(ஈ) வளர்ச்சித் துறையில் ஆக்க நடவடிக்கைகள் பெருகச் செய்தல், ஆராய்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல், இந்த விதியில் வரையறுக்கப்பட்டிருக்கும் சமூக, பொருளாதார, மற்றும் விஞ்ஞானக் குறிக்கோள்களை நடைமுறையில் அடையும்பொருட்டு ஒருவரோடொருவரும், வேண்டியபோது தனித்திறமை பெற்ற ஏஜென்சிகளுடனும் கூடி ஒத்துழைத்தல்;

(உ) உறுப்பினர் பொறுப்பேற்றிருக்கும் சுயாட்சி பெரு நிலப் பகுதிகளின் பொருளாதார, சமூக, கல்வித் துறைகளின் நிலைமை

குறித்து, பாதுகாப்பு, அரசியலமைப்பினுல் விதிக்கப்படும் கட்டுப்பாட்டிற்கு இணங்கப் புள்ளி விவரங்களும் மற்ற நுணுக்கமான செய்திகளும் தலைமைச் செயலாளருக்கு முறையாகத் தயாரித்தளித்தல். 12, 13ஆம் அதிகாரங்கள் குறிப்பிடும் நிலப்பகுதிகள்பற்றிய விவரங்கள் அளிக்கத் தேவையில்லை.

விதி 74

இவ்வதிகாரம் குறிப்பிடும் நிலப்பகுதிகள் மற்றும் அவைகளின் தலைநகரங்கள் குறித்து (அவற்றின் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும்) ஐக்கிய நாடுகள் உறுப்பினர் கடைப்பிடிக்கும் கொள்கையானது, நல்ல அண்டை நாட்டு உறவு நெறியின் அடிப்படையில் அமைந்திருக்கவும் சமூக, பொருளாதார, வியாபாரத் துறைகளில் உலகின் இதர பகுதிகளின் நலன்களைப் பாதிக்காத முறையில் அமைந்திருக்கவும் உடன்படுகின்றனர்.

அதிகாரம் 12: சர்வதேச தர்மகர்த்தா (பொறுப்பாண்மை) முறை

விதி 75

ஐக்கிய நாடுகள் சபை தன் அதிகாரத்தின்கீழ் சர்வதேச தர்ம கர்த்தா (பொறுப்பாண்மை) முறை ஒன்றை அமைக்கும். பின்னர் தனித்தனி உடன்படிக்கைகள்மூலம் வரையறுக்கப்படும் நிலப்பகுதிகளின் நிர்வாகமும் மேற்பார்வையும் அதன் பொறுப்பாகும். இனிமேல் அந்நிலப் பகுதிகளின் தர்மகர்த்தா ஆட்சிப் பகுதிகள் (trust territories) என்றழைக்கப்படும்.

விதி 76

இச் சாசனத்தின் முதல் விதி வரையறுக்கும் ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களுக்கிணங்க, தர்மகர்த்தா முறையின் அடிப்படைக் குறிக்கோள்கள் பின்வருபவையாகும்.

(அ) சர்வதேச அமைதியை மேன்மேலும் அதிகரித்தல்;

(ஆ) தர்மகர்த்தா ஆட்சிப் பகுதிகளின் அரசியல், பொருளாதார, கல்வி வளர்ச்சியை முன்னேற்றம் செய்தல், மற்றும் ஒவ்வோர் ஆட்சிப் பகுதி, அதன் மக்களின் விசேஷ நிலைமை, அவர்களின் தனி விருப்பம், மற்றும் ஒவ்வொரு தர்மகர்த்தா உடன்படிக்கையின் ஷரத்துகளுக்கு ஏற்ருற்போல் அப் பகுதிகளைச் சுயாட்சி அல்லது சுதந்திரத்திற்காகத் தயார் செய்தல்;

(இ) இனம், பால், மொழி அல்லது மதம் என்ற வேறுபாடில்லாமல் மனிதகுலத்தவர் அனைவருக்கும் மனிதகுல உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரமும் உண்டு என்ற நெறியை எல்லோரும் மதித்து நடக்குமாறும், அதை நடைமுறையில் கடைப்பிடித்தொழுகு

மாறும் செய்தல்; மேலும், உலக மக்கள் ஒருவரையொருவர் நம்பி (சார்ந்து) இருத்தலே மேன்மேலும் அறியச் செய்தல்; அன்றியும்,

(ஈ) இக் குறிக்கோள்களுக்கு முட்டுக்கட்டைகள் ஏற்படாதபடியும், 80ஆவது விதிக்கு முரண்பாடில்லாத வகையிலும், ஐக்கிய நாடுகள் உறுப்பினர் அனைவரையும், அவரவர் மக்களையும் சமூக, பொருளாதார, வியாபார விஷயங்களிலும், நீதியாட்சியிலும் சமமாக நடத்த வழி செய்தல்.

விதி 77

1. இந்தத் தர்மகர்த்தா முறை பின்வரும் இனங்களைச் (வகுப்புகளைச்) சேர்ந்த தர்மகர்த்தா ஆட்சிப் பகுதிகளுக்குப் பொருந்தும். அதைத் தர்மகர்த்தா உடன்படிக்கைகள் நிர்ணயிக்கும்.

(அ) காப்பு முறைக்குள் (mandate system) அடங்கும் நிலப்பகுதிகள் ;

(ஆ) இரண்டாம் உலகப்போரின் விளைவால் பகை நாடுகளிடமிருந்து பிரிக்கப்பட்ட நிலப்பகுதிகள் ; மற்றும்,

(இ) ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் நாடுகள் தாமாகவே முன்வந்து இந்தத் தர்மகர்த்தா முறையின்கீழ் ஒப்படைக்கும் நிலப்பகுதிகள்.

இவ்வினத்தைச் சேர்ந்த நிலப்பகுதிகளில் எவை தர்மகர்த்தா முறையின்கீழ்க் கொண்டுவரப்படும் என்பதும், எந்த ஷரத்தின்கீழ்க் கொண்டுவரப்படும் என்பதும் பின்னால் உடன்படிக்கைகள்மூலம் நிர்ணயிக்கப்படும்.

விதி 78

ஐக்கிய நாடுகள் உறுப்பினராகிவிட்ட நிலப்பகுதிகளுக்கு இந்தத் தர்மகர்த்தா முறை பொருந்தாது. அவைகள் இறைமைச் சமத்துவ நெறி அடிப்படையில் நடத்தப்படும்.

விதி 79

தர்மகர்த்தா முறையின்கீழ்க் கொண்டுவரப்போகும் ஒவ்வொரு நிலப்பகுதிபற்றிய தர்மகர்த்தா ஷரத்துகள், அவற்றின் மாற்றம், திருத்தம் (amendment) உட்பட எல்லா விஷயங்களும் அவற்றை நிர்வகிக்கப்போகும் நாடுகளே முடிவு செய்யும். ஐக்கிய நாட்டு எந்த உறுப்பினர் கையிலுமுள்ள காப்புமுறை நிலப்பகுதிகள்பற்றிய காப்பு முறை அதிகாரங்களையும் அந் நாடுகளே நிர்ணயிக்கும். அம் முடிவுகளனைத்தும் 83, 85ஆவது விதியில் கூறப்பட்டிருக்கும் முறைக்கேற்ப உறுதிப்படுத்தப்படும் (ratification).

விதி 80

1 தர்மகர்த்தா முறையின்கீழ் ஒவ்வொரு (சுயாட்சியற்ற) நிலப்பகுதியையும் கொண்டுவருவதற்காக 77, 79 மற்றும் 81ஆவது

விதிக்கேற்பச் செய்யப்படும் தனித்தனி தர்மகர்த்தா ஒப்பந்தங்களை ஒப்புக்கொள்வதைத் தவிர, அத்தகைய ஒப்பந்தங்கள் செய்யும்வரை, எந்த அரசுகளின் அல்லது மக்களின் உரிமைகளையோ, அன்றி ஐக்கிய நாடுகள் உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருக்கும் சர்வதேச ஒப்பந்தங்களின் ஷரத்துகளையோ, இந்த அதிகாரம் மாற்றுவதாகப் பொருள் கொள்ளலாகாது.

2. 77ஆவது விதிக்கிணங்கக் காப்புமுறை நிலப்பகுதிகளையும், மற்ற நிலப்பகுதிகளையும் தர்மகர்த்தா முறையின்கீழ் உடன்படிக்கைகள்மூலம் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளை இவ் விதியின் முதல் பத்தி தாமதிப்பதாகப் பொருள் கொள்ளலாகாது.

விதி 81

தர்மகர்த்தா நிலப்பகுதி ஒவ்வொன்றின் நிர்வாகம்பற்றிய ஷரத்துகள், அதை நிர்வகிப்பவர்—இவையனைத்தும் தர்மகர்த்தா ஒப்பந்தத்தில் இடம் பெறவேண்டும். அவ்வாறு நிர்வாகம் செய்பவர் இனிமேல் நிர்வாகத்துறையினர் (administrative authority) என்று அழைக்கப்படுவர். அந் நிர்வாகத் துறையினர் ஒருவராகவோ, அன்றிப் பல நாடுகளாகவோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையாகவோ இருக்கலாம்.

விதி 82

43ஆவது விதிக்கிணங்கச் செய்யப்படும் தனிப்பட்ட ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களுக்கு முரணுகாதபடி எந்த தர்மகர்த்தா ஒப்பந்தத்திலும் போர் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை அல்லது இடங்களைக் குறிப்பிடலாம். அவை தர்மகர்த்தா நிலப்பகுதியில் ஒரு பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ இருக்கலாம்.

விதி 83

1. தர்மகர்த்தா ஒப்பந்தங்களின் ஷரத்துகளின் அங்கீகாரம், அவைகளின் மாற்றம் உட்படப் போர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் பணிகள் அனைத்தையும் பாதுகாப்பு சபை நிறைவேற்றும்.

2. 76ஆவது விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறிக்கோள்கள் போர் முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஒவ்வொன்றிலுமுள்ள மக்களுக்கும் பொருந்தும்.

3. தர்மகர்த்தா முறையின்கீழ்ப் போர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் அரசியல், பொருளாதார, சமூக, கல்வித் துறைகளில் ஐக்கிய நாடுகளுக்குள்ள பணிகளை நிறைவேற்றுவதில் (நிர்வா

கத்தினர்) பாதுகாப்பு சபையானது, தர்மகர்த்தா உடன்படிக்கைகளின் ஷரத்துகளுக்கு இணங்கவும், பாதுகாப்புக்குப் பங்கம் விளையாதவாறும் தர்மகர்த்தா சபையின் உதவியைப் பெறலாம்.

விதி 84

தன் நிர்வாகப் பொறுப்பிலிருக்கும் காப்பு நிலப்பகுதி சர்வதேச அமைதியை வளர்ப்பதில் பங்கு கொள்ளச்செய்வது நிர்வாகத் துறையினரின் கடமையாகும். இத் துறையில் பாதுகாப்பு சபையிடம் தனக்குள்ள கடமைகளை நிறைவேற்றும்பொருட்டு நிர்வாகத் துறையினர் தன் காப்பு நிலப்பகுதியின் தொண்டர் படையினர், அங்குள்ள வசதிகள், அது அளிக்கும் உதவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். காப்பு நிலப்பகுதியின் பாதுகாப்பிற் காகவும் உள்நாட்டு அமைதிக்காகவும் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விதி 85

1. போர் முக்கியத்துவம் என்று குறிப்பிடாத காப்பு நிலப் பகுதிகளுக்கான தர்மகர்த்தா உடன்படிக்கைகள் சம்பந்தமான ஐக்கிய நாட்டுப் பணிகள், அவ்வுடன்படிக்கை ஷரத்துகளின் அங்கீகாரம், திருத்தம் உட்பட எல்லாவற்றையும் பொதுமன்றம் நிறைவேற்றும்.

2. பொதுமன்றத்தின் கீழ்ச் செயற்படும் தர்மகர்த்தாக் குழு இப் பணிகளை நிறைவேற்றப் பொதுமன்றத்திற்குத் துணைபுரியும்.

அதிகாரம் 13 : தர்மகர்த்தாக் குழு

அமைப்பு

விதி 86

1. தர்மகர்த்தாக் குழுவில் ஐக்கிய நாடுகள் சபையின் பின்வரும் உறுப்பினர் இடம் பெறுவர்.

(அ) காப்பு நிலப்பகுதிகளை நிர்வாகம் செய்வோர் ;

(ஆ) காப்பு நிலப்பகுதிகளை நிர்வாகம் செய்யும் பொறுப்பில்லா தவர்களில் 23ஆம் விதி பெயர் சொல்லிக் குறிப்பிடும் உறுப்பினர் ;

(இ) காப்பு நிலப்பகுதிகளை நிர்வாகம் செய்யும் ஐக்கிய நாடுகள் உறுப்பினர் எண்ணிக்கையும், அப்படி நிர்வாகம் செய்யாதவரின் எண்ணிக்கையும் தர்மகர்த்தாக் குழுவில் சரிசமமாக இருப்பதற்காகப் பொதுச்சபையால் மூன்று ஆண்டு பணிக்காலத்திற்காக நியமிக்கப் படும் மற்ற உறுப்பினர்.

2. தர்மகர்த்தாக் குழு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித் தகுதி பெற்ற ஒருவர் பிரதிநிதியாக அக் குழுவில் இருக்கவேண்டும்.

பணிகளும் அதிகாரங்களும்

விதி 87

பொதுச் சபையும், அதன் அதிகாரத்தின்கீழ் தர்மகர்த்தாக் குழுவும் தங்கள் பணிகளை நிறைவேற்றுங்கால்,

(அ) தர்மகர்த்தா நிலப்பகுதிகளின் ஆட்சியாளர் சமர்ப்பிக்கும் அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் ;

(ஆ) மனுக்களை (petitions) ஒப்புக்கொண்டு அவற்றை ஆட்சியாளருடன்கூடி ஆலோசிக்க வேண்டும் ;

(இ) ஆட்சியாளர் சம்மதிக்கும் நேரங்களில் அந்தந்த தர்மகர்த்தா நிலப்பகுதிகளைப் பருவந்தோறும் பார்வையிட வழி செய்யவேண்டும் ;

(ஈ) இந் நடவடிக்கைகளையும் மற்றவைகளையும் தர்மகர்த்தா ஒப்பந்தங்களுக்கிணங்க மேற்கொள்ளவேண்டும்.

விதி 88

தர்மகர்த்தாக் குழு ஒவ்வொரு தர்மகர்த்தா நிலப்பகுதியில் வாழும் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி, முன்னேற்றம் குறித்து ஒரு விஞ்தாள் தொகுதி தயாரிக்கும். அதை ஆதாரமாகக் கொண்டு, ஆட்சியாளர் ஒவ்வொரு தர்மகர்த்தா நிலப்பகுதியையும் பற்றிப் பொதுச்சபை அதிகார வரம்பிற்குள் அச் சபைக்கு ஆண்டு தோறும் அறிக்கை அனுப்பவேண்டும்.

வாக்கெடுப்பு

விதி 89

1. ஒவ்வொரு தர்மகர்த்தாக் குழு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உண்டு.

2. தர்மகர்த்தாக் குழுவின் முடிவுகள் குழுவில் ஆஜராகி, வாக்கெடுப்பில் கலந்துகொள்வோரில் பெரும்பாலரால் மேற்கொள்ளப்படும்.

நடைமுறை

விதி 90

1. தன்னுடைய சபைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை உட்பட எல்லா நடைமுறைகளையும் தர்மகர்த்தாக் குழுவே நிர்ணயிக்கும்.

2. தர்மகர்த்தாக் குழு தன் விதிகளின் பிரகாரம் கூட்டம் கூடும். அவ் விதிகள் குழுவின் பெரும்பாலான உறுப்பினரின் வேண்டுகோளின்பேரில் கூட்டம் கூட்டவும் வழிவகுக்க வேண்டும்.

விதி 91

தர்மகர்த்தாக் குழு வேண்டியபோது பொருளாதார சமூகக் குழு, மற்றும் இதர தனித்திறமை வாய்ந்த நிலையங்களின் உதவியை அவைகள் சம்பந்தப்பட்ட துறையில் பெறலாம்.

அதிகாரம் 14 : சர்வதேச நீதிமன்றம்

விதி 92

சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நீதி நிலையமாக விளங்கும். அது ஐ.நா. சாசனத்தின் அங்கமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் நிலையான சர்வதேச நீதிமன்றச் சட்டத்திற்கேற்பச் செயற்படும்.

விதி 93

1. ஐக்கிய நாடுகள் உறுப்பினர் அனைவரும் அதே காரணத்தை யொட்டி (ipso acto) இந்தச் சர்வதேச நீதிமன்றச் சட்டத்தின் சாரர் (உரித்தானவர்) ஆவர்.

2. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினரல்லாத ஒரு நாடு சர்வதேச நீதிமன்றச் சட்டத்தின் உரித்தானதாக ஆகலாம். அப்படி ஆவதற்கான கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பு சபையின் சிபாரிசின் பேரில் பொதுச்சபை ஒவ்வொரு முறையும் நிர்ணயிக்கும்.

விதி 94

1. சர்வதேச நீதிமன்றத்திடம் செல்லும் எந்த வழக்கிலும் தான் ஒரு கட்சியாக இருக்கும்பட்சத்தில் அம் மன்றத்தின் முடிவுக் கிணங்கி ஒழுகுவதாக ஐ.நா. உறுப்பினர் ஒவ்வொருவரும் உறுதி செய்துகொள்கின்றனர்.

2. வழக்குடைக் கட்சிகளில் ஒன்று சர்வதேச நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பிலிருந்தும் பிறக்கும் கடமைகளைச் செய்யத் தவறினால், மற்றக் கட்சி அது குறித்துப் பாதுகாப்பு சபையிடம் முறையிடும். பாதுகாப்பு சபை தேவைப்பட்டால், சிபாரிசுகள் செய்யும் அல்லது நீதிமன்றத் தீர்ப்பை அமலாக்குவதற்கான தகுந்த நடவடிக்கைகளை நிர்ணயிக்கும்.

விதி 95

ஐ.நா. உறுப்பினர்கள் தமக்கிடையிலுள்ள தகராறுகளை ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கும் அல்லது இனிமேல் செய்யப் போகும் ஒப்பந்தங்களுக்கேற்ப வேறு நீதிமன்றங்களிடம் ஒப்படைத்து அவற்றைத் தீர்த்துக்கொள்ளலாம். இச் சாசனத்தின் எந்த விதியும் இதைத் தடுக்காது.

விதி 96

1. பொதுச் சபையோ, அன்றிப் பாதுகாப்பு சபையோ எந்தச் சட்டப் பிரச்சினை குறித்தும் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோரலாம்.

2. ஐக்கிய நாடுகளின் இதர உறுப்புகளும், தனித் திறமை பெற்ற ஏஜென்சிகளும் பொதுச் சபையின் உத்தரவின் பேரில், தத்தம் பணித்துறைகளினின்றும் தோன்றும் சட்டப் பிரச்சினைகள் பற்றி ஆலோசனை கூறுமாறு சர்வதேச நீதிமன்றத்தைக் கோரலாம்.

அதிகாரம் 15 : செயலாண்மைத் துறை

விதி 97

செயலாண்மைத் துறையில் (Secretariat) தலைமைச் செயலாளரும், அதற்குத் தேவையான பணியாட்களும் இடம்பெறுவர். தலைமைச் செயலாளர் பாதுகாப்பு சபையின் சிபாரிசின்பேரில் பொதுச் சபையால் நியமிக்கப்படுவார். அவரே இத் துறையின் தலையான நிர்வாக அதிகாரியாக விளங்குவார்.

விதி 98

பொதுச்சபை, பாதுகாப்பு சபை, பொருளாதார சமுதாய மன்றம், தர்மகர்த்தாக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் அனைத்திலும் இதே தகுதியில்தான் தலைமைச் செயலாளர் நடந்துகொள்வார். இவ் வுறுப்புகள் வரையறுக்கும் இதர பணிகளையும் நிறைவேற்றுவார். செயலாண்மைத் துறையின் பணி குறித்து அவர் ஆண்டுதோறும் பொதுச் சபையிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்.

விதி 99

சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் பங்கம் விளைக்கத் தக்கவை என்று தாம் கருதும் எந்த விஷயத்தையும் தலைமைச் செயலாளர் பாதுகாப்பு சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

விதி 100

1. தலைமைச் செயலாளரும் அவரது அலுவலரும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுங்கால் இத் துறைக்கு அப்பாற்பட்ட எந்த அரசாங்கத்தின் அல்லது அதிகாரியின் அறிவுரைகளைக் கோரவுமாட்டார், அதற்கிணங்கி நடக்கவும்மாட்டார். அவர்கள் இத் துறை ஒன்றுக்கே பொறுப்பான சர்வதேச அதிகாரிகளாவர். இந்நிலையினின்றும் விலகச்செய்யும் எந்த நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடார்.

2. தலைமைச் செயலாளர், அவரது அலுவலரின் பொறுப்புகள் சர்வதேச இயல்புடையவை என்பதை ஐக்கிய நாடுகளின் ஒவ்வோர் உறுப்பினரும் உணர்ந்து, அக் கடமைகளை நிறைவேற்றுங்கால், தங்கள் செல்வாக்கை அவர்கள்மீது பயன்படுத்தாதிருக்க உறுதி கொள்கிறார்.

விதி 101

1. பொதுச்சபை வகுக்கும் விதிமுறைகளுக்கேற்பத் தலைமைச் செயலாளர் தம் சிப்பந்திகளை நியமிப்பார்.

2. பொருளாதார சமூக மன்றத்திற்கும், தர்மகர்த்தாக் குழுவுக்கும், ஐ.நா.வின் இதர உறுப்புகளுக்கும் தகுந்த சிப்பந்திகள் நிலையான ரீதியில் நியமிக்கப்பட வேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட சிப்பந்திகள் செயலாண்மைத் துறையின் அங்கமாகிவிடுவர்.

3. இச் சிப்பந்திகளின் நியமனத்திலும், அவர்களின் பணி நிபந்தனைகளின் (conditions of service) நிர்ணயத்திலும் உயர்தரமான தேர்ச்சி (efficiency), திறமை (competence), நேர்மை (integrity) முதலியவற்றின் இன்றியமையாத தகுதிகளுக்கே தலையான இடம் அளிக்கப்படும். மேலும் சிப்பந்திகளைச் சேர்க்குங்கால் கூடியமட்டிலும் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

அதிகாரம் 16 : இதர விஷயங்கள்

விதி 102

1. ஐக்கிய நாடுகள் சபையின் இந்தச் சாசனம் அமலுக்கு வந்த பின்னர், ஐ.நா. உறுப்பினர் எவராவது உடன்படிக்கையோ அல்லது சர்வதேச ஒப்பந்தமோ செய்தால், அவை ஒவ்வொன்றும் செயலாண்மைத் துறையிடம் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட வேண்டும்.

2. இந்த விதியின் முதல் பத்தி கூறுவதற்கு இணங்கச் செயலாண்மைத் துறையிடம் மேற்கூறப்பட்ட உடன்படிக்கை அல்லது சர்வதேச ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்படாவிடில், அவற்றைச் செய்துகொண்ட கட்சிகளில் எதுவும் ஐக்ய நாடுகளின் எந்த உறுப்பு முன்னிலையிலும் அந்த உடன்படிக்கையையோ அல்லது ஒப்பந்தத்தையோ ஆதாரமாக (மேற்கோளாக) எடுத்துக்காட்ட முடியாது.

விதி 103

இச் சாசனத்தின்கீழ் ஐக்ய நாடுகள் உறுப்பினருக்குள்ள பொறுப்புகளுக்கும், வேறு எந்தச் சர்வதேச ஒப்பந்தங்களினின்றும்

பிறக்கும் பொறுப்புகளுக்கு மிடையே முரண்பாடு ஏற்படின், இச் சாசனத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்படும் — இச் சாசனம் சொல்வதே செல்லும்.

விதி 104

தன் கடமைகளை நிறைவேற்றவும். குறிக்கோள்களை எய்தவும் இன்றியமையாத சட்ட நிலையை ஐ.நா.வின் ஒவ்வோர் உறுப்பு நாட்டின் நிலப்பகுதியிலும் கடைப்பிடிக்கும் அதிகாரம் ஐ.நா.வுக்கு உண்டு.

விதி 105

1. தன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத தனிச் சலுகைகளையும், உரிமைகளையும் உறுப்பு நாடு ஒவ்வொன்றின் நிலப்பகுதியிலும் கொண்டாடும் அதிகாரம் ஐ.நா.வுக்கு உண்டு.

2. அதுபோல் ஐக்ய நாட்டு உறுப்பினரின் பிரதிநிதிகளும், ஐ.நா. அதிகாரிகளும், இச் சாசனம் அவர்கள்மேல் விதித்திருக்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத அத்தகைய தனிச் சலுகைகள், உரிமைகள் முதலியவற்றைப் பாராட்டவும் அதிகாரம் உண்டு.

3. இந்த விதியின் முதல், இரண்டாவது பத்தியில் சொல்லப் பட்டிருப்பதை அமலில் கொண்டுவருவதன் விவரங்களை நிர்ணயிக்கும் பொருட்டு, பொதுச்சபை சிபாரிசுகள் செய்தாலும் செய்யலாம், அல்லது அதற்காக வேண்டி அது ஐ நா.வின் உறுப்பு நாடுகட்குச் சில வழக்காறுகளைப் (conventions) பின்பற்றுமாறு சொல்லலாம்.

அதிகாரம் 17 : தற்காலிகப் பாதுகாப்பு ஏற்பாடுகள்

விதி 106

42ஆவது விதி பாதுகாப்பு சபையின்மேல் சாற்றியிருக்கும் பொறுப்புகளை, அது நிறைவேற்றுவதற்கு வழிசெய்யத் தக்க வகையில் 43ஆவது விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் விசேஷ ஒப்பந்தங்கள் அமலாகும் வரை, 1943, அக்டோபர் 30ஆம் நாள் மாஸ்கோவில் கையெழுத்தான நான்கு நாட்டு அறிக்கைக்குரிய கட்சிகளும், ∴பிரான்சும், அவ்வறிக்கையின் 5ஆவது பத்தி கூறுவதற்கேற்ப, சர்வதேச அமைதியைப் பாதுகாப்பதற்காக ஐ.நா. வின் சார்பில் மேற்கொள்ளவேண்டிய கூட்டு நடவடிக்கைகள் குறித்துத் தமக்குள்ளேயோ, அல்லது அவசியமிருப்பின் ஐ. நா.வின் மற்ற உறுப்பு நாடுகளுடன் சேர்ந்தோ கூடி ஆலோசனை செய்யும்.

விதி 107

இச் சாசனத்தில் கையெழுத்திட்டிருக்கும் உறுப்பு நாடு எதுவும், இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, அதற்கு எதிராக இருந்த நாட்டிற் கெதிராக எடுக்கும் நடவடிக்கையை இந்தச் சாசனத்தின் எந்தச் சரத்தும் சட்டவிரோதமாக்கவோ, தடுக்கவோ செய்யாது. ஆனால், அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்குப் பொறுப்புப் பெற்றிருந்த அரசாங்கங்கள், போரின் விளைவால் அத்தகைய நடவடிக்கைகளை (உறுப்பு நாடு) மேற்கொள்ள அனுமதித்திருக்கவேண்டும்.

அதிகாரம் 18 : திருத்தங்கள்

விதி 108

இச் சாசனத்திற்காகக் கொண்டுவரப்படும் திருத்தங்களைப் பொதுச்சபையின் உறுப்பினரில் $\frac{2}{3}$ பகுதியினரும், பாதுகாப்புசபையின் நிலையான உறுப்பினர் அனைவரும் உள்பட ஐக்ய நாட்டு உறுப்பினர்களில் $\frac{2}{3}$ பகுதி உறுப்பினரும் தத்தம் அரசியலமைப்பு நடைமுறைக்கேற்ப அவற்றை அங்கீகாரம் செய்தால் ஐ.நா. உறுப்பினர் அனைவருக்காக அத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

விதி 109

1. இச் சாசனத்தை மறுபார்வையிட ஐக்ய நாடுகள் உறுப்பினர் அனைவரையும் கொண்ட ஒரு பொதுமாநாடு கூட்டப்படும். மாநாடு கூடும் தேதி, இடம் இரண்டையும் பொதுச் சபையின் உறுப்பினரில் மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினரின் வாக்குகளாலும், பாதுகாப்பு சபையின் ஏதாவது ஓர் உறுப்பினரின் வாக்கினாலும் நிர்ணயிக்கப்படும். மாநாட்டில் ஐ நா. உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு.

2. மாநாடு $\frac{2}{3}$ பகுதி வாக்குகளால் சாசனத்தில் திருத்தம் கொண்டுவந்தால், அதைப் பாதுகாப்பு சபையின் நிலையான உறுப்பினர் அனைவரும் உள்பட ஐக்கிய நாட்டு உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதி நாடுகள் தத்தம் அரசியலமைப்பு நடைமுறைகளுக்கேற்ப அங்கீகாரம் செய்தால், அத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

3. இச் சாசனம் நடைமுறைக்கு வந்தபின், பொதுச்சபையின் யத்தாவது கூட்டம் முடிந்தும் இந்த மாநாடு கூடவில்லையெனில், அம் மாநாட்டைக் கூட்டும் பிரேரணையை அக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் (agenda) சேர்க்கலாம். பொதுச்சபையின் உறுப்பினரில் பெரும்பான்மையோரும், பாதுகாப்பு சபையின் உறுப்பினரில் எவரும் மாநாட்டைக் கூட்ட முடிவு செய்தால் மாநாடு நடைபெறும்.

அதிகாரம் 19 : அங்கீகாரமும் கையெழுத்திடலும்

விதி 110

1. இச் சாசனத்தில் கையெழுத்திடும் நாடுகள் அதைத் தத்தம் அரசியலமைப்பு நடைமுறைக்கேற்ப அங்கீகாரம் செய்யவேண்டும்.

2. அதன்பின் ஒவ்வொரு நாடும் தன் அங்கீகாரப் பத்திரத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவேண்டும். அப்படித் தன்னிடம் ஒவ்வொரு பத்திரமும் வந்து சேர்ந்ததும், அது பற்றி அவ்வரசாங்கம் கையொப்பமிட்ட நாடுகள் அனைத்திற்கும், ஐ.நா. தலைமைச் செயலாளர் நியமிக்கப்பட்டதும், அவருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

3. சீனக்குடியரசு. ஃபிரான்ஸ், சோவியத் சோசியலிஸ்ட் குடியரசுகள், பிரிட்டன் (வட அயர்லாந்தும் சேர்ந்த யுனைடெட் கிங்டம்), அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளின் அங்கீகாரப் பத்திரம் வந்து சேர்ந்ததும், மற்றக் கையொப்பமிட்ட நாடுகளின் பெரும்பான்மை வாக்கிலை இச்சாசனம் அமலுக்கு வரும். உடனே அமெரிக்க அரசாங்கம் தன்னிடம் வந்து சேர்ந்திருக்கும் அங்கீகாரப் பத்திரங்கள் எல்லாம் உள்ளடங்கிய உடன்படிக்கை ஒன்றை வரைந்து அதன் நகலைக் கையொப்பமிட்ட நாடுகள் அனைத்திற்கும் அனுப்பும்.

4. இச் சாசனத்தில் கையெழுத்திடும் நாடுகள், அது அமலுக்கு வந்தபின் அங்கீகாரம் செய்து, அங்கீகாரப் பத்திரத்தைச் சமர்ப்பித்த நாள் முதல். அவை ஐக்கிய நாடுகள் சபையின் மூல உறுப்பினராகக் (original members) கருதப்படும்.

விதி 111

இச் சாசனத்தின் சீன, ஃபிரெஞ்சு, ரஷ்ய, ஆங்கில, ஸ்பானிய மொழிகளில் இருக்கும் ஏடுகள் (Texts) ஒவ்வொன்றும் நம்பத் தக்கவையாகும். அவைகள் அமெரிக்க அரசாங்கத்தின் ஆவணக் களரியில் (archives) வைக்கப்படும். சரியாக உறுதி செய்யப்பட்ட இவற்றின் நகல்களை (copies) அமெரிக்க அரசாங்கம் மற்றக் கையொப்பமிட்ட நாடுகட்கு அனுப்பும்.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு அரசாங்கங்களின் பிரதிநிதிகள் முழு நம்பிக்கையுடன் இச் சாசனத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

1945ஆம் ஆண்டு சூன் மாதம் 26ஆம் நாள் சான்ஃபிரான்சிஸ்கோ மாநகரில் இச் சாசனம் கையெழுத்திடப்பட்டது.

பின்னிணைப்பு 2

சர்வதேசச்சங்க ஒப்பந்தமும்[1]

1945, சூன் 26ஆம் நாள்வரை அமலில் இருந்த திருத்தங்களும்.

ஒப்பந்தத்தின் மேன்மைக்குரிய கட்சிகள்

போரில் இறங்குவதில்லை என்ற பொறுப்பை சிரமேல் தாங்கி, அதன்படி ஒழுக இசைவதன் மூலமும்,

நாடுகட்கிடையே கபடமற்ற, நீதியான, மதிப்புடன் கூடிய உறவை வளர்க்க முன்வருவதன் மூலமும்,

சர்வதேசச் சட்டத்தை அரசாங்கங்களின் நடப்பு, போக்கு முறையை நிர்ணயிக்கும் உண்மையான சட்டமாக உறுதியுடன் நிலை நாட்டுவதன்மூலமும், மேலும்,

தங்களை நல்ல முறையில் அமைத்துக்கொண்டு வாழ்ந்துவரும் மக்கள் ஒருவரோடொருவர் கொள்ளும் தொடர்புகளில் நியாயமாக நடந்துகொள்வதன்மூலமும், எல்லா உடன்படிக்கைப் பொறுப்புகளையும் இம்மியும் தவறுது மதித்து நடப்பதன்மூலமும் சர்வதேச ஒத்துழைப்பைப் பெருக்கி, அனைத்துலக அமைதியையும் பாதுகாப்பையும் அடைவதற்காக இந்த சர்வதேசச் சங்க ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

விதி 1

உறுப்பினராதலும் விலகிக்கொள்வதும்

1. இந்த ஒப்பந்தத்தின் இணைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் கையொப்பமிட்ட நாடுகளும் இணைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும்

[1] 1920ஆம் ஆண்டு சனவரி மாதம் 10ஆம் நாள் அமல் செய்யப்பட்டது. சிறிய எழுத்தில் இருப்பவை திருத்தங்களாகும். 6ஆவது விதியின் திருத்தம் 1924ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் நாள்முதல் அமலில் இருந்துவந்தது. 12, 13, 15ஆவது விதிகள் 1924 செப்டம்பர் 26ஆம் நாளும், 4ஆவது விதி 1926ஆம் ஆண்டு சூலை 29ஆம் நாளும் திருத்தப்பட்டு அமலில் இருந்துவந்தவை.

இதர நாடுகளில் தங்குதடையில்லாமல் இவ்வொப்பந்தத்தை ஒப்புக் கொள்ளும் நாடுகளும் சர்வதேசச் சங்கத்தின் மூல உறுப்பினர் ஆவர். ஒப்பந்தத்தை ஏற்கும் நாடுகள் அது குறித்த அறிக்கை ஒன்றை இவ்வொப்பந்தம் அமலுக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள் செயலாண்மைத் துறையிடம் ஒப்படைக்கவேண்டும்.

2. இணைப்பில் குறிப்பிடப்படாத எந்த முழு சுயாட்சி நாடும், டொமினியனும், அல்லது குடியேற்ற நாடும் பொதுச்சபையின் மூன்றில் இரண்டு தொகுதி உறுப்பினரின் இசைவின்பேரில் சர்வதேசச் சங்கத்தின் உறுப்பினர் ஆகலாம். ஆனால், உறுப்பு நாடாக ஆக விரும்பும் எந்த நாடும் ஒரு நிபந்தனையை ஒப்புக்கொள்ள வேண்டும். சர்வதேசப் பொறுப்புகளை நிறைவேற்றும் உண்மையான எண்ணம் தன்னிடம் உண்டு என்பதற்கு அந் நாடு உறுதியான அத்தாட்சி அளிக்கவேண்டும். மேலும், அதன் இராணுவம், கப்பற்படை, ஆகாயப்படை, போர்க்களங்கள் ஆகியவை குறித்து சங்கம் விதிக்கும் விதிகளை ஒப்புக்கொள்ளவேண்டும்.

3. சங்கத்தின் எந்த உறுப்பு நாடும் இரண்டு வருட முன்னறிக்கை கொடுத்துவிட்டு சங்கத்தைவிட்டும் நீங்கிக்கொள்ளலாம். ஆனால், அவ்வாறு நீங்கிக்கொள்வதற்கு முன் அதன் சர்வதேசப் பொறுப்புகள், இவ்வொப்பந்தத்தினால் ஏற்பட்ட பொறுப்புகள் அனைத்தையும் அது நிறைவேற்றிவிட வேண்டும்.

விதி 2

நிர்வாக உறுப்புகள்

இவ் வொப்பந்தத்தின்கீழ் சங்கம் தன் நடவடிக்கைகளை சபை, மன்றம், நிரந்தரச் செயலாண்மைத் துறை வாயிலாய் மேற் கொள்ளும்.

விதி 3

சபை

1. சங்க உறுப்பினரின் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களாவார்கள்.

2. சபை குறிப்பிட்ட தினத்திலும், தேவைப்படும்போதும் கூடும். சங்கத்தின் இருப்பிடத்திலோ, அன்றி முடிவு செய்யப்படும் ஓர் இடத்திலோ சபையின் கூட்டம் நடைபெறலாம்.

3. சபையின் கூட்டங்களில் சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு. ஆனால், ஒவ்வோர் உறுப்பு நாட்டிற்கும் மூன்று பிரதிநிதிகளுக்குமேல் இருக்கக்கூடாது.

விதி 4

மன்றம்

1. மன்றத்தில் பிரதான நேச வல்லரசுகளும், கூட்டு வல்லரசுகளின் (Principal Allied and Associated Powers) (அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், ∴பிரான்ஸ், இத்தாலி, சப்பான்) பிரதிநிதிகளும், சங்க உறுப்பினரில் நால்வரின் பிரதிநிதிகளும் உறுப்பினராக அமர்வர். இந்தச் சங்க உறுப்பினர் நால்வரை சபை அவ்வப்போது தன் யுக்திக்கேற்பத் தேர்ந்தெடுக்கும். முதல் உறுப்பினர் நால்வரின் பிரதிநிதிகள் நியமிக்கப்படும்வரை பெல்சியம், பிரேசில், கிரீஸ், ஸ்பெயின் தேசங்களின் பிரதிநிதிகள் மன்ற உறுப்பினர்களாக அமர்வர்.

2. சபை உறுப்பினர் பெரும்பான்மையோரின் சம்மதத்துடன், மன்றம் சங்க உறுப்பினர்களில் சிலரைக் கூட்டு உறுப்பினர்களாகக் (additional members) சேர்த்துக்கொள்ளலாம். அவ்வுறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் என்றும் மன்றத்தின் உறுப்பினராக விளங்குவர்; அத்தகைய சம்மதத்துடன் மன்றம் சங்க உறுப்பினரின் எண்ணிக்கையை அதிகரித்து, மன்றத்திலுள்ள பிரதிநிதித்துவத்தை சபை அதிகரிக்கும்படி செய்யலாம்.

2. 'மன்றத்தின் தற்காலிக உறுப்பினரின் தேர்தல், குறிப்பாக அவர்களின் பணிக்காலம், மறுதேர்தல் நிபந்தனைகள்—இவைகள் சம்பந்தமான விதிகளை சபை, முன்றில் இரண்டு பகுதியினருடைய வாக்குகளினுல் நிர்ணயிக்கும்.'

3. மன்றம் அவ்வப்போதும் தேவைப்படும்போதும் சங்கத்தின் இருப்பிடத்திலோ அன்றி முடிவு செய்யப்படும் ஓர் இடத்திலோ கூடும். ஆனுல், ஆண்டுக்கு ஒரு முறை கூடுவது இன்றியமையாததாகும்.

4. சங்கத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட எந்த விஷயம் பற்றியும் அல்லது உலக அமைதியைப் பாதிக்கும் எந்த விஷயம் பற்றியும் மன்றம் வாதிக்கலாம்.

5. மன்றத்தின் உறுப்பினரல்லாத சங்க உறுப்பு நாடு ஒன்றை, அந் நாட்டைப் பாதிக்கும் விஷயங்களை மன்றம் வாதிக்குங்கால், அதில் கலந்துகொள்ளுமாறு அதன் பிரதிநிதி ஒருவரை மன்றத்தின் உறுப்பினராக அனுப்பி வைக்குமாறு அதற்கு அழைப்பு விடுக்கலாம்.

6. மன்றத்தின் கூட்டங்களில் அதில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கும் சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்குதான் உண்டு. மேலும், ஒவ்வொரு நாட்டுக்கும் மூன்றுக்கு மேலான பிரதிநிதிகள் இருக்கக்கூடாது.

விதி 5

வாக்கெடுப்பும் நடைமுறையும்

1. இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் நடைமுறைக்கு வேறு விதமாக இவ்வொப்பந்தம் வெளிப்படையாகக் கூறினலன்றி, அல்லது இவ்வுடன்படிக்கையின் வாசகம் கூறினலன்றி, சபையின் கூட்டத்திலும் சரி, மன்றத்தின் கூட்டங்களிலும் சரி, கூட்டத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கும் சங்க உறுப்பினர் அனைவரின் சம்மதத்தின் பேரில்தான் முடிவுகள் எடுக்கப்படும்.

2. குறிப்பிடப்பட்ட விஷயங்களில் விசாரணை செய்யப்போகும் கமிட்டிகளின் நியமனம் உள்பட, அவை மன்றக் கூட்டங்களில் பின்பற்றப்படும் நடைமுறைபற்றிய எல்லா விஷயங்களும் அவை அல்லது மன்றத்தினல் ஒழுங்கு செய்யப்பட்டு, கூட்டத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கும் சங்க உறுப்பினரின் பெரும்பான்மை வாக்குமூலம் முடிவு செய்யப்படும்.

3. அவையின் முதற்கூட்டத்தையும், மன்றத்தின் முதற் கூட்டத்தையும் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜனுதிபதியே (President) கூட்டி வைப்பார்.

விதி 6

செயலாண்மைத்துறையும் செலவுகளும்

1. நிரந்தரச் செயலாண்மைத்துறை சங்கத்தின் இருப்பிடத்தில் அமைக்கப்படும் செயலாண்மைத்துறையில் தலைமைச் செயலாளரும் வேண்டிய செயலாளர்களும் சிப்பந்திகளும் இருப்பர்.

2. முதல் தலைமைச் செயலாளர் இணைப்பில் கூறப்பட்டவர் ஆவார். அதற்கு அடுத்தாற்போல் வரும் தலைமைச் செயலாளரை அவையின் பெரும்பான்மை உறுப்பினரின் சம்மதத்தின் பேரில் மன்றம் நியமிக்கும்.

3. செயலாளர்களும், இதர அலுவலர்களும் மன்றத்தின் சம்மதத்தின்பேரில் தலைமைச் செயலாளரால் நியமிக்கப்படுவர்.

4. அவையின் கூட்டங்களிலும் மன்றத்தின் கூட்டங்களிலும் தலைமைச் செயலாளர் அதே தகுதியில் செயலாற்றுவார்.

5. 'சங்கத்தின் செலவுகளைச் சங்க உறுப்பினர் அனைவரும் அவை நிர்ணயிக்கும் வீதத்தில் ஏற்பர்.'

விதி 7

இருப்பிடம், அதிகாரிகள் தகுதி, பாதுகாப்புகள்

1. செனீவா சங்கத்தின் இருப்பிடமாக விளங்கும்.

2. சங்கத்தின் இருப்பிடத்தை வேறு இடத்தில் மாற்றியமைக்க மன்றம் எப்போதும் முடிவு செய்யலாம்.

3. செயலாண்மைத்துறை உள்படச் சங்கத்தின்கீழ் உள்ள அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட பதவிகள் (positions) அனைத்திற்கும் ஆண் பெண் இருபாலரும் தகுதியுடையவர் ஆவர்.

4. சங்க உறுப்பினரின் பிரதிநிதிகளுக்கும் சங்கத்தின் அதிகாரிகளுக்கும் சங்கத்தின் பணியில் ஈடுபட்டிருக்குங்கால் தூதர்களுக்குரிய தனிச்சலுகைகளும் பாதுகாப்புகளும் (diplomatic privileges and immunities) உண்டு.

5. சங்கமோ அல்லது அதன் அதிகாரிகளோ, அல்லது அதன் கூட்டங்களில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளோ, பயன்படுத்தும் கட்டடங்களுக்கும் மற்றச் சொத்துகளுக்கும் எச் சேதமும் ஏற்படலாகாது.

விதி 8

படைக்கலக் குறைப்பு

உலகில் அமைதி நிலவ வேண்டுமானால் நாடுகள் தங்கள் தேசப் பாதுகாப்புக்கு வேண்டிய அளவுக்கு மட்டும் தம் படைகளை வைத்துக் கொண்டு, மீதியைக் குறைத்துவிடுவதும், சர்வதேசப் பொறுப்புகளை அனைவரும்கூடி நிலைநாட்டுவதும் இன்றியமையாதவை என்ற உண்மை சங்க உறுப்பினர் அனைவருக்கும் வெள்ளிடைமலையாகும்.

2. எனவே, மன்றம் ஒவ்வொரு நாட்டின் பூவியல் நிலையையும் சூழ்நிலையையும் கவனத்தில் கொண்டு, அதன் படைக்கலக் குறைப்பிற்கான திட்டங்களை வகுத்து, அவற்றை அந்தந்த நாட்டு அரசாங்கம் சீர்தூக்கிப் பார்த்துத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி செய்யும்.

3. அப்படி வகுக்கப்பட்ட திட்டங்கள் குறைந்தது 10 ஆண்டுகட்கு ஒரு முறையாவது மீண்டும் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு திருத்தப்படவேண்டும்.

4. இத் திட்டங்களைப் பல்வேறு அரசாங்கங்கள் ஏற்றுக்கொண்டபின், அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் படைக்கலங்களின் அளவை மன்றத்தின் இசைவில்லாமல் அதிகரிக்கக்கூடாது.

5. வெடி மருந்து, போர்க்கலங்களின் உற்பத்தி முதலியவை தனியார் கையில் இருப்பதற்குக் கடுமையான எதிர்ப்புகள் இருந்து

வருவதைச் சங்க உறுப்பினர் அனைவரும் ஒப்புக்கொள்வர். இத்தகைய உற்பத்தியால் உண்டாகக்கூடிய கொடிய விளைவுகளை எப்படித் தவிர்க்கலாம் என்பது குறித்தும், சங்கத்தின் உறுப்பு நாடுகளில் தங்கள் பாதுகாப்பிற்கு வேண்டிய வெடிமருந்துகள், போர்க் கலங்களைத் தாங்களே உற்பத்திசெய்துகொள்ள முடியாத நிலையில் இருக்கும் நாடுகளின் தேவைகள் குறித்தும் மன்றம் ஆலோசனை (அறிவுரை) கூறும்.

6. சங்க உறுப்பினர் தங்கள் படைக்கலங்களின் அளவு, இராணுவ, கடல், விமானத் திட்டங்கள், போர்த் தேவைகட்குத் திரும்பக்கூடிய தங்கள் தொழிற்சாலைகள் நிலைமை—இவை சம்பந்தமான முழுத் தகவல்களையும் ஒருவருக்கொருவர் ஒளிவு மறைவு இன்றிப் பரிமாறிக்கொள்வதென்று உறுதி கொள்கிறார்கள்.

விதி 9

நிரந்தர இராணுவ, கடல், விமானப் படைக் குழு

இவ்வொப்பந்தத்தின் முதல், எட்டாம் விதிகளை அமலுக்குக் கொண்டுவருவதுபற்றியும், இராணுவ, கடல், விமானப் படைகள் பற்றிய பிரச்சினைகள் குறித்துப் பொதுவாக மன்றத்திற்கு ஆலோசனை கூறுவதற்காகவும் ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்படும்.

விதி 10

ஆக்கிரமிப்புக்கு எதிரான பாதுகாப்புகள்

1. வெளி ஆக்கிரமிப்பிலிருந்து சங்கத்தின் உறுப்பு நாடுகளின் எல்லையையும், அவைகளின் அரசியல் சுதந்திரத்தையும் காப்பாற்றி அவற்றைப் பேணிக்காப்பது என்று உறுப்பினர் அனைவரும் உறுதி கொள்கின்றனர்.

2. அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு ஏற்பட்டாலோ, அல்லது அத்தகைய ஆக்கிரமிப்பும், அச்சுறுத்தலும் அல்லது அபாயமும் இருந்தாலோ, இக் கடமையை நிறைவேற்றும் வழிகள் குறித்து மன்றம் உறுப்பினர்களுக்கு அறிவுரை கூறும்.

விதி 11

போர் அல்லது போர் அச்சுறுத்தலின்போது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்

1. போர் ஏற்பட்டாலும் சரி, போர் அச்சுறுத்தல் ஆனாலும் சரி, அது சங்கத்தின் உறுப்பினர் எவரையும் உடனடியாகப் பாதித்தாலும் பாதிக்காவிட்டாலும், அது சங்கத்திற்கே கவலையளிக்கக்கூடிய விஷயமாகக் கருதப்படும் என்று இங்கு அறிவிக்கப்படுகிறது. இந் நிலையில் நாடுகளின் அமைதியைக் காக்க சரியானதும் பயன்தரக்கூடியதுமான

LIBRARY MAR 1994

தனக்குப் புலப்படும் நடவடிக்கையைச் சங்கம் மேற்கொள்ளும். அப்படி ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டால், சங்க உறுப்பினர் எவருடைய வேண்டுகோளின்பேரிலும் தலைமைச் செயலாளர் மன்றத்தின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுவார்.

2. மேலும், அறிவிக்கப்படுவது என்னவென்றால், உலக அமைதியைக் குலைக்கக்கூடிய அல்லது நாடுகளின் நல்லெண்ணத்தையோ, சுமுகமான உறவையோ (இதனையே அமைதி சார்ந்திருக்கிறது) கெடுக்கக்கூடிய ஒரு சர்வதேச நிலைமை ஏற்படின் அதை அவையின் அல்லது மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சமவுரிமை உண்டு.

விதி 12

தீர்வுக்கு விடப்படக்கூடிய தகராறுகள்

1. தங்களுக்கிடையே நிலவும் உறவைத் துண்டித்துவிடச் செய்யும் தகராறு எதுவும் ஏற்படின் அதை நடுவர் தீர்ப்புக்கு அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்கு அல்லது மன்றத்தின் விசாரணைக்கு விடுவதற்கும்; அப்படி நடுவர் தீர்ப்போ அன்றி நீதி மன்றத் தீர்ப்போ அல்லது மன்றத்தின் அறிக்கையோ அளிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள் போரில் இறங்காமல் இருப்பதற்கும் சங்க உறுப்பினர்கள் உடன்படுகிறார்கள்.

2. இவ் விதியின்கீழ் நடுவர் தீர்ப்போ அல்லது நீதி மன்றத் தீர்ப்போ காலந்தாழ்த்தப்படாமல் பகுத்தறிவு உணர்த்தும் காலத்திற்குள் அளிக்கப்படவேண்டும். மன்றத்தின் விசாரணைக்கு விடப்படின் தகராறு அதனிடம் ஒப்படைக்கப்பட்ட ஆறு மாதத்திற்குள் அது அறிக்கையை வெளியிடவேண்டும்.

விதி 13

நடுவர் தீர்ப்பு அல்லது நீதி மன்றத் தீர்ப்பு

1. தங்களுக்குள் ஏதாவது ஒரு தகராறு ஏற்பட்டு, அதை நடுவர் தீர்ப்புக்கு அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்கு விடுவதுதான் சரியென்று தோன்றினால், அது ராஜதந்திரத்தின்மூலம் தீர்க்கமுடியாத தகராறாக இருப்பின், அதை நடுவர் அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்கே விட்டுவிடுவது என்று சங்க உறுப்பினர் அனைவரும் உடன்படுகிறார்கள்.

2. ஓர் உடன்படிக்கைக்குப் பொருள் கூறுவது சம்பந்தமான தகராறுகள், சர்வதேசச் சட்டத்தைப் பொறுத்த தகராறுகள், ஏதாவது ஒரு நிகழ்ச்சி நிரூபிக்கப்பட்டால் சர்வதேசக் கடமை எதையும் மீறிவிட்டதாக மெய்ப்பிக்கக்கூடியது, அல்லது அப்படி அத்து மீறிச் சென்றதற்காகச் செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டின்

(reparation) அளவு, இயல்பு முதலியவை சம்பந்தப்பட்ட தகராறுகள் ஆகிய இவையெல்லாம் நடுவர் தீர்ப்பு அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்கு விடத்தக்கவையாகும்.

3. 'இத்தகைய ஏதாவது ஒரு தகராறுக இருப்பின் அதை நீதிமன்றத் தீர்ப்பிற்காக விடும்போது 14ஆவது விதியின்கீழ் அமைக்கப்படும் சர்வதேச நீதிமன்றத்திடமே அதை ஒப்படைக்க வேண்டும். அல்லது தகராறுடைய கட்சிகள் சம்மதிக்கும் ஒரு நீதிமன்றம் அல்லது அவர்களுக்கிடையே நிலவிவரும் ஏதாவது ஓர் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்றத்திடம் அத் தகராறை ஒப்படைக்க வேண்டும்'.

4. அப்படி அளிக்கப்படும் தீர்ப்பை அல்லது முடிவை நல்லெண்ணத்துடன் ஏற்று நடக்கவும், அத் தீர்ப்புக்கேற்ப நடக்கும் எந்தச் சங்கத்தின் உறுப்பினருக்கும் எதிராகப் போரில் இறங்காமல் இருக்கவும் சங்க உறுப்பினர் அனைவரும் உடன்படுகிறார்கள். நீதி மன்றத் தீர்ப்பின்படி எக் கட்சியும் நடக்கத் தவறினால், அத் தீர்ப்பை அமலில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மன்றம் எடுத்துச் சொல்லும்.

விதி 14

நிரந்தர சர்வதேச நீதிமன்றம்

நிரந்தர சர்வதேச நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை வகுத்து அதை மன்றம் சங்க உறுப்பினருக்கு அனுப்ப வேண்டும். சர்வதேச இயல்புடைய தகராறு எதையும் தகராறுடைய கட்சிகள் தன்னிடம் ஒப்படைக்கின் அதைக் கேட்டுத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் இந் நீதிமன்றத்துக்கு உண்டு. மன்றமோ அல்லது அவையோ, தன் முன் கொண்டுவரும் தகராறு எதுபற்றியும் இந் நீதி மன்றம் தன் அறிவுரைக் கருத்தைக் கூறலாம்.

விதி 15

நடுவர் அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்குவிடாத தகராறுகள்

1. சங்க உறுப்பினர்களுக்கிடையே நிலவிவரும் தொடர்பைத் துண்டித்துவிடச் செய்யும் தகராறு எதுவும் ஏற்பட்டு, அதை 13ஆவது விதிக்கு ஏற்ப நடுவர் தீர்ப்புக்கோ அன்றி நீதிமன்றத் தீர்ப்புக்கோ விடவில்லையெனில், அதை மன்றத்திடம் ஒப்படைப்பதற்குச் சங்க உறுப்பினர் அனைவரும் உடன்படுகின்றனர். தகராறுக்குரிய எந்தக் கட்சியும் அது குறித்து தலைமைச் செயலாளருக்கு முன்னறிக்கை கொடுத்து மன்றத்திடம் அத் தகராறை ஒப்படைக்கலாம். தலைமைச் செயலாளர் அதை விசாரணை செய்து சீர்தூக்கிப் பார்ப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்வார்.

2. எனவே, இதை முன்னிட்டுச் சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்கள் தகராறுபற்றிய உண்மைகள், விவரங்கள் எல்லாவற்றையும் அறிக்கையுடன் கூடிய சீக்கிரத்தில் தலைமைச் செயலாளருக்குத் தெரிவிக்க வேண்டும். அவற்றை உடனடியாகப் பிரசுரிக்க மன்றம் கட்டளையிடும்.

3. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட தகராறுக்கு மன்றம் தீர்வு காண முயலும். அதன் முயற்சிகள் பலனளித்தால், தனக்குப் பொருத்தமாகத் தோன்றும் தகராறுபற்றிய உண்மைகள், விவரங்கள் மற்றும் தீர்ப்பின் நிபந்தனைகள் முதலியவை குறித்துப் பொது அறிக்கை ஒன்றை அது வெளியிடும்.

4. அப்படித் தகராறு தீரவில்லையெனில், மன்றம் ஒருமனதாகவோ அன்றிப் பெரும்பான்மை வாக்குமூலமோ, தகராறுபற்றிய உண்மைகளையும், தன் கருத்தில் நியாயமானதாகவும், பொருத்தமானதாகவும் தோன்றும் சிபாரிசுகளையும் ஓர் அறிக்கையாக வெளியிடும்.

5. மன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கும் சங்கத்தின் உறுப்பினர் எவரும் தகராறுபற்றிய உண்மைகளையும் (மன்றத்தின்) முடிவுகளையும் ஓர் அறிக்கையாக வெளியிடலாம்.

6. மன்றத்தின் அறிக்கையை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட (தகராறு) கட்சிகளின் பிரதிநிதிகளைத் தவிர மற்ற உறுப்பினர் அனைவரும் ஒப்புக்கொள்வார்களாயின், அறிக்கையின் சிபாரிசுகளுக்கு இணங்கி நடக்க முன்வரும் கட்சி எதுவோ அதற்கு எதிராகத் தாங்கள் போரில் இறங்காமலிருக்க சங்க உறுப்பினர் அனைவரும் உடன்படுகிறார்கள்.

7. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட (தகராறு) கட்சிகளின் பிரதிநிதிகளைத் தவிர மற்ற மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளத்தக்க அறிக்கையை மன்றம் தயாரிக்கத் தவறின், உண்மையையும் நியாயத்தையும் நிலைநாட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கும் உரிமை சங்க உறுப்பினரைச் சார்ந்ததாகும்.

8. தகராறுடைய கட்சிகளில் ஒன்று அத் தகராறு தன்னுடைய உள்நாட்டு விஷயத்தைச் சார்ந்தது என்று கூறுமாயின், சர்வதேசச் சட்டத்தின்கீழ் அது சரிதான் என்று மன்றமும் நிரூபிக்குமாயின், மன்றம் அறிக்கையையும் அதுபோல் வெளியிடும். அதில் அத் தகராறைத் தீர்க்கும் வழிகள் குறித்துச் சிபாரிசுகள் எதுவும் செய்யாது.

9. எனினும், அத் தகராறை இவ் விதியின்கீழ் மன்றம் அவையிடம் ஒப்படைக்கலாம். ஆனால், அப்படி ஒப்படைக்கும்படி சம்பந்தப்

பட்ட கட்சிகளில் ஒன்று தகராறை மன்றத்திடம் ஒப்படைத்த 14 நாட்களுக்குள் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

10. அப்படி ஒரு தகராறு அவையிடம் ஒப்படைக்கப்படுமாயின், மன்றத்திற்கு இவ் விதியும் 12ஆம் விதியும் அளிக்கும் செயல்வுரிமையும் அதிகாரமும் அவைக்கும் உண்டு. அவை தயாரிக்கும் அறிக்கை தகராற்றுக் கட்சிகளின் பிரதிநிதிகள் நீங்கலாக, மன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும் நாடுகளின் பிரதிநிதிகளாலும், அது போல் தகராற்றுக் கட்சிகளின் பிரதிநிதிகள் நீங்கலாக, சங்க உறுப்பினரில் பெரும்பான்மையோராலும் ஒப்புக்கொள்ளப்படுமாயின், அவ்வறிக்கை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகராற்றுக் கட்சிகளின் பிரதிநிதிகளைத் தவிர மற்ற மன்ற உறுப்பினர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மன்ற அறிக்கையைப் போன்ற சக்தியுடையதாகும்.

விதி 16

அமைதித் தீர்வின் தண்டனைகள்

1. சங்க உறுப்பு நாடுகளில் ஏதாவது ஒன்று, ஒப்பந்தத்தின் 12, 13 அல்லது 15ஆவது விதிகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் போரில் இறங்குமாயின், அது அக் காரணத்தால் சங்க உறுப்பினர் அனைவருக்கும் எதிராக ஆக்கிரமிப்புச் செய்துவிட்டதாகக் கருதப்படும். அப்படி ஒரு நிலை ஏற்படுமாயின், உடனே அந் நாட்டுடன் கொள்ளப்பட்டிருக்கும் வியாபார அல்லது நிதித் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளவும், தங்கள் நாட்டு மக்களுக்கும் ஒப்பந்தத்தை மீறிநடக்கும் நாட்டின் மக்களுக்கும் இடையே தொடர்பு-உறவு ஏற்படுவதைத் தடுக்கவும், மேலும் ஒப்பந்தத்தை மீறி நடக்கும் நாட்டு மக்களுக்கும், வேறு ஏதாவது ஒரு நாட்டு (அது சங்கத்தின் உறுப்புநாடாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி) மக்களுக்குமிடையே நிதித் தொடர்போ, வர்த்தகத் தொடர்போ அல்லது சொந்தத் தொடர்போ ஏற்படுவதைத் தடுக்கவும் வேண்டும் என்று, சங்க உறுப்பினர் அனைவரும் உறுதி கொள்கிறார்கள்.

2. அப்படிப்பட்ட நிலை ஏற்படுங்கால், மீறப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகளைப் பாதுகாப்பதற்காகச் சங்கத்தின் உறுப்பு அரசாங்கங்கள் தங்கள் முப்படைகளில் தனித்தனியாக (ஒவ்வொரு நாடும்) எவ்வளவு படைகள் சங்கத்தின் படைகளுக்காக அனுப்பவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் கடமை மன்றத்தினுடையதாகும்.

3. ஒப்பந்தத்தை மீறி நடக்கும் நாட்டிற்கு எதிராக இவ் விதியின்கீழ் எடுக்கப்படும் நிதி, பொருளாதார நடவடிக்கைகளால் ஏற்படும் நட்டத்தையும், அசௌகரியத்தையும் குறைத்துக்கொள்வதற்காகத் (உறுப்பு நாடுகள்) தங்களில் ஒருவரையொருவர் ஆதரித்துக்

கொள்ளவேண்டும் என்றும், மீறி நடக்கும் நாடு தங்களில் ஒருவருக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்ப்பதில் தாங்கள் ஒருவரையொருவர் ஆதரித்துக் கொள்ள வேண்டும் என்றும், சங்க ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்காக ஒத்துழைக்கும் சங்க உறுப்பு நாடுகளில் எதற்கும் அதன் படைகள் தங்கள் நாட்டின் வழியே செல்லுவதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கவேண்டும் என்றும், சங்க உறுப்பினர் அனைவரும் உறுதிகொள்கிறார்கள்.

4. சங்கத்தின் எந்த உறுப்பு நாடும் சங்க ஒப்பந்தத்தை மீறி நடந்தால் அது சங்கத்தின் உறுப்பு நாடு அல்ல என்று மன்றம் தன் வாக்கெடுப்பினால் முடிவு செய்யும். இம் முடிவை சங்கத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கும் மற்றெல்லா உறுப்பினர் பிரதிநிதிகளும் சம்மதித்தால் அந்த நாடு இனிமேல் சங்கத்தின் உறுப்பு நாடு அன்று என்று அறிவிக்கப்படும்.

விதி 17

உறுப்பினர் அல்லாதார் சம்பந்தமான வழக்குகள்

1. சங்கத்தின் உறுப்பு நாடு ஒன்றுக்கும் உறுப்பு அல்லாத நாடு ஒன்றுக்கும் இடையே, அல்லது சங்கத்தின் உறுப்பினரல்லாத நாடுகளுக்கு இடையே ஒரு வழக்கு ஏற்படுமாயின், அந்தச் சங்கத்தின் உறுப்பினரல்லாத நாடு, அல்லது நாடுகளை, அந்த வழக்கை முன்னிட்டு, மன்றம் தனக்கு நியாயம் என்று தோன்றும் நிபந்தனைகளின் பேரில், சங்க உறுப்புப் பொறுப்புகளை ஏற்க வருமாறு அழைக்கலாம். அப்படி விடுக்கப்படும் அழைப்பு ஏற்கப்படுமாயின், 12 முதல் 16 வரையுள்ள விதிகள் (இரண்டும் உள்பட) மன்றம் கொண்டுவரும் தகுந்த திருத்தங்களுடன் அமல் நடத்தப்படும்.

2. அப்படிப்பட்ட அழைப்பு அளித்ததுமே வழக்கின் சூழ்நிலை பற்றி விசாரணை செய்ய ஏற்பாடு செய்து, அச் சூழ்நிலையில் சிறந்த, பயன்தரக்கூடிய நடவடிக்கைகள் எவை என்று மன்றம் சிபாரிசு செய்யும்.

3. அழைக்கப்பட்ட நாடு, வழக்கை முன்னிட்டு சங்க உறுப்புப் பொறுப்புகளை ஏற்க மறுத்துவிட்டு, ஏதாவது ஒரு சங்க உறுப்பினருக்கு எதிராகப் போரில் இறங்குமாயின், அதற்கு எதிராக 16ஆவது விதியின் சரத்துகள் அமலில் கொண்டுவரப்படும்.

4. அழைக்கப்பட்ட தகராற்றுக்குரிய கட்சிகள் இரண்டுமே சங்க உறுப்பினர் பொறுப்புகளை அவ் வழக்கை முன்னிட்டு ஏற்க மறுத்துவிட்டால், மன்றம் சண்டையைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுக்கும்; மேலும், வழக்கைத் தீர்க்கக்கூடிய சிபாரிசுகள் செய்யும்.

விதி 18

உடன்படிக்கைப் பதிவும் வெளியீடும்

சங்க உறுப்பினர் எவரும் செய்யும் உடன்படிக்கை அல்லது சர்வதேச ஏற்பாடுகள் ஒவ்வொன்றையும் உடனே செயலாண்மைத் துறையிடம் பதிவு செய்ய வேண்டும். அது உடனடியாக அதை வெளியிடும். அவ்வாறு பதிவு செய்யாதவரை அப்படி எந்த உடன்படிக்கையும் அல்லது சர்வதேச ஏற்பாடும் கட்டுப்படுத்த முடியாது.

விதி 19

உடன்படிக்கைகளின் மறுபார்வை

பொருத்தமில்லாத (பயனற்றுப்போன) உடன்படிக்கைகளையும் தொடர்ந்து சென்ருல் சர்வதேச அமைதியைக் குலைக்கும் சர்வதேசச் சூழ்நிலைகளையும் மீண்டும் சீர்தூக்கிப் பார்க்குமாறு சங்க உறுப்பினர்களுக்கு அவை அவ்வப்போது அறிவுறுத்தும்.

விதி 20

பொருத்தமற்ற பொறுப்புகளை ரத்துசெய்தல்

1. இவ்வொப்பந்தத்தின் சரத்துகளுடன் பொருந்திப் போகாத கடமைகள், பொறுப்புகள் அனைத்தையும் ரத்து செய்துவிடுதல் (abrogate) என்றும், இனிமேல் அப்படிச் சர்வதேசச் சங்க ஒப்பந்தத்திற்கு முரணான ஒப்பந்தங்களில் இறங்குவதில்லை என்றும் சங்க உறுப்பினர் தனித்தனியாக உறுதி கொள்கின்றனர்.

2. ஒரு வேளை சங்க உறுப்பினரில் யாராவது ஒருவர் சங்கத்தின் உறுப்பினராக ஆவதற்கு முன்பே ஏதாவது பொறுப்பேற்றிருப்பின், அது ஒப்பந்தத்திற்கு முரணாக இருக்கும்பட்சத்தில், உடனடியாக அப் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளுதல் அவ்வுறுப்பினரின் (நாட்டின்) கடமையாகும்.

விதி 21

சட்டபூர்வமாகச் செல்லக்கூடிய (செல்லுபடியான) ஒப்பந்தங்கள்

அமைதியைக் காக்க மேற்கொள்ளப்படும் நடுவர் உடன்படிக்கைகள் அல்லது மன்ரோக் கொள்கையையொத்த வட்டார ஏற்பாடுகள் போன்ற சர்வதேச ஒப்பந்தங்களின் சட்டபூர்வமான தன்மையை—செல்லுபடி ஆகும் தன்மையை (validity) இவ்வொப்பந்தத்தின் எந்தச் சரத்தும் பாதிப்பதாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

விதி 22

காப்புமுறைத் திட்டம்

1. தங்களை ஆட்சிசெய்துவந்த அரசுகளின் இறைமையின்கீழ் முன்னுல் இருந்த ஆனுல் சென்ற போரின் விளைவாக அவற்றின்கீழ் இல்லாமல் போய்விட்ட குடியேற்ற நாடுகளும், நிலப்பகுதிகளும், அதன் மக்கள் இந்த நவீன உலகின் சிரமமான சூழ்நிலையில் தங்களைத் தாங்களே சமாளித்துக்கொள்ளமுடியாத நிலையில் இருப்பதால், காப்பு முறைத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்படும். இத்தகைய மக்களின் சுபிட்சமும் முன்னேற்றமும் நாகரிகத்தின் புனிதமான பொறுப்பு ஆகும் என்பதே காப்புமுறை நியதி ஆகும். எனவே, அப் பொறுப்பை நிறைவேற்றுவதற்குரிய பாதுகாப்புகளை இவ்வொப்பத்தத்தில் இணைக்கவேண்டும்.

2. முன்னேற்றமிக்க இப் பொறுப்பை ஏற்க முன்வரும் நாடுகளிடம் இப் பொறுப்பை ஒப்படைத்தால்தான் இந் நியதியால் பயன் உண்டாகும். ஏனெனில், இந் நாடுகள் தங்களுடைய வளங்கள், அனுபவம், பூவியல் நிலைமை ஆகியவற்றின் உதவியால் மேற்படி மக்களின் சுபிட்சத்தையும் வளர்ச்சியையும் வளர்க்கமுடியும். இப் பாது காப்புப் பொறுப்பை ஏற்றுச் சங்கத்தின் சார்பில் அவற்றை நிறைவேற்றுங்கால் காப்புமுறை நாடுகளாக அவற்றை நடத்திவர வேண்டும்.

3. அந்தந்த (குடியேற்ற நாட்டு, வளர்ச்சியில்லா நிலப்பகுதிகளின்) மக்களின் முன்னேற்ற நிலைமை, பூவியல் நிலைமை, பொருளாதார நிலைமை, மற்றும் இதர சூழ்நிலைகளுக்கேற்பக் காப்பு நாடுகளின் தன்மை வேறுபட்டு இருக்கவேண்டும்.

4. முன்னர் துருக்கி சாம்ராஜ்யத்திற்குச் சொந்தமான சில சமுதாயங்கள் சுதந்திர நாடுகளாகத் திகழும் நிலைமைக்கு முன்னேறி விட்டன. அப்படி சுதந்திர நாடுகளாக விளங்குவதற்கு அவைகள் தங்கள் நிலைமைகளை நன்கு உறுதிசெய்துகொள்ளும்வரை, காப்பு முறைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் ஏதாவது ஒரு நாடு அச் சமுதாயங்களுக்கு வேண்டிய நிர்வாக அறிவுரையும் உதவியும் அளிக்கலாம். ஆனுல், அப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நாட்டைத் (Mandatory) தேர்ந்தெடுக்குங்கால் மேற்படி சமுதாயங்களின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

5. மற்ற மக்கள், குறிப்பாக, மத்திய ஆப்பிரிக்கவாசிகள் அத்தகைய வளர்ச்சி நிலையில் இல்லாததால், அவர்களுடைய நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் நாடு நிர்வாகம் செய்துவருங்கால் சமூக அமைதிக்கும் (public order) நீதிக்கும் பழுது வராத வகையில் அம் மக்களுக்கு மதச் சுதந்திரம் (Freedom of Conscience) அளிக்க

வேண்டும். அடிமை வியாபாரம், போர்கள், மதுக் கள்ளக்கடத்தல் (arms and liquor traffic) போன்ற இழிவான செயல்களைத் தடுக்க வேண்டும். மேலும், அந் நாடுகளின் போலிஸ் பாதுகாப்பு, நாட்டுப் பாதுகாப்பிற்கு அல்லாமல் வேறு காரணங்களுக்கான அங்கு இராணுவ, கடற்படைத் தளங்கள் அமைக்கப்படுவதையும், மக்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதையும் தடுக்கவேண்டும். அன்றியும் சங்கத்தின் இதர உறுப்பினருக்கு வியாபாரத்தில் சம வாய்ப்புகள் அளிக்கவேண்டும்.

6. தென்மேற்கு ஆப்பிரிக்கா, சில தென் பசிபிக் தீவுகள் போன்ற வேறு சில இடங்கள் இருக்கின்றன. அவைகளின் சனத் தொகை குறைவு, அல்லது அவைகள் சிறிய அளவிலும், நாகரிக இருப்பிடங்களை விட்டும் வெகு தொலைவில் இருக்கின்றன; சில நிர்வாகப் பொறுப்புள்ள நாட்டிற்கு அருகாமையில் இருக்கின்றன. இவற்றையும் இதர சூழ்நிலைகளையும் முன்னிட்டு நிர்வாகப் பொறுப் புள்ள நாடு அவற்றை காப்பு முறைச் சட்டத்தின்கீழ், தன் நாட்டின் ஒரு பகுதியாக நினைத்து நிர்வாகம் செய்தால் சிறந்த பலன் உண்டாகும். ஆனல், அவ்வாறு நிர்வாகஞ் செய்துவருங்கால் அந்த சுதேசவாசிகளின் நலனுக்காக மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் பாது காப்புகளை இங்குள்ள மக்களுக்கும் அளிக்கவேண்டும்.

7. நிர்வாகப் பொறுப்பேற்கும் ஒவ்வொரு நாடும் தன் காப்பரசு நாடுபற்றி (நிர்வாகம் குறித்து) ஆண்டுதோறும் மன்றத்திற்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

8. காப்புமுறை நாடுகளில் நிர்வாகப் பொறுப்பேற்றிருக்கும் நாட்டுக்கு உள்ள அதிகாரம் அல்லது கட்டுப்பாடு அல்லது ஆட்சி அளவை சங்கத்தின் உறுப்பினர் ஏற்கெனவே நிர்ணயிக்காது இருந் தால், மன்றம் ஒவ்வொரு காப்புமுறை நாட்டுக்கும் தனித்தனியாகவும் தெளிவாகவும் இதை நிர்ணயம் செய்யும்.

9. நிர்வாகப் பொறுப்புள்ள நாடுகள் சமர்ப்பிக்கும் ஆண்டு அறிக்கைகளை ஆராய்வதற்காகவும் காப்புமுறைத் திட்டத்தின் கடைப் பிடிப்பு குறித்து மன்றத்திற்கு ஆலோசனை கூறவும் ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்படும்.

விதி 23

சமூக, மற்ற நடவடிக்கைகள்

நடைமுறையில் இருக்கும் சர்வதேச ஒப்பந்தங்கள், இனிமேல் செய்யப்படும் ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் சரத்துகளுக்கு உட் பட்டும், அவற்றிற்கிணங்கவும் சங்க உறுப்பினர்கள் :

(அ) தங்கள் நாடுகளிலும், தாங்கள் வர்த்தக, தொழில், தொடர்புகளைக் கொண்டிருக்கும் நாடுகளிலும் ஆண், பெண்,

சிறுவர்களுக்கு நியாயமான, மனிதத்தன்மை வாய்ந்த உழைப்பு நிலைமையை உருவாக்கவும், அதற்குத் தேவையான சர்வதேச நிலையங்களை அமைத்துப் பேணிக்காக்கவும் முயற்சி செய்வார்கள் ;

(ஆ) தங்கள் பொறுப்பில் இருக்கும் நிலப்பகுதிகளில் வாழ்ந்து வரும் சுதேச வாசிகளை நீதியுடன் நடத்த உறுதி கொள்கிறார்கள் ;

(இ) பெண்கள், குழந்தைகளின் விலைத் தொழில், அபின், மற்ற அபாயகரமான மருந்துகளின் கள்ளக்கடத்தல் ஆகியவை சம்பந்தமான உடன்படிக்கைகள் அமல் செய்யப்படுவதைப் பொது மேற் பார்வை (supervision) செய்யும் பொறுப்பை சங்கத்திடம் ஒப்படைப்பர்.

(ஈ) பொது நலன் குறித்து எந்தெந்த நாடுகளில் போர்கள், வெடி மருந்து கள்ளக்கடத்தலைக் கட்டுப்பாடு செய்யவேண்டியது இன்றியமையாததோ, அந்த நாடுகளில் போர்க்களங்கள், வெடி மருந்துகள் முதலியவற்றின்மீது நடைபெறும் வியாபாரத்தைப் பொது மேற்பார்வை செய்யும் பொறுப்பை சங்கத்திடம் ஒப்படைப்பர்;

(உ) போக்குவரத்து, வழியுரிமைச் சுதந்திரம் பெறுவதற் காகவும், சங்க உறுப்பு நாடுகள் அனைத்தையும் சமமாக வர்த்தகத் துறையில் நடத்தவும், வழி வகுப்பர். அப்போது 1914–18-ல் நடை பெற்ற போரில் பாழாகிவிட்ட பிராந்தியங்களின் தேவைகளுக்குத் தனி அக்கறை காட்டவேண்டும் ;

(ஊ) நோய்த்தடைக் கட்டுப்பாட்டிற்காக சர்வதேச இயல்புடைய விஷயங்களில் நடவடிக்கைகள் எடுக்க முயல்வர்.

விதி 24

சர்வதேசப் பணிமனைகள் (Bureaus)

1. பொது உடன்படிக்கைகளால் ஏற்கெனவே அமைக்கப் பட்டிருக்கும் சர்வதேசப் பணிமனைகள், அந்த உடன்படிக்கைக் கட்சிகள் சம்மதித்தால், சபையினுடைய இயக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்படும். அத்தகைய எல்லா சர்வதேசப் பணிமனைகளும், சர்வதேச அக்கறைகள் விஷயமாக இனிமேல் அமைக்கப்படும் எல்லாக் குழுக் களும் சங்கத்தின் இயக்குதலின்கீழ்க் கொண்டுவரப்படும்.

2. பொது உடன்படிக்கைகளை ஒழுங்கு செய்யும் ; ஆனால், சர்வ தேசப் பணிமனைகள் அல்லது குழுக்களின்கீழ்க் கொண்டுவரப்படாத சர்வதேச அக்கறைகள் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும், சங்கத்தின் செயலாண்மைத் துறை, மன்றத்தின் சம்மதத்தின் பேரிலும், சம்பந்தப்பட்ட கட்சிகளின் விருப்பத்தின் பேரிலும், தேவையான செய்திகளைத் தயாரித்துப் பகிர்ந்துகொள்ளும்; தேவை யான அல்லது விரும்பத்தக்க உதவியும் செய்யும்.

3. சங்கத்தின்கீழ்ப் பணியாற்றும் பணிமனை அல்லது குழுவின் செலவுகளை மன்றம் செயலாண்மைத் துறையின் செலவுகளில் ஒரு பகுதியாகக் கொள்ளும்.

விதி 25

செஞ்சிலுவைச் சங்கமும் சுகாதாரமும்

சுகாதார முன்னேற்றம், நோய்த் தடுப்பு, உலக முழுதும் துயரத்தைத் துடைத்தல்—இவற்றைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் சட்டப்படியான தாஞகவே செயல்படும், தேசீய செஞ்சிலுவைச் சங்கங்கள் அமைக்கப்படுவதை ஊக்குவிக்கவும், அவைகளின் ஒத்துழைப்பைப் பெருக்கவும் சங்க உறுப்பினர் இசைகின்றனர்.

விதி 26

திருத்தங்கள்

1. மன்றத்தின் பிரதிநிதிகளாக விளங்கும் சங்க உறுப்பினரும், சபையின் உறுப்பினர்களாக இருக்கும் சங்க உறுப்பினர்களும் அங்கீகாரம் செய்தால் உடனே அத் திருத்தங்கள் ஒப்பந்தத்தில் கொண்டுவரப்படும்.

2. அதற்குச் சம்மதிக்காத நாட்டை எந்தத் திருத்தமும் கட்டுப்பாடு செய்யாது. ஆனல், அந் நாடு அதன்பின் சங்கத்தின் உறுப்பு நாடுகளில் ஒன்ருக விளங்க முடியாது.

கலைச்சொல் அகரவரிசை

(தமிழ் — ஆங்கிலம்)

அ

அங்கீகாரம்	—	Recognition
அச்சுறுத்தல்	—	Blackmail, Threat
அடக்குமுறை	—	Militarism
அடக்குமுறையினர்	—	Militarists
அடுத்த செயலாளர்	—	Under Secretary
அணு	—	Atom
அணு ஆயுதம்	—	Nuclear arms
அணுக்கரு	—	Nucleus
அணுசக்தி	—	Atomic energy
அணுச்சிதைவு	—	Atomic disintegration
அணுபோகம்	—	Occupation
அதிகாரம்	—	Authority
அதிகாரி	—	Officer, Official
அதிகார ஏணி	—	Hierarchy
அதிகாரப் பரவல்	—	Decentralisation
அதிகார வர்க்கத்தினர்	—	Bureaucrats
அதே காரணத்திற்காக	—	Ipso facto
அப்பீல் (மேல் முறையீடு)	—	Appeal
அபேட்சக முறை	—	Candidacy
அமலுக்குக் கொண்டுவரல்	—	Enforcement
அமைச்சர்	—	Minister
பாதுகாப்பு அமைச்சர்	—	Defence Minister
வெளிநாட்டு ,,	—	Foreign ,,
அமைச்சரவை	—	Council of Ministers
அமைதி	—	Peace
அமைதிவாதி	—	Pacifist
அமெரிக்கப் பாராளுமன்றம்	—	Congress

அயலிடவுரிமை	—	Extraterritoriality
அரசு	—	State
அரச விஜயம்	—	State visit
அரச வமிசம்	—	Dynasty
அரசறிக்கையாக வெளியிடல்	—	Promulgation
அரசாங்க அலுவலர்	—	Government servants
அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்யும் சதிவேலை	—	Subversion
அரசாங்கம்	—	Government
அரசியலமைப்பு	—	Constitution
அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம்	—	Constitutional Government
அரசியலமைப்பு நிர்ணய சபை	—	Constituent Assembly
அரசியலமைப்புத் திருத்தம்	—	Constitutional Amendment
அரசியல் உரிமை	—	Political right
அரசியல் கட்சி	—	Political party
அரசியல் (ராஜ) தந்திரம்	—	Diplomacy
அரசியல் வல்லுநர்	—	Statesman
அரசியல்வாதி	—	Politician
அரசிருக்கை துறத்தல்	—	Abdication
அரசு சுவாதீனம்	—	Public ownership
அறிக்கை	—	Report

ஆ

ஆக்கிரமிப்பு	—	Aggression
ஆக்சிஜன் ஏற்றம்	—	Oxidation
ஆக்சிஸ் வல்லரசு	—	Axis Powers
ஆட்சி	—	Administration, Regime
தல ஆட்சி	—	Local Administration
ஆட்சிக் குழு	—	Regent
ஆட்சித்துறை	—	Politburo
ஆட்சி முறை	—	Polity
ஆதரவு தேடுமிடம்	—	Lobby
ஆணை	—	Order
ஆண்டு வரவுசெலவுத் திட்டம்	—	Budget
ஆவணம்	—	Document
ஆவணக்களரி	—	Archives
ஆயுள் தண்டனை	—	Life Imprisonment
ஆலோசனை	—	Advice
ஆள் தொகுதி	—	Personnel

இ

இக்கட்டான நிலை — Deadlock
இசைநாடகம் — Bouffle
இடதுசாரி — Leftist
இடைநிலை வகுப்பினர் — Bourgeois
இடைமறிப்பு — Blockade
இணைப்பரசுவாதிகள் — Confederates
இயக்குநர் — Director
இயல்வாய்மைக் கொள்கை — Realism
இராணுவ அனுபோகம் — Military occupation
இராணுவ உதவிக் குழு — Military Staff Committee
இருகட்சி அரசியல் முறை — Two-party System
இலக்கியம் — Literature
இளவரசர் — Prince
இறக்குமதி — Import
இறுதி எச்சரிக்கை — Ultimatum
இறைமை — Sovereignty
இறையிலாக் கொள்கை — Paganism
இறையுரிமை — Sovereign right
இன அடிப்படை — Ethnological
இனப்பெருக்கம் — Reproduction

உ

உச்சக்கட்ட மாநாடு — Summit Conference
உஷ்ணம் — Temperature
உடந்தையாள் — Accomplice
உடன்படிக்கை — Treaty
உட்கவர்தல் — Absorption
உணவுப் பற்றுக்குறை — Food shortage
உபகப்பற்படைத் தலைவர் — Vice-Admiral
உபஜனதிபதி — Vice-President
உபதலைமையமைச்சர் — Vice-Premier
உயர்குடியாளர் — Aristocrats
உயர்குடியாளராட்சி — Aristocracy
உயர் குழு — Grand Council
உயரம் — Altitude
உயிர் கூட்டுப் பொருள் — Organic compound
உரிமை — Right
உரிமைச் சாசனம் — Bill of Rights
உலக அரசு — World State

உழைப்பாளி, உழைப்பு — Labour
உறவு (தொடர்பு) — Liaison
உறவினர் தனிச்சலுகை — Nepotism
உறுதிப்படுத்தல் — Confirmation
உறுப்புச் சட்டம் — Organic Law
உறுப்பினர் — Member
உற்பத்தி — Production, Output

ஊ

ஊசலி — Pendulam
ஊரடங்கு சட்டம் — Curfiew
ஊழல் — Corruption

எ

எதிரியக்கம் — Reaction
எதிர்க்கட்சி — Opposition
எதேச்சாதிகாரம் — Authoritarianism
எந்திரத் துப்பாக்கி — Machine gun
எந்திரம் — Machine
எரிதல் — Combustion
எழுதப்படிக்கத் தெரியா — Illiterate

ஏ

ஏகாதிபத்தியம் — Imperialism
ஏடு — Text
ஏற்புப் பத்திரம் — Instruments of Ratification

ஐ

ஐக்கியம் — Unity, Unification
ஐக்கிய நாடுகள் சபை — United Nations Organisation
ஐ. நா. தர்மகர்த்தா சபை — U. N. Trusteeship Council
ஐந்தாண்டுத் திட்டம் — Five-Year Planning
ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயம் — European Defence Community

ஒ

ஒதுக்கீடு — Appropriation
ஒப்பந்தம் — Pact, Convention
ஒப்பந்த நாடுகள் — Contracting Powers

ஒப்புதல் — Approval
ஒலிபெருக்கி — Microphone

ஓ

ஓட்டு — Vote
ஓரங்க சட்டசபை — Unicameral legislature

க

கடன் குத்தகை உதவி — Land-lease aid
கடன் பத்திரம் — Securities
கட்டளை — Order
கட்டற்ற விடுதலை — Licence
கட்சித் தூய்மை — Purge
கட்டாய இணைப்பு — Aggrandisement
கட்டாயப் படைச்சேர்ப்பு — Conscription
கட்டுப்படுத்தும் — Binding
கதிர்வீச்சு — Radiation
கணக்கியல் வீதம் — Arithmetic ratio
கனரகத் தொழில் — Heavy industry
கண்டனம் — Censor
கண்டுபிடிப்பு — Invention
கப்பற்படை — Navy
கப்பற்படைத் தூதியல் அதிகாரி — Naval Attache
கமின்பர்ம் — Cominform
கருச்சிதைவு — Abortion
கருவூலம் — Treasury
கல்வி — Education
கலெக்டிவிச விவசாய முறை — Collectivization
கற்றறிந்தோர் — Intelligentsia
காட்மியம் — Cadmium
காபினட் அமைச்சவை — Cabinet
காப்பரசு — Protectorate
காப்பு மண்டலம் — Buffer Zone
காப்புமுறை நாட்டு நிர்வாகப் பொறுப்பாளர் — Mandatory
காப்பு முறைத் திட்டம் — Mandatory System
காவல் அரசு — Police State
கீழ்த்தர வகுப்பினர் — Lower class
கீழாள் — Vassal
குடிமகன் — Citizen

குடியரசு — Republic
குடியாட்சி — Democracy
குடியுரிமை — Citizenship
குடியேற்ற நாடு — Colony
குடியொப்பம் — Referendum
குலக்குகள் — Kulaks
குழு — Commission
குறிப்பு — Note
குற்றச்சாட்டு — Accusation
குற்றவாளி — Criminal
கூட்டரசு — Federation
கூட்டரசு யூனியன் — Federal Union
கூட்டு — Coalition
கூட்டு ஆலோசனை — Consultation
கூட்டுறவு விவசாய முறை — Collective farming
கூட்டுக் கழக அரசு — Corporate State
கூட்டுக் கழகத்துவம் — Corporativism
கூட்டுச் சேராக் கொள்கை — Non-alignment policy
கூட்டுப் பாதுகாப்பு — Collective security
கூலி — Wage
கெடுபிடிப் போர் — Cold war
கைதி — Prisoner
கையெழுத்து — Signature
கொடுங்கோலாட்சி — Despotism, Tyranny
கொள்கை — Policy
கொள்கை வகுப்பாளர் — Policy-maker
கொள்கைவெறி — Fanaticism
கோட்டம் — County
கோட்டை — Redoubt
கோமகன் — Duke

ச

சக்தி — Energy
சட்டம் — Law
சட்ட ஆட்சி — Rule of Law
சட்டசபை — Chamber
சட்டமுதல்படி — Legality
சப்பான் பாராளுமன்றம் — Diet
சமயச் சார்பற்ற மதம் — Secular faith
சமயச் சீர்திருத்தம் — Reformation

சமரசம்	—	Conciliation
சமாதான சகவாழ்வு	—	Peaceful coexistence
சமுதாயம்	—	Society
சமூக அமைதி	—	Law and order
சமூக நீதி	—	Social justice
சம்பளம் வழங்குபவர்	—	Paymaster
சரண்	—	Capitulation
சரிசம ஆண்டு வரவுசெலவுத் திட்டம்	—	Balanced Budget
சருவாதிகாரத்துவம்	—	Caesarism, Dictatorship
சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷன்	—	International Monetary Fund
சர்வதேச நீதிமன்றம்	—	International Court of Justice
சலுகை	—	Concession
சாதகச் சட்டம்	—	Enabling Act
சாதிக்கட்டு	—	Caste system
சாட்டிலைட் (துணை நாடு)	—	Satellite
சாட்டிலைட் தாங்கி	—	Ballistic missile
சான்சலர் (தூதர்)	—	Chancellor
சுகாதாரம்	—	Hygiene
சுங்கவரி	—	Customs
சுதந்திரம்	—	Freedom
சுவாதீனம்	—	Monopoly
சுரங்கம் (கண்ணி வெடி)	—	Mines
சுற்றுப்பயணம்	—	Tour
செமிடிசம்	—	Semitism
செயல்முறை	—	Process
செர்மன் சட்டசபை	—	Bundestag
செர்மன் படை	—	Wehrmacht
செர்மன் வல்லாட்சியாளர்	—	Der Fuhrer
செறிவாக்கல்	—	Concentration
செல்வக் குடியாட்சி	—	Pluto democracy
செல்வச் சிறுகுழுவாளராட்சி	—	Oligarchy
செலுத்துகை	—	Payment
செனட் (அமெரிக்கப் பாராளு மன்றம்)	—	Senate
சேர்க்கை	—	Fusion
சேஜை	—	Division
சொத்து	—	Property

சோதனை	—	Test
சோவியத் வெளிவிவகாரத் துறைத் தலைவர்	—	Commissar

த

தடையாணை	—	Embargo
தலைமுறை	—	Generation
தற்காலிக அரசாங்கம்	—	Provisional Government
தனிமங்கள்	—	Elements
திட்டக் குழு	—	Planning Commission
திட்டப் பொருளாதாரம்	—	Planned economy
திடீர்ப் புரட்சி	—	Coup d'etat
திருச்சபை	—	Church
திருத்தம்	—	Amendment
திறமை (தேர்ச்சி)	—	Efficiency
தீக்கோள்	—	**Arson**
தீவிரவாதி	—	Extremist
தூதர்	—	Ambassador, Diplomat
தூதரகம்	—	Embassy, Chancellory
தூதர் குழு	—	Attache
தூதியல் தனிச்சலுகைகளும் பாதுகாப்புகளும்	—	Diplomatic privileges and immunities
தொழிற்சாலை	—	Factory

ந

நகல்	—	Copy
நகராண்மை	—	Municipal
நடப்பு அரசியல்	—	Real politic
நடுத்தர வகுப்பு	—	Middle class
நடுநிலை	—	Neutral
நடுவர் தீர்ப்பு	—	Arbitration
நட்பு நாடு	—	Aliy
நடைமுறை	—	Procedure
நடைமுறை நிலைமை	—	Status quo
நம்பிக்கை	—	Confidence
நம்பிக்கையில்லாத் தீர்மானம்	—	No-confidence motion
நல்லெண்ணச் சுற்றுப்பயணம்	—	Goodwill visit
நாடுகடத்தல்	—	Exile
நாட்டுத் துரோகம்	—	Treason
நாட்டுணர்ச்சி	—	Nationalism

நாட்டுப்பற்று — Patriotism
நிதி — Finance
நிபந்தனையற்ற சரண் — Unconditional surrender
நிர்வாகத்தினர் — Administrative authority
நிலவுரிமை — Title to land
நீதிமன்றம் — Court
நீர்ப்பாசனம் — Irrigation
நீராவிக் கப்பல் — Steamship
நுகர்வு (துய்ப்பு) — Consumption
நுகர்வோர் — Consumer
நுழைவு — Penetration
நொடிவு — Bankruptcy

ப

பகிஷ்கரிப்பு (புறக்கணிப்பு) — Boycott
பங்கீடு — Rationning
படை — Army
படையுணவுத்துறை — Commissariat
படைக்கலைப்பு — Disarmament
படைக்குவிப்பு — Rearmament
படைச்சிப்பந்தித் தலைவர் — Chief of (Army) Staff
படைச்சிப்பந்தித் துணைத் தலைவர் — Chief of General Staff
படைத்தலைவர் — General
படைத்துறைப் பணியாளர் — Corporal
படை நிலமானிய முறை — Feudalism
படை நிலமானியத் தலைவர் — Feudal Chieftain
படைமுதல்வர் — Generalissimo
பட்ஜெட் — Budget
பதவி — Position
பதவியிலிருந்து அழைத்தல் — Recall
பதவி இறக்கம் — Demotion
பதவி உயர்வு — Promotion
பணவீக்கம் — Inflation
பணி நிபந்தனைகள் — Conditions of Service
பண்பாடு — Culture
பயங்கரவாதி — Terrorist
பயங்கரத்துவம் — Terrorism
பயிர்த் தொழில் — Agriculture
பயிற்சி — Training

பரிமாற்றம்	—	Exchange
பழைமைவாதி	—	Conservative
பற்றுக்குறை	—	Deficit
பறிமுதல்	—	Confiscation
பன்முக உடன்பாடு	—	Multilateral accord
பாக்கி	—	Arrears
பாங்கு	—	Bank
பாங்குதாரிகள்	—	Bankers
பாங்குமுறை	—	Banking system
பாசிஸம்	—	Fascism
பாட்டாளிகள் சருவாதிகாரம்	—	Dictatorship of the proletariat
பாதுகாப்பு	—	Defence
பாதுகாப்பு சபை	—	Security Council
பாராளுமன்றம்	—	Parliament
பாராளுமன்றக் குடியாட்சி	—	Parliamentary democracy
பால்சிவிஸம்	—	Bolshevism
பால்பண்ணைப் பொருள்	—	Dairy product
பிரசிடியம்	—	Presidium
பிரதிநிதி	—	Representative
பிரயாண அனுமதிச் சீட்டு	—	Passport
பிரிட்டிஷ் பிரபுக்கள் (மேல்) சபை	—	British House of Peers
பிரிட்டிஷ் மக்கள் (கீழ்) சபை	—	British House of Commons
பிரிட்டிஷ் போலிஸ்	—	Scotland Yard
பிரிவினை	—	Partition
பிரெஞ்சு மக்கள் சபை	—	National Assembly
பின்தோன்றல்	—	Successor
பீரங்கிக் கவசம்	—	Artillery shells
புது அமைப்பு	—	New Order
புனரமைப்பு வளர்ச்சிக்கான சர்வதேச பாங்கு	—	International Bank of Reconstruction and Development
பொதுமக்கள் கருத்து	—	Public opinion
பொதுச் சபை	—	General Assembly
பொதுப் பணியாள்	—	General Staff
பொருதும் இயல்பு	—	Belligerency
பொருள்	—	Matter
பொருளாதாரம்	—	Economy
பொருளாதார திட்டம்	—	Economic Planning
பொருளாதார வளர்ச்சிக்கான தனி ஐ. நா. நிதி	—	UN Special Fund for Economic Development

பொலிட்பீரோ	—	Politburo
பொறுக்கி எடுக்கப்பட்ட செல்வாக்குக் குழுவினர்	—	Elite
பொறியியல் வல்லுநர்	—	Engineer
போக்குவரத்து	—	Transportation
போக்குவரத்துச் சாலை	—	Highways
போப் ஆண்டவர்	—	Pope
போர்க் குற்றவாளி	—	War criminal
போர்த்தெய்வம்	—	Mars
பெருக்கல் விகிதம்	—	Geometric ratio
பெருமகன்	—	Count
பெரும்பான்மை	—	Majority
பெரு வல்லரசு	—	Big Power
பேச்சுரிமை	—	Freedom of expression
பேச்சுவார்த்தை	—	Negotiation
பௌதிக வல்லுநர்	—	Physicist

ம

மக்கள் குடியாட்சி	—	People's democracy
மசோதா	—	Bill
மதம்	—	Religion
மதச் சுதந்திரம்	—	Freedom of conscience
மத்திய அரசாங்கம்	—	Central Government
மந்தம்	—	Depression
பெருமந்தம்	—	Great Depression
மனு	—	Petition
மருத்துவ அறிக்கை	—	Medical Bulletin
மன்றம்	—	Council
மனிதர் வழிபாடு	—	Cult of personality
மாகாணம்	—	Satrapy
மாநாடு	—	Conference
மார்க்சீயம்	—	Marxism
மாவட்டம்	—	District
மின்சாரம்	—	Electricity
மின்மயமாக்கம்	—	Electrification
மீட்கப்படா மாநிலம்	—	Italia irredenda
முக்கிய நிர்வாகி	—	Chief Executive
முக்கூட்டு ஒப்பந்தம்	—	Triple Alliance
முதலாளித்துவம்	—	Capitalism
முதலீடு	—	Investment

முதல் திரட்டல்	—	Capital accumulation
முழுப் போர்	—	Total war
முற்போக்காளர்	—	Progressives
முற்றுகை	—	Siege
மேற்பார்வை	—	Supervision
மேல்முறையீடு	—	Appeal

ர

ரசவாதம்	—	Alchemy
ரத்து அதிகாரம்	—	Veto power
ரத்துசெய்	—	Abrogate

வ

வகுப்பு	—	Class
வகுப்புப் பூசல்	—	Class conflicts
வரலாற்றுக் கட்டம்	—	Epoch
வரி	—	Tax
வரிவிதிப்பு	—	Taxation
வர்த்தகத் (தொடர்பைக் கவனிக்கும்) தூதரகம்	—	Consulate
வர்த்தகத் தொடர்பு	—	Consular relations
வல்லந்த இணைப்பு	—	Annexation
வல்லாட்சி	—	Autocracy
வல்லாட்சியாளர்	—	Autocrat
வழக்கு	—	Case
வழிபாடு	—	Cult
வாக்காளர் தொகுதி உறுப்பினர்	—	Constituents
வாணிகச் சுழல்	—	Business cycle
வாயு	—	Gas
வாழ்க்கைத்தரம்	—	Standard of living
விகிதப் பிரதிநிதித்துவம்	—	Proportional representation
விசாரணை	—	Enquiry
விசுவாசி	—	Loyalist
விஷ அணுக்கள்	—	Lethal fall-out
விஞ்ஞானி	—	Scientist
விஞ்ஞானம்	—	Science
விமானம்	—	Plane
விமானப்படை	—	Airforce
வியாபாரப் பெரும்புள்ளி	—	Big Business

விவசாயி — Farmer
வெளிநடப்பு — Walkout
வெளிநாட்டுக் கொள்கை — Foreign policy
வெளிநாட்டு வியாபாரம் — Foreign trade
வெளியேற்றம் — Lockout

English—Tamil

A

Abdicate — அரசிருக்கை துறத்தல்
Abortion — கருச்சிதைவு
Abrogate — ரத்துசெய்
Absorption — உட்கவர்தல்
Accomplice — உடந்தையாள்
Accord — ஒப்பந்தம்
Accuse — குற்றச்சாட்டு
Administration — ஆட்சி
Local Administration — தல ஆட்சி
Administrative authority — நிர்வாகத்தினர்
Advisory — ஆலோசனை
Agriculture — பயிர்த்தொழில், விவசாயம்
Aggrandisement — கட்டாய (வல்லந்த) இணைப்பு
Aggression — ஆக்கிரமிப்பு
Airforce — விமானப்படை
Ally — நட்பு நாடு
Alchemy — ரசவாதம்
Allied Council — நேசநாடுகள் சபை (மன்றம்)
Alternates — கூட்டு உறுப்பினர்
Altitude — உயரம்
Ambassador — தூதர்
Amendment — திருத்தம்
Amendment, constitutional — அரசியலமைப்புத் திருத்தம்
Amnesty — குற்ற மன்னிப்பு
Annex — வல்லந்த இணைப்பு
Aparthied — இனவெறுப்புக் கொள்கை
Appeal — மேல்முறையீடு, அப்பீல்
Appropriation — ஒதுக்கீடு
Approval — ஒப்புதல்
Arbitration — நடுவர் தீர்ப்பு

Archives — ஆவணக் களரி
Arrears — பாக்கி
Aristocrats — உயர்குடியாளர்
Aristocracy — உயர்குடியாளராட்சி
Arithmetic ratio — கணக்கியல் வீதம்
Armistice — போர்நிறுத்த உடன்பாடு
Army — படை
Arson — தீக்கோள்
Art — கலை
Artillery shells — பீரங்கிக் கவசம்
Assassination — அரசியல் கொலை
Assembly — சபை, அவை
Atom — அணு
Atomic energy — அணுசக்தி
Attache — தூதர் குழு
Atheism — நாத்திகம்
Authority — அதிகாரம்
Authoritarianism — எதேச்சாதிகாரம்
Autocracy — வல்லாட்சி
Autonomy — சுதந்திரம்
Average — சராசரி
Aviation — வானூர்தி
Axis Powers — ஆக்சிஸ் வல்லரசுகள்

B

Balance of force — சக்திச் சமநிலை
Ballot — வாக்கெடுப்பு
Bank — பாங்கு
Bankers — பாங்குதாரிகள்
Banking — பாங்குமுறை
Bankruptcy — நொடிவு
Bay — விரிகுடா
Belligerency — பொருதும் (சண்டையிடும்) இயல்பு
Big Business — வியாபாரப் பெரும்புள்ளி
Bill — மசோதா, சட்ட வரைவு
Bill of Rights — உரிமைச் சாசனம், மசோதா
Birth control — கருத்தடை
Blackmail — அச்சுறுத்தல்
Blockade — இடைமறிப்பு, போக்குவரத்துத் தடை, முற்றுகை

Bolshevism	—	பால்சிவிஸம்
Bouffe	—	இசைநாடகம்
Bourgeois	—	இடைநிலை வகுப்பினர்
Boycot	—	பகிஷ்கரிப்பு
Brain-washing	—	அறிவுக் (சிந்தனைக்) கட்டுப்பாடு
Bribe	—	லஞ்சம்
Budget	—	ஆண்டு வரவுசெலவுத் திட்டம், பட்ஜெட்
Balanced Budget	—	சரிசம ,, ,, ,,
Budget cuts	—	பட்ஜெட் வெட்டுகள்
Buffer zone	—	காப்பு மண்டலம்
Binding	—	கட்டுப்படுத்தும்
Bundestag	—	செர்மன் சட்டசபை
Bureaucrats	—	அதிகார வர்க்கத்தினர்
Business cycle	—	வாணிகச் சுழல்

C

Cabinet	—	காபினட், அமைச்சவை
Cadmium	—	காட்மியம்
Caesarism	—	சருவாதிகாரத்துவம்
NeoCaesarism	—	புது சருவாதிகாரம்
Cancer	—	புற்றுநோய்
Candidacy	—	அபேட்சக முறை
Capital accumulation	—	முதல் திரட்டல்
Capitalism	—	முதலாளித்துவம்
Capitulation	—	சரண்
Cartel	—	கார்ட்டல்
Case	—	வழக்கு
Cash crop	—	ரொக்கப் பயிர்
Caste system	—	சாதிக்கட்டு(கட்டுப்பாட்டு)முறை
Censor	—	கண்டனம்
Centrifugation	—	முறமுகவிசை
Chamber	—	சட்டசபை
Single Chamber	—	ஓரங்க சட்ட சபை
Chancellery	—	தூதரகம்
Chancellor	—	சான்சலர், தூதர்
Charter	—	சாசனம்
Chemist	—	ரசாயன வல்லுநர்
Chief Executive	—	முக்கிய நிர்வாகி
Chief of Staff	—	படைச்சிப்பந்தித் தலைவர்

Chief of General Staff	—	படைச்சிப்பந்தித் துணைத் தலைவர்
Church	—	திருச்சபை
Class	—	வகுப்பு
Class conflicts	—	வகுப்புப் பூசல்
Classless society	—	வகுப்பற்ற சமுதாயம்
Clericalism	—	சமயத்துவம்
Clinic	—	மருத்துவசாலை
Citizenship	—	குடியுரிமை
Citizen	—	குடிமகன்
Coalition	—	கூட்டு
Code	—	அடையாளச் சொல்
Cold war	—	கெடுபிடிப் போர்
Colony	—	குடியேற்ற நாடு
Collective farming	—	கூட்டுறவு விவசாய முறை
Collective security	—	கூட்டுப் பாதுகாப்பு
Collectivization	—	கலெக்டிவிச விவசாய முறை
Cominform	—	கமின்பர்ம்
Commissar	—	சோவியத் வெளிவிவகாரத் துறைத் தலைவர்
Commissariat	—	படையுணவுத்துறை
Commission	—	குழு
Communism	—	கம்யூனிஸம், பொதுவுடைமைக் கொள்கை
Community	—	சமுதாயம்
Communication	—	செய்தியறிவிப்பு
Competence	—	திறமை
Concentration	—	செறிவாக்கல்
Concession	—	சலுகை
Conciliation	—	சமரசம்
Conditions of Service	—	பணி (சேவை) நிபந்தனைகள்
Confederates	—	இணைப்பரசுவாதிகள்
Conference	—	மாநாடு
Conference, summit	—	உச்சக்கட்ட மாநாடு
Confidence	—	நம்பிக்கை
No Confidence motion	—	நம்பிக்கையில்லாத் தீர்மானம்
Confirmation	—	உறுதிப்படுத்தல்
Confiscate	—	பறிமுதல்
Congress	—	அமெரிக்கப் பாராளுமன்றம்
Conscription	—	கட்டாயப் படைச் சேர்ப்பு

Conservative	—	பழைமைவாதி
Constitution	—	அரசியலமைப்பு
Constitution, federal	—	கூட்டரசு அரசியலமைப்பு
Constitutional ruler	—	அரசியலமைப்பு (முறை) ஆட்சியாளர்
Constituent Assembly	—	அரசியலமைப்பு நிர்ணய சபை
Constituents	—	வாக்காளர் தொகுதி உறுப்பினர்
Consulate	—	வர்த்தகத் (பொருளாதாரத்) தூதரகம்
Consular relations	—	வர்த்தகத் தொடர்பு
Consultation	—	கூட்டாலோசனை
Consumer	—	நுகர்வோர், துய்ப்போர்
Consumption	—	நுகர்வு, துய்ப்பு
Contracting Powers	—	ஒப்பந்த நாடுகள்
Control	—	கட்டுப்பாடு
Convention	—	ஒப்பந்தம், மரபு
Copy	—	நகல்
Corporal	—	படைத்துறைப் பணியாளர்
Corporativism	—	கூட்டுக் கழகத்துவம்
Corporate State	—	கூட்டுக் கழக அரசு
Corruption	—	ஊழல்
Council	—	மன்றம்
Council of Ministers	—	அமைச்சரவை
Count	—	பெருமகன்
County	—	கோட்டம்
Coup	—	திடீர்ப் புரட்சி
Coup de force	—	பலாத்காரப் புரட்சி
Court	—	நீதிமன்றம்
Criminal	—	குற்றவாளி
Criminal, war	—	போர்க்குற்றவாளி
Cult	—	வழிபாடு
Cult of personality	—	மனிதர் வழிபாடு
Culture	—	பண்பாடு
Cumbustion	—	எரிதல்
Curfiew	—	ஊரடங்கு சட்டம்
Currency	—	நாணயம்
Custom	—	சுங்கவரி

D

Dairy products	—	பால்பண்ணைப் பொருள்கள்
Deadlock	—	இக்கட்டான நிலை

Debt	—	கடன்
Decentralisation	—	அதிகாரப் பரவல்
Declaration	—	அறிக்கை
Decree	—	ஆணை
Defence	—	பாதுகாப்பு
Defence Minister	—	பாதுகாப்பு அமைச்சர்
Deficit	—	பற்றுக்குறை
Demarche	—	வல்லாட்சியாளர்
Democracy	—	குடியாட்சி
People's democracy	—	மக்கள் குடியாட்சி
Parliamentary democracy	—	பாராளுமன்றக் குடியாட்சி
Demotion	—	பதவி இறக்கம்
Depression	—	மந்தம்
Deputy	—	பிரதிநிதி
Der Fuhrer	—	செர்மன் வல்லாட்சியாளர்
Despotism	—	கொடுங்கோலாட்சி
Destroyer	—	போர்க்கப்பல்
Dictatorship of the proletariat	—	பாட்டாளிகள் சர்வாதிகாரம்
Diet	—	சப்பான் பாராளுமன்றம்
Diplomacy	—	அரசியல் (ராஜ) தந்திரம்
Diplomat	—	தூதர்
Diplomatic exchange	—	தூதியல் பரிவர்த்தனை
Diplomatic privileges and immunities	—	தூதர்களுக்குரிய தனிச்சலுகைகளும் பாதுகாப்புகளும்
Director	—	இயக்குநர்
Disarmament	—	படைக்கலைப்பு
Dissolve	—	கலைத்தல்
District	—	மாவட்டம்
Division	—	சேனை
Divorce	—	மணவிலக்கு
Document	—	ஆவணம்
Draft	—	வரைவு
Duke	—	கோமகன்
Duma	—	ரஷ்யப் புரட்சிப் பாராளுமன்றம்
Dynasty	—	அரசவமிசம்

E

Economic and Social Council	—	(ஐ.நா.) பொருளாதாரச் சமூக சபை
Economy	—	பொருளாதாரம்

Education — கல்வி
Efficiency — தேர்ச்சி, திறமை
Electorate — வாக்காளர் தொகுதி
Electricity — மின்சாரம்
Electric power — மின்விசை
Electrification — மின்மயமாக்கல்
Elements — தனிமங்கள்
Elite — பொறுக்கி எடுக்கப்பட்ட செல்வாக்குக் குழு

Embargo — தடையாணை
Empire — சாம்ராச்சியம்
Employee — வேலையாளி
Employer — வேலையளிப்பவர்
Enabling Act — சாதகச் சட்டம்
Energy — சக்தி, ஆற்றல்
Enforcement — அமல் செய்தல்
Engine — எந்திரம்
Engineer — பொறியியல் வல்லுநர்
Enquiry — விசாரணை
Enterprise — முயற்சி
Entente — நட்புடன்படிக்கை
Epoch — வரலாற்றுக் காலப்பகுதி
Ethnological — இன அடிப்படை
European Defence Community — ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயம்

Exchange — பரிமாற்றம், செலாவணி
Exile — நாடுகடத்தல்
Explosion — வெடித்தல்
Export — ஏற்றுமதி
Extraterritoriality — அயலிடவுரிமை
Extremist — தீவிரவாதி

F

Factory — தொழிற்சாலை
Fanaticism — கொள்கை வெறி
Farmer — விவசாயி
Fascism — பாசிஸம்
Federal — கூட்டரசுக்குரிய
Federal union — கூட்டரசு யூனியன்
Feudal chieftain — படை நிலமானியத் தலைவன்

Feudalism	—	படை நிலமானிய முறை
Feudal lords	—	,, ,, பிரபுக்கள்
Finance	—	நிதி
Firing squad	—	எரிபடையினர்
Five Year Plan	—	ஐந்தாண்டுத் திட்டம்
Flexible	—	எளிதில் மாற்றத்தக்க
Food shortage	—	உணவுப் பற்ருக்குறை
Foreign policy	—	வெளிநாட்டுக் கொள்கை
Foreign trade	—	வெளிநாட்டு வியாபாரம்
Fortress	—	கோட்டை
Free enterprise	—	சுதந்திரத் தொழில் முயற்சி
Freedom	—	சுதந்திரம்
Freedom of conscience	—	மத சுதந்திரம்
Freedom of expression	—	பேச்சுரிமை
Freedom, personal	—	தனி சுதந்திரம்
Fusion	—	சேர்க்கை

G

Gamma rays	—	காமா கதிர்கள்
Gas	—	வாயு
General	—	படைத்தலைவர்
General Assembly	—	பொதுச் சபை
Generalissimo	—	படைமுதல்வர்
General staff	—	பொதுப் பணியாளர்
Generation	—	தலைமுறை
Geneticist	—	பிறப்பியல் வல்லுநர்
Geometric ratio	—	பெருக்கல் விகிதம்
Germ plasm	—	ஜெர்ம் பிளாசம்
Goodwill visit	—	நல்லெண்ணச் சுற்றுப்பயணம்
Government	—	அரசாங்கம்
Central Government	—	மத்திய அரசாங்கம்
Constitutional ,,	—	அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம்
In-exile ,,	—	நாடு கடந்த அரசாங்கம்
Provisional ,,	—	தாற்காலிக ,,
Representative ,,	—	பிரதிநிதித்துவ ,,
Government servants	—	அரசாங்க அலுவலாளர்
Graft	—	மோசடி
Grand Council	—	உயர்குழு (மன்றம்)
Grant	—	உதவித்தொகை

Great Powers	—	பெரு வல்லரசுகள்
Grenade	—	வெடிகுண்டு
Guarantee	—	பாதுகாப்பு

H

Headquarters	—	தலைமைக் காரியாலயம்
Heat	—	உஷ்ணம்
Hero worship	—	வீர வழிபாடு
Hierarchy	—	அதிகார ஏணி
High Command	—	மேலிடம், தலைமை
Highways	—	பெருவழி
House of Commons	—	பிரிட்டிஷ் மக்கள் (கீழ்) சபை
House of Peers	—	,, பிரபுக்கள் (மேல்) சபை
Hydro-electric Station	—	ஹைடிரோ-எலக்ட்ரிக் ஸ்டேஷன்
Hydrogen	—	ஹைடிரஜன்
Hygiene	—	சுகாதாரம்

I

ICBM	—	ஐ.சி.பி.எம்.
Ideology	—	அயிடியாலஜி, கருத்துக் கொள்கை
Illiterates	—	எழுதப் படிக்கத் தெரியாதவர்
Imperialism	—	ஏகாதிபத்தியம்
Imperial power	—	பேரதிகாரம்
Import	—	இறக்குமதி
Income	—	வருமானம்
Independence	—	சுதந்திரம்
Independents	—	சுதந்திரவாதிகள்
Industrial output	—	தொழில் உற்பத்தி
Industry	—	தொழில்
Heavy ,,	—	கனரகத் தொழில்
Integrity	—	நேர்மை
Inflation	—	பணவீக்கம்
Intelligence officers	—	செய்தியறிவிப்பு அதிகாரிகள்
Intelligentia	—	கற்றறிந்தோர்
International	—	சர்வதேச, பன்னாட்டு
International Bank of Reconstruction & Development	—	புனரமைப்பு, வளர்ச்சிக்கான சர்வதேச பாங்கு
International Court of Justice	—	சர்வதேச நீதிமன்றம்

International Monetary Fund — சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷன்
Intervention — தலையீடு
Invention — கண்டுபிடிப்பு
Investigation — விசாரணை
Investment — முதலீடு
Ipso facto — அதே காரணத்திற்காக
Irrigation — நீர்ப்பாசனம்
Italia irredenda — மீட்கப்படா மாநிலங்கள்

J

Jews — யூதர்

K

Know-how — செயல்முறை, செய்திறம்
Kulaks — குலக்குகள், ரஷ்ய விவசாயிகள்

L

Laboratory — சோதனைக்கூடம்
Labour — உழைப்பாளி, உழைப்பு
Laissez-faire — தனியார் சுதந்திரக் கொள்கை
La Marseillaise — பிரெஞ்சுப் புரட்சித் துதிப்பாடல்
Land Reform — நிலச் சீர்திருத்தம்
Law and order — சமூக அமைதி
Large scale production — பெருவாரி உற்பத்தி
League of Nations — சர்வதேச சங்கம்
Leaseholds — குத்தகைப் பகுதிகள்
Leftist — இடதுசாரி
Legality — சட்ட உடன்பாடாம் தன்மை
Legation — தூதரகம்
Legion — லீஜன்
Lend-lease aid — கடன்-குத்தகை உதவி
Leninism — லெனின் கொள்கை
Lethal fall-out — விஷ அணுத்துகள்கள்
Letter — தபால்
Leviathan — லெவியாத்தன், அரசியல் இராட்சசன்
Liaison — உறவு, தொடர்பு
Liberalism — தாராளவாதிக் கொள்கை
Liberty — சுதந்திரம், உரிமை

Liberty, civil	—	சிவில் உரிமை
Library	—	நூலகம்
Licence	—	உரிமம்
Life imprisonment	—	ஆயுள் தண்டனை
Literature	—	இலக்கியம்
Living standard	—	வாழ்க்கைத் தரம்
Lobby	—	ஆதரவு தேடும் இடம்
Local	—	தல
Self-Government	—	தல சுய ஆட்சி
Lockout	—	வெளியேற்றம்
Locomotive	—	ரெயில் எந்திரம்
Loyalists	—	விசுவாசிகள்

M

Machine gun	—	எந்திரத் துப்பாக்கி
Maginot line	—	மேஜினுட் லைன்
Majority	—	பெரும்பான்மை
Management	—	நிர்வாகம்
Management, industrial	—	தொழில் துறை நிர்வாகம்
Mandatory system	—	உரிமைக் கட்டளைத் திட்டம்
Mandatory	—	உரிமைக் கட்டளை சார்ந்த
Manifesto	—	கொள்கை அறிக்கை
Mark	—	ஜெர்மன் நாணயம்
Market	—	சந்தை
Mars	—	போர்த்தெய்வம்
Marxism	—	மார்க்சீயம்
Matter	—	பொருள்
Mediation	—	மத்தியஸ்தம்
Mediator	—	மத்தியஸ்தர், நடுவர்
Medical bulletin	—	மருத்துவ அறிக்கை
Member	—	உறுப்பினர்
Microphone	—	ஒலிபெருக்கி
Middle class	—	நடுத்தர (இடைநிலை) வகுப்பு
,, class, lower	—	கீழ்த்தர நடுத்தர வகுப்பு
Militarism	—	அடக்குமுறை, இராணுவத் துவம்
Militarists	—	அடக்குமுறையினர்
Military Staff Committee	—	இராணுவ உதவிக் குழு
Military occupation	—	இராணுவ அனுபோகம்

Mill	—	ஆலை
Mines	—	அரங்கம், வெடிவைத்தல்
Minister	—	அமைச்சர்
Foreign Minister	—	வெளிநாட்டு அமைச்சர்
Minister of State	—	ராஜாங்க மந்திரி
Minority	—	சிறுபான்மை
Missile	—	மிசைல், ஏவுகணை
